# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

FOURTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*16th to 21st March* 1964.

**Volume XX (Nos. 1 to 6).**

TABLE OF CONTENTS.

*Monday*, 16*th March* 1964.


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. .. | 1-12 |
| II Privilege Matter— | |
| Functioning of the D.M.K. Members of the House in view of the Party's announcement to burn a part of the Constitution .. | 13-15 |
| III Announcement— | |
| The Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964 .. .. .. .. .. .. | 15 |
| IV Government Bill— | |
| The Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964 .. .. .. .. .. .. | 16 |
| V Voting on Demands for Grants for 1964-65—*cont.*— | |
| Demand No. XXIV—Labour including Factories .. .. | 16-77 |
| VI Papers laid on the table of the House .. .. .. .. | 77 |


*Tuesday*, 17*th March* 1964.


| | |
|---|---|
| I Obituary reference to Sri T. Shanmugham, Ex-M.L.A. .. .. | 9[illegible] |
| II Questions and Answers .. .. .. .. .. .. .. | 91-107 |
| III Calling attention to hardships of Handloom Weavers in Thanjavur District .. .. .. .. .. .. .. .. .. | 107 |
| IV Government Bill— | |
| The Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964 .. .. | 107-108 |
| V Voting on Demands for Grants for 1964-65—*cont.* | |
| Demand No. XIII—Education .. .. .. .. .. .. | 108-173 |
| VI Papers laid on the table of the House .. .. .. .. | 173 |

138005
N64, 20

### *Wednesday, 18th March* 1964.


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. .. | 175–184 |
| II Calling attention to outbreak of fire in Tindivanam taluk .. .. | 185 |
| III Privilege Matter *re* Publication in the 'Tamil Seithi' .. .. | 185–186 |
| IV Announcement— The Madras General Sales Tax (Amendment) Bill, 1964 .. .. | 187 |
| V Government Bill— The Madras General Sales Tax (Amendment) Bill, 1964 .. .. | 187 |
| VI Voting on Demands for Grants for 1964-65—*cont.*— Demand No. XII—Police .. .. .. .. .. .. | 187–262 |
| VII Papers laid on the table of the House .. .. .. .. | 262–263 |


### *Thursday, 19th March* 1964.


| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. .. | 265–280<br>341–342 |
| II Announcement— Business of the House .. .. .. .. .. .. | 280–281 |
| III Government Motions— (1) Election to the House Committee .. .. .. .. | 281 |
| (2) Election to the Committee of Privileges .. .. .. .. | 281–282 |
| IV Voting on Demands for Grants for 1964-65—*cont.*— (1) Demand No. I—Land Revenue Department; (2) Demand No. IV—Stamps Administration; (3) Demand No. XXXI—Famine Relief; (4) Demand No. XXXVII—Compensation to Zamindars .. .. | 282–339 |
| V Papers laid on the Table of the House .. .. .. .. | 340 |


### *Friday, 20th March* 1964.


| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. .. | 343–364<br>427–457 |
| II Calling attention to damages due to floods in Tiruchirappalli district .. .. .. .. .. .. .. .. .. | 364–366 |
| III Motion for leave of absence to a Member .. .. .. .. | 366 |
| IV Voting on Demands for Grants for 1964-65—*cont.*— (1) Demand No. XXVI—Irrigation; (2) Demand No. XXVII—Public Works—Works; (3) Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant; (4) Demand No. XLI—Capital Outlay on Irrigation; (5) Demand No. XLII—Capital Outlay on Public Works .. .. | 366–425 |
| V Papers laid on the table of the House .. .. .. .. | 425–426 |




### *Saturday, 21st March* 1964.


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 459–472<br>541–542 |
| II Adjournment motion *re.* Leakage of S.S.L.C. Examination Question Papers .. .. .. .. .. .. .. .. | 472–475 |
| III Calling attention to food poisoning in the Teachers' Training School Hostel, Polur .. .. .. .. .. .. .. | 475–476 |
| IV Voting on Demands for Grants for 1964-65—*cont.*— (1) Demand No. III—General Sales Tax and other taxes and Duties Administration .. .. .. .. .. .. | 476–495 |
| (2) Demand No. XIX—Co-operation .. .. .. .. .. | 495–539 |
| V Papers laid on the table of the House .. .. .. .. | 539–540 |

## How to use the index.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | |
|---|---|
| A.M./Ad. Motion .. .. | Adjournment Motion. |
| Ann. .. .. .. .. | Announcement. |
| B.O.H. .. .. .. .. | Business of the House. |
| C.A. .. .. .. .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. .. .. .. .. | Calling Attention Statement. |
| Consid. .. .. .. .. | Consideration stage of a Bill. This stage includes: (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. .. .. .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. .. .. .. .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. .. .. .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. .. .. .. .. | Demands for Supplementary Grants. |
| G.A. .. .. .. .. | Governor's Address. |
| G.D. .. .. .. .. | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. .. .. | Half-hour Discussion. |
| Int. .. .. .. .. | Introduction stage of a Bill. |
| L.A. .. .. .. .. | Legislative Assembly. |
| L.C. .. .. .. .. | Legislative Council. |
| M. .. .. .. .. | Motion. |
| P.M. .. .. .. .. | Privilege Motion. |
| R/Res. .. .. .. .. | Resolution. |
| St. .. .. .. .. | Statement. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 16th March 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, MR. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### காலரா

* 257 கேள்வி—**திரு. கரு. சீமைச்சாமி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963–ம் வருஷம் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் காலரா நோயினால் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) இந்நோய் பரவுவதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** (அ) & (இ) சபையின் முன் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

*258 கேள்வி—**திரு. செ. மாதவன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963–ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் காலரா நோயினால் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருப்பது உண்மையா ?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** (அ) ஆம்.

| மாவட்டம். | உயிர்ச்சேதம். | |
|---|---|---|
| | நவம்பர் 1963. | டிசம்பர் 1963. |
| (1) | (2) | (3) |
| (இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. | 255 | 216 |
| மதுரை மாவட்டம் .. .. | 25 | 94 |
| இராமநாதபுரம் மாவட்டம் .. | 28 | 66 |

### *Post-Graduate diploma in Nursing*

* 259 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any discrimination between Part A (Teaching) and Part B (Administration) Post-Graduate diploma holders in nursing; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) & (*b*) The training course leading to the award of Diploma as 'Nursing Tutor' (Part 'A'—Teaching) is intended to prepare

[a] 78–79-ம் பக்கத்திலுள்ள I-ம் இணைப்பைக் காண்க.

[16th March 1964

candidates for posts of Nursing Tutors and that leading to the award of Diploma as 'Nursing Administrator' (Part 'B'—Administration) is intended to prepare candidates for posts of Nursing Administrators. While candidates possessing the former qualification are appointed to posts of Nursing Tutors, persons holding the latter qualification are not eligible for appointment as Nursing Tutors for the reason that they are not trained in observation and teaching in schools of Nursing. However, persons possessing Part A Teaching qualification can be appointed as Nursing Superintendents.

### *Staff Nurses*

* 260 Q.—SRI S. NANJUNDA ROW: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the staff nurses in the General Hospital have sent a representation to the Government stating that it is very difficult for them to work continuously for 12 hours both during day and night;

(*b*) whether there is any proposal to introduce shift system (8 hours) in the hospitals to bring about efficiency and also relief to the staff as is done in the case of factory labourers; and

(*c*) whether the Government will consider the question of giving a weekly holiday for the nurses and the other menial staff to improve their working conditions?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) No such representation has been received by Government. The working hours of Nurses are 8 to 9 hours per day for day duty Nurses and 12 hours with a break of one hour for rest for night duty Nurses.

(*b*) No.

(*c*) The present strength of staff does not permit the grant of weekly holidays to Nurses. They are however given half-a-day off every week and also 2 or 3 days off a month, whenever possible. Hospital workers in the category of Nursing Orderlies, Cooks, Lascars and Thoties in the City Hospitals, Teaching Hospitals and District Headquarters Hospitals are already enjoying weekly holidays.

SRI S. NANJUNDA ROW: In the Nurses Conference held at Coimbatore, the nurses made these demands. May I request the Hon. Minister to state whether they have considered these demands?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: The resolutions were passed at the General Body Meeting of the Madras Government Nurses' Association. All the resolutions were examined and it was found impossible to grant their request since the nurses were already getting half-a-day's off and 3 days holidays in a month.



16th March 1964]

### *Water-supply for Aranthangi*

* 271 Q.—SRI A. DURAIYARASAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to construct one more reservoir for the supply of water to Aranthangi town ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இல்லை.

**திரு. ஆ. துரையரசன் :** தலைவர் அவர்களே, தற்போது குடி தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருவதில் கோடை காலங்களில் மிகவும் நெருக்கடி யான நிலைமை இருக்கிற காரணத்தினால், இனிமேலாவது அரசு மேலும் ஒரு டாங்க் கட்ட நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இங்கு ஏற்கனவே வெள்ளா ஆற்றிலிருந்து வருவதற்காகக் கட்டி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. இன்னும் மேற்கொண்டு செய்வதற்கு தற்போது உத்தேசம் இல்லை.

### கோயில் திருப்பணி

*272 கேள்வி—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பழம் பெரும் கோயில்களில் இப்போது நிகழும் திருப்பணி முறைகள் கோயில் கலையின் தொன்மை தூய்மைகளைக் கெடுக்கின்றன என்று 'தமிழ்நாடு' பத்திரிகை 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ந்தேதி இதழில் சென்னை கலைக் கைத்தொழில் பள்ளியின் முதல்வர் திரு கே. சி. பணிக்கர் அவர்கள் குறை கூறியிருப்பது அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes. It related to the renovation work done in Sri Meenakshiamman temple, Madurai, in particular, and referred also to the renovation work to be done in other temples in general.

(*b*) The Government consider that no action is called for thereon in respect of Sri Meenakshiamman temple, Madurai. In respect of renovation of other temples to be done, the Government have ordered that the Archaeological Survey of India and the Special Officer for Archaeology, Madras, should be consulted in regard to renovation work.

(அ) ஆம். கொண்டுவரப்பட்டது. இது முக்கியமாக மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோயிலில் நடந்த திருப்பணி வேலையையும், பொதுவாக மற்றக் கோயில்களில் நடக்கவிருக்கும் திருப்பணி வேலைகளையும் பற்றிக் குறிப்பிடுகிறது.

(இ) மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவிலைப் பொறுத்த வரையில், இதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டியதில்லை என்று அர சாங்கம் கருதுகிறது. ஆனால், மற்றக் கோயில்களில் இனி நடக்கவிருக்கும் திருப்பணி வேலைகளைப் பொறுத்த வரையில், இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரையும், சென்னையிலுள்ள தொல்பொருள் துறைத் தனி அதிகாரியையும் கலந்து திருப்பணி வேலைகளை மேற்கொள்ள வேண்டு மென்று அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, ஆயிரம் ஆண்டு களுக்கு மேற்பட்டனவாக விளங்குகிற கோயில்கள் இப்போது திருப்பணி வேலை காரணமாகப் புதுப்பிக்கப்படுகின்ற நேரத்தில் அதனுடைய பழமை, மெருகு குலைந்துவிடுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[16th March 1964

அப்படிப்பட்ட பணி செய்கிற நேரத்தில், பழமையையும், தொன்மையையும் காட்டுகிற நிலையில் அந்தத் திருப்பணிகளைச் செய்ய வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் என்ன என்று அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற கருத்துத்தான் அரசாங்கத்தின் கருத்து. அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுதான் திருப்பணி வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் என்னுடைய கருத்தையே ஏற்றுக்கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். நடைமுறையில் திருப்பணி செய்கிற நேரத்தில், இப்போதுள்ள நாகரீகத்தில் வண்ணமும், ஓவியமும் தீட்டப்படுகின்றன. அதனால் பழமையும், தொன்மையும் பாதிக்கப்படுகின்றன. ஆகையால் அந்தப் பழமையையும், தொன்மையையும் பாதிக்காத அளவுக்கு அரசாங்கம் என்ன நடைமுறைகளைக் கையாள உத்தேசித்திருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வண்ணமும் புதுமை அல்ல. தொன்மை நிறைந்ததுதான். பழைய காலத்தில் நல்ல வண்ணத்தை உபயோகித்திருக்கிறார்கள் என்பது தெரியும். மதுரை மீனாட்சிசுந்தரேசுவரர் கோவிலைப் பொறுத்த மட்டில், பல நிபுணர்கள், விஞ்ஞானிகள், அனுபவம் உள்ளவர்கள் எல்லோரையும் கலந்து பலவித பரீட்சைகள் செய்து வர்ணங்கள் தீட்டுவதிலே கடைசியிலே முடிவு செய்யப்பட்டது. இதைப் பற்றி ஒரு அன்னியநாட்டிலிருந்து வந்த நிபுணர் கூடப் பாராட்டியிருக்கிறார் என்பதும் எனக்குத் தெரியும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, கோவில் திருப்பணிகளை மேற்கொள்ளுகிற காலத்தில், திருப்பணிகளைச் செய்கிறவர்களுடைய முழு மேற்பார்வையின்கீழ் நடைபெறுகிறதா ? அல்லது அரசாங்க தொல்பொருள் ஆராய்ச்சி அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகிறதா ? அங்கு உள்ள கல் வெட்டுகள் காப்பாற்றப்படுகிற அளவுக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திருப்பணிகளைக் கோவில் நிர்வாகிகள் செய்கிறார்கள். அவர்கள் பொறுப்பின்கீழ்தான் நடைபெறுகிறது. ஆனால் அது சரியாக நடைபெற வேண்டும் என்பதிலே அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிறது. அரசாங்க நிபுணர்களும் ஆலோசனை அளிக்கிறார்கள். அந்த ஆலோசனைப்படி நடக்கிறது. முக்கியமாகச் கல்வெட்டுகள் விஷயத்திலே எந்த விதத்திலும் அவைகள் பாதகம் அடையக் கூடாது என்ற கருத்து அரசாங்கத்திடம் இருக்கிறது. அதை மனதில் வைத்துக்கொண்டுதான் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கோவில்களே வேண்டாம், தெய்வமே இல்லை என்று கூறிக்கொண்டு வந்த ஒரு கூட்டத்தார் இப்பொழுது கோவில்களைப் பற்றி அக்கறை எடுத்து வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அப்படியானால், எப்பொழுதிருந்து இவர்களுக்குத் தெய்வ பக்தி வந்திருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யாராக இருந்தாலும், கோவில்களில் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தாலும், நம்பிக்கை இல்லாதவர்களாக இருந்தாலும், தொன்மையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்து இருந்து வருகிறது. தொன்மையைப் பாதுகாக்க வேண்டும், ஆனால், புதுமையும் சேர்க்க வேண்டும். தொன்மைக்குப் பாதகம் இல்லாமல் புதுமையும் சேர்க்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து. அதுதான் கோவில் நிர்வாகிகளின் கருத்தும் கூட.

**திரு சா. கணேசன் :** இதுமாதிரி சிதிலம் அடைந்த கோவில்களைப் புதுப்பிக்கின்ற பொழுது செயல்முறை முழுவதும் அந்தத் திருப்பணிக் கமிட்டிக்கு உட்பட்டதாக இருந்தாலும், தொல்பொருள் ஆராய்ச்சித்துறை



16th March 1964]

நிபுணர்கள் கட்டடக் கலை நிபுணர்கள், அதாவது பிராசீன முறைப்படி ஸ்தபதிகளின் விளக்கமும், அங்கீகாரமும், முழு உதவியும் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய வசதிகளையும் வற்புறுத்தலையும் அரசாங்கம் செய்து வந்திருக்கிறதா ? அப்படிச் செய்து வராவிட்டால், இனிமேல் அப்படிச் செய்ய முயலுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உறுப்பினர் கூறுகிறபடி தான் அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவிலிலும் அவ்வாறுதான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** இப்படிப்பட்ட பழம் பொருள்களைச் செப்பனிடுகிற நேரத்தில், இத்தாலி, எகிப்து போன்ற நாடுகளில் பழைய மெருகு கெடாது, உருக்கெடாமல், புதிய விஞ்ஞான முறைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த முறைகளை அறிந்து செய்ய வேண்டும் என்று பணிக்கர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த முறைகளை அரசாங்கம் அறிந்து நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற விஷயம். ஆனால், நிபுணர்களின் கருத்தில் வேற்றுமைகள் இருக்கின்றன. ஒரு நிபுணர் நன்றாக இல்லை என்று சொன்னால் மற்றொரு நிபுணர் நன்றாக இருக்கிறது என்று சொல்லுகிறார். கூடிய வரையில் நம்முடைய நாட்டு நிபுணர்கள், அயல்நாட்டு நிபுணர்கள் தொன்மையை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்று சொல்லுகிற அபிப்பிராயங்கள், சிற்பிகள், ஸ்தபதிகள் ஆகியவர்களுடைய அபிப்பிராயங்கள் சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுதான் இந்தத் திருப்பணி வேலைகள் உருவாக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

*273 கேள்வி—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் திருப்பணிக்குச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதற்கெனத் தமிழக அரசாங்கம் அளித்த நிதி எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Rs. 22,34,706–95 nP. up to October 1963.

(இ) Nil.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** இதில் பொது மக்கள் கொடுத்து உதவிய தொகை எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ' டொனேஷன் ' என்ற காலத்தில் ரூ. 6,65,633·23 வந்திருக்கிறது. உண்டியல், அர்ச்சனை டிக்கட் விற்பனை செய்தது ஆகிய வகைகளிலே வந்திருப்பது ரூ. 4,31,219·38.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** தமிழ் நாட்டிலுள்ள மற்ற கோவில்கள் மூலமாக 'டைவர்ஷன் ஆப் பண்ட்ஸ்' மூலம் ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவிலுக்கு அளிக்கப்பட்ட பணம் எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது ரூ. 11,98,502.

* 274 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute an All-India Committee for the renovation of the temples; and

(*b*) if so, the names of the members and the functions of the committee?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) This Government is not aware of any such proposal.

(*b*) Does not arise.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** அம்மாதிரி ஒரு கமிட்டி அகில இந்திய ரீதியிலே அமைக்கப்படாவிட்டாலும்கூட, மாகாண ரீதியிலே அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு எல்லாக் கோவில்களுக்கும் சேர்த்து மாகாண ரீதியிலே கமிட்டி அமைக்கிற நோக்கம் இல்லை. பொதுவாக அறநிலையப் பாதுகாப்பு இலாகாவிலே ஆலோசனைக் குழு ஒன்று இருக்கிறது. அவர்கள் யோசனை சொல்லுகிறார்கள். ஒரு தேவஸ்தானத்தில் திருப்பணி செய்ய வேண்டிய நிமித்தம் இருந்தால், அந்த தேவஸ்தானத்தின் நிலைக்கு ஏற்றவாறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** 'யுனெஸ்கோ' மூலம் இந்தமாதிரி கோவில் திருப்பணிகளுக்குப் பண உதவி செய்வது சம்பந்தமாக நம் சர்க்கார் அவர்களை அணுகிக் கேட்டார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் இது பற்றி யுனெஸ்கோ பிரதிநிதியுடன் பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் உதவி அளிக்கக் கூடும் என்று சொன்னார்கள். சில நிபந்தனைகளையும் குறிப்பிட்டார்கள். எவ்வாறு அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார்கள். அதெல்லாம் ஒன்றிரண்டு முக்கியமான கோவில்கள் விஷயத்தில் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

* 275 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the tower of Srivilliputhur Andal temple in Ramanathapuram district is in dilapidated condition at present; and

(*b*) whether there is any proposal to repair the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Some cracks have developed in the tower.

(*b*) It is under consideration of the Government.

**திரு. சா. கணேசன் :** ஆண்டாள் கோவில் கோபுரத்தில் சில வெடிப்புகள் கண்டிருப்பதற்கு அடிப்படைக் காரணம் கோபுரத்தின் வலது பக்கத்தில் ஒரு டிரையினேஜ் ஓடிக் கொண்டிருப்பதாகவும், அதன் காரணமாகத் தண்ணீர் ஊறி, கீழ் புதைவடை அல்லது பவுண்டேஷன் என்று சொல்லுகிறார்களே அந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மராமத்து இலாகா என்ஜினீயர்கள் இதைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். மேற்கொண்டு இதைச்சரிப்படுத்துவதற்கு, உடனடியாகச் சரிப்படுத்துவதற்கு சில நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் நிரந்தரமாக இதற்கு வேண்டிய மராமத்து செய்வதோடு, இம்மாதிரி நிகழாமல் பாதுகாப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதும் மராமத்து இலாகா என்ஜினீயர்களின் கவனத்தில் இருக்கிறது.

**திரு. சா. கணேசன் :** அந்த என்ஜினீயர்கள் இந்தக் கோபுரத்தையே இடித்துவிட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. உண்மையில் என்னைப் போன்ற இந்தத்துறையிலே ஒரு ஈடுபாடு அல்லது பக்தி உள்ளவர்களுக்கும், அந்த அறிவு ஓரளவு உள்ளவர்களுக்கும் இடிக்காமல் அதை நிச்சயம் செம்மை செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நிலையிலே அதைச் செம்மையாக பிராசீன முறையிலே ரிப்பேர் செய்ய முடியும்—புதிய முறைகளிலே எப்படிச் செய்வார்களோ எனக்கு ஒன்றும் அறிவு இல்லை—இந்தத் துறையிலே செய்ய முடியும் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதற்கு வழி வகை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு கோபுரத்தை இடித்துவிட வேண்டும் என்று என்ஜினீயர்கள் கூறியிருப்பதாக என்னிடம் தகவல் இல்லை. இப்பொழுது அதை எப்படிச் சரிப்படுத்துவது, கிராக்குகளை எப்படிச் சரிப்படுத்துவது என்பது சம்பந்தமாக என்ஜினீயர்கள் பார்த்து யோசனை சொல்ல வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. கனம் உறுப்பினர் அவர்களுக்கு இதிலே மிகுந்த ஈடுபாடு, அனுபவம் உண்டு என்பது எனக்குத் தெரியும். நான் ஸ்ரீவில்லிப்புத்தூர் போகும்போது கனம் உறுப்பினரும் என்னோடு வந்தால், பார்த்து, என்ஜினீயர்களையும் வைத்துக்கொண்டு, அவர்களுடைய யோசனையையும் கேட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

**புலவர் கா. கோவிந்தன் :** கோவில் திருப்பணிகளுக்குப் பணம் கொடுக்கிற சர்க்கார் இந்தத் திருப்பணிகள் உரிய காலத்தில் நல்ல முறையில் முடிவடைய வேண்டும் என்பது பற்றிக் கண்காணிக்கிறதா ? எங்கள் ஊரில் நடைபெறும் திருப்பணிகள் கண்காணிக்கப்படவில்லை. அதுபற்றி இம்மன்றத்தில் ஏற்கெனவே எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே, இம்மாதிரி கண்காணிப்பதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படிக் கண்காணிக்கப்பட்டுத்தான் வருகிறது. ஏதாவது குறிப்பிட்ட கோவிலில் அம்மாதிரி கவனிக்கப்படவில்லை என்று அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியவந்தால், அதுபற்றி எனக்குத் தகவல் கொடுத்தால், மேலும் கவனித்து நிலைமையை அவர்களுக்கு விளக்கக்கூடும்.

**சூடம் தயாரித்தல்**

* 276 கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்து மத அறநிலைய இலாகா சூடம் தயாரிக்க உத்தேசித்து இருப்பது உண்மையா ?

(இ) சூடம் தயாரிக்கும் தொழிலுக்கு அற நிலைய இலாகா எவ்வளவு பணம் அனுமதித்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No.

(இ) Does not arise.

*Libraries in Hindu temples and Religious Institutions*

* 277 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have ordered the establishment of libraries in Hindu temples and religious institutions and if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKATAVATSALAM : The Commissioner, Hindu Religious and Charitable Endowments (A) Department has advised the Executive Authorities of temples to maintain libraries wherever possible for the benefit of the worshipping public. Books of Saiva Siddhantha philosophy, Divya Prabandam, Sthalavaralaru and other religious books are generally available in such libraries. There are 96 religious institutions having libraries in the State. A list of the religious institutions having libraries is placed on the table of the House.

---

Printed as Appendix II on pages 79-87 infra.

[16th March 1964

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி லைப்ரரிகளில் பொதுவாக எல்லா நூல்களும் வைக்கப்படுகின்றனவா ? அல்லது, கோவில் சாஸ்திரம் சம்பந்தப்பட்ட நூல்களும் சரித்திரம் சம்பந்தப்பட்ட புஸ்தகங்களும் மட்டும் தான் வைக்கப்படுகின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முக்கியமான நூல்கள் என்றுதான் சொன்னேன். கோவில்களுக்குப் போகிறவர்கள்தான் இதைப் பார்ப்பார்கள். கோவில்களிலே நம்பிக்கை உள்ளவர்கள்தான் கோவில்களுக்குப் போவார்கள். ஆகவே, முக்கியமாக அது சம்பந்தமான புஸ்தகங்கள் இருக்கும். அதோடு மற்ற பொது நூல்களும் இருக்கும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இம்மாதிரி கோவில்களில் உள்ள நூல் நிலையங்களில் புனிதம் வாய்ந்த கோவில் சரித்திரம், சாஸ்திரம் சம்பந்தப்பட்ட நூல்களை மட்டும் வைப்பது நல்லது. மற்றப்படி பொதுவான நூல்களை வைத்தால் பலரும் போய்ப் பார்ப்பதற்கு . . .

கனம் சபாநாயகர் : கனம் அமைச்சர் அவர்கள் அதற்குத்தான் பதில் சொல்லியிருக்கிறார்களே ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அறிவு வளர்ச்சிக்குரிய எந்த நூல்களாக இருந்தாலும், அவைகளைக் கோவில்களில் வைப்பதற்கு முரண்பாடு ஒன்றும் இருக்காது. ஆனால், ஆபாசமான புஸ்தகங்கள் அங்கே இருக்காது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கோவில்தோறும் காண்பதற்கு வியப்புத் தரக்கூடிய அரிய பல பொருள்களும், வரலாற்றையும், பழைய பழக்க வழக்கங்களையும் உணர்த்தக்கூடிய பொருள்களும் இருக்கின்ற காரணத்தினால், பெரிய கோவில்கள்தோறும் கண்காட்சிப் பிரிவு ஏற்படுத்தி, எல்லோரும் அந்தப் பொருள்களைக் காணக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு: எம். பக்தவத்சலம் : ஒரு சில பெரிய கோவில்களில் அத்தகைய மியூசியம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எல்லாக் கோவில்களிலும் வைப்பது என்பது சாத்தியமல்ல.

திரு. சா. கணேசன் : தேவாலயங்களிலே அந்த ஆலயத்தின் பந்தாவுக்கும் முறைக்கும் ஏற்றவாறு வேதம், உபநிஷதம், ஆகமம், மானஸாரம், விஸ்வகார்மியம் போன்ற சிறப்பு நூல்கள் கட்டாயமாக அங்கே இருக்க வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துவது பயனுள்ளதாக இருக்குமென்று அரசாங்கம் கருதி அதற்கு ஏற்பாடு செய்யுமா ?

கனம். திரு. எம். பக்தவத்சலம் : சிற்சில தேவாலயங்களில் உள்ள நூலகங்களில் இத்தகைய நூல்கள் இருக்கலாம். கட்டாயமாக அவற்றை வைக்கவேண்டுமென்று சொன்னால் அவற்றை யாராவது படிக்கிறார்களா என்று தெரிந்துகொள்ளவேண்டும். வருகின்றவர்கள் அவற்றைப் படிப்பதற்குத் தயாராக இருந்தால், அவர்கள் கோருகின்ற நூல்களை தேவாலயத்தின் இலட்சியங்களுக்கு முரண்பாடு இல்லாமல் இருந்தால் வைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

புலவர் கா. கோவிந்தன் : இப்பொழுது சாஸ்திர வழியான சமய உணர்வு குறைந்து, புராண வழியான சமய உணர்வு பெருகியிருக்கிறது. ஆகவே சாஸ்திர வழியான சமய உணர்வு பெருகுவதற்கு அரசாங்கம் என்ன வழி வகை செய்திருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கூறுவது ஒன்றும் புரியவில்லை. என்னுடைய சிற்றறிவுக்கு எட்டவில்லை. (சிரிப்பு).

கனம் சபாநாயகர் : புலவர் அவர்கள் இந்த மாதிரி சில புத்தகங்கள் எழுதினால் நல்லது. (சிரிப்பு).



16th March 1964]

திரு. எம். வி. கரிவேங்கடம் : இருத்துவ மதத்தினரும், முஸ்லீம் மதத்தினரும் மத் சம்பந்தமான நூல்களை வைக்க வேண்டுமென்று கேட்டு அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று கோரினால், அரசாங்கம் உதவி அளிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏதாவது குறிப்பிட்ட ஒரு பிரச்னையை கனம் அங்கத்தினர் அவர்களுக்காக வாதாடுவதாக இருந்து எனக்கு தெரிவித்தால் அதற்குப் பதில் அப்புறம் சொல்லுகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : நான் என்னுடைய கேள்வியைக் கேட்ட நேரத்தில், வேறு உள்நோக்கம் கொண்டு கேட்கவில்லை. உண்மையிலேயே நான் சொல்லுகின்ற கருத்து என்னவென்றால், மெய்கண்ட சாஸ்திரம் போன்ற சமய நூல்களைப் படிக்கிறவர்கள்கூட ஒப்புக்கொள்வார்கள், சாத்திர வழிச் சமயம் குறைந்து புராணங்களிலே சொல்லியிருக்கின்ற சமய உணர்வு பெருகியிருக்கிறது என்று. அது சமய வளர்ச்சிக்கு நல்லது அல்ல. சாஸ்திர வழியாக சமய உணர்வைப் பெருக்குவதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ? இதற்கு நேரிய முறையிலே பதில் அளிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நேரிய முறை தவிர வேறு முறை எனக்குத் தெரியாது. அரசாங்கம் இந்த வகையிலே செய்வதற்கு ஒன்றுமில்லை. சம்பந்தப்பட்ட தேவாலயங்களில் பிரசாரம் செய்கிறார்கள். அவ்வாறு பிரசாரத்திற்கு ஏற்பாடு செய்கிறார்கள். அரசாங்கம் ஒரு பிரசாரக் குழு அமைப்பதோ, அல்லது பிரசாரக் கொள்கையை நிர்ணயிப்பதோ என்பதல்ல.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : மெய்கண்ட சாஸ்திரம் போன்ற தத்துவ நூல்களின் விளக்கங்கள்தான் புராணங்கள் என்பதை அறிந்து, தேவாலயங்களில் தத்துவ நூல்களையும், புராண நூல்களையும், இரண்டையும் கலந்து வைப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம். திரு. எம். பக்தவத்சலம் : புலவர்களுக்குள்ளே இது போன்ற ஒரு சம்வாதம் நடந்தால், அதிலே என்னைப் போன்றவர்கள் ஈடுபட முடியாது. (சிரிப்பு).

### *Allowances to Assistant Surgeons*

* 278 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the various allowances that are paid to Assistant Surgeons who are posted for duty in :—

(i) Madras City ;
(ii) Municipal areas;
(iii) Non-Municipal areas;
(iv) Primary Health Centres; and

(*b*) the conditions under which such allowances are given?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) &
(*b*) A statement [a] is placed on the Table of the House.

### இயங்கும் நூல் நிலையங்கள்

* 279 கேள்வி—திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எத்தனை நடமாடும் நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன ? எங்கெங்கு ?

[a] Printed as Appendix III on pages 87-90 infra.

[16th March 1964

(இ) எந்த அடிப்படைத் திட்டத்தில் இந் நடமாடும் நூல் நிலையங்கள் புத்தகங்களைப் படிக்க வழங்குகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) There are four mobile libraries in the State, two in Madras City and two in the Coimbatore district.

(b) The Scheme for Mobile Library Services are formulated by the Local Library Authorities and approved by the Director of Public Libraries. The regulations framed by the Local Library Authority providing for the admission of the public to the Public Libraries would cover the use by the Public of the Mobile Libraries also.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த நடமாடும் நூல் நிலையங்களை மாவட்டம் தோறும் இந்த முறையிலே ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் ஏதாவது திட்டம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திட்டம் அரசாங்கம் வகுப்பது என்பது இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நூல் நிலைய சபை இருக்கிறது. அவர்களுடைய நிதி நிலைமைக்கு ஏற்றவாறு கிளை நூலகங்களை வைத்திருக்கிறார்கள். இம்மாதிரி நடமாடும் நூலகங்களைச் சிலர் வைக்கிறார்கள். அவர்களுடைய நிதி நிலைமை, அந்த நூலகக் குழுவின் ஆலோசனைகள், திட்டங்களைப் பொறுத்ததாக இருக்கிறது இது.

**பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனைகள்**

* 280—கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் பஞ்சாயத்து யூனியன்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஆஸ்பத்திரிகளைச் சர்க்காரே மேற்கொண்டு நடத்த உத்தேசமுண்டா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இல்லை.

**மதிய உணவுத் திட்டம்**

*282—கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதிய உணவுத் திட்ட நடை முறைகளை ஆராய்ந்து காண, திருவாளர் கிருஷ்ணசாமி நாயுடு, எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை சட்டசபையில் வைக்கப்படுமா ? எப்பொழுது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is presumed that the Member refers to the report of the Committee appointed under the Chairmanship of Sri K. S. Subramania Gounder, M.L.A., of which Sri R. Krishnaswami Naidu, M.L.A., was a Member. The attention of the Member is invited to the paper containing the Report of the Committee and the statement showing the action taken on the recommendation of the Committee, which has been placed on the table of the House.

**புலவர் கா. கோவிந்தன் :** இந்த அறிக்கையில் அவர்கள் 30-க்கு மேற்பட்ட குறைபாடுகளையும், 50-க்கு மேற்பட்ட பரிந்துரைகளையும் செய்திருக்கிறார்கள். சர்க்கார் 20 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மற்ற பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளாமலிருப்பதற்கு காரணம் என்ன ?



16th March 1964]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம் என்னவென்றால், அவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்பது அரசாங்கத்தின் கருத்து.

* 283 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state the steps so far taken by the Government to see that the midday meals provided to the students is pure and does not contain poison?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have issued instructions that the Executive Committees of midday meal centres should make arrangements for preparation and service of meals in a hygienic manner. The public health staff in the blocks have been instructed to make surprise inspection of midday meal centres in order to ensure that the minimum necessary standards of hygiene are maintained in the centres. Detailed instructions have also been issued regarding the hygienic conditions under which curd should be prepared out of milk powder.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** மதிய உணவுக்காகக் கொடுக்கப்படுகிற ஒரு அணுவானது போதாமல் இருக்கிறது. அதிலும் இன்றைக்கு கண்டிராக்டர்கள் அளவையும் குறைத்து, குவாலிடியும் சரியாக இல்லாமல் இருக்கிறது. சுமார் 7 அல்லது 8 மணிக்கு முன்பே தயாரித்து விடுகிறார்கள். அம்மாதிரி நடக்காமல் இருப்பதற்கும், உணவின் தரத்தை உயர்த்துவதற்கும் அரசாங்கம் அதிகத் தொகை கொடுப்பதற்கு முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் தலைக்கு 6 ந. பை. கொடுக்கிறது. அதைத்தான் கனம் அங்கத்தினர் ஒரு அணு என்று குறிப்பிட்டார். மேலும் 4 ந.பை. சேர்த்து முன்பு எல்லாம் மக்களே அளித்துக்கொண்டு வந்தார்கள். 10 ந.பை. மதிப்புக்கு உணவு அளிக்க வேண்டுமென்பது நோக்கம். பால் பவுடர் வேறு விஷயம். பால் பவுடரைத் தயிராக்குவது "கேர்" ஸ்தாபனத்தினர் வினியோகிக்கும் முறைப்படி நடக்கிறது. 10 ந.பை. மதிப்புக்கு சாப்பாடு போடப்பட்டு வருகிறது. ஆனால் சில இடங்களிலே 4 ந.பை. வசூலிக்க முடியவில்லை. பஞ்சாயத்துக்கள் 2 ந.பைசாவும், மக்கள் 2 ந.பைசாவும் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். ஆனால் சில இடங்களில் மக்கள் கொடுக்க முடியாமல் போகிறது. சில இடங்களில் பஞ்சாயத்துக்கள் கொடுக்க முடியாமல் போகிறது. அப்பொழுது குறைத்துக் கொடுக்கிறார்கள். 6 ந.பைசா அடிப்படையிலே பார்க்கும்பொழுது, இந்த வரவு செலவுத் திட்டத்திலே அங்கீகாரம் கோரியிருப்பது ரூ. 168 லட்சம், மூன்றில் ஒரு பங்கு பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடப்படுகிறது. அதற்கு மேல் அரசாங்கம் அதிகரிப்பதற்கு இல்லை. மக்கள் இதிலே அக்கறை எடுத்துக்கொண்டு, கொஞ்சம் தொகை வசூலிக்க முன் வந்தால், நல்ல சாப்பாடு போடலாம் என்பது அரசாங்கத்தின் கருத்து.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** முக்கியமாக இந்த உணவுப் பண்டங்கள் கெட்டுப் போய் அதனால் பிள்ளைகள் அதிகமாகப் பாதிக்கப்படுவதற்குக் காரணம் என்னவென்றால், இந்த "கேர்" ஸ்தாபனத்தினர் எவ்வளவு தான் நல்ல முறையில் அனுப்பித்தாலும் வந்து சேருகிற இடத்திலே பல மாதங்கள் தேங்கி விடுகிறது. பல இடங்களில் இப்படிச் சேதப்பட்ட பொருள்கள் வழங்கப்படுகின்றன. இதைக் கண்காணிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிள்ளைகள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல. அப்போதைக்கப்போதுதான் வினியோகிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது. அரசாங்கம் உணவுப் பண்டங்கள் கெடாமல் பார்த்துக் கொள்வதற்கு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

**திரு. எம். எஸ். மணி :** போன வாரத்தில் சென்னை நகரில் அளிக்கப்பட்ட மதிய உணவில் ஒரு பாம்புக்குட்டி இருந்ததாக நான் பத்திரிகையில் பார்த்தேன். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** சில குழந்தைகளுக்கு மாத்திரம் மதிய உணவு அளித்து மற்றவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுவதினால் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் ஏற்படுகிறது. ஆகவே பணக்காரக் குழந்தைகள் இடமிருந்து அதிகமாகத் தொகை பெற்று, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் மதிய உணவு அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகைய உத்தேசம் இப்பொழுது இல்லை. மேலும் அது சாத்தியமும் இல்லை.

**284 கேள்வி.—திரு முனு ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிகளில் மதிய உணவு வரவு-செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்பவர் யார் ?

(இ) அவர்களைத் தவிர விசேஷ தணிக்கையாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்களா ?

(உ) அவர்கள் 1961–62, 1962–63 பள்ளி ஆண்டுகளில் எல்லாப் பள்ளிகளையும் பார்வையிட்டனரா ?

(எ) தணிக்கை மூலம் குறை காணப்பட்ட பள்ளிகள் எத்தனை இருந்தன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) At present the Deputy Inspectors of Schools scrutinise the accounts of the midday meal centres during their inspections and surprise visits.

(b) The Government have issued orders in September 1963 that the audit of accounts by the midday meal centres in Panchayat Union and non-Panchayat Union areas would be carried out by the Panchayat Extension Officers and the Examiner of Local Fund Accounts respectively. The audit will be carried out commencing from the School Year 1964–65.

(c) & (d) Do not arise in view of the reply to clause (b) of the question.

*Execution of improvement works*

* 285 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the ban on the execution of works owing to national emergency has been lifted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member is obviously referring to building programmes. There was no general ban on building programmes. After the Emergency the Government reviewed all the building programmes and allowed all essential schemes, particularly those connected with the Plan to be proceeded with while deferring such of those building works the implementation of which was not considered to be so very urgent.

MR. SPEAKER : Questions are over.



(*Note*.—An asterisk *at the commencement of a speech indicates revision by the Member.)

9-00 a.m.

## II.—PRIVILEGE MATTER

### FUNCTIONING OF THE D.M.K. MEMBERS OF THE HOUSE IN VIEW OF THE PARTY'S ANNOUNCEMENT TO BURN A PART OF THE CONSTITUTION.

MR. SPEAKER : The hon. Member Sri S. Nanjunda Row raised a point of privilege sometime before, which was as follows :—

" All the members of this Assembly have taken oath before entering office that they will bear true faith and allegiance to the Constitution of India as by law established and that they will faithfully discharge the duty upon which they are about to enter.

Now I wish to raise a question of privilege whether the D.M.K. Party members, who form the main Opposition in the Assembly, having publicly announced that their policy is to burn a part of the Constitution, can be allowed to function as Members in the Assembly, since they have flagrantly broken or propose to break the solemn oath taken by them."

Sri S. Nanjunda Row has renewed his point of privilege on 15th March 1964.

The point raised by the hon. Member Sri S. Nanjunda Row is that whether the Members of the Assembly belonging to D.M.K. Party, who have publicly announced that their policy is to burn a part of the Constitution, can be allowed to function as members of the Assembly in view of the fact that those members have broken or proposed to break the oath they have taken that they will bear true faith and allegiance to the Constitution.

A member can function as a member as long as he continues to be a member. Articles 190 and 191 of the Constitution provide under what circumstances a member vacates his seat and under what circumstances he incurs disqualification for continuing to be a member. Further a member can also be expelled by the House if he has committed contempt of the House. The proposed act of the said members does not amount to vacation of the membership under Article 190 or incurring any disqualification.

Article 189 provides that every member before taking his seat in the Assembly should take an oath or make an affirmation. Every member of the Assembly belonging to the D.M.K. Party has taken his oath or made his affirmation before taking his seat in the House. These members have affirmed that they will bear true faith and allegiance to the Constitution of India. The contention of the member is that burning a part of the Constitution will be against the spirit of the affirmation made by the members. Burning of the Constitution has been made an offence under an Act of this Legislature. If anybody commits the offence the law will take its course. The House under the circumstances cannot do anything.

In 1939, a point of order was raised in a State Legislative Assembly as to the constitutional implications of a member taking the oath of allegiance with mental reservation. The Hon. Speaker ruled that there was not a shadow of doubt that an oath of allegiance to work for the independence of one's own country could not be said to be incompatible with the oath of allegiance to His Majesty the King Emperor and in this connection he quoted the following views of Professor Keith, in his book named 'Responsible Government in the Dominions' Volume II, page 1254 :—

"It has long been argued that there was nothing incompatible in taking the oath while continuing to work for complete independence. In the Union of South Africa, Nationalist members and Ministers have never hesitated to regard their oaths as quite compatible with working openly for independence. This view now prevails."

Again in the first volume at page 389, Professor Keith has stated as follows :—

"It is an essential feature of all Parliaments that the members are required to take an oath of allegiance to the Crown as a condition of taking their seats. In the case of Irish Free State the oath is primarily one of the true faith and allegiance to the Irish Free State Constitution but also to the King, his heirs and successors by law in virtue of the common citizenship of Ireland with Great Britain and adherence to, and membership of the Group of Nations forming the British Commonwealth of Nations."

So, it might be argued that just in the same way that an oath of allegiance to work for the independence of one's own country could not be said to be incompatible with the oath of allegiance to His Majesty the King Emperor, the burning of a portion of a Constitution might not be incompatible with the allegiance to the Constitution as it was their main idea to concentrate by so doing public opinion on the need to amend the particular part of the Constitution so burnt.

In the House of Commons, on June 11, 1952 when a Member drew the attention of the Speaker to the description of the oath of allegiance as a "scrap of paper" by another Member of the House of Commons and pointed out that it amounted to a contempt, since it imputed that a declaration or oath was a meaningless formality and was calculated to bring the proceedings of the House into public disrepute, the Speaker ruled that there was no *prima facie* case of breach of privilege and that this was a matter of law. He also quoted the ruling given by the Court of Appeals in Mr. Bradlaugh's case wherein objection was taken "that as he had no belief in God, the oath would not be binding on his conscience and therefore merely going through the prescribed form



would amount to not taking the oath and therefore he could not be permitted to take an oath and consequently sit in the House". However, the Court of Appeal on January 28, 1885, ruled that if Mr. Bradlaugh took his seat and voted as a Member, having gone through the form of making and subscribing the oath, which, he had previously admitted, had no binding effect upon his conscience, he would be liable upon information at the suit of the Attorney-General to the penalty imposed by the Parliamentary Oaths Act, 1866, Section 5.

The Constitution of a country is regarded as a symbol sacred to the nationalism of the State and if one does not respect such national symbols he does injury to the very conception of the unity of the State itself. The national character of the Constitution should be respected by one and all. Definite procedures have been laid down in the Constitution itself for amending the provisions and they must be followed whenever a party or members seek to amend the same. Burning a part of the Constitution does not amount to amending the Constitution. It is not proper way at all.

In the House a member has freedom of speech but this freedom is subject to the provisions of the Consitution and rules of procedure. But this freedom does not apply to speeches made outside the House. It may not be possible to take cognizance of activities of members which have no bearing on their legislative duties. The act complained of has no connection with the work of a legislator as a legislator. Such acts are subject to the operation of the law of the land. Members are answerable to such acts in the same way as other citizens.

Burning the Constitution is an offence. A Member should not state in the House that he will burn the Constitution; thereby he will be stating that he would be breaking the law. The freedom of speech should not be used for such purposes.

The matter raised by the hon. Member does not, therefore, involve any breach of privilege.

## III.—ANNOUNCEMENT.

### THE MADRAS PAYMENT OF SALARIES AND REMOVAL OF DISQUALIFICATIONS (AMENDMENT) BILL, 1964.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in, and consideration by, the Madras Legislative Assembly of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964.

[16th March 1964

IV. GOVERNMENT BILL

THE MADRAS PAYMENT OF SALARIES AND REMOVAL OF DISQUALIFICATIONS (AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964."

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65—*cont.*

DEMAND NO. XXIV—LABOUR INCLUDING FACTORIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,28,31,600 under Demand No. XXIV—Labour including Factories."

**திரு. சா. கணேசன் :** லாபத்தில் தொழிலாளர்களும் பங்கு பெறும் உரிமை கிடைக்குமாறு ஏற்பாடு செய்வதன் அவசியத்தைப்பற்றி விவாதிக்க என் பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 1,28,31,600 under Demand No. XXIV—Labour including Factories be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கின்ற தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய நிலை பற்றிய இந்த மானியக் கோரிக்கையில், சுதந்திராக் கட்சியினர் சார்பிலே கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இந்த விவாதத்திலே பங்கு கொள்வதற்கு முன்பாக, என்னுடைய பகுதியிலே இருக்கும் நெய்வேலி லிக்னைட் கார்போரேஷனிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய நலம் பற்றியும் அவர்களுக்கு இருக்கும் குறைபாடுகளைப் பற்றியும் இங்கே நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், மத்திய சர்க்காருடைய நிறுவனமாக பெரிய தொழிற்சாலையாக இன்றையதினம் நெய்வேலி ஸ்தாபனம் இருக்கிறது. 50 கோடி ரூபாயிலே ஆரம்பித்து, 70 கோடி ரூபாய் ஆகி, பிறகு 110 கோடி ரூபாயாகி, இப்பொழுது 130 கோடி ரூபாய் அளவிலே ஒரு





பெரிய ஸ்தாபனமாக நெய்வேலி நிலக்கரி ஸ்தாபனம் இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. ஆனால், அந்த ஸ்தாபனத்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய நலன்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனவா என்று பார்ப்போமானால், நாம் உள்ளபடியே வருந்தத்தான் வேண்டி இருக்கிறது. கடந்த 6 வருஷ காலமாக அங்கே இருக்கும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு இருக்கும் வேதனைகளையெல்லாம், அவர்களுக்கு இருக்கும் நிலைமைகளையெல்லாம் அரசாங்கத்திற்கு அவர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டினார்கள். ஆறு வருஷ காலமாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவோ நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. இருந்தாலும், நெய்வேலியைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் நலனில் ஒரு வித முன்னேற்றமும் காணவில்லை. பல ஆலைகளில் பார்க்கின்றோம்—நம்முடைய முதல் அமைச்சர் அவர்களே இடையிலே நின்று தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். சில இடங்களில் ஸ்ட்ரைக் செய்கின்றார்கள். சில இடங்களில் வேறு சில முறைகளைக் கையாளுகிறார்கள். அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் தரப்படுகிறது. ஆனால், நெய்வேலியிலும், எல்லாத்தொழிற்சாலைகளிலும் இருப்பதைப் போலவே, அங்கும் சில கருங்காலிகள் (ப்ளாக் லெக்ஸ்) இருக்கத்தான் செய்கிறார்கள். ஒரு தொழிற்சாலைக்கு ஒரே யூனியன் இருந்தால், அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை நியாயமாகப் போராடிப் பெற முடியும். அங்கே நெய்வேலி லிக்னைட் லேபர் யூனியன் (அகில இந்திய ட்ரேட் யூனியன் காங்கிரசோடு சேர்ந்த லேபர் யூனியன்) நெய்வேலி லிக்னைட் மைன் ஒர்க்கர்ஸ் ப்ரொக்ரெஸிவ் யூனியன், நெய்வேலி லிக்னைட் மைன் மோட்டார் ஒர்க்கர்ஸ் யூனியன், ஆகிய இந்த மூன்று ஸ்தாபனங்களோடு அகில இந்திய காங்கிரஸ் சம்மேளனத்தோடு தொடர்பு கொண்டிருக்கிற ஒரு லேபர் யூனியன் இருக்கிறது. இந்த நான்கு லேபர் யூனியன்கள் இருக்கிற காரணத்தால், எல்லாத் தொழிற்சாலைகளிலும் நடைபெற்று வருவதைப் போல, ஒரு சில தொழிற்சங்கங்களை மட்டும் நிர்வாகிகள் அங்கீகரித்து, மற்ற தொழிற்சங்கங்களை அங்கீகரிக்காமல் அவர்களோடு மட்டும் பேரம் பேசி, அவர்களுக்கு மட்டும் சலுகை செய்து விடுவதைப் போலத்தான் அங்கிருக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தும் நிலைமை இருக்கிறது. 75 சத விகிதத்திற்கு மேல் நான் முதலில் சொன்ன மூன்று தொழிற்சங்கங்களில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. அங்கே வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு எந்த விதமான சம்பள உயர்வும் கொடுக்கவில்லை. நான் அந்தத் தொழிற்சாலையில் இருக்கும் மோட்டார் தொழிலாளர் சங்கத் தலைவனாக இருக்கிறேன். அதே சமயத்தில் அங்கிருக்கும் தொழில் நாட்டுக்கு உதவும் பேஸிக் இண்டஸ்ட்ரியாக இருக்கும் காரணத்தால் அவைகள் நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் நான் என்னுடைய கருத்தைச் சொல்கிறேனே தவிர, அங்கே ஸ்ட்ரைக் நடைபெறவேண்டும், அந்த நிர்வாகம் சீர்குலையவேண்டும் அதன் மூலமாக தொழிலாளர்கள் மட்டும் நன்றாக இருந்து விட்டால் போதும் என்ற கருத்திலே கூறவில்லை. ஆறு வருஷ காலமாக அங்கிருக்கும் தொழிலாளிகளுக்குச் சம்பள உயர்வு இல்லை. பல தொழிற்சாலைகளிலே சம்பள உயர்வு இருந்தது. ஆனால், அங்கே கிடையாது. ஆண்டு தோறும் விலைவாசி ஏறிக்கொண்டே வருகிறது. இப்படி விலைவாசி ஏறியிருந்தும்கூட, நெய்வேலியில் இருக்கும் தொழிலாளர்கள் தங்களுடைய ஊதியப் பிரச்சினையை அரசாங்கத்திற்கும் நிர்வாகத்திற்கும் எடுத்துச் சொல்லியும்கூட, ஒரு விதமான முன்னேற்றத்தையும் அங்கே காணவில்லை. இருந்தாலும், அண்மையில் அந்த நெய்வேலி ஸ்தாபனத்திற்கு தலைவராக திரு. சுப்பராமன் அவர்கள் வந்ததற்குப் பிறகு தொழிலாளர்களுடைய கோரிக்கைப் பிரச்சினைகளை கண்கொண்டு ஓரளவு பார்க்கவும், அதைப் பற்றிச் சிந்திக்கவும் தொடங்கி யிருக்கிறார்கள். இருந்தாலும், அந்தத் தொழிற்சாலையிலே இருக்கிறவர்களுக்கு ஒரு நிம்மதி ஏற்படுகிற வகையில் உயர்வு இருக்கிறதா என்றால் இல்லை. நெய்வேலியில் வேலை செய்யக்கூடிய சில தொழிலாளிகளுக்கு 70 ரூபாய் சம்பளம் தரப்படுகிறது. அதை வைத்துக்கொண்டு ஒரு தொழிலாளி எப்படித் தன் மனைவி மக்களைக் காப்பாற்றி வாழ முடியும் என்பதை அரசாங்கமோ, லேபர்

கமிஷனரோ சிந்தித்துப் பார்ப்பதாக இது வரையில் தெரியவில்லை. 70 ரூபாய்ச் சம்பளம் போதுமா ? சென்னையிலிருந்துதான் காய் கறிகளும், அரிசியும், மற்றவைகளும் நெய்வேலிக்குக் கொண்டு போகிறார்கள். கொத்தவால்சாவடியிலிருந்து லாரி லாரியாக நெய்வேலிக்குச் சாமான்களை ஏற்றிக்கொண்டு சென்று வியாபாரம் செய்கிறார்கள். சென்னையைவிட நெய்வேலியில் விலைவாசி அதிகமாக இருக்கிறதே தவிர, மற்றப்படி, அங்கு சுற்றுப்புற கிராமங்களில் இருக்கும் அளவு விலைவாசி அங்கே இல்லை. ஆகையால், இதை அடிப்படையாக வைத்து, தொழிலாளர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றத் தக்க நிலைமைகளை, அந்த ஸ்தாபனத்திலே வேலை செய்யும் தொழிளாளர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும் வகையில் சம்பளங்களை நிர்ணயித்தால் நன்றாக இருக்கும். ஆனால் அது செய்யப்படவில்லை. சிலர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், நெய்வேலியில் தொழிலாளர்கள் நிறையச் சம்பாதிக்கிறார்கள், நல்ல முறையில் இருக்கிறார்கள் என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது வாஸ்தவம் அல்ல. நெய்வேலி ஸ்தாபனத்தில் சம்பளத்திற்கு வேலை செய்கின்றவர்களுடைய நிலைமைதான் மோசமாக இருக்கிறதே தவிர, கண்டிராக்டர்களிடத்திலே வேலை செய்கின்றவர்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள். ஒரு சாதாரண தொழிலாளி, கண்டிராக்டரிடத்தில் வேலை செய்யும்போது, மூன்று, நான்கு ரூபாய் தினக் கூலி பெறுகிறான். ஆனால், நிர்வாகத்திலே ஊழியம் செய்கின்ற காரணத்தால் இவர்களுக்கு எப்போதும் இருந்ததைப்போலவேதான் இப்போதும் இருந்துகொண்டு வருகிறது. ஆகையால், அந்தக் குறைபாட்டை நம்முடைய அரசாங்கமும், லேபர் கமிஷனரும் நன்றாகச் சிந்தித்து, நல்ல நிலைமைகளைக் கொண்டுவர வேண்டுமென்று நான் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து இப்பொழுது ஒரு சார்ட்டர் ஆஃப் டிமாண்ட் என்ற முறையில், அவர்களுக்கு இருக்கும் கோரிக்கைகளை டிமாண்டாக வைத்திருக்கிறார்கள். சாம, தான, பேத, தண்டம் ஆகிய நான்கு முறைகளையும் அவர்கள் கையாள இருக்கிறார்கள். முதன் முதலாக அரசாங்கத்திற்குக் கோரிக்கை விடுகிறார்கள். லேபர் கமிஷனரிடத்தில் தூது சென்று, அவர்கள் மூலமாக அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நிர்வாகத்தினர் ரிவைஸ் பண்ணி ஃபிக்ஸ் செய்திருக்கும் சம்பள விகிதங்கள் மிகவும் பரிசீலிக்க வேண்டிய விஷயமாகும். இப்பொழுது ஃபிக்ஸ் பண்ணியிருக்கும் சம்பள இன்க்ரிமெண்ட் ஆஸ்பெக்ட்டைப் பார்த்தால் ஏற்கெனவே இருந்த இன்க்ரிமெண்ட் முறையை இதில் அங்கீகரிக்கவில்லை. முன்பெல்லாம் இன்க்ரிமெண்ட் அளவு அதிகமாக இருந்தாலும், இப்பொழுது கொஞ்சம் உயர்த்துவதுபோல் உயர்த்தி, இன்க்ரிமெண்டைக் குறைத்து விட்டார்கள். நிலக்கரிச் சுரங்கத்தில் இறங்கி வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு டி. பி. வந்துவிடும் என்று சொல்லக்கூடிய அவ்வளவு மோசமான நிலையில் தொழிலாளர்கள் அங்கே வேலை செய்கிறார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

அந்தத் தொழிலாளர்களுக்கு ப்ராஜெக்ட் அலவன்சு கொடுப்பது இல்லை. நம்முடைய மாநிலத்திலேயே உள்ள இதர ப்ராஜெக்டுகளில் ப்ராஜெக்ட் அலவன்சு என்று கொடுக்கப்படுகிறது. ஆனால் நெய்வேலியில் கிடையாது. மற்ற இடங்களில் ஏன் கொடுக்கிறார்கள், இங்கே ஏன் கொடுப்பது இல்லை என்பதை நன்றாகப் பரிசீலனை செய்து, நெய்வேலியிலும் ப்ராஜெக்ட் அலவன்சு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல முன்பெல்லாம் தொழிலாளர்களிடமிருந்து வாட்டர் சார்ஜ், மின்சார சார்ஜ் எல்லாம் வசூல் செய்யப்படவில்லை. இப்போது வாட்டர் சார்ஜ் வசூல் செய்கிறார்கள். மேலும் அவர்கள் உபயோகப்படுத்துகிற மின்சாரத்திற்கு மற்றவர்கள் என்ன கட்டணம் கொடுக்கிறார்களோ அதே கட்டணம் வாங்கப்படுகிறது. இவர்கள் உபயோகப்படுத்துகிற மின்சாரத்திற்கு முன்போல கன்செஸன் கொடுக்கப்படுவதில்லை. சம்பளத்தை இப்போது





புதிதாக நிர்ணயம் செய்திருக்கிறோம் என்று சொன்னாலும் இப்படி வாட்டர் சார்ஜ், மின்சார சார்ஜ், வீட்டு வாடகை என்று வசூல் செய்துவிட்டால் அவர்கள் எப்படி குடும்பம் நடத்த முடியும் ?

மேலும் இவர்களுக்கு டியர்னஸ் அலவன்சு கிடையாது. சர்க்கார் தம் சிப்பந்திகளுக்கே டியர்னஸ் அலவன்சு என்று கொடுக்கிறார்கள். படி அரிசி இன்றைக்கு ஒண்ணேகால் ரூபாய் என்றால் நாளைக்கு ஒண்ணரை ரூபாய், இரண்டு ரூபாய் என்று விற்கிறது. டியர்னஸ் அலவன்சு என ஒன்றிருந்தால்தான் அவர்கள் வாழமுடியும். ஆகவே திரு. சுப்பராமன் அவர்கள் ஃபிக்ஸ் பண்ணிய சம்பளத்தில் டியர்னஸ் அலவன்சு இல்லாவிட்டாலும் இப்போது கொஞ்சம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் இதையும் பரிசீலனைசெய்து அவர்களுக்கு அதிகப்படியான டியர்னஸ் அலவன்சு வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்னும் ஏற்கெனவே லாரிகள், பஸ்கள் வைத்து காலை நேரத்தில் அந்தத் தொழிலாளர்களை வொர்க் ஸ்பாட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். இப்போதோ, அந்த லாரி, பஸ்களுக்கு இவர்களிடமிருந்து கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இப்படி தொழிலாளர்களிடமிருந்து பலவகையில் பணம் வசூலிக்கப்பட்டால் அவர்கள் எவ்வாறு குடும்பம் நடத்த முடியும் ? இன்றைய தினம் 3,500 தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய நிலை நாளுக்கு நாள் வேதனை தரக்கூடியதாக மாறி வருகிறது. மின்சாரம் உற்பத்தி செய்கிற தொழிலாளர்கள் இரண்டு நிமிஷம் வேலையை நிறுத்தினால் கூட எத்தனையோ யூனிட் மின்சார உற்பத்தி நமக்குத் தடைபடும். அதுபோலவே இங்கே மின்சாரம் உற்பத்தியாகவேண்டுமென்றால் நிலக்கரி வேண்டும். நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் மெதுவாக வேலை செய்தாலும் மின்சார உற்பத்தி பாதிக்கப்படும். இப்படி நெய்வேலியில் நடைபெறுகிற ஒவ்வொரு தொழிலும் இன்டெக்ரேடெட்டாக இருப்பதனால் அங்குள்ள தொழிலாளர்களின் கோரிக்கைகள்—நியாயமான கோரிக்கைகள் நல்ல முறையில் பரிசீலனை செய்யப்படவேண்டும்.

இன்றையதினம் அந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாது பல சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதனால் மார்ச் 22-ம் தேதி ஒன்று கூடி ஸ்ட்ரைக் பாலட் எடுக்க இருக்கிறார்கள். இது அவசிய மற்றதுதான். அதுவும் நமது முதல் அமைச்சர் அவர்கள் எதற்காக ஸ்ட்ரைக் செய்ய வேண்டும், நாங்கள் அவர்களுடைய பிரச்சினையை பரிசீலிக்கிறோம் என்று சொல்லும் குணம் வாய்ந்தவர்கள். இப்பொழுதும் ஸ்ட்ரைக் செய்தே தீரவேண்டும் என்ற அவசியம் இல்லை.

அவர்கள் சென்ற மாதத்தில் ஒரு முறை நெய்வேலிக்கு வந்தார்கள் குறிப்பிட்ட தொழிற் சங்கத்தைத் தவிர மற்ற சங்கப் பிரதிநிதிகளை அவர்கள் பார்க்க மறுத்து விட்டார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யாரையும் பார்க்கமாட்டேன் என்று நான் மறுக்கவில்லை. ஒரு தொழிலாளி தனித்த முறையில் தன் குறையைச் சொல்ல வந்தாலும் நான் கேட்கத் தயாராகத்தான் இருந்தேன். இவர்கள் வந்தார்கள். வேறு யாரும் வரவில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** நெய்வேலி தொழிலாளர்களின் சார்பாக அவர்களுக்கு நாங்கள் வரவேற்பு அளிக்கிறோம். மறுபடியும் ஒரு முறை அவர்கள் வரவேண்டும். (கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவசியம் இல்லை) இப்போது வருவதற்குத் தயார் இல்லை என்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் வருவதற்கு வரவேற்பு அவசியம் இல்லையென்று சொல்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அவர்கள் இங்கே இருந்து உத்தரவு போட்டாலும்கூட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அத்தனைபேரும் அவரைக் கோட்டையில் வந்து சந்திக்கத் தயாராய் இருக்கிறார்கள். அங்கே உள்ள

தொழிலாளர்களுடைய பிரச்சினையை நன்கு ஆலோசித்து அவர்களுக்கு டியர்னஸ் அலவன்சு கொடுக்கப்பட வேண்டும், ப்ராஜெக்ட் அலவன்சு கொடுக்கப்பட வேண்டும், லேபர் சார்ஜ் ரத்து செய்யப்பட வேண்டும், முன்பு இருந்த வீட்டு வாடகை உயர்த்தப்படக் கூடாது, மின்சாரக் கட்டணச் சலுகை நீடிக்க வேண்டும், நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அழைத்துச் செல்லும் பஸ்களுக்குக் கட்டணம் வசூலிக்கக் கூடாது ஆகியவை போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தி மார்ச் 22-ஆம் தேதிக்கு முன்னதாகவே ஆர்பிட்ரேஷனுக்கு விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நாட்டுக்கு உதவுகிற ஸ்தாபனத்தில், தேசீய ஸ்தாபனத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் நல்ல முறையில் தொடர்ந்து நாட்டுக்கு திருப்தியுடன் பணிபுரிய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் தொழிலாளர்கள் மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நமது மாநிலத்தில் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் நல்ல முறையில் கவனம் செலுத்தப்பட்டு நலனுக்காக ஆராயப்பட்டு பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டதைப் பாராட்டுகிறேன். அதனால்தான் இன்றைய தினம் நமது மாநிலத்தில் தொழில் துறையில் அமைதி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். குறிப்பாக எங்களுடைய பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள்தான் அதிகம். அவர்களுடைய பிரச்சினையைப் பற்றி எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள "லேபர் இன் மெட்ராஸ் ஸ்டேட்" என்ற புத்தகத்தில் ப்ளான்டேஷன் லேபர் சம்பந்தமாகச் சில குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள்.

9-30 a.m. இதிலே முக்கியமாக நீலகிரி ஜில்லாவிலே தோட்டத் தொழிலாளர்களுக்கு மிகவும் கஷ்டமான ஒரு நிலை வீட்டு வசதி இல்லாமை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்தக் குறிப்பிலே கண்டுள்ளபடி, ஏற்கனவே 23,313 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்னும் 11,560 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் குறிப்பிலே காணப்படுகிறது. சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே இந்தத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக 5 லட்சம் ரூபாய் சாங்க்ஷன் செய்யப்பட்டது. ஆனால் தேசீய நெருக்கடி என்ற காரணத்தைக் காட்டி அந்தத் தொகையை அவர்களுக்குப் பயன்படுத்தவில்லை. தேயிலைத் தொழில் இந்திய தேசத்திற்கு அந்நிய நாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துத் தருகின்ற ஒரு நல்ல தொழில். இதிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு நல்ல வசதி செய்து கொடுத்தால்தான் அவர்கள் கஷ்டப்பட்டு உழைக்க முடியும். அதன் மூலம் அந்நிய நாட்டுச் செலாவணியை நாம் மேலும் பெற முடியும். ஆகவே, நான் அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்வது, கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட ஐந்து லட்சம் ரூபாயோடு இந்த ஆண்டு பட்ஜெட்டில் மேலும் ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கி அந்தத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் இப்போது அந்த மலைப் பிரதேசத்தில் குளிரிலும், மழையிலும், 10க்கு 10 அடியுள்ள சிறிய வீட்டிலே எட்டுக் குழந்தைகள், மனைவி ஆகியோருடன் இன்று வசித்து வருகிற நிலைமையை நான் பார்த்திருக்கிறேன். இந்த அவல நிலை நீங்க இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்விதமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது உடனுக்குடன் மின்சார வசதியையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீலகிரியிலே, உற்பத்தியாகிற மின்சாரம் எல்லாம் சமவெளியிலே பயன்படுகிறதே தவிர, அந்தத் தொழிலாளர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பது மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறது. ஆகவே, வீடுகள் கட்டும்போதே மின்சார வசதியையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





அடுத்தபடியாக மருத்துவ வசதியை எடுத்துக்கொண்டால் "க்ரூப் ஹாஸ்பிடல்ஸ்" ஏற்படுத்தலாம் என்ற விதி இருக்கிறது. இப்போது அநேக ஆஸ்பத்திரிகளில் எம்.பி.பி.எஸ். டாக்டர்களே இல்லை. எங்கோ ஒரு இடங்களில்தான் இருக்கிறார்கள். எல்லா "க்ரூப் ஹாஸ்பிடல்"களிலும் எம்.பி.பி.எஸ். டாக்டர்களே பணி புரிய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது லேபர் வெல்பேர் ஆபீஸர்களைத் தோட்ட முதலாளிகளே நியமிக்கிறார்கள். இவர்களால் லேபர் வெல்பேரை எப்படிக் கவனிக்க முடியும்? தோட்ட முதலாளிகள், தொழிலாளர்களுக்கிடையே இந்த வெல்பேர் ஆபீசர்கள் படும் நிலைமை வருந்தத் தக்கதாக இருக்கிறது. ஆகவே, இந்த உத்தியோகத்திற்கு சர்க்காரே ஆளை நியமித்தால் அவர்கள் தொழிலாளர்களுடைய நன்மையை முக்கியமாகக் கொண்டு பணி புரிய முடியும் என்பதால் அதற்கான உத்தரவை அரசாங்கம் போடவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது மினிமம் வேஜஸ் ஆக்ட் என்று இருக்கிறது. கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் கோர்ட் தீர்ப்புப்படி ஆண் தொழிலாளிக்கு ஒரு நாளைக்கு ரூ. 2-25 ந.பை. ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டது. ஆனால் எட்டு ஆண்டுகள் ஆகியும் தொழிலாளர்களுக்கு அந்த ஊதியம் கிடைக்கிறதா என்றால் இல்லை. அதற்கு என்ன காரணம், இதற்கு இடைஞ்சலாக இருப்பது யார் என்று கண்டு பிடித்து குறைந்த பட்ச ஊதியமான ரூ. 2-25-ஐக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இடைக்கால உயர்வாக 15 ந.பை. தற்காலிகமாகக் கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். இது மிகவும் குறைந்த ஒரு அடிப்படை என்பதை இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றத் தொழிலிலே ஈடுபட்டுள்ள தொழிலாளிக்கும் இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ள தொழிலாளிக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. உதாரணமாக, டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இன்று நல்ல ஊதியத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மலைப் பகுதியில் உள்ள இந்தத் தொழிலாளர்கள் மழையிலும் குளிரிலும் காட்டுச் செடிகளுக்குள்ளே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய தொழிலாளிகள், இவர்களுடைய கஷ்டமான நிலைமையை உணர்ந்து இவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முறையில் குறைந்த பட்ச ஊதியமான ரூ. 2-25-ஐ இந்த வருஷ இறுதிக்குள்ளாவது அந்தத் தொழிலாளர்களுக்கு வாங்கிக் கொடுக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

போனஸ் பிரச்சினையைப் பொறுத்து இந்திய தேசீய தொழிற் சங்கக் காங்கிரஸ் உப தலைவர் ஸ்ரீ ஜி. ராமானுஜம் அவர்கள், சென்னையில் போனஸ் கமிஷன் வந்திருந்தபோது ஒரு குறிப்பைக் கொடுத்தார். முக்கியமாக, **"Need for providing for inspection of accounts by Labour"** என்ற புஸ்தகத்தை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். போனஸ் தகராறுகள் அடிக்கடி ஏற்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் போனஸ் தகராறு இப்போது இருந்து கொண்டிருக்கிறது. ஆரம்ப நிலையிலேயே கணக்குகளைப் பரிசீலிப்பதற்குத் தொழிலாளர்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து விடுவோமேயானால் நலமாக இருக்கும். இந்த மாதிரித் தகராறுகள் குறைந்து போய்விடும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அதற்கு ஒரு வாதம் "கணக்குகள் ஆடிட் செய்யப்படுகிறது" என்று சொல்லலாம். தொழிலாளர் பிரதிநிதிகள் அதைப் போய் ஏன் பார்க்க வேண்டுமென்று சொல்லலாம். அதைப்பற்றி சுப்ரீம் கோர்ட்டார் ஒரு தீர்ப்பில்—

"The Supreme Court has also held that the auditor's certificate by itself is no conclusive proof that the accounts are correct; and that at best it can be only comparable to a certificate issued by a doctor".

என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையிலே சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கொடுத்திருப்பதால் தொழிலாளர் பிரதிநிதிகள் "கிராஸ்" ப்ராபிட்டைப் பரிசீலிப்பதிலே ஆட்சேபனை இருக்க முடியாது. இதைப் பற்றி மத்திய சர்க்காரிடத்தில் எடுத்துச் சொல்ல தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு அதற்கான வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்குமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. செ. மாதவன் :** மதிப்புக்குரிய அவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் பிரச்னைகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒரே ஒரு யூனியன்தான் இருக்க வேண்டுமென்பதிலே, அப்போதுதான் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்பட முடியும் என்பதிலே யாருக்கும் வேறுபாடான கருத்து இருக்க முடியாது. ஆனால் அப்படி ஒரு யூனியன் இருந்து அந்த யூனியன் கூறக்கூடிய குறைகளைக் கவனிக்காமல் அரசாங்கம் புறக்கணித்தால் அதனாலே ஏற்படக்கூடிய சங்கடங்களை உத்தேசித்துத்தான் பல யூனியன்களைப் பல அரசியல் கட்சிகள் நடத்தக் கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. தொழிலாளர் மீது பற்றும் பாசமும் கொண்ட நமது அரசாங்கம் இது பற்றி நன்றாக ஆராய்ந்து தொழிலாளர்களைக் கொண்ட ஒவ்வொரு யூனியனும் அரசாங்கத்தினுடைய உதவியைப் பெற முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன் என்ற கொள்கை நமது நாட்டுக்கு வரவேண்டுமென்றால் அதற்கு நம்முடைய அரசாங்கம் முன் நின்று கட்சி வேறுபாடற்ற முறையிலே, அரசியல் கட்சிகளோ, அரசியல் கட்சித் தலைவர்களோ சம்பந்தப்படாத முறையிலே அரசாங்கம் முன் நின்று தொழிலாளர்கள் பிரச்னையை உடனுக்குடன் கவனித்தால் நிச்சயம் ஒரு நல்ல ஏற்பாட்டை நம்முடைய மாகாணத்தில் ஏற்படுத்த முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய நாட்டிலே உள்ள சட்டப்படி ஒரு தனிப்பட்ட தொழிலாளி தன்னுடைய குறைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவன் ஒரு யூனியனிலே சேரவேண்டும். ஏழுபேர் சேர்ந்து ஒரு யூனியனை அமைக்க வேண்டும். அதற்குப் பின்னாலே இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் வருகிறது என்றால் அதிலே ஒரு குறிப்பிட்ட அளவு தொழிலாளர் ஆதரவு பெற்றதற்குப் பின்னரே அப்படிப்பட்ட பிரச்னைகளில் தொழிலாளர்கள் தீர்வு காணக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றி ஒவ்வொரு தனிப்பட்ட தொழிலாளியும் தன்னுடைய பிரச்னையைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய உரிமையைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதன் விளைவு என்னவாகிறது என்றால் இன்று சாதாரண சிறுசிறு தொழிற்சாலைகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எப்படியாவது ஒரு யூனியனில் சேர்ந்துதான் ஆக வேண்டியிருக்கிறது. அப்படி யூனியன் இருந்தாலும், முதலாளிகளை எதிர்க்கக்கூடிய யூனியன்களில் குறைந்த அளவில் தொழிலாளர்கள் இருந்தால் அந்த யூனியனுக்கு முக்கியத்துவம் இல்லாததொரு சூழ்நிலை இன்றிருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட தொழிலாளியும் தங்கள் குறைகளை சட்டப்பூர்வமாக தீர்த்துக்கொள்ள ஒரு உரிமையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மோட்டார் தொழிலாளர்கள் பற்றி சட்டம் வந்து இரண்டு ஆண்டுகள் ஆகிறது. சென்ற ஆண்டும் இதே மன்றத்தில் நாங்கள் விதிகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்று கூறப்பட்டது. இந்த ஆண்டு அறிக்கையிலும்கூட அதையே திருப்பிக் கூறியிருக்கிறார்கள். ஒரு சட்டம் வந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் கூட இந்த அரசாங்கம் அந்தச் சட்டத்திற்கு விதிகள் செய்ய தயங்குகிறது என்றால் அதற்கு காரணம் என்ன ? மோட்டார் முதலாளிகளைப் பார்த்து இந்த அரசாங்கம் பயப்படுகிறது என்று நாங்கள் சொன்னால் அமைச்சர்களுக்கு கோபம் வரும். ஆனால் உண்மை என்ன ? நம





மாநிலத்தில் மோட்டார் தொழில் பற்றி பின்பற்றக் கூடிய கொள்கை என்னவென்றால் ஸ்மால் ஆப்பரேட்டர்களை ஊக்குவிக்கவேண்டுமென்ற கொள்கை நம் அரசாங்கத்திற்கு இன்று இருக்கிறது. அதன் விளைவாக பல சிறு பஸ் முதலாளிகள் இன்று நம் மாநிலத்தில் தோன்றியிருக்கிறார்கள். அப்படி ஒவ்வொரு பஸ் நிறுவனத்திலும் யூனியன் ஏற்பட முடிகிறதா ? அந்தந்த பஸ் முதலாளிகள் அப்படி தொழிலாளர் யூனியன் ஏற்படுவதற்கு ஒத்துழைக்கிறார்களா அல்லது அனுமதிக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை என்றே கூறலாம். இன்றும் பல பஸ் முதலாளிகள் இந்த மாநிலத்தில் இருக்கிறார்கள். அவர்கள் அவர்களது தொழிலகத்தில் யூனியன் ஏற்பட முடியாமல் எப்படி தடுக்க முடியுமோ அப்படி தடுக்கிறார்கள். காரணம், குறைந்தளவில் தொழிலாளர்கள் அவர்கள் தொழிலகத்தில் வேலை செய்யும் ஒரு சூழ்நிலை இருப்பதுதான். அவர்களை எப்படியாவது பிடித்துக்கொண்டு 7 பேர்கள் கூட சேராத ஒரு நிலைமையை உண்டாக்கி விட இன்று பஸ் முதலாளிகள் முயற்சி செய்து வருகிறார்கள். இதைத் தடுப்பதற்காவது நம் அரசாங்கம் கொஞ்சம் வேகமாக இந்தச் சட்டத்தை அமுல் படுத்த ஏன் தயங்குகிறார்கள் ? இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திரும்பத் திரும்ப தங்கள் அறிக்கையில் விதிகள் செய்துக்கொண்டிருக்கிறோம். வந்து விடும், வந்து விடும் என்று சொல்கிற ஒரு சூழ்நிலை இன்று நாட்டில் இருக்கிற காரணத்தினால்தான் சாதாரண பஸ் தொழிலாளர்கள் இன்று மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் இங்கு எடுத்துக் கூற கடமைப்பட்டுள்ளேன். சில பஸ் முதலாளிகள் கொடுக்கக்கூடிய சம்பளத்தைக் குறைத்துக் கொடுத்து ஆனால் கூட்டிக் கொடுப்பதாக ரிக்கார்ட் செய்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களிடம் அதற்கு கையெழுத்து வாங்கி விடுகிறார்கள். அதேபோல் போனஸ் கொடுப்பதில்லை, சில பஸ் முதலாளிகள். ஆனால் போனஸ் கொடுத்ததாக ரிக்கார்ட் செய்து விடுகிறார்கள். இந்த அநியாயத்தை நம் அரசாங்கம் பொறுத்துக் கொண்டிருக்கலாமா ? தொழிலாளர்கள் லேபர் கோர்ட்டுக்கு செல்ல வேண்டுமென்றால் எங்கேயாவது ஒரு யூனியனில் அவர் அங்கத்தினராக வேண்டும். அந்த யூனியன்கள் பஸ் முதலாளிகளிடம் வேலை செய்யும் தொழிலாளர்களில் ஓரிருவரைத்தான் சேர்த்துக்கொள்ளும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. மற்றவர்களை பஸ் முதலாளிகள் தடுத்து விடுகிறார்கள். அதில் அங்கத்தினர்களாக சேர்ந்திருக்கிறார்கள் என்றால் உடனே டிஸ்மிஸ் செய்து விடுகிறார்கள். அதற்கு ஒரு வழியைப் பின்பற்றுகிறார்கள். டெம்பரரி வொர்க்கர்ஸ் என்று பஸ் முதலாளிகள் தங்கள் தொழிற்சாலைகளில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் முயற்சி செய்ததா ? டெம்பரரி வொர்க்கர்ஸ் என்று தங்கள் தொழிற்சாலைகளில் வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால் அவர்கள் சட்டப்பூர்வமாக தங்கள் உரிமையை ஏற்படுத்திக் கொள்ளவோ அல்லது லேபர் கோர்ட்டுக்கு சென்று முறையிடவோ வாய்ப்பில்லாததொரு சூழ்நிலை இருக்கிறது. இதை மாற்றியமைக்க வேண்டும். மோட்டார் தொழிலாளர்கள் சட்டத்தை உடனடியாக நம் அரசாங்கம் அமுல் நடத்த வேண்டும். ரீஇன்ஸ்டேட்மெண்ட் பாலிஸி பொறுத்தவரை அரசாங்கம் என்ன கொள்கையைக் கடைப்பிடிக்கிறது? அது பற்றி நாங்கள் பன்முறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறோம். ஹைகோர்ட் அல்லது லேபர் கோர்ட் ஒரு தொழிலாளியை ரீஇன்ஸ்டேட் செய்ய வேண்டுமென்று சொன்னால் அப்படி உத்தரவு போட்ட பின்னரும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முதலாளிகளுக்கு வழியிருக்கிறது, இடமிருக்கிறது. அப்படி தடுத்தால் அதற்கு என்ன செய்கிறார்கள் என்று இந்த மன்றத்தில் கேட்கப்பட்டது. அப்போது அதற்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் ப்ராஸிக்யூட் செய்வோம், வழக்குகள் போடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இறுதி முடிவு என்ன ? முதலாளிகளுக்கு அபராதம் போடலாம். அதுதான் இன்றிருக்கும் நிலை. ஆனால் தொழிலாளர்களை திருப்பி எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு சட்டம் இருந்தால் அவர்கள் கோர்ட் உத்தரவை மீறக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுமா ? அதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். கோர்ட் உத்தரவை மீறியதற்கு பின் ஒரு தொகையை அபராதமாகக் கொடுத்துவிட்டால் தப்பித்து விடலாம் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

இதை மாற்றியமைக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாக்டரிஸ் ஆக்ட் பற்றி இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறோம். இப்போதுள்ள வொர்க்கிங் அவர்ஸ், தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் எவ்வளவு மணி நேரம் வேலை செய்கிறார்களோ அதைத் தான் கணக்கிடும் சூழ்நிலை இருக்கிறது. தொழிலாளர்கள் வெளியே தொழிற்சாலை சம்பந்தப்பட்ட வேலைக்கு சென்றால்கூட அந்த நேரத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இப்போதிருக்கிறது. இதை மாற்றியமைத்து தொழிற்சாலை சம்பந்தப்பட்ட எந்த வேலைக்கு எங்கே சென்றாலும் அதை வொர்க்கிங் அவர்ஸாக எடுத்துக்கொள்ள வேண்டும். ப்ளாண்டேஷன் வொர்க்கர்ஸ்க்கு கன்ஸ்யூமர் கோ-ஆபரேட்டிவ் சொஸைட்டீஸ் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த சர்க்காருக்கு கொள்கை இருக்கிறது என்று வெளியிட்டார்கள். அந்தக் கொள்கை இன்று சரிவர அமுல் நடத்தப்படவில்லை. ப்ளாண்டேஷன் வொர்க்கர்ஸ்க்கு இந்தக் கொள்கையை அமுல் நடத்துவதுபோல் எல்லாத் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு நூற்றுக்கு பத்து பேர்களுக்கு மேல் எந்தெந்த தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்களோ அங்கெல்லாம் இந்த கன்ஸ்யூமர் கோ-ஆபரேட்டிவ் சொஸைட்டிகளை அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்று, அதற்காக இந்த அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஆர். செங்காலியப்பன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த தொழிலாளர் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இன்று எல்லா ஆலைகளிலும் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தவேண்டுமென்று முத்தரப்பு மகாநாட்டில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இன்று அப்படி எல்லா ஆலைகளிலும் ஏற்படுத்தியிருக்கிறோமா என்றால் கிடையாது. ஏன் இதை அமுல் படுத்தவில்லை ? ஏன் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தவில்லை. இது பற்றி அரசாங்கம் இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுத்ததாகத் தெரியவில்லை. இந்த ஐந்தாறு ஆண்டுகளில் எங்கள் கோவை ஜில்லாவில் பல புது ஆலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த ஆலைகளில் எல்லாம் 300, 400 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அங்கு கோஆபரேடிவ் ஸ்டோர்ஸ், ஒவ்வொரு ஆலையிலும் திறக்கப்பட வேண்டுமென்று பல முறை எடுத்துச்சொல்லி வருகிறோம். ஆனால் அவற்றிற்கு முதலாளிகள் செவி சாய்ப்பதாக இல்லை. இன்று விலைவாசி விஷம் போல் ஏறிவருகிறது. இன்று தொழிலாளர்கள் வாழ்க்கைப்புள்ளி எவ்வளவு தூரம் கூட்டப்பட்டிருக்கிறது என்றால், அரசாங்கம் சுமார் 3 அல்லது 4 ரூபாய் கிடைக்கும் என்று நிர்ணயம் செய்வார்களானால் வெளியே எட்டு ரூபாய் அளவிற்கு உயர்ந்து விடுகிறது. இதைப் பார்க்கும் போது எப்படி தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில் நடத்த முடியுமென்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே இது குறித்து ஆலோசித்துப் பார்த்து புள்ளி நிர்ணயிப்பதை பரிசீலனை செய்து நல்ல முறையில் நிர்ணயம் செய்து தொழிலாளர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தெந்த ஆலைகளில் கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஏற்படுத்தவில்லையோ அங்கெல்லாம் உடனடியாக ஏற்படுத்த லேபர் கமிஷனர் அவர்கள் மூலம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று சில தொழில்களில் காண்ட்ராக்ட் முறை இருந்து வருகிறது. உழைப்பிற்கு தகுந்த ஊதியம் கொடுக்கவேண்டுமென்று எல்லா மேடைகளிலும் சொல்கிறோம். சட்டமும் இயற்றுகிறோம். ஆனால் இன்று நிறைய முதலாளிகள் பல தொழில்களை காண்ட்ராக்ட் முறையில் வைத்துக்கொண்டு தொழிலாளர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய சம்பளத்தை கிடைக்க முடியாத அளவிற்கு ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதை நம் அரசாங்கம் கண்காணிக்கவேண்டும். அவர்கள் சட்டப்பூர்வமாக தொழிற்சங்கத்தில் அங்கத்தினர்களாக சேர்ந்து தொழிற்சங்கத்திலிருந்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்போது கன்ஸிலியேஷனுக்கு வருகிறது. லேபர் ஆபீசர்கள் வரும்போது, இவர்கள் காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் என்று பாக்டரி





சொந்தக்காரர்கள் கூறிவிடுகிறார்கள். காண்ட்ராக்ட் முறைபற்றி இன்று நம் சட்டம் எப்படியிருக்கிறது என்றால் காண்ட்ராக்ட் முறையில் உள்ள தொழிலாளர்களுக்கு இன்று சட்டத்தின்படி பாதுகாப்பு இல்லை. அவர்களை நிறுத்திவிடலாம், என்ன செய்தாலும் அவர்களுக்கு சட்ட பாதுகாப்பு கிடையாது. இந்த நிலை இருக்கக் கூடாது, எந்த ஆலையிலானாலும் சரி, தேயிலைத் தோட்டங்களில் ஆனாலும் சரி, பாக்டரிகளிலானாலும் சரி அவர்களுக்கு சங்கத்தில் சேர பெர்மிட் செய்யவேண்டுமென்று விதி இருக்கவேண்டும். இந்த காண்ட்ராக்ட் முறை அடியோடு ஒழிக்கப்படவேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் தொழில் துறையில் சமாதானம் நிலவ வேண்டும் என்று நாம் எல்லோரும் வற்புறுத்தி வருகிறோம். சமாதான மாக உற்பத்தி பெருகவேண்டும், நல்ல முறையில் முதலாளிகளும் தொழி லாளிகளும் பழகவேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால் இவை எல்லாம் ஒரு தரப்பில்தான் இருந்து கொண்டிருக்கிறது. முக்கியமாக தொழிலாளர்கள் சமாதானத்தோடு உற்பத்தியை பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பழகிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் முதலாளிகள் தரப் பில் அந்த விதமான சமாதானத்திற்கு, சமாதான முறையில் தொழிலை நடத்துவதற்கு, சட்டரீதியான முறையில் தொழிலை நடத்த வேண்டும் என்ற எண்ணம் முதலாளிகளுக்கு இருப்பதில்லை. சமீப காலத்தில் போனஸ் கொடுக்கின்ற பிரச்னையில் கோவையில் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு இந்த அளவுக்கு போனஸ் கொடுப்பது என்று தீர்மானிக்கப் பட்டது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், முதலாளிகளும் கூடியிருந்து பேசி முடிவு எடுக்கப்பட்டது. முதலாவது எங்களுக்கு போனஸ் கொடுப் பதற்கு கட்டுப்படியாகாது, ஆகவே போனஸ் கொடுக்க முடியாது, என்று சொன்னார்கள். பின்னால் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு முடிவுக்கு வந்த பின்னால் அந்த முடிவை அப்போது முதலாளிகளும், தொழி லாளர்களும் ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பின்னால் ஒரு சில ஆலை களில், குறிப்பிட்ட இரண்டு மூன்று ஆலைகளில், அதிகப்படியாக போனஸை கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக இன்னின்ன அளவுக்கு போனஸ் கொடுக்கவேண்டும் என்று அங்குள்ள எல்லா மில் முதலாளிகளும் தொழிலாளிகளும் முதலமைச்சர் அவர்கள் செய்த முடிவுக்கு ஒத்துக் கொண்ட பின்னால், எங்களுக்கு போனஸ் கொடுப்பதற்கு கட்டுப்படி யாகாது என்று சொன்னவர்கள், பின்னால் அதிகப்படியாக போனஸ்ஸும் அட்வான்ஸும் கொடுக்கிறார்கள். இது அமைதியை நீடிக்கவேண்டும் என்பதற்காகவா, யார் இந்த அமைதியை கெடுத்துக்கொண்டிருப்பது என்பதை அரசாங்கமும் அமைச்சர் அவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். இப்பேர்ப்பட்ட முறையில் அமைதியின்மையை ஏற்படுத்துகிற முதலாளிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் சில நேரங்களில் ஒப்பந்தம் நடைபெறுகிறது. இவ்விதமான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னால் தொழிலாளர்கள் அதன்படி நடந்துக் கொள்கிறார்கள். ஆனால் தொழிற்சாலை முதலாளிகள் இந்த ஒப்பந்தத்தை மீறி நடக்கிறார் கள். அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொழிலாளர்கள் ஆத்திரத்தோடு, சில வேளைகளில் நோட்டீஸ் கொடுக் காமல் வேலை நிறுத்தம் செய்துவிட்டால், இவர்கள் சட்டவிரோதமாக வேலைக்கு வராமல் இருந்துவிட்டார்கள் என்று எட்டு நாள் சம்பளத்தை பிடித்துக் கொள்வதற்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் சட்டவிரோதமாக கதவு அடைப்பு செய்கிறார்கள் சில முதலாளிகள். ஆனால் அவர்கள் மீது இதுவரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இப்பேர்ப்பட்ட முறையில் ஒப்பந்தத்தை மீறுகின்ற வகையில் நடக்கின்ற முதலாளிகளுக்கு எந்த விதமான தண்டனையோ அல்லது பைனோ இதுவரையில் கொடுத்திருப் பதாக எனக்குத் தெரியவில்லை. சமாதானம் என்பது சட்டப்படி இரண்டு தரப்பாரும் பொதுவாக அமல் நடத்த வேண்டிய ஒன்றாகும். அந்த முறையில் இரண்டு தரப்பாரும் சேர்ந்து இதை அமல் நடத்துகின்ற முறையில் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதை மாற்றியமைக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். பாக்டரீஸ் ஆக்ட் பற்றி இந்த மன்றத்திலே எடுத்துக் கூறி
யிருக்கிறோம். இப்போதுள்ள வொர்க்கிங் அவர்ஸ், தொழிற்சாலைக்குள்
தொழிலாளர்கள் எவ்வளவு மணி நேரம் வேலை செய்கிறார்களோ அதைத்
தான் கணக்கிடும் சூழ்நிலை இருக்கிறது. தொழிலாளர்கள் வெளியே
தொழிற்சாலை சம்பந்தப்பட்ட வேலைக்கு சென்றாலும் அந்த நேரத்தை
கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது.
இதை மாற்றியமைத்து தொழிற்சாலை சம்பந்தப்பட்ட எந்த வேலைக்கு
எங்கே சென்றாலும் அதை வொர்க்கிங் அவர்ஸாக எடுத்துக்கொள்ள
வேண்டும். ப்ளான்டேஷன் வொர்க்கர்ஸுக்கு கன்ஸ்யூமர் கோவாப்ப
ரேட்டிவ் சொஸைட்டீஸ் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த சர்க்காருக்கு
கொள்கை இருக்கிறது என்று வெளியிட்டார்கள். அந்தக் கொள்கை
இன்று சரிவர அமுல் நடத்தப்படவில்லை. ப்ளான்டேஷன் வொர்க்கர்ஸுக்கு
இந்தக் கொள்கையை அமுல் நடத்துவதுபோல் எல்லாத் தொழிற்சாலை
களிலும் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு குறைந்தது பத்து
பேர்களுக்கு மேல் எங்கெங்கு தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்களோ
அங்கெல்லாம் இந்த கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளை
அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்று, அதற்காக இந்த அரசாங்கம்
முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்
கொள்கிறேன்.

***திரு. ஆர். செங்காலியப்பன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
இன்று முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த
தொழிலாளர் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை
கூற விரும்புகிறேன். இன்று எல்லா ஆலைகளிலும் நியாய விலைக்
கடைகள் ஏற்படுத்தவேண்டுமென்று முத்தரப்பு மகாநாட்டில் ஒப்புக்
கொண்டிருக்கிறார்கள். இன்று அப்படி எல்லா ஆலைகளிலும் ஏற்
படுத்தியிருக்கிறோமா என்றால் கிடையாது. ஏன் இதை அமுல் படுத்த
வில்லை? ஏன் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தவில்லை. இது பற்றி
அரசாங்கம் இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுத்த
தாகத் தெரியவில்லை. இந்த ஐந்தாறு ஆண்டுகளில் கோவை
ஜில்லாவில் பல புது ஆலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த
ஆலைகளில் எல்லாம் 300, 400 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.
அங்கு கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்ஸ், நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட
வேண்டுமென்று பல முறை எடுத்துச்சொல்லி வருகிறோம். ஆனால்
அவற்றிற்கு முதலாளிகள் செவி சாய்ப்பதாக இல்லை. இன்று விலைவாசி
விஷம் போல் ஏறிவருகிறது. இன்று தொழிலாளர்கள் வாழ்க்கைப்புள்ளி
எவ்வளவு தூரம் கூட்டப்பட்டிருக்கிறது என்றால், அரசாங்கம் சுமார்
3 அல்லது 4 ரூபாய் கிடைக்கும் என்று நிர்ணயம் செய்தார்களானால்
வெளியே எட்டு ரூபாய் அளவிற்கு உயர்ந்து விடுகிறது. இதைப் பார்க்கும்
போது எப்படி தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில்
நடத்த முடியுமென்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே இது
குறித்து ஆலோசித்துப் பார்த்து புள்ளி நிர்ணயிப்பதை பரிசீலனை
செய்து நல்ல முறையில் நிர்ணயம் செய்து தொழிலாளர்களுக்கு உதவி
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கெங்கு ஆலைகளில்
கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஏற்படுத்தவில்லையோ அங்கெல்லாம் உடனடியாக
ஏற்படுத்த லேபர் கமிஷனர் அவர்கள் மூலம் நடவடிக்கைகள் எடுத்துக்
கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று சில தொழில்
களில் காண்ட்ராக்ட் முறை இருந்து வருகிறது. உழைப்பிற்கு தகுந்த
ஊதியம் கொடுக்கவேண்டுமென்று எல்லா மேடைகளிலும் சொல்கிறோம்.
சட்டமும் இயற்றுகிறோம். ஆனால் இன்று நிறைய முதலாளிகள் பல
தொழில்களை காண்ட்ராக்ட் முறையில் வைத்துக்கொண்டு தொழிலாளர்
களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய சம்பளத்தை கிடைக்க முடியாத
அளவிற்கு ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதை நம் அரசாங்கம் கண்
காணிக்கவேண்டும். அவர்கள் சட்டப்பூர்வமாக தொழிற்சங்கத்தில் அங்கத்
தினர்களாக சேர்ந்து தொழிற்சங்கத்திலிருந்து நடவடிக்கைகள் எடுத்துக்
கொள்ளும்போது கன்ஸிலியேஷனுக்கு வருகிறது. லேபர் ஆபீசர்கள்
வரும்போது, இவர்கள் காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் என்று பாக்டரி





சொந்தக்காரர்கள் கூறிவிடுகிறார்கள். காண்ட்ராக்ட் முறைபற்றி இன்று
நம் சட்டம் எப்படியிருக்கிறது என்றால் காண்ட்ராக்ட் முறையில் உள்ள
தொழிலாளர்களுக்கு இன்று சட்டத்தின்படி பாதுகாப்பு இல்லை. அவர்களை
நிறுத்திவிடலாம், என்ன செய்தாலும் அவர்களுக்கு சட்ட பாதுகாப்பு கிடை
யாது. இந்த நிலை இருக்கக் கூடாது, எந்த ஆலையிலானாலும் சரி, தேயிலைத்
தோட்டங்களில் ஆனாலும் சரி, பாக்டரிகளிலானாலும் சரி அவர்களுக்கு
சங்கத்தில் சேர பெர்மிட் செய்யவேண்டுமென்று விதி இருக்கவேண்டும்.
இந்த காண்ட்ராக்ட் முறை அடியோடு ஒழிக்கப்படவேண்டுமென்று கூறிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் தொழில் துறையில் சமாதானம் நிலவ
வேண்டுமென்று நாம் எல்லோரும் வற்புறுத்தி வருகிறோம். சமாதான
மாக உற்பத்தி பெருகவேண்டும், நல்ல முறையில் முதலாளிகளும் தொழி
லாளிகளும் பழகவேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால் இவை
எல்லாம் ஒரு தரப்பில்தான் இருந்து கொண்டிருக்கிறது. முக்கியமாக
தொழிலாளர்கள் சமாதானத்தோடு உற்பத்தியை பெருக்கவேண்டும் என்ற
நோக்கத்தில் பழகிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் முதலாளிகள் தரப்
பில் அந்த விதமான சமாதானத்திற்கு, சமாதான முறையில் தொழிலை
நடத்துவதற்கு, சட்டரீதியான முறையில் தொழிலை நடத்த வேண்டும்
என்ற எண்ணம் முதலாளிகளுக்கு இருப்பதில்லை. சமீப காலத்தில்
போனஸ் கொடுக்கின்ற பிரச்னையில் கோவையில் முதலமைச்சர் அவர்கள்
தலையிட்டு இந்த அளவுக்கு போனஸ் கொடுப்பது என்று தீர்மானிக்கப்
பட்டது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், முதலாளிகளும் கூடியிருந்து
பேசி முடிவு எடுக்கப்பட்டது. முதலாவது எங்களுக்கு போனஸ் கொடுப்
பதற்கு கட்டுப்படியாகாது, ஆகவே போனஸ் கொடுக்க முடியாது, என்று
சொன்னார்கள். பின்னால் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு முடிவுக்கு
வந்த பின்னால் அந்த முடிவை அப்போது முதலாளிகளும், தொழி
லாளர்களும் ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பின்னால் ஒரு சில ஆலை
களில், குறிப்பிட்ட இரண்டு மூன்று ஆலைகளில், அதிகப்படியாக போனஸை
கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக இன்னின்ன அளவுக்கு போனஸ்
கொடுக்கவேண்டும் என்று அங்குள்ள எல்லா மில் முதலாளிகளும்
தொழிலாளிகளும் முதலமைச்சர் அவர்கள் செய்த முடிவுக்கு ஒத்துக்
கொண்ட பின்னால், எங்களுக்கு போனஸ் கொடுப்பதற்கு கட்டுப்படி
யாகாது என்று சொன்னவர்கள், பின்னால் அதிகப்படியாக போனஸ்ஸும்
அட்வான்ஸும் கொடுக்கிறார்கள். இது அமைதியை நீடிக்கவேண்டும்
என்பதற்காகவா, யார் இந்த அமைதியை கெடுத்துக்கொண்டிருப்பது
என்பதை அரசாங்கமும் அமைச்சர் அவர்களும் தெரிந்து கொள்ள
வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். இப்பேர்ப்பட்ட
முறையில் அமைதியின்மையை ஏற்படுத்துகிற முதலாளிகள் மீது தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும்
சில நேரங்களில் ஒப்பந்தம் நடைபெறுகிறது. இவ்விதமான ஒப்பந்தம்
ஏற்பட்ட பின்னால் தொழிலாளர்கள் அதன்படி நடந்துக் கொள்கிறார்கள்.
ஆனால் தொழிற்சாலை முதலாளிகள் இந்த ஒப்பந்தத்தை மீறி நடக்கிறார்
கள். அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.
தொழிலாளர்கள் ஆத்திரத்தோடு, சில வேளைகளில் நோட்டீஸ் கொடுக்
காமல் வேலை நிறுத்தம் செய்துவிட்டால், இவர்கள் சட்டவிரோதமாக
வேலைக்கு வராமல் இருந்துவிட்டார்கள் என்று எட்டு நாள் சம்பளத்தை
பிடித்துக் கொள்வதற்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால்
சட்டவிரோதமாக கதவு அடைப்பு செய்கிறார்கள் சில முதலாளிகள்.
ஆனால் அவர்கள் மீது இதுவரையிலும் எந்த விதமான நடவடிக்கையும்
எடுத்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இப்பேர்ப்பட்ட முறையில்
ஒப்பந்தத்தை மீறுகின்ற வகையில் நடக்கின்ற முதலாளிகளுக்கு எந்த
விதமான தண்டனையோ அல்லது பைனோ இதுவரையில் கொடுத்திருப்
பதாக எனக்குத் தெரியவில்லை. சமாதானம் என்பது சட்டப்படி இரண்டு
தரப்பாரும் பொதுவாக அமல் நடத்த வேண்டிய ஒன்றாகும். அந்த
முறையில் இரண்டு தரப்பாரும் சேர்ந்து இதை அமல் நடத்துகின்ற
முறையில் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[16th March 1964

IV. GOVERNMENT BILL

THE MADRAS PAYMENT OF SALARIES AND REMOVAL OF DISQUALIFICATIONS (AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964."

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65—*cont.*

DEMAND No. XXIV—LABOUR INCLUDING FACTORIES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : **Sir, on the recommendation of the Governor, I move—**

"That the Government be granted a sum not exceeding Rs. 1,28,31,600 under Demand No. XXIV—Labour including Factories."

**திரு. சா. கணேசன்** : லாபத்தில் தொழிலாளர்களும் பங்கு பெறும் உரிமை கிடைக்குமாறு ஏற்பாடு செய்வதன் அவசியத்தைப்பற்றி விவாதிக்க என் பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 1,28,31,600 under Demand No. XXIV—Labour including Factories be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : கனம் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கின்ற தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர் களுடைய நிலை பற்றிய இந்த மானியக் கோரிக்கையில், சுதந்திராக் கட்சியினர் சார்பிலே கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இந்த விவாதத்திலே பங்கு கொள்வதற்கு முன்பாக, என்னுடைய பகுதியிலே இருக்கும் நெய்வேலி லிக்னைட் கார்போரேஷனிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய நலம் பற்றியும் அவர்களுக்கு இருக்கும் குறைபாடுகளைப் பற்றியும் இங்கே நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், மத்திய சர்க்காருடைய நிறுவனமாக, பெரிய தொழிற்சாலையாக இன்றையதினம் நெய்வேலி ஸ்தாபனம் இருக்கிறது. 50 கோடி ரூபாயிலே ஆரம்பித்து, 70 கோடி ரூபாய் ஆகி, பிறகு 110 கோடி ரூபாயாகி, இப்பொழுது 130 கோடி ரூபாய் அளவிலே ஒரு



16th March 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

பெரிய ஸ்தாபனமாக நெய்வேலி நிலக்கரி ஸ்தாபனம் இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. ஆனால், அந்த ஸ்தாபனத்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய நலன்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனவா என்று பார்ப்போமானால், நாம் உள்ளபடியே வருந்தத்தான் வேண்டி இருக்கிறது. கடந்த 6 வருஷ காலமாக அங்கே இருக்கும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு இருக்கும் வேதனைகளையெல்லாம், அவர்களுக்கு இருக்கும் நிலைமைகளையெல்லாம் அரசாங்கத்திற்கு அவர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டினார்கள். ஆறு வருஷ காலமாக, தமிழகத்தைப் பொறுத்தவரையில் எவ்வளவோ நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. இருந்தாலும், நெய்வேலியைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் நலனில் ஒரு வித முன்னேற்றமும் காணவில்லை. பல ஆலைகளில் பார்க்கின்றோம்—நம்முடைய முதல் அமைச்சர் அவர்களே இடையிலே நின்று தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்கின்ற நிலைமையைப் பார்க்கிறோம். சில இடங்களில் ஸ்ட்ரைக் செய்கின்றார்கள். சில இடங்களில் வேறு சில முறைகளைக் கையாளுகிறார்கள். அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் தரப்படுகிறது. ஆனால், நெய்வேலியிலும், எல்லாத்தொழிற்சாலைகளிலும் இருப்பதைப் போலவே, அங்கும் சில கருங்காலிகள் (ப்ளாக் லெக்ஸ்) இருக்கத்தான் செய்கிறார்கள். ஒரு தொழிற்சாலைக்கு ஒரே யூனியன் இருந்தால், அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை நியாயமாகப் போராடிப் பெற முடியும். அங்கே நெய்வேலி லிக்னைட் லேபர் யூனியன் (அகில இந்திய ட்ரேட் யூனியன் காங்கிரசோடு சேர்ந்த லேபர் யூனியன்) நெய்வேலி லிக்னைட் மைன் ஒர்க்கர்ஸ் ப்ரொக்ரெஸிவ் யூனியன், நெய்வேலி லிக்னைட் மைன் மோட்டார் ஒர்க்கர்ஸ் யூனியன், ஆகிய இந்த மூன்று ஸ்தாபனங்களோடு அகில இந்திய காங்கிரஸ் சம்மேளனத்தோடு தொடர்பு கொண்டிருக்கிற ஒரு லேபர் யூனியன் இருக்கிறது. இந்த நான்கு லேபர் யூனியன்கள் இருக்கிற காரணத்தால், எல்லாத் தொழிற்சாலைகளிலும் நடைபெற்று வருவதைப் போல, ஒரு சில தொழிற்சங்கங்களை மட்டும் நிர்வாகிகள் அங்கீகரித்து, மற்ற தொழிற்சங்கங்களை அங்கீகரிக்காமல் அவர்களோடு மட்டும் பேரம் பேசி, அவர்களுக்கு மட்டும் சலுகை செய்து விடுவதைப் போலத்தான் அங்கிருக்கும் தொழிலாளர்களைப் பொறுத்தும் நிலைமை இருக்கிறது. 75 சத விகிதத்திற்கு மேல் நான் முதலில் சொன்ன மூன்று தொழிற்சங்கங்களில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. அங்கே வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு எந்த விதமான சம்பள உயர்வும் கொடுக்கவில்லை. நான் அந்தத் தொழிற்சாலையில் இருக்கும் மோட்டார் தொழிலாளர் சங்கத் தலைவனாக இருக்கிறேன். அதே சமயத்தில் அங்கிருக்கும் தொழில் நாட்டுக்கு உதவும் பேஸிக் இண்டஸ்ட்ரியாக இருக்கும் காரணத்தால் அவைகள் நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் நான் என்னுடைய கருத்தைச் சொல்கிறேனே தவிர, அங்கே ஸ்ட்ரைக் நடைபெறவேண்டும், அந்த நிர்வாகம் சீர்குலையவேண்டும் அதன் மூலமாக தொழிலாளர்கள் மட்டும் நன்றாக இருந்து விட்டால் போதும் என்ற கருத்திலே கூறவில்லை. ஆறு வருஷ காலமாக அங்கிருக்கும் தொழிலாளிகளுக்குச் சம்பள உயர்வு இல்லை. பல தொழிற்சாலைகளிலே சம்பள உயர்வு இருந்தது. ஆனால், அங்கே கிடையாது. ஆண்டு தோறும் விலைவாசி ஏறிக்கொண்டே வருகிறது. இப்படி விலைவாசி ஏறியிருந்தும்கூட, நெய்வேலியில் இருக்கும் தொழிலாளர்கள் தங்களுடைய ஊதியப் பிரச்சினையை அரசாங்கத்திற்கும் நிர்வாகத்திற்கும் எடுத்துச் சொல்லியும்கூட, ஒரு விதமான முன்னேற்றத்தையும் அங்கே காணவில்லை. இருந்தாலும், அண்மையில் அந்த நெய்வேலி ஸ்தாபனத்திற்கு தலைவராக திரு. சுப்பராமன் அவர்கள் வந்ததற்குப் பிறகு தொழிலாளர்களுடைய கோரிக்கைப் பிரச்சினைகளை கண்கொண்டு ஓரளவு பார்க்கவும், அதைப் பற்றிச் சிந்திக்கவும் தொடங்கி யிருக்கிறார்கள். இருந்தாலும், அந்தத் தொழிற்சாலையிலே இருக்கிறவர்களுக்கு ஒரு நிம்மதி ஏற்படுகிற வகையில் உயர்வு இருக்கிறதா என்றால் இல்லை. நெய்வேலியில் வேலை செய்யக்கூடிய சில தொழிலாளிகளுக்கு 70 ரூபாய் சம்பளம் தரப்படுகிறது. அதை வைத்துக்கொண்டு ஒரு தொழிலாளி எப்படித் தன் மனைவி மக்களைக் காப்பாற்றி வாழ முடியும் என்பதை அரசாங்கமோ, லேபர்

கமிஷனரோ சிந்தித்துப் பார்ப்பதாக இது வரையில் தெரியவில்லை. 70 ரூபாய்ச் சம்பளம் போதுமா? சென்னையிலிருந்துதான் காய் கறிகளும், அரிசியும், மற்றவைகளும் நெய்வேலிக்குக் கொண்டு போகிறார்கள். கொத்தவால்சாவடியிலிருந்து லாரி லாரியாக நெய்வேலிக்குச் சாமான்களை ஏற்றிக்கொண்டு சென்று வியாபாரம் செய்கிறார்கள். சென்னையைவிட நெய்வேலியில் விலைவாசி அதிகமாக இருக்கிறதே தவிர, மற்றப்படி, அங்கு சுற்றுப்புற கிராமங்களில் இருக்கும் அளவு விலைவாசி அங்கே இல்லை. ஆகையால், இதை அடிப்படையாக வைத்து, தொழிலாளர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றத் தக்க நிலைமைகளை, அந்த ஸ்தாபனத்திலே வேலை செய்யும் தொழிளாளர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும் வகையில் சம்பளங்களை நிர்ணயித்தால் நன்றாக இருக்கும். ஆனால் அது செய்யப்படவில்லை. சிலர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், நெய்வேலியில் தொழிலாளர்கள் நிறையச் சம்பாதிக்கிறார்கள், நல்ல முறையில் இருக்கிறார்கள் என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது வாஸ்தவம் அல்ல. நெய்வேலி ஸ்தாபனத்தில் சம்பளத்திற்கு வேலை செய்கின்றவர்களுடைய நிலைமைதான் மோசமாக இருக்கிறதே தவிர, கண்டிராக்டர்களிடத்திலே வேலை செய்கின்றவர்கள் நன்றாகத்தான் இருக்கிறார்கள். ஒரு சாதாரண தொழிலாளி, கண்டிராக்டரிடத்தில் வேலை செய்யும்போது, மூன்று, நான்கு ரூபாய் தினக் கூலி பெறுகிறான். ஆனால், நிர்வாகத்திலே ஊழியம் செய்கின்ற காரணத்தால் இவர்களுக்கு எப்போதும் இருந்ததைப்போலவேதான் இப்போதும் இருந்துகொண்டு வருகிறது. ஆகையால், அந்தக் குறைபாட்டை நம்முடைய அரசாங்கமும், லேபர் கமிஷனரும் நன்றாகச் சிந்தித்து, நல்ல நிலைமைகளைக் கொண்டுவர வேண்டுமென்று நான் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து இப்பொழுது ஒரு சார்ட்டர் ஆஃப் டிமாண்ட் என்ற முறையில், அவர்களுக்கு இருக்கும் கோரிக்கைகளை டிமாண்டாக வைத்திருக்கிறார்கள். சாம, தான, பேத, தண்டம் ஆகிய நான்கு முறைகளையும் அவர்கள் கையாள இருக்கிறார்கள். முதன் முதலாக அரசாங்கத்திற்குக் கோரிக்கை விடுகிறார்கள். லேபர் கமிஷனரிடத்தில் தூது சென்று, அவர்கள் மூலமாக அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது நிர்வாகத்தினர் ரிவைஸ் பண்ணி ஃபிக்ஸ் செய்திருக்கும் சம்பள விகிதங்கள் மிகவும் பரிசீலிக்க வேண்டிய விஷயமாகும். இப்பொழுது ஃபிக்ஸ் பண்ணியிருக்கும் சம்பள இன்க்ரிமென்ட் ஆஸ்பெக்ட்டைப் பார்த்தால் ஏற்கெனவே இருந்த இன்க்ரிமென்ட் முறையை இதில் அங்கீகரிக்கவில்லை. முன்பெல்லாம் இன்க்ரிமென்ட் அளவு அதிகமாக இருந்தாலும், இப்பொழுது கொஞ்சம் உயர்த்துவதுபோல் உயர்த்தி, இன்க்ரிமென்டைக் குறைத்து விட்டார்கள். நிலக்கரிச் சுரங்கத்தில் இறங்கி வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு டி. பி. வந்து விடும் என்று சொல்லக்கூடிய அவ்வளவு மோசமான நிலையில் தொழிலாளர்கள் அங்கே வேலை செய்கிறார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

அந்தத் தொழிலாளர்களுக்கு ப்ராஜெக்ட் அலவன்சு கொடுப்பது இல்லை. நம்முடைய மாநிலத்திலேயே உள்ள இதர ப்ராஜெக்டுகளில் ப்ராஜெக்ட் அலவன்சு என்று கொடுக்கப்படுகிறது. ஆனால் நெய்வேலியில் கிடையாது. மற்ற இடங்களில் ஏன் கொடுக்கிறார்கள், இங்கே ஏன் கொடுப்பது இல்லை என்பதை நன்றாகப் பரிசீலனை செய்து, நெய்வேலியிலும் ப்ராஜெக்ட் அலவன்சு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல முன்பெல்லாம் தொழிலாளர்களிடமிருந்து வாட்டர் சார்ஜு மின்சார சார்ஜ் எல்லாம் வசூல் செய்யப்படவில்லை. இப்போது வாட்டர் சார்ஜ் வசூல் செய்கிறார்கள். மேலும் அவர்கள் உபயோகப்படுத்துகிற மின்சாரத்திற்கு மற்றவர்கள் என்ன கட்டணம் கொடுக்கிறார்களோ அதே கட்டணம் வாங்கப்படுகிறது. இவர்கள் உபயோகப்படுத்துகிற மின்சாரத்திற்கு முன்போல கன்செஷன் கொடுக்கப்படுவதில்லை. சம்பளத்தை இப்போது





புதிதாக நிர்ணயம் செய்திருக்கிறோம் என்று சொன்னாலும் இப்படி வாட்டர் சார்ஜ், மின்சார சார்ஜ், வீட்டு வாடகை என்று வசூல் செய்துவிட்டால் அவர்கள் எப்படி குடும்பம் நடத்த முடியும்?

மேலும் இவர்களுக்கு டியர்னஸ் அலவன்சு கிடையாது. சர்க்கார் தம் சிப்பந்திகளுக்கே டியர்னஸ் அலவன்சு என்று கொடுக்கிறார்கள். படி அரிசி இன்றைக்கு ஒண்ணேகால் ரூபாய் என்றால் நாளைக்கு ஒண்ணரை ரூபாய், இரண்டு ரூபாய் என்று விற்கிறது. டியர்னஸ் அலவன்சு என ஒன்றிருந்தால்தான் அவர்கள் வாழமுடியும். ஆகவே திரு. சுப்பராமன் அவர்கள் .·.பிக்ஸ் பண்ணிய சம்பளத்தில் டியர்னஸ் அலவன்சு இல்லாவிட்டாலும் இப்போது கொஞ்சம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் இதையும் பரிசீலனைசெய்து அவர்களுக்கு அதிகப்படியான டியர்னஸ் அலவன்சு வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இன்னும் ஏற்கெனவே லாரிகள், பஸ்கள் வைத்து காலை நேரத்தில் அந்தத் தொழிலாளர்களை வொர்க் ஸ்பாட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். இப்போதோ, அந்த லாரி, பஸ்களுக்கு இவர்களிடமிருந்து கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இப்படி தொழிலாளர்களிடமிருந்து பலவகையில் பணம் வசூலிக்கப்பட்டால் அவர்கள் எவ்வாறு குடும்பம் நடத்த முடியும்? இன்றைய தினம் 3,500 தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய நிலை நாளுக்கு நாள் வேதனை தரக்கூடியதாக மாறி வருகிறது. மின்சாரம் உற்பத்தி செய்கிற தொழிலாளர்கள் இரண்டு நிமிஷம் வேலையை நிறுத்தினால் கூட எத்தனையோ யூனிட் மின்சார உற்பத்தி நமக்குத் தடைபடும். அதுபோலவே இங்கே மின்சாரம் உற்பத்தியாகவேண்டுமென்றால் நிலக்கரி வேண்டும். நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் மெதுவாக வேலை செய்தாலும் மின்சார உற்பத்தி பாதிக்கப்படும். இப்படி நெய்வேலியில் நடைபெறுகிற ஒவ்வொரு தொழிலும் இன்டெக்ரேடெட்டாக இருப்பதனால் அங்குள்ள தொழிலாளர்களின் கோரிக்கைகள்—நியாயமான கோரிக்கைகள் நல்ல முறையில் பரிசீலனை செய்யப்படவேண்டும்.

இன்றையதினம் அந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாது பல சிரமங்களுக்கு உள்ளாகியிருப்பதனால் மார்ச் 22-ம் தேதி ஒன்று கூடி ஸ்ட்ரைக் பாலட் எடுக்க இருக்கிறார்கள். இது அவசியமற்றதுதான். அதுவும் நமது முதல் அமைச்சர் அவர்கள் எதற்காக ஸ்ட்ரைக் செய்ய வேண்டும், நாங்கள் அவர்களுடைய பிரச்சினையை பரிசீலிக்கிறோம் என்று சொல்லும் குணம் வாய்ந்தவர்கள். இப்பொழுதும் ஸ்ட்ரைக் செய்தே தீரவேண்டும் என்ற அவசியம் இல்லை.

அவர்கள் சென்ற மாதத்தில் ஒரு முறை நெய்வேலிக்கு வந்தார்கள் குறிப்பிட்ட தொழிற் சங்கத்தைத் தவிர மற்ற சங்கப் பிரதிநிதிகளை அவர்கள் பார்க்க மறுத்து விட்டார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யாரையும் பார்க்கமாட்டேன் என்று நான் மறுக்கவில்லை. ஒரு தொழிலாளி தனித்த முறையில் தன் குறையைச் சொல்ல வந்தாலும் நான் கேட்கத் தயாராகத்தான் இருந்தேன். இவர்கள் வந்தார்கள். வேறு யாரும் வரவில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** நெய்வேலி தொழிலாளர்களின் சார்பாக அவர்களுக்கு நாங்கள் வரவேற்பு அளிக்கிறோம். மறுபடியும் ஒரு முறை அவர்கள் வரவேண்டும். (கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவசியம் இல்லை) இப்போது வருவதற்குத் தயார் இல்லை என்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் வருவதற்கு வரவேற்பு அவசியம் இல்லையென்று சொல்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அவர்கள் இங்கே இருந்து உத்தரவு போட்டாலும்கூட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அத்தனைபேரும் அவரைக் கோட்டையில் வந்து சந்திக்கத் தயாராய் இருக்கிறார்கள். அங்கே உள்ள

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [16th March 1964

தொழிலாளர்களுடைய பிரச்சினையை நன்கு ஆலோசித்து அவர்களுக்கு
டியர்னஸ் அலவன்சு கொடுக்கப்படவேண்டும், ப்ராஜெக்ட் அலவென்சு
கொடுக்கப்பட வேண்டும், வாடர் சார்ஜ் ரத்து செய்யப்படவேண்டும், முன்பு
இருந்த வீட்டு வாடகை உயர்த்தப்படக் கூடாது, மின்சாரக் கட்டணச்
சலுகை நீடிக்க வேண்டும், நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அழைத்துச் செல்கிற
பஸ்களுக்கு கட்டணம் வசூலிக்கக் கூடாது ஆகியவை போன்ற விஷயங்
களில் கவனம் செலுத்த மார்ச் 22-ஆம் தேதிக்கு முன்னதாகவே
ஆர்பிட்ரேஷனுக்குவிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிகவும் தாழ்மை
யுடன் கேட்டுக்கொள்கிறேன். நாட்டுக்கு உதவுகிற ஸ்தாபனத்தில், தேசீய
ஸ்தாபனத்தில் வேலை செய்கிற தொழிலாளர்கள் நல்ல முறையில்
தொடர்ந்து நாட்டுக்கு திருப்தியுடன் பணிபுரிய ஆவன செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
கனம் முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் தொழி
லாளர்கள் மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைக் கூறிக்
கொள்ள ஆசைப்படுகிறேன். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நமது
மாநிலத்தில் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் நல்ல
முறையில் கவனம் செலுத்தப்பட்டு நுணுக்கமாக ஆராயப்பட்டு பலபல
சட்டங்கள் கொண்டு வரப்படுவதைப் பாராட்டுகிறேன். அதனால்தான்
இன்றைய தினம் நமது மாநிலத்தில் தொழில் துறையில் அமைதி
ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். குறிப்பாக எங்களுடைய
பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள்தான் அதிகம். அவர்களுடைய
பிரச்சினையைப் பற்றி எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இங்கே கொடுக்கப்
பட்டுள்ள "லேபர் இன் மெட்ராஸ் ஸ்டேட்" என்ற புத்தகத்தில் ப்ளான்
டேஷன் லேபர் சம்பந்தமாகச் சில குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள்.

9-30 a.m. இதிலே முக்கியமாக நீலகிரி ஜில்லாவிலே தோட்டத் தொழிலாளர்
களுக்கு மிகவும் கஷ்டமான ஒரு நிலை வீட்டு வசதி இன்மை என்பதை
எடுத்துக் கூற விரும்புகிறேன். இந்தக் குறிப்பிலே கண்டுள்ளபடி
ஏற்கனவே 23,313 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்னும்
11,560 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் குறிப்பிலே காணப்படுகிறது.
சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே இந்தத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்
கொடுப்பதற்காக 5 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டது. ஆனால்
தேசீய நெருக்கடி என்ற காரணத்தைக் காட்டி அந்தத் தொகையை
அவர்களுக்குப் பயன்படுத்தவில்லை. தேயிலைத் தொழில் இந்திய தேசத்
திற்கே அந்நிய நாட்டுச் செலாவணியைச் சம்பாதித்துத் தரக்கூடிய ஒரு
நல்ல தொழில். இதிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு நல்ல
வசதி செய்து கொடுத்தால்தான் அவர்கள் கஷ்டப்பட்டு உழைக்க முடியும்.
அதன் மூலம் அந்நிய நாட்டுச் செலாவணியை நாம் மேலும் பெற
முடியும். ஆகவே, நான் அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக்
கேட்டுக் கொள்வது, கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட ஐந்து லட்சம்
ரூபாயோடு இந்த ஆண்டு பட்ஜெட்டில் மேலும் ஐந்து லட்சம் ரூபாய்
ஒதுக்கி அந்தத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதியைச் செய்து கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் இப்போது அந்த
மலைப் பிரதேசத்தில் குளிரிலும், மழையிலும், 10க்குப் 10 அடி
யுள்ள சிறிய வீட்டிலே எட்டுக் குழந்தைகள், மனைவி ஆகியோருடன்
இன்று வசித்து வருகிற நிலைமையை நான் பார்த்திருக்கிறேன். இந்த
அவல நிலை நீங்க இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் அவர்களுக்கு
வீட்டு வசதி செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக
எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்விதமாக
வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது உடனுக்குடன் மின்சார வசதியையும்
செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீலகிரியிலே,
உற்பத்தியாகிற மின்சாரம் எல்லாம் சமவெளியிலே பயன்படுகிறதே தவிர,
அந்தத் தொழிலாளர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பது மிகவும்
பின் தங்கிய நிலையில் இருக்கிறது. ஆகவே, வீடுகள் கட்டும்போதே
மின்சார வசதியையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.



16th March 1964] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

அடுத்தபடியாக மருத்துவ வசதியை எடுத்துக்கொண்டால் "க்ரூப்
ஹாஸ்பிடல்ஸ்" ஏற்படுத்தலாம் என்ற விதி இருக்கிறது. இப்போது
அநேக ஆஸ்பத்திரிகளில் எம்.பி.பி.எஸ். டாக்டர்களே இல்லை. எங்கோ
ஓரிரு இடங்களில்தான் இருக்கிறார்கள். எல்லா "க்ரூப் ஹாஸ்பிடல்"
களிலும் எம்.பி.பி.எஸ். டாக்டர்களே பணி புரிய வேண்டுமென்று
அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது லேபர் வெல்பேர் ஆபீஸர்களைத் தோட்ட முதலாளிகளே
நியமிக்கிறார்கள். இவர்களால் லேபர் வெல்பேரை எப்படிக் கவனிக்க
முடியும்? தோட்ட முதலாளிகள், தொழிலாளர்களுக்கிடையே இந்த
வெல்பேர் ஆபீசர்கள் படும் நிலைமை வருந்தத் தக்கதாக இருக்கிறது.
ஆகவே, இந்த உத்தியோகத்திற்கு சர்க்காரே ஆளை நியமித்தால் அவர்கள்
தொழிலாளர்களுடைய நன்மையை முக்கியமாகக் கொண்டு பணி புரிய
முடியும் என்பதால் அதற்கான உத்தரவை அரசாங்கம் போடவேண்டும்
மென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது மினிமம் வேஜஸ் ஆக்ட் என்று இருக்கிறது. கடந்த எட்டு
ஆண்டுகளுக்கு முன்னால் கோர்ட் தீர்ப்புப்படி ஆண் தொழிலாளிக்கு ஒரு
நாளைக்கு ரூ. 2-25 ந.பை. ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கூறப்
பட்டது. ஆனால் எட்டு ஆண்டுகள் ஆகியும் தொழிலாளர்களுக்கு அந்த
ஊதியம் கிடைக்கிறதா என்றால் இல்லை. அதற்கு என்ன காரணம்,
இதற்கு இடைஞ்சலாக இருப்பது யார் என்று கண்டு பிடித்து குறைந்த
பட்ச ஊதியமான ரூ. 2-25-ஐக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை
அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். இடைக்கால உயர்வாக 15 ந.பை. தற்காலிகமாகக் கொடுக்க
முன் வந்திருக்கிறார்கள். இது மிகவும் குறைந்த ஒரு அடிப்படை என்பதை
இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றத் தொழிலிலே
ஈடுபட்டுள்ள தொழிலாளிக்கும் இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ள தொழி
லாளிக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. உதாரணமாக, டெக்ஸ்டைல்
இண்டஸ்ட்ரியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் இன்று நல்ல ஊதியத்தைப்
பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மலைப் பகுதியில் உள்ள இந்தத்
தொழிலாளர்கள் மழையிலும் குளிரிலும் காட்டுச் செடிகளுக்குள்ளே
கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய தொழிலாளிகள், இவர்களுடைய
கஷ்டமான நிலைமையை உணர்ந்து இவர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து
வைக்கும் முறையில் குறைந்த பட்ச ஊதியமான ரூ. 2-25-ஐ இந்த
வருஷ இறுதிக்குள்ளாவது அந்தத் தொழிலாளர்களுக்கு வாங்கிக்
கொடுக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று தாழ்மையுடன்
கேட்டுக் கொள்கிறேன்.

போனஸ் பிரச்சினையைப் பொறுத்து இந்திய தேசீய தொழிற்
சங்கக் காங்கிரஸ் உப தலைவர் ஸ்ரீ ஜி. ராமானுஜம் அவர்கள், சென்னையில்
போனஸ் கமிஷன் வந்திருந்தபோது ஒரு குறிப்பைக் கொடுத்தார்.
முக்கியமாக, "**Need for providing for inspection of accounts by Labour**"
என்ற புஸ்தகத்தை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். போனஸ் தகராறு
கள் அடிக்கடி ஏற்படுகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் போனஸ்
தகராறு இப்போது இருந்து கொண்டிருக்கிறது. ஆரம்ப நிலையிலேயே
கணக்குகளைப் பரிசீலிப்பதற்குத் தொழிலாளர்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து
விடுவோமேயானால் நலமாக இருக்கும். இந்த மாதிரித் தகராறுகள்
குறைந்து போய்விடும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. அதற்கு
ஒரு வாதம் "கணக்குகள் ஆடிட் செய்யப்படுகிறது" என்று சொல்லலாம்.
தொழிலாளர் பிரதிநிதிகள் அதைப் போய் ஏன் பார்க்க வேண்டுமென்று
சொல்லலாம். அதைப்பற்றி சுப்ரீம் கோர்ட்டார் ஒரு தீர்ப்பில்—

"The Supreme Court has also held that the auditor's certificate by itself is no conclusive proof that the accounts are correct; and that at best it can be only comparable to a certificate issued by a doctor".

என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையிலே சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கொடுத்திருப்பதால் தொழிலாளர் பிரதிநிதிகள் "கிராஸ்" ப்ராபிட்டைப் பரிசீலிப்பதிலே ஆட்சேபணை இருக்க முடியாது. இதைப் பற்றி மத்திய சர்க்காரிடத்தில் எடுத்துச் சொல்ல தொழிலாளர் பிரதிநிதி களுக்கு அதற்கான வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்குமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. செ. மாதவன் :** மதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் பிரச்சினைகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு தொழிற்சாலை யிலும் ஒரே ஒரு யூனியன்தான் இருக்க வேண்டுமென்பதிலே, அப்போது தான் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்பட முடியும் என்பதிலே யாருக்கும் வேறுபாடான கருத்து இருக்க முடியாது. ஆனால் அப்படி ஒரு யூனியன் இருந்து அந்த யூனியன் கூறக்கூடிய குறைகளைக் கவனிக்காமல் அரசாங்கம் புறக்கணித்தால் அதனாலே ஏற்படக்கூடிய சங்கடங்களை உத்தேசித்துத்தான் பல யூனியன்களைப் பல அரசியல் கட்சிகள் நடத்தக் கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன. தொழிலாளர் மீது பற்றும் பாசமும் கொண்ட நமது அரசாங்கம் இது பற்றி நன்றாக ஆராய்ந்து தொழிலாளர்களைக் கொண்ட ஒவ்வொரு யூனியனும் அரசாங்கத்தினுடைய உதவியைப் பெற முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு யூனியன் என்ற கொள்கை நமது நாட்டுக்கு வரவேண்டுமென்றால் அதற்கு நம்முடைய அரசாங்கம் முன் நின்று கட்சி வேறுபாடற்ற முறையிலே, அரசியல் கட்சிகளோ, அரசியல் கட்சித் தலைவர் களோ சம்பந்தப்படாத முறையிலே அரசாங்கம் முன் நின்று தொழிலாளர் கள் பிரச்சினையை உடனுக்குடன் கவனித்தால் நிச்சயம் ஒரு நல்ல ஏற்பாட்டை நம்முடைய மாகாணத்தில் ஏற்படுத்த முடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய நாட்டிலே உள்ள சட்டப்படி ஒரு தனிப்பட்ட தொழிலாளி தன்னுடைய குறைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. அவன் ஒரு யூனியனிலே சேரவேண்டும். ஏழுபேர் சேர்ந்து ஒரு யூனியனை அமைக்க வேண்டும். அதற்குப் பின்னாலே இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் வருகிறது என்றால் அதிலே ஒரு குறிப்பிட்ட அளவு தொழிலாளர் ஆதரவு பெற்றதற்குப் பின்னரே அப்படிப்பட்ட பிரச்சினைகளில் தொழிலாளர்கள் தீர்வு காணக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றி ஒவ்வொரு தனிப்பட்ட தொழிலாளியும் தன்னுடைய பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய உரிமையைத் தொழிலாளர் களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதன் விளைவு என்னவாகிறது என்றால் இன்று சாதாரண சிறுசிறு தொழிற்சாலைகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளைத் தீர்த்துக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எப்படியாவது ஒரு யூனியனில் சேர்ந்துதான் ஆக வேண்டியிருக்கிறது. அப்படி யூனியன் இருந்தாலும், முதலாளிகளை எதிர்க்கக்கூடிய யூனியன் களில் குறைந்த அளவில் தொழிளாளர்கள் இருந்தால் அந்த யூனியனுக்கு முக்கியத்துவம் இல்லாததொரு சூழ்நிலை இன்றிருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட தொழிளாளியும் தங்கள் குறைகளை சட்டப்பூர்வமாக தீர்த்துக்கொள்ள ஒரு உரிமையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மோட்டார் தொழிலாளர் கள் பற்றி சட்டம் வந்து இரண்டு ஆண்டுகள் ஆகிறது. சென்ற ஆண்டும் இதே மன்றத்தில் நாங்கள் விதிகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்று கூறப்பட்டது. இந்த ஆண்டு அறிக்கையிலும்கூட அதையே திருப்பிக் கூறியிருக்கிறார்கள். ஒரு சட்டம் வந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் கூட இந்த அரசாங்கம் அந்தச் சட்டத்திற்கு விதிகள் செய்ய தயங்குகிறது என்றால் அதற்கு காரணம் என்ன ? மோட்டார் முதலாளி களைப் பார்த்து இந்த அரசாங்கம் பயப்படுகிறது என்று நாங்கள் சொன்னால் அமைச்சர்களுக்கு கோபம் வரும். ஆனால் உண்மை என்ன ? நம்



மாநிலத்தில் மோட்டார் தொழில் பற்றி பின்பற்றக் கூடிய கொள்கை என்னவென்றால் ஸ்மால் ஆப்பரேட்டர்களை ஊக்குவிக்கவேண்டுமென்ற கொள்கை நம் அரசாங்கத்திற்கு இன்று இருக்கிறது. அதன் விளைவாக பல சிறு பஸ் முதலாளிகள் இன்று நம் மாநிலத்தில் தோன்றியிருக் கிறார்கள். அப்படி ஒவ்வொரு பஸ் நிறுவனத்திலும் யூனியன் ஏற்பட முடிகிறதா ? அந்தந்த பஸ் முதலாளிகள் அப்படி தொழிலாளர் யூனியன் ஏற்படுவதற்கு ஒத்துழைக்கிறார்களா அல்லது அனுமதிக் கிறார்களா என்று பார்த்தால் இல்லை என்றே கூறலாம். இன்றும் பல பஸ் முதலாளிகள் இந்த மாநிலத்தில் இருக்கிறார்கள். அவர்கள் அவர்களது தொழிலகத்தில் யூனியன் ஏற்பட முடியாமல் எப்படி தடுக்க முடியுமோ அப்படி தடுக்கிறார்கள். காரணம், குறைந்தளவில் தொழி லாளர்கள் அவர்கள் தொழிலகத்தில் வேலை செய்யும் ஒரு சூழ்நிலை இருப்பதுதான். அவர்களை எப்படியாவது பிடித்துக்கொண்டு 7 பேர்கள் கூட சேராத ஒரு நிலைமையை உண்டாக்கி விட இன்று பஸ் முதலாளிகள் முயற்சி செய்து வருகிறார்கள். இதைத் தடுப்பதற்காவது நம் அரசாங்கம் கொஞ்சம் வேகமாக இந்தச் சட்டத்தை அமுல் படுத்த என் தயங்குகிறார்கள் ? இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திரும்பத் திரும்ப தங்கள் அறிக்கையில் விதிகள் செய்துக்கொண்டிருக்கிறோம். வந்து விடும், வந்து விடும் என்று சொல்கிற ஒரு சூழ்நிலை இன்று நாட்டில் இருக்கிற காரணத்தினால்தான் சாதாரண பஸ் தொழிலாளர்கள் இன்று மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் இங்கு எடுத்துக் கூற கடமைப்பட்டுள்ளேன். சில பஸ் முதலாளிகள் கொடுக்கக்கூடிய சம்பளத்தைக் குறைத்துக் கொடுத்து ஆனால் கூட்டிக் கொடுப்பதாக ரிக்கார்ட் செய்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களிடம் அதற்கு கையெழுத்து வாங்கி விடுகிறார்கள். அதேபோல் போனஸ் கொடுப்பதில்லை, சில பஸ் முதலாளிகள். ஆனால் போனஸ் கொடுத்ததாக ரிக்கார்ட் செய்து விடுகிறார்கள். இந்த அநியாயத்தை நம் அரசாங்கம் பொறுத்துக் கொண்டிருக்கலாமா ? தொழிலாளர்கள் லேபர் கோர்ட்டுக்கு செல்ல வேண்டுமென்றால் எங்கேயாவது ஒரு யூனியனில் அவர் அங்கத்தினராக வேண்டும். அந்த யூனியன்கள் பஸ் முதலாளிகளிடம் வேலை செய்யும் தொழிலாளர்களில் ஓரிருவரைத்தான் சேர்த்துக்கொள்ளும் ஒரு சூழ் நிலை இருக்கிறது. மற்றவர்களை பஸ் முதலாளிகள் தடுத்து விடுகிறார்கள். அதில் அங்கத்தினர்களாக சேர்ந்திருக்கிறார்கள் என்றால் உடனே டிஸ்மிஸ் செய்து விடுகிறார்கள். அதற்கு ஒரு வழியைப் பின்பற்றுகிறார்கள். டெம்பரரி வொர்க்கர்ஸ் என்று பஸ் முதலாளிகள் தங்கள் தொழிற் சாலைகளில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் முயற்சி செய்ததா ? டெம்பரரி வொர்க்கர்ஸ் என்று தங்கள் தொழிற் சாலைகளில் வைத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால் அவர்கள் சட்டப் பூர்வமாக தங்கள் உரிமையை ஏற்படுத்திக் கொள்ளவோ அல்லது லேபர், கோர்ட்டுக்கு சென்று முறையிடவோ வாய்ப்பில்லாததொரு சூழ்நிலை இருக்கிறது. இதை மாற்றியமைக்க வேண்டும். மோட்டார் தொழி லாளர்கள் சட்டத்தை உடனடியாக நம் அரசாங்கம் அமுல் நடத்த வேண்டும். ரீஇன்ஸ்டேட்மெண்ட் பாலிஸி பொறுத்தவரை அரசாங்கம் என்ன கொள்கையைக் கடைப்பிடிக்கிறது? அது பற்றி நாங்கள் பன்முறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறோம். ஹைகோர்ட் அல்லது லேபர் கோர்ட் ஒரு தொழிலாளியை ரீஇன்ஸ்டேட் செய்ய வேண்டுமென்று சொன்னால் அப்படி உத்தரவு போட்ட பின்னரும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முதலாளிகளுக்கு வழியிருக்கிறது, இட மிருக்கிறது. அப்படி தடுத்தால் அதற்கு என்ன செய்கிறார்கள் என்று இந்த மன்றத்தில் கேட்கப்பட்டது. அப்போது அதற்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் ப்ராஸிக்யூட் செய்வோம், வழக்குகள் போடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இறுதி முடிவு என்ன ? முதலாளிகளுக்கு அபராதம் போடலாம். அதுதான் இன்றிருக் கும் நிலை. ஆனால் தொழிலாளர்களை திருப்பி எடுத்துக்கொள்ள வேண்டு மென்ற ஒரு சட்டம் இருந்தால் அவர்கள் கோர்ட் உத்தரவை மீறக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுமா ? அதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும். கோர்ட் உத்தரவை மீறியதற்கு பின் ஒரு தொகையை அபராதமாகக் கொடுத்துவிட்டால் தப்பித்து விடலாம் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

இதை மாற்றியமைக்க இந்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். பாக்டரீஸ் ஆக்ட் பற்றி இந்த மன்றத்தில் எடுத்துக் கூறி
யிருக்கிறோம். இப்போதுள்ள வொர்க்கிங் அவர்ஸ், தொழிற்சாலைக்குள்
தொழிலாளர்கள் எவ்வளவு மணி நேரம் வேலை செய்கிறார்களோ அதைத்
தான் கணக்கிடும் சூழ்நிலை இருக்கிறது. தொழிலாளர்கள் வெளியே
தொழிற்சாலை சம்பந்தப்பட்ட வேலைக்கு சென்றால்கூட அந்த நேரத்தை
கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இப்போதிருக்கிறது.
இதை மாற்றியமைத்து தொழிற்சாலை சம்பந்தப்பட்ட எந்த வேலைக்கு
எங்கே சென்றாலும் அதை வொர்கிங் அவர்ஸாக எடுத்துக்கொள்ள
வேண்டும். ப்ளான்டேஷன் வொர்க்கர்ஸ்க்கு கன்ஸ்யூமர் கோவாப்ப
ரேட்டிவ் சொஸைட்டீஸ் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த சர்க்காருக்கு
கொள்கை இருக்கிறது என்று வெளியிட்டார்கள். அந்தக் கொள்கை
இன்று சரிவர அமுல் நடத்தப்படவில்லை. ப்ளான்டேஷன் வொர்க்கர்ஸ்க்கு
இந்தக் கொள்கையை அமுல் நடத்துவதுபோல் எல்லாத் தொழிற்சாலை
களிலும் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு குறைந்தது பத்து
பேர்களுக்கு மேல் எந்தெந்த தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்களோ
அங்கெல்லாம் இந்த கன்ஸ்யூமர் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளை
அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்று, அதற்காக இந்த அரசாங்கம்
முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்
கொள்கிறேன்.

*திரு. ஆர். செங்காலியப்பன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
இன்று முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த
தொழிலாளர் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை
கூற விரும்புகிறேன். இன்று எல்லா ஆலைகளிலும் நியாய விலைக்
கடைகள் ஏற்படுத்தவேண்டுமென்று முத்தரப்பு மகாநாட்டில் ஒப்புக்
கொண்டிருக்கிறார்கள். இன்று அப்படி எல்லா ஆலைகளிலும் ஏற்
படுத்தியிருக்கிறோமா என்றால் கிடையாது. ஏன் இதை அமுல் படுத்த
வில்லை ? ஏன் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தவில்லை. இது பற்றி
அரசாங்கம் இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுத்த
தாகத் தெரியவில்லை. இந்த ஐந்தாறு ஆண்டுகளில் எங்கள் கோவை
ஜில்லாவில் பல புது ஆலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த
ஆலைகளில் எல்லாம் 300, 400 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.
அங்கு கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்ஸ், ஒவ்வொரு ஆலையிலும் திறக்கப்பட
வேண்டுமென்று பல முறை எடுத்துச்சொல்லி வருகிறோம். ஆனால்
அவற்றிற்கு முதலாளிகள் செவி சாய்ப்பதாக இல்லை. இன்று விலைவாசி
விஷம் போல் ஏறிவருகிறது. இன்று தொழிலாளர்கள் வாழ்க்கைப்புள்ளி
எவ்வளவு தூரம் கூட்டப்பட்டிருக்கிறது என்றால், அரசாங்கம் சுமார்
3 அல்லது 4 ரூபாய் கிடைக்கும் என்று நிர்ணயம் செய்வார்களானால்
வெளியே எட்டு ரூபாய் அளவிற்கு உயர்ந்து விடுகிறது. இதைப் பார்க்கும்
போது எப்படி தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையை நல்ல முறையில்
நடத்த முடியுமென்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே இது
குறித்து ஆலோசித்துப் பார்த்து புள்ளி நிர்ணயிப்பதை பரிசீலனை
செய்து நல்ல முறையில் நிர்ணயம் செய்து தொழிலாளர்களுக்கு உதவி
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்தெந்த ஆலைகளில்
கூட்டுறவு ஸ்டோர்ஸ் ஏற்படுத்தவில்லையோ அங்கெல்லாம் உடனடியாக
ஏற்படுத்த லேபர் கமிஷனர் அவர்கள் மூலம் நடவடிக்கைகள் எடுத்துக்
கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று சில தொழில்
களில் காண்ட்ராக்ட் முறை இருந்து வருகிறது. உழைப்பிற்கு தகுந்த
ஊதியம் கொடுக்கவேண்டுமென்று எல்லா மேடைகளிலும் சொல்கிறோம்.
சட்டமும் இயற்றுகிறோம். ஆனால் இன்று நிறைய முதலாளிகள் பல
தொழில்களை காண்ட்ராக்ட் முறையில் வைத்துக்கொண்டு தொழிலாளர்
களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய சம்பளத்தை கிடைக்க முடியாத
அளவிற்கு ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதை நம் அரசாங்கம் கண்
காணிக்கவேண்டும். அவர்கள் சட்டப்பூர்வமாக தொழிற்சங்கத்தில் அங்கத்
தினர்களாக சேர்ந்து தொழிற்சங்கத்திலிருந்து நடவடிக்கைகள் எடுத்துக்
கொள்ளும்போது கன்ஸிலியேஷனுக்கு வருகிறது. லேபர் ஆபீசர்கள்
வரும்போது, இவர்கள் காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் என்று பாக்டரி





சொந்தக்காரர்கள் கூறிவிடுகிறார்கள். காண்ட்ராக்ட் முறைபற்றி இன்று
நம் சட்டம் எப்படியிருக்கிறது என்றால் காண்ட்ராக்ட் முறையில் உள்ள
தொழிலாளர்களுக்கு இன்று சட்டத்தின்படி பாதுகாப்பு இல்லை. அவர்களை
நிறுத்திவிடலாம், என்ன செய்தாலும் அவர்களுக்கு சட்ட பாதுகாப்பு கிடை
யாது. இந்த நிலை இருக்கக் கூடாது, எந்த ஆலையிலானாலும் சரி, தேயிலைத்
தோட்டங்களில் ஆனாலும் சரி, பாக்டரிகளிலானாலும் சரி அவர்களுக்கு
சங்கத்தில் சேர பெர்மிட் செய்யவேண்டுமென்று விதி இருக்கவேண்டும்.
இந்த காண்ட்ராக்ட் முறை அடியோடு ஒழிக்கப்படவேண்டுமென்று கூறிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் தொழில் துறையில் சமாதானம் நிலவ
வேண்டும் என்று நாம் எல்லோரும் வற்புறுத்தி வருகிறோம். சமாதான
மாக உற்பத்தி பெருகவேண்டும், நல்ல முறையில் முதலாளிகளும் தொழி
லாளிகளும் பழகவேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால் இவை
எல்லாம் ஒரு தரப்பில்தான் இருந்து கொண்டிருக்கிறது. முக்கியமாக
தொழிலாளர்கள் சமாதானத்தோடு உற்பத்தியை பெருக்கவேண்டும் என்ற
நோக்கத்தில் பழகிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் முதலாளிகள் தரப்
பில் அந்த விதமான சமாதானத்திற்கு, சமாதான முறையில் தொழிலை
நடத்துவதற்கு, சட்டரீதியான முறையில் தொழிலை நடத்த வேண்டும்
என்ற எண்ணம் முதலாளிகளுக்கு இருப்பதில்லை. சமீப காலத்தில்
போனஸ் கொடுக்கின்ற பிரச்னையில் கோவையில் முதலமைச்சர் அவர்கள்
தலையிட்டு இந்த அளவுக்கு போனஸ் கொடுப்பது என்று தீர்மானிக்கப்
பட்டது. தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், முதலாளிகளும் கூடியிருந்து
பேசி முடிவு எடுக்கப்பட்டது. முதலாவது எங்களுக்கு போனஸ் கொடுப்
பதற்கு கட்டுப்படியாகாது, ஆகவே போனஸ் கொடுக்க முடியாது, என்று
சொன்னார்கள். பின்னால் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு முடிவுக்கு
வந்த பின்னால் அந்த முடிவை அப்போது முதலாளிகளும், தொழி
லாளர்களும் ஒத்துக்கொண்டார்கள். அதற்குப் பின்னால் ஒரு சில ஆலை
களில், குறிப்பிட்ட இரண்டு மூன்று ஆலைகளில், அதிகப்படியாக போனஸை
கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக இன்னின்ன அளவுக்கு போனஸ்
கொடுக்கவேண்டும் என்று அங்குள்ள எல்லா மில் முதலாளிகளும்
தொழிலாளிகளும் முதலமைச்சர் அவர்கள் செய்த முடிவுக்கு ஒத்துக்
கொண்ட பின்னால், எங்களுக்கு போனஸ் கொடுப்பதற்கு கட்டுப்படி
யாகாது என்று சொன்னவர்கள், பின்னால் அதிகப்படியாக போனஸ்ஸும்
அட்வான்ஸும் கொடுக்கிறார்கள். இது அமைதியை நீடிக்கவேண்டும்
என்பதற்காகவா, யார் இந்த அமைதியை கெடுத்துக்கொண்டிருப்பது
என்பதை அரசாங்கமும் அமைச்சர் அவர்களும் தெரிந்து கொள்ள
வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன். இப்பேர்ப்பட்ட
முறையில் அமைதியின்மையை ஏற்படுத்துகிற முதலாளிகள் மீது தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும்
சில நேரங்களில் ஒப்பந்தம் நடைபெறுகிறது. இவ்விதமான ஒப்பந்தம்
ஏற்பட்ட பின்னால் தொழிலாளர்கள் அதன்படி நடந்துக் கொள்கிறார்கள்.
ஆனால் தொழிற்சாலை முதலாளிகள் இந்த ஒப்பந்தத்தை மீறி நடக்கிறார்
கள். அவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.
தொழிலாளர்கள் ஆத்திரத்தோடு, சில வேளைகளில் நோட்டீஸ் கொடுக்
காமல் வேலை நிறுத்தம் செய்துவிட்டால், இவர்கள் சட்டவிரோதமாக
வேலைக்கு வராமல் இருந்துவிட்டார்கள் என்று எட்டு நாள் சம்பளத்தை
பிடித்துக் கொள்வதற்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால்
சட்டவிரோதமாக கதவு அடைப்பு செய்கிறார்கள் சில முதலாளிகள்.
ஆனால் அவர்கள் மீது இதுவரையிலும் எந்த விதமான நடவடிக்கையும்
எடுத்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இப்பேர்ப்பட்ட முறையில்
ஒப்பந்தத்தை மீறுகின்ற வகையில் நடக்கின்ற முதலாளிகளுக்கு எந்த
விதமான தண்டனையோ அல்லது பைனோ இதுவரையில் கொடுத்திருப்
பதாக எனக்குத் தெரியவில்லை. சமாதானம் என்பது சட்டப்படி இரண்டு
தரப்பாரும் பொதுவாக அமல் நடத்த வேண்டிய ஒன்றாகும். அந்த
முறையில் இரண்டு தரப்பாரும் சேர்ந்து இதை அமல் நடத்துகின்ற
முறையில் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு ஸ்டோரில் இருக்கக்கூடிய சிப்பந்திகள் டிஸ்மிஸ் செய்யப்படுகிருர்கள். சமீபத்தில் கோயம்புத்தூரில், டேனஸ் மில்லில் (வி. எஸ். அண்ட் டப்ள்யூ. மில்) அங்கே இருக்கக்கூடிய நிர்வாகம் கூட்டுறவு ஸ்டோரில் தவருக நடந்து கையாடல் நடந்தது என்று எடுத்துக் கூறிய இரண்டு தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிருர்கள். குறிப்பாக இன்னின்ன மாதிரி தவறுகள் நடந்திருக்கின்றன என்று கூட்டுறவு ரெஜிஸ்ட்ராருக்கும், கூட்டுறவு மினிஸ்டருக்கும் தெரிவித்திருக்கிருர்கள். இப்போது டிஸ்மிஸ் செய்யப்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுத்துக்கொள்ளப்படவில்லை. இன்னின்ன விதத்தில் தவறுதல்கள் நடந்திருக்கின்றன என்று அரசாங்கத்திற்கு தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது வரையிலும் அதன் பேரில் என்ன நடவடிக்கையும் எடுத்திருப்பதாக தெரியவில்லை. இதைப்பற்றி நான் சென்ற சட்டசபைக் கூட்டத்திலும் சொன்னேன். கூட்டுறவு டிபார்ட்மென்டிலிருந்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று புள்ளி விவரங்களை எல்லாம் எடுத்துச் சொல்லி பேசியிருக்கிறேன். இப்போது இரண்டு தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். இவர்களை திருப்பி வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, தவறு செய்தவர்கள் மீதும் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக தவறு செய்தவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கவர்மெண்ட் பிரிண்டிங் பிரஸ்ஸில் வேலைபார்க்கின்ற தொழிலாளர்கள் பெரும்பாலும் தற்காலிகமாகவே இருந்து கொண்டிருக்கிருர்கள். மற்ற தனியார் துறைகளிலுள்ள பிரஸ்களில் என்ன வசதிகள் செய்து கொடுக்கிருர்களோ அந்த வசதிகள் எல்லாம் இவர்களுக்கும் செய்து கொடுக்கப்படவேண்டும், அதோடு தற்காலிகமாக இருக்கின்ற தொழிலாளர்களை எல்லாம் நிரந்தரமாக்குவதற்கும் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும். முன்னுல், அதாவது சென்னை, ஆந்திரம், கேரளம் எல்லாம் சேர்ந்திருந்த நேரத்தில் கவர்மெண்ட் பிரஸ்ஸில் இருந்த தொழிலாளர்களுக்கு தாராள பென்ஷன் திட்டம் இருந்து வந்தது. பின்னுல் இரண்டாவது சம்பளக் கமிஷன் வந்த பின்னுல் இந்த தாராள பென்ஷன் திட்டம் அடிப்பட்டுபோய்விட்டது. ஆனுல் நம்மிடமிருந்து பிரிந்து சென்ற ஆந்திரா ராஜ்யத்தில் இப்போதும் இந்த தொழிலாளர்களுக்கு தாராள பென்ஷன் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே நமது கவர்மெண்ட் பிரிண்டிங் பிரஸ்ஸிலுள்ள தொழிலாளர்களுக்கும் இந்த தாராள பென்ஷன் திட்டத்தை அமல் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவு முறையில் தொழிலாளர்களுக்கு வீடுகட்டிக் கொடுப்பதற்காக அரசாங்கம் தாராளமான வசதிகளை எல்லாம் செய்து கொடுத்திருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் வந்திருக்கிறது. இதை நான் , மிகவும் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனுல் இப்போது அவசர காலத்தை முன்னிட்டு அந்தத் திட்டத்தை ஒத்திவைத்திருக்கிருர்கள். எங்கள் பகுதியில் முக்கியமாக பங்கஜா மில்லுக்கு முன்னுல், முனிசிபாலிடி லிமிட்டுக்குள் சென்ட் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் விலையில், ஐந்து சென்டுக்கு 5,000 ரூபாய் கொடுத்து வாங்கிவிட்டார்கள். இப்போது இடத்தை வாங்கி விட்டு வீடு கட்டுவதற்கு வசதியில்லாமல் இருந்து கொண்டிருக்கிருர்கள். ஆகவே இந்த மாதிரி இடத்தை வாங்கியிருக்கும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக இந்தத் திட்டத்தை ஸ்பெஷலாக சிறிதளவு அமல் நடத்திஞல் நன்ருக இருக்கும். ஏனென்ருல் தொழிலாளர் 5,000 ரூபாய் போட்டு இடத்தை வாங்கிவிட்டார்கள். ஆகவே இதைப் பற்றி சர்க்கார் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் கீழ், சாதாரணமாக ஒரு தொழிலாளிக்கு டி. பி. வந்தால் 56 நாட்கள் பாதி சம்பளத்தோடு லீவு கொடுத்து வந்தார்கள். இப்போது பூரா சம்பளத்தையும் கொடுக்கிருர்கள். ஆனுல் இந்த வியாதியிலிருந்து குணம் பெற்று வருவதற்கு



இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிடுகிறது. இந்த நிலைமையில் ஒரு குடும்பத்தையே—அவன் மனைவி, தாயார், குழந்தைகள்—இவர்களை எல்லாம் பாதுகாக்கவேண்டியிருக்கிறது. அதே போன்று தான் குஷ்டம், வாதம் போன்ற நோய்கள் எல்லாம் வரும்போது குணம் பெற்று வருவதற்கு இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிடுகிறது. இந்த காலத்தில் அவர்களுக்கு முழு நேரமும் பூரா சம்பளத்தையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கார்ப்பரேஷனில் வேண்டிய அளவு பணம் இருக்கிறது. ஆகவே இம்மாதிரி நோய் ஏற்பட்டால் ஆஸ்பத்திரியிலிருந்து பூரணமாக குணமாகி வீட்டுக்கு வரும் வரையிலும் முழு சம்பளத்தை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, தொழில், தொழிலாளர்கள் மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த தங்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலும், தொழில் சம்பந்தப்பட்ட பிரச்னையும் ஒரு அமைச்சர் அவர்களிடத்திலும், தொழிலாளர்கள், தொழிலாளர்கள் பிரச்னை இன்னொரு அமைச்சர் அவர்களிடத்திலும் தனித்தனியாக பிரிக்கப்பட்டு, தனித்தனி அமைச்சர்களிடத்தில் இருக்கின்ற காரணத்தால் நல்ல முறையில் பணி புரிய முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே தொழில், தொழிலாளர்கள், தொழிற்சாலைகள், இவை சம்பந்தப்பட்ட பிரச்னைகள் எல்லாவற்றையும் ஒரே அமைச்சர் கவனித்துக்கொண்டிருந்தால் நல்ல முறையில் பணியாற்ற வசதியாக இருக்கும் என்ற காரணத்தால், இந்தத்துறை ஒரே அமைச்சரிடத்தில் இருப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்கள் இல்லையென்ருல் தொழிற்சாலைகள் இல்லை, தொழிற்சாலைகள் இல்லை என்ருல் தொழிலாளர்கள் இல்லை. இவ்விதம் உயிரும் உடம்புமாக இருக்கின்ற முறையில், தொழில், தொழிலாளர்கள், தொழிற்சாலைகள் இவைகள் எல்லாம் ஒரே உயிர் என்ற அடிப்படையில் ஒரே அமைச்சர் அவர்களிடத்தில் இருப்பதற்கு வேண்டிய வழிவகை செய்யவேண்டும் என்று நமது முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் அகில இந்திய ரீதியில், முழு வேலை வாய்ப்பு எந்த அளவிற்கு கிடைத்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது பகுதிநேர வேலை வாய்ப்பாக ஏறத்தாழ 80 லட்சம் பேர்களுக்கும், முழு நேர வேலை வாய்ப்பாக 9 லட்சம் 10-00 a.m.
பேர்களுக்கும் கிடைத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நிச்சயமாக எல்லோருக்கும் முழு நேர வேலை வாய்ப்பு கிடைக்கவேண்டும். கடந்த 1956 முதல் 1963 வரையில் ஏழு வருட காலத்தில் சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில், எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை, கனம் தொழில் அமைச்சர் அவர்களால் தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரத்தைப் பார்த்தால், ஏறத்தாழ 56 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த 56 ஆயிரம் பேர்களுக்கும் 7 ஆண்டுகளில் இவ்விதம் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்ருல் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 8,000 பேர்களுக்கு மட்டும் தான் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அவ்விதம் பார்க்கும் போது, ஐந்தாண்டுகளில் சுமார் 40,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருப்பதாக நாம் எடுத்துக்கொள்ளலாம்.

அடுத்தாற்போல், இன்றைய நிலைமையை பார்க்கின்ற பொழுது, பாக்டரியைப்பற்றி (தொழிற்சாலைகளைப்பற்றி) ஒருசில புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1963–64-ம் ஆண்டிலே வேலை வேண்டுமென்று பதிவு செய்துகொண்டவர்கள் 2,30,443 பேர்கள். ஆனுல், 42,000 பேர்களுக்குத்தான் வேலை வாய்ப்புகள் கிடைத்திருக்கிறது என்கிற புள்ளி விவரம் இதிலே காணப்படுகிறது. சற்று ஏறக்குறைய பதிவு செய்து கொண்டவர்களில் 20 சதவீதத்தினருக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. மீதி 80 சதவீதத்தினருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. இதை சென்ற ஆண்டு புள்ளி விவரக் கணக்கு காட்டுகிறது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஏழு ஆண்டுகளில் 1,564

தொழிற்சாலைகள் ஏற்பட்டிருந்தும்கூட, ஒவ்வொரு தொழிற்சாலையிலும் சராசரியாக 30 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருந்தும்கூட, தொழிற் சாலைகளில் தொழில் செய்ய வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு, நூற்றுக்கு 20 பேர்களுக்குத்தான் வேலை கிடைத்திருக்கிறது என்றால் மிகுதியான 80 சதவீதத்தினர் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல நமது சென்னை மாநில மின்சார போர்டைப் பொறுத்த வரையில் பல்லாயிரக் கணக்கான என். எம். ஆர்., டி. வி. எல். தொழி லாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து அண்மையில் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி நீக்கப்பட்டவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். 4-5 ஆண்டு கள் காஷ்வல் லேபர் என்ற முறையில், என். எம். ஆர். என்ற முறையில் பணியாற்றியிருந்தும்கூட அண்மையில் நமது மாநில மின்சார போர்டு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையில் பெரும்பான்மையான தொகையை யந்திரம் வாங்கவும், வொயர்களை வாங்கவும் செலவழித்த காரணத்தினால், என். எம். ஆர்., டி. வி. எல். தொழிலாளர்களை வேலை அற்றவர்களாக ஆக்கியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க நமது அரசாங்கம் முயல வேண்டும், அவர்களுடைய பட்டினியைப் போக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீமைப் பொறுத்த வரையில் 34 நகரங்களுக்குத்தான் இந்த ஸ்கீம் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. பல நகரங்கள், தொழில்கள் ஆகியவைகளுக்கு இந்த ஸ்கீமை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாநிலத்திலுள்ள தொழிலாளர்கள் தேசிய நெருக் கடி ஏற்பட்ட உடனே, கூடுதலான மணிநேரம் வேலைசெய்ய, அதிக நாள் வேலை செய்ய அவர்களாக மனமுவந்து அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு தந்தார்கள். அத்தகைய தொழிலாளர்கள் நல்ல முறையில் பலனடைய வேண்டும், மேலும் மேலும் தொழில்களும் பெருகவேண்டும், அரசாங்கமும் பலன் டையவேண்டும் என்ற நிலை ஏற்பட வேண்டுமானால் உண்மையில் உழைப்ப வனுக்கு ஏற்ற ஊதியம் என்ற முறையில், முதலாளி முதலீடு செய்தாலும் வந்த லாபத்திலிருந்து ஒரு பகுதி லாபத்தை, தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன்கூட பங்கிட்டுக்கொடுக்கவேண்டும் என்ற முறையிலே 25 சதவீதத்தை அல்லது முடியுமானால் 50 சதவீதம் லாபத்தை, முதலாளிக்கு நிகர லாபத்தில் 50 சதவீதம் என்கிற நிலையும், தொழிலாளர்களுக்கு சம்பளம், மற்றது எல்லாம் போக மீதி 50 சதவீதம் தொழிலாளர்களுக்கு என்ற நிலை ஏற்பட்டால் தொழிலாளர்களிடம் புத்துணர்ச்சி ஏற்படும், அதனால் தொழில் வளம் ஏற்படும், தொழில் உற்பத்தி பெருகும். இந்த விஷயத்தில் நமது மாநில அரசு மற்ற மாநில அரசாங்கங்களுக்கு வழிகாட்டியாக ஆகவேண்டும். அந்தகைய சூழ்நிலையை ஏற்படுத்தினால் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையே நல்லுறவு ஏற்படும் அதே சந்தர்ப்பத்தில் அத்தனை தொழில்களும் முதலாளிகளிடத்தில் இருப்பது நல்லதல்ல. மக்களுக்குப் பயன்படும் முறையில், அரசாங்கத்திற்குப் பயன்படும் முறையில், அரசாங்கமே எல்லாத் தொழில்களையும் ஏற்றுக் கொள்ளும் வகையில் கொள்கையைத் திருத்தி, எல்லாம் அரசாங்கத்தின் தொழில்கள் என்ற முறையில் மாற்றி அமைக்கவேண்டும், அத்தனை தொழில்களையும் தேசியமயமாக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. பொன்னையன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, நமது கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் தொழில் மான்யத்தை ஆதரித்து தேயிலைத் தோட்டத் தொழில் பற்றியும், தொழி லாளர் பற்றியும் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நம் மாகாணத்தில் இருக்கக்கூடிய மிகப் பெரிய தொழில்களில் இதுவும் ஒன்று. லட்சக் கணக்கான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அத்தனை பேரும் முழுக்கமுழுக்க





ஹரிஜனங்கள். 1947-க்கு முன்பு இந்தத் தொழிலைக் கண்கொண்டு பார்க்க முடியாது. இந்தத் தொழிலைப் பற்றிக்கூட நாடக மேடையில் 'தேயிலைத் தோட்டத்திலே........' என்று இப்படியெல்லாம் பாட்டுகள் பாடி யிருக்கிறார்கள். இதெல்லாம் பழைய காலம். அந்தக் காலம் மலையேறி விட்டது. 1947-க்குப் பின்னால் காங்கிரஸ் அரசாங்கம் வந்த பிற்பாடு தொழிலாளர்கள் ரொம்ப ரொம்ப நல்ல சலுகைகளை அடைந்திருக் கிறார்கள். சொல்லுகிறேன் கேளுங்கள். முன்பெல்லாம் முதலாளியே திரும்பிப் பார்க்க மாட்டார்கள். இப்போது சம்பாதிக்கிற பணத்தில் வருஷா வருஷம் போனஸ் கொடுக்கிறார்கள். அடுத்தபடியாக எங்களுக்கு ப்ரா விடெண்ட் ஃபண்ட் இருக்கிறது. அடுத்தபடியாக கிராச்சுயிட்டி, அதாவது சர்வீஸ் பணம் கொடுக்கிறார்கள். அடுத்தபடியாக மெட்டர்னிட்டி அலவன்ஸ், சிக் அலவன்ஸ், லீவ் எக்ஸ்பென்ஸஸ், வைத்திய வசதி, கல்வி வசதி, வருஷா வருஷம் குளிர் பிரதேசமாக இருப்பதால் இரண்டு கம்பளிகள் எல்லாம் இருக்கின்றன. இந்த 20 வருஷங்களுக்குள் தோட்டத் தொழி லுக்குச் செய்ததைப்போல அரசாங்கம் வேறு எந்த தொழிலுக்கும் செய்யவில்லை. அந்த மக்களுடைய சார்பில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஒரு மாதிரி நன்றாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இருந்தாலும் இன்னும் சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவர்களுடைய குறைகள் முழு வதும் தீர்ந்துவிட்டது என்று சொல்லவில்லை. அந்தக் குறைகளையும் தீர்க்க வேண்டும். எங்களுக்கு சாமான்கள் வரவேண்டுமென்றால் பொள்ளாச்சியி லிருந்து, கீழ் பிரதேசத்திலிருந்து வருகிறது. அங்கேயே அகவிலை ஜாஸ்தி என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் 40, 50 மைல்களுக்கு மேல் மேலே இருக்கிறோம். லாரி ட்ரான்ஸ்போர்ட்டில்தான் வரவேண்டும். ட்ரெயின் கிடையாது. பொள்ளாச்சியில் ஒரு சாமானை 1 ரூபாய்க்கு வாங்குவதை இங்கே $1\frac{1}{4}$ ரூபாய் கொடுத்து வாங்குகிறோம். இந்த கஷ்டம் இருக்கிறது.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு வேஜ் போர்டு வந்திருக்கிறது. மில் தொழிலுக்கு வேஜ் போர்டு வந்து அவர்கள் நல்ல சம்பளம் வாங்கு கிறார்கள். சிமெண்ட், சக்கரை ஆகிய தொழில்களுக்கு வேஜ் போர்டு வந்து அவர்களும் நல்ல சம்பளம் வாங்குகிறார்கள். ஆனால் தேயிலைத் தோட்டத் தொழில்களுக்கு இப்போதுதான் வேஜ் போர்டு கொடுத்திருக்கிறார்கள். அது ஃபங்க்ஷன் பண்ணுவதற்கு முன்பாகவே இடைக்காலமாக கூலி உயர்வு கொடுத்தார்கள். இந்த வேஜ் போர்டு வேலை முடிந்தவுடன் அவர்களுடைய ரிப்போர்ட்டை அப்படியே அமல் படுத்தவேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு ஆலோசனை கூறவேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வீட்டு வசதி என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்று கொடுக்கவேண்டும். ஒரு வீட்டில் பல குடும்பங்கள் இருக்கக்கூடாது. நாம் பல லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம். அன்னிய நாட்டு முதலாளிகள் நம்மிடமிருந்து வாங்க மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். இப்போது வருஷத்திற்கு நூற்றுக்கு 8 பேர்களுக்குக் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. அதை 10 அல்லது 15 என்று செய்தால் நிச்சயமாக வீட்டுப் பிரச்னை நீங்கும். ஒரு வீட்டில் 2-3 குடும்பங்கள் இருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு, அதாவது புருஷன், பெண்சாதி, குழந்தை கள் ஆகியவர்களுக்கு ஒரு வீடு என்ற முறையில் தனித்தனி வீடு வேண்டும். அதை அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

அடுத்தபடியாக பாரதத்திலே நம் சென்னை மாநிலம் மின்சக்தியில் ரொம்ப முன்னேறியிருக்கிறது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய வீடுகள் சோலைகளுக்குள், தேயிலைச் செடிகள் மத்தியில் கட்டியிருக்கிறார்கள். அங்கே ஒவ்வொரு வீட்டுக்கும் லைட் வேண்டாம். இரவு நேரத்தில் அந்தப் பகுதிகளில் மிருகங்கள் நடமாடுகின்றன. இரவு நேரத்தில் மலஜலம் கழிக்க வெளியே வரவேண்டும். அந்த நிலைமையில் 8 மணிக்கு ஒரு பாவமும் அறியாத மக்கள், பாமரமக்கள், கதவைச் சாத்தினால் காலை 6 அல்லது $6\frac{1}{2}$ மணிக்குத்தான் திறக்கவேண்டியிருக்கிறது. அங்கே காட்டு

மிருகங்கள் தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு லைன் முன்னாலும் தயவு செய்து ஒரு லைட் போட்டுக் கொடுத்தால் இரவு நேரத் தில் வெளியேவர சவுகரியமாக இருக்கும். இரவு போஜனம் முடிந்த வுடன் கொஞ்ச நேரம் வெளியே உட்கார்ந்து பேச வசதியாக இருக்கும். அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு ரெக்ரியேஷனும் கிடையாது. அங்கு குளிர் பிரேதேசமாக இருப்பதால் ஜனத்தொகை ஜாஸ்தியாக இருக்கிறது. குளிர்ப் பிரதேசமாக இருப்பதால் பிறப்பு அதிக மாக இருக்கிறது. இறப்பு கம்மி. இறப்பு கம்மியாக இருப்பதற்குக் காரணம், சர்க்கார் அங்கெல்லாம் 'ஆண்டி மலேரியல் வொர்க்' நிறைய செய்திருக்கிறார்கள். ஆகவே, மலேரியாவே வால்பாறை பிரதேசத்தில் இப் பொழுது கிடையாது. ஆகவே, இறப்பு கம்மி, பிறப்பு ஜாஸ்தி. தோட்டத் தொழிலாளர்களுக்குக் கருத்தடைபற்றி ஒன்றுமே தெரியாது. பப்ளிஸிடி டிபார்ட்மெண்டு கருத்தடைப்பற்றி அந்த மக்களுக்கு எடுத்துச்சொன்னால் ரொம்பவும் நலமாக இருக்கும். கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் ஒரு தடவை குன்னூருக்கு வந்திருந்தபோதுகூட மூன்று குழந்தைகள் பெற்ற வர்களுக்கு மெட்டர்னிடி அலவன்ஸை நிறுத்திவிட்டால், நலமாக இருக்கு மென்று யோசனை கூறினார்கள். அதைக்கூட நாங்கள் வரவேற்கிறோம். குளிர்ப் பிரதேசமாக இருப்பதால் பிறப்பு அதிகமாக இருக்கிறது. அவர்கள் பாமர மக்கள். அவர்களுக்கு உலகமே தெரியாது. ஆகவே, அவர்களுக்கு அவசியம் கருத்தடை பற்றி எடுத்துச் சொல்லவேண்டும். அதற்கு சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1962-63-ல் இந்தியத் தேயிலைத் தோட்ட மதிப்பீடு கமிட்டி 130 கோடி ரூபாய்க்கு அன்னிய செலாவணி பெறுவதற்கு வழியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தேயிலைக்கு சர்வதேசக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு தகுந்த மாதிரி அதிகமாக ஏற்றுமதி ஆகவில்லை நம் முடைய நாட்டிலிருந்து என்று அந்த கமிட்டி ரிப்போர்ட்டில் கூறப் பட்டிருக்கிறது. தேயிலைக்கு சர்வதேசக் கிராக்கி இருப்பதால் நம் நாட்டில் தேயிலைத் தோட்டத்தை இன்னும் விஸ்தரிக்கலாம், 'டெவலப்' செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. வால்பாறை பிரதேசத்தில், பரம்பிக்குளம்-ஆளியாறு ப்ராஜக்ட்டில் சோளியாறு டாம் கட்டவேண்டும் என்பதற்காக 3,000 எக்கர் தேயிலைத் தோட்டத்தை அழித்துவிட்டார்கள். இதனால் 3,000 ஆட்களுக்கு வேலையில்லை. சம்பிரதாயமாக தேயிலைத் தோட்டத்தில் ஒரு எக்கருக்கு 1 ஆள் வேலை செய்கிறான். கவர்ன்மெண்டு சின்கோனா தோட்டத்தில் இப்பொழுது 4,000, 5,000 எக்கர்களுக்கு தேயிலைப்பயிர் செய்யலாம். அதனால் அன்னியச் செலாவணியையும் நாம் அதிகமாக பெறலாம். 4,000, 5,000 ஆட்களுக்கு வேலை கொடுத்தது மாதிரியும் இருக்கும். கவர்ன்மெண்டு சின்கோனா பிரதேசத்தில் 150", 200" மழை பெய்கிறது. அங்கே தேக்கு மரம் விளையாது. ஈட்டி மரம் விளையாது. சந்தன மரம் விளையாது. வெறும் காட்டு மரங்களை வளர்ப்பதற்காக காட்டு இலாகா 4,000, 5,000 எக்கர்களைக் கொடுத்திருக்கிறார்கள். அங்கெல்லாம் தேயிலை உற்பத்தி செய்வதற்கு "..பீல்டு" நன்றாக இருக்கிறது. புஷெஸ் எல்லாம் கிளியர் செய்து விட்டார்கள். அங்கே நன்றாக தேயிலை பயிரிடலாம். ஒரு சமயம் அப்பொழுது முதல் அமைச்சர் வால்பாறைக்கு வந்திருந்தார். அவரிடம்கூட இந்த சமாசாரம் பற்றி பேசினேன். 3,000 எக்கர் தேயிலைத் தோட்டம் இந்த சோலையாறு திட்டத்திற்காக அழிக்கப்பட்டுவிட்டது. 3,000 ஆட்களுக்கு வேலை இல்லை. கவர்ன்மெண்டு சின்கோனா டிபார்ட்மெண்டுக்கு ..பாரெஸ்டு டிப்பார்ட்மெண்டு 3,000, 4,000 எக்கர் கொடுத்திருக்கிறார்கள். அது மழை அதிகமாக பெய்யக்கூடிய பிரதேசம், தேக்கு, ஈட்டி, சந்தன மரங்கள் அங்கே விளையாது. டீ பிளான்டேஷன் எத்தனை ஆயிரம் எக்கரில் செய்கிறோமோ அத்தனை ஆயிரம் ஆட்களுக்கு வேலை கிடைக்கும், ஆகவே, அங்கே தேயிலைத் தோட்டம் போடவேண்டும் என்று சொன் னேன். ரூ. 30 லட்சம் செலவில் குவினையின் பாக்டரி ஒன்று அங்கே கட்டியிருக்கிறோம். அந்த பாக்டரியில் ஒரு பகுதியை தேயிலை பாக்டரிக்கு உபயோகித்துக்கொள்ளலாம். அங்கே, ரூ. 8 லட்சம், 10 லட்சம் செலவில் ஒரு ஆஸ்பத்திரி கட்டப்பட்டிருக்கிறது. அந்த ஆஸ்பத்திரியை





தேயிலைத் தொழிலாளர்களுக்கும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அந்த இடத்தில் இவ்வளவு வசதி இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் தேயிலை பயிரிடுவதுபற்றி கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனிப்பட்ட முதலாளிகளும் இந்த மாதிரி சர்க்கார் இடம் கொடுத் தால், தேயிலைத் தோட்டத்தை விஸ்தரிப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆகவே, முதலாளிகளுக்கு அம்மாதிரி சர்க்கார் உத்தரவு கொடுத்து, தேயிலைத் தோட்டத்தை விஸ்தரிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 1962-வது வருஷம் போனஸ் விஷயத்தை கனம் முதல் அமைச்சர் அவர்கள் ரொம்ப சுமுகமாக முடித்துக்கொடுத்தார்கள். நாங்கள் பேசினால் முதலாளிகள் கன்னா, பின்னா என்று கடுமையாகப் பேசுகிறார்கள். ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் பேசினால் பாம்பு போல் படுத்துவிடுகிறார்கள். 1962-ம் ஆண்டு இந்தப் பிரச்னை வந்தவுடன் அப் பொழுது முதல் அமைச்சர் அவர்கள் வெளி நாடு சென்றிருந்தார். பிறகு திரும்பி வந்ததும் முடித்துக்கொடுத்தார். அம்மாதிரி 1963-ம் வருஷத்திற்கும் சீக்கிரம் இந்த போனஸ் விஷயத்தை முடித்துக் கொடுக்கு மாறு முதல் அமைச்சர் அவர்களை ரொம்பவும் கேட்டுக்கொள்கிறேன்.

கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொஸைடி பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என்னுடைய பகுதியில் பெரிய எஸ்டேட்களெல்லாம் (Foreign) பாரின் கம்பெனிகள். ஒவ்வொரு எஸ்டேட்டிலும் கிட்டதட்ட 1,000 எக்கர் இருக்கிறது. அங்கே வேலை செய்கிற தொழிலாளி களுக்கு இன்னும் கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொஸை டிகள் ஏற்படுத்தப்படவில்லை. நான் இதுபற்றி சென்ற பட்ஜெட் விவாதத்தி லின்போதுகூட கூறியிருக்கிறேன். ஒரு முதலாளியாவது இதுவரைக்கும் அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. டிபார்ட்மெண்டில் ஸீனியர் இன்ஸ்பெக்டர் போட்டு கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொஸைடி பற்றி விளக்கியிருக்கிறார்கள். நானும் பல முதலாளிகளைக் கண்டு இது பற்றி சொன்னேன். ஆனால், ஒரு முதலாளியாவது இதுவரைக்கும் அதற்கு இணங்கியபாடில்லை. ஆகையால், இது சம்பந்தமாக அவசியம் "ப்ரெஷர்" pressure கொடுத்து, கன்ஸ்யூமர்ஸ் கோவாபரேடிவ் சொஸைடி களை ஆரம்பிக்கச்சொன்னால் நன்றாக இருக்கும்.

10, 15 நியாயவிலைக் கடைகளாவது கொடுக்கவேண்டுமென்று கலெக் டரிடம் சொன்னேன். ஓபன் மார்க்கெட்டில் அரிசி ரொம்ப விலையாக இருக்கிறது. பிளாண்டர்ஸும் அரிசி சேகரித்து கண்டிப்பாக ஒரு விலைக்கு விற்கிறார்கள். அதுவும் விலை ஜாஸ்தியாக இருக்கிறது. வால்பாறை டவு னுக்கு மட்டும் ஒரு நியாய விலைகடை கொடுத்திருக்கிறார்கள். 10, 15 நியாய விலை கடைகளாவது இந்த ஏரியாவுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட் டுக்கொள்கிறேன்.

மதராஸ் அக்ரிமெண்டு வந்த பிற்பாடு கண்காணிகளை தனியாக பிரித்து விட்டோம். அவர்கள் இப்பொழுது சூபர்வைஸர்ஸ் என்று சொல்லப்படு கிறார்கள். அவர்கள் மானேஜர் என்ன செய்யவேண்டுமோ அந்த வேலை யைத் தான் செய்கிறார்கள். அதிகாரி வேலையைத் தான் சூபர்வைஸர்கள் செய்கிறார்கள். அவர்களை எப்பொழுது தொழிலாளிகளிடமிருந்து பிரித்து விட்டோமோ, அப்பொழுது அவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்கவேண் டும், அவர்களுக்கு தனி வீடு கொடுக்கவேண்டும். அவர்களுக்கு விறகு கொடுக்கவேண்டும். மழைக்குக் குடை கொடுக்கவேண்டும். ஏனென்றால் வருஷத்தில், 6, 7 மாதங்களுக்கு அங்கே மழை பெய்கிறது. அவர்களுக்கு பூட்ஸ் கொடுக்கவேண்டும். இவைகளெல்லாம் மிகவும் அவசியம். நான் முன்னே இதைப்பற்றியெல்லாம் அசெம்ப்ளியில் சொல்லியிருக்கிறேன்.

நான் சர்க்காரை குறை கூறுவதற்கு முன்னால், நான் ஒரு பெரிய சமாசாரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். வேஜ் போர்டு ரிபோர்ட்டு அநேகமாக இந்த மாதக் கடைசிக்குள் வரும் என்று கேள்விப்படுகிறேன். இந்த வேஜ் போர்டு வந்து, எங்களுக்கு பூரணமாக திருப்திகரமாக

முடித்துக்கொடுத்தால், என்றைக்கும் நன்றியுள்ளவர்களாக இருப்போம் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. இரா. நாராயணன் :** கனம் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் நல மான்யக் கோரிக்கையின் மீது நானும் சில வார்த்தை களை என்னுடைய கருத்துக்கேற்றவாறு கூறலாம் என்று இங்கு நினைக் கிறேன். அரியலூர் வட்டாரத்தில் காடுகள் அடர்ந்த நிலம் இருக்கிறது. அங்கே பக்கத்தில் டால்மியாபுரத்தில் ஒரு சிமெண்ட் கம்பெனி இருக் கிறது. அந்த கம்பெனிக்கு அரியலூர் வட்டத்திலிருந்து தான் அதற்கு வேண்டிய பொருள்களை எடுத்துச் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. அங்கே ஜிப்ஸம் கற்களை வெட்டி எடுக்கும் தொழிலாளர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். டால்மியாபுரம் கம்பெனி ஏற்பட்ட நாளி லிருந்து அங்கே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு எந்தவித மான சலுகையும் ஏற்படவில்லை. ஏனென்றால் தனிப்பட்ட நபர்கள் அந்த நிலத்தை விலைக்கு வாங்கி இருப்பதால், அதிலிருந்து ஜிப்ஸம் கற்களை வெட்டி எடுக்கும் தொழிலாளர்களுக்கு சரியாக ஊதியம் கிடைக்க வில்லை. சுமார் 4, 5 மைல் தொலைவிலிருந்து காலையிலே 4 மணிக்கு விடியற்காலையில் எழுந்து வந்து அந்த பாறைக்காட்டிலே பொழுது முழு வதும் வேலை செய்து தங்களுடைய மனைவி மக்களைக் காப்பாற்றக்கூடிய நிலைமையிலேதான் அந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்த இடத்தில் தண்ணீர் கூட கிடைப்பதில்லை. வெய்யில் அடித்தால் உட்கார வதற்குக் கூட இடமில்லை. அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால், வைத்திய வசதி அந்த இடத்தில் கிடைக்கவில்லை. இந்த நிலையிலே தொழிலாளர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப் படவில்லை. தனிப்பட்ட நபர்கள் 4, 5 கம்பெனிக்காரர்கள் அந்த இடத்தைக் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் அந்த நிலங்களை விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் தவிர அரசாங்கக் காடுகளும் அங்கே நிறைய இருக்கிறது. அந்த இடங்களில் கூட அந்த கற்களை வெட்டி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகள் ஒரு வாரத்திற்கு வெட்டி சேகரித்து வைத்த பிற்பாடு தான் அந்த கற்களை தனிப்பட்ட நபர்கள் வாங்கிக்கொள்கிறார்கள். இடையிலே மழை பெய்தால், அந்த கற்களை அவர்கள் அளந்துகொள்வதில்லை. எடுத்துக்கொள்வதில்லை. ஒரு நாள் பூராவும் அவர்கள் வேலைசெய்து வெட்டி எடுத்தால் ஒரு நாளைக்கு ரூ. 1-4-0, ரூ. 1-0-0 கூலிக்கு வெட்டி எடுத்த கற்கள் வீணாகக்கூடிய நிலைமை இருக்கிறது. அதுவும், "ஏ", "பி", "ஸி" என்ற ஒரு திட்டக் கணக்கில் அவர்கள் அந்தக் கல்லை விலைக்கு வாங்கி அதிக ஊதியத்தை தனிப்பட்டவர்கள் அடைகிறார்கள். ஒரு பெட்டி ரூ. 4-8-0, ரூ. 3-8-0, ரூ. 6-0-0 இப்படி வாங்குகிறார்கள். ரூ. 4-8-0-க்கு வாங்கிய பெட்டியை ரூ. 16, ரூ. 18-க்கு டால்மியாபுரத்தில் கொண்டு போய் போடுகிறார்கள். ரூ. 6-8-0-க்கு வாங்கி ரூ. 50-க்கு விற்கிறார்கள். அம்மாதிரி ஒரு பெட்டி ரூ. 75 வரையில் தனிப்பட்டவர்கள் விற்று வருகிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை. இந்த சட்டமன்றத்திலேகூட, தொழிலமைச்சர் அவர்கள் அதற்குவேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். சென்ற வரு ஷத்திலேகூட இதற்காக ரூ. 25,000 ஒதுக்கப்பட்டிருப்பதாக கேள்விப் பட்டேன். இந்த நிலையில் தனிப்பட்டவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுக் காமல், அரசாங்கமே எடுத்து நடத்தினால் ஏராளமான லாபம் கிடைக்கும். தொழிலாளர்களும் நல்ல வசதிகளைப் பெறமுடியும், அவர்களுக்கு வேண் டிய பாதுகாப்பையும் கொடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இப்பொழுது குளத்தூர் வட்டத்திலே நிலக்கரி கிடைத்திருக்கிறது. எங் களுடைய மாவட்ட கலெக்டர் அவர்களும் இதைப்பற்றி அரசாங்கத் திற்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள். 90 அடி ஆழத்திலே நெய்வேலி நிலக்கரியைவிட சிறந்த நிலக்கரி கிடைக்கிறது என்று சொல்லுகிறா கள். இந்த நிலக்கரியை தோண்டி எடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் அந்த வட்டாரம் நல்லமுறையில் வளர்ச்சி அடையும். அங்குள்ள மக் களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படும். ஆகவே குளத்தூர் கிராமத்திலே



உள்ள நிலக்கரியை சோதனை செய்து அதை வெட்டி எடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் அங்குள்ள தொழிலாளர்கள் முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற் படும்.

அடுத்தபடியாக, அரியலூரில் குதிரை வண்டிக்காரர்கள் ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள். அங்கிருந்து 4 மைல் தூரத்திற்கு கல்லங்குறிச்சி கோவில் இருக்கிறது. அதற்கு எல்லா ஜனங்களும் போய் வருகிறார்கள். டி. ஆர். எஸ். என்ற பஸ் சர்வீஸுக்கு அந்த பஸ் ரூட்டை அரசாங்கம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அங்கேயுள்ள கண்டக்டர்களும் டிரைவர்களும், குறிப்பிட்ட நேரங்களிலே அந்த பஸ்ஸை கல்லங்குறிச்சிக்கு விடுவதில்லை. எல்லா டிக்கட்டுகளும் சேர்ந்தவுடன்தான் குறிப்பிட்ட நேரம் தவறி அரியலூரிலிருந்து கல்லங்குறிச்சிக்கு பஸ் விடுகிறார்கள். இதனால் குதிரை வண்டிக்காரர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதைப்பற்றி அரசாங்கத்திற்கு தெரிவித்தும், எஸ். ஐ. மூலம் ரிப்போர்ட் அனுப்பியும் இன்னும் தக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை. நானே ஆர்.டி.ஓ. விடத் தில் சொல்லியிருக்கிறேன். ஆகவே அரியலூரிலிருந்து கல்லங்குறிச்சிக்கு குறிப்பிட்ட நேரங்களில் பஸ் போக்குவரத்து செய்தால் அந்தக் குதிரை வண்டிக்காரர்களுக்கு ஒரு பாதுகாப்பு ஏற்படும்.

பொன்பரப்பி வட்டாரத்தில் முந்திரித் தோட்டம் பயிராகி வருகிறது. பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் முந்திரி பயிராகியிருக்கிறது. அதனால் தான் அங்கே உள்ள மக்கள் வாழக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அங்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தினால் அங்குள்ள மக்கள் நல்ல பயனை அடைவார்கள். அவ்வாறு ஒரு முந்திரி தொழிற்சாலை ஏற்படுத்துவதினால், பிளாஸ்டிக் போன்ற மற்ற பொருள்களையும் உற்பத்தி செய்யலாம். ஆகவே என்னுடைய வட்டாரத்திற்கு மேலே குறிப்பிட்ட வசதிகளை செய்து தருமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, என் னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. நா. இராசாங்கம் :** சட்டமன்ற துணைத்தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்கள் சிலவற் றைச் சொல்ல விழைகிறேன். என்னுடைய தொகுதியாகிய குறிஞ்சிப்பாடி தொகுதியில், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கமும், பக்கத்திலே சேஷஸாயி தொழிற்சாலையும், அதற்கு சற்று மேற்கே சர்க்காரால் நடத்தப்பட்டு வருகின்ற ஸெராமிக் செண்டரும், ஆக மூன்று தொழிற்சாலைகள் இருக் கின்றன. இந்த ஸெராமிக் செண்டரிலே வேலை செய்யக்கூடிய தொழி லாளர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று சுமார் 3 ஆண்டு களாக கோரிக்கை விடுத்தும், இன்னும் அந்தத் திட்டம் நடைபெறாமல் இருக்கிறது. நமது தொழிலமைச்சர் அவர்களுக்கு அந்தக் கோரிக்கை வந்திருக்குமென்று நினைக்கிறேன். அவர்களும் அந்த இடத்தை பார் வையிட்டார்கள். அத்தகைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும் பொழுது அவர்களுடைய சம்பள விகிதம், மற்றய வசதிகள் எல்லாவற் றையும் பரிசீலனை செய்து, அவர்கள் முன்னேற ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலிச் சுரங்கத்தில் வேலை செய்கின்ற தொழிலாளரைப் பொறுத்த வரையில், பல்வேறு தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. அந்த தொழிற் சங்கங்களிடையே முரண்பட்ட கொள்கைகள் இருக்கின்றன. அவரவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பள விகிதங்கள், வீட்டுவாடகைப்படி, இதிலே இருக் கின்ற வேறுபாடுகள் காரணமாக இத்தகைய முரண்பாடுகள் இருக்குமோ என்று நான் நினைக்கிறேன். சமீபத்தில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் நான் ஒரு செய்தி கேள்விப்பட்டேன். அங்கேயுள்ள தொழி லாளர்கள் எல்லோரும் சேர்ந்து இந்த மாதம் 22-ம் தேதி வேலை நிறுத்தம் செய்யப்போவதாகவும், இதைப்பற்றி யோசித்து வருவதாக வும் நான் அறிகிறேன். அத்தகைய வேலை நிறுத்தம் ஏற்படாமல் இருக் குமாறு மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களையும், தொழிலமைச்சர் அவர்களையும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள் கிறேன். இரண்டு அமைச்சர்களும் கலந்தோ அல்லது தனித்தனி யாகவோ அங்கே சென்று நிலைமையை அறிந்தோ அல்லது தொழிலாளர்

களின் பிரதிநிதிகளை இங்கே வரவழைத்தோ, இந்த வேலை நிறுத்தத்தை
தடுக்கும் முறையில் அவர்களுடைய குறைகளைப் போக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அங்கே வேலை செய்யும் தொழிலாளர்கள் பல்வேறு
ராஜ்யங்களிலிருந்தும், தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்
தும் வந்திருக்கிறார்கள். நெய்வேலி சுரங்கம் தென்னாற்காடு மாவட்
டத்திலிருக்கிறது. விருத்தாசலம், சிதம்பரம், கடலூர் ஆகிய மூன்று
தாலூகாக்களுக்கும் மத்தியில் உள்ளது. இந்த மூன்று தாலூகாக்களை
தவிர மற்ற தாலூகாக்களிலிருந்து வந்திருக்கிறவர்களுக்கும், மற்ற
மாவட்டங்களிலிருந்து வந்திருக்கிறவர்களுக்கும், மற்ற மாநிலங்களிலிருந்து
வந்திருக்கிறவர்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது.
ஆனால் மேலே குறிப்பிட்ட மூன்று தாலூகாக்களிலிருந்து வந்தவர்
களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுப்பதில்லை என்ற ஒரு முறை
அங்கே இருக்கிறது. சிதம்பரத்தை எடுத்துக்கொண்டால், அதிலே ஒரு
தெரு தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்தது. அதே தெருவிலே வேறு ஒரு
பகுதி தென்னாற்காடு ஜில்லாவைச் சேர்ந்தது. ஆகவே 10 தப்படி வந்
தால் வீட்டு வாடகை அலவன்ஸ் உண்டு. அதற்கு குறைவாக இருந்தால்
கிடையாது என்ற நிலைமை இருக்கிறது. என்னைப்பொறுத்தவரையில்,
நாலா பக்கங்களிலும் 5 மைல் தூரத்திற்குள் இருந்து வருகிற தொழி
லாளர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் இல்லை என்று சொன்னால்
பொருத்தமாக இருக்கும். அதுவும்கூட ஒரு கால அளவுக்குத்தான்
பொருத்தமாக இருக்கும். ஆகவே இப்படிப்பட்ட ஒரு முறை அங்கே
இருப்பதை கனம் தொழிலமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும்
கவனித்து, நான் சொன்ன அடிப்படையிலாவது எல்லோருக்கும் வீட்டு
வாடகை அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடலூரிலுள்ள சேஷசாயி தொழில் நிறுவனங்களிலுள்ள தொழி
லாளர்களுக்கு சம்பள விகிதம், மேலும் மற்றைய வசதிகள் செய்து தர
வேண்டுமென்று கோரிக்கைகள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. அவர்
களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டிருக்
கிறார்கள். சமீபத்தில் நமது தொழிலமைச்சர் அவர்கள் கூட வடலூ
ருக்கு வந்தார்கள். அப்பொழுது அவர்களிடம் ஒரு கோரிக்கை மனு
கொடுக்கப்பட்டது. நானும் அதைப்பற்றி வலியுறுத்திச் சொன்னேன்.
அவர்களும் கவனிப்பதாகச் சொன்னார்கள். அந்த தொழிலாளர்களுக்கு
வீடுகள் கட்டிக் கொடுப்பதிலே கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். ஓட்டு வீடுகள்கூட கட்டிக்கொடுக்கவேண்டிய அவசிய
மில்லை. அந்தப்பகுதியிலே விழல்கள் அதிகமாக இருக்கின்றன. அது
ஒருவகை புல். அதை வைத்து வீடுகள் கட்டினால் நன்றாக இருக்கும்.
குறைந்தது 10 ஆண்டு காலத்திற்கு பழுது பார்க்கவேண்டிய அவசிய
மில்லை. சமீபத்தில் நெருக்கடி நிலை காரணமாக நிதி நிலைமை சரியாக
இல்லை என்று சொல்லப்படுமேயானால், அவர்களுக்கு அவசர நிவாரணம்
அளிக்கும் வகையில் அந்த விழல்களை வைத்தாவது வீடுகள் கட்டிக்
கொடுக்கும் திட்டத்தை இந்த ஆண்டு இறுதியிலே மேற்கொள்ள வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வடலூரிலுள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்,
மற்றும் இதர காரியங்களில் ஈடுபடமாட்டார்கள். நாங்கள் பக்கத்தில் இருப்
பதனால், நாங்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னால், அதை ஏற்றுக்
கொள்ளக்கூடியவர்கள். எப்படிப்பட்ட பிரச்னையானாலும், சர்க்காரும் நாங்
களும் தலையிட்டுத் தீர்த்து வைக்கிறோம். நீங்கள் முதலாளிகளுடன்
சண்டை சச்சரவுகள் போடக்கூடாது என்று சொல்லி வருகிறோம். "நீங்
கள் உணர்ச்சி வேகத்தில் ஒன்றும் செய்துவிடக்கூடாது, வேலை நிறுத்தம்
ஏற்பட்டால் அதனால் நாட்டிற்கும் நன்மையல்ல, நாட்டிற்குக் கிடைக்கும்
வருவாயோடு அல்லாமல் உங்களுக்குக் கிடைக்கும் வருவாயும் பாதிக்
கப்படும்" என்ற கருத்தைச் சொல்லி, அவர்களுக்கு நல்ல புத்திமதி
சொல்லி வருகிறோம்.

அப்படிச் சொல்லியும் கூட இன்னும் உணர்ச்சி தணியாமல் இருப்
பதற்குக் காரணம் என்ன என்று ஆராயவேண்டும். இன்றைக்கு அங்கே
தஞ்சாவூர், திருச்சி, ராமநாதபுரம் முதலிய மாவட்டங்களிலிருந்து. . .



**திரு. ஆ. துரையரசன் :** சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், 10-30 a.m.
சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த கிராண்டு பற்றி விவாதம் நடக்கும்போது
இல்லாமல் இருக்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** வேறு முக்கியமான வேலை இருப்பதால்,
சொல்லிவிட்டுத்தான் போயிருக்கிறார்கள். மற்ற அமைச்சர்கள் இங்கே இருக்
கிறார்கள்.

**கனம் திரு. வெ. ராமையா :** அவர்களுக்குப் பதிலாகத்தான் நாங்கள்
இங்கே உட்கார்ந்து இருக்கிறோம்.

**திரு. நா. இராசாங்கம் :** ஆகவே அரசாங்கம் வீடு கட்டும் திட்டத்தை
தொழிலாளிகளுடைய பாதுகாப்புக்காக செய்ய வேண்டும். விருத்தாசலத்
தில் உள்ள சிராமிக் செண்டரிலே அலவன்ஸ் தகராறு முதலியவை
இருந்தும் கூட வேலை நிறுத்தம் போன்ற காரியங்களை அவர்கள் செய்ய
வேண்டாம் என்று நாங்கள் சொன்னதன்பேரில் அவர்கள் நல்லபடியாக
வேலை செய்கிறார்கள். இந்த சிராமிக் செண்டரிலும் சரி, நெய்வேலி
யிலும், சேஷசாயி தொழிற்சாலையிலும் தொழிலாளிகளுக்கு வீட்டு
வசதி அளிப்பது, சம்பள உயர்வு கொடுப்பது, அலவன்ஸ் கொடுப்பது,
முதலிய பிரச்னைகள் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கிறது.

அதனால் அவர்கள் வாழ்க்கைத்தரம் குறைகிறது. அதிலே அரசாங்கம்
நேரடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

இன்றைக்கு நாம் தொழில்களுக்கு நம்பி இருப்பது மின்சாரத்தை.
கனரகத் தொழிலானாலும் அல்லது குடிசைத் தொழிலாக இருந்தாலும்
அல்லது விவசாயத் தொழிலாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும்
மின்சாரமே இன்றியமையாத துறையாக இருக்கிறது. அந்தத் துறையில்
சில தொழிலாளிகளை 3 மாத காலமாக வேலை இல்லாமல் நிறுத்தி
வைத்திருக்கிறார்கள். காரணம் நிதி சரியில்லை என்று சொல்லப்படுகிறது.
நிதி பெருக வேண்டும் என்று திட்டம் போட்டு விட்டு நிதி இல்லை
என்று தொழிலாளிகள் குடும்பம் கஷ்டப்படச் செய்வது சரியாகாது.
ஆகவே அதற்கு வேறு முறைகளைக் கையாண்டு வேலையிலிருந்து
நிறுத்தப்பட்டவர்களை மறுபடியும் சேர்த்து அந்தக் குடும்பங்களுக்கு
பரிகாரம் செய்ய வேண்டும் என்று கேட்டு என் உரையை
முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. பி. பழனிசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
இந்த மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகி
றேன். தொழிலாளிகள் சம்பந்தமாக நம்முடைய நாட்டிலே பல சட்
டங்களை உருவாக்கி தொழிலாளிகளுடைய பிரச்னைகளைத் தீர்த்திருக்கிறோம்.
அந்த வகையில் யாரும் குறை சொல்ல முடியாது. இருந்தாலும் கூட
நம் நாட்டில் தொழில் வளர்ச்சி பெருகப் பெருக மக்களுக்கு செய்ய
வேண்டிய கடமைகளை பொறுப்புடன் செய்ய அரசாங்கம் நடவடிக்கை
எடுத்துக்கொண்டு வருகிறது. கோவையிலே ஏறத்தாழ 80 ஆலைகள்.
50, 60 பெரிய சிறிய தொழிற்சாலைகளும் அமைந்து இருக்கின்றன.
இந்த மில்களில் தொழிலாளிகளுக்கு பேஸிக் சம்பளத்தை நிர்ணயித்
திருக்கிறோம். அலவன்சை வாழ்க்கைப் புள்ளியின் அடிப்படையில்
கொடுத்து வருகிறோம். நமது இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட் தொழிலாளி
களுக்கு ஒரு வேஜ் போர்ட் நிர்ணயம் செய்து அந்த அடிப்படையில்
முடிவு எடுக்கவில்லை. இன்றைக்கு விலைவாசி ஏறிக் கொண்டே இருக்கும்
நிலைமையில் அவர்களுக்கு வாழ்க்கை நடத்துவது கஷ்டமாக இருப்பதால்
உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்ளுகிறேன். சில இண்டஸ்ட்ரீஸ்களிலே தொழிலாளிகளுக்கு
போனஸ் கொடுக்கிறார்கள். போனஸ் சம்பந்தமாக ஒரு உறுதியான முடிவு
எடுக்கப்படும் வரை அவர்களுக்கு இண்டரிம் ஆக ஏதாவது ஒரு
பகுதியை கொடுத்தால் சௌகரியமாக இருக்கும் என்று சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். சிலரை ஒரு மாதம் இரண்டு மாதத்திற்கு

வேலையில் வைத்துக்கொண்டு பின்பு நிறுத்தி விடுகிறார்கள். அவர் களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அவர்கள் முதலில் எவ்வளவு நாள் வேலை செய்கிறார்களோ, அதற்குத் தக்கப்படி பின்னால் காலி வரும்போது அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். முத லாளிகள் தங்கள் இஷ்டம்போல் இந்த ஆளை விட்டுவிட்டு வேறு ஆளை எடுக்கலாம் என்ற நிலைமை மாற வேண்டும். டெம்பரரிக்காக ஒரு ரிஜிஸ் டரை வைத்து தொழிலாளி எவ்வளவு நாள் வேலை செய்த பிறகு வேலையில் இருந்து நீக்கப்படுகிறாரோ அந்தக்கணக்குப்படி பின்னால் மற்றொரு தொழிலாளியை எடுக்காமல் பாதிக்கப்பட்ட தொழிலாளிக்கே பாதுகாப்புக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

நமது சர்க்காரிலே இண்டஸ்ட்ரியல் காலனிகள் கட்டிக் கொடுக்கிறோம். ஒரு ஆலையிலே சில அரிஜனங்கள் வேலை செய்கிறார்கள் என்றால் காலனி கட்டிக்கொடுக்கும்போது அரிஜனங்களுக்கு என்று ஒரு பர்ஸன்டேஜ் கொடுப்பது கிடையாது. இந்தக் காரியத்தை சர்க்கார் கவனித்து ஒரு 15 அல்லது 20 பர்ஸண்டு அரிஜனங்களுக்கு என்று கொடுக்க சட்டம் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோவையிலே ஏற்கெனவே ஒரு இடத்தில் அரிஜனங்கள் குடியிருக் கிறார்கள். அதே இடத்தில் ஒரு மில்லில் வேலை செய்கிறவர்களுக்காக காலனி கட்ட நிலம் அக்வயர் செய்யப்படுகிறது. பின்னால் காலனி கட்டியபிறகு ஏற்கெனவே குடியிருந்த அரிஜன மக்களுக்கு அங்கே இருக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதை மாற்றி ஏற்கெனவே அந்த இடத்தில் இருந்த ஆலைத்தொழிலாளர்கள் அப்பேர்ப்பட்ட அரிஜனங் களுக்கு ப்ர.·.பரன்ஸ் கொடுக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

குறிப்பாக கோவையிலே மத்திய சர்க்கார் ஒரு பிரஸ் ஏற்படுத்தியிருக் கிறார்கள். அந்த பிரஸ்ஸிலே, 2,000 அல்லது 3,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த மாதிரி இடங் களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அரிஜனங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு வேலை வாய்ப்பு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். முன்பு எல்லாம் வேலை வேண்டும் என்றால் முதலாளிகள் தொழிலாளிகள் எல்லோரையும் அமர்த்துவார்கள். ஆனால் இப்பொழுது செட்டியார், செட்டியாரையும், கௌண்டர் கௌண்டரையும்தான் வேலைக்கு வைத்துக் கொள்ளுவதாக புகார்கள் வருகின்றன. அதனால் மற்றவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. இன்றைக்கு தொழிற்சாலைகளில் அரசாங்கம் லட்சக் கணக்கில் பணம் போடுகிறார்கள். ஆகவே அம்மாதிரித் தொழில்களில் இத்தனை பர்ஸண்டேஜ் அரிஜனங்கள் இருக்க வேண்டும் என்று போட்டுவிட்டால் அரிஜனங்களுக்கு பாதுகாப்பு அளித்ததாக இருக்கும். அன்றைக்கு சேலம் சின்னையா அவர்கள், பறி தைப்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு அவர்களுக்கு அந்த வேலை இல்லை. ஆகவே ஒரு மில்லில் இத்தனை பர்ஸண்டேஜ் அப்படிப்பட்டவர்கள் இருக்க வேண்டும் என்று விதி போடக் கூடாதா என்று கேட்கிறேன். அம்மாதிரி மில்களில் அரிஜன மக்களும், தாழ்த்தப்பட்டவர் களும் அமர்த்தப்பட வேண்டும் என்று சட்டம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. முனு. ஆதி :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழிற்சாலைகள் உட்பட்ட தொழிலாளர் மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிலாளர்களுடைய பிரச்னை நாட்டிலே எல்லோருடைய கவனத் தையும் ஈர்ப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய குறைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அவர் களுக்காக என்னதான் பாதுகாப்புச் சட்டம் கொடுத்திருந்தாலும், அதிலி ருந்து முதலாளிகள் தப்பித்துக் கொள்வதற்குச் சாதகமாகத்தான் இருக் கிறதே தவிர, உண்மையிலேயே தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு ...





நிரந்தர வாழ்வு தரக்கூடியதாக இருக்கிறதா என்று பார்த்தால் நிச் சயமாக இல்லை. தொழிலாளிகள் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற போது தங்களுக்கென நல்ல பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா என்று பார்க் கும்போது, தொழிற்சங்கங்களை நடத்துகிற எங்களைப் போன்றவர்களுக்கு அந்தச் சிக்கல்கள் நன்றாகப் புரிகின்றன. தொழிலாளர்களை அதிகமாக வைத்தால், தொழிற் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டியிருக்கும். அதிலி ருந்து தப்பித்துக்கொள்வதற்காக அங்கேயே ஒரு கண்டிராக்டரை அமைத்து அவர் மூலமாகத் தொழிலாளர்களை வைத்துக் காரியங்களைச் சாதித்துக் கொண்டு, தொழிற் சட்டங்களிலிருந்து அவர்களுக்கு விதி விலக்கு அளிக் கக்கூடிய முறையில் கம்பெனி முதலாளிகள் முனைந்து கொண்டிருக் கிறார்கள். கடந்த ஆண்டு நான் பேசும்போது, தொழில் அமைச்சர் கூட இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். "இப்படி கம்பெனிக்காரர்கள் காண்டிராக்ட் பேஸிஸில் விட்டு, தொழிற் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடிய செய்திகள் ஏராளம் இருக்கின்றன. அதைக் கட்டுப் படுத்தி தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது நியாயம் தான்" என்று பேசியிருக்கிறார்கள். ஆனாலும், முதலாளிகள் அதுபோன்ற நடவடிக்கைகளிலே இறங்கிக்கொண்டு ஐந்தாண்டு, ஆறாண்டுகள் தொடர்ந்து பணியாற்றினாலும் ஆறு மாத காலம் ஆன பிறகு ஒரு வாரம், இரண்டு வாரம் நிறுத்திவிட்டு, மறுபடியும் புது முறையாக வேலைக்கு வைத்துக் கொள்கிறார்கள். அப்பொழுது சர்வீஸ் இல்லாத காரணத்தால் தொழிற் சட்டத்திலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்வதற்காக இப்படிச் செய்வதை நான் பல முறை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தும், அரசாங்கம் அந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்புத் தரவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எல்லோருக்கும் சம்பளத்தை நாம் நிர்ணயம் செய்திருக்கிறபோது, சிமெண்ட் வைப் செய்கின்ற கம்பெனிகளில் வேலை செய்கின்ற நூற்றுக் கணக்கான தொழிலாளர்களுக்கு இன்றைக்குப் பாதுகாப்பு இல்லை. அவர் களுக்கு கம்பெனிக்காரர்கள் ஒரு ரூபாய் ஒரு நாளைக்குக் கூலி என்றும், அலவன்ஸ் மாதத்திற்கு 16 ரூபாய் என்றும் ஆக மொத்தம் மாதம் 46 ரூபாய் அளவுக்கு, விலைவாசி உயர்ந்திருக்கும் இந்த நேரத்தில், கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. முத லாளிகளைப் பார்த்து நாங்கள் அணுகிக் கேட்கும்போது, "நாங்கள் இவ் வளவுதான் தர முடியும், எங்களுக்கு தொழிற் சட்ட அடிப்படையிலே சர்க்காரும் சம்பளம் நிர்ணயம் செய்யவில்லை" என்று முதலாளிகள் சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். பிறகு, தொழில் அதிகாரியை அணுகி சமரசம் பேசும்போது, அவர்களும் ஒரு அளவில்தான், ஏதோ ஒரு முறையை வைத்துத்தான் சம்பளம் நிர்ணயம் செய்கிறார்களே தவிர, சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்ட சம்பள விகிதத்தை நாங்கள் வலியுறுத்த முடியவில்லை. அமிஞ்சிக்கரையிலும், திருவள்ளூரிலும் இத்தகைய கம் பெனிகளில் வேலை செய்யும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இருக் கிறார்கள். அவர்களுடைய நிலைமையை அரசாங்கம் தீர ஆலோசித்து, அவர்களுக்கு சம்பள நிர்ணயம் செய்யவேண்டுமென்று நான் பணிவன் போடு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் பார்க்கின்றபோது, ஊராட்சி மன்றங்களில் வேலை செய்கின்ற நான்காம்தர சிப்பந்திகளுக்கிடையே சம்பள விகிதத்தில் இரண்டுவிதமான பேதங்களைக் காட்டுகிறோம். நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு ரூ. 70 அல்லது ரூ. 75 சம்பளம் கொடுக் கப்படுகிறது. ஆனால், அதே பஞ்சாயத்தில் வேலை செய்கின்ற தோட்டத் தொழிலாளிகளுக்கு 55 ரூபாய்தான் சம்பளம் என்று இருக்கிறது. இந்த வித்தியாசம் ஏன் என்று பல முறை இங்கே கேட்டதற்கு இது வரை சரியாக நிர்ணயம் செய்ய முடியவில்லை. ஒரே இடத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர் ஒருவர் 55 ரூபாய் பெறுகிறார், மற்றவர் 75 ரூபாய் பெறுகிறார். எல்லாத் தொழிலாளிகளுக்கும் சமமான பாதுகாப்பு தரப்படுகிறதா என்று பார்த்தால் இல்லவே இல்லை. இதுபற்றிப் பல பஞ்சாயத்துக்கள் தீர்மானம் போட்டுப் போட்டு அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வந்திருக்கின்றன. ஆகவே, அப்படி பேதம் உள்ள

சம்பளம் கொடுக்காமல், நான்காம்தரச் சிப்பந்திகள் எல்லோருக்கும்,
தோட்டத் தொழிலாளியாக இருந்தாலும் சரி, நகர சுத்தித் தொழிலாளி
யாக இருந்தாலும் சரி, சம்பளத்தை ஒருமுகமாக நிர்ணயிக்கவேண்டும்
என்று நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

வசதிகளை ஊராட்சி மன்றங்களும், நகர மன்றங்களும் செய்து கொடுத்
தாலும்கூட, 'சட்டத்திலே இடம் இல்லை' என்று அதிகாரிகள் சொல்
கிறார்கள். இப்படிப்பட்ட சின்னஞ்சிறு குறைபாடு இருக்கிறது. வரி வசூல்
செய்கின்ற தொழிலாளர்கள் வெயில் காலத்திலே தங்களுடைய பணிகளை
நல்ல முறையில் செய்வதற்கு, அவர்களுக்குப் பாத அணிகளும், குடையும்
கொடுத்தால், அவர்கள் வரி வசூல் செய்வதில் அதிகக் கவனம் செலுத்த
முடியும். 'அவர்களே வாங்கிக்கொள்ளக் கூடாதா?' என்று சிலர்
கேட்கலாம். ஆனால், குறைந்த சம்பளம் பெறும் அத்தகையவர்கள்
தாங்களே அவைகளை வாங்கிக்கொள்ளச் சக்தி இல்லாமலிருக்கிறார்கள்.
அதையொட்டி, ஊராட்சி மன்றங்கள் தீர்மானம் போட்டு, பாத அணி
களும், குடைகளும் ஊராட்சி மன்றத்தின் செலவிலேயே கொடுக்கலாம்
என்று சொல்லியிருந்தும், சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று அதி
காரிகள் கொடுக்காமல் நிறுத்தி விடுகிறார்கள். இந்தச் சின்னஞ்சிறு
வசதிகளைத் தொழிலாளர்களுக்குச் செய்வதற்கு அந்தந்த ஊராட்சி மன்றங்
கள் செலவினங்களுக்குப் பொறுப்பேற்கத் தயாராக இருக்கிறபோது,
அரசாங்கம் அதை அனுமதிக்க ஆவன செய்யவேண்டும். பில் கலெக்
டர்கள் இப்படி வெயிலிலும் மழையிலும் வேலை செய்ய வேண்டியிருப்
பதையொட்டி, அவர்களுக்குப் பாத அணிகள், குடைகள் வழங்க ஊராட்சி
மன்றங்கள் முன்வந்தால், அதை அனுமதிக்க ஆட்சேபணை இல்லை என்று
சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டால் நலமாக இருக்கும்
என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கம்பெனி துவக்கப்படுவதைப் பார்த்தால், குறிப்பாக செங்கற்பட்டு மாவட்
டம் தொழிற் துறையில் பின் தங்கியுள்ள இடமாகும். தொழில் அபி
விருத்தி இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்டுக்கொண்டு
வருகிறது. அப்படிப் புதிதாகத் துவக்கப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கும்
தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு நிறைய
நல்ல பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும். ஸ்டாண்டர்டு மோட்டார் கம்
பெனித் தொழிலாளர்கள் ஒரு தடவை தங்களுடைய கோரிக்கைகளுக்கு
நீண்ட நாட்களாகக் கேட்டுப் போராடிய காரணத்தால் ஆளுங்கட்சியின்
ஒத்துழைப்போடு அந்தச் சங்கத்தை நசுக்கியதோடு மட்டுமல்லாமல், நிரந்
தரமாக்கப்படாத தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டுத் திண்டாடிக் கொண்
டிருக்கிற நிலைமைகள் ஏராளமாக இருக்கின்றன என்பதை ஆதாரபூர்வ
மாக நான் எடுத்துச் சொல்லமுடியும். கம்பெனிகள் ஏராளமாக ஆரம்
பிக்கவேண்டும் என்பதில் உற்சாகம் காட்டக்கூடிய இந்த நேரத்தில்,
கம்பெனிகளை மூடும் அளவுக்கு முதலாளிகளுக்குத் தைரியம் வருமானால்
அதற்குக் காரணம், அரசாங்கத்தினிடமிருந்து கடுமையான உத்தரவு இல்
லாததுதான் என்பதை மறுக்க முடியாது. தொழிலாளர்கள் நியாயமான
கோரிக்கைகளைக் கேட்கும்போது, முதலாளிகள் தங்களுடைய சுய கௌரவத்
தைக் காப்பாற்றுவதற்காகவோ, அந்தஸ்தை நிலைநாட்டிக் கொள்வதற்
காகவோ 'முடியாது' என்று சொல்லி விடுகிறார்கள். சமரச முயற்சிக்குப்
பிறகு தொழிற் கோர்ட்டுக்குச் சென்று, கோர்ட்டின் தீர்ப்பைப் பெற்றும்,
அதை முதலாளிகள் அமுல் படுத்தாமல் இருக்கும்போது, நாங்கள்
வேலை நிறுத்தம் என்று கடைசி ஆயுதத்தைக் கையாளும்போது
"லாக்-ஔட்" என்று சொல்லிக் கம்பெனியை மூடிவிடுகிறார்கள். அந்த
இடத்தில்தான் கம்பெனி முதலாளிகளுக்குத் தைரியம் பிறக்கிறது.
அப்பொழுது அரசாங்கம் திட்டவட்டமான ஒரு நடவடிக்கை எடுக்க வேண்
டும். தொழில் நீதி மன்றத்திலே தீர்ப்பு பெற்றதற்குப் பின்னால், அதை
முதலாளிகள் அமுல்படுத்தவில்லையென்றால் அப்படிப்பட்ட கம்பெனியை
அரசாங்கம் எடுத்துக்கொண்டு தொழிலாளர்களையும் நிர்வாகஸ்தர்களையும்
வைத்துக் கூட்டுறவு கம்பெனியாக நடத்துவோம் அல்லது அரசாங்கமே
நடத்தும் என்ற வகையில் தைரியமாக ஒரு உத்தரவு போட்டுவிட்டால்,
எந்தக் கம்பெனியாக இருந்தாலும் "லாக்-ஔட்" செய்யத் தைரியம்





வராது. 'லாக்-ஔட்" செய்யப்பட்டு ஏராளமான கம்பெனிகள் இப்
பொழுது மூடப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலேகூட,
சென்ட்ரல் ஸயன்டிஃபிக் ஸப்ளைஸ் என்கிற கம்பெனி மூடப்பட்டு, இன்றைய
தினம் 120 தொழிலாளர்கள் வேலை இல்லாமல் திண்டாடிக்கொண்
டிருக்கிறார்கள். லாக்-ஔட் என்ற நிலைமை உருவாகாமல் தொழிலாளர்
களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு கொடுக்கக்கூடிய அளவுக்கு அரசாங்கம்
தீர ஆலோசனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ளுகின்றேன்.

கம்பெனிகள் புதிதாக ஆரம்பிக்கப்படும்போது, முதன் முதலில் அதி
காரிகளுக்குத்தான் சலுகை காட்டுகிறார்கள். அவர்களுக்குத்தான் க்வார்ட்
டர்ஸ் கட்டுகிறார்கள். தொழிலாளர்களுக்கு இடம் கொடுப்பது இல்லை.
அதிகாரிகள் அதிகச் சம்பளம் வாங்கக் கூடியவர்கள். பக்கத்திலே இருக்
கும் பங்களாக்களிலேகூட வாடகையிலே இருந்துகொண்டு அந்தக் கம்
பெனிக்கு வர முடியும். ஆனால், தொழிலாளர்களுக்கு க்வார்ட்டர்ஸ்
கட்டிக்கொடுக்காததால், எங்கெங்கேயோ வருவாய்க்கு ஏற்றவாறு வாட
கைக்கு இருந்துகொண்டு, மைல் கணக்கிலே நடந்து வந்து, கம்பெனி
யிலே வேலை செய்ய வேண்டியிருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது.
ஸர்ஜிகல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் கம்பெனி நந்தம்பாக்கத்தில் உருவாக்கிக்
கொண்டிருக்கிறோம். அங்கே அதிகாரிகளுக்குத்தான் க்வார்ட்டர்ஸ் கட்டப்படு
கின்றனவே தவிர, தொழிலாளர்களுக்கு இல்லை. தொழிற்சாலையில்
உள்ள அத்தனை தொழிலாளர்களுக்கும் ஒரேயடியாக வீடுகள் அமைத்துக்
கொடுக்க முடியாவிட்டாலும், 25, 30 சத விகிதத் தொழிலாளர்களுக்
காவது வீடு கட்டிக் கொடுத்திருந்தால் நன்றாக இருக்கும். அப்படிச்
செய்து கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, ரிக்ஷாத் தொழிலாளர்களைப் பற்றி எல்லோருமே பேசுகின்
றோம். ரிக்ஷாக்கள் தேவை இல்லைதான். மனிதன் மனிதனை வைத்து
இழுத்துக்கொண்டு போகத் தேவை இல்லை. அதை ஏற்றுக்கொள்ளக்
கூடாது என்று எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம். அந்தத் தொழில்
நடந்து கொண்டிருக்கிற வரையில், அத்தகைய தொழிலாளர்களுக்குப்
பாதுகாப்பு இருக்கிறதா என்று பார்த்தால், போலீஸ்காரர்களாலேகூட
அவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. போலீஸ்காரர்கள், தங்களுக்கு
மாதக் கடைசியில் வழக்குகள் கிடைக்கவில்லையென்றால், அவர்களுக்குத்
தாராளமாகக் கிடைக்கக் கூடியவர்கள் ரிக்ஷாத் தொழிலாளர்கள்தான்
பிடிபடுகிறார்கள். காரணம், அவர்கள் ரிக்ஷாக்களுக்கு விளக்கு இருந்
தாலும், இல்லாவிட்டாலும், அவர்கள் ரோடுகளிலே நடமாடுகிற தொழி
லாளர்கள். ப்ளாட்பாரங்களில் படுக்கிற தொழிலாளர்கள். அப்படிப்பட்ட
வர்களை வெகு சுலபமாகப் போலீஸ்காரர்கள் பிடித்து, வீண் வழக்குகளைப்
போட்டு, தங்கள் இலாகாவின் நல்ல பெயரைச் சம்பாதித்துக்கொள்
கிறார்கள். ஆகவே, ரிக்ஷாத் தொழிலாளர்களுக்கு போலீஸ்காரர்
அந்த அளவு தொல்லை கொடுக்காமல் இருக்க அரசாங்கம் கவனம்
செலுத்த வேண்டும்.

சினிமாத் தொழிலாளிகள் எவ்வளவோ வேதனைகளுக்கிடையிலே வேலை
செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு தர
வேண்டும் என்று இந்த அரசாங்கத்தை, உங்கள் மூலமாகக் கேட்டுக்
கொள்ளுகின்றேன். அங்கே ஆபத்தான நிலையில் அவர்கள் பணியாற்றிக்
கொண்டிருக்கிறார்கள். ஸ்க்ரீன் தள்ளுவதிலிருந்து, மின்சாரக் கம்பிகளை
இணைப்பதிலிருந்து பல வேலைகளைச் செய்வதால் விபத்துக்கு உள்ளாகக்
கூடிய ஆபத்தான கட்டத்தில் அவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்
களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் முறையாகக் கொடுக்கப்படவேண்டும். வேலையை
விட்டுப் போகும்போது, மொத்தப் பணம் தரப்படவேண்டும். அவர்கள்
நான்கைந்து ஆண்டுகள் வேலை செய்திருந்தாலும் திடீர் என்று வேலையை
விட்டு நிறுத்தப்படுகிறார்கள். அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு கிடையாது.
இதையும் கவனிக்க வேண்டும்.

கூட்டுறவு முறையில் டாக்ஸிகள் வாங்கி விடுவதற்கான ஒரு புதிய
திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். இது எல்லோரும் வரவேற்கக்கூடி
யதுதான். ஆனால், இதிலே திணிக்கக்கூடிய ஒரு முறை இருப்பது எல்லோ

ராலும் கண்டிக்கத்தக்கது என்பதை யாரும் மறுக்க முடியாது. டாக்ஸி
கூட்டுறவு முறையில் வாங்க ஒருவர் தன்னுடைய பங்காகச் செலுத்த
250 ரூபாய் தேவை என்று சொல்கிறார்கள். அவ்வளவு அதிகமாகத்
தொகை நிர்ணயிக்கப்பட வேண்டியதில்லை. டாக்ஸி ட்ரைவர்கள் அவ்
வளவு அதிகத் தொகை கொடுக்க முடியாது. ஒரு காங்கிரஸ்காரர் மூல
மாகத்தான் உதவியைப் பெறவேண்டும், இல்லாவிட்டால் பணம் கிடையாது
என்று தள்ளிவிடுவதாக இருக்கிறது. கட்சி நோக்கத்தோடு கூட்டுறவு
ஆரம்பிப்பது தவறாகும். அப்படி ஆரம்பித்தால் டாக்ஸி கூட்டுறவு சங்
கம் நன்றாக இயங்காது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு
வர விரும்புகிறேன். அவர் இல்லையென்றால் அந்தக் கூட்டுறவு முடி
யாது என்பதில் விவாதம் நடந்து கொண்டுவருவதாகவும் எனக்குத்
தெரிகிறது. ஆகவே, அந்த அடிப்படையில் அமைக்கக் கூடாது என்றும்,
யாராயிருந்தாலும் கூட்டுறவு முறையில் 250 ரூபாய் கொடுத்தால் அவரை
சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை இருக்க வேண்டும். தலை
வராகத் தேர்ந்தெடுக்கக் கூடிய உரிமை எல்லோருக்கும் இருக்க வேண்
டும். ஒரு குறிப்பிட்டவர்தான் தலைவராக இருக்க வேண்டும் என்று
நிர்ப்பந்திக்கக் கூடாது என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளு
கின்றேன். ஷாப் ஆக்ட் இருக்கிறதே தவிர அதனால் எவ்வித பயனும்
அங்கே வேலை செய்கிற தொழிலாளர்களுக்குக் கிடையாது. இன்றைய தினம்
அந்த ஆக்ட்டினால் பலன் இல்லாமல் போய்விட்டது என்பதை நாம் ஒப்புக்
கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. காரணம், அரசாங்கம் முதலாளி
களுக்குத்தான் ஆதரவு தருகிறது. ஆகவே ஒரு முதலாளியிடம் வேலை
செய்யும் எந்தத் தொழிலாளியும் அந்த முதலாளியை எதிர்த்து நிற்க
விரும்பவில்லை. யாராவது எதிர்த்தாலும் உடனே அவன் பலி வாங்கப்
படுகிறான். கடைகளில் உள்ள சிப்பந்திகள் ஒன்று கூடினால் உடனே கடை
முதலாளிகள் ஒன்று கூடிவிடுகிறார்கள். ஆகவே ஷாப் தொழிலாளர்கள்
ஒன்று சேர முடியவில்லை. தனியாகத்தான் வழக்குப் போடுவதாக
இருந்தாலும் போட வேண்டியதாக இருக்கிறது. அப்படி இன்றி சர்க்கார்
தொழிலாளர்களுக்கு ஆதரவு தரவேண்டும், ஷாப் ஆக்ட் பிரகாரம்
தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு தரவேண்டும், குறிப்பாக பஞ்சாயத்துகளைப்
பொறுத்த வரையில் அங்கே வேலை செய்கிற சிப்பந்திகளிடத்தில் ஒரே
விதமான சம்பள விகிதம் இருக்கவேண்டும் என்று சொல்லி முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.

***திரு. நா. இராசாங்கம் :** தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்
தின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன்.
தொழிலாளர்களுடைய நலனுக்காகப் போடப்பட்டிருக்கிற சட்டங்கள் அத்
தனையும் வரவேற்கத்தக்கது. ஆனால் இங்கே நிறைவேற்றப்படுகிற
சட்டங்கள் அனைத்தையும் பெரிய பெரிய ஹைவேவ்ஸ் டீஎஸ்டேட் முதலாளிகள்
துச்சமாக மதித்து தூக்கி எறிந்து விடுகிறார்கள் என்பதை நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். இது கனம் அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத்
தெரியும். மிகவும் பலம் பொருந்திய மேலை நாட்டுக்காரர்கள் அந்த
எஸ்டேட்டுகளில் வேலை செய்கிறார்கள். அவர்களிடத்திலே ஆதித் தமிழர்
களும், மற்றவர்களும் எவ்வித வசதியையும் பெறாது அடிமையாக வேலை
செய்ய வேண்டிய நிலையேதான் நீடிக்கிறது. ஹைவேவ்ஸ் டீஎஸ்டேட்டில்
மின்சார வசதி இருந்தும் கூலி வேலை செய்கிற தொழிலாளர்கள் வாழக்
கூடிய பகுதிக்கு இன்னும் மின்சாரம் அளிக்கப்படவில்லை. ஏன் அப்படி
மின்சார வசதி அளிக்கப்படாமல் இருக்கிறது என்று கேட்டால் அது டவுன்
ஷிப்பாகப் போகிறது, ஆகவே அந்த வசதியைச் செய்து தருவது கலெக்டர்
பொறுப்பு என்கிறார்கள். இவர்களிடம் போய்க் கேட்டால் அது டவுன்
ஷிப்பாக ஆகட்டும் பார்க்கலாம் என்கிறார்கள். ஆக இரண்டு பேர்களும்
பொறுப்பைத் தட்டிக் கழிக்கிற நிலையில் தொழிலாளர்கள் மின்சார வசதி
இன்றி தவிக்கிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஹைவேவ்ஸ் டீ
எஸ்டேட்டுகளுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுவிட்டது.
ஆனால் தொழிலாளர்களுடைய பகுதிக்கு மின்சாரம் வரவில்லை. "மின்
சாரம் இல்லாவிட்டால் என்ன ? என்ன பெரிய ஆபத்து வந்துவிடப்
போகிறது ?" என்று சொல்ல முடியாது. வெண்கலக் கடையில் யானை
நுழைந்ததுபோல என்று கேள்விதான் பட்டிருக்கிறோம். ஆனால் இந்த்



மலைப் பிரதேசங்களில் யானைகளே கூட்டம் கூட்டமாகத் தொழிலாளர்கள்
வசிக்கக் கூடிய பகுதிகளுக்கு வந்து விடுகின்றன. வீடுகளுக்குள் நுழைந்து
விடுகின்றன. (கனம் திரு. வெ. ராமையா : வீடுகளுக்குள் யானை நுழைந்து
விடுகிறதா ?) யானை நுழையக் கூடிய அளவுக்குப் பெரிய வீடுகளாக
நாம் தொழிலாளர்களுக்குக் கட்டிக்கொடுக்கவில்லை. வீட்டுக்குள் கைகளைத்
தான் நீட்டுகின்றன. இதுபற்றியெல்லாம் மராமத்து இலாகா
அமைச்சருக்குப் பல விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே
உடனடியாக அந்தத் தொழிலாளர்கள் வாழக்கூடிய பகுதிகளுக்கு
மின்சார விளக்குகள் போட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தோட்டத் தொழிலாளர்களில் பலர் வைத்திய வசதியின்றி
கஷ்டப்படுகிறார்கள். பிரசவ காலங்களில் தாய்மார்கள் படுகிற கஷ்டம்
கொஞ்ச நஞ்சமல்ல. மலை அடிவாரத்திற்கு வரவேண்டியதாக இருக்கிறது
வைத்திய வசதிக்காக. அது இன்னும் பஞ்சாயத்திலும் சேரவில்லை,
டவுன்ஷிப்பிலும் சேரவில்லை. ஆகவே யாருக்கும் பொறுப்பு இல்லாத
நிலையில் அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கே ஒரே
ஒரு பள்ளிக்கூடம்தான் இருக்கிறது. ஒன்று முதல் ஐந்து வரை வகுப்பு
கள் இருக்கின்றன எல்லாம் ஒரே வகுப்பாக. ஒன்றாவது பையன் இரண்டும்
இரண்டும் நான்கு என்றுதான் படிக்கிறான். ஐந்தாவது பையனும்
இரண்டும் இரண்டும் நான்கு என்றுதான் படிக்கிறான். இப்படி தனித்தனி
வகுப்பாக தட்டி அடித்து பிரிக்கப்படாமல் தனித்தனியாக ஆசிரியர் போட்டு
நடத்தப்படாமல் ஒன்று முதல் ஐந்து வரை எல்லா வகுப்பு மாணவர்களும்
ஒரே சோஷலிஸமாக நடத்தப்படுகிறார்கள். ஆகவே அந்த வகுப்புகளைப்
பிரித்து ஒழுங்காக நடக்க வழிவகை செய்ய வேண்டும்.

துவைத்த
இன்னும் சலவைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில்
துணிகளை உலர்த்த இடமின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சமீபத்தில்
கூட உத்தமபாளையம் சலவைத் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்வதாக
இருந்தார்கள். கலெக்டர் அவர்களைக் கூப்பிட்டு தன்னால் சட்டத்திற்கு
உட்பட்டு செய்யக்கூடிய வசதிகளை எல்லாம் செய்து தருவதாகவும்,
ஸ்ட்ரைக் செய்யவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்கள். ஸ்ட்ரைக்
செய்வது நிறுத்தப்பட்டது. ஆனால் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள்
இன்னும் நிவர்த்தி செய்யப்படவில்லை. சர்க்கார் புறம்போக்கு நிலங்களில்
அவர்கள் துணிகூட உலர்த்த முடியவில்லை. ஒரு பக்கம் இந்தத் தொல்லை.
மற்றொரு பக்கம் உள்ளூர் நிலச்சுவான்தார்கள் அழுக்கு எடுக்கவில்லை
என்று கோபித்துக்கொள்கிறார்கள். இப்படி இரண்டு பக்கத்திலும் சிக்கித்
தவிப்பவர்கள் சலவைத் தொழிலாளர்கள். அவர்களுடைய விண்ணப்பங்
களைப் பரிசீலித்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு டோபி கானா அங்கங்கே
கட்டித் தரப்பட வேண்டும். அங்கங்கே வந்து கல் நாட்டிப் போகிறார்கள்.
அஸ்திவாரக் கல்லைப் போட்டுவிட்டுப் போகிறார்கள். அவர்களுக்கு டோபி
கானா கட்டித் தரப்படும் என்று ஆசை வார்த்தை கூறப்படுகிறது. ஆனால் 11-00 a.m.
நடைமுறையில் அவை கட்டித் தரப்படாமல் காலதாமதமாகிறது. அவர்கள்
வேலை நிறுத்தத்தில் இறங்கிவிடுவதற்கு முன்பு அவர்களுடைய நியாயமான
கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச்
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்
களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக்
கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய குறை
பாடுகள் பற்றிப் பேச ஆசைப்படுகிறேன். ஏற்காடு சேர்வராயன் மலையில்
வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு பெண்களுக்கு நாள் ஒன்றுக்கு
12 அணா வீதமும், ஆண்களுக்கு $1\frac{1}{4}$ ரூபாய் வீதமும் கொடுக்கப்படுகிறது.
அதை வைத்துக்கொண்டு அவர்கள் தங்கள் குழந்தை குட்டிகளைக்
காப்பாற்ற முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, பெண்களாக
இருந்தால் $1\frac{1}{4}$ ரூபாயும், ஆண்களாக இருந்தால் 2 ரூபாயும் கூலி
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு வேலை
செய்பவர்களில் பெரும்பாலோர் பின்தங்கிய வகுப்பு மக்கள்,

மலைஜாதியினர், ஹரிஜன மக்கள், அருந்ததி மக்கள் ஆகியவர்கள்தான். அந்த ஏழை மக்களுக்கெல்லாம் அதிகக் கூலி கிடைப்பதற்காக ஏற்பாட் டைச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு வேலை செய்யக்கூடியவர்கள் வீட்டு வசதி இல்லாமல் சிறு சிறு குடிசை வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழ்ந்து வருகிருர்கள். இப் போது டில்லி மந்திரியாக இருக்கும் கனம் எஸ். வி. ராமசாமி அவர்கள் தேர்தல் சமயத்தில் அந்த மலைப் பகுதிக்கு வந்திருந்தார்கள். நானும் கூடச் சென்றேன். அப்போது அவர்களிடமும் அந்த ஏழை மக்கள் தங்களுக்கு காலனி கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண் டார்கள். "நீங்கள் எல்லோரும் காளை மாட்டுச் சின்னத்தில் வோட்டுப் போட்டால் உங்களுக்குக் காலனி அமைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்" என்று அவர் சொன்னுர். அதேபோல் அவர்கள் எல்லோரும் காளை மாட்டுச் சின்னத்தில் வோட்டுப் போட்டார்கள். திரு. எஸ். வி. ராமசாமி மந்திரியாக இன்று டில்லியில் இருக்கிருர். ஆனுல் இன்னும் காலனி கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படாமல் இருக்கிறது. நான் அங்கே போனுல் "நீதானே அவரை இங்கே கூட்டிக் கொண்டு வந்தாய்? இன்னும் எங்களுக்குக் காலனி கட்டிக் கொடுக்கவில்லையே" என்று கேட்கிருர்கள். "நான் அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன்; சீக்கிரத்தில் கட்டிக் கொடுப்பார்கள்" என்று சொல்லி விட்டு வந்தேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் தயவுசெய்து உடனடியாக அவர்களுக்குக் காலனி கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மக்கள் இப்போது தங்கள் குடிசைகளை போதம்புல், கோணங்கி, கட்டளை நார் ஆகியவற்றைக் கொண்டு போட்டுக் கொண்டிருக்கிருர்கள். பஞ்சாயத்து யூனியனிலிருந்து அந்தக் குடிசைகளுக்கும் எட்டணு, ஒரு ரூபாய் என்று வரி வசூலிக்கிருர்கள். கல் கட்டிடத்திற்கும் அதே வரி யைத்தான் வசூலிக்கிருர்கள். அந்த மக்கள் "இவ்வாறு எங்களிடம் இருந்து வரி வசூலித்தால் எப்படி ஜீவிக்க முடியும்?" என்று கேட்கிருர் கள். அவர்களுக்குக் காலனி கட்டிக் கொடுத்த பிறகு வேண்டுமாணுல் வரியை வசூலித்துக் கொள்ளுங்கள். இப்போது உள்ள அந்தக் குடிசை களுக்கு வரியிலிருந்து விலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(திரு. டி. கார்ச்சா கவுடர் தலைமை.)

* **திரு. ஏ. எஸ். தக்ஷிணுமூர்த்தி கவுண்டர் :** கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னுலே வைக்கப்பட்டிருக்கின்ற தொழில்கள், தொழிலாளர் நலன் பற்றிய மானியக் கோரிக்கையை வரவேற்று சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். தொழிலும் தொழிலாளரும் உட லும் உயிரும் போல தொடர்புடையவர்கள் என்று கூறப்படுகின்றது. உடலும் உயிரும் என்ற நிலைமையோடு கூட அதைப் படைக்கின்ற ஒரு சக்தி வேண்டுமென்பது உண்மையான, பிரத்தியட்சமான ஒரு கருத்து. குழந்தை ஒன்று இருந்தால் அதைப் பெற்றவர்கள் இருக்க வேண்டும். அதைப்போல தொழிலும் தொழிலாளர்களும் இருப்பது உண்மையாணுல் அதற்குத் தோற்றுவாயாக இருக்கின்ற மூலதனம் அல்லது முதல் போடு கின்றவர்கள் இருக்க வேண்டும். ஆகையிணுலேதான் தொழில் என்று சொல்லும்போது மூன்று விதமான இன்றியமையாத அம்சங்கள் இருக் கின்றன. ஒன்று தொழில்; இரண்டு தொழிலாளர்கள்; மூன்ருவது இந்த இரண்டுக்கும் அடிப்படையான மூலதனம் அல்லது மூலதனம் போடுகின்றவர்கள். ஆக இந்த மூன்று அம்சங்களும் இருக்க வேண்டும். அதிலே ஒரு தொழிலுக்கு முக்கியமாக வேண்டிய மூலதனத்தைத் திரட்டிக் கொண்டு தொழிலை ஆரம்பிப்பது நல்லது.

"குன்றேறி யானைப்போர் கண்டற்ருல் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை."

என்று வள்ளுவர் கூறுகின்ருர். அதுவன்றி அந்தத் தொழிலுக்கு உண்டான மூலதனத்தைத் திரட்டாமல் ஒரு தொழிலை ஆரம்பித்தால்





"உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்."

என்ற வள்ளுவர் கூற்றுக்கு இணங்க இடைநிலையிலேயே அந்தத் தொழிலை விட்டு விட்டு, போட்ட முதலையும் விட்டு ஓடவேண்டிய நிலையும் ஏற்படும் என்ற நிலையும் இருக்கிறது. ஆகையிணுலேதான் தொழிலுக்கும் தொழி லாளர்களுக்கும் தோற்றுவாயாக இருக்கும் முதலையும், முதலாளிகளையும் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை, பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதற்கு வேண்டிய ஒரு சூழ்நிலையை எவ்வாறு அமைப்பது என்று சொன்ணுல்; போடுகின்ற முதல் அழிபடாது என்ற நிலைமை அவர்களுக்கு இருக்க வேண்டும். ஸ்திர உணர்வு அவர்களுக்கு வேண்டும். அடுத்தது போடுகின்ற முதலுக்கு நியாயமான அளவு லாபம் பெற வேண்டுமென்று எதிர்பார்க்கக்கூடிய ஒரு நிலைமையும் உண்மை. தனியார் துறையாக இருந்தாலும், அரசாங்கத் துறையாக இருந்தாலும், இந்த ஒரு கருத்து அமையும். உதாரணமாகப் பார்ப்போமாணுல் சென்னை மாநகரத் திலே அரசினர் துறையிலே நடத்தப்படுகிற பஸ் போக்குவரத்தானது லாபகரமாக இல்லை; இந்த ஆண்டிலே நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையி ணுலே அந்த நஷ்டத்தை ஈடுகட்ட சிறிதளவு கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்ற நிலைமை தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கே வந்தது நாம் அனைவரும் அறிந்த விஷயம். ஒரு அரசாங்கமே இவ்வாறு அதிர்ச்சி யுற்றது என்ருல்—ஒரு பழமொழி சொல்வது உண்டு. "ஆடி காற்றில் அம்மியே பறக்கிறபோது எச்சலை எங்கே போய் விழும்" என்று சொல்வார்கள்—ஒரு தனிப்பட்ட சாதாரண முதலாளி தான் போடுகிற முதலுக்குக் கொஞ்சமாவது லாபம் வரவேண்டுமென்று எதிர்பார்ப்பது சகஜமான ஒரு நிலைமைதான். எந்த ஒரு வகையிலும் பார்க்கிறபோது, போடுகின்ற முதல் அழியாத ஒரு நிலைமையை ஏற்படுத்திக் கொடுப்பது அரசாங்கத்தினுடைய கடமை. அடுத்தது அந்த முதலுக்கு நியாயமான ஒரு லாபம் கிடைக்க வழிவகை செய்து கொடுப்பதும் அரசாங்கத்தினுடைய கடமை. அடுத்தது, ஆரம்பிக்கப்படுகின்ற தொழிலை வருஷா வருஷம் முன்னேற்றகரமான முறையில் இயங்க வைப்பதும் அரசாங்கத்தின் கடமை. அடுத்தபடியாக, இரண்டு அம்சங்களுக்கும் மேலாகவுள்ள தொழி லாளர் நலன் என்ற ஒரு முக்கியமான அம்சத்தையும் அரசாங்கம் கருத்தில் கொண்டு அந்தத் தொழிலாளர்களுக்கும் நியாயமான ஊதியம் கிடைக்க வழி வகைகளைச் செய்வது அரசாங்கத்தின் கடமை. ஆக, இந்த மூன்று முக்கிய அம்சங்களையும் மனத்தில் கொண்டு நம்முடைய தமிழக அரசாங்கம் தொழில்கள் தொழிலாளர் நலன் என்கின்ற ஒரு வகையிலே இயங்குகிறது என்பதை நாம் எல்லாம் அறிந்து பாராட்ட வேண்டிய ஒரு நிலையில் இருக்கிறேம்.

நாம் சர்க்கஸில் பார்க்கிறேம். ஒரு குடையை வைத்துக் கொண்டு ஒரு சிறிய இரும்புக் கம்பியில் நடக்கிற பெண்மணி போல் இந்த மூன்று அம்சங்களையும் கருத்திற்கொண்டு அரசாங்கம் செயலாற்றி வருகிறது என்ற ஒரு நிலையை நாம் எண்ணிப் பாராட்டத்தான் வேண்டும். அடுத்த படியாக, விவசாயத் துறை பற்றியும், அதிலுள்ள தொழிலாளர்கள் பற்றியும் நான் சில கருத்துக்கள் கூற ஆசைப்படுகிறேன். விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால் விவசாய நிலம் அத்தனையும் ஒரு விவசாயத் தொழிற்சாலை என்று கொள்ள வேண்டும். விவசாய நிலங் களுக்கு உடையவராக இருக்கிற மூலதனம், தொழில், தொழிலாளர்கள் இந்த மூன்று அம்சங்களும் ஒன்று தான் என்பதை அரசாங்கம் உணர வேண்டும். ஒரு சிறிய பாடல் உண்டு, விவசாயத் தொழில் பற்றி :

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தில் வித்துளதாய்
நீர் அருகே சேர்ந்த நிலம் உளதாய்—சென்று
வர எளிதாய்ச் செய்வாரும் சொல்கேட்கில்
என்றும் உழவே இனிது.

என்று குறிப்பிடுகிற ஒரு பாட்டு உண்டு. இதன் கருத்தை ஊன்றிப் பார்த்தால் விவசாய நிலங்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாய நிலங்களுக்கு உடையவணுகிய சொந்தக்காரன் ஆகிய மூன்றும் ஒரே உறுப்பாக இயங்குகிறது என்பதை இந்த மாமன்றமும், இந்த அரசாங்க

[திரு. எ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர்] [16th March 1964

மும் கவனிக்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு தினப்படி
கூலி இவ்வளவு என்று அரசாங்கச் சார்பில் நிர்ணயம் செய்வதாக அறி
கிறேன். அது அவசியமில்லை என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்
படுகிறேன். காரணம், விடியற்காலை பொழுது விடியப் போகிறது என்ற
நிலை வரும்போது கோழி கூவுகிறது. அது இயற்கை. அதேபோன்று
விலைவாசி உயர்ந்தால் தொழிலாளர்கள் கூலியும் இயற்கையாகவே
உயர்ந்து விடும். விலைவாசிகள் இறங்குமுகமாக இருந்தால் இயற்கை
யாகவே தொழிலாளர்களின் தினக் கூலியும் இறங்கும். இது இயற்கை.
நாம் அனுபவத்தில் இதைப் பார்க்கிறோம். ஆகவே இதில் அரசாங்கத்தின்
வேலை அதிகமாக இல்லை என்று நான் கூற விரும்புகிறேன். 2, 2½
ரூபாய் கொடு என்று சட்டம் விதித்தால் அது நிச்சயமாக இயங்காது.

இயற்கைக்கு விட்டுவிட்டால் அவை நன்கு இயங்கி வருவதை நாம்
காண்கிறோம். எந்த விவசாயி தன் நிலத்தை நேராகச் சென்று தினம்
தினம் கவனிக்கிறானோ அந்த விவசாயம்தான் உருப்படும். அதைத்தான்
நாம் பார்க்கிறோம்.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும்"

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். எந்த விவசாயி தன் நிலத்தை நன்கு
கவனியாது இருக்கிறானோ அந்த விவசாயம் நிச்சயமாக அழிந்துவிடும்.
தமிழகத்தைப் பொறுத்த வரையில் இங்கு விவசாயிகள் போக்கு எப்படி
யிருக்கிறது என்றால் நிலச் சொந்தக்காரர் வேறு, நிலம் வேறு, நிலத்தில்
வேலை செய்கிற தொழிலாளி வேறு என்ற பான்மை நிச்சயமாக இடையாது.
ஆப்சன்டீ லான்ட்லார்ட்ஸ் என்று கூறுகிறார்களே, அவர்கள் மிகக் குறைச்
சல்தான். எங்கள் கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இங்கு
நான் சட்டை போட்டுக்கொண்டு வந்திருக்கிறேன். அங்கு வந்து பார்த்தால்
வரப்பு வரப்பாக திரிவது தெரிய வரும். தமிழக விவசாயம் பற்றி நான்
உங்களுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறேன். விவசாயம் வேறு, விவசாயி
வேறு, விவசாயத் தொழில் வேறு என்ற நிலைமை இங்கில்லை. இம்மூன்
றும் ஒன்றாக இணைந்துதான் செயலாற்றுகிறது என்ற ஒரு முறையை
நாம் பார்க்கலாம். விவசாயத் தொழிலுக்குச் செய்ய வேண்டிய வழி
வகைகளை செய்து கொடுத்தால் போதும். முக்கியமாக வேண்டியது
தண்ணீர். எங்கெங்கு வசதியிருக்கிறதோ அங்கெல்லாம் அணைகள்
கட்டப்பட்டிருக்கின்றன. அதுதான் சர்க்காரின் கடமை. கிராம சகாயக்குகள்
வைத்து விதைகள் அளிக்கிற ஒரு முறையைப் பார்க்கிறோம். விவசாயி
களுக்கு வேண்டிய பூச்சி மருந்துகள், ரசாயன உரம் இவை எல்லாம்
காலாகாலத்தில் விவசாயிகளுக்கு கிடைக்கக் கூடிய வழிவகைகளை மேற்
கொண்டும் செய்வோமானால் விவசாயத் தொழிலுக்கு அரசாங்கச் சார்பாக
செய்யக் கூடிய ஒரு பெரும் பணி அது என்று தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். விவசாயத் தொழிலாளர்கள் என்று தனியாக பிரித்து
நோக்கவேண்டிய அவசியம் இல்லை.

முன்பெல்லாம் ஆண்களுக்கு 4 அணாவும் பெண்களுக்கு 2 அணாவும்
கூலியாக கொடுத்து வரப்பட்டது. அப்போது ஒரு பொதி நெல் 15-ல்
இருந்து 20 ரூபாய் வரை விற்றது. இப்போது 80 யிலிருந்து 100 ரூபாய்
வரை விற்கிறது என்றால், இயல்பாகவே ஆண்களுக்கு 1½ லிருந்து 2
ரூபாய் வரையிலும், பெண்களுக்கு 1 ரூபாயும் கூலியாகக் கொடுக்கப்படுவ
தைப் பார்க்கிறோம். இதற்கு என்ன சட்ட திட்டம் வேண்டியிருக்கிறது ?
அப்படி ஒன்றும் வேண்டியதில்லை. விலை இறங்கும்போது கூலியும்
இறங்கும். முன்பு கூறியதுபோல் பொழுது புலரும்போது யாராவது
கோழியைக் கூவச் சொல்கிறார்களா ? அது இயற்கை. அதுபோல் இதை
யும் விட்டு விடவேண்டும். ஆண்டான் அடிமை என்று எங்கேயோ இருக்க
லாம், அது வேறு விஷயம். விவசாயி தன் நிலத்தை சரிவர கவனிக்க
வில்லை என்றால் அந்த விவசாயம் உருப்படாது. ஆகவே, நான் கூறிய
மூன்று நிலையையும் கருத்திற்கொண்டு அதாவது, முதலீடு செய்பவன்,
தொழில், வேலை செய்கிற தொழிலாளி இம்மூன்றையும் கருத்திற்கொண்டு
இவர்கள் மூவரும் வளப்பம் அடைய பாடுபட வேண்டுமென்ற கொள்
கையை உறுதியாகக் கடைப்பிடிப்பதை நீடித்து செயலாற்ற வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடிக்கிறேன்.



16th March 1964]

***திரு. சா. ராமசாமி :** கனம் தலைவர் அவர்களே, தொழிலாளர்களும்
தொழில்களும் என்ற மானியத்தின் மீது நான் சில கருத்துக்கள் கூற
விரும்புகிறேன். உடையார்பாளையம் வட்டப் பகுதியில், என் தொகுதியில்
டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலை அமையப் பெற்றிருக்கிறது. டால்
மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலை பற்றிய பிரச்னைகளை அவ்வப்போது
தொழிலாளர்கள் தலைவர் வாயிலாகவும், தொழிலாளர்கள் நேரடியாகவும்
சம்பந்தப்பட்டவர்களிடத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். டால்மியாபுரம்
சிமெண்ட் தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால், அங்கு அமையப்பெற்று
இருக்கிற சிமெண்ட் தொழிற்சாலை டால்மியாபுரம் எல்லையில் அமையப்
பெறவில்லை. கல்லக்குடி என்ற பகுதி லால்குடிப் பகுதியைச் சார்ந்தது.
தொழிற்சாலை அமைந்திருக்கும் இடம் உடையார்பாளையம் தாலுக்கா,
பளிங்காநத்தம் பஞ்சாயத்தில் இருக்கிறது. தொழிலாளர்கள் பிரச்னைகளை
பலவகைகளில் எடுத்துக் காட்டியிருந்தாலும், தொழிலாளர்களிடமிருந்து
பெறுகிற தொழில் வரி எங்கு சேர்க்கப்படுகிறது என்றால் அப்பிரச்னை
குறித்து கல்லக்குடி பஞ்சாயத்திற்கும், பளிங்காநத்தம் பஞ்சாயத்திற்கும்,
இடையே பெரியதொரு போராட்டம் இருந்து கொண்டிருக்கிறது. பல
ஆண்டுகளாக இப்பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. ஐந்தாறு ஆண்டு
களுக்கு முன்பாக, லால்குடி பகுதி ஆர். டி. ஓவும், பளிங்காநத்தம் பகுதி
அரியலூர் ஆர். டி. ஓவும் சேர்ந்து பேசி ஒரு தொகையை பளிங்காநத்தம்
பஞ்சாயத்துக்கு கொடுக்க வேண்டுமென்று கூறினார்கள். தொழில் வரி
யிலிருந்து, அந்தத் தொகை இன்றையதினம் வரை பளிங்காநத்தம்
பஞ்சாயத்துக்குக் கிடைக்கப் பெறவில்லை. இது விஷயமாக உரிய பங்கு
அளிக்க வழிவகை செய்ய வேண்டுகிறேன். அதனால் பலவகைகளிலும்
அந்தப் பஞ்சாயத்துப் பாதிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் பிரச்னையை
எடுத்துக்கொண்டால், சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்தில் மண் எடுத்
தல், ஜிப்சம் எடுத்தல், சிமெண்ட் மூட்டை ஏற்றுமதி செய்தல் போன்ற
வேலைகளில் கிட்டத்தட்ட 1,500 க்கு அதிகமான தொழிலாளர்கள் நேரடி
நிர்வாகத்தில் மாதச் சம்பளத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இப்போது ஒன்றரை
ஆண்டுகளுக்கு முன்பாக, இந்த நிறுவனத்தில் இந்த வேலைகள் எல்லாம்
காண்டிராக்ட் மூலமாக விடப்பட்டுவிட்டதால், அதில் வேலை செய்துகொண்டு
இருந்த தொழிலாளர்களை எல்லாம் வெளியே விட்டுவிட்டார்கள். இப்
போது இதன் காரணமாக சுமார் 1,500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு
சுமார் ஒன்றரை ஆண்டு காலமாக அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.
இந்தப் பிரச்னையைப் பற்றிச் சம்பந்தப்பட்டவர்களிடத்தில் அவர்கள்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் இதைக் குத்த
கைக்கு எடுத்துக்கொண்ட காரணத்தினால், பத்து ஆட்கள் வேலை செய்த
இடத்தில், ஒரு ஆள் அல்லது இரண்டு ஆள் என்று இப்படி வைத்துக்
கொண்டு வேலை செய்து, கொள்ளை லாபம் அடித்துக்கொண்டிருக்கிறார்
கள். அதே நேரத்தில் குத்தகை முறை வந்ததின் காரணமாகப்
பாதிக்கப்பட்டவர்களுக்காக எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்திருப்ப
தாகத் தெரியவில்லை. எங்கேயெல்லாமோ இந்த பாதிக்கப்பட்ட தொழி
லாளர்கள் முறையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இதை முக்கிய
பிரச்னையாக எடுத்துக்கொண்டு கவனம் செலுத்த வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஒரு நிறுவனமானது தனியார்
களிடத்தில் ஒப்படைக்கும்போது, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற
தொழிலாளர்களை எல்லாம் மீண்டும் அந்தத் தொழிலிலேயே இருப்பதற்
கான உறுதிமொழியை கொடுக்கின்ற வகையில் ஏற்பாடு செய்துகொள்ள
வேண்டும். இப்போதுள்ள நிலை என்னவென்றால், சுமார் 1,500 பேர்கள்
பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அவர்கள் பலவிதமான போராட்
டங்களை நடத்தியும் கூட எந்தவிதமான சீர்பாடும் அடையவில்லை. மேலும்
அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டும்
என்றுள்ள பிரச்னையை அங்குள்ள நிறுவனத்திடம் கொண்டுபோனபோது
இப்போது அதில் எந்த விதமான சம்பந்தமும் இல்லை, வேலையைக் காண்
டிராக்டர்களிடத்தில் விட்டுவிட்டோம். ஆகவே, அவர்களிடத்தில்தான்
கலந்து பேச வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். அவ்விதம் காண்
டிராக்டர்களிடத்தில் பேசினதின் காரணமாக இப்போது ஓரளவு தொழி
லாளர்களை எடுத்திருக்கிறார்கள். இவ்விதம் ஓரளவுள்ள தொழிலாளர்
களும் நிரந்தரமாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. தினக் கூலியாகத்

தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தினசரி காலையில் 1,500 பேர்களை
யும் வரச்சொல்லி, அதில் 100 பேர்களை எடுத்துக்கொள்வார்கள். இதற்
காக காலையில் 6 மணிக்கே சென்று 10 மணி வரை காத்திருக்க வேண்டும்.
இவ்விதம் காத்து நின்ற பிறகு சுமார் 100 பேரை எடுத்துவிட்டு மீதி பேர்
களை எல்லாம் போங்கள், நாளைக்கு வாருங்கள் என்று சொல்லி
விடுகிறார்கள். இம்மாதிரி தொழிலாளர்கள் தினசரி வேறு பிழைப்பு
தேடுவதையும் விட்டுவிட்டு, ஒரு நாள் வேலைக்காக வந்து காத்துக் கிடக்க
வேண்டிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. இத்தனை பேர்களைத்தான்,
இன்னின்ன பேர்களைத்தான் வேலைக்கு எடுத்துக்கொள்வார்கள் என்ற வரை
யறை இல்லை. இவ்விதம் வாரம் ஒரு நாள்தான் வேலை கிடைக்கிறது.
ஒரு நாள் வேலை செய்வதற்காக தங்களுடைய பிழைப்பை எல்லாம்
கெடுத்துவிட்டு அவதிப்படுகின்ற நிலைமையை கண்ணால் காணகின்ற நிலையே
தான் இருந்து கொண்டிருக்கிறது. இப்படி பாதிக்கப்பட்டிருக்கின்ற தொழி
லாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்
என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஜிப்ஸம், எடுக்கின்ற தொழிலானது அரியலூர்
டிவிஷனில் அதிகமாகக் கிடைக்கிறது. சிமெண்ட் தொழிலுக்கும் மூலப்
பொருளாக இது இருக்கின்ற காரணத்தால், முக்கியமாக டால்மியாபுரம்
போன்ற இடங்களுக்கு எல்லாம் எடுத்துச் செல்லுகிறார்கள். மேலும்
இந்தப் பொருளிலிருந்து வளையல்கள், கண்ணாடி சாமான்கள் முதலியவை
களையும் செய்யலாம் என்று வெளியிடங்களுக்கு அதிகமான அளவில்
இந்தப் பொருள் அனுப்பப்படுகிறது. இந்த ஜிப்ஸம் வெட்டி எடுக்கிற
தொழிலில் சுமார் பத்தாயிரம் பேர்கள் வரை ஈடுபட்டிருக்கிறார்கள்.
இவர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லை. மாதாந்திர ஊழியர்
களாக தொழிலாளர்கள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. காலையில்
$4\frac{1}{2}$ மணிக்கு எழுந்து சென்று வெட்டி எடுக்கப்படுகிற சம்பந்தப்பட்ட இடத்
திற்குச் சென்று வேலையில் ஈடுபடுகிறார்கள். இவ்விதம் வேலை செய்
கிறவர்கள் இதுவரையிலும் நிரந்தரமாக்கப்படவில்லை. அவர்களுடைய
வேலை நேரம் வரையறுக்கப்படவில்லை. வேலை செய்கின்ற அளவைப் பார்த்
தால், சாதாரணமாக மூன்று விதமான பெட்டிகள் வைக்கப்பட்டிருக்
கின்றன. இந்தப் பெட்டியை நிரப்பிக் கொடுத்தால், அதற்குத்
தகுந்த பிரகாரம் சம்பளம் கொடுக்கப்படும். சாதாரணமாக எ–வகுப்பு
பெட்டியை நிரப்புவதற்கு நாலைந்து பேர்கள் சேர்ந்து நிரப்பினால்தான்
ஒரு பெட்டியை நிரப்ப முடியும். இப்படி நிரப்பிக் கொடுத்தால் $3\frac{1}{2}$ ரூபாய்
சம்பளம் கிடைக்கும். நாலைந்து பேர்கள் சென்று சேர்ந்து நிரப்பினால்
$3\frac{1}{2}$ ரூபாய் கிடைக்கிறது. அதிலும் இந்த ஜிப்ஸம் எப்படி வெட்டி எடுக்கப்
படுகிறது என்பதைப் பார்த்தால், எட்டு அடி, பத்து அடி பாறைக்குள்
சென்று வெட்டி எடுக்க வேண்டும். இப்படி வெட்டி எடுக்கப்படும்போது,
மேலேயிருந்து பாறைக்கட்டிகள் விழுந்துவிடுகின்றன. இதன் காரணமாக
பலர் இறந்து போகின்றனர். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், இரண்டு
மூன்று பேர்கள் இந்தமாதிரியான விபத்தில் இறந்து போயிருக்கிறார்கள்.
திருப்பி அவர்களை எடுப்பதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கிறது.
மேலும் இம்மாதிரி மேலேயிருந்து கட்டி விழுந்துவிடுவதால், கை கால்
ஒடிந்துபோய் விடுகிறது. இம்மாதிரி காயமடைந்தவர்கள் வைத்திய வசதி
பெற்றுக்கொள்வதற்கு எந்தவிதமான வசதியுமில்லை. இம்மாதிரி
பாதிக்கப்பட்டவர்கள் வைத்திய வசதி பெற்றுக்கொள்வதற்கோ அல்லது
வேறு வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கோ தொழிலாளர்கள் என்ற
முறையில், அவர்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் இருக்
கிறது. காரணம் தொழிலாளர்கள் என்ற பட்டியலில் இவர்கள் சேர்க்கப்
படவில்லை. ஆகவே தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற இந்த ஜிப்ஸம் வெட்டி
எடுக்கின்ற தொழிலில் அரசாங்கம் வேண்டிய கவனம் செலுத்தி ஆவன
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக அவர்களுக்கு
கிடைக்கின்ற கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரு பெட்டி நிரப்
பினால்தான் $3\frac{1}{2}$ ரூபாய் கிடைக்கிறது என்று சொன்னால், 10 மைல்
தூரத்திலுள்ள அரியலூரில் கொண்டுபோய்ச் சேர்க்கும்போது இத
னுடைய விலை 30 ரூபாய்க்கு மேலாகிறது. இந்த அளவுக்கு 10 மடங்குக்கு
மேல் கொள்ளை லாபம் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும்



இவ்விதம் கஷ்டப்பட்டு வெட்டி எடுக்கும் தொழிலாளர்களுக்கு குடிப்பதற்குக்
கூட தண்ணீர் வசதி கிடையாது. நான்கு மைல், ஐந்து மைல் அளவில்
போதிய அளவில் தண்ணீர் வசதி கிடையாது. ஒரு வண்டி தண்ணீரை
மட்டும் கொண்டுபோய்க் கொடுத்தால், அதை அங்குள்ள 4,000—5,000
தொழிலாளர்களும் சாப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இந்த
வசதியைச் செய்து கொடுக்கின்ற முறையில் வேண்டிய அளவுக்கு லாரி
களில் தண்ணீர் கொண்டுபோய்த் தொட்டிகளில் நிரப்பிக் குடி தண்ணீரு
ருக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். மேலும், கை, கால் ஒடிந்
தவர்களுக்கு வேண்டிய வைத்திய வசதி செய்து கொள்வதற்கு இப்போது
வாய்ப்பு வசதி இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அப்படி ஏதேனும்
கை, கால் ஒடிந்துவிட்டால், அவர்கள் அரசாங்க ஆஸ்பத்திரிக்குப்போகும்
போது, ஜிப்ஸம் தொழிலில் ஈடுபட்டிருந்ததற்காக ரிப்போர்ட் வேண்டும்
என்று கேட்கிறார்கள். இவ்விதம் எதையாவது சொல்லி ஆஸ்பத்திரியில்
அனுமதிப்பதில்லை. பின்னால் சம்பந்தப்பட்டவர்களிடம் போய் ரிப்போர்ட்
வேண்டும் என்று கேட்கும்போது, அவர்கள் ஏதோ 50, 100 கொடுத்து
தனிப்பட்ட முறையில் வைத்தியம் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி
விடுகிறார்கள். இவ்விதமாகத் தொழிலாளர்கள் அவதிப்பட்டுக்கொண்டு
இருக்கிறார்கள். இந்த மாதிரியான நிலையில் பாதிக்கப்பட்ட தொழிலா
ளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை எல்லாம் தொழிலாளர்
கள் பிரச்னையில் சேர்த்து ஏதாவது வழிவகை செய்து கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜிப்ஸம் வெட்டி எடுக்கப்படுகிற விஷயத்தில் அரசாங்கத்தின் சொந்த
மாக இருக்கின்ற தரிசு நிலங்களில்தான் வெட்டி எடுக்கிறார்கள். கள்ளாங்
குத்து புறம்போக்கு போன்ற இடங்களிலுள்ள பாறைகளில் எடுக்கிறார்கள்.
சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு என்று பெர்மிட் வாங்கிக்கொண்டு 20 ஏக்கர்,
30 ஏக்கர் என்று வெட்டி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் காரண
மாக அரசாங்கத்திற்கு வருமானம் பாதிக்கிறது. இப்படி ஜிப்ஸம் வெட்டி
எடுக்கப்படுகின்ற நிலத்தின் அளவை நல்ல முறையில் கணக்கிட்டு, அரசாங்
கம் நேரடியாகத் தலையிட்டு, அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமான
னத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்டவர்களிடத்தில்
இருக்கின்ற வரையில் அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் கூடுத
லாக வெட்டி எடுக்கப்படுதல் வேண்டும் என்று அரசாங்கம் அறிவிக்க வேண்
டும் என்று கேட்டுக்கொண்டு பாதிக்கப்பட்டிருக்கின்ற தொழிலாளர்கள் நலன்
பெற சர்க்கார் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு
முடித்துக்கொள்ளுகிறேன்.

*** திரு. கே. எஸ். அர்த்தநாரீஸ்வர கவுண்டர்:** கனம் தலைவர் அவர்
களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தொழி
லாளர்கள் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள்
சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக மேட்டூர் பகுதியில் இருக்கக்கூடிய
தொழிலாளர்கள், அவர்களுடைய குடும்பத்திற்கும் ஸ்டேட் இன்ஷூரன்ஸ்
திட்டத்தை விரிவடைய செய்ததற்காக நமது அமைச்சர் அவர்களுக்கு அங்
குள்ள தொழிலாளர்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அது தவிர ஆங்காங்கு இருக்கக்கூடிய தொழிலாளருக்கு
ஸ்டேட் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் கீழ் ஒரு ஆசுபத்திரியையும் இரண்டு
டிஸ்பென்சரிகளையும் கட்டுவதற்குத் திட்டத்தில் வழி வகை செய்யப்பட்டு
இருக்கிறது. ஆனால் அங்கு இருக்கக்கூடிய நிலங்கள் சர்க்கார் நிலங்
களாக இருந்தும் கூட, இந்தத் திட்டத்திற்காகக் கிடைக்க வேண்டிய
நிலங்கள் கிடைக்காததின் காரணமாக ஆசுபத்திரி கட்டுவதற்குக் கால
தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக இந்த நிலங்கள்
திட்டத்திற்கு கிடைப்பதற்கான வழிவகை செய்ய வேண்டும் என்று
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பொறுத்தவரை
யில், பல இடங்களில் அங்கு இருக்கக்கூடிய டாக்டர்கள் தொழிலாளர்
களுக்கு சிகிச்சை செய்வதோடு அல்லாமல், தொழிலாளர்களுக்கு வேறு
விதத்தில் லீவ் வேண்டுமானாலும், அதற்கு உதவி செய்கின்ற வகையிலும்,

மேலும் அங்கு ஆசுபத்திரியில் இருக்கின்ற விலை உயர்ந்த மருந்து
களை வெளியில் கொண்டுபோய் விற்றுவிடுவதாகவும் சொல்லப்படுகிறது.
ஆனால், இதை வெளிப்படையாகச் சொன்னால், தங்களுக்கு லீவ் கிடைப்ப
தற்கு ஏதாவது தடை ஏற்பட்டுவிடுமோ என்ற எண்ணத்தில், இவ்வாறு
வெளியில் விலை உயர்ந்த மருந்துகளை டாக்டர்கள் எடுத்து விற்று வருவதை
சொல்லுவதற்கு அச்சம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். சர்க்கார்
அதை உடனடியாகப் பரிசீலனை செய்து, வி.ஐ.டியைக்கொண்டாவது,
அந்த இன்ஷூரன்ஸ் இலாக நல்ல முறையில் நடக்க, அந்த டாக்டர்கள்
எல்லாம் விலையுயர்ந்த மருந்துகளை நல்ல விதத்தில் செலவு செய்ய
வேண்டிய திட்டத்தை கொண்டு வரவேண்டுமென்றால், அதைப் பற்றி
11-30 a.m. அடிக்கடி பரிசீலனை செய்தால் நன்றாக இருக்கும் என்று சர்க்கார்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தொழிலாளர் நலனைக் குறித்து பல நல்ல சட்டங்கள் கொண்டுவந்திருக்
கிறோம். ஆனால், குறிப்பாக ஒரு தொழிலாளியை ஒரு முதலாளி வேலை
யிலிருந்து நீக்கிவிட்டால், தொழிலாளர் பக்கம் நியாயம் இருந்தாலும்கூட
ட்ரிப்யூனலிலிருந்து சுப்ரீம் கோர்ட் வரை கொண்டுபோய், கடைசியில்
தொழிலாளர் பக்கம் நல்ல தீர்ப்பு வந்தாலும் கூட, அத்தகைய தீர்ப்பு
வருவதற்கு நீண்ட நாள் ஆகிற காரணத்தினால், தொழிலாளி வேறு
இடத்தில் வேலைக்கு அமர்ந்தார் என்று ஒரு ரிக்கார்டு கிடைத்துவிட்டால்,
உண்மையிலேயே அவர்களுக்கு நல்ல தீர்ப்பு கிடைத்தாலும், வேறு இடத்
தில் வேலை செய்கிறார் என்ற அந்தக் காரணத்தை வைத்து மறுபடியும்
வேலையிலிருந்து நீக்கும் நிலைமை இருக்கிறது என்பதை சர்க்கார் நன்கு
உணர்ந்திருக்கிறது. வேலையில்லாமல், 3—4 வருஷம் சுப்ரீம் கோர்ட்டுக்
குப் போய்வரும் வரையில் காத்திருக்க வேண்டுமென்றால், ஒரு தொழி
லாளி வேலையில்லாமல் இருப்பது மிகவும் கஷ்டம் என்பதை அமைச்சர்
அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆகையால் தொழிலாளர்களுக்கு
மத்தியில் இருக்கக்கூடிய வேலையில்லாத காலத்தில் வேறு வேலை
செய்ய வழி வகை இருந்தால்தான் அதனால் நல்ல முறையிலே பலன்
அடைய முடியும் என்பதை உணர்ந்து, சட்டத்தை நல்ல முறையில் திருத்தி
வேலையில்லாத காலத்தில் வேறு வேலை செய்வதற்கு வழி இருந்தால்
தான் நன்றாக இருக்கும். ஏனென்றால், ஒரு முதலாளி நியாயத்தை
சுப்ரீம் கோர்ட் வரை போய் பெற்று வரவேண்டுமானால், உண்மையிலேயே
நீண்ட நாள் ஆகின்றது. அதுவரையில் எந்தவிதமான வருமானமும் இல்லா
மல் இருப்பது சாத்தியமில்லாமல் இருக்கிறது. தொழிலாளர் சட்டத்தை
நல்ல முறையில் திருத்தினால்தான் அவர்களுக்கு நல்ல வாய்ப்பு இருக்கும்
என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து
தொழில் சட்டத்திலே ஏதாவது சிக்கல் இருந்தாலும் அதைத் திருத்த
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேட்டூரிலே இண்டஸ்ட்ரீஸ், மில் இருக்கின்றன. அதுவும்
மேட்டூரிலே தயாரிக்கப்படுகிற மேட்டூர் லாங்க் கிளாத் என்றால் நம் மாநிலம்
மட்டுமல்ல, வெளியிலும் நல்ல பெயர் இருக்கக்கூடியது. அந்த மில்
லிலே உள்ள தொழிலாளர்கள் வீட்டு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். மேட்டூர் அணை கட்டிய காலத்தில் டெம்பரரி
யாக மேட்டூர் அணையைக் கட்டிய தொழிலாளர்களுக்கு சிறிய வீடுகளைக்
கட்டியிருக்கிறார்கள். அவைகளை அந்த மில் சொந்தக்காரர்கள் மிகவும்
குறைந்த விலையில் வாங்கினார்கள். அதிலே எந்தவித இம்ப்ரூவ்மெண்டும்
இல்லாமல் அவர்கள் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். 10–க்கு 10
இருக்கிற அறையிலே ஒரு தொழிலாளர் குடும்பம் வசிக்க வேண்டிய நிலை
இருக்கிறது. இன்றைக்கு மேட்டூரிலே மின்சாரம் உற்பத்தி செய்தாலும்
கூட தொழிலாளர் வீடுகளுக்கெல்லாம் இன்னும் மின்சார விளக்கு
இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை அமைச்சர்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதுவும் தவிர, அந்த வீட்டைச்
சுற்றிச் சாக்கடை. இப்படி மோசமான நிலையில், மத்தியிலே குடியிருந்து
கொண்டிருக்கிறார்கள். பலமுறை மேட்டூர் இண்டஸ்ட்ரீஸை சேர்ந்தவர்
களிடத்தில் எடுத்துச்சொல்லியும் திருத்தியபாடு இல்லாமல் இருக்கிறது.





தொழிலாளர்களுடைய சுகாதார நிலையை
அதிலே சர்க்கார் தலையிட்டு மாற்றிக்கட்டிக்கொடுத்தால்
உத்தேசித்தும், கட்டடங்களை வேறு விதத்தில் கொண்டு வருகிறேன்.
நன்றாக இருக்கும் என்று அமைச்சர் கவனத்திற்கு

அடுத்தபடியாக, மேட்டூரிலே இப்போது இண்டஸ்ட்ரீஸானது மிகவும்
விரிவு அடைந்து கொண்டிருக்கின்ற நிலைமையில் இருக்கிறது என்று
அமைச்சர் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். உடனடியாக கோவாபரேடிவ்
ஹௌஸ் பில்டிங் சொஸைட்டியில் அவர்களுக்குப் பணம் கொடுத்து வீடு
கட்டும் திட்டத்தைக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும். இப்போது
அந்தத் திட்டத்தில் பணம் இல்லை, பணம் கொடுப்பதற்கில்லை என்று
இருந்தாலும்கூட, எப்படி மேட்டூரிலே அங்கு இருக்கக்கூடிய தொழில்
பெருகிக்கொண்டிருக்கும் நேரத்தில் தொழிலாளர் குடும்பத்திற்கு
தொழில் இன்ஷூரன்ஸ் ஸ்கீமை விரிவுபடுத்தினார்களோ, அந்த முறையி
லேயே தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்ட
தைக் கொண்டுவந்தால்தான், பெரிய ஆலைகள் விரிவுபடுத்தும் நேரத்தில்
வீடு கட்ட பணம் கொடுக்க வாய்ப்பும் வசதியும் இல்லாமல் இருந்தாலும்
கூட, வீட்டுக்கு வேண்டிய நிலத்தை ஒதுக்கிக்கொடுத்தால்தான் அவர்கள்
வீடுகளைக் கட்டிக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். அங்கு வீடுகளில்லாத கார
ணத்தினாலே, வீடு கட்டிக்கொள்ள சர்க்காரிலே பணம் கொடுக்க வசதி
இல்லாவிட்டாலும், நிலத்தைக் கொடுத்தால், அவர்கள் கொஞ்சம்
தொகையை வைத்து நல்ல முறையில் வீடு கட்டிக்கொள்ள வேண்டு
மென்று அவர்கள் ஆசைப்படுகிறார்கள். ஆகையால் அவர்களுக்கு நிலத்தை
ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்களுக்கு
உடனடியாக வீடு கட்டிக்கொள்ள நிலத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டு
மென்றால் கலெக்டர் அவர்கள் ஸ்பெஷல் டெபுடி கலெக்டரைப் போட்
டால் தான் முடியும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதையும்
நல்ல முறையில் செய்வதற்கு, வீடு கட்டிக்கொள்ளும் திட்டத்தை விஸ்த
ரிப்பதற்கு ஸ்பெஷல் டெபுடி கலெக்டரை உடனடியாக நியமித்து அதற்கு
வேண்டிய வழிவகைகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், மத்தியஸ்
தர்களை, நல்லவர்களை அமைத்து, அவர்கள் தொழிலில் வரும் தகராறு
களைத் தொழிலாளர் பிரதேசத்திலேயே உடனடியாகத் தீர்த்து வைத்தால்
நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். குறிப்பாக மேட்டூரைப்
பொறுத்த வரையில், மேட்டூர் ஸ்பின்னிங் மில்லிலே கிட்டத்தட்ட 45
தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு பல நாள் தகராறு இருந்த
காரணத்தினால், அங்கு இருப்பவர்கள் ஒன்று சேர்ந்து, மில் அதிபர்களுக்கு
சுப்ரீம் கோர்ட்டில் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு இருந்தும் தொழிலாளர்
களுக்குப் பிரதிகூலமாகத் தீர்ப்பு இருந்தும், அங்கு இருக்கிறவர்கள்
சேர்ந்து தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று
சொன்னதன் காரணத்தினால், நல்ல முறையில் தொழிலாளர்களை
வேலைக்குச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் உண்மையிலேயே
அங்கு இருக்கக்கூடிய மில் அதிபர்களைப் போற்ற வேண்டிய நிலை இருக்
கின்றது என்பதை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.
நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், தொழிலாளர் பிரச்னை
நீண்ட நாள் , சுப்ரீம் கோர்ட் வரையில் போகும்போது தொழிலாளர்
மனம் உடையக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு
ட்ரிப்யூனல் அல்லது மத்தியஸ்தர் வைத்துத் தொழிலாளர் குறையை
நீக்கிக் கொடுக்கிறோமோ அதனால் தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல்,
முதலாளிகளுக்கும் நாட்டுக்கும் நன்மை ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்
கிறது. ஆகவே தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், முடிந்தால்
ஹைகோர்ட் வரையிலும் கூட வருவதற்கில்லாமல் ஸ்தலத்திலேயே அவர்
கள் பிரச்னையைத் தீர்த்துக் கொடுக்க சர்க்கார் வழி வகை செய்ய வேண்டு
மென்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. எம். எஸ். மணி : மன்றத் தலைவர் அவர்களே, தொழிலை உள்
ளிட்ட தொழிலாளர் மானியத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப்
பிரேரணை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு எம்· எஸ். மணி] [16th March 1964

ன்றையதினம் தொழில் தகராறு சட்டத்தில் தனிப்பட்ட தொழி
ருக்கு பாதுகாப்பு இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணருவார்
கடந்த 10 ஆண்டுகளாக இதைப் பற்றி நாம் நல்ல முறையிலே பல
ாசனைகளை எடுத்துச் சொல்லியும், தனிப்பட்ட தொழிலாளரை
ந்ச் சட்டத்தின்கீழ் கொண்டுவர இயலாது இருக்கிறது. தமிழ்
டைப் பொறுத்த வரையில், ஐ.டி. ஆக்டுக்குப் பதிலாக மெட்ராஸ்
டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் என்று கொண்டுவந்தால் கூட தனிப்
தொழிலாளர்கள் பலன் பெறுவார்கள் என்று சொல்லிக்கொள்ள
ம்புகிறேன். அவர்களுக்கு இந்தச் சட்டத்தில் பாதுகாப்பு இல்லாத
ணத்தினுல் தமிழகமெங்கும் 10,000–க்கு மேற்பட்ட தொழிலாளர்
பாதிக்கப்பட்டிருக்கிறுர்கள் என்பதை அமைச்சர் கவனத்திற்கு நான்
ாண்டுவர விரும்புகிறேன்.

இன்றைய தினம் மோட்டர் டிரான்ஸ்போர்ட் ஆக்டில் வேரியேஷன்
ாடுப்பது கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு ஜட்ஜ்மெண்ட் கூறிய
ினே, அதை மாற்றியாக வேண்டும் என்பதற்காக ஆர்.டி.ஏ.–க்கு அந்த
திகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அவசரம் அவசரமாக
ட்டத்தைக் கொண்டுவர, விதியை மாற்ற நம் அரசாங்கம் முன்வருவது
பால தனிப்பட்ட தொழிலாளர்களுக்கும் ஐ.டி. ஆக்டில் சலுகை செய்ய
வண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, லேபர் கோர்ட்டில் இன்றைய தினம் கிடைக்கக்கூடிய தீர்ப்பை,
கொடுக்கக்கூடிய அவார்டை அமல் நடத்துவதிலே பல சிக்கல்கள் இருக்
கின்றன. குறிப்பாக ஒன்று சொல்ல வேண்டுமென்றுல், சமீபத்திலே
கடந்த ஒரு ஆண்டு காலமாக மூன்று தீர்ப்புகளை ஒரு தனிப்பட்ட முதலாளி
யிடம் பெற்று இருக்கிறோம். அந்தத் தீர்ப்பு ஜீ.ஓ.ஆர்டி. 839, ஐ.எல்.ஸி.
23–5–1963, ஜீ.ஓ.ஆர்டி. 1899, ஐ.எல்.ஸி. 15–10–1963, ஜீ.ஓ.ஆர்டி.
2050, ஐ.எல்.ஸி. 7–11–1963, என்ற உத்தரவுகளில் எம். எம். அலி
மோட்டார் சர்வீஸ், சென்னை என்ற மோட்டார் தொழில் ஸ்தாபனத்தில்
பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் கோர்ட்டுக்குச் சென்று இப்படி
மூன்று தீர்ப்புகள் அங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த
மூன்று தீர்ப்புகளின் மூலமாக தொழிலாளர்களுக்குக் கிடைக்க
வேண்டிய பணம் ரூ. 10,000. அந்த ரூ. 10,000 இதுவரையிலும்
கிடைக்கவில்லை. கோர்ட்டு தீர்ப்பை அந்த முதலாளிகள் அமுல் நடத்த
வில்லை. அப்படி அமுல் நடத்தாததன் காரணமாக நாங்கள் இங்கிருந்து
அரசாங்கத்திற்கு மனுக் கொடுக்கிறோம். அரசாங்கம் அந்த மனுவைக்
கலெக்டருக்கு அனுப்புகிறது. கலெக்டர் ஆர்.டி. ஓ-வுக்கு அனுப்புகிறுர்,
ரெகவரி செய்வதற்காக. ஆர்.டி.ஓ. அதைத் தாசில்தார், கிராம முனிசீப்
புக்கு அனுப்புகிறுர். பெரிய பெரிய முதலாளியிடமிருந்து அவர் எப்படி
ரூ. 10,000 ரெகவரி செய்ய முடியும்? இப்படி ரெகவரி செய்யப்படாமல்
இருப்பதனுல் இன்றையதினம் பல தொழிற்சங்கங்கள் கஷ்டமான நிலை
மையில் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, கோர்ட்டுத் தீர்ப்பை அமல்
நடத்தாவிட்டால், அவர்களுடைய லைசென்ஸை, பெர்மிட்டை ரத்து செய்
வோம் என்று அரசாங்கம் திட்டவட்டமாகக் கூறிவிட்டால், அவர்களுக்குப்
பயம் ஏற்படும். கோர்ட்டுத் தீர்ப்பை அமல் நடத்த வேண்டும் என்ற ஒரு
எண்ணம் அவர்களுக்கு ஏற்படும். அப்படி அவர்கள் அமுல் நடத்தாமல்
இருப்பதன் காரணமாக கோர்ட்டுகளை நம்பியிருக்கிற நிலைமை தொழிலாளி
களுக்கு இல்லாமல் இருக்கிறது. எனவே, அரசாங்கம் உடனடியாக இதில்
தலையிட்டு, அப்படிப்பட்ட தீர்ப்புகளை தீர்ப்புக் கிடைத்து அப்பீல் டைம்
முடிந்ததற்குப் பின்னுலே அந்த சலுகைகளை, அவார்டை உடனடியாக
நிறைவேற்றித் தரும்படியான நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டும்
என்று இந்தச் சந்தர்ப்பத்தில் அதற்கான வழிவகைகள் காணவேண்டும்
என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் நீதிமன்றங்கள் தமிழ் நாட்டில் மூன்று இடங்களில் இருக்
கிறது. மதுரையில் இருக்கிறது, கோயம்புத்தூரில் இருக்கிறது, சென்னை
யில் இருக்கிறது. இந்தக் கோர்ட்டுகள் ஆங்காங்கு சுற்றுப்பிரயாணம்
செய்து வருகின்றன. இந்தக் கோர்ட்டுகளுக்கு வழக்குகளைக்கொண்டு
போவது எவ்வளவு சிரமம் என்பது தெரியும். வழக்குகளைக் கொண்டு



16th March 1964] [திரு. எம். எஸ். மணி]

போய், அங்கு வாய்தாவுக்குச் சென்று, தொழில் கோர்ட்டுக்கு, அந்த
ட்ராவலர்ஸ் பங்களாவில் ஒரு அமைச்சரோ அல்லது அரசாங்க அதிகாரியோ
வந்துவிட்டால், இடம் கிடைக்கவில்லை என்று தொழில் கோர்ட்டு வாய்
தாவை மாற்றிவிடுகிறோம் என்று சொல்லப்படுகிறது. 40, 50 மைலுக்கு
அப்பாலிருந்து தொழிலாளர்கள் செலவு செய்துகொண்டு வந்துவிட்டு,
பிறகு திடீரென்று கோர்ட்டு வாய்தா மாற்றப்பட்டுவிட்டது என்று சொன்
னுல், திரும்பிச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதனுல் மிக
வும் கஷ்டம் ஏற்படுகிறது. பிறகு ஒரு மாதம், 2 மாதங்கள் கழித்து,
மறுபடியும் வாய்தா போடப்படும்பொழுது அங்கு சென்றுல், நிர்வாகத்தில்
உள்ளவர்கள் ஏதாவது காரணம் சொல்லி, உடல் நிலை சரியில்லை என்று
ஏதாவது சாதாரண காரணம் சொல்லி, வழக்கு வாய்தாவை மறுபடியும்
மாற்றிவிடுகிறுர்கள். இப்படிப்பட்ட காரணத்தினுல், வழக்குகள் ஏராள
மாக பெண்டிங்கில் இருக்கிறது. இந்த வழக்குகள் உடனடியாகத் தாம
தம் இல்லாமல் தீர்க்கப்பட வேண்டுமென்று சொன்னுல், தொழில் கோர்ட்டு
கள் நடத்துவதற்குத் தக்க இடங்களை அரசாங்கம் நிர்ணயித்துக் கொடுக்க
வேண்டும். இப்பொழுது உள்ள கோர்ட்டுகளில் சில இடங்களில் சாதாரண
மாக ஒரு டேபிள், நாற்காலி போட்டு, 10 பேர்கள் உட்காரக்கூடிய அள
வுக்கு வசதி செய்து கொடுத்தால்கூட, ஆங்காங்கு இந்தக் கோர்ட்டுகள்
நடப்பதற்கு சௌகரியமாக இருக்கும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில்
தெரிவித்துக்கொள்கிறேன். அல்லது, ட்ராவலர்ஸ் பங்களாக்களில் அவர்
களுக்கு முதல் சலுகை இருக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொழில் நீதிமன்றங்கள் கொடுக்கிற தீர்ப்புகளை அமுல்
நடத்தாத முதலாளிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுல்,
தொழில் கோர்ட்டுகளுக்கு மேலும் பல அதிகாரங்களைப் பெற்றுத் தர
வேண்டும். அப்படிப் பெற்றுத் தந்தால், கோர்ட்டுத் தீர்ப்புக்கு ஒரு மரி
யாதையும் இருக்கும். அவர்களும் அதற்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்
பார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

மற்றும் தொழிலாளர்கள் தொழில் நீதிமன்றங்களில் கோர்ட்டு நட
வடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறபொழுது, அவர்களுடைய வழக்குகள்
விசாரணையில் இருக்கிறபொழுது, திடீரென்று அவர்கள் இறந்துவிட்டால்
வழக்கை நடத்த ஆள் இல்லாத நிலைமையில் வழக்குகளைத் தள்ளிவிட்ட
தாகச் சொல்லப்படுகிறது. ஒரு தொழிலாளி வழக்குப் போட்டு, தொழில்
நீதிமன்றத்தில் அந்த வழக்கு நடந்துகொண்டிருக்கும்பொழுது, அவர்
இறந்துவிட்டால், அவர்களுடைய வாரிசை பார்டியாகச் சேர்த்துக்கொள்
வதற்கு இந்தச் சட்டத்தின்கீழ் வழி வகைகளைக் காணவேண்டும் என்று
அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர் பிரதிநிதியாக ஒரு கோர்ட்டுக்கு ஆஜராகவேண்டு
மென்று சொன்னுல், தொழிற்சங்க பிரதிநிதி ஆஜராக வேண்டுமென்று
சொன்னுல், இன்றையதினம் ரூ. 3.50 கட்டி ஸ்டாம்பு பத்திரத்தில்
ஆதரைஸேஷன் எழுதிக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.
தொழில் சங்கத்தை நடத்துவது எவ்வளவு சிரமமான காரியம் என்பது
கனம் தொழிலாளர் அமைச்சர் அவர்களுக்கு நன்றுகத் தெரியும். அப்
படியிருக்கும்பொழுது, ஒரு தொழிலாளிக்கு பிரதிநிதியாக ஆஜராகவேண்டு
மானுல் ரூ. 3½ ஸ்டாம்புக் கட்டணம் கட்டுவது என்று சொன்னுல்,
அது இயலாத காரியம். ஆகவே, அதிலிருந்து வஜா, தள்ளுபடி செய்து
கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன்.

அதுபோலவே, பல பகுதிகளில் இருக்கிற தொழிலாளர்கள் இந்தச்
சட்டத்தின்கீழ் தங்களுக்கு பாதுகாப்பைப் பெற முடியாத நிலையில்
இருக்கிறுர்கள். தங்கள் கோரிக்கைகளைப் பெற முடியாமல் இருக்கிறுர்கள்.
பொதுவாகச் சொல்லவேண்டுமென்றுல், கூட்டுறவு யூனியனில் இருக்கிற
தொழிலாளர்கள், இதர சத்திரங்களில் உள்ள தொழிலாளர்கள்
ஆஸ்பத்திரிகளில் உள்ள தொழிலாளர்கள், பள்ளிக்கூடங்களில் உள்ள

[திரு. எம். எஸ். மணி] [16th March 1964

தொழிலாளர்கள், இவர்களெல்லாம் இன்றையதினம் தொழிலாளர் நலச் சட்டத்தில் இருக்கிற சலுகைகளைப் பெற முடியாதவர்களாக இருக்கிறார் கள். எனவே, அப்படிப்பட்டவர்களுக்கும், இந்தச் சட்டத்தின்கீழ் பரி காரம் தேடிக்கொள்வதற்கு வழிவகைகள் செய்து கொடுக்க வேண்டும். இந்த ஸ்தாபனங்களில் பணியாற்றுகிறவர்கள் தொழிலாளர் நலச் சட்டத் தின்கீழ் பாதுகாப்புகளைப் பெறலாம், கோரிக்கைகளைப் பெறலாம் என்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுபோல, சர்க்காரில் இருக்கிற தொழி லாளர்களும், கீழ்த்தர சிப்பந்திகளும் தங்களுக்கென்று ஒரு சங்கம் அமைத்து, தொழிற் சட்டத்தின்கீழ் பெறப்படுகிற உரிமைகள், கொடுக்கப் படுகிற உரிமைகளை அவர்களும் பெறுவதற்கு இந்தச் சட்டத்தின்கீழ் வழி வகைகள் காணவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

பொதுவாக, தொழில் கோர்ட்டில் இருக்கிற ஒரு கீழ்த்தர சிப்பந்தி, லேபர் கமிஷனர் அலுவலகத்தில் இருக்கிற சிப்பந்திகள் வெளியூருக்கு டூர் செய்யவேண்டுமென்றால், அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற 'bata' ஒரு ரூபாய்தான் என்று சொல்லப்படுகிறது. இந்த ஒரு ரூபாயை வைத் துக்கொண்டு வெளியூர்களில் இவர்கள் எப்படி சமாளிக்க முடியும்? தங்களுடைய உயர் அதிகாரிகளுக்கு எப்படி கீழ்ப்படிந்து நடக்க முடியும். இதனால், அங்கே பல தவறுகள் ஏற்படுகின்றன. கீழ்த்தரமான முறையில் அவர்கள் மற்றவர்களின் முன்னால் கையை நீட்டுவதற்கு வழிவகையாக அமைகிறது. ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற 'bata' போதுமான அளவுக்கு அதிகமான அளவுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

லேபர் கமிஷனர் அலுவலகத்தைப் பொறுத்தவரையில், இன்றைய தினம் தமிழக மாநிலத்தில் ஒரு லேபர் கமிஷனர், ஒரு டெபுடி கமிஷனர், மற்றும் 4 துணைக் கமிஷனர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் தலைமை அலுவலகம் இன்றைய தினம் சென்னையில் இருக் கிறது. ஒரு கமிஷனர் வொர்க்மென்ஸ் காம்பன்ஸேஷன் சட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். மற்றொருவர் பிளாண்டேஷன் ஸ்டான் டிங் ஆர்டர்ஸ் இவைகளைக் கவனித்துக்கொள்கிறார். டிஸ்பியூட்ஸ், தகராறு களைப் பார்த்துக்கொள்ள இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். ஒருவர் அட் மினிஸ்ட்ரேஷனைக் கவனித்துக்கொள்கிறார். இவர்கள் அத்தனை பேர் களும் சென்னையில் இருக்கும்பொழுது, வழக்குகளை விசாரிக்க வேண்டு மென்று விரும்பினால், அத்தனை பேர்களும் வெளியூருக்கு டூர் செய்ய வேண்டிய ஒரு நிலைமை ஏற்படுகிறது. இதனால் அரசாங்கத்திற்கு செலவு அதிகமாக ஆகிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். எனவே, 12 ஜில்லாக்கள் இருக்கின்றன என்று சொன்னால், நாலு கமிஷ னர்கள் போட்டு, ஒவ்வொரு மூன்று மாவட்டங்களையும் சேர்த்து ஒரு கமிஷ னர் அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவர வேண்டும். இத்தனை சட்டங்களையும் ஒரு கமிஷனரே, ஒரு துணைக் கமிஷனரே கவனித்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, திருச்சி, தஞ்சாவூர், சேலம் போன்ற மூன்று ஜில்லாக்க களுக்கும் ஒரு கமிஷனர் போட்டு, அதைத் தலைமை ஸ்தலமாக மாற்றி விட்டால், உள்ளபடியே சுற்றுப் பிரயாணச் செலவை நாம் குறைக்கலாம், உடனுக்குடன் வழக்குகளைத் தீர்த்துவிடலாம் என்பதை இந்த சந்தர்ப்பத் தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோலவே, அவர்களுக்கு இன்றையதினம் போதுமான அதிகாரம் இல்லை. ஒரு லேபர் கமிஷனர் அல்லது ஒரு துணைக் கமிஷனர் ஒரு இடத்திற்கு வழக்கை விசாரிக்க வந்தால், தொழிலாளர் பிரதிநிதிக்கு ஸம்மன் அனுப்புகிறார், முதலாளிக்கும் ஸம்மன் அனுப்புகிறார். ஆனால், முதலாளி அந்த ஸம்மனை மதிப்பதே இல்லை. மதிக்காமல் இருப்பதுமட்டு மல்ல. லேபர் கமிஷனர் வந்துவிட்ட பிறகு, நாங்களும் வந்துவிட்ட காரணத்தினால், முதலாளியைக் கூப்பிட்டு எப்படியாவது சமாதானம் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் போனில் கூப்பிட்டால், இந்த அதிகாரிகளிடத்திலிருந்து தப்பித்துக்கொள்ள, அதிகாரிகளை விரட்டி யடிப்பதற்கு நிர்வாகத்திலுள்ள முதலாளிகள் என்ன செய்கிறார்கள்?



16th March 1964] [திரு. எம். எஸ். மணி]

'நான் உடனே சென்னையில் மந்திரியைச் சந்திக்க வேண்டும். எனவே, ஒத்திப்போட வேண்டும்' என்று சொல்லுகிறார்கள். மந்திரியைச் சந்திக்க வேண்டுமென்று சொன்னால், உடனே உதவி லேபர் கமிஷனர் 'மந்திரிக்கு வேண்டியவர் போல் இருக்கிறது, ஆகவே நாம் பயந்து நடக்கவேண்டும்' என்ற ஒரு நிர்ப்பந்தம் உண்டாகிறது. ஒரு நெருக்கடி நிலையை அவர் களுக்கு உண்டாக்குகிறார்கள். எனவேதான், அவர்களுக்கு பிராஸிகியூஷன் பவர் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் அதிக மான அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். நல்ல அந்தஸ்தை அவர் களுக்குக் கொடுக்க வேண்டும். உள்ளபடியே சர்க்காரில் உயர்ந்த அந் தஸ்து உள்ளவர்களாக அவர்கள் மதிக்கப்பட வேண்டும். ஒரு எம்.வி. இன்ஸ்பெக்டருக்கு இருக்கிற அதிகாரம்கூட அவர்களுக்கு இல்லாத காரணத் தினால், தொழில் துறையில் இருக்கிற பெரிய முதலாளிகள், லட்சாதிபதி கள், அவர்களை மதிப்பதில்லை. எனவே, பல வழக்குகள் சமாதானமாக தீர்க்கப்படாமல் கோர்ட்டுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஆண்டின் நிதி நிலை அறிக்கையின் விவாதத்தின்போதும், இந்த மானிய விவாதத்தின் போதும் குறிப்பிட்டேன். கனம் தொழில் அமைச்சர் அவர்களுக்கு ஒரு உத்திரவாதம் கொடுத்தார்கள். என்ன உத்திரவாதம்? சீனா இந்தியா மீது படையெடுத்ததால், நெருக்கடி நிலை மையில், நெருக்கடி நேரத்தில், தொழிலாளர்களின் சார்பாக எவ்வளவு இன்னல்கள் வந்தாலும் வேலை நிறுத்தம் செய்யவில்லை என்ற உத்திர வாதம் கொடுக்கப்பட்டது. அப்படி வேலை நிறுத்தம் செய்யாமல் இருந் தும், இன்றையதினம் பல முதலாளிகள் தொழிலாளர்களை வஞ்சம் தீர்க்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே நான் நேற்றுகூட புதுக்கோட்டையிலே ஒரு வேலை நிறுத்தத்திற்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருந்தால்தான் இந்த நாடு நல்ல முறையில் முன்னேற முடியும் என் பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மோட்டார் தொழிலாளர் சட்டம் வந்து இரண்டு வருடம் ஆகிறது. கடந்த ஆண்டிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். மற்ற மாநிலங்களிலே இந்தச் சட்டம் அமல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் நம்முடைய மாநிலத் திலே இந்தச் சட்டத்திற்கு இன்னும் விதிகள் தயாரிக்கப்படவில்லை. இந்த விதிகளைத் தயாரித்து, அடுத்த மன்றக் கூட்டத்திற்குள் கொண்டு வந்து விடுவேன் என்று சென்ற கூட்டத்திலே நமது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னும் விதிகள் தயார் செய்யப்படவில்லை. அதைச் சுட்டிக் காட்டி, உடனடியாக இந்த விதிகளைத் தயார் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் லேபர் ஆபீசர்கள் இருக்கிற ஆபீஸ் கட்டடங்கள் பெரும் பகுதி வாடகைக் கட்டடங்களாகவே இருக்கின்றன. இதனால் ஏராளமான அரசாங்கத்தின் பணம் வாடகைக்காக செல்லுகிறது. எனவே லேபர் அதிகாரிகளுக்கு ஆங்காங்கே அரசாங்கம் சொந்தத்திலே கட்டடம் கட்டிக் கொடுத்து, அந்தக் கட்டடங்களின் ஒரு பகுதியிலேயே லேபர் அதிகாரிகளும் மற்றுமுள்ள சிப்பந்திகளும் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால், திடீரென்று ஒரு போராட்டம் ஏற்பட்டால், வேலை நிறுத்தம் ஏற்பட்டால், ஸ்டே-இன்-ஸ்டிரைக் ஏற்பட்டால் உடனடியாக லேபர் அதிகாரிகள் சென்று பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். அரசாங்கம் கட்டடங்கள் கட்டுகிற நேரத்தில், அந்த அதிகாரி களுக்கும், அதைச் சார்ந்த சிப்பந்திகளுக்கும் விடுதிகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் காரணமாக பல ஆயிரக் கணக்கான ரூபாய்களையும் மீதப்படுத்தலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல தொழில் ஸ்தாபனங்களில் இன்றைய தினம் தொழிலாளர் களுக்கு பாக்டரி சட்டத்தின் கீழிருக்கிற உரிமைகளைக் கொடுப்பதில்லை. லேபர் இன்ஸ்பெக்டரும் அதைச் சரிவர கண்காணிக்க முடியாத நிலைமை இருக்கிறது. அப்படிக் கண்காணித்தால், அவர்களுக்கு பல தொல்லைகள்

[திரு. எம். எஸ். மணி] [16th March 1964

ஏற்படக்கூடிய நிலைமையும் இருக்கிறது. லேபர் இன்ஸ்பெக்டர்கள் இந்த
பாக்டரி சட்டத்தின் கீழ் இருக்கிற சலுகைகள் தொழிலாளர்களுக்கு ஒழுங்
கான முறையில் கொடுக்கப்படுகின்றனவா என்பதைப் பார்த்து, அப்படிக்
கொடுக்காவிட்டால், உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்
என்ற நிலைமை இருக்கவேண்டும். அதைப் போலவே இன்றைய தினம்
பி.டபிள்யூ.டி-யில் வேலை செய்கின்ற மேஸ்திரிகளும், கண்காணிப்பாளர்
களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 10 ஆண்டு, 15 ஆண்டு காலம் பணி
ஆற்றியும், இன்னும் டெம்பரரியாகவே இருக்கிறார்கள். மற்றவர்களுக்குக்
கொடுக்கப்படுகிற சலுகைகள் கொடுக்கப்படவில்லை. ஞாயிற்றுக்கிழமைகூட
வேலை வாங்கப்படுகிறார்கள். அந்த மேஸ்திரிகள் அனைவரும் அதிகாரி
களுடைய வீடுகளில் வேலை செய்யவேண்டும். சுய மரியாதை உள்ள
ஒருவன் ஒரு அதிகாரி வீட்டில் வேலை செய்ய முடியாது என்று சொன்
னால், உடனடியாக டிஸ்மிஸ் செய்யப்படும் நிலைமை இருக்கிறது. இவற்றை
மாற்றி அமைக்கவேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அவர்
களுடைய கோரிக்கைகள் இன்றைய தினம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது.
அவற்றை நல்ல முறையில் பரிசீலனை செய்து, அவர்களுடைய குறைகளைத்
தீர்க்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

தங்கக் கட்டுப்பாட்டின் காரணமாக, பல ஆயிரக் கணக்கான தொழி
லாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தங்கக் கட்டுப்பாடு சட்டம் கொண்டு
வந்த நேரத்தில், இது தேவையில்லை என்று சொன்னோம். மத்திய
சர்க்கார் கொண்டுவந்து விட்டார்கள். அதனால் பல நன்மைகள் இருக்
கின்றன என்று அப்பொழுது சொன்னார்கள். இப்பொழுது கொஞ்சம்
தளர்த்தியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு அரசாங்கம்
உதவி செய்கிறது. ஆனால் அப்படி உதவி அளிக்கின்ற தொகையை
உடனடியாக வசூலிக்காமல், கொடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு,
10 ஆண்டுகள் வரையில், கொஞ்சம் கொஞ்சமாக தவணைகளில் வசூல்
செய்தால், அவர்கள் தொழிலை நல்ல முறையில் நடத்த முடியும்.
அரசாங்கம் ஏதாவது திட்டம் போட்டால் கூட, முதல் இரண்டு,
மூன்று ஆண்டுகளில் லாபத்தை எதிர்கபார்க்க முடியாது என்று தொழில்
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற
கடனை சிறுகச் சிறுக 10 ஆண்டு தவணைகளில் திருப்பிப் பெறலாமென்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுகள் நல்ல முறையில் வேலை வாய்ப்
பைத் தேடித் தருகின்ற ஒரு ஸ்தாபனமாக இயங்கவில்லை என்று குற்றச்
சாட்டைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மத்திய சர்க்கார் சார்பிலே ஒரு
ஹெவி பாயிலர் ஸ்தாபனத்தை திருச்சியிலே வைத்திருக்கிறார்கள். அது
ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதே தவிர, திருச்சி மாவட்டத்தில் உள்ள தொழி
லாளர்களை அங்கே வேலைக்கு எடுத்துக்கொள்வது இல்லை. மற்ற
மாநிலங்களில் உள்ளவர்கள்தான் சேர்க்கப்படுகிறார்கள். எந்தப் பகுதி
நிலத்தை நாம் மத்திய அரசாங்கத்துக்கு கொடுத்தோமோ, அந்தப் பகுதியில்
உள்ள தொழிலாளர்கள் அங்கு வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவது
இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆந்திர முன்னாள் முதல் அமைச்சர்
திரு. சஞ்சீவ ரெட்டி அவர்களும், இதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள்.
குறைந்த பட்சம் 50 சதவிகிதமாவது எந்தப் பிரதேசத்தில் தொழிற்சாலை
களை நடத்துகிறோமோ அந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்களை
வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.
ஆகவே நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்துக்கு சிபார்சு செய்து,
ஏதாவது பெரிய தொழில்கள் மத்திய அரசாங்கத்தின் சார்பாக வைக்கப்
பட்டால் அந்தப் பிரதேசத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு முதல்
வாய்ப்பு கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்த வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. தொ. மு. நல்லசாமி: சபைத் தலைவர் அவர்களே, நம்முடைய
முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மானியக் கோரிக்
கையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்ல விரும்பு
கிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், பெருவாரியான
வர்கள் முன் வந்து தொழில்களை நடத்த ஆவல் உள்ளவர்களாக இருக்



16th March 1964] [திரு. தொ. மு. நல்லசாமி]

கிறார்கள் என்று சொன்னால், ஓர் அளவு நம்முடைய மாநிலத்தில்
அனுசரிக்கப்பட்டு வரும் தொழில் கொள்கைதான் அதற்குக் காரணம்
என்று சொன்னால் அது மிகையாகாது. 10 வருடங்களுக்கு முன்னர் பல
தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு, அதனுடைய விளைவுகள்
முற்றிப்போய், கதவடைப்புகள் என்று எல்லாம் கேள்விப்பட்டு வந்தோம்.
இப்பொழுது அந்த நிலைமை இல்லை. அதற்குக் காரணம் நம்முடைய
மாநில அரசாங்கம் அனுசரித்து வரக்கூடிய தொழிற்கொள்கை என்று
சொல்வதோடுகூட, தொழில் ஸ்தாபனங்களுக்கும், தொழிலாளர்களுக்கும்
எத்தகைய ஒரு உறவு இருக்க வேண்டும் என்பதை நல்லபடியாக உணர்ந்த
ஒருவர் இந்த தொழில் இலாகாவில் இருப்பதால் குறிப்பாக கனம் ஆர்.
வெங்கட்ராமன் அவர்களைக் கொண்ட இந்த இலாகா நல்ல முறையில்
இயங்கி வருவதனால்—இது சாத்தியமாக இருக்கிறது என்பதை தெரிவித்துக்
கொள்ளுகிறேன். அவர் தொழிலாளர்கள் இயக்கத்திலே நீண்ட காலம்
பணி செய்தவர். ஆகையினால் அவருக்கு தொழிலாளர்களுடைய மனோ
பாவமும், இம்மாதிரி தொழில்களுக்கு மூலதனம் போட்டு நடத்தக்
கூடியவர்களின் மனோபாவமும் நன்கு தெரியும். ஆங்காங்கு சில தவறு
கள் ஏற்பட்டால் கூட, அவரே நேரில் சென்று அந்தத் தவறுகளை நிவர்த்தி
செய்யும் முறையில் இந்த இலாகா இயங்கி வருவது மிகவும் பாராட்டுக்
குரியது. நம்முடைய நாட்டில் உள்ள மற்ற மாநிலங்களும் நம்மைப்
பார்த்து பின் பற்றக்கூடிய வகையிலே நமது தொழில் இலாகா அமைந்து
இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பெரும்பாலா
னவர்கள் தங்களுடைய மூலதனத்தைப் போட்டு இங்கே தொழில் நடத்த
விரும்பினால் அதற்கு இங்கு இருக்கக்கூடிய அமைதி தான் காரணம்.
நாம் இந்த வகையிலே பெருமைப்படக்கூடிய ஒரு நிலையில் தான் இருந்து
வருகிறோம். இவ்வளவு நல்ல கொள்கையை நாம் அனுசரித்து வந்த
போதிலும், இன்றைக்கு தேவையான சட்டங்களை இயற்றிய போதிலும்
இன்றைக்கு தொழிலாளர்கள் அரசாங்கத்தின் மீது குறைபட்டுக்கொள்ளக்
கூடிய நிலைமை இருக்கிறது என்று சிலர் சொன்னார்கள். இதற்குக்
காரணம் அந்தத் தொழிற்சங்கங்களை தொழிலாளர்களே நடத்தாமல்
வேறு லட்சியங்களை உடையவர்கள், வேறு நோக்கங்களைக் கொண்டவர்கள்
அவற்றை நடத்துவதுதான் என்பது என்னுடைய கருத்து. எதிர்காலத்
தில் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களில் அந்தந்த தொழில்களில் வேலை
செய்கின்றவர்களே. தலைவராகவும், காரியதரிசியாகவும், நிர்வாகக் குழு
வினராகவும் இருந்து பணியாற்றக்கூடிய ஒரு சூழ் நிலையை ஏற்படுத்த
வேண்டும். அப்பொழுது தான் அவர்களுடைய கஷ்டங்கள், குறைகள்
இவற்றை எல்லாம் பேச்சு வார்த்தைகள் மூலமோ அல்லது மற்றவகை
யிலோ அல்லது சர்க்காரை அணுகியோ தீர்த்துக்கொள்ள வழி ஏற்படும்.
ஆனால், இன்று வேறு நோக்கங்களை, இன்னும் தெளிவாகச் சொல்ல
வேண்டுமானால், அரசியல் கட்சிகளை வளர்க்கவேண்டும் என்ற எண்ணம்
படைத்தவர்கள் தொழிலாளிகளுடைய குறைகளுக்கு என்று இல்லாமல்
வேறு நோக்கங்களை மனதில் கொண்டு முடிவு பெருத நிலையை உண்டாக்கி
வருகிறார்கள். ஆகவே தொழிற்சங்கங்களை தொழிலாளிகளே அதிலே
நடத்தவேண்டும் என்று சட்ட திட்டங்களை இயற்ற முடியுமானால் அதிலே
அரசாங்கம் வழிகாட்டியாக இருந்தால் அது நாட்டுக்கு செய்த பெரும் பணி
யாக இருக்கும். ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்த காலத்திலே டிரேட்
யூனியனிலே பழக்க, தொழிலாளர்களுக்கு டிரெயினிங் வகுப்புகள் வைக்க
வகை செய்து இருப்பது தொழில்களைப் பெருக்க எடுத்துவரும் முயற்சி
யாகும். டிரெயினிங் கொடுத்து வருவது இது பாராட்டத்தக்கது.

ஒரே பொருளை உற்பத்தி செய்யும் பல தொழிற்சாலைகளை பார்த்தால்
சில குறைகள் தென்படுகின்றன. ஒரு தொழிற்சாலையில் இருக்கும் வசதி
கள் மற்ற தொழிற்சாலையில் கொடுக்கப்படுவது இல்லை. அப்படி வசதிக்
குறைவு இருந்த போதிலும் திறமையின் காரணமாக நல்ல முறையில்
செயல்படுவதை சென்ற ஆண்டு மதிப்பீட்டுக் கமிட்டியில் தலைவன் என்ற
முறையிலே பல ஆலைகளை பார்க்கும்போது தெரிய வந்தது. நல்ல வசதி
களை ஏற்படுத்தியிருக்கும் தொழிற்சாலையையும் பார்த்தோம். அம்மாதிரி
வசதிகள் இல்லாத வேறுபட்டுள்ள தொழிற்சாலையையும் பார்த்தோம்.
ஒரே பொருளை உற்பத்தி செய்யும் ஒரு பாக்டரியில் வசதிகள் நிறைய

இருந்ததையும் மற்றொரு பாக்டரியில் அப்படி இல்லாததையும் பார்த்தோம்.
அதைத் தீர்க்க ஒரு நல்ல யோசனையை சொல்ல விரும்புகிறேன். இன்றை
க்கு ஒவ்வொரு தொற்சாலையிலும் லேபர் வெல்பேர் ஆபீஸர் என்று
ஒரு உத்தியோகஸ்தர் இருக்கிறார். அந்த ஆபீசர் 100க்கு 100 அந்தத்
தொழிற்சாலையில் ஊதியம் பெறுவதால் அவருடைய வேலை என்ன
என்றால் முதலாளிகளுக்கு எவை எவை சாதகமானதோ அவைகளையே
செய்கிறார்கள். தொழிலாளிகளின் நலன் என்ன என்பதில் அவர்கள்
கவனம் செலுத்த முடிவது இல்லை. லேபர் வெல்பேர் ஆபீசர் சர்க்கார்
அதிகாரியாக இருந்தால் நாம் போடும் சட்டங்களுக்கு இன்டர்ப்ரட்டேஷன்,
விளக்கம் கொடுக்கும்போது யாருக்கும் சாதக பாதகம் இல்லாமல், மூல
தனம் போட்டவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் இரண்டு பேருக்கும்.
மத்தியமாய் விளக்கம் கொடுக்க முடியும். பாக்டரியில் இருக்கும் வெல்
பேர் ஆபீசர் இன்றைக்கு பாக்டரிக்குச் சாதகமாக விளக்கம் கொடுத்து
காரியங்களைச் செய்கிறார்கள். அந்த உத்தியோகஸ்தர்களை சர்க்கார் லேபர்
ஆபீசர்களாக மாற்றினால் அநேக தகராறுகளை உடனுக்குடன் தீர்க்க
முடியும். அப்படிப்பட்ட ஏற்பாட்டினால் சர்க்காருக்கு அதிகச் செலவு
ஏற்படும் என்றால் அதை வேறு வகையில் ஈடு செய்து கொள்ள முயற்சி
எடுக்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். மாநில அரசாங்கம்
இன்றைக்கு நல்ல அதிகாரிகளைக் கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை
களை அவ்வப்போது எடுத்து தகராறுகளை தீர்க்கிறார்கள். அப்படி தீர்க்க
முடியாத பிரச்னைகளை மட்டுமே அட்ஜூடிகேஷனுக்கு அனுப்புகிறார்கள்.
அதற்கும் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருவதால் அமைதி இருக்கிறது.
அதோடு கூட மூலதனம் போட்டு நடத்துகிறவர்களையும் தொழிலாளிகளை
யும் நியாயமாக ஆதரிப்பதின் மூலம் அமைதியை நிலைநாட்ட
முடிகிறது. மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்து பெருமைப்
படும் அளவுக்கு செயலாற்றுவதற்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்
கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

***திரு சா. கணேசன் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது
சபையின் முன்னே சமர்ப்பிக்க பெற்றிருக்கிற மானியக் கோரிக்கைக்கு
நான் ஒரு வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறேன். அது 405 ஆவதாக
எண்ணத்தைப் பெற்று இருக்கிறது. அதை வற்புறுத்தி நான் சொல்லு
கின்ற கருத்துக்கள் வருமாறு.

தொழிலாளிகளைப் பற்றியும், அவர்கள் வேலை செய்கின்ற உற்பத்தி
சாலைகளைப் பற்றியும் சிந்திக்கப்பட வேண்டிய துறை இது. பொதுவாக
நோக்குகின்ற இடத்திலே தொழிலாளிகளுக்கு சில வாய்ப்புகளோ,
சலுகைகளோ, இருப்பதாக தோன்றினாலும் கூட, பூரணமானதாக
அமையவில்லை என்பதை உணர வேண்டும். குறிப்பாகச் சொன்னால்
தேசீயக் கொள்கைகளை நிர்ணயிக்கும்போதே தொழிலாளிகளைக் கலந்து
அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டு, அவற்றை ஒட்டி தேசீயக்
கொள்கைகள் நிர்ணயிக்கப் பெற வேண்டும். தொழிலாளிகள் என்றால்,
பாக்டரி தொழிலாளிகளை மட்டும் நான் குறிப்பிடவில்லை. எல்லாத்
துறையிலும் தொழில் புரிகின்ற அந்த ஒரு பெரு வர்க்கத்தை குறிப்பிடு
கிறேன், விவசாயத் தொழில் உள்பட. அது பல ஆண்டுக் காலமாக
நாட்டிலே நிலவி வந்த ஒன்று, என்பதை இந்நாட்டு வரலாற்றுக் குறிப்பேடு
கள் நமக்கு புலப்படுத்தும். பழங்காலத்திலே உள்ள நிலைகளை எடுத்துக்
கொண்டால், சாசனங்களிலே நுழைந்து பார்த்தால் அந்த உண்மை
புலனாகும். "ஊர் கூடிற்று" என்று சொல்லப் பெறும். அதன் மூலம்
அந்த ஊரிலே உள்ள பல துறையினரும் கூடினர் என்று பொருள்படும்.
ஊர் என்றால் ஒரு வரம்புக்கு உட்பட்ட, எல்லைக்குள் உள்ள எல்லாத்
துறை மக்களையும் சேர்த்துத்தான் "ஊர் கூடிற்று" என்று சொல்லப்பெறு
கிறது. ஊர் என்றால், டவுன், வில்லேஜ் என்ற பொருள் அல்ல. ஊர்
என்றால் எல்லாத் துறைகளிலும் சம்பந்தப்பட்ட மக்கள் என்பது பொருள்.
அப்படியே "நாடு கூடிற்று" என்று சொன்னால் நாட்டிலே உள்ள எல்லாத்
துறை மக்களும் கூடினார்கள் என்பது பொருள். "நகரம் கூடிற்று"
என்று சொன்னால் அந்த எல்லைக்கு உட்பட்ட வணிகர்கள் கூட்டம்—
சேம்பர் ஆப் காமர்ஸ் என்று இப்பொழுது சொல்லுகிறோமே, அது பழங்



காலத்தில் நகரம் என்று சொல்லப்பெறும்—கூடிற்று என்று
பொருள். அதற்குள்ளேயும்கூட மாசனம் என்று தமிழ் மரபிலே
சொல்லப்பெறும். சம்ஸ்கிருதத்திலே மகா ஜனம் ; இப்பொழுது
"ரெப்ரசென்டேடிவ், டெலிகேட்" என்றெல்லாம் ஆங்கிலத்திலே சொல்லு
கிறோமே அதுதான் மகா ஜனம். தனித் தமிழிலே பெரு மக்கள் என்று
சொல்லப் பெறும். மகா ஜனத்தின் மூலச் சொல்லாக இருப்பது பெரு
மக்கள் ; அதன் மொழி பெயர்ப்பைப் போல் மகா ஜனம் தோன்றும்.
அது அங்குள்ள பிரதிநிதிகள், ரெப்ரசென்டேடிவ்ஸ் என்ற பொருளிலே
அமையும். அவர்களெல்லாம் கூடித்தான் நாட்டின் எல்லா விவகாரங்கள்,
வழக்குகள் இவற்றைக் காண்பார்கள், நிறைவேற்றுவார்கள், ஆயிரம்,
பல்லாயிரம் ஆண்டுகளாக. நான் தமிழ் நாட்டை மட்டும் குறிப்பிட
வில்லை ; கன்யாகுமரி முதல், ஹிமாசலம் வரை பரந்து கிடக்கும் பரத
கண்டத்திலே, நமது நாட்டிலே கிடைக்கும் கல் வெட்டுகளில், சாசனங்
களில் உள்ள சான்றுகள், வரலாற்றுக்குரிய இவை எல்லாம் நமக்குக்
காட்டுகின்றன. இதை மனத்தில் கொண்டால், தொழில் துறையிலே
உள்ளவர்கள் ஒரு ஆட்சிக் கொள்கையை, தேசீயக் கொள்கையை நிர்ண
யிக்கும்போது, நிலைநாட்டும் போது, நிறைவேற்றும்போது, தங்களுடைய
கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தருவதும், ஆட்சியிலே உள்ளவர்கள்
அவர்களுடைய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் இன்றியமை
யாதவை என்று நான் சொல்ல வேண்டும் என்பது இல்லை. எல்லோருமே
ஏற்றுக்கொள்வார்கள். சென்ற காலம் வரை, சில ஆண்டுகளுக்கு
முன்பேகூட, எல்லாத் துறைகளிலும் உள்ளவர்களுக்கும் பிரதிநிதித்
துவம் சட்ட மன்றங்களிலே இருந்தன, தொழில் துறைக்கு, ஆசிரியர்
துறைக்கு, பட்டதாரிகள் துறைக்கு, வாணிகத் துறைக்கு என்றெல்லாம்
இருந்தன. இந்த முறையை எடுத்து விடுவது நல்லதல்ல என்பது
என்னுடைய அழுத்தமான கருத்து. எல்லாத் துறைகளிலும் உள்ள
வர்கள் கூடினால்தான், நிபுணத்துவம் வாய்ந்த செம்மையான திறமை
யான அமைப்புகளை, சட்டங்களை, விதி வகைகளை நிறைவேறும் நெறிகளை
வகுக்க முடியும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்றே நான்
கருதுகிறேன். இப்பொழுது ஆசிரியத் துறையிலே இருக்கின்றவர்களுக்கு
இருக்கும் சலுகைகூடப் போய் விடும் என்று எண்ணுகிறோம். அதைப்
பற்றி இப்பொழுது பேசவேண்டாம் என்று எண்ணுகிறேன். அப்படி இந்தத்
துறைகளுக்குள்ள சலுகைகள் போனால், அது மொத்தத்தைப் பாதிக்
கும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. உடம்பு என்பது ஒன்றுதான்.
யாரும் மறுக்கவில்லை. ஆனால், காது வேண்டாம், கண் வேண்டாம்,
மூக்கு வேண்டாம் என்று தள்ளிக்கொண்டே போனால், உடம்பே இல்லாத
நிலை வந்துவிடும் என்பதை நாம் மறந்து விடப்படாது. அத்தனையும்
கூடி, அத்தனையும் இணைந்து, அத்தனையும் பிணைப்பட்டுத்தான் ஒரு
பிண்டமாக, ஒரு உருவமாக அமைகிறது என்பதை நாம் மறந்து விடு
வதற்கோ அல்லது மறுத்து விடுவதற்கோ இல்லை. அந்த நிலையிலே,
தொழிலாளர் வர்க்கத்திற்கும் பூரணத்துவமான பிரதிநிதித்துவம் எல்லா
துறையிலும், சிறப்பாக ஆட்சித் துறையிலே அமைவதற்கு நாம் வழி
வகை செய்ய வேண்டும்.

அதே நேரத்தில், இப்பொழுது தொழிலாளர்கள் பற்றிப் பேசுகின்ற
பலரும் உரிமையை மட்டுமே நிலைநாட்டி வற்புறுத்திப் பேசி வருவதை
நாம் அறிவோம். உரிமையோடுகூட கடமையினுடைய இன்றியமையாத்
தன்மையையும் அவசியத்தையும் வற்புறுத்த எல்லாத் துறையிலும் முயல
வேண்டும். தொழில் துறையில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள், தொழில்
துறையிலே முதல் இட்டுச் செயலாற்றுகின்ற நிர்வாகிகள், அல்லது அமைப்பா
ளர்கள் அல்லது முதலாளிகள்—எந்தச் சொல் வேண்டுமானாலும் வைத்துக்
கொள்ளட்டும்—இவர்களுக்கிடையே, கருத்து வேறுபாடு ஏற்படுமானால்,
அவற்றை இருவருமே ஒருங்கு இருந்து, ஆய்ந்து, தேர்ந்து,
தெளிந்து முடிவு கட்டுகிற வாய்ப்பை ஆட்சி வற்புறுத்த வேண்டும்.
நம்முடைய தீர்ப்பை திணிப்பது பெரிதல்ல. தீர்ப்பைத் திணிப்பது
ஆட்சிக்கு மிக எளிது. ஆனால், அது நிரந்தரமான பயனைத் தரமாட்டாது.
உழைப்பவனும், உழைப்பைப் பெறுகிறவனும் இருவரும் ஒருங்கு
இருந்து, சமத்துவமாக இருந்து, பலாபலனை, லாப நஷ்டத்தை, நன்மை

மையை கணித்து அறிந்து ஒரு முடிவுக்கு வர அவர்களே முயலக்கூடிய ழிவகைகளை, வாய்ப்புகளை, கட்டுக்கோப்புகளை நாம் அமைக்க வேண்டும். ருங்கிருந்து பேசுவது" என்ற சொற்கள் வருகிறபோதே, வேலையை றுப்பதற்கோ அல்லது வேலையை நிறுத்துவதற்கோ தொழிலாளர்களுக்கு ரிமை உண்டு என்பது அதனுள்ளேயே பெறப்படுகிற ஒன்று. ஒருங் ருந்து பேசத் தொடங்கியவுடனேயே தொழிலாளர் வேலை மறுப்பு ஸ்ட்ரைக்) அல்லது வேலை நிறுத்தம் (ஹர்த்தால்) இவற்றைச் செய்வதற்கு உரிமைகள் அதற்குள்ளேயே அடங்கிக் கிடக்கின்றன என்ற ஒன்றை நாம் மறந்து விடுவதற்கில்லை. இம்மாதிரியான ஒரு அடிப்படையை வகுக்க ஆட்சி முயல வேண்டும். அதே நேரத்தில், தொழிலாளர்களுக்கு ஆக்கமும் ஒரு உத்வேகமும் ஏற்படுவதற்கு, முதல் போட்டவனுக்கு எப்படி லாபத் தொகையிலே பங்கு பிரித்துக்கொள்ள உரிமை உண்டோ அதைப் போல, உடலுழைப்பைக் கொடுத்த தொழிலாளர்களுக்கும், அந்தத் துறை யிலே விளைகிற, கிடைக்கிற, பெறுகிற லாபத்திலே பங்கு பெறும் உரிமை உண்டு என்று வரையறை செய்ய வேண்டும்.

வேலை நேரக் கட்டுப்பாடு என்ற ஒன்றை எடுத்துவிடவேண்டும் என்று நான் விரும்புகிறேன். வேலை நேரக் கட்டுப்பாடு என்ற வகையில், காலை 8 மணிக்கு வரவேண்டும், மாலை 6 மணி வரை இருக்கவேண்டும், நடுவில் ஒரு மணி இரண்டு மணி ஓய்வு என்று சொல்வதனாலே எத்தனை இன்னல் கள், சங்கடங்கள் ஒன்றையொன்று ஒட்டி, சங்கிலித் தொடர் போல், விளைகின்றன என்பதை இந்தத் துறையிலே சிறிது கவனம் செலுத்துகின்றவர் கள் கூட நன்றாக உணர முடியும். தொழிலாளர்கள் வேலைக்கு தயாராக இருப்பார்கள். அங்கே மின்சாரம் இல்லாமலிருக்கும். வேலை ஓடாது. மணிக்கணக்கு வந்து விடும். வேலை போய்விடும். அப்புறம் என்ன ஆகும்? அந்தத் தொழிற்சாலையில் அந்தத் துறைக்குச் செலவு அதிகம் ஆகும். செலவு அதிகம் ஆகிறது. பண்ட உற்பத்தியோ குறைகிறது. பண்ட உற்பத்தி குறையும் போது, விலை ஏறுகிறது. விலை ஏறினால் எல்லாக் கஷ்டமும் வந்து அடியிலே இருக்கிற என்னையும் உங்களையும் போன்றவர்களைப் பாதிக்கிறது. இந்தக் கஷ்டம் அத்தனையும் துய்ப்போர் (consumers) தலையிலே வந்து, அவர்கள் சுமக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதை மனத்திலே கொள்ள வேண்டும்.

வேலைக்குத் தக்க கூலி என்று நிர்ணயித்து விட வேண்டும். தெம்பு உள்ளவன் எட்டு மணி வேலை செய்வதற்குப் பதிலாகப் பத்து மணி வேலை செய்தால் உலகம் ஒன்றும் குடி முழுகி விடாது. லாபம் தேசத்திற்குத் தானே. தெம்பு இல்லாதவன் ஆறு மணி உழைத்துவிட்டுப் போகட்டும். செய்த அளவுக்குக் கூலி.

இப்பொழுது சொல்லப்படுகிற சோஷலிசத்தைவிட அற்புதமான முறை காந்தீயப் பொருளாதாரத் திட்டம். இங்கே எல்லாம் வேலைக்குத் தகுந்த கூலிதான் இருக்கும். காந்தீயப் பொருளாதாரத் திட்ட அடிப்படையில் பார்த்தால், சக்திக்குத் தக்க உழைப்பு. தேவைக்குத் தக்க கூலி.

சக்திக்குத் தகுந்த உழைப்பு, உழைப்புக்குத் தகுந்த கூலி என்பது இப்பொழுது காணப்படுகிற சர்வ தேசீய சோஷலிஸ அமைப்பு. ஆனால், காந்திய சோஷலிச முறையிலே, சக்திக்குத் தக்க உழைப்பு, தேவைக்குத் தக்க கூலி.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது கம்யூனிஸ்டுத் தத்து வப்படி, **Each according to his ability** உழைக்க வேண்டும். **Each according to his needs** பெற வேண்டும். அதைத்தான் கனம் அங்கத்தினர் இப்பொழுது சொல்கிறார். ஏதோ மாற்றிச் சொல்வது மாதிரி பட்டது.

**திரு. சா. கணேசன் :** மன்னிக்கவேண்டும். மகாத்மாஜி எழுதியதைத் தான் அப்படியே **within quotation**-இல் சொல்கிறேன். இப்பொழுது வளர்ந்து வந்திருக்கலாமோ என்னவோ. லெனின் கொள்



கையின் அடிப்படையை மறுத்து எழுதியபோது இதை அவர்கள் எழுதினார் என்று சான்றுகள் நமக்கு நிரூபிக்கின்றன என்று சொல்லி மேலே தொடர்கிறேன்.

இனி அம்மாதிரியான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தினால் நாட்டிலே உற்பத்தி பெருகும். உற்பத்தி பெருகுவதன் மூலமாக சரக்கின் தரம் உயரும். தரம் உயர்வதன் மூலமாக போட்டி ஏற்படும் போட்டியின் காரணமாக விலை குறையும். இந்த நிலைமை இருக்க வேண்டும். உண்மையிலேயே ஒரு நாட்டில் வளம் நிலவுகிறது என்றால், வாங்குகிறவன் தனக்கு எப்படிப்பட்ட தன்மையில் சரக்கு எந்த விலைக்குக் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பானோ, அப்படி எதிர் பார்க்கும் உரிமை அவனுக்கு இருக்க வேண்டும். இன்ன விலைக்கு இதை நான் பெறுவேன் என்று பொறுக்குகிற வாய்ப்பு அவனுக்கு இருக்க வேண்டும். தருவதைப் பெற்று, கேட்பதைக் கொடுக்கவேண்டிய முறை இப் பொழுது வளர்ந்து வருகிறது. "ஏதோ கோட்டா"வை "ஃபிக்ஸ்" பண்ணி விடுகிறோம். கார் ஒன்று வாங்க வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். "ஒரு மோட்டார் காரின் விலை என்ன?' என்று கேட்டால், "16,000 ரூபாய்" என்று சொல்வார்கள். "எப்பொழுது தருவாய்?" என்று கேட் டால், "11 மாதம் கழித்துத் தருவேன்" என்பார்கள். அதற்கும், "இரண்டாயிரம் முன் பணமாகக் கொடுக்க வேண்டும்" என்பார்கள். "சரி" என்று கொடுத்துவிட்டு, கார் எப்பொழுது கொடுக்கிறார்களோ அப்பொழுது வாங்கிக்கொள்ள வேண்டும். கார் எப்படி இருக்கிறது, நன்றாக இருக்கிறதா, மோசமாக இருக்கிறதா என்றெல்லாம் பார்க்க முடியாது. கொடுத்ததை வாங்கிக்கொள்ள வேண்டும். இந்த நிலை இருக்கக்கூடாது. இஷ்டப்பட்ட பொருளை, இஷ்டப்படி பேரம் செய்யும் வாய்ப்பும், பொறுக்கி எடுக்கும் உரிமையும் இருந்தால்தான் அங்கே பொருளாதார வளம் நிரம்ப இருக்கிறது என்று சொல்ல முடியும். இப்படிப் பட்ட போட்டா போட்டி இருக்கும்போதுதான் சரக்கின் தரமும் உயரும், விலையும் குறையும். இம்மாதிரி அடிப்படை அமைய வேண்டுமானால், இம்மாதிரியான சுபிட்ச நிலை ஏற்பட வேண்டுமானால், தொழிலாளர்களுக்கு ஒரு ஊக்கம் இருக்க வேண்டும். லாபத்திலே அவர்களுக்குப் பங்குப் பிரிவினை உண்டு என்ற நிலை வரவேண்டும். ஷேர்-ஹோல்டருக்கு எப்படி டிவிடெண்டு வருகிறதோ அதைப்போல, நான் வேலை பார்த்தேன், எனக்கு டிவிடெண்டு வாரண்டு வரும் என்று எதிர்பார்க்கின்ற ஒரு எண்ணப்பாடு ஒவ்வொரு தொழிலாளர் உள்ளத்திலேயும் அமைய வேண்டும். அப்பொழுது வேலை நேரமும் கூடும். குறிப்பிட்ட நேரத்திலே வேலை பார்க்கும் தரமும் முறையும் கூட வளரும். இதை மனத்திலே கொண்டால் நாட்டின் பொருளாதாரம் செம்மையாக அமையும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உற்பத்திப் பண்டங்களின் விலை கூடிக்கொண்டே போகும்போது, விளைவுப் செயற்கைப் பண்டங்களின் விலை கூடிக் கொண்டே போகும்போது, விளைவுப் பண்டங்கள் (உணவுத் தானியங்கள்) ஏற முடியாத நிலை ஏற்படுகிறது. ஏறக்கூடாது என்று நம்மிலும் பலர் எதிர்பார்க்கிறோம். உணவுத் தானி யங்களின் விலை ஏற வேண்டும் என்று நான் சொல்லவில்லை. யாரும் திரித் துச் சொல்லிவிட வேண்டாம். உணவுத் தானியங்களின் விலை ஒரு நிலை யில் இருக்க வேண்டும் என்று நானும் சொல்கிறேன். ஆனால், விவசாயி னுடைய கதி என்ன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அவன் வாங்கும் பண்டங்களின் விலை ஏறிக்கொண்டு போகும்போது, அவன் உற்பத்தி செய்கின்ற பொருள்களை ஒரு குறிப்பிட்ட விலையில்தான் விற்கவேண்டுமென்று சொல்வதானால், அது தர்மம் அல்ல; அது நியாயம் அல்ல. விவசாயப் பண்டங்களின் விலையை ஏற்ற வேண்டும் என்று நான் சொல்லவில்லை. விவசாயப் பண்டங்களின் விலைக்குத் தக்க அளவில் உற்பத்திப் பண்டங்களின் விலை அமையவேண்டும் என்றுதான் சொல்லுகிறேன்.

கிட்டத்தட்ட பார்த்தால் பழையகால பண்டமாற்று முறைக்கு வரச் சொல்கிறேன் என்று எண்ண வேண்டாம். பண்ட மாற்று முறையின் அடிப் படியை நினைவில் கொண்டு விலைவாசிகள் நிர்ணயிக்கப்படவேண்டும். இயங்கவேண்டும். உதாரணமாக ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று

[illegible]துக்கொள்ளுங்கள். ஒரு படி அரிசியைக் கொடுத்தால் ஒரு ரூபாய் பெறவேண்டும் அல்லது ஒரு ரூபாய் துணிமணி பெறவேண்டும். ஒரு படி அரிசி ஒரு வேட்டியாக அமையவேண்டும். ஆனால் விவசாயி தான் வாங்குகின்ற பண்டங்களுக்கு எல்லாம் மும்மடங்கு, நான்கு மடங்கு ரூபாய் கொடுத்து வாங்கியாகவேண்டும். ஆனால் அவன் உற்பத்தி செய்கிற தான்யங்களின் விலை குறைவாகவேதான் இருக்கவேண்டுமென்றால் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கிற விவசாயி வர்க்கமே அழிந்து தொழிந்து போகும். நம்முடைய அடிப்படை, இன்றியமையாத தேவை யாகிய விவசாயம் பாதிக்கப்படும் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

தொழில் துறையில் இன்னொன்று. தனக்குத் தானே வேலை கொடுத்துக்கொண்டு, தானே எஜமானனாகவும், தானே தொழிலாளி யாகவும் உள்ள சில தொழிலாளர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக பொற் கொல்லர்கள், சிப்பு, சோப்பு கிராமத்தில் இருந்தபடியே பண்ணுகிறவர் கள், வீணை, கஞ்சிரா போன்ற நுண்கலைப் பொருள்களை பண்ணுகிறவர்கள் தனக்குத் தானே எஜமானர்களாக இருந்து கொண்டு தாங்களே வேலை செய்கிறார்கள். எனக்கு இரண்டரைக் கட்டை சுருதிப் பெட்டி வேண்டு மென்றால் நான் போய்ச் சொல்லவேண்டும். உடனே அவன் பலகையை அறுத்து, இழைத்து, தேய்த்து சுருதிப் பெட்டி பண்ணி, பாலிஷ் கொடுத்து எனக்குக் கொடுப்பான். பெரிய போர்டு இருக்காது, ப்ரைஸ் பிக்சேஷன் இல்லை. அவன் சொன்ன விலையை நான் கொடுக்கிறேன். அவன் தொழிலுக்கு தகுந்த ஊதியம் கேட்கிறான். இந்தமாதிரி இடங்களுக்கு நாம் லைசென்சு என்று ஏற்படுத்தக் கூடாது. இன்னும் விற்பனை வரி போன்ற வைகள் போடக்கூடாது. அவன் அளவுக்கு அவன் சுதந்திரமாகத் தொழில் செய்து ஜீவிப்பதை நாம் நசுக்கிவிடக்கூடாது. பட்டறையில் பையன் போட்டுக்கொள்கிறானே என்றால் அவன் தொழிலும் கற்றுக் கொள்கிறான். இவன் கேட்கிற ரம்பம், சுத்தி போன்ற சாமான்களை எடுத்துக்கொடுக்கும் எடுபிடி ஆளாக—அட்டெண்டராகத்தான் இருக்கிறான். இத்தகைய தொழிலாளர்களுக்கு நாம் அதிகப்படியான சுமை அளிக்கக் கூடாது. மேலும் அவர்களுக்கு வேண்டிய பச்சைப் பொருள்களை (ரா மெட்டீரியல்ஸ்) பக்குவப்படுத்தப்படாத பொருள்களை அவர்களுடைய தொழிலுக்கு ஏற்றபடி சப்ளை செய்ய வழிவகை செய்யவேண்டும். அப்போது தான் அவர்கள் எல்லோரும் அரசாங்கத்திடம் வந்து எங்களுக்கு வேலை கொடுங்கள் என்று பிரச்சினையை எழுப்பாமல் தங்கள் தங்கள் தொழிலில் ஈடுபடுவார்கள். அரசாங்கமும் வேறுபல நிர்வாகத்துறையில் அமைதியாகக் கவனம் செலுத்த முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். தானே தொழில் செய்து பிழைத்துக்கொள்ள ஆற்றல் பெற்றவர்களை நாம் அழித்துவிடாமல் அவர்கள் பிழைத்துக்கொள்ள நாம் வழி விட்டுவிட்டால் போதும்.

அடுத்தபடியாக பல்வேறு பிராந்தியங்களில் ஏற்படுகிற தொழில் களுக்கு—நான் எந்தக் குறுகிய மனோபாவத்தைக் கொண்டும் சொல்ல வில்லை—தொழிலாளர்களைத் தேர்வு செய்கிறபோது அந்த அந்தப் பகுதி மக்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துத் தேர்ந்தெடுக்கவேண்டும். இதற்கு மேல் இதைப்பற்றி பேசுவது அவ்வளவு ரசமாக இருக்காது என்று இந்த அளவில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் சலவைத் தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். பெரிய நகரங்களைத் தவிர மற்றப்படி கிராமங்களிலும் சரி, இதர நகரங்களிலும் சரி இன்னமும் சலவைத் தொழிலாளர்கள் வெள்ளாவி வைப்பதைப் பார்க்கவேண்டும். அவர்கள் இதுவரை காய்ந்துபோன சருகுகள், சுள்ளி கள்—விறகு என்று சொல்லும் தரம் அல்லாதவைகளைச் சேகரித்து எரித்து வெள்ளாவி வைப்பார்கள். ஆனால் இன்றைய தினம் எல்லா இடங்களிலும் ரிசர்வ்பாரஸ்ட் என்று போடப்பட்டுவிட்டது. காய்ந்துபோன சருகு கள், சுள்ளிகள் ஆகியவற்றைக்கூட அவர்கள் எடுத்துக்கொள்ள அனுமதிப்ப தில்லை. இதனால் அவர்கள் காசு கொடுத்து விறகு வாங்கி வெள்ளாவி வைப்பது என்றால் செலவு அதிகமாகிறது. நகரப் பகுதிகளுக்கு [illegible] [illegible] ஏற்படுகிறது என்பதோடு சலவைக்கு ஆகும் செலவும் பொது மக்களுக்கு அதிகமாகிவிடுகிறது. இப்படி ஒன்றை ஒன்று தாக்கி



[illegible]லிப் பின்னல் போல எல்லாம் பொதுமக்களைத் தாக்குகிறது. இவர் களுக்கு எல்லாம் சர்க்கார் பாதுகாப்பு, உதவி செய்யவேண்டுமென்று கூட நான் சொல்லவில்லை. அவர்களை வரிப்போட்டு அழுத்தாமல், தடை கள் போட்டுத் தடுத்து அழிக்காமல் விட்டுவிட்டாலே கோடி புண்ணியம் உண்டு என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தொழிற்சாலையை உள்ளிட்டு தொழிலாளர்களின் நலனுக்காகக் கோரப் படுகிற மான்யத்தின் மீது எதிர்க்கட்சியினர் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஒட்டிச் சில கருத்துக்களை வழங்க முற்படுகிறேன். தொழி லாளர்களுடைய நிலைமைகளைப் பற்றியும், அவர்களுடைய குறைபாடுகளைப் போக்க வேண்டிய இன்றியமையாத தன்மைகளைப் பற்றியும், அதன் காரணமாக அரசாங்கம் எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்தும் பல்வேறு மன்ற உறுப்பினர்கள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். உடலுழைப்பின் மூலம், வாழ்க்கை நடத்த வேண்டிய இன்றியமையாமையைக் கொண்டு மக்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தரவேண்டிய பொறுப்பும், வேலை செய்கிறவர்களுக்கு நல்ல பாதுகாப்புத் தேடித் தரவேண்டிய பொறுப்பும், அவர்களுக்கு வேண்டிய வசதி கள் பலவற்றை ஏற்படுத்தித் தரவேண்டிய பொறுப்பும் அரசினருக்கு அமைந்திருக்கிறது. அந்த நிலையை ஒட்டி அரசினர் சிலபல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் (சட்டத்தின் மூலமாகவும், நடைமுறை விதிகளின் மூலமாகவும்) என்பதை நாம் நன்றாக உணர்கிறோம். அவை களை எல்லாம் நாம் எவ்வளவு திறம்பட நிறைவேற்றி வைக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் தொழிலாளர்களுடைய வாழ்வு அமையும் என்பதையும் நாம் அனைவரும் நன்கு உணரவேண்டும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

தொழிலாளர்களுடைய நிலை உயரவேண்டும், அவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் ஏற்படவேண்டும், தொழிற்சாலைகள் ஏற்படவேண்டும், உற்பத்தி பெருக வேண்டும், தொழிற்சாலைகளில் அதிக மூலதனமிடவேண்டும், விலைவாசி குறையவேண்டும் என்று சொல்கிற பல்வேறு பிரச்சினைகள் ஒன்றோடொன்று தொடர்புடையவனவாக அமைந்திருக்கின்றன. விலை வாசி குறைந்தால் மக்கள் வாங்கி உபயோகப்படுத்தும் சக்தி பெருகும். அதனால் தொழிற்சாலைப் பண்டங்கள் பெருகும், தொழில்கள் பெருகும், மூலதனம் பெருகும், அதைத் திரும்பவும் தொழிலில் இட வாய்ப்பு அதிகரிக்கும். இவை ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கின்றன. இன்றைய நிலையில் விலைவாசி உயர்வினால் பொதுமக்களின் சுமை அதிகரித்து வருகிறது என்பதை அரசினர் நினைவில் கொள்ளவேண்டும். வேளாண்மைத் துறையைப்பற்றிப் பேசுகிறபோதுகூட இந்த நிலைமை சுட்டிக்காட்டப்பட்டது.

தொழிலாளர்களும், முதலாளிகளும் ஒரு காலத்தில் இருந்த உறவு நிலை வேறு, இப்போதுள்ள உறவு நிலை வேறு. முன்பெல்லாம் முதலாளி கள் குறிப்பிடுகிற நேரம் வரை வேலை செய்ய வேண்டும். கொடுத்த கூலியைத் தொழிலாளர்கள் பெற்றுப் போகவேண்டும் என்ற உறவு நிலை இருந்தது. இப்போது இன்ன கூலிதான் கொடுக்கவேண்டும் என்று தொழிலாளர்கள் சொல்கிறார்கள். அதே சமயம் இவ்வளவு நேரம் தான் வேலை செய்வோம் என்கிறார்கள். உழைக்கின்ற அளவுக்கு ஊதியம் பெறுதல் வேண்டும், குறிப்பிட்ட நேரத்திற்குத்தான் உழைக்கவேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டிருக்கிறது. "சக்திக்கு ஏற்றபடி உழைப்பு—உழைப்புக்கு ஏற்ற ஊதியம்" என்ற கொள்கை உலகு எங்கும் பரவி வருகிறது. இந்த அடிப்படையில்தான் தொழிலாளர் போராட்டம் இந்த நாட்டிலும் பரவி வருகிறது.

12-30 p.m. உழைப்புக்கேற்ற ஊதியம் தருதல் வேண்டுமென்ற நிலைமை மேலே [illegible] வளர்ந்து, எதிர்காலத்தில் சக்திக்கேற்றபடி அத்தனை மக்களும் [illegible]த் தரவேண்டும்; வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை [illegible]யும் அத்தனை பேரும் பெற்றுத் தரவேண்டுமென்ற நோக்கம்

வைத்துக்கொள்ளுங்கள். ஒரு படி அரிசியைக் கொடுத்தால் ஒரு ரூபாய் பெறவேண்டும் அல்லது ஒரு ரூபாய் துணிமணி பெறவேண்டும். ஒரு படி அரிசி ஒரு வேட்டியாக அமையவேண்டும். ஆனால் விவசாயி தான் வாங்குகின்ற பண்டங்களுக்கு எல்லாம் மும்மடங்கு, நான்கு மடங்கு ரூபாய் கொடுத்து வாங்கியாகவேண்டும். ஆனால் அவன் உற்பத்தி செய்கிற தான்யங்களின் விலை குறைவாகவேதான் இருக்கவேண்டுமென்றால் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கிற விவசாயி வர்க்கமே அழிந் தொழிந்து போகும். நம்முடைய அடிப்படை, இன்றியமையாத தேவையாகிய விவசாயம் பாதிக்கப்படும் என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

தொழில் துறையில் இன்னொன்று. தனக்குத் தானே வேலை கொடுத்துக்கொண்டு, தானே எஜமானனாகவும், தானே தொழிலாளியாகவும் உள்ள சில தொழிலாளர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக பொற்கொல்லர்கள், சீப்பு, சோப்பு கிராமத்தில் இருந்தபடியே பண்ணுகிறவர்கள், வீணை, கஞ்சீரா போன்ற நுண்கலைப் பொருள்களை பண்ணுகிறவர்கள் தனக்குத் தானே எஜமானர்களாக இருந்து கொண்டு தாங்களே வேலை செய்கிறார்கள். எனக்கு இரண்டரைக் கட்டை சுருதிப் பெட்டி வேண்டுமென்றால் நான் போய்ச் சொல்லவேண்டும். உடனே அவன் பலகையை அறுத்து, இழைத்து, தேய்த்து சுருதிப் பெட்டி பண்ணி, பாலிஷ் கொடுத்து எனக்குக் கொடுப்பான். பெரிய போர்டு இருக்காது, ப்ரைஸ் பிக்சேஷன் இல்லை. அவன் சொன்ன விலையை நான் கொடுக்கிறேன். அவன் தொழிலுக்கு தகுந்த ஊதியம் கேட்கிறான். இந்தமாதிரி இடங்களுக்கு நாம் லைசென்சு என்று ஏற்படுத்தக் கூடாது. இன்னும் விற்பனை வரி போன்றவைகள் போடக்கூடாது. அவன் அளவுக்கு அவன் சுதந்திரமாகத் தொழில் செய்து ஜீவிப்பதை நாம் நசுக்கிவிடக்கூடாது. பட்டறையில் பையன் போட்டுக்கொள்கிறானே என்றால் அவன் தொழிலும் கற்றுக் கொள்கிறான். இவன் கேட்கிற ரம்பம், சுத்தி போன்ற சாமான்களை எடுத்துக்கொடுக்கும் எடுபிடி ஆளாக—அட்டெண்டராகத்தான் இருக்கிறான். இத்தகைய தொழிலாளர்களுக்கு நாம் அதிகப்படியான சுமை அளிக்கக் கூடாது. மேலும் அவர்களுக்கு வேண்டிய பச்சைப் பொருள்களை (ரா மெட்டீரியல்ஸ்) பக்குவப்படுத்தப்படாத பொருள்களை அவர்களுடைய தொழிலுக்கு ஏற்றபடி சப்ளை செய்ய வழிவகை செய்யவேண்டும். அப்போது தான் அவர்கள் எல்லோரும் அரசாங்கத்திடம் வந்து எங்களுக்கு வேலை கொடுங்கள் என்று பிரச்சினையை எழுப்பாமல் தங்கள் தங்கள் தொழிலில் ஈடுபடுவார்கள். அரசாங்கமும் வேறுபல நிர்வாகத்துறையில் அமைதியாகக் கவனம் செலுத்த முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். தானே தொழில் செய்து பிழைத்துக்கொள்ள ஆற்றல் பெற்றவர்களை நாம் அழித்துவிடாமல் அவர்கள் பிழைத்துக்கொள்ள நாம் வழி விட்டுவிட்டால் போதும்.

அடுத்தபடியாக பல்வேறு பிராந்தியங்களில் ஏற்படுகிற தொழில்களுக்கு—நான் எந்தக் குறுகிய மனோபாவத்தைக் கொண்டும் சொல்லவில்லை—தொழிலாளர்களைத் தேர்வு செய்கிறபோது அந்த அந்தப் பகுதி மக்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துத் தேர்ந்தெடுக்கவேண்டும். இதற்கு மேல் இதைப்பற்றி பேசுவது அவ்வளவு ரசமாக இருக்காது என்று இந்த அளவில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் சலவைத் தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். பெரிய நகரங்களைத் தவிர மற்றப்படி கிராமங்களிலும் சரி, இதர நகரங்களிலும் சரி இன்னமும் சலவைத் தொழிலாளர்கள் வெள்ளாவி வைப்பதைப் பார்க்கவேண்டும். அவர்கள் இதுவரை காய்ந்துபோன சருகுகள், சுள்ளிகள்—விறகு என்று சொல்லும் தரம் அல்லாதவைகளைச் சேகரித்து எரித்து வெள்ளாவி வைப்பார்கள். ஆனால் இன்றைய தினம் எல்லா இடங்களிலும் ரிசர்வ்பாரஸ்ட் என்று போடப்பட்டுவிட்டது. காய்ந்துபோன சருகுகள், சுள்ளிகள் ஆகியவற்றைக்கூட அவர்கள் எடுத்துக்கொள்ள அனுமதிப்பதில்லை. இதனால் அவர்கள் காசு கொடுத்து விறகு வாங்கி வெள்ளாவி வைப்பது என்றால் செலவு அதிகமாகிறது. நகரப் பகுதிகளுக்கு விறகு கஷ்டம் ஏற்படுகிறது என்பதோடு சலவைக்கு ஆகும் செலவும் பொது மக்களுக்கு அதிகமாகிவிடுகிறது. இப்படி ஒன்றை ஒன்று தாக்கி ...



...சங்கிலிப் பின்னல் போல எல்லாம் பொதுமக்களைத் தாக்குகிறது. இவர்களுக்கு எல்லாம் சர்க்கார் பாதுகாப்பு, உதவி செய்யவேண்டுமென்று கூட நான் சொல்லவில்லை. அவர்களை வரிப்போட்டு அமுத்தாமல், தடைகள் போட்டுத் தடுத்து அழிக்காமல் விட்டுவிட்டாலே கோடி புண்ணியம் உண்டு என்று கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தொழிற்சாலையை உள்ளிட்டு தொழிலாளர்களின் நலனுக்காகக் கோரப்படுகிற மான்யத்தின் மீது எதிர்க்கட்சியினர் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஒட்டிச் சில கருத்துக்களை வழங்க முற்படுகிறேன். தொழிலாளர்களுடைய நிலைமைகளைப் பற்றியும், அவர்களுடைய குறைபாடுகளைப் போக்க வேண்டிய இன்றியமையாத தன்மைகளைப் பற்றியும், அதன் காரணமாக அரசாங்கம் எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்தும் பல்வேறு மன்ற உறுப்பினர்கள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். உடலுழைப்பின் மூலம், வாழ்க்கை நடத்த வேண்டிய இன்றியமையாமையைக் கொண்டு மக்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித் தரவேண்டிய பொறுப்பும், வேலை செய்கிறவர்களுக்கு நல்ல பாதுகாப்புத் தேடித் தரவேண்டிய பொறுப்பும், அவர்களுக்கு வேண்டிய வசதிகள் பலவற்றை ஏற்படுத்தித் தரவேண்டிய பொறுப்பும் அரசினருக்கு அமைந்திருக்கிறது. அந்த நிலையை ஒட்டி அரசினர் சிலபல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள் (சட்டத்தின் மூலமாகவும், நடைமுறை விதிகளின் மூலமாகவும்) என்பதை நாம் நன்றாக உணர்கிறோம். அவைகளை எல்லாம் நாம் எவ்வளவு திறம்பட நிறைவேற்றி வைக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் தொழிலாளர்களுடைய வாழ்வு அமையும் என்பதையும் நாம் அனைவரும் நன்கு உணரவேண்டும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

தொழிலாளர்களுடைய நிலை உயரவேண்டும், அவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் ஏற்படவேண்டும், தொழிற்சாலைகள் ஏற்படவேண்டும், உற்பத்தி பெருக வேண்டும், தொழிற்சாலைகளில் அதிக மூலதனமிடவேண்டும், விலைவாசி குறையவேண்டும் என்று சொல்கிற பல்வேறு பிரச்சினைகள் ஒன்றோடொன்று தொடர்புடையவனவாக அமைந்திருக்கின்றன. விலைவாசி குறைந்தால் மக்கள் வாங்கி உபயோகப்படுத்தும் சக்தி பெருகும். அதனால் தொழிற்சாலைப் பண்டங்கள் பெருகும், தொழில்கள் பெருகும், மூலதனம் பெருகும், அதைத் திரும்பவும் தொழிலில் இட வாய்ப்பு அதிகரிக்கும். இவை ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கின்றன. இன்றைய நிலையில் விலைவாசி உயர்வினால் பொதுமக்களின் சுமை அதிகரித்து வருகிறது என்பதை அரசினர் நினைவில் கொள்ளவேண்டும். தொழிலாளர் துறையைப்பற்றிப் பேசுகிறபோதுகூட இந்த நிலைமை ...வளாண்மைத் ...சுட்டிக்காட்டப்பட்டது.

தொழிலாளர்களும், முதலாளிகளும் ஒரு காலத்தில் இருந்த உறவு நிலை வேறு, இப்போதுள்ள உறவு நிலை வேறு. முன்பெல்லாம் முதலாளிகள் குறிப்பிடுகிற நேரம் வரை வேலை செய்ய வேண்டும். கொடுத்த கூலியைத் தொழிலாளர்கள் பெற்றுப் போகவேண்டும் என்ற உறவு நிலை இருந்தது. இப்போது இன்ன கூலிதான் கொடுக்கவேண்டும் என்று தொழிலாளர்கள் சொல்கிறார்கள். அதே சமயம் இவ்வளவு நேரம் தான் வேலை செய்வோம் என்கிறார்கள். உழைக்கின்ற அளவுக்கு ஊதியம் பெறுதல் வேண்டும், குறிப்பிட்ட நேரத்திற்குத்தான் உழைக்கவேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டிருக்கிறது. "சக்திக்கு ஏற்றபடி உழைப்பு—உழைப்புக்கு ஏற்ற ஊதியம்" என்ற கொள்கை உலகு எங்கும் பரவி வருகிறது. இந்த அடிப்படையில்தான் தொழிலாளர் போராட்டம் இந்த நாட்டிலும் பரவி வருகிறது.

உழைப்புக்கேற்ற ஊதியம் தருதல் வேண்டுமென்ற நிலைமை மேலே வளர்ந்து, எதிர்காலத்தில் சக்திக்கேற்றபடி அத்தனை மக்களும் வேலை ... தரவேண்டும்; வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை ... யும் அத்தனை பேரும் பெற்றுத் தரவேண்டுமென்ற நோக்கம்

வளரும். இதில் கருத்து வேறுபாடு யாருக்கும் இருக்க நியாயம் இல்லை
யென்று கருதுகிறேன். அத்தகைய நிலையைப் பெறுவதற்கான வழி
முறைகளிலே வேண்டுமானால் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கு இடையே
யும் மற்றவர்களுக்கிடையேயும் வேறுபாடு இருக்குமே தவிர, நோக்கத்திலே
வேறுபாடு இல்லை. உழைப்புக்கேற்ற ஊதியம் பெறவேண்டும்.

ஒரு நாளைக்கு இருக்கின்ற 24 மணி நேரத்தில் 8 மணி நேரத்தைத்
தூங்குவதற்குக் கழித்தாலும், 8 மணி நேரம் அவர்கள் உணவு உண்ணு
வதற்கும், பொழுது போக்குவதற்கும் கழித்தாலும், 8 மணி நேரம்
வேலை செய்ய வேண்டுமென்ற அளவிலே வழி வகுத்திருக்கிறோம்.
அந்த அளவிலே பல்வேறு கோரிக்கைகள் தொழிலாளர்கள் சார்பில்
எழுகின்றன. அந்த அடிப்படையிலே பல்வேறு தொழில் நிலையங்களிலும்
தொழிலாளர்களுடைய குறைபாடுகளை எடுத்துச் சொல்லவேண்டிய நிலைமை
யில் தொழிலாளர்கள் இல்லாத காரணத்தால் அவர்களுக்குப் பரிந்து
பேசக்கூடிய அவசியத்தில் தொழிற்சங்கங்கள் அமையவேண்டுமென்ற
அவசியம் இருக்கிறது. முதலாளிகள் தங்களுடைய லாபத்தை அதிக
மாகப் பெருக்குகின்ற நோக்கத்திலே, வேலை அதிகமாக வாங்கும் நோக்கத்
திலே, எந்த அளவுக்குத் தொழிலாளர்களுடைய கூலியைக் குறைக்க
முடியும் என்ற நோக்கத்திலே இருக்கிறார்கள். தொழிலாளர்கள்
தங்களுடைய வருவாய் பெருகவேண்டும்; நியாயமான கூலி கிடைக்க
வேண்டும் என்பதற்காகப் போராடி வருகிறார்கள். அந்த உறவு முறையைச்
சுமுகமாக நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு ஆட்சியினருக்கு அமைந்
திருக்கிறது. அந்த முறையில் தொழிலாளர்கள் குறைகளை எடுத்து
வைப்பதற்கு வாய்ப்புடைய கருவியாக அமைந்திருப்பவை தொழிற்சங்கங்
கள். தொழிலாளர்களுடைய நிலைமையை முதலாளிகளிடத்தில் எடுத்துச்
சொல்லி, இருக்கின்ற நிலைமைகளை அரசினருக்குச் சுட்டிக்காட்டி, அரசினர்
செய்ய வேண்டியதை வற்புறுத்தி, நியாயமாகத் தொழிலாளர்களுக்குக்
கிடைக்க வேண்டியதை வாங்கித் தருகிற பொறுப்பைத் தொழிற்சங்கங்கள்
மேற்கொண்டிருக்கின்றன. தொழிற்சங்கங்கள் உள்ளபடியே தொழிற் சங்க
ரீதியிலே இயங்கவேண்டுமென்ற கருத்தைத்தான் வலியுறுத்து
கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த
வரை 'ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்' என்ற நிலைமை
யைப் போற்றிப் பாராட்டி வரவேற்கிறோம். அந்த முறையில்
ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்று அமைந்து, அந்தத்
தொழிற்சங்கங்களை ஏற்று நடத்துகிற பொறுப்பு வாய்ந்த நிர்வாகிகள்
தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைத் துணிவுடன் எடுத்து வைப்பதற்
கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தல் வேண்டும். தொழிலாளர்கள் பல்
வேறு அரசியல் கட்சிக் கருத்துக் கொண்டவர்களாக இருந்தாலும்,
வேறுபட்ட மதக் கருத்துடையவர்களாக இருந்தாலும், வேறுபட்ட சமயக்
கருத்துக்கள் கொண்டவராக இருந்தாலும், தொழில் நிறுவனத்தில்
இருக்கிற குறைபாடுகள், கோரிக்கைகள் என்று வரும்போது அது அவர்கள்
எல்லோருக்கும் ஒன்றுதான். ஆனால் தொழிற்சங்கங்களின் தலைவர்களாக,
நிர்வாகிகளாக அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களே
இருக்கக்கூடிய நிலைமை இல்லை. அவ்வாறு இருந்தால் அந்த முதலாளி
களால் அவர்கள் பழிவாங்கப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவர்
களுக்குப் பாதுகாப்பு சரியாக இல்லாத காரணத்தால் தொழிற்சங்கத்தின்
தலைமையை ஏற்று நடத்துகின்ற பொறுப்பை அந்தத் தொழிலிலே
ஈடுபட்டிருப்பவர்களே ஏற்க முடியாமல் வெளியே இருக்கின்ற தொழிற்
சங்கத் தலைவர்களை நாடி அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டிய
நிலையில் இருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை அந்தத் தொழில் நிறு
வனத்தில் இருப்பவர்களே ஏற்று நடத்துவதற்கான விதிமுறைகள் இருக்கு
மானால், அதன் காரணமாக இம்மியளவுகூட அவர்களுடைய உரிமை
முதலாளிமார்களால் பாதிக்கப்படாத நிலைமை ஏற்படுமானால் பல்வேறு
பிணக்குகளும், பிரசினைகளும் தீர வழிவகை ஏற்படக்கூடும். அரசியல்
கட்சித் தலைவர்கள் தொழிற் சங்கங்களை ஏற்று நடத்துகின்றபோது கட்சி
மாச்சரியங்கள் தொழிற் சங்கங்களிலும் புகுந்து விடுகின்றன. அதன்
காரணமாகத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் பாழ்படும் அளவுக்கு
நிலைமைகள் உண்டாகிவிடுகின்றன. சில சமயங்களில் பாதகமான





நிலைமைகள்கூட ஏற்பட்டு விடுகின்றன. நியாயமான கோரிக்கையின்
அடிப்படையில் ஒரு தொழிற்சங்கம் போராட்டம் நடத்தினால்கூட, எங்கே
அந்தப் போராட்டம் வெற்றி பெற்றால் அந்தப் பெருமை அந்தத்
தொழிற்சங்கத்தை ஏற்று நடத்துபவர் சார்ந்திருக்கின்ற கட்சிக்கு சேர்ந்து
விடுமோ என்ற காரணத்தால் அதைத் தடுப்பதற்கான கிளர்ச்சிகளும்
போராட்டங்களும் நடைபெறுகின்றன. அரசியல் கட்சிகளிடையே மாச்சரி
யங்கள் ஏற்பட்டால் தொழிற்சங்கங்களிலும் இயற்கையாகவே அந்த
மாச்சரியங்கள் ஏற்படும் நிலை வளர்ந்து வருகிறது. நாம் வரலாற்றில்
படித்திருக்கிறோம். 17வது, 18வது நூற்றாண்டிலே இங்கிலாந்துக்கும்
பிரஞ்சுக்காரர்களுக்கும் இடையே போர் தொடங்கப்படுமேயானால், பிணக்கு
ஏற்படுமேயானால் அதைப்பற்றி நாம் இங்கே அறிந்து கொள்வதற்கு
மூன்று மாத காலமாகும். அது இங்கே தெரிந்தவுடன் சென்னையி
லிருக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் பாண்டிச்சேரியில் இருக்கும்
பிரஞ்சுக்காரர்களுக்கும் பிணக்குகள் ஆரம்பித்துவிடும். அங்கே பிணக்குகள்
தீர்ந்துவிட்டன என்று மூன்று மாதம் கழித்து இங்கே தெரிந்தவுடன்
இங்கே இவர்களுடைய உறவு முறையும் மாறிவிடும். அந்த முறையில்
அரசியல் கட்சிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் உறவுமுறை இருக்கின்ற
காரணத்தால் தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகள்கூட
வெற்றிபெற முடியாத நிலைமைகள் ஏற்பட்டு விடுகின்றன. தொழிற்
சங்கங்கள் எல்லாம் முல்லைக் கொடியாகவும் அரசியல் கட்சிகள் கொழு
கொம்புகளாகவும் இருந்து, அதிலே தொழிற்சங்கங்கள் என்ற முல்லைக்
கொடி படருகின்ற நிலைமை ஏற்படுமானால் நல்லது. ஆனால் தொழிற்
சங்கத்தைக் கொழுகொம்பாக்கி அரசியல் கட்சிகள் முல்லைகொடிகள்
என்ற அளவிலே நிலைமைகள் ஏற்படும்போதுதான் தகராறுகளும் மற்றவை
களும் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தந்தத் தொழிற்சங்கங்களை நிர்வகிப்
பவர்களாக அந்தந்தத் தொழில் நிறுவனங்களில் பணியாற்றுகிறவர்களே
பொறுப்பேற்று நடத்தக்கூடிய அளவில் அவர்களுக்குப் பாதுகாப்புக்
கொடுத்து அதற்கான வழிவகைகளை அரசாங்கம் காணவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்—முதலாளி உறவு முறைகள் எப்படி இருக்கின்றன என்
பதைப் பார்க்கிறோம். தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்
சட்டங்களை அரசினர் உருவாக்கியிருக்கிறார்கள். ஆங்காங்கே சட்டத்தில் இருக்
கின்ற ஓட்டை உடைச்சல்களைத் தங்களுக்குச் சாதகமாக முதலாளிகள் பயன்
படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள். சட்டத்தில் தரப்பட்டிருக்கும் சலுகை
களை அடைய தொழிலாளர்கள் போராடிப் பெற வேண்டிய நிலைமையில்
இருக்கிறார்கள். இதிலே நல்லதொரு சூழ்நிலையை அமைக்கும் பொறுப்பு
அரசினரைச் சார்ந்திருக்கின்றது. தொழிற் துறையைப் பொறுத்து சட்ட
மானது முதலாளிகளைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு முழு அதிகாரத்தையும்
பெறமுடியாத அளவு அமைந்திருக்கிறது. தொழில் கோர்ட்டுகள் தீர்ப்பு
அளித்தால்கூட அவற்றைப் புறக்கணிக்கக் கூடிய அளவுக்கு, அலட்சியப்
படுத்தக்கூடிய அளவுக்கு, நிறைவேற்ற முடியாத அளவுக்கு முதலாளிகள்
இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறையிலே முதலாளிகளைக் கட்டுப்
படுத்தும் அளவுக்கும், தொழில் கோர்ட்டுகள் அளிக்கின்ற தீர்ப்பை நிறை
வேற்றக்கூடிய அளவுக்கும் அவசியமானால் அதிகாரத்தைப் பெருக்குவதற்
கான வழிவகைகளை அரசினர் வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

சென்ற ஆண்டைப் பொருத்தவரை தொழிலாளர்களுக்கும் முதலாளி
களுக்கும் இருந்த உறவு முறை ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற
நிலைமையைப் புள்ளி விவரங்களிலிருந்து நாம் அறிகிறோம். வேலை நிறுத்
தங்களும், கதவடைப்புகளும் 1962-ல் இருந்ததைவிட 1963-ல் அதிகரித்
திருப்பதைக் காண்கிறோம். 1962-ல் வேலை நிறுத்தங்களும், கதவடைப்பு
களும் 152 ஆக இருந்து 1963-ல் 226 வேலை நிறுத்தங்களும் கதவடைப்பு
களும் நடந்திருப்பதாகக் குறிப்பில் காணப்படுகிறது. அதன் காரணமாக,
உழைப்பின் வேலை நாட்கள் எவ்வளவு இழந்திருக்கிறோம் என்று பார்க்
கும்போது 1962-ல் 159,845 நாட்களும், 1963-ல் 443,933 நாட்களும்
இழக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அடிப்படைக்

காரணம் என்ன ? நெசவாலைகளிலும், நூற்பாலைகளிலும் ஏற்பட்டிருக்கிற
தகராறுகளை ராஷனலைஸ் செய்த காரணத்தினுல் ஏற்பட்டதாக கூறப்
படுகிறது. பி. அன்ட் ஸி. ஆலையில் மட்டும் 2 லட்சம் வேலை நாட்களை
இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது.
இதற்கு அடிப்படைக் காரணம் என்ன ? யார் மேல் தவறு ? முதலாளி
கள் மேல் தவறு ? அல்லது மற்றவர்கள் தவறு செய்தார்களா ? அர
சாங்கம் எந்த அளவு தலையிட்டு இத்தகைய இழப்பு ஏற்படாமல் தவிர்ப்ப
தற்கு முனைந்தது என்ற விவரங்களை அறிந்துகொள்ள முடியவில்லை. இவ்
வளவு வேலை நாட்களை இழக்க நேரிட்டது வருந்தத் தக்கதாகும். இப்படிப்
பட்ட சூழ்நிலை ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வதில் அரசினர் தீவிர
மாக ஈடுபடவேண்டியவர்களாக இருக்கிறார்கள். தொழிலாளர் பிரச்னை
நாளுக்குநாள் வளாந்தவண்ணம் இருக்கிறது. தொழில் பெறவேண்டு
மென்று எண்ணுகிறவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து
கொண்டு வருகிற சூழ்நிலையைக் காண்கிறோம். ஆகவே வேலை வாய்ப்புத்
தேடித் தரும் முறையில் புதிது புதிதாகத் தொழிற்சாலைகள் உருவாக்க
வேண்டிய கட்டுப்பாடு அரசினருக்கு அமைந்திருக்கிறது. தொழில் அமைச்
சர் அவர்கள் மான்யக் கோரிக்கையின்போது எடுத்துச்சொல்லியதுபோல்
ஒவ்வொரு ப்ளாக்கிலும் தொழில்பேட்டை அமைப்பது, சிறு சிறு தொழிற்
சாலைகளை உருவாக்குவதின் மூலம், ஆங்காங்கே தச்சப் பட்டறை, கொல்லர்
பட்டறை போன்றவைகள் அமைப்பதற்கு திட்டமிட்டு வேலை வாய்ப்பைத்
தேடித் தருகிற முயற்சியில் ஈடுபடவேண்டும். மாவட்டங்களில் வேலை
வாய்ப்புப் பெற முடியாமல் சென்னை போன்ற பெரிய நகரங்களை நோக்கி
வருவதையும், இங்கு வேலை இல்லாமல் திண்டாடும் நிலையையும் போக்க
வும் முடியும், மாவட்டங்களிலேயே சிறு சிறு தொழிற்சாலைகள் அமை
வதினுல். ஆகவே ஆங்காங்கே புதுப் புது தொழிற்பேட்டைகளையும், சிறு சிறு
தொழிற்சாலைகளையும் உருவாக்கும் தீவிரத் திட்டங்களை அரசினர் மேற்
கொள்ளுதல் வேண்டும். அப்படிப் பார்க்கும்போது வேலை வாய்ப்பைத்
தேடித் தருகிற நிலை வளர்ந்து வரும் சூழ்நிலையைத்தான் புள்ளி விவரங்
கள் எடுத்துக் காட்டுகிறது. 1962-63-ல் பதிவு செய்தவர்களின் எண
ணிக்கை 227,169. 1963-64-ல் பதிவு செய்தவர்களின் எண
230,443. வேலை வாய்ப்பு தேடிக் கொடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
1962-63-ல் 38,985, 1963-64-ல் 42,664. வேலை வாய்ப்புத் தேடித்
தந்தது போக இப்போது பதிவேட்டில் இருப்பவர்களின் எண்ணிக்கை,
1962-63-ல் 164,075 என்றும் 1963-64-ல் 193,875 என்றும் காணப்
படுகிறது. ஆகவே வளர்ந்து வரும் நிலையை சமாளிக்க வேண்டிய கடப்
பாடு உள்ளவர்களாக இருக்கிறோம். தொழிலாளர்களின் மற்ற கோரிக்கை
களை எடுத்து வைப்பது போல் அவர்கள் கடமையை உணர்த்தும் பணியிலும்
எங்களைப் போன்றவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். கடமையை வற்புறுத்தி
உரிமையைப் பெறுகிற நிலையில் தொழிலாளர்களுக்கு உணர்வு ஊட்ட
வேண்டியவர்களாக இருக்கிறோம். தொழிலாளர்களுக்கு அக்கறை ஏற்
படும் சூழ்நிலையில் சட்டங்கள் செய்யவேண்டுமென்பது இன்று அரசின
ருக்கு மாறுபட்ட கொள்கை அல்ல என்று கருதுகிறேன். அந்த அடிப்
படையில்தான் கனம் உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் வெட்டுப்
பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இலாபத்தில் தொழிலாளர்
களுக்குப் பங்கு வேண்டும். அந்தப் பங்கு அவர்கள் முதலீடாக அமைகிற
சூழ்நிலை ஏற்பட்டால் தொழிலாளர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படவும்,
தொழிற்சாலைகள் மேலும் வளரவேண்டுமென்ற அக்கறை ஏற்படவும்
அதன் மூலம் ஏற்படுகிற லாபம் தனக்கும் ஒருவகையில் பயன்படும் என்ற
உணர்வு ஏற்படவும் வேலை வாய்ப்பு முடிகிற சமயத்தில், ஓய்வு பெறும்
போது இந்தத் தொகை தனக்கு ஓரளவு பயன்படும் என்ற நிலை ஏற்படவும்
வழிவகை ஏற்படும். அரசினர் இதைக் கருத்தில்கொண்டு இத்திட்டத்தை
அமுல்படுத்த எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை. அதற்கான
முயற்சிகளை மேற்கொண்டு அதை நடைமுறைப்படுத்த என்னென்ன சட்டங்
கள் நிறைவேற்றவேண்டுமோ அவற்றை நிறைவேற்றி வைக்க அமைச்சரவை
முன்வருதல் வேண்டும். குறிப்பாக கனம் முதல் அமைச்சர் அவர்
கள் இதில் தக்க முயற்சிகள் எடுத்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வீட்டு
வசதி செய்கிற நிறுவனத்தில் வேலை பார்க்கிற தொழிலாளர்கள் தங்கள்



குறைபாடுகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு 50-லிருந்து
75 ரூபாய் வழங்கப்பட்டது என்றும் இன்னும் அது கொடுக்கப்படாத சூழ்
நிலை இருக்கிறது என்றும் குறைபாட்டை எடுத்து வைத்திருக்கிறார்கள்.
அவர்களுக்கு சம்பளம் 75 ரூபாய் வழங்கப்படுகிற சூழ்நிலை இருந்தும்
சம்பளம் கொடுக்கிறபோது நான்கு ஞாயிற்றுக்கிழமைகளுக்காக 10 ரூபாய்
கழித்துக்கொண்டு 65 ரூபாய்தான் வழங்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டும்
சொல்லப்படுகிறது. இது எந்தளவு உண்மை என்று தெரியவில்லை. இதை
அரசினர் விசாரித்தார்களா உள்ளபடியே அப்படியிருந்தால் அதைப்
போக்குவதற்கு தக்க முயற்சிகளை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும்.
அரசினர் விடுமுறை நாட்களை அங்கு வேலை செய்பவர்களுக்கு வழங்கு
வதில்லை என்ற குறைபாட்டையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். அதையும்
கவனித்து அங்கு வேலை செய்வோருக்கு அதை வழங்க தக்க முயற்சிகளை
அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும். இன்னொரு ஊருக்கு போகும்
போது மற்ற அதிகாரிகளுக்கும், மற்ற பணிகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும்
படி வழங்குவதுபோன்று தொழிலாளர்கள் வெளி ஊர்களுக்குச் சென்றால்
அந்த படியில்லை என்ற குறைபாட்டையும் எடுத்து வைத்திருக்கிறார்கள்.
அப்படியிருந்தால் மற்றவர்களுக்கு எந்த அடிப்படையில் படி வழங்கப்
படுகிறதோ அதே அளவு இவர்களுக்கும் வழங்க அரசினர் முன்வருதல்
வேண்டும். அடுத்து, ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர்களுக்கு தக்க
பாதுகாப்பு அளிக்க அரசினர் முன்வருதல் வேண்டும். குறிப்பாக தொழில்
துறையினர் அதற்கு தக்க பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். போலீஸ்காரர்களுக்கும் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா தொழி
லாளர்கள், டாக்ஸி ட்ரைவர்கள் இவர்களிடையே பிணக்குகளும், மாச்சரி
யங்களும் ஏற்பட்டு வேலை நிறுத்தங்களுக்கு அந்தப் பிணக்குகள் காரண
மாக அமைவதும் சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களில்
ஏற்பட்டு விடுகின்றன. அடிக்கடி போலீஸ்காரர்களுக்கு இந்த ரிக்ஷா
ஆட்டோ ரிக்ஷாத் தொழிலாளர்கள் இலக்காகி விடுகிறார்கள். மாத இறுதி
யில், வருட இறுதியில் போலீஸ்காரர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு
வழக்குகள் கிடைக்கவில்லை என்றால், தங்கள் திறமையைக் காட்டமுடிய
வில்லை என்ற நிலை ஏற்படுமானால் இத்தொழிலாளர்கள் இலக்காகி அந்தத்
தொழிலாளர்கள் மீது ஏதோ வழக்கு தொடுத்து வழக்கின் எண்ணிக்
கையைப் பெருக்கி அத்தொழிலாளர்களை குற்றச்சாட்டிற்கு ஆளாக்குகிறார்கள்
என்ற குறைபாடு பரவலாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அரசினர் தலை
யிட்டு நிலைமையை அறிந்து அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு ஏற்படுத்தித்
தர என்ன முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமோ அந்த முயற்சிகளை
மேற்கொள்ளுதல் வேண்டும். டாக்ஸி ட்ரைவர்களுக்கும் போலீஸ்காரர்
களுக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்படுகின்றன. அத்தகராறுகள் ஏற்
படாதவாறு பாதுகாக்க தொழிற்சங்கங்களைச் சார்ந்தவர்களோ, மற்றவ
களோ, அரசினரோ ஈடுபடுவதைவிட தொழில் துறையினர் அதிகமாக ஈடு
படுவதால் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதின்மூலம் அவர்
களுக்கும் பாதகம் ஏற்படாமல் பொது மக்களுக்கும் பாதகம் ஏற்படாமல்
நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க முயலவேண்டும் என்பதை குறிப்
பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வேலை தேடித் தருவதற்காக வைக்கப்
பட்டிருக்கும் நிலையங்களில் எதிர்பார்த்த அளவிற்கு அவை தன்னுடைய
பணிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. என்ன
குறைபாடு என்று அறிந்து கொள்ள முடியவில்லை. தனிப்பட்ட நிறுவ
னங்களோ அல்லது அரசாங்க நிறுவனங்களோ ஆட்கள் எடுக்கும்போது
இதன் மூலம் பதிவு செய்தவர்களுக்கு முதல் இடம் தந்து அவர்களை
ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அதற்கான வசதிகளை
இந்த நிறுவனத்திற்கு ஏற்படுத்தித் தந்தால், வேலை வேண்டுமென்று
நினைக்கிறவர்களுக்கு இதில் ஒரு நம்பிக்கை ஏற்படவும், பதிவு செய்தால்
6 மாதங்களில் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படவும் வாய்ப்பு
ஏற்படும். தாங்கள் கோருகிற அளவு தகுதி, ஆற்றல், அறிவு, படிப்பு
போன்றவை உள்ளவர்கள் இருப்பார்களேயானால் அவர்களுக்கு முதல்
இடம் கொடுத்து பிறகு அந்தத் தொழில் நிறுவனம் தங்கள் போக்கில்
நடந்து கொள்ள வழிவகை ஏற்படுத்தித் தர என்ன என்ன செய்ய
வேண்டுமோ அவற்றைச் செய்ய அரசினர் முன்வந்தால் தொழில் நிறு
வனங்களுக்கு ஒரு மதிப்பு ஏற்படுவதோடுகூட, வேலையில்லாதிருப்பவர்

களுக்கு ஒரு நிம்மதி ஏற்படவும், விண்ணப்பித்துக்கொண்டால் நிச்சயமாக வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் ஏற்படும். அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சலவைத் தொழிலாளர்களுக்கு வசதியை ஏற்படுத்துகின்ற அளவில் கூட்டுறவு முறையில் பவர் லாண்டிரி முயற்சி எடுப்பதாக தெரிவிக்கப்பட்டது, அது எந்த அளவில் இருக்கிறது, எப்போது நடைமுறையில் பயன்படுத்தப்படும் என்கின்ற விவரங்களை நான் அறிய விரும்புகிறேன். சலவைத் தொழிலாளர்களுக்கு மிகவும் பயன்படக் கூடிய அளவில் இதை விரைவில் கூட்டுறவு முறையிலேயே ஏற்படுத்துவதற்கும் அரசினர் முன் வருதல் வேண்டும்.

காண்ட்டிராக்ட் தொழிலாளர்கள் என்ற அளவுக்கு பல தொழில்ாளர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு, குறிப்பிட்ட மாதத்திற்கு என்றுமட்டும் இருந்தால்தான் காண்ட்டிராக்ட் தொழிலாளர்கள் என்று கருத முடியும். 10 ஆண்டு 15 ஆண்டு 20 ஆண்டு ஒரே வேலையில் வேலை செய்து வந்து சாதாரணத் தொழிலாளர்களுக்கு கிடைக்கவேண்டிய வசதிகள் கிடைக்கப் பெருமலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மற்ற தொழிலாளர்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்ற வாய்ப்புக்கள் வசதிகள் ஏற்படுவதற்கு குறிப்பிட்டகாலத்திற்கு, ஏறத்தாழ ஐந்து ஆண்டு அல்லது பத்து ஆண்டு வேலை செய்து வருபவர்களுக்குக் கிடைக்க வழிவகை இருத்தல் வேண்டும். ஆனால் இப்போது ஐந்து ஆண்டு, பத்து ஆண்டு என்று வேலை செய்து கொண்டிருக்கின்றவர்கள் காண்ட்டிராக்ட் தொழிலாளர்கள் என்ற முறையிலேயே தான் வைக்கப்படுகிறார்கள். ஆகவே, இவர்களுக்கு மற்ற தொழிலாளர்களுக்கு கிடைக்கின்ற வாய்ப்புக்கள் வசதிகள் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அரசினர் எடுப்பதற்கு முன்வருதல் வேண்டும்.

பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கு என்று தனியாக பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தாலும் கூட, நடைமுறையில் அவர்களுக்கு இருக்கின்ற குறைபாடுகளைப் போக்குவதற்கு முன் வருதல் வேண்டும். பெரும் பீடி முதலாளிகளிடமிருந்து 10 ஆயிரம் 15 ஆயிரம் பீடிகளை சுற்றிக்கொண்டிருப்பவர்கள் குறிப்பிட்ட தொழிலை மட்டும் செய்து கொடுத்து விடுவதால், இந்த தொழிலாளர்களிடம் எந்த விதமான பொறுப்பையும் ஒப்படைக்கக் கூடாது. இவர்களிடம் பாக்டரி லைசன்ஸ் போன்றவைகள் எடுக்கும்படியாக வற்புறுத்தப்படுவதாக கூறப்படுகிறது. அவ்விதமாக குறை இல்லாத அளவு இவர்கள் சுற்றிக் கொடுக்கின்ற பீடிகள் யாரிடம், எந்த முதலாளியிடம் போய் சேருகின்றதோ, அவர்கள் இந்த பீடிகளுக்கு எந்த டிரேட் மார்க் போடுகிறார்களோ, யார் இந்த விதமான உற்பத்தி செய்கின்றார்கள் என்று கணக்கிடப்படுகிறதோ அவர்களிடமிருந்து தான் லைசென்ஸ் போன்றவைகளுக்கான கட்டணத்தை வசூலிக்க வழி காணுதல் வேண்டும். தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்காக வெறும் 5,000, 6,000 பீடிகளை மட்டும் சுற்றிக் கொடுக்கின்றார்கள் என்ற காரணத்திற்காக மட்டும் அவர்களிடம் கட்டணத்தை வற்புறுத்தக்கூடிய நிலை இருத்தல் கூடாது. இதற்கான கட்டணத்தை உற்பத்தி செய்கின்ற முதலாளிகளிடமிருந்து பெறுவதற்கு வேண்டிய வழிவகை செய்ய வேண்டும் என அரசினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்ட வேண்டும் என்ற கருத்தைப் பல உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசினர் கொண்டிருக்கிற முடிவின்படி தனியாக ஆசிரியருக்கு என்றும் தனியாக இன்னின்ன பிரதிநிதித்துவம் கொடுக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்கின்ற கருத்தை எடுத்துத் தெரிவித்தார்கள். தொழிலாளர்களுக்கு என்று தனியாக பிரதிநிதித்துவ முறை கொடுப்பதின் மூலமாக ஆசிரியர்களுக்கென்று தனியாக பிரதிநிதித்துவம் முறை கொடுப்பதில் மூலமாக வர்த்தகர்களுக்கு என்று தனியாக பிரதிநிதித்துவ முறை கொடுப்பதின் மூலமாக அவர்களுடைய குறைகளை அவர்களுக்குரிய பிரச்னைகளை இந்த மன்றத்தில் எடுத்துவைப்பதற்கு பதிலாக





இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள், அந்தந்த துறையில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் எடுத்துச் சொல்வதற்காக வாய்ப்புகள் ஏற்படுத்துவது மிகவும் நலமாக இருக்கும். அதன் மூலமாக வர்த்தகர்களுடையவும் ஆசிரியர்களுடையவும் தொழிலாளர்களுடையவும் கருத்துக்களைச் சட்டமன்றத்தில் மற்றவர்கள் கொண்டுவருவதைவிட நல்லமுறையில் அவர்களுடைய பிரச்னைகளைக் கொண்டு வர முடியும். தேர்தலில் வெற்றி பெற்று வருகின்ற விஷயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தாலும் வரலாம் வராமலும் இருக்கலாம், அந்தந்த துறைகளில் இருக்கின்றவர்களின் பிரச்னையை எடுத்துவைக்கின்ற வாய்ப்பினை பெறக்கூடும் பெருமலும் இருக்கக் கூடும். ஆனால் அந்தந்தத் துறைகளுக்கு என்று தனியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தால் அவர்களுடைய கருத்துக்களை நேரடியாக சொல்வதற்கும் அவர்களுடைய கருத்துக்களை நேரிடையாக அமைச்சர்கள் கேட்டு அறிந்து கொள்வதற்குமான வாய்ப்பும் ஏற்படக்கூடும். இவ்விதம் ஒதுக்கப்படுவதால் தீங்குகள் அதிகமாக ஒன்றுமில்லை. ஆனால் நன்மைகள்தான் அதிகம். ஆகவே இதற்கான முறையில் வருகின்ற தேர்தல்களில் திருத்தி அமைக்கப்படுகின்ற வகையில் சட்டரீதியாக முறையில் திருத்தங்களைச் செய்யவேண்டுமென்பதையும் வலியுறுத்திக் கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியம் தொழிலாளர்களைப் பற்றியது. தொழிலாளர்கள், தொழிற்சாலைகள் என்று இதிலே குறிப்பிட்டிருந்தது குறித்து கனம் உறுப்பினர்கள் பலர் தொழிற்சாலைகளைப் பற்றியும் பேசினார்கள். ஆனால் பொதுவாக இந்த மான்யம் தொழிலாளர்களுடைய நலன்களைப் பற்றியதுதான். ஆலைகள் தொழிற்சாலைகள் அவைகளில் பணிபுரிகிற, வேலை செய்கிற தொழிலாளர்களுடைய நலன்கள், அவர்களுடைய பாதுகாப்பு, அவர்களுக்கான சுகாதார நிலை, விபத்துக்களினின்று பாதுகாக்கப்படுவது, விபத்து ஏற்பட்டால் அதற்கு வேண்டிய பரிகாரம் அளிப்பது, இவை எல்லாம் சேர்ந்ததுதான் அந்த வகையில் தொழிற்சாலைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் கடுமையாக உழைக்கிறவர்கள். அவர்கள் உழைப்பது அவர்களுக்கு மட்டுமல்ல, பொது மக்களுக்கும் சேர்ந்து உழைக்கிறார்கள். ஆதலால் அவர்களுடைய நலன்களில் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அந்த முறையில் பல சட்டங்கள் இயற்றப்பட்டு வருகின்றன. அவர்கள் உழைக்கிறார்கள் என்றால் அவர்களுக்கே தெரியாமல் விபத்துக்குள்ளாகலாம். ஆனால் அவர்கள் நலனை நாம் பாதுகாக்க வேண்டும். பொதுமக்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அந்த வகையில் இன்னும் அவர்கள் உழைப்பதற்கு தயாராக இருந்தாலும், அவர்கள் இத்தனை மணி நேரம்தான் உழைக்க வேண்டும் என்ற வரம்பு இருக்கிறது, அதை நமது சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் இத்தனை மணி நேரம்தான் உழைக்க வேண்டும் என்று ஏன் நாம் சொல்ல வேண்டும் என்று கேட்டார்கள். பொதுவாக தொழிலாளர்களுடைய நலனில் அக்கரை செலுத்தப்பட்டு வருகிறது. அவர்கள் நிறைய சம்பாதிக்கலாம் என்று எண்ணி, மணி கணக்கு இல்லாமல் உழைத்தால் அவர்களுடைய உடல் நலம் பாதிக்கப்படும். அந்த நலனை பாதுகாப்பதற்காக இப்படிப்பட்ட கட்டுப்பாடும் வேண்டியிருக்கிறது. அந்த வகையிலே அவர்களுக்கு வேண்டிய வசதிகள் சலுகைகள் இதில் அடங்கியிருக்கின்றன. அவர்களுக்கு முக்கியமாக வைத்திய வசதி சுலபமாக கிடைக்கக் கூடிய வகையில் இன்ஷூரன்ஸ் திட்டம் இப்போது அமலில் இருக்கிறது. அது நிறைவேற்றப்பட்டும் வருகிறது. பிற்காலத்தில் வசதிகள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பிராவிடண்ட் பண்ட் திட்டம் இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் மற்றும் சிறிய சிறிய கிராமங்களில் ஷாப் அஸிஸ்டண்ட் சட்டம் இருக்கிறது. அதுவும் இந்த மான்யத்தில் அடங்கியது தான். இவ்வாறு தொழிலாளர்களுடைய நலன்கள் பல கோணங்களிலிருந்து கவனிக்கப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும். தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். என்றால் அதை ஒட்டி பிரிக்க முடியாததுதான் நாட்டின் பொது நலனும். இதன் மூலம் தான் செல்வம் வளருகிறது. பொருளாதாரமும் உயருகிறது. பலதுறை தொழிலாளர்கள் மூலம் உற்பத்தியை பெருக்குவது அதுவும் தொழிலாளர்களுடைய நலனும் பிரிக்க முடியாத.

தாக இருக்கிறது. ஆகவே தொழிலாளர்களுடைய நலனை பாதுகாப்பது ஒன்று. அதே நேரத்தில் உற்பத்தியை பெருக்குவதில் தடையாக யார் இருந்தாலும் அதை தவிர்ப்பது. இரண்டும் பொது நலனுக்கு உகந்தது. அந்த முறையில் திட்டங்கள், கொள்கைகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. இதற்கான முறையில் சட்டங்கள் இயற்றப்பட்டு நிறைவேற்றப்பட்டுவருகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். ஆனால் எதிர்கட்சித் தலைவர் அவர்களும், சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்களும் தொழிலாளர்களுக்கு என்று தனியாக சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் இருந்தால் நல்லது என்று கூறினார்கள், சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்று சொல்வது இந்த மன்றத்தில் இருக்க முடியாது. மேல்சபையில் தான் இருக்க முடியும். அதைப்பற்றி அவர்கள் குறிப்பிடவில்லை. ஆனால் முன்பு இருந்தது. நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்பு இரண்டு பேர்கள் தொழிலாளர்கள் பிரதிநிதிகளாக இருந்தார்கள். மேல்சபையில் இப்போது வேண்டுமானால் இருக்க முடியும். தனித் தொகுதியாக வைக்க முடியும். ஆசிரியர்களுக்கு என்று தனியாக வைத்திருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கென்று தனியாக வைக்கவில்லை. ஆனால் மேல்சபையைப் பற்றி நான் குறை கூறவில்லை. மேல்சபையின் தலைவர் மதிப்பிற்குரிய எனது சகா அவர்கள் இங்கே இருக்கிறார்கள். தொழிலாளர்கள் பிரச்சினையை தொழிலாளர்கள் என்கின்ற தகுதியின் மீது வந்துவிட்டால் மட்டும் அவர்களே தொழிலாளர்களின் நலன்களைப்பற்றி பாதுகாக்க முடியுமா என்று பார்த்தால் முடியாது என்றுதான் நான் கூறுவேன். அதிலும் இப்போது நடந்த மூன்று மணிநேரத்திற்கு மேலாக, நடந்த, இந்த மான்ய விவாதத்தில் கலந்து கொண்டவர்கள், கலந்து கொண்ட அங்கத்தினர்கள் எவ்வாறு தொழிலாளர்கள் நலனில் அக்கறை இருக்கிறது, தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தையெல்லாம் அறிந்து ஓரளவு உணர்ந்து இத்தனை பேரும் பேசினார்கள். இவர்களை விட தொழிலாளர்கள் என்று தனியாக பட்டம் கட்டி மேல்சபையில் அங்கத்தினராக போட்டுவிட்டால் மட்டும் இதைவிட சிறப்பாக தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்படும் என்று இந்த மன்றத்தைச் சார்ந்த எவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

1-00 p.m. ஆனால் எங்கள் கட்சியைப் பொறுத்த மட்டில் தேர்தலுக்கு அபேட்சகர்களை தேர்ந்தெடுக்கும்போதுகூட, தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்படவேண்டும், தொழிலாளர்களுக்கென்று ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று 28-ம் தேதி இந்த மன்றத்திலே நடக்க இருக்கிற தேர்தலிலே கூட காங்கிரஸ் அபேட்சகர்கள் நான்குபேர்களில் ஒருவர் நீண்ட காலமாக ரெயில்வே தொழிலாளர் சங்கத்தில் தலைவராக இருந்து அனுபவம் பெற்று, அந்த உத்தியோகத்தை விட்டு விட்டு இருக்கிற, தொழிலாளர்களுடைய நம்பிக்கையை பெற்றிருக்கிற ஒருவர், அவரை ராஜ்ய சபைக்கு காங்கிரஸ் அபேட்சகராகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அதேபோல இந்த மேல் சபையிலே கூட—சலவைத் தொழிலாளர் பற்றி இங்கே அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள்—சலவைத் தொழிலாளர் சங்கங்களோடு நீண்ட நாள் தொடர்பு கொண்டு, மிகுந்த உற்சாகத்தோடு, ஆற்றலோடு பணியாற்றி வருகிற இளைஞர், சலவைத் தொழிலாளர் பிரச்னையை நன்றாக உணர்ந்தவர்கள் என்று, அவர்களை காங்கிரஸ் அபேட்சகராக 28-ம் தேதி நடைபெற இருக்கிற தேர்தலுக்கு எங்கள் கட்சி அபேட்சகராக நாங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதை நான் குறிப்பிடுவது, பொதுவாக தனி பிதிநிதிகளுக்கு அவசியம் இல்லை என்பதற்காகத் தான். மன்ற அங்கத்தினர்கள் பல பிரச்னைகளைப் பற்றி உணரவேண்டியிருக்கிறது. இங்கே எத்தனையோ பிரச்னைகள் வருகின்றன. ஒவ்வொரு துறைக்கும் பிரதிநிதித்துவம் கொடுப்பது என்றால் 238 ஸ்தானங்கள் கூட போதாது. ஆனால் இந்த மன்றத்திலே இருக்கிற அங்கத்தினர்கள் எந்தப் பிரச்னையாக இருந்தாலும், அதிலும் முக்கியமாக தொழிலாளர் பிரச்னையை நன்றாக உணர்ந்து இன்னும் அதிகமாக கவனம் செலுத்தி, இன்னும் எத்தனையோ பிரச்னைகள், இங்கே விவாதத்திலே குறிப்பிடப் படாத பிரச்னைகள் எத்தனையோ இருக்கின்றன அவைகளை மேலும் நன்றாகக் கற்றுணர்ந்து, மிகுந்த அக்கறை செலுத்தி தொழில் பிரச்னைகளுக்கு வேண்டிய கவனம் ஏற்படக் கூடிய அளவுக்கு





பணி புரியக் கூடிய ஆற்றல் இந்த மன்றத்தில் இருக்கிறவர்களுக்கு இருக்கிறது. என் பக்கத்தில் இருக்கிறவர்களும், எதிர் கட்சியில் இருக்கிறவர்கள் பலரும் தொழிலாளர் பிரச்னையைப் பற்றி குறிப்பிட்டார்கள் என்பது எனக்கு திருப்தி அளிக்கக் கூடியது.

மற்றொன்று, ஒரு கனம் உறுப்பினர் அவர்கள் தொழில்களை கவனிக்கிற அமைச்சர் ஒன்று, தொழிலாளர் நலனை கவனிக்கிற அமைச்சர் ஒன்று என்ற முறையில் இருக்கிறது என்று கூறினார்கள். அமைச்சர் அவையைப் பொறுத்த மட்டில் அந்த அமைச்சர், இந்த அமைச்சர் என்று இல்லை. அமைச்சர் அவை கொள்கைகளை நிர்ணயிக்கிறது. அமைச்சர் அவை திட்டங்களை உருவாக்குகிறது, திட்டங்களை நிறைவேற்றுகிறது. சவுகரியத்திற்காக இந்த அமைச்சர் இதைப் பார்ப்பார், அந்த அமைச்சர் அதைப் பார்ப்பார் என்று வைத்திருக்கிறது. எந்தத் திட்டமாக இருந்தாலும் அது அமைச்சர் அவையின் திட்டம். ஒரு குறிப்பிட்ட அமைச்சருடைய திட்டம் அல்ல. ஆகவே, சவுகரியத்திற்காக அப்படி வைத்திருக்கிறது. அப்படி பார்த்தால் கூட, இதே தொழிலாளர் நலனை எடுத்துக்கொண்டால், வைத்திய வசதி இருக்கிறது, அதற்கு அப்புறம் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள் இருக்கிறது, விவசாயப் பொருள்கள் இருக்கின்றன. அப்படிப் பார்த்தால் இந்த அமைச்சர் அவையிலே உள்ள அமைச்சர்களுக்கெல்லாம் தொழிலாளர் நலன் ஒட்டியதாக இருக்கும். வேறு வேறு அமைச்சர் இருக்கிற காரணத்தினால் மட்டும் தொழிலாளர் நலனோ, தொழிற்சாலை நலனோ பாதிக்கப்படும் என்று நினைக்க வேண்டியதில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் நடத்துகிறவர்கள், தொழில் அதிபர்கள் ஒன்று, உழைக்கிற தொழிலாளர்கள் மற்றொன்று. இரு சாராருடைய நலனும் ஒரே நலன் தான். ஒருவருடைய நலன் மற்றவருக்கு பிரதிகூலம் என்று சொல்லுவதற்கில்லை. அந்த உண்மையை உணராத காரணத்தினால், அல்லது மறக்கிற காரணத்தினால் தான் அப்போதைக்கப்போது தகராறுகள் வருகின்றன. அப்படி தகராறுகள் வந்ததும் அரசாங்கம் தலையிட்டு தீர்க்க வேண்டியிருக்கிறது. அல்லது வழக்கு மன்றங்கள் தலையிட்டு தீர்க்கவேண்டியிருக்கிறது. தொழிலாளர் நலன், அது தான் தொழில் அதிபர் நலன், மூலதனம் போட்டு ஆற்றலோடு தொழிலை நடத்துகிறவர்கள் நலன் என்பதை தொழில் நடத்துகிறவர்களும், தொழிற்சாலையின் நலன் தான் தொழிலாளர்களுடைய நலன், தொழிலை நடத்துவதில் உழைக்கக்கூடிய தொழிலாளர்களுடைய நலன்; அது தான் தொழில் அதிபர்களுடைய நலன் என்பதை உழைக்கக் கூடிய தொழிலாளர்களும் உணர்ந்துகொள்வார்கள் என்றால் தகராறுகள் ஏற்படுவதற்கே இடம் இல்லை. ஆனால் சில சமயங்களில் இதை உணரத் தவறுகிறார்கள். இரு சாராரும் உணரத் தவறுகிறார்கள். அதனால் தான் தகராறுகள் வருகின்றன. ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் தொழிலாளர் நலனுக்கோ, அல்லது உற்பத்திப் பெருக்கத்திற்கோ யார் குறுக்கே நின்றாலும் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் எண்ணம். அந்த வகையில் தான் சட்டங்களை இயற்றியிருக்கிறோம். சுதந்திரம் அடைந்த பிறகு பல சட்டங்கள் இயற்றியிருக்கிறோம். முன்பு சில சட்டங்கள் தான் இருந்தன. இப்போது பல சட்டங்கள் இருக்கின்றன. சட்டங்களை இயற்றி அந்த சட்டங்களின்படி நடவடிக்கை எடுத்துக்கொள்வது மட்டுமல்லாமல், அப்போதைக்கப்போது மாநில ரீதியிலும், மத்திய ரீதியிலும், தொழிலாளர் பிரதிநிதிகள், தொழில் அதிபர்கள் பிரதிநிதிகள், அரசாங்க பிரதிநிதிகள் என்று இவ்வாறு மூன்று சாராரையும் சேர்த்து முக்கூட்டு மாநாடு நடத்தி அவர்களோடு கலந்து ஆலோசித்து முடிவுகள் செய்கிறோம், வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கிறோம். கூடிய வரையில் எல்லோருடனும் கலந்து நடவடிக்கை எடுத்துக்கொள்வது அரசாங்கம் அனுசரித்து வரும் கொள்கை.

இந்த மான்யத்தின் கீழ் மற்றொரு முக்கிய அம்சம் இருக்கிறது. அதை எதிர் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். அது தான் வேலை தேடித் தரும் நிறுவனம். வேலை தேடித் தரும் நிறுவனம் என்றால் பப்ளிக் சர்விஸ் கமிஷன் போல செலெக்ட் செய்யும் நிறுவனம் அல்ல. "வேண்டியவர்

கள் பதிவு செய்து கொள்ளுங்கள், உங்களுக்கு எங்கெங்கு வேலை இருக்
கிறது என்று பார்த்துச் சொல்லுகிறோம்" என்று சொல்லுகிறோம். அதோடு
வேலை தேடித் தரும் நிறுவனங்களிலிருந்து வருகிறவர்களுக்குத் தான்
வேலை கொடுக்க வேண்டும், வெளியில் இருக்கிறவர்களுக்குக் கொடுக்கக்
கூடாது என்று பொதுவாக வற்புறுத்துகிறோம். வேண்டியவர்கள் பதிவு
செய்துகொள்ளுகிறார்கள். அவர்களிடம் இன்ன வேலை இருக்கிறது என்று
சொல்லுகிறோம். வர வர வேலை தேடித் தரும் நிறுவனத்தில் பதிவு
செய்துகொள்ளுவோர் எண்ணிக்கை அதிகம் ஆகிறது என்று எதிர் கட்சித்
தலைவர் கூறினார்கள். உண்மை தான். காரணம், நுட்ப அறிவு பெற்று,
பயிற்சி பெற்று வேலை செய்யக் கூடியவர்கள் எண்ணிக்கை பெருகிக்
கொண்டிருக்கிறது. ஏனென்றால் கல்வி வேகமாகப் பரவிக்கொண்டிருக்
கிறது. கல்வி அதிகமாகப் பரவிக்கொண்டிருப்பதால், கல்வி பெற்று
உத்தியோகம் வேண்டும் என்று எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு
செய்துகொள்கிறார்கள். வேலை தேடித் தரும் நிறுவனத்திற்குப் போகிறார்
கள். கூடிய வரையில் ஆங்காங்கு விசாரித்து அந்த நிறுவனம் பதிவு
செய்து கொண்டுள்ளவர்களைப் பார்த்து, "இந்த வேலை இருக்கிறது போகி
றீர்களா?" என்று கேட்கிறார்கள். அவர்கள் அவ்வளவு தான் செய்ய
லாம். அவர்களை வேலையில் நியமித்து விட முடியாது. போவதற்குத்
தயாராக இருந்தால் அவர்களை வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்
லுகிறோம். "இந்த வேலை எனக்கு வேண்டாம்", "இன்ன ஊருக்குப்
போகத் தயாராக இல்லை" என்று சொல்லி அவர்கள் மறுத்து விடுகிறார்
கள். அதனாலும், வேலை ஒரு இடத்தில் இருந்தாலும் எனக்கு வேண்டிய
இடத்தில் வேலை கிடைக்கவில்லை, எனக்கு வேண்டிய வேலை கிடைக்கவில்லை
என்று சொல்லுவது காரணமாக பயன்படுத்திக்கொள்ள முடியாமல் போகி
ன்ற நிலை இருக்கிறது.

மற்றொன்று சுதந்திரா, கட்சித் தலைவர் அவர்களும், எதிர் கட்சித்
தலைவர் அவர்களும் ஒரு கருத்து தெரிவித்தார்கள். அப்படி வேலை
கொடுப்பது என்றால், ஒரு தொழிற்சாலையில் வேலை கொடுப்பது என்றால்
ஸ்தலத்தில் இருக்கிறவர்களுக்குத் தான் கொடுக்கவேண்டும், அல்லது
முதன்மையாக வழங்கவேண்டும், கொடுக்க வேண்டும், வெளியில் இருந்து
வருகிறவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று சொன்னார்கள். இப்போது
பெரிய பெரிய தொழில்களெல்லாம் அமைக்கப்பட்டு வருகின்றன. அதிலே
நுட்ப அறிவு, நுட்ப அனுபவம் பெற்றவர்கள் தேவைப்படுகிறார்கள்.
தொழிலாளர்கள் அதிலே வேலைக்கு வருகிறார்கள் என்றால், சாதாரண
தொழிலாளர்கள் வேறு மாநிலத்திலிருந்து இங்கு வரப் போவதில்லை.
நுட்ப அனுபவம் பெற்றவர்கள் தான் சாதாரணமாக வருவார்கள்.
நான் சுதந்திரா கட்சித் தலைவருக்குச் சொல்ல விரும்புகிறேன், அஹமதா
பாத் போய்ப் பார்த்தால், அல்லது பம்பாய் போய் பார்த்தால் தெரியும்,
கரக்பூர் போய் பார்த்தால் தெரியும், எத்தனையோ தமிழர்கள், தொழி
லாளர்கள் வேலை செய்கிறார்கள். இப்போது வெளியில் இருந்து வருகிற
வர்களுக்கு கொடுக்கக் கூடாது என்று உத்திரவு இட்டு விட்டால் என்ன
கதி ஆகும்? இங்கு எப்படி வெளியில் இருந்து வருகிறவர்களுக்குக்
கொடுக்கக் கூடாது என்று கருத்து தெரிவிக்கிறார்களோ அந்தக் கருத்தைத்
தெரிவிக்கிறவர்கள் அங்கும் இருக்கிறார்கள். எவ்வளவு பேர்கள் உத்தி
யோகம் பார்க்கிறார்கள், பெரிய உத்தியோகம் பார்க்கிறார்கள் என்று பார்த்
தால் நான் கூட போயிருந்தேன், தொழில் அமைச்சருக்குத் தெரி
யும், பிலாய் தொழிற்சாலையில் அநேகமாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்
கள் தான், தமிழர்கள்தான், இளைஞர்கள் என்ஜினியர்களாக இருக்கிறார்
கள். எங்கு சென்றாலும் இப்படித் தான். இரண்டு, மூன்று வாரங்
களுக்கு முன் போபால் போயிருந்தேன். அங்கு உள்ளவர்கள் என்னைச்
சந்திக்கவேண்டும் என்று சொன்னார்கள். முன்பாகவே தெரிவிக்காததால்
எனக்கு அவகாசம் இல்லை என்று நான் சொன்னேன். அவர்கள் அங்
குள்ள தொழிற்சாலைகளில் உத்தியோகம் செய்கிறார்கள். இவ்வாறு ஒரு
வரம்பு வைத்துக்கொண்டு, தடை செய்து அங்கே உள்ளவர்களுக்குத் தான்
வேலை கொடுக்க வேண்டும், வெளியில் இருந்து வருகிறவர்களுக்கு வேலை
கொடுக்கக் கூடாது என்று சொன்னால் அது தமிழர்களுக்கே பாதகம்.



அப்படிச் சொல்லுவதும் சரியல்ல. அன்னிய நாட்டு கொலாபரேஷன்
வைத்து பெரிய பெரிய தொழில் வைக்கப் பார்க்கிறோம். இல்லையென்றால்
சீக்கிரத்தில் தொழில் அமைக்க முடியாது.

அப்படி வெளியிலிருந்து வருகிறவர்களுடைய உதவியைப் பெற்றுச்
செய்கிறோம். வேலையைச் செய்வதற்கு தகுதியுள்ளவர்கள் நமக்கு வேண்
டும். நாம் எத்தனையோ வேறு மாநிலங்களில் பார்க்கிறோம். சாதாரண
மாக "ப்ராஜெக்ட் வொர்க்" ஒரு நீர்த்தேக்க வேலை என்றால், கல் வேலை
செய்கிறவர்கள் தமிழ் நாட்டிலிருந்து தான் போகிறார்கள். நாகார்ஜுன
சாகர் திட்டம் ஆந்திர மாநிலத்தில் நடக்கிறது. தமிழ்நாட்டிலுள்ளவர்கள்
தான் அங்கே போய் கல் வேலை செய்கிறார்கள். இன்னும் எத்தனையோ
இடங்களில் நாம் அம்மாதிரி நிலைமையைப் பார்க்கிறோம். நுட்பமான
வேலை செய்கிறவர்கள் தமிழகத்திலிருந்துதான் போகிறார்கள், காரைக்
குடியிலிருந்து போகிறார்கள். துங்கபத்திரா அணைக்கட்டு திட்டத்தில் நான்
பார்த்தேன். அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களை "எந்த ஊர்"
என்று கேட்டால், "காரைக்குடி" என்று தான் சொல்லுகிறார்கள். ஒரீஸா
வில் துறைமுக வேலை நடக்கிறது, ப்ரதீப் வேலை நடக்கிறது. அங்கு கல்
வேலை செய்கிறவர்கள் காரைக்குடியிலிருந்து வந்தவர்கள் தான்
கூடியவரைக்கும், ஏதோ உள்ளூரில் இருப்பவர்கள் புறக்கணிக்கப்
படுகிறார்களா, அல்லது ஏதாவது அவர்கள் மீது வெறுப்பு
வருகிறதா என்பதைத் தான் பார்க்கவேண்டுமே தவிர, அப்படி ஏதாவது
குறைபாடுகள் இருந்தால், அவைகளைக் கவனிக்கவேண்டுமே தவிர, பொது
வாக நாம் அப்படிச் சொல்லுவதற்கில்லை.

நாம் வேலை செய்கிற மணிக் கணக்கை ஏன் கட்டுப்படுத்த வேண்டும்?
அதற்கு ஒரு சுதந்திரம் வேண்டும் என்று கேட்கிறார்கள் சுதந்திராக் கட்சித்
தலைவர் அவர்கள். ரிக்ஷா இழுக்கிறவர்கள், ரிக்ஷா இழுக்கக்கூடாது
என்றால், "உனக்கு என்ன வந்தது?" என்று கேட்கிறார்கள். கண்ணாட்
சர்க்கஸல் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பிச்சை எடுக்கிறார்கள். அவர்
களை கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்திக்கொண்டு ஏதாவது ஒரு தொழில் செய்
யுங்கள் என்று சொன்னால், "இதற்கு எனக்கு சுதந்திரம் இருக்கிறது"
என்று சொல்லுகிறார்கள். எல்லாவற்றிற்கும் சுதந்திரம் என்று சொல்லு
கிறார்கள். ரிக்ஷா இழுக்கலாம். ஏதோ சம்பாதிக்கலாம். ஆனால், மணி
தனை மனிதன் இழுப்பது அவர்கள் உடலுக்கு நல்லதில்லை. மேலும்,
வெளி நாடுகளிலிருந்து வருகிறவர்கள் "இந்த நாட்டில் இப்படி நிலைமை
இருக்கிறதே, பழைய காலத்து சரித்திரத்தில் பார்த்தோம், இப்பொழுது
கூட இந்த மாதிரி இருக்கிறதே? என்று அவர்கள் நினைக்கக்கூடும்?
இதையெல்லாம் வைத்துக்கொண்டு தான், கொஞ்சம், கொஞ்சமாக இவை
களைக் குறைத்துவிட வேண்டும், மேலும் இதற்கு இடம் கொடுக்கக்கூடாது
என்று வைத்திருக்கிறோம். அதே மாதிரி சைகில் ரிக்ஷா, ஆடோ ரிக்ஷா
ஓட்டுவதும் அவர்களுக்கு நல்லது அல்ல என்று கருதி, சென்னையில் இனி
மேல் புதியதாக இவைகளுக்கு அனுமதி கொடுப்பதில்லை என்று வைத்
திருக்கிறோம். மற்ற நகரங்களிலும் இவைகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்
மாக நிறுத்திவிடவேண்டுமென்று பார்க்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் "மான் ஹவர்ஸ் லாஸ்டு"
கணம் என்பதைப்பற்றி கணக்குச் சொன்னார்கள். இப்பொழுது அது கொஞ்சம்
அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதனால், தொழிலாளர்க
ளுடைய நிலைமை அதிகமாகக் கெட்டுப்போய்விட்டது, சென்ற ஆண்டை விட
இந்த ஆண்டு கெட்டுப்போய் விட்டது என்று நான் கூறுவதற்கில்லை.
சில சமயங்களில் திடீரென்று ஸ்டைரைக் வந்துவிடுகிறது. பக்கிங்ஹாம்
அண்டு கர்நாடிக் மில்லில் திடீரென்று ஸ்டைரைக் வந்தது. கோவையில்
திடீரென்று காரணம் இல்லாமலேயே ஸ்டைரைக் வந்திருக்கிறது. சில
நாட்களுக்கு தொடர்ந்து ஸ்டைரைக் இருந்துவிட்டால், "மான் ஹவர்ஸ்
லாஸ்டு" அதிகமாகிவிடுகிறது. குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் இம்
மாதிரி ஏற்படுகிறதே தவிர, பொதுவாக மொத்தத்தில் தமிழ் நாட்டைப்
பொறுத்தமட்டில் ஒரு கட்டுப்பாடு உணர்ச்சி இருக்கிறது, மொத்தத்திலே
ஒரு ஒழுங்கு இருக்கிறது என்று சொல்கிறேன். கூடியவரைக்கும்
நிலைமை சமுகமாகத்தான் இருக்கிறது. ஆகவே தான், தொழில்

[திரு. எம். பக்தவத்சலம்] [16th March 1964

வளர்ச்சி வேகமாக நடைபெற்றுக்கொண்டு போகிறது. தொழிலாளர்
களுக்கும் வேலை கிடைக்க வேண்டும், தொழில்கள் வளரவேண்டும்,
அதற்குரிய வகையிலே தான் இன்று நிலைமை சரிப்பட்டுக்கொண்டு வரு
கிறது என்று கூறலாம். ஆனால், சில சமயங்களில் இம் மாதிரி வேலை
நிறுத்தங்கள் வருகின்றன. அப்படி வேலை நிறுத்தம் வருகிறது என்றால்,
தொழில் அதிபர்கள் தவறுதலினாலும் இருக்கலாம், தொழிலாளர்கள்
தவறுதலாக நடந்துகொள்வதினாலும் இருக்கலாம். ஆனால், இதற்கு
முக்கிய காரணம் என்னவென்றால், போட்டி தொழிற் சங்கங்கள் இருப்பது
தான். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருப்பது என்பது நல்லது. ஆனால்,
போட்டி சங்கங்கள் இருக்கின்றன. போட்டி சங்கம் மாத்திரம் இருந்தால்
கூட பாதகம் இல்லை. ஆனால், அரசியல் கட்சி அடிப்படையிலே இந்த
சங்கங்கள் அமைகின்றன. ஆகவே, இங்கே இருக்கிற அரசியல் கட்சி
களுக்கிடையே உள்ள வேற்றுமைகள் அங்கே பிரதிபலிக்கிறது. வெளியி
லிருந்து வருகிறவர்களும் தூண்டுகிறார்கள். கூடியவரையில் தொழிற்
சங்கங்களை நடத்துபவர்கள் தொழிலாளர்களாகவே இருக்கலாம். இப்
பொழுது நல்ல அனுபவம் உள்ள தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.
வெளியார் தலையீடு இல்லாமல் தொழிலாளர்களே அந்த சங்கங்களை
நடத்தினால், ரொம்பவும் நன்றாக இருக்கும், இன்னும் சிறப்பாகவும்
இருக்கும். அரசியல் கட்சி சம்பந்தப்படாமல் இருந்தால், நன்றாக இருக்
கும். அரசியல் கட்சிக்கு தொழிலாளர்களை எப்படி பயன்படுத்திக்
கொள்வது என்று நினைப்பது தவறு. உண்மையிலேயே தொழிலாளர்
நலனில் அக்கரை கொண்டவர்கள் என்றால், அதில் அரசியல் கட்சியை
புகுத்தக்கூடாது. அரசியலை வைத்துக்கொள்ளலாம். யாருக்கும் அரசியல்
இல்லை என்று சொல்ல முடியாது. "எனக்கு அரசியல் இல்லை" என்று
யாராவது சொன்னால், அத்தகைய மனிதனின் மீது எனக்கு மதிப்பு
இருக்காது. ஆனால், அரசியலுக்கு வேறு மேடை வைத்துக்கொள்ள
வேண்டும். தொழிற் சங்கத்தை அரசியலுக்கு தவறுதலாகப் பயன்
படுத்தக்கூடாது. அரசியல் கட்சிக்கு அதை பயன்படுத்திக் கொள்ளக்
கூடாது. அதை அரசியல் கட்சிக்கு பயன்படுத்திக்கொள்வது தொழி
லாளர் நலனுக்கு உகந்தது அல்ல. அந்த வகையில் தொழிலாளர்கள்
நலன் பாதிக்கப்படும். கூடியவரையில் தொழிலாளர்களை அரசியல்
கட்சி பாதிக்காத வகையில் ஒரு சங்கம் இருந்தால் நல்லது என்று
நினைக்கிறோம். இருந்தாலும், அவ்வாறு சட்டம் ஆக்குவது என்றால்,
அதில் அபிப்பிராய பேதம் இருக்கிறது. தொழிலாளர்கள் தலைவர்களைக்
கலந்து தான் இதையெல்லாம் செய்யலாம். இருக்கட்டும், கொஞ்சம்
பார்க்கலாம் என்று சொல்லுகிறார்கள். கூடியவரைக்கும் தகராறுகள்
இல்லாமல் நடந்துகொள்ள வேண்டும் என்று நிலையில், டெல்லியில்
நடந்த முக்கூட்டு மகாநாட்டில் "கோட் ஆப் டிஸிப்ளின்" என்ற ஒன்றை
நிர்ணயித்தார்கள். கூடியவரைக்கும் அது அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.
சில சமயங்களில் அதையும் மீறி தவறுகிறார்கள். இவ்வாறு தொழிற்
சங்கங்கள், போட்டி சங்கங்கள், அதுவும் அரசியல் கட்சி அடிப்படையில்
ஏற்படுத்தப்பட்ட சங்கங்கள் இருப்பதனால், தொழிலாளர்களுடைய நலன்
பாதிப்பதோடுகூட, சில தொழில் அதிபர்கள் அந்த நிலைமையை தங்களுக்
காக பயன்படுத்திக்கொள்ள முயலுகிறார்கள். ஆகவே, போட்டி சங்கங்கள்
இல்லாமல் இருந்தால்தான் நலம் என்று நாங்கள் வற்புறுத்திக்கொண்டு
வருகிறோம்.

சங்கமே வேண்டாம், தனிப்பட்ட ஒருவர் ஒரு வழக்கு தொடர்ந்தால்
அதை கவனிக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ண
மூர்த்தியோ அல்லது திரு. மாதவனோ கூறினார்கள். தொழிற் சங்கம்
அமைத்து, சேர்ந்து பாடுபடுவது நல்லது என்ற அடிப்படையில் தான்
தொழிற் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன. தொழில் அதிபர்கள் இருக்
கிறார்கள் என்றால், அவர்களுக்கு செல்வாக்கு இருக்கிறது, அவர்களுக்கு
சுயநலம் இருக்கலாம். தங்களுடைய கோரிக்கைகளை பெறுவதற்கு சேர்ந்து
பாடுபடுவது நல்லது. தனியாக பாடுபட்டால், அது வேண்டிய பலனை
அளிக்காது. தவறுதலாக நடந்துகொள்பவர்கள் இருந்தால், தொழில்
அதிபர்கள் அதை பயன்படுத்திக்கொள்ளக்கூடும். ஒருவரை விட்டு ஒருவரை
பிரித்துவிட முடியும். ஆகவே, ஐக்கிய சங்கமாக இருப்பது நல்லது



16th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

என்று உலகத்தில் இருக்கிற எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.
தொழிற் சங்கங்களை மேலும் எவ்வாறு பயன்படுத்துவது என்பது உலகத்தி
லுள்ள எல்லா நாடுகளின் கவனத்திலும் இருந்து வருகிற விஷயம்.
ஆண்டுதோறும் ஜினிவாவில் சர்வதேச தொழிற் சங்க மகாநாடு கூடுகிறது.
அங்கு தொழிலாளர்கள் நலனைப்பற்றி யோசிக்கிறார்கள். எத்தனை மணி
நேரம் வேண்டுமானாலும் வேலை செய்யலாம் என்று கனம் உறுப்பினர்
திரு. சா. கணேசன் அவர்கள் கூறினார்கள். வேலை மணி நேரத்தைக்
குறைக்க வேண்டும் என்று தான் ஜினிவா மகாநாட்டில் வற்புறுத்தப்
பட்டு வருகிறது, வரவர வேலை மணி நேரத்தைக் குறைக்க வேண்டும்
என்ற போக்குத் தான் இருக்கிறது. அதே சமயத்தில் அவர்களுக்கு
வேண்டிய வசதிகளும் கிடைக்கவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது.
என்ன கிடைக்கவேண்டும் என்பதற்கு ஒரு கோட்பாட்டை கனம் அங்கத்
தினர் தெரிவித்தார்கள். அவர்களுடைய சக்திக்கு ஏற்றவாறு இல்லாமல்,
அவர்களுடைய வாழ்க்கைக்குத் தேவையானவற்றை, வாழ்க்கைத்
தேவைக்கு வேண்டியதை மட்டும்கொடுத்துவிடவேண்டும் என்று சொன்
னார்கள். அப்படியென்றால், 10 குழந்தைகள் பெற்ற தொழிலாளர்கள்
யார், ஒரு குழந்தை பெற்ற தொழிலாளர்கள் யார், குழந்தையே
இல்லாத தொழிலாளர்கள் யார் என்று இப்படிப் பார்த்து நாம் ஊதியம்
கொடுக்க முடியுமா? அது நியாயமாக இருக்காது. ஆனால், அவர்க
ளுக்கு தேவையும் இருக்கலாம். பொதுவாக தொழிலாளர்கள் தேவையை
அனுசரித்து, அவர்கள் நல் வாழ்க்கை வாழ்வதற்கு, உழைக்கிற தொழி
லாளர்களுக்கு வாழ்க்கைக்கு தேவையானவை எவை என்பதையும்
கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் அவர்களுடைய
சக்தி என்ன, அவன் என்ன சாதிக்கிறான் என்பதையும் மனதில்
கொள்ளவேண்டும். தொழிலாளர்கள் எல்லாம் ஒரே வகை தொழிலாளர்
கள்தான், ஒரேமாதிரி சாப்பாடு தான் என்ற கருத்து கூட இங்கே
தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், தொழிலாளர்கள் சாதிக்கக்
கூடிய சாதனை, சாதனை சக்தி, அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள
வேண்டும். அவர்களுடைய சேவை என்ன, அவர்கள் சாதிப்பது என்ன,
அவர்கள் எந்த நிறுவனத்தில் பணிபுரிகிறார்கள், அந்த நிறுவனம்
எத்தகைய லாபம் அடைந்திருக்கிறது ஆகிய எல்லாவற்றையும் வைத்துக்
கொண்டு தான் தொழிலாளர்களுக்கு ஊதியம் நிர்ணயிக்கப்படவேண்டுமே
தவிர, அவர்கள் குடும்பத்திற்கு என்ன தேவை என்பதை மட்டும் வைத்து
அவர்களுக்கு ஊதியம் நிர்ணயிப்பது சரியல்ல. போனஸ் பற்றி கனம்
சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது மிகுந்த திருப்தி,
மிகுந்த மகிழ்ச்சி. சுதந்திராக் கட்சித் தலைவரே அவர்களுக்கு லாபத்தில்
பங்கு கொடுக்கவேண்டுமென்று கூறியது பற்றி எனக்கு மிகுந்த திருப்தி.

**திரு. சா. கணேசன்:** கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற
பொழுது, வேலை நேரத்தைக் குறைப்பது பற்றி சொன்னார்கள். வேலை
நேரம் கட்டுப்படுத்தப்பட வேண்டும், 10 குழந்தைகள் இருப்பவர்களுக்கு
வாய்ப்பும் கொடுக்க முடியாது, கொஞ்சம் அதிக நேரம் அவர்கள் வேலை
செய்து சாப்பிடுவதற்கும் வழி இருக்க முடியாது என்று சொன்னால், அது
எவ்வளவு சிரமம்? அதுவும் சுதந்திராக் கட்சித் தலைவரே சொன்னார்கள்
என்று கூறினார்கள். அதனால் நான் சொல்ல விரும்புகிறேன். சுதந்
திராக் கட்சி அடிப்படைக் கொள்கையே, லாபத்தில், பங்குதாரர்களைப்
போல தொழிலாளர்களும் பங்கு பெறும் உரிமை உடையவர்களாக
இருக்கவேண்டும் என்பது பல வருஷங்களாக எழுதி, அச்சுப் போட்டுக்
கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம். அதை அமைச்சர் அவர்கள்
கவனிக்காமல் இருப்பதற்கு நான் வருந்துகிறேன்.

**கனம் திரு எம். பக்தவத்சலம்:** எனக்கு இந்த சுதந்திரா கட்சியைப்
பற்றிய பழைய சரித்திரம் அவ்வளவாகத் தெரியாது (சிரிப்பு). அந்த
சாஸ்திரமும் தெரியாது. ஆனால் இப்பொழுது கேட்டதிலே மிகுந்த
மகிழ்ச்சி என்று சொன்னேன். ஏனென்றால் அதுதான் இப்பொழுது
அனுசரிக்கப்பட்டு வருகிற கொள்கை. போனஸ் என்பதற்கு அதுதான்
அர்த்தம். சிலர் கூட "டெபர்ட் பேமண்ட்" என்று சொல்வார்கள்.
போனஸ் என்பதிலே என்ன கருத்துக்கள் உண்டோ, அதையெல்லாம்
டேபர்ட் பேமெண்ட் என்று சொன்னால் அது சரியாக பிரதிபலிக்காது

[திரு. எம். பக்தவத்சலம்] [16th March 1964

என்பது தான் என்னுடைய கருத்து. "டெபர்ட் பேமண்ட்" என்று
சொன்னுல் ஏதோ பேமண்ட் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வளவு கொடுத்
தோம் என்று சொன்னுல் அது நிர்ணயிக்கப்பட்டதாகப் போய்விடும்.
ஆகவே "டெபர்ட் பேமண்ட்" என்று சொல்லுவது கொள்கைக்கு ஏற்ற
வாறு அவ்வளவு அக்யூரேட்டாக இல்லை என்பது தான் என்னுடைய
கருத்து. நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் என்று சொன்னுல் மேலும் கால்
பங்கு கொடுக்கிறேம், அரை பங்கு கொடுக்கிறேம். இப்பொழுது போனஸ்
கமிஷன் சிபாரிசுகள் வெளிவந்திருக்கின்றன. கனம் அங்கத்தினர்
களுக்கும் தெரியும். ஏதோ சொன்னுர்கள், மொத்த நிகர லாபத்தில்
100–க்கு 60 கொடுக்க வேண்டும் என்று இப்பொழுது போனஸ் கமிஷன்
சிபாரிசு செய்து இருக்கிறது என்று. ஆனுல் அது இப்பொழுது மத்திய
அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு ஒரு டிசன்ட்டிங்
மினிட் இருக்கிறது. அதையெல்லாம் பரிசீலனை செய்து, அதற்கு மேலே
நாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம். (திரு.
சா. கணேசன் குறுக்கீடு) அது எல்லாம் அடங்கியது. முதலிலே நாம்
கொடுக்கிற சம்பளம் அந்த தொழிலாளிகளுடைய தேவை, அவர்கள்
வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய தேவைகள், இது எல்லாம் முக்கியம்.
அது அடிப்படை என்று சொல்ல வேண்டும். இரண்டாவது, அந்தத்
தொழிலாளி செய்கின்ற வேலை, அவன் செய்கின்ற சாதனை, உற்பத்தி
பெருக்குக்கு அவன் செய்கின்ற சாதனை, அந்த அடிப்படையிலே
அவனுக்கு வேஜஸ் கொடுக்க வேண்டும். விலைவாசி உயர்ந்தால் பஞ்சப்
படி கொடுக்கிறர்கள். இந்த விவாதத்தை துவக்கிய கனம் அங்கத்
தினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நெய்வேலித் திட்டத்தைப்பற்றிச்
சொன்னுர்கள். நெய்வேலியில் ஒரு பெரிய திட்டம் நடக்கிறது. நிறைய
தொழிலாளர்கள் இருந்தால், தொழிலாளர்கள் பிரச்னைகள் தானு
கவே ஏற்படுகின்றன. செயற்கை முறையில் ஏற்படுகின்றன.
இப்பொழுது பஞ்சப்படி பற்றி சொன்னுர்கள். பஞ்சப்படி கொடுக்கப்பட்டு
வருகிறது. இப்பொழுது உத்திரவாகியிருக்கிறது. அதாவது 1964-ம்
ஆண்டு ஜனவரி முதல் தேதி முதற்கொண்டு குறைந்த பட்சம் 7 ரூபாய்
அதிக பட்சம் ரூ. 15 என்ற விகிதத்திலே பஞ்சப்படி கொடுக்க வேண்டும்
என்பது. அவர்களும் அதை ஒப்புக்கொண்டிருக்கிறர்கள். அது
மாத்திரம் அல்ல. முன்பு இருந்த சம்பளம் விகிதங்களை தொழிலாளர்கள்
தலைவர்களோடு கலந்து, பிரதிநிதிகளோடு கலந்து, ஆலோசித்து அதையும்
மாற்றியிருக்கிறர்கள். ஆனுல் இது நேற்று இன்றைக்கு அல்ல.
இவ்வளவு பெரிய திட்டமாக இது மாறிய பிறகு மட்டுமல்ல. தொன்று
தொட்டு இந்த நெய்வேலித் திட்டம் ஆரம்பித்ததிலிருந்து, இந்தத்
திட்டம் வேண்டாம் என்று ஒரு பக்கம், இன்னொரு பக்கத்திலே அந்தத்
திட்டத்திற்கு எதிர்ப்பாகவும், இடைஞ்சலாகவும் சிலர் முற்பட்டு ஏதோ
நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பது எனக்கும் தெரியும், கனம்
அங்கத்தினர்கள் அவர்களுக்கும் தெரியும். இது ஒரு நல்ல திட்டம்.
தமிழ் நாட்டில் நிறைவேற்றப்படும் பெரிய திட்டம். அந்தத் திட்டம்
நிறைவேற்றப்படுவதனுல் எவ்வளவோ பேர்களுக்கு வேலை கிடைக்கிறது.
அவ்வாறு வேலை கிடைக்கிறது என்றுல் அவர்களைச் சுரண்டுவதற்கு
அரசாங்கம் ஒருகாலும் இடம் கொடுக்காது.

ஜிப்ஸம் எடுப்பதைப்பற்றி குறிப்பிட்டார்கள். அது சுரங்க வேலை.
அதுவும் கவனிக்கப்பட வேண்டும். நான் பொறுப்பைத் தட்டிக்கழிக்க
வில்லை. சுரங்கத்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களைப் பொறுத்த
வரையில், அவர்கள் மத்திய அரசாங்கத்தின் தொழில் இலாகாவின்
பொறுப்புக்கு உட்பட்டவர்கள். அதை அவர்கள் கவனித்துக்கொண்டு
வருகிறர்கள்.

லேபர் கோர்ட்டுகளைப்பற்றி சொன்னுர்கள். விக்டிமைசேஷனைப் பற்றி
யும் சொன்னுர்கள். இப்பொழுது தனிப்பட்டவர்கள் வழக்குத் தொடர
லாம் என்று இருக்கிறதே, அதனுல் தொழிற் சங்கம் பாதிக்கப்படும்
என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்கிற ஒரு கருத்து. ஆனுல் இந்த
அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தனிப்பட்டவர்கள் யாராவது இருந்
தாலும், தொழில் சங்கத்தை சேராதவர்களாக இருந்தாலும், தனிப்



16th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

பட்டவர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டால் அவர்கள் வழக்குத் தொடர
லாம், அந்தத் தொழில் தகராறுகளை தீர்க்கிற யந்திரம் அவைகளை
ஏற்றுக்கொண்டு தீர்ப்புக் கொடுக்க வேண்டும் என்பது இந்த அரசாங்
கத்தின் கருத்து. இதை இந்த அரசாங்கம் வற்புறுத்திக்கொண்டு வரு
கிறது. நாம் மத்திய அரசாங்கத்தினிடம் அதற்கு சட்டம் செய்ய வேண்டும்
என்று கோரினேம். மத்திய சர்க்கார் கூறினுர்கள், முக்கூட்டு மாநாடுகள்
மத்திய அரசாங்க ரீதியில் நடக்கிறது. அதிலே தொழில் தலைவர்களைக்
கலந்துகொண்டு, இதை நாம் கவனிக்கலாம் என்று கூறினுர்கள். இரண்டு
மூன்று மாதங்களுக்கு முன்பு கூட டில்லியிலே இது பற்றி விவாதிக்கப்
பட்டது. தொழிலாளர் தலைவர்கள் சிலர் இது கூடவேக் கூடாது என்று
வாதாடினுர்கள். சிலர் இதைச் செய்யலாம் என்று சொன்னுர்கள்.
நான் அந்த மகாநாட்டில் என்னுடைய கருத்தைத் தெரிவித்தேன்.
தனிப்பட்டவர் ஏதோ காரணம் இருக்கலாம், தொழிற் சங்கங்கள் அவற்றை
ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். தொழிற்சங்கமானது வேண்டாம்
என்று சொல்லலாம். அப்படி வேலையை விட்டு நீக்கிவிட்டால் யாராவது
தீர்ப்புக் கூறவேண்டும். தொழிலதிபர்களே தீர்ப்புக் கூறுவது சரியல்ல.
யாராவது ஒருவர் சொல்ல வேண்டும். அதுவும் ஒரு நீதிபதி அவர்
நியாயமாக நீக்கப்பட்டாரா என்று சொல்ல வேண்டும். அது
தான் என்னுடைய கருத்து. அதைத்தான் நான் வற்புறுத்தினேன்.
அந்த வகையிலே சீக்கிரத்தில் ஒரு சட்டம் வரலாம் என்று நினைக்கிறேன்.

லேபர் கோர்ட்டுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். லேபர் கோர்ட்டுகள்
எல்லாம் கூடியவரையிலும் முதலிலே சுமுகமாக வழக்குகளைத் தீர்ப்
பதற்கு பாடுபடுகிறர்கள். முதலிலே ஒரு இடத்திலே போடுகிறர்கள்,
மறுபடியும் மாற்றுகிறர்கள், இந்த கஷ்டங்கள் எல்லாம் இருக்கின்றன
என்று சொன்னுர்கள். இவை எல்லாம் கவனிக்கப்பட்டுத்தான் வருகின்
றன. அப்போதைக்கப்போது இதிலே தொடர்ந்து கவனம் செலுத்தி
என்னென்ன உத்திரவுகள் போடவேண்டுமோ அது போடப்பட்டு வருகிறது.
லேபர் கோர்ட்டிலிருந்து சம்மன்ஸ் அனுப்பித்தால் தொழிலதிபர்கள்
வருவது இல்லை என்று சொன்னுர்கள். அவர்கள் வருவது இல்லை என்று
சொன்னுல் அதற்காக தொழில் கோர்ட்டு நின்றுவிடுவது இல்லை.
இருக்கிறதை வைத்துக்கொண்டு அவர்கள் முடிவு செய்வார்கள். அப்படி
தொழில் கோர்ட் தீர்ப்புக் கொடுத்தால் அது நிறைவேற்றப்படுவது இல்லை,
சம்பளம் கொடுப்பதோ மற்ற விஷயங்களோ நிறைவேற்றப்படுவது இல்லை
என்று கூறினுர்கள். வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று
உத்தரவு போடலாம். அப்படி அது நிறைவேற்றப்படவில்லை என்றுல்
வழக்குத் தொடரப்படுகிறது. பிராசிக்யூஷன் செய்யப்படுகிறது. அப்படி
பிராசிக்யூஷன் செய்து பைன் போட்டு, அப்பொழுதும் அந்தத் தீர்ப்பு
நிறைவேற்றப்படவில்லை என்றுல் தொடர்ந்து மேலும் நடவடிக்கை எடுத்
துக்கொள்ளப்படும்.

இன்னும் இந்த இலாகாவிலுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கையை
அதிகப்படுத்த வேண்டும் என்று சொன்னுர்கள். அதுவும் தொடர்ந்து
கவனிக்கப்பட்டு வருகிற விஷயம். அப்போதைக்கப்போது விரிவாக்கப்பட்டு
வருகிறது. பாக்டரி சட்டத்தை நிறைவேற்றுவதிலும் சரி, தொழில்
தகராறுகளைத் தீர்ப்பதிலும் சரி, அவை எல்லாம் அப்போதைக்கப்போது
கவனிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கனம் எதிர்க்கட்சித்
தலைவர்கள் விடுமுறையைப்பற்றிச் சொன்னுர்கள். இந்த மன்றத்திலே
விடுமுறையைப்பற்றி நாம் சட்டம் செய்து இருக்கிறேம். குறைந்த பட்சம்
இன்னின்ன விடுமுறைகள் இருக்க வேண்டும், தேசீய விடுமுறை என்று
இரண்டு நாட்கள், மற்ற பண்டிகைகளுக்காக இவ்வளவு நாட்கள் விடுமுறை
விட வேண்டும் என்று சட்டம் செய்திருக்கிறேம். அந்தச் சட்டத்தின்படி
விடுமுறை விடப்படுகிறது. அது குறைந்த பட்சம் விடுமுறை. அதற்கு
மேலே அவரவர்கள் விடுமுறை விட்டாலும் விடலாம்.

மோட்டார் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்
கள். அவர்களைப்பற்றி முன்பே நான் கூறியிருக்கிறேன். அப்பொழுது
விதிகள் இயற்றப்படவில்லை. இப்பொழுது விதிகள் இயற்றப்பட்டுவிட்டன.
விதிகள் இயற்றப்பட்ட உடனே அவை எல்லாம்
அதோடும் மட்டுமல்ல.

[ திரு. எம். பக்தவத்சலம்] [16th March 1964

பிரசுரிக்கப்பட்டும்விட்டன. ஆனால் இப்பொழுது ஒரு கருத்து தெரிவிக்கப் பட்டு இருக்கிறது. அதாவது அப்போதைக்கப்போது பிரசுரிக்கப்பட்ட விதிகள், அனுசரிக்கப்பட்ட விதிகள், இவற்றை எல்லாம் ஒன்றாக இணைத்து, அதைப் பிரசுரிப்பது நலம் என்ற ஒரு கருத்து சட்ட பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது. அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சீக் கிரத்தில் இணைக்கப்பட்ட விதிகள் பிரசுரிக்கப்படும். ஆகவே இதிலே தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

தொழிலாளர்களின் வீடுகளைப்பற்றி, அதிலும் குறிப்பாக தோட்டத் தொழிலாளிகளைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். தோட்டத் தொழிலாளிகளைப் பொறுத்த வரையில், 23,313 குடும்பங்களுக்கு இப் பொழுது வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் குடும்பங்கள் 34,507. இது விஷயமாக நான் அப்போதைக்கப்போது தோட்டத் தொழி லதிபர்களை வற்புறுத்திக்கொண்டு வருகிறேன். அவர்களுக்குச் சில கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். சிமெண்ட் கிடைப்ப தில்லை, மற்ற சாமான்கள் கிடைப்பதில்லை என்றெல்லாம் சொல்லு

1-30 p.m. கிறார்கள். இருந்தாலும் பிளாண்ட்டேஷன் சட்டப்படி 1968-க்குள் இதை பூர்த்தி செய்ய வேண்டும். வீடுகள் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். அது கவனிக்கப்படவேண்டிய விஷயம். அதைத்தான் கனம் அங்கத்தினர் பொன்னையன் சொன்னார்கள். ஆனால் ஒன்று. அது தொழிலாளர் தலைவர்கள் கவனிக்க வேண்டிய விஷயமும் கூட. வீடுகள் கொடுத்தால் சப்லெட் செய்கிறார்கள். அல்லது அதிகம் பேர்கள் வருகிறார்கள். அது வசதிக் குறைவோடு அல்லாமல் சுகாதாரத்துக்கும் ஏற்றதல்ல. அது தொழிலாளர்களுக்கு நல்லதல்ல. இதிலே தொழிலாளர் தலைவர் ஒத் துழைக்க வேண்டும். விளக்குப் போடுவது தொடர்ந்து கவனிக்கப்படும். மற்றொரு விஷயம் மிக முக்கியமானது. நியாய விலை கடைகள், கன்ஸ்யூமர் ஸ்டோர்ஸ் அமைப்பது தொழிலாளிகளுடைய நலனை ஒட்டி அதற்கென்று அலாட்மெண்ட் கொடுத்து கன்ஸ்யூமர் ஸ்டோர்ஸ்களையும், நியாய விலை கடைகளையும் அமைக்க வேண்டும் என்பது தான் திட்டம். அப்படி பல இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

MR. DEPUTY SPEAKER : How much more time will the Hon. Minister require?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Just a few minutes more.

MR. DEPUTY SPEAKER : I hope the House has no objection to sit till the Hon. Minister finishes his reply and the Demand is disposed of.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் மேலும் அங்கத்தினருடைய காலத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. நான் இங்கே குறிப்பிடாத சில யோசனைகள், குறைகள் எல்லாம் கனம் அங்கத்தினர்கள் குறிப் பிட்டார்கள். அவைகளும் கவனிக்கப்பட்டு வரும் என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடிக்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 1,28,31,600 under Demand No. XXIV—Labour including Factories be reduced by Rs. 100"

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,28,31,600 under Demand No. XXIV—Labour including Factories."

The Demand was put and carried and the Grant was made.



16th March 1964]

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 1-32 p.m.

The House then adjourned.

VI.—PAPERS PLACED ON THE TABLE OF THE HOUSE.

## A. Statutory Rules and Orders.

122. *Notification issued with G.O. Ms. No. 1688, Public (Services-A), dated 28th October 1963, amending the Madras Public Service Commission Regulations, 1954, relating to the inclusion within the Commission's purview the posts of Chemist, Assistant Chemical Engineers and Demonstrators in Chemical Testing and Analytical Laboratory, Madras. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]*

123. *Notification issued with G.O. Ms. No. 1689, Public (Services-A), dated 28th October 1963, amending the Madras Public Service Commission Regulations, 1954, relating to the redesignation of the post of Production Assistant in Ceramic Units of Madras Industrial Subordinate Service. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]*

## B. Reports, Notifications and other papers.

78. *Notification issued with G.O. Ms. No. 3632, Food and Agriculture, dated 17th December 1963, amending the rules to regulate the transit of timber in the revenue districts and the forest division, published with the late Development Department Notification No. 143, dated the 13th February 1939, at pages 221–229 of Part I of the Fort St. George Gazette, dated the 21st February 1939, under the Madras Forest Act, 1882 (Madras Act V of 1882).*

79. *Notification issued with G.O. Ms. No. 3633, Food and Agriculture, dated 17th December 1963, amending the General Timber Transit Rules for revenue districts and forest divisions in respect of Salem, Chingleput, South Arcot and Nilgiris districts, issued under the Madras Forest Act, 1882 (Madras Act V of 1882).*

* 80. *Policy Note underlying Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes.*

* 81. *The Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram (Extension of Application) Bill, 1964 (L.A. Bill No. 7 of 1964) with Annexure to the Bill.*

* Circulated to Members on 13th March 1964.

## APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 257 on page 1]

(*a*) The number of deaths due to cholera in Madurai and Ramanathapuram districts during September 1963 and October 1963 is as follows :—

| Districts. | In September 1963. | In October 1963. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| Madurai .. .. .. | 10 | 53 |
| Ramanathapuram .. | .. | 18 |

(*b*) The steps taken to arrest the spread of the infection are as follows :—

On receipt of information about the occurrence of the infection, the District Health Officers concerned took necessary preventive and control measures, such as launching of an intensive mass inoculation campaign, disinfection of the infected premises, materials, clothings, etc., periodical systematic chlorination of drinking water sources, isolation and treatment of cholera cases in the nearest hospitals or sheds, as the case may be. Reserve Health Inspectors from the State Epidemic Reserve have been posted for effective control work to augment the local Public Health staff. The Mobile Epidemic Unit ambulance van and jeep have been fully utilized for quick transportation of infected cases to the Infectious Diseases hospitals and sheds and for rapid movement of staff and equipments to the infected areas.

பதில்.—(அ) 1963-ம் வருஷம் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் காலராவால் இறந்தவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| மாவட்டங்கள். | 1963 செப்டம்பரில். | 1963 அக்டோபரில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மதுரை மாவட்டம் .. .. | 10 | 53 |
| இராமநாதபுரம் மாவட்டம் .. | .. | 18 |

(இ) காலரா நோய் பரவுவதைத் தடுக்க அடியிற்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன :—

காலரா நோய் கண்டுள்ளதுபற்றி தகவல் கிடைத்தவுடன், சம்பந்தப் பட்ட மாவட்டச் சுகாதார அதிகாரிகள் காலரா நோயைத் தடுக்கவும் கட்டுப் படுத்தவும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மக்கள் எல்லோருக்கும் காலரா ஊசி போடப்பட்டது. காலரா நோய் கண்ட வீடுகளி லும், அங்குள்ள சாமான்கள், துணிமணிகள் முதலியவற்றிலும் கிருமி கொல்லிகளைத் தெளித்துச் சுத்தப்படுத்தினார்கள். குடிக்கும் நீர் நிலைகளில் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை முறைப்படி குளோரின் மருந்து கலக்கப் பட்டது. காலரா நோய் கண்டவர்களுக்கு அண்மையிலுள்ள ஆஸ்பத்திரி களில் அல்லது கொட்டகைகளில் ஒதுக்குப்புறமாக வைத்துச் சிகிச்சையளிக்கப் பட்டது. தலைப் பொதுச் சுகாதாரப் பணியாளர்களுடன் காலரா நோய்க் கட்டுப் பாட்டு நடவடிக்கைகளை தீவிரமாக நிறைவேற்றுவதில் உதவியளிக்க மாநிலக் கொள்ளை நோய் ரிசர்வ் பணியாளர்களிலிருந்து ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள்





அனுப்பப்பட்டனர். காலரா நோய் கண்டுள்ளவர்களை விரைவில் தொற்று நோய் ஆஸ்பத்திரிகளுக்கும் கொட்டகைகளுக்கும் எடுத்துச் செல்லவும், பணியாளர்களையும் சாதனங்களையும் காலரா நோய் பரவியுள்ள பகுதிகளுக்கு விரைவில் கொண்டு செல்லவும் மொபைல் எபிடமிக் யூனிட் வண்டியும் ஜீப்பும் நன்குகப் பயன்படுத்திக்கொள்ளப்பட்டன.

## APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 277 on page 7.]

*List of temples in the Madras State having libraries*

### MADRAS DISTRICT.

Sri Chennamaleeswarar and Chennakesavaperumal temples, Devaraja Mudali Street, P.T. Madras.

Sri Prasannavinayagar temple, Venkatachala Mudali Street, P.T. Madras.

Sri Kapaleeswarar temple, Mylapore, Madras.

### CHINGLEPUT DISTRICT.

Sri Devarajaswamy temple, Little Kancheepuram.

Sri Ekambaranathaswamy temple, Big Kancheepuram.

Sri Vaikuntaperumal temple, Big Kancheepuram.

Sri Kailasanathaswamy temple, Salabogam, Big Kancheepuram.

Sri Kamakshiamman temple, Big Kancheepuram.

Sri Valarutheeswarar temple and Pathaleeswarar temple, Big Kancheepuram.

Sri Subramaniaswamy temple, Kumarakottam, Big Kancheepuram.

Sri Kachaleswaraswami temple, Big Kancheepuram.

Sri Pravalavarnaswamy temple, Big Kancheepuram.

Sri Gnanaprakasaswamigal Math, Big Kancheepuram.

Sri Sankaracharyaswamigal Math, Big Kancheepuram.

Sri Pataladri Narasingaperumal temple, Singaperumal Koil.

Sri Kandaswamy temple, Tirupporur, Chingleput taluk.

Sri Nithyakalyanaswamy temple, Tiruvidanthai, Chingleput taluk.

Sri Sthalasayanaperumal temple, Mahabalipuram, Chingleput taluk.

Sri Vedagiriswarar temple, Tirukalikundram, Chingleput taluk.

Sri Kothandaramaswamy temple, Chingleput, Chingleput taluk.

Sri Thiagarajaswamy temple, Thiruvottiyur, Saidapet taluk.

CHINGLEPUT DISTRICT—*cont.*

Sri Sowmyadamodaraperumal temple, Konnur, Saidapet taluk.

Sri Marundeeswarar temple, Tiruvanmiyur, Saidapet taluk.

Sri Ranganathaswamy temple, Tiruneermalai, Saidapet taluk.

Sri Paleeswaraswami temple, Tiruppalaivanam, Ponneri taluk.

Sri Balasubramanyaswami temple, Andarkuppam, Ponneri taluk.

Sri Veeraraghavaswamy temple, Trivellore town and taluk.

Sri Thirupurandeeswarar temple, Coovam, Tiruvallur taluk.

Sri Kothandaramaswamy temple, Madurantakam town and taluk.

Sri Audikesavaperumal and Bashyakaraswamy Devasthanam, Sriperumbudur town and taluk.

Sri Sundareswaraswami temple, Kovur, Sriperumbudur taluk.

Sri Bakthavathsalaperumal temple, Tinnanur, Sriperumbudur taluk.

Sri Jagannathaperumal, etc., temples, Thirumazhisai, Sriperumbudur taluk.

Sri Thirukachinambigal, etc., temples, Poonamallee, Sriperumbudur taluk.

SOUTH ARCOT DISTRICT.

Sri Subramanyaswamy temple, Mailam, Tindivanam taluk.

NORTH ARCOT DISTRICT.

Sri Arunachaleswarar temple, Tiruvannamalai.

Sri Lakshminarasimhaswamy temple, Sholingur, Wallaja taluk.

THANJAVUR DISTRICT.

Sri Chokkanathaswamy temples, Mannargudi town and taluk. taluk.

Sri Rajagopalaswamy temple, Mannargudi taluk.

Sri Sarangapaniswamy temple, Kumbakonam town and taluk.

Sri Arunajateswarar temple, Tiruppanandal, Kumbakonam

Sri Kumbahareswarar temple, Thirubhuvanam, Kumbakonam taluk.

Sri Mahalingaswamy temple, Thiruvidaimarudur, Kumbakonam taluk.

Sri Panchanatheeswarar temple, Thiruvayaru, Thanjavur taluk.

Sri Athamanathaswami temple, Avadayarkoil, Arantangi taluk.

Sri Mayuranathaswamy temple, Mayuram town and taluk.

Sri Ukthavediswarar temple, Kuttalam, Mayuram taluk.

Sri Dharmapuram Math, Dharmapuram, Mayuram taluk.



THANJAVUR DISTRICT—*cont.*

Sri Kumarar Kattalai attached to Sri Subramanyaswami temple, Mayuram town and taluk.

Sri Margasahayaswamy temple, Moovalur, Mayuram taluk.

Sri Thiruvaduthurai Math, Thiruvaduthurai, Mayuram taluk.

Sri Vaidyanathaswami temple, Vaitheeswarankoil, Sirkali taluk.

Sri Sattanathaswami temple, Sirkali, Sirkali taluk.

Sri Soundararajaperumal temple, Nagapattinam town and taluk.

Sri Thyagarajaswami temple, Tiruvarur, Nagapattinam taluk.

Sri Kayarchanaswami temple, Nagapattinam town and taluk.

Sri Thygarajaswami temple, Tirukuvalai, Nagapattinam taluk.

Sri Navaneethaswaraswami temple, Sikkil, Nagapattinam taluk.

Sri Vanjinathaswami temple, Srivanchiyam, Nannilam taluk.

Sri Agniswarar temple, Tirupugalur, Nannilam taluk.

Sri Bavaoushadiswarar temple, Thiruthuraipundi taluk.

Sri Mantrapuriswarar temple, Kovilur, Thiruthuraipundi town and taluk.

Sri Soundareswarar temple, Muthupet, Thiruthuraipundi taluk.

Sri Vedaranyeswarar temple, Vedaranyam, Thiruthuraipundi taluk.

TIRUCHIRAPPALLI DISTRICT.

Sri Ranganathaswamy temple, Srirangam, Tiruchirappalli taluk.

Sri Thayumanaswamy Devasthanam, Rock Fort, Tiruchirappalli taluk.

Sri Uthamar temple, Bikshandarkoil, Lalgudi taluk.

Sri Kaliyugavaradarajaperumal temple, Kallankurichi, Udayarpalayam taluk.

Sri Analadeeswarar temple, Thottiam, Musiri taluk.

Sri Karigiri Varadarajaperumal, etc., temples, Marungapuri (via) Tiruchirappalli R.M.S.

MADURAI DISTRICT.

Sri Meenakshisundareswarar Devasthanam, Madurai town and taluk.

Sri Kudalalagar temple, Madurai.

Sri Kallalagar temple, Madurai.

Sri Dhandayuthapaniswamy temple, Palni, Dindigul taluk.

[16th March 1964

### Ramanathapuram District.

Sri Anjukoil Devasthanam, Kunnakudi, Tirupattur taluk.

Sri Thirumeninathaswami temple, Thiruchuli, Aruppukkottai taluk.

Sri Venkatachalapathy temple, Sathur town and taluk.

Sri Nachiar Devasthanam, Srivilliputtur town and taluk.

Sri Mayuranathaswamy temple, Rajapalayam, Srivilliputtur taluk.

### Tirunelveli District.

Sri Nellaiappar temple, Tirunelveli town and taluk.

Sri Palayamsalar Kumaraswamy temple, Sindupundurai, Tirunelveli taluk.

Sri Subramanyaswami temple, Tiruchendur town and taluk.

Sri Athinatha Alwar temple, Alwarthirunagari, Tiruchendur taluk.

Sri Sankaranarayanaswami temple, Sankarankoil taluk and town.

Sri Thirumalai Kumaraswamy temple, Panpoli, Tenkasi taluk.

Sri Thiruvilanji Kumaraswamy temple, Ilanji, Tenkasi taluk.

Sri Thirukuthalanathaswamy temple, Courtallam, Tenkasi taluk.

Sri Kasinathaswamy temple, Ambasamudram town and taluk.

### Salem District.

Sri Kumaraguru Subramanyaswamy temple, Ammapet.

### Coimbatore District.

Sri Agastheeswarar temple, Dharapuram taluk.

Sri Kasiviswanathaswamy temple, Komaralingam, Udumalpet taluk.

Sri Thandaveeswarar, etc., temples, Kolumam, Udumalpet taluk.

Sri Ranganathar temple, Karamadai, Avanashi taluk.

Sri Sangameswararswamy temple, Bhavani town and taluk.

Sri Thiru Alangadu Irumudi Agora Dharmasivachariar Math, Nerinjipet, Bhavani taluk.

Sri Venugopalaswamy temple, Sathyamangalam, Gobichettipalayam taluk.



16th March 1964]

### தமிழ் நாட்டில் நூல்நிலையங்கள் உள்ள கோயில்களின் பட்டியல்

### சென்னை மாவட்டம்

ஸ்ரீ சென்ன மல்லேசுவரர்—சென்ன கேசவ பெருமாள் கோயில்கள்—தேவராஜ முதலி தெரு, பி.டி. சென்னை.

ஸ்ரீ ப்ரசன்ன விஜயகர் கோயில், வெங்கடாசல முதலி தெரு, பி.டி., சென்னை.

ஸ்ரீ கபாலீசுவரர் கோயில், மைலாப்பூர், சென்னை.

### செங்கல்பட்டு மாவட்டம்.

ஸ்ரீ தேவராஜசுவாமி கோயில், சின்ன காஞ்சிபுரம்.

ஸ்ரீ ஏகாம்பரநாதசுவாமி கோயில், பெரிய காஞ்சிபுரம்.

ஸ்ரீ வைகுண்ட பெருமாள் கோயில், பெரிய காஞ்சிபுரம்.

ஸ்ரீ கைலாசநாத சுவாமி கோயில், சால போகம், பெரிய காஞ்சிபுரம்.

ஸ்ரீ காமாட்சியம்மன் கோயில், பெரிய காஞ்சிபுரம்.

ஸ்ரீ வளருதீஸ்வரர் கோயில், பாதாள ஈசுவரர் கோயில், பெரிய காஞ்சிபுரம்.

ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில், குமரக் கோட்டம், பெரிய காஞ்சிபுரம்.

ஸ்ரீ கச்சாலீசுவரர் சுவாமி கோயில், பெரிய காஞ்சிபுரம்.

ஸ்ரீ ப்ரவளவர்ண சுவாமி கோயில், பெரிய காஞ்சிபுரம்.

ஸ்ரீ ஞானப்ரகாச சுவாமிகள் மடம், பெரிய காஞ்சிபுரம்.

ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் மடம், பெரிய காஞ்சிபுரம்.

ஸ்ரீ பாதாளத்திரி—நரசிங்க பெருமாள் கோயில், சிங்கபெருமாள் கோயில்.

ஸ்ரீ கந்தசுவாமி கோயில், திருப்போரூர், செங்கல்பட்டு தாலுகா.

ஸ்ரீ நித்ய கல்யாண சுவாமி கோயில், திருவிடந்தை, செங்கல்பட்டு தாலுகா.

ஸ்ரீ ஸ்தல சயன பெருமாள் கோயில், மகாபலிபுரம், செங்கல்பட்டு தாலுகா.

ஸ்ரீ வேதகிரீசுவரர் கோயில், திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு தாலுகா.

ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோயில், செங்கல்பட்டு, செங்கல்பட்டு தாலுகா.

ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயில், திருவொற்றியூர், சைதாப் பேட்டைத் தாலுகா.

ஸ்ரீ சௌம்ய தாமோதர பெருமாள் கோயில், கொன்னூர், சைதாப் பேட்டைத் தாலுகா.

ஸ்ரீ மருந்தீசுவரர் கோயில், திருவான்மியூர், சைதாப்பேட்டைத் தாலுகா.

செங்கல்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி.

ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோயில், திருநீர்மலை, சைதாப்பேட்டைத் தாலுகா.

ஸ்ரீ பாலேஸ்வர சுவாமி கோயில், திருப்பாலைவனம், பொன்னேரி தாலுகா.

ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி கோயில், ஆண்டார்குப்பம், பொன்னேரி தாலுகா.

ஸ்ரீ வீரராகவ சுவாமி கோயில், திருவள்ளூர், திருவள்ளூர் தாலுகா.

ஸ்ரீ திருப்புரந்தீசுவரர் கோயில், கூவம், திருவள்ளூர் தாலுகா.

ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோயில், மதுராந்தகம், மதுராந்தகம் தாலுகா.

ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் பாஷ்யக்கார சுவாமி தேவஸ்தானம், ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா.

ஸ்ரீ சுந்தரேஸ்வர சுவாமி கோயில், கோவூர், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா.

ஸ்ரீ பக்தவச்சல பெருமாள் கோயில், திண்ணனூர், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா.

ஸ்ரீ ஜெகநாத பெருமாள் முதலிய கோயில்கள், திருமழிசை, ஸ்ரீபெரும்புதூர் தாலுகா.

ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் முதலிய கோயில்கள், பூவிருந்தவல்லி, ஸ்ரீபெரும்புதூர் தாலுகா.

தென் ஆர்க்காடு மாவட்டம்

ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில், மயிலம், திண்டிவனம் தாலுகா.

வட ஆர்க்காடு மாவட்டம்

ஸ்ரீ அருணாசலீஸ்வரர் கோயில், திருவண்ணாமலை.

ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்ம சுவாமி கோயில், சோளிங்கபுரம், வாலாஜா தாலுகா.

தஞ்சாவூர் மாவட்டம்

ஸ்ரீ சொக்கநாத சுவாமி கோயில், மன்னார்குடி, மன்னார்குடி தாலுகா.

ஸ்ரீ ராஜகோபால சுவாமி கோயில், மன்னார்குடி தாலுகா.

ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி கோயில், கும்பகோணம், கும்பகோணம் தாலுகா.

ஸ்ரீ அருணஜடேஸ்வரர் கோயில், திருப்பனந்தாள், கும்பகோணம் தாலுகா.

ஸ்ரீ கம்ப ஹரீஸ்வரர் கோயில், திருப்புவனம், கும்பகோணம் தாலுகா.



தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.

ஸ்ரீ மகாலிங்க சுவாமி கோயில், திருவிடைமருதூர், கும்பகோணம் தாலுகா.

ஸ்ரீ பஞ்சனதீஸ்வரர் கோயில், திருவையாறு, தஞ்சாவூர் தாலுகா.

ஸ்ரீ ஆத்மநாத சுவாமி கோயில், ஆவுடையார் கோயில், அறந்தாங்கி தாலுகா.

ஸ்ரீ மாயூரநாத சுவாமி கோயில், மாயூரம், மாயூரம் தாலுகா.

ஸ்ரீ யுத்த வேதீஸ்வரர் கோயில், குத்தாலம், மாயூரம் தாலுகா.

ஸ்ரீ தர்மபுரம் மடம், தர்ம புரம், மாயூரம் தாலுகா.

ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயிலுடன் இணைக்கப்பட்ட ஸ்ரீ குமரர் கட்டளை, மாயூரம், மாயூரம் தாலுகா.

ஸ்ரீ மார்க்கசகாய சுவாமி கோயில், மூவலூர், மாயூரம் தாலுகா.

ஸ்ரீ திருவாடுதுறை மடம், திருவாடுதுறை, மாயூரம் தாலுகா.

ஸ்ரீ வைத்தியநாதசுவாமி கோயில், வைத்தீஸ்வரன் கோயில், சீர்காழி தாலுகா.

ஸ்ரீ சட்டநாத சுவாமி கோயில், சீர்காழி, சீர்காழி தாலுகா.

ஸ்ரீ சவுந்தரராஜ பெருமாள் கோயில், நாகப்பட்டினம், நாகப்பட்டினம் தாலுகா.

ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயில், திருவாரூர், நாகப்பட்டினம் தாலுகா.

ஸ்ரீ காயர்ச்சன சுவாமி கோயில், நாகப்பட்டினம், நாகப்பட்டினம் தாலுகா.

ஸ்ரீ தியாகராஜ சுவாமி கோயில், திருக்குவளை, நாகப்பட்டினம் தாலுகா.

ஸ்ரீ நவநீதஸ்வர சுவாமி கோயில், சிக்கல், நாகப்பட்டினம் தாலுகா.

ஸ்ரீ வாஞ்சி நாதஸ்வாமி கோயில், ஸ்ரீவாஞ்சியம், நன்னிலம் தாலுகா.

ஸ்ரீ அக்னீஸ்வரர் கோயில், திருப்புகலூர், நன்னிலம் தாலுகா.

ஸ்ரீ பாவா ஒளஷதீசுவரர் கோயில், திருத்துறைப்பூண்டி தாலுகா.

ஸ்ரீ மன்றப்புரீஸ்வரர் கோயில், கோவிலூர், திருத்துறைப் பூண்டி தாலுகா.

ஸ்ரீ சுவந்தரேஸ்வரர் கோயில், முத்துப்பேட்டை, திருத்துறைப் பூண்டி தாலுகா.

ஸ்ரீ வேதாரண்யேஸ்வரர் கோயில், வேதாரண்யம், திருத்துறைப் பூண்டி தாலுகா.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோயில், ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி தாலுகா.

ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில், மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி தாலுகா.

[16th March 1964

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி.

ஸ்ரீ உத்தமர் கோயில், பிச்சாண்டார் கோயில், லால்குடி தாலுகா.

ஸ்ரீ கலியுக வரதராஜ பெருமாள் கோயில், கள்ளன்குறிச்சி, உடையார்பாளையம் தாலுகா.

ஸ்ரீ அனலாதீஸ்வரர் கோயில், தொட்டியம், முசிரி தாலுகா.

ஸ்ரீ கரிகிரி வரதராஜ பெருமாள் கோயில்கள் முதலியன, மருங்காபுரி, திருச்சிராப்பள்ளி, ஆர்.எம்.எஸ். (வழி).

### மதுரை மாவட்டம்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானம், மதுரை, மதுரை தாலுகா.

ஸ்ரீ கூடலழகர் கோயில், மதுரை.

ஸ்ரீ கள்ளழகர் கோயில், மதுரை.

ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில், பழனி, திண்டுக்கல் தாலுகா.

### இராமநாதபுரம் மாவட்டம்

ஸ்ரீ அஞ்சி கோயில் தேவஸ்தானம், குன்னக்குடி, திருப்பத்தூர் தாலுகா.

ஸ்ரீ திருமேனி நாதா சுவாமி கோயில், திருச்சுளி, அருப்புக்கோட்டை தாலுகா.

ஸ்ரீ வெங்கடாசலபதி கோயில், சாத்தூர் தாலுகா.

ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம், ஸ்ரீ வில்லிப்புத்தூர், ஸ்ரீ வில்லிப்புத்தூர் தாலுகா.

ஸ்ரீ மயூரநாத சுவாமி கோயில், ராஜபாளையம், ஸ்ரீ வில்லிப்புத்தூர் தாலுகா.

### திருநெல்வேலி மாவட்டம்

ஸ்ரீ நெல்லையப்பர் கோயில், திருநெல்வேலி, திருநெல்வேலி தாலுகா.

ஸ்ரீ பாளையம் சலார் குமாரசுவாமி கோயில், சிந்துபூந்துறை, திருநெல்வேலி தாலுகா.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், திருச்செந்தூர், திருச்செந்தூர் தாலுகா.

ஸ்ரீ ஆதி நாத ஆழ்வார் கோயில், ஆழ்வார்திருநகரி, திருச்செந்தூர் தாலுகா.

ஸ்ரீ சங்கரநாராயண சுவாமி கோயில், சங்கரன்கோயில், சங்கரன்கோயில் தாலுகா.

ஸ்ரீ திருமலை குமாரசாமி கோயில், பண்புளி, தென்காசி தாலுகா.

ஸ்ரீ திருவிலஞ்சி குமார சுவாமி கோயில், இலஞ்சி, தென்காசி தாலுகா.



16th March 1964]

### திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி.

ஸ்ரீ திருக்குற்றால நாத சுவாமி கோயில், குற்றாலம், தென்காசி தாலுகா.

ஸ்ரீ காசி நாத சுவாமி கோயில், அம்பாசமுத்திரம், அம்பாசமுத்திரம் தாலுகா.

### சேலம் மாவட்டம்

ஸ்ரீ குமரகுரு சுப்ரமணிய சுவாமி கோயில், அம்மாப்பேட்டை.

### கோயம்புத்தூர் மாவட்டம்

ஸ்ரீ அகத்தீஸ்வரர் கோயில், தாராபுரம் தாலுகா.

ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமி கோயில், குமாரலிங்கம், உடுமலைப் பேட்டை தாலுகா.

ஸ்ரீ தாண்டவேஸ்வரர் முதலிய கோயில்கள், உடுமலைப் பேட்டை தாலுகா.

ஸ்ரீ ரங்கநாதர் கோயில், காரமடை, அவனாசி தாலுகா.

ஸ்ரீ சங்கமேஸ்வர சுவாமி கோயில், பவானி, பவானி தாலுகா.

ஸ்ரீ திருவாலங்காடு இருமுடி அகோர தரும சிவாச்சாரியார் மடம், நெடுஞ்சிப் பேட்டை, பவானி தாலுகா.

ஸ்ரீ வேணுகோபால சுவாமி கோயில், சத்தியமங்கலம், கோபி தாலுகா.

## APPENDIX III.

[*Vide* Answer to Starred Question No. 278 on page 9.]

Details of the various allowances paid to the Assistant Surgeons who are posted for duty in Madras City, Municipal areas, Non-Municipal areas and Primary Health Centres.

### I. RISK ALLOWANCE.

*Madras City*—

1. Part-time Radiologists—Rs. 30 per mensem.
2. Full-time Radiologists—Rs. 50 per mensem
3. Assistant Surgeons in Mental Hospital, Madras—Rs. 50 per mensem.

***Municipal areas***—

1. Part-time Radiologists—Rs. 30 per mensem.
2. Full-time Radiologists—Rs. 50 per mensem.

## II. NON-PRACTISING ALLOWANCE.

*Madras City and Municipal Areas—*

1. Non-Clinical Tutors—Rs. 100 per mensem.
2. Non-Clinical Lecturers—Rs. 100 per mensem.

The officers mentioned above are completely debarred from private practice.

## III. COMPENSATORY ALLOWANCE FOR RESTRICTED PRACTICE OR LOSS OF PRIVATE PRACTICE

*Madras City and Municipal and Non-Municipal Areas—*

1. Assistant Surgeons who are allowed restricted private practice—Rs. 50 per mensem.

The payment of the allowance is subject to the condition that there should be a registered medical practitioner of Modern Medicine practising within a radius of five miles.

2. Assistant Surgeons who are entirely debarred from private practice—Rs. 80 per mensem.

*Municipal Areas—*

## IV. SPECIAL LEPROSY ALLOWANCE.

Assistant Surgeons working in Leprosy Centres—Rs. 100 per mensem.

No condition is attached to the payment of this allowance.

## V. SPECIAL COMPENSATORY ALLOWANCE.

The Assistant Surgeons working in Non-Municipal Areas are paid a special compensatory allowance of Rs. 50 per mensem besides the other allowances.

No condition is attached to the payment of this allowance.

## VI. COMPENSATORY ALLOWANCES FOR ASSISTANT SURGEONS IN PRIMARY HEALTH CENTRES.

The Assistant Surgeons working in the Primary Health Centres are paid a compensatory allowance of Rs. 100 per mensem in lieu of the compensatory allowance of Rs. 50 per mensem for restricted private practice irrespective of the condition specified for the practitioner is residing and practising within a radius of five practitioner is residing and practising within a radius of five miles.

## VII. MADRAS HOUSE ALLOWANCE.

The Assistant Surgeons employed in Madras City are allowed to draw Madras House Allowance at the rate of actual rent paid by them less 10 per cent of their pay subject to a maximum of Rs. 50 per mensem. Government servants on a pay exceeding



Rs. 200 per mensem but not exceeding Rs. 500 per mensem who are ordinarily eligible for the Madras House Allowance may opt for the House Rent Allowance Scheme if that is more advantage- ous to them than the Madras House Allowance Scheme and *vice versa.*

சென்னை நகரம், நகராட்சிப் பகுதிகள், நகராட்சி அல்லாத பகுதிகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இடங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட உதவி சர்ஜன்களுக்கு அளிக்கப்படும் பல வகைப் படிகளின் விவரங்கள்.

## I. ஆபத்துப் படி ( Risk allowance. )

சென்னை நகரம்—

| | மாதம் ஒன்றுக்கு ரூபாய். |
|---|---|
| (1) பகுதி நேர ரேடியோலாஜிஸ்டுகள் .. | 30 |
| (2) முழு நேர ரேடியோலாஜிஸ்டுகள் .. | 50 |
| (3) சென்னையிலுள்ள மன நோய் மருத்துவ மனையில் பணிபுரியும் உதவி சர்ஜன்கள் .. .. .. .. | 50 |

**நகராட்சிப் பகுதிகள்.—**

| | மாதம் ஒன்றுக்கு ரூபாய். |
|---|---|
| பகுதி நேர ரேடியோலாஜிஸ்டுகள் .. | 30 |
| முழு நேர ரேடியோலாஜிஸ்டுகள் .. | 50 |

## II தொழில் நடத்தாதற்குப் படி.

**சென்னை நகரம், நகராட்சிப் பகுதிகள்—**

| | மாதம் ஒன்றுக்கு ரூபாய் |
|---|---|
| (1) **Non-Clinical** டியூட்டர்கள் .. .. | 100 |
| (2) **Non-Clinical** விரிவுரையாளர்கள் .. | 100 |

மேற்சொன்ன அலுவலர்கள் முற்றிலுமே தனியாகத் தொழில் நடத்தக்கூடாது.

## III. தனிப்பட்ட முறையில் ஓரளவுக்குத் தொழில் நடத்த அல்லது தொழில் நடத்த முடியாமைக்கு வரையறுக்கப்பட்டதற்கு தரப்படும் ஈட்டுப்படி.

**சென்னை நகரம்; நகராட்சிப் பகுதிகள், நகராட்சி அல்லாத பகுதிகள்—**

(1) தனிப்பட்ட முறையில் ஓரளவுக்குத் தொழில் நடத்துவதற்கு அனுமதி பெற்ற உதவி சர்ஜன்கள்—ரூபாய் 50 மாதம் ஒன்றுக்கு.

இங்கிலீஷ் வைத்தியம் தெரிந்த பதிவான டாக்டர் ஒருவர் ஐந்து மைல் தொலைவிற்குள் இருக்கவேண்டுமென்றும் நிபந்தனைக்கு உட்பட்டு, இந்தப்படி கொடுக்கப்படும்

(2) தனிப்பட்ட முறையில் தொழில் நடத்தக்கூடாது என்று தடுக்கப் பட்டுள்ள உதவி சர்ஜன்கள்—ரூபாய் 80 மாதம் ஒன்றுக்கு.

### IV தொழு நோய் மருத்துவ விசேஷப்படி

நகராட்சிப் பகுதிகள்—தொழு நோய் ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் உதவி சர்ஜன்கள்—ரூபாய் 100 மாதம் ஒன்றுக்கு.

இந்தப்படி கொடுக்கப்படுவதற்கு எந்தவிதமான நிபந்தனையும் இல்லை.

### V. விசேஷ ஈட்டுப்படி.

நகராட்சி அல்லாத பகுதிகளில் பணியாற்றும் உதவி சர்ஜன்களுக்கு மற்றப்படிகளுடன், மாதம் ரூபாய் 50 விசேஷ ஈட்டுப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் படி கொடுப்பதற்கு எந்த விதமான நிபந்தனையும் இல்லை.

### VI. ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள உதவி சர்ஜன்களுக்கு கொடுக்கப்படும் ஈட்டுப்படி.

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணியாற்றும் உதவி சர்ஜன்களுக்கு ரூபாய் 50 ஈட்டுப்படிக்குப் பதிலாக மாதம் ரூபாய் 100 ஈட்டுப்படியாகக் கொடுக்கப்படுகிறது. இங்கிலீஷ் டாக்டர் ஒருவர் ஐந்து மைல் தொலைவிற்குள் தொழில் நடத்திவர வேண்டும், என்கிற நிபந்தனையை கவனிக்காமலேயே இந்தப்படி கொடுக்கப்படும்.

### VII. சென்னை (நகர) வீட்டுப்படி.

சென்னை மாநகரில் தொழில் புரியும் உதவி சர்ஜன்களுக்கு அவர்கள் சம்பளத்தில் 10 சதவிகிதம் பிடிப்புப்போக செலுத்தும் வீட்டு வாடகை மாதம் ஒன்றுக்கு அதிகபட்சம் 50 ரூபாய்க்கு உட்பட்டு, சென்னை வீட்டுப்படி கொடுக்கப்படுகிறது. சென்னை நகர வீட்டுப்படி பெறும் மாதம் ரூ. 200-க்கு மேற்பட்டு ஆனால் மாதம் ரூ. 500-க்குள் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்கள் வீட்டு வாடகைப்படித் திட்டம், சென்னை நகர வீட்டுப்படி திட்டம் இவற்றில் எது தங்களுக்குச் சாதகமாகிறதோ அதற்கேற்பப் படி பெறலாம்.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 17th March 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—OBITUARY REFERENCE TO SRI T. SHANMUGHAM, Ex. M.L.A.

MR. SPEAKER : It is my painful duty to inform the House of the death of Sri T. Shanmugham, a Member of a former Madras Legislative Assembly representing the Sriperumbudur Constituency, last night. On behalf of the House, I will convey the condolence to the bereaved family. I request the hon. Members to stand in silence for a minute as a mark of expressing our sorrow at the death of Sri T. Shanmugham and showing our respect to the departed soul.

The Members stood in silence for a minute.

## II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Payment of Stipend to Post-Graduate Students in Engineering*

* *S. N. Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the stipend amount to the students of the Engineering Post-Graduate Course (M.Sc.) in the Engineering College, Guindy, has not so far been sanctioned for the year 1963-64 ; and

(*b*) if so, the reasons therefor and the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Government have issued instructions for the payment of the stipend amount in question.

(*b*) Does not arise.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இந்தக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள் ? ஒவ்வொரு மாணவருக்கும் எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது ரிசர்ச் டிபார்ட்மெண்ட். 66 மாணவர்கள் இருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு ரூ. 250 கொடுக்கப்படுகிறது.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ரூ. 250 இந்த 66 மாணவர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா ? ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதிலே மத்திய அரசாங்கத்திலிருந்து ஸாங்ஷன் வந்து தான் கொடுக்க வேண்டும். மூன்று நான்கு டிபார்ட்மெண்டிலே ஸாங்ஷன் வந்து விட்டது. ஒன்றிரண்டுக்கு வரவில்லை என்றாலும், ராஜ்ய சர்க்கார் எல்லோருக்கும் கொடுக்கும்படி உத்தரவு போட்டுவிட்டார்கள்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இந்த ரூ. 250 ஒவ்வொரு மாணவருக்கும் கொடுக்கப்படுகிறதா ? அல்லது 66 மாணவர்களுக்கும் சேர்ந்து கொடுக்கப்படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இம்மாதிரி சந்தேகம் வந்து விடும் என்பதற்காகத்தான் ரிசர்ச் என்று சொன்னேன். ஒவ்வொரு மாணவனுக்கும் ரூ. 250 வீதம் 66 மாணவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

*Government Rubber Plantations in Kanyakumari district*

* 281 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR (on behalf of SRI R. PONNAPPA NADAR): Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the extent of Government rubber plantation in Kanyakumari district; and

(*b*) the daily wages paid to each labourer?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :**

(அ) 1,476 ஏக்கர்.

(ஆ) ஆண்—ரூ. 1·50.

பெண்—ரூ. 1·00.

சிறுவர்—ரூ. 0·75.

**தமிழ் வளர்ச்சிக்கான மத்திய மானியம்**

*286 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ் மொழி வளர்ச்சிக்காக மத்திய அரசாங்க மானியம் எவ்வளவு நமது மாநிலத்திற்குக் கிடைத்தது ?

(இ) மேற்படி மானியம் எந்தெந்த துறைக்கு எவ்வளவு பகிர்ந்து கொடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No grant was received from the Government of India during the first and second year Plan periods for the development of Tamil.

(*b*) Does not arise.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இந்தி மொழி வளர்ச்சிக்காக நிறையப் பணம் செலவிடுகிறபோது, தேசிய மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியின் வளர்ச்சிக்குச் செலவிட மத்திய அரசாங்கத்தினிடம் தொகை கோரக்கூடாதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தி பேசாத பிராந்தியங்களில் இந்தியைப் பரப்ப மத்திய அரசாங்கத்தார் உதவி செய்கிறார்கள். தமிழ் பேசாத பிராந்தியங்களில் தமிழைப் பரப்புவதற்கும் அவர்கள் செலவு செய்கிறார்கள். அது மட்டுமல்ல. தமிழை வளர்ப்பது நம்முடைய பொறுப்பு. அதிலே நமக்கு அக்கறை இருக்கிறது. இருந்தாலும் இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தனியாக ஒரு இனம் ஒதுக்கி வைத்திருக்கிறோம். ஓரளவு மானியம் மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும்.



**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இந்தி மொ[illegible] பரப்ப வேண்டியது மத்திய சர்க்காருடைய கடமை. அப்படியிருக்கும்[illegible] நாம் மாநில சர்க்கார் நிதியிலிருந்து கூட அதற்குப் பெரும் [illegible] ஒதுக்கிச் செலவு செய்கிறோம். அதே நிலையில், தமிழ் வளர்ச்சிக்[illegible] பணம் ஒதுக்க வேண்டும் என்று நாம் ஏன் மத்திய சர்க்காரைக் [illegible] கூடாது ?

**கனம். திரு. எம் பக்தவத்சலம் :** இப்பொழுதுதான் நான் [illegible] அளித்தேன். ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம். அதில் [illegible] மத்திய சர்க்காரிடமிருந்து மானியம் கிடைக்கும். இந்தி அரசாங்க [illegible] யாக இருக்கிறது. அதை இந்தியா பூராவும் பரப்புவதிலே க[illegible] செலுத்தப்படுகிறது. தமிழைப் பொறுத்த மட்டில், அதை வளர்ப்ப[illegible] நமக்கு அக்கறை இருக்கிறது. அது நம்முடைய பொறுப்பு. தமி[illegible] எல்லோரும் நன்றாகக் கற்றுக் கொள்ளச் செய்வது அவசியம். த[illegible] பேசப்படாத உத்திரப் பிரதேசம் போன்ற பகுதிகளிலும், வேறு பிரா[illegible] யங்களிலும் தமிழ் கற்றுக்கொடுக்கப்படுகிறது. பல்கலைக் கழகங்க[illegible] இதிலே அக்கறை எடுத்துக்கொள்ளுகின்றன. அதற்கு நாமும் மானி[illegible] கொடுக்கிறோம். அம்மாதிரி இனங்களுக்கு மத்திய அரசாங்கம் ஓர[illegible] மானியம் கொடுக்கிறார்கள்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, தற்போது த[illegible] ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறோம். அதில் பாதித் தொகை[illegible] மத்திய சர்க்காரிடமிருந்து மானியமாகப் பெறப் போகிறோம். ஆன[illegible] முதல் இரண்டு திட்டங்களிலே அத்தகைய மானியத்தை மத்திய சர்க்கா[illegible] மிருந்து பெறுவதற்கான நடவடிக்கை ஏன் எடுக்கப்படவில்லை ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது தனியான ஒரு திட்டம். [illegible] மாதிரி திட்டம் அப்பொழுது வைத்துக்கொள்ளவில்லை. தமிழ் நாட்[illegible] தமிழுக்கு ஒரு திட்டமா ? தமிழ் நாட்டில் தமிழை எல்லோரும் நன்ற[illegible] படிக்கிறார்கள். "இதற்கு ஏன் பணம் ஒதுக்கவில்லை ?" என[illegible] கேட்டால் என்ன பதில் சொல்வது ?

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, ஒதுக்கியிருக்கும் ஐந்[illegible] லட்ச ரூபாய், தமிழ் வளர்ச்சி மன்றம், தமிழ் வெளியீட்டுக் கழக[illegible] ஆகிய இவற்றுக்கும் சேர்ந்த தொகையா அல்லது வெளி மாநில[illegible] களில் தமிழை வளர்ப்பதற்கான தொகையா ?

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** இரண்டும் இல்லை. ஆனால், குறி[illegible] பிட்ட சில திட்டங்களை எடுத்துக்கொள்வதற்கு திட்டத்திலேயே தொகை[illegible] ஒதுக்கி வைத்திருக்கிறோம். சாதாரணமாகக் "கல்வி" இனத்தில் தொகை[illegible] ஒதுக்கப்படும். ஆனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்[illegible] ஒரு திட்டமாக எடுத்துக்கொண்டு, இதற்குத் தொகை ஒதுக்கி வைத்திரு[illegible] கிறோம்.

**திரு. செ. மாதவன் :** தமிழ் நூல்களை எழுதுவதற்கு ஊக்குவிக்கு[illegible] திட்டம் இருந்ததே, அந்தத் திட்டமும் இந்தச் செலவில் கட்டுப்படுமா அல்லது இது வேறு திட்டமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்குத் தனியாகப் பத்து லட்[illegible] ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறோம். அது செலவு செய்யப்பட்டு வருகிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** ஒதுக்கியிருக்கும் ஐந்து லட்சம் ரூபா[illegible] தமிழ் வளர்ச்சி மன்றம், தமிழ் வெளியீட்டுக் கழகம் ஆகிய இவ்விரண்டுக்கும் பயன்படாது என்று சொன்னார்கள். பிறகு, எதற்காகப் பயன்[illegible] படும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விவரங்கள் வேண்டுமென்று தனி யாகக் கேள்வி கேட்டால் கொடுக்கிறேன்.

[17th March 1964

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினரே, ஐந்து லட்ச ரூபாய்க்கு ஒரு திட்டம் கொடுக்கலாமே !

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியைப் பிற மாநிலங்களில் பரப்புவதற்கான வகையில் இந்திய சர்க்கார் ஏதாவது நிதி ஒதுக்கி வைத்திருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆசிரியர் சம்பளம் போன்றவற்றுக்கு எல்லாம் மத்திய சர்க்கார் மானியம் அளித்துக் கொண்டு வருகிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் அளித்த விடையில், ஆசிரியர்களுக்குக் கொடுப்பதற்கு மத்திய சர்க்கார் மான்யம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆசிரியர்களுக்கு என்று சொல்லும்போது, தமிழ் ஆசிரியர்களுக்கு மட்டுமே அல்லாமல், மற்ற துறைகளில் உள்ள ஆசிரியர்களுக்கும் செலவிடப்படும்போது, அது எப்படி தமிழ் வளர்ச்சிக்கு உரியதாகும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ் ஆசிரியர்களை வைத்து, தமிழ் பேசப்படாத பிராந்தியங்களில் தமிழ் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இந்தி பேசப்படாத பிராந்தியங்களில் இந்தி சொல்லிக் கொடுப்பதற்கு இந்தி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கெல்லாம் மத்திய அரசாங்கம் உதவுகிறது. அந்த வகையிலே தான் நான் கூறினேன். தமிழ் பேசப்படாத பிராந்தியங்களில் தமிழ் சொல்லிக் கொடுக்க நியமிக்கப்படும் ஆசிரியர்களுடைய சம்பளங்கள் போன்றவை எல்லாம் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என்று சொன்னேன்.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, தமிழ் பேசப்படாத மாநிலங்களுக்கு தமிழ் சொல்லிக் கொடுக்க மானியம் வழங்கப்படுகிறது என்று கூறினார்கள். எந்த எந்த மாநிலங்களுக்கு அவ்வாறு வழங்கப்படுகிறது. தமிழ் நாட்டார் குடியேறியிருக்கிற பிரதேசங்களுக்கு மட்டும் அவ்வாறு வழங்கப்படுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ் பேசப்படாத பகுதிகளில் தமிழைக் கற்றுக்கொடுக்க மானியம் வழங்கப்படுகிறது என்று கூறினேன். எந்தெந்த மாநிலத்தில் அவ்வாறு செலவிடப்படுகிறது என்கிற விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தி மொழியை இந்த மாநிலத்தில் பரப்ப மத்திய அரசாங்கத்தார் நிதி ஒதுக்குகிறார்கள் என்று சொன்னார்கள். எவ்வளவு நிதி அவ்வாறு ஒதுக்கப்படுகிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றிய விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

**நாரணம்மாள்புரம் வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கம்.**

*287 கேள்வி—**திரு. ஆர் எஸ். ஆறுமுகம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நாரணம்மாள் புரம் வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கம் (நெ. 02034) சர்க்காருக்கு அனுப்பிய கடன் மனுக்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?



17th March 1964]

மானத் தொகுதியினருக்கு வீடு கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதால், திருமதி எஸ். சங்கரம்மாளுக்குக் கடன் அனுமதிக்கப்பட்டது. ஆனால், இன்னொரு கடன் மனுவில் சட்டப்படியும், மற்ற வகையிலும் குறைபாடுகள் இருந்ததால், அது திருநெல்வேலி துணைப் பதிவாளருக்குத் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது.

**ரோடுகள் பராமரிப்பு**

*288 கேள்வி—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப்பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் மரக்காணம், வானூர் போன்ற பஞ்சாயத்து யூனியனின் மேற்பார்வையிலுள்ள யூனியன் ரோடுகளைச் சர்க்கார் கண்காணிப்பில் எடுத்துகொள்ள உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : Only such of the Panchayat Union roads as are bus route roads are proposed to be taken over by Government on a phased programme subject to availability of funds.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு ஆங்கிலத்தில் பதில் சொன்னார்கள். தமிழில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** பஸ்ரூட் சாலைகளாயுள்ள பஞ்சாயத்து யூனியன் சாலைகளை மட்டும் அரசாங்கம், நிதிவசதிக்கேற்ப, படிப்படியாக எடுத்துக் கொள்ள உத்தேசிக்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, நான்கைந்து ஆண்டுகளாகவே யூனியனிலே அந்த ரோடுகள் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கின்றன. கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். இந்தப் பிற்போக்குப் பகுதியை, சர்க்கார் பரிசீலனை செய்து சர்க்காரிலேயே எடுத்து நடத்த முன் வருவார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அரசாங்கத்தின் கொள்கையைத்தான் சற்று முன்பு சொன்னேன். நிதி வசதிக்குத் தகுந்த முறையில் எந்த எந்த ரோடுகளை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அவற்றை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிறது எனக்குத் தெரிகிறது. இது மிகவும் பிற்போக்குப் பகுதியாக இருப்பதனால் இதற்குப் பிரதான சலுகை கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்போது இருக்கிற கொள்கையை மாற்றுவதாக இல்லை.

**பின்தங்கிய சமூகங்களின் பட்டியல்**

* 289 கேள்வி—**திரு. டி. கடம்பவனசுந்தரம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பின் தங்கிய சமூகங்கள் பட்டியலை, சமீபகால முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்டு மாற்றுப் பட்டியல் தயாரிக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, எந்த எந்த மாவட்டங்களில் எந்த எந்த பின் தங்கிய வகுப்பார்கள் இருக்கிறார்கள் என்ற பட்டியல் இருக்கிறதா ? இருந்தால் அதை ரெவின்யூ அதிகாரிகளுக்கு சர்க்கார் அனுப்பி வைக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யார் பின் தங்கிய வகுப்பினர் என்பதற்கு ஒரு பட்டியல் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் மாவட்டங்களில் உள்ள ரெவின்யூ அதிகாரிகள் செயல்படுகிறார்கள்.

**திரு. செ. மாதவன் :** பின் தங்கிய வகுப்பார் என்று முதலில் சர்ட்டிபிகேட் கொடுத்துவிடுகிருர்கள். அப்புறம் அந்த மாவட்டத்திலேயே அதுமாதிரி பின் தங்கிய வகுப்பினர் இல்லையென்று சொல்லி ரெக்கவரி போடுகிருர்கள். குறிப்பாக ராமநாதபுரம் மாவட்டத்தில் பின் தங்கிய வகுப்பினர் வீரகோடி வேளாளர் என்று சர்ட்டிபிகேட் கொடுத்துவிட்டு அப்புறம் இல்லையென்று ரெக்கவரி போட்டிருக்கிருர்கள். ஆகவேதான் ஒவ்வொரு மாவட்டத்திலும் என்ன என்ன பின் தங்கிய சமூகம் இருக்கிறது என்பதற்கு முதலில் சர்வே எடுத்து அதை வெளியிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** குறிப்பிட்ட இடங்களில் ஏதாவது சில பிரச்னைகள் எழுந்தால் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். சில மாவட்டத்தில் இன்னும் பெயர் தெரியாத இனமாக, உட்பிரிவு இனமாக இருப்பதாக அதிகாரிகள் நினைக்கிருர்கள். அதை அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டு வருகிருர்கள். அவ்வப்போது அரசாங்கமும் அதைக் கவனித்து முடிவு செய்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத்தலைவர் அவர்களே, பின்தங்கிய வகுப்பார்களின் பட்டியல் எப்போது தயாரிக்கப்பட்டது ? அது நாளுக்கு நாள் வளருகின்ற நிலையில் இருக்கிறதா ? குறைகின்ற நிலையில் இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** குறைகின்றது என்று சொல்வதற்கு இல்லை. வளர்வதற்காகத்தான் இருக்கிறது. உண்மையிலேயே சில பிற் பட்ட இனங்களின் பெயர் விட்டுப் போயிருக்கும். அதனால் அவர்கள் சலுகையை இழக்கிறபோது, அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிருர்கள்.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** இன்னும் பின்தங்கிய வகுப்பைச்சேர்ந்த வர்கள் யாருக்காவது சலுகை கொடுக்கப்படாமல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் :** வெள்ளாள வகுப்பைச் சேர்ந்தவர்கள் உண்மையில் பொருளாதார வகையிலும், கல்வித் துறை யிலும் பிற்போக்கான நிலையிலேயே இருக்கிருர்கள். வெள்ளாளர்கள் அல்லது கவுண்டர்கள் என்ற சமூகத்தாரையும் பின் தங்கிய வகுப்புப் பட்டியலில் சேர்க்க முன் வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிராமணர்களிலேயே கூட மிகவும் பிற்போக்கான நிலையில் உள்ளவர்கள் இருக்கிருர்கள். அர்ச்சகர்கள், குருக்கள் ஆகியவர்கள் பொருளாதாரத் துறையில் இன்னும் பிற்போக்கு நிலையிலே இருக்கிருர்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்து தான் முன்பு ஒரு கமிஷன் போட்டு பட்டியலைத் தயார் செய்தோம். அதில் சேர்க்க வேண்டும் என்று பின்னால் வற்புறுத்துகிறபோது அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற பின் தங்கிய சமூகத்தவர்களுடைய பட்டியலைப் பார்க்கிற போது பிராமணர் களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் இருக்கிருர்கள். ஆகவே அவற்றி லுள் பொருளாதாரத் துறையில் மிகவும் பின் தங்கி உள்ளவர்களை மோஸ்ட் பாக்வேர்ட் என்று பிரிக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் தட்சிணமூர்த்தி கவுண்டர் கேள்வியில் இருந்தே பிராமணர்களைத் தவிர மற்ற எல்லா சமூகத்தினரும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிருர்கள் என்று சொல்லுவது சரியல்ல என்று புரியும். மோஸ்ட் பாக்வர்ட் கம்யூனிடி என்று இப்போதும் பிரிக்கப்பட்டிருக்கிறது.



**திரு. து. ப. அழகமுத்து :** குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தில் இருந்து ஒரு குறிப்பிட்ட பின் தங்கிய வகுப்பினர் இன்னொரு மாவட்டத்திற்குக் குடியேறியவர்கள் அந்த சலுகை பெற முன் வருகிற போது அந்த மாவட்டத்தில் அத்தகைய பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களே இல்லை யென்று மறுக்கப்படுகிறது ? இந்தக் குறையைப் போக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகைய குறிப்பிட்ட பிரச்னை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு. ம. கமலநாதன் :** வேளாளப் பெருங்குடி மக்கள் முதலில் பின் தங்கிய சமூகப்பட்டியலில் சேர்த்திருந்ததாகவும், அதை கேவலம் என்று கருதி டாக்டர் சுப்பராயன் நீக்கியதாகவும் ஒரு தகவல் இருக்கிறதே, அது உண்மையா ?

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் சொல்லுவதைப் பற்றி நானும் ஏற்கனவே கேள்விப் பட்டிருக்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** எல்லாச் சமூகத்தினரும் பின் தங்கிய வகுப்புப் பட்டியலில் இல்லை என்பதாகக் கனம் அமைச்சர் அவர்கள் குறிப் பிட்டார்கள். சில குறிப்பிட்ட வகுப்பு இல்லாவிட்டாலும் அதன் உட் பிரிவைச் சொல்லி—குறிப்பாக முதலியார் என்பது பிற்பட்ட வகுப்புப் பட்டியலில் இல்லாமல் இருக்கும்போது செங்குந்த முதலியார் என்று உப பிரிவைச் சொல்லி பிற்பட்ட சமூகத்தினர் பெறும் சலுகையை பெற்ற வர்கள் இருக்கிருர்கள். படித்து முடிந்த பிற்பாடு அதைத் திரும்பப் பெறுகிற நடவடிக்கை எடுக்கப்படுகிறதே, அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்புகூறியது போல பலருக்குச் சலுகை பெறவேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. பொருளா தாரத் துறையில் பின் தங்கி உள்ளவர்களுக்கு அத்தகைய ஆர்வம் இருப்பது இயற்கை தான். இதற்குப் பரிகாரம்—என் சொந்த அபிப்பிரா யத்தைச் சொல்கிறேன்—சாதி அடிப்படையில் நாம் கொடுக்கிற சலுகைகள் அமையாமல் பொருளாதார அடிப்படையில் சலுகை கொடுப்பது என்று முடிவு செய்தால் அது தான் சிறந்த பரிகாரமாக இருக்கும். நாளடைவில் இத்தகைய மாறுதலைத்தான் எதிர்பார்க்கவேண்டும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் :** பின் தங்கிய வகுப்பு என்ற ஒரு நிலை ஏற்படுத்துகிறபோது ஜாதி அடிப்படையை வைக்காமல் பொருளாதார அடிப்படையை வைத்து அந்த வகையில் பின் தங்கியவர்கள் என்று நிர்ணயிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இன்று பிற்போக்கான சமூகத் தினருக்குக் கிடைக்கக் கூடிய சலுகையைப் பெருதவர்கள் இதைச் சொன் ஞல் போதாது. அந்தச் சலுகையைப் பெறுகின்றவர்கள் அதைக் கூற வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்வேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இந்து ஹரிஜனங் களுக்குச் சலுகை அளிக்கப்படுகிறது. ஆனால் மதம் மாறிய ஹரிஜனங்கள் பொருளாதாரத் துறையில் பின் தங்கியவர்களாக இருந்தாலும் சலுகை அளிக்கப்படுவதில்லை. அவர்கள் மதம் மாறினாலும் கூட அவர்களுக்குச் சலுகை அளிக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்தச் சலுகை பொருளாதார அடிப்படையில் கொடுப்பதாக இருந்தாலும் யாராக இருந்தாலும் கொடுக் கலாம். ஜாதி அடிப்படையில் என்றால் கிறிஸ்தவர்களிலும் ஹரிஜனங்கள் உண்டு என்பதைக் கிறிஸ்தவ மதம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆயினும் ஹரிஜனங்கள் மதம் மாறினாலும் கூட அவர்கள் பிற்போக்கான ...... என்று கருதி சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ஒரு இனத்தைப் பின் தங்கிய லிஸ்டிலே சேர்ப்பதற்கு என்ன முறை இருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பு மத்திய அரசாங்கம் ஒரு குழு அமைத்தது. அந்தக் குழுவிலே இந்த மாநில சட்ட மன்ற அங்கத்தினர்கள் கூட இடம் பெற்றிருந்தார்கள். அவர்கள் எல்லா பரிசீலனைகளையும் செய்து ஒரு அறிக்கை தயாரித்தார்கள். அந்த அறிக்கைகூட இந்த மன்றத்தின் முன்பு வைக்கப்பட்டது.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** கோவை மாவட்டத்திலே கைக்கோளர் என்றாலும் முதலியார் என்றாலும் ஒரே இனம் தான். கைக்கோளர் என்று போட்டால் சலுகைகள் உண்டு. முதலியார் என்று தவறிப்போட்டுவிட்டால் சலுகை கிடையாது.

**கனம் சபாநாயகர் :** எதற்காகத் தவறி போடுகிறார்கள் ?

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** அந்த நிலையை மாற்றி கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை கைக்கோளர் என்றாலும் முதலியார் என்று போட்டாலும் சலுகை கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கைக்கோளர்கள் என்றால் பொதுவாகக் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள். அவர்களுக்குத்தான் செங்குந்த முதலியார் என்று பெயர். மற்றப்படி பலவிதமான முதலியார்கள் இருக்கிறார்கள். செங்குந்த முதலியார் என்று போட்டால் சலுகை உண்டு.

### *Backward areas*

* 290 *Q.*—SRI M. KALYANASUNDARAM :<br>SRI M. V. KARIVENGADAM : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a list of identified Backward areas in the State has been furnished to the Planning Commission;

(*b*) if so, the details of the same; and

(*c*) the measures suggested by the State Government for improving these Backward areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) *and* (*c*) Do not arise.

**திரு. செ. மாதவன் :** நம்முடைய மாநிலத்தில் பின் தங்கிய பகுதிகளுக்குத் தனியாகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று நம்முடைய மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டு கொண்டிருக்கிறதா ? மத்திய சர்க்கார் தெரிவித்த கருத்து என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒவ்வோரு மாவட்டத்திலும் பிற்போக்கான பகுதிகள் இருக்கின்றன. தஞ்சையிலும் இருக்கிறது ; இராமநாதபுரத்திலும் இருக்கிறது. அதற்காகப் பிரத்தியேகமாக எவ்வாறு, கவனம் செலுத்துவது, எத்தகைய திட்டங்களை வகுப்பது என்பது பொதுவாக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. திட்டங்களை வகுத்து திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறபோது எந்தெந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசாங்க உதவி கிடைக்குமோ அது கிடைக்கும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** பின் தங்கிய பகுதி என்று பிரிக்கப்படுவதில் எந்த முறையில் எந்தெந்தப் பகுதிகள் பின் தங்கிய பகுதிகள் என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்குப் பலவிதமான அளவுகோல்கள் இருக்கின்றன. தொழில் வளர்ச்சி, விவசாய வசதிகள், எவ்வளவு தூரம் நிலம் பயிரிடப்படுகிறது ; ப்ளின் இராப் ஏரியா எவ்வளவு ;





இரிகேட் ஏரியா எவ்வளவு ; "பவர்" எவ்வளவு தூரம் விநியோகிக்கப்படுகிறது ; ரோடு வசதி, ஸ்டேட் ரெவின்யூ எக்ஸ்பெண்டிசர் ; 'பர் காபிடா" ஆகிய எல்லாவற்றையும் பரிசீலித்து இன்னின்ன பிரதேசங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் பின் தங்கிய பகுதிகள் என்று நிர்ணயிக்கப்படுகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இப்போது கல்லூரிகளிலே பின் தங்கிய மாணவர்கள் 50 சத விகிதத்திற்கு மேல் மார்க் எடுத்தால்தான் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. எல்லாப் பின் தங்கிய மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்க முன் வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஸ்காலர்ஷிப் ஓரளவு கொடுக்கப்படுகிறது. இருக்கின்ற பின்தங்கிய மாணவர்களில் நன்றாகப் படிக்கிறவர்களுக்குக் கொடுப்பதுதான் நியாயம்.

**புலவர் கா. கோவிந்தன் :** பின் தங்கிய பகுதிகளை முன்னேற்றிக் கொண்டு வரவேண்டுமென்கிற நோக்கத்தைத் திட்ட கமிஷனுக்குச் சொல்லவில்லை என்று சொன்னாலுங்கூட, நமது மாநில அரசாங்கம் அதை மனதில் வைத்து, வருகிற ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அப்படிப்பட்ட பகுதிகளை முன்னேற்ற வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப் பற்றி முன்பே விளக்கி இருக்கிறேன். திட்டக் கமிஷன், மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கம் என்பது வேறு வேறாகப் பிரிக்கக் கூடியது அல்ல. திட்டம் என்றால் இந்திய நாட்டின் திட்டம். பிற்போக்கான பகுதி எது, மத்திய அரசாங்கம் எவ்வளவு கொடுக்கும், மாநில அரசாங்கம் எவ்வளவு தூரம் பணம் ஒதுக்கும் என்பதெல்லாம் சேர்த்து வகுப்பதுதான் திட்டம். இதை வேறு வேறாகப் பிரித்துக் கூறுவதில் பயன் இல்லை.

### பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கான பணிக்கொடைத் திட்டம்

* 291 கேள்வி—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவையிலுள்ள பஞ்சாலைகளுக்கு ஒரு புதிய Gratuity Scheme-ஐ கோவை தொழில் டிரிப்யூனல் வெளியிட்டுள்ளதா ?

(இ) இவை நல்ல முறையில் செயல்படுகின்றனவா ?

(உ) இத் திட்டத்தினை எல்லா மில்களுக்கும், பெரிய தொழிற்சாலைகளுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. The Industrial Tribunal, Madras, gave an award formulating a gratuity scheme for workers of 77 Mills at Coimbatore.

(*b*) Yes.

(*c*) The Government have no powers to extend this scheme to other textile mills or to other industrial establishments.

### *Colleges with Tamil medium*

* 292 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) how many colleges with Tamil medium of instruction are working from this year; and

[17th March 1964

(b) the total number of applicants who sought admission to this medium and the number admitted in those colleges ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 5.

(1) Government Arts College, Coimbatore.

(2) Sri Avinashilingam Home Science College, Coimbatore.

(3) P.S.G. Arts College, Coimbatore.

(4) N.G.M. College, Pollachi.

(5) Government College, Kumbakonam.

(b) 71 sought admission.

All the applicants were selected. One did not join and 70 were admitted. Eight students left the Colleges subsequently.

**புலவர் கா. கோவிந்தன் :** தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தைக்
கொள்கையாக ஏற்றுக் கொண்டு நடைமுறைக்குக் கொண்டு வருகிற இந்த
அரசாங்கம் நான்கு கல்லூரிகளிலே 70 மாணவர்களுக்குத்தான் பயிற்சி
அளிக்கக்கூடிய முறையில் இருக்கிறது. இந்த திட்டத்திற்கு ஊக்கம்
காட்டப்படவில்லை என்பது ஒரு காரணமாக இருந்தால் அதற்கு ஊக்கம்
காட்டக்கூடிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் ஊக்கம் காட்டுவதில்
தவறவில்லை. மாணவர்கள் இதிலே சேரவேண்டுமென்று சவுக்கு எடுத்து
அடித்து வற்புறுத்த முடியாது. சென்ற ஆண்டு பல்கலைக் கழக அங்கீ
காரத்தைப் பெற்று வேறு சில கல்லூரிகளிலும் தமிழ்ப் பயிற்சி மொழி
வசதி அளிக்க ஏற்பாடு செய்திருந்தோம். குவீன் மேரீஸ் பெண்கள்
கல்லூரியிலும், கவர்ன்மெண்ட் ஆர்ட்ஸ் காலேஜிலும் இதற்கான ஏற்பாடு
செய்தோம். ஆனால் இதற்கு மாணவர்கள் வரவில்லை. கும்பகோணம்
கல்லூரியில் சில மாணவர்கள் வந்தார்கள். ரொம்ப உற்சாகத்தோடு
நடத்தப்படுகிற பொள்ளாச்சி கல்லூரியிலேயே இந்த ஆண்டு ஒரு
மாணவர் கூட வரவில்லை. மாணவர்கள் போதிய நூல்கள் இருக்கின்றனவா
என்று பார்க்கிறார்கள். உயர்ந்த பரிட்சைக்குப் படிக்கவேண்டும். ஐ.ஏ.எஸ்.
பரிட்சை எழுத வேண்டும் அந்நிய நாட்டில் சென்று படிக்கவேண்டுமென்று
மாணவர்கள் எண்ணுகிறார்கள். தற்போது தமிழிலும் பல பாடப் புத்த
கங்களை வெளியிட்டுக் கொண்டு வருகிறோம். இதை நம்முடைய லட்சிய
மாக வைத்துக் கொள்வதில் தடை இல்லை, மாணவர்களுக்கு இதிலே
உற்சாகமும், நம்பிக்கையும் ஏற்பட்டு இதிலே வந்து சேரவேண்டும். இந்த
அரசாங்கத்தைப் பொறுத்த வரை எவ்வளவு தூரம் ஆதரவு அளிக்க
முடியுமோ, எவ்வளவு தூரம் வசதி அளிக்க முடியுமோ, எவ்வளவு
தூரம் ஊக்கம் அளிக்க முடியுமோ அதில் அரசாங்கம் தொடர்ந்து
கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் பயிற்சி மொழியாக வைக்கப்
பட்டு இருக்கிற அந்தக் கல்லூரியில் அதிகமான மாணவர்கள் வந்து
சேராமல் இருப்பதற்குக் காரணங்கள் என்ன என்று ஆசிரியர்களிடம்
அறியப்பட்டனவா ? மாணவர்களிடமிருந்து காரணங்கள் அறியப்பட்ட
னவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சில மாணவர்கள் மனுப்போட்டு
இதிலே அட்மிட் ஆன பிறகு வேறு கல்லூரியில் அட்மிஷன் கிடைத்தால்
விட்டு விட்டுப் போய்விடுகிறார்கள். மாணவர்கள் ஆங்கிலத்திலே கற்றுக்
கொள்வதற்கு உண்டான பிராஸ்பெக்ட்ஸ் இதிலே இருக்காது என்று நினைக்
கிறார்கள். அவர்கள் வெளி மாகாணத்திற்கும் வேலைக்குப் போகவேண்டும்.
நம்முடைய மாகாணத்தையே எல்லாவற்றுக்கும் எதிர்பார்த்தால் போதாது.
இதனால் கொஞ்சம் உற்சாகக் குறைவு இருக்கிறது.



138005

17th March 1964]

**புலவர் கா. கோவிந்தன் :** மாணவர்கள் தமிழைப் பயிற்சி மொழி
யாக எடுத்து படித்து விட்டால் பிறகு தங்கள் வாழ்க்கைக்கு எந்த விதமான
உறுதிப்பாடும் இல்லை என்ற காரணத்தினால் இதை எடுத்துக்கொள்ள
தயங்குகிறார்கள் என்பதை அரசாங்கம் உணருகிறதா? அப்படிப்பட்ட
மாணவர்களுக்கு எதிர்கால வாழ்வில் நல்ல நிலை உண்டு என்றளவிற்கு
இந்த அரசாங்கம் உறுதி அளிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு நான் [illegible]இல்லை.
மாணவர்களுக்கு உண்மையிலேயே தமிழில் அதிக ஊக்கமும் நம்பிக்கை
யும் வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன். வற்புறுத்துகிறேன்.
அவர்கள் உத்தியோகத்தையே எதிர் பார்க்கக் கூடாது. தமிழ்ப் படிப்பது
ஒன்று. வேறு பாடங்களை, சரித்திர பாடங்கள், விஞ்ஞான பாடங்கள்,
பொருளாதாரப் பாடங்கள் அவற்றை தெரிந்து கொள்வது ஒன்று. அவ
ற்றை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அதற்கு வேண்
டிய வசதியை தமிழ் மீடியம் மூலம் பெற முடியுமா என்பது மாணவர்
களுக்கு சந்தேகம் ஏற்படுகிற விஷயம். அதை நாம் மறுப்பதிற்கில்லை.

*Three Language Policy*

* 293. *Q.*—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Chief Minister be pleased to state the number of High Schools in Madras State in which arrangements have been made to teach Telugu, Malayalam and Kannada as per the Three Language Policy of Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The number of schools in which arrangements have been made to teach Telugu, Malayalam and Kannada in this State are—

Telugu—96

Malayalam—9

Kannada—3

**புலவர் கா. கோவிந்தன் :** இந்த மொழிகளுக்கு இடம் அளிக்கிற
எத்தனை பள்ளிகளில் அந்த மொழிகளில் கற்றுக்கொடுக்க ஆசிரியர்கள்
இருக்கிறார்கள்? எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள்?

**கனம் திரு எம். பக்தவத்சலம் :** ஆசிரியர்கள் தான் கற்றுக்கொடுக்கி
றார்கள். ஆசிரியர்களை வைத்துத்தான் நடத்துகிறோம். தெலுங்குப்
பள்ளி என்று வைத்து தமிழில் சொல்லிக் கொடுக்கவில்லை. தெலுங்கில்
தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். மலையாளப் பள்ளிகளில் சொல்லிக்
கொடுக்கிற ஆசிரியர்கள் மலையாளத்தில் தான் சொல்லிக்கொடுக்கிறார்
கள். கன்னடப் பள்ளியில் கன்னடத்தில்தான் சொல்லிக்கொடுக்கிறார்கள்.
எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

**திரு. து. ப. அழகமுத்து :** தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற
மொழிகளில் படிக்கிற மாணவர்கள் விரும்பினாலும்கூட ஆசிரியர்கள்
இல்லை என்று அந்த மொழிகள் போதிக்கப்படாமல் அதற்குப் பதில்
இந்தி சொல்லிக் கொடுப்பதற்கு முயற்சிகள் நடைபெறுவது உண்மையா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு ஒன்றுமில்லை. மாணவர்
கள் பெரும்பாலும், மும்மொழிக் கொள்கைப்படி ஒரு தமிழ் மாணவன்
தெலுங்கு படிப்பதை விட இந்தி படிப்பது நல்லது என்று நினைக்கிறான்.
தெலுங்கை தாய்மொழியாகக் கொண்டவர்கள் மலையாளம் படிப்பதைவிட
இந்தி படிப்பது நல்லது என்று நினைக்கிறார்கள். தமிழை தாய் மொழி
யாகக் கொண்டவர்கள் வேறு ஒரு மொழி படிக்கவேண்டுமானால் தெலுங்கு,
மலையாளம், கன்னடம் படிப்பதைவிட இந்தி படிப்பது தனக்கும்
நல்லது, தன் எதிர்காலத்திற்கும் நல்லது என்று நினைக்கிறார்கள்.

[17th March 1964

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** குறிப்பிட்ட ஒரு மொழியைப் படிக்க வேண்டுமென்று விரும்பி மாணவர்கள் முன் வரும்போது ஆசிரியர்கள் இல்லாத நிலையில் குறைந்த அளவு எவ்வளவு மாணவர்கள் கேட்டால் ஒரு ஆசிரியரை நியமிக்க திட்டம் இருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விவரம் சரியாக இல்லை. சுமார் 15 மாணவர்கள் இருக்கவேண்டும். குறிப்பிட்டதொரு மொழியைப் படிக்க வேண்டுமென்று விரும்பினால் ஆசிரியர்கள் அமைக்கதான் வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறேன். அப்படி அமைக்கப்பட்டு வருகிறது. எங்கேயாவது அப்படியில்லை என்றிருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உதாரணமாக எங்களுக்கு தெலுங்கு வேண்டும், ஆனால் தெலுங்கு ஆசிரியர்கள் இல்லை என்று சொன்னால், உடனே கல்வி இலாகாவிற்கு அனுப்பி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய சொல்லி கவனம் செலுத்தி வருகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** தமிழகத்தில் 2,000 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் 100 பள்ளிகளுக்கும் குறைவாகவே இந்த மூன்று மொழிகளுக்கு இடம் அளித்திருக்கிறார்கள். அந்தப் பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள், எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற கணக்கை சொல்லமுடியுமா ?

**கனம் சபாநாயகர் :** தனிக்கேள்வி போட வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன் :** ஆசிரியர்கள் இல்லை என்ற காரணத்தினால் ஆசிரியர்களின் கணக்கை கொடுக்கமுடியவில்லை என்பது உண்மையா?

**கனம் திரு எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் தவறு. அத்தனையிலும் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஏதாவது பள்ளியில் ஆசிரியர் இல்லை என்றால் அதை என் கவனத்திற்கு கொண்டு வந்தால் மேலும் கவனம் செலுத்தலாம்.

### அரசாங்க விருந்தினர் இல்லம்

*294 கேள்வி—**திரு. முனு ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க எஸ்டேட்டிலுள்ள விருந்தினர் விடுதியில் (State Guest House) 1962-63 ஆண்டில் தங்கிச் சென்றவர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களில் மத்திய அமைச்சர்கள், மற்றைய மாநில அமைச்சர்கள் எத்தனை பேர்?

(உ) 1962–63-ல் அவ் விடுதியில் ஆன செலவுத் தொகை எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 378.

(*b*) 276 (Union Ministers 127 and Ministers of other States 149).

(*c*) Rs. 62,141·39 nP.

*295 கேள்வி—**திரு. முனு. ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க எஸ்டேட்டில் உள்ள விருந்தினர் விடுதியில் (State Guest House) பராமரிப்பிற்காக அரசாங்கம் செலவிடும் தொகை எவ்வளவு?

(இ) இச் செலவை ஈடு செய்யும் வகையில் இவ் விருந்தினர் விடுதியில் தங்குபவர்களுக்கு மத்திய அரசாங்க மானியம் கிடைக்கிறதா?

(உ) இவ் விடுதியில் யார் யார் தங்கலாம் என்று திட்டம் செய்யப்பட்டுள்ளது?



17th March 1964]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The expenditure in 1962-63 was Rs. 62,141-39 nP.

(*b*) No.

(*c*) Ministers and Deputy Ministers of Government of India and other State Governments and high personages, Indian and Foreign are accommodated in the State Guest House. Subject to availability of accommodation highly placed officials of State and Central Governments are also accommodated.

### திண்டிவனம் கூட்டுறவு அர்பன் பாங்க்

*296 கேள்வி—**திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் கூட்டுறவு அர்பன் பாங்கு லிமிடெட் 28—6—1962-ல் பொன் விழா கொண்டாடியதற்கு அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் அதிகமாகச் செலவு செய்த தொகை எவ்வளவு?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) பொது நிதியிலிருந்து ரூபாய் ஆறாயிரம் மட்டும்.

(இ) ரூபாய் ஐயாயிரத்து நானூற்று ஐம்பத்தெட்டு, நயா பைசா பத்தொன்பது.

**திரு. ஆ. தங்கவேலு :** அனுமதிக்கப்பட்ட தொகையும் அனுமதிக்கப் படாமல் செலவு செய்த தொகையும் கிட்டத்தட்ட ஒன்றாகயிருப்பதால் அப்படி அனுமதிக்கு அதிகமாக செலவு செய்திருப்பதை செலவு செய்தவர்களிடமிருந்து வசூல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அவர்கள் ஜெனரல் பண்டிலிருந்துதான் இந்தத் தொகையை செலவழித்திருக்கிறார்கள். காரணம் என்ன என்று ரெஜிஸ்ட்டிரார் கேட்டிருக்கிறார். பதில் வந்த பிறகு என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அதை எடுக்க எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆ. தங்கவேலு :** அனுமதியில்லாமல் ஊதாரித்தனமாக செலவிடப்பட்டது என்று நகரத்திலுள்ள பொதுமக்கள் எண்ணுகிறார்கள். ஆகவே அந்தச் செலவை செலவு செய்தவரிடமிருந்து வசூல் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு மேலும் அரசாங்கம் முயற்சிக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** ஊதாரித்தனமா இல்லையா என்பது அவர்கள் ஜெனரல் பாடி போட்டு பேச வேண்டிய நிலை. என்ன செலவு என்று கேட்கப்பட்டது. சில விவரங்கள் கிடைத்திருக்கிறது. ஊதாரித்தனம் என்று சொல்வதற்கில்லை. அது பற்றி கேட்டிருக்கிறோம். பதில் வந்த பிறகு பரிசீலனை செய்து வேண்டிய ஏற்பாடு செய்யப்படும்.

### *Loans to Members of Co-operative Institutions*

* 297 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have issued orders to the Commissioners of the Panchayat Union Councils not to grant loans to those who are members of the Co-operative Institutions such as Credit Societies and Land Mortgage Banks; and

(*b*) if so, the reasons therefor?

[17th March 1964

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** (அ) முழு நிதித் திட்டம் அமுலிலுள்ள பகுதிகளில், ஒருவர் கூட்டுறவுச் சங்க அங்கத்தினராக இருந்தாலும் சரி, இராவிட்டாலும் சரி, சில விசேஷத் திட்டங்களின்கீழ் தவிர மற்றப்படி, அவருக்கு ரெவின்யூ துறையினராலோ, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களாலோ கடன்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை. அதற்கு பதிலாக, குறுகிய காலக் கடன் களும் நடுத்தரக் காலக் கடன்களும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களாலும், நீண்டகாலக் கடன்கள் பிரதம நில அடைமான பாங்குகளாலும் வழங்கப் படுகின்றன. முழு நிதித் திட்டம் அமுலில் இல்லாத பகுதிகளில், கூட் டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு ரெவின்யூத் துறையால் அல்லது பஞ் சாயத்து யூனியன் கமிஷனர்களால், குறுகிய காலக் கடன்களோ, நடுத் தரக் காலக் கடன்களோ வழங்கப்படுவதில்லை. ஆனால் 1883-ம் ஆண்டு நில அபிவிருத்திக் கடன்கள் சட்டத்தின் கீழ் அவர்கள் நீண்ட காலக் கடன்கள் பெறலாம். கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களாய் இல்லாதவர் களுக்கு, இந்தப் பகுதிகளில் ரெவின்யூத் துறையினரும் விவசாயத் துறையினரும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும் குறுகியகால, நடுத்தரக்கால, நீண்டகாலக் கடன்களை முன்போலவே கொடுத்து வருகின்றனர்.

(இ) விவசாயிகளுக்கு வேண்டிய கடன்கள் அனைத்தையும் கூட்டு றவுச் சங்கங்களின் மூலமாகவே கொடுப்பதற்கும், அவர்களது கடன் தேவைகளை இன்னும் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கும் ஷி திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** புல் பைனன்ஸ் ஸ்கீம் அமுலில் இல்லாதவிடங்களில் கூட ப்ளாக் டெவலெப்மெண்ட் ஆபீஸிலிருந்து அங்கத்தினர்களுக்கு கடன் கொடுக்க அரசாங்கம் உத்தரவிடுமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** கொடுக்க வேண்டுமென்றால் கொடுப்பார்கள். ஆனால் கூட்டுறவுத் துறையில் உள்ள வர்கள் கூட்டுறவுத் துறையிலிருந்து வாங்கிக் கொள்கிறார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, even in areas where the Full Finance Scheme has not been introduced, the Panchayat Commissioners and Revenue Officers are refusing to give loans to the members of the co-operative societies, agricultural banks and Land Mortgage Banks. Will the Government consider the desirability of issuing instructions to the Commissioners and Revenue Officers to grant loans to such members also?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** பழைய திட்டம் இருக்கிறது. அது பிரகாரம் புல் பைனன்ஸ் ஸ்கீம் இல்லாதயிடத் திற்கு எப்போதும் போல் கடன் கொடுத்து கொண்டிருக்கிறார்கள். குறிப் பாக கொடுக்கவில்லை என்ற தகவல் அங்கத்தினர் அவர்களிடம் இருக்கு மானால் எனக்கு அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** முழுக் கடன் உதவி பெறுகிற அத்தகைய பகுதிகளில் விசேஷ நிலை தவிர மற்ற வகைகளில் கடன் கொடுப்பதில்லை என்று தெரிவித்தார்கள். அந்த விசேஷ நிலைமைகள் என்ன?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** விசேஷமாக எதற்கு கொடுப்பது என்று கேட்டதற்கு கூறுகிறேன :—

1. Construction of cattle-*cum*-compost pit scheme.
2. Horticulture Development Scheme.
3. Cashewnut Development Scheme.
4. Filter Point Wells Scheme.



17th March 1964]

5. Soil Conservation Scheme.
6. Hire Purchase Scheme for supply of oil and electric motor pumpsets to ryots.
7. Tractors Hire Purchase Scheme.
8. Green Manure Seed Farm Scheme.
9. Cultivation Advance to Cotton Growers Scheme.
10. New Well Subsidy Scheme.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஸார், இந்த முழு கடன் திட்டத்தை எல்லா பிளாக்குகளிலும் அமலாக்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் எப்போது அமலாக்கப்படும்?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லா பிளாக்குகளிலும் கொண்டு வரப்படும்.

**திரு. ம. கமலநாதன் :** இந்த முழு கடன் உதவி மக்களுக்கு உண்மை யாகவே பயன்படும் என்பதை சர்க்கார் ஆராய்ந்ததா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** நிச்சயமாக நல்ல முறையில் பயன்படும் என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** தலைவர் அவர்களே, இந்த முழு உதவி கடன் திட்டத்தின்கீழ் கொடுக்கப்படுகிற கடன் அளவு அதாவது அதிகபட்ச அளவு குறைவாக இருக்கிறது என்று விவசாயிகள் கருதுகிறார்கள். ஆகவே இதை உயர்த்துவது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** இப்போதே உயர்வாக கொடுக்கவேண்டும் என்பதுதான் இந்தத்திட்டத்தின் நோக்கம். அந்த முறையில்தான் இப்போதும் கொடுத்துவருகிறோம். இப்போது கொடுக்கப்படுகிற கடன் போதவில்லை என்ற புகார் ஒன்றும் வரவில்லை. ஆனால் பல வகைகளில் கடன் வாங்கிக்கொண்டிருந்தவர்களுக்கு இப்போது கூட்டுறவு முறையில் வாங்க வேண்டும் என்று சொல்லும்போது மக்களுக்கு கஷ்டம் என்று நினைக்கிறார்கள். உண்மையில் அப்படியொன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Tuberculosis Hospitals for Madras and Coimbatore*

* 298 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Employees State Insurance Corporation has agreed to provide funds for the construction of T.B. Hospitals at Madras and Coimbatore; and

(*b*) whether the Government have taken steps to implement this scheme at an early date?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Yes.

**திரு. செ. மாதவன் :** எந்தெந்த நகரங்களில் இந்தத் திட்டம் நீடிக்கப் படுகிறது? இந்தத்திட்டங்களுக்காக அரசாங்கமே நிலங்களை வாங்கிக்கொடுப் பதற்கு முன் வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சென்னையிலும் கோயம்புத்தூரிலும் புதிதாக ஆசுபத்திரிகள் கட்டப்பட்டிருக்கிறது. சென்னையில் 430 பெட்கள் கொண்ட ஈ. எஸ். ஐ. ட்யூபர்குலோஸிஸ் ஆசுபத்திரி ஒன்றும், கோயம் புத்தூரில் 300 பெட்கள் கொண்ட ஈ. எஸ். ஐ. ட்யூபர்குலோஸிஸ் ஆசுபத்திரி ஒன்றும் கட்டப்பட்டிருக்கிறது.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, சேலம், கிருஷ்ணகிரி இந்த இடங்களிலுள்ள தொழிலாளர்களின் வசதிக்காக தோப்பூரில் ஒரு டி. பி. சானட்டோரியம் கட்டுவதாக இருந்த திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சேலத்தில் பொதுவாக ஒரு ஆஸ்பத்திரி கட்டப்படும். ட்யூபர்குலோஸிஸ் ஆஸ்பத்திரி வசதிக்காக, பெருந்துறைக்கோ, கோயம்புத்தூருக்கோ தொழிலாளர்கள் அனுப்பப்படுவார்கள்.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** ஸார், தஞ்சை ஜில்லாவில் இருக்கின்ற ட்யூபர்குலோஸிஸ் ஆசுபத்திரியில் வார்டுகள் போதிய வசதியில்லாமல் கீற்றுக் கொட்டகை போடப்பட்டிருக்கிறது. இதை சீர்திருத்துவதற்காக, பண்ட் வேண்டும் என்று அங்கிருந்து கேட்டிருக்கிறார்களா? அப்படியானால் எவ்வளவு கொடுக்கப்படும்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தஞ்சை ஜில்லாவில் ஆலைத் தொழிலாளர்கள் மிகவும் குறைவு, அவர்களுக்கு என்று தனியாக அங்கு ஆசுபத்திரி கட்ட முடியாது.

### தேசிய பாதுகாப்பு நிதி

*299 கேள்வி—**திரு. முனு. ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய இருவிடங்களிலிருந்தும் தேசிய பாதுகாப்பு நிதிக்காக வசூலான தொகை எவ்வளவு?

(இ) இவை எந்தெந்த இலாகாக்கள் மூலம் வசூலிக்கப்பட்டன?

(உ) இவ்வாறு வசூலிக்க வெவ்வேறு இலாகா சிப்பந்திகளும் கட்டாயப்படுத்தப்பட்டனர் என்பது உண்மையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The total collections realised up to 1st February 1964 are furnished below :—

Madras City—Rs. 71,37,196·91.

Chingleput—Rs. 5,27,260·76.

(*b*) No Government department has been authorised to collect funds. The contributions are received through the Administrator, National Defence Fund, all Collector and certain officers of the Revenue department and Panchayat Union Commissioners who are authorised to receive them.

(*c*) No.

### ஆடோமேடிக் சிக்னல்கள் அமைத்தல்

*300 கேள்வி—**திரு. முனு. ஆதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சென்னை எழும்பூர் அருகில் தெற்கு மேம்பாலத்தின் அருகில் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்ற ஆடோமடிக் சிக்னல்கள் சென்னையில் வேறு எந்தப் பகுதியிலாவது அமைக்க உத்தேசமுண்டா? அப்படியானால் விவரமென்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆம். கீழ்க்கண்ட இடங்களில் ஆட்டோமெடிக் சிக்னல்களை நிறுவ உத்தேசித்துள்ளது :—

1. பூந்தமல்லி நெடுஞ்சாலை-காந்தி இர்வின் பாலச் சாலைச் சந்திப்பு.
2. பூந்தமல்லி நெடுஞ்சாலை-டாக்டர் குருஸ்வாமி முதலியார் பாலச் சாலை சந்திப்பு.



3. ஜெனரல் ஆஸ்பத்திரி ரோடு-டாக்டர் முத்துசாமி ஐயர் ரோடு சந்திப்பு.
4. மவுண்ட் ரோடு-எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு.
5. ஜெமினிக்கு அருகில் மவுண்ட் ரோட்.
6. வெஸ்ட்காட் ரோடு—பைகிராப்ட்ஸ் ரோடு சந்திப்பு.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## III.—CALLING ATTENTION TO HARDSHIPS OF HANDLOOM WEAVERS IN THANJAVUR DISTRICT.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம், திருப்புவனம், அம்மாசத்திரம் ஆகிய இடங்களிலுள்ள கைத்தறி நெசவாளர்கள், வெள்ளை நூலின் விலை உயர்வு காரணமாக அல்லலுறுவது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the notice which has been circulated to me mentions about the difficulties of handloom weavers in respect of the multipurpose co-operative societies. But the notice given under rule 41 of the Assembly Rules refers to the inability of the weavers to repay the loans taken by them from the multipurpose co-operative societies, due to increase in the price of yarn. A suggestion has been made in the notice that the collection of the loans due by them should be postponed by one year.

It is not clear how the weavers are said to have taken loans from the ' multipurpose co-operative societies '. The weavers become members of the weavers' societies, get yarn from the weavers' societies and are paid wages by these societies, on their returning the finished goods. There is no question of taking any loan from the weavers' societies.

Generally, only agriculturists become members of the multipurpose co-operative societies and take loans for agricultural operations. It is possible that some weavers in the area referred to in the notice, are also agriculturists and have taken loans from the multipurpose co-operative societies for agricultural operations. The question of postponing the collection of such loan instalments will arise, only if there was failure of crops of such a magnitude as to warrant the postponement of loan. Specific cases of such inability to repay the loan instalment consequent on the failure of crops will be considered on merits, and suitable extension given subject to the adequacy of the resources of the financing bank for meeting such postponed commitments. It is not possible to issue a general order saying that loan instalments due by the weavers to the multipurpose co-operative societies should be postponed by one year.

## IV.—GOVERNMENT BILL.

### THE MADRAS BHOODAN YAGNA (AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964.

[17th March 1964

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI P. KAKKAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65—*cont.*

### DEMAND NO. XIII—EDUCATION

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 31,32,17,600 under Demand No. XIII—Education."

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியத்தின் மீது இந்தி கற்பது கட்டாயம் இல்லை என கொள்கை அளவில் கூறிக்கொண்டு கட்டாயப்படுத்தும் செயல் முறைகள் மேற் கொள்ளப்படுவதை சுட்டிக் காட்ட என் பேரில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப்பிரேரணையை முன் மொழிகிறேன்.

"That the allotment of Rs. 31,32,17,600 under Demand No. XIII—Education be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

* **புலவர் கா. கோவிந்தன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கல்விக்காக 31 கோடி ரூபாய் மான்யமாகக் கேட்டு இதை மன்றத்திலே தங்களுடைய கோரிக்கையை காண்டு வந்திருக்கிறார்கள். அந்த கோரிக்கையின் மீது ஆளும் கட்சியிலிருந்து பாராட்டுக்களை தெரிவிப்பதற்கு ஆளுங் கட்சி அங்கத்தினர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களுக்கு அடுக்கு அடுக்காக 30 ஆயிரம் துவக்கப்பள்ளிகளையும், 20 ஆயிரம் உயர் நிலைப்பள்ளிகளையும், 75 கல்லூரிகளையும் இன்னும் பல்வேறு தொழில் நுட்ப கல்லூரிகளையும் ஏற்படுத்தியிருப்பதையும் பள்ளி உணவுத் திட்டம், ஆசிரியர்களுக்குப் பரிசு, இலவசக் கல்வி, ஆசிரியர் விகிதாச்சாரத்தில் வாய்ப்பு ஆகிய இந்தவிதமான திட்டங்களை எல்லாம் எடுத்துக்காட்டி, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மான்யத்தை வரவேற்பார்கள் என் நான் அறிவேன். ஆனால் ஒன்று நினைத்துப் பார்க்கவேண்டும். தான் பெற்ற பிள்ளைக்கு சட்டை வாங்கிப் போட்ட ஒரு தகப்பனை பாராட்டுவதை இந்த உலகத்தில் பார்க்க முடியாது. தான் பெற்ற மக்களுக்கு உணவு அளித்தான் என்பதற்காக தந்தையைப் பாராட்டுவதை இந்த உலகத்தில் யாரும் பார்க்க முடியாது. அப்படி இருக்கும்போது மக்களுக்கு ச்செய்யவேண்டிய கடமைகளில் அரசின் மிக மிக முக்கியமாக இருக்கிற கடமை கல்வி அளிப்பது ஆகும்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே" என்ற சங்க இலக்கியப் பாடலில், "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" எனக் கல்வி அறிவு அளிப்பதை அரசின் கடமையாக ஆன்றோர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட ஒரு கடமையைச் செய்திருக்கிறார்கள் என்பதற்காகப் பாராட்டுவது முறைதானா என்பதை இந்த மன்றத்திலே இருக்கிற அங்கத்தினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று முதலிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.



17th March 1964]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினருடைய பாராட்டுதலை நான் கோரவே இல்லை. இதைப் பற்றி அதிக நேரம் எடுத்துக் கொள்ள வேண்டாம். கண்டிப்பதை மாத்திரம் எடுத்துச் சொன்னால் போதும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** அமைச்சர் அவர்கள் என்னிடத்திலிருந்து பாராட்டை விரும்பவில்லை, என்னிடத்திலிருந்து கண்டனத்தைத் தான் எதிர்பார்க்கிறார்.

**கனம் சபாநாயகர் :** பாராட்டும்போது பயப்படுகிறார் போல இருக்கிறது (சிரிப்பு).

**புலவர் கா. கோவிந்தன் :** எதிர் கட்சியிலிருந்து நாங்கள் பாராட்டத் தவறிவிட மாட்டோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆளும் கட்சியில் எப்படி பாராட்ட இருக்கிறார்களோ, அதே போல இவைகளையெல்லாம் கொண்டு வந்திருக்கிற அமைச்சர் அவர்களை நானும் பாராட்டுகிறேன். ஆனால் இவ்வளவும் செய்து விட்டு நமது முதல் அமைச்சர் அவர்கள் ஒரு பெரிய கேட்டைச் செய்திருக்கிறார். முகத்திற்குக் கண்ணாடி அணிவார்கள். தங்க ஃப்ரேம் போட்ட கண்ணாடி, நல்ல அழகான கண்ணாடி என்று கண்ணாடிக்கு பெருமை கொடுக்கிறோம். எதற்காக கண்ணாடி போட்டுக் கொள்கிறார்கள் என்று சொன்னால் சிலர் முக அழகுக்காக கண்ணாடி போட்டுக்கொள்ளுகிறார்கள். சிலர் பார்வை குறைவுக்காக கண்ணாடி போட்டுக்கொள்கிறார்கள். ஆனால் நம் அமைச்சர் அவர்கள் நல்ல அழகான கண்ணாடியை அளித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் கண்ணைக் குருடாக்கியிருக்கிறார்கள். கண்ணைக் குருடாக ஆக்கி விட்டு, கண்ணாடி அளிப்பதால் பயன் இல்லை என்று தான் இங்கே நாங்கள் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். எந்த அளவிலே கண்ணைக் குருடாக ஆக்கியிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது. இப்போது நம்முடைய நாட்டில் மும்மொழித் திட்டம் என்ற பெயரால் இந்தியை நுழைத்திருக்கிறார்கள். இந்தியை நுழைத்திருக்கிறார்கள் என்று சொல்லும் நேரத்தில், இந்தி கட்டாயம் இல்லை என்று வாதிடுவார்கள். இந்தி கட்டாயம் இல்லை என்று சொல்லிக்கொண்டே மாணவர்கள் படிக்கக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆச்சாரியார் 1939-ம் ஆண்டில் இந்தியைக்கொண்டு வந்த நேரத்தில் இந்தியைக் கட்டாயமாகக் கொண்டு வந்தார். அப்போது கட்டாயமாகக் கொண்டுவரப் பட்டதால் எங்களால் அதை எதிர்க்க முடிந்தது. தமிழகத்தில் இருக்கிறவர்கள் அத்தனை பேர்களும் எதிர்த்தார்கள். ஆனால் நமது முதல் அமைச்சர் இந்தியை மிகவும் நயவஞ்சக முறையில் நுழைக்கிறார். கட்டாயம் இல்லை, கட்டாயம் இல்லை என்று சொல்லி, படித்தால் படியுங்கள், விட்டால் விடுங்கள் என்று சொல்லி கட்டாயமாகப் படிக்க வேண்டிய சூழ்நிலையைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

"வாள்போல் பகைவரை அஞ்சற்க ; அஞ்சுக,
கேள்போல் பகைவர் தொடர்பு"

என்றார் வள்ளுவர் ;

இதே முறையில் தான் கட்டாயம் என வெளிப்படையாக கூறிய ஆச்சாரியாரைக் கண்டு அஞ்சவில்லை. முதலமைச்சரைக் கண்டுதான் தமிழகம் அஞ்சுகிறது. அவர்தான் இந்தி கட்டாயம் இல்லை, கட்டாயம் இல்லை என்று சொல்லுகிறாரே, அந்த நேரத்தில் இந்தியை நுழைக்கிறார் என்று நீங்கள் ஏன் எதிர்க்கிறீர்கள் என்று கேள்வி கேட்டும் வாய்ப்பை உண்டாக்கி இருக்கிறார் நம் அமைச்சர். இதை நினைத்துப் பார்க்க, இப்போது கேள்விகளுக்கு பதில் சொல்லுகிற நேரத்தில் அமைச்சர் அளித்த விடையிலிருந்து நமக்கு நன்றாகத் தெரிகிறது. மும்மொழித் திட்டம் என்ற திட்டத்தை வைத்துக்கொண்டு, இங்கே தெலுங்கு படிக்க வசதி ஏற்படுத்தியிருக்கிறோம், மலையாளம் படிக்க வசதி ஏற்படுத்தியிருக்கிறோம், பிற மொழிகளைப் படிக்க வசதி ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லளவில் சொல்ல முடிந்ததே தவிர எவ்வளவு மாணவர்கள் படித்தார்கள், எவ்வளவு மாணவர்கள் படிக்க வாய்ப்பு இருக்கிறது என்ற முறையில் பதில் சொல்ல முடியவில்லை. மாணவர்கள் வரவில்லை, ஆசிரியர்கள் இல்லை என்று

[புலவர் கா. கோவிந்தன்] [17th March 1964

அமைச்சர் அவர்கள் கூறக் கூடும். என் மாணவர்கள் வரவில்லை என்று எண்ணிப் பார்க்கும்போது, மும்மொழித் திட்டம் என்ற முறையிலே நாட்டிலே இருக்கிற தமிழ் மகனுக்கு தாய் மொழியாகிய தமிழ் கட்டாயமாகப் படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆங்கிலம்—அது அகில உலகத் தொடர்பு உள்ள மொழியாக இருக்கிறது. ஆகையால் அதையும் படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தியைப் படித்தால் தான் எதிர்காலத்தில் வாழ்வு என்ற முறையில் அதைப் படிக்க வேண்டிய சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. ஆகையால் தான் தமிழ் நாட்டில் இருக்கிற மாணவன் உடன் பிறந்த மொழிகளை, சமஸ்கிருதம் போன்ற மொழிகளை கற்க விரும்பவில்லை, இந்தியைப் படிக்கவேண்டும் என்ற கட்டாயச் சூழ்நிலை இருப்பதால், இந்தியைப் படிக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இந்தியைப் படிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை, இருந்தாலும் படிக்கிறார்கள் என்று சொல்லுவார்கள். என் இந்தி படிக்கிறார்கள். இந்தியில் சிறந்த இலக்கியம் இருக்கிறது என்றா? இல்லை. வயிற்றுப் பிழைப்புக்கு வழி செய்கிறது என்றுதான் படிக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டு, கட்டாயமாக இந்தியைத் தேடிப் படிக்க வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கி விட்டு, இந்தி படிக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை என்று சொல்லுவதில் என்ன பயன் இருக்கிறது? ஆகையால் தான் இந்தியை அமைச்சர் அவர்கள் நயவஞ்சகமாக நுழைக்கிறார் என்று சொல்லுகிறேன். இந்தி கட்டாயம் இல்லை என்று சொல்லி, படித்தால் படியுங்கள், படிக்காவிட்டால் போங்கள் என்று சொன்னார்கள், பிறகு பரீட்சை தேவையில்லை என்று சொன்னார்கள், பிறகு பரீட்சையில் உட்காருங்கள், மார்க் தேர்வுக்குப் பயன்படாது என்று சொன்னார்கள், பிறகு மார்க் தேர்வுக்கு பயன்படாது என்று சொன்னாலும் மாடரேஷனுக்குப் பயன்படும் என்று சொன்னார்கள், இப்போது பரீட்சைக்கு உட்கார்ந்தால் உட்காருங்கள், உட்காராவிட்டால் போங்கள் என்று சொல்லிவிட்டு, அதே நிலையில் இந்தி பரீட்சைக்கு உட்காராவிட்டால் கல்லூரியில் சேர முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். தோலைக் கடித்து, துருத்தியைக் கடித்து, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து கடைசியில் மனிதனைக் கடித்தது என்று சொல்லுவார்கள். அதேபோல் மெள்ள மெள்ள, பையப் பைய இந்தியை அமைச்சர் நுழைக்கிறார் என்று எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாது. வாளைக் கொண்டு வெட்டினால் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் நாளா வட்டத்தில், நச்சுக் கிருமிகளை ஊசிமூலமாக உடலில் நுழைக்கிறார்கள். இந்தப் போக்கு அமைச்சருக்கு வேண்டாம் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் வட நாட்டுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். (சிரிப்பு). வடநாட்டுக்குச் செல்லுகிற நேரத்தில் நாங்கள் வாழ்த்தி அனுப்பினோம் "சென்று வாருங்கள், வென்று வாருங்கள்" என்று. கனம் அமைச்சர் வந்திருக்கிறார். அவர் வந்ததிலிருந்து நான் பார்க்கிறேன். சென்ற நேரத்தில் அவர் முகத்தில் இருந்த களை, இப்போது இல்லை. (சிரிப்பு). அது எல்லோருக்கும் நன்றாகத் தெரிகிறது. அதற்குக் காரணம் என்ன? அவரும் தமிழர் தான். அவரது உடலிலும் நல்ல தமிழர் உணர்வு ஓடுகிறது. சென்ற இடத்தில் அவரால் வென்று வர முடியவில்லை.

"வீரமும் களத்தே போட்டு, வெறுங்கையோடு இலங்கை புக்கான்" எனக் கம்பர் கூறிய முறையில் அவர் வெறும் கையோடு திரும்பியிருக்கிறார். அங்கே வடநாட்டுக்காரர்கள் இன்ன திட்டம் என்று கொடுத்து, அதை ஒப்புக்கொள்ளும்படி செய்து அவர்கள் கொடுத்த அடிமை முறைச் சீட்டில் கையெழுத்திட்டு அளித்துவிட்டு வந்திருக்கிறார். இதைத் தான் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் ஏமாற்றப்பட்டோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். அப்படி வெறுங்கையோடு வந்த அமைச்சராவது வாய் மூடியிருக்கிறார்களா? இந்தியிலே அகில இந்திய சர்விஸ் பரீட்சை எழுதுவதற்கு ஒப்புதலை அளித்து விட்டேன். ஒப்புதலை அளித்து விட்டு அதனால் கேடு வரக்கூடாது என்று மாடரேஷனாக ஆங்கிலத்தில் குறிப்பிட்ட அறிவு வரவேண்டுமென்று ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறேன் என்று சொன்னார்கள். தும்பை விட்டு விட்டு



17th March 1964] [புலவர் கா. கோவிந்தன்]

வாலைப் பிடிப்பது போல இருக்கிறது இது. இந்தியில் எழுத வாய்ப்பு அளித்து விட்டு, தமிழகத்தில் இருக்கிறவர்களுக்கு கேடு வந்து விடுமோ என்று அஞ்சி, அப்படிப்பட்ட கேடு வராத நிலையில் அவர்களுக்கு ஒரு மாடரேஷன் ஏற்படுத்தவேண்டுமென்ற ஒரு திட்டத்தைக் கூறுவது எந்த முறையில் நல்லது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் சொன்னார்கள், இந்தியில் பரீட்சை எழுதினால் அவர்களுக்கே முடியாது, அவர்களுக்கே கூட விஞ்ஞானத்தைப் போன்ற கருத்தினைச் சொல்ல முடியாது என்று எடுத்துக் கூற விரும்புகிறேன் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை அந்தக் காரணங்களை ஏற்றுக்கொண்டார்களா என்பது ஒருபுறம் இருக்க, அந்தக் கருத்தைப் பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்க வேண்டுமென்று சொல்லி, விஞ்ஞானக் கருத்துக்களைத் தமிழில் சொல்ல முடியும், எல்லாம் தமிழால் ஆகும் என்ற உறுதி மொழியில் தமிழ் பயிற்சி மொழித் திட்டத்தைக் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கும்போது இந்தியில் எப்படி விஞ்ஞானக் கருத்துகளைச் சொல்ல முடியாது என்று சொல்ல முடியும்? அவர்கள் கேட்பார்களே, இந்தியில் சொல்ல முடியாது என்று கருதினால், தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்கியிருக்கிறீர்களே, இந்தியால் முடியாது என்று சொல்லுகிறீர்களே என்று கேட்டிருப்பார்கள். அதற்கு அமைச்சர் அவர்களால் சரியான விடை அளித்திருக்க முடியாது. இப்படிப்பட்ட போலிக் காரணங்கள் கூறவேண்டாம். நியாயமான காரணங்களை எடுத்துக் கூறுவோம். தமிழனை இரண்டாம் தரக் குடிமகனாக ஆக்கிவிடக் கூடாது என்று சொன்னீர்களா? சொல்லியும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? அவர் நிலை எங்களுக்குப் புரிகிறது. இங்கே இருந்த அமைச்சரும் மத்திய மந்திரி சபையில் இருக்கிறவரும் தமிழ் நாட்டில் பழைய கல்வித்திட்டம் இப்போது இல்லை, பழைய கல்வியின் தரம் இப்போது குறைந்திருக்கிறது என்று ஒரு போராட்டத்தை இங்கே கிளப்பியிருக்கிறார்கள். இங்கேயே போராட்டம். இந்த நிலையில் வட நாட்டுக்காரர்களோடு நாம் மாறுபட்ட கருத்து கொண்டு விட்டால் நம் பதவி என்ன ஆவது என்ற அச்சம் இருக்கும் என்று நினைக்கிறேன். நான் முதல் அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்வேன், அந்த அச்சம் வேண்டாம். அமைச்சர் அவை வாழ்வு பெரிய வாழ்வு அல்ல. மூன்று மாதங்களுக்கு முன் சென்னை மாநகர மன்றத்தில் காங்கிரஸ் மேயர் உட்கார்ந்தார். இன்னும் மூன்று மாதம் ஆகவில்லை, அந்த இடத்தில் எங்கள் மேயர் இன்று உட்கார்ந்துவிட்டார். இப்படிப்பட்டது அரசியல் வாழ்வு. நீண்ட காலம் அரசியல் வாழ்வில் அமைச்சர் பதவியில் இருக்க வேண்டும் என்று பதவியைக் காப்பாற்றிக் கொள்ள இப்படிப்பட்ட சூழ்ச்சிகளுக்கு இடம் கொடுத்து காட்டிக்கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"மெல்லத் தமிழ் இனி சாகும் என்று அந்தப் பேதை உரைத்தான்" 9–30 a.m.
என்று சொன்னார் பாரதியார். சாகும் என்று சொன்னவனையே பேதை என்றார் பாரதியார்; தமிழைச் சாகடிக்கிறார்கள் முதல் அமைச்சர் அவர்கள். தமிழை வாழவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். சிங்கத் தமிழன் சின்னசாமி போல் செந்தழல் புகவேண்டியதில்லை. தமிழை அழித்துவிடுகிற பணிக்கு முதல் அமைச்சர் அவர்கள் துணை செய்யவேண்டாம் என்று மட்டும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRIMATHI A. SUARES: Mr. Speaker, Sir, in supporting the Demand for Education, I wish to congratulate the Hon'ble the Chief Minister on increasing the allotment for Education in this year's budget to Rs. 31,32,17,600. We are now in an age in which the budget for education is stepped up from year to year. In 1950–51 the allotment was only Rs. 10·57 crores. These figures bear eloquent testimony to the efforts of the Madras State in regard to education. While appreciating the great progress made in education, as stated in the note on the education demand, I wish to offer a few remarks on the different stages of education.

[Srimathi A. Suares] [17th March 1964

As far as elementary education is concerned, the endeavours of the State have been directed towards the objective of universal compulsory primary education for all children. This was visualised in the directive principles of the Constitution and the Madras State has nearly achieved this target. The amount ear-marked for primary education in this year's budget is Rs. 15·33 crores which works out to 52 per cent of the total budget for Education.

When such a large sum is spent on primary education an assessment should be made to see the progress achieved in the first five-years of study.

(Mr. Deputy Speaker in the Chair.)

In reviewing the progress of education, we find that each stage puts the blame on the stage next below it, for low standards. Training colleges complain that the trainees who come to them are far below the standard in the knowledge of their subjects. This implies that arts and science colleges do not send to the Training colleges, students who have sufficient knowledge of their subjects. The arts colleges in turn complain that secondary sections do not work up to the required standard. The teachers of P.U.C. classes state that it takes a whole term or more before the P.U.C. students can follow the lectures. Secondary schools in their turn put the blame on primary schools. This shows that some assessment should be organised to pinpoint the weak spots in our scheme of education. Recently the Vice-Chancellor of the Madras University stated that the weakest link in the scheme of education is the primary schools. The Union Education Minister attaches the greatest importance to secondary education. He has submitted a project to the Planning Commission to reorientate the secondary stage of education. He proposes to have Rs. 20 crores to implement these reforms.

The Public Service Commission in its latest report remarks that in the examinations conducted by it, it has been discovered that there is woeful ignorance of elementary general knowledge and difficulty in expressing ideas in idiomatic language by the students, both in English and Tamil. The Commission also remarks that the standard of proficiency in English has fallen very low. So we see that though there is spectacular increase in the total number of pupils, the total number of schools and colleges, and in the budget allotments every year, we still have not really attained sufficiently high standards in each stage of education. Steps should be taken to find out where exactly the fault lies.

To improve primary education we should get capable secondary-grade teachers. It is pleasing to read in the note on the Education Demand that Government proposes to abolish higher elementary grade teachers' training and have only one grade viz. secondary-grade training. It is a step in the right direction and will certainly improve the standard of education in elementary schools. To keep



17th March 1964] [Srimathi A. Suares]

up standards in elementary schools, a team of supervisors could be appointed to conduct a sample survey of the progress made in a few primary schools in each taluk. The team can consist of experts, officials as well as non-officials.

There are a large number of junior and senior basic schools. In some of these schools, the material required for basic crafts have not been supplied. Schools that offer spinning and weaving as basic crafts have no stock of cotton at all. Other schools that offer gardening and agriculture have no water-supply at all. Periods allotted for basic education are thus wasted, and naturally the standard of students going up from primary schools to secondary schools will not be up to the mark.

The public examination at the end of the upper primary course has now been abolished. Students go from the upper primary class to Standard IX on a mere transfer certificate, which is based on varying standards of promotion. The Inspecting Officers could standardise promotion from the upper primary school to the secondary school. Perhaps this is another reason why standards have fallen in secondary schools.

To keep up standards in the three highest classes of the high schools Government may consider the feasibility of appointing "Subject Inspectors" to accompany the District Educational Officers on their annual inspection. These are days of specialisation and no one can be expected to be proficient in all subjects. Mathematics and Science teachers cannot do justice to humanities and vice-versa. If 'Subject Inspectors' inspect the work done in their special subjects, they can discover defects in methods of teaching. This can lead to great improvement of secondary education.

To improve the quality of graduate teachers in secondary schools, training colleges should be improved. A short course of training lasting only for nine months is inadequate for teaching the theory of education as well as to give practice in teaching. At present the trainees teach in model schools or practising schools for about 15 days only. These schools are scattered far and wide. The work of guidance and supervision is left to the teachers of the practising schools. Some of them use old-fashioned methods and have not kept themselves in touch with the latest methods in teaching. Consequently we find that the trainee teachers do not come up to the required standard. The shortest professional course is the B.T. Training, which lasts for 9 months only. It is these teachers, who will be responsible for sending out a large number of S.S.L.C. students each year to feed the Arts, Science and Professional Colleges. Unless we get the best staff for Training Colleges, and prescribe sufficiently long period of training, we cannot expect to get better qualified teachers for our high schools. More facilities may be provided for a higher training degree, viz., M.Ed. degree. To train B.T.'s the staff should possess a higher training degree than the B.T. If the theses selected by the M.Ed. students are closely

[Srimathi A. Suares] [17th March 1964

related to the improvement of Secondary Education, much useful information would be available to the Education Department to work upon. An attempt should be made to make post-graduate students more research-minded. Only then the cause for certain conditions can be discovered in a scientific way.

A special feature in the year's Budget is the "Scheme of Free Secondary Education" for all, irrespective of income. This will be implemented in the ensuing year. This is a social measure which was not even dreamt of a decade ago. I congratulate the Government and the Minister on having planned and carried out such a measure which will have far-reaching consequences in raising the standards of living of the rising generation.

Some heads of high schools fear that the high standards maintained in certain schools will be affected by the scheme of "Free Secondary Education". Government will certainly compensate them for the loss of fee income and also no restrictions will be placed on the internal management of the school. The best use should be made of this great concession and in a decade or two every boy and girl in the State should possess the minimum qualification of the Secondary School-Leaving Certificate. More Secondary Schools will now be required. Even the 600 schools opened in the last three years will be inadequate. More training colleges would be required to train graduates for work in the Secondary Schools. At present there are only 19 training colleges in the State which send out about 560 B.T's. each year. These numbers may have to be doubled shortly and the intake of B.T. students may be raised to 100 per college.

Before concluding, I wish to thank the Hon. Chief Minister for having allotted the usual amount in this year's budget for Anglo-Indian Education. In fact an additional sum of one lakh has been provided for building grants. The three years' period granted by Government for Anglo-Indian Education ended in December 1963. We are happy and grateful that Government has appreciated the good work done in Anglo-Indian Schools and extended the period during which the usual grant will be given.

Thank you, Sir.

***திரு. மா. இராசாங்கம்**: மாமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தில் எங்கள் கட்சியின் சார்பாக கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஒட்டி என்னுடைய கருத்துக்களை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பெருமதிப்பிற்குரிய கல்வியமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு இந்த மன்றத்திலே இந்திப் பரீட்சையைப் பற்றி சொல்லும்பொழுது, மாணவர்கள் அதை ஒரு வேடிக்கையாக கருதுகிறார்கள், பரீட்சைக் காகிதத்தை வெறும் வெள்ளைக் காகிதமாகக் கொடுத்துவிட்டுப் போகிறார்கள், ஆகவே இப்படி ஏளனம் செய்யக்கூடாது என்ற முறையிலே பேசினார்கள். அப்படிச் சொன்ன அதே அமைச்சர்தான் இந்த ஆண்டில் பரீட்சை எழுதித்தான் ஆகவேண்டுமென்ற சூழ்நிலைக்கு மாணவர்களை அழைத்துவந்து, அதே நேரத்தில் இனிப்பாக இன்னொன்றும் சொல்கிறார், இந்தியில் பரீட்சை எழுதித்தான் ஆகவேண்டும், ஆனால் பாஸ் செய்தாலும் பரவாயில்லை, பாஸ்



17th March 1964] [திரு. மா. இராசாங்கம்]

பண்ணாவிட்டாலும் பரவாயில்லை, ஆனால் மொத்தக் கணக்கில் அந்த மார்க்குகள் சேர்க்கப்படுமென்று சொல்லி தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். இன்னும் கல்வியைப்பற்றிச் சொல்லும்பொழுது நான் ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். முன்பு உயர்நிலைப்பள்ளிப் படிப்பானது பதினோரு ஆண்டுகாலமாக இருந்து, மதிப்பிற்குரிய டெல்லி அமைச்சர் சுப்பிரமணியம் இங்கு இருக்கும்போது அது பத்தாண்டு ஆக மாறி, பிறகு நமது அமைச்சர் வந்தபிறகு மறுபடியும் பதினோரு ஆண்டாக மாறிவிட்டது. இப்படி அடிக்கடி கல்வித் திட்டங்கள் மாறும் திட்டங்களாக இருக்கக் கூடாது. அவை ஒரு உத்திரவாதத்தோடு இருக்க வேண்டுமென்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்படி அடிக்கடி கல்வித் திட்டங்கள் மாறுவதால் ஏற்பட்ட இன்னல்களில் ஒன்று; கடந்த ஆண்டு ஏழாவது வகுப்புப்படித்த மாணவர் இந்த ஆண்டு எட்டாவது வகுப்புக்கு வந்தபிறகும்கூட, திரும்பவும் ஏழாவது வகுப்புப்பாடத்தையே, அதே புத்தகங்களையே, அதே ஸெலபஸ்ஸையைதான் படித்து ஆகவேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதனால் ஒரு வருடம் வீணாகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வாழ்க்கையிலே இளமை என்பது ஒரு வசந்த காலம். ஆனால் வருடாவருடம் வந்து போகிற வசந்த காலம் அல்ல. இளம் மாணவர்களுக்குக் கிடைக்கிற அந்த வசந்த காலத்தை நாம் வீணடிக்கக்கூடாது. இளமையாக இருக்கிற எங்களுக்குக்கூட அந்த இளம் காலத்தைப் பற்றித் தெரியாமல் போனாலும், அந்த இளமையை இழந்து நிற்கிற உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் இந்தக் கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு உத்திரவாதம் இல்லாத நிலைமை இருக்கிறது. கடையிலே ரூபாய் 200 கொடுத்து வாங்குகிற ஒரு ரேடியோ செட்டுக்குக்கூட இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் உத்திரவாதம் கொடுக்கும்பொழுது கோடிக்கணக்கான பணத்தைச் செலவுசெய்து கொண்டுவரப்படுகிற இந்தக் கல்வித் திட்டத்திற்கு ஒரு உத்திரவாதம் இருக்கவேண்டுமென்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அடுத்தாற்போல் விருப்புப் பாடத்தைப் பற்றி என்னுடைய கருத்தைத் தெரிவிக்குங்கால், அந்த விருப்புப் பாடத்தை முதலிலே சோதனை செய்து பிறகு கொண்டுவரவேண்டும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பழகாத மாட்டை பார வண்டியிலே பூட்டினால் வண்டி குடை சாய்ந்துவிடும். பழகாத மாட்டை வெற்று வண்டியிலே போட்டு பழகுவது போல முதலிலே பரீட்சார்த்தமாக அதைச் செய்து பார்க்க வேண்டும். விருப்பப் பாடம் என்று சொன்னால் அடிப்படையான அறிவு வளர்ச்சிக்கு உகந்த பாடத்தை உயர்நிலைப் பள்ளிகளிலே படிப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். விருப்பப் பாடம் என்று சொல்லும்பொழுது ஒவ்வொரு பள்ளியிலும் எல்லாப் பாடங்களுக்கும், வாய்ப்புக் கொடுப்பதில்லை. அந்தப் பள்ளியிலே வைத்திருக்கிற பாடங்களில் ஏதாவதொரு பாடத்தைப் படிக்க வேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறதே தவிர, தங்களுக்கு இஷ்டமான பாடத்தை மாணவர்கள் எடுத்துப்படிக்கிற அளவுக்கு விருப்பப் பாடம் இல்லையென்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கல்வியைப் பொறுத்தவரையில் மாணவர்களின் எண்ணிக்கையைத்தான் பலமாக சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, அதிலே இருக்கின்ற ஓட்டை உடைசல்களைப்பற்றிச் சொல்வதில்லை. தரத்தைப் பற்றிச் சொல்வதில்லை. குவான்டிடியைப் பற்றித்தான் சொல்லப்படுகிறதே தவிர, குவாலிடியைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது பள்ளிகளைப் பார்த்தால் ஆட்டு மந்தையில் ஆடுகளை வைத்து காவற்காரர் காத்துக்கொண்டிருப்பது போல, நான்கு சுவர்களுக்குள்ளே பள்ளி மாணவர்களை அடைத்து வைத்து, அவர்கள் வெளியே ஓடிப்போகமுடியாமல் தடுத்து காத்துவைத்திருக்கிற அளவுக்குத்தான் இன்றைய சூழ்நிலை இருக்கிறது. பள்ளிகளில் காற்றோட்ட வசதியோ, தட்டிகள் வசதியோ, வகுப்புக்கு வகுப்பு பிரிவு வசதியோ இல்லாமல் இருப்பதினால், இதைப் பற்றியெல்லாம் அரசாங்கம் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இருக்கிற நிலைமையைப் பார்த்தால் அவர்கள் சமையற்காரர்களாக மாறிவிடும் நிலைமைக்கு வந்துவிடுவார்களோ என்று நான் அச்சப்படுகிறேன். பள்ளி

கூடங்கள் எல்லாம் சாப்பாட்டு அறைகளாக மாறிவிடுமோ என்று நான் அச்சப்படுகிறேன். இவைகளுக்கெல்லாம் ஒரு தனி அறை, தனி இடம், தனி ஷெட்டாவது ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமெரிக்காவிலே உணவு திட்டம் நிறைவேறிய வகை வேறு. அமெரிக்கா போல் நிறைவேற்றுகிறோம் என்று சொல்ல அதன் ஜாடைகூட இல்லை, கான மயிலாட கண்டிருந்த வான்கோழி தானும் சிறகடித்து ஆடினாற்போல் இருக்கிறது நமது மதிய உணவுத் திட்டம். நாம் நேற்று முன் தினம்கூட கேள்வி நேரத்தில் இங்கே பார்த்தோம். எத்தனையோ நாட்களாக இந்த உணவு பிரச்னை பற்றி நாம் பேசுகிறோம். அமெரிக்க திட்டத்திலே காண முடியாதவற்றை நாம் இங்கே காண்கிறோம். மதிய உணவிலே கத்தரிக்காய் காம்பு என்று எத்தனையோ பேர் எலிவாலைக் கடித்துத் துப்பியிருக்கிறார்கள். (சிரிப்பு) பருப்பு சாம்பார், பாச்சை, பல்லி சாம்பாராக இருந்தது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், என்று கருதுகிறேன். இந்த மதிய உணவில் மிக்க ஜாக்கிரதையாக கவனம் செலுத்தவேண்டும். இல்லாவிட்டால் அதை உணவாக இருப்பதற்கு பதிலாக உதவாக்கரையாக இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்வியின் தரம் பற்றி சொல்லப்பட்டது. கல்வியின் தரம் நல்ல வகையில் உயருவதற்கு பணத்தை மட்டும் செலவழித்து விட்டால் போதாது. கவனிக்க வேண்டிய காரியங்கள் ஏராளமாக இருக்கின்றன. கல்வியின் தரம் உயருவது ஆசிரியர்களின் கையில் இருக்கிறது. ஓவியன் உள்ளத்தில் ஆனந்தம் இருந்தால் தான் அவன் தீட்டுகின்ற ஓவியம் அழகாக இருக்கும். ஓவியன் மனதில் கவலைச் சுமை இருந்தால் அவன் தீட்டும் ஓவியத்தில் கலைச்சுவை இருக்காது. இன்றைக்கு மாணவ மாணவிகளை நல்ல ஓவியங்களாக ஆக்கும் பணி ஆசிரியர்கள் கையில் இருக்கிறது. ஆசிரியர்களுக்கு அமைதியில்லை என்றால் மாணவ ஓவியத்தை கிறுக்கினாலும் கிறுக்கிவிடுவார்கள். ஆகவே ஆசிரியர்கள் மன நிம்மதி உள்ளவர்களாக பணி புரிய உதவ வேண்டும். அடுத்தாற்போல் பள்ளி ஆசிரியர்களுக்கு ட்ரிபிள் பெனிஃபிட் ஸ்கீம், மூன்று நலத்திட்டம் என்று கொண்டுவந்திருக்கிறார்கள். இது அரசாங்கப் பள்ளிகளில் சரியாக நிறைவேறுகிறது என்று கூடச் சொல்லலாம். ஆனால் தனியார் துறை பள்ளிகள் பொறுத்தமட்டில் இது சரியானபடி நிறைவேறவில்லை என்று துணிச்சலாகக் கூறுவேன். அரசாங்க பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை, வைத்தியவசதி போன்ற பல வசதிகள் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் தனியார் துறையில் இருக்கிறவர்களுக்கு இது எல்லாம் கிடைக்கவே இல்லை. ஆக தனியார் துறை ஆசிரியர்கள் மாற்றாந்தாய் பிள்ளைகள் போல் இருக்கிறார்கள் (மணி அடிக்கப்பட்டது) இந்தி பொறுத்த மட்டில் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு முடிக்கலாம் என்று நினைக்கிறேன். இந்திக்காரர்களுக்கு தமிழர் குறைந்தவர்கள் அல்ல என்றாலும் இந்தியில் உத்தியோக பரீட்சைவந்தால் இந்திக்காரர்களுக்குத்தான் வாய்ப்பு அதிகம் இருக்கிறது என்பதை உங்கள் மூலம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யானை பலம் பொருந்தியதுதான். ஆனால் அதை நீரில் இறக்கிவிட்டு விட்டால் முதலையை அதனால் சமாளிக்க முடிவது இல்லை. தமிழன் என்ற யானையை இந்தி என்ற நீரில் வடவர் என்ற முதலை வெல்ல பார்க்கிறது. இருவருக்கும் சமமான வசதி உள்ள மணல் பரப்பில் விட்டுப்பாருங்கள். நான் மணல் பரப்பு என்று சொல்வது ஆங்கிலத்தை. நாம் இந்த இந்தி விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நாம் நன்றாக வளருகிற சமுதாயம். இந்தியினால் நாம் வருந்தி வருந்தி அழிந்து போகக்கூடிய அபாயம் இருக்கிறது என்பதை முன் கூட்டியே எச்சரித்துச் சொல்லி விடை பெறுகிறேன்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மானியத்தை வருவாயிலே கால் பங்குக்கு மேலாக கல்விக்காக, கல்வி சீர் திருத்தங்களுக்காக, கல்வி அபிவிருத்திக்காக செலவழிக்கப்படக்கூடிய நிலையை பாராட்ட கடமைப்பட்டு இருக்கிறோம். இது பொது மக்களுக்கு மிக்க பிரயோஜனமான துறை என்பதால் இது வரவேற்கத்தக்கது என்பதை யாரும் மறுக்கமுடியாது. கல்வி திட்டங்களை இன்னும் மேலும்



மேலும் அபிவிருத்தி செய்தால் அது வருங்கால சந்ததிகளுக்கு மிக அனுகூலமாக இருக்கும். அகில இந்திய மாணவர்களிலேயே இவர்கள் முன்னேற்றம் அடைந்தவர்கள் என்று நாம் பெருமையாக சொல்லிக் கொள்ள முடியும்.

அதோடு எங்கள் ஜில்லாவைப் பொறுத்த மட்டிலும் கல்வித் துறையில் இப்பொழுது உயர்நிலை பள்ளிகள் அதிகமாக ஏற்பட்டு இருக்கின்றன. இதனுடைய நிர்வாகமானது ஒரு டெபுடி இன்ஸ்பெக்டர் கிரேடில் உள்ள ஸ்பெஷல் ஆபீஸர் இடம் கொடுக்கப்பட்டு அவர்கள் உயர்நிலை பள்ளிகளை கண்காணிக்கிறார்கள். அங்கே பஞ்சாயத்து யூனியனில், கூட்டுறவு சங்கங்களில், பொது ஸ்தாபனங்களில் உள்ள பிரதிநிதிகள் கவனிக்க அல்லது ஆலோசனை சொல்லுவதற்கு எந்தவிதமான இடமும் இல்லாமல் இருக்கிறது. முன்பு உயர்நிலை பள்ளிகள் எல்லாம் ஜில்லா போர்டில் இருந்தது. பிறகு டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கௌன்சிலில் இருந்தது. இப்பொழுது தனியாக டெபுடி இன்ஸ்பெக்டர் கிரேடில் உள்ள ......................

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர் டி. இ. ஓ. கிரேட் தான். டெபுடி இன்ஸ்பெக்டர் அல்ல.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** வாஸ்தவம் தான். டெபுடி இன்ஸ்பெக்டர் டிஸ்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீஸராக மாறி அந்த நிர்வாகம் செய்யப்படுகிறது. டி.இ.ஓ. ஆக இருந்தாலும் அந்த ஸ்தாபனத்திற்கு அவ்வளவு பெரிய நிர்வாகத்தை நடத்த முடியாமல் குறைபாடுகள் இருக்கின்றன. அவர்கள் ஒரு டி.இ.ஓ. ஆக இருந்த போதிலும் அவர்களுக்கு நிர்வாகத்தில் போதிய வாய்ப்பு இல்லை. ஸ்பெஷல் ஆபீஸர் மாற்றல் முதலிய எல்லாவிதமான வாய்ப்புகளும் பெற்று இருக்கிறார். ஒரு ஜில்லாவுக்கு ஒரு ஸ்பெஷல் ஆபீஸர் இருந்தாலும் இவ்வளவு பெரிய நிர்வாகத்தை சரியான முறையில் கண்காணிக்க முடியவில்லை. ஆகவே சரியான அதிகாரிகளை நியமிப்பதோடு, ஒரு கமிட்டியை வைத்து அதன் கூட அதிகாரிகளை கலந்து கொண்டு தங்கள் காரியங்களை செய்யும் படி ஏற்பாடு செய்தால் அது பிரயோஜனமாக இருக்கும், அபிவிருத்திக்கும் உகந்ததாக இருக்கும்.

தஞ்சையில் சரபோஜி மன்னன் அனேக தருமங்களை ஏற்படுத்தி சத்திரங்களை நிறுவி, நிதி வைத்து போய் இருந்தது எல்லாம் இப்பொழுது கல்விக்காக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஒரத்தநாடு, ராஜாமடம், நீடாமங்கலம் முதலிய இடங்களில் உயர்நிலைப் பள்ளிகள் வைத்து ஆசிரியர்கள் நியமித்து நிர்வாகம் நடக்கிறது. அவைகளுக்காக அனேக நிதிகள் வைக்கப்பட்டு இருந்தது. அவை சரியாக கவனிக்கப்படாததால் மன்னனால் ஏற்படுத்தப்பட்ட தருமங்கள் நல்ல வருவாய் இன்றி குன்றிப் போய்விட்டன. அங்கே நடக்கும் உயர்நிலை பள்ளிகளும் இப்பொழுது சரியாக கவனிக்கப்படவில்லை. அதுவும் கலெக்டர் இடத்தில் தனியாக கொடுத்து விட்டதன் காரணமாக பொது ஜனங்களுடைய பிரதிநிதிகளுக்கு அங்கே என்ன நடக்கிறது என்று ஒன்றும் தெரியவில்லை. ஆகவே டிஸ்ட்ரிக்ட் அபிவிருத்தி கௌன்சில் மூலம் தொடர்பு வைத்திருந்தால் ரொம்ப பிரயோஜனமாக இருக்கும். தேர்ந்து எடுக்கப்படும் ஆசிரியர்கள், உணவு, உடை, சம்பளம், தேர்ந்து எடுக்கப்படும் மாணவ மாணவிகள் இவைகளில் எல்லாம் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் போன்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு எந்த விவரமும் தெரிவதில்லை. பூராவாக கலெக்டருடைய பரிபாலனத்திலேயே நடைபெறுகிறது. ஆகவே இதற்கும் ஒரு கமிட்டி அமைத்து நிர்வாகம் சரியாக நடைபெற ஏற்பாடு செய்தால் சரபோஜி மன்னனால் ஏற்படுத்தப்பட்ட தருமங்கள் நல்ல முறையில் நடக்க ஏதுவாக இருக்கும். ஆகவே பொது ஜன தொடர்புள்ள ஒரு கமிட்டியை அமைப்பது நலமாக இருக்கும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

எதிர்க் கட்சி அன்பர்கள் எல்லாம் இந்தச் சிறந்த கல்வித் திட்டத்தை பற்றி இன்னும் சிறந்த முறையில் மக்களுக்கு, தமிழ் நாட்டு வருங்கால சந்ததிகளுக்கு பயன்படுமாறு எந்த விதத்தில் உயர்த்த வேண்டும் என்று சொல்லாமல் அருமை நண்பர் புலவர் கோவிந்தன் போன்றவர்கள்

[திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை] [17th March 1964

இந்தியைத் தாக்கிப் பேசினார்கள். நானும் தாக்க வேண்டும், சொல்ல வேண்டும் என்றால் இந்தியை இந்த அமைச்சர் ஏன் கட்டாயப்பாடமாக கொண்டுவரவில்லை என்று குற்றம் சாட்டுவேன். மேனாடுகளில் உங்களுக்குத் தெரியும், தாய்மொழியோடு இன்னும் இரண்டு பாஷைகளை கற்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு கட்டாயமாக வைக்கப்பட்டு இருக்கிறது. இதனால் தான் உலக நாடுகளோடு உறவு கொண்டு தொழில் நுட்ப விஷயங்களை தெரிந்து கொள்ள ஏதுவாக இருக்கிறது. நம் மாணவர்களும் தாய் பாஷையோடு இன்னும் இரண்டு பாஷைகளை கற்க வேண்டும் என்பதை கட்டாயமாக வைக்க வேண்டும் என்று தான் நான் சொல்லுவேன். ஏற்கெனவே ஆங்கிலம் தமிழர்கள் படிக்கவில்லை, பிராமணர்கள் படித்து விட்டார்கள் என்று புகார் சொன்னார்கள். இப்பொழுது ஒருவாறு அவர் களும் திறமையாக படித்ததால் அகில இந்தியாவிலும் வேலை கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது இந்தி படிக்க வேண்டும் என்று சொல்லும்போது படிக்காமல் இருந்து விட்டால் நஷ்டம் யாருக்கு. இவர் கள் இந்தியை ஒரு தாருப்பு சீட்டாக வைத்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நம் பிள்ளைகளை "படிக்காதே" என்று சொல்லி பிஞ்சு மனதில் "அதைப் படிக்க வேண்டியதில்லை" என்ற எண்ணத்தை, நம் முடைய தி.மு.க. கட்சிக்காரர்கள் வற்புறுத்திச் சொல்கிறார்கள்,
10-00 a.m. இவர்கள் சிறந்த தலைவர்களாக இருக்கிறார்கள்" என்று பிள்ளைகள் நினைக்க ஏது இருக்கிறது. எதிர்க்கட்சி அன்பர்களை நான் தயவுசெய்து ஒன்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையில் அவர்கள் இன்னும் நல்ல திட்டங்களைத் தமிழ்நாட்டிலும், அகில இந்தியாவிலும் கொண்டுவரு வதற்கு ஆலோசனை சொல்ல வேண்டும். தமிழ்நாட்டிலும், அகில இந்தியா விலும் இந்தியை இன்னும் சிறந்த முறையில் எவ்வாறு கொண்டுவரலாம், நம்முடைய நாட்டு மக்களுக்காக இந்தியை இன்னும் எவ்வாறு பயன் படுத்தலாம் என்பதற்காக நல்ல ஆலோசனைகளை அவர்கள் சொல்லலாம். அதை விட்டுவிட்டு, இந்தித் திணிப்பு என்கின்ற ஒரே ஒரு குற்றச்சாட்டைப் பெரியதாகச் சொல்வதும், அதைக் கட்டாயமாகக் கொண்டுவரக்கூடாது, நம்முடைய மாணவர்கள் படிக்க முடியாது என்று சொல்வதும் சரியல்ல என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எனக்கு முன் பேசிய ஒரு நண்பர், "நம்முடைய தமிழ்ப் பிள்ளைகள் ஆங்கிலத்தை நல்ல விதமாக இப்பொழுது படித்து வருகிறார்கள்" என்று பெருமைப்பட்டுச் சொன்னார்கள். எப்படி நம்முடைய பிள்ளைகள் ஆங்கி லத்தை நன்றாகப் படிக்கக்கூடிய திறமையைப் பெற்றிருக்கிறார்களோ, அதே போல இந்தியிலும் அவர்கள் திறமைசாலிகளாக இருப்பார்கள். ஆனால், சில தலைவர்கள், கட்சிச் சார்பாக, அரசியல் காரணமாக, சொல்வதைக் கேட்டு, இந்தி படித்தால் ஆபத்து வந்துவிடுமோ, இந்தி நம்முடைய மூளையிலே நுழையாதோ என்று பிள்ளைகள் நினைத்துக் கொள்ளக்கூடிய நிலை ஏற்படுகிறது. எதிர்க் கட்சியிலே உள்ளவர்களை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன் வருங்கால சந்ததிகளைப்பற்றிச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று.

நம்முடைய நாட்டுக்கென்று ஒரு தனி பாஷை இருக்க வேண்டும், அகில இந்தியாவிலும் தொடர்பு கொள்ளவும், பிற மாநிலங்களோடு தொடர்பு கொள்ளவும், நம்முடைய மாணவர்கள் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் வேலை வாய்ப்புப் பெறவும், தொழில் துறையில் முன்னேறி வரவும், கண்டிப்பாக அவர்கள் ஆங்கிலத்தைப் படித்து வருவதைப்போல, அதற்கடுத்தபடியாக இந்தியையும் படிக்க வேண்டும். ஆகவே, நம்முடைய எதிர்க் கட்சி அன்பர்கள் எல்லோரும் தயவுசெய்து, அரசியல் காரணமாக இந்தியை எதிர்க்கவேண்டும் என்று வைத்துக்கொள்ளாமல், இளம் சந்ததி கள், பல விஷயங்களைப் படித்து முன்னேறி வருவதற்கு, இந்தியோடு இன்னொரு பாஷையையும் கட்டாயம் படிப்பதற்கான சூழ்நிலையை ஏற் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

***திரு. அ. ராமசந்திர ராயர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964–65-ம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



17th March 1964] [திரு. அ. ராமசந்திர ராயர்]

மொத்த வருவாயில் கல்வித் துறைக்காக நான்கில் ஒரு பங்கு செல விடப்படுகிறது. இது மிகவும் பாராட்டத்தக்க விஷயம். நம்முடைய நாடு முற்போக்கான நிலைமைக்கு வர வேண்டும் என்றால், கல்வித் துறையில் முற்போக்கு அடையவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தான் கல்வித் துறைக்கு இப்படி அதிகப்படியான தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும் பாராட்டுதலையும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சற்று நேரத்திற்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள், இந்தித் திணிப்பைக் கொண்டுவந்து இதிலே புகுத்திவிட்டு, நம்முடைய வருங்காலச் சந்ததிகள் எல்லாம் நல்ல முறை யில் முன்னேறி வர முடியாமல் தடுப்பதற்கு என்ன சூழ்நிலையை வகுக்க வேண்டுமோ அதை எல்லாம் வகுத்துப் பேசினார்கள். அரசியல்வாதிகள் தங்களுடைய அரசியல் சூழ்ச்சியைக் கொண்டுவந்து கல்வித் துறையில் செலுத்தாமல், வருங்கால சந்ததிகள், பிற்கால சந்ததிகள், நம் பாரத நாட்டில் புலவர்களாக விளங்கவேண்டும் என்று நினைக்க வேண்டும். புலவர் பட்டம் பெற்று, இந்தச் சட்டசபையில் அங்கம் வகிக்க வேண்டும் என்று எப்படிச் சிலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்களோ, அதேபோல் பாரத நாட்டுப் புதல்வர்களும், நம்முடைய பிற்காலச் சந்ததிகளும் முன் னுக்கு வரவேண்டும் என்ற கருத்து அவர்களுக்கு இருக்கவேண்டும் என்று நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இப்பொழுது நாம் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் கல்வித் துறையில் நாம் இந்த மாநிலத் தில் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பது நன்கு அறிந்த விஷயம். முதன் முதலாக ஆரம்பக் கல்வியை இலவசமாக அளிக்க அரசாங்கம் முன்வந்தது. அதற்குப் பிறகு, இப்பொழுது உயர் தரக் கல்வியை எல்லாருக்கும் இலவசமாகக் கொடுக்க முன்வந்திருக் கிறது. எல்லோருக்கும் இலவச உயர்நிலைக் கல்வி அளிக்கப்போவதாகப் பிரகடனப்படுத்திவிட்டார்கள். அடுத்து, கல்லூரிப் படிப்பையும் இலவசமாக அளிக்கும் வகையில் சலுகை அளிக்கவேண்டும். அதற்கும் மானியம் அளிக்கவேண்டும் என்பதைத் திட்டவட்டமான கொள்கையாக வைத்துக் கொள்ளவேண்டும்.

விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால் விவசாயிகள் இந்த நாட் டுக்கு முதுகெலும்பு போன்றவர்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அப்படிப்பட்டவர்களுடைய பிள்ளைகள் கல்லூரிப் படிப்பு பெறும் வகையில் அவர்களுக்குக் கல்விச் சலுகை அதிகமாக அளிக்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். உணவுப் பொருளை ஏராளமாக உற்பத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய நல்ல சூழ்நிலை ஏற்படவேண்டுமானால், விவசாயிகளை கல்வித் துறையில் முற் போக்கு உடையவர்களாகச் செய்ய அரசாங்கம் தீவிரமாக முன்வர வேண் டும். கல்லூரிப் படிப்பில் விவசாயிகளுடைய பிள்ளைகளுக்குத்தான் முதல் இடம் அளிக்கவேண்டும். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் என்றால், ஏதோ ஒரு சிலருக்குக் கல்லூரிகளில் இடம் கொடுத்து, மற்ற வர்களைப் புறக்கணிக்கக்கூடிய நிலை இருந்து வருகிறது. ஆகவே, விவசாயி களுடைய பிள்ளைகளுக்குக் கல்வித் துறையில் அதிகமான சலுகை அளிக் கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கெல்லாம் ஸ்காலர் ஷிப் வழங்கப்படுகின்றன என்றாலும், அதிலே தாமதம் இருக்கிறது. டிசம்பருக்குள்ளேயே ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கமுடியும், இல்லை என்று திட்டவட்டமாகச் சொல்லிவிடவேண்டும், என்று உத்தரவு போட்டுவிட்டால் நிம்மதியாகப் படிக்க ஏதுவாக இருக்கும். ஸ்காலர்ஷிப் வரும், வரும் என்று எதிர்பார்த்திருந்துவிட்டுக் கடைசியில் இல்லை என்றால் மனம் சங்கடப்படும். அதைத் தடுக்க வகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

[திரு. அ. ராமசந்திர ராயர்] [17th March 1964

புவனகிரித் தொகுதியில் ஒரு பாலிடெக்னிக் பள்ளி ஆரம்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். அந்தத் தொகுதி கைத் தொழில்கள் நிறைந்த இடம். அங்கே ஒருவிதமான பள்ளிக்கூடமும் இல்லை. அங்கே கல்வி ஆசிரியர்கள் பயிற்சி நிலையம் ஒன்று—ஆண்களுக் காயிருந்தாலும் சரி, பெண்களுக்காயிருந்தாலும் சரி, ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆரம்பப் பள்ளிகளில் பிள்ளைகள் ஆசிரியர்களைக் கூப்பிடும்போது,, " அண்ணன் " என்றும், " அக்கா " என்றும் கூப்பிடுகிறார்கள். இந்த முறையை மாற்றி, பழங்காலத்தில் கூப்பிட்டதைப் போல, " ஐயா ," என்றும், " அம்மா " என்றும் கூப்பிடும்படிச் செய்தால் நாடு முற் போக்கு அடைய வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

என்னுடைய தொகுதியில் முட்லூர் என்னும் ஊர் பரங்கிப்பேட்டை வட்டத்தில் இருக்கிறது. அதில் உருது பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கே முஸ்லிம் பிள்ளைகள் படித்துக்கொண்டு வருகிறார்கள். முஸ்லிம்கள் இருக் கும் இடத்தை விட்டு, இந்துக்கள் வசிக்கும் இடத்தில் அந்தப் பள்ளியை வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றிப் பல தடவை கமிஷனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் எடுத்துச் சொல்லியும், யாரும் அதைப்பற்றிச் செவி சாய்க்காமல் அந்தக் கோரிக்கையைத் தள்ளிப் போட்டுக்கொண்டு வருவது மிகவும் விரும்பத்தக்கது அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலும் ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின் றேன்.

300 ஜனத்தொகையுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம் திறக்கப்படும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், இன்னும் சில இடங்களில் ஆரம்பப் பள்ளிகள் திறக்கப்படாமல் இருக் கின்றன. ஆக, எங்கெங்கு இந்த விகிதாசாரத்தில் பள்ளிக்கூடங்கள் திறக் கப்படவில்லையோ அங்கெல்லாம் பள்ளிகள் திறக்க ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஐந்து மைலுக்குள் ஒரு உயர் நிலைப் பள்ளி இருக்கவேண்டுமென்ற திட்டம் இருந்தாலும், பத்து மை லுக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி கூட திறக்கப்படாத நிலை என் தொகுதியில் இருக்கிறது. இதையும் மிகவும் கண்காணித்து, கூடியவரையில் ஐந்து மைலுக்குள் ஒரு உயர்நிலைப்பள்ளி திறக்க ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சங்கீதம், நாடகம் போன்ற துறைகளுக்கும் கல்லூரித் திட்டம் வகுத் துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உடல் பயிற்சிக்கும் திட்டம் இடப்பட்டிருக் கிறது. சினிமாத் துறையில் பயிற்சி அளிக்கவும் திட்டம் இடப்பட்டிருக் கிறது. அவற்றைப் போலவே, சர்க்கஸ் பயிற்சி அளிப்பதற்கும் ஒரு கல் லூரி ஆரம்பித்தால் பிற்கால சந்ததிகள் முன்னுக்கு வருவார்கள் என்று தெரிவித்துக்கொண்டு, என்னுடைய சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்றேன்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Deputy Speaker, Sir, I would like to say a few words on the Demand which is now before the House. As the time allotted to me is limited, I would like to confine my speech to primary and secondary education which is being imparted in the rural areas. The Hon. the Chief Minister while presenting the Budget for the coming year, stated that there would be free secondary education up to the S.S.L.C. level. Of course, free secondary or primary education is there and to-day we are seeing that it is being given free, but so far as the rural areas are concerned, I may say that the primary and secondary education are not free as education of children involves expenditure to the parents. As regards primary education which has been entrusted



17th March 1964] [Sri C. Chiranjeevulu Naidu]

to the panchayat unions for administrative purposes, the maintenance charges of elementary schools and the establishment charges are being met by the grants provided for by the Government through supplementary educational grants, rupee one per capita basis, land revenue and on other slab systems. In this educational cess has to be paid by the agriculturists. So primary education is not free for their children. At the same time, for effecting any improvement by way of appointing additional teachers or construction of additional accommodation, the panchayat union is to-day given discretion to levy surcharge. So in rural areas even primary education is not free. The net cost of the primary education is not being met by the Government. It is being contributed by the villagers. That is the position in the rural areas. I should not be mistaken for saying this. What I mean to say is, let them levy the educational cess. But in addition to that, the levy of a surcharge to fill up the deficit in the Panchayat Union budget for imparting primary education is not in any way justifiable. In regard to secondary education also, it costs the villagers. For opening a High School in rural areas, the villagers have to give Rs. 10,000 as contribution to meet the recurring expenditure of high schools, in addition five acres of land have to be gifted and temporary structures and furniture have to be provided. Even when the funds are available, they have to meet 50 per cent of the estimated expenditure for providing permanent buildings. So, secondary education is not free as far as villagers are concerned. I therefore request the Government to consider this aspect of the matter. Of course, there may be some philanthrophists in the villages who may come forward to give contributions but at the same time there are some villagers who cannot afford to do so. In such cases, it is the duty of the Government to come forward and say : ' We are here to help and see that the entire cost including free accommodation is being met by us.'

Now secondary education has been taken over by the Special District Educational Officer, of course, under the over-all control of the Director of Public Instruction. The point which has been discussed everywhere is whether it is not desirable to have the secondary education brought under the purview of District Development Council and administered by them. These Special District Educational Officers have been generally promoted from the ranks of Deputy Inspectors of Schools. Not that they are not capable of administering it, but there is no co-ordination or any sort of understanding. Secondary education requires that anything that is done at the district level has to be reviewed. Now this is not being reviewed. Also, in the District Development Council, the Special District Educational Officer is not a member and so his action is being questioned only by the Education Department and that too on technical matters by the District Educational Officer belonging to the same department, where there may not be much scope for each one questioning the other's ways of work. So, I suggest that the

Special District Educational Officer may be made a Member of the District Development Council and his work also may be reviewed by the District Development Council.

Regarding the mid-day meal scheme, I feel that it is a scheme which has gone a long way to bring the children under education. The system that is being adopted now is that the money is first sent to the panchayat president and then the teachers have to take the money from the president. With all due respect to those who are implementing the scheme successfully, I would like to suggest that better methods may be adopted so that there may be effective control. Of late, the panchayat officers have been made audit officers who are expected to check periodically the concerned accounts but even this is not sufficient. If the amount is with a non-official, there is a tendency to delay the payment of the amount to the teacher. The teacher also is not in a position to demand the amount from the panchayat president who is generally a popular or powerful person in the village. So the amount is not properly utilised at the right moment. I therefore request the Government to devise better methods for the improvement of the mid-day meal scheme.

Regarding collegiate education, I may suggest that the old Intermediate Course may be introduced so that we can have two years' intermediate course and two years' degree course which had been working very well.

It is announced that five colleges will be opened in the State in the coming year and one college is proposed to be opened in the Chingleput district. But we see that the Government are always looking to the south. The north is being neglected. So, I request the Hon. the Chief Minister . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வடக்கே இருந்தாலும், தெற்கே இருந்தாலும் யார் நிதி உதவியளிக்க முன் வருகிறுர்களோ அந்தப்பகுதி யில் கல்லூரியை வைத்துவிடலாம். செங்கல்பட்டு மாவட்டம் என்று போட் டிருக்கிறேம். அதனுல் யார் நிதி உதவியளிக்க முன்வருகிறுர்களோ அந்த இடத்தில் வைப்பதில் ஆட்சேபம் இல்லே.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, we claim our Hon'ble Chief Minister as belonging to North Chingleput. A college may be located in Tiruvallur as the need for it has long been felt there People from Tiruvallur, Tirutani and Ponneri will co-operate in this matter, and I request the Government to open the college at Tiruvallur. With these words, I resume my seat. Thank you, Sir.

***திரு. நா. சௌந்திரபாண்டியன் :** மதிப்புக்குரிய துணைத் தலேவர் அவர் களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் கல்வி மானி யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் கல்வியின் முன்னேற்றத்திற்காக 36 கோடி 32 லட்சம் ரூபாய் வரும் நிதியாண்டு செலவழிக்க இருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். நமது மாநிலத்தில் ஆரம்பக் கல்வியைக் கட்டாயக் கல்வி என்று செய்து இருக்கிறேம். ஆனுல் அந்த முறையிலே மாணவர்கள் பள்ளிக்குக் ...





யமாகப் போக வேண்டுமென்பதற்காக எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதைப்பற்றித் திட்டவட்டமாக அரசாங்கம் கூறவில்லே. அதற்கு நல்ல தொரு திட்டத்தைக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

உயர் துவக்கப் பள்ளிகள் பல நமது மாகாணத்தில் செயல்பட்டு வரு கிறது. முன்பு எட்டாவது வகுப்பில் அரசாங்கப் பரீட்சை நடந்து அந்தப் பரீட்சையில் தேர்வு பெற்றவர்கள்தான் மேல் படிப்பதற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இப்போதுள்ள கல்வித் திட்டப்படி எட்டாவது வகுப்பில் அரசாங்கப் பரீட்சை வைக்கப்படுவதில்லே. அதன் காரணமாக ஆசிரியர்கள் மாணவர்களுடைய கல்வி வளர்ச்சியிலே அதிகமான அக்கறை எடுத்துக் கொள்வதில்லே. ஆசிரியர்கள் எப்படியும் பாஸ் போட்டு விடுவார்கள் என்று மாணவர்களும் இருக்கிறுர்கள். ஆகவே, அடுத்த ஆண்டிலிருந்தாவது உயர் துவக்கப் பள்ளி இறுதி வகுப்பில் படிக்கிற மாணவர்களுக்கு அரசாங்கப் பரீட்சை வைக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். அதன் காரணமாக மாணவர்களின் கல்வித் தரம் உயரும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தனியார் நடத்திவருகின்ற ஆரம்பப் பள்ளிகளேயும், உயர் துவக்கப் பள்ளிகளேயும் லாபத்தைக் கருதி மற்றத் தனிப்பட்டவர்களுக்கு விற்று விடுகின்றனர். அவ்வாறு மாற்றும்போது அவர்கள் பள்ளித் துணை ஆய் வாளருக்கு எழுதி அவர் மாவட்டக் கல்வி அதிகாரிக்கு சிபார்சு செய்து எழுதினுல் அவர்கள் மாற்றுவதற்கு ஒப்புதல் அளித்து மாற்றிக் கொடுத்து விடுகிறுர்கள். அதற்கு அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் ஒப்புதல் கொடுக்க வேண்டுமென்ற நியதி தற்போது இல்லே. பஞ்சாயத்து யூனியன் கள் ஒப்புதல் கொடுத்தால்தான் இந்தப் பள்ளிகளே மாற்றிக் கொடுக்க லாம் என்று அரசாங்கம் ஆணையிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர் துவக்கப் பள்ளிகளில் 400 மாணவர்கள் இருந்தால் ஒரு உடற் பயிற்சி ஆசிரியரும், ஒரு தமிழ் ஆசிரியரும் போடலாம் என்று கூறி யிருப்பது வரவேற்கத்தக்கது. முழுமைபெற்ற எல்லா உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் ஒரு உடற்பயிற்சி ஆசிரியரும், ஒரு தமிழ் ஆசிரியரும் இருக்கவேண்டுமென்ற முறையிலே அரசாங்கம் ஒரு திட்டம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 400 மாணவர்களுக்கு மேற்பட்டு இருந்தால்தான், தமிழ் ஆசிரியர்களேயும், உடற்பயிற்சி ஆசிரியர்களேயும் நிய மிப்பது என்ற திட்டம் இருந்தால் அது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஒரு கிராமத்தில் பல பள்ளிகள் இருக்கின்றன. 200, 250 மாணவர்களுக்கு மேல் இருந்தாலே உடற்பயிற்சி ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் ஆகிய வர்களே நியமிப்பது அவசியமானதாகும். கிராமங்களில் தற்போது உயர் நிலேப்பள்ளி வரை படிப்பதற்கு வரக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது பாராட்டத்தக்கது. தற்போது முழுச் சம்பளச் சலுகை அளித்தவுடன் கிராமப் புறங்களில் மாணவர்களுடைய எண்ணிக்கை இன் னும் அதிகரிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, கிராமங்களில் கூடுதல் உயர்நிலேப் பள்ளிகளே அமைக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். வள்ளியூர், திசையன்விளே இந்த இடங்களில் இரண்டு பெண்கள் உயர்நிலேப் பள்ளிகளேயும், செட்டிகுளத்தில் ஒரு உயர் நிலேப் பள்ளியையும் அரசாங்கத்திலிருந்து இந்த ஆண்டு ஏற்படுத்தவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளே மக்கள் செய்ய தயாராக இருக்கிறுர்கள்.

மாவட்டக் கழக உயர்நிலேப்பள்ளி கட்டிடங்களுக்கும் தனியார் உயர் நிலேப்பள்ளி கட்டிடங்களுக்கும் அரசாங்கம் கட்டிட மானியம் கொடுத்து வருகிறது. பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள மாவட்டக் கழகப் பள்ளி கட்டிடங்களுக்கு மக்கள் கொடுக்கவேண்டிய உதவித் தொகைக்கு பஞ்சா யத்து யூனியன்கள் உதவித் தொகை கொடுக்க வழிவகை செய்யப்பட் டிருக்கிறது. ஆனுல் தனியார் நடத்தும் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படுவ தில்லே. தனியார் நடத்தும் பெண்கள் பள்ளிகளாவது பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து கட்டிடம் கட்டுவதற்கு உதவி கொடுக்க வழி செய்தால் நன்ருக இருக்கும். ஆண்கள் பள்ளிக்காவது பரவாயில்லே ; பெண்கள் பள்ளிக்குப் பஞ்சாயத்து யூனியனிலிருந்து நிதி உதவி அளிக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களில் மாநில விளையாட்டுப் பந்தயங்கள் கவுன்சிலின் ஆதர வுடன் மாவட்ட விளையாட்டு கவுன்சில்கள் ஏற்படுத்தியிருப்பது வரவேற்கத் தக்கது. அதில் யார் யார் அங்கத்தினர், அது எப்படி ஆரம்பிக்கப் பட்டது போன்ற விவரங்கள் எல்லாம் சரிவரத் தெரியவில்லை. ஏதோ கலெக்டர் அவர்கள் தலைவர் என்று சொல்கிறார்கள். யார் யார் உறுப்பினர் என்று விவரமாகச் சொல்லவில்லை. இதில் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்வது நல்லது. சட்ட மன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்வது நல்லது.

மாநில அரசு ஏற்படுத்தியுள்ள கடன் உபகாரச் சம்பளத் திட்டம் பாராட்டத்தக்கது. இந்தத் திட்டத்தின்படி 1963–64ல் இது வரை மாணவர்களுக்குக் கடன் அளிக்கப்படாதது வருந்தத்தக்கது. இதனை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு திருச்சி மாவட்டத்தில் ஒரு பொறியியற் கல்லூரி ஆரம்பிக்க இருப்பது வரவேற்கத்தக்கது. திருநெல்வேலியில் தனியார் ஒரு பொறி யியல் கல்லூரி ஆரம்பிப்பதாக இருந்தது. இதுவரை ஆரம்பிக்கப்பட வில்லை. அதை தனிப்பட்டவர்கள் ஆரம்பிப்பார்களோ மாட்டார்களோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. அடுத்த ஆண்டு அரசாங்கமே அதை ஏற்று ஆரம்பித்து நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாசரத்தில் சி. எஸ். ஐ. நடத்தி வந்த பாலிடெக்னிக்கை தூத்துக் குடிக்கு மாற்றியிருப்பது வருந்தத்தக்கது. சி. எஸ். ஐ. நிர்வாகத்தில் நிதிபற்றாக்குறையின் காரணத்தால் தூத்துக்குடிக்கு மாற்றியிருக்கிறார்கள். ஆனால் தூத்துக்குடியில் அதனை அரசாங்கமே ஏற்று நடத்தி வருகிறது. அரசாங்கம் நேரடியாக அதனை நாசரத்திலேயே நடத்தி இருக்கலாம். அதைத் தூத்துக்குடிக்கு மாற்றியதன் காரணத்தைப் பற்றி விரிவாக ஒன்றும் சொல்லவில்லை.

திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் அதிகமான பெண்கள் கல்வி பயின்று வேலை இல்லாமல் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு வசதி அளிக்கும் வகையில் அங்கு ஒரு மகளிர் பாலிடெக்னிக் மிகவும் அவசியம். அதை கூடிய விரைவில் அமைக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. காஞ்சி மணிமொழியார் : சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மிக முக்கியமான கல்வி மானியம் இங்கே விவாதத்திலே இருக்கிறது. அதன் மீது எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டில் இருக்கின்ற சிறு குழந்தைகள் பள்ளிக்கூடம் போகவேண்டுமென்றால் விரும்பவே மாட்டார் கள். வீட்டை விட்டுப் புறப்பட்டு வெளியிலே எங்காவது தங்கி பள்ளிக் கூடம் விடும் நேரத்திற்கு வீட்டுக்கு வருவார்கள். ஆனால் இன்றைய தினம் மாணவர்கள் மிக விருப்பத்தோடு பள்ளிக்குப் போகிறார்கள். படிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகள் கல்வியிலே சிறந்தோங்க வேண்டுமென்று விரும்பு கிறார்கள். தங்களுடைய சொத்தை விற்றாவது தங்களுடைய பிள்ளை களுடைய கல்விச் செல்வத்தைப் பெருக்க வேண்டுமென்ற விருப்பத்தோடு இருக்கிறார்கள். கல்விச் செல்வம்தான் பெரிய செல்வம் என்று எல்லாப் பெற்றோர்களும் நினைக்கிறார்கள். தமிழ் இலக்கியத்திலே "கலைமாச் செல்வர்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பெரிய செல்வத்தைத் தேடி மாணவர்களும், பெற்றோர்களும் செல்கிறார்கள். திருஞானசம்பந்தர் தேவாரத்திலே "கற்றல் கேட்டலுடையார் பெரியார்" என்று பாடி இருக்கிறார். அத்தகைய பெரியவனாகத் தங்களுடைய மகனைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அதற்கேற்ற முறையில் இன்றைக்குத் தமிழக அரசும் கல்வி மானியத்திற்கு ஏராளமான பணத்தை ஒதுக்கி கல்வியை வளர்ப் பதிலே மிகுந்த முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதிலே





சந்தேகம் இல்லை. அப்படிப்பட்ட முயற்சிகளை வரவேற்கிறோம். எஸ். எஸ். எல். சி. வரை படிப்பவர்களுக்கு சம்பளம் இல்லையென்று ஏற்படுத்தியுள்ள நிலையை வரவேற்கிறோம். இந்த அரசாங்கம் கல்விப் பணியிலே நல்ல காரியங்களை, திட்டங்களைச் செய்து வருவதை வரவேற்பதிலே யாருக்கும் ஆட்சேபம் இல்லை. என்னைப் பொறுத்த வரையில் உண்மையிலேயே நான் அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆனால் செய்யத் தவறிய காரியங்களை எடுத்துக் காட்டுவதிலும் யாருக்கும் தயக்கம் இருக்கக்கூடாது.

"செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்."

என்று வள்ளுவர் கூறுகிறார். இந்தச் சர்க்கார், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவசரமாகச் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாமல் தள்ளிப் போட்டுக் கொண்டு போகிறார்கள். அவசரமாகச் செய்யவேண்டாத காரி யத்தை விரைவாகச் செய்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டைத்தான் புலவர் கோவிந்தன் அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் "புலவர் கோவிந்தன் அவர்கள் தான் மட்டும் புலவராகி விட்டால் போதும்; மற்றவர்கள் அந்தப் புலமை படைத்தவர்களாக வர வேண்டுமென்பதிலே அவருக்கு விருப்பம் இல்லை" என்று சொன்னார்கள். உண்மையிலேயே புலவர் கோவிந்தன் அவர் களுக்கு இருக்கிற எண்ணமெல்லாம் தன்னைப் போல, தான் பெற்ற இன்பம் இந்த வையகம் பெறவேண்டுமென்ற லட்சியத்தினால்தான் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் இந்த நாட்டிலே நன்றாகப் பரவ வேண்டும்; இந்த நாட்டிலுள்ள அத்தனை பேரும் தமிழ்ப் புலவர் களாக மாறவேண்டும்; தெருவெல்லாம் தமிழ் முழக்கம் எழவேண்டும் என்பதுதான் புலவர் கோவிந்தன் அவர்களுடைய கருத்து என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

"சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்"

என்று பாரதியார் கூறினார். அதற்கான பணியைச் செய்யவேண்டுமென்று தான் நானும் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பாரதியார் "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யவேண்டும்" என்று கூறினார். ஆனால் இன்று பள்ளிகளிலே தமிழ் முழக்கம் செய்யவே அமைச்சர் தயங்குகிறார் என்பதைக் கண்டு உண்மையிலேயே வேதனைப் படுகிறேன். பாட மொழியாகத் தமிழை ஆக்கவேண்டுமென்று 1946-ம் ஆண்டு முதலே இங்கே கிளர்ச்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது. இந்த மன்றத்திலே கூட அதே ஆண்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதை உடனடியாகக் கொண்டு வருவதில் என்ன தயக்கம் இந்த மந்திரிகளுக்கு என்று கேட்கிறேன். கல்விக்கூடங்களில் தமிழை எவ்வளவு சீக்கிரம் பாட மொழியாக கொண்டு வர முடியுமோ அப்படி கொண்டுவர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். "பாடப் புத்தகங்கள் தயாரிப்பதில் காலதாமதம் ஆகிறது; மாணவர்களும் தமிழில் படிக்கத் தயங்குகிறார்கள்" 10–30 a.m.
என்று சொல்லப்படுகிற காரணம் சரியானது என்று ஏற்றுக் கொள்ள முடியவில்லை. 1946-ல் இருந்து இதுவரை பாடப்புத்தகங்களைத் தயாரிக்க முடியவில்லை என்றால் இந்த நாட்டில் தமிழைப் பரப்ப வேண்டுமென்ற ஆசை உடைய சர்க்கார் இருக்கிறதா என்று சந்தேகம்தான் பொது மக்களுக்கு ஏற்பட இடம் இருக்கிறது. 46 எங்கே, 64 எங்கே? இவ்வளவு ஆண்டுகளாக தமிழில் பாடப்புத்தகங்களைத் தயாரிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கலாமா? தயாரிக்கவேண்டுமென்ற தீவிர எண்ணம் அரசுக்கு இருந்திருக்குமானால் நிச்சயமாக தயாரித்திருக்கலாம். அதற் கேற்ற தமிழ், ஆங்கிலம் படித்த அறிஞர்கள் இருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 15, 20 புத்தகங்கள் என்று கொண்டு வந்திருந்தாலும் கூட இதற்குள் 500 புத்தகங்களைக் கொண்டு வந்திருக்க முடியும். இதற்குள் கல்லூரிகளில் தமிழைப் பாட மொழியாக ஏற்படுத்தி இருக்க முடியும். இந்தியை விட தமிழுக்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்ற எண்ணம் இந்த நாட்டை ஆள்கிற மந்திரிகளுக்கு இல்லாத காரணத்தினால் தான் தமிழ் வளர்ச்சிக்குத் தக்க வசதி செய்து தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த சர்க்கார் மீது சுமத்துகிறேன். அதனால் தமிழ் மக்கள் பாண்டித்தியம் பெறமுடியாமல் இருக்கிறார்கள். தெருவில்

காஞ்சி மணிமொழியார்] [17th March 1964

சாதாரண மக்கள் பேசுகிற தமிழைப் பார்த்தால் அது தமிழாக இருக்
கிறதா ? வெட்கப்பட வேண்டிய நிலையில் அல்லவா அது இருக்கிறது.
சென்னைத் தமிழ் என்று சொன்னால் அதை விட மோசம். திருநெல்
வேலியில் இருந்து குறைந்து குறைந்து வந்து சென்னைக்கு வந்து
இங்கு பேசப்படும் தமிழைக் கேட்கும்போது தமிழ் அறிஞர்களுக்கு மிக்க
வேதனையாக இருக்கிறது. ஆகவே தமிழைப் பரப்புவதற்கான முயற்சிகளைச்
செய்யவேண்டும். தனித்துறையிலும், தமிழை ஆங்காங்கு சொல்லித் தர
இந்த சர்க்கார் திட்டம் வகுக்க வேண்டும். அதைச் செய்ய தவறி
இருக்கிறது. செய்ய வேண்டாத காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது.
எதை பொதுமக்கள் வெறுக்கிறார்களோ, எதை பொது மக்கள் தேவை இல்லை
என்று சொல்கிறார்களோ அந்த இந்தியைப் புகுத்த இந்தச் சர்க்கார் அதிக
அக்கறை எடுத்து அதற்காக ஏராளமாக பணத்தைச் செலவு செய்து
கொண்டிருக்கிறது. 'இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான மாணவர்கள்
இந்தியைப் படிக்க விரும்புகிறார்கள், அப்படி விரும்புகிற மாணவர்களுக்கு
அதைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டாமா என்று கேட்கிறார்கள்.
எந்த மாணவர்கள் மனு கொடுத்து இந்தி படிக்கவேண்டுமென்று
கேட்டுக்கொண்டார்கள் ? சென்ற ஆண்டு வெற்றுக் காகிதத்தை மடித்துக்
கொடுத்த மாணவர்கள் இந்த ஆண்டு பல்லாயிரக் கணக்கில் இந்தி
படிக்க தயாராக இருக்கிறார்களா? இந்தி படிக்க வேண்டுமென்று
கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று எந்த முறையில் தீர்மானம்
செய்தீர்கள் ? உங்களுக்குத் தேர்வு வேண்டாம் என்றால் நிறுத்துவது,
இல்லாவிட்டால் கட்டாயப்படுத்துவது சரியா ? கட்டாயம் இல்லை என்று
சொல்லிக்கொண்டே கட்டாயப்படுத்தி வருகிறார்கள். பள்ளிகளில் மட்டு
மன்றி உத்தியோகத் துறையிலும் இந்தி மெதுவாக நுழைந்துவிட்டது.
எங்கு சென்றாலும் உத்தியோகத்தில் இருப்பவர்கள் திண்டாடுகிறார்கள்
இந்த நிலை மாற்றப்படவேண்டும். எங்களைப் போன்ற சாதாரணமானவர்
கள் கேட்டால் " உங்களுக்கு என்ன, இது படித்தவர்கள் பிரச்னை என்று
சொல்கிறீர்கள். படித்த தமிழ்ப் பேராசிரியர்கள் கேட்டால் உங்களுக்குத்
தமிழ் வெறி என்று சொல்கிறீர்கள். பள்ளி மாணவர்கள், கல்லூரி
மாணவர்கள் கேட்டால் இது போக்கிரித்தனம், உங்களுக்குக் கல்லூரி
யிலேயே இடம் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறீர்கள்'. ஆகவே இந்தி
மொழிக்கு எவ்வளவு அக்கறையும் ஆர்வமும் காட்டுகிறீர்களோ அதை
விட பன்மடங்கு அதிகமாகத் தர வேண்டும் தமிழுக்கு. அடுத்து,
என் தொகுதியைப் பொறுத்த வரையில் இரண்டு கருத்துக்களை மட்டும்
சுருக்கமாகச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். என் தொகுதியாகிய
தியாகராயநகரில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று இருக்கிறது.
நான் கேள்விப்படுகிறேன், அங்கு சாதாரணமாக எல்லோருக்கும் சம
வாய்ப்பு அட்மிஷன்போது கிடைப்பதே இல்லை. ஆண்டுதோறும்
இப்படிப்பட்ட குறைகள் வந்து கொண்டேயிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு
பகுதியினருக்கு மட்டும்தான் அங்கு முதல் இடம் தரப்படுகிறது. அந்த
வகுப்பில் தேவையான மனுக்கள் கிடைக்காதபோதுதான் மற்றவர்களுக்கு
கொடுக்கப்படுகிறது என்று குற்றச்சாட்டு இருந்து கொண்டிருக்கிறது. இது
உண்மையா என்று அறிய என் மகளுக்காக ஒரு மனு போட்டேன்.
அட்மிஷனுக்கு என்னென்ன தகுதிகள் தேவையோ அதை விட அதிகத்
தகுதி அந்த மனுவில் இருந்தது. அங்கு சேர்க்க நான் ஆசைப்பட
வில்லை. உண்மையைத் தெரிந்து கொள்ள மட்டும்தான் மனு போட்டேன்
கடைசியில் அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. இந்த நிலைமை
அங்கிருக்கலாமா ? எல்லா மாணவர்களுக்கும், எல்லா வகுப்பைச் சார்ந்த
வர்களுக்கும் வசதி ஏற்பட வேண்டாமா என்று கேட்டுக்கொள்கிறேன்.
அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். டீச்சிங்
ஸ்டாபிற்கு ஆசிரியரல்லாத அலுவலகங்களுக்கு சில கல்லூரிகளில்
பேகமிஷன் தெரிவித்திருக்கிற சில சலுகைகள் கிடைக்கவில்லை என்று
கேள்விப்படுகிறேன். விவேகானந்தா கல்லூரியில் அதுபோன்ற நிலைமை
இருக்கிறது என்று சிலர் சொல்லியிருக்கிறார்கள். கொடுக்கவே முடியாது
என்று அதன் முதல்வர் சொல்வதாக சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி
அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு நேரம் இல்லாத காரணத்தால் என் உரையை இத்துடன்
முடித்துக் கொள்கிறேன்.



17th March 1964]

*** திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
கல்வி மானியத்தின் மீது ஒரு சில கருத்தைகளை சமர்ப்பிக்க முற்படு
கிறேன். முக்கியமாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கல்வி இலாகா
நல்ல முறையில் பணியாற்றி வருகிறது என்று அகில இந்தியாவில்
அவர்களே சொல்லி வருகிறார்கள். அந்த முறையில் டைரக்டர் அவர்களும்,
கல்வி இலாகா அமைச்சர் அவர்களும் நல்ல முறையில் கல்வியின் தரத்தை
உயர்த்துவதற்காக பல அரிய பெரிய திட்டங்களை செய்திருக்கிறார்கள்.
குறிப்பாக இப்போது ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் ரேஷியோவை மாற்றி
அமைத்திருக்கிறார்கள். இப்போது 20 மாணவர்களாக அமைத்திருப்பது
வரவேற்கத் தக்கது. அவர்கள் நல்ல முறையில் சொல்லிக் கொடுக்கக்
கூடிய அளவிற்கு ஊக்கம் அளிக்கும் முறையில் செய்திருக்கிறார்கள்.
அடுத்தபடியாக கல்வியில் ஒரு ஸ்திரமான கொள்கை வகுக்கப்பட்டு விட்டது.
ஒவ்வொரு அமைச்சரும் வருகிற முறையில் பாட திட்டங்களை மாற்றலாமே
தவிர அடிப்படை திட்டங்களை மாற்றக் கூடாது.

" Men may come and men may go, but I go on for ever."

என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதேபோல் கல்வித்
துறையில் ஆணித்தரமான, ஸ்திரமான ஒரு கொள்கை இருக்க வேண்டும்,
அந்த ஒரு முறையை நம் அமைச்சர் அவர்கள் வகுத்துக் கொடுத்திருக்
கிறார்கள். குறிப்பாக நான் ஒன்று கூற விரும்புகிறேன். பேசிக்
எஜூகேஷன் என்று வைத்துக்கொண்டு நல்ல முறையில் மாணவர்
களுக்கு திறம்பட சொல்லிக்கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வரு
கிறது. அதை மாற்றியமைத்து எங்கு பார்த்தாலும் ஒரே திட்டமாக,
ஒரே விதத்தில் ஆரம்பப் பள்ளிகள் இருக்கும்படியான முறையை ஏற்
படுத்த வேண்டும். ஆசிரியர்கள் இப்போது ஒரு யூனியனுக்குள்ளே
இருக்கும்படியான நிலை ஏற்பட்ட பிறகு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை,
சர்க்கார் மூலம் லோன் வாங்கி வீடு கட்டும் ஒரு திட்டத்தை உருவாக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல உயர்நிலைப் பள்ளிகளில்
விளையாட்டு மைதானங்கள் இல்லாமல் இருக்கிறது. சில வாடகைக்கு
இருக்கின்றன. சிலயிடங்களில் அவர்கள் எங்கேயோ மறைத்து வைத்திருக்
கிறார்கள். ஆகவே எப்படி பள்ளிக்கு கட்டடம் வேண்டுமோ அதேபோல்
விளையாட்டு மைதானமும் இருப்பதற்காக கடனுவது கொடுத்து அவற்றை
ஏற்படுத்த வேண்டும். இன்று 3-வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் சொல்லிக்
கொடுக்கும் ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை நன்கு
பயன்படுத்திக்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதே
நேரத்தில் ஒரு ஆரம்பப் பள்ளியில் நான்கு ஆசிரியர்களுக்கு ஒரு செகண்டரி
கிரேட் ஆசிரியர் இருக்கலாம் என்ற நிலை இருந்து வருகிறது. ஜீ.ஓ 210,
1140 என்பதின்கீழ் நான்கு ஆசிரியர்கள் வேலை செய்தால் ஒரு செகண்டரி
கிரேட் ஆசிரியர் வேலை செய்யலாம் என்றிருக்கிறது. சென்னையில்
குறிப்பாக ராமகிருஷ்ண மிஷன் நடத்துகிற பள்ளியை எடுத்துப் பார்க்கும்
போது 3-வது வகுப்பில் 3 டிவிஷன்கள் இருக்கின்றன. 4-வது வகுப்பில்
மூன்று செக்ஷன்கள் இருக்கின்றன. 5-வது வகுப்பில் இரண்டு செக்
ஷன்கள் இருக்கின்றன. ஆக எட்டு வகுப்புகள் இருக்கின்றன. அதற்கு
ஒரு செகண்டரி கிரேட் ஆசிரியர்தான் இருக்கிற நிலை இருக்கிறது. அப்படிப்
பார்க்கும்போது வாரத்திற்கு 48 பீரியட்ஸ் வருகின்றன. ஒரு ஆசிரியர்
கிட்டத்தட்ட 35 பீரியட்டுக்கு போகலாம். பாக்கி 13 வகுப்புகளை எப்படி
சொல்லிக் கொடுப்பது என்ற நிலை இருக்கிறது. ஏதோ அமைப்பில்
"ப்ளா" ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே அதைக்
கவனித்து மாணவர்களுக்கு தக்கவாறு 3-வது வகுப்பிலிருந்து 5-வது
வகுப்பு வரையில் போதுமான செகண்டரி கிரேட் ஆசிரியர்களை வைக்கும்படி
கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும்
சீருடை முறை இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். இப்போது
மாணவர்களுக்கு சீருடை அணிய வேண்டும் என்று நாம் சொல்லு
கின்றோம். இதேபோன்று ஆசிரியர்களுக்கு தனியாக ஒரு உடை அணிய
வேண்டும் என்றிருந்தால், அதன் காரணமாக மாணவர்கள் நல்ல முறை
யில் ஆசிரியர்கள் வருகிறார்கள் என்றால் நல்ல மதிப்பும், எண்ணமும்

உண்டாகும். இன்றையதினம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்
வேற்றுமை தெரியாத நிலை தான் இருந்துகொண்டிருக்கிறது. பிரசிடென்ஸி
காலேஜில் ஆசிரியர்கள் இன்னின்ன டிரஸ் தான் போட்டுக்கொண்டு
வரவேண்டும் என்று இருந்தது. அந்த முறையில் ஆசிரியர்கள் ஒரே
விதமான உடையில் தான் செல்ல வேண்டும் என்ற முறையை ஏற்படுத்து
வதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

சித்தவைத்திய கல்லூரியைப் பொறுத்தவரையில், இம்மாதிரி கல்லூரி
ஒன்றை ஏற்படுத்தப்போவதாக சொல்லப்பட்டது. அதற்கு இன்னும்
போதிய அளவு ஆக்கம் அளிக்கப்பட்டதாக தெரியவில்லை. இந்த வைத்திய
படிப்பை படிப்பதற்கு மாணவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே
தமிழ் வைத்தியம் மறைந்து விடாத முறையில் இந்தக் கல்லூரியை
ஏற்படுத்துவதற்கு வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் தரத்தை உயர்த்துவதற்காக, ரி·.பரஷர் கோர்ஸ் என்று
தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதை நல்ல முறையில் ஆசிரியர்கள்
பயன்படுத்தி வருகிறார்கள். இப்போதுள்ள முறையில் ஹையர் கிரேடை
எடுத்துவிட்டு செக்கண்டரி கிரேட் ஆசிரியர்களை வைக்க வேண்டும் என்று
சொல்லப்பட்டு வருகிறது. இது நல்ல முறை தான். அதோடு ஆசிரியர்
களுக்கு பிரைஸ் கொடுக்கின்ற முறை வைக்கப்பட்டிருக்கிறது. இதையும்
நல்ல முறையில் அவர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அதோடு
பென்ஷன் ஸ்கீம் வந்திருப்பதும், அவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்
பதற்கு வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே இன்றைக்கு
ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய வசதிகளை எல்லாம் பார்த்தால் நிச்சயமாக
ஆசிரியர்கள் நம்மை பாராட்டாமல் இருக்க முடியாது. எற்கனவே வட
இந்தியாவில் ஒரு கல்வி மகாநாடு நடைபெற்றது. அதில் அப்போது
கல்வி அமைச்சராக இருந்த திரு. சுப்ரமணியம் அவர்கள் போயிருந்
தார்கள். அப்போது இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய கல்வியி
னுடைய நிலைமையையும், ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம்,
வசதிகள் இவைகளைப்பற்றி தெரிவித்த போது, அங்குள்ளவர்கள் நமது
அமைச்சர் அவர்களைப் பார்த்து, எப்படி இவைகளை எல்லாம் உங்களுக்கு
கொடுக்க முடிகிறது, தயவு செய்து இதையெல்லாம் இங்கு சொல்லிவிடா
தீர்கள், அப்படி சொன்னால் அதே போன்று எங்களுக்கும் வேண்டும்
என்று இங்குள்ளவர்கள் ஸ்ட்ரைக் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள் என்று
சொன்னதாக, அப்போது சொன்னார்கள். அந்த அளவுக்கு ஆசிரியர்
களுக்கு நல்ல முறையில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

உடற்பயிற்சி ஆசிரியர்கள், 400-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருந்தால்
இரண்டு பேர் போடவேண்டும். அவற்றில் ஒருவர் ஹையர் கிரேடாக போட
வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஹையர் கிரேட் உடற் பயிற்சி
ஆசிரியர்களுக்கும் சாதாரண உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் 10 ரூபாய்
தான் வித்தியாசம் இருக்கிறது. இதன் காரணமாக ஹையர் கிரேட்
ஆசிரியர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இதனால் நாங்கள் வருடா
வருடம் எக்ஸ்ம்ஷன் வாங்கிக்கொண்டே இருக்கிறோம். ஆகவே இவர்க
ளுடைய சம்பளத்தில் 25 ரூபாய் அளவுக்கு வித்தியாசம் இருந்தால்,
இதில் அட்ராக்ட்டிவ் சம்பளம் இருக்கிறது என்று எண்ணி மற்றவர்களும்
இந்த பயிற்சிக்கு போவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று நினைக்கிறேன்.
ஆகவே இதைப்பற்றியும் அரசாங்கம் ஆலோசனை செய்யவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

*** திரு. சி. இராமலிங்கம் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, 1964-65-ம்
ஆண்டுக்கான கல்வி மான்யக் கோரிக்கையை ஆதரித்து பொதுவான ஒரு
சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இப்போது வழக்கம் போல்
கல்விக்காக நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் ஒரு பெரிய
நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள். கல்விக்காக நமது அரசாங்கம் எப்போதும்
முதலிடம் கொடுத்து வருகிறது. அதை ஒட்டியே நிதியையும் ஒதுக்கி
யிருப்பது பாராட்டத்தக்கது. அதிலும் குறிப்பாக 11-வது வகுப்பு வரை





இலவசக் கல்வி கொடுப்பது, என்கின்ற புதுமையான திட்டத்தை தைரிய
மான திட்டத்தை கொண்டு வந்ததை நாம் எல்லோரும் பாராட்ட கடமைப்
பட்டிருக்கிறோம்.

“ கல்வி சிறந்த தமிழ்நாடு, உயர்
கம்பன் பிறந்த தமிழ்நாடு,
பல்விதமாயின சாத்திரத்தின் மணம்,
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு...... ”

என்று பாரதியார் அன்றைய தினமே சொல்லியிருக்கிறார். எங்கு
பார்த்தாலும், தமிழ் நாட்டில் கல்வியின் நிலையும் தரமும் உயர்ந்திருக்
கிறது. அப்போதைய காலத்திலும் சரி, இப்போதும் சரி, வெள்ளைக்காரர்கள்
ஆண்டு கொண்டிருந்த காலத்தில், நாம் அடிமைகளாக இருந்த நேரத்தி
லும் நமது கல்வியின் தரமோ, நிலையோ குறைந்துவிடவில்லை. இப்போது
குறிப்பாக அரசாங்கம் மிகவும் தைரியமான, புதுமையான திட்டங்களை
எல்லாம் கொண்டு வந்திருக்கிறது. கல்வியினுடைய தரத்தைப்பற்றி, கல்வி
யை உயர்த்துவதற்காக நமது அரசாங்கம் அரும்பாடுபட்டு வருகிறது. இதை
நாம் மறந்துவிடக்கூடாது. பொதுக்கல்வி நாட்டில் பெருக வேண்டும்
என்ற எண்ணத்தில் நமது வருமானத்தில் சரி பாதியை ஆரம்பக் கல்விக்
காக ஒதுக்குகின்றார்கள் என்று சொன்னால் அதில் நாம் எவ்வளவு
அக்கரையோடு இருக்கிறோம் என்பதை நாம் சொல்லி தெரியவேண்டிய
தில்லை. எல்லோருக்கும் இலவசக் கல்வி, ஏழை மாணவர்களுக்கு
இலவச உணவு, இலவச உடை, முதலிய சீர்திருத்தமான திட்டங்களை
எல்லாம் கொண்டு வந்து நாம் கல்வியை பெருக்கிக்கொண்டிருக்கிறோம்.
வெளிநாட்டுக்காரர்கள் நம் கல்வியைப் பார்க்கின்ற நேரத்தில், அதை
நல்ல முறையில் பாராட்டுகிறார்கள். ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரை
குறிப்பாக பஞ்சாயத்து யூனியன்களில் ஆரம்பக் கல்வியை ஒப்படைத்து
இருக்கிறோம். அதோடு, இதற்கான பள்ளிக்கூடங்களை எல்லாம் பராமரிக்
கின்ற விஷயமும் நல்ல முறையில் இருந்து வருகிறது. அதிலும்
குறிப்பாக ஆங்காங்கு உள்ளவர்கள் உடனுக்குடன் ஆசிரியர்களை நியமிக்க
வேண்டிய நிலைமையும் இருக்கிறது. இதிலுள்ள ஒரு சிறிய குறை என்ன
வென்றால், ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை நியமனம் செய்வதில், அந்த
அதிகாரத்தை இப்போது பஞ்சாயத்து யூனியனில் ஒப்படைத்து இருக்
கிறோம். இதன் காரணமாக பாரபட்சம் ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கும்.
ஆகவே அந்தந்த ஜில்லாவாரியாக ஒரு சர்விஸ் கமிஷனை நியமித்து அந்தக்
கமிஷன் மூலமாக ஆரிசியர்களையும் மற்றவர்களையும் நியமனம் செய்வ
தற்கு ஏற்பாடு செய்தால் எந்தவிதமான ஊழலும், பாரபட்சமும் ஏற்படு
வதற்கு வழியிராது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தாற்போல், ஆரம்பக கல்வியில் சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு
கல்வியினுடைய தரத்தில் நல்ல ஊக்கம் இருக்க வேண்டும். பிளாட்டோ
சொல்லியிருப்பது என்னவென்றால், சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு கல்வி
புகட்டும்போது, இரண்டு வகையான அம்சங்களை கையாளவேண்டும், ஜிம்
னாஸ்டிக்ஸ், மியூஸிக், அதாவது உடற்பயிற்சி விளையாட்டும், பாட்டும் இருக்க
வேண்டியது மிகமிக தேவை என்று சொல்லி யிருக்கிறார்கள். அதை
தான் பாரதியார் அவர்களும்......

“ காலையில் எழுந்ததும் படிப்பு, பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு,
மாலை முழுதும் விளையாட்டு, என்று நீ,
பழக்கப்படுத்திக்கொள் பாப்பா—” என்றுசொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே அரசாங்கம் இதில் அதிக அக்கரை காட்டவேண்டும். ஆரம்பக்
கல்வியை புகட்டுகின்ற நேரத்தில் நாட்டினுடைய நிலவரத்தையும் நாட்டி
னுடைய எண்ணத்தையும் கற்பித்துக் கொடுக்க வேண்டும். காந்தியடிகள்
கண்டு கொண்டிருந்த கனவை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள
வேண்டும். நமது நிபுணர்கள் வெளிநாட்டுக்குப் போகும்போது, அங்கு
பார்த்தவைகளை எல்லாம் இங்கு கொண்டு வந்து அமல் நடத்த வேண்டும்
என்று ஆசைப்படுகிறார்கள். அதைவிட, நமது நாட்டுப் பண்புக்கும், நமது
நாட்டினுடைய கௌரவத்திற்கும் ஏற்ற வகையில் கல்வித் திட்டங்களைப்
புகுத்த வேண்டும். அந்த முறையில் பல நல்ல திட்டங்களை உருவாக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நம்முடைய மாணவர்களுக்கு ஒழுக்கமும், கட்டுப்பாடும் சற்று அதிகமாக இருப்பதற்கு வழி ஏற்படுத்த வேண்டும். கல்வியில் நல்ல ஒழுக்கமும் கட்டுப்பாடும் இருந்தால் ஒழிய நம்முடைய கல்வி நல்லதாக இருக்க முடியாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இல்லாவிட்டால், நம்முடைய கல்வி வெறும் ' வரட்டு கல்வியாகப் போய் விடும். மேலை நாடுகளில் எல்லாம் கட்டுப்பாடும், ஒழுக்கமும் சரியாக இல்லாததின் காரணமாகத்தான் பல பிற்கால சந்ததிகள் பாதிக்கப்படுகிறார்கள். அந்த மாதிரி நமது நாட்டில் இல்லாதவாறு, நல்ல கட்டுப்பாடும், ஒழுக்கமும் இருக்க வேண்டும். இளமையில் கற்கின்ற கல்வி நல்ல முறையில் இருக்கவேண்டும்.

" வாலிபம் தனில் கற்கவேண்டும்,
கற்ற வழியில் நிற்கவேண்டும்...... "

அந்த முறையில் ஒழுக்கத்திற்கும், கட்டுப்பாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியாகிய முசிறியில் பெண்களுக்கான உயர்நிலைப்பள்ளி ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. செ. மாதவன் :** மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்களே, கடந்த சில ஆண்டுகளாக கல்வித் துறையில் மத்திய சர்க்கார் தங்கள் ஆதிக்கத்தை கொண்டு வருவதற்காக முயற்சிப்பதை நாம் எல்லோரும் அறிவோம். எனக்குத் தெரிந்த வரைக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதை எதிர்த்து வருவதாகவும் நான் உணருகின்றேன். அப்படிப்பட்ட ஒரு கருத்து மத்திய சர்க்காருக்கு எப்படி தோன்றியது என்று தான் எனக்குப் புரியவில்லை. ஒருமைப்பாடு என்ற கருத்தில் இதையும் உள்ளிட்டு, கல்வித் துறையிலும் மத்திய சர்க்கார் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்ற கருத்தை நம்முடைய அரசாங்கம் மிக வன்மையாக எதிர்க்கவேண்டும் என்பதை நான் வற்புறுத்திக்கூற கடமைப்பட்டுள்ளேன். இதற்காக மத்திய சர்க்கார் ஒரு சட்டமே கொண்டு வரக்கூடிய அளவிற்கோ அல்லது அரசியல் சட்டத்தையே திருத்தவேண்டுமென்ற எண்ணத்தில் இருக்குமானால் அதை நம் மாநில அரசாங்கம் தீவிரமாக எதிர்க்கவேண்டும். அதற்கு எதிர்க்கட்சியினர் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கல்விக்காக தமிழக மாநில அரசு ஏராளமான பணத்தைச் செலவிட திட்டங்களை வைத்திருக்கிறது, ஆசை கொண்டிருக்கிறது என்பதில் எள்ளளவுகூட எங்களுக்குச் சந்தேகமில்லை. அதற்காக நாங்கள் எங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். ஆனால் கல்வியின் தரத்தை நிலைநிறுத்த இந்த மாநில அரசு தவறி விட்டது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசாங்கத்தில் அமைச்சர்களும், அதிகாரிகளும் கொள்கைக் குழப்பத்தை ஏற்படுத்தி வரும் காரணத்தினால் தான் கல்வியின் தரம் குறைந்து விட்டது என்று நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் முன்னாள் அமைச்சராக, கல்வி அமைச்சராக இருந்தவர் கூட, வட மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, தமிழகத்தில் கல்வியின் தரம் தீவிரமான அளவில் குறைந்து வருகிறது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார். குறிப்பாக தொழில் கல்வியில் நம் மாநிலம் பிற மாநிலங்களுடன் போட்டி போட முடியாத அளவுக்கு நம் மாணவர்கள் அவதியுறுகிறார்கள் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் கொள்கைக் குழப்பத்தினால், பாடத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள குழப்பத்தினால்தான் தரம் குறைந்துவிட்டது என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

செகண்டரி கல்வி முறையில் இதைத் தனியாக ஒரு கமிஷனிடத்தில் கொடுக்கவேண்டும் என்ற கருத்தை இந்த மன்றத்தில் பல முறை வற்புறுத்தி வந்திருக்கிறோம். அரசாங்கத் தலையீடு இல்லாமல், மற்றவர்கள் தலையீடு இல்லாமல் கொள்கையை வகுத்து, அந்தக் கொள்கையை நல்லமுறையில் நிலைநாட்ட தன்னாட்சி பெற்ற கமிஷன் இடத்தில் இந்த செகண்டரிக் கல்வியை ஒப்படைக்கவேண்டும் என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.



இந்தி பிரச்னையைப் பற்றி, திராவிட முன்னேற்றக் கழகம் இதை துருப்புச் சீட்டாக வைத்திருக்கிறது என்று ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் வர்ணித்தார். ஆனால் எங்களைப் பொறுத்த அளவிற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை இந்தி கூடாது என்பதை நாங்கள் தெட்டத் தெளிவாக கூறியிருக்கிறோம். ஆனால் இந்த அரசாங்கம் தன்னுடைய கொள்கையை மக்களிடமிருந்து மறைக்கப் பார்க்கிறது என்கிற குற்றச்சாட்டை இங்கே முன்னால் வைக்க ஆசைப்படுகிறேன். சில நாள் முன்னால் இந்தி தேர்வு வேண்டாம் என்ற கொள்கையையும், பின்னால் தேர்வு வேண்டும் என்ற கொள்கையையும், மாநில அரசு இப்படி மாறிப் மாறிப் பேசும் சூழ்நிலை எதற்காக ஏற்பட்டது ? ஒரு பக்கம் இந்த அரசு மத்திய அரசாங்கத்தைக் கண்டு பயப்படுகிறது, இன்னொரு பக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டு பயப்படுகிறது. பதவியில் இருக்கவேண்டும், ஆட்சியில் இருக்கவேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போல இந்திப் பிரச்சினைப் பற்றி தெளிவாகக் கூற பயப்படுகிறது என்ற குற்றச்சாட்டைக் கூற ஆசைப்படுகிறேன். இந்தி படித்தால்தான் எதிர் கால மக்களுக்கு அரசாங்கத்தில் வேலை என்று மத்திய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையை தமிழக அரசு தெளிவாக மக்களுக்கு அறிவித்துவிட வேண்டுமென்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பள்ளி இறுதிச் சான்றிதழ் கொடுப்பதிலே பொய் சான்றிதழ் கொடுப்பதற்கு தனியாக ஒரு இயக்கம் இருப்பதை நாங்கள் இந்த மன்றத்தில் சுட்டிக் காட்டினோம். அதை முதல் அமைச்சர் அவர்கள் அலட்சியமாகக் கருதினார்கள். குறிப்பிட்ட ஆண்டில் தான் பொய் சான்றிதழ் கொடுக்கப்பட்டதாக இங்கே கூறினார்கள். ஆனால் 1959-ம் ஆண்டே இப்படிப்பட்ட சர்ட்டிபிகேட்டுகள் கொடுக்கக்கூடிய நிலை இந்த மாநிலத்தில் இருந்து வந்திருக்கிறது என்பதை அரசாங்கமே ஒப்புக்கொண்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் 1959-ம் ஆண்டிலிருந்து பொய் சர்ட்டிஃபிகேட்டுகள் பெற்றிருப்பதாகச் சொல்லி சில சர்ட்டிஃபிகேட்டுகளை இந்த அரசாங்கம் கைப்பற்றியிருக்கிறது. அது பற்றி இன்று வரையில் எந்த வித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. கல்வி இயக்குநர் அலுவலகத்தில் இப்படிப்பட்ட ஊழல்களுக்காக இரண்டொரு சிப்பந்திகளை வேலையிலிருந்து நீக்கி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு வரையில் இந்த நான்கு ஆண்டுகளாக எந்த வித வழக்கும் தொடரமுடியாத கையாலாகாத நிலை நிர்வாகத்தில் இருக்கிறது என்று அமைச்சர் உணர்ந்து, சாதாரண மாணவர்கள், என்றைக்கோ படித்தவர்கள் கூட பொய் சர்டிபிகேட்டுகள் வழங்கும் இயக்கம் அனுமதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் கஷ்டப்படுகிறார்கள் என்பதை மாநில அரசு மனதில் கொண்டு உடனடியாக இதற்குத் தீர்வு காணவேண்டும். யார் யார் பொய் சர்ட்டிஃபிகேட்டுகள் கொடுத்தார்கள், எந்த ஆண்டிலிருந்து கொடுக்கப்பட்டது, 1959-ல் கொடுக்கப்பட்ட சர்ட்டிஃபிகேட்டு இன்றைக்கு வரையில் பொய் சர்ட்டிஃபிகேட் தானா அல்லது உண்மையான சான்றிதழ் தானா என்று நிர்ணயிக்க முடியாத சூழ்நிலை அரசாங்கத்தில் இருப்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செயலாளர் திரு. இராமலிங்கம் பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி பற்றி ஆய்வுரை நிகழ்த்தினார்கள். இதைப் பற்றி நாங்களும் அடிக்கடி கூறியிருக்கிறோம். பஞ்சாயத்து யூனியனிடத்தில் கல்வித் திட்டம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் கொள்கைக் குழப்பம் இன்றைக்கு நிலவி வருகிறது. அதைச் சரிப்படுத்த அரசாங்கம் முன் வரவில்லை. ஒரு பக்கம் கல்வி இலாகா ஆசிரியர்களைத் துன்புறுத்துகிறது. இன்னொரு பக்கம் பஞ்சாயத்து யூனியன் நிர்வாக அதிகாரிகள் துன்புறுத்தப்படுகிறார்கள். இந்த நிலை இருக்கிறது என்றால், இது கொடுமையானது. அவர்கள் ஆசிரியர்களை நியமிப்பதைப் பற்றி ஆட்சேபணையில்லை. நியமிக்கப்பட்ட ஆசிரியர்களை பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளும், தலைவர்களும் எப்படிப்பட்ட கொடுமைகளுக்கு ஆளாக்குகிறார்கள் மாற்றுதல் மூலமாக, ட்ரான்ஸ்ஃபர் செய்வது மூலமாக என்று பல முறை எடுத்துக் காட்டினோம். இன்றைக்குக் கூட எனக்கு ஒரு கடிதம்

வந்திருக்கிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி என்ற பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில், கல்வி அதிகாரி ஆசிரியர்களைக் கூட்டி மாநாடு போடுகிறார். ஆசிரியர்கள் செல்லுகிறார்கள். மறுநாள் பஞ்சாயத்து யூனி யன் கமிஷனர், யார் யார் மாநாட்டுக்குச் சென்றார்களோ அவர்களுடைய தலைமை ஆசிரியர்களுக்கு அபராதம் விதித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை எப்படி உருவாகிறது? யார் யார் பள்ளிகளை மேற்பார்க்கவேண்டும், யார் யாருக்கு மேற்பார்வை கடமை இருக்கிறது என்பதைத் தெளிவு படுத்தவில்லை. ஒரு இடத்தில் டெபுடி இன்ஸ்பெகடர் ஆஃப் ஸ்கூல்ஸ் வருகிறார். அதே பள்ளிக்கு கமிஷனர் தன் அதிகாரத்தைப் பிரயோகிக் கிறார். என்னுடைய தொகுதியில் சிங்கம்புணரி பஞ்சாயத்து யூனியன் என்று இருக்கிறது. திறமையாக நடைபெற்றதாக முதல் அமைச்சர் ஒரு சமயத்தில் சட்ட மன்றத்தில் கூறினார்கள். அந்த பஞ்சாயத்து யூனியனில் இருக்கிற பள்ளியிலே டெபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் ஒரு உத்தரவு பிறப்பிக்கிறார், ஒரு மாணவன் பள்ளியிலிருந்து வெளியேறவேண்டும், அதற்காக சர்டிஃபிகேட்டு கொடுத்து விடு என்று கல்வி இலாகா உத்தரவு போடுகிறது. யூனியன் அதிகாரி தான் எனக்கு அதிகாரி, நீங்கள் கூறுவதற்கு அதிகாரம் இல்லை என்று எழுத்து பூர்வமாக தலைமை ஆசிரியர் கூறியிருக்கிறார். விளைவு, மாணவன் அந்த ஆண்டுப் படிப்பை எந்தப் பள்ளியிலும் படிக்காத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இதைப் பற்றி நன்றாகச் சிந்தித்து பஞ்சாயத்து யூனியனுக்கும் தொடக்கப் பள்ளிக்கும் உள்ள தொடர்பு என்னென்ன, அவைகளுக்குள் உள்ள சம்பந்தம் என்னென்ன என்பதை எடுத்துக் காட்டவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உடற் பயிற்சி லோயர் கிரேடு படிப்பவர்கள் தான் இன்றைக்கு 90 சதவீதம் பயிற்சிப் பள்ளியில் படிக்கிறார்கள். அவர்களுக்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் இன்க்ரிமெண்ட் கிடையாது, ப்ரோபேஷன் டிக்ளரேஷன் கிடையாது, ப்ராவிடெண்ட் பண்ட் கிடையாது. இப்படி ஒன்றும் கொடுக்காத நிலையைக் கல்வி இயக்குனர் ஆதரிக்கிறார். ராமநாதபுரம் மாவட்டத்தில் இருப்பது இந்த நாட்டுக்குத் தேவை என்று கூறுகிறார். அவர்கள் நிலை யைப் பொறுத்த வரையில் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரவேண்டும். லோயர் கிரேடு ஆசிரியர் இந்த மாநிலத்துக்குத் தேவையா இல்லையா? மற்ற மாநிலங்களைப் போல இரண்டு கிரேடுகள் வைத்து இந்த உடற் பயிற்சி நிர்வாகத்தை நடத்த முடியுமா என்பதை அமைச்சர் சிந்தித்து உடனடியாக முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதேபோல ஜூனியர் பேசிக் கிரேட் ட்ரெயினிங் படிக்கும் ஆசிரியர்கள். இதைப் பற்றி அரசாங்கம் அடிக்கடி குழப்ப நிலையை உண்டாக்குகிறது. சென்ற ஆண்டு ஒரு அறிக்கை இப்படிப்பட்ட பயிற்சி வேண்டாம் என்று மறுபடியும் ஒரு அறிக்கை இந்த ஆண்டு மட்டும் இருக்கட்டும், அடுத்த ஆண்டிலிருந்து வேண்டாம் என்று. சமீபத்தில் ஒரு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதிலே ஜூனியர் பேசிக் கிரேடு ஆசிரியருக்கு 1—3—1964-லிருந்து உதவிச் சம்பளம் கொடுக்காதீர்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. திட்டவட்டமான முடிவுக்கு வருவதற்கு முன் கல்வி இலா காவிலிருந்து அல்லது அரசாங்கத்திலிருந்து குழப்பமான அறிக்கை சென் றால் மாணவர்கள் நிலைமை எப்படி இருக்கும் என்று அதையும் சிந்தித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** கனம் சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் நாட்டில் நல்ல விதமாக, பொருளாதார முன்னேற் றம் வரவேண்டுமென்றால் அதற்கு அடிப்படையான தேவை கல்வி. அதற்காகத் தான் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து, கல்வி அறிவே இல்லாதவன் இனிமேல் இருக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு அரசாங்கமானது எல்லாக் குழந்தைகளும் படிக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு நல்ல விதத்தில் பணத்தை ஒதுக்கி மக்கள் குறைகளைத் தீர்த்து வருகிறது.





இந்த அடிப்படையில் நம்முடைய நாட்டில் வருஷம் ஆக ஆக, ஒவ் வொரு ஆண்டும் அதிகப்படியான மாணவர்கள், மாணவிகள் படித்து விட்டு, இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் வேலைத் தேடிக்கொள்ளக் கூடிய ஒரு நிலைமை கூட இல்லாமல் கொஞ்சம் கஷ்டப்படுகிற சூழ்நிலை கூட ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது கட்டாயக் கல்வி முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். எல்லோரும் படிக்கவேண்டும் என்ற நிலைமை வந்திருக்கும்பொழுது, அவர்கள் பல மகாணங்களுக்குச் சென்று வேலை பார்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அன்னிய நாடுகளுக்குக்கூட சென்று வேலை பார்க்கக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். அதுவும் நாம் வரவேற்கக்கூடிய சூழ்நிலையாக இருந்துக்கொண்டிருக்கிறது. ஆகையினால் தமிழ் மட்டும் படித்தால்போதும் என்று சொல்ல முடியாது.

தமிழுக்கு எவ்வளவு தூரம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமோ அவ்வளவு தூரம் முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். 1947 1948-ல் சட்டமன்றத்தை, நாங்கள் படிக்கும்பொழுது வந்து பார்வை யிட்டிருக்கிறோம். அப்பொழுதெல்லாம் தமிழிலே பேசினால் அந்த அள வுக்கு ஒன்றும் நல்ல முறையாக இங்கே தெரியாது. பேசுபவர்களெல்லாம் ஆங்கிலத்தில் தான் பேச வேண்டும். எல்லா நடவடிக்கைகளும் ஆங் கிலத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலை 1946, 1947-ல் எல்லாம் இருந்துக் கொண்டிருந்தது. ஆனால், இன்றைக்கு தமிழுக்கு முக்கியத்துவம் கொடுச் கக்கூடிய அளவிலே, அதற்கு ஒரு பெரிய முக்கியத்துவம் கொடுத்து சகலத் தையும் தமிழிலே நடத்தவேண்டும், எல்லா நடவடிக்கைகளும் தமிழிலே நடத்தவேண்டும் என்ற ஒரு நல்ல சூழ்நிலையை நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். உண்மையிலேயே தமிழை பாராட்டக் கூடியவர்கள் மனமாற வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமை யில் இன்றைக்கு எல்லோரும் படிக்கிறார்கள் என்ற ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டும் என்றால் நிச்சயம் பிற மாகாணங்களுக்குச் சென்று வேலை பார்க்கவேண்டிய நிலையும் இருக்கிறது. நம்முடைய மாநிலத் தைப் பொறுத்த அளவிலே இந்தி கட்டாயம் இல்லாவிட்டாலும், மாணவர் கள் அதை விரும்பி படிக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மற்ற மகாணங்களுக்குச் சென்று வேலை பார்க்கவேண்டும், நல்ல ஊதியத் தைப் பெறவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தான் நாம் கட்டாயப் படுத்தாவிட்டாலும், ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்தியை நல்ல முறையில் படித்துக்கொண்டு வருகிறார்கள். அதை நாம் வரவேற்கவேண் டும். அதிலும் குறிப்பாக, பல லட்சகணக்கான மக்களுக்கு பிரதிநிதியாக இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தி படிக்கக்கூடிய மாணவர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும், கொடுக்கவேண்டும். பிற மகாணங் களில் சென்று தமிழ் மகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் நல்ல முறையில் திறமையாக வேலை செய்கிறார்கள் என்று அவர்களை பாராட்டக் கூடிய, ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கக்கூடிய ஒரு சூழ் நிலையை மறந்து, ஏதோ இந்தியை திணிக்கிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல. பதினெட்டும் கற்றவன் பண்டிதன் ஆவான் என்று அழகாக கூறியிருக்கிறார்கள். பல மொழிகளைப் படிக்கவேண்டும். அதைவிட்டு தமிழை மட்டும் படிக்கவேண்டும், தமிழ் ஒன்றை மட்டும் படிக்கவேண்டும், அது தான் நம் நாட்டிற்குத் தேவை, ஆகையினால் தமிழ் படிக்கவேண்டும் என்று கூறி, ஏதோ கண்ணைக் குருடாக்கிவிட்டு கண்ணாடி போடுவது என்றெல்லாம் எதிர்க்கட்சியினர் பேசுகிறார்கள். அம்மாதிரி பேசுவது நாட்டு மாணவர்களுடைய முன்னேற்றத்தை தடுக்கக்கூடிய ஒன்றாகும். அவர்கள் நல்ல திறமையுடன் அறிவு பெற்று நல்ல முன்னேற்றம் அடைவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடிய அளவிலே தான் அவர்கள் வாதம் செய்கிறார்கள். அது மிகவும் வேதனை தாக்கூடிய விஷயம்.

இரண்டாந்தர குடி மகனாக ஆகிவிட்டார்கள் என்று ஒரு அங்கத்தினர் கூறினார். தமிழ் மகாணத்திலிருந்து பிற மகாணங்களுக்குச சென்றிருக் கிற என்ஜினியர்களை அங்கிருக்கிற நிபுணர்கள் பார்த்து வாயார வாழ்த்து கிறார்கள், அவர்களுடைய வேலைத் திறனை மெச்சுகிறார்கள். இதையெல் லாம் விட்டுவிட்டு, ஏதோ இந்தி, இந்தி என்று சொல்லி மாணவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கவேண்டாம் என்று மாற்றுக் கட்சி யினரை கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி எ. எஸ். பொன்னம்மாள்] [17th March 1964

அப்புறம் ஒரு அங்கத்தினர் பேசும்பொழுது, ஒரு நிரந்தரம் இல்லாத
11-00 a.m. கொள்கை, தினம் ஒரு கொள்கை என்றெல்லாம் பேசினார்கள். நம்மு டைய நாடு ஜனநாயக நாடு. சர்வாதிகார நாடு என்றால், அமைச்சர்கள் நினைக்கிறபடி பேப்பரில் போட்டு சட்டம் செய்து, இந்த சட்ட மன்றத்தில் அதை பாஸ் செய்து, இது தான் இருக்கவேண்டும் என்று சொல்லிவிடலாம். ஆனால் இப்பொழுது நிலைமை அப்படி இல்லை. காலத்திற்கேற்ப, போக்குக்குத் தகுந்தபடி, மக்கள் எண்ணத்திற்கு ஏற்றபடி கொள்கையை மாற்றிக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையில்தான் ஜனநாயக அமைப்பு அமைந் திருக்கிறது. அந்த அடிப்படையில்தான், கல்வித் தரத்தை எப்படி உயர்த்தலாம், ஆதாரக் கல்வி முறையை கொண்டுவரலாமா, ஆதாரக் கல்வியைக் கொண்டுவந்தால் நன்றாக இருக்குமா, மற்ற கல்வி முறையாக இருந்தால் நன்றாக இருக்குமா என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்து பார்த்து, காலப் போக்கிற்கு ஏற்றவாறு கொள்கையை திருத்தி அமைக்கக் கூடிய சூழ்நிலையில் தான் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். கல்வி நல்ல முறையில் அமல்படுத்தப்படுகிறதா, சரிவர கல்வித் திட்டம் நிறைவேறிவருகிறதா என்றெல்லாம் அவ்வப்பொழுது ஆராய்ந்து பார்த்து தேவையிருந்தால் அதை மாற்றி அமைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் தான் அமைச்சர் அவையும், சட்ட மன்றமும் இருந்துக்கொண்டிருக்கிறது. மக்கள் எண்ணத்திற்கு ஏற்றவாறு சட்டமன்றத்தில் கொள்கையை மாற்றி அமைக் கக்கூடிய சூழ்நிலை இருந்துக்கொண்டிருக்கிறது. (இந்த சமயத்தில் கனம் உதவி சபாநாயகர் மணி அடித்தார்.) இன்னும் விஷயத்திற்கே வர வில்லையே, இன்னும் சில நிமிஷங்களில் முடித்துவிடுகிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில், நல்ல முறையிலே 30,000-க் கும் மேற்பட்ட ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. அப்படிப் படிக்கக்கூடிய நிலைமையில் ஆதாரக் கல்வி என்று வைத்து சில பள்ளிகளில் ராட்டைகள் வைத்திருக்கிறோம். அங்கெல்லாம் ராட்டைகள் வைக்கக்கூடிய ஒரு சூழ் நிலை இல்லை. கரையான் பிடிக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்களிடம் நான் சொல்லிக்கொள்வது என்னவென்றால், ராட்டைகள் வைப்பதற்கு தகுந்த இடம் வேண்டும். ராட்டைகள் நல்ல முறையில் இயங்கட்டும். ஆனால், அதற்கு வேண்டிய முழுக் கட்ட வசதி எல்லா இடங்களிலும் செய்துகொடுத்து, எல்லா இடங்களிலும் கட்டடம் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன்களிலே ஆசிரியர்களையெல்லாம் அவர்களே நியமித்துக்கொள்ளுகிறார்கள். உதாரணமாக, நான் ஒரு யூனியன் சேர் மனாக இருந்தால், நான் எந்த ஜாதியைச் சேர்ந்திருக்கிறேனோ அந்த ஜாதி ஜனங்களுக்கே ஆசிரியர்கள் உத்தியோகம் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள சேர்மன் கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ, அந்த ஜாதி அடிப்படையில்தான் ஆசிரியர்களுக்கு உத்தியோகம் கொடுக்கப்படுகிறது. நான் தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன், ஹரிஜன ஆசிரியர், ஆசிரியை களுக்கு வேலை கொடுக்கவேண்டும். அம்மாதிரி ஹரிஜன மக்களுக்கு ஆசிரியர் வேலை கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டிருக் கிறோம், ஆனால், நடைமுறையில் அது நல்ல முறையில் நிறைவேற்றப் படவில்லை. ஆகவே யூனியன்பள்ளிகளில் ஹரிஜனங்களுக்கு இவ்வளவு சத விகிதம் ஆசிரியர் பதவிகள் கொடுக்கப்படவேண்டும் என்ற நிலைமை ஏற்பட வேண்டும் என்று வற்புறுத்தி கூறிக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பட்டது.)

*திரு. சி. ம. அம்பிகாபதி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கல்வி இவ்வளவு விரிவாக முன்னேறி வருவதைக் குறித்து அமைச்சர் அவர்களை யும் சம்பந்தப்பட்ட இலாக்காவினரையும் நான் பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும் இந்தக் கல்வியில் நல்ல முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதற்காக சில கருத்துக்களை நான் சொல்ல முன்வந்திருக் கிறேன். இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகளில் மும்மொழித் திட்டம்



17th March 1964] [திரு. சி. ம. அம்பிகாபதி]

அமுலாக்கப்பட்டிருக்கிறது. தமிழுக்கு முதல் இடம், இரண்டாம் மொழியாக ஆங்கிலம், மூன்றும் மொழியாக இந்தி அல்லது மற்ற இதர மொழிக ளில் ஏதாவதொன்று என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஹைஸ்கூலை விட்டு காலேஜுக்குச் செல்லுகிறபொழுது இருமொழித்திட்டம்தான் அமுலாக் கப்பட்டு வருகிறது. காலேஜிலும் மும்மொழித் திட்டம் அமுலாக்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். உயர்நிலைப் பள்ளிகளில் தமிழுக்கு முதல் சலுகை கொடுத் திருப்பது போலவே காலேஜ்களிலும் தமிழுக்கு முதல் சலுகை இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இப்பொழுது அங்கே ஆங்கிலத்திற்குத்தான் முதல் சலுகை அளிக்கப்படுகிறது. நாம் கல்லூரியில் தமிழை போதனாமொழியாக ஆக்கவேண்டும் என்று எடுத்துக்கொள்ளப்படுகிற முயற்சியானது, ஆங்கிலம் இருக்கிற காரணத்தினால், தமிழினுடைய ஆர்வம் மாணவர்களுக்கு ஏற்படவில்லை. அதன் காரணமாகத்தான் தமிழ் போதனா மொழியாக எடுத்துக்கொண்ட கல்லூரிகளில் மாணவர்கள் சேருவதில்லை என்ற குற்றச்சாட்டு கூட வந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, ஹைஸ்கூல்களில் எப்படி மும்மொழித் திட்டத்தை அமுல் நடத்துகிறோமோ, அதேபோல காலேஜ்களிலும் மும்மொழித்திட்டத்தை அமுலாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இரண்டாம் நிலைமை தமிழ் ஆசிரியர்களை எடுத்துக் கொள்வோம். அவர்கள் டிரெயினிங் போகாத காரணத்தினால் அவர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்படவில்லை. டிரெயினிங் ஸ்கூலில் படித்து பட்டம் பெற்றால்தான் அவர்களுக்கு ஊதிய உயர்வும் (Annual increment), அவர்களுடைய வேலையும் பெர்மனென்ட் செய்யப்படும் என்றும் தோன்றுகிறது. 1959-ம் ஆண்டில் கல்வி இலாக்கா இயக்குனர் அவர்கள் ஒரு சுற்றறிக்கை விட்டிருப்பதாக நான் அறிகிறேன். அதன்படி பயிற்சி தேவையில்லை, புலவர் பட்டம் அல்லது வித்வான் பட்டம் பெற்றிருந்தால் அதுவே போதுமானது என்று இருப்பதாகத் தெரிகிறது. நாம் இப்பொ ழுதும் அதே நிலைமையை வற்புறுத்தி, அவர்களுக்கு டிரெயினிங் வேண் டாம் என்ற நிலைமையை ஏற்படுத்தவேண்டும். அல்லது டிரெயினிங் படித்துத்தானகவேண்டுமென்றால் போதிய டிரெயினிங் ஸ்கூல்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். போதிய டிரெயினிங் ஸ்கூல்கள் இல்லாத காரணத்தினால், அதிகமானபேர் பயிற்சிபெறமுடியாத நிலைமை ஏற்படுகிறது. குறிப்பிட்ட 2, 3 சென்டர்களில் மட்டும் டிரெயினிங் வைத்திருப்பதால், 30, 35 ஆசிரியர்கள்தான் டிரெயினிங்குக்கு அனுப்பப்படுகிறார்கள். மற்றவர் களுக்கு டிரெயினிங் போக முடியவில்லை, ஆகவே இந்த டிரெயினிங் சென்டர்களை அதிகப்படுத்தவேண்டும். அவர்களுக்கு ஒரு சாய்ஸ் கொடுக்க வேண்டும். 4, 5 ஆண்டுகளில் டிரெயினிங் படித்து பாஸ் செய்ய வேண்டும், அப்பொழுதுதான் அவர்கள் வேலை காயம் செய்யப்படும். இல்லாவிட்டால் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்ற ஒரு உத்தரவாதம் கொடுத்தால் நிச்சயம் அவர்கள் பயிற்சி பெறுவதற்கு வேண்டிய நல்ல சந்தர்ப்பம் ஏற்படும்.

அடுத்தபடியாக, பட்டதாரிகளாக இருப்பவர்களிடையே சில வேறு பாடுகள் இருக்கின்றன. இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் என்ன சம்பளம் வாங்குகிறார்களோ, அதேமாதிரிதான், பி. ஏ. பி. ஓ. எல்., எம். ஏ. எம். ஓ. எல்., படித்துப் பட்டம் பெற்ற தமிழாசிரியர்கள் உயர்நிலை பள்ளிக்கு தமிழாசிரியராய் போகும்போது இரண்டாம் நிலை தமிழாசிரியர்களுக் கொடுக்கும் சம்பளமே தரப்படுகிறது. அதோடு முதல் நிலை தமிழாசிரியர்கள் B.A., B.O.L., M.A., B.O.L., படித்த பட்டதாரிகளை தரக்குறைவாய் மதிக்கும் எண்ணம் ஏற்பட்டு இருதரப்பு தமிழாசிரியர்களிடமும் நல்ல ஒற்றுமை ஏற்படமுடியாத நிலைமை உண் டாகிறது. இதைத் தவிர்க்க வழிவகை செய்தாக வேண்டும். ஆனால் அதே நேரத்தில் எம். ஏ. படித்து, டிகிரி வாங்கியவர்கள் ஹை ஸ்கூல்களில் ஆசிரியர்களாகச் சென்றால் அவர்களுக்கு பி. டி சம்பளம் ரூ. 155 கொடுக்கிறார்கள். பி. ஏ. பி. எஸ்.ஸி. பட்டம் பெற்றவர்கள் பி. டி. சம்பளம் ரூ. 155 பெறும்போது, எம். ஏ., பி. ஓ. எல். படித்து, ஆங்கிலத்தோடு தமிழைப்படித்து பட்டம் பெற்றவர்கள் இரண்டாம்தர ஆசிரியர்களாக பாவிக்கப்படுகிறார்கள். எகனாமிக்ஸ், பாலிடிக்ஸ் படித்து பி.ஏ.

பாஸ் பண்ணியவர்களுக்கு பி. டி. சம்பளம் கொடுக்கப்படுகிறது; அதே மாதிரி இந்த பி. ஏ. பி. ஓ. எல். படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கும் அந்த சம்பள விகிதத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கடைசியாக, எலிமெண்டரிப் பள்ளிகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஆரம்ப ஆசிரியர்களின் நிலை சென்ற ஆண்டில் இருந்ததைவிட இந்த ஆண்டு முன்னேற்றம் அடைந்திருக்கிறது. மேலும் 8,000 ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள் என்று தெரியவருகிறது. ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கும்போது எவ்வளவு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் தேவைப்படுவார்களோ, அதே விகிதாசாரத்தில் ஆசிரியர்களை எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கவேண்டி இருப்பதால், இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதிகப்படியான செகண்டரி கிரேடு ஆசிரியர்களை நியமிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சோ. ஆறுமுகம்: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற கல்வி மானியத் தின்மீது திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாகக் கொண்டுவரப் பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் இந்த கல்வி மானியத்தைப்பற்றி பேசுகின்ற நேரத்தில், இந்த கல்வித்துறையில் இருக்கும் குறைகளையும், எங்களுடைய தொகுதியில் ஆசிரியர்களுடைய நிலைமை என்ன என்பதைப்பற்றியும் பேசுவதற்கு அதிக நேரமில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இருப்பினும், நான் முக்கியமாகச் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால் இன்றைய தினம் நம்முடைய சர்க்கார் நம்முடைய தாய்மொழியான தமிழை அழிப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு பெரியதொரு குற்றச்சாட்டை நான்அவர்கள்மீது சுமத்த விரும்புகிறேன். டில்லியில் நடைபெறும் லோக் சபையில்கூட யூனியன் அமைச்சராக இருக்கின்ற திரு சாக்ளா அவர்கள் தெட்டத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தி ஒரு தேசிய மொழி ஆவதற்கு அதற்குப் போதிய வாய்ப்பில்லை. அப்படிப்பட்ட ஒரு மொழியை சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்கு சேர்த்துக் கொள்வதற்கு அது தகுதி பெற வில்லை, ஆகவே இந்தி பேசப்படாத மாநிலத்தில் இத்தகைய ஒரு பரீட்சை திட்டத்தைக் கொண்டுவருவது, இந்தி பேசத் தெரியாத மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தும். ஆகவே இந்த முறை கூடாது என்று அவர் லோக் சபையில் விளக்கியிருக்கிறார். ஆனால் நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற முதல் அமைச்சர் தமிழர் என்று சொல்லிக் கொள்கின்ற ஒரு அமைச்சர், டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, சர்வீஸ் கமிஷன் பரீட்சைகளுக்கு இந்தியை வைக்கலாம் என்ற திட்டத்தை வரவேற்று, அதை ஆதரித்து, வடக்கேயிருக்கின்ற இந்தி வெறியர்களுக்குத் தன்னை அடிமைப்படுத்திக்கொண்டு தென்னகத்திற்கு திரும்பி தென்னகத்தில் இருக்கும் மொழிகளை அழிப்பதற்குத் தயாரா யிருக்கிறார் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எல்லாக் கல்லூரிகளி லும், 1965-க்குப் பிறகு தமிழை போதனா மொழியாக்கவேண்டுமென்று வீராப்புப் பேசிய சர்க்கார், இன்றைய தினம் 1965-க்குப் பிறகு இந்திக்குத் தான் முதலிடம், ஆங்கிலம் அதற்கு அடுத்தபடிதான் என்றும், அந்தந்த மாநிலங்களில் உள்ள மொழிகள் நான்காம் தரமாக தள்ளப்பட்டிருக் கின்றன என்று சொன்னால், உள்ளபடியே நம்முடைய சர்க்கார் ஒரு தமிழ்நாட்டு சர்க்கார்தானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இந்த சர்க்கார் இன்னும் எத்தனை உயிர்களைப் பழிவாங்கவேண்டுமென்று நினைக்கிறது? நம்முடைய தாய்மொழியான தமிழைக் காப்பாற்ற வேண்டு மென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் கேட்கின்ற நேரத்தில், இது ஏதோ ஒரு சாதாரணப் பிரச்னை என்று கனம் முதல மைச்சர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் திராவிட முன்னேற்ற கழகம் இந்தியை எதிர்த்து ஒரு அறப்போர் நடத்திக் கொண்டி





ருக்கிற நேரத்திலே, இந்தப் போராட்டத்தைப் பற்றி டில்லியிலே நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் நம்முடைய முதலமைச்சர் ஒரு வார்த்தை கூட இதைப்பற்றிப் பேசாமல் இருப்பது வருந்தத்தக்கது. இது அவருடைய அடிமைத்தனத்தையும், நம்முடைய அடிமைத்தனத்தையும் காட்டுவதாக ஆகாதா? என்பதை நான் கேட்க விரும்புகிறேன். திராவிட முன்னே ற்றக்கழகத்தலைவர் திரு. அண்ணா அவர்கள் 1965-க்குப் பிறகு நமது தமிழகத்தில் இந்தியைப் புகுத்த வடக்கேயுள்ளவர்கள் பார்க்கிறார்கள், இந்தியைப் புகுத்துவதால், தென்னகத்திலுள்ள இந்தி பேசத் தெரியாத மக்கள் பாதிக்கப்படுவார்கள், அதனால், அந்தந்த மாநில மொழிகள் அழிந்துபோய்விடும், ஆகவே நம்முடைய தாய்மொழியை காப்பதற்கு ஒரு போராட்டத்தைத் துவக்கி வடக்கேயிருக்கின்றவர்கள் அதனை உணர வேண்டும் என்பதற்காக ஒரு போராட்டத்தைத் துவக்கி அதன் மூலமாக இன்று எத்தனையோ தோழர்கள் சிறைகளில் கம்பியெண்ணிக் கொண்டிருக்கும் நிலையில், இதனைப்பற்றி வடக்கே சென்றிருந்த முதலமைச் சர் அவர்கள் எடுத்துக்கூறக்கூடாதா என்று கேட்கிறேன். அதே நேரத்தில் தோழர் சின்னசாமி எதற்காக உயிர்தியாகம் செய்திருக்கிறார்? தமிழ் வாழவேண்டும், இந்தி ஒழியவேண்டும் என்பதற்காகத்தான் உயிர்தியாகம் செய்து இருக்கிறார். அதாவது அமைச்சருடைய நினைவுக்கு வரவில்லையா? தமிழ்நாடு என்று பெயர் வைத்தால் இன்பத்தேன்வந்து பாயுது காதினிலே என்று சொன்ன சங்கரலிங்கனார் அவருடைய நினைவாவது அமைச்சருக்கு இல்லையா? நம்முடைய முதலமைச்சர் ஒரு தமிழர் அல்லவா? ஏன் நம்முடைய தாய்மொழியைப் பாதுகாக்கிற அளவுக்கு வடக்கேயிருக்கிறவர் கள் இந்தியைப் புகுத்தச்செய்யும் முயற்சியை கண்டிப்பதற்கு அவருக்குத் தைரியம் இல்லாமல் இருப்பதற்கு காரணம் என்ன என்று அழுத்தம் திருத்தமாக நான் கேட்கவிரும்புகின்றேன். யூனியன் சர்வீஸ் கமிஷன் பரீட்சை களில் இந்தியின்மூலம் பரீட்சை எழுதலாம் என்ற கருத்துக்கு நமது முதல மைச்சர் அவர்கள் இசைவு தந்ததைக் குறித்து தென்னகத்திலுள்ள மக்கள் ஒருபெருந்தவறு என்று இன்றையதினம் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் இந்தி பேசப்படாத தென்னகத்திலே இந்தியைத் திணிப்பதானது மிகவும் அக்கிரமமானது, தென்னகப்பகுதியிலுள்ள அமைச்சர்கள் அனைவரும் ஒரு முகமாகச் சேர்ந்து வடக்கே இருக்கின்றவர்களுக்கு உணர்த்தவேண்டுமென்று சொல்லுகிற அந்த மைசூர் அமைச்சருக்குள்ள தைரியம் நம்முடைய அமைச்சர்களுக்கு ஏன் இல்லை? 1965-க்குப் பிறகு இந்தி மொழிக்கு நம்மை அடிமைகளாக்கி நம்மை இரண்டாந்தர மக்களாக ஆக்குவதற்கு முயற்சிகள் நடக்கின்றன என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்லிக்கொண் டிருக்கின்ற கருத்தினையாவது வடக்கேயிருக்கின்றவர்களுக்குச் சொல்லி இந்தப் பிரச்சினையில் நல்லதொரு முடிவைக்காணா நமது மாநில சர்க்கார் தவறுமேயானால் தமிழகத்தில் ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டு அதன் காரணமாக இந்த சர்க்காரின் அழிவுகாலம் நிச்சயமாக நெருங்கிக் கொண் டிருக்கிறது என்பதை வலியுறுத்திக் கொண்டு என்னுடைய உரையை முடித் துக்கொள்கிறேன்.

திரு. கே. பி. பழனி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற் குரிய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட கல்வி மானியத்தை வரவேற்று, அதனை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். நமது சென்னை மாநிலம் பல்வேறு துறைகளில் எப்படி இந்தியா விலேயே ஒரு முதன்மையிடத்தை வகிக்கின்றதோ அதே போன்று கல்வித் துறையிலும் முதன்மையான இடத்தை வகிக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இலவசக் கல்வித்திட்டம், மதிய உணவுத் திட்டம் போன்ற புரட்சிகரமான, புதிதான திட்டங்களைக் கொண்டுவந்து இன்று நாம் முன்னணியில் நிற்கிறோம். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டி ருக்கும் பாராளுமன்றக் கூட்டத்தொடரில் கூட, மதிப்பிற்குரிய மத்திய அமைச்சர் திரு. சாக்ளா அவர்கள், கல்வித் துறையில் சென்னை மாநிலம் இந்தியாவிற்கே வழிகாட்டியிருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதுபோல நம்முடைய மதிய உணவுத் திட்டமானது எந்த அளவுக்கு மேலான திட்டம், இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களில் இல்லாத ஒரு திட்டம், என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அந்தத் திட்டத்தைக்

கூட கட்சி வேறுபாட்டால், மனமாச்சரியத்தால் வெற்றி பெறவில்லை
என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்
கள். ஆனால் அவர்கள் தலைவர் மதிப்பிற்குரிய அண்ணாத்துரை அவர்கள்
ஒளவை இல்லத்திலே எந்த அளவுக்கு மதிய உணவு திட்டம் வெற்றி
பெற்றிருக்கிறது என்று அன்றைய கல்வி அமைச்சர் கனம் சுப்பிரமணியம்
அவர்கள் இருந்தபோதே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னது
"பள்ளிகளிலே நண் பகல் உணவு தரவேண்டும் என்று ஒரு திட்டத்தை
கொண்டு வந்தார்கள். அரசினர் அந்தத் திட்டத்தில் இந்திய துணைக்
கண்டம் முழுதும் சுற்றி வருகின்ற நம் நிதி அமைச்சருக்குக்கூடத் தெரி
யும், தமிழகம்தான் மகத்தான வெற்றியை அடைந்திருக்கிறது" என்று.
இம்மாதிரி மதிப்பிற்குரிய அண்ணாதுரை அவர்கள் ஒளவை இல்லத்தில்
அமைச்சர் அவர்கள் பக்கத்தில் இருந்த நேரத்திலேயே எந்த அளவுக்கு
மதிய உணவு மகத்தான வெற்றி என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஆசிரியர்களுடைய வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதல்களை, நன்மை
களை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை தீட்டியிருக்கிறது நமது சர்க்கார் என்றால்
அது மிகையாகாது. ஆசிரியர்களுக்கு பிராவிடண்ட் பண்ட், இன்ஷூரன்ஸ்,
பென்ஷன், என்று சொல்லக்கூடிய 3 வகையான அனுகூலங்களையும்
அளித்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே இப்படி மூன்று வகையான
அனுகூலங்களை அனுபவிக்கும் ஆசிரியர்கள் எந்த மாகாணத்திலும் இல்லை
என்றே சொல்லலாம். அப்படிப்பட்ட திட்டம் மிக்க பாராட்டத்தக்க ஒன்றா
கும். இந்த சிறந்த திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின் பற்றவேண்டும்
என்று முன்னாள் அமைச்சர் கனம் ஸ்ரீமாலி அவர்களும் குறிப்பிட்டு இருக்
கிறார்கள். இப்பொழுது அண்மையிலே கல்வித் தரம் உயர வேண்டும்
என்பதற்காகவும், ஆசிரியர்கள் கஷ்டங்களை நீக்கவேண்டும் என்பதற்காகவும்
ஒரு புதிய விகிதாசார முறையை கையாண்டு வருகிறார்கள். 1:29 என்று
சொல்லக்கூடிய அளவுக்கு, ஒரு சில பள்ளிகளில் 30 மாணவர்கள் இருப்
பார்களேயானால் இரண்டு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று சொல்லக்
கூடிய அளவுக்கு திட்டம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. மற்றும் 1:35
என்ற விகிதாசாரத்திலும் மற்ற வகுப்புகளுக்கும் ஏற்படுத்தப்பட்டு இருப்ப
தால், எண்ணிக்கை குறைக்கப்பட்டு இருப்பதால் ஆசிரிய சமுதாயம்
சர்க்காருக்கு கடமைப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.
அரசாங்கத்தின் திட்டத்தின் காரணமாக ஒரு ஆசிரியர் பல வகுப்புகளை
எடுக்கும் சூழ்நிலை மாற்றி அமைக்கப்பட்டு ஏறத்தாழ ஒரு ஆசிரியர் ஒரே
வகுப்பினை எடுக்கும் சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. அது
உண்மையிலேயே வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அடுத்தபடியாக பொதுவாக பி. டி. ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்து
வருகிறது. விஞ்ஞான, கணித துறை ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி
வருகிறது. அதை அகற்ற தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். விஞ்ஞான
கணித பட்டம் பெற்றவர்களுக்கு ஸ்டைபெண்ட் தொகையை அதிகமாக
அரசாங்கம் வழங்கினால் இந்த வகையான பி.டி. பற்றாக்குறை தீர்க்கப்
படுமா என்று அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

அடுத்து நம்முடைய அரசாங்கமானது ஆண்டு தோறும் நூற்றுக்கணக்
கான உயர்நிலைப் பள்ளிகளை உருவாக்கி வருகிறது. பல கிராமங்கள்கூட
ஒரு உயர்நிலை பள்ளியை பெறும் சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது.
ஆனால், ரூ. 4,500-ஐ கட்டி உயர்நிலைப் பள்ளி பெற்று விடுவார்கள்.
அதே நேரத்திலே அவர்களுக்கு பொருளாதார பற்றாக்குறை இருப்பதன்
காரணத்தினால் சயன்ஸ் லைபாரட்டரி என்று சொல்லக்கூடிய விஞ்ஞான
ஆய்வு கூடத்தை பெற இயலாத சூழ்நிலை இருக்கிறது. அந்த வகையில்
நகரத்தில் இருக்கிற மாணவர்கள் வளர்ச்சி பெறும், திறமை பெறும்
அளவுக்கு இந்த கிராமப்பள்ளி மாணவர்கள் வளர்ச்சி, திறமை பெறும்
வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே கிராமப் பள்ளிகளில் விஞ்
ஞான ஆய்வு கூடத்தை ஏற்படுத்த அரசாங்கமே விசேஷமான தொகையை
அளித்து ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.





அடுத்தபடியாக ஆரம்பக் கல்வி பள்ளி, உயர்நிலைப் பள்ளி இவைகள்
பல இடங்களில் சரியான, முறையான கட்டட வசதி இல்லாமல் கஷ்டப்படும்
நிலைமை இருக்கிறது. அதை மாற்ற நீண்ட கால உதவி திட்டத்தின் வாயி
லாக நிதி வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய அமைச்சர் அவர்கள் வரவு செலவு திட்டத்
திலே எந்த ஒரு அரசாங்க ஊழியரும் ரூ. 20-க்கு குறைந்த பென்ஷன்
வாங்காத நிலைமைக்கு உறுதியும் உத்திரவாதமும் அளித்திருக்கிறார்கள்.
அதே திட்டத்தின்கீழ் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களும் சேர்க்கப்பட
வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு
ரூ. 7 அல்லது ரூ. 8 பென்ஷனை வாங்கும் நிலை ஆரம்பப் பள்ளி ஆசிரியர்
கள் இடையே இருக்கிறது. ஆகவே அவர்களுக்கும் ரூ. 20-க்கு குறை
யாமல் கிடைக்கக்கூடிய நிலைமையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இன்று அரசாங்கமே புத்தகங்களை தயாரிக்கும் நிலை
ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. புத்தகங்கள் விலை குறைவாக இருக்கின்றன.
ஆனால் தனியார் தயாரிக்கும் புத்தகங்கள் அதிக விலைக்கு விற்பதால்
அந்த புத்தகங்களின் விலைக்கு ஒரு உச்ச வரம்பு கட்ட முடியுமா என்று
அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று இருக்கக்கூடிய கல்வி முறையில் போதிய அளவுக்கு சயின்டிபிக்
எடுகேஷன், விஞ்ஞானக்கல்வி முறை இல்லை. 10-ஆவது வரை பயின்ற
ஒரு மாணவனுக்கு ஒரு விமானத்தின் பாகங்கள் என்ன, ஒரு மோட்டாரின்
பாகங்கள் என்ன, ஒரு கப்பலின் பாகங்கள் என்ன என்று கூட தெரிவது
இல்லை. அந்த அளவுக்கு அடிப்படையான விஞ்ஞானக் கல்வி இல்லாத
நிலை இருக்கிறது. ஆகவே, நமது கல்வி முறையில் கல்வி வளர்ச்சியோடு
விஞ்ஞானக் கல்வி பெருகவும் ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சர்
அவர்களை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக ஒன்றே ஒன்று. நம்முடைய கல்வி திட்டம் நாஷனல்
எடுகேஷன் என்று சொல்லக்கூடிய வகையில் தேசீய உணர்ச்சியை மாண
வர்கள் மத்தியில், அவர்கள் உள்ளத்தில் உருவாக்கக்கூடிய அளவுக்கு
போதிய கவனம் செலுத்தப்படவில்லை. தேசீய உணர்ச்சியை வளர்க்கக்
கூடிய அளவுக்கு பாட திட்டத்தை அமைக்க வேண்டும் என்று இந்த
சந்தர்ப்பத்திலே எடுத்துச் சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

SRI K. S. G. HAJA SHERIFF: Mr. Deputy Speaker, Sir, I rise to speak in support of the Demand moved by the Hon. Minister for Education. Sir, it is most gratifying to know the tremendous growth and development we have achieved in this sector. I would like to congratulate the Government on this good achievement. I think our State is easily the foremost among all the States in this country in the development of education. We have developed not only education in the primary, secondary and collegiate levels but also technical education to a very considerable extent.

I think, we are sending not less than 5,000 boys every year to the technical colleges alone in addition to the millions of boys to primary and secondary schools. In the present context of the industrial development, that is now taking place in the country, it is but right that we concentrate more and more on technical education. I feel that from the 8th Standard onwards we should have a sort of technical education in a concentrated manner. The Government should devote their attention to giving to the boys at least training on a particular trade in a concentrated manner so that

[Sri K. S. G. Haja Sheriff] [17th March 1964

when they come out of the secondary schools, they will be in a position of having understood one trade in a very detailed manner. Now we find that at least 50 per cent of the boys take up collegiate education. The other 50 per cent of the boys go out in search of employment and if they had studied a particular trade in detailed manner, they would be in a better position to get employment more quickly and easily than the boys who have no knowledge of the technical education at all. This is being done even in highly advanced countries.

Sir, no less a person than the Union Education Minister has paid a great tribute to the educational policy adopted by our State. It has been argued by the hon. Members belonging to the Opposition that we are not giving very good support or we are not concentrating on the development of Tamil education. We are a nation and we are proud to be one of the foremost nations in the world, to whom even other nations are looking for leadership. If that is the case, we should have a national language and therefore it is considered that Hindi should be our national language. So, I would very strongly suggest that we should give equal prominence to Hindi and then make the students to compulsorily study all the three languages, Hindi, Tamil and English—because these three languages can easily be learnt by the children. There will not be any difficulty in the children learning them very easily. I am telling this from the practical point of view because the large number of children who have learnt these three languages are in a better position to answer the papers in regard to these three languages in a very excellent manner and obtain very good marks in those languages.

11-30 a.m. We have to improve the national language and also the regional language. We should also allow our children to know a foreign language, viz., English, which is spoken universally in the whole world. If we do that, I think we will be doing a great service to the growing children.

Sir, I want to recommend for the consideration of Government that we would like to have one college in the North Madras for girls. We do not have a separate college for girls in North Madras. I am sure Government will be good enough to consider this proposal and try to open a college in North Madras for girls.

We are giving some technical education even to girls. I would like to state that this should be improved and also intensified because equal number of girls are also getting education and if they are not given various opportunities to study, there will develop a sort of apathy in them and there will not be scope for employment of girls. I once again thank the Government for their excellent achievement in the educational field and I am sure they will keep up this level and even improve it so that everyone, when he comes out of the college, after a particular age, will emerge with some technical knowledge so that he can stand on his own legs. Thank you, Sir.



17th March 1964]

*திரு. ஆ. துரையரசன் : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய, கல்வி மானியக் கோரிக்கையின் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிற இந்த மானியத்தில் கல்விக்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டாலும், குறிப் பாக கிராமப் புறங்களுக்கு இந்தத் தொகை பயன்படுத்தப்படுகிற நிலைமை இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. எந்தக் கிராமத்திற்கு நாம் சென்று பார்த்தாலும், படிக்க ஆர்வமுள்ள மாணவர்கள் நூற்றுக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் கட்டட வசதி இல்லை. அப்படிக் கட்டட வசதி இருந்தாலும், ஆசிரியர் இல்லை. இந்த நிலை பெரும்பாலும் கிராமப் புறங்களில் இருந்துகொண்டிருக்கிறது.

ஐந்து மைல்களுக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி வைக்கப்படுவதாகச் சொல் லப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்வேன். என்னுடைய தொகுதி யிலே அறந்தாங்கியில் ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. அதற்குப் போதுமான கட்டடம் இல்லை என்பது நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அதற்குப் புதிதாகக் கட்டடம் ஒன்று பல ஆண்டுக ளாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே எட்டு செக்ஷன்கள்தான் வைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. தற்போது 22 செக்ஷன்கள் பள்ளி யில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பள்ளிக்கூடம் ஒழுங்கான கட்டடத்தில் இல்லை. பகலில் சாப்பிடும் மாணவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் வசதிகூட செய்யப் படவில்லை.

அறந்தாங்கி தென்புறத்தில் 30 மைல் சுற்றளவில் இராமநாதபுரம் மாவட்டத்தின் எல்லை இருக்கிறது. 30 மைல் சுற்றளவுக்கு அந்த வட்டாரத்திலே ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம்கூட இல்லை என்பதை நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அறந்தாங்கியிலிருந்து நேர் கிழக்கே சென்றால், 22 மைலில் மணமேல்குடியில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அதை சத்திரம் இலாகாவுக்குச் சொந்தமான இடத்திலே வாடகைக்கு வைத்திருக் கிறார்கள். அந்தக் கட்டடம் இந்த நேரமோ எந்த நேரமோ என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கீழே விழும் நிலையில் இருக்கிறது. கோட்டப் பட்டணம் பள்ளிக்கூடத்திற்கு கட்டடம் இல்லை. பள்ளிக்கூடங்களை நடத்த முடியாத சூழ்நிலை எதற்காக ஏற்படுகிறது என்றால் பத்தாயிரம் ரூபாய் அரசாங்கத்திற்குக் கிட்டத்தட்ட செலுத்த வேண்டியிருக்கிறது. முதலில் 4,500 ரூபாயும், அடுத்து இரண்டு தவணைகளில் பாக்கித் தொகையும் செலுத்த வேண்டும். இதைப் பல பின்தங்கிய பகுதிகளில் உள்ளவர்கள் செலுத்த முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையைப் போக்க அரசாங்கம் ஏதாவது ஒரு மாற்றுத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சாதாரணமாக தொகையும் கட்ட வேண்டும். கட்டட வசதியும் செய்து தரவேண்டும். கட்டடத்திற்கு அரசாங்கம் ஓரளவு தொகை கொடுக்கிறது. அதற்கு மேலும் ஒரு பங்குத் தொகை பொது மக்கள் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. இது பள்ளிக்கூடத்திற்கு மட்டுமல்ல. மருத்துவ சாலை வேண்டுமென்றாலும், பாதை வசதி வேண்டுமென்றாலும், குடிநீர் வசதி வேண்டுமென்றாலும், எந்தத் திட்டமாக இருந்தாலும், "உங்க ளுடைய பங்கு என்ன ?" என்றுதான் அரசாங்கம் கேட்கிறது. மற்றொரு புறத்தில், தினம் பத்திரிகையைப் பிரித்துப் படித்தால், ஒவ்வொரு இலாகாவும் ஒவ்வொரு கடன் எழுப்பிக் கொண்டு வருகிறது.

இத்தனைக்கும் மத்தியில் நம்முடைய அரசாங்கம் என்ன செய்கிறது என்றால், திட்டங்கள் நாட்டில் பரப்பப்பட்டிருக்கிறது என்பதை ஐந்தாண்டு களுக்கு ஒரு முறை, தேர்தல் நேரத்தில், படம் போட்டுக் காண்பிக்கிறார்கள். "இத்தனை ஆயிரம் ஆரம்பப் பள்ளிகளைத் திறந்திருக்கிறோம், எங்களுக்கு வோட்டுப் போடுங்கள்", என்று சொல்கிறார்கள். ஆனால், இங்கே பேசிய அங்க உறுப்பினர்கள் பலர் குற்றச்சாட்டைப் போட்டார்கள். முன்னேற்றக்

கழகம் துருப்புச் சீட்டைப்போல் அரசியலுக்கு இந்திப் பிரச்சினையைப் பயன்படுத்துகிறது என்று சொன்னார்கள், இன்றல்ல, 1938-ஆம் ஆண்டு, முன்னேற்றக் கழகம் ஆரம்பிப்பதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பாகவே, சுய மரியாதை காலத்திற்கு முன்பு, நாங்கள் நீதிக் கட்சியாக இருந்த நேரத்தில், மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்திலேயே இந்தியை எதிர்த்திருக்கிறோம். அப்படியே அரசியல் துருப்புச் சீட்டு என்று இதைச் சொன்னாலுங்கூட, குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சிதான் இந்த நாட்டிலே ஆளவேண்டும் என்று சொன்னால், இது பிதுரார்ஜித சொத்தா ? என்று எங்களைப் போன்றவர்கள் கேட்டால் அதில் தவறு இல்லை என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கல்விக்காகச் செலவழிக்கப்படும் தொகை நல்ல முறையிலே செலவழிக்கப்படவேண்டும். கிராமப் புறங்களில் கல்வி வசதி இல்லை. இந்த மாநிலத்தின் தலைநகரில்கூட, இராஜாஜி ஹாலுக்குப் பக்கத்தில் மரத்தடியில்தான் பள்ளி நடைபெறுகிறது. இந்த நிலை நீக்கப்பட வேண்டும். இவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டும் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா என்றால், இல்லை. கடந்த ஆண்டு எஸ். எஸ். எல். ஸி.த் தேர்வு பெற்ற ஒரு மாணவரைக் கிராமத்தைச் சேர்ந்தவர் ஒருவர்பணவிடைத்தாள் எழுதித் தரும்படி கேட்டார். அந்த மாணவரும் எழுதிக் கொடுத்தார். ஆனால், மறுநாள் அவர் எழுதிக் கொடுத்த பணவிடைத்தாள் அவருக்கே திரும்பி வந்திருக்கிறது என்றால், கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா என்று நாம் பார்க்கவேண்டும். இந்த நிலைமைகளை நன்றாகச் சிந்தித்துப் பார்த்து, அரசாங்கம் செயலாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், ஐம்பது வயதுக்கு மேற்பட்ட தலைமை ஆசிரியர்களை அடிக்கடி மாற்றிவிடுகிறார்கள். கிராமப் புறங்களில் நல்ல இளமையான ஆசிரியர்களைப் போடலாம். ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களைக் கிராமப் புறங்களில் மாற்றிவிடும் காரணத்தால், அவர்கள் குடும்பத்தை ஒரு பக்கம் வைத்துக் கொண்டு தொல்லைப்படுகிறார்கள். அதிலும், தலைமை ஆசிரியர்களை மாற்றுவது எப்ரல் மாத முடிவில் தான் இருக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து விடலாம். பள்ளிக்கூடம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இடைக்காலங்களிலேயே மாற்றல் செய்து விடுகிறார்கள். அதற்கும் அரசாங்கம் ஒரு நல்ல முடிவு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி வேண்டுமென்று நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆவுடையார்கோவிலை அடுத்த அம்பலவாணக் கிராமத்தில் துவக்குவதாக இருந்தது. மாவட்ட மன்றம் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருந்தும் இது பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை அங்கே துவக்குவதற்கு விரைவில் ஆவன செய்யவேண்டும்.

என் தொகுதியில் நூற்றுக்கு நூறு ஏழை மாணவர்கள் காரைக்குடி, புதுக்கோட்டை போன்ற பகுதிகளுக்குச் சென்று கல்லூரியில் படிக்க முடியவில்லை. நான் பொது விவாதத்தின் போதும் தெரிவித்தேன். ஆகவே, அறந்தாங்கியில் ஒரு கல்லூரியை நிறுவித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் மீண்டும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வட சென்னையில் ஒரு டிஸ்டிரிக்ட் எஜுகேஷனல் ஆபீஸர் ஒரே இடத்தில் தொடர்ந்து எட்டு, ஒன்பது வருஷங்கள் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார். இம்மாதிரி வேலை பார்க்கும் காரணத்தால் லஞ்சம் போன்ற ஊழல்கள் ஏற்படும் சூழ்நிலை உருவாகிறது. அவருடைய இலாகாவின்பேரில் பல குற்றச் சாட்டுக்கள், புகார்கள் சொல்லப்பட்டும், அந்த இலாகாவிலே உள்ளவர்கள் ரிகார்டுகளை ஃபோர்ஜரி செய்து விட்டதாக புகார் கொடுத்தும், இன்றைய தினம் வரை நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் என்ன என்று பார்க்கும்போது, அந்த வட்டாரத்தில் இருக்கும் டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு நெருங்கிய உறவு இருக்கிறது என்று சொல்





தொடர்ந்து ஒரே இடத்தில் ஒரு அதிகாரி இருந்தால் இம்மாதிரி நிலைமை உருவாகும். இப்படிப்பட்டவர்களை மாற்றவேண்டும். என்பதை அரசாங்கம் உணரவேண்டும். இதில் கல்வி இலாகா கவனம் செலுத்தும் என நம்புகிறேன்.

*திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நமது முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கல்வி அமைச்சர் அவர்களுக்கும், கல்வி இலாகா இயக்குநர் அவர்களுக்கும், அத்துறை சிப்பந்திகள் அனைவருக்கும் நம்முடைய பாராட்டு உரியது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் நம் நாடு, சுதந்திரம் அடைந்த குறுகிய காலத்துக்குள்ளே ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், இன்னும் தொழிற் கல்லூரிகள் ஆகிய எல்லாவற்றிலும் நாம் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றி இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். நம் மாகாணத்தில் முப்பதாயிரம் துவக்கப் பள்ளிகள், இரண்டாயிரம் உயர்நிலைப்பள்ளிகள் நூற்றுக்கு உட்பட்ட கல்லூரிகள் ஆகியவை சுதந்திரம் அடைந்த பிறகு வளர்ந்திருப்பது வரவேற்கத்தக்கது. நமது அரசாங்கம் பல துறைகளிலே கல்விக்காக கோடிக்கணக்காகச் செலவிட்டு வருகிறது. பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகியவை அநேகம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன்

இந்த நேரத்தில் ஆரம்பக் கல்வியைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஆரம்பக் கல்வியை பஞ்சாயத்து யூனியன்களிடம் விட்டிருப்பதை கல்வி இலாகாவின் மேற்பார்வைக்கே கொண்டு வந்து விடுவது நலம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மதிய உணவுத் திட்டத்தையும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களிடம் விட்டு இருப்பதை மாற்றி முன்போலவே ஒரு கமிட்டி ஏற்படுத்தி அதன் பொறுப்பில் கொடுத்துவிடுவது நலம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் ஏனென்றால் இவை பஞ்சாயத்து யூனியன்களிடம் விட்டு வைத்திருப்பதில் சில தகராறுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக வரதராஜன்பேட்டையில் ரோமன் கத்தோலிக் சர்ச் பள்ளிக்கூடம் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும், அந்த சர்ச் பிஷப்புக்கும் உள்ள தகராறினால் அந்தத் திட்டம் செவ்வையாக நடைபெறவில்லை. ஆகவே இதுபோன்ற தகராறுகளை நீக்க முன்போலவே ஒரு கமிட்டி போட்டு அமைப்பதுதான் சரியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நமது மாகாணத்தில் தமிழாசிரியர்கள் பி.ஏ.,பி.டி. ஆக இருந்தால் ஹெட்மாஸ்டராக நியமனம் செய்யப்படலாம் என்று ஒரு ஜி.ஓ. போட்டிருக்கிறார்கள். அதை நல்ல முறையில் அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல இந்தியிலும் பி.ஏ. பி.டி., ஆசிரியர்கள் இருந்தால் அவர்களும் ஹெட்மாஸ்டராக நியமனம் செய்யப்படலாம் என்று ஏற்படுத்தலாம். அப்போது இந்தி வளர வழி யேற்படும். பலமொழி வளர்ச்சியினால்தான் வளம் ஏற்படும். அந்த முறையில் இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் பல இடங்களில் பள்ளிகளை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். நெய்வேலியில் நிறையத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே பள்ளிக்கூடம் இல்லை. ஆகவே குறிஞ்சிப்பாடி எஸ். கே. வி. உயர்நிலைப் பள்ளிக்கு காலதாமதமின்றி அங்கீகாரம் அளிக்கவேண்டுமென்று அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன். நெய்வேலிக்கு அடுத்த மேல்புரத்தில் வள்ளூர் என்ற ஊர் இருக்கிறது. அங்கே நிலம் கிடைக்கிறது. அங்கே இந்தப் பள்ளிக்கூடம் அமைத்துக் கொடுத்தால் தொழிலாளர்களுக்கு மிகவும் உதவியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விருத்தாசலத்தில் ஒரு மகளிர் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அதற்குக் கட்டிடம் கிடையாது. யூனியன் உயர்நிலைப் பள்ளியில் நடத்தி வருகிறார்கள். அதற்குச் சீக்கிரமாகக் கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பெண்ணுடத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது.
மகளிர்க்கு ஓர் உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்தியாக வேண்டுமென்று தெரி
வித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அநேகமாக நம் நாட்டில் ஏராளமான
பணம் கோவில்களில் குவிந்து கிடக்கிறது. அவற்றை நல்லமுறையில்
கல்வி வளர்ச்சிக்கு ஈடுபடுத்தினால் நன்றாக இருக்குமென்று சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். உதாரணமாக அங்கே குளஞ்சியப்பர் கோவில்
இருக்கிறது. அதில் இருக்கும் பணத்தைக்கொண்டு அங்கே ஒரு பாலி
டெக்னிக் மகளிர்க்கு ஏற்படுத்திக் கொடுத்தால் நலமாக இருக்குமென்று
சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதியோர் கல்வித் திட்டத்தை சீரிய முறையில் மேற்கொள்ள வேண்டு
மென்று தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக குருடு-செவிடு ஆகியவர்
களுக்கு அநேக பள்ளிகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களை
ஏற்படுத்துவதோடு அவற்றுக்கு நல்ல கட்டிடங்களை ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டும். விடுதியும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக எங்களுடைய மாவட்டத்தில் உள்ள கழுநீர், நல்லூர்,
சிறுபாக்கம் ஆகிய இடங்களில் உள்ள ஹரிஜன பள்ளிக் கட்டிடங்களுக்கு
ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, முதன் முதலில்
இன்றைக்கு பள்ளி ஆசிரியர்,—மாணவர் விகிதாசாரம் நிர்ணயிக்கப்
பட்டது குறித்து கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றி பாராட்டுகிறேன்.
ஒரு ஆசிரியருக்கு இருபது மாணவர்கள் என்ற நிலை வந்திருக்கிறது.
இருபது மாணவர்களுக்குக் குறைந்த பள்ளிகளுக்கு கிராண்டு claim
செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. கிராண்ட் கிளெய்ம் செய்யாமல்
லேயே பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்து பள்ளி நடத்தவும்
வாய்ப்பு இருக்கிறது. அதே சமயம் அதிக ஆசிரியர்கள் தேவைப்படுகிற
பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமித்துக்கொள்ள பஞ்சாயத்து யூனியன்
களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆனால் இப்போது ஒரு அரசினர்
ஆணை மூலமாக அந்த அதிகாரத்தைப்பறித்து கல்வி இலாகா டைரெக்டரிடம்
கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று புதிய பள்ளிகள் திறப்பது பற்றியும், இருக்
கக்கூடிய பள்ளிகளுக்கு அதிகமான ஆசிரியர்களை நியமிப்பது பற்றியும்—
அங்கங்கே உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் பரிசீலனை செய்து நடவடிக்கை
எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை போய்—அவ்வாறு செய்வதற்கு கல்வி
இலாகா டைரெக்டரிடம் அனுமதி கோரி, அவர்களது ஆணையை எதிர்
நோக்கி, அது வந்த பிறகுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்
என்று செய்திருப்பது சரியான ஏற்பாடாக இருக்காது.

உதாரணமாக இந்த ஆண்டு ஆரம்பத்தில் ஆசிரியர்—ட்யூபில் ரேஷியோ
மாற்றப்பட்டு, இரண்டாவது ஆசிரியர் போடக்கூடிய இடங்களில் அவ்வாறு
போடலாம் என்று பஞ்சாயத்து யூனியன்களிலே யோசனை செய்துகொண்
டிருந்த போது அரசாங்கத்தில் இருந்து ஒரு ஆணை வந்துவிட்டது.
அங்கங்கே உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் கலெக்டர்களுக்கு விண்ணப்
பித்துக் கொள்ள வேண்டும். கலெக்டர் மொத்தமாகப் பரிசீலனை செய்து,
எங்கே அதிகமான ஆசிரியர்கள் இருக்கிறார்களோ அவர்களை ஆசிரியர்
தேவைப்படுகிற இடங்களுக்கு மாற்றுவார் என்று உத்தரவிடப்பட்டது.
அந்தமாதிரியாக பஞ்சாயத்து யூனியன்கள் எழுதினார்கள். ஓராண்டு
முடியப் போகிறது. இப்போது கலெக்டரிடம் இருந்து "வேறு எங்கும்
அதிக ஆசிரியர்கள் இல்லாததால் தேவைப்படுகிற இடங்களுக்கு அவர்களே
ஆசிரியர்களைப் போட்டுக் கொள்ளலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள்.
இப்படி அதிகாரத்தைக் கொடுப்பதும், மறுபக்கம் பறிப்பதுமாகச் செயல்
படக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ரெட் டேபிசத்திற்காகச்
சொல்லவில்லை.

இதிலே இன்னொன்றும் கூறப்பட்டிருக்கிறது. கல்வி இலாகா டைரக்டர்
கவனிக்கும்போது நிதிநிலை வரம்பையும் கவனித்துச் செய்ய வேண்டு
மென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிதிநிலை இவ்வளவுதான் இடம்
கொடுக்கிறது என்று சொல்லிவிட்டால் அதிகமான ஆசிரியர்களைப் போட
வேண்டிய அவசியம் இருந்தாலும் போட [illegible]





புதிய பள்ளிகளைத் திறக்க முடியாது. அதன் காரணமாக நியாயமான
கோரிக்கைகள்கூட கல்வி இலாகா டைரெக்டரால் தள்ளப்படக்கூடிய
சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலை இப்படியே நீடிக்குமானால் உண்மையி
லேயே ஆசிரியர் மாணவர் விகிதாசாரத்தைக் குறைத்திருப்பதால் அடைய
வேண்டிய நன்மையை அடைய முடியாமல் போய்விடும். ஆகவே, அந்த
விகிதாசாரத்தை நிறைவேற்றி வைக்கிற ஒரு காரியத்தை எளிதில் செய்ய
வேண்டுமென்றால் அந்தப் பொறுப்பைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக்
கொடுக்கவேண்டும். "பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், ஆணையாளர்
களும் ஆசிரியர்களை அடிக்கடி மாற்றிவிடுகிறார்கள்" என்ற குற்றச்
சாட்டு இரு தரப்பிலிருந்தும் சொல்லப்பட்டு வருகிறது. சமீபத்தில் ஆசிரியர்
களை அனாவசியமாக மாற்றக்கூடாது என்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு
விட்டன. இதிலே தகராறு வருவதெல்லாம் கமிஷனர்களாலேதான்.
எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால் எஜுகேஷன் சைடில் உள்ள ஒருவரை
கமிஷனராகப் போட்டிருக்கிறார்கள். அவருடைய புத்தியெல்லாம் எஜு
கேஷன் சைடிலேயே இருக்கிறது. அவர் சுமார் 10 ஆசிரியர்களுக்குச்
சம்பளத்தை நிறுத்தி வைத்திருக்கிறார். நடக்கக்கூடாத காரியம் எதையும்
அந்த ஆசிரியர்கள் செய்துவிடவில்லை. சர்வீஸ் புத்தகம் ஓபன் பண்ண
வில்லை என்று சம்பளத்தை நிறுத்தி வைத்திருக்கிறார். அந்த வேலையைப்
பஞ்சாயத்து யூனியன் பண்ண வேண்டும். ஆசிரியரே போய் சர்வீஸ்
ரிஜிஸ்டரை ஓபன் பண்ண முடியாது. திருமதி பொன்னம்மாள் பேசும்
போது "சுத்தமான தமிழில் பேசவேண்டும்; எழுத வேண்டும் என்ற
நிலைமை ஏற்பட்டதற்கு இந்த அமைச்சரவைதான் பொறுப்பு" என்று
சொன்னார்கள். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களை ஊராட்சி மன்ற
ஒன்றிப்பு அல்லது கூட்டு மன்றம் என்ற அளவிலே "ஊராட்சி மன்ற
ஒன்றிப்புப் பள்ளி" என்று போட்டு இருந்தது. ஆனால் அதைப்
"பஞ்சாயத்து யூனியன் பள்ளி" என்று மாற்ற வேண்டுமென்று
உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே தமிழ் மொழிமீது
ஆர்வமுள்ள அமைச்சர்கள் அத்தகைய உத்தரவை நீக்க வேண்டுமென்று
கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. கே. பொன்னையன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே,
கனம் முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் கல்வி
மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.
எலிமெண்டரி ஸ்கூல்களைப் பொறுத்தவரை 1962–63ல் 29,010 ஆக
இருந்தது 1963–64ல் 30,020 ஆக அதிகரித்திருக்கிறது. அதாவது 1,010
பள்ளிகள் அதிகரித்திருக்கின்றன. அதேபோன்று பையன்களின் எண்
ணிக்கை 1962–63ல் 39.46 லட்சத்திலிருந்து 1963–64ல் 43.72 லட்சமாக
உயர்ந்திருக்கிறது. ஹைஸ்கூல்களை எடுத்துக் கொண்டால் 189 புதிய
பள்ளிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. தற்போது தமிழ் நாட்டில் 25 பாலி
டெக்னிக்குகளும், 2 மகளிர் பாலிடெக்னிக்குகளும் இருக்கின்றன. கல்லூரி
களைப் பொறுத்து ஏற்கெனவே உள்ள 70 கல்லூரிகளோடு இந்த ஆண்டு
புதிதாக நாலைந்து கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த வகையிலே
நாம் கல்வியிலே ரொம்ப முற்போக்காக இருந்து கொண்டிருக்கிறோம்.

குழந்தைகளுக்குச் சீருடைத் திட்டம் மிக நல்ல திட்டம். குழந்தைகள்
சீருடை அணிந்துகொண்டு செல்வது பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது :
பரவசமாக இருக்கிறது. சென்னை போன்ற நகரங்களில் குழந்தைகள்
சீருடை அணிந்து செல்வது அவ்வளவு அழகாகத் தெரியாவிட்டாலும்
என்னுடைய பகுதியில் மலைப் பிரதேசத்தில் 40, 50 பள்ளிக் குழந்தைகள்
ஒருவர் பின் ஒருவராக சீருடை அணிந்து செல்வது பார்ப்பதற்கு மிக
அழகாக இருக்கிறது. அவர்கள் பச்சைப் பறவை, நீலப் பறவை, வெண்
பறவை என்ற பெயர்களை வைத்துக் கொண்டு மேலே இருந்து கீழே
செல்வதையும், கீழே இருந்து மேலே செல்வதையும் பார்க்கப் பரவசமாக
இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம்,
மாணவர்களுக்குச் சீருடை அளித்திருப்பது போலவே ஆசிரியர்களுக்கும்
சரியான சீருடை வழங்க வேண்டுமென்பதுதான். வாத்தியாரைப்
பார்த்தால் வாத்தியாராகவே இருக்கவேண்டும். அதே போன்று பள்ளிக்
கூடங்களைப் பார்த்தால் பள்ளிக்கூடங்களாகவே இருக்க வேண்டும். முன்
பெல்லாம் ஃபாரஸ்ட் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் பச்சை

கோட்டு, நீலக் கோட்டு என்று போட்டுக் கொள்வார்கள். அந்த உடையைப் பார்த்தே அவர்கள் இன்ன கல்லூரியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி விடலாம்.

நாங்கள் எல்லாம் படிக்கும்போது தாலுகாவுக்கு ஒரு ஹைஸ்கூல் இருக்கும். பொள்ளாச்சி தாலுகாவுக்கு உடுமலைப்பேட்டையில் மட்டும் ஒரு உயர் நிலைப்பள்ளி இருந்தது. ஆனால் இன்று ஆங்காங்கு பல உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு நாட்டு வருமானத்தில் கல்விக்காக ஐந்தில் ஒரு பாகம் செலவு செய்வது தகுதி வாய்ந்தது. பெருமைப் படக் கூடியது என்று சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் அதற்கும் அதிகமாகச் செலவு செய்தும் எதிர்க் கட்சிக்காரர்கள் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். "இந்தி, இந்தி" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்தி படித்தால் என்ன நஷ்டம்? நம்முடைய நாட்டில் பேச தமிழில் படிக்கிறோம்; அகில இந்தியத் தொடர்புக்கு இந்தி படிக்கிறோம்; உலகத்தோடு பேச ஆங்கிலம் படிக்கிறோம். அந்தக் காலத்தில் நான் ஆங்கிலம் படிக்கும்போது என்னுடைய தாய் தகப்பனார் மிகவும் பெருமைப் பட்டார்கள். புதுப் புது மொழிகளை படித்தால் உண்மையிலேயே பெற்றோர்கள் பெருமைப்படுவார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் இந்தி விஷயத்திலே மறுபடியும் பரிசீலனை செய்து மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மானியத்தை ஆதரித்து உரையை முடித்துக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The hon. Member Sri A. P. Dharmalingam should finish his speech within three minutes.

* **திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கல்விக்காக 31,32,17,000 ரூபாய் மானியத்தைக் கோரியிருக்கிறார்கள். மொத்தத்தில் நான்கில் ஒரு பங்கு தொகைக்கு மேல் கல்விக்காக ஒதுக்கியிருப்பதையும், இதிலே அவர்கள் எடுத்திருக்கிற அக்கரையையும் நான் பாராட்டுகிறேன். அதோடு மாத்திரமல்லாது 11-வது வகுப்பு வரையிலே எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவசக் கல்விச் சலுகை அளித்திருப்பது கண்டு உண்மையிலேயே நாடு போற்றுகிறது; நாங்களும் போற்றுகிறோம். முன்பு இருந்த அமைச்சரவை மதிய உணவுத் திட்டம், சீருடைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்த கல்வி இயக்குநர் திரு. சுந்தரவடிவேலு அவர்களையும், அந்த நேரத்தில் கல்வி அமைச்சராக இருந்த கனம் சுப்பிரமணியம் அவர்களையும் இந்த நாடு போற்றுகிறது: நாங்களும் போற்றுகிறோம். அப்படிப்பட்ட ஒரு திறமை மற்ற இலாகா அமைச்சர்களுக்கும் வரவேண்டுமென்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு வேளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதிக்கும் கல்விக்கும் அமைச்சராக இருக்கின்ற காரணத்தால் கல்விக்கு அதிகத் தொகை ஒதுக்கி விட்டார்களோ என்று குற்றம் சாட்டாமல் அவரவர்கள் தங்கள் தங்கள் இலாகாக்களுக்கு அதிகத் தொகை பெற்று மற்ற பல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக ஆசிரியர்களைப் பற்றிப் பேசினால், "ஆசிரியர்கள் அத்தனை பேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்" என்ற முறையிலே குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அப்படி உண்மையாக இருந்தால், குற்றம் சொல்வது சரியாக இருந்தால் அதைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதிலிருந்து காங்கிரஸ் கட்சிக்கு மாத்திரம் விதிவிலக்கு என்று இருக்கக்கூடாது. சென்ற பொதுத் தேர்தலின்போது அமைச்சர் வெங்கட்டராமன் அவர்கள் தஞ்சை தொகுதியில் சுற்றுப்பயணம் செய்த போது அரசாங்க மானியத்தைப் பெற்று நடத்துகின்ற பள்ளி ஆசிரியர் ராமமூர்த்தி பி.ஏ.,பி.டி. அவர்கள் அமைச்சருடன் காங்கிரஸ் கட்சிக்காகப் பிரசாரம் செய்தார்கள். சென்னை நகரத்திலே ரமணிபாய் என்ற ஆசிரியை கிருஷ்ணபாய் என்ற பெயரிலே பல காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களில் பேசி இருக்கிறார். இதைப் போல் பல என்னால் சொல்ல முடியும். அப்படிப் பட்டவர்கள் மேல் இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? ஆகவே, ஆசிரியர்கள் எந்தக் கட்சியையும் [illegible]





ஏற்படுத்த வேண்டும். ஆரம்ப பள்ளியிலே வேலை செய்கிற செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் சரிவர நடத்தப்படுவதில்லை. அங்கே பணிபுரிகிற சீனியர் ஆசிரியர்களை உயர்நிலைப் பள்ளிக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். 12-00 noon.

முன்பு மாவட்ட மன்றம் இருந்தபொழுது, உயர்நிலைப்பள்ளிகளும், ஆரம்பப் பள்ளிகளும் அவற்றின் நிர்வாகத்தில் இருந்தன. யூனியன்கள் வந்த பிறகு ஆரம்பப்பள்ளிகள் யூனியன் நிர்வாகத்தின் கீழ் வந்தது உயர்நிலைக் கல்விக்கு ஸ்பெஷல் ஆபீசர்கள் போட்டு நடத்தப்பட்டு வருகிறது. இப்போது கல்வித்தரம் குறைந்துவிட்டது என்று பலரும் சொல்கிறார்கள். முன்பு தரம் உயர்ந்திருந்ததற்குக் காரணம், மாவட்ட மன்றத்தின் கீழ் இருந்தபோது ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மாற்றி விடுவார்களோ என்ற அச்சம் ஆசிரியர்களுக்கு இருந்தது. ஆனால் யூனியன் ஏற்பட்ட பிறகு ஒரு பிர்க்காவிலிருந்து இன்னொரு பிர்க்காவிற்குத்தானே மாற்ற முடியும் என்ற நிலை இருக்கிறது. இந்த பிர்க்காவிலிருந்து அடுத்த பிர்க்காவிற்கு வேண்டுமானால் மாற்றலாம், இரண்டு மைல் தூரம் தானே, வேறு ஊருக்கு சேர்மனால் மாற்ற முடியாதே என்று கருதுவதினால்தான் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் அக்கறை காட்டுவதில்லை. பெரும்பாலோர் உள்ளூரிலேயே உழுது கொண்டு அல்லது மற்ற தொழில்கள் செய்து கொண்டு இந்த வேலையையும் பார்க்கிறார்களே தவிர இதில் மட்டும் குறிப்பாக கவனம் செலுத்துவது கிடையாது. ஆகவே இதைக் கல்வி இலாகா கவனித்து செகண்டரி கல்விக்கு இருப்பதைப் போன்று ஆரம்பப் பள்ளிகளுக்கும் ஒருதிட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கும் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் பார் எடுகேஷன் (கல்வி வளர்ச்சி அதிகாரி) தேவையில்லை. டெப்டி இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு என்ன வேலை? ஆகவே இவர்கள் வேலைகளை அந்தக் கல்வி கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைக்கவேண்டும். அப்பொழுதுதான் டெப்டி இன்ஸ்பெக்டர்களை ஆசிரியர்கள் மதிப்பார்கள். உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் பணி புரியும் செகண்டரி கிரேட் ஆசிரியர் அந்தப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்படும் போது அந்த ஆசிரியர்களையும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும். கட்டடம் போன்றவைகளை எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் அந்தப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக வருவதற்கு பாடுபட்ட அந்த ஆசிரியர்களை அங்கு அப்படியே விட்டு விட்டு புதிதாக ஆசிரியர்களை அந்த உயர்நிலைப் பள்ளியில் போடுகிறார்கள். ஆகவே அப்படிப் போடுவதால் பலருக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே கட்டடம் போன்றவைகளை எடுத்துக் கொள்ளும்போது அங்கு பணிபுரியும் ஆசிரியர்களையும் எடுத்துக் கொள்ள ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளுக்காக, அதன் கட்டட வசதிக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியை அதிகமாக ஒதுக்கவேண்டும். இப்போது 12,500 ரூபாய் கொடுத்தால் மீதி 12,500 ரூபாயை பொதுமக்களும் மற்றவர்களும் போடவேண்டுமென்ற நிலை இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களிடம், பஞ்சாயத்துகளிடம்பணம் கிடையாது. எல்லாவற்றிற்கும்நன்கொடை அளித்து வருவதால் கட்டடத்திற்காக நிதி கொடுக்க முடியவில்லை. ஆகவே புனராலோசனை செய்து அதிகத் தொகையை மான்யமாக கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல பஞ்சாயத்துக்களுக்கும் மதிய உணவிற்காக பணம் கொடுப்பதில்லை. என் தொகுதியில் ஆங்கரை பஞ்சாயத்து தலைவர் இதுவரையில் மதிய உணவிற்கு பணம் கொடுக்கவில்லை. [illegible] கொடுக்கவில்லை என்று கேட்க யாருக்கும் அதிகாரம் கிடையாது. [illegible] கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறார்கள்? [illegible] தலைவருக்கும், ஆணையருக்கும் உரிமை [illegible] செய்வதற்கு மட்டும் யூனியன் தலைவருக்கும், [illegible] நல்ல யோசனையைக் கேட்க அவர்களுக்கு [illegible] நான் சொல்லுகிற நல்ல யோசனையைக் கேட்க [illegible] இல்லையே என்கிறார். பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கும் [illegible] இடையே உள்ள தகராறு காரணமாக பஞ்சாயத்து போர்ட் தலைவருக்கும் இடையே [illegible] பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட [illegible] குழந்தைகள் [illegible] செய்து அவர்கள் கட்டாயம் கொடுத்தே [illegible] தடை [illegible] செய்து [illegible] கூடிய அளவில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று [illegible] கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் இப்போது பல [illegible] கேட்டு [illegible] வருகிறது. இருக்கிற கல்லூரியிலே இடம் [illegible] தடவை போராடி, வாதாடி, அமைச்சர் அவர்களிடமும் [illegible] சென்ற தடவை போராடி, [illegible] சிலயிடங்களைப் பெற்றோம். இப்போது யூனிவர்சிட்டியிடமும் போராடி

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [17th March 1964

பெரிய தொழிற்சாலை ஏற்பட்டதின் விளைவாக அங்கிருப்பவர்களின் குழந்தைகள் படிப்பதற்குத்தான் இடம் இருக்கும்போல் இருக்கிறது. சாதாரண ஏழை எளியவர்களுக்கு, திருச்சியில் வந்து படிக்க இயலாமல் போய்விடும். ஆகவே தனியாக கல்லூரி அமைக்கவோ அல்லது அதிக இடம் கொடுக்கப்படவோ வேண்டும். இறுதியாக, ஓய்வு பெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கு, முதியோர் உதவித் தொகைக்குக் குறையாத அளவுக்கு பென்ஷன் வழங்கவேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

***திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்களால் சுமார் 31 கோடி 32 லட்சத்திற்கு ஈடான கல்வி மான்யக் கோரிக்கை இந்த மன்றத்தினுடைய ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அதனையொட்டி எதிர்க்கட்சியினர் வெட்டுப்பிரேரணைகள் தந்துள்ளனர். அதனையொட்டி சில கருத்துக்களை நான் வழங்க விரும்புகிறேன். கல்வித் துறையைப் பொறுத்தவரையில் இந்த அமைச்சரவை அதிக அக்கறை செலுத்தி அதை ஆங்காங்கு வளர்த்து வருகிற நிலைமையை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த மாநில அரசு ஆண்டு ஒன்றுக்கு செலவு செய்கிற வரவு செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதியை கல்விக்காக ஒதுக்கி, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதிலும் இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் மேலும் இலவசக் கல்வியை 10-வது வகுப்பு வரையில் நிலைநாட்டிய அத்தகைய தன்மையை வரவேற்கிறோம். பாராட்டுகிறோம். இலவசக் கல்வி முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்த அத்தகைய செயலை உள்ளபடியே எதிர்கட்சியினர் சார்பாக வரவேற்கக்கடமைப் பட்டிருக்கிறோம். சென்ற அமைச்சரவை எப்படி மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து பாராட்டுதல்களைப் பெற்றதோ அந்த அளவிற்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் இலவசக் கல்வியைக் கொண்டு வந்தது குறித்து நாங்கள் பாராட்டுகிறோம். பாராட்ட வேண்டியவைகளை நாங்கள் பாராட்டத் தவறுவதில்லை. அவசியம் ஏற்பட்டால் குற்றச்சாட்டை எடுத்துச் சொல்லவும், நிலைமை ஏற்படுகிறபோது பாராட்ட வேண்டியவைகளை பாராட்டுகிற வகையில்தான் நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். அதையொட்டித்தான் ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் கூட அறிஞர் அண்ணாவின் பாராட்டுரைகளை எடுத்துத் தெரிவித்தார்கள். பாராட்ட வேண்டியவைகளை பாராட்ட நாங்கள் தவறியதில்லை என்பதற்கு அதுவே நல்லதொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. மதிய உணவுத் திட்டத்தை நாங்கள் மறுக்கவில்லை. அதை நடைமுறைப் படுத்துகிற வகையில் ஏற்படுகிற குளறுபாடுகளையும், அதில் ஏற்படுகிற ஊழல்களையும் தவிர்க்கவேண்டுமென்ற முறையில்தான் மற்ற அங்கத்தினர்கள் அமைச்சரவைக்கு சுட்டிக்காட்டுகிற வகையில் அதை நடத்திச் செல்வதில் உள்ள குறைபாடுகளை மிகத் தெளிவுற எடுத்துக் கூறினார்கள். கல்வி வளர்ச்சிக்காக ஐந்து கல்லூரிகளை நிறுவ முன்வந்திருக்கிற தன்மையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரியை திருநெல்வேலிக்கு எடுத்துச் செல்கிற அத்தகைய முயற்சி பற்றியும் எடுத்துச் சொல்லப்படுகிறது. வரவு-செலவுத் திட்டத்தின் போதே நான் குறிப்பிட்டேன். இங்கிருக்கும் கீழ்ப்பாக்கம் கல்லூரியை எடுத்து திருநெல்வேலியில் வைப்பதற்குப் பதிலாக இந்தக் கல்லூரியை இங்கேயே வைத்து விட்டு திருநெல்வேலி மாவட்டத்திற்கு புதிய ஒரு கல்லூரியை உருவாக்குகிற முயற்சியில் ஈடுபடவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கல்வித்துறையில் அதிக அக்கறை செலுத்தி அதை வளப்பதற்காக அதிகத் தொகைகளை ஒதுக்கி ஆரம்பப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகள் கல்லூரிகள் தொழில் நுட்பக் கல்லூரிகள் இவற்றை விரிவாக்கும் முயற்சியில் ஈடுப்பட்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களை பாராட்ட கடமைப் பட்டிருக்கிறோம். அந்த முயற்சி இன்னும் மேலோங்கக் கூடிய அளவில்தான் இருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்கு உணர்கிறோம். ஆகவே அதுகுறித்து மேலும் முயற்சி செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். தொழில் துறையைப் பொறுத்த வரையில் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது நம் மாநிலம் இந்தியத் துணைக்கண்டத்திலேயே இரண்டாவது நிலையில் இருந்து தொழில் வளர்ச்சியைப் பெருக்கிக் கொண்டு வருகிறது என்று எடுத்துக்கூறினார்கள்.



17th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கல்வித்துறை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் எடுத்துக்கொண்டால் நாம் இன்னும் பின்தங்கிய நிலையில்தான் வளர்ச்சியின் அளவு அமைந்திருக்கிறது என்பதை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. மேலும், இத்துறையில் நாம் மேலோங்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எந்தளவு நாம் விரிவு படுத்தி பெருக்கவேண்டியவர்களாக இருக்கிறோம் என்று பார்த்தால் 1955–56ம் ஆண்டில் இருந்த நிலையோடு 1961–62ம் ஆண்டு நிலையை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது பள்ளிகளை வளர்க்கிற அத்தகைய முயற்சியில் 11-வது இடத்தைத்தான் நம் மாநிலம் பெற்றிருக்கிறது. அந்த வகையில் ராஜஸ்தானை எடுத்துக் கொண்டால், 9,400 பள்ளிகள் இருந்த இடத்தில் 1961–62ல் 19,300 பள்ளிகள் வைக்கும் அளவிற்கு, 105 சதவீதம் பள்ளிகளை பெருக்கியிருக்கிறது. ஜம்மு காஷ்மீரை எடுத்துக்கொண்டால் 78·3 சதவீதம் அதிகமாக காட்டியிருக்கிறது. ஒரிஸ்ஸாவில் 15,400 என்றிருந்தது 24,800 பள்ளிகளாகி 61 சதவிகித உயர்வைக் காட்டுகிறது. மத்தியப் பிரதேசத்தில் 22,800 பள்ளிகள் இருந்தது. 1961–62ல் 29,800 பள்ளிகளாகி 30·7 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

ஒரிசா, மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், பீகார், ஆந்திர பிரதேசம், பம்பாய், தமிழ்நாடு என்ற அளவில் தமிழ்நாடு, 11-வது இடத்தில் வந்து, 29,600 ஆரம்பப் பள்ளிகள் என்று சொல்லப்பட்டு அதில் 1961–62ல் 29,800 என்ற அளவுக்கு ஏற்படுத்தி, 25.8 சதவிகிதம் என்கிற அளவுக்கு உயர்ந்திருப்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மாணவர்களின் சேர்க்கையைப் பொறுத்த அளவில் நாம் 13-வது இடத்தை அடைந்திருக்கின்ற நிலைமையை நம்மால் காணமுடிகிறது. ஆக அதிகமான அளவிற்கு ராஜஸ்தானில், ஐந்து லட்சம் மாணவர்களாக இருந்தது, 15 லட்சமாக உயர்ந்த அளவில், மாணவர்கள் சேர்க்கக் கூடிய சூழ்நிலையை அவர்கள் அங்கே வளர்த்திருக்கிறார்கள். இந்த முறையில் அவர்கள் ராஜஸ்தான் 220 சதவிகிதம் வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள். அந்த முறையில் இருக்கின்ற புள்ளி விவரங்களை எல்லாம் நாம் எடுத்துக்கூற விரும்பவில்லை. காரணம், நேரம் போதுமானதாக இல்லை. குறிப்பாக, ஜம்மு-காஷ்மீரில் 2 லட்சமாக இருந்தது 3 லட்சத்திற்கு வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள். அந்த அளவில் அவர்கள் 50 சதவிகிதம் வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஒரிசாவில் 8 லட்சத்திலிருந்து 17 லட்சத்திற்கு உயர்ந்து, 112½ சதவிகிதம் என்ற அளவை காண்பிக்கிறார்கள். மத்திய பிரதேசத்தில் 16 லட்சத்திலிருந்து 26 லட்சத்திற்கு உயர்ந்து 62·5 சதவிகிதத்திற்கு வளர்ந்திருக்கிறார்கள் என்பதனையும், உத்திரப் பிரதேசத்தில் 37 லட்சத்திலிருந்து 63 லட்சத்திற்கு உயர்ந்து, 70 சதவிகிதம் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதனையும், பீகாரில் 22 லட்சத்திலிருந்து 44 லட்சத்திற்கு உயர்ந்து 100 சதவிகிதம் வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதனையும், இப்படி ஆந்திரப் பிரதேசம், மைசூர், பம்பாய், தமிழ்நாடு என்று சொல்லி வரும்போது, 33 லட்சத்திலிருந்து 45 லட்சத்திற்கு உயர்ந்து 36·4 சதவிகிதம் என்கிற அளவுக்கு உயர்ந்திருக்கின்ற நிலையையும் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது போல், கேரளாவில் 25 லட்சத்திலிருந்து 35 லட்சத்திற்கு என்று வந்து அதில் 40 சதவிகிதத்திற்கு உயர்ந்திருக்கிறார்கள் என்பதனையும் காட்டியிருக்கிறார்கள். இந்த விதமாக மற்ற மாநிலங்கள் எல்லாம் எந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டவேண்டும் என்பதற்காக நான் இதைக் கூறுகிறேனே தவிர, நாம் பெற்றிருக்கின்ற வளர்ச்சி குறைவானது, ஆகவே இது பாராட்டுக்குரியதல்ல என்று சொல்லுவதற்காக அல்ல. நாம் அடைந்திருக்கிற வளர்ச்சிக்கு மேலும் வளர்ச்சி பெறுவதற்கு இதை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற அளவில்தான் இதை நான் சுட்டிக் காட்டுகிறேன். அந்த வகையில் ஆசிரியர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்த அளவில், நாம் 10-வது இடத்தை பெற்றிருக்கிறோம். ஆனால் இன்னும் நாம் அதிகமான அளவு வளர்ச்சி அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம், அதோடு நமது தேவையையும் அதிகப்படுத்துகின்ற அளவுக்கு நாம் திட்டங்களை கைக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இவற்றை எல்லாம் நான் எடுத்துக்காட்டுகின்றேன். புதிய கல்லூரிகள் எல்லாம்

தேவைக்கு ஏற்றவாறு வந்திருப்பதும் பாராட்டக்கூடியது என்று நான் முதலிலேயே குறிப்பிட்டேன். முக்கியமாக தொழில் நுட்பக் கல்லூரிகளை இன்னும் விரிவுபடுத்துகின்ற விதத்தில் தொழில்களை அறிந்து தாங்களாகவே அதை பயன் படுத்தி, தொழில்களை அமைத்து, அதன் மூலம் பொருளீட்டுவதற்கும், வாய்ப்பு அளிக்கின்ற முறையில், அவர்கள் ஆற்றலும், அறிவும் பெறுகின்ற வகையில் அரசு ஈடுபட வேண்டியது அவசியமாகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போதுள்ள நிலையில், அதிகமாக கலைக் கல்லூரிகள் ஏற்படுத்துவதில் தான், அதிகம்பேரும் ஈடுபடுகிறார்கள். கலைக்கல்லூரிகளை ஏற்படுத்துவதில் ஈடுபடுகின்றதை விடவும், தொழில் நுட்பக் கல்லூரிகள் ஏற்படுத்துவதில் அதிக ஆதரவும் ஊக்கமும், கொடுக்கவேண்டும். அதன் மூலமாக இதில் பயிலுகின்றவர்கள் நல்ல அறிவியல் அறிவு பெற்று, பொருட்களை தாங்களாகவே செய்யக்கூடிய ஆற்றலையும், பெற்று அதன்மூலமாக புதிய புதிய தொழில்கள் நாட்டில் அமைகின்ற வகையில், இந்த தொழில் நுட்ப கல்லூரிகள் நாட்டில் பரவலாக அமைகின்ற வகையில் அரசியினர் முக்கியத்துவம் தந்து, அதற்கு அதிகமாக பணத்தையும் ஒதுக்குவதற்கான முயற்சிகளில் அரசினர் ஈடுபடவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆதாரக் கல்வியைப் பொறுத்தளவில், அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற குறிப்புக்களில் ஆதாரக் கல்வியைப் பற்றி எந்தவிதமான குறிப்பும் தரப்படவில்லை. சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் தந்த குறிப்பில், ஆதாரக் கல்வியைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். . . . . "மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 2,000 தொடக்கப்பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றும் வேலைத் திட்டம் அடங்கியுள்ளது. இவ்வேலைத் திட்டம் ஆண்டு ஒன்றுக்கு 400 பள்ளிகள் என்ற வீதத்தில் நிறைவேற்றப்படும். இதையனுசரித்து 1961–62-ல் 400 பள்ளிகள் மாற்றப்பட்டன. இதுவரை சாதித்த சாதனைகளை ஒருங்குதிரட்டும் நோக்கத்துடன் இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. எனினும், துவக்கப் பள்ளிகளில் பாட முறையில் ஆதாரக் கல்வியின் முக்கிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆதாரக்கல்வி முறையில் பயிற்சி அளிப்பது தொடர்ந்து நடைபெறுகிறது. இதன் மூலம் ஆசிரியர்கள் ஒருங்கிணைந்த ஆதாரக் கல்விப் பாடத்தின் திருத்திய பாட முறையில் சேர்த்துள்ள நடைமுறைச் செயல்களில் பொதிந்துள்ள நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 19,400 ஆசிரியர்களுக்கு ஆதாரக் கல்வியில் பயிற்சியளிக்க வேண்டுமென உத்தேசித்தார்கள். 1962–63 இறுதிக்குள் இந்த ஆசிரியர்கள் எல்லாம் பயிற்சி பெற்றுவிடுவார்கள். இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் 1963–64ல் பயிற்சி பெறுவார்கள்................." என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் கூறப்பட்டிருப்பது போல் தற்போது, 19,400 ஆசிரியர்களும் பயிற்சி பெற்றிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இதைப் பற்றி மேலும் சொல்லுகின்ற பொழுது................ "வாசிப்பதற்குத் தகுந்த புத்தகங்கள் கிடைக்கச் செய்யவேண்டுமென்பதன் அவசியத்தை உணர்ந்து 2 முதல் 5 கிரேடு வரையுள்ள சிறுவர்களுக்காகப் புத்தகங்கள் வெளியிடும் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். இதன் கீழ் பல்வேறு கிரேடுகளுக்காக 39 புத்தகங்களும் ஆசிரியர்களுக்கு ஒரு வழிகாட்டி நூலும் இதுவரை வெளியிட்டுள்ளோம். மேலும் பதினொரு புத்தகங்கள் 1963–64ல் வெளியிடப்படும்......"

என்று சென்ற ஆண்டு கனம் அமைச்சர் அவர்கள் தங்கள் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். மேலும் இதே குறிப்பில்.................. "திரு. அரியநாயகம் அவர்களை ஒரே அங்கத்தினராக கொண்டு ஆதாரக் கல்விப் பள்ளிகளின் செயல்படும் வழிவகைகளை ஆராயும் பொருட்டு ஒரு குழு அரசினரால் அமைக்கப்பட்டது. குழுவின் அறிக்கை அரசினரின் பரிசீலனையில் இருக்கின்றது...."

என்றும் அமைச்சர் அவர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், இந்த ஆண்டு அறிக்கையில் ஆதாரக் கல்வி பற்றிய எந்தவிதமான குறிப்பும் காணப்படவில்லை. ஆதாரப் பயிற்சியை நிறுத்திவிட்டு, [illegible] கல்வியிலே எல்லாவற்றையும் மாற்றப்போகிறோம் என்கின்ற கருத்தை அரசினர் மேற்கொண்டு விட்டார்களா, அல்லது இனிமேல், [illegible]



கல்வி கற்றுக்கொடுக்கின்ற நிலைமை இல்லையா, இனிமேல் ஆதாரக்கல்வி என்பது தேவையில்லை என்கின்ற முடிவுக்கு அரசினர் வந்திருக்கிறார்களா, அல்லது திரு. அரியநாயகம் அவர்கள் அறிக்கையில் கூறப்பட்டிருப்பது போல் இந்தக் கல்வியினால் எந்தவிதமான பலனும் கிடைக்காது, கோரிய பலனும் இதனால் வராது என்கின்ற கருத்தை ஏற்றுக்கொண்டு இதை நிறுத்திவிட்டார்களா என்பதனையும், அப்படியானால் இனிமேல் அதனுடைய நிலை என்ன என்பதனையும் நான் அறிந்து கொள்ளவிரும்புகிறேன். தற்போது இதன் மூலமாக, 19,400 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருப்பார்கள் என்று நம்புகிறேன். அப்படியானால் இவர்களுக்காக செலவு செய்த பணம், இதற்காக உருவாக்கப்பட்ட புத்தகங்கள், இவைகள் எல்லாம் கேடற்ற தன்மையானதாகவும், இவைகள் எல்லாம் பயனற்றவையாகவும்தான் அமையும். திரு. அரியநாயகம் அவர்கள் இந்த ஆதாரக் கல்வியிலுள்ள நிலைமைகளைப்பற்றி நன்கு தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கல்வி திட்டம் பயனற்ற ஒன்றாக அமைந்திருக்கிறது, இதனுடைய குறிக்கோள் எதுவும் நிறைவேறிய நிலைமையில் இல்லை என்பதையும் இந்த மன்றத்திலும் பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து, இந்தத் திட்டத்தின் மூலமாக உருவான பலன் எதுவும் ஏற்படவில்லை என்பதனை அரியநாயகம் அவர்களது அறிக்கையில் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் தந்திருக்கின்ற அறிக்கையிலுள்ள கருத்துக்கள் எதிர்காலத்தில் நம்முடைய திட்டங்களை அமைப்பதற்கும், உருவாக்குவதற்கும், உறுதுணை புரியும் என்று நான் நம்புகிறேன். அரிய நாயகம் அவர்கள் அவர்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்............ ........"ஆதாரக் கல்வி ஆசிரியப் பயிற்சிப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் தகுதியும் அனுபவ அறிவும் தேவைப்படும் அளவு அமையவில்லை, ஆசிரியர்களிடத்தில் ஆதாரக் கல்வித் திட்டத்தில் ஆர்வமோ நம்பிக்கையோ, செயல் அனுபவமோ இல்லை...."

என்பதனை திட்டவட்டமாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். மேலும் இதைப் பற்றி அரியநாயகம் அவர்கள் எடுத்துச்சொல்லும்போது........

"பெரும்பாலான ஆசிரியர்களிடத்தில் அடிப்படைத் தொழில் பற்றிய அறிவு அறவே அமையவில்லை. ஆக்கப்பணிகளை, மாணவர்களோடு கலந்து மேற்கொள்ளுவதுமில்லை...."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் அவர்களுடைய அறிக்கையில் கூறப்படுவது....

"பாடத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய விவசாயத் துறை ஆசிரியர், ஒரு பள்ளிக்கூடத்தில் கூட இடம் பெற வில்லை. விவசாயத் தொழில் வல்லுநரின் பண்ணையில் பெறும் முயற்சி ஓரிடத்திலும் மேற்கொள்ளப்படவில்லை. கிணறும், மின்சாரமும் வாய்க்கப்பெற்ற பள்ளிகளிலும். அவை முழுமையாகப் பயன்படுத்தப்பெறவில்லை. கைத்தொழில் ஆசிரியர்களுக்கும், பிற ஆசிரியர்களுக்குமிடையில் தொடர்போ ஒருமைப்பாடோ நிலவவில்லை.

"ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள், பெரும்பாலும் வாடகையிடங்களில் இடம் பெற்றுள்ளன. அல்லது பொருந்தா இடங்களில் இடம் பெற்றுள்ளன. தகுதியில்லா சூழ்நிலை போதாத கட்டடங்கள், சுகாதார வசதியோ, மனமகிழ்மன்ற வசதியோ வாய்க்கப்பெறாத, இடநெருக்கடி மிக்க மாணவர் விடுதி இதுவே இன்றைய சூழ்நிலை..............."

என்று பல குறிப்புகளையும் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், மேலும், அரியநாயகம் அவர்கள் அந்த அறிக்கையில் சொல்லியிருப்பது....

........"விவசாயப் பண்ணையில் 1,600 மணி பணிபுரிய வேண்டும் என்ற திட்டம் எங்கும் செயல் படுத்தப்படவில்லை.'

நூல் எண்ணிக்கையிலும் தகுதியிலும் குறைபாடு மலிந்த நூல்நிலையம். வீட்டில் கற்பதை நாட்டில் செய்து காட்டு என்ற ஆதாரக் கல்வி திட்டம் முயற்சி அளவில் கூட எடுத்துக்கொள்ளப்படவில்லை.........."

என்கின்ற குற்றச்சாட்டை அந்த அறிக்கையில் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். மேலும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது....

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [17th March 1964

.... " சுகாதாரம், தூயவாழ்வு, என்னும் பொருள் பற்றிய பாடத் திட்டங்களின் நோக்கத்தை நிறைவேற்றவல்ல வழிமுறைகள் பாடத் திட்ட வரிசையிலோ, கல்வித் திட்ட நிகழ்ச்சி நிரலிலோ அறவே இடம்பெறவில்லை. பருத்தி, கைத்தொழில் அதன் முழு வளர்ச்சி நிலையில் மேற்கொள்ளப்படவில்லை. பெரும்பாலான மாணவ ஆசிரியர்கள் நூல் சிட்டங்களையும் நெய்த துணிகளையும் கடைகளில் விலை கொடுத்து வாங்கி வந்து, தங்கள் கைப்பணி பங்கீடுகளாகக் காட்டி விடுகின்றனர். இது அக்கல்வி நிலையங்களில் ஒழுக்கத்தையே உருக்குலைப்பதோடு, ஆதாரக் கல்வி திட்டத்தின் ஆணி வேரையே அழித்து விடுவதாகும்......."

என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இவ்விதமாக ஆதாரக் கல்வியின் நோக்கம் ஈடேரவில்லை. பயிற்சி பெற்றவர்கள் சரியாக இல்லை, பயிற்சி பெறுவதற்கும் மாதிரிப்பள்ளி வைக்கப்படவில்லை என்பதையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

"பயிற்சிப் பள்ளிகளுக்கு முறையான மாதிரிப் பள்ளிகள் இல்லை. மாதிரிப்பள்ளிகளாகக் கொள்ளும் பள்ளிகளில், ஆதாரக் கல்வித் திட்டத்தைக் கற்றுத் தருவதற்கு தேவையான உபகரணங்களோ, கற்பிக்கும் வாய்ப்போ சிறிதும் இல்லை......"

" பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்கள், பாடங்களை வாய்மொழியாகப் புகட்டும் ஆசிரியர்களிடமிருந்தோ, செயல் முறையால் விளக்கிக் காட்டும் கைத்தொழில் ஆசிரியர்களிடமிருந்தோ தேவைப்படும் விளக்கங்களைப் பெறுவது இல்லை......"

என்கின்ற அளவுக்கு இதிலிருக்கின்ற குறைகளை எல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு தரப்பட்ட குறிப்பில் எதுவும் சொல்லப்படாமல் இருப்பதைப் பார்த்தால், ஆதாரக் கல்விக்கான முயற்சிகள் எல்லாம் கைவிடப்பட்டுவிட்டதா, இந்தத்துறையில் மேற்கொண்ட முயற்சி எல்லாம் வேறு அறிவியல் தருகின்ற அளவில் இருக்கின்ற வேறு கல்விக்காக செலவழிக்கப்படுகின்றனவா, என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகின்றேன். அப்படியானால், இந்த ஆதாரக் கல்விக்காக செலவழி க்கப்பட்ட பணம், செலவழிக்கப்பட்ட நேரம் செலவழிக்கப்பட்ட நினைப்பு, முயற்சி அத்தனையும் வீண் என்று கருதி இந்த அறிக்கையில் அதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லையா, அந்த முடிவுக்கு அரசு வந்துவிட்டதா என்பதையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். இதன் மீது அரசினர் எந்தவிதமான திட்டவட்டமான முடிவுக்கு வந்திருக்கின்றனர் என்பதையும் கனம் முதலமைச்சர் அவர்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

இந்திப் பிரச்னையைப் பொறுத்த வரையிலும், இம்மன்றத்தில் பல தடவைகளில் கருத்துக்கள் பரிமாறப்பட்டிருக்கின்றன. அதிலே கட்சிக் கருத்துக்களுடைய அடிப்படையிலே, கட்சி மாச்சரியங்களுடைய அடிப்படையிலே வேறுபாடுகள், வேறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்பதை நாம் நன்றாக அறிவோம். இந்தியை ஆட்சி மொழியாக, பொது மொழியாக, பாட மொழியாக, பயிற்சி மொழியாக ஆக்குவதிலே ஆளும் கட்சியினருக்கும் எதிர்க் கட்சியினருக்கும் நிறம்ப வேறுபாடுகள் இருக்கின்றன. இந்தி அறவே தேவையில்லை, இந்தி படிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் அதற்குரிய வாதங்களை, காரண, காரிய விளக்கங்களை எடுத்து விளக்குகிறது. இந்தி வேண்டும் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள். ஆகவே, இதிலே இரண்டு தரப்பினருக்கும் இடையே நிச்சயமாக வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை உணரக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே அடிப்படையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். இந்திக்காகச் செலவழிக்கும் நேரத்தையும், பணத்தையும் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தலாம். இந்தி எதிர்காலத்தில் தேவைப்படாத ஒன்று என்று நாங்கள் எடுத்துச் சொல்லி வருகிறோம். அந்த அடிப்படையில்தான் கருத்துக்களை அவ்வப்போது பரிமாறிக்கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில்தான் பாடத் [illegible]



17th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வேண்டியதில்லை என்று சொல்லி வருகிறோம். தமிழ் அறிவு இருக்க வேண்டும் தமிழகத்தைப் பொறுத்த வரையில். ஆகவே, தமிழ் படிக்க வேண்டும். அகில உலகத் தொடர்புக்கு, வாணிபத்துக்கு ஆங்கிலமே பயன்படுமாதலால் ஆங்கிலத்தைப் படிப்பதன் மூலம் நம்முடைய நேரம், நினைப்பு, பொருள் எல்லாவற்றையும் காப்பாற்றி பாதுகாப்பு அளித்துக் கொள்ள முடியும் என்று நாங்கள் எடுத்து வைத்து வருகிறோம். இதிலே சென்ற ஆண்டு சொல்லப்பட்ட முறை மாறுவானேன் என்ற அத்தகைய குற்றச்சாட்டைக் கூறுகிறோம். இந்தி படிப்பது என்பது விருப்பப் பாடமாக வைக்கப்பட்டிருந்தது. இந்தி அல்லது வேறு மொழி என்ற அடிப்படையில் வைக்கப்பட்டிருந்தது. இந்தி படித்துத் தீரவேண்டுமென்ற அவசியம் இல்லை. விருப்பப்பட்டு எந்த மொழி எடுத்துப் படிப்பதானாலும், குறிப்பிட்ட அளவு மாணவர்கள் வந்தால் அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். ஆனால், குறிப்பாக பல பள்ளிகளிலும் இந்தி படிக்க வாய்ப்பும், வசதியும் ஏற்படுத்தி மறைமுகமாக இந்தியையே படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி, அதையே எடுத்துத் தீரவேண்டிய, அதையே படித்துத்தீரவேண்டிய அளவுக்கு மத்திய அரசும் மாநில அரசும் உறுதுணையாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டை எடுத்துக் கூறிக்கொண்டு வருகிறோம். சென்ற ஆண்டு இந்தி பரீட்சை எழுத வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லப்பட்டு, பிறகு எழுதலாம் என்று வந்து, எழுதினால் அதில் கிடைக்கக்கூடிய மார்க் கல்லூரி செல்லக் கணக்கிடப்பட மாட்டா, ஆனால் மற்றைய பாடங்களில் வாங்குகிற மார்க்கோடு கூட்டி, தேவைப்பட்டால் ஏதாவது ஒரு பாடத்தில் குறைவுபட்டால், உறுதுணை புரிகிற அளவுக்கு, மாடரேஷன் அளவுக்கு இருக்கும் என்று சொல்லப்பட்டது. இந்தி படிப்பது அவசியம், இந்தி அரசின் ஆட்சி மொழியாக ஆகியிருக்கிறது, ஆதிக்க வலிவு, அதிகார வலிவு காரணமாக ஆட்சி மொழியாகக் கட்டாயமாக இந்தி திணிக்கப்பட்டு விடும், பல்வேறு வகைகளில் முயற்சிகளை இந்தியப் பேரரசு எடுத்துக்கொண்டிருக்கிறது, ஆட்சி மொழியாகும் அத்தகைய நிலைமையில் அரசாங்க வேலைகளுக்கு இந்தி கட்டாயமாகக் கோரப்படும், எனவே இந்தி படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் படிக்கிறார்கள். இந்தி படித்தால்தான் வேலை கிடைக்கும் என்று கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் படிக்கிறார்கள். இங்கே மாணவர்கள் விரும்பிப் படிக்கிறார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூட எடுத்துத் தெரிவித்தார்கள். அரசாங்க உத்தியோகத்திற்குப் போகவேண்டுமென்று விரும்புகிறவர்கள் வேண்டுமானால் இந்தி படித்துக்கொள்ளட்டும். அரசாங்க உத்தியோகத்திற்குப் போகவேண்டுமென்ற நிலை இல்லாதவர்கள், திறமை படைத்தவர்கள், வாய்ப்பும் வசதியும் உள்ளவர்கள், இந்தி பரீட்சையில் உட்கார்ந்தால்தான் பல்கலைக் கழகத்தில் சேர முடியும். இந்திப் பரீட்சையில் உட்கார்ந்து எழுதாவிட்டால், அவன் பல்கலைக் கழகத்தில் சேருவது தடுக்கப்படும் என்று ஒரு சட்டம் கொண்டு வருவானேன்? சென்ற ஆண்டு இருந்ததை வைப்பதில் என்ன தவறு இருக்கிறது? அரசாங்க உத்தியோகமே தேவையில்லை. விஞ்ஞான அறிவு, பெற்றால் போதும், தமிழ் அறிவு பெற்றால் போதும் என்ற எண்ணம் கொண்டவர்கள், பல்கலைக் கழகத்தில் சேர, வேறு பல துறைகளில் சேர்ந்து படிக்க ஏன் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது? வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் படிக்க வசதி செய்து, தான் மற்ற பாடங்களில் பெற்ற மார்க்குகளையே பயன்படுத்திக் கொள்ளும் முறையில், மற்ற பாடத்தில் மார்க் குறைந்தாலும் இந்தியில் பெறுகிற மார்க்கைப் பயன்படுத்திக்கொள்ள இடம் வகுக்கப்பட்டாலும், அது தேவையில்லை என்று கருதுகிறவர்கள் படித்து பல்கலைக் கழகத்தில் சேர சென்ற ஆண்டு இருந்த அதே முறையைக் கடைப்பிடிப்பதிலே என்ன தவறு இருக்கிறது? அதை நீக்கத் தேவையில்லை. புதிய உத்திரவைக் கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை. இந்தி கட்டாயம் இல்லை. வேறு எந்த மொழி வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம் என்ற வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தினாலும் கூட பல உயர்நிலைப் பள்ளிகளில் அந்த வாய்ப்பு இல்லை. கன்னடம் தெலுங்கு போன்ற மொழிகளுக்கு வசதி உள்ள உயர்நிலைப் பள்ளிகள் 100-க்குள் தான் இருக்கின்றன என்ற புள்ளி விவரத்தை முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [17th March 1964

மற்ற இடங்களில் இந்திக்கான வசதிகள்தான் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தியைத் தான் படித்துத் தீர வேண்டும். இந்தி பரீட்சைக்கு உட்கார வேண்டும் என்ற கட்டாயம் காரணமாக, இந்தி மொழி விருப்பப் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டாலும், நடைமுறையில் கட்டாயப்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது. இந்தியை விருப்பப் பாடமாக வைத்திருக்கிறோம்; எனவே, புதிய உத்திரவைப் பின் வாங்கி சென்ற ஆண்டு இருந்த நிலைமையை நிலைநாட்ட வேண்டுமென்று முதல் அமைச்சரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் தான் இந்தி மறைமுகமாகத் திணிக்கப்படுகிறது என்று எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். நமது முதல் அமைச்சர் அவர்கள் கூட டில்லியிலே மத்திய அரசினர் கூட்டிய மாநாட்டுக்குச் செல்லும் போது தெரிவித்தார்கள். இந்தி அகில இந்திய வேலைகளுக்கான தேர்வு மொழியாகப் புகுத்தப்படுகிற முயற்சிகள் இருக்கும்போது, இப்போது இருக்கிற அத்தகைய நிலை—அதாவது ஸ்டேடஸ் கோ—இருக்கும் நிலையை வற்புறுத்துவேன், ஆனால் அங்கு ஏற்படுகிற முடிவு எப்படி இருக்குமோ என்று அத்தகைய ஐயப்பாடு உணர்ச்சியோடு இங்கே கருத்துத் தெரிவித்தார்கள். நாங்கள் எங்கள் நிலையை அமைச்சரிடத்தில் வற்புறுத்துகிறோம். அமைச்சர் அவை சில கட்டுத்திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு எங்கள் கோரிக்கை நிறைவேறாது இருக்கிறது. எங்களுக்கு இந்த அமைச்சரைப் பொறுத்த வரையில் எப்படி இருக்கிறதோ, இந்த அமைச்சருக்கு முன்னால் எந்த நிலைமை இருக்கிறதோ, அம்மாதிரியான நிலைமை அமைச்சருக்கு அகில இந்திய ஆட்சியினர் முன்னால் இருக்கிறது. இந்த நிலையை வற்புறுத்துகிறேன் என்று சொல்லியும் அமைச்சருக்கு அங்கே வெற்றி பெற வாய்ப்பு இல்லை. இருக்கிற நிலையை அப்படியே விடுவதன் மூலமாக அமைதியான சூழ்நிலை ஏற்பட்டு, நாட்டு வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படாத அளவுக்கு, மாச்சரியங்களும், விபரீத விளைவுகளும் ஏற்படுவதைத் தடுக்க வாய்ப்பு ஏற்படும் என்று முதல் அமைச்சர் உணர்ந்து, அதை அங்கே எடுத்துச் சொல்லியும், அந்தக் கருத்து அங்கே ஏற்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு இந்தியப் பேரரசில் ஆட்டிப் படைக்கிற அளவுக்கு, இந்தி வளமற்ற மொழியாக இருந்தாலும், இலக்கணமற்ற மொழியாக இருந்தாலும், இலக்கியமற்ற மொழியாக இருந்தாலும், இந்தியை கட்டாயமாக்க வேண்டாம் என்று சொன்னாலும், அப்படி சொல்லுவது அமைச்சராக இருந்தாலும், மாநில முதலமைச்சர்களாக இருந்தாலும், அகில இந்திய அரசு இன்றைக்கு ஆட்டிப் படைக்க முடியும் என்ற காரணத்தினால், இந்தியைத் திணித்து அகில இந்தியாவையும் ஆட்டிப் படைக்க வேண்டும் என்ற ஆதிக்க உணர்வினால், நியாயமான கோரிக்கைகளைக் கூட ஏற்று, நல்ல தீர்ப்புக்களை அளிக்கும் சூழ்நிலை இல்லை என்று இந்தக் கருத்துக்களிலிருந்து அறிகிறோம். முதல் அமைச்சர் அவர்கள் பத்திரிகைக்காரர்களுக்குத் தந்திருக்கிற பேட்டி மூலமாக அறிகிறோம். இருக்கிற சூழ்நிலையை எடுத்துத் தெரிவித்ததாகவும், இங்கே இந்திக்கு எதிர்ப்பு உணர்ச்சி இருக்கிறது, ஆகையால் இப்போது தேவையில்லை என்று எடுத்துத் .தெரிவித்ததாகவும், அப்படியே இந்தியே இருக்க வேண்டுமானால், இந்தி சொற்களைப் பயன்படுத்தாமல், ஆங்கில சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்று எடுத்துக் கூறினேன் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் ஆதிக்க உணர்வுகொண்டிருக்கிற காரணத்தினால் எப்படியும் இந்தியைப் புகுத்தித் தீரவேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறவர்கள், நியாயமான கோரிக்கையை எடுத்து வைத்தாலும், முதல் அமைச்சர்களெல்லாம் எடுத்து வைத்தாலும்கூட, கோரிக்கைகளை கேட்காத அளவுக்கு நிலைமைகள் நீடித்து வருகின்றன என்பதைப் பார்க்கிறோம். அந்த அநியாயமான, நியாயத்திற்கு மாறுபட்ட கருத்துக்கு [illegible] ஏற்படக் கூடாது என்று எதிர்க்கும் பணியில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டு, தங்கள் அறிவு, ஆற்றல், தங்கள் தன்மைக்கு ஏற்ப, இந்திக்கு எதிர்ப்பு உணர்ச்சிகளைக் காட்டி வருகிறார்கள். அந்த அடிப்படையில்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்த மன்றத்திலும் பொது மன்றங்களிலும் தங்கள் கருத்துக்களை எடுத்து வைக்கிறார்கள். எனவே, சென்ற ஆண்டு இருந்த நிலைமை இந்த ஆண்டும் வருவதில் இந்த அவை பொறுத்த வரையில் எந்தத் தகராறும் இருக்க நியாயம்



17th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இல்லை. எனவே புதிய உத்திரவைத் திரும்பப் பெற்று, பழைய முறையை நிலைநாட்ட முதல் அமைச்சர் முன்வர வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1964–65 திட்ட மதிப்பீட்டின்படி கல்வித் துறைக்கு 31, 32 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் 1963–64 மதிப்பீட்டிலே 29,25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். திருத்த மதிப்பீட்டைப் பார்க்கும்போது 28,60 லட்சம் ரூபாய் என்று போட்டு அதிலே 65 லட்சம் ரூபாய் குறைந்து காணப்படுகிற நிலைமை காணப்படுகிறது. சென்ற ஆண்டு திட்ட மதிப்பீடு போட்ட காலத்தில், போர் நிலைமையோ, மற்ற அவசர நிலைமையோ கடந்த நிலையில் திட்ட மதிப்பீட்டை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். போர் நிலை அல்லது அவசர நிலைக்கு முன்னால் திட்ட மதிப்பீடு போடப்பட்டிருந்தால், திட்ட மதிப்பீட்டில் குறைந்திருந்தாலும், அதனால் குறைந்திருக்கிறது என்று காரணம் சொல்லப்பட்டாலும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கும். ஆனால் சென்ற ஆண்டு திட்ட மதிப்பீடு போடும் நேரத்தில் போர் நிலையும், அவசர நிலையும் மாறிய சூழ்நிலையில் திட்ட மதிப்பீடு போட்டோம். இதற்கான காரணங்கள் என்ன என்று இந்த அறிக்கையிலிருந்து கிடைக்கவில்லை. ஏன் 29,25 லட்சம் ரூபாய் கோரப்பட்டு 28,60 லட்சம் ரூபாயாக ஆயிற்று. ஏன் 65 லட்சம் ரூபாய் குறைத்து மதிப்பிடும் நிலை ஏற்படவேண்டும் என்ற விளக்கத்தை முதல் அமைச்சரிடத்திலிருந்து பெற விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வளர்ச்சியினுடைய அடிப்படையிலே பார்க்கிறபொழுது கல்வித் துறையை பொறுத்தவரையிலும் பல இனங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் குறைத்து செலவழிக்கப்படுகின்ற அத்தகைய சூழ்நிலைகள் இருக்கின்றன. ஐந்தாண்டுகளுக்கும் சேர்த்து ஒதுக்கப்பட்ட அத்தகைய தொகையில்கூட பல குறைக்கப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன ? எதிர்காலத்தில் இப்படிப்பட்ட திட்டங்களை மேற்கொண்டதாக அரசு இருக்கிறதா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

12-30 p.m.

ஆசிரியைகளுக்கு குடியிருப்பு இடம் அதிகமாகக் கட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தாலும் அதற்குப் பிரிபெரன்ஸ் முதலதர இடம் கொடுக்கிற அளவுக்கு, ஆசிரியைகளுக்கு குடியிருப்பு இடம் கட்டித் தருவது என்ற திட்டத்தின் கீழ், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1963–64 வரையில் 8 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் அளவுக்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1964–65-ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில், ரூ. 4 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, முதல் நான்கு ஆண்டுகளுக்கும் சேர்த்து ரூ. 12,75,000 செலவழிக்கப்படும் நிலைமை இருக்கிறது. மேற்கொண்டு ரூ. 12,25,000 மீதம் இருக்கிறது. அதை ஒரே ஆண்டில் செலவழிக்க இருக்கிறார்களா ? அல்லது இந்தத் திட்டம் குறைக்கப்பட்டு இருக்கிறதா ? குறைக்கப்படாத அளவுக்கு, இந்தத் திட்டம் முழுவதும் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு, இந்த நோக்கம் நிறைவேற்றப்படுகிற அளவுக்கு அத்தகைய முயற்சியில் . அரசு ஈடுபட வேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிற அளவுக்கு, இந்தக் கணக்குகளைச் சொல்லுகிறேன். நான்கு ஆண்டுகளுக்கு ரூ. 12,75,000 செலவழிக்கிற திட்டமாகவும், ரூ. 12,25,000 மீதப்படுகிற அளவுக்கும் இருக்கிறது. அதை ஒரே ஆண்டில் செலவழிக்க இருக்கிறதா அல்லது குறைக்க இருக்கிறதா என்ற நிலைமையை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாணவர்களுக்குத் தங்கும் விடுதி கட்ட வேண்டும் என்பதற்காக மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 18 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1964–65-ம் ஆண்டு திட்ட மதிப்பீட்டையும் சேர்த்து ரூ. 11 லட்சம் செலவழிக்கப்படுகிற அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது. மிகுதி ரூ. 7 லட்சம் இருக்கிறது. அதை ஓராண்டு காலத்தில் செலவழிக்கத் திட்டம் இருக்கிறதா? அல்லது அதைக் குறைக்கத் திட்டம் இருக்கிறதா என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதைக் குறைக்காத அளவுக்கு, போட்ட திட்டத்தை, நோக்கத்தை நிறைவேற்றுகிற அளவுக்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உயர் இடைப் பள்ளிகளுக்காக ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் என்ற முறையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 16,68,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் அதில் எத்தகைய தொகையும் செலவழிக்கப்படாத அத்தகைய சூழ்நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ? அந்த நிலைமையை அடியோடு ஒழித்துவிட்டதுதான் காரணமா ? அல்லது திட்டவட்டமான முடிவா ? அந்த அரசு உயர் இடைப் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கிற திட்டத்தில் மாறுதல் ஏதாவது கண்டு இருக்கிறதா ? அல்லது அந்த அளவுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை வேறு துறைகளுக்குத் திருப்புகின்ற அத்தகைய முயற்சியை அரசினர் மேற்கொண்டிருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகப் பாணியங்கள் என்ற வகையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வளர்ச்சியில் ரூ. 35 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையில் 1964–65-ம் ஆண்டு முடிய திட்ட மதிப்பீடு அளவில் அந்தக் கணக்கு வரையில், ரூ 6,90,000 செலவழிக்கப்படுகிற நிலையை இருக்கிறது. அதில் பாக்கி ரூ. 28,10,000. இம்மாதிரி பாக்கி, போட்ட திட்ட அளவில் இருக்கிறது. இந்த நிதியிருப்பை நிலைமை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

படக் காட்சி மூலம் கல்வியைப் போதிப்பதற்கென்று ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1964–65-ம் ஆண்டு திட்ட மதிப்பீடு அளவு வரையிலே ரூ. 66,000 செலவழிக்கப்படுகிறது. மேலும், ரூ. 34,000 மீதப்படுகிறது. இதை எந்த அளவில் செலவிட இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வது மட்டுமல்லாமல், படக் காட்சி மூலம் பாடங்களைப் போதிக்கிற அத்தகைய முயற்சிகளை மிக மேற்கொள்ளுவது நல்லது. உயர்நிலைப் பள்ளிகளில் படக் காட்சி மூலம் கல்வி போதிக்கின்ற அத்தகைய முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. கூடுமானால், ஆரம்பப் பள்ளிகள் நிலைக்கும் அதை விஸ்தரித்து, படக் காட்சி மூலம் பூகோளத்தையும், வரலாற்றையும், வேறு பல பாடத் திட்டங்களையும் போதிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். சொல்லிக் கொடுத்து மாணவர்களின் உள்ளத்தில் ஏற்றுவதை விட, படக் காட்சி மூலம், பூகோளம், வரலாறு, மற்ற பல பாடங்களையும் போதிக்கச் செய்வது மிக மிக நல்லது. அடிக்கடி ஆண்டுதோறும் ஆசிரியர்கள் இருந்து சொல்லிக் கொடுக்கிற அத்தகைய வழியினை விட, ஒரு தடவை படம் எடுத்து, அதன் மூலம் போதிப்பது நன்மை பயக்கும். அதற்காகச் செலவழிக்கிற தொகை பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பயன்படும். ஆகவே, படக் காட்சி மூலம் கல்வி போதிப்பதற்குத் தீவிரமாக திட்டமிட்டு, அதிகமான தொகையை அதற்காக ஒதுக்கி, மிக நல்ல முறையில் எல்லா பள்ளிகளிலும் அதை அமல்படுத்தி கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும். நல்லொழுக்க போதனைகளை மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்கு படக் காட்சிகளை மிக நல்ல முறையில் பயன்படுத்தலாம். மாணவர்களுக்குப் போதிப்பதற்கு ஒழுக்கக் கல்வி, வரலாறு, கதை நிகழ்ச்சிகள், இலக்கிய வரலாறு, இவைகளை படமாக்கிக் கொடுப்பதன் மூலம் நல்லதொரு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதையும் வற்புறுத்திக் கூறிக்கொள்ளுகிறேன்.

பொதுவாக மாணவர்களுடைய நிலைமையைப் பொறுத்த வரையிலும், இப்பொழுது உயர்நிலைப் பள்ளி, பி.யு.ஸி. படிப்பு ஆகியவற்றிலிருந்து படித்து வெளிவருகிற மாணவர்கள், பட்டப் படிப்பு படித்து வெளிவருகிற மாணவர்கள் ஆகியோருடைய கல்வி நிலையைப் பொறுத்த வரையிலும், பொதுப்படையாக நிலவும் எண்ணம், சாதாரணமாகத் கல்வித் தரம் குறைந்திருக்கிறது என்பதுதான். கல்வி வளர்ந்து இருக்கிறது. விரிவு அடைந்து இருக்கிறது, கல்வி நிலையங்கள் ஆங்காங்கு பெருகியிருக்கின்றன. ஆனால் பெறும் கல்வியின் தரம் நாளுக்குநாள் குறைந்த அளவுக்கு இருக்கிறது, என்ற கருத்துக்களைப் படித்து அறிந்தவர்கள் எடுத்துச் சொல்லுகிறார்கள். பட்டமளிப்பு விழாக்களிலும், சொற்பொழிவாளர்கள் இந்தக் குறைபாட்டை அவ்வப்பொழுது சுட்டிக்காட்டி வருகிறார்கள். இருக்கிற நிலைமையைப் பார்த்தாலும் கூட, கல்வியிலே தரக் குறைவு



ஏற்படுகிற அத்தகைய சூழ்நிலையை நாம் பொதுப்படையாகக் காண்கிறோம். தரக் குறைவு ஏற்படாத அளவுக்கு, எந்த அளவுக்கு நாம் கல்வியை விரிவுபடுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோமோ, அதற்கேற்ப தரக் குறைவு ஏற்படாத அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. தரக்குறைவை நீக்குவதற்கு என்னென்ன முயற்சிகளை தீவிரமாக மேற்கொள்ளவேண்டுமோ அந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும், அல்லது, அதற்காக ஒரு வல்லுனர்கள் கொண்ட குழுவை அமைத்தாவது, கல்வித் துறையில் கற்றுணர்ந்த பெரியோர்களைக் கொண்டாவது அதை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகளைக் கனம் முதல் அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆண்டில் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வெளியிட்டிருக்கிற அத்தகைய அறிக்கையில் தரக் குறைவான நிலைமைகள் எப்படி பொதுவாக அமைந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இதை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம், இதைக் கருத்திலே கொள்வதன் மூலம் இப்படிப்பட்ட தரக் குறைவு எதிர்காலத்தில் ஏற்படாத அளவுக்கு கல்வியை தரப்படுத்தும் வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும். சாதாரணமாக கல்வித் துறையைப் பொறுத்த வரையிலும், இருக்கிற பல ஆசிரியர்களும், மற்றவர்களும், பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது, அதற்காக வந்து விண்ணப்பம் செய்து வேலை பார்க்க முன் வருபவர்களுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்பதைச் சுருக்கமாகச் சொல்லுகிறபொழுது, மிகத் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள் இந்த அறிக்கையில் :

"Lack of clarity of thought and proper expression were evident in the answers given by most of the candidates."

என்ற நிலைமையை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

"Doubt and uncertainty is the key-note of the answers. No one is bold enough to answer what he knows clearly without hesitation."

என்ற கருத்தையும் சொல்லி

"Another feature that is often noted was the lack of preparation to face the oral test by the candidates. Knowing fully well that the posts are designed for teaching degree and Post-Graduate classes, coming for an interview without even reading the elementary aspects of the subject is difficult to understand."

என்ற கருத்தை தெளிவுபட பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். மேலும் சொல்லுகிறபொழுது,

"It is rather difficult to understand what the students are learning from teachers of that type with poor expression and inadequate knowledge of the subject.

Probably one method of testing the candidates for the teaching posts is to make each one to take a class or give a Seminar on any related topic. This gives a good opportunity to study their talents and is usually followed in some countries like U.S.A. No doubt considerable time will be taken in this process."

என்று எடுத்து சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர்களை பொறுக்குகின்ற அத்தகைய அளவிலாவது, அவர்களுடைய படிப்பு ஏடுகள், நற்சான்றிதழ்கள் இவைகளை மட்டுமே வைத்து பொறுக்கி எடுக்காமல், சர்வீஸ் கமிஷன் அறிக்கையிலே சிபார்சு செய்யப்பட்டபடி, அவர்களை பாடங்களைச் சொல்லிக் கொடுக்கச் சொல்லி அவர்களுடைய திறமையும் ஆற்றலையும் ஆராயக்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [17th March 1964

கூடிய அத்தகைய முறை மூலம், ஸெமினார் வற்படுத்தி அவர்கள் அறிவை யும், ஆற்றலையும் எந்த அளவுக்குப் பயனபடுத்துகிறார்கள் என்ற அளவுக்கு காணுவதன் மூலம், அப்படிப்பட்ட பாடங்களைச சொல்லிக்கொடுக்கிற ஆசிரி யர்களையும், பேராசிரியர்களையும் தேர்ந்தெடுக்கும் நிலைமையை கையாள் வதன் முலம், தரத்தை உயர்த்திக் காட்டுவதற்கு வழிவகைகள் காணுதல் வேண்டும் என்றும கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, மற்ற துறை களிலும் வெளிவருகிற நீண்ட அறிக்கைகளிலே பல்வேறு நிலைமைகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. விவசாயத் துறையினைப்பற்றி பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அறிக்கையிலே

"Candidates from the Research Sections were not able to answer simple questions relating to extension work and office management."

என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் சொல்லும்பொழுது,

"One point that came to the notice of the members was that candidates who have put in 5 to 12 years service have been working in their home district and home towns in various capacities for several years. Such candidates had no practical knowledge of agriculture and crops in other districts and general knowledge of agriculture in the State."

என்றும் கூறியிருக்கிறார்கள்.

பி.எஸ்.ஸி., எம்.எஸ்.ஸி. படித்து வருகிற பாடங்களின் தரத்தை எடுத் துச் சொல்லுகிறபொழுது....,

"Their power of expression and clarity of speech was appallingly poor."

என்று கூறியிருக்கிறார்கள். மேலும்,

"They were not really able to answer even simple questions on Entomology."

என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மேலும் பொதுவாக எடுத்துச் சொல்லு கிற பொழுதுகூட, ஆங்கிலத்தின் நிலைமையையும், அவர்களுடைய தரம் குறைந்திருக்கிற நிலைமையையும் சுட்டிக்காட்டுகிற பொழுது,

"Many of the candidates had not learnt the correct use of words and phrases. Idioms peculiar to the regional language were literally translated into English. In letter-writing the connections were not followed at all. There was uniformly high standard in legible handwriting."

என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும்,

"The language used was faulty and in some cases poor and vague. Spelling was shocking and the answers revealed that the candidates did not care for grammar or style. Random guessing was very common. The knowledge of candidates in current affairs and events was rather poor."

"Most of the candidates wrote tolerable English though the contents of their answers were not up to the mark. The recurring errors in language were in sequence of tenses and agreement of subject and predicate. Some of the candidates were very weak in spelling."



17th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைச் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம் இந்தக் குறைபாடுகளை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு, தரத்தை மேலாக்குவதற்கு என்னென்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமோ, அதற் காக வல்லுநர்கள் கொண்ட குழுவை அமைத்து, என்னென்ன முறைகளை மேற்கொண்டால், இந்தத் தரக் குறைவு ஏற்படாதோ அந்த அளவுக்கு நிலைமையைச் சரிக்கட்டுவதற்கு வேண்டிய முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய பல்வேறு குறைபாடுகளையும், மற்றவைகளையும் மன்ற உறுப்பினர்கள் பலர் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கல்லூரி களைப் பொறுத்த வரையில், சென்னை மாநிலக் கல்லூரி அரசாங்கத்தின் சார்பாக நடைபெறுகிறது. அங்கே போஸ்ட் கிராஜுவேட் எம். ஏ. படிப்பு கள் படிப்பதற்கு மாணவர்கள் விண்ணப்பம் செய்கின்ற அளவுக்கு அவர் களை எடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. சென்னை மாநிலக் கல்லூரியில் இட வசதி போதாது. புதிய கட்டடங்கள் எழுப்புவதற்கும் வழிவகை இல்லை. போஸ்ட் கிராஜுவேட், எம்.எஸ்.ஸி. படிப்பதற்கு ஆர் வத்தோடு விண்ணப்பம் செய்கின்றவர்களின் எண்ணிக்கை ஆயிரத்துச் சில்லரையாக வளர்ந்திருக்கிறது. எடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 300 சில்லரை என்று கருதுகிறேன். நூற்றுக் கணக்கான அளவிலேதான் இருக்கிறது. ஆகவே, சென்னை மாநிலக் கல்லூரியை போஸ்ட் கிராஜு வேட் ஸ்டடிக்காக ஒதுக்கிவிட்டு, அங்கேயிருக்கிற பி.ஏ. கோர்ஸ், மற்றவை களை கலைக் கல்லூரிக்கு அல்லது வேறு கல்லூரிகளுக்கு மாற்றிவிட்டு, போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸை மட்டும் சென்னை மாநிலக் கல்லூரியில் வைத்து, அதிகமான மாணவர்களை எடுப்பதன் மூலமாக அந்தக் குறை பாட்டைப் போக்கவும், அதிக இட வசதி செய்து தருவதற்கும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, இருந்த இண்டர்மீடியேட் வகுப்பு நீக்கப்பட்டு, இப்பொழுது பி.யு.ஸி. வகுப்பு புகுத்தப்பட்டு, பட்டம் பெறுபவர்களின் நிலைமையை மூன்று ஆண்டு காலமாக ஆக்கியதன் மூலமாக எப்படி நிலைமைகள் இருக்கின்றன, அதன் காரணமாகத் தரக் குறைவு ஏற்பட்டிருக்கிறதா, ஏற்கெனவே இருந்த நிலைமையைவிட இப்பொழுது நல்ல நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பதைக் குறித்து வல்லுநர்களிடத்திலும் கல்வி வல்லுநர்களிடத்திலும், கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அதைக் கண்டறிவதற்கு ஒரு குழு அமைத்தோ அல்லது வேறு முயற்சிகள் எடுத்தோ கண்டிருக்கிறார்களா ? இல்லை என்றால், காணுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பரிசுப் பத்திரங்கள் வாங்குகிறபொழுது, ஆசிரியர்கள் தொல்லைப்படு கின்ற சூழ்நிலை இருக்கிறதென்று கூறப்படுகிறது. கனம் அமைச்சர் அவர் கள் கூறுகிறபொழுது, யாரையும் வற்புறுத்திச் செய்கின்ற அத்தகைய நிலைமை இருக்காது. அவரவர்கள் தாங்களாகவே விரும்பித் தருகின்ற அளவுக்கு பரிசுப் பத்திரத் திட்டங்களும், சிறு சேமிப்புத் திட்டங்களும் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ஆனால் சிற்சில இடங்களில் அவர் கள் வாங்குகிற சம்பளத்திலிருந்து ரூ. 10 பரிசுப் பத்திரங்களுக்காகக் கட்டாயமாக எடுத்துக்கொள்ளுகிற அத்தகைய சூழ்நிலை இருக்கிறது. எல்லா இடங்களிலும் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. சில பல இடங் களில் இந்தக் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப் போனால், வத்தலக்குண்டு பஞ்சாயத்து யூனியனில் கமிஷனர் சம்பளம் பட்டுவாடாச் செய்கின்ற ஆசிரியர்களுக்கு ஒரு குறிப்பை அனுப்பி "சம்பந் தப்பட்ட பள்ளிகளில் சம்பளப் பட்டுவாடாச் செய்யும் ஆசிரியர்கள் அவரவர் கள் தொகுதியைச் சேர்ந்த ஒவ்வொரு ஆசிரியரிடமும் 2-3-64-ம் தேதி யன்று சம்பளப் பட்டுவாடாச் செய்யும்பொழுது, பரிசுப் பத்திரத்திற்கென ரூ. 10 பிடித்தம் செய்ய வேண்டும்" என்று அறிக்கை விட்டு, சம்பளத்தி லிருந்து கட்டாயமாகப் பிடிக்கிற நிலைமைகள் இருக்கின்றன. ஆசிரியர் கள், பிராவிடெண்ட் பண்டு, மற்றும் பல வகைகளிலும் பணம் செலுத்த வேண்டிய கஷ்டத்துக்கு ஆளாகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இந்தக் குறைபாடுகள் ஏற்படாமல் அவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளை அமைச் சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

சீருடையைப்பற்றி இந்த மன்றத்திலே எடுத்துக் கூறினார்கள். கனம் முதலமைச்சர் அவர்களும் அதற்கு ஆதரவான கருத்துக்களைத் தெரிவித் திருக்கிறார்கள். சீருடையை வகுத்து நடைமுறைக்குக் கொண்டுவருவதன் மூலமாக நல்லதோர் சூழ்நிலையை மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும், ஏற்படுத்த முடியும். சில பள்ளிகளில் அதை நல்ல முறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி நடைமுறைக்குக் கொண்டுவந்த பள்ளிகளில் மிகவும் நல்ல முறையில் எண்ணத்தைப் பொறுத்தவரை யில் ஒரு நல்ல சூழ்நிலை இருக்கிறது. கூடுமான வரையில், அரசினரே அவர்களுக்கு மற்றத் துறைகளில் இருப்பவர்களுக்கு உடைப் படி வழங்கு வது போல ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்குவதன் மூலம் இதை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சி எடுத்தால் நல்லது. ஐந்து, ஆறு ஆண்டுகளில் தவணைகள் கொடுத்து மெல்ல மெல்ல இதை ஆறாவது ஆண்டு இறுதியில் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும். எல்லாப் பள்ளிகளிலும் மாணவர்கள் புதிதாக துணி மணிகள் வாங்கும்போது இதற்கு ஏற்றார்போல் வாங்கலாம் என்ற அத்தகைய முயற்சியில் ஈடுபட வேண்டும். ஒரு கால அளவை வைத்தா வது இதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உடையைப் பொறுத்த வரையில் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், எம்.எஸ்.ஸி., பி.எஸ்.ஸி., படித்தவர்களைப் பற்றிச் சொல்லும்போது,

" Several of them came indifferently dressed, shirt having no buttons or not buttoned at all exposing themselves, hair not combed and dressed. Most of them did not exhibit enthusiasm, resourcefulness nor ambition."

என்ற குறைபாட்டை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகள் எல்லாம் அங்கே ஏற்படாத அளவுக்கு பள்ளிகளிலே தடுத்து சீருடை முறையை புகுத்துவதன் மூலமாக ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். இதிலே கவனம் செலுத்தி, இந்தக் குறைபாடுகளை எல்லாம் போக்கி, நிறைபாடுகளை நிலை எய்தச் செய்கின்ற முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய பென்ஷனைப் பொறுத்தவரையில், அவர்களிடத் தில், இருக்கிற சம்பள விகிதங்கள், படிகள் இவற்றில் காணப்படுகிற வேறு பாடுகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். மன்ற உறுப்பினர்களும் பல ரும் இவற்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். கனம் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் இது பற்றி விவரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இவற்றை எல்லாம் ஆராய்ந்து நிறைவு செய்வதன் மூலமாக ஒரே சம்பள முறைகளை தமிழாசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். பள்ளி களில் வேலை செய்கின்ற எழுத்தினருக்கு கொடுக்கப்படுகிற சம்பளம் மற்றத் துறைகளில் வழங்கப்படுகிற அளவுக்கு ஈடாக அமையவில்லை என்ற குறை பாடுகள் இருக்கின்றன. அவற்றையும் கண்டறிந்து நிவர்த்திப்பதற்கான வழிவகையைக் காண வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே இந்த மன்றத்திலே விவாதித்து வருகின்ற மானியக் கோரிக்கைகளிலே இந்த கல்வி மானியக் கோரிக்கை முக்கியமானதொன்று. அளவிலே மட்டுமல்ல. தரத்திலும் முக்கியத்துவத்திலும் அது முதலிடம் பெற வேண்டியது என்பதை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். ரூ. 31 கோடிக்கு மேலே கல்விக்காக மட்டும் மானியம் கோரப்படுகிறது. ஆண்டு தோறும் எவ்வளவு மானியம் கோரப்படுகிறதோ அதற்கு மேலே செலவு ஆகிக்கொண்டு வருகிறது. ஆனால் எப்பொழுதும் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், வேறு சில மாநிலங்களை விட கல்வித் துறையிலே அதிக அக்கறை செலுத்திக்கொண்டு தான் வந்திருக் கிறோம். 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு கூட ஐந்தில் ஒரு பங்கு மொத்த வருவாயிலே கல்விக்காக செலவு செய்யப்பட்டு வந்தது. ஆகவே தான்





கனம் எதிர் கட்சித் தலைவர் கூறியது போல ஏதோ 11-வது ஸ்தானத்திலே தான் இந்த மாநிலம் இருக்கிறது என்று சொல்லியதைப் பார்த்தால், ரொம்ப பிற்போக்காக நிலையில் இருந்த மாநிலங்கள் கூட சுதந்திரம் அடைந்த பிறகு, மக்களுக்கு விழிப்பு ஏற்பட்ட பிறகு, வெகு வேகமாக முன்னேறியிருக்கிறார்கள். நூற்றுக்கு 30 என்ரோல்மெண்ட் இருக்கிற இடங்களிலே 60 என்று சொன்னால், அது இரட்டிப்பு ஆகிறது. ஆனால் 100-க்கு 75 என்ரோல்மெண்ட் இருக்கிற இடங்களிலே அதை 150 ஆக ஆக்க முடியாது. மொத்தம் 100 பிள்ளைகளைத் தான் சேர்க்க முடியும், 101-வது பிள்ளையை சேர்க்க முடியாது. 75, 85, 95 என்று ஆக்கலாமே தவிர 100-க்கு மேல் போக முடியாது. ஆகவே மிகவும் பின் தங்கிய மாநிலங்களில் இருக்கும் நிலைமையோடு நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இல்லை. ஆகையினால் பதினோராவது ஸ்தானத்தை அடைந்திருக்கிறது என்பதும் தவறு என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே அதிக அபிவிருத்தி ஏற்பட்டிருந் தது, இந்த மாநிலத்திலே, இப்பொழுது மேலும் அது அதிகப்படுகிறது, அவ்வளவு தான். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள், சென்ற ஆண்டு வரவு செலவு திட்ட கோரிக்கை, பிறகு ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் கொஞ்சம் குறைந்திருக்கிறது என்று. குறையவில்லை ; அதிகப்பட்டுதான் இருக்கிறது. அவர்கள் பார்த்த புள்ளி விவரங்களில் டெக்னிகல் எஜுகேஷன் சேரவில்லை. அதோடு கூட இந்த 31-ம் தேதிக்கு பிறகு தான் முழு விவரம் தெரியும், இதிலே தான் நிதி இலாகாவின் கவலை அதிகப்பட்டுக் கொண்டு போகிறது. வேறு பல இனங்களுக்கும் நிதி வேண்டுமே என்பது தான் நிதி இலாகாவின் கவலை. சென்ற ஆண்டிலே என்ன கோரப்பட்டதோ அதையும் விட மேலும் செலவு ஆகி இருக்கிறது. அவ்வாறு கல்வி அறிவின்றி நல் வாழ்க்கை இல்லை. பொருள் வேண்டும் என்றாலும் பொருள் நிறையக் கொடுக்கிறோம். ஆனால் பொருள் மட்டும் போதாது. பரிபூரணமான அறிவை மக்கள் எல்லோரும் பெற வேண்டும். கல்வி களஞ்சியம், கடல் என்றே சொல்ல லாம். அந்த அளவுக்கு கல்வி பெருக வேண்டும். இவ்வளவு தூரம் பிள்ளைகளுக்கு கல்வி அளிக்கவேண்டும் என்று அந்த முயற்சியிலே அரசாங்கம் ஈடுபட்டு இருக்கிறது. அதனால் தான் அதில் பெரிய தொகையை செலவழிக்கிறோம். ஆகையினால் இந்தக் கல்வி மானியத்தைப் பற்றிய விவாதத்திலே மறுபடியும் யோசனைகள் வராமல் இல்லை. எதிர்க் கட்சியில் இருந்து பல யோசனைகள் வராமல் இல்லை. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கனம் உறுப்பினர் தர்மலிங்கம் அவர்கள் கனம் உறுப்பினர் கமலநாதன் அவர்கள் இவர்கள் எல்லாம் சிற்சில கருத்துக்களைக் கூறி னார்கள். அவை எல்லாம் ஆராய்வதற்கு உரியன. சில கருத்துக்களைப் பற்றி மேலே விளக்கம் கூறுகிறேன். ஆனால் எனக்கொரு ஏமாற்றம் என்று தெரிவிக்க விரும்புகிறேன். எதிர்க்கட்சியிடமிருந்து இன்னும் கொஞ்சம் உருப்படியான கருத்துக்களும், யோசனைகளும் வரும் என்று எதிர்பார்த்தேன். கல்வி என்பதில், எந்த நாட்டிலும், இன்று ரொம்ப முன்னணியில் இருக்கும் நாடுகளில் கூட, திருப்தி அடைவது இல்லை. குறைபாடுகள் என்ன என்ன இருக்கின்றனவோ அவைகளை களைய வேண்டும் கல்வி தரத்தை உயர்த்த வேண்டும். கல்வியை விஸ்தரித்து எல்லோ ருக்கும் இட்டச் செய்ய வேண்டும் என்பது தொடர்ந்து பரிசீலனை செய்யப்பட்டுக்கொண்டு வருகிற விஷயம். ரஷ்யாவானாலும் சரி, அமெரிக்காவானாலும் சரி, இங்கிலாந்தானாலும் சரி அது தான் நிலைமை. கொஞ்ச காலத்துக்கு முன்பு கூட இங்கிலாந்திலே ஒரு நிபுணர் குழுவை அமைத்து கல்வித் தரத்தை ஆராய்ந்து ஒரு அறிக்கை அளிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்கள். அவர்களும் ஒரு அறிக்கை தயாரித்துக் கொடுத்தார்கள். இன்று காலையில் கூட "இந்து" பத்திரிகையில் வெளி வந்திருந்த விமரிசனத்தைப் படித்துப் பார்த்தால் எவ்வளவு கவலையும் கவனமும் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை அந்தப் பத்திரிகையில் வந்திருந்த விமரிசனத்தைக் காண்கிற வர்களுக்குப் புரியும். ஆகவே தரத்தை மேலும் மேலும் எவ்வாறு உயர்த்தவேண்டும் என்பதில் கவனம் எல்லோரும் செலுத்து கிறார்கள். தரம் குறைந்து விட்டது என்று எடுத்துக் கொண்டு விடு கிறார்கள்.

[திரு எம். பக்தவத்சலம்] [17th March 1964

கூடாது. இங்கிலாந்தில் உயர்ந்த கல்வித் தரம் இருக்கிறது. ஆனாலும் திருப்தி இல்லை. இன்னும் எப்படி உயர்த்த வேண்டும் என்று ஆராய்ந்து கொண்டே இருக்கிறார்கள்.

இங்கே கருத்துக்கள் தெரிவித்த பல கனம் உறுப்பினர்கள் ஏதோ மேடையில் பேசுவது போல பேசிவிட்டார்கள். எதிர் கட்சியிலே வீற்றிருந்தவர்கள் கண்டிக்க வேண்டும். குற்றம் சாட்ட வேண்டும். இல்லை என்றால் எதிர்க் கட்சி இல்லை. சொல்ல வேண்டியது தான். ஆனால் அதற்கு மேல் போவதுசரியல்ல. "நயவஞ்சகம்" என்று ஒரு கனம் உறுப்பினர் குறிப்பிட்டார்கள் : "அடிமைப்படுத்துகிறேன்" என்று மற்றோர் உறுப்பினர் சொன்னார்கள். "உள்ளத்தில் அச்சம் ஏற்பட்டது, பயப்படுகிறேன்" என்று மற்றொரு அங்கத்தினர் தெரிவித்தார்கள். இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல் பொன் மொழி போல ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார்கள், "அழிவு காலம் வந்து விட்டது" என்று. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே உள்ள குறைபாடுகளைப் பற்றி சொன்னார்கள். அதைப்பற்றி பின்னால் குறிப்பிடுகிறேன். பொதுவாக தரம் குறைந்து வருகிறது என்பதை ஒப்புக்கொள்ள மாட்டேன். இல்லை என்றே கனம் உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூறுவேன். சமீபத்திலே, மத்திய போட்டி பரீட்சைகளில் சர்வீஸ் எக்ஸாமினேஷன்களில் தமிழ் நாட்டு மாணவ மாணவிகள் மொத்தத்தில் நன்றாகச் செய்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு டெக்னிகல் எஜுகேஷன் சம்பந்தப்பட்ட பரீட்சையில் சற்று பின் தங்கி விட்டார்கள் என்ற தகவல் வந்தது. அதற்குப் பிறபாடு இப்பொழுது அதிலும் முன்னேறி வருகிறார்கள். கல்வித்தரத்தை உயர்த்தவேண்டும். அப்படி உயர்த்துவதில் கனம் உறுப்பினர்களுடைய யோசனைகள் யாவற்றையும் நன்றாக உணர்கிறேன். தொடர்ந்து தரத்தை எவ்வாறு உயர்த்துவது என்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தரமும் உயர்ந்து கொண்டே வருகிறது. விஸ்தரிக்கப்பட்டால் மட்டும் போதாது. குக்கிராமங்களில் கூட மக்களிடத்தில் அறிவு தாகம் இருக்கிறது. அந்த அறிவு தாகத்தைத் தணிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நம்முடையது. ஏராளமாக பள்ளிகள் அமைக்கப்பட்டால் போதும், தரத்தை கவனிக்க வேண்டாம் என்று நான் கருதவில்லை. அரசாங்கமும் கருதவில்லை. விஸ்தரிக்கப்படுகிற அளவோடு கூட தரத்தையும் குறையாமல், உயர்த்துவது எவ்வாறு என்று தான் தொடர்ந்து இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

விவாதத்தைத் துவக்கி வைத்த கனம் உறுப்பினர் திரு. புலவர்அவர்கள் கூறினார்கள் எல்லோரையும் நான் குருடனாக்கி விட்டேன் என்றும், கண்ணாடி போட்டு விட்டால் போதுமா என்றும். கண்ணாடி போடுவது கண் நிபுணர்கள் செய்வார்கள். அந்தத் திறன் எனக்கு இல்லை. குருடனாக்கும் திறனும் இல்லை. கண் கெட்டு விட்டால் கண்ணாடி போட முடியாது. நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் என்னுடைய ஆவல் இருக்கிற பார்வையையும் அதிகமாக்க வேண்டும் ; தூர திருஷ்டிக் கண்ணாடி கொடுத்து குழந்தைகளுக்கெல்லாம் பார்வையை அந்த அளவுக்கு அதிகரிக்க வேண்டும். நான் கண்ணாடி போட்டிருக்கிறேன். கனம் திருவண்ணாமலை உறுப்பினர் கண்ணாடி இல்லாமல் இருக்கிறார். ஆகவே கண்ணினுடைய சக்தி வெவ்வேறாக இருக்கிறது. குறைந்த பார்வைக்கு கண்ணாடி போடலாம். இன்னும் பார்வை அதிகமாக வேண்டும் என்றால், சாதாரணப் பார்வை இல்லை, தூரதிருஷ்டிக்கு வேண்டிய கண்ணாடி போடலாம். அது தான் என்னுடைய அவா. கல்விக் கொள்கை தூர திருஷ்டிப் பார்வையை எல்லோருக்கும் அளிக்கவேண்டும். அதற்கான கண்ணாடி கொடுக்க வேண்டும். கண்ணாடி கொடுக்கிறேன். ஆனால் கண்ணே கெட்டு கோளாறு ஏற்பட்டிருந்தால் என்ன செய்ய முடியும். சிறந்த கண் வைத்தியர்கள் இருக்கிறார்கள். சில பேருக்கு திருத்த முடியாத வயது வந்து விடுகிறது. கண்ணாடியே போட முடியாது. ஆனால் இன்னொன்றும் இருக்கிறது. இப்பொழுது தான் நவீன முறையில் கண்ணாடி போட்டிருப்பதே தெரியாமல் கண்ணாடியை உபயோகிக்கிறார்கள். அப்படியெல்லாம் நவீன கண்டுபிடிப்பு இருந்தாலும், சில கோளாறு இருந்தால் அவர்களுக்கு எந்த கண்ணாடியைக் கொடுக்கிறது. பெரிய நிபுணர்களைக் கேட்கிறேன். ஏதாவது



17th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

கொடுக்க முடியுமா என்று. சில தீராத வியாதிகளுக்கும் நம்பிக்கை இழக்காமல் மேலும் ஓயாமல் ஆராய்ச்சி செய்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கும் கண்ணாடி கொடுத்து அவர் இழந்த பார்வையைப் பெறவேண்டிய அளவுக்கு அவர்களுக்கு நாம் கண்ணாடி கொடுக்கக்கூடும் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்கு பார்வை அளிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு தான் இந்த கல்வி விஸ்தரிப்பு திருப்பணியில் ஈடுபட்டு இருக்கிறோம்.

இந்தியைப் பற்றி முக்கியமாக பேசப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். முக்கியமாக அவர்கள் குறிப்பிட்டது சமீபத்திலே டில்லியிலே நடைபெற்ற ஒரு மகாநாட்டைப் பற்றியது. எல்லா முதலமைச்சர்களும் வந்து இருந்தார்கள். மத்திய பரீட்சைக்கு இந்தியை பாட மொழியாக அமைப்பது பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி நான் விளக்கம் கூறினேன் என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு உடனே சொல்ல விரும்புகிறேன். இங்கே நான் என்ன உறுதி அளித்தேனோ அந்த உறுதியினின்று நான் தவறவில்லை. கனம் அங்கத்தினர்கள் தவறுதலாக எடுத்துக்கொண்டால் அது அவர்கள் இஷ்டம். 1-00 p.m. பிரசாரத்திற்கு வேண்டுமானால் அவர்கள் அவ்வாறு வைத்துக்கொள்ளலாம். நான் அளித்த உறுதியினின்று தவறவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இந்த ஹிந்தியைப் பொறுத்தமட்டில், நான் இன்னொரு விளக்கம் கூறுவேன். ஹிந்தி "மீடியம்" என்றால், அது மத்திய சர்வீஸ் பரீட்சைக்கு தான், மாநில பரிட்சைக்கு இல்லை. நம்முடைய மாநிலத்திலே இல்லை. ஆனால், கனம் எதிர்க்கட்சித் அங்கத்தினர்கள் கனவு காண்கின்ற திராவிடஸ்தான் என்று கருதக் கூடிய மைசூர், ஆந்திர மாநிலங்களிலெல்லாம் மாநில சர்வீஸ் பரீட்சைகளுக்குக்கூட ஹிந்தியை அவர்கள் கட்டாயமாக வைத்திருக்கிறார்கள். இந்தத் தகவல்களை நான் அந்த மாநில முதலமைச்சர்களிடமிருந்தே அறிந்து கொண்டேன். அவர்கள் அவ்வாறு ஹிந்தியைப் பரீட்சைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் வைக்கவில்லை. நம்மைப் பொறுத்தமட்டில், மாநில உத்தியோகங்களுக்கு ஹிந்தியைப் பற்றி ஒன்றும் இல்லை.

ஆனால், மத்திய சர்வீஸ் "காம்பெடெடிவ் எக்ஸாமினேஷனு" க்கு இப்பொழுது ஆங்கிலத்திலே விடை அளிக்கிறார்கள். ஹிந்தி தெரிந்தவர்கள், "எங்களுக்கு ஹிந்தியிலே விடை அளிக்க 'ஆப்ஷன்' வேண்டும்" என்று கோருகிறார்கள். நாம் ஹிந்தியிலே விடை அளிக்கவேண்டும் என்பது அல்ல. நாம் ஆங்கிலத்தில் விடை அளிக்கலாம். அதே போல, ஹிந்தி தெரிந்தவர்கள், "நாங்கள்ஏன் ஹிந்தியில் விடை அளிக்கக்கூடாது?" என்று கேட்கிறார்கள். "சில பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தி பாட மொழியாக இருக்கிறது. அப்படி இருப்பதால் நாங்கள் ஹிந்தி படித்திருக்கிறோம். எங்களுக்கு ஹிந்தி தெரியுமே" என்று சொல்லுகிறார்கள். "ஹிந்தி அஃபிஷியல் லாங்வேஜ் ஆக இருக்கிறது. ஆங்கிலமும் தொடர்ந்து நீடிக்கும். ஆகவே, இரண்டு மொழிகளும் இருப்பதனால், நாங்கள் ஹிந்தியிலே விடை அளிக்க எங்களுக்கு ஏன் அனுமதி கொடுக்கக்கூடாது?" என்ற கோரிக்கை தான் இப்பொழுது அங்கே விவாதத்திற்கு வந்தது.

நான் என்ன கூறினேன் என்றால், " நம்முடைய மாணவர்கள் எந்த விதத்திலும் பாதகம் அடையக் கூடாது. நாம் ஆங்கிலத்தில் விடை அளித்து, அவர்கள் தங்களுடைய தாய் மொழியான ஹிந்தியிலே விடை அளித்தார்கள் என்றால், அதனால் நமக்கு 'ஹாண்டிகாப்' ஏற்படலாம்" என்று கூறினேன். இது தான் எதிர்க்கக் கூடிய விஷயம், கவலைப்படக் கூடிய விஷயம்.

பத்திரிகையெல்லாம் கூட இதைப்பற்றி எழுதியிருந்தார்கள். அது தான் விஷயம். நான் நன்றாக வற்புறுத்தினேன். நம்முடைய மாநிலத்திலுள்ள அபேட்சகர்களுக்கு (காண்டிடேட்ஸ்) ஆங்கிலத்திலே விடை எழுதுகிறவர்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பாதகம் ஏற்படுவதாக இருந்தால் நாங்கள்

"வேண்டாம்"என்று சொல்லுவோம். ஹிந்தியிலே எழுதுகிறவர்களுக்குக்கூட ஒரு "ஹாண்டிகாப்" இருக்கும். ஏனென்றால் ஹிந்தியிலே அவ்வளவு விளக்கமாகக் கருத்தைத் தெரிவிக்க முடியாது. விஞ்ஞானம், பொருளாதாரம் போன்றவற்றைத் தமிழிலேயே எழுதுவதென்றால் கூட சற்று "ஹாண்டிகேப்"இருக்கும். ஆனால், ஹிந்தியிலே எழுதுவதானால் ஹாண்டிகேப் அதிகமாக இருக்கும். இப்பொழுதிருக்கும் நிலையிலே இன்னும் நிறைய நூல்கள் வந்தால் அந்த "ஹாண்டிகேப்" போய் விடும். இதையெல்லாம் நான் அங்கே விவரமாக எடுத்துச் சொன்னேன். அது தான் ஆட்சேபம். மேலும், "ஹிந்தியிலே எழுதுகின்றவர்களுடைய விடைகள், ஆங்கிலத்தில் எழுதுகின்றவர்களுடைய விடைகள் இவ்விரண்டையும் எப்படி ஒப்பிட்டு பார்ப்பீர்கள்" என்று நான் கேட்டேன். "காம்பெடெடிவ் பரீட்சையில் Ranking பண்ணவேண்டுமே. அதை எப்படி ஒப்பிட்டுப் பார்ப்பீர்கள் ? " என்று கேட்டேன். "அப்படி Ranking பண்ணும் போது ஆங்கிலத்தில் விடை எழுதுகிறவர்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படக்கூடாது. இரண்டையும் ஒன்றாக இணைத்து ஒரு காமன் டெஸ்ட் இருக்க வேண்டும்" என்றுசொன்னேன். என்னைப் பொறுத்த வரையிலும், பத்திரிகையிலே எழுதுகிறார்களே அதைப் பொறுத்த வரையிலும் எதிர்க் கட்சியைப் பொறுத்த வரையிலும் கூட, இதைத் தவிர வேறு என்ன ஆட்சேபனை சொல்ல முடியும்? "ஹிந்தி வேண்டாம்" என்று இங்கே சொல்லலாம். ஆனால், ஹிந்தி தெரிந்தவர்கள், ஹிந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், "ஹிந்தியில் எழுத அனுமதிக்க வேண்டும்" என்று சொல்கிறார்கள். ஆங்கிலத்தில் விடை எழுதினாலும், ஹிந்தியில் விடை எழுதினாலும் "காமன் டெஸ்ட்" இருக்கவேண்டும், ஒரே "ஸ்டாண்டர்டு" இருக்கவேண்டும். அது எப்படி என்பது தான் பிரச்னை.

அதற்கு "நீங்கள் டெஸ்டுக்கு ஒரு காமன் ஸ்டாண்டர்டு evolve பண்ணவேண்டும்" என்று நான் சொன்னேன். பல்கலைக் கழக அனுபவம் உள்ள சிலர், "ஹிந்தியிலே எழுதினாலும் ஹாண்டிகேப் இருக்கிறது" என்பதை ஒப்புக்கொண்டார்கள். "பல்கலைக் கழகத்தில் நாங்கள் ஒரே பரீட்சை வைக்கிறோம். ஆங்கிலத்திலும் வைக்கிறோம். தாய்மொழியிலும் வைக்கிறோம். அதையெல்லாம் நாங்கள் செய்யவில்லையா ?" என்று கேட்டார்கள்.

"அது மார்க் போடுவது. அதைவிட இது முக்கியமானது "ராங்கிங்" செய்யும்போது "காமன் ஸ்டாண்டர்டு டெஸ்டு" ஒன்று " evolue செய்தாகவேண்டும்" என்று நான் சொன்னேன். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். "ஸ்டாண்டர்டு ஆப் டெஸ்ட் எவால்வ் செய்வது, 'மாடரேஷன்' வைத்துச் செய்வது, இதெல்லாம் டெக்னிகல் விஷயம், பார்த்துப் பண்ணுகிறோம்" என்று சொன்னார்கள்.

நான் சொன்னேன். "அப்படி நீங்கள் உருவாக்கினால், முடிவெடுப்பதற்கு முன்னால் நாங்கள் அதைப் பார்க்கவேண்டும், எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்" என்று நான் சொன்னேன். அதற்கும் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

மேலும், ஏதோ உடனடியாக வேண்டாம் என்றால், உடனடியாக இல்லை, 1965 செப்டெம்பரில் தான். முன்னே ஒரு வரம்பு இருந்தது அது பின்னாலே வரப்போகிறது. அப்பொழுதிருந்து வைக்கலாம் என்று நினைக்கிறோம். அதற்குள்ளே உருவாக்கவேண்டும். உருவாக்க முடியவில்லையென்றால் தள்ளிப்போடுகிறோம், என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த விஷயத்தைப் பற்றி வேறு என்ன செய்வது ? நான் என்ன தவறு செய்துவிட்டேன் ? எந்த விதத்திலும் இந்த மாநிலத்திலுள்ள அபேட்சகர்களுக்கு (காண்டிடேட்ஸ்) பாதகம் ஏற்படக்கூடாது. அதைத் தான் நான் வற்புறுத்தினேன்.

அதோடு இன்னொன்றும் நான் கூறினேன். நான் கூறியதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அகில இந்திய பரீட்சையில் தேறுகிறவர்களில் சிலரை நமக்கு அனுப்புகிறார்கள். இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களையும் அனுப்புகிறார்கள். மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்களையும்





கிறார்கள். தமிழ் நன்றாகப் பேசக் கூடிய அநேக ஐ. ஏ. எஸ். இளைஞர்கள் நம்முடைய மாநில சர்வீஸில் பணியாற்றுகிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பொறுத்தும் நாங்கள் சொல்லியிருக்கிறோம். "ஹிந்தியில் பரீட்சை எழுதியவர்களை இங்கு அனுப்பினால் அவர்களை வைத்துக்கொண்டு நாங்கள் என்ன செய்வது ? இந்தப் பகுதியினருக்கு ஆங்கிலம் தானே தெரியும். ஆங்கிலத்தில் தேர்வு எழுதாமல், ஹிந்தியில் தேர்வு எழுதினவர்கள் எங்களுடைய வேலைக்கு லாயக்காக இருக்கமாட்டார்கள். ஹிந்தியோடு ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கும் என்று சொல்லியிருக்கும்போது, ஹிந்தியில் மாத்திரம் விடை எழுதுகிறவர்கள் எங்களுக்குப் போதாது ஆங்கிலத்தில் டெஸ்ட் எழுதினவர்கள் தான் எங்களுக்கு வேண்டும்." என்று நான் கூறியதற்கு, "ஆங்கிலத்தில் இரண்டு பேப்பர் வைக்கலாம். கட்டாயமாக வைக்கிறோம். ஹிந்தியை பாட மொழியாக கொண்டு பரீட்சை எழுதுகிறவர்களுக்குக் கூட ஆங்கிலத்திலும் பரீட்சை வைக்கிறோம்" என்று சொன்னார்கள்.

வேறு என்ன செய்யவேண்டும் ? நான் என்ன செய்யத் தவறிவிட்டேன் ? குற்றம் சாட்டவேண்டும் என்பதற்காக வேண்டுமானால் சிலர் சொல்லலாம். ஆனால், இதிலே வேறு என்ன செய்யவேண்டும்? "நான் கோரியதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஏதோ நான் வந்துவிட்டேன். நான் சொன்னதை அவர்கள் கேட்கவில்லை" என்று சிலர் சொன்னார்கள். நான் சொன்னதையெல்லாம் அவர்கள் கேட்டார்கள் என்று தான் நான் உறுதியாகக் கூறுவேன். நான் சொன்னதை உணர்ந்து, பாராட்டி அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள்—இந்த விஷயத்திலே—என்று தான் நான் சொல்லுகிறேன்.

ஹிந்தியே நமக்குக் கூடாது என்பது ஒன்று. அந்த அடிப்படையில் தான் மும்மொழித் கொள்கையைப் பற்றி புலவர் அவர்களும் மற்றவர்களும் பேசினார்கள். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட, "மறைமுகமான ஒரு கட்டாயம்" என்று சொன்னார்கள். மறைமுகமான கட்டாயம் என்ன இருக்கிறது ? மும்மொழிக் கொள்கை என்பது முன்பே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. தாய்மொழி என்பது ஒன்று. அடுத்து ஆங்கிலம் அல்லது வேறு ஏதாவது ஒரு அன்னிய நாட்டு மொழி என்று போட்டிருக்கிறோம். "மதர் டங் ஆர் ரீஜினல் லாங்வேஜ்" என்று வைத்திருப்பதால் அதிலே ஒரு "ஆப்ஷன்" கொடுக்கப்பட்டிருக்கிறது. "ஆங்கிலம் அல்லது வேறொரு அந்நிய மொழி" என்றும் வைத்திருக்கிறோம். ஓரிருவர் ஃப்ரெஞ்ச் படிக்கலாம். பல்கலைக் கழகத்திலும் ஃப்ரெஞ்ச் மொழி, ரஷிய மொழி எல்லாம் சொல்லிக்கொடுக்கிறார்கள். வேறு நாடுகளில் பல்கலைக் கழகங்களில் தமிழை வெறுப்பது இல்லை. நமக்குத்தான் வேறொரு மொழி என்றால் "அலெர்ஜி" ஏற்படுகிறது. அவ்வாறு, ஆங்கிலம், தமிழ், அதற்கு மேல் ஹிந்தி அல்லது வேறொரு நாட்டு மொழி. நம் நாட்டு மொழி என்றால், நம்முடைய தாய்மொழி அல்லாத ஒரு மொழி என்று வைத்திருக்கிறோம்.

ஹிந்தி படிக்கவேண்டும் என்கிறவர்கள் ஹிந்தி படிக்கலாம். மாணவர்களுக்குத் தெரியாதா என்ன படிக்கவேண்டும் என்று ? நம் மாநிலத்தைத் தாண்டி வேறு மாநிலங்களுக்குப் போகும்போது நாம் என்ன பார்க்கிறோம். கல்கத்தாவுக்கு போனாலும், பம்பாய்க்குப் போனாலும், டில்லிக்குப் போனாலும், ராஜஸ்தானுக்குப் போனாலும் நாம் என்ன பார்க்கிறோம் ? அநேகம் பேர் ஹிந்தி படித்திருக்கிறார்கள். நான்கூட சில நாட்களுக்கு முன்பு ஜபல்பூர் போயிருந்தேன் ; போபால் போயிருந்தேன். அங்கெல்லாம் நம்மவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஹிந்தி தெருந்திருக்காவிட்டால் எப்படி உத்யோகம் பார்க்க முடியும் ? ஹிந்தியில் பேச முடியாவிட்டால் காரியங்களை அவர்கள் நடத்த முடியுமா ? அவர்கள் ஹிந்தி படித்து என்ன கெட்டுப் போய் விட்டார்கள்? ஜபல்பூரில் தமிழர்கள் சங்கம் வைத்திருக்கிறார்கள். அதற்காகக் கட்டடம் கட்டி இருக்கிறார்கள். என்னை ஒரு விழாவிற்கு அவர்கள் அழைத்திருந்தார்கள். அங்குள்ள ஒரு தமிழ் இளைஞர் நம்முடைய பாரதி நூல்களை ஹிந்தியிலே மொழி பெயர்த்து அந்த விழாவில் படித்தார். அதைப் பரிசாக அனுப்பி இருக்கிறார். அதெல்லாம் தமிழர்தான் செய்திருக்

கிருர்கள். நான் முன்பே கூறினேன். நம்முடைய பல்கலைக் கழகத்தில் இந்தி இலாகா தலைவராக இருந்தவர் தமிழ் எழுத்தாளர் சங்கக் காரிய தரிசி. அவர் நம்முடைய குறளை இந்தியில் எழுதியிருக்கிருர்.

இப்போது ஆந்திரா, மலையாளம், மைசூர் ஆகிய இடங்களில் இந்தியைக் கற்கவேண்டுமென்று கட்டாயமாக வைத்திருக்கிருர்கள். இங்கே நாம் கட்டாயமாக கற்கவேண்டுமென்று போடவில்லை. கட்டாயம் என்ருல் அலர்ஜி இருக்கிறது. அதனுல்தான் போடவில்லை என்று சொன்னேன். இது விஷயத்தில் அரசாங்கத்தின் மீது குறை கூறுவதற்கு இடமில்லையென்று சொல்வேன். இந்தி மட்டும் அல்ல. மராட்டி படிக்கவேண்டுமென்ருல், தெலுங்கு படிக்கவேண்டுமென்ருல், உருது படிக்கவேண்டுமென்ருல் போதிய மாணவர்கள் இருந்தால் அதற்கெல்லாம் நாம் ஏற்பாடு செய்திருக்கிரேம். நான் தெலுங்கு படித்திருக்கிறேன். சமஸ்கிருதமும் படித்து இருக்கிறேன். இந்தி படித்து இருக்கிறேன். இப்போது தெலுங்கு படிப்பது நல்லதா, இந்தி படிப்பது நல்லதா என்று மாணவர்களே தீர்மானித்துக்கொள்வார்கள். தங்களுக்கு எது நல்லது என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும். நாம் ஏதோ சொல்கிரேம். நமக்கு ஏதோ ஒரு கருத்து ஏற்படுகிறது. மாணவர்கள் எல்லாம் நல்ல புத்திசாலிகள். பெற்ரேர்கள் சொல்வதைக் கேட்கிருர்களா மாணவர்கள், இந்தக் காலத்தில் ? அந்தக் காலத்திலே இரணியன் சொன்னதை பிரகலாதன் கேட்கவில்லையே. "அப்பாவாக இருந்தால் என்ன, அப்பா நமக்குக் கெடுதலைச் சொல்கிருர். அதை நாம் கேட்கக்கூடாது" என்று கெடுதலைச் சொல்கிறபோது பிரகலாதன் அவர் சொன்னதைக் கேட்காமல் எதிர்த்து நின்ருன். நமக்கு அப்படிச் சொல்ல தந்தைக்கு உரிமை இல்லை என்று புறக்கணித்தான். இப்போதும் கூட இந்தி வேண்டாம் என்ருல் அதை மாணவர்கள் கேட்பது இல்லை. மாணவர்களிடத்தில் எனக்குப் பூர்ணமான நம்பிக்கை உண்டு, மரியாதை உண்டு. இந்த மும்மொழிக் கொள்கையை கட்டாயம் என்று எப்படிச் சொல்வது ? பிரசாரத்திற்கு வேண்டுமானுல் சொல்லலாம். அது எடுக்காது. அந்தக் கருத்து பொது மக்களிடத்தில், மாணவர்கள் இடத்தில் எடுக்கவில்லையே என்று வருத்தப்பட்டு என்ன பண்ணுவது ? 1937–38-லே கொண்டு வந்த முறை வேறு. அப்போது எடுபட்டது. இப்போது எடுபடவில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் உட்காராத மாணவர்களுக்கு கல்லூரியில் சேர எலிஜிபிலிட்டி கிடைக்காது என்று புதியதாக உத்தரவு போட்டிருக்கிருர்களே, இது கட்டாயம் அல்லவா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்த விஷயத்தை ஞாபகப்படுத்தியதற்காக கனம் அங்கத்தினர்க்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் எழுப்பாமல் இருந்திருந்தால் ஒருகால் நான் இதைச் சொல்லவிட்டிருக்கக்கூடும்.

நான் கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்னுல் மும்மொழிக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்தி அல்லது ஏதாவது மொழி என்று வைக்கப்பட்டு இருந்தது. பரிட்சைக்குக் கட்டாயம் போகவேண்டும் அந்தப் பரிட்சையில் என்ன மார்க் வாங்கினுலும் பாதகம் இல்லை—என்று இன்றைய முடிவு எப்படியோ அப்படியேதான் இருந்தது.

நான் கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்பு எல்லா மாவட்டங்களுக்கும் சென்று தலைமை ஆசிரியர்களைக் கலந்து இதுபற்றி விவாதித்தேன். "பரிட்சை உண்டு. ஆனுல் அதில் என்ன மார்க் வாங்கினுலும் பாதகம் இல்லை" என்பதால் "மாணவர்கள் படிப்பதும் இல்லை, பரிட்சையில் கண்டபடி எழுதுகிருர்கள்" என்று சொன்னுர்கள். பரிட்சைக்கே கன்டெம்ட் ஏற்படுகிறது என்று சொன்னுர்கள். பர்பஸ்லெஸ் பரிட்சை என்ருல் அதிலே அலட்சியம் ஏற்படுகிறது. இன்றைய தினம் பரிட்சை என்பது எனக்கே பிடிக்கவில்லை. ஆனுல் அதற்காக என்ன செய்வது ? இன்றைக்கு பரிட்சை தவிர மாணவர்களைப் படிக்க வைக்கும் மார்க்கம் வேறு எதுவும் இல்லை. ஆகவே பரிட்சையில் அலட்சியம் வரக்கூடாது என்ருல் ஒன்று பரிட்சை முறையானதாக இருக்கவேண்டும்,



இல்லையென்ருல் பரீட்சையே வேண்டாம் என்று சொல்லி போன ஆண்டு பரீட்சையையே நிறுத்திஞேம். ஆனுல் அப்போது என்ன ஆயிற்று, முன்பு பரிட்சை உண்டு, ஆனுல் பரீட்சையில் என்ன மார்க் வாங்கினுலும் பாதகம் இல்லையென்று வைத்திருந்தபோது மாணவர்கள் படிப்பதே இல்லை. அதுபோல வகுப்புக்குப் போகவேண்டும், ஆனுல் பரிட்சை கிடையாது என்றவுடன் யாரும் வகுப்புக்குப் போவதில்லை. போனுலும் கவனிப்பது இல்லை. வகுப்பில் உட்கார்ந்து ஏதாவது பேச ஆரம்பித்துவிட்டார்கள். இதற்காக கட்டாயமாகப் பரீட்சை வைத்து அதில் மார்க் எடுக்கவேண்டுமென்ருல் அலர்ஜி உண்டாகிவிடுமே என்று பயந்து இதைப் பற்றி நன்ருக எல்லோரும் ஆலோசித்தோம். ஒரு சிலர் படிக்கமாட்டேன் என்கிருர்களே, அதுவும் இந்தியை இஷ்டப்பாடமாக எடுத்துக்கொண்டு இப்படிச் செய்கிருர்களே, அவர்களுக்கு எப்படி ஒரு இன்செண்டிவ் கொடுப்பது என்று யோசித்தோம். அதன்பேரில் தான் ஒரு முடிவுக்கு வந்தோம். அதாவது இந்தியே வேண்டாம் என்கிறவர்களைப் பற்றி பிரச்சினை இல்லை. இந்தியை எடுத்துக்கொண்டு படிக்கிறவர்கள் கட்டாயமாகப் பரீட்சை எழுத வேண்டும். அதில் குறைந்த மார்க் வாங்கினுர்கள் என்பதற்காகப் பெயில் போடுவதில்லை. மற்றவற்றில் பாஸ் செய்திருந்தால் இவர்களுக்கு எலிஜிபிலிடி கிடைத்து விடும். ஆனுல் மற்றவற்றில் சுமாராக மார்க் வாங்கி பாஸ் செய்வதற்கு பத்துப் பதினைந்து மார்க் குறைவாக இருந்தது என்ருல்—அவர்களை ஏன் வீணுகப் பெயில் போடவேண்டும், அவர்களுக்கு இந்தியில் ஒரு பதினைந்து மார்க் வந்திருந்தது என்ருல் அதை மாடரேஷனில் கூட்டிக்கொண்டு இவர்களையும் எலிஜிபிலிடி உள்ளவர்களாக ஆக்கலாம் என்று முடிவு செய்தோம். இதில் என்ன கட்டாயம் இருக்கிறது ? அல்லது தவறு இருக்கிறது ? அவர்களுக்கு இது ஒரு சான்ஸ். மாடரேஷனுக்கு வராது மார்க் வாங்குகிறவனைப் பற்றி கவலை இல்லை. ஆனுல் அவர்கள் இந்தியிலும் கூட நிறையத்தான் வாங்குவார்கள். மற்றவற்றிலும் தரம் குறைவாக உள்ளவனுக்கு இந்திப்பரீட்சையில் வரும் மார்க்கையும் கூட்டி பாஸ் போட ஒரு சந்தர்ப்பம் இருந்தால் போட வேண்டும் என்பது தான் நம் கொள்கை.

இதனுல் தமிழ் அழிந்து போய்விடும் என்று யாரும் பயப்படவேண்டாம். தமிழா, இந்தியா என்ற பிரச்சினையே கிடையாது. கடவுளையும், தமிழையும் அழிக்கவேண்டுமென்ருல் கூட யாராலும் அழிக்க முடியாது.

கனம் உறுப்பினர் திரு. இராசாங்கம் அவர்கள் ரசம் ஆகப் பேசினுர்கள். இப்பொழுது அடுக்கு மொழி வைத்து அலங்காரமாகப் பேசினுர்கள். இருக்கிறது என்று பள்ளிகளில் ஆடுகளை அடைத்து வைப்பதுபோல் அவரைப் போலவே சொன்னுர்கள். அது எல்லாம் நான் படித்த காலம். இப்போது அப்படி அல்ல. கூட நானும் அப்போது எண்ணியதுண்டு. நல்ல நல்ல கட்டிடங்கள் காரணம் கிராம மக்கள் அக்கறை கொள்கிருர்கள். ஆனுல் இது போதாது. களை எல்லாம் பள்ளிகளுக்காகக் கட்டுகிருர்கள். எண்ணிக்கை அதிக காரணம் பள்ளிக்குச் செல்கிற குழந்தைகளுடைய கட்டிடம் வேண்டும், மாகிக்கொண்டே இருக்கிறது. இன்னும் நிறைய எல்லாம் வேண்டும். எக்விப்மெண்ட்—சைன்ஸ் லாபரெடரி போன்றவைகள் நூல் நிலையங்கள் ஏற்பட என்னுடைய ஆசை ஆரம்பப்பள்ளிகளில் கூட நிதி வேண்டும், வருவாய் வேண்டும். இதற்கெல்லாம் செலவு செய்ய எழுதுவது, நல்ல புத்தகங்கள் வேண்டும். இன்னும் பாட புத்தகங்கள் பல நுணுக்கமான நிர்ணயிப்பது ஆகிய கல்வித்துறை சம்பந்தமான நல்ல பல யோசனை முக்கிய பிரச்னைகளைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் அங்கத்தினர்கள் களைச் சொல்லக்கூடும் என்று எண்ணினேன், கனம் ஆனுல், அதில் யோசனை சொல்லுபவர்கள் என்று எதிர்பார்த்தேன். என்னைப் பற்றி காரசாரமாகப் தான் நான் ஏமாற்றம் அடைந்தேன். இதைக்கேட்டு எனக்குச் சினம் பேசியது பற்றி நான் கவலைப்படவில்லை. ஏற்படவில்லை. சிரிப்பு ஏற்பட்டது.

**திரு. து. ப. அழகமுத்து:** அங்கத்தினர்களுடைய யோசனைகளைப் [illegible] அக்கறை காட்டுவார்கள் [illegible] கனம் [illegible] சந்தர்ப்பம் [illegible] என்ருல் கல்வி [illegible] விவாதம் [illegible] இருக்கக்கூடாதா?

[17th March 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஒரு நாள் ஒதுக்கியே ஒரு யோசனையும் எனக்கும் கிடைக்கவில்லையென்றால் இரண்டு நாள் ஒதுக்கி என்ன பண்ணுவது ? (சிரிப்பு).

பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டுமானால் அவர்களுக்குச் சாப்பாட்டுக் கவலை இருக்கக்கூடாது. மதிய உணவுத் திட்டம் உலகமே போற்றுகின்ற ஒரு திட்டம். நான் உலக உணவு மகாநாட்டுக்குச் சென்ற போது ஆப்பிரிக்க நாடுகள், மற்றும் உலக நாடுகள் எல்லாம் கூட "ஸ்கூல் லஞ்ச் ப்ரோகிராம்" என்பதன் முக்கியத்தை மிகவும் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை அறிந்தேன். இங்கே நாம் மூன்றில் ஒரு பங்கு குழந்தைகளுக்கு 6 ந.பை. வீதம் கொடுக்கிறோம். அதுவே 128 லட்சம் ரூபாய் ஆகிறது. இதற்குத் தாராளமாகக் கொடுக்க மக்கள் முன் வரவேண்டும். இதிலே மக்களை ஊக்குவித்தால் முன் வருவார்கள். இங்கே இருக்கின்ற கனம் உறுப்பினர்கள் "சாப்பாடு பிரயோசனம் இல்லை" ஆசிரியர்கள் எல்லாம் சமையல்காரர்களாக இருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். சாப்பாடு போடாவிட்டால் அறிவு ஏறாது. தாய் சமையல்காரிதான். தாயை விட பிள்ளைகளிடத்தில் அதிக அக்கறை கொண்டவன் ஆசிரியன். அவர்கள் சாப்பாடு சமைத்துப் போட்டால் கூட தப்பில்லை. பாடம் நன்றாகச் சொல்லிக்கொடுக்கவேண்டும். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அரியநாயகம் பேசிக் ஸ்கூல் பற்றிக் கூறியதைக் குறிப்பிட்டார்கள். மதிய உணவுத் திட்டம் பற்றி அறிக்கை வந்தது. அவரவர்கள் அவரவர்களுடைய கோணங்களில் பார்க்கிறார்கள். திரு. அரியநாயகம் ஒரு வைதீகி, வைதீகி நிபுணர்களுக்கெல்லாம் திருப்தி இருக்காது. ஆதாரக் கல்வி முறையைப் பொறுத்த மட்டில் ஆதாரக் கல்வியின் அடிப்படைக் கொள்கையை இந்த அரசாங்கம் கண்டிப்பாக ஏற்றுக்கொண்டு நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. அதைக் கொஞ்சங்கூடத் தளர்த்தவே இல்லை. இந்தக் கல்வித் திட்டத்திலே அடிப்படையான கொள்கை என்ன ? வேலை செய்யக் கற்றுக் கொடுக்கவேண்டும். இன்ன வேலை என்று இல்லை. எந்த வேலையையும் கற்றுக் கொடுக்கவேண்டும். நூற்பு வேலைதான் செய்யவேண்டுமென்று இல்லை. முக்கியமாக "டெக்னிகல் பயஸ்" என்பது வற்புறுத்தப்பட வேண்டிய விஷயம். முன்பு ஒரு சமயம் நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் என்னிடம் ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். அவர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது அவரை அங்குள்ள ஒரு பெரிய விவசாயக் கல்லூரிக்கு அழைத்துச் சென்று காட்டியபோது, அந்தக் கல்லூரித் தலைவர் அங்கே இருக்கிற நம்முடைய இந்திய நாட்டு மாணவர்களைக் காட்டி "அவர்கள் எல்லாம் இங்கே படிக்கிறார்கள்; ஆனால் பால் கறக்கச் சொன்னால் இன்ஃப்ரா டிக் என்று சொல்லி, இதற்காகவா இங்கே வந்து படிக்கிறோம் என்று பரிகாசமாகச் சொன்னார்கள்" என்று கூறினார். ஏதோ இரண்டு எழுத்துப் படித்து விட்டால் வேலை செய்வது கேவலம் என்று எண்ணும் எண்ணம் போகவேண்டும். அதுதான் ஆதாரக் கல்வியின் அடிப்படைக் கொள்கை. இன்ன வேலை என்று இல்லை ; அந்தந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஏற்றவாறு விவசாயம், தோட்ட வேலை, காய்கறி பயிரிடுதல், பூச்செடி வைத்தல் போன்றவற்றில் எதை வேண்டுமானாலும் செய்யலாம். நூற்பு வேலையும் இருக்கும் ; ஆனால் நூற்பு வேலை மாத்திரம்தான் என்று இல்லை. இதிலே ஆசிரியர்களும் அக்கறை கொள்கிறார்கள் ; பிள்ளைகளும் அக்கறை கொள்கிறார்கள். இதிலே அவர்கள் மேலும் நல்ல அக்கறை கொள்ளவேண்டும். பஞ்சாயத்துக்கு இந்தப் பொறுப்பைக் கொடுத்தது அவ்வளவு நல்லதல்ல என்று கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். பஞ்சாயத்துத் தலைவர்கள் பொறுப்புள்ளவர்கள். அந்தப் பள்ளியில் உள்ள ஏழைக் குழந்தைகளின் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ளட்டும் என்ற முறையிலேதான் பஞ்சாயத்திடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவுக்குத் தலைமையாசிரியர் காரியதரிசியாக இருப்பார். அந்த வகையில் அதைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று வகை செய்யப்பட்டிருக்கிறது.

கனம் உறுப்பினர் சிரஞ்சீவலு நாயுடு அவர்கள் "பள்ளிக்கூடச் சம்பளம் இல்லாத பள்ளிக்கூடம் எங்கே இருக்கிறது ?" என்ற ஒரு உயர்ந்த வாதத்தைக் கிளப்பினார்கள். அது என்னவென்றால், "[illegible]



17th March 1964] [திரு. எம். பக்தவத்சலம்]

கேஷன் செஸ் வசூலிக்கிறார்கள்," என்பதுதான். நிலமுள்ளவர்களிடமிருந்து ஆரம்பக் கல்விக்காக வரி வசூல் செய்யப்படுகிறது. நிலமுள்ளவர்கள்தான் அந்த வரியைக் கொடுக்கிறார்களே தவிர மற்றபடி வேறு ஒருவரும் கொடுப்பதில்லை. எத்தனை பிள்ளைகளின் பெற்றோர்கள் நிலம் வைத்திருக்கிறார்கள் ? நாம் ஆரம்பக் கல்வி அளவிலேதான் இந்த செஸ் வசூலிக்கிறோம். ஆனால் சில மாநிலங்களில் உயர்நிலைப்பள்ளிப் படிப்புக்கு கூட செஸ் வசூலிக்கிறார்கள். இதை வைத்துக்கொண்டு "இலவசக் கல்வி" இல்லை என்று சொன்னால், அவ்வாறு மனதில் வைத்துக் கொள்வதைப் பற்றிக் கவலை இல்லை, அதைச் சுட்டிக் காட்டுவதில் பிரயோசனம் இல்லையென்று சொல்ல விரும்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளி மானேஜ்மெண்ட் பற்றிச் சில கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஜில்லா போர்டு எடுக்கப்பட்ட பிறகு நாம் செய்த சட்டப்படி பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஆரம்பப் பள்ளிகளின் பொறுப்பை தான் கொடுத்திருக்கிறோம். ஜில்லா போர்டு எடுக்கப்பட்டவுடன் உயர்நிலைப் பள்ளிகளை கலெக்டர்களின் மேற்பார்வையில் வைத்தோம். கலெக்டர்களால் இதிலே போதிய கவனம் செலுத்த முடியவில்லை. ஏராளமான உயர்நிலைப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. "அகாடமிக் சூப்பர்விஷன்" ஒரு விஷயம். அதற்குக் கல்வி இலாகா இருக்கிறது. மேற்பார்வை பார்ப்பது வேறு விஷயம். சில கனம் அங்கத்தினர்கள் டெவலப்மெண்ட் கவுன்சில் மேற்பார்வையில் விட வேண்டுமென்று சொன்னார்கள். டெவலப்மெண்ட் கவுன்சில் நிர்வாக சபை அல்ல. டெவலப்மெண்ட் கவுன்சில் ஸ்டான்டிங் கமிட்டி பாடப் புத்தகங்களை செலக்ட் பண்ண வேண்டுமென்று செய்ததிலேயே எத்தனையோ கோளாறுகள் ஏற்பட்டன. டெவலப்மெண்ட் கவுன்சில் வெறும் ஆலோசனைக் குழு என்பதால் உயர்நிலைப் பள்ளிகளை மேற்பார்வையிடும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்க முடியாது.

இரண்டு ஆண்டுகள் இண்டர் மீடியட் என்று கல்லூரியில் ஏற்படுத்துவது பற்றிக் கனம் எதிர்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் பேசினார்கள். இதெல்லாம் நன்றாகத் தீர ஆராயப்பட்டது. இ.எஸ்.எல்.சி. பரீட்சையை எடுத்துவிட்டது பற்றிக் கூறினார்கள். தற்போது உயர்நிலைப்பள்ளிப் படிப்பு இண்டகிரேடெட் ஸ்கீமாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஏதோ வயது வந்த பெண் மணிகளுக்கு மட்டும் இ.எஸ்.எல்.சி. பரிட்சை வைத்து நடத்துகிறோம். ஆரம்பப் பள்ளிப் படிப்பு அஸ்திவாரப் படிப்பு. அந்தப் படிப்பைக் கற்றுக் கொடுக்கிறவர்கள் இ.எஸ்.எல்.சி.—ஆக இருந்தால் போதாது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. ஆகவேதான் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை 1 முதல் 11-வது வகுப்பு வரை இண்டகிரேடட் கோர்ஸ் ஆக வைத்திருக்கிறோம். பிறகு டிகிரி கோர்ஸ் மூன்று ஆண்டுகள் குறையாமல் இருக்கவேண்டுமென்று பல்கலைக் கழகங்கள் ஏகோபித்த அபிப்பிராயத்துடன் செய்த முடிவு. நிபுணர்களுடைய அபிப்பிராயம் அது. பி.யு.சி. படிப்பை ஒரு வருஷத்திற்கு மேல் இரண்டு வருஷம் என்று ஆக்கினால் மொத்தம் 16 வருஷம் ஆகும். இது அதிகமாக இருக்கும். ஆகவேதான் ஒரு வருஷம் என்று வைத்திருக்கிறோம். ஆனால் பிரி-யூனிவர்சிடி பாடத் திட்டத்தை மாற்றியமைப்பதிலே பல்கலைக் கழகங்கள் கவனம் செலுத்தி வருகிறது.

(கனம் சபாநாயகர் தலைமை.)

பள்ளிகளில் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யவேண்டுமென்று கூறினார்கள். அதை நான் முற்றிலும் வரவேற்கிறேன். பள்ளிகளில் லிடரரி சொசைட்டி என்று வைத்திருக்கிறார்கள். லிடரரி தமிழ்ச் சங்கம், லிடரரி சொசைட்டியில் ஆங்கிலத்தில் பேசுவது, தமிழ்ச் சங்கத்தில் மட்டுமே தமிழில் பேசுவது என்பது மிகத் தவறு. மேலும் தமிழ் முழக்கத்துக்கும் பாட மொழிக்கும் சம்பந்தம் இல்லை. சயன்ஸ், சரித்திரம், பயாலஜி, பிஸியாலஜி, அனாடமி ஆகிய பாடங்களை எல்லாம் எப்படி புரிந்து கொள்வது ? புரிந்து கொள்வது ரொம்ப முக்கியம். எப்படி சொன்னால் புரிந்து கொள்வார்கள் என்பதுதான் முக்கியம். புரிந்து [illegible]கற்காக ஆங்கிலத்தில் எடுத்துச் சொல்லி பிறகு தமிழிலும்

எடுத்துச் சொல்லலாம். தமிழ் வளர வேண்டுமென்றால் தமிழ் இலக்கியத்தை நன்றாகப் படிக்கவேண்டும். தமிழ் இலக்கியங்களை நன்றாகப் படிக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதிலே கனம் உறுப்பினர்கள் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். இன்று தமிழ் எம்.ஏ. படித்தவர்கள் எத்தனை பேர் வருகிறார்கள் ? இதிலே நல்ல ஆர்வம் இருந்தால் அரசாங்கம் தனியாகவே தமிழ்க் கல்லூரி ஒன்றை ஆரம்பிப்பதற்குக்கூட உதவி செய்யத் தயாராக இருக்கிறது. ஆனால் பாடமொழிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. கல்லூரியில் படிக்கின்றவர்களுக்கு நிறைய ரெபரன்ஸ் புக்ஸ் வேண்டும். ஏதோ ஓரிரண்டு புத்தகங்களைப் படித்து விட்டு பட்டம் வாங்கி விட்டால் போதாது. அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். உலகத்தில் அன்றாடம் புதிய புதிய ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வெளி வருகின்றன. அதெல்லாம் நமக்குத் தெரிய வேண்டாமா ?

1-30 p.m. "பீரோ ஆப் டமில் பப்ளிக்கேஷன்ஸ்" வேண்டியதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எப்ரல் 13-ம் தேதி புதிதாக சில நல்ல புத்தகங்களை வெளியிடப் போகிறார்கள். கான்ஸல்களை எல்லாம் அழைத்திருக்கிறோம், உங்கள் நாடுகளுக்கும் அனுப்புங்கள் என்று. பல விஷயங்கள் பற்றி படித்து அறிவு பெறவேண்டியிருக்கிறது. அதற்கு இது எந்த மூலை ? ஜெர்மனியிலும் ஸயன்ஸ் படிக்கிறார்கள். பெரும்பாலும் ஆங்கிலத்தில்தான் இருக்கிறது. ஆகவே இதை ஒரு பெரிய பிரச்னையாக வைத்துக் கொண்டிருப்பதற்கில்லை. தமிழ் படிக்க வருகிறவர்களுக்கு எவ்வளவு ஊக்கம் அளிக்கவேண்டுமோ அதை அளிக்க தயாராக இருக்கிறோம். ஐ.ஏ.எஸ்.–க்கு போகவேண்டும். அப்படி போனால் பஞ்சாபிற்கோ அல்லது வேறு இடங்களுக்கோ அனுப்பினால் என்ன செய்வது என்ற கவலை அவர்களுக்கு இருக்கிறது. போஸ்ட் க்ராஜுவேட்டுக்கு படிக்கவேண்டுமென்று எல்லோருக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது. அட்மிஷன் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். எல்லோரையும் எடுத்துக் கொள்ள முடியாது. அவர்கள் தமிழில் பாடங்கள் படித்தால் கஷ்டமாகயிருக்கும் என்று சொல்கிறார்கள். நாம் வேண்டாம் என்று சொல்லவில்லை. தமிழ் படிக்க விரும்புகிறவர்களுக்கு ஊக்கமும், ஆதரவும் அளிக்க தயாராயிருக்கிறோம். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் நடத்துவது பற்றி சொன்னார்கள். திரு. கமலநாதன் சில உத்தரவுகள் பற்றி சொன்னார்கள். திட்டம் போட்டு அடுத்த வருடத்தில் இவ்வளவு ஆசிரியர்களை புதிதாக எடுத்துக் கொள்ளலாம் என்று போட்டிருக்கிறோம். 8,000 என்று போட்டிருக்கிறோம் என்றால் கணக்கு பார்க்காமல் 10,000 பேர்களை எடுக்க வேண்டுமென்றால் பணத்திற்கு எங்கே போவது ? டீச்சர்—ப்யூப்பிள் ரேஷியோவை மாற்றியமைத்திருக்கிறோம். நேற்று முன் தினம் மதுரையில் இருந்த போது அனுபவம் உள்ள ஆசிரியர்கள் அதற்கு திருப்தி தெரிவித்தார்கள். இதற்கெல்லாம் கண்காணிப்பு வேண்டும். ஆகவே புதுப் பள்ளிக்கூடங்கள் என்றாலும், புது ஆசிரியர்கள் என்றாலும் கல்வி இலாகா இயக்குனர் அங்கீகாரத்தின் பேரில் செய்யவேண்டுமென்று. அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு உடை கொடுப்பது பற்றி முன்பே விளக்கியிருக்கிறேன். அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது. பிள்ளைகளுக்கு சீருடை வழங்க எப்படி முற்படுகிறார்களோ அப்படி முற்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வருகிறேன். திரு. தர்மலிங்கம் அவர்கள் சில ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுகிறார்கள் என்று சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்கள், சர்க்கார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் கண்டிப்பாக இதை அனுசரிக்க வேண்டிய விஷயம். அவர்கள் கூறியதுபோல் உதவி பெறுகிற பள்ளி ஆசிரியர்களும் அரசியலில் கலந்து கொள்ளக் கூடாதுதான். கலந்து கொள்கிறார்கள் என்று ஏற்பட்டால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரும் போது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். மதிய உணவு திட்டத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி சொன்னார்கள். சில கேள்விகளுக்கு விடை அளித்திருக்கிறேன். மேற்பார்வை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று கூறியிருக்கிறேன். திருநெல்வேலி வைத்தியக் கல்லூரி பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த மான்யத்தின் கீழ் இது வரவில்லை என்றாலும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்





கூறியதால் கூறுகிறேன். கீழ்ப்பாக்க வைத்தியக் கல்லூரியை விஸ்தரிக்க முடியாத காரணத்தினால் திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இன்னொரு யோசனை கூறினார்கள். இங்கே ஒரு சிறிய அளவில் வைத்துக்கொள்ளலாம் என்று. அதெல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிற ஒரு விஷயம். டெக்னிக்கல் எட்யூக்கேஷனை விஸ்தரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். டெக்னிக்கல் எட்யூக்கேஷனுக்கு எவ்வளவு கோரியிருக்கிறோமோ அதை விட அதிகம் செலவு செய்து வருகிறோம். ஆசிரியர்களுக்கு வீடு முக்கியமானது. அதிலும் பெண் ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டுவது முக்கியம். ஓரளவு கட்டி வருகிறோம். பெண்கள் ஹாஸ்டலுக்கு ஒதுக்கப்பட்ட பணம் செலவாகவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஓரளவு செலவாகவில்லை என்றால் வேறு அவசரமான இனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. கட்டடம் கட்ட உடனடி பூமி கிடைப்பதில்லை. காண்ட்ராக்ட்டுக்கு விட்டால் நாளாகிறது. பணம் வீணாகப்போகக்கூடாது, மிச்சப்பட்டு போகக் கூடாது என்று வேறு இனங்களுக்கு செலவாக்கப்படுகிறது. ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் குறைந்திருக்கிறது என்றால் டெக்னிக்கல் எட்யூக்கேஷனில் நாம் அதிகம் செலவு செய்திருப்பதை பார்த்தால் இது குறைந்ததாக இருக்காது. மொத்தத்தில் கட்டடங்கள் கட்டுவதை கொஞ்சம் நிறுத்தி வைத்தோம். வருகிற ஆண்டு கட்டடம் கட்ட முற்பட்டிருக்கிறோம். தொழில் கல்விக்கு செலவு செய்ததைச் சேர்க்காது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவ்வினத்தில் ரூ. 76,000 உயர்ந்தது. தொழில் இனத்திற்கு மாற்றப்பட்டிருப்பதையும் சேர்த்துப் பார்த்தால் கல்வியின் செலவு அதிகமாயிருப்பதைப் பார்க்கலாம். தரம் குறைந்து போய் விட்டது என்பதை ஒருக்காலும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். உயர்ந்துதான் வருகிறது. அது போதவே போதாது, அது மேலும் உயரவேண்டும். எப்படி உயர வேண்டுமென்றால் சில கோட்பாடுகள், சில கருத்துக்கள் இவற்றை வைத்துக் கொண்டு தடை செய்யாமல் உலகம் எவ்வளவு வேகமாக முன்னேறிக்கொண்டு போகிறதோ அதற்கேற்ற அளவு நம் குழந்தைகள் பரிபூரண அறிவு பெற வேண்டும், அதற்குரிய வகையில் நம் கல்விச்சாலைகள் இயங்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த அரசாங்கம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அதற்கு வேண்டிய ஆதரவையும், ஒத்துழைப்பையும் சட்டமன்ற அங்கத்தினர்களும் பொது மக்களும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இன்னும் அதிகமான யோசனைகளை எதிர்பார்த்தேன் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவற்றை சொல்ல மனம் இருந்தாலும் நேரம் இல்லாத காரணத்தினால் சொல்லமுடியவில்லை. எனவே அடுத்த தடவையாவது இதற்கு இரண்டு நாட்கள் ஒதுக்கினால் நலமாயிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** மொத்தத்தில் 60 நாட்களாக்கிவிட்டால் நல்லது.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** ஆசிரியர்களுக்கு கிடைக்கிற சம்பளம் குறைவு. அதில் எமர்ஜன்சி ப்ராவிடன்ட் பண்ட் என்று பிடித்துவிடுகிறார்களாம். அதை ரத்து செய்யவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களுக்கு கோரிக்கைவிட்டிருக்கிறார்கள். அதைக் கவனித்தால் நலமாகயிருக்கும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அங்கத்தினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

அங்கத்தினர் அவர்களுக்கு நான் ஒன்று நினைவுபடுத்த விரும்புகிறேன். வட சென்னையில் பெண்கள் கல்லூரி வரவேண்டியிருக்கிறது. அதற்கு நிதி திரட்ட இன்னும் கனம் அங்கத்தினர் ஒரு முயற்சியும் செய்யவில்லை. அதை முதலில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** முதல் அமைச்சர் அவர்கள் ஒரு குழு அமைத்திருப்பதால் உடனே வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிறோம்.

**திரு. ம. கமலநாதன் :** ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதாசாரத்தைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களை குறைத்து விட்டால் விகிதாசாரம் பாதிக்கப்படும் என்பதை உணர்கிறார்களா ? பஞ்சாயத்து யூனியனுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டுமென்றும், அதோடு இருக்கும் அதிகாரங்களைப் பறித்து விட்டதாக பஞ்சாயத்து யூனியனில் இருப்பவர்கள் வருந்துகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்கிறார்களா ?

**கனம் திரு எம். பக்தவத்சலம் :** அங்கத்தினர் ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர். அதிகாரம் என்ற வகையில் இதைக் கருதக் கூடாது. அதிகாரம் குறைந்து விட்டது, அதிகமாக வேண்டும் என்ற முறையில் இதை எடுத்துக் கொள்ளக்கூடாது. இதெல்லாம் ஒரு கண்காணிப்பு. டீச்சர்-ப்யூப்பிள் ரேஷியோ எந்த விதத்திலும் பாதகம் அடையாது. அதை எல்லாம் கல்வி இலாகா இயக்குனர் பார்த்துக் கொள்வார். இலாகாவினரும் பார்த்துக் கொள்வார்கள். தங்களுக்கு வேண்டிய ஆசிரியர்களைப் பெறுவதில் எந்தவிதக் கவலையும் படவேண்டியதில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** இந்தியில் மார்க் தேவையில்லை, ஆனால் தேர்வு எழுத வேண்டும் என்ற முறை இருந்தபோது மாணவர்கள் தேர்வு எழுதாமலேயே அலட்சியப்படுத்துகிறார்கள் என்ற காரணத்துக்காக தேர்வு வேண்டாமென்று முடிவு எடுத்தோம் என்று சொன்னார்கள். இப்போது தேர்விற்கு போகவேண்டும். தேர்வுக்கு போனால்தான் கல்லூரிகளில் இடம் கிடைக்கும். ஆனால் மார்க்குகளைப்பற்றி கவலையில்லையென்ற நிலை இருக்கிறது. இதில் கூட தேர்வு முறையை அலட்சியப்படுத்துகிற நிலை பிறக்காதா என்பதை விளக்கவேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒருக்காலும் இருக்காது. ஏனென்றால் எவ்வளவுதான் ஜோஸ்யம் பார்த்து பாஸ் செய்து விடுவோம் என்று போனாலும் பரீட்சை எழுதப் போகும்போது என்னவாகுமோ என்று நினைத்து இந்தியையும் எழுதி வைப்போம், எதாவது குறைந்தால் இதில் பத்து மார்க் வந்தாலும் போதும், அது பயன்படும் என்று எழுதுவார்கள். ஆகவே இப்போதுள்ள முறையில் இப் பரீட்சையை இன்று அலட்சியம் செய்யமாட்டான்.

**புலவர் கா. கோவிந்தன் :** மத்திய அரசு பணிகளுக்காக வருகின்றவர்களின் தகுதியைப்பற்றி விளக்கம் அளிக்கின்ற நேரத்தில் வட இந்தியாவில் இருந்து வருகிறவர்களுக்கும் ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்ற நிலை ஏற்படும் என்பதை சொன்னார்கள். சாதாரணமாக அந்தப் பணிக்கு வருகின்றவர்கள் எம்.ஏ. படித்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் எம்.ஏ. பட்டம் பெற்றிருப்பதால் இயல்பாகவே அவர்கள் ஆங்கிலத்தை தெரிந்திருப்பார்கள். ஆகவே அவர்கள் மீண்டும் ஆங்கிலம் தெரிந்து கொள்ளவேண்டும் என்று அவர்களிடம் எதிர்பார்ப்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் ? இதைக் கொண்டு, தமிழை தாய்மொழியாகக் கொண்ட தென்னாட்டவர்கள் இந்தி படிப்பது சரி என்று சொல்வதற்கு " கௌண்டர் வெயிட்டாக " போடுவது எந்த அளவுக்குப் பொருத்தம் என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆங்கிலம் போதிய அளவில் தெரிந்து கொள்ளாமலும் எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஆகவே இம்மாதிரிப் பட்டவர்கள் எம்.ஏ. பட்டம் பெற்றிருந்த போதிலும், ஆங்கிலத்தில் டெஸ்ட் வைக்க வேண்டும் என்று சொன்னேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் சுட்டிக்காட்டியது, 1963–64-ல் திட்ட மதிப்பீடு ரூபாய் 29 கோடி 25 லட்சம். திருத்தப்பட்ட மதிப்பீட்டில் 1963–64-ல் 28 கோடி 60 லட்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது 65 லட்சம் குறைந்திருக்கிறது. இது வேறு துறைக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைத்தான் அறிந்து கொள்ள விரும்பினேன்.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கான விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. பட்ஜெட் எஸ்டிமேட்டில் 1963–64-ல் ரூபாய் 28,71,45,500 என்று போடப்பட்டிருந்தது, ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் ரூபாய் 28,03,13,400 என்றிருக்கிறது. இதிலுள்ள குறைவு எந்தெந்த இனத்தில் இருக்கிறது என்றால், யூனிவர்சிட்டி, செக்கண்டரி, பிரைமரி Special, General—இன்னும் பலவித இனங்களில் குறைவு ஏற்பட்டிருக்கிறது. குறைவான அளவில்தான் குறைந்திருக்கிறது. (குறுக்கீடு) எந்த இனத்தில் மட்டும் செலவழிக்கப்படவில்லை என்றால், டீச்சர்ஸ் என்ற இனத்தில் இதில் செலவு செய்யப்படவில்லை, வேறு இனங்களில் இது சரிக்கட்டிப்போயிருக்கிறது.

Mr. SPEAKER : The question is—

" That the allotment of Rs. 31,32,17,600 under Demand No. XIII—Education be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

Mr. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 31,32,17,600 under Demand No. XIII—Education."

The Demand was put and carried and the Grant was made.

Mr. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow. 1-45 p.m.

The House then adjourned.

## V.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

Nil.

### B. Reports, Notifications and other papers.

*82. Labour in Madras State, 1963–64.

---

* Circulated to Members on 14th March 1964.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, the 18th March 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Death in Police Lock-up*

* 301 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the circumstances under which one Mani met with his death in Thirumangalam Town Police station in Madurai district, on or about 7th August 1963;

(*b*) when the said person was taken into custody and under what authority;

(*c*) how the dead body was disposed of;

(*d*) whether any enquiry was conducted in the matter; and

(*e*) if so, the findings of the enquiry?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The individual was arrested by the Detective Police party at Tirumangalam on the night of 7th August 1963 on suspicion of theft and lodged in Tirumangalam Town Police station. During the night between 7th and 8th August 1963 he committed suicide by hanging in the cell.

(*c*) None of the relatives or friends of the deceased was available to whom the Revenue Divisional Officer could hand over the corpse for disposal after post-mortem examination. The Police, therefore, cremated the body.

(*d*) & (*e*) Yes. The Revenue Divisional Officer, Usilampatti, held an enquiry into the occurrence under Police Standing Order No. 145 and gave a finding that the suspect committed suicide by hanging.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும்போது அதை விசாரிக்கும் பொறுப்பை ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிக்கு இதுவரையில் கொடுத்து வந்திருக்கிறது. அதை மாற்றி ஜுடிஷியல் ஆஃபீஸர் இந்த மாதிரி குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு உத்தேசம் இல்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஸார், திருட்டு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட நபர் லாக்கப்பில் வைக்கப்பட்டு அங்கே தூக்குப் போட்டுக் கொண்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். லாக்கப் போலீஸ்

[18th March 1964

ஸ்டேஷனுக்கு அருகாமையில் இருக்கும். அங்கே போலீஸ்காரர் இருந்திருப்பார். அந்த இடத்தில் எப்படித் தூக்குப் போட்டுக் கொண்டார்? அடித்துக் கொல்லப்பட்டு தூக்கில் மாட்டப்பட்டாரா என்பதனைப் பரிசீலித்தார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இவர் கன்னியாகுமரியைச் சேர்ந்தவர். 15 வயதிலிருந்தே வீட்டையெல்லாம் விட்டு விட்டு திருட்டு போன்ற தொழிலில் ஈடுபட்டவர்கள். திருமங்கலத்தில் சந்தேகத்தின் பேரில் பிடித்தபோது, பெட்டியில் பட்டு சேலைகள், கடிகாரங்கள் எல்லாம் வைத்திருந்தார்கள். அதைப் பார்த்து விட்டு போலீஸார் லாக்கப்பில் வைத்தார்கள். அவரைப் பிடித்தது இரவு 9-15 மணிக்கு. 11 மணிக்குமேல் லாக்கப்பில் வைத்தார்கள். செண்ட்ரி போலீஸ் கான்ஸ்டேபில் இருந்தார். சப்-இன்ஸ்பெக்டர் வந்து பார்த்தார். சப்-இன்ஸ்பெக்டர் லாக்கப்பில் அந்த நபரைப் பார்த்து விட்டுப் போய்விட்டார். செண்ட்ரி கான்ஸ்டேபில் ஒரே ஒரு கான்ஸ்டேபில் இருந்திருக்கிறார். மற்றவர்கள் யாரும் இல்லை. இரவு 12-30 மணிவரையில் பார்த்திருக்கிறார். காலையில் 6 மணிக்கு தூக்குப் போட்டுக்கொண்டு தொங்கியதைப் பார்த்தார். அதற்கு அப்புறம் போஸ்ட் மார்ட்டம் செய்து, விசாரணை நடத்தி, சொந்தக்காரர் ஒருவரும் இல்லாததால் உடல் தகனம் செய்யப்பட்டது. அப்படிப் பார்த்ததிலே ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் அபிப்பிராயப்படுவது, சில கிழிந்த துணிகள், பனியன், 8 முழம் தோர்த்தியெல்லாம் இருந்தன. அதைக் கிழித்து அதை மேலே போட்டு, ஜன்னலிலே வர் அவரு தூக்குப் போட்டுக்கொண்டார் என்று முடிவு செய்திருக்கிறார். அதற்கு ஃபுட் பிரிண்ட்ஸும் இருக்கின்றன. இதையெல்லாம் பார்த்துதான் தூக்கு போட்டுக்கொண்டார் என்று முடிவு செய்யப்பட்டது. அடித்துக் கொல்லப்பட்டாரா என்றால் அன்றைய தினம் அடித்ததற்கு ஒன்றும் அடையாளம் இல்லை என்று டாக்டர்களும் முடிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** புலன் விசாரணை செய்வதற்காக 24 மணி நேரம் லாக்கப்பில் வைக்க ஏற்பாடு இருக்கிறது. வாயக் கணக்கில்கூட புலன் விசாரணை செய்யவேண்டுமென்று சொல்லி லாக்கப்பில் வைத்து கொடுமைப் படுத்துவதன் காரணமாக இந்த மாதிரி நடக்கின்றன. 24 மணி என்பதைக் குறைத்து, அரெஸ்ட் செய்தவுடன் ரிமாண்டில் வைக்க அரசாங்கம் உத்திரவு போடுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது வேறு விஷயம். இந்த கேஸிலே எல்லாம் ஒரு இரவுக்குள் நடந்திருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, லாக்கப்பில் வைத்திருக்கிற கைதிகளைக் கண்காணிக்கும் பொறுப்பு போலீஸ்காரர்களைச் சேர்ந்ததாகும். காலை 6 மணிக்குப் பார்க்கும்போது தூக்குப் போட்டுக் கொண்டிருந்தார் என்று அறிவிக்கப்படுகிறது. போலீஸ்காரர் கண்ணில் படாமல் எப்படி லாக்கப்பில் இந்த நிகழ்ச்சி நடைபெற முடியும்? இரவு 12-30 மணிக்குப் பார்த்து விட்டு மறுநாள் காலை 6 மணிக்குத் தான் பார்த்திருக்கிறார் என்று சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட நிலை இருக்கக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரே ஒரு கான்ஸ்டபில் இருந்ததாகத் தெரிகிறது. எல்லோரையும் ஏன் கண்காணிக்கவில்லை என்று விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இதில் மற்றொன்று புலப்படுகிறது. ஒருவர் போதாது, இன்னொருவர் அடிஷனல் சார்ஜ் போடவேண்டுமென்று தோன்றுகிறது.

**திரு. செ. சீனிவாசன் :** சப்-ஜெயிலில் தூக்குப் போட்டுக் கொள்ள முடியாது. அப்படியே லாக்கப் பண்ணுகிற இடத்திலேயும் தூக்குப் போட்டுக்கொள்ள முடியாத அளவில் செய்ய சர்க்கார் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கூடிய வரையில் கவனிக்கப்பட்டுதான் வருகிறது. அப்படியிருந்தாலும் கட்டிக்கொள்ளும் துணியை எல்லாம் வைத்துக்கொண்டு தூக்கு போட்டுக்கொள்ள முயற்சி செய்கிறார்கள்.



18th March 1964]

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தூக்குப் போட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிற அந்தத் தேதியில் அதே லாக்கப்பில் வேறு யாராவது குற்றவாளிகள் இருந்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர் அடைத்து வைக்கப்பட்ட அறையில் வேறு யாரும் இல்லை.

## *Payment of pension for Commercial Instructors*

* 302 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have withheld the payment of Pension to the Commercial Instructors who served in Government Schools;

(*b*) whether the Government have issued orders that Commercial Instructors in schools will not be treated on par with the teachers holding B.T. Degrees in regard to the payment of pension; and

(*c*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Teachers are required to possess besides the B.A. degree, the B.T. degree also. But Commercial Instructors need possess only the shorthand and typewriting qualification by the higher grade and where they possess the shorthand and typewriting qualification by the lower grade, they should have passed the B.Com. degree. As teachers are required to possess higher qualifications, they draw a higher scale. Compared to them, the Commercial Instructors draw pay on a lower scale and hence they are entitled to only lower pension.

## கர்ணம் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் (பெண்கள்)

* 303 கேள்வி.—**திரு. இரா. நாராயணன் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் சென்னை மாநிலத்தில் (1) கிராம கர்ணம், (2) ரெவின்யூ இன்ஸ்பெக்டர் முதலிய வேலைகளில் எத்தனை பெண்கள் இருக்கின்றனர் ?

(இ) அவர்களுக்கு ஏதேனும் விசேஷ சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) 1963-ல் சேலம், தஞ்சை மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பெண் கர்ணமாக வேலை பார்த்துவந்தார். சென்னை மாவட்டத்தில் ஒருவர், ராமநாதபுர மாவட்டத்தில் இருவர், கோவை மாவட்டத்தில் ஒருவர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒருவர்—ஆக ஐந்து பெண்கள் ரெவின்யூ இன்ஸ்பெக்டராக வேலை பார்த்து வந்தனர்.

(இ) இல்லை.

[18th March 1964

**விருத்தாசலம் சப்-மாஜிஸ்டிரேட் அலுவல் விஸ்தரிப்பு**

* 304 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலுகாவிலுள்ள திட்டக்குடி போலீஸ் ஸ்டேஷன், தொழுதூர் போலீஸ் ஸ்டேஷன் எல்லைகளுக்குட்பட்ட கிரிமினல் வழக்குகளை திட்டக்குடி டிபுடி தாசில்தார் அவர்களின் ஆபீஸிலேயே, விருத்தாசலம் சப்-மாஜிஸ்ட்ரேட் அவர்களால், வாரத்திற்கு ஒருமுறை விசாரணை செய்ய ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No.

**தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குச் சலுகைகள்**

* 305. கேள்வி—**திரு. மா. இராசாங்கம்**
**திரு. கி. நாராயணசாமி பிள்ளை** } : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்கப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்படும் வீட்டு வாடகை, மருத்துவ உதவி போன்ற சலுகைகள் தனியார் துறை பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்படி செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் வேலை செய்கிற ஆசிரியர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க ஏதேனும் சட்டம் கொண்டு வர மாநில அரசாங்கத்துக்கு உத்தேசம் உண்டா ? அது போன்ற கருத்து மத்திய அரசாங்கத்தால் மாநில அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு ஒன்றும் இல்லை.

*General Provident Fund for Teachers*

* 306 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any additional amount has been deducted so far from the salaries of the teachers due to the changes in the General Provident Fund Scheme; and

(b) whether there is any proposal to withdraw those changes at present?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) No.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த கம்பல்ஸரி டெபாஸிட் ஸ்கீம் மத்திய சர்க்காரினால் கைவிடப்பட்டு விட்டது. இப்போது ஆசிரியர்களிடத்தில் கட்டாயமாகக் கழிக்கப்படும் ப்ராவிடெண்ட்ஃபண்டை நிறுத்தி வைக்க அரசாங்கம் மறு பரிசீலனை செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகைய உத்தேசம் அரசாங்கத்திற்கு இப்போது இல்லை.



18th March 1964]

**ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பளம்.**

* 307 கேள்வி.—**திரு. முனு ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனியார் நடத்தும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசாங்கமே ஊதியம் அனுப்பி வந்ததை நிறுத்தப்படக் காரணமென்ன ?

(இ) மீண்டும் அத் திட்டத்தை அமல்படுத்தும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The system was given up due to the serious administrative difficulties in implementation and representations against its continuance.

(b) No.

**திரு. து. ப. அழகமுத்து :** தனியார் மானேஜ்மெண்ட்களுக்கு ஆசிரியர்களுடைய பணத்தை அனுப்பிவிடுவதால், அவர்கள் ஆசிரியர்களுக்கு சம்பளத்தைக் கொடுக்காமல் ஏமாற்றிவிடுகிறார்கள். இதிலிருந்து ஆசிரியர்களைக் காப்பாற்றுவதற்கு சர்க்கார் என்ன பரிகாரம் செய்யப்போகிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனியார் நடத்துகிற பள்ளிகளுக்கு எத்தகைய உதவி அளிப்பது என்பது மொத்தத்தில் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அதை முடிவு செய்கிறபொழுது, இந்த அம்சங்களெல்லாம் கவனிக்கப்படும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, தனியார் துறை மூலம் சம்பளம் பட்டுவாடா செய்கிறபொழுது ஊழல்கள் ஏற்படுகின்றன என்ற முறையில் தான் அரசாங்கம் அனுப்புகிற அத்தகைய முறையை மேற்கொண்டது. இதில் சங்கடங்கள் இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எப்படிப்பட்ட சங்கடங்கள் என்பதை அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது அதன் விவரங்கள் என்னிடம் இல்லை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தனி நபர் நடத்துகிற பள்ளிகளைக் காட்டிலும், நகரசபைகள் நடத்துகிற பல பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு காலாகாலத்தில் சம்பளம் வரவில்லை என்பது மாத்திரம் அல்ல, அவர்களுக்கு உரிய சம்பள உயர்வும் கிடைப்பதில்லை என்று தெரிகிறது, இதில் அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா ?,

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நகரமன்றங்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் நடத்துகிற பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு குறைகள் இருக்கலாம். அவைகளெல்லாம் அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு வருகின்றன.

**ஆரம்ப ஆசிரியர்களின் கல்விப் பயணங்கள்**

* 308 கேள்வி.—**திரு. முனு ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போது ரயில்வே இலாகாவினரால் ஆசிரியர்களின் கல்விப் பயணங்களுக்கான விசேஷ சலுகை நிறுத்தப்பட்டுவிட்ட காரணத்தால் தமிழ் நாடு அரசாங்கம் அத்தகைய சுற்றுப் பயணங்களுக்கு ஆரம்ப ஆசிரியர்கள் சங்கங்களுக்கு சலுகை ஏதும் அளிக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எத்தகைய சலுகைகள் அளிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

[18th March 1964

## திரு. காமராஜ் அவர்களுக்கு பந்தோபஸ்து ஏற்பாடு

*309 கேள்வி.—**து. ப. அழகமுத்து** : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திரு காமராஜர் அவர்கள் 1963-ல் நவம்பர் மாதம் திருச்சியில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது திருச்சி ஜில்லாவிலுள்ள ஜில்லா போலீஸ் சூப்ரண்டென்டெண்ட், D.I.G. ஆகியவர்களுக்கு அரசாங்கம் தனி உத்தரவு கொடுத்து அவருடன் போகச் செய்தது உண்மையா ?

(இ) அவர்கள் இருவரும் தலைவருடன் போகவேண்டிய அவசியம் என்ன ?

(உ) மேற்படி சுற்றுப்பயணத்திற்குப் போலீஸ் பந்தோபஸ்திற்காக செலவான தொகை எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) & (c) Do not arise.

**திரு. து. ப. அழகமுத்து** : தலைவர் அவர்களே, திரு காமராஜ் அந்த மாதத்தில் திருச்சி மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது டி.ஐ.ஜி. அவர்களும் எஸ். பி. அவர்களும் உடன் சென்றுள்ளார்கள். அப்படி அவர்கள் சென்றது தங்களுடைய சொந்த அபிப்பிராயத்தின் பேரிலா அல்லது அதற்கு வேறு ஏதேனும் காரணம் இருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்** : இது மாதிரி முன்னாள் முதல் அமைச்சர் சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது அவர்கள் கூடவே போக வேண்டும் என்று சர்க்கார் உத்திரவிடவில்லை. அங்கங்கே பந்தோபஸ்து சரியாக செய்யப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கு போயிருக்கலாமே தவிர, அவர்கள் கூடவே போகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்** : முன்னாள் முதல் அமைச்சர் என்று காரணம் சொல்லப்படுகிறது. இந்நாள் சட்டமன்ற உறுப்பினர் என்று அப்படிப்பட்ட பந்தோபஸ்துக்கள் செய்யப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : முக்கியமாக, பொதுவாக அரசியல் தலைவர்கள் அல்லது மதத் தலைவர்கள் போகும்பொழுது போலீஸார் அப்பேர்ப்பட்ட பாதுகாப்பு கொடுப்பது வழக்கத்தில் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நான் ஒன்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். 1936-ல் அன்னிய ஆட்சி காலத்தில் இப்பொழுது உள்ள நமது பிரதம மந்திரி காங்கிரஸ் தலைவராக அப்பொழுது சுற்றுப் பிரயாணம் செய்த பொழுது, நானும் அவர்களோடு சென்றேன். ஒரு டெப்யூடி சூப்பிரண்டெண்ட் ஆப் போலீஸ் நாங்கள் போன காருக்கு முன்னால் சென்று கொண்டிருந்தார்கள். வட ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக் களில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது ஒரு இடத்தில் இறங்கினோம். பிரதம மந்திரி அவர்கள் 'முன்னால் போனால் தூசு வருகிறது, பின்னால் வாருங்கள்' என்று அந்தப் போலீஸ் அதிகாரியிடம் சொன்னார். அது அப்பொழுது பைலட் காராகப் போயிற்று என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்** : பைலட் கார் எதற்குப் போயிற்று ? அகில இந்திய காங்கிரஸ் தலைவர் என்ற முறையிலா அல்லது பாரதப் பிரதமர் என்ற முறையிலா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : 1936-ல் பாரதப் பிரதமர் இல்லை.

**திரு. து. ப. அழகமுத்து** : இன்னாள் பாரதப் பிரதமர் முன்னாள் போகும்பொழுது டெப்யூடி சூப்பிரண்டெண்ட் ஆப் போலீஸ் முன்னால் சென்றார் என்று முதல் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால்



18th March 1964]

இப்பொழுது போனது டி.ஐ.ஜி ஆஃப் போலீஸ், சூப்பிரண்டெண்ட் ஆஃப போலீஸ். அந்த அளவுக்கு முக்கியத்துவம் என்ன இதில் இருக்கிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : நான் ஏற்கனவே சொன்னேன். இங்கிருந்து சர்க்கார் டி.ஐ.ஜி. அல்லது சூப்பிரண்டெண்டு ஆஃப் போலீஸ் உடன் போகவேண்டும் என்று எந்தவிதமான உத்தரவும் போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : அரசியல் தலைவர்களுக்குப் போலீஸார் பாதுகாப்புக் கொடுப்பது பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால், காங்கிரஸ் தலைவர்களுக்குக் கொடுக்கிற அந்தப் பாதுகாப்பு, எங்கள் கட்சித் தலைவர் செல்லுகிற சமயத்திலும் அப்பேற்பட்ட பாதுகாப்பு கொடுப்பதற்கு அரசாங் கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : மதிப்பிற்குரிய கருணாநிதி திருச்சி சிறையி லிருந்து விடுதலையாகி வெளியில் வந்தபொழுது, அண்ணாதுரை அவர்கள் வந்திருந்தபொழுது, அவர்களுக்குக் கூட பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்** : சிறையிலிருந்து வெளியே வருகிற பொழுது பாதுகாப்புக் கொடுப்பதைவிட, வெளியிலே இப்பொழுது செல்கிற வர்களுக்கு அதிகப் பாதுகாப்பு கொடுக்க அவசியம் என்ன ?

**கனம் திரு பூ. கக்கன்** : தேசீய நெருக்கடி சமயத்தில், அரசியல் சட்டத்தை எரிக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்து, மக்களிடையே குழப்பம் செய்துள்ள சமயத்தில், அங்கே இருக்கும் அதிகாரிகள் கண்காணித்து வந்ததிலே எந்த விதமான குற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இதிலே அரசாங்கம் ஒன்றும் உத்தரவு போடவில்லை. இம்மாதிரி பந்தோபஸ்து செய்வது போலீஸ் "டிஸ்க்ரிஷன்" அவர்களுடைய பொறுப்பு. அமைதியை நிலைநாட்டுவது, பாதுகாப்பு அளிப் பது அவர்களுடைய பொறுப்பு. எந்தக் கட்சியாக இருந்தாலும், யாராக இருந்தாலும், தலைவராக இருந்தாலும், சாதாரண அரசியல் வாதியாக இருந்தாலும், போலீஸார் பார்த்து, பொறுப்பு உணர்ச்சியோடு அவர்கள் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து வருகிறார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல்** : நகரத்தில் அமைச்சர்கள், அதிலும் குறிப்பாக உள்துறை அமைச்சர் அவர்கள் செல்கிறபோது எத்தனை போலீஸ்காரர்கள் பாதுகாப்புக்கு வருகிறார்கள் ?

**கனம் திரு. பூ. கக்கன்** : நகரத்தில் நாங்கள் போகும்பொழுது பாது காப்புக்கு வருவதில்லை. மந்திரிமார்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொழுது, அதுவும் முதல் அமைச்சர் போகும்பொழுது போலீஸ்காரர் கூடப் போகவேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். இதர மந்திரிமார் களைப் பொறுத்தவரையில், அவர்கள் விரும்பினால் அனுப்புகிறார்கள், இல்லாவிட்டால், போலீஸ் அதிகாரிகள் போவதில்லை. ஆனால் மோசமான இடமாக இருக்குமானால், பந்தோபஸ்த்துக்கு ஏற்பாடு செய்வது நல்லது என்று அதிகாரிகள் நினைத்தால் அவர்கள் அனுப்புகிறார்கள். நாங்கள் பகல் நேரத்தில் வேண்டாம் என்று தான் சொல்லிக்கொண்டு வருகி றோம்.

**திரு. ஆ. துரையரசன்** : தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுற்றுப்பிரயாணம் செய்கிறபொழுது போலீஸ் பந்தோபஸ்து கொடுத்து வருகிறார்களா ?

**கனம் திரு பூ. கக்கன்** : கூட்டம் நடந்தால், கூட்டம் சரியாக நடக்கிறதா என்று பர்ர்ப்பதற்குப் போவார்கள்.

**கனம் சபாநாயகர்** : எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஆபத்து ஒன்றும் வராது என்று யாவரும் நினைக்கிறார்கள் போலிருக்கிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** திரு காமராஜர் சுற்றுப்பிரயாணம் செய்யும் காலத்தில் இப்படி உயர்தர அதிகாரிகள் பந்தோபஸ்துக்குப் போனால் அவருடைய அந்தஸ்தை உயர்த்திக் காட்டுவது என்பதேயொழிய, வேறு விசேஷ சூழ்நிலை ஒன்றும் இல்லை என்பதுதான் நிலையா ?

MR. SPEAKER : It may be the opinion of the hon. Member.

## திருப்புனவாசலுக்கு போலீஸ் நிலையம் (அறந்தாங்கி வட்டம்)

* 310 கேள்வி.—**திரு. ஆ. துரையரசன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அறந்தாங்கி வட்டம் திருப்புனவாசல் கிராமத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் நிறுவ உத்தேசமுண்டா ?

(இ) அறந்தாங்கி போலீஸ் சர்க்கில் எல்லைக்குள் போலீசார்களுக்கு வீடு கட்டித்தரும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) ஆம்.

(a) No.

(b) Yes.

திரு. **ஆ. துரையரசன் :** இந்த திருப்புனவாசல் பகுதியில் ஏதாவது குற்றம் நடைபெற்றால் நீண்ட தூரத்திலுள்ள ஆவுடையார்கோவில் அல்லது மற்றொரு போலீஸ் ஸ்டேஷனுக்குத் தான் போகவேண்டியிருக்கிறது. திருப்புனவாசல் பகுதியில் ஒரு போலீஸ் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று 1963-ல் அபிவிருத்தி மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது அரசாங்கத்திற்குக் கிடைத்ததா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

## சென்னை பல்கலைக் கழகச் சட்டம்

* 311 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

சென்னை பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்தியமைக்கும் யோசனை எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The matter is under consideration.

**திரு. இராம. அரங்கண்ணல் :** நான் முன்பு ஒரு முறை இந்த மன்றத்தில் அதிகார சார்பற்ற மசோதா கொண்டுவந்த நேரத்தில், அமைச்சர் அவர்கள் 'கூடியவிரைவில் பல்கலைக்கழகத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டு சட்டமாக இயற்றப்படும்' என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லி கிட்டதட்ட 1½ ஆண்டு காலமாகியும் இந்த மசோதா கொண்டுவரப் படவில்லை. எப்பொழுது இந்த மசோதா கொண்டுவரப்படும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் 'கூடியவிரைவில்' என்று சொல்லவில்லை. ஆனால் நான் விளக்கியிருக்கிறேன். இப்பொழுது மதுரை பல்கலைக்கழகம் அமைப்பது பற்றி ஒரு குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. எப்பேர்பட்ட சட்டம், எப்படி அமைப்பது என்பதெல்லாம் முடிவுசெய்யப்



பட்டபிறகுதான் சென்னைபல்கலைக் கழகம் பற்றி எடுத்துக்கொள்ளவேண்டும். மதுரைப் பல்கலைக் கழகம் எத்தகைய வகையில் உருவாக்குவது என்பது இன்னும் முடிவாகவில்லை.

## *Central University at Karaikudi*

* 312 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any communication has been received from the Union Ministry of Education regarding the proposal to establish a Central University at Karaikudi, to be named as Alagappa University; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

**திரு. செ. மாதவன் :** டாக்டர் அழகப்பச் செட்டியார் உயிரோடு இருக்கும்பொழுது நம்முடைய மாநில அரசாங்கத்தின் உதவியோடு மத்திய அரசாங்கத்திடம் இதுபோன்ற ஒரு திட்டத்தைப் பெற முயன்றாரா ? அதற்கு இந்த மாநில அரசாங்கம் ஆதரவு தருவதாக உத்தரவாதம் அளித்ததா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர் முயன்றிருக்கலாம். அதுபற்றி இந்த மாநில அரசாங்கத்திடம் தகவல் இல்லை.

## *Transfer of " Education " to the " Concurrent list "*

* 313 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any proposal has been received from the Central Government in favour of transferring the subject of 'Education', to the concurrent list of the Constitution; and

(*b*) if so, the views offered by the State Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No. Sir.

(*b*) Does not arise.

**திரு. செ. மாதவன் :** இப்படி அரசியலமைப்பு சட்டத்தைத் திருத்துவதன் மூலமாகக் கல்வித்துறையில் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கம் இருக்கவேண்டுமென்ற கருத்தை மத்திய அரசாங்கமும், மத்திய கல்வி அமைச்சர் அவர்களும் கொண்டிருக்கிறார்களா ? இதுபற்றி இந்த மாநில அரசாங்கத்தின் கருத்து என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் 'அப்படியில்லை' என்று கூறியிருக்கிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த அரசாங்கத்திற்கு ஒன்றும் வரவில்லை. கன்கரண்ட் ஸப்ஜெட்டாக வைப்பது பற்றி அவர்கள் யோசிக்கிறார்கள் என்றால், இதிலே ஆதிக்கம் செலுத்தவேண்டுமென்ற வகையில் அல்ல. மத்திய அரசாங்கத்திற்கும் பொறுப்பு இருக்கிறது. கூடியவரையில் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியான கல்வி முறை கொண்டுவரப்படவேண்டுமென்ற நோக்கத்தோடு தான் யோசிக்கிறார்கள் போலும். அதற்கு அவசியமுண்டா என்பது இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டிய விஷயம். அதற்கு அவசியமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம்.

### தனியார் ஆரம்பப் பள்ளிகளைப் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றுதல்

* 314 கேள்வி.—**திரு. முனு. ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தனியார் நடத்தும் ஆரம்பப் பள்ளிகளை அந்தந்த வட்ட பஞ்சாயத்து யூனியன்களே ஏற்று நடத்துமாறு செய்யும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

### *Accused evading arrests in Salem district*

* 315 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of accused wanted in connection with various crimes in Salem district, who are evading arrest for the last three years ; and

(*b*) whether special efforts could be taken for apprehending the culprits?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Sixteen.

(*b*) Yes. All efforts are being taken to apprehend the accused.

(அ) 16.

(இ) ஆம். இக்குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு குற்றவாளி நெடுநாட்களாகத் தலைமறைவாக இருக்கிறார். அவரைக் கண்டு பிடிப்பதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

MR. SPEAKER : The question is not definite. The Hon. member must put a definite and specific question. He cannot ask why a particular person has not been arrested.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** இந்த 16 பேர்களில் எத்தனை பேர் கொலை சம்பந்தப்பட்ட வழக்குகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் ? அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் நான்கு பேர். கொலை செய்ய யத்தனித்தவர் ஒருவர். மற்றவர்கள் இதர கேஸ்களில் சம்பந்தப்பட்டவர்கள்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** அவர்களைக் கண்டுபிடிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

**கனம் திரு பூ. கக்கன் :** முதலிலே நான் சொன்னேன், எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று. (சிரிப்பு).

**கனம் சபாநாயகர் :** சட்டப்படி எடுக்கக்கூடிய எல்லா முயற்சிகளும் என்று அர்த்தம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** எல்லா முயற்சிகளும் என்பதிலே எவை எவை அடங்கும் ?

**கனம் சபாநாயகர் :** கிரிமினல் புரொஸீசர் கோடில் இரண்டு மூன்று செக்ஷன்கள் இருக்கின்றன. ஒரு ஆளைக் காணவில்லை என்றால் என்ன செய்ய வேண்டுமென்று அந்த சட்டத்தில் இருக்கிறது. அதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் அந்த செக்ஷன்களை படித்திருக்க மாட்டார்கள் இல்லையா ?

கேள்விகள் முடிவடைந்தன.





[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

### II.—CALLING ATTENTION TO OUTBREAK OF FIRE IN TINDIVANAM TALUK.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் சபாநாயகர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தில் தென்கோடிப் பக்கத்தில் அரிஜனங்கள் வாழும் காலனியில் ஏற்பட்ட தீ விபத்துபற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் உள்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, there was an accidential outbreak of fire on 13th February 1964 at about 3-30 p.m. at Thenkodipakkam Harijan Colony in Tindivanam taluk, as a result of which 76 houses were destroyed by fire and 96 families were affected. There was no loss of human life. But one cow, one calf, three sheep and three goats were burnt to death. The total loss sustained is estimated at Rs. 31,000.

The accident occurred when most of the residents were away in the fields. Fire engines from Villupuram rushed to the spot and they put out fire. The Sub-Collector, Tindivanam and the Tahsildar, Tindivanam have inspected the scene of occurrence. A sum of Rs. 2,880 towards cash grant at the rate of Rs. 30 each and another sum of Rs. 960 towards clothing grant at the rate of Rs. 10 each to the 96 families affected have been sanctioned by the Collector of South Arcot.

### III.—PRIVILEGE MATTER *RE* PUBLICATION IN THE "TAMIL SEITHI".

MR. SPEAKER : The hon. Member Sri K. Cheemaichamy has given notice of a privilege matter.

**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, சென்னையிலிருந்து வெளிவரும் 'தமிழ்ச் செய்தி' என்ற 14—3—1964-ம் தேதி வார இதழில் "சட்ட மன்றமா ? பொழுதுபோக்கு மடமா ?" என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருக்கும் செய்திபற்றி நான் ஒரு உரிமை பிரச்சினையை கொடுத்திருக்கிறேன். சட்டமன்ற நடவடிக்கைகளைப்பற்றி பத்திரிகைகள் கருத்துக் கூறுவதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் சட்ட மன்றத்தைப்பற்றியும், சட்ட மன்ற உறுப்பினர்களைப்பற்றியும் பொது மக்களிடையே தவறான எண்ணம் ஏற்படும்படி செய்திகளை வெளியிடுவது இந்த மன்றத்தை அவமதிப்பதாகும். இந்த மன்றத்தைப் "பொழுது போக்கு மடம்" என்று வர்ணிப்பது அவமதிக்கும் முறையில் குறிப்பிடுவதாகும். சட்டமன்ற உறுப்பினர்களை "அரசியல் ஞான சூன்யங்கள்" என்று பொதுவான முறையில் குற்றம் சாட்டுவது சட்ட மன்ற உறுப்பினர்களைக் கேவலப்படுத்தும் முறையில் உள்ளது. சட்ட மன்றத்தில் "பொறுப்புடன் பணியாற்ற முடியாத தகுதியற்றவர்கள்" என்று குறிப்பிடுவது சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரையும் அவமதிப்பதாக அமைந்திருக்கிறது.

இப்படி எழுதி இருப்பவரின் எண்ணம் தங்கள் தலைமையின் கீழ் இயங்கும் இந்த மன்றத்தை அவமானப்படுத்துவதாகவும், சட்டமன்ற உறுப்பினர்களைக் கேவலப்படுத்துவதாகவும் இருக்கின்றது. உறுப்பினர்களின் உரிமையையும், மன்றத்தின் உரிமையையும் பாதிப்பதாக அமைந்திருக்கிறது. 1950-ஆம் ஆண்டில் இந்த மன்றத்தில் இது போன்ற ஒரு

[திரு. கரு. சீமைச்சாமி] [18th March 1964

உரிமைப்பிரச்சனை எழுந்தது. இந்த மன்றத்தை "தமாஷாமன்றம்" (ஃபன்னி ஹவுஸ்) என்று ஒரு பத்திரிகை வர்ணித்ததுபற்றிய ஒரு உரிமை பிரச்சினையில் அந்தப் பத்திரிகை மன்னிப்பு கேட்டதைத் தங்களுக்கு நான் நினைவூட்டுகிறேன். ஆகவே, இதை உரிமைப் பிரச்சினையாகக் கருதி, உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*** திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. சீமைச்சாமி கொண்டு வந்துள்ள இந்த உரிமைப் பிரச்சினையைத் தாங்கள் எடுத்துக் கொண்டு ஆராயவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். பொதுவாக நாம் எல்லோரும் பத்திரிகைகளுக்கு உரிமை வழங்கவேண்டுமென்று பாடுபடுகிற நிலையிலே இருக்கிறோம். எண்ணுகின்ற உரிமையும், எடுத்துக் கூறுகிற உரிமையும், கருத்துக்களை அறிவிக்கின்ற உரிமையும் பத்திரிகைகளுக்கும், மற்றவர்களுக்கும் வேண்டுமென்று பாடுபட்டு வருகிறோம். கருத்துக்களிடையே மாறுபாடுகள் இருப்பதும், வேறுபட்ட மாற்று கருத்துக்களை எடுத்து வைப்பதும், கருத்துக்களை கண்டித்துக் கூறுவதும், இந்த அவையினர் உரிமையில்கூட தவறு இல்லை. சட்ட மன்றத்தில் மற்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறும் கருத்துக்களை மறுத்து வைப்பதும், மாறான கருத்துக்களை அதற்கு திருத்தமாக எடுத்து வைப்பதும் தவறு இல்லை. அரசியல் கட்சிகள் கருத்துக்களிலும் கொள்கைகளிலும் வேறுபடுவதில் தவறு இல்லை. ஆனால் சட்ட மன்றத்தை இழித்துக் கூறுகிற அளவுக்கு, இது "சட்ட மன்றமா? பொழுதுபோக்கு மடமா?" என்று சொன்னால், இந்த மன்றத்திலே இருக்கின்ற 206 உறுப்பினர்களையும், அதற்குத் தலைமை தாங்கிய தங்களையும் சேர்த்து அவமதிப்பதாக இருக்கிறது. இதில் இருக்கிற அத்தனைபேரையும் "ஞான சூன்யங்கள்" என்று வர்ணிப்பதானது, இந்த மன்றத்தின் பெருமையையும், புகழையும் இழிவு படுத்தும் முறையிலும், இந்த மன்றத்தைப் பாதிக்கும் முறையிலும் அமைந்திருக்கிறது. தனிப்பட்டவர்கள் சொல்லும் கருத்துக்களை மறுப்பது குற்றமில்லை. ஆனால் இந்த மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இழிவு தேடுகிற அளவுக்கு இது அமைந்திருக்கிறது. இம்மாதிரி போக்குக்கு இடம் கொடுத்தால் இந்த மன்றத்தின் பெருமையும் புகழும் நாளடைவில் பாதிக்கப்படுவதற்கும், இதைவிட அதிகமான அளவுக்கு இதனுடைய பெருமையைக் குறைப்பதற்கான முயற்சிகளில் மற்றவர்கள் ஈடுபடுவதற்கும் வாய்ப்பு ஏற்படும், ஆகையால், இதை ஒரு உரிமைப் பிரச்சினையாக ஏற்று, குழுவுக்கு விடுவதன் மூலமோ அல்லது தாங்களே தீர்ப்பு அளிப்பதன் மூலமோ நல்லதொரு முடிவைக் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

9–00 a.m. **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, 'பிரைமா ஃபேஸீ'யாகவே இது ஒரு ப்ரிவிலேஜ் கேஸாக இருக்கிறது என்று தாங்கள் அபிப்பிராயப்படுவீர்கள் என்று நான் நினைக்கிறேன். அப்படி இருப்பதால் இதை ப்ரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பலாம் என்று நான் கூறுவேன்.

MR. SPEAKER : From the statement of the hon. Member Sri K. Cheemaichamy, I hold that there is a *prima facie* case of breach of privilege. The matter may be referred to the Committee of Privileges if approved by the House.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"*That the matter of privilege raised by the hon. Member Sri K. Cheemaichamy regarding a publication in the Tamil Seithi, dated 14th March 1964, be referred to the Committee of Privileges*".

The motion was put and carried and the matter was referred to the Committee of Privileges.



18th March 1964]

## IV.—ANNOUNCEMENT.

THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1964.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Amendment) Bill, 1964.

## V.—GOVERNMENT BILL.

THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras General Sales Tax (Amendment) Bill, 1964.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Amendment) Bill, 1964".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## VI.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65—*cont.*

DEMAND NO. XII—POLICE.

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move :—

"*That the Government be granted a sum not exceeding Rs. 8,20,22,00 under Demand No. XII—Police.*"

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, போலீஸ் இலாகா தூய்மையாகவும், திறமையாகவும் செயல்பட அவர்களின் கல்வித் தரமும், ஊதியமும் உயர்த்தப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட, நான் என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 8,20,22,000 under Demand No. XII Police be reduced by Rs. 100".

MR. SPEAKER : The Demand and the cut motion are before the house for discussion.

*** கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் இலாகாவின் வேலைத் திட்டங்கள் பற்றி விளக்கமாகக் கனம் அங்கத்தினர் களுக்கு அச்சிட்டு புத்தக வடிவில் வழங்கப்பட்டு இருக்கிறது. இருப்பினும், தங்களுடைய அனுமதியின்பேரில், முன்னுரையாக சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

போலீஸ் இலாகா மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பாக இருக்கின்ற இலாகா என்பதனையும், நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காக இருக்கின்ற இலாகா என்பதனையும் கனம் அங்கத் தினர்களும் நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். நகரங்களில் போக்குவரத்துப் பிரிவினைச் சேர்ந்த போலீஸ் ஒரு நாள் செயல் படாது போனால், மருத்துவ மனைகளில் இடமே இல்லாது போய்விடும். இரண்டு தினங்கள் இந்த நாட்டின்,

போலீஸ் இலாகாவே செயல்படவில்லை என்று வைத்துக் கொள்ளுவோம். விளைவு எப்படி இருக்கும் என்பதனை எண்ணிப் பார்ப்பதற்கே அச்சமாக இருக்கின்றது. தெருவில் போகின்ற ஒருவருடைய பையில் இருப்பதைத் திருடி வைத்துக்கொண்டு அதனைத் தன்னுடையதென்பான் எடுத்தவன். பொருளைப் பறி கொடுத்தவனின் நிலைமை எவ்வளவு பரிதாபகரமானதாக இருக்கும் என்பதனை நான் சொல்லத் தேவையில்லை. இதனை உதாரணத்திற்காகத்தான் சொன்னேன். தவறு என்பது இப்படித்தான் ஆரம்பமாகின்றது. முடிவில் இத்தகைய செயல்கள் எங்கு போய் முடியும்? இப்படி சமுதாயத்தில் நடமாடுகின்ற கயவர்களைக் கண்டிப்பது யார்? இப்படி கேள்விமேல் கேள்வி போட்டுக் கொண்டே போனால் முடிவில் போலீஸ் இலாகாவின் சேவை எவ்வளவு இன்றியமையாத ஒன்று ஆகும் என்பது தெளிவாகும். போலீஸ் இல்லை என்றால் பொது மக்களுக்கு எவ்விதமான பாதுகாப்பும் இல்லை என்பது தெளிவாகின்றது. அதே நேரத்தில் இந்த இலாகாவினைச் சேர்ந்தவர்களும், தாங்கள் பொது மக்களின் நண்பர்களாகவும், ஆலோசகர்களாகவும் விளங்குவார்களானால், அவர்களைப்பற்றிப் புகார்கள் வருவதற்கே இடம் இல்லாமல் போய்விடும். அப்படிப்பட்ட ஒரு சீரிய நிலைமை மேன்மேலும் ஏற்பட வேண்டும் என்பதுதான் நம் எல்லோருடைய ஒருமித்த கருத்தாக இருக்க முடியும். இதில் இரண்டு விதமான கருத்துக்களுக்கு இடம் இருக்காது என்பதனை நான் திட்டவட்டமாகக் கூறுவேன்.

தமிழகத்தில் போலீஸ் இலாகாவினர் தங்களுடைய கடமையைச் சிறந்த முறையில் ஆற்றி, சட்டத்தையும், ஒழுங்கையும், நன் முறையில் நிலை நாட்டி, இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக இருந்து, தமிழகத்தின் சிறப்பையும், மேன்மையையும் மேன்மேலும் வளர்த்துக்கொண்டே போகிறார்கள். மற்றைய மாநிலங்கள் சரிவரச் செய்யவில்லை என்று நாம் குறை கூறவில்லை. இருப்பினும் தமிழக போலீஸ் துறைக்குத் தனிப் பெருமை இருப்பதால், இதனை நான் சுட்டிக் காட்டினேன்.

இந்த இலாகாவிலே பணி புரிகின்ற பல அன்பர்கள் நம்முடைய ஜனாதிபதி அவர்களிடம் இருந்து விருதுகளைப் பெறுவதை நாம் அறிவோம். மற்றும் சிலர் தங்களுடைய இன்னுயிரை சமுதாயத்தில் கேடுகள் நிகழக் கூடாது என்பதற்காக, கொடியவர்களால் தாக்கப்பட்டு, இழந்திருக்கிறார்கள் என்பதனையும் நாம் நன்கு அறிவோம். இந்த ஆண்டு துவக்கத்தில், அதாவது ஜனவரி மாதம் 16ஆம் தேதியன்று, மதுவிலக்குக் குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்காகக் காவிரி ஆற்றில் படகில் சென்ற ஒரு போலீஸ் கோஷ்டியினர் எவ்வாறு தங்கள் சேவையைச் செய்தபோது கொடூரமாக ஆற்றில் மூழ்கி இறந்து போனார்கள் என்பதனை நாம் நன்கு அறிவோம். ஸ்ரீ பி. மொராச்சா என்கின்ற ஸப்-இன்ஸ்பெக்டரும், ஸ்ரீ ஹுசைன் முகம்மது, ஸ்ரீ கிருஷ்ணன் நாயர் என்கின்ற இரு கான்ஸ்டேபிள்களும் எவ்வாறு தங்கள் கடமையைச் செவ்வையாக ஆற்றினார்கள் என்பதையும் நாம் நன்கு அறிவோம். கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் சேலம் மாவட்டத்தில் பாப்பாரப்பட்டியில் நடந்த சம்பவத்தை நினைத்துப் பார்க்கவே இயலவில்லை. ஸப்-இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கே. ரஹமத்துல்லாகான் என்பவர் படுகொலை செய்யப்பட்டதை நாம் செய்தித் தாள்கள் மூலமாக அறிந்தோம். இப்படி, சமுதாயத்தில் கேடுகள் விளைவிப்பவர்களைப் பிடித்து தண்டனை கொடுக்க முயற்சிப்பவர்களுக்கு அப்படிப்பட்ட உண்மையான ஊழியர்களுக்கு இவ்விதமான இன்னல்கள் ஏற்பட்டு வருகின்றன. இப்படி எத்தனையோ சம்பவங்கள் நம் தமிழ் நாட்டில் நடந்திருக்கக்கூடும். இப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களுக்கு நம்முடைய நிதி நிலையை அனுசரித்துத் தக்க முறையில் நாம் உதவியளித்து வருகிறோம். இப்படிப்பட்ட ஊழியர்கள் ஒரு புறம். மறுபுறம், இன்னொரு வகையினரைப் பார்க்கின்றோம். சமூக விரோதிகள் ஒரு சிலரின் துர்ப்போதனைக்கு ஆளாகி தாங்கள் சார்ந்திருக்கின்ற இலாகாவின் பெருமையை மனதிற் கொள்ளாது, மறந்து, தவறான காரியங்கள் செய்வதையும் நாம் காண்கின்றோம். இது எப்படி இருக்கிறது என்றால் உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பது போலவும் வேலியே பயிரை அழிப்பது போலவும் பொது மக்களில் சிலர் இத்தகைய செயல்களில்





ஈடுபட்டிருப்பது கண்டிக்கத் தக்கது என்று சொல்லும்போது, இலாகாவிலுள்ள ஒரு சில தீய சக்திகள் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவது அருவருக்கத் தக்க ஒன்றாகும் என்றும் நான் குறிப்பிட விரும்புகின்றேன். நான் எதனைப் பற்றிக் குறிப்பிடுகின்றேன் என்பதை கனம் அங்கத்தினர்கள் நன்கு அறிவார்கள். அதனை விளக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன். இப்படிப்பட்டவர்களுக்கு அரசினர் பாடம் கற்பிப்பது மட்டுமல்ல; பொது மக்களும் சரியான பாடம் கற்பிப்பார்கள் என்பது திண்ணம்.

சுதந்திரப் போராட்ட காலங்களில் எவ்வாறு நாட்டின் விடுதலைக்காக எண்ணற்ற தியாகிகள் தங்களுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தார்களோ, அவ்வாறே இன்றும் நம் சமுதாயத்தில் உள்ள விவசாயிகள் உணவு தானியங்கள் உற்பத்தியைப் பெருக்குவதின் வாயிலாகவும், தொழிலாளர் சகோதரர்கள் தொழிற்சாலைகளில் பணி புரிந்து நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்குவதன் மூலமும் தங்களுடைய சீரிய சேவையைச் செய்து வருகின்றார்கள். அதுபோலவே, சுதந்திர நாட்டில், அமைதிக்கும், நேர்மைக்கும் பங்கம் வராத வகையில், சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டுகின்ற போலீஸ் இலாகாவினர் தங்களுடைய கடமையைச் செவ்வனே செய்து வருகின்றார்கள். அவர்கள் செய்கின்ற நற்பணியில் இடையில் புகுந்து ஊறு விளைவிப்பவர்களை நாம் சமூகத் துரோகிகளாகத்தான் கருத வேண்டும்.

நற்பணி பல புரிந்து, நாட்டில் சட்டத்தையும், அமைதியையும் நிலை நாட்டுகின்ற போலீஸ் இலாகாவின் மான்யக் கோரிக்கையை நான் இந்தச் சபை முன் பிரேரேபிக்கின்றேன்.

> " சொல்லுக சொல்லிற் பயனுடைய—சொல்லற்க
> சொல்லிற் பயனிலாச் சொல் "

என்கின்ற வள்ளுவப் பெருந்தகையின் குறள் வழி நின்று, பயன் தரத்தக்க சீரிய ஆலோசனைகளைக் கனம் அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்லி இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

***திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இன்று கனம் போலீஸ் இலாகா அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியத்தின் பேரில் எனது கட்சி சார்பில் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, இந்த துறையில் உள்ள சில குறைகளையும், தவறுகளையும் எடுத்துக் காட்டி, அவைகளை நிவர்த்திக்க என் கருத்துக்களை விளக்க வேண்டும் என்று கருதுகிறேன். இரண்டு ஆண்டுகளாக போலீஸ்காரர்களைப்பற்றி எவ்வளவு எவ்வளவோ, எந்த எந்த வகையிலோ, எப்படி எப்படியெல்லாமோ எடுத்துச் சொல்லியும்கூட ஒன்றுகூட இன்று வரைக்கும் சர்க்கார் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பதை மிக்க வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1959 அல்லது 1960 என்று நினைக்கிறேன், போலீஸ் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது : அப்பொழுது ஒரு கட்டுரைப் போட்டி நடந்தது. அதிலே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் போலீசாருடைய பிள்ளைகளுக்கு முடிந்தால் இலவச உணவு விடுதிகள் அமைக்க வேண்டும் என்று கோரி எழுதப்பட்டிருந்த கட்டுரைக்கு முதல் பரிசு அதாவது தங்க மெடல் கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்திருந்தும் அதை ஏன் இன்னும் ஏற்று நடத்தவில்லை, ஏன் அரசாங்கம் அதில் தவறிவிட்டது என்பதைக் கேட்காமல் இருக்க முடியாது.

அடுத்தபடியாக, எல்லோரும் அதிகப் பஞ்சப்படியை நோக்கிக்கொண்டிருக்கும்போது அவர்களுக்கு மட்டும் கொடுக்காமல் இருக்கலாமா என்பது தான் என்னுடைய கேள்வி அதே நேரத்தில் யூனிபார்ம் அலவன்ஸ் இரண்டு ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு எல்லோருக்கும் தெரியாமல் இருக்காது, ஒரு ஜோடித் துணியை சலவைக்குப் போட்டால், குறைந்தது எட்டு அணா இல்லாமல் அதை வாங்க முடியாது. காக்கி துணியாக இருந்தாலும், ஒயிட் ட்ரில் ஆக இருந்தாலும் ஒரு சலவைக்கு எத்தனை காசு கொடுத்து வாங்க வேண்டி இருக்கிறது என்று கவனிக்க

வேண்டும். இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 2 மாதம் ஒன்றுக்கு. இது போதுமானதா என்று பார்க்க வேண்டும். மற்றவர்கள் குறைகளைக் களையவேண்டும் என்று பேசும்போது, இதை மட்டும் கவனிக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று நான் என்னுல் தெரிந்துகொள்ள முடியவில்லை.

வீட்டு வாடகைக்காக இந்த இலாகாவிலே மறுபடியும் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மலபார் போலீஸ்காரர்களிலேயே அதிகமாகச் செலவிடப்படுகிறது இந்த வீட்டு வாடகைப் பணம்தான் என்று நினைக்கிறேன். இது ஒவ்வொரு வருஷமும் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு வருஷமும் லட்சக் கணக்கான ரூபாய்களைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். இப்படிச் செய்வதற்குப் பதிலாக, ஏன் இதே நேரத்தில் பத்து ஆண்டுகளில் சரிக்கட்டும் அளவில் ஒரு திட்டம் போட்டு உடனடியாக வீடுகளைக் கட்டி முடிக்க அரசு நடத்தக் கூடாது? அப்படிச் செய்வதன் மூலம் சர்க்கார் செலவைக் குறைத்துக் கொள்ளக் கூடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

போலீஸ் இலாகாவில் ஆபத்தில் உதவும் ஒரு நடைமுறை ஆஃப்-ட்யூடி இருக்கிறது, அது சரியாக செயல்படவில்லை என்று பல இடங்களில் புகார் சொல்கிறார்கள். ஏன் அந்த முறை கையாளப்படுகிறது? ஆஃப் ட்யூடி ஏன் சரிவர அனுமதிக்கப்படவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன்.

எல்லாத் துறையில் இருப்பவர்களும் கருதுவதைப்போல, மேல் சபையில் போலீஸ்காரர்களுக்கு என்று ஏன் ஒரு இடம் ஒதுக்கப்படவில்லை என்பது என்னுடைய கேள்வி. அதற்கு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து விடை அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** ஒதுக்கப்படவில்லையே கனம் அங்கத்தினரைப் போன்றவர் வந்திருக்கிறாரே. அதுபோல, அங்கும் ஒருவர் வரக்கூடும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** நான் மக்கள் பிரதிநிதியாக இங்கு வந்திருக்கிறேனே தவிர, போலீஸ்காரருடைய பிரதிநிதியாக வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் ஒருவரும் பிரதிநிதியாக வரமுடியாது என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு வேறு எந்த விதத்தில் என்மேல் வருத்தம் இருந்தாலும் கூட, தயவுசெய்து இந்த பாணியத்தில் நான் பேசும்போது குறுக்கிடாமலிருப்பாரானால், என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல முடியும். குறுக்கிடுவதானால், என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லாமல் இப்பொழுதே நிறுத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்பதனை சொல்லிக் கொள்ளுகிறேன்.

**கனம் சபாநாயகர் :** உடனுக்குடன் விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கும்போது கனம் அமைச்சர் அவர்கள் சொல்லலாம். கனம் அங்கத்தினர் சொல்ல வேண்டியவற்றை நன்றாகச் சொல்லலாம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** 1-வது மலபார் விசேஷப் போலீஸ் படையின் நான்கு கம்பெனிகள், 2-வது மலபார் விசேஷப் போலீஸ் படையின் நான்கு கம்பெனிகள், நாகாலாந்துக்கும் மேற்கு வங்கத்திற்கும் அனுப்பப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி வெளியே அனுப்பப்பட்டிருக்கும் இரண்டு படைகளுக்கு ஆகும் செலவு பூராவையும், படையொன்றுக்கு ரூ. 3 லட்சம் வீதம் ஈடாக மத்திய சர்க்கார் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தத் தொகையைக் கொடுப்பதைவிட, அந்தச் செலவை மத்திய சர்க்காரே செய்து கொள்ளலாம். நாம் சென்னை மாநிலத்திலிருந்து அங்கே அனுப்பியிருக்கும் எட்டு கம்பெனிகளுக்கும்





ஆகும் செலவை நாம் செய்கின்ற நேரத்தில், ஆறு லட்சம் ரூபாய் சரியாக இருக்கிறதா, அல்லது அதிகமாக ஆகிறதா, குறைந்திருக்கிறதா என்ற கணக்கை என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை. நமக்கு லாபமா, நஷ்டமா என்பதை என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை. அதைத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். பாதுகாப்பு என்னும்போது இத்தகைய பொறுப்பு நம் மாநிலத்திற்கு மட்டுந்தானு அல்லது மற்ற மாநிலங்களுக்கும் பங்கு இருக்கிறதா என்பதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

"போலீஸ் படையில் சேர்தல், போலீஸ் படைப் பயிற்சி" என்னும் பகுதியில் மிகமிக வருந்தத்தக்க இரண்டு வார்த்தைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதாவது,

> "போலீஸ் கான்ஸ்டேபிளாக வருவதற்குப் போதிய தகுதியுள்ள நபர்கள் முன் வராததால் நிர்ணய எடை, உயரம் இன்றிப் பிற வகைகளில் தகுதியுள்ள நபர்களையும் கான்ஸ்டேபிள்களாக நியமித்திருக்கிறோம்."

என்று சொல்லியிருக்கிறார்கள். பொதுவாகவே, 5 அடி 6 அங்குலம் உயரம், கூடுமானவரை தமிழ் படிக்கத் தெரிந்திருந்தால் போதும் என்று அப்பொழுது தகுதி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு, எட்டாவது படித்திருக்க வேண்டும் என்று இருந்தது. இப்பொழுது பத்தாவது படித்தவர்களுக்குக் கூட போலீசில் இடம் இல்லை என்கிற நிலைமை உருவாகியிருக்கும் இந்த நேரத்தில் மேற்கண்ட வார்த்தைகளைச் சொல்லியிருப்பது பரிதாபமாக இருக்கிறது. ஏன் இந்த நிலை உருவாயிற்று? வேலை இல்லை, வேலை இல்லை என்று மக்கள் திண்டாடும் இந்த நேரத்தில், போலீஸ்காரர்களுக்காகக் குறிப்பிடப்பட்டிருக்கும் தகுதியில்லாதவர்களையும் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமை வருமானுல், அதனுடைய உள் அர்த்தம் என்ன? தகுதியுள்ளவர்கள் போலீசில் சேர விரும்பவில்லையா? அல்லது போலீசில் சேர்ந்தால் பாதகங்கள் இருக்கின்றன என்று கருதுகிறார்களா? சர்க்கார் இலாக்காக்களிலேயே முக்கிய இலாக்காவாக இருக்கும் இந்தப் போலீஸ் இலாகாவில் ஏன் இப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்பட வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, கீழ்த்தர சிப்பந்திகளிலிருந்து மேல் மட்டத்தில் உள்ள அதிகாரிகள் வரைக்கும் உள்ள பதவிகளில் 12½ சத விகிதம் ஆதித் திராவிடருக்கு (ஹரிஜனங்களுக்கு) ஒதுக்கப்பட்டு, அவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்க வேண்டும் என்று சட்டத்திலேயே இடம் இருக்கிறதாம். மத்திய சர்க்காரிலிருந்து அத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம். ஆனுல், இதுவரைக்கும் அந்த முறையை எந்த அளவுக்கு நமது மாநில சர்க்கார் கையாண்டார்கள் என்பதைக் குறித்து கனம் அமைச்சரிடமிருந்து விளக்கம் பெற விரும்புகிறேன்.

அடுத்து, "போலீஸ் படையினர் குடியிருப்பு" என்ற தலைப்பில், அது சம்பந்தமான வளர்ச்சிகள் காணப்படுகின்றன. அதை இன்னும் சீக்கிரமாக, துரிதப்படுத்த வேண்டும். சர்க்கார் வருஷா வருஷம் வீடு கட்டுவதற்காக ஒதுக்கும் பணத்தை முறையாகச் செலவிட்டு வீடுகளை நல்ல முறையில் சீக்கிரமாகக் கட்டிக் கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அற நிதி (பெனிவலன்ட் பண்டு) என்ற தலைப்பு அடுத்து வருகிறது. நான்கூட இந்த நிதிக்குப் பல ஆண்டுகள் கட்டியிருக்கிறேன். அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. குறிப்பாக, கீழ்த்தர சிப்பந்திகளுக்கு இந்த நிதி பயன்படுவதில்லை, அதிகாரிகள்தான் அதை அனுபவித்து விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த நிலை உருவாகாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைக்கும் படையை எடுத்துக் கொண்டால், போலீஸ்துறையினருக்கு எந்த அளவு சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு தீயணைக்கும் படையினருக்குச் செய்து கொடுக்கப்படுகின்றனவா என்று புரியவில்லை. சி.டி. அலௌன்ஸ் போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கப்படுவது போல், தீயணைக்கும் படையினருக்குக் கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. அது தவிர, தீயணைக்கும் படையில் மோட்டார் வாகனங்களைப் பார்த்துக் கொள்ள மெகானிக் இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், தீயணைக்கும் படையைச் சேர்ந்த சாதாரண சிப்பந்தி ஒருவரே இதைப் பார்த்துக் கொள்வதாகத் தெரிகிறது. அதுபற்றி ஏன் இது வரைக்கும் சர்க்கார் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவில்லை, ஏன் அதற்கு அலவன்ஸ் கூட கொடுக்கவில்லை என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நமது தமிழகத்தில் தென்னுற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர், திண்டிவனம் ஆகிய இந்த மூன்று தாலுக்காக்களிலும் ஆண்டொன்றுக்குக் குறைந்தது 15 பெரிய பெரிய தீ விபத்துக்கள் ஏற்பட்டு, அதனுல் பெரும் சேதம் விளைகின்றன. திண்டிவனத்தைப் பொறுத்தவரையில், முன்பு பல தடவைகளில் நான் இந்த மன்றத்தில் துணைக் கேள்விகள் கேட்டபோது, "தீயணைக்கும் படையொன்றைத் திண்டிவனத்தில் அமைப்பது சம்பந்தமாக இடம் அளிக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னுர்கள். தயவு செய்து, சீக்கிரமாக அந்தத் தீயணைக்கும் படையைத் திண்டிவனத்தில் அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

க்ரைம் ப்ராஞ்ச் என்று சொல்லக்கூடிய, ஸி.ஐ.டி. யின் வேலையைப் பற்றிப் பெருமையாகத்தான் சொல்ல வேண்டும். ஆனல், உண்மையிலேயே ஒரே ஒரு குறை இருக்கிறது. அடிக்கடி சட்டசபையிலே கேள்விகள் வருகின்றன. கேள்விகளிலே, "அடித்துக் கொன்று விட்டார்கள், மறைத்து விட்டார்கள், தூக்கில் மாட்டிவிட்டார்கள், கிணற்றிலே போட்டு விட்டார்கள்" என்றெல்லாம் சொல்கிருர்கள். விசாரணை நேரங்களில் இம்மாதிரி ஒரு சம்பவம் நடக்காமல் அதற்குப் பொறுப்பேற்றிருக்கிற மேலதிகாரி கவனித்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். கூடுமான வரையில், இன்வெஸ்டிகேஷன் செய்யும் அதிகாரி முன்கோபப் படாதவராக இருக்க வேண்டும். அதுதான் அதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. முன் கோபம் இருந்தால் என்ன ஆகும் என்ருல் அவர் ஒன்று கேட்க, இவன் ஒன்று சொல்லும்போது அதிகாரிக்குக் கோபம் வரும். அடிபட்டுச் சாவான். இதுதான் அங்கிருக்கும் நிலை. எதற்காகச் சொல்கிறேன் என்ருல், விசாரணை செய்யும் அதிகாரி முன் கோபம் இல்லாதவராக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான். அதை சர்க்கார் பரிசீலனை செய்வதோடு மேலதிகாரிகள் இதற்கு ஆவன செய்யவேண்டியது முக்கியமான கடமையாகும்.

அடுத்து, கலகங்கள்", "கலவரங்கள்" என்ற தலைப்பு வருகிறது. இந்த இரண்டைப் பற்றி இந்த மன்றத்திலே விவாதம் நடந்தது. தப்போ, தவருே, குறையோ அதைப்பற்றி இப்பொழுது நான் சொன்னுல், கோர்ட்டிலே கேஸ் இருக்கும் காரணத்தால் அதற்குச் சாதக பாதகமாக இருக்கும் என்பதற்காக நான் அதை விளக்கவில்லை. உண்மையிலேயே இரண்டு குற்றங்களிலே போலீசார் செய்த காரியம் சரியல்ல என்பதைக் குறிப்பிட்டுக் காட்டி, என்னுடைய கருத்தை முடிக்கிறேன்.

அடுத்தபடியாக மதுவிலக்குத் திட்டத்தைப்பற்றி அடிக்கடி எங்கள் அமைச்சர் சொல்வது, "இது வெற்றிகரமாகத்தான் நடந்து வருகிறது" என்பதாகும். உண்மையிலேயே மதுவிலக்குத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறதா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1962-லே போடப்பட்ட கேஸ்கள் எத்தனை, 1963-ல் போடப்பட்ட கேஸ்கள் எத்தனை? 1962-ம் வருஷத்தில் உள்ள கேஸ்களைவிட 63-லே அதிகமாகயிருக்கின்றன என்ருல் அது நன்ருக நடக்கிறது என்று அர்த்தமா? நடக்கவில்லை என்று அர்த்தமா? இதைக் கனம் அமைச்சர் அவர்கள் நன்கு சிந்தித்து இந்த மதுவிலக்குத் திட்டம் செம்மையாக நடைபெறவேண்டுமென்ருல் இதைத் தீவிரமாகக் குறைப்பதற்கு என்ன வழியோ அதை மேற்கொள்ள வேண்டும்.





அடுத்தபடியாக ஒரு வேண்டுகோள். "போலீஸ் நாய்" என்று போட்டிருக்கிருர்கள். இது ஒரு சமூகத்தையே இழிவுபடுத்துவதாக இருக்கிறது. ஆகவே இந்தப் பெயரை மாற்றித் துப்பறியும் நாய் என்று பெயரிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நாய்க் குலத்தின் சார்பாக நான் இப்போது. பேசுகிறேன். நாய் என்ற சொல்லை நாம் இழிவுபடுத்தக் கூடாது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** நான் இழிவுபடுத்தவில்லை. ஆனுல் நாய், கழுதை என்று ஒரு இலாகாவினரின் பெயரோடு சேர்ப்பது அவ்வளவு நன்ருக இல்லை. போலீஸ் நாய் என்ற பெயரை துப்பறியும் நாய் என்று வைப்பதனுலே சர்க்காருக்கு என்ன நஷ்டம் வந்தது? இதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று கேட்கிறேன்.

அடுத்தபடியாக வெளிநாடுகளில் இருந்து வருகிறவர்களுக்குப் போடப்படுகிற பந்தோபஸ்து ட்யூடி. இவ்விஷயத்தில் தமிழக சர்க்கார் போலீஸ் படையினர் மிகவும் திறமையாகத்தான் நடந்து கொள்கின்றனர். வெளியில் இருந்து வருகிறவர்களும் இதைப் பாராட்டத்தான் செய்கிருர்கள். இதுபற்றி அரசாங்கமும் பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாம். ஆகவே இதுபற்றி நான் விரிவாக ஒன்றும் சொல்லவில்லை. குறிப்பாக ஒன்று சொல்வேன்—வேடிக்கை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது.—இங்கேயுள்ள எட்டு மந்திரிகளில் பெஞ்சில் கடைகோடியாக உட்கார்ந்திருக்கிற மூன்று மந்திரிகளைத் தவிர மற்றவர்களுக்கு நானும் ஒரு காலத்தில் பந்தோபஸ்து ட்யூடி செய்தவன்தான். எங்கள் உயிரைக்கூட கருதாமல் அவர்கள் உயிரை பெரியதாக மதித்து பந்தோபஸ்து செய்திருக்கிருேம். மாலை மூன்று மணிக்கு அமைச்சர் வருவதாக இருக்கும். இரவு எட்டு மணிக்குத்தான் வருவார். இரவு ஒன்பது மணிக்குத் திரும்பிவிடுவார் என்று சொல்லப்படும். இரவு 12 மணிக்குத்தான் திரும்புவார். இந்தமாதிரி சந்தர்ப்பங்களில் போலீசார் ரோடுகளிலே ஆங்காங்கே புளியமரத்தடியிலும், கல் முட்டிலும் நின்று என்ன என்ன வேதனைப்படுகிருர்கள் என்பதை சிந்திக்க வேண்டும். இப்படி ரோடுகளிலே பந்தோபஸ்து போடவேண்டிய அவசியமும் உண்டா என்பதையும் சிந்திக்கவேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது எல்லாம் பழைய முறை. ரோடுகளிலே பந்தோபஸ்து போடுவது என்பது இப்போது இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** கடைசியாக கனம் அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையில் பொது மக்களுக்கும், போலீசாருக்குமிடையே உள்ள உறவு நிலையும் அபிவிருத்தி அடைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். இன்றுள்ள நிலையில் இந்த வார்த்தைகள், சென்னை நகரத்தை பொறுத்தவரையிலும், மற்ற மாவட்டங்களைப் பொறுத்த வரையிலும் பொருந்துமா என்று பார்க்க வேண்டும். பொதுஜனங்கள் போலீஸ்காரர்களை விரும்புகிருர்களா என்ருல் இல்லை. காரணம் என்ன? இன்றைய தினம் போலீஸ்காரர்கள் தங்களுடைய கடமைகளை நடுநிலையில் இருந்து செய்வதற்கு முடியவில்லை. லண்டன் மாநகர் போலீஸ்காரர்களுக்கு என்ன மரியாதை இருக்கிறதோ அந்த அளவு மரியாதை இங்கே உள்ள மக்கள் போலீஸ்காரரிடத்தில் வைக்கவில்லை என்ருல் அதற்குக் காரணம் போலீஸ்காரர்கள் இன்றையதினம் காங்கிரஸ் கட்சி ஏஜண்டுகளைப் போல செயலாற்ற வேண்டியதாக இருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் நான் பொதுமான்யத்தில் பேசும்போதே குறிப்பாக அங்குள்ள திண்டிவனத்தில் உள்ள டி.எஸ்.பி.யைப்பற்றிச் சொன்னேன். அமைச்சர் அவர்கள் கூட வருத்தப்பட்டுக்கொண்டார்கள். மற்றவர்கள் சொல்வது எப்படி இருக்குமோ என்று நினைத்தாலும் நான் அதுபற்றி தப்பாகச் சொல்வதே கிடையாது. அதிலும் நான் போலீஸ் அதிகாரிகள் மீது வீணுகக் குறை சொல்வது கிடையாது. நான் சொல்வது முற்றிலும் உண்மை என்று நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். நான் அழுத்தந்திருத்தமாக மனப்பூர்வமாகச் சொல்கிறேன். இன்றையதினம் போலீஸ் ஸ்டேஷனில் உள்ளவர்கள் பொது

[திரு, எ. கோ. பாலகிருஷ்ணன்] [18th March 1964

மக்களுக்குச் சேவை புரிவது இல்லை. போலீஸ் ஸ்டேஷன்கள் காங்கிரஸ் கமிட்டி அலுவலகமாகத்தான் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டு மென்றால் திண்டிவனம் டி.எஸ்.பி., எம்.எஸ். டப்ளியூ. 9880 பியட் என்று நினைக்கிறேன். திண்டிவனம் தாலூகா காங்கிரஸ் கட்சித் தலைவ ரால் முழுக்க முழுக்க அந்தக் கார் காங்கிரஸ் கட்சி தேர்தலுக்கே பயன் படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் காரில் இவர் போய் தேர்தல் நடத்தலாமா? நான் அவரைப்பற்றி இங்கே புகார் சொன்னேன் என்பதற்காக, "அவர் சட்டசபையில் பேசிக்கொண்டு இருக்கட்டும், இங்கே வரத்தானே போகிறான், அவன் தலையில் ½ பாட்டிலை வைத்து அடைக்கிறேன்" என்று சொல்கிறு ராம். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால், சாதாரண ஏழை, எளியவர்களின் கதி என்ன ஆகும் என்பதை பரிசீலிக்கவேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அதிகாரி இப்படிச் சொல்வதாகச் சொன்னால் அதை நிரூபிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அந்த அதிகாரியைப் பற்றிய புகார் களை அரசாங்கம் நல்லமுறையில் விசாரணை செய்து தண்டிக்கத் தயாராக இருந்தால் நான் இவற்றை எல்லாம் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தாழ்மையுடன் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் இலாகா மானியக் கோரிக்கையின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் இலாகா அறிக்கையில் நாளுக்குநாள் குற்றங்கள் அதிகமாக நடந்துகொண்டிருப்பதாகக் காணப்பட்டுள்ளது. இதற் குக் காரணம் என்ன என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மேலும் விபத்துகளும் நாளுக்குநாள் அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக் கின்றன. இந்த விபத்துகளையும் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிற கேசுக்கள் நாளுக்குநாள் அதிக மாகிக்கொண்டிருக்கின்றன. ஒரு சமயத்தில் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் செவ்வனே நடைபெறுவதாகக் கூறினார்கள். சில பாகங்களில் ஓரளவு நன்றாக நடைபெறுவதாக இருந்தாலும் பொதுவாகப் பார்த்தால் நாளுக்குநாள் குற்றங்கள் அதிகமாகிக்கொண்டேதான் இருக்கின்றன. சென்ற முறை பட்ஜெட்டின்போதே சொன்னேன். இதற்காக ஒரு கமிட்டி யைப் போட்டு, நன்றாகப் பரிசீலனை செய்து அவசியமானால் இதை எடுத்துவிட வேண்டுமென்று. மேற்படி யோசனைகளை மறுபடியும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பயர் சர்வீஸ் 43 இடங்களில் ஏற்பட்டிருப்பதாக இந்த அறிக் கையில் இருந்து தெரிகிறது. ஆனால் சேலம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், சேலத்தில் இருந்து 100 மைலுக்கு அப்பால் வரையில் பயர் ஸ்டேஷன் கிடையாது. இதனால் பெரும் விபத்துகள் ஏற்படுகிறபோது கஷ்டமாகப் போகிறது என்று சென்ற முறையே சொன்னேன். அதையும் கவனித்து தர்மபுரியில் ஒரு பயர் ஸ்டேஷன் ஏற்படுத்த ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் போலீஸ் இலாகாவில் வேலை செய்பவர்கள் மிகவும் ஆபத் தான நிலையில் வேலை செய்து வருவதால் அவர்களுக்கு கம்பல்சரி இன்ஷூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்தி அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். மேலும் ஒவ்வொரு இன்ஸ்பெக்டருக்கும் நாளுக்குநாள் பொறுப்பு அதிகமாகிறது. அடிக்கடி வெளியிடங்களுக்குச் சென்று குற்றங்கள் கண்டு பிடிக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு ஜீப் கார் சப்ளை செய்தால் குற்றங்கள் குறையும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

9-30 a.m. போலீஸாருக்கு வீடு கட்டும் திட்டமானது மிகவும் நிதானமாக நடை பெற்று வருகிறது. இதிலே தாமதத்திற்குக் காரணம் நேஷனல் எமர் ஜன்ஸி என்று சொல்லுகிறார்கள். போலீஸ் ஊழியர்கள் எல்லாம் பல



18th March 1964] [திரு ரா. சு. வீரப்ப செட்டியார்]

லட்சக் கணக்கான ரூபாய்களைத் தற்போது வீட்டு வாடகையாகக் கொடுத்து வருகிறார்கள். அதைத் தவிர்க்க வீடு கட்டும் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றி போலீஸில் பணியாற்றுகிறவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தர்மபுரி வட்டத்தில் பெரும்பாலை என்ற ஊர் பென்னாகரத்திலிருந்து 16 மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கு ஒரு போலீஸ் அவுட்போஸ்ட் இருக்கிறது. அது காட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்தது. அந்தப் போலீஸ் அவுட்போஸ்டை ரெகுலர் போலீஸ் ஸ்டேஷனாகச் செய்ய வேண்டுமென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அதற்கு இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. உடனடியாக அதை ரெகுலர் போலீஸ் ஸ்டேஷனாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொப்பூர் என்ற கிராமம் இருக்கிறது. அதுவும் காட்டுப் பிரதேசம். அங்கிருந்து போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லவேண்டுமென்றால் 17 மைல் செல்ல வேண்டும். ஆகவே, அங்கு ஒரு அவுட் போஸ்டை நிறுவி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'பெக்கர் ஹோம்ஸ்' மூன்று இடங்களில் இருப்பதாக அறிக்கையில் காணப்படுகிறது. பிச்சைக்காரர்கள் தொந்திரவு அதிகமாக இருப்பதால் அதிகப்படியான பெக்கர் ஹோம்களை ஏற்படுத்திப் பிச்சைக்காரர்கள் தொல் லையை ஒழிக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. செ. சீனிவாசன் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே நல்ல பணி புரிந்து வரக்கூடிய இந்த இலாகா வினுடைய நற்பணிகளை இந்த அறிக்கையிலே காணும்போது உண்மையிலேயே பெருமிதம் கொள்ளாமல் இருக்க முடியாது. பிற நாடுகளிலே இந்த மாதிரி எல்லாம் பல பணிகளிலே போலீஸ் துறையினர் ஈடுபடுத்தப் படுகின்றனரா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. நமது தமிழ் மாநிலம் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் போலீஸ் துறையிலே அபிவிருத்தி அடைந் திருக்கிறது என்பதை எண்ணும்போது உண்மையிலேயே நாம் பெருமிதம் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

போலீஸ் துறைக்குப் பணியாளர்களைப் பலவிதமான வகுப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் சட்டம் படித்தவர்களில் இருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதன் அவசியத்தை எண்ணிப் பார்த்தால் பெரும் பகுதியினரைச் சட்டம் படித்தவர்களாகவேதான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன். நம்முடைய பாதுகாப்புக்கும் ஒழுங் குக்கும் ஏற்ற வகையில் சட்டத்தை அமல் படுத்தக்கூடிய இந்தத் துறையி னர் நல்ல முறையில் சட்டம் பயின்று இருக்க வேண்டுமென்று கருதுபவர் களில் நானும் ஒருவன். இன்று ஐந்தாறு போலீஸ் ஸ்டேஷன்கள் உள்ள ஒரு சர்க்கிளில் இருந்து கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்று சொன்னால் யாரையாவது ஒரு ஹெட் கான்ஸ்டபிளையோ, சப் இன்ஸ்பெக்டரையோ தான் அனுப்பிவைக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு சட்டம் நன்றாகத் தெரியாத காரணத்தால், பல கேஸ்கள் வக்கீல்களின் திறமை காரணமாகத் தள்ளப்படுகின்றன. இதனால் சர்க்காருடைய பெரும் பணம் வீணாகச் செலவாகக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்தத் துறையில் சட்டம் தெரிந்தவர்களை அதிகமாக நியமிப்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிரைம் டிடக்ஷன் 55·3 சத விகிதம் அபிவிருத்தி அடைந் திருக்கிறது. அது பெரிய அபிவிருத்தி என்று சொல்ல முடியாவிட்டாலும் கூட ஓரளவு அபிவிருத்தி இருக்கிறது. ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஒரு ஜீப் அவசியம் தேவை. ஜீப் இல்லையென்றால், எப்படி ரிப்போர்ட் பண்ணிய வுடன் விரைவாகப் போய்க் குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியும்? ஜீப்

இல்லாதுபோனால், உடனடியாகச் செல்ல முடியாததன் காரணமாகச் சாட்சிகள் கலைக்கப்பட்டுவிடுகிறார்கள். ஆகவே, ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் ஒரு ஜீப் கார் கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

மதுவிலக்குக் குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே போவதால் மதுவிலக்கை ரத்து செய்துவிடலாம் என்று எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் அவர்கள் பேசினார்கள். [illegible] காலத்திலிருந்தே நாம் கொலையையும், திருட்டையும் பாபமாகக் கருதி வந்திருக்கிறோம். ஆனால், இந்த நாட்டிலே, என் தொகுதியிலே திருட்டும் கொலையும் ஒழிந்துவிட்டதா? இல்லை. அதற்காக அந்தச் சட்டங்களை எடுத்துவிட முடியுமா? மதுவிலக்குக் குற்றங்கள் பெருகி வருகின்றன என்றால், அந்தச் சட்டம் தோற்றுவிட்டது என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. இன்னும் நல்ல முறையில் அதை அமல் படுத்தும் வகையில் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு ஜீப் கொடுக்க வேண்டுமென்று மறுபடியும் நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

போலீஸ் துறையினருக்கு வீட்டு வசதிக்காக முதலில் 418 லட்சம் ரூபாயும், பின்னர் 1963–64-ம் ஆண்டில் 21 லட்சம் ரூபாயும் செலவழிக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். இது பெருமிதம் கொள்ளக்கூடியதுதான் என்றாலும், இருக்கக்கூடிய போலீஸ் படையினரின் எண்ணிக்கையைப் பார்க்கிற போது இது ஒரு சிறு பகுதிதான். அவர்களுக்கு நிரந்தரமான வீட்டு வசதியைச் செய்து கொடுப்பதன் மூலமாகத்தான் அவர்களை யாதொரு கவலையுமில்லாமல் செயல்படச் செய்ய முடியும். அவர்களுடைய சேவை "எஸென்ஷியல் சர்வீஸ்" ஆக இருப்பதால் அவர்களுக்கு வீட்டு வசதியைச் செய்து கொடுப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய நண்பர் அவர்கள் பேசும்போது, ஐயாயிரத்துச் சொச்சம் மது விலக்குக் கேஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறினார்கள். அது போலீஸ் துறையினரின் சாமர்த்தியத்தைக் காட்டுகிறது. இவ்வாறு நல்ல முறையில் போலீஸ் இலாகா செயலாற்றுவதன் காரணமாக மது விலக்கை நாம் நல்ல முறையில் அமல் நடத்த முடியும். முக்கியமாக வேறு யாருக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்காவிட்டாலும் இவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, என் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஒட்டி, ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். நம் மதிப்பிற்குரிய போலீஸ் துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றுகிற நேரத்தில் அண்மையில் வெட்டப்பட்ட போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் மிகவும் நல்லவர். அந்த இலாகாவில் கடமையை உணர்ந்து பணியாற்றியவர், அந்த இலாகா மீது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த மன்றத்தில் கூறப்படுகிற லஞ்சப் புகாருக்கு இம்மைக்கு அப்பாற்பட்டவர், ஒரு நல்ல வாலிபர், கடமை வீரர்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் சொல்கிற அளவுக்கு கனம் அமைச்சர் சொல்லவில்லை. 'கடமை உணர்ச்சி உள்ளவர் வெட்டப்பட்டது பரிதாபமாக இருக்கிறது' என்று சொன்னார்கள். மந்திரியானாலும் சரி, அங்கத்தினர் ஆனாலும் சரி, மெரிட்டுக்குள் போகக் கூடாது. அது "சப் ஜுடிஸ்" என்று பேப்பரில் வந்திருக்கிறது. வெட்டப்பட்டது சரி என்று ஆரம்பிக்கக்கூடாது. பரிதாபகரமாக இருக்கிறது என்று கனம் அமைச்சர் சொன்னார்கள். வேண்டுமானால், கனம் அங்கத்தினர் 'பரிதாபகரமாக இல்லை' என்று சொல்லலாம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** பரிதாபகர நிகழ்ச்சி என்று சொல்லும் போது, நான் பரிதாபம் இல்லாத நிகழ்ச்சி என்று சொல்ல வரவில்லை. மிக நல்லவர், கடமையை உணர்ந்தவர், உணர்ந்து நன்கு பணியாற்றியவர், லஞ்சப் புகாருக்கு அப்பாற்பட்டவர், அப்படிப்பட்ட ஒருவரை வெட்டினார்





களே என்று நினைக்கும்போது நிச்சயமாக மிக மிக வருந்தத் தக்க நிலை தான் இருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் என் தொகுதியில் நடந்த காரணத்தால் சொல்கிறேன். இத்தகைய பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் நிச்சயமாக ஒவ்வொரு நிமிடமும் சமூக விரோத சக்திகளுடன் போராடிக்கொண்டிருக்க வேண்டிய காரணத்தினால், அவர்கள் உயிரோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்வேன். ஆகவே, அத்தகைய மகத்தான சேவையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கட்டாய இன்ஷூரன்ஸ் ஸ்கீம் ஒன்றை ஏற்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போன்று அத்தகைய கடமை உணர்ச்சியுடன் கடமை ஆற்றி வீர மரணம் அடைந்தவருக்குத் தக்க சன்மானம் அல்லது பரிசு அல்லது பதக்கம் போன்றவைகளைக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நம் போலீஸ் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் சென்ற ஆண்டு இத் துறையில் வந்த விண்ணப்பங்கள் எத்தனை, அவற்றில் போலீஸார் நடவடிக்கை எடுக்கவேண்டிய தகுதி பெற்ற காக்னிஸபிள் அபன்ஸ் எத்தனை, நான்–காக்னிஸபிள் அபன்ஸ் எத்தனை, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட கேஸ்கள் எத்தனை, தாக்கல் செய்யப்பட்டு குற்றவாளிகளால் ஒத்துக்கொள்ளப்பட்ட வழக்குகள் எத்தனை, வாதாடிய வழக்குகள் எத்தனை, தண்டிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை, தண்டிக்கப்படாமல் விடப்பட்ட வழக்குகள் எத்தனை, என்பது போன்ற விவரங்கள் இருக்கும் என்று நான் துருவித் துருவிப் பார்த்தேன். ஆனால், அந்த விவரங்கள் காணப்படவில்லை. வருகிற அறிக்கையிலாவது அத்தகைய விவரங்கள் எல்லாம் கொடுக்கப்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதே சமயத்தில், 1962–ல் 48,061 பேர்கள் கிரிமினல் வழக்குகளில் தண்டிக்கப்பட்டார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. போடப்பட்ட வழக்குகள் எத்தனை ? துப்புத் துலக்கப்படாமல் போனவை எவ்வளவு, என்ற விவரம் காணப்படவில்லை. 1963–ல் 46,234 பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்று காணப்படுகிறது. துப்புத் துலக்கப்படாமல் போன வழக்குகள் எவ்வளவு என்று இல்லை. இந்த அறிக்கையில், 1955–ல் துப்புத் துலக்குகிற திறமை 41·3 சத வீதமாகவும், 1962–ல் 53·1 சத வீதமாகவும், 1963–ல் 55·3 சத வீதமாகவும், துப்புத் துலக்குகிற திறமை வளர்ந்திருக்கிறது என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அதே சமயத்தில் துப்புத் துலக்காமல் சற்றேறக் குறைய 45 சத வீத வழக்குகள் விடப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன ? போலீஸாருக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லையா ? அல்லது அவர்களிடம் திறமை இல்லையா, அல்லது பொதுமக்கள் ஒத்துழைப்பு இல்லையா என்று அறிய நான் ஆவலோடு இருக்கிறேன். மது விலக்கைப் பொறுத்த வரையில் 1962–ம் ஆண்டை விட 1963–ல் 5,640 வழக்குகள் கூடுதலாகியிருக்கின்றன. மது விலக்கை எடுத்துவிட வேண்டுமென்று சொல்லுகிற கட்சியைச் சேர்ந்தவன் அல்ல நான். மது விலக்கைப் பொறுத்தவரை அதைத் தீவிரமாக அமல் படுத்த வேண்டும், செயல் படுத்த வேண்டும் என்று சொல்கிற நிலையில் என் கருத்துக்களை எடுத்துக் கூறக் கடமைப் பட்டுள்ளேன். மது விலக்கைப் பொறுத்தவரை குடிக்கும் வழக்குகள், கன்ஸம்ஷன் கேஸ்கள், 85 சத வீதம் இருக்கிறது. காய்ச்சுவது, கடத்துவது 10 சத வீதம், 15 சத வீதம் என்றிருக்கிறது. ஆகவே, இந்தக் காய்ச்சுவது, கடத்துவது ஆகிய விஷயத்தில் போலீஸ் இலாகா மிக்க கவனம் செலுத்தி அதைத் தீவிரமாக தடுத்துக் குடிப்பவர்களுக்கு சரக்கு சப்ளையாகாமல், சரக்குக் கிடைக்காமல் செய்ய வேண்டும். ஆகவே, இந்த டிஸ்டிலேஷன், டிரான்ஸ்போர்ட் செய்வது இவைகளைக் கட்டுப்படுத்துவதில் போலீஸார் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்று கூற விரும்புகிறேன். அரசாங்கம் மது விலக்குத் திட்டத்தை தீவிரமாக அமல் படுத்த நினைப்பதால், போலீஸிடம் மது விலக்கும் இருக்கிற காரணத்தினால், ஐ.பி.ஸி. போன்ற வழக்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து இவற்றைத் துப்புத் துலக்குவதில் தீவிரமாக ஈடுபடுவதில்லை. ஆகவே இதற்கு என்று ஒரு தனி இலாகா ஏற்படுத்தினால் நலமாகயிருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்து, மதுவிலக்கு பொறுத்த

வரையில், நடக்கிற வழக்குகள் இருக்கின்றன. நம் சட்டங்கள் எல்லாம் நிர்மாணிக்கப்பட்டிருப்பதால் அதன் மூலம் அந்த வழக்குகள் தப்பித்துக் கொள்வதற்குள்ள சூழ்நிலை இல்லை. அந்தச் சூழ்நிலை இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை. மேலே உள்ள அதிகாரிகள் கீழேயுள்ள அதிகாரிகளிடம், 'சென்ற மாதம் இவ்வளவு மது விலக்கு வழக்குகளைக் கண்டுபிடித்தீர்களே, இந்த மாதம் ஒன்றும் இல்லையே' என்று கேள்வி கேட்கிற நேரத்தில் கீழேயுள்ள அதிகாரிகள் சென்று பார்க்கிறார்கள். உண்மையாகவே குடிப்பவர்கள் இருந்தாலும் சரி, இல்லாமலிருந்தாலும் சரி, மேல் அதிகாரிகளிடமிருந்து உத்தரவு வருகிறது என்பதால் அவர்களைத் திருப்திப் படுத்த வேண்டுமென்று உண்மைக்கு மாறான வழக்குகளை பல சந்தர்ப்பத்தில் போட்டுவிடுகிறார்கள். ஆனால் நிரபராதிகள் கூட தண்டிக்கப்படுகிறார்கள். இதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். புள்ளி விவரங்கள் காட்ட வேண்டும். ஆகவே வழக்குப் போடவேண்டும் என்ற நிலையில், குற்றங்கள் பிடிபடுவதில்லை, யாரோ சொல்கிறார்கள் குடிக்கிறார் என்று, ஆகவே கேஸ் போட்டுவிடுவோம் என்ற நிலைமை நாட்டில் பரவலாக இருக்கிறது. அதை அருள் கூர்ந்து அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். கூடுமானவரையில் இந்த வழக்குகளை எல்லாம் கட்டுப்படுத்துவதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். 1,000 குற்றவாளிகள் விடுதலையானாலும் சரி, ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்பது நம் சட்டம். அது நம் தத்துவம். அந்தத் தத்துவத்தை நிலைநாட்டும் முறையில் மதுவிலக்கு சம்பந்தப்பட்ட வழக்குகளை கவனமாக வழக்குகளைப் பார்த்து, உண்மையானதாக இருக்கிறதா என்று பார்த்து உண்மைக்கு மாறாக உள்ளவற்றைத் தவிர்க்க தக்க முயற்சி செய்யவேண்டும். அதே சந்தர்ப்பத்தில் மேற்கு வங்கத்திலும், டெல்லியிலும் உள்ள போலீஸ்காரர்களுக்கும் நம் மாநிலத்தில் உள்ள போலீஸ்காரர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. அங்கே போலீஸ்காரர்களுக்கு அடிப்படைச்சம்பளம் அதிகமாக இருக்கிறது, படியும் அதிகமாக இருக்கிறது. இங்கு அடிப்படைச் சம்பளமும் குறைவு, படியும் குறைவு. (மணி அடிக்கப்பட்டது) ஒரு கருத்தை மட்டும் கூறிக் கொண்டு முடித்து விடுகிறேன். நகரசபைகளில் எல்லாம் தேர்தல் நடைபெற்றன. தமிழகத்தில் உள்ள 59, 60 நகராசபைகளில் தேர்தல்கள் நடைபெற்றன. எந்த நகரசபையிலும் முன்னெச்சரிக்கையாக யாரும் கைது செய்யப்படவில்லை. ஆனால் சென்னை நகரில் மட்டும், என் நினைவு சரி என்று நினைக்கிறேன், எந்தப் பொதுத் தேர்தலிலும் முன்னெச்சரிக்கையாக கைது செய்யப்பட்டார்கள் என்ற நிலை இல்லை. சென்னை மாநகராட்சித் தேர்தலின் போது நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போலீஸ் பந்தோபஸ்து என்ற முறையில் சுமார் 7,000 பேர்கள் போடப்பட்டிருந்தார்கள். 100 அல்லது 200 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கலாம். இவர்களை ஒரு 300 போலீஸ்காரர்கள் கண்காணித்திருக்க முடியாதா, அப்படியிருக்க என் இவர்களை கைது செய்திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு ஆளும் கட்சியில் இருப்பவர்களானாலும் சரி, எதிர்கட்சியில் இருப்பவர்களானாலும் சரி இந்த துறையில் ஈடுபட்டிருப்பவர்களின் பணிகளில், இவர்கள் செய்கிற வேலைகளில் குறுக்கிடக் கூடாது, அவர்களுக்கு எந்தவிதமான ப்ரஷரும் இருக்கக் கூடாது என்று சொல்லிக் கொண்டு இந்த வெட்டுப்பிரேரணையை வலியுறுத்தி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கோ. ராஜாராம் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற போலீஸ் மான்யத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் துறையினரைப் பாராட்டிப் பேசுவதற்கு முன்னாலே, என்னுடைய திண்டிவனம் பகுதியைச் சேர்ந்த அங்கத்தினர் அவர்கள் எடுத்துக்காட்டிய திண்டிவனம் நகர போலீஸ் அதிகாரிகள் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு நான் பதில் சொல்ல வேண்டிய கடமையில் இருக்கிறேன். ஏதோ போலீஸ் நிலையங்கள் எல்லாம் தி.மு.க. கிளைக்காரியாலயங்களாக மாறவேண்டும் என்று ஆசைப்படுகின்ற இவர்கள், உண்மையிலேயே திறமையாகப் பணியில் ஈடுபடுகின்ற போலீஸ் அதிகாரிகள் தங்களுடைய வேலைகளைக் கடமையுணர்ந்து செய்யும்போது, அவர்கள் மீது அவசியமில்லாத அவதூறுகளைக் கிளப்பி விடுகின்ற முயற்சியில் ஈடுபடுகின்றனர்.





**திரு. ஆ. தங்கவேலு :** தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் இருந்து வந்திருக்கிற அங்கத்தினர் குற்றஞ்சாட்டினார் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறார்கள். நான் திண்டிவனத்திலிருந்து தான் வந்திருக்கிறேன். ஆனால் நான் இதுவரையிலும் இந்த மான்யத்தில் பேசவில்லை.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் திரு. ஆ. தங்கவேலுவைப் பற்றிச் சொல்லவில்லை என்று நினைக்கிறேன்.

**திரு. கோ. ராஜாராம் :** திண்டிவனம் தாலுகாவிலிருந்து இரண்டு அங்கத்தினர்கள் வந்திருக்கிறார்கள். அந்த முறையில் இதற்கு முன்னால் பேசின வேறு ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டதைப் பற்றித்தான் நான் சொன்னேன். நல்ல முறையில் திறமையாகப் பணிபுரிகின்ற இந்த போலீஸ் அதிகாரிகள், கள்ளச்சாராயம் காய்ச்சும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, அவர்கள் மீது வழக்கு போடுவதற்கு முற்படும்போது, போலீஸ் அதிகாரிகளை அணுகி, இம்மாதிரி வழக்குகள் போடவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகின்ற நேரத்தில், இதையெல்லாம் கோர்ட்டில் வந்து சந்தித்துக் கொள்ளுங்கள் என்று அவர்கள் சொல்ல, இதன் காரணமாக அவர்கள் பேரில் குற்றம் சொல்வதும் அவர்களை மாற்றவேண்டும் என்று மகஜர்கள் அனுப்புவதுமான காரியங்களில் ஈடுபட்டு, அது போதாதென்று சட்டமன்றத்திலும் வந்து அவர்களைப்பற்றி அவதூறைச் சொல்லுகிறார்கள் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் செய்த குற்றம் என்ன என்று பார்த்தால், கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதைப்போல், கடந்த நகரசபைத் தேர்தலில், எங்கள் பகுதி மக்கள் ஆணும் பெண்ணுமாக தைரியமாக எல்லோரும் சென்று, தங்கள் வாக்குகளை போடுவதற்கு வசதி செய்து கொடுத்ததும், அதற்கு வேண்டிய பந்தோபஸ்தையும் செய்து கொடுத்தார்கள் என்பதும், கள்ளச் சாராயக்காரர்களை சட்டத்தின் கண் முன் கொண்டு நிறுத்தினார்கள் என்பதையும் தவிர, வேறு அவர்கள் எந்தவிதமான குற்றமும் செய்யவில்லை. இந்த நிலையில் அவர்கள் மீது எந்தவிதமான காரணமும் இல்லாமல் குற்றங்களைச் சொல்வது பொருந்தாது.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் இந்த விஷயத்தை விட்டு விட்டு, போலீஸ் மான்யத்தின் மீது வேறு விஷயங்களைப்பற்றிப் பேசலாம்.

**திரு. கோ. ராஜாராம் :** அவர்கள் முன்னால் இந்தக் குற்றச்சாட்டை சொன்னதினால் தான், நான் இப்போது அதற்குப் பதில் சொல்ல முன் வந்தேன். அடுத்ததாக, இந்த போலீஸ் துறையானது, அடிமை மண்ணில் பிறந்து, ஆதிக்கக்காரர்கள் மடியிலே தவழ்ந்து வளர்ந்து, இன்றைக்கு சுதந்திர மண்ணில் வலிவோடும் பொலிவோடும் ஏறு நடைபோடுகின்றது. சென்னை மாநிலத்திலுள்ள போலீஸ் துறையினர் எப்போதுமே மிகவும் சிறப்பாகவும் பொறுப்பாகவும் பணியாற்றி இந்த நாட்டுக்கும் தங்கள் துறைக்கும் நல்ல பெயரையும் புகழையும் தேடித் தந்திருக்கிறார்கள். இந்த மாநிலத்தின் பெருமையையும், மரியாதையையும் மற்றைய மாநிலங்களில் உயர்த்தியிருக்கின்ற துறைகளில் போலீஸ் துறை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. போலீஸ் துறையினருடைய திறமையான செயலுக்கு எல்லா இடங்களிலும் நல்ல பெயர் இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் போலீஸ் துறைபற்றி பல குறைகளையும், தவறுகளையும் எடுத்துக் காட்டுகின்ற நேரத்தில் நாம் அதை மிகவும் பொறுப்போடு அணுகவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். குறிப்பாக கீழ் மட்டத்திலுள்ள போலீஸ் ஊழியர்கள் தவறுகளுக்கு ஆளாகின்ற பொழுது, குற்றங்களுக்கு ஆளாகின்ற பொழுது, அவர்களுக்கு ஊதியம் போதவில்லை, அவர்களுக்கு வாழ்க்கை வசதிகள் போதவில்லை, அதனால்தான் அவர்கள் இம்மாதிரியான செயல்களில் ஈடுபடவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று சாதாரணமாக எல்லோரும் கூறி வருகிறார்கள். அந்தவிதமான கருத்துக்களில் உண்மையிருந்தாலும், அதை முழுக்க முழுக்க நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. போலீஸ் கீழ் மட்டத்திலிருக்கின்றவர்கள், தங்கள் சுக துக்கங்களை எல்லாம் மறந்து இன்பவாழ்வை மறந்து பணியில் ஈடுபட்டு கடமை ஆற்றிவருகிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கைக்கு அடிப்

படையான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், ஊதிய உயர்வு, வாழ்க்கைத்தர உயர்வு போன்ற முக்கியமான வசதிகளை எல்லாம் செய்துக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில் அந்த ஊழியர்களும் சமுதாயத்தில் தங்களுக்கு இருக்கவேண்டிய பொறுப்பை, சமுதாயம் அவர்களிடமிருந்து எதிர்ப்பார்க்கின்ற கடமையுணர்ச்சியை எல்லாம் சிந்தித்துப்பார்த்து, அவர்களுடைய மனம் நல்மணம் ஆகக்கூடிய வகையில், நெஞ்சில் நல்ல புதிய உணர்ச்சிகளை வளர்த்துக் கொண்டு பணியாற்றிஞல்தான் அவர்களிடம் நல்ல பயனைக் காண முடியுமே தவிர, வெறும் 100, 150 ரூபாய் என்று உயர்வு கொடுப்பதிஞல் மட்டும் பெரிய மாற்றம் வந்துவிட முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வருமானம் அதிகரிக்க அதிகரிக்க ஆசையும் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். ஆகவே இதனுல் மட்டும் அவர்களிடம் நல்ல பலன் காணமுடியும் என்று நம்புவதற்கில்லை. வேண்டுவது மனமாற்றமே. போலீஸ் துறையைச் சார்ந்த பல ஊழியர்களும் தங்கள் பணியை கடமையுணர்ந்து செய்யக்கூடிய நல்லவர்கள் இருக்கிருர்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் படித்துக்காட்டிஞர்கள். சமீபத்திலே செய்தி படித்தோம். நல்ல படித்தவர், இளைஞர், 29 வயதுள்ள வாலிபர், எம்.ஏ. பட்டம் பெற்றவர், வேலைக்கு வராமல் இருந்தாலும் கூட தன்னுடைய வாழ்க்கையை நல்ல முறையில் சமாளித்துக் கொண்டிருக்க முடியும் என்ற நிலையிலுள்ள பணக்காரர், ஒரு இளைஞர், சமுதாய சேவை செய்யவேண்டும் என்ற காரணத்திற்காக சப்-இன்ஸ்பெக்டராக வந்து பணியாற்றும்போது, ஒரு கொடிய கொள்ளைக்காரன் அவரை பயங்கரமான முறையில் வெட்டிக் கொன்றுவிட்டான் என்று சொல்லும்போது, இம்மாதிரிப்பட்ட போலீஸ் துறையினரின் பணிகளை நாம் பாராட்டுகின்ருேம். அதே நோத்தில் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட தேரில் ஏறி புராண கால அர்ச்சுனனைப்போல கள் வேண்டுவோர் கழக மாநாட்டுக்குத் தலைமை தாங்கப் போகும் அதிகாரிகளையும் செய்திகளில் சந்திக்கிருேம். அவர்கள் இந்தத் துறைக்கே அவப்பெயரைத் தேடித் தருகிருர்கள். மதுவிலக்கு தேவையில்லையென மணி போல கருத்துக்களை சிந்துகிருர்கள். நல்லவர்கள் கூட விரக்தி மனப்பான்மையோடு மதுவிலக்கு ஒழிய வேண்டுமென்கிருர்கள். அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய வரிப்பணம் வீணுகிறது, மதுவிலக்கு சரியானபடி அமல் செய்யப்படாததின் காரணமாக, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் அதிகமாகி, சாதாரணமாக ஆண்டிகளாக இருந்தவர்கள் எல்லாம் இன்று பணத்தை குவித்து வைத்துக் கொண்டிருக்கிருர்கள் என்றும், போலீஸ் துறையினர் விரிவான முறையில் மதுவிலக்கு சட்டங்களை ஒழுங்காக அமல் நடத்துவதில்லை, அதற்கு மாருக சட்டங்களை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிருர்கள் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல் இத்தனை கஷ்டங்கள் வந்தாலும்கூட, நம் மாநில அரசு, மதுவிலக்கு திட்டத்தை இழக்க மாட்டோம் என்று சொல்கிறது. சொத்துக்களை இழந்தும், நாட்டை இழந்தும், தம் மனைவி மக்களை இழந்தும், உண்மை பேசுவதிலிருந்து மாற மாட்டேன், உண்மையை இழக்கமாட்டேன் என்று சொன்ன அரிச்சந்திர மன்னனைப்போல், உயர் கொள்கையான மதுவிலக்கை இழக்க மாட்டோம் என்று நமது அரசு சொல்லுகிறது. மதுவிலக்கை அமல் நடத்துவதில் குறைகள் இருந்தால் சொல்லுங்கள், காது கொடுத்து கேட்கிருேம். ஆனுல் மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னுல் அதை திரும்பிக்கூட பார்க்க நாங்கள் தயாராக இல்லை. கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களும் தவறு புரியும் போலீஸ் ஊழியர்களும் எங்கள் கண்களிலும் படுகிருர்கள். இந்த நிலை மாற எல்லோரும் முயற்சிப்போம். ஆனுல் அதே நேரத்தில் அமைதியான வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழைத் தாய்மார்கள் எங்கள் அமைதியைக் கெடுத்துவிடாதீர்கள் எனக் கெஞ்சும் குரலில் கேட்பதும், அவர்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கிற குழந்தைகள் எங்கள் எதிர்காலத்தைப் பாழாக்கி விடாதீர்கள் என்பது போல பார்வை வீசுவதையும் பார்க்கிருேம். அரசாங்கத்தின் கண் முன்ஞல் இவர்கள்தான் முக்கியமாகப் படுகின்றனர். எனவேதான் மதுவிலக்கை அமுல் நடத்துவதில் குற்றங்குறை இருந்தாலும் இதை எடுத்துவிட முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட





குறைகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகின்ற காரணத்தால், இவைகளை அகற்றுவதற்கு என்னென்ன வழிகளில் ஈடுபடலாம் என்பதை ஆராய்வதற்காக ஒரு கமிட்டியை அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நமது மாநிலத்தில் மதுவிலக்கு வேண்டுமா, வேண்டாமா என்பது பிரச்னை அல்ல. இந்தத் திட்டத்தை இப்போது இருப்பதை விட இன்னும் தீவிரமாக எப்படி அமல் நடத்துவது என்பதுதான் பிரச்னையாகும். அதே நேரத்தில் இங்கேயும் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து, மதுவிலக்கை ரத்து செய்யக்கூடாது என்று குரல் எழுப்பியதைக் கேட்டு நாங்கள் பாராட்டுகிருேம். அதே நேரத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் கூடாது, கள்ளச் சாராயம் காய்ச்சுவது மிகப்பெரிய குற்றம், ஆகவே இதில் யாரும் ஈடுபடக்கூடாது என்று வேண்டுகோள் விடுவார்களேயானுல் நல்ல பலன் இருக்கும், அதோடு மேலும் பாராட்டுவதற்குரியதாக இருக்கும் என்பதைக் கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. து. ப. அழகமுத்து** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியைச் சேர்ந்த திரு. புலவர் கோவிந்தன் அவர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஒட்டி ஒன்றிரண்டு கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

பொதுவாக இந்த மான்யக் கோரிக்கைகளின் மீது விவாதம் நடைபெறுகிறபொழுது, எதிர்க் கட்சியில் இருக்கின்றவர்கள் உருவான யோசனை ஒன்றும் கூறுவதில்லை என்று அடிக்கடி மந்திரிகள் குற்றம் சாட்டி வருகிருர்கள். அதை சீர் தூக்கி பார்க்கும்போது, எதிர்க் கட்சியினர் சொல்லுகின்ற யோசனைகளை எந்த அளவுக்கு ஆளும் கட்சியினர் ஏற்றுக்கொண்டார்கள் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதற்கு என்ன பரிகாரம் காணப்பட்டிருக்கிறது என்பதும் என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை. நாங்கள் பரிந்துரைத்தாலும், அல்லது புகழ்ந்துரைத்தாலும், குற்றங்களை எடுத்துக் கூறிஞலும் பொதுவாக மந்திரிகளுக்கு அதிலும் குறிப்பாக, நமது முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு உடனே ஒருவிதமான அலர்ஜி ஏற்பட்டுவிடுகிறது. எங்களைப்பற்றி எப்போதும் தவருகக் கருதுகிருர்கள்.

**கனம் சபாநாயகர் :** கழிந்த இரண்டு மூன்று நாட்களாக இரண்டு பக்கத்திலும் அலர்ஜி ஏற்பட்டுக்கொண்டு தான் இருக்கிறது. ஏதாவது குற்றங் குறைகளை எடுத்துச் சொல்லவேண்டுமென்ருல், இன்னின்ன தப்பிதம் நடந்திருக்கிறது என்று எடுத்துக்காட்ட முயன்ருல் நன்ருக இருக்கும். அதல்லாமல் மந்திரிகளுக்கு அலர்ஜி ஏற்படுகிறது என்று கனம் அங்கத்தினர் சொன்னுல் அவர்கள் கனம் அங்கத்தினருக்குத்தான் அலர்ஜி ஏற்படுகிறது என்று சொல்வார்கள். இப்படி இரண்டு பேரும் சொல்லிக் கொண்டிருந்தால் மூன்ருவது யாருக்காவது அலர்ஜி ஏற்படும்.

**திரு. து. ப. அழகமுத்து** : தாங்கள் சொல்லுகின்ற யோசனையைத் தலை வணங்கி வரவேற்கத் தயாராக இருக்கிறேன். இதே எண்ணம் எதிர் பக்கமும் இருந்தால் நன்ருக இருக்கும்.

**கனம் சபாநாயகர்** : இரண்டு பக்கங்களுக்கும் தான் சொன்னேன்.

**திரு. து. ப. அழகமுத்து**: பொதுவாக நாங்கள் ஏதோ தரக் குறைவாகப் பேசுகிருேம் என்று மந்திரிகள் சொல்லுகிருர்கள். மேலும் நாங்கள் பொறுப்போடு நடந்து கொள்வதில்லை என்றெல்லாம் கூறப்படுகிறது. அகில இந்திய ஒற்றுமையில் நம்பிக்கையுள்ள ஆளும் கட்சியினர் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அகில இந்தியாவில் இணைந்துள்ள பல இடங்களைத் திரும்பிப் பார்க்கின்ற நேரத்தில்— பஞ்சாபைப் பார்க்கின்ருேம், உத்திரப் பிரதேசத்தைப் பார்க்கின்ருேம், ஒரிசாவைப் பார்க்கின்ருேம், கேரளாவைப் பார்க்கின்ருேம் அங்கெல்லாம் ஆளும் கட்சியினர் தரம் எந்த அளவுக்கு இருக்கிறது, எந்த அளவுக்கு பொறுப்போடு நடந்துகொண்டிருக்கிருர்கள் என்பதைச் சற்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல. இந்தத் தரத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, இந்த 10·00 a.m.

அல்லது வேறு ஒருவரிடத்திலேயோ இந்த இலாகா ஒப்படைக்கப்பட்டிருந்தால்
இன்னும் அதிக அளவுக்கு அந்தச் சமூகம் நன்மை பெறும். அதிலே
எனக்கு அசையாத நம்பிக்கை இருக்கிறது. தட்டிக்கேட்க ஆள் இல்லாத
இடத்தில் தம்பி சண்டப்பிரசண்டன் என்ற முறையில், தடி எடுத்தவன்
எல்லாம் தண்டல்காரன் என்ற வகையில்........................

**கனம் சபாநாயகர் :** இது மற்றொரு பழமொழி. கனம் அமைச்சர்
சொன்ன பழமொழியைச் சொல்லிவிட்டு கனம் அங்கத்தினர் ஒரு பழ
மொழி சொல்லுவது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கு நாங்கள் தங்களுடைய பாது
காப்பைக் கோரவில்லை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அடுத்து இந்த ஆண்டு காவல் துறை
மான்யமாகக் கனம் அமைச்சர் அவர்கள் 8,20,22,000 ரூபாய் அளவுக்குக்
கேட்டிருக்கிறார்கள். இதை இன்னும் இன்று அதிகமாக்கி காவல் துறையின
ருக்கு வேண்டிய இன்னும் பல வசதிகளைச் செய்து கொடுத்தால் உண்மையி
லேயே மிகவும் நலமாக இருக்கும்.

பொதுவாக இன்றைய நிலையில் போலீஸ்காரர்களை இல்லாது ஆட்சி
செய்ய முடியாது என்று ஆகி விட்டது. ஆட்சித் துறைக்கு மட்டுமல்ல,
நாட்டிலே அவர்கள் சேவை இன்றியமையாத தேவையாக ஆகிவிட்டது.
கல்யாண வீடாக இருந்தாலும், திருவிழாக் காலங்களாயிருந்தாலும்.
போலீஸ் எங்கும் நீக்கமற நிற்கின்ற பரம்பொருள் என்ற நிலைமை இன்
றைக்கு எல்லா இடத்திலும் இருந்து வருகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு
அதிகப் பாதுகாப்பும் அதிக வசதிகளும் செய்துகொடுக்கவேண்டும். அவர்கள்
அதிக வசதி கேட்பார்களோ என்ற காரணத்தினாலோ, என்னமோ அவர்
களுக்கென்று தனி சங்கம் கூட இல்லாது சர்க்காரே பொறுப்பு ஏற்று
நடத்தி, அவர்கள் நலனிலே அக்கறை கொண்டு அதற்கு ரூபாய் 50,000
மான்யம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஊர் காரியங்களில் தலையிட்டு நீதியை
நிலை நாட்டும் அவர்கள் விஷயத்தில் அக்கறை காட்டவேண்டியது அமைச்ச
ருடைய நீங்காத கடமை ஆகும்.

பொதுவாக காவல் துறைபற்றி அத்தனை பேரும் பாராட்டியிருக்கி
றார்கள். ஆனால் நாங்கள் பாராட்டுவதில், ஆபத்து இருக்கிறது. காவல்
துறையை நாங்கள் பாராட்டும் நேரத்தில் இவர்கள் ஏதோ காவல் துறை
யினரைச் சரிசெய்து கொள்கிறார்கள் என்று தவறான எண்ணத்தைப் பலர்
கொண்டிருக்கிறார்கள். நாங்கள் நிச்சயமாகச் சொல்லுகிறோம் இவர்கள்
தயவில் இவர்களைச் சரிசெய்துகொண்டு நாங்கள் கட்சியை வளர்த்துக்
கொள்ளவேண்டிய நிலையில் இல்லை. இதை எல்லோரும் நிச்சயமாக
உணர வேண்டும். ஆனாலும் காவல்துறை பற்றி வெளி நாட்டி
லிருந்து வந்த பலரும், இந்த நாட்டில் இருந்துவிட்டுச் சென்ற
பலரும் ஏகோபித்துப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களைப்
பற்றி எந்தக் குறையும் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்லவேண்டு
மென்றால் ஆட்சி முறையிலேயே இப்போது நம்முடைய நகரைப் பொறுத்த
வரையில் எடுத்துக்கொண்டாலும்கூட, நம்முடைய மதிப்புக்குரிய
திரு. அருள் வந்த பிறகு இங்கே நகரத்தில் ஏற்பட்டிருந்த ஒரு சில
இருள்....

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, it is a well-known and well-established practice in all Parliaments that officers are not mentioned by name either for praise or for condemnation. It is the administration which is always criticised or praised. There are rulings to that effect in the Lok Sabha. I would like the Hon. Speaker to bring this to the notice of the House so that in future this sort of reference may be avoided.

MR. SPEAKER : That is correct.





**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கனம் தலைவர் அவர்களே, நானும்
அதை உணர்கிறேன். அந்த இலாகாவிலே இருக்கிற திரு. அருளைக் காட்டு
கிறேன். அதிலே ஏற்பட்டிருக்கிற இருளைப் போக்குவதற்கு அவர்கள்
எடுத்துக்கொண்டிருக்கிற அருளைச் சொன்னேனே தவிர, நான் குறிப்பிட்ட
பெயரைச் சொல்லவில்லை. (சிரிப்பு).

**கனம் சபாநாயகர் :** ரொம்பப் பிரமாதமாக இருக்கிறதே ! (சிரிப்பு).

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்பொழுது ஏற்பட்டிருக்கிற போக்கு
வரத்து வசதி முறைகள் இல்லாவிட்டால் தினம் தினம் எப்படிப்பட்ட
ஆபத்து நேரும் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தங்களுடைய
முன்னுரையிலேயே கூறினார்கள். அதையெல்லாம் உணர்ந்துதான் இந்த
இலாகாவைப் பாராட்டுகிறோம். அவர்கள் செய்கின்ற சேவையைப் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறோம். பொதுவாக போலீஸ் இலாகாவினர் மிகத்
திறமையாக செயலாற்றுகிறார்கள் என்று சொன்னாலும் கூட, ஒரு சில
குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. சமீபத்தில் நடந்து முடிந்த
நகர மன்றத் தேர்தல்களில் மாவட்டங்களிலும் சரி, சென்னை நகரிலும்
சரி, மிகத் திறமையோடு பந்தோபஸ்து செய்யப்பட்டு, மிகச் சிறந்த முறை
யில் அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். போலீஸார் தங்களுடைய
கடமைகளை இவ்வளவு செம்மையாகச் செய்தும், செவ்வனே செய்தும், ஒரு
சில இடங்களில் வேண்டாத, விரும்பத்தகாத, அசம்பாவிதங்கள் நடந்ததை
நான் என் கண்ணாலேயே கண்டேன். நான் கருதுகிறேன், அப்படிப்பட்ட
அசம்பாவிதங்கள் நடந்ததற்குக் காரணம், ஒரு சமயம் அதிகாரத்தில்
இருப்பவர்கள், ஆட்சிபீடத்தில் இருப்பவர்கள் அந்த அதிகாரிகள் தங்கள்
கடமையைச் சரிவர செவ்வனே செய்யவொட்டாமல் தடுத்து நிறுத்து
றார்களோ என்றுதான் அஞ்சவேண்டியிருக்கிறது. ஏனெனில் அப்படிப்
பட்ட திறமைசாலிகள் நிறைந்த இந்த இலாகாவில் ஒரு சில இடங்களில்
இப்படிப்பட்ட சிறிய அசம்பாவிதமான காரியங்கள் ஏன் நடக்கவேண்டும் ?
மொத்தத்தில் பாராட்டப்படுகிற இந்த போலீஸ்காரர்களுக்கிடையே இந்தக்
குறைபாடுகள் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதைத் தயவு செய்து
உணர்ந்து பாருங்கள். அவர்கள் சிறந்த முறையில் பணியாற்றுகிறார்கள்
என்று எல்லோராலும் பாராட்டப்படுகிறார்கள். அவர்களுக்குப் பதக்கங்கள்
வழங்கப்படுகின்றன. ஆனால் அவர்கள் உத்தியோகத்திலிருந்து வெளி
வந்த பின்னர், ஒரு ரூபாய், 2 ரூபாய்க்குக் கூட இதை உபயோகப்படுத்த
முடியாது. இதை வைத்துக் கடன் வாங்குவதற்குக் கூட முடியாது. ஏதோ
உத்தியோகத்தில் இருக்கும் வரையிலும் அது பயன்படுகிறதே ஒழிய, அவர்கள்
உத்தியோகத்தை விட்டு வெளியில் வந்த பிறகு அது அவர்களுக்குப் பயன்
படவில்லை. அவர்களுக்கு இம்மாதிரி பதக்கங்கள் கொடுக்க வேண்டாம்
என்பதற்காகச் சொல்லவில்லை. அப்படிப்பட்ட திறமைசாலிகளைப் பாராட்டு
வதோடு நின்றுவிடாமல், பிற்காலத்துக்கு வேண்டிய வசதிகளையும் செய்து
தரவேண்டும். அவர்கள் உயிரையே பணயம் வைத்து போராடி, அரும்
பாடு படுகிறார்கள். அவர்களுக்குத் தக்க சமயத்தில் தக்க பாதுகாப்பு
அளிக்கப்படவேண்டும். இப்பொழுது இரண்டு நாட்களுக்கு முன்பு கூட
சேலத்தில் ரஹிமதுல்லா என்ற ஸப்-இன்ஸ்பெக்டர் 29 வயது நிறைந்த
வாலிபர் வெட்டிக் கொல்லப்பட்டார் என்ற செய்தி கேட்டு, உண்மையி
லேயே எவ்வளவு வேதனை அடைகிறோம் ? முன்பெல்லாம் நாட்டு மக்க
ளுக்குப் பாதுகாப்பு இல்லை. இப்பொழுது போலீஸ் இலாகாவினருக்குப்
பாதுகாப்பு இல்லை. அதற்குக் காரணம், அமைச்சர்களும் அரசாங்கத்தில்
இருப்பவர்களும், வேறு சிலருக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கிறார்கள்,
அதனால் அவர்களுக்குத் துணிவு ஏற்பட்டு போலீஸ்காரர்களையே எதிர்க்கிற
அளவுக்கு ஒரு தீய சக்தி உருவாகியிருக்கிறது. அந்தத் தீய சக்தி எந்த
இடத்தில் இருந்தாலும், எப்படிப்பட்ட வகையில் இருந்தாலும், அவர்களைக்
கண்டுபிடித்து, அவர்களுக்குத் தக்க தண்டனை கொடுப்பது அமைச்சர்
அவர்களுடைய நீங்காத கடமையாகும். அவர்கள் இறந்த பிறகு அவர்கள்
வீட்டிலுள்ளவர்களுக்குப் பரிசு கொடுப்பது ஒரு புறம் இருக்கட்டும்.
அவர்கள் இறந்த பிறகு அவர்களுடைய குடும்பத்திற்கு தக்க பாதுகாப்பு
கொடுப்பது அவசியம். அவர்கள் 'குடும்பத்தாரிடம் உங்களுடைய குழந்தை
இறந்துவிட்டாலும், சர்க்கார் உங்களுக்கு எதையும் செய்ய தயாராக
இருக்கிறது' என்ற உறுதியை எடுத்துச் சொன்னால்தான், மற்ற போலீஸ்

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [18th March 1964

அதிகாரிகள் தங்களுடைய கடமையை உணர்ந்து இதுவரையில் செய்ததை விட இன்னும் தீவிரமாக சிறந்த முறையில் பணியாற்றுவார்கள் என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே, போலீஸ்காரர்களுடைய சேவையை, அவர்கள் பாது காப்பு கொடுத்ததை, வெளி நாடுகளிலிருந்து வந்து சென்றவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். உள்நாட்டில் இருப்பவர்களும் பாராட்டுகிறார்கள். அதனால் அவர்கள் பெறுகிற பயன் என்ன ? நமது காவல் துறையினர் நம் நாட்டுக்கு மாத்திரமல்ல, வெளிநாடுகளுக்கும் சென்று பாதுகாப்பு கொடுக்கிறார்கள். தேச பாதுகாப்புக்காக யுத்தமுனைக்கும் செல்கிறார்கள். தீ அணைத்தல், ரோடு போடுதல் போன்ற வேலைகளையும் செய்கிறார்கள். ஒவ்வொருவர் வீட்டுக்குக் கூட பாதுகாப்புக் கொடுக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற பெரிய போலீஸ் அதிகாரி (சூபரின்டென்டெண்டு ஆப் போலீஸ், ஒரு சர்குலர் விடுத்திருக்கிறார். அதில் ' யாராவது வெளியூர் போகிறார்கள் என்றால், உங்கள் வீட்டைப் பூட்டிவிட்டு நீங்கள் வெளியூர் செல்லும் நேரத்தில் பக்கத்து போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் கொடுங்கள். உங்கள் வீட்டுக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கும், நீங்கள் திரும்பி வருகிற வரையில் " என்று குறிப்பிட்டிருக்கிறார். அவ்வாறு போலீஸ் பாதுகாப்பு அளிக்கிறார்களோ இல்லையோ, அம்மாதிரி அவர்கள் தெரிவித் திருப்பது திருடர்களுக்கு ஒரு பயத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. போலீஸ் காரர்கள் இருப்பார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் இப்பொழுது களவு போகாமல் கூட இருக்கிறது. அப்படிப்பட்ட வகையில் அவர்கள் வீடுகளுக்கு பாதுகாப்புக் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். அவர் கள் எவ்வளவு ஒழுங்காகவும், அமைதியாகவும் நடந்துகொண்டிருந்தாலும் கூட, அவர்களிடையே தீய சக்திகள் புகுந்து, அந்தத் தீய சக்தியோடு போராட வேண்டிய காரணத்தினால், அவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். அந்தத் தொல்லைகளைப் போக்குவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

அவர்களுக்கு இருக்க இடங்கள் கட்டிக்கொடுப்பதற்குப் பணம் ஒதுக்கப் பட்டு, மான்யத்தில் செலவு செய்யப்படுகிறது. அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற வீடுகளை நான் பார்த்தேன். நம்முடைய மாகா ணத்தில் 278 சர்கிள் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரையில் 93 இல்லங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1963-64-ல் 4 வீடுகள் கட்டப்பட் டிருக்கின்றன. அதே போல ரிசர்வ் இன்ஸ்பெக்டர்களுக்கு 5 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1221 ஸப் இன்ஸ்பெக்டர்கள் நம்முடைய மாகாணத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு 1962-63-ல் 362 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1963-64-ல் 4 வீடுகள் கட்டப்பட்டிருக்கின் றன. அதேபோல 112 ரிசர்வ் ஸப்-இன்ஸ்பெக்டர்களுக்கு 47 வீடுகள் கட்டப் பட்டிருக்கின்றன. 126 ஜமேதார்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 40 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 3,047 ஹெட்கான்ஸ்டேபிள்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு 764 வீடுகளும், இப்பொழுது 1963-64-ல் 43 வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே போல் தமிழ் நாட்டில் 26,274 கான்ஸ்டேபிள்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 4,685 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1963-64-ல் 163 வீடுகள் தான் கட்டப்பட்டிருக்கின்றன. மற்றவர்களெல்லாம் பழைய வீடுகளிலோ அல்லது வாடகை வீடுகளிலோ குடியிருந்து வருகிறார்கள். இப்பொழுது கான்ஸ்டேபிள்களுக்கு வீடுகள் போதிய வசதிகளுடன் கட்டப்படவில்லை. இனிமேல் கட்டுகிற வீடுகளையாவது போதிய வசதிகளுடன் கட்டித் தர வேண்டும். அவர்களுக்கு மின்சாரம் நல்ல சலுகையோடு கொடுக்கப்படு வதில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தோடு அதை நிறுத்திவிடுகிறார்கள். அவர்கள் பிள்ளைகள் எங்கே போய்ப் படிப்பார்கள் ? அவர்களுக்குத் தயவு செய்து மின்சார வசதி எப்பொழுதும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். சர்க்கார் ரேடியோ வசதி செய்து கொடுக்க முன்வராவிட்டாலும், அவர்கள் காலனியில் அவர்கள் வைத்துக்கொள்ள முன்வந்தால் அவர்களுக்கு அந்தச் சலுகையையாவது அளிக்க வேண்டும். அவர்களுடைய பிள்ளைகளுக்கு, கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகியவற்றில் சேர்ந்து படிக்க இடவசதி செய்துதர வேண்டும்,



18th March 1964] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

போலீஸ் பிரயாணப்படி பற்றி பல தடவை எடுத்துச் சொல்லியிருக் கிறேன். என்னுடைய மாவட்டத்தில் 30 நாட்கள் ஒரு போலீஸ்காரர் வேலை செய்துவிட்டு, 10 நாட்களுக்குப் படி கூட பெறமுடியாத நிலைமை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு 20 நாட்களுக்காவது படி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். " மொபைல் பார்டி " என்று போகும் பொழுது, ஒரு ஊரை விட்டு அடுத்த ரேஞ்சுக்குக் கூட போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, சர்க்காரை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். " மொபைல் பார்டி " என்று ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தினால் கூட நல்லது என்று நினைக்கிறேன். போலீஸ்காரர்கள் இருக்கிற ஒவ்வொரு இடங்களிலிருந்து 2, 3 பேர்களை மொபைல் பார்டிக்கு அனுப்பிவிட்டால்; திடீரென்று ஏதாவது அங்கே கலவரம் ஏற்பட்டால் அதை எப்படிச் சமாளிப்பது ? ஸ்டேஷனில் இருப்பவர்களை " மொபைல் பார்டி " வெளியூர் டூட்டி என்று அனுப்பிவிட்டால், மற்றபடி பாக்கி இருக்கிற ஒருவர், இருவர் என்ன செய்ய முடியும் ? ஏதாவது ஒரு பயங்கரமான கலவரம் ஏற்பட்டால் அல்லது குற்றங்கள் ஏற்பட்டால், அதைத் தடுக்க " உடனே புறப்படுங்கள் " என்று போலீஸ் ஸ்டேஷனுக்குச் சொன்னால், " இருப்பது ஒரு ரைடர், ஒரு கான்ஸ்டேபிள் தான். நாங்கள் எப்படி வெளியே வரமுடியும் ? மந்திரி பந்தோபஸ்துக்குப் போனவர்களும் திரும்பிவரவில்லை. வந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க் கிறோம், எனவே அதுவரையில் காத்திருங்கள் " என்று தான் சொல்லு கிறார்கள். வேறு வகையில் சொல்லுவதில்லை. அதற்குள் கலகமே நடந்து முடிந்துவிடும். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாதபடி செய்யவேண்டும்.

போலீஸ் நாய்ப் படை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். போலீஸ் நாய் என்று சொல்லுவது சரியல்ல. துப்பறியும் நாய் (Detective dog) என்றாவது சொல்லுங்கள். தயவு செய்து போலீஸ் நாய் என்று சொல்லுவதை மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக (Special Branch) ஷார்ட்ஹாண்டு ஸப் இன்ஸ்பெக்டர்களை எங்கள் கூட்டத்திற்கு மட்டுமல்லாமல், எதிர்க்கட்சியினர் கூட்டத்திற்கு மட்டுமல்லாமல், எல்லாக் கட்சியினரும் நடத்துகிற கூட்டங் களுக்கு நியாயமான முறையில் அனுப்ப வேண்டும். அவர்கள் எடுக்கிற குறிப்புகளைக் கவனிக்க வேண்டும்.

அதுமாத்திரமல்ல. ஒலிபெருக்கிக்கு வழங்கப்படுகிற நேரம் எங்களுக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது. ஆளும் கட்சியினருக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது. சமீபத்தில் நடந்த நகர சபைத் தேர்தல் காலத்தில் 12 மணிக்கு மேல் நாங்கள் ஒலிபெருக்கி வைத்துக்கொண்டு பேசக்கூடாது என்று சொல்லப்பட்டது. ஆனால், பல இடங்களில் அமைச்சர்களும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவரும் 3 மணி வரையில் பேசிக்கொண்டிருந்தார்கள். போலீஸ் காரர்களை அது பற்றிக் கேட்டால் " நாங்கள் என்ன செய்வது ? " என்று தான் சொல்லுகிறார்களே தவிர, வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

மேலும், " தேர்தல் காலத்தில் பணம் வாங்குகிறார்களே, நீங்கள் லஞ்ச ஊழலை அனுமதிக்கலாமா ? " என்று போலீஸ்காரர்களைக் கேட்டால், " வேண்டுமானால் நீங்களும் கொடுங்கள் " என்று அவர்கள் சொல்லு கிறார்கள். லஞ்சத்தை ஒழிப்பது அவர்கள் வேலை இல்லையா ? அவர்கள் பொறுப்பு இல்லையா ? லஞ்ச ஒழிப்புக்காக ஒரு தனி அதிகாரியே இன்றைக்கு நியமித்திருக்கிறோம். அப்படி யிருக்கும்போது " நீங்களும் வேண்டுமானால் கொடுங்கள் " என்று போலீஸார் சொல்லுவது சரியா ? இது நீதியா ? நேர்மையா ? உங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இலாகாவில் அமைச்சர்கள் அதிகாரம் இருக்கிற காரணத்தினால் தலையிடக் கூடாது. இது நீதியைப் போல, நீதியை நிலைநாட்டுகிற நிர்வாகத்தைக் கொண்டது. போலீஸ் இலாகாவில் அமைச்சர்கள் தலை யிடக்கூடாது. அப்படித் தலையிடுகிற காரணத்தினால் சாதாரணமாக இருப் பவர்கள் கூட, சாமான்யமானவர்கள் கூட " மந்திரி எனக்கு வேண்டியவர்,

இந்த ஸப் இன்ஸ்பெக்டரை 24 மணி நேரத்தில் மாற்றிவிடுவேன்" என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லலாமா? அப்படிச் சொன்னதற்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? சமீபத்தில் நடந்து முடிந்த நகர மன்ற தேர்தலில் வாக்குகளை எண்ணிய மறுநாள் 4 சப் இன்ஸ்பெக்டர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதற்கு என்ன அவசியம்? இப்படி ஆளும் கட்சிக்காக இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் எவ்வாறு தீய சக்திகள் வளராமல் இருக்கும்? அவற்றை ஒழிப்பதற்கு அரசாங்கம் என்ன செய்கின்றது? அவற்றை ஒழிக்காமலிருந்தாலும், அவற்றிற்கு ஆதரவு கொடுக்காமலாவது இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மேலும் இந்தக் காவல் துறையினருக்குப் பல வசதிகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. நா. சுப்பிரமணிய செட்டியார்: கனம் சபாநாயகர் அவர்களே இந்த போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேசவிரும்புகிறேன். இந்த ராஜ்யத்தில் போலீசாரின் பாதுகாப்பு இல்லாவிட்டால் ஒருவரும் நடமாட முடியாது. சென்ற 10 அல்லது 15 ஆண்டுகளிலே நாம் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். போலீசார் எந்த ஒரு கட்சி என்று பார்க்காமல் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். சமீபத்தில் நடந்த நகரசபைத் தேர்தல்களில் எந்தவிதமான குற்றம் குறைகளுக்கும் இடம் கொடுக்காமல் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். வீட்டிற்கு மட்டும் காவல் என்று இல்லாமல் மனிதனுக்குக் கூட அவர்கள் காவல் புரிந்துவருகிறார்கள். சுமார் ரூ. 8 கோடி செலவில் அவர்கள் இந்த பாதுகாப்புப் பணிகளைச் செய்து வருகிறார்கள் என்றால் அது மிகையாகாது.

என்னுடைய தொகுதியிலே பல பெரிய கோவில்கள் இருந்தும் சரியான முறையில் போலீஸ் பாதுகாப்பு கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. சமயபுரம் தேவஸ்தானத்தை எடுத்துக் கொண்டால் அங்கே ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வருகிறார்கள். ஒரே ஒரு கான்ஸ்டெபிளை அனுப்புவதால் அவரால் ஒன்றும் செய்வதற்கில்லை. அங்கு ஒரு போலீஸ் ஸ்டேஷனையோ அல்லது ஒரு அவுட் போஸ்ட்டையோ வைக்கவேண்டுமென்று நான் பல தடவைகளில் சொல்லியிருக்கிறேன். இப்பொழுதும் அதை வற்புறுத்த விரும்புகிறேன். இதைப்பற்றிக் கேட்டால் பக்கத்திலே இரண்டு மையிலிலே மண்ணச்சநல்லூரிலே போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. மேலும் நான்கு மைல் தூரத்தில் இன்னொரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது பெரிய தேவஸ்தானம். பல ஆயிரக்கணக்கான மக்கள் அங்கே வருகிறார்கள். மேலும் சனிக்கிழமை அன்று அங்கே சந்தை நடக்கிறது. வாரத்திற்கு 4 நாட்களில் அங்கே பெரும் கூட்டம் கூடுகிறது. ஒரு கான்ஸ்டெபிளை அனுப்பித்தால் பெரிய குற்றங்களையும், அடிக்கடி ஏற்படும் திருட்டுக் குற்றங்களையும் தடுத்துப் பாதுகாப்பு கொடுக்க முடியவில்லை. ஆகவே அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்தவேண்டுமென்று கனம் உள்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக மண்ணச்சநல்லூரில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் சென்ற 30 ஆண்டுக் காலமாக இருக்கிறது என்றாலும், அது ஒரு வாடகை கட்டிடத்தில்தான் இப்போழுதும் நடக்கிறது. ஒரு புதுக்கட்டிடத்தில் இதை அமைக்க வேண்டுமென்று, இதற்கென நிலம் வாங்கியும், அந்த நிலம் காலியாகக் கிடக்கிறது. அந்தக் காலி மனையில் இந்த ஸ்டேஷனை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் சௌகரியமாக இருக்கும். இப்பொழுது ஒரு வீட்டிற்குள் இந்த போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது. ஒரு கைதியைக் கொண்டுபோய் அடைக்கவேண்டுமென்று சொன்னாலும் வசதியில்லை. இதை உடனடியாக கவனித்து இந்த ஆண்டிலாவது புதிய கட்டடத்தை துவக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போதிய நிதி வசதியில்லை என்று சென்ற ஆண்டு சொன்னார்கள். இப்பொழுதாவது நிவாரணம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் இதை உடனடியாகக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



நான் குடியிருக்கும் ஸ்ரீரங்கத்தை எடுத்துக் கொண்டால், திருச்சி மணிக் கூண்டிலிருந்து ஹெவி பாய்லர் தொழிற்சாலைக்குப் போகும் ரோட்டிற்கு பக்கத்தில் எப்பொழுதும் நெருக்கடியாகவே இருக்கிறது. பாலக்கரையில் போலீஸ் ஸ்டேஷன் இருந்தாலும், டவுனில் போலீஸ் ஸ்டேஷன் இருந்தாலும், திருடுகளும் மற்ற குற்றங்களும் அங்கே நடைபெறுகின்றன. தீபாவளி போன்ற பண்டிகைகளின்போது இவைகள் அதிகமாக நடக்கின்றன. ஒருவர் 100 ரூபாய் கொண்டுவந்து அரிசி வாங்கவேண்டுமென்று வந்தால், திடீரென்று 100 ரூபாய் நோட்டு மறைந்துவிடுகிறது. கேஸ் போடுவதற்கு பயப்படுகிறார்கள். ஏனென்றால் அதற்கு சாட்சிகள் வேண்டும், அவர்களை சம்மன் செய்யவேண்டும் என்று எல்லாம் இருக்கிறது. ஆகவே அங்கு ஒரு போலீஸ் ஸ்டேஷனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மனுவும் கொடுத்திருக்கிறோம். ஆகவே அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷன் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும் போன் வசதியிருக்கவேண்டும். குறிப்பாக எந்தெந்த பகுதியில் போன் கனக்ஷன் இருக்கிறதோ, அங்கு எல்லாமாவது வைக்கவேண்டும். சினிமா கொட்டகையில் எப்படி போன் வைத்தால்தான் லைசென்ஸ் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்களோ, அதுபோல் ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும் போனை வைக்கவேண்டும். அப்படி வைத்தால் துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கும், போலீஸ் படையை சீக்கிரமாக சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அனுப்புவதற்கும் வசதியாக இருக்கும்.

எங்கள் பகுதியில் முசிறியில் ஒரு டிப்டி சூப்பிரண்டெண்டு இருக்கிறார். என்னுடைய தொகுதியான துறையூருக்கு வரவேண்டுமானால் ஏறத்தாழ 100 மைல் வரவேண்டியிருக்கிறது. தந்தியடித்தால் கூட உடனடியாக வருவதற்கு வாய்ப்பு இல்லை. அவருக்கு ஒரு ஜீப் கொடுத்தால் வேலையை சுலபமாகச் செய்யமுடியும்.

ஸ்ரீரங்கத்தில் ஒரு தீயணைக்கும் படை இருக்கிறது. ஆனால் எதாவது தீ விபத்து திருச்சியின் வட பகுதியில் ஏற்பட்டால் போவதற்கு காலதாமதம் ஆகிறது. 2 அல்லது 3 மணி நேரமாகிறது. ஆகவே முசிறியிலோ அல்லது துறையூரிலோ ஒரு தீயணைக்கும் படையை வைத்தால் சௌகர்யமாக இருக்கும். இன்னும் அங்கேயிருந்து சீக்கிரமாக வர வேண்டுமென்று சொன்னால், வழியில் ரயில்வே கேட்டுகளும், வேறுபல இடைஞ்சல்களும் இருக்கின்றன.

அடுத்தபடியாக ஏற்கனவே 97 ஆயிரம் குற்றவாளிகள் இருந்தார்கள். இப்பொழுது 102 ஆயிரம் ஆகிவிட்டார்கள் என்று சொன்னால், அது போலீசாரின் திறமையைத்தான் காட்டுகிறது. 1 லட்சம் என்று இருப்பதை 3 லட்சம் கேஸ்கள் ஆகப்போட்டால் இன்னும் நல்லமுறையில் இருக்கும். ஒரு சில ஏழை மக்களை தொந்திரவு செய்வதாகக் கூட சில சமயங்களில் புகார்கள் வருகின்றன. சட்டசபை அங்கத்தினர்கள் இதில் எல்லாம் தலையிடக்கூடாது. ஜாமீன் கொடுக்க நான் முன் வருகிறேன், போலீசை நான் மிரட்டுகிறேன் என்று சொல்லக்கூடாது. அவ்வாறு இங்கே உள்ள 206 அங்கத்தினர்களும் தலையிடாமல் இருந்தால் இன்னும் அதிகமான கேஸ்களைப் போட்டு மக்களுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு அளிக்க முடியும். ஒரு லட்சம் கேஸ்கள் என்பது 3 லட்சம் கேஸ்களாக உயர்ந்தால் தான் போலீஸ் அதிகாரிகள் நல்ல முறையில் கண்காணிக்கிறார்கள் என்ற நிலைமை ஏற்படும். ஒரு சிலரை விட்டுவிடுவது உண்மையிலேயே வருத்தத்தைக் கொடுக்கிறது. குற்றம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. சு. அங்கமுத்து நாயக்கர்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் பேச முன் வந்திருக்கிறேன். நமது மாநிலத்தில் நமது போலீஸ் படையினர் திறம்பட பணி ஆற்றுகிறார்கள் என்று எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் கூட ஒப்புக்கொள்வதைப் பற்றி நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

[திரு. சு. அங்கமுத்து நாயக்கர்] [18th March 1964

(திரு. டி. மார்ச்சா கவுடர் தலைமை.)

அவர்களுடைய திறமையினால்தான் இப்பொழுது நடைபெற்ற தேர்தல்கள் கூட வெற்றிகரமாக முடிந்தன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய பாதுகாப்பு இல்லாமல் இருந்தால் நாம் எந்த காரியத்தையும் நல்ல முறையில் செய்ய முடியாது. போலீஸ்காரர்களுக்கு சில வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்கு நல்ல பல காரியங்களை செய்து கொடுப்பது நமது கடமையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் கஷ்டப்பட்டு, உயிருக்கு மன்றாடும் நிலையில் அவர்களது பணிகளைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இப்பொழுது அவர்களுடைய குடும்பங்களுக்குப் போலீஸ் இலாகாவினர் சில வசதிகளை செய்துகொடுக்கிறார்கள். கைத்தொழில் போன்ற வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதன் மூலமாக போலீஸாரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் ரூ. 1 முதல் ரூ. 5 வரை சம்பாதிக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

ஆகவே போலீஸ் டிபார்ட்மெண்டினுடைய ஊக்கத்திற்கு அரசாங்கம் உதவி அளித்து நல்ல விதமான முறையிலே செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. நமது ஊழியர்களுக்கு இன்னும் பல அதிகப்படியான படியைக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வசதிகள் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். படிச் செலவை மட்டும் அதிகப்படுத்திக் கொடுத்தால் போதும் என்று நான் நினைக்கவில்லை. எவ்வளவு சம்பாதித்தாலும் மிச்சம் வைப்பவர்கள் எங்கே இருக்கிறார்கள்? குறிப்பாக சில பேரைத் தவிர மிச்சம் யாரும் வைப்பதாகத் தெரியவில்லை. தெரிந்த நண்பர்கள் கூட ரிடையர் ஆன பிறகு யாரோ, எவரோ என்று போய் விடுகிறார்கள். அவர்களைக் கவனிக்கும்படியான நிலையில் கூட அவர்கள் இல்லை. ஆனதினால் சுதந்திரத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு சலுகைகள் கொடுப்பதைப் போல இவர்களுடைய சேவைக்கும் உதவிகள் செய்தால் இவர்களுடைய சந்ததிகள் நல்லவிதமாக வாழ்க்கை நடத்த உதவியாக இருக்கும்.
10-30 a.m. பொதுவாக, தியாகிகளுக்கு கொடுப்பது போல இவர்களுக்கும் நிலம் கொடுத்தால் இவர்களுடைய சந்ததிகள் நல்லபடியாக வாழ முடியும். பிறர் கையைப் பார்க்காமல் அவர்கள் குடும்பத்தினர் வாழ்க்கை நடத்த முடியும் என்று நினைக்கிறேன். அப்படி நிலம் கொடுத்து அவர்கள் குடும்பம் வாழ அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்ய நாம் கடமைப்பட்டு இருக்கிறோம் என்பதையும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக இதை நல்லவிதமாகக் கவனித்து, இந்த உத்தியோகஸ்தர்களுக்கு தியாகிகளுக்கு வழங்கியது போல நிலம் வழங்கும் முறையை அமல் படுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மதுவிலக்கைப்பற்றி எடுத்துக்கொண்டால், அது நல்ல முறையில் நடைபெறவில்லை என்று குறை கூறப்படுகிறது. மேலும் மேலும் குற்றங்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன என்று சொல்லுகிறார்கள். இதிலே பல கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் போலீஸ் டிபார்ட்மெண்டார் நல்லவிதமான முறையில் நடக்கவில்லை என்ற பேச்சு இருக்கிறது. தவறான முறையில் செல்லும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது, பகிரங்கமாக அறிக்கை விட்டு கள், சாராயம் காய்ச்சுவேன் என்று ஒருத்தர் இரண்டு பேர் தெரிந்தோ தெரியாமலோ, செய்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நபர்களுக்கு ஜன்ம தண்டனை போன்ற தண்டனைகள் கொடுக்கக்கூடிய சட்டம் கொண்டுவந்து தண்டிக்க வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் மதுவிலக்குத் திட்டம் நல்லவிதமாக நிறைவேற முடியும். இதிலே அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தீயணைக்கும் படை இருக்கிறது. ஜில்லா ஹெட்-குவார்ட்டஸ்—இல் இருக்கிறதே தவிர, தாலூகா தலைநகரத்தில் இல்லை. ஆத்தூர் தொகுதியில் சார்வாய் கிராமம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே சில நாட்



18th March 1964] [திரு. சு. அங்கமுத்து நாயக்கர்]

களுக்கு முன்பு 39 வீடுகள் எரிந்து போய் விட்டன. நான் இங்கே சட்டசபையிலே இருக்கும்போது எனக்குத் தகவல் வந்தது. அங்கே தீயணைக்க வசதி இல்லை. அங்கிருந்து 10 மைல் நடந்து போக வேண்டும். அல்லது 3 மைல் நடந்து விட்டு பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டிருந்து ஆத்தூர் போய் போன் பண்ணினால் சேலத்திலிருந்து தீயணைக்கும் படை வரும். அது வருவதற்குள் எல்லாம் முடிந்து போய் விடும். அந்த கிராமத்தில் உள்ளவர்களே அணைத்து விட்டார்கள். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் மக்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் இந்தத் தீயணைக்கும் படையை ஒவ்வொரு தாலுகா தலைநகரத்திலும் வைத்தால் அது நல்லவிதமாக மக்களுக்குப் பயன்படும், நல்ல உதவி புரிந்ததாக இருக்கக்கூடும். ஆகவே அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து அதற்கு வேண்டிய காரியங்களை அவசியம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக இம்மாதிரி சில கிராமங்களில் ஏற்பட்டு தீயணைக்கும் படைக்கு போன் செய்தால் அது வருவதற்குள் வீடுகள் எல்லாம் சாம்பலாகிப் போய்விடுகின்றன. ஆகவே இந்த விஷயத்தில் அவசியம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பெத்தநாயக்கன்பாளையம், ஒரு பெரிய பஞ்சாயத்து. அது பெரிய இடம். அந்த இடத்தில் ஒரு போலீஸ் அவுட் போஸ்டாவது வைக்க வேண்டும் என்று இரண்டு வருஷமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அங்கே ஒரு சினிமா தியேட்டர் கூட இருக்கிறது. அடிக்கடி கலவரங்கள் வருகின்றன. ஆகவே பெத்தநாயக்கன் பாளையத்தில் ஒரு அவுட் போஸ்டை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழ் நாட்டிலேயே போலீஸ் அதிகாரிகள் முதலிடம் வகிப்பவர்கள் என்ற நல்ல பெயரை நமக்குத் தேடிக் கொடுத்த அமைச்சர் அவர்களுக்கும் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் உங்கள் மூலம் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** கனம் தலைவர் அவர்களே, போலீஸ் துறை அமைச்சர் அவர்கள் ரூ.18,20,22,000-க்கு கோரியிருக்கும் மானியத்தின் மீது எங்கள் கட்சி பிரேரேபித்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பேச்சின் துவக்கத்திலே இத்துறைக்கு என் பாராட்டுதலையும், இத்துறையில் பணி புரிந்து இறந்தவர்களுக்கு வீர வணக்கத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சமீபத்திலே நடந்த மாநகராட்சி மன்ற தேர்தல்களிலே நடந்தவைகளைப் பற்றி குற்றச்சாட்டுகள் கூறினால் அவை இந்த இலாகாவினரை சேரவில்லை என்பதை வலியுறுத்தி என் பேச்சைத் துவங்குகிறேன். நடைபெற்ற மாநகராட்சி தேர்தல்களிலும், திருவண்ணாமலை இடைத் தேர்தலிலும் போலீஸ் நிர்வாகத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்டிப்படைத்ததை எண்ணிப் பார்த்தால் நாம் வெட்கித் தலை குனிய வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம். பொதுக் கூட்டங்களில் பேசுகிற ஆளும் கட்சிக்காரர்கள் எந்த போலீஸ்காரராவது வாலை ஆட்டினால் 24 மணி நேரத்தில் தூக்கி வெளியேற்றுகிறேன் என்று தரக்குறைவாக சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. சிறிய போலீஸ் அதிகாரிகளுக்கு சவால் விடும் முறையில் மேடைகள் மீது ஏறிப் பேசினார்கள். அந்த அளவுக்கு போலீஸ் நிர்வாகம் ஆளும் கட்சியினரால் சீர்கேடு அடைய நேர்ந்து விட்டதே என்று நினைத்து ஜனநாயகத்தில் இப்படி நடக்கிறதே என்று வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது. திருவண்ணாமலை இடைத் தேர்தல் நடந்து முடிந்து, கிட்டத்தட்ட 7, 8 மாதங்கள் ஆகி விட்டன. ஆனால் அதைப் பற்றி சொல்லாமல் இருக்க முடியவில்லை. தேர்தல் முடிந்து ஓட்டு எண்ணிக்கை எடுப்பது முடிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான் வெற்றி பெற்றேன், என்று அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் நண்பர்கள் கதர்க்கொடியை எடுத்துக்கொண்டு உள்ளேவர முயன்றார்கள். இது நடந்தது உண்மையாகும். அதைத்தான் நான் சொல்லுகிறேன்.

[திரு. ப. உ. சண்முகம்] [18th March 1964

அப்பொழுது போலீஸ் அதிகாரி அவர்களை உள்ளே வர வேண்டாம் என்று தடுத்தார்கள். அவர் பெயரை இங்கே சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் காங்கிரஸ்காரர் அவரைத் தள்ளிக்கொண்டு முன்னே சென்றார். போலீஸ் அதிகாரி கீழே விழுந்தார், குழப்பம் ஏற்பட்டது. தடியடிப் பிரயோகம் நடந்தது. சென்னையிலிருந்து ஐ. ஜி. ஆல் அனுப்பப்பட்ட டி.ஐ.ஜி. வந்து விசாரணை செய்தார்கள், விசாரணையின் பேரில் குறிப்பும் அனுப்பினார்கள். சட்டசபையிலே தேமூர் திரு. கலியாணசுந்தரம் அது பற்றி கேள்வி கேட்டார்கள், பதில் சொல்லிய கனம் அமைச்சர் அவர்கள் "அப்படி ஒன்றுமே நடக்கவில்லை" என்று சொன்னார்கள் என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள், உண்மைக்குப் புறம்பாக, அதுவும் இந்த அமைச்சர் சொல்லிவிட்டாரே என்று நான் வருந்துகிறேன். நடக்கவில்லையா? என்று கேட்கிறேன். அவ்வளவு பயங்கரமான நிகழ்ச்சியை ஏன் மூடி மறைத்துவிட்டார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

என்னுடைய கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, போலீஸ் ஸ்டேஷன்கள் முழுவதும் காங்கிரஸ் கமிட்டியின் அலுவலகம் போன்று இருக்கின்றனவே தவிர, பொது நிலைமைகளைக் கவனிப்பதாக இல்லை என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று சொல்வதற்கு வருத்தப்படுகிறேன். போலீஸ் அமைச்சர் அவர்கள் வருத்தப்படலாம், அவர் இதற்காக என்னை கண்டித்தால்கூட அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். ஆனால், சொல்லவேண்டியது என்னுடைய கடமை என்று கருதிச் சொல்கிறேன். போலீஸ் துறையில் இருக்கிறவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளும் அமைச்சர்கள், அந்தத் துறையில் உள்ள உயர்தர அதிகாரிகளோடு தொடர்புகொள்வதோடு நிறுத்திக்கொள்ளவேண்டும். ஸப் இன்ஸ்பெக்டர்கள் தரத்திற்குப் போகாமல் இருப்பது நல்லது என்ற கருத்தை அருள் கூர்ந்து சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஸப்-இன்ஸ்பெக்டரைப் போனில் கூப்பிட்டு முறையில்லாமல் திட்டுவது கூடாது. அது எப்படி எனக்குத் தெரியும் என்று கேட்கலாம். யாராவது திட்டுப்பட்டவர்கள் சொல்லியிருக்கக் கூடாதா? ஏன் உங்கள் அதிகாரிகளை திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்க்கிறீர்கள் என்று நான் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். அவர்களையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகமாக்கி விடாதீர்கள். உங்களுடைய கடுமையான சொற்கள் மூலம் உங்களுடைய வெறுமையான சொற்கள் மூலம் அவர்களை மிரட்டுவதன் மூலம் திராவிட முன்னேற்றக் கழக முகாமுக்கு நீங்களாகத் துரத்திவிடாதீர்கள் என்று தங்கள் மூலமாக நான் அமைச்சர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் என்று ஒன்று வந்தால் போதும். சர்க்கார் துறையில் இரண்டு பேர்கள்தான் பயப்படுகிறார்கள். ஒன்று, பரிதாபத்திற்குரிய போலீஸ்காரர்கள். இரண்டாவது அனுதாபத்திற்குரிய ஆசிரியர்கள். இவ்விருவர்கள்தான் இந்த ஆளுங் கட்சியினருக்குக் குறியாக இருக்கிறார்கள். எங்காவது காங்கிரஸ் தோற்றுவிட்டது என்றால், "ஆசிரியர்கள்தான் தவறு செய்துவிட்டார்கள்" என்று நினைத்துக் கொண்டு ஃபுட் பால் அடிப்பதைப் போல் அவர்களை இடம் விட்டு இடம் மாற்றிவிடுகிறார்கள். திருவண்ணாமலையில் நடைபெற்ற இடைத் தேர்தலுக்குப் பிறகு 80 ஆசிரியர்கள், தேர்தலுக்கு மறு வாரம் மாற்றப்பட்டார்கள். ஃபுட் பாலை உதைப்பது போல, அவர்கள் மாற்றப்பட்டார்கள். அதே போல்தான் போலீஸ் இலாகாவில் உள்ளவர்களும். சென்னையிலே காங்கிரஸ் தோற்றுவிட்டதென்றால், அதற்குக் காரணம் போலீஸ்காரர்கள்தான் என்று பிடி பிடி என்று போலீஸ்காரர்களை மாற்றுகிறார்கள், யார் யார் கைது செய்யவில்லையோ, அவர்களை எல்லாம் வெளியே மாற்று என்று சொல்லக்கூடிய பயங்கர நிலைமை ஏற்பட்டுவிட்டது. எனக்குக் கிடைத்த தகவலை வைத்துச் சொல்கிறேன். ஆறு மணி நேரத்தில் ஒரு இன்ஸ்பெக்டரை மாற்றி மீண்டும் அவர் அதே இடத்திற்குத் திரும்பவும் போடப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொடுமை வேறு எந்த மாநிலத்தில் நடைபெறும்?



18th March 1964]

கனம் திரு. பூ. கக்கன்: கனம் தலைவர் அவர்களே, சில குண்டர்கள் சேர்ந்துகொண்டு அபேட்சகர்களாக நின்றவர்களைத் தாக்குவதைப் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரோ, போலீஸ் இன்ஸ்பெக்டரோ பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால், அப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு அரசாங்கம் நடத்த முடியுமா என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: போலீஸ் அதிகாரி தவறு செய்திருப்பாரானால், நான் அதில் குறுக்கிட விரும்பவில்லை. குறுக்கிடவும் நான் வரவில்லை. ஆனால், நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது இது தான். ஒரு இன்ஸ்பெக்டரை ஒரு ஸ்டேஷனிலிருந்து மாற்றி, அதே நபரை ஆறு மணி நேரத்திற்குள் மீண்டும் அதே இடத்திற்கு மாற்றுகின்றார்கள் என்றால், அது எந்த வகையில் நியாயம் என்று நான் கேட்கின்றேன். இப்படி நிர்வாகம் சீர்கெட்டுவிட்டது, தரம் கெட்டுவிட்டது என்று நான் குற்றம் சாட்டுகின்றேன். சிறப்புமிக்க சென்னை போலீஸ் என்று இருக்கிற பட்டப் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தி விடாதீர்கள், அதே இலாகாவில் உள்ள தூய உள்ளம் படைத்து நல்ல முறையில் பணியாற்றுகிறவர்களுடைய நெஞ்சத்தை நோகச் செய்து விடாதீர்கள் என்று போலீஸ் அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை.)

போலீஸாருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இன்னும் வெகு மந்தமாக இருக்கிறது. இத்துறையில் சீக்கிரம் காரியங்கள் முடிந்து விடும் என்று சொன்னார்கள். பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். ஆனால் போலீஸ் கான்ஸ்டேபிள்களுக்கும், ஹெட் கான்ஸ்டேபிள்களுக்கும் வீடு கட்டிக் கொடுத்து மட்டும் புண்ணியம் இல்லை, பயன் இல்லை. போலீஸ் இலாகாவில் உள்ள உத்தியோகஸ்தர்கள் டி. எஸ். பி., டி. ஒய். எஸ். பி., சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள்—எல்லோருக்கும் வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். அப்படி இல்லாத நிலையில் அவர்கள் வாடகை வீட்டில் இருக்கும்போது அதனால் பயங்கர நிலைமை வருகிறது. இதற்குப் பல இடங்களைச் சுட்டிக்காட்ட முடியும். பல முதலாளிகள் வீட்டிலோ வேறு தொழில் செய்யக் கூடியவர்கள் வீட்டிலோ இத்தகைய அதிகாரிகள் குடியிருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சர்க்காரில் எல்லாவித நிர்வாகத்தையும் வைத்துக்கொண்டிருக்கும் இலாகாவில் உள்ளவர்களுக்குச் சர்க்கார் வீடு கட்டிக் கொடுக்கக் கூடாதா? டி. எஸ். பி. போன்றவர்கள் வேறொருவர் வீட்டில் குடியிருந்தால் அவர்கள் அப்படிப்பட்டவர்களுக்குச் சலுகை காட்டாமல் இருக்க முடியுமா என்பதை யோசிக்க வேண்டும். சலுகை காட்டியதாக வதந்திகள் உலவினால் அதைத் தப்பு என்று எப்படி சொல்ல முடியும்? வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை கான்ஸ்டேபிள்களோடு நிறுத்திவிடாமல் பாக்கி இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் இது அமுலாக்கப்படவேண்டும், துரிதப்படுத்தப்படவேண்டும் என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த இலாகாவினர் மது விலக்குத் திட்டத்தை நல்ல முறையில் சிறப்பான முறையில் அமுலுக்குக் கொண்டு வருகிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இன்னும் அதைத் தீவிரமாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆனால், நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்வது உள்ளபடியே இந்த நாட்டில் மது ஒழியவேண்டும் என்ற எண்ணம் இந்த சர்க்காருக்கு இருக்குமானால், பர்மிட் முறையை ஒழிக்க ஏன் தவறிவிட்டார்கள்? சட்டத்தை இன்னும் கடினமாக ஆக்கி, பர்மிட்களைக் குறைக்கக் கூடாதா? குடிக்க பர்மிட் கொடுக்க வேண்டுமா? பணக்காரர் குடிக்கலாம், ஏழைகள் குடிக்கக்கூடாது என்ற நிலை தான் இருக்க வேண்டுமா? குடிப்பதை நான் ஆதரிக்கவில்லை. பணக்காரர்கள் குடிக்க பர்மிட் கொடுத்துக்கொண்டிருப்பது முறையா? நியாயமா? மது ஒழிய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் இப்படிச் செய்வார்களா? பர்மிட் பெற்றுக் குடிக்கிறார்கள் என்றாலும், எங்கே

(திரு. டி. சார்ச்சா கவுடர் தலைமை.)

அவர்களுடைய திறமையினால்தான் இப்பொழுது நடைபெற்ற தேர்தல்கள் கூட வெற்றிகரமாக முடிந்தன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய பாதுகாப்பு இல்லாமல் இருந்தால் நாம் எந்த காரியத்தையும் நல்ல முறையில் செய்ய முடியாது. போலீஸ்காரர்களுக்கு சில வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அவர்களுக்கு நல்ல பல காரியங்களை செய்து கொடுப்பது நமது கடமையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் கஷ்டப்பட்டு, உயிருக்கு பயமற்ற நிலையில் அவர்களது பணிகளைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இப்பொழுது அவர்களுடைய குடும்பங்களுக்குப் போலீஸ் இலாகாவினர் சில வசதிகளைச் செய்துகொடுக்கிறார்கள். கைத்தொழில் போன்ற வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதன் மூலமாக போலீசாரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் ரூ. 1 முதல் ரூ. 5 வரை சம்பாதிக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

ஆகவே போலீஸ் டிபார்ட்மெண்டினுடைய ஊக்கத்திற்கு அரசாங்கம் உதவி அளித்து நல்ல விதமான முறையிலே செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. நமது ஊழியர்களுக்கு இன்னும் பல அதிகப்படியான பாதையைக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வசதிகள் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். படிச் செலவை மட்டும் அதிகப்படுத்திக் கொடுத்தால் போதும் என்று நான் நினைக்கவில்லை. எவ்வளவு சம்பாதித்தாலும் மிச்சம் வைப்பவர்கள் எங்கே இருக்கிறார்கள்? குறிப்பாக சில பேரைத் தவிர மிச்சம் யாரும் வைப்பதாகத் தெரியவில்லை. தெரிந்த நண்பர்கள் கூட ரிடையர் ஆன பிறகு யாரோ, எவரோ என்று போய் விடுகிறார்கள். அவர்களைக் கவனிக்கும்படியான நிலையில் கூட அவர்கள் இல்லை. ஆனதினால் சுதந்திரத்தில் ஈடுபட்ட தியாகிகளுக்கு சலுகைகள் கொடுப்பதைப் போல இவர்களுடைய சேவைக்கும் உதவிகள் செய்தால் இவர்களுடைய சந்ததிகள் நல்லவிதமாக வாழ்க்கை நடத்த உதவியாக இருக்கும்.
.0-30 a.m. பொதுவாக, தியாகிகளுக்கு கொடுப்பது போல இவர்களுக்கும் நிலம் கொடுத்தால் இவர்களுடைய சந்ததிகள் நல்லபடியாக வாழ முடியும். பிறர் கையைப் பார்க்காமல் அவர்கள் குடும்பத்தினர் வாழ்க்கை நடத்த முடியும் என்று நினைக்கிறேன். அப்படி நிலம் கொடுத்து அவர்கள் குடும்பம் வாழ அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்ய நாம் கடமைப்பட்டு இருக்கிறோம் என்பதையும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் உடனடியாக இதை நல்லவிதமாகக் கவனித்து, இந்த உத்தியோகஸ்தர்களுக்கு தியாகிகளுக்கு வழங்கியது போல நிலம் வழங்கும் முறையை அமல் படுத்த வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மதுவிலக்கைப்பற்றி எடுத்துக்கொண்டால், அது நல்ல முறையில் நடைபெறவில்லை என்று குறை கூறப்படுகிறது. மேலும் மேலும் குற்றங்கள் அதிகமாகிக் கொண்டே வருகின்றன என்று சொல்லுகிறார்கள். இதிலே பல கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் போலீஸ் டிபார்ட்மெண்டார் நல்லவிதமான முறையில் நடக்கவில்லை என்ற பேச்சு இருக்கிறது. தவறான முறையில் செல்லும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது, பகிரங்கமாக அறிக்கை விட்டு கள், சாராயம் காய்ச்சுவேன் என்று ஒருத்தர் இரண்டு பேர் தெரிந்தோ தெரியாமலோ, செய்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நபர்களுக்கு ஜன்ம தண்டனை போன்ற தண்டனைகள் கொடுக்கக்கூடிய சட்டம் கொண்டுவந்து தண்டிக்க வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். அப்பொழுது தான் மதுவிலக்குத் திட்டம் நல்லவிதமாக நிறைவேற முடியும். இதிலே அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தீயணைக்கும் படை இருக்கிறது. ஜில்லா ஹெட்-குவார்ட்டர்ஸ்-இல் இருக்கிறதே தவிர, தாலூகா தலைநகரத்தில் இல்லை. ஆத்தூர் தொகுதியில் சார்வாய் கிராமம் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே சில நாட்களுக்கு முன்பு 39 வீடுகள் எரிந்து போய் விட்டன. நான் இங்கே சட்டசபையிலே இருக்கும்போது எனக்குத் தகவல் வந்தது. அங்கே தீயணைக்க வசதி இல்லை. அங்கிருந்து 10 மைல் நடந்து போக வேண்டும். அல்லது 3 மைல் நடந்து விட்டு பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டிருந்து ஆத்தூர் போய் போன் பண்ணினால் சேலத்திலிருந்து தீயணைக்கும் படை வரும். அது வருவதற்குள் எல்லாம் முடிந்து போய் விடும். அந்த கிராமத்தில் உள்ளவர்களே அணைத்து விட்டார்கள். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் மக்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் இந்தத் தீயணைக்கும் படையை ஒவ்வொரு தாலுகா தலைநகரத்திலும் வைத்தால் அது நல்லவிதமாக மக்களுக்குப் பயன்படும், நல்ல உதவி புரிந்ததாக இருக்கும். ஆகவே அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து அதற்கு வேண்டிய காரியங்களை அவசியம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதிகமாக இம்மாதிரி சில கிராமங்களில் ஏற்பட்டு தீயணைக்கும் படை வருவதற்குள் அது வருவதற்குள் வீடுகள் எல்லாம் சாம்பலாகப் போய்விடுகின்றன. ஆகவே இந்த விஷயத்தில் அவசியம் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.





பெத்துநாயக்கன்பாளையம், ஒரு பெரிய பஞ்சாயத்து. அது பெரிய இடம். அந்த இடத்தில் ஒரு போலீஸ் அவுட் போஸ்டாவது வைக்க வேண்டும் என்று ரொம்ப அவசியமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கே ஒரு சினிமா தியேட்டர் கூட இருக்கிறது. அடிக்கடி கலவரங்கள் வருகின்றன. ஆகவே பெத்துநாயக்கன் பாளையத்தில் ஒரு அவுட் போஸ்டை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழ் நாட்டிலேயே போலீஸ் அதிகாரிகள் முதலிடம் வகிப்பவர்கள் என்ற நல்ல பெயரை நமக்குத் தேடிக் கொடுத்த அமைச்சர் அவர்களுக்கும் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கும் உங்கள் மூலம் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : கனம் தலைவர் அவர்களே, போலீஸ் துறை அமைச்சர் அவர்கள் ரூ. 8,20,22,000-க்கு கோரியிருக்கும் மானியத்தின் மீது எங்கள் கட்சி பிரேரபித்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பேச்சின் துவக்கத்திலே இத்துறைக்கு என் பாராட்டுதலையும், இத்துறையில் பணி புரிந்து இறந்தவர்களுக்கு வீர வணக்கத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சமீபத்திலே நடந்த மாநகராட்சி மன்ற தேர்தல்களிலே நடந்தவைகளைப் பற்றி குற்றச்சாட்டுகள் கூறினால் அவை இந்த இலாகாவினரை சேரவில்லை என்பதை வலியுறுத்தி என் பேச்சைத் துவங்குகிறேன். நடைபெற்ற மாநகராட்சி தேர்தல்களிலும், திருவண்ணாமலை இடைத் தேர்தலிலும் போலீஸ் நிர்வாகத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்டிப்படைத்ததை எண்ணிப் பார்த்தால் நாம் வெட்கித் தலை குனிய வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம். பொதுக் கூட்டங்களில் பேசுகிற ஆளும் கட்சிக்காரர்கள் எந்த போலீஸ்காரராவது வாலை ஆட்டினால் 24 மணி நேரத்தில் தூக்கி வெளியேற்றுகிறேன் என்று தரக்குறைவாக சொல்லக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. சிறிய போலீஸ் அதிகாரிகளுக்கு சவால் விடும் முறையில் மேடைகள் மீது ஏறிப் பேசினார்கள். அந்த அளவுக்கு போலீஸ் நிர்வாகம் ஆளும் கட்சியினரால் சீர்கேடு அடைய நேர்ந்து விட்டதே என்று நினைத்து ஜனநாயகத்தில் இப்படி நடக்கிறதே என்று வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது. திருவண்ணாமலை இடைத் தேர்தல் நடந்து முடிந்து, கிட்டத்தட்ட 7, 8 மாதங்கள் ஆகி விட்டன. ஆனால் அதைப் பற்றி சொல்லாமல் இருக்க முடியவில்லை. தேர்தல் முடிந்து ஓட்டு எண்ணிக்கை எடுப்பது முடிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான் வெற்றி பெற்றேன், என்று அறிவிக்கப்பட்டது. காங்கிரஸ் நண்பர்கள் கதர்க்கொடியை எடுத்துக்கொண்டு உள்ளேவர முயன்றார்கள். இது நடந்தது உண்மையாகும். அதைத்தான் நான் சொல்லுகிறேன்.

அப்பொழுது போலீஸ் அதிகாரி அவர்களை உள்ளே வர வேண்டாம் என்று தடுத்தார்கள். அவர் பெயரை இங்கே சொல்ல நான் விரும்பவில்லை. ஆனாலும் காங்கிரஸ்காரர் அவரைத் தள்ளிக்கொண்டு முன்னே சென்றார். போலீஸ் அதிகாரி நேரே வந்தார், குழப்பம் ஏற்பட்டது. தடியடிப் பிரயோகம் நடந்தது. சென்னையிலிருந்து ஐ. ஜி. ஆல் அனுப்பப்பட்ட டி.ஐ.ஜி. வந்து விசாரணை செய்தார்கள், விசாரணையின் பேரில் குறிப்பும் அனுப்பினார்கள். சட்டசபையிலே தோழர் திரு. கல்யாணசுந்தரம் அது பற்றி கேள்வி கேட்டார்கள், பதில் சொல்லிய கனம் அமைச்சர் அவர்கள் "அப்படி ஒன்றுமே நடக்கவில்லை" என்று சொன்னார்கள் என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள், உண்மைக்குப் புறம்பாக, அதுவும் இந்த அமைச்சர் சொல்லி விட்டாரே என்று நான் வருந்துகிறேன். நடக்கவில்லையா? என்று கேட்கிறேன். அவ்வளவு பயங்கரமான நிகழ்ச்சியை ஏன் மூடி மறைத்து விட்டார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

என்னுடைய கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, போலீஸ் ஸ்டேஷன்கள் முழுவதும் காங்கிரஸ் கமிட்டியின் அலுவலகம் போன்று இருக்கின்றன என்ற, இந்த நிலைமையைக் கண்டிப்பதாக இல்லை என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று சொல்வதற்கு வருத்தப்படுகிறேன். போலீஸ் அமைச்சர் அவர்கள் வருத்தப்படலாம், அவர் இதற்காக என்னை கண்டித்தால்கூட அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். ஆனால், சொல்லவேண்டியது என்னுடைய கடமை என்று கருதிச் சொல்கிறேன். போலீஸ் துறையில் இருக்கிறவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளும் அமைச்சர்கள், அந்தத் துறையில் உள்ள உயர்தர அதிகாரிகளோடு தொடர்பு கொள்வதோடு நிறுத்திக்கொள்ளவேண்டும். ஸப் இன்ஸ்பெக்டர்கள் தாக்கீதுக்குப் போகாமல் இருப்பது நல்லது என்ற கருத்தை அருள் கூர்ந்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஸப்-இன்ஸ்பெக்டரை போனில் கூப்பிட்டு முறையில்லாமல் திட்டுவது கூடாது. அது எப்படி எனக்குத் தெரியும் என்று கேட்கலாம். யாராவது திட்டப்பட்டவர்கள் சொல்லியிருக்கக்கூடாதா? ஏன் உங்கள் அதிகாரிகளை திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்க்கிறீர்கள் என்று நான் தங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். அவர்களையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகமாக்கி விடாதீர்கள். உங்களுடைய கடுமையான சொற்கள் மூலம் உங்களுடைய கொடுமையான சொற்கள் மூலம் அவர்களை மிரட்டுவதன் மூலம் திராவிட முன்னேற்றக் கழக முகாமுக்கு நீங்களாகத் துரத்திவிடாதீர்கள் என்று தங்கள் மூலமாக நான் அமைச்சர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் என்று ஒன்று வந்தால் போதும். சர்க்கார் துறையில் இரண்டு பேர்கள்தான் பயப்படுகிறார்கள். ஒன்று, பரிதாபத்துக்குரிய போலீஸ்காரர்கள். இரண்டாவது அனுதாபத்திற்குரிய ஆசிரியர்கள். இவ்விருவர்கள்தான் இந்த ஆளுங் கட்சியினருக்குக் குறியாக இருக்கிறார்கள். எங்காவது காங்கிரஸ் தோற்றுவிட்டது என்றால், "ஆசிரியர்கள்தான் தவறு செய்துவிட்டார்கள்" என்று நினைத்துக் கொண்டு ஃபுட் பால் அடிப்பதைப் போல் அவர்களை இடம் விட்டு இடம் மாற்றிவிடுகிறார்கள். திருவண்ணாமலையில் நடைபெற்ற இடைத் தேர்தலுக்குப் பிறகு 80 ஆசிரியர்கள், தேர்தலுக்கு மறு வாரம் மாற்றப்பட்டார்கள். ஃபுட் பாலை உதைப்பது போல, அவர்கள் மாற்றப்பட்டார்கள். அதே போல்தான் போலீஸ் இலாகாவில் உள்ளவர்களும். சென்னையிலே காங்கிரஸ் தோற்றுவிட்டதென்றால், அதற்குக் காரணம் போலீஸ்காரர்கள்தான் என்று பிடி பிடி என்று போலீஸ்காரர்களை மாற்றுகிறார்கள், யார் யார் கைது செய்யவில்லையோ, அவர்களை எல்லாம் வெளியே மாற்று என்று சொல்லக்கூடிய பயங்கர நிலைமை ஏற்பட்டுவிட்டது. எனக்குக் கிடைத்த தகவலை வைத்துச் சொல்கிறேன். ஆறு மணி நேரத்தில் ஒரு இன்ஸ்பெக்டரை மாற்றி மீண்டும் அவர் அதே இடத்திற்குத் திரும்பவும் போடப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொடுமை வேறு எந்த மாநிலத்தில் நடைபெறும்?





கனம் திரு. பூ. கக்கன்: கனம் தலைவர் அவர்களே, சில குண்டர்கள் சேர்ந்துகொண்டு மறியல்காரர்களாக நின்றவர்களைத் தாக்குவதைப் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டரோ, போலீஸ் இன்ஸ்பெக்டரோ பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு அரசாங்கம் நடத்த முடியுமா என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களே சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: போலீஸ் அதிகாரி தவறு செய்திருப்பாரானால், நான் அதில் குறுக்கிட விரும்பவில்லை. குறுக்கிடவும் நான் வரவில்லை. ஆனாலும், நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது இது தான். ஒரு இன்ஸ்பெக்டரை ஒரு ஸ்டேஷனிலிருந்து மாற்றி, அதே நபரை ஆறு மணி நேரத்திற்குள் மீண்டும் அதே இடத்திற்கு மாற்றுகின்றார்கள் என்றால், அது எந்த வகையிலே நியாயம் என்று நான் கேட்கின்றேன். இப்படி நிர்வாகம் சீர்கெட்டுவிட்டது, தரம் கெட்டுவிட்டது என்று நான் குற்றம் சாட்டுகின்றேன். சிறப்புமிக்க சென்னை போலீஸ் என்று இருக்கிற பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தி விடாதீர்கள், அதே இலாகாவில் உள்ள தூய உள்ளம் படைத்து நல்ல முறையில் பணியாற்றுகிறவர்களுடைய நெஞ்சத்தை நோகச் செய்து விடாதீர்கள் என்று போலீஸ் அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை.)

போலீஸாருக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இன்னும் மிக மந்தமாக இருக்கிறது. இத்துறையில் சீக்கிரம் காரியங்கள் முடிந்து விடும் என்று சொன்னார்கள். பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். ஆனால் போலீஸ் கான்ஸ்டேபிள்களுக்கும், ஹெட் கான்ஸ்டேபிள்களுக்கும் வீடு கட்டிக் கொடுத்து மட்டும் புண்ணியம் இல்லை, பயன் இல்லை. போலீஸ் இலாகாவில் உள்ள உத்தியோகஸ்தர்கள் டி. எஸ். பி., டி. ஐ. எஸ். பி., சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள்—எல்லோருக்கும் வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். அப்படி இல்லாத நிலையில் அவர்கள் வாடகை வீட்டில் இருக்கும்போது அதனால் பயங்கர நிலைமை வருகிறது. இதற்குப் பல இடங்களைச் சுட்டிக்காட்ட முடியும். பஸ் முதலாளிகள் வீட்டிலோ வேறு தொழில் செய்யக் கூடியவர்கள் வீட்டிலோ இத்தகைய அதிகாரிகள் குடியிருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சர்க்காரில் எல்லாவித நிர்வாகத்தையும் வைத்துக்கொண்டிருக்கும் இலாகாவில் உள்ளவர்களுக்குச் சர்க்கார் வீடு கட்டிக் கொடுக்கக் கூடாதா? டி. எஸ். பி. போன்றவர்கள் வேறொருவர் வீட்டில் குடியிருந்தால் அவர்கள் அப்படிப்பட்டவர்களுக்குச் சலுகை காட்டாமல் இருக்க முடியுமா என்பதை யோசிக்க வேண்டும். சலுகை காட்டியதாக வதந்திகள் உண்டானால் அதைத் தப்பு என்று எப்படி சொல்ல முடியும்? வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை கான்ஸ்டேபிள்களோடு நிறுத்திவிடாமல் பாக்கி இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் இது அமுலாக்கப்படவேண்டும், துரிதப்படுத்தப்படவேண்டும் என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த இலாகாவினர் மது விலக்குத் திட்டத்தை நல்ல முறையில் சிறப்பான முறையில் அமுலுக்குக் கொண்டு வருகிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இன்னும் அதைத் தீவிரமாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆனால், நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்வது உண்மையிலேயே இந்த நாட்டில் மது ஒழியவேண்டும் என்ற எண்ணம் இந்த சர்க்காருக்கு இருக்குமானால், பர்மிட் முறையை ஒழிக்க ஏன் தவறிவிட்டார்கள்? சட்டத்தை இன்னும் கடினமாக ஆக்கி, பர்மிட்களைக் குறைக்கக் கூடாதா? குடிக்க பர்மிட் கொடுக்க வேண்டுமா? பணக்காரர் குடிக்கலாம், ஏழைகள் குடிக்கக்கூடாது என்ற நிலை தான் இருக்க வேண்டுமா? குடிப்பதை நான் ஆதரிக்கவில்லை. பணக்காரர்கள் குடிக்க பர்மிட் கொடுத்துக்கொண்டிருப்பது முறையா? நியாயமா? மது ஒழிய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் இப்படிச் செய்வார்களா? பர்மிட் பெற்றுக் குடிக்கிறார்கள் என்றாலும், எங்கே

குடிக்க வேண்டும்? அவர்கள் வீட்டில் குடிக்க வேண்டும். குடித்து விட்டு வெளியே வந்து, குடித்துவிட்டேன் என்று கூட்டத்திற்கா வந்து பேசுவது? குடித்துவிட்டு பொதுக்கூட்ட மேடையில் பேசுகிறார்.

“குடித்துவிட்டுப் பேசுகிறேன், பர்மிட் வாங்கிக் குடிக்கிறேன், பர்மிட்டுக்கு மேல் வாங்கிக் குடிக்கிறேன்” என்று பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். சுற்றியிருக்கும் போலீஸ்காரர்கள் அவரை ஒன்றுமே செய்ய முடியவில்லை. காரணம், அந்த நபர் சொல்கிறார், அதுவும் தைரியமாகச் சொல்கிறார், “அப்படி யாராவது போலீசார் வால் ஆட்டினால் என்னிடம் சொல்லுங்கள். தூக்கி எறிகிறேன்” என்று. எப்படிச் செய்ய முடியும்? இப்படிப் பயங்கர நிலைமை இருக்கிறது.

இன்னும் ஒரு குற்றச்சாட்டு நான் கூற விரும்புகிறேன். காங்கிரசுக்கு வோட்டு கேட்கிறார்கள் என்றால், எத்தகைய குற்றவாளியாக இருந்தாலும் மேடை ஏறி கடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்துவதா? கொலைகாரர், கொலை செய்து இருபது ஆண்டு தண்டனை பெற்றிருக்கிறார் அப்படிப்பட்டவர் 10, 11 ஆண்டுகளிலேயே சிறையை விட்டுவெளியே வருகிறார். சிறையிலே யிருந்து வெளியே வந்தவர்கள் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்குச் சட்ட விதி முறைகள் இருக்கின்றன, அதற்கு அப்பால் போய், வரம்பு மீறி, காங்கிரசுக்கு வோட்டு கேட்கிறார்களே கொலை வெறியோடு பேசுகிறார்களே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. காங்கிரசுக்கு வோட்டுக் கேட்கிறார் என்றாலும் கொலை வெறியோடு பேசுகிற கொலைகாரர்களை அரசாங்கம் விட்டு வைத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் தெரிவித்துக் கொண்டு, போலீஸ் இலாக்காவிலே பணியாற்றுகின்ற ஊழியர்களை நான் பாராட்டி, இந்த நிர்வாகத்தை நடத்துகிறவர்களை நான் கண்டிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன் என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. இ. இரா. சம்பந்தம்**: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்தப் போலீஸ் மானியத்தை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக் களை நான் சொல்ல முன்வந்துள்ளேன்.

எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்கள் பலர், போலீசாரின் சேவையைப்பற்றியும் அவர்கள் செய்யக்கூடிய சில கடமைகளைப் பற்றியும் சொன்னார்கள். குறிப்பாக, இப்பொழுது கான்ஸ்டபிள்களுடைய நிலைமை மிகவும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. கல்வி ஆண்டின் நடுவில் அவர் களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றுவதன் காரணமாக, அவர் களுடைய குழந்தைகளின் படிப்பு வீணாகின்றது. அவர்களுக்குச் சம்பளமும் குறைச்சல். அதை வைத்துக்கொண்டு, அம்மாதிரி நடுவிலே மாற்றப்படு வதனால், அவர்கள் குடும்பத்தை வைக்க முடியாமல் குழந்தைகள் பாதிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, ரயில்வே சிப்பந்தி களுக்கு ஹாஸ்டல் வைத்து நடத்துவதைப்போல், கான்ஸ்டபிள்களுடைய குழந்தைகளுக்காக ஒவ்வொரு ஜில்லாத் தலைநகரத்திலும் ஹாஸ்டல் வைத்து நடத்தும் நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, அவர்களுக்கு வரக்கூடிய குறைந்த வருவாயை வைத்துக்கொண்டு, விலைவாசி ஏறியிருக்கும் இந்தக் காலத்தில், சாமான் கள் வாங்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். இந்தச் சாமான்களை அவர்கள் க்யூ வரிசையில் நின்று வாங்க வேண்டிய நிலைமையில் அவர்கள் தங்களுடைய கடமையைச் சரிவரச் செய்ய முடியாது. ஆகையால் ரயில்வேயில் இருப்பதைப்போல், கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும். போலீஸ் சிப்பந்திகளும், என்.ஜி.ஓ.க்களும் சேர்ந்து கூட்டுறவு சங்கங்கள் அமைத்து, அதில் சில அத்தியாவசியமான பண்டங்களை வைத்து விற்பனை செய்தால்தான் அவர்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்ய முடியும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.





குடி தண்ணீர் இல்லாமல் சில இடங்களில் போலீஸ் லைன்களில் உள்ளவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். தரங்கம்பாடியில் காசு கொடுத்துக் குடி தண்ணீர் வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இம் மாதிரி இன்னும் பல இடங்களில் இருக்கிறது. பல இடங்களில் லைட் வசதி இல்லை. இந்த நிலைமைகள் எல்லாம் உடனடியாக மாற்றியமைக்கப் படவேண்டும். கட்டடங்கள் எல்லாம் சரியாகப் பழுது பார்க்கப் படாத நிலையில் இருக்கின்றன. குறிப்பாக, சென்ற மழையில் தரங்கம்பாடியில் சப்-இன்ஸ்பெக்டர் வீட்டில் தண்ணீர் நிற்கக்கூடிய நிலைமையில் அவர்கள் பக்கத்தில் இருக்கும் தாலுக்கா ஆபீசில் போய், குழந்தை குட்டிகளுடன் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதையெல்லாம், உடனடியாக நாம் கவனிக்கவேண்டும். போலீசார்களுக்காக எவ்வளவோ பட்ஜெட்டில் தொகை ஒதுக்கியிருந்தும், இத்தகைய வசதிகளைச் சரிவர செய்யாததன் காரணமாக அவர்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கான்ஸ்டபிள்களுக்கு எல்லாம் ஸைக்கிள் வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏற்கனவே, போலீ சாருக்கோ அல்லது சர்க்கார் அதிகாரிகளுக்கோ பஸ்ஸில் போவதற்குத் தனிச் சலுகை கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது அந்த நிலை மாறி விட்டது. 40 பாஸஞ்சர்கள் தான் ஏறலாம், அதற்கு மேலே ஒரு நபரைக் கூட ஏற்ற முடியாத நிலைமை இருப்பதால், கான்ஸ்டபிள்கள் தங்களுடைய கடமையைச் செய்வதற்காக ஓடோடி வந்தும் கூட, பஸ்ஸில் போக முடியாத நிலைமையில் சில சமயங்களில் கஷ்டப்படுகிறார்கள். கான்ஸ்டபிள் களுக்கு ஒரு சைக்கிள் கொடுத்தால், அவர்கள் மது விலக்குக் குற்றம் செய்கிறவர்களைக் கண்டுபிடிக்க ஏதுவாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கான்ஸ்டபிள்களின் படியை உயர்த்த வேண்டும். அவர்கள், வெளியி லிருந்து வரக்கூடிய தலைவர்களுக்கோ, அமைச்சர்களுக்கோ, மற்றுமுள்ள பிரமுகர்களுக்கோ பந்தோபஸ்து அளிக்கக்கூடிய வேலைக்குப் போகும் போது சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. இலங்கையில் இம்மாதிரி பந்தோபஸ்து வேலையில் கான்ஸ்டபிள்கள் இருக்கும்போது, அவர்களுக்கு உணவு அளிக்கப் படுகிறது. அவர்கள் எந்த இடத்தில் வேலை செய்கிறார்களோ அந்த இடத்தில், மத்தியானமானாலும், இரவு நேரமானாலும், நேரத்திற்கு அவர்களுக்கு உணவு அளிக்கப்படுகிறது. அதுபோல், பந்தோபஸ்து வேலை பார்க்கும் நம்முடைய போலீஸ்காரர்களுக்கும் உணவு அளிக்கும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சப்-இன்ஸ்பெக்டர்களுக்கெல்லாம் வாகன வசதி இல்லாமல் இருக்கிறது. அதனால் குற்றவாளிகளைப் பிடிப்பதில் சிரமம் இருக்கிறது. சமுத்திரக் கரைப் பக்கத்தில் காரைக்கால் இருப்பதால், அங்கிருந்து நிறைய மது மற்ற பகுதிகளுக்குக் கொண்டுவரப்படுகிறது. அதை சப்-இன்ஸ்பெக்டரால் தடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. காரணம் “க்விக் கன்வேயன்ஸ்” இல்லை. அவர்களுக்கு மோட்டார் சைகிள் கொடுக்கும்படியான நிலைமை ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு டி.ஒய்.எஸ்.பி. க்கும் ஜீப் கொடுக்கப்பட வேண்டும். அப்படி இருந்தால்தான் அந்த டிவிஷனில் சுற்றி, எந்த விதமான கலவரம் ஏற்பட்டாலும் உடனடியாகத் தவிர்க்க முடியும்.

கான்ஸ்டபிள்களுக்கெல்லாம் எப்படி க்வார்ட்டர்ஸ் கட்டிக்கொடுக்கப் பட்டிருக்கிறதோ அப்படி சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். பிறர் வீட்டில் வாடகைக்கு இருக்கவேண்டியதன் காரணமாக, பிறருடைய தயவு தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட்டு, வீட்டுக் காரர் சொல்வதை வைத்துக்கொண்டு, சப்-இன்ஸ்பெக்டர்கள் சில சமயங் களில் தங்களுடைய கடமைகளிலிருந்து தவறக்கூடிய சூழ்நிலை ஏற் படுகிறது. அதையும் மாற்றியமைக்க வேண்டும். கிராமத்தில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு டெலிபோன் வசதி இருக்க வேண்டும். அது இல்லாத காரணத்தினால் உடனடியாக ஸ்பாட்டில் இருந்து அவர்களுக்கு இன்பார்ம் பண்ண முடிவதில்லை.

அடுத்தபடியாக மதுவிலக்கு சட்டத்தைத் அவர்கள் முடிந்த அளவுக்கு நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். போலீஸ்காரர்களிலேயே சில கான்ஸ்டபிள்களும், இன்ஸ்பெக்டர்களும் குடிப் பழக்கத்திற்கு ஆளாகியிருப்பதால் அவர்களை எவ்வாறு தண்டிப்பது என்றுதான் தெரியவில்லை. வேலியே பயிரை மேய்வது போல இருக்கிறது. இப்படிப்பட்டவர்களை வேறு ஸி.ஐ.டி. செக்ஷனுக்காவது மாற்றிவிடவேண்டும்.

இன்னும் கோர்ஹோம் உடனடியாக ஒவ்வொரு முனிஸிபாலிட்டியிலும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். மிக்க வியாதி உடையவர்கள் வெளியில் உலாவுவதால் பொதுமக்களுடைய சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. மேலும் டிபிள் பாடீட் ப்ப்பிளுக்கு நல்ல கைவேலைகள் கற்றுத்தரப்பட வேண்டும்.

இன்னும் ஸி.ஐ.டி. பிராஞ்சில் உள்ளவர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கப்படவேண்டும். ஸ்காட்லண்டு யார்டை எடுத்துக் கொண்டால் கொலைக் குற்றங்கள் நடந்த ஒரு சில மணிநேரத்தில் கண்டுபிடித்து விடுகிறார்கள். ஆனால் இங்கே இரண்டாண்டு, மூன்றாண்டு ஆகிறது ஒரு குற்றத்தைக் கண்டுபிடிக்க. ஆனாலும் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்துவிடுகிறார்கள். குறிப்பாக மாயவரம் கிருஷ்ணசாமி அவர்களுடைய மகனை தலை வேறு உடல்வேருக வெட்டி இரண்டையும் தனித் தனியாக இரண்டு குளத்தில் போட்டு இருந்தார்கள். குற்றவாளியைக் கண்டுபிடிக்க ஒன்றரை ஆண்டு காலம் ஆயிற்று. ஆகவே ஸ்காட்லாண்டு யார்டில் கையாளப்படுகின்ற முறைகளைக் கொண்டு வந்தால் இன்னும் குற்றங்களை சீக்கிரத்தில் கண்டுபிடிக்க வசதியேற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் இருக்கும் நிலைமையில் பப்ளிக் ரிலேஷன் ஷிப் நன்ருக இருக்கிறது. போலீசாருக்குத் தெரிவித்தால் உடனே நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் இருக்கிறது. அந்த நம்பிக்கை மேலும் மேலும் வளரத் தக்க வகையில் போலீஸ் இலாகா திறம்பட பணியாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. இராம. அரங்கண்ணல்** : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குக் கண்ணுகவும், சில வேளைகளில் காதாகவும், பல சமயங்களில் கையாகவும் பயன்படுகிற இந்த முக்கியமான இலாகாவைப் பற்றி என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். அந்த வெட்டுப் பிரேரணைகளைப் பார்த்தாலே, இந்த இலாகா இன்னும் எவ்வளவு திறம்பட நடக்க வேண்டும் என்பதிலே நாங்கள் கொண்டுள்ள அக்கறையும் ஆர்வமும் நன்ருக விளங்கும்.

இன்றைய தினம் போலீஸ் துறையினர் நம் மாநிலத்தில் மட்டுமின்றி நாக நாட்டிலும், மேல் வங்கத்திலும் நல்ல புகழோடு, திறமையோடு பணியாற்றுகிருர்கள் என்று கேள்விப்படுகிற நேரத்தில் நம் மாநிலத்தில் உள்ள அதிகாரிகள் தங்களுக்கு எத்தனையோ இடையூறுகளும், சுமைகளும் ஏற்படுகின்றன என்ருலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் தங்களுடைய உயர்ந்த பண்பையும், பரம்பரைச் சிறப்பையும் காப்பாற்றிக் கொண்டு வருகிருர்கள் என்பதற்காக நாம் பெருமைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் சுமார் 3½ கோடி மக்கள் இருக்கிற இந்தப் பகுதியில் 30 ஆயிரம் போலீசார்கள் மிகவும் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிருர்கள் என்பதைப்பற்றி இந்த மன்றத்தில் உள்ள எல்லாத் தரப்பினரும் பாராட்டி இருக்கிருர்கள். அப்படி நம்மால் பாராட்டுப் பெறுகிற காவல் துறையினர் இன்றைய தினம் ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்பு சாதாரண பொறுப்பு அல்ல. எத்தனையோ ஆபத்துக்களிடையே அவர்கள் பணியாற்றி வருகிருர்கள். அவர்களுக்குச் செய்து தர வேண்டிய வசதிகளைப் பற்றி சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நானும் முக்கியமான இரண்டொன்றைப் பற்றிப் பேச விரும்புகிறேன்.

அவர்களுக்கு வீட்டு வசதி அதிகமாகச் செய்து தரப்படவேண்டும். சம்பள வகையிலும் அதிகமாக்கப்பட வேண்டும். அதேபோல பொறையாறு உறுப்பினர் சொன்னது போல, காவல் துறையினர்களுக்கு





சைக்கிள் கொடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இன்றைய தினம் ஒரு காவல் நிலையத்திற்கு 2 சைக்கிள்தான் கொடுக்கப்படுகிறது. இந்த இரண்டு சைக்கிள் போதாது. ஏற்கனவே ஒவ்வொரு போலீஸ்காரருக்கும் சைக்கிள் வாங்க கடன் உதவி செய்யப்படும் என்று உத்தரவு போட்டதாகவும், அவர்கள் மனுக்கள் விண்ணப்பித்துக்கொள்வதற்குள் அதை ரத்து செய்துவிட்டதாகவும் அறிகிறேன். அப்படியின்றி அவர்களுக்கு சைக்கிள் வசதி பெற கடன் உதவி செய்யவாவது அரசாங்கம் உடனடியாக முன்வரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அது போல சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைக்கிள்—ஸ்கூடர் வழங்கப்படுவது அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமின்றி இரவு பகல் பாராமல் பணியாற்றிக்கொண்டிருக்கிற போலீஸ் அதிகாரிகளுக்கும், அவர்களுடைய பொந்திகளுக்கும் கட்டாய ஓய்வு, ஆண்டுக்கு ஒரு மாதம் வழங்கப்பட வேண்டியது அவசியம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமின்றி உடையைப் பொறுத்த அளவில் பார்த்தால் அதிலும் கூட மாற்றம் அவசியமென்று கருதுகிறேன். முன் ஒரு காலத்தில் இருந்த உடை தான் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவில், இங்கிலாந்தில் போலீஸ்காரர்களின் உடையில் எவ்வாறு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதோ அது போல இங்கும் ஏற்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காவல் துறையினரைப் பொறுத்த வரையில் பார்த்தவுடன் பொதுமக்களுக்கு ஒரு மரியாதையும், அச்சமும் வரவேண்டுமென்ருல் உடை நல்ல முறையில் அமைய வேண்டும். உடை மாற்றப்படுமேயானுல் படித்தவர்கள், ஏராளமாகச் சேர முன் வருவார்கள்! அதோடு, அவர்கள் காலுக்கு கட்டுகிற பட்டைகூட மாற்ற வேண்டும் அதற்குப் பதிலாக வேறு ஏதாவது ஒரு மார்க்கத்தைக் கண்டுபிடித்தால் கூட நன்ருக இருக்குமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமின்றி எங்களுடைய சொற்பொழிவுகளைக்கேட்பதற்கு அமைச்சர்களுக்கு வர வாய்ப்பு இல்லாத காரணத்தினுல் போலீஸ் சுருக்கெழுத்தாளர்களை அனுப்புகிருர்களோ என்னவோ? அவர்களை ஆதரித்துப் பேசுகின்ற பேச்சைக் கேட்பதற்கு விருப்பம் இல்லை போலும். அங்கே சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுவதில்லை. எங்கள் கூட்டங்களுக்கு அவர்கள் வருகிருர்கள் என்ருல் திரும்பிப் போகிறபோது இரவு பத்து மணிக்குமேல் வாகன வசதி எதுவும் இன்றி அவர்கள் படுகிற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. ஆகவே இப்படி எதிர்க்கட்சியினர் கூட்டங்களுக்குப் போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படும்போது அவர்கள் இரவு திரும்புவதற்கு வாகன வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையில் "ஃபிங்கர் பிரிண்ட் டைரக்டர்" என்று வைத்திருக்கிறோம். அவருக்கு இன்ஸ்பெக்டர் சம்பளந்தான் கொடுக்கப்படுகிறது. அதோடு ஃபிங்கர் பிரிண்ட்ஸ் எக்ஸ்பர்ட்ஸ்களுக்கும் சம்பளம் குறைவாக இருக்கிறது. அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு இன்ஸ்பெக்டர்களை எல்லாம் "கெஜெடெட் ஆபீசர்களாக ஆக்க வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தக் குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லுகிற காரணத்தால் போலீசாருக்குப் பரிந்து பேசுகிறேன் என்று பொருள் அல்ல. போலீசாருக்குப் பரிந்து பேசி அவர்களுடைய ஆதரவைத் தேட வேண்டிய அவசியமும் இல்லை. அரசாங்கங்கள் வரலாம்; போகலாம். ஆனல் என்றைய தினமும் அதிகாரிகள் அந்த இடத்திலேதான் இருப்பார்கள். அவர்கள் கட்சி சார்பற்ற முறையில் தங்களுடைய பணிகளைச் செய்து வரவேண்டுமென்பதிலே நாங்களும் எங்களுடைய கட்சியும் அக்கறை கொண்டிருக்கிறது.

இன்றைய தினம் வளர்ந்து வருகிற குற்றப்பட்டியல்களைப் பார்த்தால் நமக்கு மிகவும் அச்சமாக இருக்கிறது. மதுவிலக்குத் துறையிலே பார்த்தால் குற்றங்களின் எண்ணிக்கை 1960-லே அறுபத்தொன்பதாயிரத்துச் சொச்சமாக இருந்தது; 1961-லே எண்பத்தி நாலாயிரத்துச் சொச்சமாக

உயர்ந்தது ; 1962-லே 97,329 ஆக உயர்ந்தது ; 1963-லே 102,969-ஆக இருக்கிறது. அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே 5·8 சதவிகிதம் மதுவிலக்குக் குற்றங்கள் அதிகரித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதோடு நாம் எல்லாம் வெட்கப்படுகிற அளவிலே காவல் துறையிலேயே உள்ள சப் இன்ஸ்பெக்டர் சாராயம் காய்ச்சுவதாக அறிக்கை விட்டார். அதற்குக் காரணம், மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிக்கப்போன போலீஸ்காரர்கள் ஆற்றிலே தள்ளப்பட்டு இறந்ததுதான் என்று கூறியிருக்கிறார். நம்மிலே பலருக்குத் தெரியும், இன்றைக்கு மது விலக்கு எந்த நிலையிலே இருக்கிறது என்பது. மது விலக்கு தீவிரமாக அமலாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், சமுதாயத்தை உருவாக்கக் கூடியவர்களாக இருக்கின்ற அமைச்சர்களும், எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து சர்வ கட்சிக் கமிட்டி ஒன்று அமைத்து செயல்பட வேண்டும். இதற்கு முன்பே மாவட்டவாரியாக ஒரு சர்வ கட்சிக் கமிட்டி இருந்ததாகச் சொல்கிறார்கள். அந்தந்த வட்டத்திற்கு சர்வ கட்சியினரைக் கொண்ட ஒரு கமிட்டி இருக்க வேண்டும். அப்படி ஒரு கமிட்டி சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே இருக்கிறதா இல்லையா என்பது எனக்கே தெரியாது.

வெள்ளையன் உண்டாக்கின இந்த இலாகா நாட்டிலே பாதகங்கள் ஏற்படாமல் பாதுகாப்பதற்காக அமைந்தது. ஆனால் பிறகு இந்த இலாகா அரசியல் காரணங்களுக்காக அரசியல்வாதிகளைத் தண்டிப்பதற்கும், கண்டிப்பதற்கும் உள்ளதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெற்று 15 ஆண்டுகளுக்குப் பிறகு குற்றங்கள் குறைந்திருக்கின்றனவா என்றால் இல்லை. இந்த இலாகாவைத் தங்களுடைய அரசியல் ஆதாயங்களுக்குப் பயன்படுத்துகிற காரணம் நமது காங்கிரஸ் அமைச்சர்களிடத்திலே, அவர்களுடைய ஆட்சியிலே குறைந்திருக்கிறதா என்றால் இல்லை ; வளர்ந்து கொண்டே வருகிறது. நம்முடைய கனம் போலீஸ் அமைச்சர் அவர்கள், "யாரோ வேட்பாளனைத் தாக்கச் சென்றார்களாம் ; அதைப் பார்த்துக் கொண்டு நின்றாராம் ஒரு இன்ஸ்பெக்டர்" என்று கூறினார்.

**கனம் திரு. பூ. கக்கன் :** ,பார்த்துக் கொண்டு நின்றாராம், என்று நான் சொல்லவில்லை. "ஆக்ஷன் எடுக்காமல் அப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு என்ன செய்வது ?" என்று தான் சொன்னேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** "அப்படிப்பட்டவர்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது ?" என்று சொன்னார். அந்தப் பொறுப்புணர்ச்சியை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். யார் கடமையிலிருந்து தவறி இருந்தாலும் அதைக் கண்டிப்பது சுதந்திர ஆட்சியில் வந்த அமைச்சர்களுக்கு இருக்க வேண்டும். ஆனால் எத்தனை புகார்கள் தரப்பட்டன ? அவற்றில் எத்தனை புகார்களின் பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ? இதோ, வைத்திருக்கிறேன் பட்டியல்களை ! "ஒரு வேட்பாளனைத் தாக்கச் சென்றார்கள் ; பார்த்தார்கள்" என்று சொன்னார்கள். நான் சட்டமன்ற உறுப்பினன். நான் சாதாரணமானவனாக, சாமான்யனாக இருக்கலாம். அமைச்சர்களுடன் அடிக்கடி தொடர்பு கொள்ளுகிறார்களே மாஜிகள். அவர்களைப் போல் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நான் அன்பும் பண்பும் கொண்டவன். என்னையே கொல்வதற்காக முயற்சித்தார்களே ! என்னைக் கொல்ல வந்தவரிடத்தில் "நீங்கள் காங்கிரஸ்காரரா" என்று கேட்டுவிட்டு இரு கரம் கூப்பி வணங்கி அவருடைய விருப்பப்படி செய்யும்படி கூறினேன். இதைக் கேள்விப்பட்டு அந்த வட்டார காங்கிரஸ் வேட்பாளர் என்னிடம் வந்து வருந்தினார். அவரோடு போலீஸ் நிலையத்திற்குச் சென்றேன் ; அங்கே இதைப்பற்றிப் புகார் செய்தேன். இது வரை இதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? நான் அங்கே உட்கார்ந்திருந்த போது ஒரு போலீஸ்காரர், கைப்பற்றப்பட்ட வெட்டரிவாளைக்கூட போலீஸ் அதிகாரிகளிடம் கொடுத்தார். இதுவரை அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்க ஆசைப்படுகிறேன். மயிலாப்பூர் தொகுதியைப் பொறுத்த மட்டில் தேர்தல் நடக்க இருக்கின்ற தேதி 22-ம் தேதி ; ஆனால் 13-ம் தேதியன்று வேட்பாளரை—இன்றைய தினம் கவுன்சிலராக இருக்கின்ற திரு. துளசிங்கம் என்பவரை "லாக் அப்பில்" கொண்டு போய் அடைத்து வைத்தார்கள். அவர் என்ன குற்றம் செய்தார் ? அவரைக் கொண்டு போய்ப் பூட்ட வேண்டிய



அவசியம் என்ன ? அமைச்சர் அவர்கள் இதை விளக்குவார்களா ? என்று அறிய விரும்புகிறேன். மயிலாப்பூர் 86-வது வட்டத்தில் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளருக்குத் துணையாக எம். கே. கோவிந்தராஜு என்பவர் இருந்தார். அவர், வேட்பாளருக்கு மிக மிகத் தேவையானவர். அவரைப் பூத் ஏஜெண்டாகப் போட்டிருந்தார்கள். அவரைத் தேர்தலுக்கு முதல் நாள் திடீரென்று கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன ? காவல் நிலையத்திற்குச் சென்று அவரை ஜாமீனில் கொண்டு வந்தேன். இந்தச் செய்தியெல்லாம்கூட, சாதாரணமான நிகழ்ச்சி கூட உடனுக்குடன் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. யார் இதற்காக முதலமைச்சர் அவர்களை அணுகினார்கள் ? நான் முதல் நாள் இரவு அழைத்து வருகிறேன் ; மறு நாள் காலையில் அவரை மறுபடியும் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் நான் கூறியதைக் குறிப்பிட்டார்கள். எனக்குக் கிடைத்த தகவல் எல்லாம் போலீசார் மூலந்தான். அமைதியை நிலை நாட்ட வேண்டுமென்பதன் நிமித்தம் சிலரைக் கைது செய்தார்கள். அப்போது கனம் அங்கத்தினர் என்று நினைக்கிறேன்—என்னிடம் வந்து போலீங் ஏஜண்டாகப் போட்டிருக்கிறவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று என்னிடம் வந்து கேட்டார்கள். போலீசாரும் விடுதலை செய்கிறோம் என்று சொன்னார்கள். அப்படித்தான் அந்தத் தகவல் எனக்குத் தெரிந்தது. அதற்குப் பிறகு அதே போலீசிடமிருந்து, யாரைக் கனம் அங்கத்தினர் அவர்கள் விடுதலை செய்ய வேண்டுமென்று கூறினார்களோ அவர்களை விடுதலை செய்தபிறகு, அவர்கள் மறுபடியும் பலாத்காரத்தில் இறங்கிய காரணத்தால் விடுதலை செய்தவர்களை மறுபடியும் கைது செய்தார்கள். அன்று நான் இதைக் கூறிய போது கனம் அங்கத்தினர் அவர்கள் மறுக்கவில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் ;** முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை வரவேற்கிறேன். கட்சிக்காரர்கள் அணுகமுடியாத அளவுக்கு அவர்கள் இருக்கவேண்டுமென்பது நான் என்னுடைய ஆசையாகும். அப்படி இருக்கிறார்கள் என்றால் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் மறுநாள் தேர்தல் நடக்க இருக்கும் போது காலையில் 8½ மணிக்கெல்லாம் அவரைப் பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள். அதனாலே 116 வோட்டுகளிலே எங்கள் கட்சி வேட்பாளர் தோற்க நேர்ந்தது.

81-வது வட்டத்தில் தேர்தல் கமிட்டித் தலைவராகயிருந்த இலக்குவன் என்பவரையும், துணைமன்றச் செயலாளர் மோகன் என்பவரையும் செல்லக்குட்டி எனும் இன்னொரு தோழரையும் அதே 21-ம் தேதி பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். நான் சென்று இவர்களை ஜாமீனில் அழைத்து வந்தேன். அவர்களை, தேர்தல் நடந்த மறு நாள் மறுபடியும் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். 83-வது வட்டத்தில் நன்றாகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஏழுமலை என்பவரையும் பிடித்துக் கொண்டு போய் அடைத்தார்கள். 84-வது வட்ட வேட்பாளர் கோவிந்தசாமி என்பவரையும் தேர்தலுக்கு மூன்று நாள் முன்னதாக இருந்து என்னுடைய வீட்டிலேயே என்னுடைய பாதுகாப்பிலேயே வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வெற்றி பெற்ற பிறகும் என்னுடைய பொறுப்பிலேயே வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், எப்படியோ யாருடைய பேச்சுக்கள் எல்லாம் உத்தரவுகளாகக் கருதப்படக்கூடிய நிலைமை இருந்தது. என்னுடைய தேர்தலின்போதே நான் பல பிரச்சினைகளைப் பார்த்திருக்கிறேன். அதனால் நான் போலீஸ் அதிகாரியிடம் யோசனை சொன்னேன். காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் ஆகியவர்களைக் கூப்பிட்டு—அந்த கூட்டத்திற்கு நான் கூடத் தலைமை தாங்கவில்லை ; அந்தப் பகுதியில் உள்ள முன்னாள் எம்.எல்.எ. தலைமையில் கூடி தேர்தலைப் பொறுத்து ஒரு "மாரல் கோடு" வைத்துக் கொள்ளலாம் என்ற வேண்டுகோளை நான் விடுத்தேன். நேரிலும் சொன்னேன். ஆனால் அதை அவர்கள் செய்ய முன்வரவில்லை. தேர்தலுக்குப் பிறகு அங்கே சண்டை, இங்கே சண்டை என்ற நிலைமைகள் இருந்தபோது கூட இன்ஸ்பெக்டரிடம் அது பற்றி எடுத்துச் சொன்னேன்.

இப்போதாவது எல்லோரையும் கூப்பிட்டு பேசுங்கள் என்று சொன்னேன். ஒரு நாள் இரவு 11 மணிக்கு இதைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். நான் சாதாரணமாக போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்கிறவனும் அல்ல போலீஸ் அதிகாரிகளிடம் எதையும் கேட்பவனும் அல்ல. ஆனால் இது பொதுமக்கள் காரியம் என்பதாலே நான் போய்ச் சொன்னேன். சில பேர் அப்போது வந்தார்கள். "வாங்க அண்ணாச்சி" என்று சொல்லி இன்ஸ்பெக்டர் உட்கார வைத்தார். அந்த இன்ஸ்பெக்டரைத்தான் இப்போது மாற்றியிருக்கிறார்கள். இ. 3-ல் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரை ஆறு மணி நேரத்திற்குள் மாற்றியிருக்கிறார்கள். அங்கே ஒரு காங்கிரஸ் காரர் அவருடைய விருப்பங்கள்தான் உத்திரவுகளாகின்றன. "விஜிலன்ஸ் டைரக்டர்" என்று ஒருவரை அரசு போட்டிருக்கிறது. அவர்களிடம். . . (மணி அடிக்கப்பட்டது).

* **திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இந்த முறை எதிர்கட்சிக்காரர்கள் ஒரு புது முறையைக் கையாண்டிருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இலாகாவைப் புகழ்ந்து பேசுவதுமாதிரி பேசி ஆளும் கட்சியையும், அரசாங்கத்தையும் பயமுறுத்தி சலுகைகள் பெறலாம் என்ற முறையில் இந்த மான்யத்தின் மீது விவாதம் நடைபெறுவதைப் பார்க்கும்போது அதன் உள் கருத்தைப் புரிந்து கொள்ள கஷ்டமாக இருக்கிறது. எனக்கு முன் பேசிய எதிர்கட்சி அங்கத்தினர்கள் அனைவரும் இலாகா சிறந்தது, குறை இருக்கிறது என்றால் அமைச்சரவையிடமும், ஆளும் கட்சியிடமும்தான் இருக்கிறது என்று பேசுவதைப் பார்க்கும் போது எங்களுக்கும் ஒரு சில வருத்தங்களைக் கூற வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றுதான் யோசிக்க வேண்டியிருக்கிறது. நகரசபைத் தேர்தலை மிகத் திறமையான முறையில் நடத்தியது போலீஸ் இலாகா. இதற்கு முன்பு நடத்தப்பட்ட தேர்தல்களிலாவது சிறிது குறைகள் இருந்திருக்கலாம் என்று சொல்லலாம். ஆனால் இந்த தடவை மிகத் திறமையாக நடத்தினார்கள். அந்தத் திறமையை ஓரளவு குறைக்க வேண்டுமென்றுதான் எதிர்கட்சியினர் தலையிட்டு, இப்படி நடத்தினார்களோ என்று சிந்தித்துப் பார்க்கும் போது இது ஜனநாயகத்திற்கு உகந்தது தானா என்று சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறோம். சாதாரணமாக தேர்தலுக்கு முன்னால் கே. டி. லிஸ்டில் உள்ள ரௌடிகளை அடைத்து வைத்து கலகம் இல்லாமல் பார்த்துக் கொள்ள போலீஸ் முயல்கின்றனர். அந்த அளவில் சென்னை நகரசபைத் தேர்தல் வந்த போது சில கேடிகளைப் பிடித்தார்கள் என்றால் அவர்கள் எல்லாம் எங்கள் போலிங் ஏஜெண்ட்கள், ஆகவே அவர்களை வெளியே விட வேண்டும், இல்லையென்றால் உண்ணாவிரதம் இருப்போம், சத்தியாக்கிரகம் செய்வோம் என்ற முறையில் எதிர் கட்சியினர் நடந்தால் ஜனநாயகத்தை நடத்தி வருகிறார்களா அல்லது மாபாக்ரஸியை அமுல் நடத்திக் கொண்டிருக்கிறார்களா ?

**திரு. இராம. அரங்கண்ணல் :** நான் பேசுகிறபோது குறிப்பிட்டேன். என் கட்சித் தோழர்கள் என்று சொன்னேன். அம்மையார் அவர்களை ரௌடிகள் என்று அழைத்தால் அது அவர்களுக்கு நல்லதல்ல.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போலீசார் கைது செய்வதற்கு என்ன காரணம் என்று அம்மையார் சொல்கிறார்கள்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** அவர்கள் கட்சித்தோழர்களாக இருக்கலாம்! ஆனால்அவர்கள் ரௌடிகள் லிஸ்டில் இருப்பதை கனம் அங்கத்தினர் எப்படி மறுக்கமுடியும் ? அவர்கள் உங்கள் கட்சிக்கு பயமுறுத்தி வோட்டு வாங்கிக் கொடுக்கும் வலது கரங்களாக இருக்கலாம். அந்த லிஸ்டில் இல்லாதவர்களை போலீஸ் பிடிப்பது கிடையாது. அப்படி அவர்கள் லிஸ்டில் இருக்கும்போது அவர்கள் தவறு செய்வார்கள் என்று கைது செய்து மக்கள் தங்கள் வாக்குரிமையை நல்ல ஒழுங்கான சூழ்நிலையில் போட வேண்டுமென்று செய்கிறார்கள். அப்படிச் செய்யும்போது ரௌடி லிஸ்டில் உள்ளவர்களை எங்கள் கட்சித் தோழர்கள் மட்டுமல்ல, அவர்கள்தான் எங்கள் போலிங் ஏஜெண்ட்ஸ் என்று சொல்லும் விதத்தில் அரசியல் கட்சிகள் இந்த நாட்டில் இருந்தால் இந்த நாட்டில் உண்மையிலே மக்கள்



ஆட்சி மலருமா என்பதினால்தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். ரௌடிகள் வெளியே விடப்பட்டு, மறுநாள் காலையில் விடப்பட்டு அவர்களின் ஒழுங்கீனமான நடவடிக்கைகள் காரணமாக பல நல்லவர்கள் வோட்டுச் சாவடிக்குப் போக முடியாமல் தேர்தலின் முடிவே வேறு விதமாக போய் விட்டது. வெளியே விடப்பட்டார்கள். ஆனால் உடனே உள்ளே போயிருக்கிறார்கள். இதிலிருந்து எந்தளவு ஒழுங்கீனமாக. . .

**Mr. SPEAKER :** All those., who were arrested can not be rowdies. The Hon. Member is making a general statement. There may be some rowdies, but there may be good people also.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** என் அனுபவத்தில் சொல்கிறேன்.

**Mr. SPEAKER :** Further these matters are *sub-judice.*

**Srimathi T. N. ANANDANAYAKI :** I am not stating any thing beyond what has been published in the news papers.

**Mr. SPEAKER :** All that is published in the news papers may not be true. The hon. Member need not rely on newspapers.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** ந்யூஸ்பேப்பரில் வந்ததை, தரமான செய்தித் தாளில் வந்ததைச் சொல்ல முடியாமல் போனால் ந்யூஸ் பேப்பருக்கு நாட்டில் மதிப்பே இல்லாமல் போய்விடும். தேர்தல் காலத்தில் திறமையான முறையில் வேலை செய்த இலாகாவை தடங்கல் செய்யக் கூடிய அளவிற்கு தடைப்படுத்தலாம் என்றால் அதைத் தடுப்பது மிக மிக அவசியம். நாட்டின் அரசியல் விதியே மாற்றப்படுகிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தலையீடுகள் மூலம், அரசாங்கத்தில் இருப்பவர்கள் மீது குறைகளைச் சொல்லி, சமுதாயத்திற்கு புறம்பான, விரோதமான செயல்களை எல்லாம் மலைய விட்டு, அப்படி மலையக் விடக் கூடிய சக்தியாக இருக்கிறோம் என்ற நிலை ஏற்பட்டால் போலீஸ் இலாகா ஒழுங்காக வேலை செய்வதற்குள்ளதொரு சூழ்நிலை இல்லாமல் போகும் என அஞ்சுகிறேன். ஆகவே சத்தியாக்கிரகம் செய்வோம், உண்ணாவிரதம் இருப்போம் என்று கூறி தலையிடுவது சரியல்ல, அப்படி தலையிடுவதினால் இந்த இலாகா சரிவர இயங்க முடியாமல் போய் விடும். அப்படிப்பட்ட அரசியல் கட்சிகளை வளர விடுவது சரியா ? ஆகவே அப்படிப்பட்டதொரு சூழ்நிலை ஏற்படாது நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் தமிழ் நாட்டில். நம் உடமைகளையும், உயிர்களையும் பாதுகாக்கிற பணியில் ஈடுபட்டிருக்கிற இந்தத் துறையில் இருப்பவர்களுக்கு இன்னும் சிந்தித்துப் பார்த்து அவர்களுக்கு இன்னும் என்னென்ன உதவிகளைச் செய்யமுடியுமோ அவற்றை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பலர் பலியாவதைப் பார்க்கிறோம். ஆகவே அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து எவ்வளவுக்கெவ்வளவு நல்ல வாழ்க்கையை அளிக்கிறோமோ அந்தளவிற்கு நாட்டுக்கு நல்லது. ஆகவே அவர்களுக்கு தீவிரமாகவும், துரிதமாகவும் சில சலுகைகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற வீடுகள் போதாது. அவர்களுக்கு அதிகப்படி வீடுகள் கட்டித் தர வேண்டும். போலீஸ் லைனில் குடியிருப்பவர்களுக்கு 9 மணிக்கு மேல் விளக்கை அணைத்து விட வேண்டுமென்று நிலை இருக்கிறது. அதனால் அவர்கள் பிள்ளைகள் படிப்பதற்கு கஷ்டமாகயிருக்கிறது. ஆகவே சிறிது பண நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை. 10, 11 மணி வரையாவது விளக்கு எரியலாம் என்று உத்திரவிட்டால் அந்த ஏழை குழந்தைகள் கல்வி வசதி பெற, நல்ல முறையில் படிப்பதற்கு வசதியாக இருக்கும். போலீஸ் லைனில் இருப்பவர்களை வேறு ஒரு இடத்திற்கு மாற்றிவிட்டால்திற் உடனே வீட்டைக் காலி செய்து மற்றொருவருக்கு கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். சென்னையில் வீடு கிடைப்பது மிக மிக அரிது. மற்ற யிடங்களில் லைன்கள் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். அது மட்டுமல்ல, அவர்கள் பிள்ளைகள் இங்கு கல்வி பெற்றுக் கொண்டிருக்

கலாம். ஆகவே அப்படி மாற்றப்படுகிற போலீஸ்காரர்களுக்கு சிறிதுகால தாமதம் கொடுத்து, அவர்கள் வீட்டு வசதி பெறுகிற வரையில் அவர்கள் அங்கு குடியிருக்க வசதி செய்து தரவேண்டும். இல்லையென்றால் வேறு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும். ஒரு போலீஸ்காரர் குறிப்பிட்டகாலத் திற்குள் வீட்டை காலி செய்யவில்லை என்ற காரணத்திற்காக வேலை இழந்திருக்கிறார். இதைப் பார்த்தால் வேதனையாக இருக்கிறது. பெரிய வீடு இருப்பவர்கள் கூட வீட்டைக் காலி செய்ய கோர்ட்டுக்கு போய் காலம் கொடுத்துதான் காலி செய்ய முடிகிறது. வீட்டை காலிசெய்ய வில்லை என்று, இன்ஸ்பெக்டர் ஜெனரல் என்று சொல்லி அவரை வேலை யிலிருந்து கருணையற்ற முறையில் நீக்கியிருக்கிறார்கள். இது நல்லதல்ல. ஆகவே அதை மீண்டும் இந்த இலாகா புனராலோசனை செய்ய வேண்டு மென்று நாங்கள் ஆசைப்படுகிறோம். எஸ்.ஏ.பி. போலீஸார் ஆவடியில் குடியிருந்தால் வாடகை தருகிறார்கள், வெளியே இருந்தால் வாடகை கிடையாது. அவர்களுக்கு வீடுகளும் கட்டித் தரப்படவில்லை. ஆகவே ஆவடியை விட்டு வெளியே குடியிருப்பவர்களுக்கும் வாடகை தரப்பட வேண்டும். பழைய முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் என் தொகுதிக்கு வந்திருந்தபோது ஒரு போலீஸ்காரரின் மனைவி ஒரு மனு கொடுத்தார், நாங்கள் கஷ்டப்படுகிறோம், எங்களுக்கும் வீட்டு வாடகை தர வேண்டுமென்று. வருடம் இரண்டாகின்றன. இதுவரையிலும் தரப் படவில்லை. ஆகவே வருகிற ஆண்டிலாவது வெளியே குடியிருக்கிற எஸ். ஏ. பி. போலீஸ்காரர்களுக்கு லைனில் வீடு கிடைக்காமல் வெளியே வசித்து வருகிறவர்களுக்கு வீட்டு வாடகை கொடுக்க வேண்டியது மிக மிக அவசியம். அடுத்தபடியாக, டிராபிக் டிபார்ட்மெண்ட் திறமையாக வேலை செய்து வருகிறது. காரின் மேல் காரை ஓட்டிச் செல்கிற அளவிற்கு கார்கள் அதிகரித்து விட்டன, சென்னை நகரில். அவற்றை ஒழுங்காக செலுத்த இன்னும் அதிகப்படியாக கான்ஸ்டேபிள்ஸ் போட்டு எங்கெல்லாம் மக்கள் குறுக்கே நடப்பதற்கு, ஊர்திகள் செல்ல கஷ்டமாக யிருக்கிறதோ அங்கு தக்க நடவடிக்கைகள் எடுப்பது அவசியம். மதுவிலக்கு குற்றம் மலிந்திருக்கிறது. அதில் பலர், கள்ளம் கபடமற்றவர்கள் இதற்கு பலி யாகிறார்கள். ஒருவர் மீது கேஸ் சுமத்த வேண்டுமென்றால் அதற்கு மதுவிலக்குச் சட்டம் மிக மிக உதவி புரிகிறது. குடித்தார் அல்லது வீட்டில் வைத்திருந்தார் என்று கூறி, ஒருவருக்கு வேதனை கொடுக்க வேண்டுமென்றால், அப்படிப்பட்ட எண்ணம் இருந்தால், சுலபமாக குற்றத்தை சுமத்தி விடலாம். ஆகவே புனர் பரிசீலனை செய்து கள்ளம் கபட மற்றவர்கள் இந்த குற்றத்திற்கு ஆளாகாமல் அவர்களைக் காப்பாற்ற என்னென்ன சூழ்நிலையை ஏற்படுத்த முடியுமோ அதை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் சொன்னதைக் கேட்டு எதிர்க்கட்சியினர் நகைக்கிறார்கள். சென்னை நகரில் நடப்பது அவர்களுக் குத்தான் தெரியும், மற்றவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கவேண் டாம். எங்கு மக்களுக்கு தொல்லை இருந்தாலும் அதைத் துடைக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய உங்களைக் காட்டிலும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் முன் வருகிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** : உங்களைக்காட்டிலும் என்று சொல்லக்கூடாது.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்கள் மூலம் சொல்கிறேன், உங்களைக் காட்டிலும் என்று.

அதோடு பெட்டி கேஸஸ் இருக்கின்றன. நம்பர் ஆப் கேஸஸ் வர வேண்டுமென்று பெட்டி கேஸஸ் போடுவது நல்லதல்ல. இதை பரிசீலனை செய்து இந்த சிறு சிறு குற்றங்களைக் கூட நீக்கிவிட்டால் இந்த இலாகா மக்களுக்கு மேலும் நல்லபடி உதவி புரிவதாக அமையும் என்று கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, போலீஸ் மான்யக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியிலிருந்து கொடுக்கப் பட்டிருக்கின்ற வெட்டுப்பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் பிற மாநிலங்களை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் நம்முடைய போலீஸ்



இலாகா திறம்பட நல்ல முறையில் வேலை செய்து வருகிறது என்பதை ஓரள வுக்கு ஒப்புக்கொள்கிறோம். இருந்தாலும் ஸ்காட் லாண்ட் போலீஸ் படையைப் போன்று இங்கேயும் ஒரு பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்று அன்றைய தினம் இருந்த வெள்ளைக்காரர்கள் தீர்மானித்து ஒரு இலா காவை உண்டு பண்ணினார்கள். அப்படி அமைக்கப்பட்ட இலாகா இன்றைய தினம் அமைச்சர்களுடைய குறுக்கீடு காரணமாகவும், அதிகார வர்க்கத்தின் காரணமாகவும், சீர்குலைந்துள்ளது. எந்த நோக்கத்திற்காக அந்த இலாகா ஏற்படுத்தப்பட்டதோ அந்த முறையில் அது சீரிய முறையில் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இதை சொல்லு கின்றேன்—இந்த அளவில் இந்த இலாகா ஒரு சிக்கலான ஓரிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. சென்னை நகரத்தில் தேர்தல் நடந்து முடி வடைந்து, திராவிட முன்னேற்ற கழகம் வெற்றி பெற்றது என்று அறிவித்ததும், திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது போலீஸ் காரர்களினால்தான் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வந்து, பல போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வந்து, அதற்காக, 49 சப்-இன்ஸ்பெக் டர்களையும், இன்ஸ்பெக்டர்களையும் மாற்ற வேண்டும் என்று காங்கிரஸ் கமிட்டி லிஸ்ட் தயாரித்து மேலிடங்களுக்கு அனுப்பக்கூடிய அளவுக்கு போலீஸ் இலாகாவில் ஆளும் கட்சி அதிகாரம் செலுத்தி வருகிறது. இந்த நிலைமை இருக்கக்கூடாது என்பதுதான் என் தாழ்மையான வேண்டுகோள். எப்படி நீதித் துறை தனித்து இயங்குகிறதோ அதே போன்று போலீஸ் துறையும் இயங்கவேண்டும். . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போலீஸ் இலாகாவினர், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதராவாக நடந்து கொண்டார்கள் என்றோ பட்சபாதமாக நடந்துகொண்டார்கள் என்றோ நான் கூறவில்லை. அதை நான் ஒப்புக்கொள்ளவும் இல்லை. ஆனால் அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுத் துக் கொண்டால் அது காங்கிரஸ்காரர்களுக்கு அனுகூலம் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. அதை கனம் அங்கத்தினர் அவர்கள் ஒப்புக்கொள் வார்கள் என்று நம்புகிறேன். எதாவது ஒரு போலீஸ் அதிகாரி திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக, அல்லது அரசியல் கட்சியைச் சார்ந்து பட்சபாதமாக நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அதை ஆட்சேபிப்பதற்கு இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இதைப்பற்றி விளக்கம் கொடுத்ததற்கு நான் அமைச்சர் அவர்களுக்கு கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் காங்கிரஸ் கட்சி கொடுக்கின்ற லிஸ்ட் மாதிரி, திராவிட முன்னேற்றக் கழகம் கொடுக்கின்ற ஒரு லிஸ்டையும் ஒன்று சேர வைத்து பார்க்கவேண்டும். இம்மாதிரிப்பட்ட பிரச்னைகள் வரும்போது ஒரு கண்ணால் மட்டும் பார்த்தால் போதாது, இரட்டைக் கண்ணால் பார்த்து முடிவு எடுக்கவேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மற்றொன்றையும் நான் கூற விரும்பு கிறேன். பொதுவாக இந்த இலாகாவாக இருந்தாலும்சரி வேறு இருந் தாலும்சரி, அந்த இலாகாவின் அதிகாரியின்மீது குற்றம் சாட்டலாம்; புகார்களையும் சொல்லலாம், ஆனால் இன்னின்ன அதிகாரிதான் இந்த இடத்தில் இருக்கவேண்டும், இவரை மாற்றக்கூடாது என்று சொல்வது ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஆகையினால், இந்த அரசாங்கம், நீதித் துறை எந்த அளவில் தனித்து இயங்குகின்றதோ அதே போன்று தனித்து இயங்குகின்ற அளவில் போலீஸ் இலாகாவும் இருக்கவேண்டும். நீதித் துறையில் அரசாங்கத்தின் குறுக்கீடு இருக்கிறது என்று நான் சொல்ல வரவில்லை, அதே போன்று, போலீஸ் இலாகாவிலும் குறுக்கீடு இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு, க்வாஸி ஜுடிஷியல் என்கின்ற அளவில், இதிலும் எந்தவிதமான குறுக்கீடுகளும் இருத்தல்கூடாது என்ப தைத்தான் நான் கூற விரும்புகிறேன். நீதித் துறையில் எப்படி குறுக்கீடு இருக்கக்கூடாதோ அதே போன்று அந்த நீதித் துறைக்கு உதவிபுரி கின்ற போலீஸ் துறையிலும் எந்தவிதமான குறுக்கீடும் இருக்கக்கூடாது.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [18th March 1964

அரசாங்கத்தின்கீழ் இருக்கின்ற போலீஸ்காரர்கள், ஆளும்கட்சியின் பிரச்
சாரத்திற்காக அவர்களை அமைச்சர்களோ, மற்றவர்களோ ஈடுபடுத்துவார்
களேயானால், அது நாளாடைவில், மிக வேகமாக நிர்வாகமே சீரழிந்து
விடக்கூடிய நிலைமையை ஏற்படுத்திவிடும். காரணம் இன்றைக்கு இருக்கின்ற
ஆட்சியில் இப்போது இருக்கின்ற கட்சி போய், நாளைக்கு வேறு கட்சி பதவிக்கு
வரக்கூடும். ஆனால், நீதித் துறையில் எப்போதும் நியாயம் நல்லமுறை
யில் கிடைப்பதற்கு உதவியாக இருக்கின்ற போலீஸ் நல்ல முறையில்
குறுக்கீடு எதுவும் இல்லாமல் தனித்து இயங்க வேண்டும். முக்கியமாக
அரசாகத்தின் குறுக்கீடுகள் இதில் இருக்கக் கூடாது என்ற நோக்கத்
தோடுதான் இதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த
இலாகாவை மேலும் மேலும் சீர்திருத்தவேண்டும் என்கின்ற கருத்தை
சொல்லுகின்ற நேரத்தில், இந்த இலாகாவில் எந்த கட்சிக்கும் ஆதரவு
இருக்கவேண்டிய அவசியமில்லை. காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும்சரி,
திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்டுக் கட்சியாக
இருந்தாலும்சரி, எப்படி நீதித் துறையில் எந்தவிதமான கட்சியினரும்
தலையிடாமல் இருக்கிறார்களோ அதே போன்று இதிலும் தலையிடாது
இந்த போலீஸ் இலாகா தனித்து இயங்க வேண்டும். இதற்கு கனம்
அமைச்சர் அவர்கள் மேலும் மேலும் கவனம் செலுத்தவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக நான் இந்த அமைச்சரவைக்கு சொல்ல விரும்புவது,
ஜுடிஷியல் பிராஸிக்யூஷன் என்று சொல்லும்போது, பொதுவாக குற்றம்
செய்தவர்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டால் நன்றாக இருக்கும். நான்
பொதுவாகத்தான் இதையெல்லாம் சொல்லுகின்றேன். இது சம்பந்த
மான பல வழக்குகளை எல்லாம் நான் சொல்ல முன் வரவில்லை. அதை
யெல்லாம் நான் சொல்ல முற்பட்டால், அது "கண்டம்ப்ட் ஆஃப் கோர்ட்"
என்று சொல்வதற்கு கனம் சபாநாயகர் அவர்கள் தயாராக இருந்து
கொண்டிருக்கிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** எதைச் சொன்னாலும் நான் அப்படி சொல்ல
மாட்டேன். உண்மையிலேயே "கண்டம்ப்ட் ஆஃப் கோர்ட்" விஷயமாய்
இருந்தால் சொல்லுவேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்ல
விரும்புகிறேன். கடலூரில் நடந்தது. இன்னும் சார்ஜ் ஷீட் போடப்பட
வில்லை. ஆகவே "கண்டம்ப்ட் ஆஃப் கோர்ட்" என்று சொல்வதற்கில்லை.
அங்கு நடந்த சம்பவத்தைச் சொல்லுகிறேன். சாதாரணமாக குற்றம்
செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள்தான். ஆனால் தண்டனை
கொடுக்கவேண்டியது கோர்ட்தான். திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சார்ந்தவர்கள் என்று சொல்லி, ஆறு பேர்களை போலீஸ்காரர்கள் கைது
செய்தார்கள். ஆசிரியர் தாக்கப்பட்டார் என்ற காரணத்திற்காக நடந்தது.
கைது செய்து லாக்கப்பில் வைத்திருந்து அவர்களை கோர்ட்டுக்கு கொண்டு
செல்லும்போது, அவர்களில் ஒருவரை மட்டும் வானில் ஏற்றிவிட்டு, பாக்கி
நாலைந்து பேர்களை கையில் விலங்கை மாட்டி, வீதி, வீதியாக நாயைப்
போன்று இழுத்து சென்றிருக்கிறார்கள். இதுதான் நியாயமா என்று
கேட்க விரும்புகிறேன். குற்றம் செய்தவர்கள் என்றால் நீதி மன்றம்
தண்டனை கொடுக்கும், அதை யாராக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள
வேண்டியதுதான். ஆனால், ஒரு சிலரின் பாதுகாப்புக்காக இப்படி நடத்
தியிருக்கிறார்கள் என்றால் எந்த விதத்தில் ஆளும் கட்சியினர் குறுக்கிடு
கிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும். இன்றைக்கு காங்கிரஸ் கட்சி
அமைப்புக்கு வந்திருக்கிறது என்றால், நாளைக்கு வேறு எந்த கட்சியும்
ஆட்சிக்கு வரமாட்டார்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா ?
அப்படி உங்கள் இடத்தில் வேறு கட்சி வந்தால், அவர்களும் உங்களை இதே
போன்று நடத்தினால் நீங்கள் எங்கே செல்வீர்கள். இதையெல்லாம்
சிந்தித்துப் பார்த்து நல்ல முறையில் பட்சபாதமற்ற முறையில் ஆட்சியை
நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீதி இலாகாவைப் போன்று
எந்த விதமான குறுக்கீடும் இல்லாமல் நாட்டுக்கு பணிபுரிய வேண்டும்
என்கின்ற அடிப்படையில் போலீஸ் இலாகா செயல் பட வேண்டும் என்பதை
அழுத்தம் திருத்தமாக கூற விரும்புகிறேன்.



18th March 1964] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி]

கறிஞர் அம்மையார் அவர்கள், ஆண்களை வழக்கறிஞர் என்று சொன்னால்
பெண்களை வழக்கறிஞினி என்று சொல்லலாம் என்று நினைக்கிறேன்.
அந்த வழக்கறிஞனி அம்மையார் அவர்கள், சென்னையில் நடந்த நகர
சபை தேர்தல் நேரத்தில் பல ரௌடிகளை போலீஸார் கைது செய்தார்கள்,
அவர்களில் பலரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் ஏஜெண்டு
கள் என்று குறிப்பிட்டார்கள்.

**கனம் சபாநாயகர் :** : திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏஜெண்டுகள்
ரௌடிகள் என்று அவர்கள் குறிப்பிடவில்லையே.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ரௌடிகள் என்றே குறிப்பிட்டார்கள்.
அவ்விதம் அவர்கள் சொன்னது போன்று ரௌடிகள் ஆண்களில் மட்டும்
அல்ல, பெண்களிலும் இருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது.)

**MR. SPEAKER :** I do not allow that. I request the hon. Member to resume his seat.

**SRI. V. KRISHNAMOORTHY :** I have taken only three minutes, Sir.

**MR. SPEAKER :** The time is already over.

**SRI V. KRISHNAMOORTHY :** I am very sorry, Sir.

**MR. SPEAKER :** Now the hon. Member, Sri Nanjunda Row, will speak.

*** திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் :** ஸார், இந்த மான்யக் கோரிக்கையை
ஆதரித்து பேச விரும்புகிறேன். நம்முடைய ஸ்பெஷல் ஆம்ட் போலீஸ்
நாகாலாண்ட்-க்கு அனுப்பப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதற்
காக என் பாராட்டுதல்களை சொல்லிக்கொள்கிறேன். தமிழ் நாட்டு
போலீஸ்காரர்கள் நாகாலாண்ட்-க்கு சென்று நல்ல முறையில் நிர்வா
கத்தை நடத்தி வந்தால் தமிழ்நாட்டுக்கு நல்ல பெயர் வரும். இன்னொரு
விதத்திலும் நான் பாராட்ட விரும்புகிறேன். தமிழ்நாட்டிலுள்ள போலீஸ்
காரர்களுக்கு வட இந்தியாவில் போய் நல்ல முறையில் பார்ப்பதற்கு
வாய்ப்பு ஏற்படும். பொதுவாக என் போன்றவர்கள் எப்போது நம்முடைய
இந்தியாவிலுள்ள இடங்களை எல்லாம் பார்க்கப்போகிறோம் என்று சந்தே
கம் இருக்கிறது. இந்திய பிரஜையாக இருக்கின்ற யாராக இருந்தாலும்
சந்தர்ப்பம் கிடைக்கின்ற நேரத்தில் இந்தியா முழுவதும் சுற்றிப் பார்ப்பதற்கு
வாய்ப்பு கிடைப்பது சந்தேகம்தான். அதோடு போலீஸ்காரர்களை பொறுத்த
வரையில், வட இந்தியாவில் சென்று நல்ல முறையில் சேவை செய்வதற்
கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே சர்க்கார் இரண்டு வருடங்களுக்கு ஒரு
முறை ஸ்பெஷல் ஆம்ட் போலீஸை வெளியிடங்களுக்கு அனுப்பக்கூடிய
வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
இப்போது காலையிலிருந்து பல நண்பர்கள் போலீஸ்காரர்களுக்கு என்
னென்னசலுகைகள் செய்துகொடுக்கவேண்டும் என்பதைப்பற்றி பேசினார்கள்.
போலீஸ் ஸ்டேஷன்களில், டெலிபோன் வசதி, ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷ
னுக்கு மோட்டார்சைக்கிள் வசதி, ஒவ்வொரு கான்ஸ்டபிளுக்கும் ஒரு சைக்கிள்
வசதி இவைகளையெல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார்
கள். அதற்காக நான் நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு, சர்க்கார்
நல்ல முறையில் இவர்களுக்கு வேண்டிய செதிகளை எல்லாம் செய்து
கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸ் ஸ்டேஷன்
மட்டுமல்லாமல் ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் டெலிஃபோன் இருக்க
வேண்டும். அப்போது தான் ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் ஆஸ்பத்திரிக்கோ
அல்லது வேறு இடங்களுக்கோ தகவல் கொடுக்க கிராமவாசிகளுக்கு நல்ல
வசதி செய்து கொடுக்கலாம் என்று நம்புகிறேன்.

இன்று கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலே ஹோம் கார்டு ஆர்கனே 1-30
ஸேஷன் பற்றி கொஞ்சம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆர்கனைஸே p.m.
ஷன் நல்ல முறையில் வேலை செய்து வருகிறது. இதைப் பற்றி புகார்

[திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்] [18th March 1964

ஒன்றும் இல்லை. இது அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல ஸ்தாபனம் என்பது எல்லோருக்கும் தெரியும். சீனக்காரனால் ஏற்பட்ட ஆபத்து சமயத்திலே இந்த ஹோம் கார்டு ஆர்கனிஸேஷன் ஆரம்பிக்கப்பட்டு அது இப்போது நல்ல முறையில் வேலை செய்கிறது என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். வில்லேஜ் வாலண்டியர் ஃபோர்ஸ் என்று ஆரம்பித்தது ஹோம் கார்டு ஆர்கனிஸேஷனோடு போட்டி போடுகின்ற முறையிலே செய்ய முடியவில்லையோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஹோம் கார்டு ஆர்கனி ஸேஷனில் போலீஸ் அக்கறை எடுத்த காரணத்தினால் தான் அது நல்ல முறையில் வேலை செய்கிறது. கிராமத் தொண்டர் படைக்கும் போலிஸ் பொறுப்பு இருந்தால் அதுவும் நல்ல முறையில் நடக்க வாய்ப்பு இருக்கும் என்று போலீஸ் துறையைப் பற்றிப் பாராட்டிச் சொல்ல விரும்புகிறேன்.

போலீஸ்காரர்களுக்கு சில ஸ்டேஷனில் ஹவுஸிங் ஃபெஸிலிடீஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சில ஸ்டேஷன்களில் இந்த வசதி செய்து கொடுக்காமல் இருப்பதால் அவர்கள் குடிசைகளில் 5 ரூபாய் 6 ரூபாய் வாடகை கொடுத்துக்கொண்டு வசதி இல்லாமல் இருந்துகொண் டிருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய தொகுதியில் எரியோடு என்ற கிராமத்தில் போலீஸ்காரர்களுக்கு வீடே இல்லை. அவர்கள் குடிசைகளில் 5—6 ரூபாய் வாடகை கொடுத்துக் கொண்டு இருக்கும் நிலைமை இருக்கிறது. இப்பேர்ப்பட்ட நிலைமை நீடிக்கா மல் அவர்களுக்கெல்லாம் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனைப் பார்த்தால் காலையில் பார்த்தால் 500 பேர்கள், 600 பேர்கள்—கலகங்கள் ஏற்பட்டால் பெரிய கூட்டம் இருக்கும், சண்டை நடந்த போது கூட்டம் இருப்பது சகஜம்—ஆனால் எப்போது பார்த்தாலும் 100 பேர்களாவது இருக்கும் நிலைமை இருக்கிறது. இந்தக் கூட்டங்கள் இருக்காதபடி உடனடியாக ½ மணியில் வருகின்றவர் களை டிஸ்போஸ் செய்யவேண்டும். என்க்வைரி செய்யவேண்டுமென்றால் 4 பேர், 3 பேர், 2 பேர் இருக்கலாம். ஆனால் சில ஸ்டேஷன்களில் கூட்டத்தை வைத்துக்கொண்டு, 3 நாள் காக்க வைக்கும் பழக்கம் போக வேண்டும். அப்படி அந்தப் பழக்கம் போனால்தான் போலீஸ் டிபார்டு மண்டுக்கு நல்ல பெயர் ஏற்படும். கிராம மக்களிடத்திலும் நிம்மதி ஏற்படும். அந்தப் பழக்கத்தைப் போக்க வேண்டிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று சர்க்காரை வேண்டிக்கொள்கிறேன்.

கிராம முன்னேற்ற வேலைகளை போலீஸ் இலாகாவிலிருந்து செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல திட்டம். ஒவ்வொரு போலீஸ் ஸ்டே ஷனுக்கு, ஒரு கிராமத்தை ஒப்படைத்து அந்த கிராமத்தை ஒரு மாடல் கிராமமாக மாதிரி கிராமமாகச் செய்ய ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனும் முயற்சி எடுத்து அந்த கிராமத்தில் உள்ள நல்லவர்களுடைய ஒத்துழைப் போடு செய்தால் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு கிராமமாக வருஷம் வருஷம் நல்ல முறையில் கிராமங்கள் முன்னேற்றம் அடைய பெரிய வாய்ப்பு ஏற்படும்.

கிராமங்களில் ஒரு ஊருக்கு 10 போலீஸ்காரர்கள் போக வேண்டுமென்றால் அவர்களுக்கு சைக்கிள் கிடைப்பதில்லை. இரண்டு சைக்கிள் கிடைத்தால் அதிலே போலீஸ்காரர்களே 4 பேர்கள் டபிள் ரைடிங் செய்து போக வேண்டிய நிலை ஏற்படுகிறது. கிராமங்களில் டபிள் ரைடிங்கை பெட்டி கேஸாக புக் செய்யும் முறை போகவேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் இன்னும் முன்னேறவில்லை. அங்கே ஒரு சமயத்தில் ஒரே சைக்கிளில் இரண்டுபேர்கள் போக வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படு றது. டவுன்ஸ், ஸிடீஸில் டபிள் ரைடிங் கூடாதுதான். ஆனால் கிராமங்களில் இதை கேஸ்போட்டு தண்டிப்பது போகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"போலீஸ்மன் இஸ் எ ஃப்ரண்ட்" என்று மற்ற வெளிநாடுகளில் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஸ்காட்லண்ட் யார்ட், அமெரிக்க செக் யூரிட்டி ஆபீஸர்ஸ் எல்லோருக்கும் நல்ல பெயர் இருப்பது தெரியும். போலீஸ்காரன் ஒரு நண்பன் என்ற முறையில். . . .



18th March 1964]

SRI S. NANJUNDA RAW: Sir I am sorry. Please forgive me, for my Tamil vacabulary is poor.

**கனம் சபாநாயகர்:** "போலீஸ்மன்" என்பதால் போலீஸ்காரன் என்று வந்துவிடுகிறது. போலீஸ்காரர் என்று சொல்லுங்கள்.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்:** போலீஸ்காரர்கள் மக்களுடைய நண்பர் கள் என்ற முறையில் அந்த நிலை ஏற்படவேண்டும். குழந்தை அழுதால் கூட போலீஸ்காரரைக் கூப்பிடுகிறேன் என்று பயமுறுத்தும் முறை போக வேண்டும். சோஷல் எடுகேஷன் கிராமத்தில் பரவவேண்டும். "போலீஸ் மன் இஸ் எ ஃப்ரண்ட்" என்று அவர்களிடத்தில் மதிப்பு ஏற்படும் முறை யில் முயற்சி எடுத்தால் நல்லது. இன்றைய தினம் ரவுண்ட் டானாவில் பார்த்தால் ஏதாவது ஒரு சங்கதி கேட்கவேண்டுமென்றாலும் அங்கு போலீஸ்காரர் நிற்பதில்லை. கிராமத்திலிருந்து வரக் கூடியவர்கள், அங்கு ஒரு ட்ராஃபிக் போலீஸ் இருந்தால் போய் கேட்கக்கூட பயப்படுகிறார்கள். ஒரு கிராமவாசி இந்த ரோடு எங்கே போகிறது என்று கேட்கக்கூட பயப் படும் நிலைமை இருக்கிறது. எல்லோர் மனதிலும் இந்தக் கருத்து ஏற்பட வேண்டும். அதாவது போலீஸ்காரர்கள் நல்ல முறையில், நியாயமான முறையில், மக்கள் நன்மைக்காக வேலை செய்கிறார்கள், மக்கள் நன்மைக் காக உள்ள இலாகா போலீஸ் இலாகா என்ற முறையில் கூடிய சீக்கிரம் ஏற்படவேண்டும். இப்போது ஏற்பட்டு வருகிறது என்றாலும் இன்னும் கூடிய சீக்கிரம் ஏற்பட பொது மக்கள் ஒத்தாசையாக இருக்க வேண்டும். போலீஸ் டிபார்ட்மெண்ட் ஒத்தாசையாக இருந்தால் போதாது.

சென்னையிலே போலீஸ் டிடெக்ஷன் ஒன்று நடந்தது. மேரேஜ் பார்டி யில் ஒரு லேடி போய் எல்லா இடத்திலும் மாப்பிள்ளை பார்ட்டியா அல்லது பெண் வீட்டு பார்ட்டியா என்று யாருக்கும் தெரியாத முறையில், அப்பேர்ப் பட்ட ஒரு பெண் நல்ல நகைகளைப் போட்டிருக்கிற குழந்தைகளை தனியாக எடுத்துச் சென்று நகைகளையெல்லாம் கழற்றிக்கொண்டு சென்றுகொண்டி ருந்த அந்தப் பெண்ணை கண்டு பிடித்து இருக்கிறார்கள் என்று பார்க்கும் போது இப்பேர்ப்பட்ட கேஸ்களில் டிடெக்ட் செய்வதில் போலீஸ் டிபார்ட் மெண்ட் எப்படி அக்கறை கொள்கிறது என்பது தெரிகிறது. இதைப் பற்றி நல்ல முறையில் எல்லோரும் சேர்ந்து பாராட்டு சொல்லக் கடமைப்பட்டிருக் கிறோம். (மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. ந. சௌந்திரபாண்டியன்:** மதிப்புக்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மதிப்புக்குரிய போலீஸ் அமைச்சர் கொண்டு வந்திருக்கும் போலீஸ் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நமது மாநிலத்தில் போலீஸ் நிர்வாகம் நல்ல முறையிலே, சீரிய முறை யிலே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி வருகிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதற்கெல்லாம் காரணம் இந்த இலாகாவைப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற அமைச்சர் அவர்களும் முக்கியமான அதிகாரிகளும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

தேசிய நெருக்கடியின் போதும், நகர மன்றத் தேர்தல்களின்போதும் போலீஸ் இலாகா நல்ல முறையில் நடந்துகொண்டது பாராட்டத்தக்கது. நமது போலீஸ் இலாகா நீதியையும் நேர்மையையும் கடைபிடித்து வரு கிறது என்று சொன்னால் அது மிகை ஆகாது.

மேலும் இந்த தேர்தல் காலங்களிலும், மாற்றுக் கட்சியினர் நடத்திய போராட்ட காலங்களிலும் இந்த போலீஸ் நிர்வாகத்தினர் நடந்துகொண் டதைப் பார்க்கும்போது பொது மக்களுக்கு தொந்தரவு கொடுக்காமல் நமது சென்னை நகரத்தில் சட்டத்தை நிலைநிறுத்தி அமைதியை உண்டாக்கி இருக்கிறார்கள் என்று சொன்னால் அது பாராட்டக் கூடிய விஷயம்.

குறிப்பாக சென்னையில் ஒரு கள்ள நோட்டு அச்சடிக்கும் கோஷ்டி நடமாடிக்கொண்டிருந்தது. நமது போலீஸ் அவர்களை நல்ல முறையில் கண்டுபிடித்து, அவர்கள்மீது வழக்கு தொடர்ந்து, அவர்களுக்கு

[திரு. ந. சௌந்திர பாண்டியன்] [18th March 1964

தண்டனை வாங்கிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் கள்ள நோட்டுகள் அச்சடிக்காமல் இருக்க நல்ல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

சென்னை நகரத்தில் கார் கடத்தல் (Carlifting) கோஷ்டி ஒன்று காரைத் திருடி பல இடங்களுக்குக் கொண்டு போகக் கூடிய திருட்டு கோஷ்டி நடமாடிக்கொண்டிருந்தது. அதனால் அநேக தொந்தரவுகள் ஏற்பட்டு வந்தன. அந்த கோஷ்டியைக் கண்டுபிடித்து, வழக்குதொடர்ந்து தண்டனை வாங்கிக் கொடுத்ததோடு இப்பேர்ப்பட்ட குற்றங்கள் இனிமேல் நடைபெறாத முறையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பது பாராட்டத்தக்கது.

போலீஸிலே அதிக கொலைக் குற்றங்கள், அதிக வழக்குகள் வரும்போது கொலைக் குற்றங்களை திறம்பட விசாரித்து, கொலை குற்றங்களைக் கண்டுபிடிக்க திறம்பட ஒரு பிரிவினர் வேலை செய்து வருவது பாராட்டத்தக்க விஷயம். இந்த அமைப்பை அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் கண்காணித்து மேலும் இப்பேர்ப்பட்ட பிரிவுகள் நல்ல முறையில் இயங்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தேசீய நெருக்கடி காரணமாக சென்னை நகரில் போலீஸ் கமிஷனர் தலைமையிலும், மாவட்டங்களில் மாவட்ட போலீசு அதிகாரி தலைமையிலும் ஊர் காவல் படைகள் இயங்கி வருவது பாராட்டத்தக்க விஷயம். இது மேலும் நல்ல முறையில் செயல் பட வேண்டிய வழிவகை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். வரும் காலத்தில் ஊர்காவல் படை நல்ல முறையில் தொண்டு செய்யும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. கடந்த ஆண்டில் தொடங்கப்பட்ட வேலைகள் முடிக்கப் பெறாத நிலையில் இருப்பவைகளுக்கு 30 லட்சம் ரூபாயும் இந்த ஆண்டிற்கு 10 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத் கூடியது.

மேலும், எல்லா போலீஸ் நிலையங்களிலும் உள்ள போலீஸ்காரர்களுக்கும் குறிப்பாக, போலீஸ் இன்ஸ்பெக்டர், போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், ஹெட்-கான்ஸ்டபிள் இவர்களுக்கும் நல்ல முறையில் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும். இப்பொழுது அவர்களுக்கு கட்டப்பட்டிருக்கும் வீடுகளை பார்க்கும் பொழுது, அவர்கள் குடியிருப்பதற்கு வசதியற்ற முறையில் இருக்கிறது. அதையெல்லாம் மாற்றி நல்ல முறையில் கட்டிக்கொடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் பனைகுடி, பழவூர், திசையன்விளை, ராதாபுரம் ஆகிய இடங்களில் உள்ள போலீஸ் காவல் நிலையங்களில் உள்ளவர்களுக்கு குடியிருக்க நல்ல வீடுகள் இல்லை. அதை உடனடியாக அமைச்சர் அவர்கள் கவனித்து நல்ல திட்டம் தீட்டி, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் போலீஸ்காரர்களுக்காக வீடு கட்டும் கூட்டுறவு சங்கம் அமைத்திருப்பது வரவேற்கக் கூடிய விஷயம். ஆனாலும்கூட, இந்த கூட்டுறவு சங்கம் நல்ல முறையில் செயல்படவில்லை என்று சொல்லப் படுகிறது. இதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி நல்ல முறையில் இந்த கூட்டுறவு சங்கம் செயல்பட எல்லா வசதிகளும் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது போலீஸ் துறைக்கு செய்த ஒரு முக்கிய கடமையாகுமென கருதுகிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** கனம் தலைவர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையின்மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேனையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் இருப்பதுபோல, போலீஸிலே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கும் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



18th March 1964] [திரு. எம். எஸ். மணி]

போலீஸ்காரர்களை அடிக்கடி வெளியூர் மாற்றுகிற காரணத்தினால், அவர்களுடைய குழந்தைகளுடைய படிப்பு கெடுவதை உத்தேசித்து அந்தப் பள்ளிகளில் சேருகிற மாதத்தில் அவர்களை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் நியூஸன்ஸ் வழக்குகள் ஒரு ஸ்டேஷனில் கிடைக்கவில்லை என்று சொன்னால் மேலதிகாரிகள் அந்த ஸ்டேஷனுக்கு வந்து நியூஸன்ஸ் கேஸ்கள் ஏன் "புக்" செய்யவில்லை என்று அவர்கள்மீது குற்றத்தை சாட்டுகிறார்கள். அதற்காக ஏழை எளிய தொழிலாளர்கள் உடனே அழைத்துவரப்பட்டு, அவர்கள் மீது நியூஸன்ஸ் வழக்குகள் போடப்படுகின்றன. அதே போல மதுவிலக்கு கேஸ்கள் ஏன் போடப்படவில்லை என்று கேட்டு, அதன் காரணமாக ஒரு ஸப் இன்ஸ்பெக்டர் என்னுடைய பகுதியிலே மதுவிலக்கு கேஸ்கள் எதுவும் ஏற்படவில்லை என்று சொன்ன பொழுது, அப்படிப்பட்ட குற்றங்களை கண்டுபிடிக்காத காரணத்தினால் அவர் திரும்பவும் ஹெட் கான்ஸ்டபிளாக மாற்றப்பட்டிருக்கிறார் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பல இடங்களில் திருச்சியில் சீட்டு........

**கனம் திரு. எம். பக்தவத்சலம :** இப்படி "டவுன்கிரேடு" செய்ததற்கு எச்.ஸி.-யாக மாற்றியதற்கு, இதுதான் காரணமாக இருக்கவேண்டும் என்று நன்றாகத் தெரிந்திருந்தால் சொல்லலாம். இதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். அதை உறுதியாகச் சொல்வது அவ்வளவு சரியல்ல.

**திரு. எம். எஸ். மணி :** அந்தக் காரணத்தைத் தெரிந்துகொண்டு தான் நான் குறிப்பிடுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்ரலம் :** கனம் அங்கத்தினர் எப்படி தெரிந்துகொண்டார் என்பதையும் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். எஸ். மணி :** உண்மையைச் சொன்னால் பலருக்கு தொந்தரவு ஏற்படும் என்ற காரணத்தினால்தான் நான் சொல்ல முடியவில்லை. பொதுவாகபோலீஸ்காரர்களை நாங்கள் பாராட்டினால், அவர்களுக்கு தொல்லை. அவர்களை நாங்கள் எதிர்த்தால் அவர்களுக்கு பிரமோஷன் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவேதான், ஜாடையாக குறிப்பிடுகிறேன்.

பல இடங்களிலே சீட்டு விளையாடுகிறார்கள். போலீஸார் அவர்களை "புக்" செய்யாமல், மாதத்தில் 5 பேர்களைக் கொண்டு வந்து அவர்கள் மீது சார்ஜ்ஷீட் போட்டு இன்றையதினம் வழக்குகளுக்கு ஏற்பாடு செய்கிறார்கள். இப்படிபட்ட நிலைமையை மாற்றி அமைக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, திருச்சியில் சமீபத்தில் சின்னசாமி என்ற நண்பர் பெட்ரோலை ஊற்றி தன்னை எறித்துக் கொண்டார். அப்பொழுது அவரிடம் இரண்டு கடிதங்கள் இருந்தன. மனைவிக்கு ஒரு கடிதமும், எனக்கு ஒரு கடிதமும் எழுதப்பட்டிருக்கிறது. பிணத்தை எங்களிடத்தில் ஒப்படைக்கவேண்டுமென்று சொல்லியும், பிணத்தை கொடுக்கவில்லை, அந்தக் கடிதத்தையும் கொடுக்கவில்லை என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருச்சி நகரத்தில் பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம். இந்த ஆண்டில் அதற்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

பிச்சைக்காரர்களைப் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. அவர்களுக்கு விடுதி கட்டுவது பற்றியும் குறிப்பிடப்பட்டது. வெள்ளைக்காரர் காலத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் பிச்சைக்காரர்கள் வந்தார்கள். வெள்ளிக்கிழமை, செவ்வாய்கிழமை அன்று ஒரு முறை வருவார்கள். ஆனால், இந்தக் காலத்தில், காலையிலும், மாலையிலும் தொடர்ந்து பிச்சைக்காரர்கள் வருகிற ஒரு நிலைமையைப் பார்க்கிறோம். எனவே, இவற்றையெல்லாம் மாற்றி அமைக்கவேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். எஸ். மணி] [18th March 1964

திருச்சி நகரத்தில் தேர்தல் நேரத்தில் 15-ம் தேதி எல்லா வட்டாரங்களிலும் நாங்கள் கூட்டம் போடுவதற்கு அனுமதி பெற்றிருந்தோம், ஆனால், திடீரென்று ஒரு காங்கிரஸ் பிரமுகர் தலையிட்ட காரணத்தினால் எங்களுடைய கூட்டங்களை ஒரு மணி நேரத்திற்குள் நடத்திக்கொள்ள வேண்டும், பிறகு அவர்களுக்கு விட்டுவிட வேண்டும் என்று சொல்லப்பட்டது. அத்தனை வார்டுகளிலும் கூட்டம் நடத்த அனுமதி கொடுத்தும் அவர்கள் 7 வார்டுகளில் தான் கூட்டம் நடத்தினார்கள். மற்றைய வார்டுகளில் அவர்கள் கூட்டம் நடத்தவில்லை. அதன் காரணமாக எங்கள் கூட்டமும் தடைப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி நகரத்தில் வோட்டுக்கு பணம் கொடுத்தார்கள் என்று சொன்னால், போலீஸார் "நீங்களும் கொடுங்கள்" என்ற முறையிலே சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி அமைக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியில் ஒரு பிரபல வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கில் 150 பாட்டில்களை போலீஸார் கைப்பற்றி கோர்ட்டுக்குக் கொண்டுவந்து சமர்பித்தார்கள். குற்றவாளி மாஜிஸ்திரேட் கேட்கும்பொழுது "நான் கொண்டுவந்தது 200 பாட்டல்கள், இன்னும் 50 பாட்டல்களைக் காணோம்" என்ற குற்றச்சாட்டை சொன்னார். இதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். மதுவிலக்கை நாம் அமுலாக்க முயற்சிக்கிறோம். 1960-ம் ஆண்டு நிலையும் இன்றைய நிலையும் பார்க்கிற பொழுது, ஆண்டுக்கு ஆண்டு மதுவிலக்குக் குற்றங்கள் கூடிக்கொண்டு வருகின்றன. நமது அமைச்சர்கள் உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். மதுவை அவர்கள் அதிகமாக உற்பத்தி செய்கிறார்களோ என்று சந்தேகமாக இருக்கிறது. போலீஸாருக்கு தெரிந்து பிடித்த வழக்குகள் லட்சக்கணக்கில் இருக்கின்றன. மேலும் அவர்களுடைய கவனத்திற்கு வராத வழக்குகள், கண்டுபிடிக்கப்படாத வழக்குகள் எத்தனையோ லட்சம் இருக்கின்றன என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நமது போலீஸ் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஈரோடு படுகையிலே, காவேரி ஆற்றுப் படுகையிலே கள்ளச் சாராயம் காய்ச்சுவதாகக் கேள்விப்பட்டு, மொரச்சா என்ற சப் இன்ஸ்பெக்டரை அங்கே போய் அதைக் கண்டுபிடித்துக்கொண்டு வரச்சொன்னார்கள். காவேரிப் படுகை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தது. அப்படியிருக்கும்பொழுது ஈரோடு சப் இன்ஸ்பெக்டரை சேலம் மாவட்டத்திற்கு அனுப்புவானேன்? எப்படி அவர் அனுப்பப்பட்டார் என்பது தெரியவில்லை. அவர் படகில் போயிருக்கிறார். படகு கவிழ்ந்து, அதன் காரணமாக தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டார். அவர்களைத் தேடுவதற்கு பல பேர்கள் நியமிக்கப்பட்டார்கள். தேடிப் பார்த்தார்கள். கிடைக்கவில்லை. அவர்கள் திரும்பவும் போலீஸ் உயர்தர அதிகாரிகளிடம் சென்று எங்களால் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. நாங்கள் களைத்துப் போய்விட்டோம். "ஏதாவது சாராயம் குடித்துவிட்டுப் போனால் எங்களால் தேட முடியும்" என்று சொன்னார்களாம். உடனே போலீஸார் ஈரோட்டுக்கு ஆட்களை அனுப்பி, சாராயத்தைக் கொண்டுவந்து அவர்களுக்குக் கொடுத்து, மீண்டும் அவர்கள் தேடியிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. உயர்தர அதிகாரிகள் **Travellers' Bungalow**-வில் உட்கார்ந்துகொண்டு தாங்களும் குடித்திருக்கிறார்கள். இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த போலீஸ் அதிகாரி இறந்துவிட்டார். அவரைக் கண்டுபிடிப்பதற்கு இந்த அதிகாரிகள் இவ்வளவு கூத்து அடித்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன? அந்த அதிகாரி இறந்ததற்கு இவர்கள்தான் காரணமாம் என்று ஸஸ்பெண்ட் செய்யப்பட்ட அர்ஜுனன் என்ற ஸப்இன்ஸ்பெக்டர் கோவை நகரத்தில் பல பொதுக் கூட்டங்களில் பேசிவருகிறார். இதற்கெல்லாம் அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? அவர்கள்மீது நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் அவர்கள் அந்தக் குற்றத்தை ஒத்துக்கொண்டிருக்கிறார்களா என்பதைத்தான் நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன்.



18th March 1964] ] திரு. எம். எஸ். மணி ]

இறுதியாக ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். போலீஸ்காரர்களை இன்றையதினம் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் மிரட்டி பல நேரத்தில் பல காரியங்களைச் சாதித்துகொள்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் போலீஸ்காரர்களை மிரட்டினால் அவர்கள் திரு. பாலகிருஷ்ணன் போல் சட்டையையும் தொப்பியையும் கழற்றி தூக்கி எறிந்துவிட்டு இங்கே உள்ளே வந்துவிடுவார்கள். அல்லது கடைசி வரையில் பதவியில் இருந்துவிட்டு ரிடையர் ஆனவுடன் நம்முடைய குழந்தைவேலு அவர்கள் எங்களுடைய கழகத்திற்கு வந்ததுபோல் வரக்கூடும். ஆகவே, இதை தனிப்பட்ட இலாகா என்று கருதி அவர்கள் நடவடிக்கைகளில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தலையிட விடக்கூடாது என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது முன்னாள் முதல் அமைச்சரும், இந்நாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. காமராஜ் அவர்களுக்கு செக்யூரிடி ஆபீஸர் நியமித்திருக்கிறார்கள். அவர்கள் இன்னும் முதல் அமைச்சர் என்று கருதி அவர்களுக்கு இம்மாதிரி செக்யூரிடி ஆபீஸர் நியமித்திருக்கிறார்களா எனறு இந்த சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன். அதே நேரத்தில் இந்தியாவின் முன்னாள் கவர்னர்ஜனரல் திரு. ராஜகோபாலாச்சாரி அவர்களுக்கு இன்றைய தினம் செக்யூரிடி ஆபீஸர் இன்னும் போடப்படவில்லை. அதற்கு ஆவன செய்ய வேண்டும். எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் கொடுத்து, பாதுகாப்பு நல்ல முறையில் கொடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்புமிக்க உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மான்யத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற ஆசைப்படுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் முன்னுரையிலே ஈரோடில் நடந்த ஒரு துக்ககரமான சம்பவத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த விபத்திலே இறந்தவர், மொரச்சா என்பவர் என்னுடைய சமூகத்தைச் சேர்ந்தவர், என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்திற்காக அவர் ஆத்மா சாந்தி அடைய வேண்டும் என்று நான் இந்த சமயத்தில் வேண்டிக்கொள்கிறேன். அவர் இறப்பதற்கான சந்தர்ப்பம் என்ன, அவர் எப்படி இறந்தார் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே கூற ஆசைப்படுகிறேன்.

**MR. SPEAKER:** That is a pending case. Therefore the hon. Member need not go into it and let him proceed further.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** அவருடைய குடும்பத்திற்கு இப்பொழுது அரசாங்கம் ரூ. 1,000 தான் உதவிப் பணமாகக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. இப்படி தன்னுடைய அரிய உயிரைத் துச்சமாக மதித்து, இந்த மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலே தீவிரமாக இருந்தவருக்கு, ரூ. 1,000 உதவிப் பணமாகக் கொடுத்திருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. அவர் பணக்காரர் அல்ல. அந்த நிலைமையிலே இந்த உதவிப் பணத்தை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு வீரச் செயல் புரிந்த திரு. மொராச்சா அவர்களுக்கு ஜனாதிபதியின் தங்கப் பரிசு வழங்கவேண்டுமென்று நமது அரசாங்கம் சிபாரிசு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் முக்கியமாக போலீஸ் இலாகாவைப் பற்றிக் குறை கூறியது சென்னை நகரைப் பொறுத்த வரையில் தான்; சமீபத்தில் 66 நகரசபைகளுக்குத் தேர்தல் நடந்திருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் நீதி தேவனைப் போல பணி புரிந்தவர்களை, சென்னையிலே நடந்த தேர்தலை மாத்திரம் வைத்துக்கொண்டு குறை கூறுவது மிகவும் விசித்திரமாக இருக்கிறது. சென்னையிலே முதல் நாள் உள்ளே போட்டார்கள் . . . . . . . . . . .

**MR. SPEAKER:** Every hon. Member has spoken about it There is no use of repeating the same thing.

[18th March 1964

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** நானும் அதைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். போடவேண்டியவர்களைப் பிடித்து உள்ளே போட்டு நேர்மையான முறையில் தேர்தல் நடக்க வேண்டுமென்பதற்காகத் தான் போலீஸார் பிடித்து வைத்திருந்தார்கள் என்பதைப் புரிந்துகொள் ளாமல் இந்த மன்றத்திலே அவர்கள் பேசுகிருர்கள். நமது நாட்டிலே ஜனநாயக ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில், சென்னை மாகாணத்தைப் பொறுத்த வரையில், எந்த ஒரு அரசியல் கட்சியும் பாரபட்சம் காட்டாமல் போலீசார் நீதி தேவனைப் போல இருந்து பணி யாற்றி வருவது மிகவும் போற்றத்தக்க விஷயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்றங்களைப் பொறுத்த வரையில், மிகைப்படுத்திக் கூறுகிருர்கள். சதவிகிதக் கணக்குப் போட்டுப் பார்த்தால், கிரிமினல் குற்றங்கள் 12 சத விகிதம் ஆகிறது. மதுவிலக்குக் குற்றங்கள் 25 சத விகிதமாகிறது. இந்த நிலையில் மதுவிலக்குத் திட்டம் வெற்றிபெற தீவிரமாகப் பாடுபடவேண்டும், குற்றங்கள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன என்று சொல்வதிலே அர்த்தம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இந்தக் குற்றங்களைக் குறைப்பதற்கு போலீஸ் அதிகாரிகள் இன்னும் கடுமையான நடவடிக்கை களை எடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. நமது போலீஸ் இலாகாவும், உள்துறை அமைச்சர் அவர்களும், கனம் முதல் அமைச்சர் அவர்களும் குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளைத் தண்டிப்பதிலே அரசியல் கண்ணோட்டத்துடன் நடந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பணியிலே போலீஸ் கான் ஸ்டேபிள்களும், மற்ற போலீஸ் அதிகாரிகளும் ஈடுபட்டிருக்கிருர்கள். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் போலீஸ் கான்ஸ்டேபிள்கள், ஹெட் கான்ஸ்டேபிள்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், மற்றும் எஸ்.பி.க்கள் எல்லோருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். ஊட்டியில் ஒரு எஸ். பி. இருக்கிருர். மற்ற மாவட்டங்களில் பணிபுரிகின்றவர்களுக்கு சர்க்கார் பங்களா கொடுத்திருக்கிருர்கள். ஆனால் ஊட்டியில் அவருக்கு எந்த விதமான வசதியும் கொடுக்கப்படவில்லை. அவர் ஒரு வாடகை வீட்டிலே குடியிருக்கிருர். ஸ்பெஷலாக ஒரு திட்டம் போட்டாவது அவருக்கு ஒரு பங்களாவைக் கட்டிக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் போலீஸ் ஆபீசர்களுடைய குழந்தைகளுக்கு ஐ.பி.எஸ். போன்ற பரிட்சைகள் எழுதும் பொழுது, தனிப்பட்ட சலுகைகள் கொடுக்க வேண்டும். போலீஸ் இலாகாவில் பணி ஆற்றி தியாகம் புரிந்தவர்களின் குழந்தைகளுக்கு தனிப்பட்ட சலுகைகள் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். விஜிலன்ஸ் டைரக்டராக ஒருவரை நமது மாகாண அரசாங்கம் இப்பொழுது நியமித்திருக்கிறது. அதில் பணி புரியும் அதிகாரிகளானலும் சரி, சிப்பந்திகளானலும் சரி, எப்படி சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருந்தாளோ, அதுபோன்று சந்தேகத்திற்கு இடமில்லாத நபர்களை அதிகாரிகளாகப் போட்டு, சட்டசபை யார் லஞ்சக் குற்றத்தில் ஈடுபட்டாலும், நல்ல முறையில் விசாரித்து, அங்கத்தினர்களானலும் சரி, முனிசிபல் கவுன்சிலர்கள் ஆனலும் சரி, கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்குக் குற்றங்களும், மற்றும் கிரிமினல் குற்றங்களும் அதிக மாவதற்கு சினிமாக்கள் காரணமென்று நான் நினைக்கிறேன். ஆங்கிலப் படங்களைப் பார்த்தால், எல்லா ஆங்கிலப் படங்களிலும், மது அருந்துவ தானது முக்கியமான நிகழ்ச்சியாக இருக்கிறது. நமது இளைஞர்கள் ஆங்கிலப் படங்களில் மோகம் கொண்டு அவற்றைப் பார்க்கிருர்கள். அப்படி நாமும் மது அருந்தினல் என்ன என்று நினைக்கிருர்கள். ஆகவே ஆங்கிலப் படங்களை எவ்வளவு குறைவாகக் காட்டலாமோ அதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



18th March 1964]

**திரு. க. சே. கு. ஹாஜா ஷெரிப் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கொடுத்துள்ள குறிப்பில் நல்ல புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிருர்கள். அதைப் பார்த்தால் இந்த இலாகாவிலுள்ளவர்கள் நல்ல முறையில் பணியாற்றுகிருர்கள் என்பதைக் கண்டு, நாம் சந்தோஷப்படுகிருேம். உண்மையிலேயே இந்த இலாகாவைச் சேர்ந்த பெரிய உத்தியோகஸ்தர் களும், மற்றவர்களும் பாரபட்சமற்ற முறையில் பணி புரிந்து வருவது பாராட்டுக்குரியது. இருந்தாலும் சில எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் அவர்கள் மீது குற்றம் சாட்டினர்கள். அவர்கள் பாரபட்சமில்லாமல் நடந்துகொள்ளவில்லை, ஒருமுகமாக நடந்துகொண்டார்கள் என்றெல்லாம் சொன்ஞர்கள். ஒருமுகமாக நடந்து கொண்டிருந்தால் இந்த தேர்தல் முடிவே வேறுவிதமாக இருக்கும். தேர்தலாக இருந்தாலும் சரி, பெரிய விழாக்களாக இருந்தாலும் சரி, மற்ற தேசங்களிலிருந்து வி.ஐ.பீஸ். வரும்பொழுதும் சரி, அவர்கள் எடுத்துக்கொள்ளும் பந்தோபஸ்தின் காரணமாக எந்தவிதமான சண்டை சச்சரவும் இல்லாமல் நடந்து வரு கிறது. ஒரு அங்கத்தினர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவரை விடியற்காலை மூன்று மணிக்குப் பேச அனுமதித்தார்கள், அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவ்வாறு பேச அனுமதி அளிக்கவில்லை என்று குறிப்பிட்டார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பேசும்பொழுது மைக்கில் பேசவில்லை. இரண்டு அல்லது மூன்று மணிக்குப் பேசும் பொழுது மைக் அனுமதிப்பதில்லை. ஆயிரக்கணக்கான மக்கள் அவருடைய பிரசங் கத்தைக் கேட்கவேண்டுமென்ற காரணத்தால் கூடியிருந்தார்கள். அப்படிக் கூடியிருந்தும், விடியற்காலையில் பேசும்பொழுது, மைக்கை எடுத்துவிட்டுத் தான் பேசினர்களே தவிர, மைக் வைத்துக்கொண்டு பேசவில்லை. இது சட்டத்திற்கு விரோதமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இலாகாவில் கடைசி மூன்று கட்டத்திலுள்ளவர்கள்—அதாவது கான்ஸ்டேபிள்கள், ஹெட் கான்ஸ்டேபிள்கள், சப் இன்ஸ்பெக்டர்கள்—இவர் களுடைய சம்பளம் அவர்களுடைய வேலைக்குப் பொருத்தமில்லாமல் இருக்கிறது. அந்த ஊதியத்தை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நமது அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். உத்தியோகஸ்தர்கள் எப்படி இருந்தாலும், இந்த மூன்று பிரிவுகளில் உள்ளவர்கள் தான் பெரிய பணிகளைச் செய்ய வேண்டி யிருக்கிறது. இப்பொழுது வாழ்க்கைச் செலவைப் பார்த்தால் ஒரு சாதாரண பியூன், அட்டெண்டருக்குக் கூட ரூ. 10) சம்பளம் கிடைக்கிறது. அதுவுமல்லாமல் போனஸ், கிராஜுடி எல்லாம் கிடைக்கிறது. இந்த உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு எந்தவித மான சலுகையும் இல்லை. நல்லவிதமாக வேலை செய்யக்கூடியவர்கள், படித்தவர்கள் இந்த இலாகாவிற்கு வரவேண்டுமானல், அவர்களுக்கு நல்ல முறையில் சம்பளம் கொடுக்கவேண்டும். அதன் காரணமாக இந்த இலாகா மேலும் திறம்பட வேலை செய்யவேண்டுமென்ற ஒரு எண்ணத்தை வைத்து அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுவுமில்லாமல் அவர்களுடைய பெண்கள் ஓய்வு நேரங் களில் ஏதாவது கைவேலையில் ஈடுபட்டு மாதத்திற்கு 40, 50 ரூபாய் சம்பாதித்தால் அதுவும் அவர்களுடைய குடும்பத்திற்கு உபகாரமாக இருக் கும். அந்த மாதிரி அவர்களுடைய வீட்டில் பெண்கள் வேலை செய்ய என்னென்ன சலுகைகள் கொடுக்க வேண்டுமோ அவைகளை சர்க்கார் கொடுக்க ஒரு ஸ்கீம் தயாரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுதும் ஸ்கீம்கள் இருக்கின்றன. ஒரு சில பர்ஸன்டேஜ் ஆப் லேடீஸ் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிருர்கள். கூடுமான வரையில் அதிகமான பர்ஸன்டேஜ் ஆப் லேடீஸ் ஈடுபடுவதற்கு திட்டத்தை தயார் செய்தால் அது நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசை. படுகிறேன்.

இப்பொழுது இந்த இலாகாவில் திறமையான உத்தியோகஸ்தர்கள் இருக்கிருர்கள். ஆனல் உலகத்திலேயே கிரிமினல் குற்றங்களை கண்டு பிடிப்பதில் மிக்க திறமை வாய்ந்தவர்கள் ஸ்காட்லண்ட் யார்ட் தான் என்று கேள்விப்படுகிருேம். அங்கு சென்று பயிற்சி பெற்று வந்தால் நமது ஆபீஸர்கள் இன்னும் திறமையாக வேலை செய்வார்கள். ஆகவே ஒன்று,

இரண்டு வருஷங்களுக்கு அவர்களை அங்கு பயிற்சிக்கு அனுப்பும் முறையை கையாள ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன் காரணமாக இப்பொழுது நம்முடைய ஸ்டேட்டிலே குற்றங்கள் ரெட்யூஸ் ஆகி வருகிறது என்றாலும் கண்டுபிடிக்கும் பர்ஸன்டேஜ் இன்க்ரீஸ் ஆக வழி ஏற்படும். இந்த ஆபீஸர்கள் அங்கே சென்று அவர்களுடைய முறைகளை கற்றுக் கொண்டு வந்தால் இந்த இலாகா இப்பொழுது இருப்பதைவிட இன்னும் திறமையாக வேலை செய்ய வாய்ப்பு இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

இப்பொழுது பெக்கர் பிராப்ளம் பெரிதாக இருக்கிறது. அதுவும் நம் தலைநகரத்திலே அதிகமாக தொத்து நோய் பிடித்த பெக்கர்ஸ் எண்ணிக்கை அதிகமாகி இருக்கிறது. அவர்களை போலீஸ்காரர்கள் ஒரு இடத்தில் கான்ஸன்ட்ரேட் பண்ணி பெக்கர்ஸ் ஹோம் இருக்கிற இடத்தில் அவர்களை வைப்பதில் அக்கறை கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

MR. SPEAKER: Each hon. Member is requested not to take more than five minutes.

*திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு போலீஸ் இலாகா இந்திய துணை கண்டத்திலே நல்ல முறையில் பணி ஆற்றி வரு கிறது என்பதை மாற்றி அமைக்க காங்கிரஸ் ஆட்சி முனைந்து வருகிறது என்ற குற்றச்சாட்டை இந்த மன்றத்திலே வைக்க ஆசைப்படுகிறேன். போலீஸ் இலாகாவை கட்சி நன்மைக்கு பயன்படுத்தக் கூடாது என்ற பொதுவான தத்துவத்தை ஆளும் கட்சிக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். இன்றைக்கு உள்ள நிலையில் போலீஸ்காரர்கள் எதிர் கட்சிகளை தாக்கிக்கொண்டிருக்கிற ஆளும் கட்சிக்காரர்களுக்கு அரவணைப்புக்கொடுக்கும் ஒரு நிலைமையை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மதுரை மாநகரிலே திராவிட முன்னேற்றக் கட்சியைச் சார்ந்த தலைவர்கள் சாலையிலே கையிலே விலங்கு இட்டு அழைத்து செல்லப்பட்டார்கள். நீதி மன்றத்திற்கு அவர்களை அழைத்துச் சென்றார்கள். இப்படி தலைவர்களை அழைத்துச் செல்ல எந்தச் சட்டம் இடம் கொடுக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் எல்லாம் பயங்கரவாதிகள் என்று கருதுகி றார்களா? முன்கூட்டியே சுற்றறிக்கை அனுப்பி தலைவர்களை கேவலப் படுத்த வேண்டும் என்று திட்டமிட்டு செய்தார்களா என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. அதே மதுரை மாநகரத்திலே மாவட்ட போலீஸ் அதிகாரி மக்களைக் கூடவிட்டு, லத்தியால் அடித்து, ஓடவிட்டு, காலால் தட்டிவிட்டு, உதைத்தார்கள். இம்மாதிரி பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத் தில் இருந்ததாக காங்கிரஸ் தலைவர்கள் சொல்லி கேட்டிருக்கிறோம். இப்பொழுது நடக்கும் காருண்ய காங்கிரஸ் சர்க்கார் இதை ஆதரிக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். அதே நிலையை கையாண்டு எதிர் கட்சிகளை ஒழித்துவிடலாம் என்று காங்கிரஸ் கட்சி உண்மையிலேயே நம்புகிறதா? ஆளும் கட்சிக்காரர்கள் இதன் விளைவு என்ன ஆகும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ராமநாதபுரம் மாவட்டத் திலே திருப்பத்தூர் நகரத்திலே ஒரு போலீஸ் அதிகாரி ஒரு அறிக்கையை கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறார்கள். அதுபோன்ற அறிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் கொடுத்தார்கள். அதிலே அரசாங் கத்தையும், அதன் ஊழியர்களையும் குறைகள் சொல்லவும் கண்டிக்கவும், கூடாது என்று அறிக்கையில் எழுதப்பட்டு போலீஸ் அதிகாரி கையெழுத் திட்டு அனுப்பியிருக்கிறார்கள். எதிர் கட்சிகளை அழிப்பதில் சாதாரண போலீஸ் அதிகாரியும், அரசியல் சட்டத்தால் அளிக்கப்பட்ட உரிமைகளை தூக்கியெறிய முற்படுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதற்கு காரணம் என்ன? கனம் முதல் அமைச்சர் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுவார்கள் சட்ட மன்றத்திலே, திராவிட முன்னேற்ற கழகத் தினர் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் துரோகிகள் என்று. அப்படிச் சொல்லும்போது கொள்கை பிரச்சினையாக வைத்துச் சொன்னார்கள் என்று நினைத்திருக்கிறோம். ஆனால், பழைய வரலாற்றை புரட்டிப் பார்த்தால், முதல்அமைச்சர் அவர்கள் காங்கிரஸ்கட்சி சுதந்தரம் கோரி, வெள்ளைக்காரண் ஆட்சியிலே, வெள்ளைக்காரனை எதிர்த்து, ஊர்வலம் நடத்திச் சென்ற போது, போலீஸார் அடித்து, அவர்களுடைய முதுகை பதம் பார்த்தார்கள்.





அப்படி லத்தியால் அடித்தார்கள். போலீஸார் லத்தி கொண்டு தாக்கி னார்கள், முதுகிலே அடித்தார்கள் என்று 1957-ஆம் ஆண்டு இந்த மன்றத்திலே முதலமைச்சர் கூறியிருக்கிறார்கள். போலீஸார் வெறி உணர்ச்சியுடன் அடித்தார்கள் என்று கூறியிருக்கிறார்கள். அன்றைய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அதற்கு உடந்தையாக இருந்தது. கண்சாடை காட்டியது. அந்தக் கண்சாடையை எடுத்துக்கொண்டு போலீஸார் எதிர் கட்சியான காங்கிரசை சேர்ந்த முதலமைச்சர் அவர்களை அடித்தார்கள். அன்றைக்கு காங்கிரஸ்காரர்களை துரோகிகள் என்று குற்றம் சாட்டி அதைப் போலீஸார் ஒரு ஜாடையாக எடுத்துக்கொண்டு காங்கிரசை தாக்கினார்கள். இன்றைக்கு எங்களை துரோகிகள் என்று குறிப்பிடுவது போலீஸாருக்கு கண்ஜாடை காட்டுவது போல் இருக்கிறது. இதன் விளைவுதான் . எதிர் கட்சிகளை ஒழித்துக்கட்டவேண்டும் என்று போலீஸார் முனைந்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே எடுத்து வைக்கிறேன். அதன் விளைவை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பிரிட்டிஷ்காரன் இருக்கிற காலத்தில் இருந்த அதே சட்டம் இன்றைக்கு காங்கிரஸ் நிர்வாகத்திலும் அமுல் படுத்த வேண்டுமா என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். கனம் அங்கத்தினர் அம்மையார் அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், சந்தேகத்தின்பேரில் கேஸ் போடுகிறார்கள் என்று. வெள்ளைக்காரன் காலத்தில் இந்த நாட்டில் மக்கள் பேரில் சந்தேகம் கொண்டான் என்றால் அதில் பொருள் உண்டு. அவன் அன்னியன். நம் நாட்டிலே சந்தேகம் கொள்ள இடம் உண்டு. இன்றைக்கு காங்கிரஸ் ஆட்சியில், மக்களாட்சியில் தங்கள் மக்களைத் தாங்களே சந்தேகப்படும் அளவுக்கு கிரிமினல் புரொ சீஜர் கோடு இருப்பது நியாயமா என்று கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள் என்றால் வெள்ளைக்காரன் வைத்திருந்தது எல்லாவற்றையும் விட்டுவிடவில்லை, சட்டங்களை வேண்டாம் என்று சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். சட்டத்தை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 55-வது பிரிவு தெளிவாக கூறுகிறது. ஒரு போலீஸ் அதிகாரி any persons within the limits of such station who has no ostensible means of subsistence பொருளற்றவர்கள், வசதியற்றவர்கள், சொத்தற்றவர்கள். இவர்களை கைது செய்யலாம் என்றிருக் கிறது. அதே நிலையை இன்றைக்கும் காங்கிரஸ் ஆட்சி பின்பற்றுவதானால் அது தான் புவனேஸ்வர சோஷலிசமா என்று முதல் அமைச்சர் அவர் களை நான் கேட்க விரும்புகிறேன். அப்படி குற்றம் சாட்டப்பட்ட பிறகு அவர்கள் மீது செக்யூரிடி நடவடிக்கை எடுக்கிறார்கள். இந்த சமயத்தில் ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஊரிலே நையாண்டி மேளம் வாசிப்பவர் சிவகங்கையிலிருந்த நாயனம் ஊதுபவர்க்கு பாக்கு வைக்க வந்திருந்தார். அவர் மீது சந்தேகக் கேஸ் போட்டு விட்டார்கள். உடனே ஜாமீன் கொடுத்து விட்டு வந்தார்கள். உடனேயே தேவக்கோட்டை கோர்ட்டிலே அவர் மீது Security வழக்கு போடப்பட்டது. அதே மாதிரி என் தொகுதி; திருப்பத்தூரில் இருந்து மானாமதுரைக்கு பெண் கேட்க சென்றுவிட்டு சிவகங்கைக்கு சிலர் வந்தார்கள். அவர்கள் மீது அங்கே சந்தேகக் கேஸ் போட்டுவிட்டார்கள். கேட்டால் எத்தனை வழக்கு போடப் பட்டிருக்கிறது என்று பட்டியல் வேண்டி இருப்பதன் விளைவுதான் இது என்று சொன்னார்கள். பிறகு ஜாமீன் கொடுத்து சரிசெய்யப்பட்டது. பின்னால் அவர் கள் மீது தேவகோட்டையில் செக்யூரிட்டி வழக்குப் போட்டார்கள். இந்த ஜனநாயக ஆட்சியில் ஏழைகளை பழி வாங்கும் நிலை இருக்கலாமா என்று கேட்க விரும்புகிறேன். கிரிமினல் ப்ரோஸீஜர் கோட்டின் 55-வது பிரிவு அரசியல் சட்டத்துக்கு உகந்ததா என்று கேட்க விரும்புகிறேன். இதற்கு என்ன முதலமைச்சர் பதில் சொல்லுகிறார்கள். 1957-ல் பதில் சொல்லி யிருக்கிறார்கள். பொய் வழக்குகளை கோர்ட்டிலே பார்த்துக் கொள்ளுவார்கள் என்று. வழக்கறிஞரான முதலமைச்சர் அவர்கள் பொய் கேஸா என்று தெரிந்து கொள்ள, கோர்ட்டுக்குச் செல்லவேண்டும் என்று சொல்லு கிறார்கள். நிரபராதிகள் கோர்ட்டுக்குச் சென்று . . , . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் அப்பொழுது கூறியது முக்கிய மாக வழக்கறிஞராக இருக்கும் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தான். இந்தச் சட்டத்தைப்பற்றி இப்பொழுது கூறும்போது, இது அரசியல் சட்டத்

திற்கு விரோதமாக இருக்கிறது என்று கூறுகிருர்கள். கனம் அங்கத்தினர் வழக்கறிஞராக இருப்பதால், அதை ஹை கோர்ட்டுக்கோ, சுப்ரீம் கோர்ட்டுக்கோ போய் நிலை நாட்டலாம்.

**திரு. செ. மாதவன் :** அந்தக் கருத்தைத் தான் சொல்ல நான் முன் வந்தேன். கோர்ட்டுக்குச் சென்று, வழக்கறிஞர் அமைத்து, வழக்கறிஞர் சாட்சிக் கூண்டில் நிற்பவரை எப்படித் திறமையாகக் கேள்விகள் கேட்கிருர்களோ, அதன் முடிவு தான் வழக்கின் முடிவும் என்பதையும், எல்லா வழக்கறிஞர்களும் திறமையானவர்கள், சாட்சிக் கூண்டில் இருக்கும் எல்லா சாட்சிகளும் உளறுவார்கள் என்ற நிலையை அமைச்சர் அவர்கள் எண்ணுகின்ருர்களா ? இப்படிப்பட்ட நிலையை ஏழைகளுக்கு ஏன் ஆக்கித் தருகிறீர்கள் என்று ஆளும் கட்சியினரை நான் தங்கள் மூலமாகக் கேட்கிறேன்.

வெள்ளைக்காரன் காலத்திலே, போலீஸ் நிலையத்திலே, தற்கொலை ஏற்பட்டால், போலீஸ் கைதியாக இருப்பவர்கள் இறந்துவிட்டால், அதைப் பற்றி விசாரிப்பதற்கு ரெவினியூ இலாகா அதிகாரி ஒருவரை நியமித்தார்கள். அதே சட்டத்தை இன்னும் வைத்துக்கொள்ளலாமா ? நீதிபதிக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்க ஏன் பயப்படுகிறீர்கள் ? அண்மையில், காங்கிரஸ் கட்சியினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் சட்டமன்றத் தொகுதியில், ஒரு ஹரிஜன், போலீஸ் "லாக்-அப்"பில் இருந்தவர், கிணற்றிலே தூக்கு போடப்பட்டு தொங்கவிடப்பட்டிருக்கிருர். அதன் விளைவு என்ன ஆகும் ? ஜுடிஷியல் என்க்வையரிக்கு ஏன் இந்த அரசாங்கம் பயப்படுகிறது ?

போலீஸ் இலாகாவிலே கட்டடம் கட்டுவதில் நடக்கும் ஊழல்களைப் பற்றி அடிக்கடி சொல்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் போலீஸ் காலனி கட்டக்கூடிய இடத்தை இரண்டாயிரம் ரூபாய் பெறக்கூடிய ஓரிடத்தை ரூ. 18,469 விலையில் அரசாங்கம் வாங்கியிருக்கிருர்கள். ரூ. 16,000 அதிகமாக கொடுத்திருக்கிருர்கள். அதே இடம் 1959-ம் ஆண்டில் ரூ. 3,000-த்திற்கு வாங்கப்பட்ட நிலம். அதே நிலத்திற்கு சர்க்கார் விலை ரூ. 18,469. 12—3—1963 அன்று இந்த மன்றத்தில், ஓராண்டுக்கு முன்னுல், முதல் அமைச்சர் அவர்கள் ஒரு உறுதி கொடுத்தார்கள். "இது பற்றி விசாரணை நடத்துகிருேம்" என்று சொன்ஞர்கள். ஓராண்டா இந்த விசாரணைக்கு ? ஏன் இப்படி லஞ்சத்தைக் கண்டு பயப்படுகிருர்கள் ? ஏன் இப்படி ஊழலைக் கண்டு பிடிக்க அரசாங்கம் தலையிட மறுக்கிறது. இதையெல்லாம் கவனிக்கவேண்டும், போலீஸ் இலாகாவினரைத் தங்களுடைய கட்சி நலனுக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற கொள்கையை முழுக்க முழுக்கக் கடைப்பிடிக்கவேண்டும், அந்த வகையில் ஆட்சியை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, உரையை முடிக்கின்றேன்.

**திரு. கே . பி. பழனி :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் உள்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த போலீஸ் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய கனம் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள், ஏதோ போலீஸ் வாயிலாக எதிர்க் கட்சிகளை அடக்குவதற்கும் ஒழிப்பதற்கும் அரசாங்கம் முயற்சிக்கிறது என்ற கருத்தை அவர்கள் பேசிஞர்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். எண்பது ஆண்டு வரலாற்றைப் பெற்ற நாங்கள், வெள்ளையரை எதிர்த்து வீரப் போர் புரிந்து வெற்றி கண்ட நாங்கள், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டிப் பொருளாதார வளர்ச்சிக்காக உழைத்து வருகின்ற நாங்கள், இந்த நாடு . . . . (கனம் அங்கத்தினர் எதிர்த் தரப்பிலுள்ள கனம் அங்கத்தினர்களைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தார்.)

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் பேசும்போது சபாநாயகரைப் பார்த்துப் பேச வேண்டும். மற்ெருரு கனம் அங்கத்தினரைப் பார்த்துப் பேசக்கூடாது. (சிரிப்பு.)





**திரு. கே. பி. பழனி :** போலீஸ்காரர்களை வைத்து, எதிர்க்கட்சிகளை அழிக்க வேண்டிய, ஒடுக்க வேண்டிய நிலையில் இல்லை என்பதை நான் முதன் முதலாக இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

போலீஸ் இலாகாவினுடைய அவசியம், அவர்களுடைய பணி பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை, சட்டத்தையும், ஒழுங்கையும், அமைதியையும் நாட்டில் நிலைநிறுத்தி, நாட்டு மக்களுடைய பாதுகாப்பிற்காகப் பணியாற்றக் கூடிய ஒரு இயக்கமாகும். போலீஸ் இலாகா உண்மையிலேயே இப்பொழுது வெற்றி பெற்றிருக்கிறது என்பது பற்றி, பல நிபுணர்கள் மத்தியிலே உரையாற்றிய நமது மதிப்பிற்குரிய, ஒப்பற்ற தலைவர் நேருஜி அவர்கள்,

The success of a Police officer lies wherever he may be stationed and whatever he may be doing in the measure he can obtain the co-operation of the people.

என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். என்று நாட்டு மக்களுடைய ஒத்துழைப்பு போலீஸ் இலாகாவுக்கு முழுமையாக இருக்கிறதோ அன்று தான் அந்த இலாகா வெற்றி பெற இயலும் என்ற கருத்து நமக்கு நன்ருகத் தெரிகிறது. அந்த ஒரு உதவி, ஒத்துழைப்பு இன்று நம்முடைய போலீஸ் இலாகாவுக்கு இருக்கின்ற காரணத்தால் தான் நம்முடைய சென்னை மாநிலம் இந்தியாவிலேயே முதன்மையான இடத்தை வகிக்கின்றது என்ருல் அது மிகை ஆகாது. சென்னை மாநில போலீஸ் இலாகாவில் பணியாற்றுகின்ற போலீஸ் அதிகாரிகளின் உண்மையான உழைப்பும், கடமையுணர்வும், பொறுப்புணர்ச்சியும் உண்மையிலேயே பாராட்டத் தக்கதாகும். தங்களுடைய வாழ்வைக் கூட அர்ப்பணித்து அவர்கள். . . .

**கனம் சபாநாயகர் :** அதிகாரிகளைப்பற்றி பொதுவாகச் சொல்லி விட்டு, கனம் அங்கத்தினர் மேலே பேசிக்கொண்டு போகலாம். அதிகாரிகளைப் பாராட்டுவதோ இகழ்வதோ கூடாது.

**திரு. கே. பி. பழனி :** இலாகாவைப் பாராட்டுகிறேன் ; தனிப்பட்ட அதிகாரியை அல்ல.

இன்று இந்தியாவிலேயே ஒரு தனிப்பட்ட மனிதனுடைய ஒரு விரல் ரேகையை வைத்து அந்தக் குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்கக்கூடிய நிலைமை மூன்று மாநிலங்களில்தான் இருக்கிறது. ஆந்திரம், மகாராட்டிரம், சென்னை ஆகிய மூன்று மாநிலங்கள்தான் அத்தகைய நிலையில் இருக்கின்றன. அந்த மூன்றில் கூட, திறமையான ஒரு ஆராய்ச்சி நடத்தி வெற்றி காணக்கூடிய அளவுக்கு நம்முடைய சென்னை மாநிலத்தில் தான் இருக்கிறது என்ருல், அது மிகை ஆகாது.

துப்பறியும் நாய் ஆசியா கண்டத்திலேயே நம்முடைய சென்னை மாநிலத்தில் இருக்கும் முறை முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது என்ற உண்மையும் உணர வேண்டிய ஒன்ருக இருக்கிறது.

இன்று நம்முடைய சென்னை மாநிலத்தில் ஏறத்தாழ 60 டெபுடி போலீஸ் சூபரின்டெண்டுகள் இருக்கிருர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனியான ஜீப் கார் இல்லாத நிலைமை இருக்கிறது. அவர்கள் நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமென்ருல், முடிந்தால் இன்ஸ்பெக்டர் அளவில் கூட, ஜீப் கார் கொடுக்க வேண்டியது இன்றியமையாத ஒன்று என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

போக்குவரத்து முறை, சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், நல்ல முறையில் கண்காணிக்கப்பட்ட போதிலும், "மொஃபஸல்" பகுதியில் போதிய அளவுக்குப் போலீசாரின் எண்ணிக்கை இல்லாத சிரமத்தை உணருகிருர்கள். எனவே, அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. கே. பி. பழனி] [18th March 1964

இன்றிருக்கும் போலீசாருடைய விகிதாசாரத்தைப் பார்க்கும்போது, 1,000 மக்களுக்கு .92 அளவில் இருப்பதாகத் தெரிகிறது. 1,000 மக்க ளுக்கு ஒரு போலீஸ் கூட இல்லை என்ற நிலைமை இருக்கிறது. இன்னும் நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால், போலீசாருடைய எண்ணிக் கையைச் சற்று அதிகப்படுத்த வேண்டும் என்ற உண்மையையும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் இலாகாவிலே இருக்கும் குற்றங்குறைகள், அவர்களுடைய தேவைகள், அவர்களுடைய சிரமங்கள் இவற்றைப் போக்கு வதற்காக ஒரு போலீஸ் கமிஷன் அமைத்தால் மிக நல்ல முறையில் இருக்கும் என்ற உண்மையையும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.

தஞ்சை மாநிலத்தைப் பொறுத்த வரையில், கடலோரப் பகுதியில் கள்ளக் கடத்தல் போன்ற நிலைமை இருக்கிறது. நம்முடைய போலீஸ் அதிகாரிகள் நல்ல முறையில் கள்ளக் கடத்தல் செய்யப்படும் சாமான்களைப் பிடித்தபோதிலும், அவர்கள் இந்த வகையில் இன்னும் நல்ல முறையில் செயல்பட அதிகமான வாகன வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பல கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டதைப் போல, கள்ளச்சாரா யத்தை ஒழிப்பதற்கு மது விலக்குச் சட்டத்தை அமுல் செய்வதற்கு நமது அரசாங்கம் இன்னும் கடுமையான, தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எடுத்துச் சொல் கின்றேன்.

இந்திய அரசாங்கத்தினுடைய குற்றப் பகுதிச் சட்டமானது உயர்ந்த ஒரு லட்சியத்தின் அடிப்படையில் அமைக்கப் பெற்றிருக்கிறது. "ஆயிரம் குற் றங்கள் செய்த ஒருவன் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துவிடலாம். அதே நேரத்தில், குற்றம் செய்யாத ஒரு நிரபராதி தண்டிக்கப்படுதல் ஆகாது" என்ற உயர்ந்த லட்சியத்தின் அடிப்படையில் அது உருவாக்கப் பட்டிருக்கிறது. அந்த லட்சிய உணர்வோடு பணியாற்றும் நம்முடைய போலீஸ் இலாகாவினர் இந்த மன்றத்தின் பாராட்டுதலுக்கு உரியவர்கள் என்று சொல்லி, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

**திரு. மா. இராசாங்கம் :** மன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் இலாகா மானியத்தின் மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணையையொட்டிச் சில கருத்துக்களை நான் சொல்ல முன் வந்துள்ளேன்.

போலீஸ்காரர்களுக்குத் தமிழில் காவலர்கள் என்று பெயர். சட்டத் தின் காவலர்கள் எந்தக் கட்சியையும் சாரக் கூடாது என்பது பொதுவான கருத்து. ஆனால், மாநகராட்சித் தேர்தலில், அடக்குமுறை அவிழ்ந்து மேய்ந்தது என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். கழகத்தின் முக்கிய செயல் வீரர்களை, எப்படிக் களத்திலே வீரனின் வில்லைப் பிடுங்கு கிறார்களோ, அதைப் போல, மாநாகராட்சித் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பூத் ஏஜெண்டுகளைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். ஆனால், வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்ற முறையில், இத்தனை வசதிக் குறைவுகளுக்கும் இடையில், நாங்கள்—வந் தோம் என்பதை நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எங்கெங்கே பூத் ஏஜெண்டுகள் கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரங்கள் தெரிந்திருந்தாலும் கனம் அங்கத்தினர் கூறலாம்.

**திரு. மா. இராசாங்கம் :** விவரங்கள் பற்றி நானே நேரடியாக சென்னை. . . ,

**கனம் சபாநாயகர் :** விவரங்கள் தெரிந்தால் கனம் அங்கத்தினர் சொல்லலாம். இல்லாவிட்டால் மேலே பேசிக்கொண்டு போகலாம். விவ ரங்கள் அவர்கள் சொல்வார்கள்.



18th March 1964]

**திரு. மா. இராசாங்கம் :** ஆனால், இதைச் சொல்லும்போது, போலீஸ் அதிகாரிகளைக் குறை சொல்ல நான் முன்வரவில்லை. எய்தவன் இருக்க அம்பை நொந்து பயன் இல்லை என்று எனக்குத் தெரியும். இதற் கெல்லாம் காரணமான மூலவிக்கிரகங்களைக் கண்டிக்கத்தான் நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காவ லர் சோரம் போனால் அங்கே நீதி சோரம் போகும் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் ஹிட்லரிடம் ஸ்டோம் ட்ரூபர்ஸ் என்ற ஒரு படை இருந்தது. அதை அதிரிடிப் படை என்று சொல்வார்கள். அந்த அதிரிடிப் படையை அவர் தனக்குப் பிடிக்காதவர்களை அழிக்கவே பழக்கிப் பயன்படுத்தி வந்தார். ஆனால் அந்தப் படையே அவரது அதிகார அந்தி நேரத்தில் அவரையே அழித்தது, ஒழித்தது என்பது வரலாறு சொல்லும் பாடம். அதுபோல இப்போது எதிர்க் கட்சிகளை அடக்கி, ஒடுக்க ஏவி விடப்படுகிற படையே நாளைக்கு உங்களுக்கு எதிராகத் திரும்பினால், அது உங்களையே அழித்துவிடும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** 'உங்களை' என்று என்னைச் சுட்டிக் குறிப்பிடுகிறார் களா கனம் அங்கத்தினர் ?

**திரு. மா. இராசாங்கம் :** உங்கள் மூலமாக அமைச்சர் அவைக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அங்கத்தினர் அவர்களுடைய கவலை எல்லாம் தங்களைப் பற்றியதுதான்.

**திரு. மா. இராசாங்கம் :** நான் உங்கள் மூலமாக ஆளும் கட்சியினரைக் கேட்டுக்கொள்வது அரசியல் சொக்கட்டானிலே போலீசாரைப் பகடைகளாக உருட்டாதீர்கள். அது மாறி விழுந்தாலும் விழும் என்பதை முன் எச்சரிக்கையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீசாரைப் பார்த்தால் முன்பெல்லாம் திருடர்கள் பயந்து ஒளிந்து போனார்கள். ஆனால், இப்பொழுதோ திருடனைப் பிடிக்கத் தெருவில் நிற்கிற போலீசாரிடத்தில், திருடனே வந்து சுருட்டுக்கு நெருப்பு கேட்கிற அளவு துணிச்சல் வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல. சுருட்டுக்கு நெருப்புக் கேட்டு வாங்குவதோடு திருடப்போகும் வீடு இருக்கும் தெருவுக்கு ரூட்டும் கேட்க ஆரம்பிக்கிறார்கள் என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்வேன்.

இந்த நிலைமை வந்ததற்குக் காரணமே போலீசார்களை நாம் வறுமை யில் வாட விட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதுதான். இன்றையதினம் அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒண்ணேகால் ரூபாய் படி தருகிறோம் என்றால் அது ஒரு வேளைச் சாப்பாட்டுக்கு ஆகுமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஒரு நேரச் சாப்பாட்டுக்குக் கூட அது போதாதே.

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் பேசுவது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. அவர். .

**கனம் சபாநாயகர் :** அதைக் கனம் அமைச்சர் பதில் சொல்லும்போது சொல்லிவிட்டால் போச்சு.

**திரு. மா. இராசாங்கம் :** நான் பாராட்ட வேண்டியதைப் பாராட்டு கிறேன். ஆனால் கண்டிக்க வேண்டியதை எதிர்க் கட்சியில் இருப்பதினால் கண்டிக்கத் தவறமாட்டேன். ஒண்ணேகால் ரூபாய் படி என்றால் அதைக் கொண்டு அவர்கள் மூன்று வேளைச் சோறு உண்டு தன் பணியை நிறை வேற்ற முடியுமா ? ஆகவே, அவர்கள் பிறர் கையை எதிர்பார்க்கிற நிலையில் தம் கடமையில் இருந்து தவற நேரிடுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். போலீசாரின் சேவை புனிதமானது. அதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளும்போதுதான் அவர்களிடத்திலே மக்களுக்கு மதிப்பும், மரியாதையும் பிறக்கும். போலீசார்களிடத்திலே மக்களுக்கு மதிப்பும், மரியாதையும் வரவேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள்,

[திரு. மா. இராசாங்கம்] [18th March 1964

திரு. கார்ச்சா கவுடர் பேசும்போது சினிமாப் படத்தைப்பற்றிச் சொன்னார்கள். சமீபத்திலே ஒரு படம் வெளிவந்திருக்கிறது. போலீசார் எப்படி உண்மையாகத் தம் கடமையைச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றியும் எப்படிக் குடும்ப ஆசையைக்கூட மறந்து இருக்கவேண்டுமென்பதைப் பற்றியும், பொதுமக்களிடத்தில் எப்படி அணுகவேண்டுமென்பதைப் பற்றியும்—அந்தப் படத்திலே காட்டப்படுகிறது. பொதுவாக எல்லா அமைச்சர்களும்—குறிப்பாக நமது செய்தித் துறை அமைச்சர் அவர்களும் அந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் என்று சொல்கிறேன்—விளம்பரத்திற்காக இல்லை—அந்தப் படத்தின் பெயர் அல்லி.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் சப்ஜெக்டை விட்டுவிட்டு, அல்லிக்குப் போய்விட்டார்களே. அடுத்து திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் பேசுவார். (கனம் திரு. ஆர். வெங்கட்ராமன்—கம்பா பேசப் போகிறார்). (சிரிப்பு).

* **திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன் வந்திருக்கிற போலீஸ் அல்லது காவல் துறை மானியத்தை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தசரதர் ஆட்சியிலே காவல் துறை எவ்வாறு நடந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர்:** நேரம் ஐந்து நிமிஷம்தான். தசரதரிடமே இருந்துவிட வேண்டாம். இங்கே சப்ஜெக்டுக்கு வந்துவிடவேண்டும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :**

"பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு."

என்று வள்ளுவர் கூறுகிறார். அதில் வேந்து அலைக்கும் கொல் குறும்பு என்ற நிலை சென்ற காலத்திலும் இல்லாதது இல்லை. நிகழ்காலத்திலும் இல்லாதது இல்லை. வருங்காலத்திலும் நிச்சயமாக இருந்தே தீரும். இந்த உலகத்தில் குறும்பு இல்லாத ஒரு நாடு என்றைக்குமே இருக்கப்போவதில்லை. அந்த நிலையில் ஆளுகின்ற ஆட்சிக்கு கடமைகள் அதிகரிக்கின்றன. நல்லதை வளர்க்க வேண்டும். கொடியதை விலக்கவேண்டும். அது நல்லாட்சியின் கடமையாக அமைகிறது. கெட்டதை விலக்க வேண்டுமென்றால், காவல்துறை அல்லது போலீஸ் இலாகா வேண்டியிருக்கிறது. அது எந்த நாட்டிலும் இருந்து வந்திருக்கிறது. அதில் மாறுபட்ட கருத்து யாருக்குமே இருக்கமுடியாது.

எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் கூறிய கருத்துக்களை நான் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டு இருந்தேன். அவர்கள் காவல் துறை இயக்கத்தை வரவேற்கிறார்கள். ஜனநாயக ரீதியில் இயங்குகின்ற சர்க்கார் அவர்கள் அத் துறையினரைப் பற்றிக் கூறுகின்ற கருத்துக்களை எல்லாம் வரவேற்க வேண்டும். சகித்துக்கொள்ளத்தான் வேண்டும். வேறு ஒரு வழி அதற்குக் கிடையாது.

இருந்தாலும்கூட போலீஸ் நாய் என்ற ஒரு வார்த்தையைச் சுட்டிக் காட்டினார்கள். எதையும் தப்பாகப் பொருள் கொள்ளலாம். மக்களோ, மற்றவர்களோ அதற்கு போலீஸ் இலாகாவினரால் இயக்கப்படுகிற நாய்கள் என்றுதான் பொருள் கொள்கிறார்கள்.

நாய்களைப் பற்றி—

"யானை அனையார் நண்பு ஒரீஇ நாய் அனையார்
கேண்மை கெளீக்கொளல் வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்
எறிந்த வேல் மெய்யதா வால்குழைக்கும் நாய்."

என்று நீதிநெறி விளக்கப் பாடலைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அன்புக்கும், நட்புக்கும் மிகச் சிறந்தது நாய்.

**கனம் சபாநாயகர் :** அவர் ஒன்றும் நாயைக் குறைத்துச் சொல்லவில்லை.



18th March 1964]

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** அடுத்தபடியாக மது விலக்கைப் பற்றி ஒரு கருத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பத்திரிகைகளில்கூட அடிக்கடி வந்தது. ஈரோடு பற்றிப் பேசப்படுகிறது.

**கனம் சபாநாயகர் :** ஈரோடுக்கு எப்பொழுதுமே பேர் இருக்கிறதே.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஏதோ செய்தார் என்றால், அங்குள்ளவர்கள் அத்தனை பேர்களுமா குடித்துவிட்டு இருக்கிறார்கள் ? அப்படி ஒன்றும் இல்லை. இது எல்லாம் இலாகாவினர் கவனிக்கவேண்டிய காரியம். (சிரிப்பு).

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதில் சிரிப்பதற்கு ஒன்றும் இல்லை. இந்த விஷயங்களை எல்லாம் அதிகாரிகள் நன்றாக உணர்ந்து இருக்கிறார்கள். ஒன்றும் பெரிதாகப் போய்விடவில்லை. என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை அதிகாரிகள் எடுத்து வருவதனால் அதைப் பற்றி அதிகம் தாம் சொல்ல வேண்டியதில்லை என்ற கருத்திலேதான் சொன்னார்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதுதான் நான் சொன்னதும். இதில் சிரிப்பதற்கு ஒன்றும் இல்லை. நாம் இன்றைய தினம் ஜனநாயகசோஷலிசம் என்ற குறிக்கோளை நோக்கிச் செல்கிறோம்.

ஈரோட்டில் மற்றொரு சப்இன்ஸ்பெக்டர் மது விலக்குக் குற்றத்தைக் கண்டுபிடிப்பதற்காகச் சென்றவர் ஆற்றில் விழுந்து இறந்த சம்பவம் மிகவும் துக்ககரமானது ஆகும். அது பற்றி எனது ஆழ்ந்த அனுதாபத்தை இந்த சபையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்பு முடியாட்சி என்று சொன்னோம். இப்போது ஜனநாயக ஆட்சி என்று சொல்கிறோம். முடியாட்சியாக இருந்தாலும், ஜனநாயக ஆட்சியாக இருந்தாலும் அந்த ஆட்சிக்கு இரண்டு விதமான நிலைமைகள் உண்டு. இலக்கிய மரபில் தண்அளி என்று சொல்வது ஒன்று. அடுத்தது ஆக்ஞை. தண் அளி என்று சொல்லப்படுவதை அரசனுடைய வெண்கொற்றக் குடை என்றும் ஆக்ஞை என்பதை அரசனுடைய சக்கரம் என்றும் கூறுவது இலக்கிய மரபு. அந்த வகையில் கம்பன் கூறுகின்ற இரண்டொரு பாடல்களை . . . .

**கனம் சபாநாயகர் :** ஒரு பாட்டைச் சொல்லி முடித்துவிடலாம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** தசரதனுடைய ஆட்சி எவ்வாறு இருந்தது என்பதைக் கூறுகின்ற கம்பன் மிக அருமையான ஒரு உட்கருத்தைக் கூறுகின்றான். அதிலே தசரதனுடைய வெண்கொற்றக் குடை எப்படி அமைந்திருந்தது என்பதைக் கம்பன்,

"மண்ணிடை உயிர்தொறும் வளர்ந்து தேய்வின்றி
தண்நிழல் பரப்பவும் இருளைத் தள்ளவும்
அண்ணல்தன் குடைமதி யமையுமாதலால்
விண்ணிடை மதியினை மிகையிதென்னவே."

என்று கூறுகின்றான். ஒரு ஆட்சியினுடைய குறிக்கோள் அல்லது அது இயங்குகின்ற வகை எவ்வாறு இருக்க வேண்டுமென்றால்—'மண்ணிடை உயிர்தொறும் வளர்ந்து' என்று சொல்லுகிறான். அதாவது ஆறறிவுடைய மக்கள் முதல், சரம், அசரம் என்று பகுத்துக் கூறக்கூடிய ஓரறிவுள்ள இனங்கள் முதல் ஆறறிவுடைய மக்கள் இனம்வரை தாங்குதல் அரசனுடைய பொறுப்பு என்று கம்பன் கூறுகின்றான்.

**கனம் சபாநாயகர் :** சீக்கிரம் முடித்துவிட வேண்டும்.

[18th March 1964

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** அடுத்தப் பாட்டுத்தான் காவல் துறைக்கு உகந்த பாட்டு,

" குன்றென உயரிய குவவுத் தோளினன்
வென்றியந்திகிரி வெம்பரிதியாமென
ஒன்றென உலகிடை வுலவி மீமிசை
நின்நின்று உயிர்தொறும் நெடிதுகாக்குமே."

ஆக்ஞா சக்கரம் என்று சொல்லக்கூடிய தசரதனுடைய ஆக்ஞையானது எவ்வாறு அந்த நாட்டு மக்கள் இனத்திலே செயல்பட்டது என்று சொல்லக் கூடிய கம்பன்,

" நின்றுநின்று உயிர்தொறும் நெடிதுகாக்குமே. "

ஒவ்வொரு உயிரிடத்திலும் ஆக்ஞா சக்கரம் புகுந்து அவற்றிற்கு வருகின்ற இடுக்கண்களைக் களைந்து, அவற்றிற்கு வருகின்ற அச்சத்தைக் களைந்து, வாழ்க்கையில் ஒரு உறுதிப்பாட்டை அளித்து, அந்த வகையில் ஒப்பற்ற வளப்பத்தைக் கொடுத்தது என்று சொல்கிறான் கம்பன்.

* **திரு. மு. கருணாநிதி :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, போலீஸ் அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் மானியம் கோரப்பட்டு எங்கள் கட்சி நண்பர்களால் அளிக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில கருத்துக்களைக் கூறிக் கொள்வதற்கு விரும்புகிறேன். இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் காலையிலிருந்து விவாதம் சிறிது சிறிதாகச் சூடேறி, தங்களுடைய குறுக்கீடுகளால் அந்த சூட்டோடு சுவையும் ஏறி, விவாதம் ஏறத்தாழ இறுதிக் கட்டத்திலே வந்து நின்றுகொண்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** இந்த நேரத்தில் கொஞ்சம் சூடு குறைந்திருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் போலீஸ் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, போலீஸ் இலாகாவைப் பற்றித் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள்ளேயே முரண்பாடான கருத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதைப் பற்றி அவர்கள் அவர்களுடைய பேருரையிலே விளக்குவதற்கு முன்னதாக, இந்தக் கருத்துக்களும் பயன்படும் என்பதற்காக அந்த விளக்கத்திற்கு ஏதுவாக அது பற்றி நான் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை போலீஸ் இலாகாமீது தனிப்பட்ட எந்தவிதமான வெறுப்புணர்ச்சியும், என்றைக்கும் இருந்தது கிடையாது. போலீஸ் இலாகாவின் அரும்பெரும் செயல்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறது ; அதே நேரத்தில் போலீஸ் இலாகா தவறான வழிகளிலே செல்லுகின்ற நேரத்தில் சுட்டிக் காட்டுகின்ற அந்தச் செயலையும் புரிந்துகொண்டிருக்கிறது. இதே மன்றத்திலே 1962-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் என்று கருதுகிறேன்—போலீஸ் மானியத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகின்ற நேரத்திலே, அமைச்சர்களும், மற்றவர்களும், போலீஸாரை இந்த அளவுக்குப் பாராட்டி உங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள எண்ணுகிறீர்களா என்று கூடக் கேட்டார்கள். நான் பாராட்டுரைகளை வழங்கிவிட்டு, இருக்கிற குறைபாடுகளையும் அப்போதே எடுத்து உரைத்தேன். நாங்கள் நல்லவைகளைப் பாராட்டவும் செய்வோம் ; தீயவைகளைக் கண்டிக்கவும் செய்வோம். அதுதான் ஒரு நாணயமான எதிர்க் கட்சிக்கு உரிய இலக்கணம். அந்த நாணயமான இலக்கணத்தின் அடிப்படையிலேதான் இன்றையதினம் இந்த விவாதத்திலே கலந்துகொண்ட திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தங்கள் எண்ணங்களை இந்தக் கருத்தரங்கிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, போலீஸ் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அதிலே எந்தவிதமான முரண்பாடான கருத்துக்களும் இல்லையென்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

போலீஸ் இலாகா 35,000 பேர் பணி புரிகின்ற ஒரு பெரும் இலாகா. இந்தப் போலீஸ் இலாகாவில் ஏறத்தாழ, 25,000 கான்ஸ்டபிள்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய குறைபாடுகள் இந்த மானியத்தின் மூலமாக



18th March 1964] [திரு. மு. கருணாநிதி]

நீக்கப்பட வேண்டுமென்கிற கருத்தினை ஒட்டித்தான் இந்த வெட்டுப் பிரேரணை கொடுக்கப்பட்டிருக்கிறது. மாமன்றத்தின் மரபின்படி வெட்டுப் பிரேரணை என்று குறிப்பிட்டாலும் அளிக்கப்பட்டுள்ள 8,20,22,000 ரூபாவிலிருந்து தொகையைக் குறைக்க வேண்டுமென்பதல்ல பொருள். வெட்டுப் பிரேரணை என்பதை ஒட்டுப் பிரேரணை என்று திருத்திக்கொண்டால் கூடப் பொருத்தமாக இருக்கும். மேலும் மானியத்தொகையை அதிகரித்து போலீஸ் அதிகாரிகள், போலீஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோருக்கு வசதிகளைப் பெருக்க வேண்டும் ; வாய்ப்புகளை அதிகமாக ஆக்க வேண்டும் என்பதற்காகத்தான், இந்தக் கருத்துரைகளை நாங்கள் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழகத்திலே இருக்கின்ற போலீஸ் இலாகா மற்ற மாநிலங்களில் இருக்கின்ற இலாகாக்களை விடச் செவ்வனே பணிபுரிந்துவருகின்ற இலாகா என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்தச் சிறப்புப் பெயருக்குத் தமிழக போலீஸ் இலாகா தன்னை உரிய இலாகாவாக ஆக்கிக்கொண்டிருக்கிறது. கடந்த முறை உயர்திருவாளர் முன்னாள் முதலமைச்சர் காமராஜர் அவர்கள் கையில் இருந்த அந்த இலாகா இப்போது கனம் திரு. கக்கன் அவர்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாக நான் உணரவில்லை. அந்த இலாகாவை ஒரே சக்திதான் இன்றையதினமும் ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் உணருகிறேன். இந்த இலாகாவிலே இருக்கிற குறைபாடுகளையும், இந்த இலாகாவிலே பணி புரிகின்ற போலீஸ் அதிகாரிகள், போலீஸ் நண்பர்களுக்கு இருக்கின்ற உளைச்சல்களையும், அவர்களுக்குத் தேவையான வீட்டு வசதி, குடும்ப வசதி இவைகளுக்குத் தேவையானவை பற்றியும் இந்த மாமன்றத்தின் மூலமாக எடுத்துச் சொல்லுவது முறை என்ற காரணத்தால்தான் அந்தக் குறைபாடுகளை எல்லாம் இந்த மானியக் கோரிக்கை வருகின்ற காலத்திலே எல்லாம் எதிர்க் கட்சிக்காரர்களால் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் போலீஸ் இலாகாவைப் பாராட்டினார்கள். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் போலீஸ் இலாகாவைப் பாராட்டினார்கள். இந்தப் பாராட்டுகளினால் தம்முடைய வாழ்வு குளிர்ந்துவிட்டது, வறுமை நீங்கிவிட்டது என்று எண்ணி போலீஸ் நண்பர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை.

ஒரு போலீஸ்காரருக்குத் தரப்படுகின்ற மாதச் சம்பளம், அவர்களுக்குத் தரப்படுகின்ற யூனிபாரம் அலவன்ஸ், வைத்திய வசதிகள், கல்வி வசதிகள் இவ்வளவும் சேர்ந்து ஒரு போலீஸ்காரருக்கு மாதத்திலே கிடைக்கின்ற பெரும் தொகை ஏறத்தாழ 102 ரூபாய்தான். அந்த 102 ரூபாயில் அவர்கள் இந்தக் காலத்திலே தங்களுடைய வாழ்க்கையைச் செவ்வனே நடத்திச் செல்ல முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கிற வீட்டை நான் வீடு என்றுகூற மாட்டேன் உண்மையில் சொல்ல வேண்டுமானால், போலீஸ்காரர்களுடைய கூடு என்றுதான் குறிப்பிட வேண்டும். அப்படிப்பட்ட சிறிய இடங்களில் அவர்கள் இன்றையதினம் தள்ளி அடைக்கப்பட்டிருக்கிறார்கள். குடியிருப்பு வசதிகள் பெருக்கப்பட வேண்டும், கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகளில் மேலும் வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை இந்த மாமன்றத்திலே பல தடவை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

நான் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்டுக்கொள்வேன். பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும் போலீசார் வீட்டுப் பிள்ளைகள், சலுகைகளைப் பெற்று அந்தக் கல்லூரிகளில் அவர்கள் பயில்வதற்கான வசதிகளை அமைச்சரவை செய்து தரவேண்டுமென்று என் கோரிக்கையை நான் இந்த நேரத்தில் இங்கு எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலாளர்களைப்போன்று ஏழு அல்லது எட்டு மணி நேரம் வேலை செய்யக்கூடியவர்கள் அல்ல இவர்கள். போலீஸ்காரர்கள் அதிக நேர வேலை செய்கிறார்கள். அவர்கள் செய்யும் அதிக நேர வேலைக்காக ஓவர் டைம் அலவன்ஸ் எதுவும் அவர்களுக்கு கொடுப்பதாக தெரியவில்லை. அவைகளை போலீஸ் நண்பர்களுக்கு அளிப்பதற்கு இந்த அமைச்சரவை அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒழுங்கை மீறி போலீஸாரை, அவர்கள் கடமையிலிருந்து நழுவச் செய்யும் எந்தக் காரியத்திலும் எந்த நேரத்திலும் ஈடுபட்டது கிடையாது. போலீஸாரைப் பாராட்டி இங்கு, 1962 ஜூலை என்று கருதுகிறேன், பேசிய நேரத்தில் அப்போதிருந்த முதல் அமைச்சர் உயர்திருவாளர் காமராஜ் அவர்கள் குறுக்கிட்டு "போலீஸாரை மிரட்டாதீர்கள், நீங்கள் போலீஸாரை மிரட்டுகிறீர்கள், அப்படி மிரட்டிவிட்டு பத்திரிகைகளில் எழுதுகிறீர்கள் கூட்டங்களில் மிரட்டிப் பேசுறீர்கள்" என்று சொன்னார்கள். உடனே நான் பதில் சொன்னேன், மிரட்டக்கூடிய அதிகாரம் எங்களுக்கு இல்லை, எங்களுக்கு மிரட்டவேண்டிய அவசியமும் இல்லை. அப்படி நாங்கள் ஏதாவது மிரட்டியிருக்கிறோம் என்றால் ஏதாவது ஆதாரம் தர முடியுமா? என்று நான் கேட்டேன். உண்மையிலேயே . மிரட்டிக்கொண்டிருப்பவர்கள்; யார் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பெப்ரவரி 25-ம் தேதி சென்னை கடற்கரையில் நடத்தப்பட்ட கூட்டத்திற்கு சர்க்கார் சுருக்கெழுத்தாளர் சென்றிருக்கமாட்டார் என்று கருதுகிறேன். இதிலிருந்து யார் போலீஸை மிரட்டுகிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். காங்கிரஸ், கம்யூனிஸ்ட், தமிழ் தேசியக் கட்சி இம்மூன்றும் சேர்ந்து தேசீய அணி என்று ஒரு அணி பிரகடனப் படுத்தப்பட்டது. அந்த தேசீய அணியின் சார்பாக நடத்தப்பட்டக் கூட்டத்தில், ஒரு நண்பர் என்ன பேசுகிறார் என்றால்—மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்கள், திரு. நஞ்சுண்டராவ் அவர்கள் பேசும்போது போலீஸ்காரன் என்று சொல்வது சரியல்ல என்று சொன்னார்கள். அதை நான் மரியாதையோடு, ஏற்றுக்கொள்கிறேன்.—இந்த நிலைமையில், அந்த நண்பர் பேசுகிறார் . . . . " ஏ போலீஸ்கார—அடுத்த மூன்று எழுத்துக்களை நான் சொல்லவில்லை, அப்படியே விட்டுவிடுகிறேன்—உனக்கு ஏன் காக்கிச் சட்டை, உனக்கு ஏன் சிவப்பு தொப்பி, உனக்கு ஏன் பூட்ஸ், உனக்கு ஏன் கால் சட்டை, இத்தனையும் கழற்றி கொடுத்துவிட்டு, கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு போடா " என்று கடற்கரைக் கூட்டத்தில் பேசப்பட்டது என்றால், யார் போலீஸாரை மிரட்டுகிறார், எந்த அளவுக்கு அவர்கள் மிரட்டப்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி மிரட்டப்படுகின்ற காரணத்தினால்தான், என்னுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், தேர்தல் நேரத்தில் சென்னை நகரில் நடந்த அல்லோலங்களைப்பற்றி, தேர்தலுக்கு முதல் நாள் என்னென்ன நடந்தது, யார் யார் எந்தெந்த வகையில் கைது செய்யப்பட்டார்கள் என்பதை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். கைது செய்யப்பட்டவர்கள் ஏதோ ரௌடி பட்டியலில் சேர்ந்தவர்கள் என்று சொல்லி பூசி மழுப்பி விடுவதால் உண்மைக்கு மதிப்பும் கண்ணியமும் கொடுத்ததாகி விடாது. துளசிங்கம் என்ற கௌன்சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அவரும் ரௌடி லிஸ்டில் இருப்பவர்கள் என்று சொல்லி பூசி மழுப்பி விடுவது எந்த அளவுக்கு நியாயம் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேர்தல் காலத்தில் நடைபெற்ற சொற்பொழிவின் காரணமாக என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இதைப்பற்றி நான் இந்த மன்றத்திலேயே குறிப்பிட்டு சொன்னேன். வெளியில் கூட்டங்களில் ஆளும் கட்சியினரின் சார்பாக பேசிய பேச்செல்லாம் எங்கே கொண்டுபோய் விடுகின்றன என்பதைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னேன். ஆனால் அடுத்த ஒரு வாரத்திற்குள்ளாக வெளியில் நடந்த பேச்சுக்களின் நிலைமை எங்கே போய் முடிந்தது என்பதை நாம் நன்றாக அறிவோம். ராஜாஜி வீட்டில் கொலை வெறியன் நுழைந்தான் என்ற நிலை அப்படிப்பட்ட வெறியுணர்ச்சியை தூண்டிவிடுகின்ற அளவுக்கு பொதுக்கூட்டங்களில் ' கொல்லுங்கள், குத்துங்கள் ' என்று பேசக் கூடிய அளவுக்குப் பேச்சுக்கள் எல்லாம் அன்றையதினம் அனுமதிக்கப் பட்டது. ஏதோ இன்றைக்கு அந்தக் கொலை வெறியன் பைத்தியக்காரன் என்று கூறிவிடலாம். உண்மையிலேயே பைத்தியக்காரன்தான் வெறியுணர்ச்சிக்கு ஆளாகக்கூடும். பைத்தியக்காரன் அல்லாமல் அறிவாளியா வெறியுணர்ச்சிக்கு ஆளாவான்? பைத்தியக்காரன் இல்லாமல் புத்திசாலியா வெறியுணர்ச்சிக்கு ஆளாவான்? வெறியுணர்ச்சிக்கு ஆளாகின்றவன் பைத்தியக்காரன்தான். அப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனம் இன்





றைய தினம் நாட்டில் பரவலாக அதிலும் வேகமாக ஏற்படுவதற்கு இந்தப் பேச்சுக்கள் காரணமாக இருக்கின்றன. அவைகள் எல்லாம் தடுக்கப்பட வேண்டும் என்று இதே மாமன்றத்தில் என்னால் எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்காக நான் மிக மிக வருந்துகிறேன்.

இன்னொரு நிகழ்ச்சியையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 16-ம் தேதி காலையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. அதைச் சொல்வதின் மூலமாக போலீஸ் எந்தவிதமாக பட்சபாதமாக நடக்கவேண்டும் என்று ஆளாக்கப்பட்டிருக்கிறது—பட்சபாதமாக நடக்கிறார்கள் என்று நான் சொல்ல மாட்டேன், பட்சபாதமாக எந்த அளவுக்கு நடக்கவேண்டும் என்று தூண்டி விடப்படுகிறது என்பதைக் காட்டுவதற்காக இதை நான் சொல்லுகின்றேன். 16-ம் தேதி காலை 10½ மணிக்கு, மயிலாப்பூரில் திரு. கபாலி என்பவரின் கடைக்கு அருகாமையில், மந்தவெளியில், ஒரு நண்பர் காரில் வந்து கொண்டிருந்தார். அவர் வந்து கொண்டிருந்த கார், அதன் முன்னால் சென்று கொண்டிருந்த ரிக்ஷாவின் மீது மோதி ரிக்ஷா அடிபட்டது. கார் ரிக்ஷாவில் மோதியதும், ரிக்ஷாக்காரன் அடிபட்ட வேகத்தில் பொறுமையிழந்து காரில் வந்தவரைப் பார்த்து ஏதோ சொல்ல, காரில் வந்தவர் கீழே இறங்கி அந்த ரிக்ஷாக்காரரை செருப்பால் அடிக்க கையை ஓங்கியிருக்கிறார், இதற்குள் அங்கு கூட்டம் கூடியது. கூட்டம் கூடியதும், காரில் வந்தவர் ' நீங்கள் எல்லோரும் போய்விடுங்கள், இல்லையென்றால் நான் இங்கேயே மறியல் செய்வேன் ' என்று சொல்லி சாலையின் குறுக்கே படுத்து ஒரு மணி நேரம் மறியல் செய்து போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தியிருக்கிறார். இத்தனையும் நடந்த பிறகு இந்த சம்பவத்திற்காக கைது செய்யப்பட்டது யார் தெரியுமா? பரிதாபத்திற்குரிய அந்த ரிக்ஷாக்காரன், ஒரு பாவமும் அறியாது காயமடைந்த அந்த ரிக்ஷாக்காரன். இதைப்பற்றி மேலும் விசாரித்ததில், அந்தக் காரில் வந்தவர், அங்கிருந்தவர்களிடம் " நான் யார் தெரியுமா? நான் ' தூக்குமேடை 'யாக்கும், என்னை ஒருவரும் ஒன்றும் செய்துவிட முடியாது " என்று சொல்லி அங்கிருந்து தப்பித்துக்கொண்டிருக்கிறார். (எதிர்க்கட்சி தரப்பிலிருந்து—ஷேம், ஷேம் . . . இந்த விதமாக பட்சபாதமான நிலைமை சென்னை மாநகரத்தில் நடைபெறுகிறது என்பதைத்தான், காந்தியடிகளின் வழியில் நடந்து வந்ததாகக் கூறுகின்ற இந்த அமைச்சரவைக்குச் சொல்லவிரும்புகிறேன். இதைத்தான் முரண்பாடு என்று எங்கள் கட்சி உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்களே தவிர, எங்களிடம் முரண்பாடு இருப்பதாக தயவு செய்து யாரும் எண்ணவேண்டிய தேவையில்லை.

இன்னும் நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், எல்லா மாவட்டங்களிலும் நீதி நிர்வாக அதிகாரம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னையைப் பொறுத்தவரையில் பிரிக்கப்பட்டிருக்கிற நிலைமை இல்லை. எங்கள் கட்சி உறுப்பினர் திரு. மாதவன் அவர்கள் எடுத்துச் சொன்னது மாதிரி, நகரில் 151-வது பிரிவின் கீழ் திடீர் திடீர் என்று பலர் கைது செய்யப்படுகிறார்கள். இதனால் ஏற்படுகின்ற தவறுகளைப்பற்றிச், சுட்டிக்காட்டி, உயர்நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை வழங்கியிருப்பதையும் நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், ரிமாண்டில் வைப்பதற்கு இருக்கின்ற அதிகாரம் நீதிபதிகளிடம் இருப்பது இல்லை. போலீஸ் கமிஷனரிடத்தில் இந்த அதிகாரம் வைக்கப்பட்டிருக்கிறது. அரசியல் காரணங்களால் இது துர்வினியோகப்படுத்தப்பட ஏது இருக்கிறது. இப்போது துர்வினியோகப்படுத்தப்படுகிறது என்று சொல்லவரவில்லை, அப்படி சொல்ல நான் தயாராக இல்லை. ஆனால் துர்வினியோகப்படுத்துவதற்கு ஏது ஏற்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய நிலைமையில் இருக்கின்ற கஷ்டங்களைப்பற்றி நீதிபதிகளும் அடிக்கடி அங்கங்கே கூறியிருக்கிறார்கள். அதைப் பற்றி அமைச்சரவை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாவட்டங்களில் எல்லாம் எவ்வாறு இந்த அதிகாரம் பிரிக்கப்பட்டு இரு[illegible]தோ அந்த அளவுக்கு சென்னை நகரத்தைப் பொறுத்தவ[illegible], பிரிக்கப்பட்டு, ரிமாண்ட் வழங்குவது, காவலில் வைப்பது இ[illegible]லாம் நீதிபதியின் பொறுப்பாக இருக்கும்படியான அளவில் மாற்ற[illegible]ம் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் எப்படிப் பட்சபாதமாக நடந்து கொள்கிறது என்பதை காட்டுவதற்காக இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கோவை மாநகரத்திற்கு அருகே ஏறத்தாழ 5,000 ரூபாய்க்கு பிராந்திப் புட்டிகள் பிடிக்கப்பட்டன என்ற செய்தி இண்டு, மூன்றுநாட்களாக ஏடுகளில் வந்தது. அந்தக்காரில் வந்தவரிடம் இருநத கடிதத்தில் சென்னையிலுள்ள சினிமா அதிபர்—அரசியல் கட்சித் தலைவராக இருப்பவர்—அவருடைய விலாசமும் இருந்ததாகவும் கூறப்பட்டது. பின்னால் இதுபற்றி எந்த விதமான செய்தியும் வரவில்லை. நான் கேட்க விரும்புவது, ஏன் அதன் பின்னும் இந்தச் செய்திகள் வெளியே வரவில்லை ? அவர் காங்கிரசை ஆதரிக்கும் அரசியல் தலைவர் என்ற காரணத்தினலா ? ஒரு வேளை "மனிதன் மாறிவிட்டான்," என்று மன்னித்துவிட்டீர்களா ? அல்லது போனால் போகட்டும் போடா" என்று விட்டு விட்டீர்களா ? ஏன் அந்த பெயர் வெளியே வரவில்லை ? அந்த பெயர் மட்டும் இன்றைக்கு எதிர் கட்சியைச் சேர்ந்ததாக இருந்தால், போலீஸ் இலாகாவினர் மூலமாக இதற்கு முன்னால் கொட்டை எழுத்துக்களில், பத்திரிகைகளில் பிரசுரித்து விட மாட்டார்களா ? ஏன் இது மூடி மறைக்கப்பட்டிருக்கிறது ? இதற்கான காரணங்களை தயவு செய்து அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு எம். பக்தவத்சலம் :** இதற்கு கனம் எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் பதில் சொல்லவேண்டும். பத்திரிகையில் இந்தச் செய்தி போடப்படவில்லை என்றால் அதற்கு அரசாங்கம் உடனே என்ன காரணம் என்பதைக் கூற முடியாது. இதில் நிலைமை என்னவென்றால், திடீரென்று இதைப்பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது இதற்கான தகவல்கள் அமைச்சர்களிடத்தில் இருக்காது. தனியாக இதைப்பற்றி கேள்வி கேட்டால் விவரங்களைச் சொல்லமுடியும். ஆகவே அரசாங்கம் இதை மூடி மறைக்கிறது என்று சொல்வதை மட்டும் எடுத்துக்கொண்டு, உண்மையிலேயே அரசாங்கம் மூடி மறைக்கப்பார்க்கிறது என்கின்ற தப்பான அபிப்பிராயம் ஏற்படுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் தலையிட்டு இதைக் குறிப்பிடுகிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** இதற்குப் பிறகாவது அரசாங்கம் உடனடியாக கவனிக்கும் என்று மனதார நம்புகிறேன். கள்ளக் கடத்தல் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில், சில இடங்களில் போலீஸ் துறையினர், கள்ளக்கடத்தல் பேர் வழிகளுக்குத் துணையாக இருக்கின்றார்கள் என்கின்ற குற்றச்சாட்டை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். நான் அந்தக் குற்றச்சாட்டை கூறுவதற்கு காரணம், 10 லாரிகளில் கள்ளத்தனமாக சரக்குகள் கொண்டு போகப்பட்டால், அவைகளை எல்லாம் விட்டுவிட்டு, ஒரு லாரியின் மீது வழக்குப் போடுவதும், இதைமட்டும் வைத்துக்கொண்டு, அந்தப் பகுதியிலுள்ள போலீஸ் இலாகாவினர் திறமையாக பணியாற்றுகின்றனர் என்று சொல்லக் கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. போலீஸ் இலாகாவினர் அடிக்கடி கள்ளக் கடத்தலில் உடந்தையாக ஈடுபடுகிறார்கள் என்ற செய்தி அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையைச் சீர்படுத்துகின்ற வகையில், போலீஸ் இலாகாவில் இருக்கின்ற திறமையான ஒற்றர்கள் மூலமாக தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கருப்புப்பணம் பற்றி, அண்மை காலமாக, அடிக்கடி பேசப்
1 00 p.m. பட்டு வருகிறது. கருப்புப்பணத்தைப்பற்றி முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் அகில இந்திய காங்கிரஸ் தலைவரும், நமது சட்டமன்ற உறுப்பினருமான திரு. காமராஜ் அவர்கள் ஒரு யோசனையை வழங்கியிருக்கிறார்கள். தஞ்சை பொதுக் கூட்டம் என்று கருதுகிறேன்—கருப்புப் பணம் யார் யார் வீட்டிலே இருக்கிறதோ, அங்கெல்லாம் தொண்டர்கள் வேலைக்காரர்களாகச் சேர்ந்து கருப்புப் பணம் இருக்கிற இடத்தைக் கண்டுபிடித்துக் கொடுங்கள், நாங்கள் அவர்களை சட்டப்படி வழக்கு மன்றத்தில் நிறுத்துகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். வேடிக்கையாக அந்தக் காலத்தி[illegible] கூறுவார்கள், போலீஸ்காரர்களைக் கிண்டல் செய்யக்கூடிய முறையில் "[illegible]னை பிடித்துக் கொடு நாங்கள் கையில் விலங்கு மாட்டுகிறோம்" என்[illegible]மது மாநிலத்தில் முதல் அமைச்சராக இருந்து, இன்றைய தினம் [illegible]ரஸ் அக்ரா





சனராக இருக்கிற திரு. காமராஜர் வெளியிட்டிருக்கிற திட்டம் ஆபத்தானது என்று கருதுகிறேன். ஏனென்றால் போலீஸ் இலாகாவிலே துப்பறியும் நிபுணர்கள் இருக்கிறார்கள். போலீஸ் இலாகாவிலே திறமையான ஸி.ஐ.டி.க்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு திறமை இல்லை என்று திரு காமராஜர் ஏற்றுக்கொண்டாரா ? அதைத் தான் சுட்டிக் காட்டுகிறாரா ? கருப்புப் பணம் இருக்கிற முதலாளிகளிடத்தில் வேலை ஆட்களாகச் சேர்ந்து பணியாற்றுங்கள் என்று சொல்லும்போது, அவரது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, கருப்புப் பணம் வைத்திருக்கிறவர்கள் கொஞ்சம் பத்திரமாக இருங்கள், வேலைக்காரர்கள் போல யாராவது வந்தால் நம்பாதீர்கள் என்று அவர்களுக்கு எச்சரிக்கை விடுகிறாரா என்று எனக்குப் புரியவில்லை.

நான் கடைசியாகக் குறிப்பிடுகிற நேரத்தில் நண்பர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் அரங்கண்ணல் அவர்களும் எடுத்துத் தெரிவித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், மற்றும் வேறு எதிர் கட்சிக் கூட்டங்களுக்கு சுருக்கெழுத்தாளர்கள் அனுப்பப்படுகிறார்கள். காங்கிரஸ் கட்சி கூட்டங்களுக்கு சுருக்கெழுத்தாளர்கள் வருவதில்லை. இந்த அமைச்சரே ஒத்துக்கொண்டிருக்கிறார், வழக்கு மன்றங்களிலும் இது ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நான் இரு தரப்புக் கூட்டங்களுக்கும் சுருக்கெழுத்தாளர்கள் வருவது நல்லது என்று கருதுகிறேன். ஆளும் கட்சியின் நன்மைக்காகக்கூட அது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எந்த அளவுக்கு மற்ற கட்சிக்காரர்களைத் தாக்கி, மட்டமாகப் பேசுகிறார்கள் என்பதை அறிவதற்கு அவர்கள் இருந்தால் நல்லது என்பது ஒரு காரணம். அப்படி எங்கள் கட்சியில் உள்ளவர்கள் பேசினால் அவைகளை எடுத்துக் கூறவும், ஆளும் கட்சியில் உள்ளவர்கள் பேசினால் அவைகளை எடுத்துக் கூறவும், காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்களும் இணைந்த முறையில் ஒரு குழுவை அமைத்தாவது தவறுகளைக் கண்டித்து நாகரீக அரசியலை வளர்ப்பதிலே எங்கள் கழகம் இந்த அமைச்சர் அவையில் இருக்கும் நல்லவர்களோடு ஒத்துழைக்க என்றும் தயாராக இருக்கும் என்று கூறி அந்த வகையில் முயற்சி கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் ஆளும் கட்சிக்கே அது தீமையாக முடியலாம். சுருக்கெழுத்தாளர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்திற்கு வந்து அண்ணாவினுடைய பேச்சை, நாவலருடைய பேச்சை, எங்கள் பேச்சை எழுதி எழுதிப் பழக்கப்படுகிற காரணத்தினால், எங்களுடைய பேச்சுக்களை கேட்பது மாத்திரமல்ல, எழுதி எழுதி, எழுதியதைத் திரும்பப் படித்து, படித்ததை இன்னொரு நாளில் எழுதி, எழுதியதை நகல் எடுத்து, அவர்களையும் கொஞ்ச நாளில் திராவிட முன்னேற்றக் கழகத்தினராக நீங்களே செய்கிறீர்கள் என்று அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன். (சிரிப்பு) அடிக்கடி எங்கள் பேச்சை . . . .

**கனம் திரு எம். பக்தவத்சலம்:** எங்கள் போலீஸ் சுருக்கெழுத்தாளர்கள் பல தரப்பட்ட பேச்சுக்களை எழுதுகிறார்கள். அவர்கள் எதற்கும் கட்டுப்பட மாட்டார்கள்.

**திரு மு. கருணாநிதி :** அவர்கள் கட்டுப்படாமல் இருக்கவேண்டுமென்று தான் விரும்புகிறோம். ஆனால் கால வெள்ளம் யார் யாரையோ அடித்துக்கொண்டு போகிறது. கடைசியாக அமைச்சருக்கும் இந்தத் துறையினருக்கும் நல்லெண்ணத்தையும் பாராட்டுதலையும் தெரிவித்தாலும் முதல் அமைச்சருக்கு இப்போதெல்லாம் பயமாக இருக்கிறது, அத்தகைய பாராட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பக்கத்திலிருந்து வந்தால் தனக்கு ஏதாவது ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சுகிறார், அப்படி அஞ்சத் தேவையில்லை என்று கூறி, சென்னைமாநகரத்தில் போக்குவரத்தில் 135 வாடகை டாக்ஸிகளும், 251 ஆட்டோ ரிக்ஷாக்களும், 3,700 கை ரிக்ஷாக்களும், 1,004 சைக்கிள் ரிக்ஷாக்களும், 258 மாட்டு வண்டிகளும், 479 ஜட்கா வண்டிகளும், 1 லட்சம் சைக்கிள்களும் சென்னை நகரத்தில் சுற்றிக்கொண்டிருக்கின்றன என்ற புள்ளி விவரத்தை அறிகிறோம். இந்தப் போக்குவரத்தை சீர் செய்ய எல்லா வகையிலும் முறையான முயற்சிகளை போலீஸ் இலாகா எடுத்துக்கொண்டாலும் ஒரு விஷயத்தில் ஒரு யோசனை கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையைச் சுற்றி இருக்கக்கூடிய

ஆலைகளுக்கு, வேண்டிய நிலக்கரி வடக்கேயிருந்து வருகிறது. அந்த ஆலைகளுக்கு வருகிற நிலக்கரியை ராயபுரத்திற்குக் கொண்டு வந்து குவிக்கிறார்கள். அங்கிருந்து 150 லாரிகள் மூலமாக எடுத்துச் செல்லும்போது பூந்தமல்லி, வால்டாக்ஸ் ரோடு வழியாக அந்த 150 லாரிகள் செல்லுகின்றன. வடக்கே இருந்து வரும் நிலக்கரி ராயபுரத்தில் சேமிக்கப்பட்டு அங்கிருந்து 150 லாரிகள் பூந்தமல்லி வழியாக, வால்டாக்ஸ் ரோடு வழியாகக் கொண்டு செல்லுவது போக்குவரத்துக்கு, அதுவும் நாமே வேண்டுமென்று தேடிக்கொள்ளும் இடைஞ்சலாக இருக்கிறது. இந்தப் போக்குவரத்தை இடைஞ்சலைப் போக்கிக்கொள்ள வடக்கே கொருக்குப் பேட்டை, கொரட்டூர் ஆகிய இடங்களில் அங்கேயே அதை சேமித்து வைத்து சுற்றியிருக்கிற ஆலைகளுக்குக் கொண்டு சென்றால் 150 லாரிகளால் ஏற்படுகிற போக்குவரத்து இடைஞ்சல் பூந்தமல்லி, வால்டாக்ஸ் சாலைகளில் தவிர்க்கப்படும் என்று எடுத்துக் கூறி, போலீஸ் இலாகா, போலீஸ் அதிகாரிகள், போலீஸ் நண்பர்கள், அம்பு போன்றவர்கள், அந்த அம்பு ஆட்சி பீடத்தில் இருக்கிற வில்லிலிருந்து யாரை நோக்கி எய்தப்படுகிறதோ அவர்களை நோக்கிப் பாய்கிறது; திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிக்கவில்லை. போலீஸ் அமைச்சர் என்ற வில்லிலிருந்து அம்பு புறப்படுகிறது என்றாலும், போலீஸ் அமைச்சர் என்ற வில்லுக்கு காங்கிரஸ் கட்சி என்ற நாண் ஏற்றபட்டிருக்கிறது. அம்பு புறப்படுகிற இடம் அமைச்சர் என்ற வில்லாக இருந்தாலும் காங்கிரஸ் கட்சி என்ற நாணிலிருந்து புறப்படுகிற அந்த அம்புகளை நோவதற்குத் தயாராயில்லை. வில்லை வளைத்து நாண் ஏற்றும்போது நாண் அறுந்துவிடாமல் காத்துக்கொள்வது அமைச்சருடைய கடமை என்று கூறி உரையை முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்புக்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பெருமை பொருந்திய போலீஸ் மானியத்தில் அதிகப்படியான அங்கத்தினர்கள் பங்குகொண்டிருக்கிறார்கள். பங்கு கொண்டவர்களில் 100-க்கு 95 பேர்கள் எல்லோரும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். போலீஸ் இலாகாவின் திறமையையும், போலீஸ்காரர்கள் செய்துவருகிற சிறந்தபணியையும்வாயார வாழ்த்தியிருக்கிறார்கள். அந்தமுறையில் வாழ்த்திய நண்பர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாழ்த்திவிட்டு, எல்லோருமே வாழ்த்திவிட்டால் நமது கட்சிக்கான அந்தஸ்து என்ன ஆவது, யார் மதிப்பார்கள் என்று நினைத்து அரசாங்கத்தைக் குறை கூறியும், மேல் அதிகாரிகளைக் குற்றம் சொல்லும் முறையிலும் சில நண்பர்கள் பேசினார்கள். கடைசியாகப் பேசிய திராவிட முன்னேற்றக் கழக உதவித் தலைவர் அவர்கள் கடந்த காலப் போராட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது நாட்டின் சுதந்திரத்திற்காக நடைபெற்ற போராட்டம். இப்போது இவர்கள் நடத்துகிற போராட்டத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது நான் மிகவும் சிரித்தேன். அன்று நம்முடைய நாட்டின் சுதந்திரத்திற்காக, நாட்டு மக்களுடைய விடுதலைக்காக, மக்கள் பூர்ணமாக ஒத்துழைத்து அந்த இயக்கத்தை நடத்தினார்கள். மக்களே முன்நின்று கள்ளுக்கடை மறியல் எல்லாம் செய்தார்கள். அந்த முறையில் செய்து சுதந்திரம் அடையப் பாடுபட்டார்கள். இவர்கள் நடத்தும் இயக்கத்திற்கு மக்கள் பூர்ணமாக ஒத்துழைப்புக் கொடுத்தார்களென்றால் இவர்களும் அந்த மாதிரி செய்யப் பார்த்திருப்பார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** பஸ்களையும், லாரிகளையும், தபால் நிலையங்களையும் கொளுத்திய அதற்குப் பெயர் மக்கள் ஒத்துழைப்பு என்று அமைச்சர் கருதுகிறாரா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நாட்டின் சுதந்திரத்திற்காக, சுதந்திரம் பெறவேண்டும் என்று மக்கள் செய்தார்கள். நம் மாபெரும் தலைவன் பண்டித நேரு அவர்கள் ' ஆகஸ்ட் 1942 போராட்டத்திற்கு நான் பொறுப் பேற்றுக் கொள்கிறேன் ' என்று சொல்லியிருக்கிறார். இன்றைக்கு இவர்கள் நடத்துகிறதைப் பார்க்கும்போது சட்டத்தைக் கொளுத்துவதை, பஸ்ஸைக் கொளுத்துவதைப் பார்க்கும்போது நிச்சயமாக வேதனைக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது. அதைப் பார்த்து சிரிக்க வேண்டியிருக்கிறது. சுதந்திரம் கண்ணினும் இனியது. சுதந்திரம் பெற்ற பிறகு நன்மை அடைந்து கொண்டு, உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்ணுகிற மாதிரி இருக்கிறது.



சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு பாடுபட்ட நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது வேதனையாக இருக்கிறது. நாட்டுக்கு சுதந்திரம் வாங்குவதற்காக நடந்த போராட்டத்தில் எத்தனையோ உத்தமர்கள் மடிந்தார்கள். அவர்களையெல்லாம் இப்போது நினைத்துப் பார்க்கிறோம். வெள்ளையர் அரசாங்கத்தில் ஒரு சில போலீஸ் அதிகாரிகள் முட்டுக்கட்டை போட்டார்கள். இப்போது நல்ல முறையில் நல்லுணர்வோடு போலீஸ் அதிகாரிகள் பாடுபடுகிறார்கள். அதனால் தான் மதிப்புக்குரிய திராவிட முன்னேற்ற கழகத் தோழர்கள் ' சமாதானத்தோடு நேர்மையான முறையில் நடத்தினோம், ஆகையால் இந்த மாதிரி கலாட்டா இல்லை' என்று சொன்னார்களே, இதிலிருந்தே நன்றாகத் தெரியும். மக்கள் இதற்கு ஆதரவு கொடுக்கவில்லை என்று நன்றாகத் தெரிந்துவிட்டது. மக்களைப் பார்த்து திராவிட முன்னேற்ற கழகத்தினர் தாங்கள் சொல்வது தான் உண்மை என்று சொன்னால் மக்கள் நம்பிவிட மாட்டார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பல அங்கத்தினர்கள் பேசும் பொழுது போலீஸ் அதிகாரிகளுக்கு, குறிப்பாக போலீஸ்காரர்களுக்கு பல வசதிகளைத் தேடித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்திலே நாம் அவர்களுக்கு எவ்வளவு உதவி செய்ய வேண்டுமோ அவ்வளவு உதவி செய்து கொண்டிருக்கிறோம். அவர்களுடைய சம்பளத்தை ஓரளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். மேலும் அவர்களுக்கு பல நன்மைகளைச் செய்வதற்காக நம்முடைய மாநில போலீஸ் இலாகா ஐ.ஜி. அவர்கள் அடிக்கடி அரசாங்கத்திற்கு" பிரபோஸல்ஸ் " கொண்டு வருகிற பொழுது, அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து, அவர்களுக்கு எவ்வளவு ஒத்தாசை உதவி செய்ய முடியுமோ அவ்வாறு இயன்ற மட்டும் செய்து கொண்டு வருகிறோம் என்று இந்த சமயத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக இந்தத் துறையிலே பணியாற்றுகிறவர்களுக்கு உள்ள கஷ்டங்களைப் போக்க வேண்டும் என்றுதான் அரசாங்கம் முயன்று வருகிறது. அவர்களுக்கு வெகுமதிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு மத்திய சர்க்கார் " கிராண்டு " ஜாஸ்தியாகக் கொடுக்கிறார்கள்.

மதிப்பிற்குரிய திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசும் பொழுது, போலீஸ்காரர்களுக்காகத் திரட்டப்படுகிற நிதியிலிருந்து தொகை பெரிய போலீஸ் அதிகாரிகளுக்குத்தான் செலவழிக்கப்படுகிறது, போலீஸ்காரர்களுக்கு அதிலிருந்து ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த " பெனவலண்டுபண்டி"-லிருந்து குறிப்பாக கான்ஸ்டேபிள்கள், ஹெட்கான்ஸ்டேபிள்கள் ஆகியோர்களுக்குத் தான் தொகை கொடுத்துக் கொண்டு வருகிறோம். ரொம்ப " ரேராக " எதாவது அவசியம் ஏற்பட்டால் தான் சில ஸப் இன்ஸ்பெக்டர்களுக்குக் கொடுக்கிறோம். ஆனால் இதில் பெரும் பகுதி போலீஸ்காரர்கள், ஹெட் கான்ஸ்டேபிள்கள் இவர்களுக்குத் தான் செலவழிக்கப்பட்டு வருகிறது என்பதை 'இந்தச் சமயத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

போலீஸ்காரர்களுடைய நன்மையைக் கருதி நம்முடைய மாநிலத்தில் பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வருகிறோம். மாதர் சங்கம் என்ற பெயரால் சங்கங்கள் நிறுவி, அவைகளின் வாயிலாக அவர்களுக்கு குடிசைத் தொழில்களைக் கற்பித்து, அவர்களுக்கு அதன் மூலம் ஓரளவுக்கு ஊதியம் வரவேண்டும் என்பதற்கான ஏற்பாட்டையும் செய்திருக்கிறோம். அந்த மாதர் சங்கங்களில் ஸ்பின்னிங், டைலரிங், பீடி, ரோலிங் பீ கீபிங், பவுல்டரி யூனிட்ஸ் கீபிங், மில்க் கோவபரேடிவ் சொஸைடீஸ், ஆகிய தொழில்கள் செய்யப்படுகின்றன. மேலும் குழந்தைகள் விளையாடுவதற்கு இதர உதவிகள் எவ்வளவு தூரம் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்து கொண்டு வருகிறோம். அவர்கள் சம்பளம் வாங்குவதைத் தவிர மேலும் ஊதியம் பெற்று நன்மை அடைவதற்கு எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் உதவி செய்துக் கொண்டுவருகிறோம்,

நம்முடைய மாநிலத்தில் போலீஸ்காரர்களுக்கு இன்னும் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால், நம்முடைய நாட்டு நிதி நிலைமைக்குத் தகுந்தபடி பார்த்து பரிசீலனை செய்து படிப்படியாக எவ்வளவு தூரம் அவர்களுக்கு ஒத்தாசை உதவி செய்ய முடியுமோ அந்த விதத்தில் செய்து கொண்டுவருகிறோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய போலீஸ் பகுதியைக் குறித்துக்கொண்டால், வருடந்தோறும் அவர்களுக்கு எவ்வளவு செலவிடுகிறோம் என்பதை மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 1961–62-ல் ரூ. 6,63,20,200 செலவு செய்தோம். 1962–63-ல் ரூ. 6,98,31,900 செலவு செய்தோம். 1963–64-ல் ரூ. 8,10,79,400 செலவு செய்தோம். 1964–65-ல் ரூ. 8,20,22,000-க்கு இப்பொழுது மான்யக் கோரிக்கையை சபை முன்னால் வைத்திருக்கிறேன். அவ்வாறு படிப்படியாக செலவு அதிகரித்துக்கொண்டுதான் போகிறது. மேலும் நிச்சயம் அதிகரிக்கும் என்று நம்புகிறோம். அந்தத் துறையிலே நல்ல முறையில் பணி செய்வதற்காக எவ்வளவு தூரம் அவர்களுக்கு ஒத்தாசை உதவி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் ஏற்பாடு செய்வோம் என்பதை இந்த சமயத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

போலீஸ் இலாகாவில் உள்ளவர்களுக்கு சம்பளம் கூட்டிக் கொடுக்க வேண்டும் என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். கனம் அங்கத்தினர்கள் அதைப் பார்த்தால் தெரியும். முன்பு அவர்கள் வாங்கிய சம்பளத்திற்கும், இப்பொழுது வாங்குகிற சம்பளத்திற்கும் வித்தியாசம் பார்த்தால், கூடுதலாகக் கொடுத்திருக்கிறோம் என்பது தெரியும். போலீஸ் கான்ஸ்டேபிள்களுக்கு சம்பளம் அந்தக் காலத்தில் ரூ. 30-ல் ஆரம்பிக்கப் பட்டது. இப்பொழுது ரூ. 65-ல் ஆரம்பிக்கப்படுகிறது.. (குறுக்கிடு) நான் இப்பொழுது ஒப்பிட்டுச் சொல்லவில்லை. சம்பளம் உயர்த்தவே இல்லை என்று சொன்னதினால்தான், நான் பதில் சொல்லுகிறேன்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர்கள் இவ்வளவு நேரம் பேசினார்கள். கனம் மந்திரி அவர்கள் அதற்குப் பதில் ஏதாவது சொல்ல வேண்டாமா ? (சிரிப்பு) கனம் அங்கத்தினர்கள் ஒரேயடியாக சம்பளம் உயரவில்லை என்று சொன்னார்கள். முன்னால் எவ்வளவு இருந்தது, இப்பொழுது எவ்வளவாக உயர்ந்திருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஏதாவது நல்ல காரணங்களைச் சொல்ல வேண்டாமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்கள் சொல்லுகிற வார்த்தைக்கே கனம் அங்கத்தினர்கள் வேறு அர்த்தம் கற்பிக்கிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** அது ஒரு அலாதி. கனம் மந்திரி அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அங்கத்தினர்கள் சிரிக்கிறார்கள். நாம் சில விஷயங்களிலே சில முறைகளை வகுத்திருக்கிறோம். நாம் இந்த மன்றத்திலே சிரிப்பதற்குக்கூட ஒரு முறை வகுக்க வேண்டும். வார்த்தைகள் உபயோகப்படுத்துவதைப் பொறுத்த வரையிலும், "பார்லிமெண்டரி, அன்பார்லிமெண்டரி" என்று சொல்லுவது மாதிரி, சிரிப்பது சம்பந்தமாகவும் ஒரு முறை வகுக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

**Mr. SPEAKER :** It depends upon the mentality of the people.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த மன்றத்தைப் பொறுத்த மட்டிலும் சொல்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** சிரிப்புக்கு ஒரு கட்டுப்பாடு விதிப்பதா ?

**கனம் சபாநாயகர் :** சிரிப்பு சீக்காகி விடக்கூடாது.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சிரிப்பதிலே கீச்சுக் குரலிலே சிரிப்பது அவ்வளவு கௌரவம் இல்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** ஹெட் கான்ஸ்டேபிள்களைப் பொறுத்த வரையில் ஆரம்பச் சம்பளம் முன்பு ரூ. 40ஆக இருந்தது ; இப்பொழுது ரூ. 85-ஆரம்ப சம்பளம். அஸிஸ்டெண்டு ஸப் இன்ஸ்பெக்டருக்கு அன்றைக்கு ஆரம்பச் சம்பளம் ரூ. 60 கொடுக்கப்பட்டது. இன்றைக்கு அவர்களுக்கு ரூ. 110 சம்பளம் ஆரம்பிக்கிறோம். அதே மாதிரி அப்பொழுது எஸ். ஐ., ரிசர்வ் எஸ்.ஐ. இவர்களுக்கு ரூ. 80 தான் ஆரம்பச் சம்பளம் இருந்தது, இப்பொழுது அவர்களுக்கு ரூ. 140 ஆரம்பச் சம்பளம் வழங்கி அது ரூ. 220 வரையில் உயர்ந்து கொண்டு போகிறது. இன்ஸ்பெக்டர், ரிசர்வ் இன்ஸ்பெக்டர்களுக்கு அப்பொழுது ரூ. 175-ல் தான் சம்பளம் ஆரம்பித்தார்கள். இன்றைக்கு அவர்களுக்கு சம்பளம் ரூ. 225 இல் ஆரம்பித்து ரூ 375 வரையிலும் உயர்ந்து கொண்டு போகிறது. இம்மாதிரி அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

பல அங்கத்தினர்கள் போலீஸ்காரர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கோரினார்கள். நம்முடைய அரசாங்கம் அதில் அதிகக் கவனம் செலுத்தி பல வீடுகள் கட்டிக் கொடுத்து வருகிறார்கள் என்று அறிக்கையிலே தெரிவித்திருக்கிறேன். ஆகவே, பல வீடுகள் கட்டி அவர்களுக்கு நாம் எவ்வளவு தூரம் வீட்டு வசதி செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் செய்து கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மத்திய அரசாங்கமும் போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டுவதற்காக அதிகப்படியாக நமக்கு உதவி அளித்துவருகிறார்கள். அதற்காகக் கடன் கொடுத்து நல்ல முறையில் ஒத்தாசை உதவி செய்து வருகிறார்கள். போலீஸ் அதிகாரிகளுக்கு இதற்காக நாம் எவ்வளவு தூரம் செலவழிக்கிறோம் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் பார்த்தாலே தெரியும். குறிப்பாக 1960–61-ல் நாம் ரூ. 73,31,000 செலவு செய்திருக்கிறோம். 1961–62-ல் ரூ. 84 லட்சம் சொச்சம் செலவு செய்திருக்கிறோம். 1962–63ல் ரூ. 51 லட்சம் சொச்சம் செலவு செய்திருக்கிறோம். 1963–64-ல் 1963 அக்டோபர் 30-ந்தேதி வரையில், அதாவது 10-வது மாதம் வரையில் ரூ. 29 லட்சம் சொச்சம் செலவு செய்திருக்கிறோம். மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்குக் கடன் உதவித் தொகை கொடுத்திருப்பதைப் பார்த்தால், 1957–58-ல் ரூ. 49 லட்சம் கொடுத்தார்கள். 1958–59-ல் ரூ. 57 லட்சம் கொடுத்தார்கள். 1959–60-ல் ரூ. 36 லட்சம் கொடுத்தார்கள். 1960–61-ல் ரூ. 28 லட்சம் கொடுத்தார்கள். 1961–62-ல் ரூ. 23 லட்சம் கொடுத்தார்கள். 1962–63 ல் ரூ. 24 லட்சம் கொடுத்தார்கள். மேலும் கொடுப்பதற்கு சித்தமாக இருக்கிறார்கள். எவ்வளவு தூரம் வீடுகள் கட்டுவதற்கு அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் முயற்சி எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். தேசீய நெருக்கடியின் காரணமாக, சீனா நமது நாட்டின் பேரில் படை எடுத்ததன் காரணமாக, இந்த வேலை சிறிது தாமதப்பட்டது. இப்பொழுது இந்த வேலை தாமதப்படுத்தப்படவில்லை. இந்த வேலையைத் துரிதமாகச் செய்வதற்குத் தக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ்காரர் குடும்பங்களுக்காக, "பெனவலண்டு" பண்டிலிருந்து நாம் செலவு செய்திருக்கிற தொகை 1961–62-ல் ரூ. 1,07,384. 1962–63-ல் நாம் ரூ. 67,251 செலவு செய்திருக்கிறோம். 1963–64-ல் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறோம். அதாவது ரூ. 97,461 சொச்சம். போலீஸ்காரர்கள் கஷ்டத்திற்கு உள்ளானால், அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு அவர்கள் கொடுக்கிற நிதியோடு, அரசாங்கமும் நிதி கொடுத்து, நல்ல முறையிலே அவர்களுக்கு ஒத்தாசை உதவி செய்து வருகிறது என்பதை இந்த சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தீ அணைக்கும் படை நிறுவுவதைப்பற்றிப் பல அங்கத்தினர்கள் கேட்டுக் கொண்டார்கள். நம்முடைய மாநிலத்தில் திட்டமிட்டு இந்த வேலையைச் செய்து கொண்டு வருகிறோம். ஏற்கனவே, நான் கேள்வி

நேரத்தின்பொழுது இந்தச் சபையில் சொல்லியிருக்கிறேன். திண்டிவனத்தில் "ஃபையர் ஸ்டேஷன்" வைக்கவேண்டும் என்று கேட்டார்கள். நிச்சயம் அங்கே வைப்பதற்கு திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது எல்லா இடங்களிலும் வைக்காவிட்டாலும், வருடத்திற்கு இத்தனை நிலையங்கள் ஏற்படுத்தவேண்டும் என்று திட்டம் போட்டுப் பார்த்துப் பரிசீலனை செய்து வைத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமாதிரி போலீஸ் ஸ்டேஷன் வைப்பதுபற்றியும் பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். போலீஸ் ஸ்டேஷன்கள் வாடகைக் கட்டிடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு கட்டடங்கள் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். மதிப்பிற்குரிய சுப்பிரமணிய செட்டியார் மணச்சநல்லூரில் இடம் வாங்கிப் போட்டிருக்கிறார்கள். அங்கே போலீஸ் ஸ்டேஷன் கட்டவேண்டுமென்று சொன்னார்கள். அதுபற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

மதுவிலக்கைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். மதிப்பிற்குரிய பாலகிருஷ்ணன் அவர்கள், கேஸ்கள் அதிகமாகப் போட்டதினாலே, மதுவிலக்குத் திட்டம் நன்றாக நிறைவேறவில்லை என்று சொன்னார்கள். உண்மையிலேயே, இங்கு ஒரு அங்கத்தினர் பேசும்பொழுது, 'கொலை செய்யக் கூடாது, திருடக் கூடாது என்பதற்காக, கொலை நின்றுவிட்டதா, திருடு நின்றுவிட்டதா?' என்று கேட்டார். கேஸ்களை அதிகமாகப் போடுவதினால், மதுவிலக்குச் சட்டம் நல்ல முறையில் அமல் நடத்தப்படவில்லை, திட்டமே தோல்வி அடைந்துவிட்டது என்ற மனப்பான்மை கொண்டிருப்பது நல்லதல்ல. அதிலும் கனம் அங்கத்தினர் பாலகிருஷ்ணன் அந்த மனப்பான்மையோடு பேசுவது நல்லதல்ல. இந்த மதுவிலக்குச் சட்டம் வந்ததினால் ஏழை பாட்டாளி மக்கள், கூலி வேலை செய்யும் உழவடைத் தொழிலாளர்கள், ஹரிஜன சகோதரர்கள் முன்பு பட்ட பாட்டையும் இப்பொழுதிருக்கிற நிலைமையையும் பார்த்தால் உண்மை தெரியவரும். முன்பெல்லாம் ஊர்களிலே பயந்து கொண்டுதான் போக வேண்டும். யாராவது குடிகாரர்கள் வந்து அடிப்பார்களோ என்ற பயத்தோடுதான் போகவேண்டும். நானே ஒரு காலத்தில் இந்தக் குடிவெறியனால் தாக்கப்பட்டிருக்கிறேன். சாதாரண மக்கள் பயமில்லாமல் போக முடியாது. ஏதோ ஒரு சில இடங்களில் திருட்டுத்தனமாகச் சாராயம் காய்ச்சிவிட்டால் அதை வைத்துக்கொண்டு, மதுவிலக்குத் திட்டம் தோல்வி அடைந்துவிட்டது என்று சொல்லுவது சரியல்ல. நம்முடைய போலீஸ் இலாகா நல்ல முறையில் இந்த மதுவிலக்குத் திட்டத்தை அமல் நடத்திக் கொண்டு வருகிறது. முன்னர் இந்தத் திட்டம் அப்காரி இலாகா மூலம் நடந்து வந்தது. அது சரியாக இல்லை, போலீஸ் இலாகா மூலம் நடத்தினால் நல்ல முறையில் நடக்குமென்று இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். மதுவிலக்குத் திட்டம் தோல்வி அடைந்துவிட்டது என்று யாராவது நினைத்தால், அவர்கள் நாட்டிற்கு நன்மை பயக்கக்கூடிய ஒரு ஆலோசனையைச் சொல்லவில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இந்த மதுவிலக்குத் திட்டத்தை மேலும் நல்ல முறையில் அமல் நடத்துவதற்கு எல்லா அங்கத்தினர்களும் அரசியல் கட்சி வேறுபாடுகள் இல்லாமல் ஒத்துழைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் 'அதிகமாகக் கேஸ்களைப்போடுகிறார்கள்' என்று சொன்னார்கள். அதே சமயத்தில் திண்டிவனம் டெபுடி சூப்பிரண்ட் பொய்க் கேஸ்கள் போட்டிருக்கிறார் என்று சொன்னார். அதிகமாகக் கேஸ்கள் போட்டால், பொய்யாகக் கேஸ் போட்டார்கள் என்று அர்த்தம் இல்லை. போலீஸ்காரர்களே சாராய பாட்டில்களை வைத்துக்கொண்டு கேஸ்கள் போடுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த மாதிரி எல்லாம் சொல்வது நல்லதல்ல. அவர்களைப் பிடிக்கும்பொழுது பாட்டில்கள் வைத்திருந்தால் அதையும் சேர்த்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே கேஸ் போடுவதற்காக டெபுடி சூப்பிரண்டு பாட்டில்களை வைத்திருக்கிறார் என்று சொல்லுவது சரியல்ல.

நம்முடைய மாநிலத்தில் மதுவிலக்குத் திட்டத்தை நல்ல முறையில் நடத்துவதற்கு எங்களால் இயன்றவரை பாடுபடுகிறோம். கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பக்கத்திலே இருக்கிற, பாண்டிச்சேரி



யிலிருந்து திருட்டுச் சாராயம் வருகிறது என்று சொன்னார். எவ்வளவு தூரம் அதைத் தடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் தடுத்து வருகிறோம். நம்முடைய நாட்டில் எவ்வளவு தீய சக்திகள் இருக்கின்றன என்பதை நாம் பார்க்க வேண்டும். ஒரு போலீஸ் அதிகாரியே திருட்டுச் சாராயம் காய்ச்சுவதற்கு வருகிறார் என்றால், எத்தனை பேர்கள் அவருடைய எண்ணத்தைக் கெடுத்திருக்கிறார்கள், அவரைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவரைப் பார்த்து சில போலீஸ்காரர்களும் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். நாட்டிலே தீய எண்ணம் படைத்தவர்கள், நாட்டின் முன்னேற்றத்திற்குக் குந்தகம் விளைவிப்பவர்கள் இருப்பதனால்தான் இம்மாதிரி எல்லாம் ஏற்படுகிறது. ஒரு சில இடங்களிலே இம்மாதிரி நடந்தாலும், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு தகுந்த ஆலோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அதை ஒட்டி வெட்டுப் பிரேரணையைக்கூட முதலிலே கொடுத்திருந்தார்கள். இந்தக் கருத்தினை நான் அவர்களிடம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்கு சம்பந்தமாக கேஸ்கள் போட்டதை எடுத்துக் கொண்டால் 1959-60-ல் 87,160 கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. 1960-61-ல் 93,000 கேஸ்களும், 1961-62-ல் 111,850, 1962-63-ல் 129,000 கேஸ்களும் போட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைத் தீவிரமாக அமல் நடத்த வேண்டும், எப்படியும் திருட்டுச் சாராயம் காய்ச்சுவதை ஒழித்துக் கட்ட வேண்டும், அதற்குத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற வகையில்தான், அதிகமாக கேஸ்கள் போடப்படுகின்றன. சில நபர்களுக்கு பெர்மிட்டு கொடுக்கப்படுகிறதே, ஏன் கொடுக்கிறார்கள் என்று திரு. சண்முகம் அவர்கள் கேட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்தச் சட்டத்திலேயே, யாராவது நோயாளியாக இருந்தால், அரசாங்க டாக்டர்கள் அத்தாட்சி பெற்றால், அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. அப்பேற்பட்டவர்களுக்குத்தான் கொடுக்கிறோம். எல்லோருக்கும் கொடுப்பதில்லை. டாக்டர்கள் சொல்வதை நம்ப வேண்டும். "நீங்கள் என்ன சொல்லுவது? நாங்கள் என்ன கேட்பது?" என்று சொல்லக் கூடாது. அப்படி பெர்மிட்கள் கொடுக்காவிட்டால், அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போய் ரிட் போட்டு விடுவார்கள். குடித்தால் தான் பிழைக்க முடியும என்பவர்களும் இருக்கிறார்கள். அதிலும் கூடுமான வரையில் சிக்கனமாகப் பார்த்து கொடுப்பதற்கு யத்தனித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை நகரில் தேர்தலுக்கு முன்பு கைது செய்ததைப் பற்றிச் சிலர் குறிப்பிட்டார்கள். பத்திரிகையிலே, 100 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திரித்துக் கூறும் பத்திரிகைகள் ஒன்றிரண்டு இருக்கின்றன. எதிர்க் கட்சியிலுள்ள அன்பர்களும் இதைப்பற்றி சொல்லி வருகிறார்கள். நாங்கள் விசாரித்துப் பார்த்தோம். கடைசியில் பார்க்கும்போது முப்பதுக்குள்ளே தான் போட்டிருக்கிறார்கள். ஒரு ஆளை மட்டும் அவர் ஏஜெண்டாக இருந்ததினால் விட்டுவிட்டோம். மறுபடியும் தகராறு பண்ணியதால் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஏஜெண்டாக இருப்பவரைப் பிடித்து வைத்துக் கொண்டு, இந்தத் தேர்தலிலே ஜெயிக்க வேண்டும் என்ற நோக்கம் அல்ல. போலீஸ்காரர்களை வைத்துக் கொண்டுதான் தேர்தல்களில் ஜெயிக்க முடியுமா? எத்தனையோ நகரசபைத் தேர்தல்களிலே நாங்கள் ஜெயிக்கவில்லையா? சென்னை நகரசபைத் தேர்தலைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எப்படி வெற்றிபெற்றார்கள் என்பதைப் பொதுமக்கள் அறிவார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல்**<br>**திரு. அ. பெ. தர்மலிங்கம்** } : தயவுசெய்து அதைப்பற்றிசொல்லவேண்டும்.

**கனம் திரு. பூ. கக்கன்** : எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இல்லாததையும் பொல்லாததையும் போய்ச் சொன்னார்கள். உண்மைக்கு விரோதமாக பிரச்சாரம் செய்தார்கள்.

[18th March 1964

திரு. மு. கருணாநிதி : லாரி ஊழலைப்பற்றி ஆளும் கட்சியினர் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லவில்லையா ?

கனம் திரு. பூ. கக்கன் : காங்கிரஸ்காரர்கள் அதைச் சொல்லவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அப்படியானால் தேசீய அணியினுடைய பிரச்சாரம் காங்கிரஸ் அமைச்சர்களால் ஒத்துக்கொள்ளப்படவில்லையா ?

கனம் திரு. பூ. கக்கன் : காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக ஒரு ஸ்திரமான ஏற்பாடு ஒன்றும் செய்யவில்லை.

Mr. SPEAKER : The Hon. Member is referring to some other subject. Let the Hon. Minister continue his reply to the points raised in the Debate.

1·30 p.m. கனம் திரு பூ. கக்கன் : தாய்மார்களிடத்திலும், ஏழைபாட்டாளி மக்களிடத்திலும் போய் ரூபாயைக்காட்டி "உங்களுக்கு என்ன வேண்டும் ?" என்று கேட்ட வரலாறும் எங்களுக்குத் தெரியும்.

திரு. மு. கருணாநிதி : அதைப் போலீசார் தடுக்கவில்லையென்றால் அதைவிட வெட்கக்கேடு இந்த அமைச்சரவைக்கு வேறு என்ன இருக்கிறது ? (எதிர்க்கட்சியினரின் பலத்த ஆரவாரம்.)

கனம் திரு. பூ. கக்கன் : போலீசார் எல்லா வீடுகளிலும் போய் பார்த்துக் கொள்ள முடியாது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போலீஸார் சட்டப்படிதான் செயலாற்றலாம். சட்டத்தின்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கமுடியுமோ அதைத்தான் அவர்கள் எடுக்கலாம். ஆகவே, போலீஸார் இதைத் தடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுவதில் பயனில்லை. இருக்கிற சட்டப்படிதான் அவர்கள் நடந்து கொள்ளலாம்.

திரு. அ.பெ. தர்மலிங்கம் : இந்த நிகழ்ச்சியை நிரூபித்து ஒரு பொது விசாரணை வைப்பதற்கு அரசாங்கம் தயாராய் இருக்கிறதா ? ஆளும் கட்சியினர்தான் இல்லாததையும் பொல்லாததையும் சொல்பவர்கள்.

கனம் திரு. பூ. கக்கன் : நாங்கள் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லவில்லை என்பதை நாடு அறியும். மக்களும் அறிவார்கள்.

(இந்த சமயத்தில் கனம் அங்கத்தினர்கள் திரு. மு. கருணாநிதியும், திரு. அ. பெ. தர்மலிங்கமும் எழுந்து நின்றார்கள்.)

திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதற்குப் பிறகுதானே மக்கள் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள்.

Mr. SPEAKER : Order, order. Both Hon. Members should not stand at the same time. If they do so then the Assembly Rules are violated.

கனம் திரு. பூ. கக்கன் : சென்னையில்தான் தீர்ப்புக் கூறியிருக்கிறார்களே என்ன கூறியிருக்கிறார்கள் ? திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தனிப் பட்டவரை சேர்மனாகப் போட்டிருக்கிறார்கள். சுயேச்சை மெம்பரைத்தானே மேயராகக் கொண்டுவந்துள்ளார்கள் ? எத்தனையோ நகரசபைகளிலே கட்சி சார்பில் நின்றவர்களே சேர்மென்களாக காங்கிரஸ்காரர்கள் வந்துள்ளார்கள்.

(Sri A. P. Dharmalingam rose.)

Mr. SPEAKER : When the Hon. Minister is not yielding, the Hon. Member should not rise up and talk. I would also suggest that the Hon. Minister may come to 'Police'. I would suggest to



18th March 1964] [Mr. Speaker]

Hon. Members in the opposition also, not to put questions about 'election' and 'combinations' and drag the Hon. Minister to some subject, other than 'Police'.

கனம் திரு. பூ. கக்கன் : ஆஃப் டியூட்டி அலவன்ஸ் அவர்களுக்குச் சரியாகக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். உண்மையிலேயே சரியாகத்தான் கொடுத்து வருகிறோம்.

மேல் சபைக்கு போலீஸ்காரர்கள் பிரதிநிதி ஒருவரை அனுப்ப வேண்டும் என்று சொன்னார்கள். ஆச்சரியமான வேண்டுகோள். அது ஜனநாயகத்தில் நடைபெறாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தோழர் கருணாநிதி, 'அவர்களுக்கு ஒரு சங்கம் இருந்தது'. அதைக் கலைத்து விட்டார்கள், இங்கிலாந்து நாட்டிலேகூட சங்கம் இருக்கிறது, என்று சொன்னார்கள். இங்கிலாந்திலே இருக்கலாம். இந்த நாட்டிலே எத்தனை மக்கள், இங்கிலாந்திலே மக்கள் நடந்து கொள்வதுபோல நடக்கிறார்கள் ? இங்கிலாந்து நாட்டிலே உள்ள மகாஜனங்களில் நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று ஒருவரும் சொல்லவில்லை. இந்த நாட்டில் உள்ள நிலையிலேயே நிச்சயமாக இங்கே சங்கமே வேண்டியது இல்லை. இங்கே போலீஸ்காரரே கூட சாராயம் காய்ச்சும் அளவுக்கு வந்துவிட்டது. அவர்களுக்கு சங்கமும் வைத்து விட்டால் சங்கமே கெட்டுப் போகும் (பலத்த சிரிப்பும், பேச்சு சப்தமும்) ஆகவே நம் நாட்டின் நிலையைப் பொறுத்துத்தான் செய்ய முடியும். சங்கம் அமைக்க முடியாது.

Mr. SPEAKER : I would request hon. Members not to make unnecessary remarks or shouts. They should keep the dignity as hon. Members of this House.

கனம் திரு. பூ. கக்கன் : மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கரிவேங்கடம் அவர்கள் பேசும்போது கட்டாய இன்ஷூரன்ஸ் தேவை என்று சொன்னார்கள். இப்பொழுது கட்டாய இன்ஷூரன்ஸ் கொண்டு வர முடியுமா முடியாதா என்று பரிசீலனைசெய்ய ஏற்கனவே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்குள்ளாக ஒன்றும் சொல்லிவிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வழக்குகளை நல்ல முறையிலே வாதாட வேண்டும் என்று சொன்னார்கள். சப்-இன்ஸ்பெக்டர்களாக இருப்பவர்கள் படித்ததோடு நிற்காமல் மீண்டும் சட்டம் படிக்கவேண்டும் என்றும் மேலே படித்ததை நினைவு படுத்திக் கொள்ளும் வகையிலும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

மதிப்பிற்குரிய திரு. அழகமுத்து அவர்கள் பேசும்போது, போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ஜீப் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். எல்லோருக்கும் ஜீப் கொடுக்க முடியாது. வாகனங்களை பொறுத்த மட்டில், எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், ஒவ்வொரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் ஒரு ஜீப் கொடுப்பது என்பது முடியாத காரியம். உண்மைக்கு விரோதமான ஒன்றைச் சொன்னார்கள். 60 போலீஸ்காரர்கள் ராஜீனாமா செய்து விட்டார்கள் என்று சொன்னார்கள். எதைக் கொண்டு அப்படிச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. அது உண்மைக்கு முற்றிலும் விரோதமானது என்று சொல்ல விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. தர்மலிங்கம் அவர்கள் பேசும்போது தொகையை அதிகப்படுத்தவேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே கொடுத்த ஸ்டேட்மெண்டைப் பார்த்தால் தெரியும், நாம் அதிகமாகவே செலவழிக்கிறோம். நம் நிதி நிலைக்குத் தக்க விதத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமாகக்கொடுக்க அரசாங்கம் முன் வருகிறது. மதிப்பிற்குரிய அருளைப் பற்றி குறிப்பிட்டார்கள். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைப் பற்றி தனிப்பட்ட முறையில் குறிப்பிடுவது நல்லதல்ல என்று சொல்லு

கிருர்கள். சன்மானங்கள் கொடுப்பதைப் பற்றிச் சொன்னுர்கள். இப்பொழுதே அப்படிக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அவரவர்களுடைய சேவைக்குத் தக்க விதமாக மரியாதை கொடுக்கப்படுகிறது.

மதிப்பிற்குரிய திரு. மணி அவர்கள் பேசும்போது முன்னுள் முதல் அமைச்சர் கனம் காமராஜர் அவர்கள் திருச்சிக்கு வந்தபோது விசேஷ பாதுகாப்பு கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். யார் யாருக்கு எப்படிப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பது போலீஸ் அதிகாரிகள் தீர்மானிக்கும் விஷயம். மதிப்பிற்குரிய முன்னுள் முதலமைச்சர் காமராஜருக்கு மட்டுமல்ல, இன்னும் யார் யாருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று நினைக்கிருர்களோ, அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. இப்பொழுது மதிப்பிற்குரிய ராஜகோபாலாச்சாரியார் அவர்களுக்கு வீட்டில் பந்தோபஸ்தும் கொடுத்திருக்கிறோம். போலீஸ் அதிகாரிகள் பார்த்து அவசியமான ஏற்பாடு செய்கிருர்கள்.

வீடு கட்டிக் கொடுப்பதில் வசதிக்குறைவாக இருக்கிறது என்று சொன்னுர்கள். உண்மையிலேயே போலீஸ்காரர்களுக்குக் கொடுத்திருக்கும் வீடு எவ்வளவோ நன்ருக இருக்கிறது. குறை சொல்ல வேண்டும் என்பதற்காக வேண்டுமானுல் சொல்லலாம். ஹரிஜனங்களுக்குக் கட்டிக் கொடுத்த வீடுகளைவிட இவைகள் எவ்வளவோ நல்ல வீடுகள். (சிரிப்பு) இந்த நல்ல வீடுகளையும் குறை கூறுவது என்ருல் அது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. கோழி குடுப்பை மாதிரி இருக்கிறது என்று குறை சொல்லுவது நல்லதல்ல. போலீஸ்காரர்களே கூட அப்படிச் சொல்ல மாட்டார்கள்.

மதிப்பிற்குரிய திரு. அங்கமுத்து நாயகர் பேசும்போது. நிலங்கள் ஜாரி பண்ணிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னுர்கள். இப்பொழுதே நிலம் இல்லாத ஏழைகளுக்கு ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டில் நிலம் கொடுக்கிருர்கள். உண்மையிலேயே இவர்களில் யாராவது நிலம் இல்லாத ஏழையாக இருந்தால் அவர்களுக்கும் நிலம் கொடுக்கப்படும்.

போலீஸ்காரர்களுடைய குழந்தைகளுக்கு இப்பொழுது ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். அப்படி உதவி செய்ய அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, போலீஸ்காரர்களுடைய குழந்தைகளுக்கு ஸ்காலர்ஷிப் வழங்குவது பற்றி சொன்னுர்கள். அந்தப் பிள்ளைகள் படிக்க மருத்துவக் கல்லூரி, பொறி இயல் கல்லூரி முதலியவைகளில் தனி இடம் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, அரசியல் சட்டப்படி அப்படி ஒதுக்கிக் கொடுக்க முடியாது. யாராவது பாக்வேர்ட் கம்யூனிடியாக இருந்தால் அல்லது ஷெட்யூல்ட் காஸ்ட்டாக இருந்தால் சட்டப்படி உள்ள சலுகை பெறலாம். அதைத் தவிர போலீஸ்காரர் பிள்ளைகளுக்கு என்றும், செக்ரடேரியட்டில் இருப்பவர்களுடைய பிள்ளைகளுக்கு என்றும் இப்படி எல்லாம் ஒதுக்கிக் கொடுக்க இன்றைக்கு இருக்கும் அரசியல் சட்டத்தில் இடம் இல்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** பாரத நாட்டிலே கட்டப்பட்டிருக்கும் வீடுகளிலேயே சென்னை மாநிலத்தில் கட்டப்பட்டிருக்கும் வீடுகள் மிகவும் நன்ருக இருக்கின்றன என்பதற்கு அத்தாட்சி கொடுத்திருக்கிருர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். அதற்கும் மறுப்பு......

(திரு. அ. பெ. தர்மலிங்கம் எழுந்தார்.)

**கனம் சபாநாயகர் :** 'Comparative' ஆகத்தான் சொல்கிருர்.

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்பிற்குரிய திரு. சண்முகம் அவர்கள் பேசும்போது, 'மந்திரிமார்கள் தலையிடுகிருர்கள்' என்று சொன்னுர்கள். போலீஸ் இலாகாவுக்குப் பொறுப்புள்ள மந்திரி தலையிடாமல் வேறு





யார் தலையிடுவது ? போலீஸ் இலாகாவில் கீழே இருக்கும் அதிகாரிகள் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதைச் சொல்லாமல், பேசாமல் இருக்க வேண்டுமா ? நல்ல முறையில் நடக்க வேண்டும் என்று நாங்கள் கட்டளையிடுவது, எச்சரிக்கை செய்வது இவற்றை நிச்சயமாகச் செய்தே தீருவோம். அதிலே எந்தவிதமான சந்தேகமும் வேண்டியதில்லை. எப்படிச் செய்தாலும் பார்த்துக்கொண்டே மந்திரிமார்கள் இருக்க வேண்டுமென்ருல் அது ஜனநாயகத்திற்கு ஒவ்வாது.

மதிப்பிற்குரிய திரு. சண்முகம் அவர்கள் பேசுகையில், திருவண்ணுமலையில் நடைபெற்ற தேர்தலைப் பற்றிக் குறிப்பிட்டு, "ஏதோ அடித்தார்கள்" என்று கேள்வி கேட்டதாகவும், அதற்கு நான் "ஒன்றும் இல்லை" என்று பதில் சொன்னதாகவும் தெரிவித்தார்கள். எனக்கு வந்த தகவலை வைத்துத்தான் நான் பதில் சொன்னேன். இப்பொழுது எனக்கு வந்த தகவலை வைத்துத்தான் சொல்கிறேன்.

Both Collector of North Arcot and I.-G. of Police who were consulted in the matter have reported that there was no lathi charge by the police on 30—6—1963 at Tiruvannamalai.

**திரு. ப. உ. சண்முகம் :** பாயிண்ட் ஆஃப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன், ஸார். இது குறித்து டி. ஐ. ஜி. ஆகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற திரு. டயாஸ் என்பவர் திருவண்ணுமலைக்கு வந்து விசாரணை நடத்தினுர். விசாரணை நடத்தியபின், அடிபட்டவரை ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்தார். இவ்வளவு நடந்த பிறகும், 'இல்லை' என்று அமைச்சர் அவர்கள் மறுப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

**கனம் திரு. பூ. கக்கன்:** கலெக்டரிடமிருந்தும் ஐ. ஜி. ஆஃப் போலீசிடமிருந்தும் வந்த பதிலைச் சொன்னேன்.

**திரு. ப.உ. சண்முகம் :** பத்திரிகையில்கூட. . . . .

**கனம் சபாநாயகர் :** பத்திரிகையில் வந்ததைச் சொல்லிப் பிரயோஜனம் இல்லை.

Pathrikai is not more authoritative than what the hon. Member says.

**திரு. மு. கருணுநிதி :** "போலீஸ் அதிகாரி எது செய்தாலும் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம்" என்று சற்று நேரத்திற்கு முன்புதான் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இதில் அவர்கள் தலையிடாமல் ஏன் பார்த்துக் கொண்டிருந்தார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திருவண்ணுமலை சம்பந்தப்பட்ட வரையில் எனக்கு வந்த தகவலை வைத்து நான் சொல்ல விரும்புகிறேன். (Lathi Charge) இல்லை என்பது உண்மைதான். ஆனுல் கூட்டம் Stampede ஆகும்போது அவர்கள் கொஞ்சம் தள்ளப்பட்டார்கள். பெரிய கூட்டம் வந்து கொந்தளிப்பு இருந்தால் சில பேர் விழுந்து விடுகிருர்கள். அப்படி அவர்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்ருர்கள். அவர்களைப் போலீஸ்காரர்கள் பார்த்திருக்கிருர்கள். அதுதான் நிலைமை. Lathi Charge என்பது இல்லை.

**கனம் திரு பூ. கக்கன் :** போலீஸ் ஸ்டேஷன்களுக்குப் போன் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று சில கனம் அங்கத்தினர்கள் இங்கே பேசினுர்கள். பல இடங்களிலே இப்பொழுது போன் வைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும்கூட, ஒரு phased programme-ன் கீழ்தான் செய்துகொண்டு வருகிறோம்.

மதிப்பிற்குரிய திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள், சுருக்கெழுத்தாளர்களைப்பற்றிச் சொன்னுர்கள். திராவிட முன்னேற்றக் கழக அன்பர்கள் பேசுகிற கூட்டத்திற்கு மட்டுமல்லாமல், எல்லாவற்றுக்கும்

சுருக்கெழுத்தாளர்கள் போக வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அவர்கள் யார் யாருடைய கூட்டத்திற்குப் போகிறார்கள் என்பது பிரச்னை அல்ல. அவர்கள் விரும்பினால் எல்லாவற்றுக்கும் போவார்கள். விரும்பாவிட்டால், கட்டாயம் போய்த்தான் தீரவேண்டும் என்பது அல்ல. அவர்கள் போய் அதையெல்லாம் பார்க்க வேண்டும் என்பதற்குத் தக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

போலீஸ் லைனில் இரவு ஒன்பது மணிக்கு மேல் மின்சார லைட் எரியக் கூடாது என்று கட்டளை இட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. அப்படிக் கட்டளை ஒன்றும் இல்லை. குறிப்பிட்ட யூனிட்தான் போலீஸ் லைனில் மின்சாரம் செலவழிக்க வேண்டும் என்று ஒரு ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த வசதி பற்றி மேலும் பரிசீலனை செய்து, எவ்வளவு தூரம் அவர்களுக்கு ஒத்தாசை உதவி செய்வது என்பது பற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'ட்ராபிக்' பகுதியைப்பற்றி இங்கே பாராட்டிப் பேசினார்கள். சென்னை நகரத்தில் ட்ராபிக் பகுதியில் வேலை செய்யும் நண்பர்கள் ஆற்றும் பணி சிறந்த பணியாகும். அதற்காக உண்மையிலேயே மக்களுடைய நன்றியை அவர்கள் பெறத் தகுதி உள்ளவர்கள். சிறப்பாகவே அவர்கள் அந்த வேலையைச் செய்து வருகிறார்கள் என்று இந்த சமயத்திலே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கட்சிப் பிரசாரத்திற்காகப் போலீஸை நாம் பயன்படுத்துகிறோம் என்று மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். இது பற்றி நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். போலீஸ்காரர்களை வைத்துக் கொண்டு கட்சிப் பிரசாரம் செய்துதான் காங்கிரஸ் ஸ்தாபனம் நடைபெற வேண்டும் என்று அவர்கள் நினைத்தால், தெரியாத்தனமாகச் சொல்கிறார்கள் என்றுதான் அர்த்தம். காங்கிரஸ் ஸ்தாபனத்தின் பெருமையை நன்றாக அறிய வேண்டும். அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அறிந்திருந்தும் மறுத்துச் சொல்கிறார்கள் என்பதுதான் என்னுடைய எண்ணம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

'விலங்கு போட்டுக்கொண்டு போனார்கள்' என்று குறை சொல்லப்பட்டது. அன்றைக்கிருந்த நிலைமை எனக்குத் தெரியாது. காங்கிரஸ்காரர்களைக் கூட விலங்கு போட்டுக் கொண்டு போனார்கள். எம்.பி. ஒருவர் கூட அவ்வாறு கொண்டு போகப்பட்டிருக்கிறார். நியாயமாகவும் நீதியாகவும் இந்தப் போலீஸ் இலாகா நடக்கிறது என்பதற்கு இதுவே ஒரு உதாரணம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : ஒரு எம்.பி.-யின் மேல் கொலைக் கேஸ் நடந்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

கனம் திரு. பூ. கக்கன் : எப்படிக் கொண்டு போனார்கள் என்பது தெரியாது. பத்திரிகை வாயிலாகப் பார்த்துச் சொல்கிறேன். போலீசார் நீதியோடும் நேர்மையோடும் நடந்து கொள்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களைப் பாராட்ட வேண்டும். (திரு. மு. கருணாநிதி) எழுந்தார்.

MR. SPEAKER : The Hon. Minister is not yielding.

THE HON. SRI. P. KAKKAN ; I am not yielding (laughter). ஸ்பெஷல் ஆர்ம்டு போலீஸ் பயிற்சியைப்பற்றிச் சொல்லும்போது போலீஸ் அதிகாரிகளை வெளியிடங்களுக்கு அனுப்பி அவர்களுக்குத் தகுந்த பயிற்சி கொடுக்க வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அதைச் செய்து கொண்டே வருகிறோம். கூடுமான வரை மேலும் செய்வோம் என்று இந்தச் சமயத்தில் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



மதிப்பிற்குரிய திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் பேசும்போது கள்ள நோட்டு அடிப்பவர்கள், கொலைக் குற்றங்கள் செய்கின்றவர்கள் இப்படிப்பட்டவர்களை மிகத் தீவிரமாகக் கண்டுபிடிக்கத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காக நல்ல முறையில் அரசாங்கம் சிரத்தை எடுத்து வருகிறது. கொலைக் குற்றங்கள் எங்கு நடந்தாலும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அதிகாரிகள் விட மாட்டார்கள்.

ஊர்க்காவல் படையினரை ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்கள் நல்ல முறையில் தொண்டு செய்கிறார்கள். கிராமத் தொண்டர் படையினரும் கிராமப் பணியில் ஈடுபட்டு நல்ல முறையில் பணி செய்து வருகிறார்கள். ஊர்க்காவல் படையினரின் சேவை, தொண்டு மிகவும் பாராட்டத் தக்கது. நாட்டுக்கு எந்த விதமான ஆபத்தும் வராதபடி அவர்கள் சிறந்த முறையில் சேவை செய்யும்போது போலீஸ் அதிகாரிகள் மூலமாகச் செயல்படுவார்கள்.

மதிப்பிற்குரிய திரு. கார்ச்சா கவுடர் அவர்கள் பேசும்போது, திரு. மொராச்சா அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவருடைய சேவை உண்மையிலேயே பாராட்டத்தக்கதுதான். அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது, போலீஸ் இலாக்கா என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பது இப்பொழுது எனக்குத் தெரியாது. இருந்தாலும், அதுபற்றி நிச்சயமாகக் கவனிப்பார்கள் என்றே நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மதிப்பிற்குரிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அவர்கள் சென்னை நகரத்தில் பொதுக் கூட்டத்தில் பேசும்போது, குறிப்பிட்ட நேரத்தையும் தாண்டி மைக்கில் பேசினார்கள் என்று ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார்கள். அதற்கு மதிப்பிற்குரிய ஹாஜா ஷெரீஃப் அவர்கள் பதில் சொன்னார்கள். இரவு 12 மணி வரைக்கும் மைக் வைத்துப் பேசலாம், அதற்குப் பிறகு மைக்கிலே பேசக்கூடாது. மைக் இல்லாமல் பேசலாம். அந்த முறையில்தான் அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகவே, 'குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகும் மைக் வைத்துக் கொண்டு பிரசாரம் செய்தார்கள்' என்று சொல்வது சரியல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. மாதவன் அவர்கள் பேசும்போது, "போலீஸ்காரர்கள் உடனே வருகிறார்கள், பிடிக்கிறார்கள், மறுபடியும் கேஸ் போடுகிறார்கள்" என்று சொன்னார்கள். கேஸ் போட்டது உண்மைக்கு விரோதமானால், கோர்ட்டிலே போய்த் தக்க ஏற்பாடு செய்துவிடலாம். மதிப்பிற்குரிய திரு. மாதவன் அவர்கள் ஒரு வழக்கறிஞர். அவரிடம் அடிக்கடி வருவார்கள். போலீஸ்காரர்கள் அக்கிரமம் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மதுரை நகரில் போலீஸ் அதிகாரியைப்பற்றிப்பேசும்போது, ஏதோ அன்பர்களைக் காலால்உதைத்தார்கள் என்று சொன்னார்கள். பொறுப்புவாய்ந்தவர்களைப் பற்றிப் பொறுப்பாகச் சொல்ல வேண்டும். கனம் அங்கத்தினர் அதை நேரில் பார்த்தாரா? மற்றவர்கள் பார்த்திருக்கிறார்களா? என்று தெரியவில்லை. அவ்வாறு நடைபெறவில்லை என்றே நான் கூறுவேன். நடைபெறாததை, நடந்ததாகத் திரித்து இந்த மன்றத்தில் எது வேண்டுமானாலும் பேசலாம் என்பதற்காகப் பேசுவது நல்லதல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மதிப்பிற்குரிய திரு. பழனி அவர்கள் கடற்கரை ஓரத்தில் நடைபெறுகிற திருட்டுக் கடத்தல்களைக் கண்டுபிடிக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும், அங்குள்ள அதிகாரிகளுக்கு வாகன வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அந்த ஏற்பாடுகளை எல்லாம் அரசாங்கம் நல்ல முறையில் செய்து வருகிறது. திருட்டுக் கடத்தலை அறவே தடுக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். ஒரு லாரியைப் பிடிக்கிறார்கள், இன்னொன்றை விடுகிறார்கள் என்று சொன்னார்கள். இதுமாதிரியான

குறைபாடுகளை எல்லாம் உடனுக்குடன் எழுத்து மூலம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 8,20,22,000 under Demand No. XII—Police be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,20,22,000 under Demand No. XII—Police".

The Demand was put and carried and the grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

1-52 p.m. The House then adjourned.

VII.—PAPERS PLACED ON THE TABLE OF THE HOUSE.

## A. Statutory Rules and Orders.

* 124. *Notification issued with G.O. Ms. No. 1746, Public (Services-A), dated 11th November 1963, amending the Madras Public Service Commission Regulations, 1954 relating to the inclusion within the Commission's purview, the post of Ceramic Supervisor in Work Centre for Ceramic for semi-educated youths at Athoor in Madras Industries Subordinate Service. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]*

* 125. *Notification issued with G.O. Ms. No. 122, Public (Services-A), dated 24th January 1964, amending the Madras Public Service Commission Regulations, 1954 relating to the inclusion within the Commission's purview, the posts of Statistical Assistants in Town Planning Subordinate Service. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]*

126. *Notification issued with G.O. Ms. No. 3773, Home, dated 2nd December 1963, amending Rule 427-A of the Madras Motor Vehicles Rules, 1940 in so far as it relates to the accidents at unmanned railway crossings. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939.]*





## B. Reports, Notifications and other papers.

† 83. *Speech of the Hon. Minister for Home while moving Demand No. XII—Police (English and Tamil).*

† 84. *Note on Demand No. XIII—Education (English and Tamil).*

85. *Annual Financial Statement for 1964-65 and Supplementary Financial Statement for 1963-64 of the Madras State Electricity Board.*

---

* Placed on the Table of the House on 17th March 1964.

† Circulated to Members on 16th March 1964.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, the 19th March 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. SPEAKER (THE HON. SRI S. CHELLLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

### விவசாய வருமானவரி

*316 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாய வருமானவரி வசூலிக்கப்படுவதில் உடன்பாடு மதிப்பீடு (Composition of Agricultural Income-tax) செய்யப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், 1962--63-ல் மொத்த வரி விதிப்பு எண்ணிக்கையில் எத்தனை பேருக்கு (Composition of Agricultural Income-tax) முறையில் வரி விதிக்கப்பட்டது ?

(உ) இது மொத்த வரியில் எத்தனை சத விகிதம் ?

**கனம் திரு வெ. ராமைய்யா :** (அ) ஆம்.

(இ) 28,897 பேருக்கு.

(உ) மொத்த வரித் தொகையில் இது 8 சத விகிதம்.

**திரு. து. ப. அழகமுத்து :** இப்படிக் கம்பவுண்ட் செய்து கொள்ள அனுமதிப்பதன் மூலம் சர்க்கார் வருமானத்தில் குறைவு ஏதேனும் காணப்படுகிறதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** சர்க்கார் வருமானத்தில் கொஞ்சம் குறைவு ஏற்படத்தான் செய்யும். இருந்தாலும் விவசாயிகளுக்கு அதிகத் தொந்தரவு இருக்கக் கூடாது என்பதற்காகவே இந்தச் சலுகையை விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறோம்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** விவசாய வருமான வரிக்கு என்று தனிச் சட்டங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் செலவு அதிகமாக ஏற்படுவதால் மற்ற வரிகளுடனேயே சேர்த்து இந்த வருமான வரியையும் சேர்த்துப் போட அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்போது இருக்கின்ற முறையை மாற்று வதாக உத்தேசம் இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** பொதுவாக இதிலே வரக்கூடிய வருமானம் குறைவாக இருப்பதால் விவசாயிகளுடைய நன்மையை உத்தேசித்து விவசாய வருமான வரியை எடுத்து விட வேண்டுமென்ற அபிப்பிராயம் அரசாங்கத்துக்கு உண்டா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அந்த மாதிரி அபிப்பிராயம் இல்லை.

[19th March 1964

**திரு. கி. இரா. சம்பந்தம்:** சீலிங் ஆபீசர் என்று ஒவ்வொரு டிவிஷனிலும் வைத்திருக்கிறார்கள். அவர் மூலமாகவே இந்த வரியை வசூல் பண்ண ஏற்பாடு செய்து இப்போதிருக்கக்கூடிய அக்ரிகல்சரல் இன்கம்டாக்ஸ் ஸ்தாபனத்தை எடுத்துவிட சர்க்கார் முன் வருமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** சீலிங் ஆபீசருக்கு இருக்கக்கூடிய வேலையைத் தங்கு தடையின்றி பார்த்தாலே போதும். இதிலே எந்த விதமான மாறுதலையும் செய்வதாக இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கம்பவுண்டிங் செய்வதற்கு விவசாயிகள் வருஷா வருஷம் எழுத வேண்டியிருக்கிறது. மூன்று வருஷத்திற்கு ஒரு முறை கம்பவுண்டிங் செய்யலாம் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு வெ. ராமையா :** இப்போது இருக்கக்கூடிய முறை வருஷா வருஷம் விவசாயிகள் கம்பவுண்டிங் செய்வதற்கான கோரிக்கையைக் கொடுக்க வேண்டும் என்பது தான். அது தான் விவசாயிகளுக்கு நன்மையைத் தரும். மூன்று வருஷத்திற்கு ஒரு முறை என்று வைத்து விட்டால் சில சந்தர்ப்பங்களில் கம்பவுண்டிங் செய்வதற்குப் பதிலாக நேரடியாகக் கணக்குக் கொடுப்பதால் விவசாயிகளுக்கு லாபம் கூட இருக்கலாம். ஆகவே இப்போது இருப்பது தான் விவசாயிகளுக்கு நன்மை தரக்கூடிய முறை.

### *Arrears of Taxes*

* 317 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the amount of arrears as on 31st March 1963 in the collections of (1) Sales tax, (2) Entertainment tax and (3) Agricultural Income-tax; and

(b) the reasons for the accumulation of the arrears?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) *Sales Tax* :

| | RS. |
|---|---|
| (i) Madras General Sales Tax ... | 2,31,79,474 |
| Central Sales Tax ... ... | 46,79,622 |
| Total ... | 2,78,59,096 |

| | RS. | NP. |
|---|---|---|
| (ii) Entertainment Tax ... ... ... | 4,57,526 | 00 |
| (iii) Agricultural Income-Tax ... ... | 30,32,846 | 69 |

The arrears have to be recovered by the various processes of action such as action under the Madras Revenue Recovery Act, filing of applications before Magistrates for the recovery of the arrears, issue of notices to others holding money to the credit of defaulters, etc. A portion of the arrears is covered by stay orders issued on appeals and revision petitions and non-expiry of notice time. Action under the Revenue Recovery Act is a long drawn process as elaborate statutory formalities have to be observed. Applications to the court are made only after exhausting all the remedies and the courts also have to make a thorough investigation



19th March 1964]

regarding the solvency of the defaulters. Some delays invitably occur in making enquiries and investigations in respect of other modes of recovery also.

### *Agricultural Income-tax*

The Agricultural Income-tax Officer has no power to enforce the payment of due if the assessee does not pay the tax within the statutory time of 21 days. He can only call upon the collector to set in motion the Revenue Recovery Act. The collection work thus becomes the sole responsibility of Tahsildars. As Tahsildars have multifarious duties including the collection of various taxes and revenues, the collection of Agricultural income-tax could not receive their exclusive attention and hence the arrears. However, every effort is being made to collect all taxes and revenues due to the Government within the limits set by law.

**திரு. ஜே. மாதா கவுடர் :** விற்பனை வரி போன்றவற்றை வியாபாரிகளிடத்திலிருந்து வசூல் செய்யத் தாமதம் ஏற்படும்போது கோர்ட் மூலமாக வசூலிக்க சம்மன் அனுப்பி வழக்குத் தொடர்கிறார்கள். அவ்வாறு வழக்குப் போட்டு அபராதம் விதிப்பது சரியா ? அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் அவர்களுக்கு மெட்ராஸ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் சட்டமும் அதில் இருக்கின்ற விதிகளும் தெரியும் என்றே நினைக்கின்றேன். ரெவின்யூ ரெகவரி ஆக்ட் மூலமும், கோர்ட்டுகளின் மூலமும் வசூலிப்பதற்கு நிர்வாகத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். நிர்வாகத்தை நடத்துகின்ற முறையிலே இந்தப் பொதுவான விதியை அனுஷ்டிக்கிறோம். ரெவின்யூ ரெகவரி ஆக்டின்படி ரெகவர் செய்ய முடியாதபோது கோர்ட்டு மூலம் வசூல் செய்து கொண்டு வருகிறார்கள்.

**திரு. செ. சீனிவாசன் :** என்டெர்டெய்ன்மெண்ட் டாக்சைப் பொறுத்து டாக்ஸ் எவேஷன் இருப்பதால் ஒரு லம்ப்சம் தொகையைத் தியேட்டர் உரிமையாளர்களிடம் இருந்து வாங்க வைக்க முன் வருவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** என்டெர்டெய்ன்மெண்ட் டாக்சைப் பொறுத்து ஓரளவு எவேஷன் இருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியும். திடீரென்று சோதனை போட்ட இரண்டு மூன்று இடங்களில் 400 பேர் இருந்த இடத்திலே நாலைந்து டிக்கட்டுகள் விற்றதாகக் காட்டியிருந்தார்கள். அதற்காக இப்போது "சர்ப்ரைஸ் செக்" செய்வதற்காக சி.டி.ஓக்களுக்கு எல்லாம் அதிகாரம் கொடுத்திருக்கிறோம். கம்பவுண்டிங் பண்ணுவதன் மூலமாக நன்மை ஏற்படுமா என்பதைப் பற்றி இன்னும் ஆலோசிக்கவில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** விவசாய வருமான வரி வசூலிப்பதில் உள்ள சங்கடத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை வசூலிக்க சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸைப் பொறுத்த வரையில் ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் மூலம் வசூலிக்க வேண்டும். அதற்காகத் தாசில்தார்களுக்கு அனுமதி கொடுத்து ரிக்கவரி எல்லாம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். காலதாமதம் ஆகிறது என்பது உண்மைதான். ஆனால் காலதாமதம் ஆகிறது என்பதற்காக கெடுபிடி நடவடிக்கைகள் எடுத்தால் விவசாயிகள் கஷ்டப்படுவார்கள். ஆகவே பொறுத்துத் தான் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தமாஷா வரி கிடைப்பதில், அவர்கள் டிக்கட்டை அதிகமாக விற்று குறைவாகக் காண்பித்திருக்கிறார்கள் என்றால் டிக்கட்டைப் பெறக்கூடியவர்கள் அந்த டிக்கட்டை வைத்துக் கொண்டிருக்க

வில்லை என்றால் 500 ரூபாய் அபராதம் என்று ஸ்லேட் போடுகிறார்கள்.
அப்படிப் போடுவது பொது மக்களுக்கு வேதனை அளிக்கக்கூடியதாக
இருக்கிறது. ஆகவே அந்த ஸ்லேட்டை எடுத்துவிடும்படி அரசாங்கம்
சொல்லுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பொது மக்கள் நிர்வாகத்துடன்
ஒத்துழைக்க வேண்டுமென்ற கொள்கையை அங்கத்தினர் அவர்கள் ஏற்றுக்
கொள்வார்கள் என்று நம்புகிறேன். டிக்கட் வைத்துக் கொண்டிருந்தால்
தான் அவர்கள் டிக்கட் விற்றார்களா இல்லையா என்பதைப் பரிசீலனை
செய்யமுடியும். பரிசீலனை செய்து நிர்ணயிக்க முடியும். இல்லாவிடில்
சினிமா நடத்துகிறவர்கள் டிக்கட் விற்காமலேயே ஆட்களை உள்ளே விட்டு
விட்டு பிடித்தவுடன் நாங்கள் டிக்கட் கொடுத்து விட்டோம், வந்தவர்கள்
தான் அதைக் கிழித்துத தூக்கி எறிந்து விட்டார்கள் என்று சொல்லி தப்பித்
துக்கொள்ள வழியிருப்பதால் அந்த விதமான நிலை இருக்கக் கூடாது
என்று தான் இந்த மாதிரி விதி போடப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** விற்கக் கூடிய டிக்கட்டுகளின் சீரியல் நம்பர்
ஒழுங்காக இருக்கிறது. சில் செய்து சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர் மூலம் விற்பனை
செய்யும்போது எவ்வளவு பேர்கள் உள்ளே இருக்கிறார்கள், எவ்வளவு
டிக்கட்டுகள் விற்கவில்லை, எவ்வளவு விற்று விட்டோம் என்று சொன்னால்
அது அவர்கள் தவறு, அப்படியிருக்க பொது மக்கள் மீது என் நடவடிக்
கைகள் எடுக்கப்படவேண்டும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவர்கள் ஆர்க்யூ செய்கிறார்கள்.
அதை வருகிற கமர்ஷியல் டாக்ஸ் விவாதத்தின்போது செய்யலாம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஒவ்வொரு கொட்டகையிலும் இவ்வளவு
ப்ரீ பாஸ் தான் வழங்கலாம் என்று நிர்ணயிக்க உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால்
அவர்கள் முன்கூட்டியே சொல்ல வேண்டும், இவ்வளவு தான் கொ[illegible]
திருக்கிறோம் என்று. 400 அல்லது 500 பேர்கள் இருக்கும் இடத்தில் 30[illegible]
ப்ரீ பாஸ் கொடுத்தோம் என்று சொன்னால் அதைச் சர்க்கார் ஒத்துக்
கொள்ளமாட்டார்கள்.

**திரு. து. ப. அழகமுத்து :** விவசாய வருமான வரியில் ஏற்படுகிற
பாக்கியை வசூல் செய்வதில் கஷ்டமாக இருக்கிறது என்றும், கெடுபிடி
செய்தால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதால் கெடுபிடி செய்
வதில்லை என்று அமைச்சர் கூறினார்கள். அப்படியானால் விவசாயிகள்
பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்து இந்த வருமான வரியை நீக்கு
வதற்கு அரசாங்கம் புனராலோசனை செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இன்று அந்த இலாகா மான்யம்
தான். அந்த ஸஜஷன்ஸை ரெவின்யூ அமைச்சர் அவர்களிடம் சொல்லலாம்.

**திரு. ஆ. துரையரசன் :** சென்னை நகர திரைப்படக் கொட்டகைகளில்
டிக்கட்டை வாங்கி என்ட்ரன்ஸில் வைத்துக்கொண்டு அதிக விலைக்கு
விற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதில் கொட்டகை ஓனர்களுக்கும் சம்
பந்தம் இருக்கிறது என்ற அளவிற்குத் தொடர்பு இருப்பதாக அறிகிறோம்.
அதைக் கண்டுபிடிக்க சர்க்கார் சி.ஐ.டி.க்களை நியமிக்க ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த நாட்டில் ஒவ்வொரு சட்டத்
தையும் நிறைவேற்றுவதற்கு ஸி.ஐ.டிக்களை அமைத்துத் தான் செய்ய
வேண்டுமென்ற நிலை ஏற்படுமானால் நாட்டில் மக்கள் இருக்கமாட்டார்கள்.
ஸி.ஐ.டிக்கள் தான் அதிகமாக இருப்பார்கள். பொதுவாக பொது
மக்கள் நல்ல முறையில் ஒத்துழைத்தால்தான் இதை நிறுத்த
முடியும். வெளியில் இருந்து டிக்கட் வாங்கக் கூடாது என்ற
நியதியைப் பொது மக்கள் ஏற்றுக் கொண்டால் இந்தப் பழக்கம்



நின்று விடும். இதைக் கண்காணிப்பதற்கு சினிமாட்டோகிராப் ஆக்ட் பிரகாரம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர எண்டெர்டெயின் மென்ட்ஸ் ஆக்டில் அதிகாரம் ஒன்றுமில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** விவசாய வருமான வரி பாக்கி அதிகமாக இருக்கிறது என்ற தலைப்பிலே அமைச்சரவர்கள் யாராவது விவசாய வருமான வரி கட்டாதிருக்கிறார்களா ?

**கனம் திரு ஆர். வெங்கட்டராமன் :** தனிக் கேள்வி போடலாம். அங்கத்தினர்களும் கட்டவில்லையா என்று போடலாம் சேர்த்து.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ரெவின்யூ ரிக்கவரி ஆக்ட் முன்பு வெகு காலத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டபோது தொகை குறைவாக இருந்த தால் தாசில்தார்களும், கிராம அதிகாரிகளும் வசூல் செய்ய வேண்டு மென்று சட்டம் இருக்கிறது. இப்போது சேல்ஸ் டாக்ஸில் 2 கோடி பாக்கி யிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆகவே அந்தந்த டிபார்ட்மெண்டில் உள்ள அதிகாரிகளுக்கு என் இந்த அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுத்து அவர்களே நேரடியாக வசூல் செய்ய ஏற்பாடு செய்யக் கூடாதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மொத்தத்தில் இரண்டு கோடி இருந்தாலும் ப்ரேக் அப் செய்து பார்த்தால் பிரமாதமாயிருக்காது. 54 லட்சம் ரூபாய்க்கு ரெவின்யூ ரிக்கவரி ஆக்டின் கீழ் நடவடிக்கைகள் எடுத்து இப்போது நடந்து கொண்டிருக்கிறது. 17 லட்சம் ரூபாய் அளவிற்கு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இன்னும் மற்றவர்களிடத்திலிருந்து நாம் வசூலிப்பதற்காக எடுத்துக் கொண்ட "கார்னிஷிங் ப்ரொஸீடிங்ஸ்"ல் 86,000 ரூபாய் இருக்கிறது. அப்பீல் ரிவிஷன் போட்ட முறையில் ஸ்டே கொடுத்த அளவில் 51 லட்சம் இருக் கிறது. வசூல் செய்ய முடியாது என்ற நிலையில் 8,79,000 ரூபாய் இருக் கிறது. இதையெல்லாம் மொத்தத்தில் கூட்டும்போது 2 கோடி சில்லறை இருந்தாலும் அது அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## அரிசனங்களுக்கு அரசாங்க உத்தியோகம்

*318 கேள்வி—**திரு எஸ். மணி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் உத்தியோகத்திற்கு அரிசனங்களுக்காக 12½ சத விகிதம் ஒதுக்கியிருப்பது உண்மையா ?

(இ) சர்க்கார் உத்தியோகங்களுக்குக் கொடுக்கும் பதவி உயர்விலும் இந்த 12½ சத விகிதம் கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 16 per cent of the appointments in most of the services under this Government are reserved for Scheduled Castes and Scheduled Tribes.

(*b*) The reservation does not generally apply to promotions.

*319 கேள்வி—**திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்காக ஒதுக்கப்பட்ட விகிதாசாரப்படி உத்தியோகங்கள் வழங்கப்படுகின்றனவா ?

(இ) இல்லையெனில், இனியாகிலும் அப்படிக் கொடுப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Does not arise

**திரு. எஸ். மணி :** எனக்கு ஆங்கிலம் தெரியாது. அதனால் தமிழில சொல்லவேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். மணி :** இந்த 16 சத விகிதம் பஞ்சாயத்து யூனியன்களில் கொடுக்கவில்லை என்று இருக்கிறதா ? அப்படியென்றால் அதற்குக் காரணம் என்ன ? அப்படியில்லை என்றால் அப்படிக் கொடுப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்த 16 சத விகிதத்துக்கு ஷெட்யூல் வகுப்பினர் வந்து சேராவிட்டால் மீதியிருக்கும் சத விகிதத்தை பேக்வேர்ட் க்ளாசுக்காக ஒதுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போதிருக்கிற விதிகளை மாற்று வதற்கு உத்தேசமில்லை. விதிகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், மேலும் விபரங்கள் வேண்டுமென்றால் தனிக்கேள்வி கேட்கலாம்.

**திரு. ம. கமலநாதன் :** உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னது போல் பஞ்சாயத்து யூனியன்களில் கொடுக்கப்படுகிற உத்தியோகங்கள் ஹரிஜனங்களுக்கு இவ்வளவு சத விகிதம் கொடுக்க வேண்டுமென்று இல்லை. இருந்தாலும் ஹரிஜனங்கள் தேவையான அளவிற்கு வாராததால், எம்ப் ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் ரெஜிஸ்தர் செய்தாகவேண்டுமென்று இருப்ப தற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டால் ஹரிஜனங்களுக்கு இந்த 16 சத விகிதம் உத்தியோகம் கொடுக்க முடியும். ஆகவே அந்த விதி தளர்த்தப்படுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விதியைத் தளர்த்தினால் அந்த வரம்பில்லாமல் நியமனம் செய்து கொள்ளலாம். தளர்த்தினால் ஹரிஜனங் களுக்குக் கிடைக்கும் என்ற உறுதியில்லை. ஆகவே விதியை எவ்வாறு மாற்றுவது என்பது பற்றி விபரங்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் தனிக் கேள்வி போடலாம்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இந்த 16 சத விகிதம் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் இது அமுலாக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது சர்க்கார் உத்தியோகங்கள் பற்றியது. கூட்டுறவு ஸ்தாபனம் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால் தனிக் கேள்வி வேண்டும்.

*Hospitals in Ramanathapuram district*

* 320 *Q.*—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to construct additional hospitals in Ramanathapuram district in 1963–64 : and

(*b*) if so, the details thereof?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) & (இ) அரசினர் கீழ்க் கண்ட வேலைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளனர் :—

(i) புது மடம், அரசாங்க மருந்துச் சாலையை ஆறு படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக மாற்றி, அதற்கென புதிய கட்டிடம் ஒன்றைக் கட்டுதல் :

(ii) தற்பொழுது 12 படுக்கைகளுடன் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு பனைக்குளத்தில் வாடகையற்ற கட்டிடம் ஒன்றில் நடத்தப்பட்டு வருகிற மருத்துவ மனைக்குக் கட்டிடம் ஒன்றைக் கட்டுதல் ;





(iii) தேவகோட்டையிலுள்ள அரசாங்க மருத்துவசாலையை ஒரு மருத்துவ மனையாக மாற்றி, அதற்காகப் புதிய மனைக்கட்டில் கட்டிடங்களைக் கட்டுதல் ;

முதல் இரண்டு வேலைகள் சம்பந்தமாக நில ஆர்ஜிதம் செய்வதைக் குறித்து அரசாங்கம் யோசித்து வருகிறது. மூன்றாவது வேலை சம்பந்த மாக, அவசியமான வரை படங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டியுள்ள மதுரையில் இருக்கின்ற ஹெட் க்வார்ட்டர்ஸ் ஆசுபத்திரிக்குத் தான் போகவேண்டியிருக்கிறது. அதோடு கிழக்கு ராமநாதபுரம் கடைசி யிலும், இராமநாதபுரத்தில் ஒரு ஆசுபத்திரி இருக்கிறது. ஆகவே இராம நாதபுரம் மாவட்டத்தில் ஒரு ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆசுபத்திரி நிறுவ அரசாங் கம் முன் வருமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இப்போது இருப்பதை விரி வாக்க வேண்டும் என்ற யோசனை அரசாங்கத்தில் இருக்கிறது. இந்தத் திட்டத்தில் புதிதாக ஹெட்க்வார்ட்டர்ஸ் ஆசுபத்திரி வைக்கின்ற நோக்கம் எதுவுமில்லை.

**திரு. ம. கமலநாதன் :** ஸார், பிரைமரி ஹெல்த் சென்டர்களைப் பொறு த்த வரையில் சில இடங்களில் இன்னும் துவக்கப்படாமல் இருந்து வருகிறது. இதற்காகக் கட்டடங்கள் கட்டப்பட்டும் திறக்கப்படாமல் இருக் கிறது. ஆகவே, கட்டிடங்கள் கட்டிய இடங்களில் எல்லாம் ஆசுபத்திரியை திறக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸார், குறிப்பாக திட்டத்தின் மூலம் எங்கெல்லாம் பிரைமரி ஹெல்த் செண்டர் திறக்கவேண்டும் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம், திறக்கப்படும். ஆனால் கட்டடம் கிடைக்கின்ற விஷயத்தில் வாடகைக் கட்டிடம் கிடைப்பதாக இருந்தாலும் சரி, ரெண்ட்ஃப்ரி கட்டிடம் கிடைப்பதாக இருந்தாலும் உடனே பிரைமரி ஹெல்த் சென்டரை நிறுவுவதற்கு முன் வரும் என்பதை நான் முன்பே சொல்லியிருக்கிறேன்.

**திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர் களே, பஞ்சாயத்து யூனியன் அதிகாரத்திற்கு உட்பட்ட மருத்துவ மனையும் அரசாங்க மருத்துவ மனையும் பக்கத்திலேயே மூன்று மைல் தூரத்திற்குள் ளாகவே இருப்பதால், அரசாங்க ஆசுபத்திரியில் டாக்டர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் அதிகாரத்தின் கீழ் இருக்கின்ற ஆசுபத்திரியை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** எற்கெனவே பஞ்சாயத்து யூனியன் ஆரம்பித்திருக்கின்ற ஆசுபத்திரிகளின் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, உறையூர் என்ற கிராமத்தில் தனிப்பட்டவர்கள் .............

MR. SPEAKER : This question relates to hospitals in Ramanathapuram district. The hon. Member can put a general question and not a particular question.

SRI V. KRISHNAMOORTHY : I am putting a particular question.

MR. SPEAKER : I am saying that the hon. Member may put a general question.

[19th March 1964

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இவ்வாறு தனிப்பட்டவர்கள், சுமார் 20 ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து கட்டடம் கட்டியும், என்னுடைய பகுதியிலே இருக்கின்ற நெல்லிக்குப்பம் பஞ்சாயத்து யூனியனில் என் இது வரை ஆசுபத்திரி ஆரம்பிக்கப்படவில்லை.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதைப்பற்றிய தகவல் அரசாங்கத்திற்கு வந்தால் கவனிக்கலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஸார், 1964–65-ம் ஆண்டில் புதிதாக பிரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிக்க உத்தேசம் உண்டா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதைப் பற்றி சுகாதார மான்யம் வரும்போது பேசிக் கொள்ளலாம்.

### *National Securities Rules*

* 321 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the safeguarding of National Security Rules are applied to employees in State Government Service; and

(*b*) the number of cases dealt with under these Rules during 1961–62 and 1962–63.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Madras Civil Services (Safeguarding of National Security) Rules, 1954, are applicable to the employees of the State Government.

(*b*) Nil.

### காதித் துறை

*322 கேள்வி—**திரு. முனு ஆதி :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கக் காதி இலாகாவில் வேலை செய்யும் ஊழியர்கள், அதிகாரிகள், மாவட்ட ரீதியாக எத்தனை பேர் ?

(இ) இவர்களது ஊதியமாகவும், பஞ்சப்படியாகவும் மாதமொன்றுக்கு அளிக்கும் தொகை எவ்வளவு ?

(உ) இந்தக் காதி இலாகாவில் அன்றாட அலுவல் என்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANDRADIAR : (*a*) to (*c*) A statement [a] is placed on the table of the House.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இதில் "நம்பர் ஆஃப் ஸபார்டினேட்ஸ்" என்று போட்டிருப்பதில் என்னென்ன கேட்டகரியிலுள்ள ஆட்கள் எல்லாம் இருக்கிறார்கள் ? ஒவ்வொரு ஜில்லாவிலும் பெரிய அதிகாரி ஒருவர் போக அடுத்ததில் " நம்பர் ஆஃப் ஸபார்டினேட்ஸ் " என்று போட்டு அதில் இத்தனை பேர்கள் என்றும் போடப்பட்டிருக்கிறது. இவர்கள் என்னென்ன கேடர்களைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அபிஷியல்ஸ் என்று போட்டிருப்பது கெஸடட் ஆபீஸர்களைப் பற்றியது. அடுத்தாகப் போடப்பட்டிருப்பது கெஸடட் ஆபீஸர்கள் அல்லாத மற்றவர்கள்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இந்தத் திட்டத்தில் பிளாக் லெவலில் இருக்கின்ற காதி எக்ஸ்டன்ஷன் ஆபீஸர்களும் சேர்க்கப்பட்டு இருக்கின்றார்களா ?

---

[a] **Printed as Appendix on page 341.**



19th March 1964]

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதில் கொடுத்திருப்பது போல், காதி டிபார்ட்மெண்டும் சேரும். அதாவது எங்களுடைய நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள் இதில் இருக்கிறார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : It is stated in the recent order that there has been a lot of improvement in the sale of Khadi this year. May I request the Hon. Minister to give us figures if they are available regarding sale of Khadi, in 1963 in relation to previous years.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** தனிக் கேள்வி போடவேண்டும்.

### லஞ்சங்கொடுத்தவர் மீது வழக்குகள்

* 323 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) 1963–ல் நம் மாநிலத்தில் லஞ்சம் கொடுத்தவர்கள் எத்தனை பேர் பேரில் வழக்குகள் தொடரப்பட்டன ?

(இ) அவ் வழக்குகளில் எத்தனை தண்டனையில் முடிந்தது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Nil.

(*b*) Does not arise.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, லஞ்சம் கொடுக்கின்றவர்களுக்குத் தண்டனை அதிகமா அல்லது லஞ்சம் வாங்குகின்றவர்களுக்குத் தண்டனை அதிகமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதெல்லாம், சட்டம், தீர்ப்பு அளிக்கின்ற நீதிபதி, இந்த இரண்டையும் பொறுத்திருக்கிறது.

**திரு. செ. மாதவன் :** தேர்தலில் லஞ்சம் கொடுக்கின்றவர்களைக் கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்து வருகின்றது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இதில் உதவி செய்யக்கூடிய ஆற்றல் இருக்கிறது. எப்படி எப்படிக் கண்டு பிடிக்க வேண்டுமென்று வழிகளைச் சொன்னால் அதைப் பற்றிக் கவனிக்கலாம்.

**திரு. ம. கமலநாதன் :** விஜிலன்ஸ் கமிட்டியில் நான்–அபிஷியலையும் சேர்த்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான்–அபிஷியலை இந்தக் கமிட்டியில் சேர்ப்பதாக உத்தேசம் இல்லை. ஆனால் உத்தியோகப் பற்றற்றவர்களின் ஒத்துழைப்பு இதற்குத் தேவைப்படும்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்த விஜிலன்ஸ் கமிட்டிக்கு ஏதாவது தகவல்கள் கொடுக்க இந்தக் கமிட்டியோடு, அங்கத்தினர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியுமா ? அப்படி ஏதாவது தகவல்கள் கொடுத்தால் அவை ரகசியமாக வைக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அங்கத்தினர்கள் தொடர்பு கொள்ளலாம். அவ்விதம் தொடர்புகொண்டு ஏதாவது தகவல்கள் கொடுத்தால் ரகசியமாக வைத்துக்கொள்ளப்படும்.

**திரு. செ. மாதவன் :** இந்த அமைப்பின் மூலம் யார் யார் லஞ்சம் வாங்கினார்கள் என்று கண்டுபிடிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற அமைப்பு என்று கருதுகிறேன். அப்படியானால், தேர்தல் காலத்தில்

[19th March 1964

லஞ்சம் கொடுத்தவர்களையும், கருப்புப் பணம் வைத்திருக்கின்றவர்களையும், கண்டுபிடிப்பதற்கு இந்த அமைப்புக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? என்னென்ன முறைகளில் கண்டுபிடிக்கப்படும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** என்னென்ன வழிகளில் எல்லாம் கண்டு பிடிக்க வேண்டுமோ, அதற்கான அதிகாரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எப்படி எப்படிச் செய்வார்கள் என்பதைச் சொல்லக் கூடாது. அப்படிச் சொல்லுவது நம்முடைய லட்சியத்திற்கே விரோதமாகும்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த விஜிலன்ஸ் கமிட்டிக்கு, மேல்நாடுகளில் ஆம்புட்ஸ்மென் செய்துவருவதுபோல், மக்கள் எழுதி அனுப்பினால் மட்டும் பரிசீலனை செய்வது போன்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது ஸி.ஐ.டி. இலாகாவினரைப் போன்று எங்கெங்கு குற்றங்கள் நடக்கின்றன, எங்கெங்கு லஞ்சம் கொடுக்கப்படுகின்றன, எங்கெங்கு கருப்புப் பணம் இருக்கிறது என்பதை எல்லாம் கண்டுபிடிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எல்லா வகைகளையும் அவர்கள் கையாளுவார்கள்.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்தக் கமிட்டியிலுள்ளவர்கள், வேலை நேரம் இல்லாத சந்தர்ப்பங்களிலும், ஏதாவது குற்றங்களைக் கண்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா அல்லது நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது கமிட்டி ஒன்றும் இல்லை. ஒரு டைரக்டர் இருப்பார். அவர்களின் கீழ் பல அதிகாரிகள் இருப்பார்கள். என்னென்ன வகையில் குற்றம் செய்தவர்களைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். அந்த முறையில் அவர்கள் பணியாற்றி வருவார்கள்.

**திரு. ம. கமலநாதன் :** இதனுடைய காரியாலயம் சென்னையில் மட்டும்தான் இருக்குமா, அல்லது எல்லா மாவட்டங்களிலும் இந்த அமைப்பினுடைய கிளை அலுவலகங்கள் இருக்குமா ? இதனுடைய கிளை அலுவலகங்கள் எல்லா மாவட்டங்களிலும் இருந்தால்தான் நம்மைப்போன்ற உத்தியோகப் பற்றற்றவர்கள் இந்த அமைப்போடு தொடர்பு கொள்ள முடியுமல்லவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சென்னை நகரம் இதனுடைய தலைமை ஸ்தானமாக இருக்கும். குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மட்டும் இதனுடைய மற்ற ஸ்தானங்கள் இருக்கலாம். இரண்டு மூன்று பகுதிகளாக இருக்கலாம். இதெல்லாம் பின்னால் தெரியும். அப்படி வரும்போது கனம் அங்கத்தினர்கள் இதனோடு தொடர்பு கொள்ளலாம்.

**திரு. ஆ. துரையரசன் :** தலைவர் அவர்களே, இந்தக் கருப்புப் பணத்தைக் கண்டுபிடிக்கக்கூடிய ஆரம்ப விழா எப்போது, எங்கே ஆரம்பிக்கப்படும் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது அதற்கு ஆரம்ப விழா நடத்த வேண்டிய தேவையில்லை. கருப்புப் பணம் எங்கேயிருக்கிறது, எங்கே சேர்த்து வைக்கப்படுகிறது, எவ்வாறு செலவழிக்கப்படுகின்றது என்பதை எல்லாம் கண்டுபிடிக்கின்ற முயற்சி எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்தத் துறையில் பணியாற்ற வேண்டிய அதிகாரிகள் எந்த இலாகாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போலீஸ் இலாகாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.



19th March 1964]

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கருப்புப் பணம், கருப்புப் பணம் என்று பேசப்படுகிறதே, இவைகளை அச்சடிப்பது யார் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கருப்புப் பணம் என்பது கள்ள நோட்டு என்பது போல் அல்ல. கருப்புப் பணம் என்பது, அநியாயமான வழியில் பணத்தைச் சம்பாதித்து, வரிகளை ஏமாற்றி, அரசாங்கத்தை ஏமாற்றி, பொதுமக்களை ஏமாற்றிச் சேர்த்து வைத்துத் தவறான வழியில் செலவழிக்கப்படுகின்ற பணம்தான் கருப்புப் பணம்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நூறு ரூபாய் நோட்டை ஆட்டிக் காண்பித்து வோட்டுகளை வாங்கியதாக முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி நூறு ரூபாய் நோட்டை ஆட்டிக் காண்பித்து வோட்டு வாங்கியவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இந்த விஜிலன்ஸ் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எப்படி எப்படி, யார் யார் மீது எந்தெந்த வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமோ அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்துகொள்வார்கள்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, பெர்மிட்டுகள் பெறுவதற்கும், உத்தியோகம் பெறுவதற்கும் லஞ்சம் வாங்கிக்கொண்டு ஆளும் கட்சியினர் . . .

MR. SPEAKER : Now the hon. Member has changed the question.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, பெர்மிட்டுகள் பெறுவதற்கும், உத்தியோகம் பெறுவதற்கும் ஆளும் கட்சியில் இருக்கின்றவர்கள் அமைச்சர்களிடம் சென்று சிபார்சு செய்கின்ற நிலை இருந்து கொண்டு இருக்கிறது. அப்படி ஒரு நிலை இருப்பது தவறு என்று கருதி, அதைக் கண்டுபிடிப்பதற்கு வழி செய்யப்படுமா ?

MR. SPEAKER : Now the hon. Member has changed the question.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தவறுகளை யார் செய்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு சில அங்கத்தினர்கள் பேசுகின்ற தோரணையிலிருந்து இதில் அவர்களுக்கு அதிக அக்கறை இருக்கிறது என்று புலப்படுகிறது. ஆகவே இன்னும் ஜாக்கிரதையாகத்தான் கவனிக்க வேண்டியிருக்கிறது.

9-00 a.m.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஏற்கனவே லஞ்ச ஊழல்களைக் கண்டு பிடிக்க, விசாரிக்க எக்ஸ். பிராஞ்ச் இருக்கிறது. டைரெக்டரேட் ஆஃப் விஜிலன்ஸுக்கும் இதே பொறுப்பு இருக்கிறது. இந்த முறையில் இரண்டு டிபார்ட்மெண்டுகள் இருக்குமா ? அல்லது இரண்டு டிபார்ட்மெண்ட்டும் இணைக்கப்பட்டு ஒருவரின் கீழ் இயங்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஏற்கனவே இருக்கிற இலாகா போதவில்லை. போதிய அளவு கவனம் செலுத்த முடியவில்லை. இப்போது விரிவாக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருக்கிற இலாகா இந்த டைரக்டரேட்டில் இணைக்கப்பட்டுவிடும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கருப்புப் பணம் என்பதற்கு உழைக்காமல், பிறரை மோசம் செய்து, சர்க்காரை ஏமாற்றி சம்பாதிக்கும் பணம் என்று விளக்கம் கொடுத்தார்கள். அந்த முறையில் சம்பாதிக்க உறுதுணையாக இருக்கிறவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமா ? அவர்களை இன்னும் விட்டுவைக்க இவர்களுக்கு அவர்களோடு தொடர்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கேட்பதைப் பார்த்தால், அவருக்குத்தான் அவர்களோடு தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. அதனால்தான் அவருடைய சிந்தனை கருப்புப் பணத்திலேயே இருக்

இறது. அந்த முறையில் சிந்தனை செலுத்தி, இவ்வளவு தூரம் அக்கறை காட்டாமல் இருந்தால் நலமாக இருக்கும். யார் இடத்தில் இருந்தாலும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** லஞ்சம் என்ற உருவத்தில் இல்லாமல் வேலைகளை முடித்துக் கொடுப்பதாகக் கூறி, 1,000 ரூபாய் 2,000 ரூபாய் வாங்கிக்கொண்டு வருகிறார்களே, அப்பேர்ப்பட்டவர்களைப் பற்றி இந்தக் கமிட்டியாரிடத்தில் சொன்னால் நடவடிக்கை எடுப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பலவிதக் குற்றங்கள் நடைபெறுகின்றன. எது எது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறதோ அதற்குத் தக்கபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஒரு சினிமாப் படத்தில் நடிக்க 2 லட்சம் ரூபாய் வாங்கிவிட்டு சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய இன்கம்-டாக்ஸை ஏமாற்ற 20 ஆயிரம் ரூபாய் வாங்கினேன் என்று சொன்னால் மீதிப் பணம் கருப்புப் பணம்தானே ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கருப்புப் பணம் என்பதற்கு விளக்கமோ, வியாக்கியானமோ கூறுவதற்கான சந்தர்ப்பம் இது அல்ல. எது எது கருப்புப் பணம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இதில் சில பேர்களுக்கு அக்கறை இருப்பதால் தான் அதிகம் கேட்கிறார்கள். இப்போது நான் அதைப் பற்றி விளக்கம் கூறுவதாக இல்லை.

**திரு. ஆர். ரெங்கசாமி :** லஞ்சம் கொடுக்கிறவர்களையும், தண்டிக்க இடம் இருப்பதால், கொடுத்ததைச் சொல்ல முடியாமல் இருக்கிறது. அது லஞ்சம் வாங்குகிறவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கிறது. கொடுக்கிறவர்களை விட்டு வாங்குகிறவர்களை மட்டும் தண்டிக்கக் கூடிய முறையை ஏற்படுத்துவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகைய உத்தேசம் இல்லை. அது சரியல்ல. லஞ்சம் கொடுப்பதும் தவறுதான். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அதிகாரிகள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

**திரு. எம். பி. முத்துக்கருப்பண்ணசாமி கவுண்டர் :** லஞ்சம் கொடுக்காவிட்டால் காரியம் ஆவதே கிடையாது. கண்டிப்பாக நிர்ப்பந்தத்தின்பேரில் கொடுக்க வேண்டியிருக்கிறது. கொடுத்ததை வெளியே சொல்லும்போது அவர்களுக்கே பாதகமாக வருவதால் அதைப் பற்றிச் சொல்லாமல் விடுகிறார்கள். கொடுப்பவர்களை விட்டுவிட்டு லஞ்சம் வாங்குகிறவர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கூறுகிற நிமித்தத்திற்கு இடம் கொடுக்காமல் பார்ப்பதுதான் முக்கியமான லட்சியம். இந்த டைரக்டரேட் லட்சியம் அதுதான்.

### அரூர் தாலுகாவில் காகிதத் தொழிற்சாலை

* 324 கேள்வி—**திரு. சி. மாணிக்கம் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் மாவட்டம் அரூர் தொகுதியில் கிடைக்கும் ஏராளமான மூங்கிலைக்கொண்டு அங்கு ஓர் காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் நினைப்பது போல் அரூர் பகுதியில் ஏராளமான மூங்கில் கிடையாது. அங்கு கிடைக்கும் மூங்கிலைக் கொண்டு ஒரு காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்த முடியாது.



**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, 1962-ல் இதே கேள்வியைக் கேட்டபோது, இங்கு கிடைக்கும் மூங்கிலைக்கொண்டு ஈரோடில் சேஷசாயி காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, அதற்கு உதவுகிறது என்று சொன்னார்கள். ரிசர்வ் காடுகளில் உள்ள மூங்கிலைக்கொண்டு, மிகப் பின்தங்கிய சேலம் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க அமைச்சர் முன்வருவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது சர்வே செய்யப்பட்டது. இப்போது அமைத்திருக்கிற சேஷசாயி பேப்பர் கம்பெனிக்கே போதிய அளவு மூங்கில் கிடைக்கவில்லை. பத்து இடங்களில் மூங்கில் இருப்பதைப் பார்த்து ஏராளமாக மூங்கில் இருக்கிறது என்று சொல்லுவது ஸயண்டிஃபிக் ஆகாது. சர்வே செய்துதான் இந்த விளக்கம் கொடுத்திருக்கிறோம்.

**திரு. வி. ராமநாதன் :** திருச்சி மாவட்டத்தில் பேட்டை [illegible] த் தலையில் தனியார் துறையில் ஆரம்பிக்கப்படவிருக்கிற காகிதத் [illegible] சாலை எப்போது உற்பத்தி தொடங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : The main question relates to Sal[illegible]n District.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சர்க்காருக்கு அது பற்றித் தகவல் இல்லை.

**திரு. ம. கமலநாதன் :** மூங்கில் வளர்க்க நல்ல சூழ்நிலை இருக்கிற காடுகளில் மூங்கில் வளர்த்து அங்கே காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதற்கு 10–15 வருஷங்கள் ஆகும். அதற்குப் பின்னால் இந்தக் கேள்வியைக் கேட்கலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** சேஷசாயி பேப்பர் மில்ஸுக்கு எந்தெந்த ஜில்லாவிலிருந்து எவ்வளவு எவ்வளவு சத வீதம் மூங்கில்கள் வருகின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்டிலிருந்து 30,000 டன் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம்.

### *Memorial for Swami Vivekananda*

*325 *Q.*—Sri P. K. Mookiah Thevar : } Will the Hon.
Pulavar K. Govindan : }
the Chief Minister be pleased to state—

(*a*) whether the Central Government have addressed any communication regarding the construction of Vivekanand[illegible] memorial in Kanyakumari district; and

(*b*) the details of the steps taken in the matter?

The Hon. Sri M. Bhaktavatsalam : (*a*) 'Yes'

(*b*) The Government have accorded permission to Sri Ramakrishna Tapovanam to erect a statue of Swami Vivekananda on the shore between the temple and the sea at Kanyakumari. The All India Swami Vivekananda Centenary Celebration Committee has sought the permission of the Government to erect a statue of the Swami on the Vivekananda Rock in the sea near Kanyakumari and the matter is under consideration.

[19th March 1964

* 326 கேள்வி—**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்** : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் குன்றில் சுவாமி விவேகானந்தரின் முழு உருவச் சிலை ஒன்றை வைக்க அரசினிடம் அனுமதி கோரப்பட்டதா ?

(இ) ஆமெனில், அரசாங்கம் எடுத்த முடிவென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The All India Swami Vivekananda Centenary Celebration Committee has sought the permission of the Government to erect a statue of the Swami on the Vivekananda Rock in the sea near Kanyakumari and the matter is under consideration.

**புலவர் கா. கோவிந்தன்** : தலைவர் அவர்களே, முதலில் அந்த இடத்தில் சிலை வைப்பதற்கு அனுமதி கேட்டபோது முதல் அமைச்சர் அவர்கள் மறுத்திருக்கிறார்கள். பிறகு வட நாட்டிலிருந்து ஒப்புதல் அளிக்க வேண்டும் என்ற நிலை வந்த பிறகு தான் ஒப்புக்கொண்டார்கள் என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : வட நாட்டிலிருந்து ஒரு உத்திரவும் இல்லை. வட நாடு, வட நாடு, என்று நினைத்து நினைத்து வட நாடே நினைவாக இருக்கிறது கனம் அங்கத்தினருக்கு. அதையொட்டித் தான் இந்த அரசாங்கம் ஏதோ அடி பணிவதாக நினைக்கிறார். அவர்களுக்கு ஒரு பிரமை பிடித்திருக்கிறது என்று நினைக்கிறேன். முதலில் மறுத்தது ஏன் என்றால், இந்தப் பாறை கடலில் இருக்கிறது. தூரத்தில் இருக்கிறது. அங்கு ஒரு உருவச் சிலை வைத்தால் கடற்கரையிலிருந்து பார்ப்பதற்கு முடியாது. அது தெரியாது. இது ஒன்று ; இரண்டாவதாக அங்கே பந்தோபஸ்தாக வைக்க முடியாது என்பது. ஆக இந்த இரண்டு காரணங்களுக்காக அங்கே வைக்க அனுமதி கொடுக்கவில்லை. பின்னால் நானே ஒரு யோசனை சொன்னேன். நீங்கள் அங்கு வைப்பதாக இருந்தால் ஒரு கட்டடம் கட்டி அந்தக் கட்டிடத்திற்குள் சிலையை அமைத்தால் பந்தோபஸ்தாக இருக்கும், பார்க்கிறவர்களும் அங்கே போய்ப் பார்ப்பார்கள் என்று சொன்னேன். கடற்கரையில் இருக்கிறவர்கள் பார்க்க இப்போது அங்கே ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காரணங்களுக்காக இப்போது நான் இதை அனுமதித்திருக்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்** : அங்கு ஒரு பிரச்னை இருக்கிறது. விவேகானந்தர் பாறையின் மீது கிருஸ்துவர்களும், இந்துக்களும் ஆக இருசார்பினரும் உரிமை கொண்டாடுகிறார்கள். அது மத உணர்ச்சியைத் தூண்டி விடுவதாக இருப்பதால் கடற்கரை ஓரமாக வைக்கலாம் என்று அங்கு உள்ளவர்கள் சொன்னார்கள். அந்த இடம் நல்ல இடமாக இருக்கிறது. பாறையை அப்படியே விட்டு விட இந்த அரசாங்கம் முயலுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அங்கு வேறு கிருஸ்துவர்களோ, மற்றவர்களோ உரிமை கொண்டாட இடம் இல்லை. அது தான் விவேகானந்தர் பாறை. அது நீண்டகாலமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால் அங்கே விவேகானந்தர் சிலை வைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் அதைப் பற்றி உரிமை கொண்டாட ஆதாரம் இல்லை. பார்ப்பதற்கு வசதியாக இருக்கவேண்டும், பந்தோபஸ்தாக இருக்கவேண்டும். இந்த இரண்டும் இருந்தால் அமைக்கலாம் என்று அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன்** : அந்த இடத்திற்கு பழைய பெயர் குமரி. குமரி என்பது பின்னால் கன்னி என்றும் சொல்லப்பட்டது. பிறகு இரண்டையும் இணைத்து கன்னியாகுமரி என்று வழங்கப்படுகிறது. இதைக் கன்னியாமேரி எனத் திரித்து வழங்குவதால்தான் இதைச் சான்றாகக் காட்டி கிறிஸ்துவர்களுக்கு தொடர்பு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதற்கு ஆதாரம் இல்லை என்பதை அரசாங்கம் உணருமா ?



19th March 1964]

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் அங்கத்தினருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர் தமிழில் புலமை மிக்கவர்கள். அவர்கள் சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் கன்னி என்று சொல்லுவது தவறு என்று சொல்ல முடியாது. கன்னித் தமிழ் என்று சொல்லுகிறோம். ஆனால் தமிழைப் பொறுத்த மட்டில் கிருஸ்துவர்களாக இருந்தாலும் சரி, இஸ்லாமியர்களாக இருந்தாலும் சரி, ஆதரிக்கிற நிலை இருந்து வந்திருப்பது எல்லோருக்கும் தெரியும். கன்னியாகுமரி என்பதற்காக சர்ச்சை வந்திருக்கிறது என்று எடுத்துக்கொள்வது சரியல்ல.

**திரு. டி. கார்ச்சா கவுடர்** : இப்பொழுது ராமகிருஷ்ண தபோவனத்தார் அமைத்து வரும் அந்தக் கோவிலுக்கு நமது அரசாங்கம் ஏதாவது மான்யம் முதலிய உதவி அளித்திருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அரசாங்கம் இதுவரையிலும் ஒன்றும் அளிக்கவில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்** : அந்தப் பாறையில் கோவில் ஒன்று அமைக்க வேண்டும் என்று ஏதாவது அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறதா? அப்படி ஒரு கோவில் எழுப்பப்படுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நான் முன்பு கூறியதுபோல அங்கே ஒரு சிலை வைப்பது என்றால் அது ஒரு கட்டிடத்தில் அமைய வேண்டும். அப்பொழுதுதான் பந்தோபஸ்தாக இருக்கும். பார்ப்பவர்கள் அங்கே போய் தரிசனம் செய்யலாம். அங்கே "மெடிடேஷன்" செய்யலாம் என்று யோசித்து, நாம் அனுமதி அளிக்க முன்வந்திருக்கிறோம்.

**புலவர் கா. கோவிந்தன்** : சொற்கள் எப்படித் திரிகின்றன என்பதற்காக அதைக் கூறினேன். "ஹாமில்டன் பிரிட்ஜ்" என்பது "அம்பட்டன் வாராவதி"; "பார்பர்ஸ் பிரிட்ஜ்" என்று மாறியது போல், கன்யாகுமரி என்பதுதான் கன்யாமேரி என்பதாகத் திரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேனே தவிர, கிருஸ்துவர்கள் தமிழுக்கு ஆக்கம் செலுத்தவில்லை என்ற கருத்திலே சொல்லவில்லை, அவர்கள் ஆக்கம் செலுத்தியுள்ளார்கள், செலுத்துகிறார்கள். அந்தச் சொல் அளவில்தான் இந்தத் திருத்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து, அதை மட்டும் சான்றாகக் கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அரசாங்கம் வேண்டியதைச் செய்யும். ஆனால் கன்யாகுமரி என்ற பெயரை மாற்றுவதாக இல்லை.

**திரு இராம. அரங்கண்ணல்** : குமரிமுனையில் இப்பொழுது இருக்கிற அங்குள்ள ஒரு கோவிலும், அதற்கு அருகிலே கட்டப்பட்டிருக்கிற காந்தியடிகளின் நினைவுச் சின்னமும் எழிலாக இருந்து கொண்டிருக்கிறது. இன்னொரு கோவில் அங்கு ஏற்பட்டால், இயற்கை எழில் கெடும் அல்லவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அரசாங்கம் எதைச் செய்தாலும் இயற்கை எழிலுக்குச் சற்றும் பாதகம் இல்லாத வகையிலே அனுமதி அளிக்கும்.

### உப்பு உற்பத்தி

*327 கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல்** : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடற்கரையை யொட்டிய மாவட்டங்களில் உப்பு உற்பத்தி செய்வதற்காக, அரசாங்கப் புறம்போக்கு நிலங்களை குத்தகைக்கு விட உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எவ்வளவு நிலங்களைக் குத்தகைக்குவிட அரசாங்கம் உத்தேசித்துள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The policy of the Government is to lease lands suitable for manufacture of salt in all the sea coast districts in the State. An extent of about 9,528.71 acres of land is reported to be available in the sea coast districts for lease for manufacture of salt

[19th March 1964

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் உப்பு உற்பத்தி அதிகமாக இருக்கிறது ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

*Leprosy hospitals in Tirunelveli district*

* 328 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government provide any assistance to Leprosy Hospitals in Tirunelveli district.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes.

*Repairs to Subban Channel*

* 329 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state –

(*a*) whether there is any proposal to repair the Subban Channel branching off from the Vaigai river near Manamadurai in Ramanathapuram district: and

(*b*) if so, the steps taken to implement the same?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) The proposals are being finalised by the Board of Revenue Food Production).

**ராமநாதபுரம் குடிநீர்த் திட்டம்**

* 330 கேள்வி—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இராமநாதபுரம் நகருக்கான குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இத் திட்டம் சம்பந்தமாகப் பரிசீலனை நடந்து வருகிறது.

MR. SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ANNOUNCEMENT.

### BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER : I have to announce to the House that the Business Advisory Committee which met on 18th March 1964 has decided the following further programme of business of the House :—

24th March 1964—Consideration and passing of —

(1) The Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram (Extension of Application) Bill, 1964.

(2) The Madras Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964.



19th March 1964]

(3) The Madras General Sales Tax (Amendment) Bill, 1964.

25th March 1964—Presentation of Final Supplementary Statement of Expenditure for 1963-64.

26th March 1964—General discussion on the Final Supplementary Statement of Expenditure (two hours).

28th March 1964—Voting of Supplementary Estimates for 1963-64 (half an hour).

30th March 1964—Consideration and passing of Appropriation Bills.

31st March 1964—All other official business including remaining Official Bills.

## III.—GOVERNMENT MOTIONS.

### (1) ELECTION TO THE HOUSE COMMITTEE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

['That, with reference to Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect eleven members to be members of the House Committee for the financial year 1964-65.']

The motion was put and carried.

MR. SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 3 p.m. on 26th March 1964 as the time and date within which nomination papers of candidates for election to the House Committee should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 11 a.m. on 28th March 1964. I also fix 3 p.m. on the 28th March 1964 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, eleven, a poll will be taken on the 30th March 1964 between the hours of 10 a.m. and 1 p.m.

### (2) ELECTION TO THE COMMITTEE OF PRIVILEGES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

['That, with reference to Rule 183 of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect fifteen members to be members of the Committee of Privileges for the financial year 1964-65.']

The motion was put and carried.

[19th March 1964

MR. SPEAKER: In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 3 p.m. on 26th March 1964 as the time and date within which nomination papers of candidates for election to the Committee of Privileges should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 11 a.m. on 28th March 1964. I also fix 3 p.m. on the 28th March 1964 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, fifteen, a poll will be taken on the 30th March 1964 between the hours of 10 a.m. and 1 p.m.

## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65.

### DEMAND No. I—LAND REVENUE DEPARTMENT.

THE HON. SRI V. RAMAIAH: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 73,61,100 under Demand No. I—Land Revenue Department.'

**திரு. சா. ராமசாமி:** தலைவர் அவர்களே, எனது பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 73,61,100 under Demand No. I—Land Revenue Department be reduced by Rs. 100.'

### DEMAND No. IV—STAMPS ADMINISTRATION.

THE HON. SRI V. RAMAIAH: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 32,21,100 under Demand No. IV—Stamps Administration.'

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் இருக்கிற வெட்டுப் பிரேரணையை நான் முன் மொழிகிறேன்.

'That the allotment of Rs. 32,21,100 under Demand No. IV—Stamps Administration be reduced by Rs. 100.'

### DEMAND No. XXXI—FAMINE RELIEF.

THE HON. SRI V. RAMAIAH: Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,09,100 under Demand No. XXXI—Famine Relief.'

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, எனது பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

'That the allotment of Rs. 5,09,100 under Demand No. XXXI—Famine Relief be reduced by Rs. 100.'



19th March 1964]

### DEMAND No. XXXVII—COMPENSATION TO ZAMINDARS.

THE HON. SRI V. RAMAIAH: Sir, on he recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 28,00;000 under Demand No. XXXVII—Compensation to Zamindars.'

**திரு. சா. ராமசாமி:** தலைவர் அவர்களே, எனது பெயரில் இருக்கும் வெட்டுப் பிரேரணையை நான் முன் மொழிகிறேன்.

"That the allotment of Rs. 28,00,000 under Demand XXXVII—Compensation to Zamindars be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion.

* **திரு. சா. ராமசாமி:** கனம் தலைவர் அவர்களே, இன்று நில வருவாய்த் துறை மானியத்தின்மீது எனது வெட்டுப் பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமது மாநில அரசுக்கு கிடைக்கக்கூடிய பல்வேறு துறை வருவாய்களிலே நிலவருவாய் துறையிலிருந்துதான் அதிகமான அளவுக்கு வருமானம் கிடைத்து வருகிறது. அப்படிக் கிடைத்துவருகிற வருவாய் ஆனது விவசாயிகள் வைத்திருக்கும் நிலங்களுக்கு விதிக்கப்படும் தீர்வையிலிருந்து தான் வசூலிக்கப்படுகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். நிலங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற தீர்வை விகிதமானது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இப்படி நிலத்திற்காக விதிக்கப்படுகிற அல்லது நிர்ணயிக்கப்படுகிற அந்தத் தீர்வை விகிதம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது என்பதற்கு இந்த மானியக் கோரிக்கையின் விளக்கக் குறிப்பிலே விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குறிப்பின்படி, அதாவது செட்டில்மெண்டிற்கு இருபது ஆண்டுகளுக்கு முன் இருக்கிற விளைச்சலைப் பொறுத்து, அதற்கேற்படும் செலவை கழித்து நிகர அளவிலே வருமானத்திற்கேற்றவாறு நிலவரி விதிக்கப் படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது செட்டில்மெண்ட் நடந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் ரீசெட்டில்மெண்டு செய்யப் படவில்லை. இதிலே குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால் இனி ரீசெட்டில் மெண்ட் செய்வதில்லை என்பது கொள்கையாக இருந்து வருகிறது என்று கண்டிருக்கிறது. இனி இந்த முறை இருக்காது என்பதை நினைத்துப் பார்க்கும்போது சென்ற ஆண்டிலே புதிய அளவிலே நிலங்களுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகள் பெருமளவுக்கு பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். உதாரணமாக சொல்லப்போனால், பழைய செட்டில் மெண்டின்படி, 1924- வாக்கிலே சாதாரணமாக 7-2-10 என்று இருந்த தர நஞ்சை ஒரு ஏக்கருக்கு ரூ.3-75 நிலத்தீர்வை விதிக்கப்பட்டது, என்றால், அதே நஞ்சைக்கு 1943-ல ரூ. 4.05 ஆக தீர்வை வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே 1½ அணா செஸ் விதித்தார்கள். 1950-ல் அந்த செஸ்ஸை 31 காசுகளாக்கி, தீர்வை 4.92 ஆக உயர்த்தப்பட்டது. 1959-ல் அதே நிலத்திற்கு அந்த செஸ் 5 அணாவுடன் அடிஷனல் சர்சார்ஜ் 13 காசுகளும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதனால் ஒரு ஏக்கரின் தீர்வை ரூ. 5.56 ஆக உயர்த்தப்பட்டது. அதன் பிறகு 1962-ல் யூனியன் செஸ் 50 சதவீதமாக உயர்த்திக் கொள்ளலாம் என்ற நிலைமை வந்தவுடனே ஒரு ஏக்கருக்கு 50 சதவிகிதத்தையும் சேர்த்து ரூ. 8·34 ஆக உயர்த்தப் பட்டது. 1963-ல் 30 சதவிகிதம் அதிகத் தீர்வை விதிக்கப்பட்ட காரணத்தினாலே 9.04 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதே போன்று, புஞ்சை நிலங்களை எடுத்துக் கொண்டால் 1943-ல் 7-2-9 தர அளவிலே இருந்த நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 1-25 என்ற விகிதத்திலே இருந்தது. பிறகு செஸ்ஸாக 8 காசுகள் சேர்த்து ரூ. 1.33 ஆக உயர்த்தப்பட்டது. 1950-ல் 1-65 ஆக மாறி 1959-ல் 1.85 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் 1962-ல் யூனியன் செஸ்ஸையும் சேர்த்து

[திரு. சா. ராமசாமி] [19th March 196

ரூபாய் 2.68-க்கு வந்திருக்கிறது. தற்சமயம் அதிகப்படி தண்ணீர் தீர்வை
என்ற அளவிலே 37½ சதவிகிதம் இந்த ஆண்டிலே விதிக்க
பட்டிருப்பதையும் சேர்த்தால் நிலங்களின் தீர்வை அதிகமான அளவிலே
தான் இருக்கிறது என்பது தெரியவரும். சாதாரணமாகப் பார்த்தால்
1950-ல் இருந்த தீர்வை விகிதத்திற்கும் இன்றுள்ள தீர்வை விகிதத்திற்
கும் இரண்டரை அல்லது மூன்று மடங்கு வித்தியாசம் இருக்கிறது
விளக்கக்குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் நிலைமையைப் பார்க்கும்பொழுது
ரீசெட்டில்மெண்ட் செய்யப்படாது என்ற ஒரு நிலைமை இருப்பதாக அறி
விக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் செட்டில்மெண்டுக்கு இருபது
ஆண்டு காலத்திற்கு முன்பு இந்தத் தீர்வை விகிதங்கள் நிர்ணயிக்கப்
பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. செட்டில்மெண்ட்
செய்து 30 ஆண்டுகள் ஆகியும், இப்பொழுது ரீசெட்டில்மெண்ட்
செய்யப்படாத காரணத்தினால், நிலங்களின் வளம் அதே அளவில்
இல்லையென்பதை தெரிவித்துக் கொள்கிறேன். காலக்கிரமத்தில் நல்ல
நிலங்களாக இருந்தவையெல்லாம் கூட ஓரளவுக்கு மாறுபட்டுக்கொண்டு
வருகின்றன. அதற்குக் காரணம் மண்ணரிப்பாலும், அதிகமான
அளவிலே நவீன ரசாயன உரங்களை உபயோகப்பதின் காரணமாக
நிலத்தின் தரம் கெட்டிருக்கிறது. இதுபோன்ற நிலையிலே கடந்த சர்வே
செட்டில்மென்ட் செய்த காலத்திற்கு பிறகு, சாதாரணமாக நஞ்சையாக
இருந்த நிலங்கள் கூட நஞ்சைப்பயிருக்கு அருகதையற்றவையாகவும்,
புஞ்சையாக இருக்கிற நிலங்கள் எல்லாம் மிகவும் சாதாரணத் தரத்திற்கும்
வந்துவிட்டன. ஆகவே, நிலத்தின் வருமானம் குறைந்துவிட்டது. ஒரு
சில இடங்களில் தான் ஓரளவுக்கு நிலத்தின் தரம் உயர்ந்து மண் வளம்
உடைய நிலங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் புதிதாக தண்ணீர்
வசதி செய்து கொடுத்திருக்கிற நிலங்கள், அவைகளுக்கு நஞ்சைத்
தீர்வை அடிப்படையிலே இப்பொழுதே தீர்வை வசூலிக்கப்பட்டு வருகிறது.
பொதுவாக கடந்த சர்வே செட்டில்மெண்டுக்குப் பிறகு இப்பொழுது
முப்பது ஆண்டுகள் சென்றுவிட்டதால், நிலத்தின் வளமும் தரமும்
குறைந்திருக்கிறது. இனி ரீசெட்டில்மெண்ட் செய்யப்போவதில்லை என்று
சொன்னாலும் கூட இப்பொழுது வசூலிக்கப்படும் தீர்வை ஏற்கெனவே
இருந்த தரத்தின் அடிப்படையில்தான் வசூலிக்கப்பட்டு வருகிறது.
மண் வளம், நிலத்தின் தரம் இவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டால்
இப்பொழுது வசூலிக்கப்படுகிற கிஸ்தியின் அளவு அதிகப்படியான உச்ச
கட்டத்தில் அமைந்திருக்கிறதென்பது தெரியவரும். ஆகவே, நல்ல அடிப்
படையிலே இதை மாற்றியமைக்க வழிவகைகள் எடுக்கவேண்டும். ஒன்று
ரீசெட்டில்மெண்ட் செய்யவேண்டும். இல்லையென்றால் வேறு முறையைக்
கையாள வேண்டும்.

திருச்சி மாவட்டத்திலே சில பகுதிகளில் ஐம்பது எக்கர், 100 எக்கர்
என்று பல இடங்களில் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அந்த நிலங்
களுக்கு 1933-ல் நிர்ணயித்த தரத்தின் அளவில் வரி விதித்துக்கொண்டு
வருகிறார்கள். இப்பொழுது அவை தரிசு நிலங்களாகக் கிடக்கின்றன.
உப்பு அரிப்பு ஏற்பட்டு, உவர் மண் அரிப்பு ஏற்பட்டு அந்த நிலங்கள்
சாகுபடிக்கு லாயக்கற்றதாக இருக்கின்றன. இப்பொழுது பல பகுதிகளில்
அம்மாதிரி நிலத்தின் தரம் கெட்டு விட்டதால், பழைய முறையிலேயே
கிஸ்தி வசூலிப்பது சரியல்ல. நிலத்தின் தரம் கெட்டிருப்பதால் உடனடி
யாக கவனித்து நிலைமையைச் சரிப்படுத்தினால் விவசாயிகளுடைய நிலைமை
சீர்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அதிகப்படி
யான அளவிலே விவசாயிகளிடமிருந்து கிஸ்தி வசூலிக்கப்பட்டும் விவசாயி
களுக்குத் தேவையான நன்மைகள் செய்யப்படவில்லை. கனம் அமைச்சர்
9-30 அவர்கள், விவசாயிகளுக்கு கடன் வசதியளிக்கிறோம், பொறுக்கு விதை
a.m. கள் கொடுக்கிறோம் என்றெல்லாம் சொல்லலாம். ஆனால் நிலைமையை
நாம் நேராகப் பார்க்கும்போது, விவசாயிகளுக்கு அந்த வசதிகள் சரியான
அளவிலே கிடைக்கவில்லை என்பது தெரியவரும். விவசாயிகளுக்குத்
தேவையான நன்மைகளைச் செய்துகொடுத்து அதன்பேரில் தொகை வசூ
லிக்கப்பட்டால் எந்தவிதமான குறைபாட்டையும் சொல்ல முடியாது
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவேதான், விவசாயிகள்
பல வழிகளிலும் துன்பப்படுகிறார்கள். அதற்கு அவசியமான வகையில்



19th March 1964] [திரு. சா. ராமசாமி]

வழிவகைகள் செய்ய வேண்டும். விவசாயிகள் பல வழிகளிலும் அதிகாரி
களோடு தொடர்பு கொள்ளும் நேரத்தில் மிகவும் மோசமாக நடத்தப்
படுகிறார்கள். இவர்கள் கிராமப்புறத்தில் இருப்பவர்கள் என்பதனால்
அதிகமாகக் கல்வி அறிவு இல்லாதவர்கள். தங்களுடைய உரிமைகள்
என்ன, தங்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது
என்பதெல்லாம் நன்றாகத் தெரியாதவர்கள். கடன் வசதிகளை எப்படிப்
பெறவேண்டும், யாரிடம் போகவேண்டும் என்பதே அவர்களுக்கு தெரி
யாது. ஒரு நில அடமானம் அல்லது மனை அடமானம் என்றால்,
அவர்களுக்கு யாரிடம் போக வேண்டும், எப்படிப் போவது என்பதில்
அச்சம் ஏற்படுகிறது. அலுவலகத்திற்குச் சென்று அலுவலர்களைக்கண்டு
கொள்ள சிரமம் இருக்கிறது. ஆகவே, தாலுகா ஆபீஸ், கலெக்டர் ஆபீஸ்
போன்ற இடங்களில் ஆலோசகர்கள் போன்ற ஒருவரை நியமித்து அங்கே
வருகிறவர்களுக்கு, வேண்டிய உதவி செய்ய ஏற்பாடு செய்தால் நலமாக
இருக்கும். வட்டார வளர்ச்சி அலுவலகம், இன்னும் இது
போன்ற இடங்களுக்கு அவர்கள் போகும்போது வெளியிலே வெய்யிலிலும்,
மழையிலும் நிற்க வேண்டிய நிலைமை தான் இருக்கிறது. அந்த அலுவ
லகங்களில் 10, 15 பேர் உட்காரக் கூடிய அளவு இட வசதி செய்து தர
வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நில வருவாய் சம்பந்தப்பட்ட அளவில் செட்டில்மெண்ட் முறை
யில் செய்யப்படவில்லை என்றாலும்கூட வேறு வழி முறை செய்யப்பட
வேண்டும். இப்பொழுது இரண்டு பிர்க்காக்களுக்கு ஒன்று அல்லது பெரிய
பிர்க்காவாக இருந்தால். பிர்க்காவிற்கு ஒன்று என்ற முறையில் சர்வேயர்
கள் நியமித்து இருக்கிறார்கள். இந்த சர்வேயர் பிரச்னையில், ஒவ்வொரு
பிர்க்காவுக்கும் ஒரு சர்வேயர் நியமிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான்
நலமாக இருக்கும். சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் ரிஜிஸ்ட்ரேஷன் செய்யப்
படும்போதே, பட்டா மாறுதல் மனுவுடன், சப்-டிவிஷன்கள் பிரிக்க வேண்
டிய கட்டணத்தையும் சேர்த்து வசூலித்து அந்த நிலத்திற்கு சப் டிவிஷன்
கள் செய்து அந்த நடைமுதல் ஆண்டிலேயே தனிப்பட்டா கொடுக்கும்
நிலையை ஏற்படுத்திக் கொடுத்தால், விவசாயிகளுக்கு நலமாக இருக்கும்.
தனிப்பட்டா இல்லாத காரணத்தால் விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு
கிறார்கள். உதாரணத்திற்கு ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால்,
அங்கே 100 விவசாயிகள் இருக்கிறார்கள் என்றால், அங்கு சரியானபடி
தனிப் பட்டா வைத்திருப்பவர்கள் 5, 10 பேர்கள் தான் இருக்கும்.
அவர்கள்தான் சகல வசதிகளையும் பெற முடிகிறது. பாக்கி இருக்கக்கூடிய
90 சத விகித விவசாயிகள் பல வகைகளிலும் பாதிக்கப்படுகிறார்கள்.
நல்ல முறையிலே விவசாயம் செய்ய முடியவில்லை. விவசாயிகளின்
நிலைமை இந்த வகையில் மோசமாக இருக்கிறது. திருச்சி மாவட்டத்திலே
உடையார்பாளையம் தாலுகாவிலே 3 மாதமாக மழை பெய்து
பயிர்கள் பாதிக்கப்பட்டுவிட்டன. அங்கு இரண்டாம் முறையாக பயிர்
செய்தும் புள்ளம்பாடி கெனலில் ஜலம் சரியாக வராததால் பயிர் நல்ல
முறையில் செய்ய முடியவில்லை. ஆகவே அந்த விவசாயிகளுக்கு நில
வரி வஜா, நீர்க்கூலி வஜா செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். ஆயக்கட்டில் கடைசி கோடியில் இருப்பவர்களுக்கு தண்ட நீர்க்
கூலி என்று வசூலிக்கப்படுகிறது. இது நீராரம்பத்தின் பகுதி நீரை
தேக்கி நிலத்தில் விடுவதால் இந்த தண்ட நீர் தீர்வை வசூலிக்கப்படு
கிறது. ஆனால் நீராரம்பத்தின் கடைக்கோடியில் இருப்பவர்களுக்கு இப்
படிப்பட்ட தண்டத்தீர்வை தேவையில்லை என்று கருதுகிறேன். காரணம்
அந்த நிலம் பாசனப் பகுதியின் கடைக்கோடியில் இருப்பதால், அதற்கு
அடுத்து அந்த ஆயக்கட்டுக்குரிய பாய்ச்சலை தடுக்கப்படவில்லை. ஆகவே
அதுபோன்ற நிலையில் உள்ள விவசாயிகளுக்குதண்ட நீர்க்கூலி வசூலிக்கப்
பட வேண்டியதில்லை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நில
வரித்துறையில் கிராம அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்
களுக்கு இப்பொழுதிருக்கும் வேலைப் பளுவின் காரணமாக அந்த அதிகாரி
கள் தங்களுடைய கணக்குகளை நல்ல முறையிலே வைத்துக் கொள்ள
முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்கள் அதிகமாக சாதாரண
மான விவசாயிகளுடைய பிரச்னைகளை சரியாக கவனிக்க முடியவில்லை.
ஆகவே இந்த கிராம அதிகாரிகளை நிரந்தரமான சம்பள விகிதம் கொடுத்து

நியமிக்க வேண்டும். சாகுபடி முறையை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் நல்ல முறையிலே கவனிக்க முடியவில்லை. ஆகவே அந்தந்த பகுதியில் உள்ள கிராம சேவக்குகளே அஜ்மாஷ் தணிக்கை செய்ய வேண்டும் என்று ஏற்பாடு செய்து அந்த வேலையை அவர்களே செய்தால் நலமாக இருக்கும். ஜமாபந்தி முறையில் ஊழல்களும் அநி யாயங்களும் நடக்கின்றன. ஆகவே அதை மாற்றி ஆண்டுக்கொரு தரம் தணிக்கை செய்யக் கூடிய வகையில் தணிக்கையாளர்களை நியமித்து அந்தந்த கிராமத்திலேயே சென்று தணிக்கை செய்யக் கூடிய ஏற்பாட்டை செய்தால் பொதுவாக கிராமங்களிலேயே இருக்கிற விவசாயிகளுக்கு வசதி யாக இருக்கும்.

அடிக்கடி தீயினால், மழை, வெள்ளத்தினால், புயல் காற்றினால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 30 வீதம் நிவாரணம் கொடுக்கப்படுகிறது. ஆடைகள் தீப்பற்றிக் கொண்டிருந்தால் ரூ. 10 சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. 30 ரூ. கொடுக்கப் பட்டாலும்கூட அது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்றைக்கு உள்ள் விலைவாசியில் அது போதுமானதாக இல்லை. விலைவாசி குறைவாக இருந்த காலத்தில் இது நிர்ணயிக்கப்பட்டது. சர்வ சாதாரணமாக ஒரு கூரைபோடும் அளவுக்கோ, மூங்கில் வாங்கவோ, பத்துக்கு பத்து சுவர் வைக்கவோ அத்தொகை போதாது. அதோடுகூட 30 ரூபாய் வாங்கு வதற்குள்ளாக, அலுவலகத்திற்கு போக வர என்று வெளியிடங்களில் வாங்கி செலவழிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் மனதில் கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் போது ரூ. 30 என்பதை மாற்றி ரூ. 50 என்றாவது கொடுக்க வழி வகை செய்ய வேண்டும். அதோடு ஆடைகள் தீப்பற்றிக் கொண்டால் ரூ. 10 கொடுக்கப்படுகிறது. அது ஒரு புடவை கூட வாங்க போதவில்லை. ஆகவே, அதை 25 ரூ. ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் நேரத்தில் ஒரு முறையைக் கையாளுகிறார்கள். அது அரசாங்கம் ஏற்படுத் தினதோ அல்லது ரெவின்யூ அதிகாரிகள் தாங்களாக கையாளும் முறையோ தெரியவில்லை. ரூ. 10-க்கும் குறைவாக நில ஃ கிஸ்தி கொடுப்பவர்களுக்குத்தான் நிவாரணம் அளிக்கப்படுகிறது. உதாரணத் திற்கு ஒன்று சொல்லுகிறேன். 1943-ல் ஒரு விவசாயி ஒரு ஏக்கருக்கு ரூ. 4·5 கிஸ்தி செலுத்தினால் இப்பொழுது பல வரிகளும் சேர்ந்து அவன் ஒரு ஏக்கருக்கு ரூ. 10-க்கு அதிகமாக கிஸ்தி கட்டுகிறான். ஆகவே ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிக்கு கூட நிவாரணம் கிடைப்பது இல்லை. ஆகவே இந்த முறையை மாற்றி எந்த அளவுக்கு கிஸ்தி இருந் தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்படவேண்டும். அல்லது ரூ. 50-க்கு குறைவாகச் செலுத்துகிறவர்களுக்கு நிவாரணம் என்று வழி வகுக்க வேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆகவே தண்ட நீர்க்கூலி பாசனப்பகுதியின் கடைக்கோடியில் இருக்கும் விவசாயிகளுக்கு கிடையாது என்று முறை வகுக்க வேண்டும். சர்க்கார் கொடுக்கும் நிவாரணம் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கும் முறையில் (மணி அடிக்கப்பட்டது).

***திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நில வரி மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். 1948 ஜமீன் ஒழிப்புச் சட்டப்படி ஜமீன்கள் அபாலிஷ் செய்யப் பட்டது. அதன் பிறகு சர்வே நடந்தது. சர்வே பைனலைஸ் செய்யப்பட் டிருக்கிறது. ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின் 12-வது செக்ஷன்படி ஜமீன் தாருக்கு உரிமை என்று சொல்லக்கூடிய நிலங்கள் அஸெஸ்ட் வேஸ்ட் என்று தீர்மானிக்கப்பட்டு டிரிப்யூனலுக்குச் சென்று உறுதி செய்யப்

(Srimathi C. Kolandai Ammal in the Chair)

பட்டிருக்கின்றன. அதிலே நஞ்சை, புஞ்சை அஸெஸ்ட் வேஸ்டாக சர்க்கார் புறம்போக்காக, இருந்து கொண்டிருக்கிறது. 100 ஏக்கர் 200 ஏக்கர் என்று இன்றைக்கும் ஜமீன்தார்கள் தனக்கு பாத்யம் இருக்கிறது என்று





கிரையம் செய்துகொண்டு இருக்கிறார்கள். அதுபற்றி அவர்கள் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அனுபவித்துக் கொண்டிருக்கும் விவசாயிகள், பயிரிட்டுக் கொண்டிருந்தாலும் நிலச்சுவான்தாருக்கு கட்டுப் பட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அஸெஸ்ட் வேஸ்ட் ஆக தீர்மானிக் கப்பட்ட இடங்கள் பேரில் ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன் என்று தெரியவில்லை. யார் பயிர் செய்கிறார்களோ, அந்த விவசாயிகளுக்கே பட்டா செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். கிரயத்திற்கு ரெஜிஸ்டர் செய்யும் ஜமீன்தார்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள் தங்களுக்கு பாத்யம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, அனுபோகம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, ஸ்டாம்ப் டியூட்டி கட்டி கிரயத்திற்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். யாருக்கு வேண்டுமானாலும் விட்டால் யார் சொத்தை வேண்டுமானாலும் ரிஜிஸ்ட்ரேஷன் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்து கொடுத்து விடலாம். அது ஒவ்வொரு கிராமத்திலும் கிளர்ச்சி தோன்றி செல்லும். இது சம்பந்தமாக ஒவ்வொரு கிராமத்திலும் கிளர்ச்சி தோன்றி யிருக்கிறது. இது சர்க்கார் சொத்து. ஆகவே இதை நிலம் இல்லாத பயிரிடுகிற விவசாயிகளுக்கு பட்டா கொடுக்கலாம். இதை அலசிப் பார்த் தால் சர்ச்சைக்கு உரிய இடங்களாக இருப்பதால் யார் அனுபவத்தில் இருக்கிறதோ அவர்களுக்கு பட்டா கொடுக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொண்டு, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரு தாலுக்காவில் ஒரு கிராமம் ஜமீன் கிராமமாக இருக்கும். அடுத்த கிராமம் அயன் கிராமமாக இருக்கும். இதற்கு ஒரு தாசில்தார். அதற்கு ஒரு தாசில்தார் என்று இருக்கிறார்கள். இரண்டு மூன்று ஜில்லாக்களில் தான் டீ-லிமிடேஷன் செய்வதற்கு எடுத்துக்கொள்ளப் போவதாகத் தெரிகிறது. அடிஷனல் தாசில்தார் அவர்கள் எல்லையில் இருக்கும் இடத்திற்கு அயன் கிராமத்தைத் தாண்டித்தான் அவருக்கு உள்ள ஜமீன் கிராமத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. அதனால் அதிக நிர்வாகச் செலவும் பிரயாணச் செலவும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. டீ-லிமிடேஷன், ரீ-அட்ஜஸ்ட்மண்ட் செய்தால், ரெவினியூ நிர்வாகச் சிக்கனம் ஏற்பட வழி இருக்கிறது.

அடிஷனல் அஸெஸ்மெண்ட் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 1372, 1373-ம் பசலிக்கு அடிஷனல் அஸெஸ்மெண்ட் செலுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். சென்ற வருஷத்திலே செலுத்த வேண்டிய பணத்தை இன்று வரைக்கும் கேட்காமல் ஒரே வருஷத்தில் இரண்டு பசலியினுடைய தீர்வையையும் செலுத்திவிட வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதைவிடக் கவலைப் படக்கூடிய விஷயம் என்னவென்றால், இந்த வருஷம் பிப்ரவரி மாதமே முதல் தவணையிலே, 1372-ம் பசலிக்கான அடிஷனல் அஸெஸ் மெண்ட்டையும் வசூல் செய்யவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு வசூல் செய்கிறார்கள். சட்டத்தின்படி, இந்த அடிஷனல் அஸெஸ் மெண்டுக்கு நோட்டீஸ் கொடுத்து உறுதி செய்த பிற்பாடுதான் அஸெஸ் மெண்ட் வாங்கவேண்டும். இன்று அம்மாதிரி நோட்டீஸ் கொடுத்ததாகத் தெரியவில்லை. அஃபிஷியல் டிமாண்டு இல்லாமல் கிராமாதிகாரிகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் போய் நிர்ப்பந்தம் செய்து வசூல் செய் கிறார்கள். நாம் போட்டிருக்கும் சட்டத்தையே கவனித்து அமல் நடத்த வேண்டியது ரெவின்யூ அதிகாரிகளின் பொறுப்பாகும். என்ன அடிஷனல் அஸெஸ்மெண்ட் விதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு பட்டாதாரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவேண்டும். குறிப்பிட்ட காலத்திற் குள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டும். பதில் வரவில்லை என்றால் நிர்ணயித்த காலத்திற்குள் அஸெஸ்மெண்டை உறுதி செய்துவிடவேண்டும் என்று விதி தெளிவாக இருந்துக் கொண்டிருக்கிறது. அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கவில்லை. அடிஷனல் அஸெஸ்மெண்ட் சம்பந்தமாக ஒரே தவணையில் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இவ்வருஷம் ஒரு தண்ணீர்ப்பாடு ஏற்பட்டு, மகசூல் குறைவு ஏற்பட்டு இருக்கிறது. அத்துடன் இத்தீர்வையும் செலுத்தக்கூடிய கஷ்டம் இருப்ப தால் இரண்டு பசலிகளுக்கும் அடிஷனல் அஸெஸ்மெண்ட் கொடுக்க

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [19th March 1964

சக்தியற்றவர்களாய் இருக்கிறார்கள். 1372-ம் பசலியில் கொடுக்கவேண்டிய அடிஷனல் அஸெஸ்மெண்டை இந்த பசலியிலும், அடுத்த பசலியிலும் வசூல் செய்தால் நலம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஸ்டாம்ப் ட்யூட்டியைப் பற்றி ஒரு கோரிக்கை. கடப்பை பேட்டைக்கு ஸ்டாம்ப் கட்டணம் கோர்ட்டிலும் மற்ற எல்லா இடங்களிலும் 35 ந.பை. தான் ஸ்டாம்ப் ட்யூட்டி வாங்குகிறார்கள். ஆனால், ரெவின்யூ போர்டில் 70 ந.பை. கேட்கிறார்கள். இது ஆச்சரியமாக இருக்கிறது.

அடுத்து, பத்திரங்களை நகல் எடுப்பவர்களுக்கு ஒரு கையெழுத்து டெஸ்ட் வைத்தால் நலம் என்று நான் நினைக்கிறேன். பத்திரங்களை நகல் எடுப்பதற்குக் கட்டணம் கொடுக்கப்படும்போது அதை நல்ல முறையில் எழுதிக்கொடுக்க வகை செய்யப்பட வேண்டும். பத்திர நகலைப் பார்க்கும் போது, அதற்கு ஒரு கையெழுத்து நிபுணரை வைத்துத்தான் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் கையெழுத்து இருக்கிறது. அம்மாதிரி நிலை ஏற்படாமல், நல்ல முறையில், தெளிவாக எழுதுகிறவர்களை வைத்துப் பத்திரங்களுக்கு நகல் எடுத்துக் கொடுக்கக்கூடிய ஏற்பாட்டையும் செய்வது நலம் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

*** திரு. எஸ். முருகையன் :** தலைவர் அவர்களே, கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியினர் கொடுத்திருக்கக் கூடிய வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

நமது சர்க்காரின் வருவாயில் 9 சதவிகிதம்தான் நில வரியாக வசூலிக்கப்படுகிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்தபோது சொன்னார்கள். பழங்காலத்தில் ஆறிலொரு பாகம் நில வரியாக வசூலித்தார்கள் என்றும் சொன்னார்கள். இடையிலே அது 50 சதவிகிதமாக இருந்தது, இப்பொழுது 9 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது என்றும் சொன்னார். 50 சதவிகிதமாக இருந்தபோது சர்க்காருடைய வருவாய் எவ்வளவு என்று கணக்குப் பார்க்கும்போது, நில வரி உயரவில்லையே தவிர, இதர வரிகள் உயர்ந்திருப்பது தெரிகிறது. அதனால், இப்பொழுது கட்டக்கூடிய வரிகள் நில வரியாகக் கட்டவில்லையென்றாலும் கூட, இதர வரி மூலமாக விவசாயிகளுக்குப் பல தொல்லைகள் இருந்துக் கொண்டிருக்கிறது. இந்த நில வரியை ஐந்து எக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு எடுத்து விடுவது நல்லது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், ஐந்து எக்கர் நிலம் வைத்து சாகுபடி செய்கின்ற விவசாயிக்கு சர்க்காருடைய கணக்குப் படி அவர்களுடைய செலவுக்கே கட்டுப்படியாகாத நிலையிலே இருந்து வருகிறார்கள். ஆகையால், ஐந்து எக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நில வரியை எடுத்துவிடுவது சாலச் சிறந்தது என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பல கிராமங்களில் ஒரு நம்பரில் ஐந்நூறு எக்கர் நிலம் இருக்கும். இரண்டாம் போகச் சாகுபடி செய்யக்கூடிய நேரத்திலே அந்த நிலம் பலருக்குச் சொந்தமாக இருக்கும் காரணத்தால் ஒரே ஒரு எக்கர் நிலம் ஒருவர் சாகுபடி செய்தால் கூட நம்பரிலே எத்தனை எக்கர் விஸ்தீரணம் இருக்கிறதோ அத்தனைக்கும் இரண்டாம் போக தீர்வை விதிக்கப்படுகிறது. சட்டப்படி சரியாக இல்லையென்றாலும், அங்கிருக்கும் கர்ணங்கள் சரிவர பார்க்காமல் ஏதோ பூரா நிலமும் பயிர் செய்திருப்பார்கள் என்ற காரணத்திற்காக முழு நிலத்திற்கும் இரண்டாம் போகத் தீர்வை விதித்து விடுகிறார்கள். ஆகையால், விவசாயிகளுக்கு இந்த வரியினால் தொல்லை இருந்துக் கொண்டு இருக்கிறது. சர்க்காரிலிருந்து ஒரு உத்திரவு போட்டு ஒரு நம்பரிலே எத்தனை எக்கர் இருக்கிறது, எத்தனை எக்கரில் இரண்டாம் போகம் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்ற கணக்குப் பார்த்து நல்ல முறையில் கவனித்து தீர்வை போட்டால் விவசாயிகளுக்குத் தொல்லை இருக்காது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



19th March 1964] [திரு. எஸ். முருகையன்]

விவசாயிகளுக்கு ஏற்கெனவே நில வரி இருந்து கொண்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களுக்கு வரி போடும் அதிகாரம் கொடுத்திருப்பதால் அங்கும் அதிகமாக சர்சார்ஜ் போட்டுத் தொல்லை கொடுக்கிறார்கள். இந்தச் சட்ட மன்றத்தின் மூலமாகச் சட்டம் இயற்றித்தான் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், அதை எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் ஒரே நிலையாக ஏற்படுத்தி விட்டால் தொந்தரவு இல்லாமல் இருக்கும். ஒரு பஞ்சாயத்து யூனியன் 25 காசு விதிக்கிறார்கள். இன்னொரு பஞ்சாயத்து யூனியன் 50 காசு விதிக்கிறார்கள். ஒரு தொகுதிக்குள்ளேயே ஒரு பஞ்சாயத்து யூனியன் 25 காசும், அடுத்த பஞ்சாயத்து யூனியன் 50 காசும், அதற்கும் அடுத்த பஞ்சாயத்து யூனியன் 75 காசும் விதிக்கக்கூடிய அளவுக்கு இது வித்தியாசப்படுகிறது. இதனால், அந்தப் பகுதியிலே இருக்கும் விவசாயிகள் பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். "பக்கத்திலே 25 பைசா விதிக்கும்போது நாங்கள் மட்டும் ஏன் 50 காசு கொடுக்க வேண்டும் ?" என்று மக்கள் கேட்கிறார்கள். இப்படி இதிலே பல தொல்லைகள் இருக்கின்றன. ஆக, எல்லா பஞ்சாயத்து யூனியன்களும், ஒரே விதமான சர்சார்ஜ் விதிக்க வேண்டிய அதிகாரத்தைப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

புறம்போக்கு நிலங்களைக் கிட்டத்தட்ட 15, 20 ஆண்டுகள் சாகுபடி செய்திருந்தாலும்கூட, குறிப்பிட்ட தரிசு நிலங்களை அதில் பயிரிடும் மக்களுக்குச் சீக்கிரமாகப் பட்டா செய்து கொடுப்பது கிடையாது. அப்படியே கொடுத்தாலும்கூட, சாகுபடி செய்ய முடியாத நிலையில் பல ஹரிஜன விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலத்தை அவர்களிடத்தில் ஒப்படைத்தும்கூட, பெயரளவில் பட்டா இருக்கிறதே தவிர, ஊரிலுள்ள பெரிய பெரிய மிராசுதார்களுக்குப் பயந்து இவர்கள் அனுபவிக்க முடியாத நிலை இருந்து கொண்டு வருகிறது. இதுபோன்ற உண்மை நிலையைக் கண்டுபிடித்து, யார் யாருக்குப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது, அதை யார் யார் சாகுபடி செய்கிறார்கள் என்று பார்த்து, தவறாக நடந்து கொள்கிறவர்களுக்குத் தண்டனை விதிக்கக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டத்திலே மாற்றம் செய்ய வேண்டும். குறிப்பாக, ஒரு தாலுக்காவில் 200 ஹரிஜனங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறதென்றால், பத்து பேர்கூட நிலத்தை அனுபவிப்பது கிடையாது. காரணம், அவர்கள் ஊரிலுள்ள பெரிய மனிதர்களுக்குப் பயந்து அந்த நிலத்தை அவர்களிடத்திலேயே விட்டுவிடுகிறார்கள். இதற்குக் கடுமையான சட்டம் இருந்தால்தான் நல்ல முறையில் ஹரிஜன விவசாயிகள் நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவர முடியும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நகரப் புறங்களில் நீண்ட காலமாகப் புறம்போக்குகளில் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். நகரப் புறத்தில் வீடு கட்டிக்கொண்டிருக்கும் காரணத்தால், அடமானம் செய்ய வேண்டும் என்று மனுப் போடுகிறார்கள் என்றால் நகர மன்றத்திலே தீர்மானம் போட்டு ரெவின்யூ இலாகாவுக்குப் போகிறது. அங்கே போனவுடனே அப்படியே நின்றுவிடுகிறது. காரணம், நகரத்திலே ஒரு ஏழை விவசாயியோ அல்லது வேறு தொழிலாளியோ மனுப் போட்டால் அந்தக் கர்ணத்திற்கு 100 ரூபாய், 50 ரூபாய் என்று கொடுத்தால்தான் அதை உடனடியாகப் பட்டா செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. திருவண்ணாமலை நகரத்தில் 2,200 பேர்கள் இப்படி சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக்கொண்டு இருந்து வருகிறார்கள். கிட்டத்தட்ட இரண்டாயிரத்து இருநூறு குடும்பங்கள் இருபது இருபத்தைந்து ஆண்டு காலமாக அனுபவித்து வருகிறார்கள். பல விண்ணப்பங்கள் போட்டு இருக்கிறார்கள். ஜமாபந்தி நேரத்தில் மனுக்கொடுக்கிறார்கள். அப்போது சர்க்கார் கணக்குப்படி 300 குடும்பங்கள்தான் இப்படி புறம்போக்கு நிலத்தில் வீட்டைக் கட்டி இருப்பதாகச் சொல்கிறார்கள். பெரும்பாலும் ஹரிஜனங்கள் மற்றும் பல ஏழைகள் குடியிருப்பதனால் பட்டா கொடுப்பது கிடையாது. இது எதனால் ஏற்படுகிறது ? அந்த இலாகாவில் உள்ள குறைதானே இதற்குக் காரணம். அதை உடனடியாக நிவர்த்தி செய்தால் ஏழை மக்களுக்கு வசதியாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எஸ். முருகையன்] [19th March 1964

சரியான முறையில் பட்டா வழங்கப்படாத காரணத்தினால் பம்பு செட்டு போடலாம் என்றால் முடிவதில்லை. கடன் வாங்க முடிய வில்லை. ஆகவே உடனடியாக பட்டா வழங்கப்படவேண்டும். ரெவின்யூ இலாகாவுக்கு விண்ணப்பம் அனுப்பினால் பதிலே வருவது இடையாது. இதனால் பல ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இந்தக் குறை களை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும். சாத்தனூர் ஆயக்கட்டுப் பகுதியில் முப்பதாயிரம், நாற்பதாயிரம் என்று ஒவ்வொரு கிராம அதிகாரிக் கும் வசூல் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதற்காக வேண்டி கிராமாதிகாரிகளுக்கு உதவியாக இன்னொருவரை நியமித்தால் உதவியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் ஸ்டாம்பு கட்ட ணங்களைப் பொறுத்த வரையில் 200 (இருநூறு ரூபாய்க்குள்) கிரயம் வாங்கும் ஹரிஜனங்களுக்கு விதிவிலக்கு அளிப்பது நலமாக இருக்கு மென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறைந்த விலை ஸ்டாம்பு களை ஸ்டாம்புவெண்டர்கள் வாங்கி விற்பது இடையாது. நகரசபைகள் வேலைகள் அதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஒரு ரூபாய்க்கு முக்கால் பைசா லாபம் என்பதனால் குறைந்த விலை ஸ்டாம்புகளை அவர்கள் வாங்கி விற்பது இல்லை. ஆகவே அதற்கு விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஸ்டாம்புக்குப் பதிலாக பணமாக வாங்குவதாக இருந்தாலும் அதற்கு அனுமதி அளிக்கலாம்.

இன்னும் ஹரிஜனங்களுடைய வீடுகளுக்குத் தீப்பிடித்துக் கொள்கிற போது புதுப்பிக்க முழுச் செலவையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்வது நலமாக இருக்கும். இப்போது மொத்தமாக 40 ரூபாய் கொடுக்கிறார்கள். அது போதாது. அந்த வீடுகளையே கட்டிக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. செ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இராம நாதபுரம் ஜில்லாவில் நான் இருக்கிற பகுதி அண்டர் டென்யூர் எஸ்டேட் பகுதியாகும். ஜமீன் நிலங்கள் தான் ஜாஸ்தி. ஜமீன்தாரி ஒழிப்பு வந்த பிறகும் எந்தவிதமான அஷ்யூர்ட் டென்யூரும் ஏற்படுத்தப்படவில்லை. நிலம் இன்னாருக்குத்தான் சொந்தம் என்பதாக செட்டில்மெண்டு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி அதிகாரிகள் விசாரணை செய்தபோது பல நிலங்களை இனாம்தாருக்குச் சொந்தமில்லாமல், ரயத்து களுக்கும் சொந்தமில்லாமல் அரசாங்க நிலங்களாக குறிக்கப்பட்டு இருக் கிறது. ஜமீன்தார்களிடமிருந்து ரயத்துக்கள் 48-க்கு முன்னால் ரசீது பெறவில்லை. அவர்களும் கொடுத்தது இல்லை. அதற்குப் பிறகு ஒழுங்காக ரசீது வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் நாம் சட்டம் கொண்டுவந்த போது 1948-க்கு முன்னால் நிலம் யாரிடமிருந்ததோ அவர்களுக்குப் பட்டா செய்ததாக வைத்து விட்டோம். 1948-க்கு முன்னால் இவர்கள் ஜமீன்தார்களிடமிருந்து ரசீது பெறாத காரணத்தினால் நிலம் அவர்களுக்கும் சொந்தமில்லை, இவர்களுக்கும் சொந்தமில்லை என்ற நிலை இப்போது ஆகிவிட்டது. அப்படி இன்றி பல காலமாகப் பயிரிட்டு வருகிற ரயத்துக் களுக்கே அந்த நிலத்தை பட்டா செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக அண்டர்-டென்யூர் எஸ்டேட்டில் விவசாயிகளுக்குப் பெருத்த கஷ்டம் இருக்கிறது. சர்க்காரிலே போய் தக்காவிக் கடனோ, மற்ற கடனோ கேட்கப் போனால் கிடைப்பதில்லை. எங்கள் ராமநாதபுரம் மாவட்டத்தில்தான் இது மிகவும் பெருத்த கஷ்டமாக இருக்கிறது. அதிகாரிகள் இதைச் சரியான முறையில் கவனித்து தீர்ப்பதற்கு உடனடி யாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். அந்த மாவட்டத்திலே குளங்கோர்வை நிலம் என்று இருக்கிறது. இந்தப் பக்கத்தில் குளம் என்பதை அங்கே கன்மாய்கள் என்பார்கள். கிட்டத்தட்ட ஒரு லட்சத்து இருபதாயிரம் குளங்கோர்வை நிலம் என்று அங்கே இருக்கிறது. காச்மெண்ட் ஏரியா என்று புத்தடி தள்ளியிருக்கிற நிலத்தை விடுகிறார்கள். இந்தப் பக்கம் உள்ளதை குளங்கோர்வை என்று மறுக்கிறார்கள். சிவில் கோர்ட்டுக்குப் போக ரயத்துக்களுக்கு உரிமை



19th March 1964] [திரு. செ. சீனிவாசன்]

யில்லை. ஆகவே ஹைகோர்ட் போய் ரிட் போட வேண்டியதாக இருக் கிறது. ஆகவே அந்தப் பகுதி நிலங்களை எல்லாம் உடனடியாக ரீசர்வே பண்ணவேண்டியதாக இருக்கிறது. அந்த மாதிரி நிலைமையில் விவசாயி கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதை மாற்றுவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோர்ட்டில் போய் பெறு கிற நியாயத்தை நாமே கொடுத்து விடலாம் என்றுதான் தெரிவித்துக் கொள்கிறேன்.

செட்டில்மெண்டைப் பொறுத்தவரை வக்கீல் என்ற முறையில் 10-00 a.m.
எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவத்தைச் சொல்கிறேன். ஜமீன்தாரி முறை யில் இருந்த ஒரு நிலத்தை வாங்கினார். அந்த நிலத்தில் கல்லைப் பிடுங்கிப் போட்டு விட்டார்கள். அந்த நிலம் எங்கே இருக்கிறது என்பதை நிர்ணயிக்க சர்வேக்கான பணத்தை டிரஷரியில் டெபாசிட் செய்யப் பட்டது. அதைச் சர்வே செய்ய வரும்போது அதில் குடியிருக்கும் ஜனங்கள் அந்த நிலத்திலே வந்து அளக்கக்கூடாது என்று ஆட்சேபனை பண்ணி னார்கள். அதைப் பற்றி என்க்வைரி நடந்து கொண்டிருக்கும்போதே அவர்கள் டி.ஆர்.ஓ விடம் போய் ஸ்டே வாங்கிக்கொண்டு வந்து விட்டார்கள். எனக்குள்ள நிலத்தில் பவுண்டரிஸ் மார்க் பண்ணவே இந்த நிலைமை. இதற்காக நான் போர்டு ஆப் ரெவின்யூவுக்குப் பெட்டிஷன் போட்டேன். லாண்ட் ரெவின்யூ சம்பந்தப்பட்ட கமிஷனர் அந்த சப்ஜெக்ட் தனக்கும் சம்பந்தமானது அல்ல என்று சொல்லிவிட்டார்கள். சர்வே செட்டில்மெண்டு டிபார்ட்மெண்டில் கொடுத்து கிட்டத்தட்ட ஐந்தாறு மாதங்கள் ஆகின்றன. ஆனால் இதுவரை எந்தவிதமான பைசலும் செய்யப்படவில்லை. இதிலே இந்த நிலைமை இருக்குமானால் விவசாயிகள் எந்த அளவுக்குத் தொல்லை பட நேரிடும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் சற்று யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குளம்கோர்வை நிலங்கள் சம்பந்தமாக டிப்பார்ட்மெண்டில் அதிகாரி களைக் கேட்டால் "பிஷர்ஸ் ஜட்ஜ்மெண்டைத்தான் கடைப் பிடிப்போம்" என்று சொல்லுகிறார்கள். பிரிட்டிஷார் காலத்தில் போக் என்று ஒரு டிபுடி கலெக்டர் இருந்தான். ஒரு குளத்திற்கு இவ்வளவுதான் காச் மெண்ட் ஏரியா என்று பிரிட்டிஷார் எனன்ஷியேட் பண்ணியிருக்கிறார் கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இவ்வளவு தான் குளம் கோர்வை நிலங்கள், அதற்கு மேல் குளம்கோர்வை நிலங் கள் அல்ல என்று செய்துவிட்டால் போதும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

குளம்கோர்வை நிலங்களால் சர்க்காருக்கு என்ன நஷ்டம் என்று எனக்குத் தெரியவில்லை. "Section 3 (1) consequent on the notification tank and all the land" என்று இருக்கிறது. எப்போது வேண்டு மானாலும் வெளியேற்றலாம் என்று சொல்லி பட்டா கொடுத்திருக்கிறார்கள். அந்த மாதிரி நிலைமையில் மீண்டும் பட்டா வழங்குவதில் நஷ்டமோ, கஷ்டமோ இருக்க முடியாது.

சர்வே அண்டு செட்டில்மெண்டைப் பொறுத்தவரை மேல் கண்ட் ரோல் இருக்கிறது. ஒரு விஷயம் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. செட்டில் மெண்ட் அதிகாரிகளையும் பார்க்கவேண்டியிருக்கிறது. இதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதைத் தனித்தனியாக பிரித்து இயங்க வைப்பதுநன்றாக இருக்கும் என்று அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

செட்டில்மெண்ட் நிலங்களுக்கு "map showing the surveyed areas" என்று கொடுக்கிறார்கள். அதிலே ஒரு வரி எழுதி விடுகிறார்கள். "It is not admissible in a Court of Law" என்று எழுதி விடுகிறார்கள். ஒரு பட்டா கொடுத்து அதற்காகக் கொடுக்கிற பிளான் கோர்ட்டில் பயன்படாது என்றால் என்ன பயன் ?

கோர்ட் பீஸ் ஆக்டைப் பொறுத்தவரை இன்சங்ஷன் சூட், டிக்ளரேஷன் சூட் எல்லாவற்றுக்கும் ஸ்டாம்பு கட்டணம் 30 ரூபாய் என்று வைத்திருக் கிறார்கள். 100 ரூபாய் சொத்து மதிப்புள்ளது பற்றிக் கோர்ட்டில் வாதாட

30 ரூபாய் ஸ்டாம்பு கட்டணம் என்று வைத்திருக்கிறார்கள். மற்றவைற்றுக்கெல்லாம் 100-க்கு 7½ என்று வைத்திருக்கும்போது இதற்கு மட்டும் ஏன் 30 ரூபாய் என்று இருக்கவேண்டும் ? இதையும் 7½ ரூபாயாக வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. இரா. நாராயணன் :** தலைவர் அவர்களே, நிலவரித் துறை, முத்திரைத் தாள் நிர்வாகம் என்ற மானியத்தின்கீழ் எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நிலவரியைச் சர்க்காரானது பல கோணங்களில் விவசாயிகளிடம் இருந்து வசூல் செய்து கொண்டு வருகிறார்கள். இந்த வரிகளையெல்லாம் கட்ட முடியாமல் விவசாயிகள் பெருத்த தொல்லைக்குள்ளாகி இருக்கிறார்கள். வெள்ளைக்காரன் காலத்தில் சாதாரணமாக ஒரு ஏக்கர் நிலத்திற்கு இவ்வளவு ரூபாய்தான் தீர்வை என்று ஏற்படுத்தி அவர்களுக்குப் பட்டா கொடுத்து நிலவரியை வசூல் செய்து வந்தார்கள். நம்முடைய சர்க்கார் வந்தவுடன் அந்தப் பட்டாவையே ரத்து செய்து இப்போது பட்டா என்று கொடுத்தால் அதிலே அயன் தீர்வையை மாத்திரம் கொடுக்கிறார்களே தவிர, லோக்கல் செஸ், சர்சார்ஜ் இதெல்லாம் இல்லை. இதிலே ஏதோ சலுகை கொடுத்துவிட்டது போல் இருந்தாலும், அங்குள்ள கிராமாதிகாரிகள் பல சூழ்ச்சிகளைச் செய்து வருகிறார்கள். ஒரு மணியக்காரர் என்ன செய்தார் என்றால் தன்னுடைய மரப் பட்டா மாற்றி இன்னொருவருடைய மரப்பட்டாவின் மூலம் வந்த பணத்தைத் தன் மரப்பட்டாவின் கணக்கில் வரவு வந்த மாதிரி கைசாத்து ரசீது போட்டு எடுத்துக்கொண்டிருந்தார். அதை விவசாயி வெகு நாட்கள் உணரவில்லை. அது தெரிந்தவுடன் வாக்குவாதம் நடந்து பிறகு அது பற்றிக் கலெக்டரிடம் ஒரு மனு கொடுக்கப்பட்டது. அதன் பேரில் நாளது வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. வெள்ளைக்காரன் காலத்தில் (ரசீது) கைசாத்து என்று கொடுத்து இருந்தார்கள். இப்போது ஒரு பாரத்திலே, கிராம முன்சீப் எழுதிக் கொடுக்கிறார்கள். செட்டில்மெண்ட் ஏற்படும் நேரத்தில் எப்படி ஒரு பட்டா நிலத்தை சர்வே செய்யவேண்டுமென்று ஊர்ஜிதமான முறையை ஏற்படுத்தப்பட்டதோ அந்த முறையை ஏற்படுத்தினால் தான் நல்லது. வருஷத்திற்கு வருஷம் வரி அதிகப்பட்டுக்கொண்டே போகிறது. நம் சர்க்காரால் விவசாயி இந்த நாட்டின் முதுகெலும்பு என்பதை மறந்துவிட்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வரி மேல் வரி அதிக அளவில் போடப்பட்டு வருகிறது. ஆயக்கட்டு ஏரியின் பாய்ச்சல் நிலங்களுக்கு இத்தனை ஏக்கருக்கு தண்ணீர் பாயும் என்று சர்க்கார் வகுத்திருந்தால், அந்த ஆயக்கட்டைத் தவிர அடுத்த புஞ்சை நிலத்தில் ஏரித் தண்ணீரைப் பாய்ச்சினால் நீர்க்கூலி போடலாம் என்ற நிலைமை இருக்கிறது.

ஏரி கழிவடை தண்ணீர் அந்த எல்லையில் இருந்து அடுத்த எல்லைக்கு ஏரியின் அப்பால்பட்ட ஓடைகளிலும், ஆற்றிலும் வந்து தண்ணீர் சேருகிறது. விவசாயிகள் அந்தத் தண்ணீர் வருவதில் அணை போட்டு ஏற்றம் போட்டு இறைத்து பயிர் செய்தால் அதற்கு நீர்க்கூலி போடப்படுகிறது. எந்த முறையில் நாம் இந்த நீர்க்கூலியை ஆதரிப்பது ? நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். விவசாயிக்கு பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது என்று சொல்லும் நேரத்தில் வீணாகப் போகும் தண்ணீரைக் கொண்டு அதைப் பயன்படுத்தி விவசாயம் செய்தால் முதல் தரம் இரண்டாம் தரம் என்று பாய்ச்சக்கூடிய தண்ணீருக்கு தண்டத் தீர்வை போடுகிறார்கள். கழிவடை தண்ணீரைப் பாழாக்கக்கூடாது என்று அந்த விவசாயிகள் அதைப் பயன்படுத்தி விவசாயம் செய்கிறார்கள். ஆகவே இதற்கு நீர்க்கூலி விதிக்கக்கூடாது என்று அமைச்சர் அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஆற்றில் அணை கட்டப்பட்டிருக்கிறது. அதில் போகும் தண்ணீரை ஏரியில் விட்டு பாய்ச்சுகிறார்கள். அணையிலிருந்து மிகுதிப்பட்ட ஆற்றில் வரும் தண்ணீரை விவசாயிகள் குறுக்கே அணைபோட்டு ஆற்றிலிருந்து வரும் நீரை கவலை கட்டி இறைத்தால் அதற்கும் தண்ணீர் தீர்வை விதிக்கிறார்கள். எதற்காக இந்தத் தீர்வை விதிக்கவேண்டும் ? ஆற்றில்கூட ஒரு சமயம் தண்ணீர் வருவதில்லை. ஊற்று தோண்டி மண்ணை எடுத்து அதிலிருந்து கட்டை ஏற்றம்



வைத்து பயிர் செய்கிறார்கள். அதற்காக விவசாயிகளுக்கு நீர் கூலி போடலாமா ? நிலவரியோடு விவசாயிகளிடமிருந்து பலவிதமான வரிகளை வசூல் செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேண்டிய வசதிகளை இந்த அரசாங்கம் செய்து கொடுக்கவில்லை என்பதை நான் இந்த சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். வரி இல்லாமல் ஆள முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், விதிக்கப்படும் வரிகள் நியாயமான வரிகளாக இருக்கவேண்டும். வருடாவருடம் வரிகளை அதிகப்படுத்திக்கொண்டே போவது அவ்வளவு நல்லதல்ல என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு விவசாயியின் வீடு எரிந்து விடுகிறது, மாட்டுக்கொட்டகையும் சேர்ந்து எரிந்து விடுகிறது என்றால் வீட்டுக்கு மட்டும் நிவாரணம் அளிக்கப்படுகிறதே தவிர மாட்டுக்கொட்டகைக்கு நிவாரணம் அளிக்கப்படுவதில்லை. எங்கே விவசாயி மாட்டைக் கட்டி எரு போன்றவற்றை பதனிட்டு விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும் ? ஆகவே வீட்டுக்குக் கொடுப்பதைப் போலவே மாட்டுக்கொட்டகைக்கும் நிவாரணம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்காரிலிருந்து இப்போது 30 ரூபாய்தான் அளிக்கிறார்கள். விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. இந்த 30 ரூபாயை வைத்து அவர்கள் எப்படி நிவாரணம் பெற முடியும். ஒரு ரூபாய் வரி செலுத்தி வருபவன் இப்போது 6 ரூபாய் செலுத்தி வருகிறான். திரு. ராமசாமி அவர்கள் கூறியபடி 10 ரூபாய் கிஸ்தி செலுத்துபவர்களுக்குத்தான் வீட்டு நிவாரணம் கொடுக்க முடியும். அதற்கு மேல் வரி செலுத்துபவர்களுக்கு கொடுக்க முடியாது என்றிருக்கும் விதியை நீக்கிவிட்டு, வீட்டுக்கு அளிப்பது போன்று மாட்டுக்கொட்டகைக்கும் நிவாரணம் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பத்திரத் தாள். சில இடங்களில் பத்திரங்கள் வாங்கும்போது விலையைக் குறைத்து எழுதி விடுகிறார்கள். சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களில் போய் பத்திரம் எழுதப்பட்டு வருகிறார்கள். அமைச்சர் அவர்கள்கூட விலையைக் குறைத்து பத்திரம் எழுதப்படுகிறது என்று சொன்னார்கள். வாஸ்தவந்தான். சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் பத்திரம் எழுதுபவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு லைசென்ஸ் கட்டணம் விதிக்கவேண்டும். ஏன் அப்படி விதிக்கக்கூடாது ? கிராமங்களில் பத்திரங்கள் எழுதப்பட்டால் அதன் விலை பற்றி கிராம அதிகாரிகளுக்குத் தெரியும். பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டுக்குத் தெரியும். மற்றும் ஊரில் உள்ள பெரியவர்களுக்குத் தெரியும், என்ன விலை பேசியிருக்கிறார்கள், என்ன விலைக்கு விற்கிறார்கள் என்பதெல்லாம். ஆனால் வாங்குகிறவர்களும் அதிகப்படியான விலைக்கு வாங்குகிறார்கள். விற்பவர்களும் அதிகப்படி விலை கேட்கிறார்கள். 500 ரூபாய் மதிப்புடையது என்றால் 1,000 ரூபாய் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். விலை குறைத்து பத்திரம் எழுதுபவர்கள் இங்கே பத்திரம் எழுதக்கூடாது, சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் போய் எழுதலாம் என்று இருவரும் அங்கு போய் எழுதிவிடுகிறார்கள். ஆகவே நான் சொல்வது, ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் நிலத்திற்கு ஒரு விலை வரம்பு சர்க்காரில் இருந்து விதிக்கவேண்டும். ஒரு ஏக்கர் இவ்வளவு ரூபாய்க்கு குறைச்சலான பத்திரம் எழுதினால் அது செல்லாது என்று சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களுக்கு உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால்தான் இப்போதுள்ள குறைகளைப் போக்க முடியுமே தவிர இல்லாவிடில் எந்த முறையைக் கையாண்டாலும் முடியாது. புஞ்சையாக இருந்தாலும் சரி, நஞ்சையாக இருந்தாலும் சரி விலை நிர்ணயம் செய்யவேண்டும். ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் நிலம் ஒரு ஏக்கர் இவ்வளவு ரூபாய் பெறுமானம் என்று நிர்ணயித்து விட்டால் குறைந்த விலை என்று சொல்லி விற்கவும் முடியாது. சர்க்காருக்கும் அதிக லாபம் கிடைக்கும். அதோடு பஞ்சாயத்துக்களுக்கும் அதிக வருவாய் கிடைக்கும் என்று கூறிக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எம். பி. முத்துகருப்பண்ணசாமி கவுண்டர் :** தலைவர் அவர்களே, ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த ரெவின்யூ மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நிலவரியில் இருந்து அதிகமான வருமானம் வருகிறது என்று கூற முடியாது. ஓரளவிற்குத்தான் வந்து கொண்டிருக்

கிறது. இன்று விவசாய வருமான வரி, நிலவரி, பஞ்சாயத்து வரி இந்த
வரிகளை எல்லாம் கட்டவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால் விவசாய
வருமான வரியை எடுத்துக்கொண்டால் லாண்ட் சீலிங் சட்டம் வருவதற்கு
முன்பு அதிகமான வருவாய் வந்திருக்கலாம். ஆனால் அந்தச் சட்டம்
வந்த பிறகு பாகப்பிரிவினை செய்த பிறகு விவசாய வருமான வரி குறை
வாகப் போய்விட்டது. அதனால் இந்த விவசாய வருமான வரி என்று
ஒன்று இருக்கவேண்டுமா? என்பதுதான் என் தாழ்மையான அபிப்பிராயம்.
விவசாய வருமான வரி, பஞ்சாயத்து வரி, பலவித செஸ் வரி இவற்றை எல்
லாம் ஒன்றாகப்போட ஏற்பாடுசெய்தால் விவசாயிகளுக்கு அது நன்மை அளிப்
பதாக இருக்கும். ஆகவே ஏழை விவசாயிகளுக்கு ஐந்து ஏக்கர், அதற்குக்
குறைவாக உள்ளவர்களுக்கும் இந்தச் சலுகையை அளிக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன். பொள்ளாச்சி தாலூகா, உடுமலைப்பேட்டை, பல்லடம்,
தாராபுரம் இந்த தாலூகா பக்கம் பரம்பிக்குளம்—அலியாறு நில
அபிவிருத்தி திட்டத்திற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை நான்
பாராட்டுகிறேன். அடுத்தபடியாக, இந்த கூட்டுப் பட்டாதாரர்களுக்கு கடன்
வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. லோன் கேட்டால் இவர்களுக்குக்
கொடுப்பதில்லை. ஆகவே கிணறு வெட்டுவதற்கு, மற்ற விவசாய காரியங்கள்
செய்வதற்கு இவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. கூட்டுப் பட்டாதாரர்
கள் பிரித்துக் கொடுக்க விண்ணப்பம் போட்டால் ஒரு வருட காலமாகிறது.
ஆகவே விரைவில் கூட்டுப் பட்டாக்களை பிரித்துக் கொடுத்து அவர்கள் கடன்
வசதி பெற வசதி செய்து கொடுக்கவேண்டும். ரெவின்யூ வருவாய்களை
எல்லாம் கிராம அதிகாரிகள்தான் கண்காணித்து வருகிறார்கள். அவர்களுக்கு
இப்போது அதிக வேலை இருக்கிறது. அதிக வேலைச் சிரமம் இருக்கிறது.
ஆனால் அவர்களுக்கு கொடுக்கும் சம்பளம் 20 ரூபாய்தான். ஆகவே
இந்த 20 ரூபாயை வைத்துக்கொண்டு அவர்கள் வரி வசூல் செய்யவும்,
தங்கள் குடும்ப வாழ்க்கையை நடத்தவும் கஷ்டப்படுகிறார்கள். சாதா
ரணமாக மற்ற இலாகாக்களில் உள்ளவர்களுக்கு எல்லாம் 100 ரூபாய்,
150 ரூபாய் வரை கொடுத்து வருகிறார்கள். கர்ணத்திற்கு வேலை அதிக
மாக இருக்கிறது. அவர்கள் பலவகையான கணக்குகளை எழுதவேண்டி
யிருக்கிறது. பஞ்சாயத்துக்களுக்கும் கர்ணம்தான் கணக்குகள் கொடுக்க
வேண்டியிருக்கிறது. ஆகவே 100 ரூபாய்க்கு குறைவாக அவர்களுக்கு
சம்பளம் கொடுத்தால் எந்த வகையிலும் அவர்களுக்கு கட்டுப்படியாகாது.
பல ஆபீஸ்களுக்கு இவர்கள் போக வேண்டியிருக்கிறது. ஆனால் மற்றவர்
களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைவிட மிகவும் குறைவாக இருக்கிறது
இவர்களுக்கு. ஆகவே அதற்கும் தக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு தண்டல் வேலை செய்கின்றவர்கள் 10,
15 ரூபாய் என்று சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தால் எப்படி அவர்கள்
வாழ்க்கையை நடத்த முடியும். அவர்களுக்கும் நல்ல ஊதியம் கொடுக்க
வேண்டும். அப்போது அவர்கள் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு
வசதியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதே போல், மற்ற ரெவின்யூ இலாகாக்களில் உள்ள குமாஸ்தாக்
களுக்கும் மற்றவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சம்பளம் கட்டுப்படியாக
வில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் விவசாய வருமான வரியை
எடுத்துக்கொண்டு பார்க்கும்போது இப்போது கூடுதலாக வருமானம் வந்து
கொண்டிருக்கிறது. முன்பு ஒரு ரூபாய் என்றிருந்தது என்றால் இப்போது
ஆறு ரூபாய் விவசாய வருமான வரியாக விவசாயிகள் கொடுக்கவேண்டியிருக்
கிறது. இது தவிர விவசாயிகள் பல்வேறு வரிகளை கொடுத்துக் கொண்டிருக்
கிறார்கள். ஆனால் அவர்கள் கொடுக்கின்ற அளவுக்கு சலுகை கிடைப்பதில்லை.
அரசாங்கம் எவ்வளவோ நன்மைகளை செய்த போதிலும்கூட, அவைகள்
எல்லாம் விவசாயிகளுக்கு சீக்கிரமாக கிடைப்பதில்லை. இதன் காரண
மாக விவசாயிகள் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியாமலும்,
உற்பத்தி செய்ய முடியாமலும் இருக்கிறது. இதை யெல்லாம் அரசாங்கம்
நன்கு சிந்தித்துப் பார்த்து கூடியவரையில் விவசாயிகளுக்கு
நல்ல முறையில், என்னென்ன நன்மைகள் எல்லாம் செய்ய முடியுமோ
அதையெல்லாம் செய்து கொடுக்கவேண்டும். குறிப்பாக லோன் முதலிய
காரியங்களுக்காக மனு போட்டால் அவைகள் எல்லாம் காலதாமதமாகாமல்
கூடியவிரைவில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.





***திரு. சோ. ஆறுமுகம்** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நம்
முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் நில வருவாய்த் துறை மானியத்
தைக் கோரியிருக்கிறார்கள். அதன்மீது எங்கள் கட்சியிலிருந்து கொடுக்
கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தை
களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் இந்த நாட்டில் விவ
சாயத்தை நம்பிக்கொண்டு, விவசாயம்தான் இந்த நாட்டுக்கு முதுகெலும்பு
போன்றது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிற பிரச்னையாகும்.
ஆனால், விவசாயிகளினுடைய நன்மைகள் எல்லாம் இந்த சர்க்காரால்
புறக்கணிக்கப்பட்டு நாளுக்குநாள் விவசாயிகள் பல தொல்லைகளுக்கு
ஆளாக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்
காட்ட ஆசைப்படுகிறேன். குறிப்பாக விவசாயிகளுக்கு நம்முடைய மாநில
சர்க்கார் ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகத் தீர்வைகளை விதித்துக்கொண்டு
இருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும்
அரசினர் ஆண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கு 40 ந.பை. வீதம் அந்தந்த
பிராந்திய அபிவிருத்திக்காக மேலும் வரியை வசூல் செய்து வருகிறார்
கள். இப்படி விதிக்கப்படுகின்ற வரிகளை எல்லாம் கொடுக்கக்கூடிய நிலை
மையில் ஏழை விவசாயிகள், இருக்கிறார்களா என்பதை நாம் பார்க்க
வேண்டும். ஏழை உழவர்கள் மிகவும் தொல்லைகளுக்கு ஆளாகி வேதனைப்
பட்டுக்கொண்டிருக்கிறார்கள். குறைந்தது நம்முடைய சர்க்கார் நம்முடைய
மாநிலத்தில் ஒரு விவசாயிக்கு இவ்வளவுதான் நிலம் இருக்க வேண்டும்
என்று வரையறுத்திருக்கிறார்கள். இந்த சட்ட மன்றத்தில் நிறைவேற்றி
வைத்திருக்கிறார்கள். இந்த முறையில் மாநில சர்க்கார் ஐந்து ஏக்கர்
இருப்பவர்களுக்கு என் வரி விலக்கு அளிக்கக்கூடாது? ஐந்து ஏக்கர்களுக்கு
குறைவாக வைத்திருக்கின்றவர்களுக்கு வரி விலக்கு அளிப்பார்களேயானால்
சாதாரண விவசாயிகள் எல்லாம் இந்த சர்க்காரைப் போற்றுவதோடு,
அவர்கள் மூலமாக விவசாயத்தைப் பெருக்குவதற்கும், அவர்களிடம் நல்ல
தொரு உற்சாகம் ஏற்படுவதற்கும் வசதியாக இருக்கும் என்பதை தெரி
வித்துக் கொள்கிறேன். இதை நமது சர்க்கார் சிந்தித்துப் பார்த்து சாதா
ரண விவசாயிகள் பயனடைகின்ற வகையில், அவர்களுக்கு நல்ல ஊக்கம்
தருகின்ற அளவுக்கு, ஐந்து ஏக்கர் வைத்திருக்கின்றவர்களுக்கு வரி இல்லை
என்று சொல்லக்கூடிய ஒரு வரையறையைக் கொண்டுவந்தால் நல
மாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே
நேரத்தில் இதை சொல்லும்போது, வரியில்லாமல் எப்படி ஆட்சியை
நடத்த முடியும் என்று கேட்பார்கள். ஆனால் நாம் இன்றையதினம்
பொது மராமத்து வேலைகளுக்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கும், பஞ்
சாயத்துக்களுக்கும் நிதி கொடுப்பதற்கு மாநில சர்க்கார் ஒத்துக்கொண்டு
இருக்கிறார்கள். அதற்கேற்றபடி நிதி ஒதுக்குகின்றார்கள். அவ்விதம் ஒதுக்
கப்படுகிற பணம் அத்தனையும் பஞ்சாயத்து யூனியன் செலவு செய்கிறதா
என்று பார்த்தால், நிச்சயமாக பலவித இடையூறுகளால், செலவு செய்வ
தில்லை. இப்படி செலவு செய்யாமல் மீண்டும் சர்க்காருக்கு இந்தத்
தொகை திரும்பி வந்துவிடுகிறது. இவ்விதம் ஒதுக்கப்படுகின்ற பணம்
முழுவதையும் செலவிடுவதில்லை. இவ்விதம் சர்க்கார் ஒதுக்கிய பணம்
சர்க்காருக்குத் திரும்பவும் வந்து சேருகின்ற நேரத்தில், அந்தந்த பஞ்சா
யத்து யூனியன்கள் என் இவ்வாறு வரி விதிக்க வேண்டும், சர்க்கார்
கொடுக்கிற பணத்தைக் கொண்டே பொது மராமத்து வேலைகளைச் செய்ய
அனுமதிப்பீர்களானால் அந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் அபிவிருத்தி
வரி விதிக்காமலேயே நிர்வாகத்தை நடத்த முடியும். வரியில்லாமலேயே
ஒரு நிலைமையைக் கொண்டுவர முடியும். இதனால் ஏழை விவசாயிகள்
மிகவும் பலன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக இனும் நிலங்களுக்கு சர்க்கார் விதித்திருக்கின்ற தீர்வை
கள் எல்லாம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இந்த இனும்தார்கள்
நிலத்தை வைத்திருக்கின்றவர்கள் அதிகமாக வரியைக் கொடுக்கிறார்கள்.
ஒரு பக்கத்தில் சாதாரண நிலத்திற்கு, ஒரு ஏக்கருக்கு 15 ரூபாய் கொடுக்
கிறார்கள் என்றால், அதற்கடுத்தாற்போல் இருக்கின்ற இனும்தார் நிலத்
திற்கு ஒரு ஏக்கருக்கு 25 ரூபாய் என்றிருக்கிறது. அதற்கடுத்த நிலத்தை
எடுத்துக்கொண்டால், 40 ரூபாய் இருக்கும். இப்படி ஒரு வரையறை
இல்லாமல், மாறுபட்ட முறையில், வரிகள் வசூல் செய்யப்படுகின்றன.

[திரு. சோ. ஆறுமுகம்] [19th March 1964

அதனையடுத்து அந்தப் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சர்க்காருக்கும், போடுகின்ற தீர்வை எல்லாம் மேலும் மேலும் உயர்ந்துகொண்டு இருக்கின்ற காரணத்தினால் சிறிய [illegible] மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றையதினம் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கின்றவர்கள் எல்லாம் இன்றையதினம் 50 ரூபாய் அளவில் கட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதோடு நாலைந்து ஆண்டுகளாகக் கட்ட வேண்டியதையும் சேர்த்து கட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சர்க்கார் இந்த ஜமீன் தார் நிலத்தை எல்லாம் சர்வே செய்கின்றார்கள். இவ்வளவும் சர்வே செய்து, குவிட் ரெண்ட்டை மாற்றி, தரவாரி தீர்வை நிர்ணயிக்கின்றார்கள். அப்படித் தர வாரியாக பிரிக்கப்படும்போது, 100 ரூபாய் கட்டுகின்றவர்கள், ஆண்டு ஒன்றுக்கு 100 ரூபாய் என்று வருடமானால், ஏழு ஆண்டுகளுக்கும் சேர்த்து 700 ரூபாய், 800 ரூபாய் ஒரே ஆண்டிலே கட்டவேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுவதால், ஏழை விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஆகவே, இந்தத் தொகையை ஒரே தவணையில் கட்டாமல் நாலைந்து ஆண்டு தவணைக்குள் வசூல் செய்கின்ற முறையில் சர்க்கார் உத்தரவிட வேண்டும். அப்படிச் செய்தால், என்ன நஷ்டம் ஏற்படும் என்பதை ஆலோசித்துப் பார்த்தால், எந்த விதமான நஷ்டமும் ஏற்படாது. ஆகவே இதைப் பற்றி சர்க்கார் சிந்தித்து, இந்த குவிட் ரெண்ட் தீர்வையை மாற்றி தரவாரி தீர்வையை ஏழு ஆண்டுகள் கட்ட வேண்டியதையும் ஒரேயடியாக வசூல் செய்யாமல் நாலைந்து ஆண்டு தவணையில் வசூல் செய்வதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நான் சர்க்காரைப் பணிவோடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், என்னுடைய வீரபாண்டி தொகுதியில், கஞ்சமலையில் இரும்பு எடுப்பதற்காக சுமார் 22 ஆயிரம் ஏக்கர் நிலங்களை சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதன்மூலம் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்கள் விவசாய உற்பத்தி செய்யாமல், மிகவும்பாதிக்கப்பட்டு, மிகவும் வேதனையான நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அந்த நிலங்களுக்கெல்லாம் தீர்வையை வசூல் செய்யாமல் இருக்கும்படியான அளவுக்கு சர்க்கார் ஆலோசித்துப் பார்த்து சர்க்கார் உத்தரவு போடுவார்களேயானால், மிகவும் நன்மையாக இருக்கும். அதன் மூலம் விவசாயிகளுக்கு நல்லதொரு ஆறுதல் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் ஆலோசித்து கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் இந்த இடத்திலுள்ள விவசாயிகளுக்கு இந்த ஆண்டு தீர்வையை வசூல் செய்யாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அங்குள்ள ஏழை விவசாயிகள் நல்ல முறையில் தங்கள் வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு வழி செய்து கொடுக்க வேண்டும். அந்த முறையில் குறைந்தது ஐந்து ஏக்கர் வரை நிலங்கள் வைத்திருப்பவர்களுக்கு வரியே இல்லை என்ற நிலையை சர்க்கார் ஏற்படுத்த வேண்டும் என்கின்ற கருத்தை மீண்டும் வற்புறுத்திக் கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Madam, I would like to say a few words on the Demands before the House. This is an opportunity for hon. Members to ventilate the grievances of the agriculturists though the Demand relating to the District Administration has already been discussed in this House when the item relating to land was discussed. As District Administration is also connected with Land Revenue, I think, District Administration also should come under the same Minister and this could facilitate the agriculturists in the rural areas to represent to the Government some of the matters which could not be settled at the lower level. The land revenue is collected by the Government as a specific charge on the agriculturists to discharge certain obligations. If that is the case, the land records have to be kept



19th March 1964] [Sri C. Chiranjeevulu Naidu]

properly and the agriculturist should be enabled to find out whether adangal and chitta have been maintained correctly. The land revenue with additions like cess, surcharge, additional wet assessment to be paid by them has now increased abnormally and they feel that it is too much. 10-30 a.m.

Regarding the villages that have been recently taken over under the Zamindari Abolition Act, survey and settlement have been effected. But we have been pointing out repeatedly that there have been defects in the survey and settlement. To-day we see that dry and wet lands which have been under rightful possession have been classified as assessed waste though the agriculturists have a right over them. Rough pattas are issued to the agriculturists and time is also given to them to file their objections if any. Fifteen days' time is given and also certain centres are selected to hear representations by the Settlement Officer and they have not been properly utilised by the agriculturists as those centres are not suitable to them. So, with regard to these defects, I suggest that the Government can issue orders to the District Revenue Officers vesting them with *suo moto* revision powers so that they could enquire into the representations made by the agriculturists and pass orders without referring them to the Assistant Settlement Officers whenever defects were found. The Assistant Settlement Officers who are very few, are not able to discharge their duties properly. Therefore, the District Revenue Officers may be given such revision powers.

As regards regrouping of villages, several factors are to be taken into account for regrouping villages. Of these, survey is the most important one. In those cases, where there has been defective survey, resurvey should be made before regrouping villages so that unnecessary and unwarranted clubbing of villages can be avoided. It is stated that survey of the entire State will be taken up. I would suggest that so far as the survey of fields is concerned, it has to be done by sub dividing roads that have recently been formed by the Panchayat Unions. In certain cases where roads have been formed, land records should be brought up to date.

Regarding settlement, it is the opinion of the Government that the settlement will only inconvenience the ryots in paying higher taxes. But at the time of settlement, if several factors are taken into account and the defects pointed out by the agriculturists are property heard, the resettlement will definitely benefit the ryots.

Regarding additional wet assessment, an Act was enacted in 1963 and it came into force in May 1963. Generally an Act is given retrospective effect to provide relief or to get over certain difficulties. But this Act has been given retrospective effect and it is proposed to collect the tax from the previous fasli. This is rather a very anomalous situation that has been created. Demand notice has not so far been served on the agriculturists for the purpose of collecting the tax. So, I request the Government to bring forward an amending Act providing for the collection of the tax from the '73 fasli.

[Sri C. Chiranjeevulu Naidu] [19th March 1964

As regards jamabandi, it really goes a long way to do certain things effectively by hearing representations from the villagers. But it is done in a casual and light-hearted manner. Three places in a taluk are to be selected for conducting jamabandi and hearing representations. The jamabandi officers hear them only for a few days allotted to them, with the result that the ryots are not able to get their grievances redressed. They must be given specific instructions to take one or two days more if they did not complete work. They must be given sufficient time to dispose of their cases so that the agriculturists may not be put to the necessity of again going to the jamabandi officers and inconveniencing them in their offices.

Regarding village officers, I must point out that about 40 accounts have to be maintained by them. This is too much for them. When the Government expect much work from them, it is the minimum duty of the Government to see that their emoluments are increased, especially those of Karnams and those village staff working under them.

Lastly, the present set-up of revenue department in the taluk with the tahsildar at the head of it, may be continued. On no account, the land revenue collections and such other connected records should be entrusted to the Panchayats or the Block Administrations as this will lead to confusion and mismanagement. The whole future of the agriculturists is involved in the matter and we cannot easily give control over such matters to the panchayat unions and the interests of the agriculturits should be safeguarded. With these few words, I resume my seat. Thank you, Madam.

* **திரு. என். துரைபாண்டி :** தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

யுத்தகாலத்திற்கு முன் நேஷனல் ஸேவிங்ஸ் சர்டிஃபிகேட் வழங்கப்பட்டது. அந்த சர்டிஃபிகேட்டுகளை சர்க்கார் கடனுக்காகவும், செக்யூரிடி டெபாஸிட்டுகளுக்காகவும், எல்லா ஆபீஸ்களிலும் வாங்கினார்கள். அதற்கு பிறகு அது நேஷனல் டிஃபென்ஸ் சர்டிஃபிகேட்டாக மாற்றப்பட்டது. அந்த சர்ட்டிபிஃகேட்டுகளை விவசாயிகளோ, கடன்பட்டவர்களோ, கொடுக்க வேண்டுமென்றால், செக்யூரிட்டி டெபாஸிட்டாகக் கொடுக்க வேண்டுமென்றால், எந்த ஆபீஸிலும் அதை வாங்கிக்கொள்ள உத்தரவு இல்லை, சர்க்கார் சட்டம் வரவில்லை என்று சொல்லி வாங்க மறுத்துவிடுகிறார்கள் அதன் காரணமாக எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் சம்பந்தமாக சினிமா வைத்திருக்கிறவர்கள் டெபாஸிட் கட்டுவதற்கும் கஷ்டமாக இருக்கிறது. டிஃபென்ஸ் சர்டிஃபிகேட்டையும் வாங்க வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்கு நிலத்தை வாங்குகிறவர்களும் விற்கிறவர்களும், இரண்டு பேரும் வந்து பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்றும் சட்டம் இருக்கிறது. அதிலே ஒவ்வொரு கிராமத்தையும் எடுத்துக்கொண்டால், இந்தச் சட்டத்தின்படி பாதிக்கப்பட்டவர்கள், பெரும்பாலும் எங்கள் தொகுதியை எடுத்துக் கொண்டால் யாருமே இருப்பதாகத் தெரியவில்லை. இது ரெவின்யூ உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.



19th March 1964] [திரு. என். துரைபாண்டி]

ஒவ்வொரு நாளும் குறிப்பாகக் கணக்குப் பார்போமானால், ரூ. 50, 100, 200 என்று சிறிய சிறிய பத்திரங்களை சிறிய சிறிய விவசாயிகள் 6, 7, 10 மைல்களுக்கு அப்பால் வந்து ரிஜிஸ்டர் செய்ய வேண்டியிருக்கிறது. சட்டப்படி 'டி' பாரத்தில் சர்வே நம்பர்கள் அத்தனையும் வாங்குபவர்களும், கொடுப்பவர்களும் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக அங்குள்ள விவசாயிகள் கர்ணங்களை அணுக வேண்டியிருக்கிறது. அதற்கு அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது நமக்கு நன்றாகத் தெரிகிறது. அந்த பாரத்தை நிரப்புவதற்கு வேறு கூலி வாங்குகிறார்கள். இந்த அளவுக்கு விவசாயிகளுக்கு ரொம்பவும் சங்கடமாக இருக்கிறது என்பது நமக்குப் புரிந்திருந்தும், அந்த ஏரியாவில் உச்ச வரம்புக்கு மேற்பட்ட நிலம் வைத்திருக்கும் நிலச்சுவான்தார் இல்லாமல் இருந்தும், அந்தச் சட்டம் அங்கு அவசியம்தானா என்பதை சர்க்கார் கவனிக்க வேண்டும். ஆகவே, ரெவின்யூ ஆபீஸில் ஒரு ரிஜிஸ்டர் ஆபீஸ் வைத்து, யார் நிலம் வாங்கினால் உச்ச வரம்புக்கு மேல் இருக்கிறது, யார் உச்ச வரம்புக்கு மேல் நிலம் வைத்துக்கொண்டு சர்க்காரை ஏமாற்றுகிறார்கள் என்று நமக்கு ஒரு கணக்கு இருக்கிறது, அது பற்றி ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் ஒரு நோட்டீஸ் தொங்க வைத்துவிட்டால், ஏழை விவசாயிகளுக்கு இந்த விதமான கஷ்டம் இருக்காது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

உச்ச வரம்புக்கு உட்பட்ட விவசாயிகள் ரூ. 3,600-க்கு மேல் வருமானம் இருந்தால், அவர்கள் வருமான வரி செலுத்த வேண்டும் என்று நாம் சட்டம் வைத்திருக்கிறோம். அந்த விவசாயிகள் அந்த விவசாய வருமானத்தைக் கொண்டு அவர்களுடைய நிலத்தை விருத்தி பண்ண முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் அதிகமாக உற்பத்தி பண்ண முடியாத நிலைமையில் இருப்பதால், அதன் காரணமாக அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. நாம் வரியை அதிகரிக்கிறோம். அதற்குப் பின்னால் உச்ச வரம்பு என்று சொல்லி, நிலம் குறைக்கப்படுகிறது. அதற்குப் பின்னால்கூட அவர்களுக்கு வருமான வரி என்று வைக்க வேண்டியது அவசியம்தானா ? அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று கணக்குப் பார்த்தால், திட்டமிட்ட குடும்பத்திற்கு 4, 5 பேர்கள் ஒரு குடும்பத்தில் இருக்கிறார்கள் என்றால், வருஷாவருஷம் உயர்கிற விலைவாசியின் காரணமாக எவ்வளவு ரூபாய் செலவாகிறது என்று கணக்குப் பார்த்தால், விவசாயிகளின் முதுகு எலும்பை ஒடிக்கிறோம். அவர்களுக்கு நன்மை செய்யவில்லை. சாதாரணமாகப் பார்த்தால், கிராம மக்கள்தான் எல்லாம் கொடுக்கிறார்கள். சேவிங்ஸ் சர்டிபிகேட் அங்குதான் வாங்குகிறார்கள். சர்க்கார் கடன் கிராமங்களில்தான் அதிகமாக வசூல் செய்யப்படுகிறது. விவசாயிகள் இம்மாதிரிப் பலவிதமாகக் கஷ்டப்படுகிறார்கள். இதையெல்லாம் சர்க்கார் யோசிக்க வேண்டும். உச்ச வரம்பின் காரணத்தினால், 30 ஏக்கர் நிலம் இன்றைக்கு உள்ள விலைவாசியில், அந்த நிலம் பூராவும், ரூ. 2 லட்சம் பொறுமதி இருக்கும். ஆனால், அவரைச் சேர்ந்தவர் அவருடைய தம்பி பட்டணத்தில் இருந்தால், ரூ. 30 லட்சத்தில் ஒரு தியேட்டர் கட்டுகிறார், ஒரு லட்சத்தில் ஒரு கார், ரூ. 10 லட்சத்தில் ஒரு பங்களா இப்படி வைத்திருக்கிறார். ஆகவே, இவர்களுடைய வருமானத்தையும் கிராமங்களிலுள்ள விவசாயிகளுடைய வருமானத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஒரே நிலையில் இல்லாமல், பாரபட்சமாக இல்லையா என்பதை சர்க்கார் யோசிக்க வேண்டும். கிராமங்களிலுள்ளவர்கள் தலைவர்கள் எல்லாம், ஆளும் கட்சித் தலைவர்களாக இருந்தாலும், எதிர்க் கட்சித் தலைவர்களாக இருந்தாலும், அவர்கள் மதராஸில் இருப்பதினால், பட்டணவாசிகளாக இருப்பதால், பட்டணத்தில் பல பங்களாக்கள், பல தியேட்டர்கள், இப்படிப்பட்ட தொழில் அபிவிருத்திகள் எல்லாமே பட்டணத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளைக் கவனிப்பதே இல்லை என்று கிராமத்திலுள்ள மக்கள் சொல்லுகிறார்கள். இன்றைய சூழ்நிலையில் கிராமத்திலுள்ள மக்கள்தான் அரசாங்கத்திற்கு பக்கபலமாக இருக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். பட்டணத்தில் உள்ளவர்களுக்கு சர்க்கார் செய்கிற நன்மையில் 100-ல் ஒரு பங்குகூட கிராம விவசாயிகளுக்குச் செய்ததாகத் தெரியவில்லை. இவைகளை எல்லாம் நமது

சர்க்கார் கவனத்தில் எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு எவ்வளவு நன்மை செய்ய வேண்டுமோ, அத்தனையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெள்ளையரை நம் நாட்டைவிட்டு விரட்டி விட்டோம். ஆனால் வெள்ளையர் காலத்தில் அவர்கள் வைத்திருந்த உத்தியோகஸ்தர் களை வைத்துக்கொண்டே, அந்த கிராம அதிகாரிகளை வைத்துக்கொண்டே இப்பொழுது நாம் சர்க்கார் நடத்துகிறோம். கிராம முன்சீப், கர்ணம், வெட்டியான் இவர்களை எடுத்துக்கொண்டால், அன்று என்ன சம்பளம் இருந்ததோ அது தான் இன்றும் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். விவசாயிகள் சர்க்காரிடமிருந்து கடன் வாங்குவதற்காக அவர்களை அணு கினால், தனிப்பட்டா இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் என்னுடைய "கிராண்டுபாதர்"-க்கு தகப்பனார் பேரில் பட்டா இருக்கிறது. இதுபற்றி கிராம அதிகாரிகளைக் கேட்டால், "இது தான் எங்களுக்கு வேலையா? சர்க்கார் பல திட்டங்களை விஸ் தரித்ததின் காரணமாக பல ஆபீஸர்கள் தினம் வருகிறார்கள். எங் களுக்கு அவர்களுடைய வருகையைப் பற்றி அறிவிக்கப்படுகிறது. நாங்கள் அவர்களைதான் கவனிக்க வேண்டியிருக்கிறது. இந்த வேலையெல்லாம் செய்வதற்கு நேரம் எங்கு இருக்கிறது?" என்று கேட்கிறார்கள். மேலும் "எங்களுடைய சம்பளம் ரூ. 11, 22 இந்த நிலையில் தான் இருக்கிறது, நாங்கள் என்ன செய்ய முடியும்?" என்று கேட்கிறார்கள். ஒருவர் இறந்து விட்டால் அதை எழுதிவைக்கப் போனால் அதற்குத் துட்டு. ஒருவர் பிறந்ததை எழுதி வைக்கப்போனால் அதற்குத் துட்டு. அதைப்பற்றி அவர் களைக் கேட்டால் "எங்கள் சம்பளம் குறைவாக இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். நாம் சுதந்திரம் அடைந்த பிறகு நம் நாட்டை நல்ல முறையில் ஆளவேண்டுமென்றால், கிராம உத்திகோகஸ்தர்களுக்கு அதிக சம்பளம் கொடுத்து, அவர்களுடைய பரம்பரையை ஒழித்து, திறமையான வர்களையும், படித்தவர்களையும் வைத்து ஆட்சி புரிவோமானால் மிகவும் நலமாக இருக்கும்.

என்னுடைய தொகுதியில் களக்காடு என்று ஒரு பெரிய கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தில் உள்ளவர்கள் பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்றால், 10, 12 மைல்களுக்கு அப்பால் போகவேண்டியிருக் கிறது. சர்க்காரிடம் இதை பல தடவை எடுத்துச் சொல்லியும், புள்ளி விவரங்கள் எடுத்து பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் இந்த இடத்தில் ரிஜிஸ்டர் ஆபீஸ் வைக்கவில்லை. ஆகவே, வருகிற ஆண்டிலாவது அங்கு ஒரு ரிஜிஸ்டர் ஆபீஸ் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணிமுத்தாறு எங்கள் பகுதியில் ஒரு பக்கம் ஓடுகிறது. திட்டவட்டமாக இரண்டாவது போகத்திற்கு தண்ணீர் விடமுடியாது என்று சொல்லி விட்டார்கள். அதே சமயத்தில் அந்த ஏரியாவில் ஒரு போகம் விளையக் கூடிய நிலத்திற்கு இரண்டு போகத் தீர்வை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். தாசில்தாரைக் கேட்டால் "எனக்குத் தெரியாது, கர்ணம் எழுதின எழுத்தை வைத்துக்கொண்டு தான் நான் செய்கிறேன்" என்று சொல்லு கிறார்கள். இந்தவிதமான சூழ்நிலை அங்கே இருக்கிறது. அதை கவ னித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ராதாபுரம் ஸப்-டாலுக்கில் எல்லா இடங்களிலும் செம்மையாக மழை பெய்தாலும், அங்கே தண்ணீர் போய்ச் சேரவில்லை. மானாவாரி குளங்க ளெல்லாம் இந்த ஆண்டு பெருகவில்லை. இதைப் பஞ்சப் பிரதேசம் என்று கருதி, பஞ்ச நிவாரண நிதியிலிருந்து அரசாங்கத்தின் மூலம் கிணறுகளை ஆழப்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நஷ்ட ஈடு கொடுக்கிறார்கள். எங்கள் பகுதியில் பனை மரமுள்ள விவசாயிகள் தான் அதிகம். பனைமரத்திலிருந்து மகசூல் எதுவும் கிடைக்காமல் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகளுக்கு அர சாங்கம் கடன், உதவி கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.





[library stamp]

* **திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடந்துக்கொண்டிருக்கிற விவாதத்தில் நானும் எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். நமது மாநில சர்க்காருக்கு பல்வேறு துறைகளிலிருந்து வரும் வருமானத்தில், நிலவரி வருமானம் தான் முதலாக இடம் பெற்றிருக்கிறது. அப்படியிருந்தும் யாரிடமிருந்து அந்த வருமானம் வருகிறதோ, அவர்களுக்கு சர்க்கார் முழு ஆதரவு தருகிறதா, உத்திரவாதம் தருகிறதா, சலுகை தருகிறதா என்று பார்த்தால், அதெல்லாம் எட்டு அளவில் இருக்கிறதே தவிர, அவர்கள் அதை உண்மையிலேயே அனுபவிக்கிறார்களா என்றால் இல்லை. பொதுவாக, நிலவரியை எடுத்துக்கொண்டால், அயன் தீர்வை, லாண்டு செஸ், அடிஷனல் ஸர்சார்ஜ், யூனியன் செஸ், நிலவரி உயர்வு நீர்வரி உயர்வு இப்படி வரிகளை விதித்துக்கொண்டு வருகிறோம். அதிக தண்ணீர் தீர்வை போன வருஷம் போட்டிருக்கிறோம். அதைப் போட்ட நேரத்தில் வசூல் செய்யாமல் அதை அப்படியே வைத்துக்கொண்டு இருந்துவிட்டு, இந்த வருஷம் வசூல் செய்கிறார்கள். ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் தீர்வையைக் கொடுத்துவிட்டார்கள். திடீரென்று பழைய பாக்கி இருக்கிறது, அதை அவசியம் செலுத்தவேண்டுமென்று ஒரு பெரிய பாராங்கல்லை தூக்கிப் போடுகிற மாதிரி ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். இதற்கு அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்று தெரியவில்லை. விவசாயிகள் ரொம்பவும் வேதனைப்படுகிறார்கள். இதை சர்க்கார் கவனித்து, இவர்களுடைய கஷ்டத்தைப் போக்க வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காந்தியடிகள் என்று எங்கள் தரப்பிலிருந்து நினைவு படுத்துகிறபொழுது, அமைச்சர்கள் அதைச் சற்று கவனிக்கிறார்கள். காந்தியார், காந்தியார் என்று சொல்லுகிறார்களே, காந்தியடிகளின் வழி யில் வந்தவர்களா என்று கூட நினைக்கிறார்கள். அதைப்பற்றி குறிப்பிட்டுக் கூட சொல்லுகிறார்கள், அந்த வழியில் வருவார்களா என்று கூட எதிர் பார்க்கிறார்கள். நாங்கள் காந்தியடிகளின் பெயரை ஞாபகப்படுத்துவதற்கு காரணம், அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக் கிறதா? அவர்களுடைய கொள்கை நல்லது தான், ஏற்றுக்கொள்கிறோம்— அவர்கள் கொண்டுவந்த திட்டங்களை சர்க்கார் நிறைவேற்றியிருக்கிறார்களா என்ற கருத்தை சர்க்காருக்கு ஞாபகப்படுத்துவதற்குத் தான். ஐந்து ஏக்கருக்குக் குறைந்தும் நிலம் வைத்திருக்கக்கூடாது. ஐம்பது ஏக்கருக்கு மேலும் நிலம் வைத்திருக்கக்கூடாது என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த சர்க்கார் அதைப் பின்பற்றினார்களா? ரூ. 2 முதல் 5 வரையில் வரி செலுத்தக்கூடிய ஏழை விவசாயிகள் இன்றைய தினம் என்ன பாடுபடுகிறார்கள்? அவர்களுக்காவது ஏதாவது பரிகாரம் அளித் தார்களா? போனதெல்லாம் போகட்டும். இந்த ஆண்டில் இருந்தாவது குறைந்தது ரூ. 10 அளவுக்கு குறைவாகச் சர்க்கார் தீர்வை கட்டுகிற விவசாயிகளுக்கு தீர்வையைத் தள்ளிவிட்டு இனிமேல் வசூல் செய்வதில்லை என்ற ஒரு உத்திரவாதத்தைக் கொடுப்பார்களா என்று கேட்கிறேன்.

பட்டாப் பிரிப்பதிலே இருக்கிற தகராறுகளைப் பற்றி சில அங்கத்தினர்கள் விவரமாகச் சொன்னார்கள். மூன்று நான்கு தலைமுறைகள் ஆனாலும் கூட முப்பாட்டன் பெயரில்தான் பட்டா இருக்குமே தவிர, நடைமுறையில் உள்ளவரின் பெயரில் இருக்காது. இதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகவேண்டுமென்று புரியவில்லை. இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனிப் பட்டா இருப்பதுதான் நல்லது. இன்றைய நிலையிலே தனிப்பட்டா இருந்தா தால்தான் சர்க்கார் கொடுக்கிற பல கடன் சலுகைகளைப் பெறமுடிகிறது. தனிப்பட்டா இல்லையென்றால் சர்க்காரிடமிருந்து கடன் சலுகைகளை பெற முடியாது. கூட்டுப்பட்டாவாக இருந்தால் இந்த கடன் சலுகை பக்கமே போகமுடியாது. ஆகவே, சர்க்கார் இதைப் பரிசீலனை செய்து கூட்டுப் பட்டாக்களையெல்லாம் தனிப்பட்டாக்களாக மாற்றிக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கூட்டுப்பட்டாவில் முதன்முதலாக யார் கிஸ்தி கட்டுகிறார்களோ, அவர்களிடமிருந்துதான் பட்டாவின் மொத்த

சர்க்கார் கவனத்தில் எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு எவ்வளவு நன்மை செய்ய வேண்டுமோ, அத்தனையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெள்ளையரை நம் நாட்டைவிட்டு விரட்டி விட்டோம். ஆனால் வெள்ளையர் காலத்தில் அவர்கள் வைத்திருந்த உத்தியோகஸ்தர் களை வைத்துக்கொண்டே, அந்த கிராம அதிகாரிகளை வைத்துக்கொண்டே இப்பொழுது நாம் சர்க்கார் நடத்துகிறோம். கிராம முன்சீப், கர்ணம், வெட்டியான் இவர்களை எடுத்துக்கொண்டால், அன்று என்ன சம்பளம் இருந்ததோ அது தான் இன்றும் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். விவசாயிகள் சர்க்காரிடமிருந்து கடன் வாங்குவதற்காக அவர்களை அணு கினால், தனிப்பட்டா இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் என்னுடைய "கிராண்டுபாதர்"-க்கு தகப்பனார் பேரில் பட்டா இருக்கிறது. இதுபற்றி கிராம அதிகாரிகளைக் கேட்டால், "இது தான் எங்களுக்கு வேலையா? சர்க்கார் பல திட்டங்களை விஸ் தரித்ததின் காரணமாக பல ஆபீஸர்கள் தினம் வருகிறார்கள். எங் களுக்கு அவர்களுடைய வருகையைப் பற்றி அறிவிக்கப்படுகிறது. நாங்கள் அவர்களைதான் கவனிக்க வேண்டியிருக்கிறது. இந்த வேலையெல்லாம் செய்வதற்கு நேரம் எங்கு இருக்கிறது?" என்று கேட்கிறார்கள். மேலும் "எங்களுடைய சம்பளம் ரூ. 11, 22 இந்த நிலையில் தான் இருக்கிறது, நாங்கள் என்ன செய்ய முடியும்?" என்று கேட்கிறார்கள். ஒருவர் இறந்து விட்டால் அதை எழுதிவைக்கப் போனால் அதற்குத் துட்டு. ஒருவர் பிறந்ததை எழுதி வைக்கப்போனால் அதற்குத் துட்டு. அதைப்பற்றி அவர் களைக் கேட்டால் "எங்கள் சம்பளம் குறைவாக இருக்கிறது" என்று சொல்லுகிறார்கள். நாம் சுதந்திரம் அடைந்த பிறகு நம் நாட்டை நல்ல முறையில் ஆளவேண்டுமென்றால், கிராம உத்திகோகஸ்தர்களுக்கு அதிக சம்பளம் கொடுத்து, அவர்களுடைய பரம்பரையை ஒழித்து, திறமையான வர்களையும், படித்தவர்களையும் வைத்து ஆட்சி புரிவோமானால் மிகவும் நலமாக இருக்கும்.

என்னுடைய தொகுதியில் களக்காடு என்று ஒரு பெரிய கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தில் உள்ளவர்கள் பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்றால், 10, 12 மைல்களுக்கு அப்பால் போகவேண்டியிருக் கிறது. சர்க்காரிடம் இதை பல தடவை எடுத்துச் சொல்லியும், புள்ளி விவரங்கள் எடுத்து பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் இந்த இடத்தில் ரிஜிஸ்டர் ஆபீஸ் வைக்கவில்லை. ஆகவே, வருகிற ஆண்டிலாவது அங்கு ஒரு ரிஜிஸ்டர் ஆபீஸ் வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணிமுத்தாறு எங்கள் பகுதியில் ஒரு பக்கம் ஓடுகிறது. திட்டவட்டமாக இரண்டாவது போகத்திற்கு தண்ணீர் விடமுடியாது என்று சொல்லி விட்டார்கள். அதே சமயத்தில் அந்த ஏரியாவில் ஒரு போகம் விளையக் கூடிய நிலத்திற்கு இரண்டு போகத் தீர்வை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். தாசில்தாரைக் கேட்டால் "எனக்குத் தெரியாது, கர்ணம் எழுதின எழுத்தை வைத்துக்கொண்டு தான் நான் செய்கிறேன்" என்று சொல்லு கிறார்கள். இந்தவிதமான சூழ்நிலை அங்கே இருக்கிறது. அதை கவ னித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ராதாபுரம் ஸப்-டாலுக்கில் எல்லா இடங்களிலும் செம்மையாக மழை பெய்தாலும், அங்கே தண்ணீர் போய்ச் சேரவில்லை. மானாவாரி குளங்க ளெல்லாம் இந்த ஆண்டு பெருகவில்லை. இதைப் பஞ்சப் பிரதேசம் என்று கருதி, பஞ்ச நிவாரண நிதியிலிருந்து அரசாங்கத்தின் மூலம் கிணறுகளை ஆழப்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நஷ்ட ஈடு கொடுக்கிறார்கள். எங்கள் பகுதியில் பனை மரமுள்ள விவசாயிகள் தான் அதிகம். பனைமரத்திலிருந்து மகசூல் எதுவும் கிடைக்காமல் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகளுக்கு அர சாங்கம் கடன், உதவி கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.





* **திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடந்துக்கொண்டிருக்கிற விவாதத்தில் நானும் எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். நமது மாநில சர்க்காருக்கு பல்வேறு துறைகளிலிருந்து வரும் வருமானத்தில், நில வருமானம் தான் முதலாக இடம் பெற்றிருக்கிறது. அப்படியிருந்தும் யாரிடமிருந்து அந்த வருமானம் வருகிறதோ, அவர்களுக்கு சர்க்கார் முழு ஆதரவு தருகிறதா, உத்திரவாதம் தருகிறதா, சலுகை தருகிறதா என்று பார்த்தால், அதெல்லாம் ஏட்டு அளவில் இருக்கிறதே தவிர, அவர்கள் அதை உண்மையிலேயே அனுபவிக்கிறார்களா என்றால் இல்லை. பொதுவாக, நிலவரியை எடுத்துக்கொண்டால், அயன் தீர்வை, லாண்டு செஸ், அடிஷனல் ஸர்சார்ஜ், யூனியன் செஸ், நிலவரி உயர்வு நீர்வரி உயர்வு இப்படி வரிகளை விதித்துக்கொண்டு வருகிறோம். அதிக தண்ணீர் தீர்வை போன வருஷம் போட்டிருக்கிறோம். அதைப் போட்ட நேரத்தில் வசூல் செய்யாமல் அதை அப்படியே வைத்துக்கொண்டு இருந்துவிட்டு, இந்த வருஷம் வசூல் செய்கிறார்கள். ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் தீர்வையைக் கொடுத்துவிட்டார்கள். திடிரென்று பழைய பாக்கி இருக்கிறது, அதை அவசியம் செலுத்தவேண்டுமென்று ஒரு பெரிய பாராங்கல்லை தூக்கிப் போடுகிற மாதிரி ஒரு நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். இதற்கு அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்று தெரியவில்லை. விவசாயிகள் ரொம்பவும் வேதனைப்படுகிறார்கள். இதை சர்க்கார் கவனித்து, இவர்களுடைய கஷ்டத்தைப் போக்க வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காந்தியடிகள் என்று எங்கள் தரப்பிலிருந்து நினைவு படுத்துகிறபொழுது, அமைச்சர்கள் அதைச் சற்று கவனிக்கிறார்கள். காந்தியார், காந்தியார் என்று சொல்லுகிறார்களே, காந்தியடிகளின் வழி யில் வந்தவர்களா என்று கூட நினைக்கிறார்கள். அதைப்பற்றி குறிப்பிட்டுக் கூட சொல்லுகிறார்கள், அந்த வழியில் வருவார்களா என்று கூட எதிர் பார்க்கிறார்கள். நாங்கள் காந்தியடிகளின் பெயரை ஞாபகப்படுத்துவதற்கு காரணம், அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக் கிறதா? அவர்களுடைய கொள்கை நல்லது தான், ஏற்றுக்கொள்கிறோம்— அவர்கள் கொண்டுவந்த திட்டங்களை சர்க்கார் நிறைவேற்றியிருக்கிறார்களா என்ற கருத்தை சர்க்காருக்கு ஞாபகப்படுத்துவதற்குத் தான். ஐந்து ஏக்கருக்குக் குறைந்தும் நிலம் வைத்திருக்கக்கூடாது. ஐம்பது ஏக்கருக்கு மேலும் நிலம் வைத்திருக்கக்கூடாது என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த சர்க்கார் அதைப் பின்பற்றினார்களா? ரூ. 2 முதல் 5 வரையில் வரி செலுத்தக்கூடிய ஏழை விவசாயிகள் இன்றைய தினம் என்ன பாடுபடுகிறார்கள்? அவர்களுக்காவது ஏதாவது பரிகாரம் அளித் தார்களா? போனதெல்லாம் போகட்டும். இந்த ஆண்டில் இருந்தாவது குறைந்தது ரூ. 10 அளவுக்கு குறைவாகச் சர்க்கார் தீர்வை கட்டுகிற விவசாயிகளுக்கு தீர்வையைத் தள்ளிவிட்டு இனிமேல் வசூல் செய்வதில்லை என்ற ஒரு உத்திரவாதத்தைக் கொடுப்பார்களா என்று கேட்கிறேன்.

பட்டாப் பிரிப்பதிலே இருக்கிற தகராறுகளைப் பற்றி சில அங்கத்தினர்கள் விவரமாகச் சொன்னார்கள். மூன்று நான்கு தலைமுறைகள் ஆனாலும் கூட, முப்பாட்டன் பெயரில்தான் பட்டா இருக்குமே தவிர, நடைமுறையில் உள்ளவரின் பெயரில் இருக்காது. இதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகவேண்டுமென்று புரியவில்லை. இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனிப் பட்டா இருப்பதுதான் நல்லது. இன்றைய நிலையிலே தனிப்பட்டா இருந்தா ல்தான் சர்க்கார் கொடுக்கிற பல கடன் சலுகைகளைப் பெறமுடிகிறது. தனிப்பட்டா இல்லையென்றால் சர்க்காரிடமிருந்து கடன் சலுகைகளை பெற முடியாது. கூட்டுப்பட்டாவாக இருந்தால் இந்த கடன் சலுகை பக்கமே போகமுடியாது. ஆகவே, சர்க்கார் இதைப் பரிசீலனை செய்து கூட்டுப் பட்டாக்களையெல்லாம் தனிப்பட்டாக்களாக மாற்றிக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கூட்டுப்பட்டாவில் முதன்முதலாக, யார் கிஸ்தி கட்டுகிறார்களோ, அவர்களிடமிருந்துதான் பட்டாவின் மொத்த

வரி தொகையையும் வசூலிக்கிருர்கள். இது வருந்தத்தக்கது. இதைப்
பரிசீலனை செய்து தனிப்பட்டாக்கள் கொடுப்பதற்கு வழிவகை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுப்பட்டாக்களாக இருப்பதை சப்டிவிஷன்களாக பிரிப்பதற்கும் ஏற்
பாடு இல்லாமலிருக்கிறது. செட்டில்மெண்ட் நடந்து 30, 40 வருஷங்
களுக்குமேல் ஆகிவிட்டது. ஒவ்வொரு 25 வருஷங்களுக்குப் பிறகும் சர்வே
நடத்த வேண்டுமென்று உத்திரவு இருந்தது. என்ன காரணத்திஞலோ
அதை இப்பொழுது நிறுத்திவிட்டார்கள். அதற்கு மாருக என்ன உதவி
செய்யப்போகிருர்கள் என்பதை அமைச்சரவர்கள் விளக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இப்படி சப்டிவிஷன்கள் பிரிக்காத காரணத்தால்,
சிவில் கோர்ட்டு, கிரிமினல் கோர்ட்டுகளிலே ஏராளமான கேஸ்கள் ஐந்து
அல்லது பத்து ஆண்டுகள் ஆகியும் பெண்டிங் ஆக இருக்கின்றன.
இந்த கேஸ்கள் வளருவதற்குக் காரணம் நிலத்தகராறு தான். அதஞல்
தான் ஏராளமான கிரிமினல் கேஸ்கள் கூட ஏற்படுகின்றன. சில சமயங்
களில் கொலை கேஸ்கள் கூட இதஞல் வருவதற்கு எதுவாக இருக்கின்றன.
ஒரு பட்டாக்காரருக்கும் இன்னொரு பட்டாக்காரருக்கும் எந்த விதமான
இடைஞ்சலும் இல்லாமல் இருக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்கள் முழுநேர உத்தியோகஸ்தர்களா ? அல்லது
பகுதிநேர உத்தியோகஸ்தர்களா என்பது தெரியவில்லை. நாங்கள் சட்ட
சபைக்கு போய் எங்கள் தொகுதிக்குத் திரும்பியதும் அவர்கள் "என்ன
சார், சட்டசபைக்கு போனீர்களே, எங்களை நிரந்தரமாக வைத்திருக்கிருர்
களா அல்லது டெம்பொரரியாக வைத்திருக்கிருர்களா, அமைச்சர் அவர்கள்
என்ன சொன்ஞர்கள்" என்று கேட்கிருர்கள். போன வருஷம் கூட
இவ்வாறு கேட்டார்கள். அமைச்சர் அவர்களை நாங்கள் பல கோணங்
களிலிருந்து கேட்டுப் பார்த்தோம். பரிசீலனையில் இருக்கிறது என்று
சொல்லியிருக்கிருர்கள், 1964-ல் முடிவாகிவிடும் என்று நான் சொல்லி
யிருக்கிறேன். இந்த சட்டசபை கூட்டம் முடிவதற்கு முன்பாவது அவர்
கள் சந்தோஷப்படக்கூடிய வகையில் கனம் அமைச்சர் பதில் சொல்லி
விட்டால் எங்களுக்குக் கொடுக்கும் தொந்திரவு குறைந்துவிடும் என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

நான் ஒரு விவசாயி. ஆகவே, கொஞ்சம் அதிக நேரம் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலம் இல்லாதவர்களுக்கு புறம்
போக்கு நிலங்களை பிரித்துக் கொடுப்பது மிகவும் முக்கியமானது. அதிலும்
எங்கள் அமைச்சர் ஹரிஜன இலாகாவுக்கு தலைவராக இருப்பதிஞல்,
ஹரிஜனங்கள் என்று சொல்லும்பொழுதே என்னுடைய முகத்தைப்
பார்க்கிருர், நான் என்ன சொல்லப்போகிறேஞே என்று நினைத்து. (சிரிப்பு).

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் "எங்கள் அமைச்சர்"
என்று சொன்ஞர்கள். எல்லா மக்களுக்கும் தான் அமைச்சர் என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** "எங்கள் அமைச்சர்" என்று சொல்லக்
கூடிய உரிமை எனக்கும் இருக்கிறது. அதஞல் தான் சொல்கிறேன். (சிரிப்பு)
இந்த நிலையிலே புறம்போக்கு நிலங்கள் எந்த அளவுக்கு ஹரிஜன
மக்களுக்கு பயன்படுகிறது என்று பார்க்கும்பொழுது, செல்வாக்குள்ள
இடங்களிலே ஒரு சில ஹரிஜனங்கள் அதஞல் பலன் அடைகிருர்கள்.
செல்வாக்கு இல்லாத இடங்களிலே பல ஹரிஜன மக்கள் பாதிக்கப்பட்டிருக்
கிருர்கள். இந்தக் கருத்தைத்தான் டாக்டர் அம்பேத்கார் அவர்களும்
சொல்லியிருக்கிருர்கள். பஞ்சாயத்து நிர்வாகத்திலே மெஜாரிட்டிபார்டிகள்
தான் நன்மையை அனுபவிக்கமுடியும், மைஞரிட்டி பார்டிகள் நன்மையை
அடையமுடியாது என்று சொல்லியிருக்கிருர். புறம்போக்கு நிலங்களை,
அதாவது ஏழை விவசாயிகள், ஹரிஜனங்கள் பயிரிட்டு வந்த நிலங்களை
பஞ்சாயத்து பிரஸிடெண்ட்கள் ஆக்கிரமிப்பை கையாளுவதாக தெரிகிறது.
அந்த அளவுக்கு ஆக்கிரமிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு இரு அமைச்சர்
அவர்களும் இதனை பரிசீலனை செய்து நல்ல முடிவு எடுத்து, உடனடியாக
பஞ்சாயத்து தீர்மானம் இல்லாமலே பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று





கேட்டுக் கொள்கிறேன். அதுகூட கண்டிஷன் பட்டாவாக இருக்கவேண்டும்.
மறுபடியும் விற்கமுடியாதபடி இருக்கவேண்டும். கண்டிஷன் பட்டா
என்ருல் கிராமப் பகுதியிலுள்ள யாருக்கும் தெரியாமல் இருக்கிறது.
நிலமில்லாத விவசாயிகள் மனுச் செய்தால் கண்டிஷன் பட்டா கொடுக்கப்
படும் என்று தண்டோரா மூலம் விளம்பரம் செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தீ விபத்துக்கள் ஏற்பட்டால் ரூ. 30-ம், துணிக்காக
ரூ. 10-ம் கொடுக்கிருர்கள். எனது பகுதியிலே வருடாவருடம் மூன்று,
நான்கு தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. சென்ற ஆண்டு கிளியனூரில் 75
வீடுகள் எரிந்து சாம்பலாயின. இந்த வருடம் தென்கோடிப் பாக்கத்தில்
தீ விபத்து ஏற்பட்டது. 85 காலனி வீடுகள் எரிந்து விட்டது. இந்த நிலை
யில் பாதிக்கப்பட்ட ஹரிஜனங்களுக்கு ரூ. 40 கொடுத்திருக்கிருர்கள்.
முன்பெல்லாம் வீடுகள் தீப்பற்றிக்கொண்டால் நபர் ஒன்றுக்கு 8 அல்லது
10 மரங்கள் வீதம் புறம்போக்கு நிலங்களிலிருந்து வெட்டிக்கொள்ளலாம்
என்று கலெக்டர் உத்திரவு போடுவார். இப்பொழுது அதை ரத்து செய்து
விட்டு பணத்தைக் கொடுக்கிருர்கள். இந்த அவல நிலையைப்போக்க பணத்
தைக் கொடுக்காமல் மரங்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. ஆர். ரங்கசாமி :** கனம் தலைவர் அவர்களே, முதலிருந்து
என் பெயரைச் சொல்லி ஜாதியைச் சொல்வதிலே தவறுகள் ஏற்பட்டுக்
கொண்டு வருகின்றன. கனம் சபாநாயகர் அவர்கள் கூட ஒரு சமயம்
என்னை "நாயுடு" என்று அழைத்தார்கள். "தேவர்" என்று பிறகு
சொன்ஞர்கள். என்னைக் கூப்பிடும்பொழுது "ரங்கசாமி" என்று மட்டும்
சொன்ஞல் போதும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று சபைமுன் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை
ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது சர்க்
காரைப் பொறுத்தவரையில் இந்த ரெவின்யூ இலாகாதான் ஆரம்ப
காலத்திலிருந்தே சர்க்காருக்கு ஒரு பெரிய அஸ்திவாரம்போல்
இருந்து கொண்டிருக்கிறது. இந்த இலாகாவை வைத்துத்தான் சர்க்
காரே அந்த காலத்திலிருந்து ஆட்சி நடத்தி வந்தார்கள். ஆஞல் இப்
பொழுது கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதைமாதிரி, புதைப்
பொருள் ஆராய்ச்சியாளரிடம் இந்த இலாகாவை கொடுக்கக்கூடிய நிலை
நிலைமைக்கு மாறியிருக்கிறது. எப்படி என்ருல் என்ன அதிகாரங்கள்
கொடுத்து இந்த இலாகா ஆரம்பிக்கப்பட்டது எவ்வளவு அதிகாரங்களை
அவர்கள் கையிலிருந்து, மக்களிடத்தில் அவர்கள் செய்யவேண்டிய முக்கிய
மான அலுவல்கள் என்ன என்பதைப் பார்க்கும்போது, இன்று இந்த
இலாகாவிடத்தில் என்ன இருக்கிறது என்று கூட்டல் கழித்தல் போட்டுப்
பார்த்தால், அநேகமாக மைனஸில் தான் இருக்கிறது என்று சொல்லக்
கூடிய நிலைமை இருந்து வருகிறது. கிராமத் தொடர்பு கொள்வதற்காக
சர்க்காரிலே முக்கியமாக இந்த இலாகாவினர் வேலை செய்து வந்தார்கள் 11-00 a.m.
இப்பொழுது அதை மாற்றி ஒரு மாற்று இலாகாவானது, யூனியன்,
வந்திருக்கிறது. யூனியனைப் பொறுத்தமட்டில் கிராமங்களில் விவசாயி
களோடு தொடர்பு வைத்திருக்கிருர்கள். ரெவின்யூ இலாகா பொறுத்த
வரை கர்ணம், வி.எம். இவர்கள் நில வரி வருமான வரி, லைசென்ஸ்
களுக்கு சிபாரிசு செய்வது என்ற மூன்று வேலைகள்தான் மிச்சம்
இருக்கிறது. அதிலேகூட இப்பொழுது சில காரியங்கள் நடப்பதைப்பார்த்
தால் மாறுபட்டு இருக்கிறது. முன்பு கடன் கொடுப்பது என்ருல் அது
தாசில்தார் மூலமாக செய்யப்படும். இப்பொழுது ஃபுல் பைஞன்ஸ் ஸ்கீம்
என்று போட்டு யூனியனிலே செய்கிருர்கள். அதுவும்கூட இப்பொழுது கூட்டு
றவு இலாகாவுக்கு கொடுத்து விட்டார்கள். ஆஞல் அதை திருப்பி வசூல்
செய்யக் கூடியது மட்டும் தாலுகா ஆபீஸில் வைத்திருக்கிருர்கள் கர்ணம்,
வில்லேஜ் முன்ஸிப் தான் வசூலிக்கிருர்கள். ஏதேதோ கடன்களை, யார்
யாரோ கொடுக்கிருர்கள். எல்லாவற்றையும் வசூல் செய்ய தாலுகா ஆபீசில்
கொண்டு போடுகிருர்கள். யூனியனிலே போடும்வரிகள், யார் யாரோ கொடுக்
கும் கடன்கள், மத்திய சர்க்காரிலே போடக் கூடிய வரி பாக்கிகள்
இவைகளை எல்லாம் ஏதேதோ ரூபத்தில் மாறி மாறி கர்ணம், வி.எம்.

[திரு. ஆர். ரங்கசாமி] [19th March 1964

இவர்கள் கையில் வருகிறது. திருப்பி திருப்பி அவர்கள் தான் வசூல் செய்கிருர்கள். ஆனால் மக்கள் என்ன நினைக்கிருர்கள் என்ருல் எல்லாம் கர்ணம் தான் செய்கிருர், இவர் தான் நாட்டாமை செய்கிருர் என்று அவரிடம் துவேஷம் ஏற்படுவதற்கு வழியாக இருக்கிறது. எந்த வரியை எப்படி அவர் வசூலிக்கிருர் என்று தெரியவில்லை. நில வரியை எடுத்துக் கொண்டால் அதிலே என்னென்ன வரிகள் சேர்த்திருக்கிருர்கள் என்று தெரியவில்லை. எந்த எந்த முறையில் வசூலிக்கிருர்கள் என்று எந்த விவசாயியும் அறிய முடியாது. ஒரிஜனலாகப் போட்ட வரி ஒன்று. யூனிய னிலே போட்டிருக்கும் சர் சார்ஜ் வேறு. நம் சர்க்கார் போட்டிருக்கிற நீர் தீர்வை, சர்சார்ஜ், செஸ். இன்னும் என்ன தான் என்று கண்டுபிடிக்க முடியாத நிலை விவசாயிக்கு இருக்கிறது. இதையெல்லாம் மாற்றி இன்ன தான் வரி கொடுக்க வேண்டும், இதற்காகத்தான் வாங்குகிருர்கள் என்று ஒரு வழியாக வரையறுத்துக் கொடுத்தால் வசூல் சுலபமாக இருக்கும் விவசாயிகள் கொடுப்பதும் சுலபமாக இருக்கும்.

மலைத் தோட்டங்களைப் பற்றி சொன்னுல் பெரிய விவசாயியாக இருப்ப தால் அப்படிப்பட்டவர் சென்ட்ரல் எக்ஸைஸ் மூலம் கணக்கு வைத்துக் கொண்டு, வரியைக் கட்டுவது சௌகரியமாக இருக்கிறது. ஆனால் கிராமத் தில் இருக்கக் கூடிய விவசாயிகளை பொறுத்தவரையில் கம்பௌண்டடபின் தீர்வை வைத்திருக்கிருர்கள். ஏதோ ஒரு ஃபாரம் அனுப்புகிருர்கள் அதில் கையெழுத்துப் போட்டு, இத்தனை ஏக்கர் இருக்கிறது என்று எழுதி அனுப்பச் சொல்லுகிருர்கள். பிறகு ஏப்ரல் மாதம் ஆன பிறகு ரெவின்யூ ஆபீசில் போய் அந்த ஃபாரம் இருக்கிறதா என்ருல் அந்த ஃபாரத்தையே காணேம். வருமானக் கணக்கைக் கொடு என்று கேட்கிருர்கள். வரு மான வரி கட்டு என்று நோட்டீஸ் கொடுக்கிருர்கள். தனிக் கணக்குகள் கொடுத்தாலும் கூட அதையெல்லாம் விட்டு விட்டு ஓட்டு மொத்தமாக வரி போட்டு நோட்டீஸ் கொடுக்கிருர்கள். எத்தனை தடவை போய் அவர் களை கேட்டாலும் கூட பணத்தைக் கட்டிவிட்டு அப்பீல் செய்து கொள்ளுங்கள் என்கிருர்கள். இதையெல்லாம் மாற்றி கம்பௌண்டடபின் என்று கொடுத்து விட்டால் சரியான காலத்தில் கட்டவில்லை என்ருல் பெனல்டியாக ஏதாவது தொகையை போட்டுவிட்டால் விவசாயிகளுக்கு சௌகரியமாக இருக்கும். இன்றைக்கு 100–க்கு 90 அல்லது 80 விவசாயிகள் தங்க ளுடைய விவசாய வருமானத்தைப்பற்றிய கணக்கு வைத்துக்கொள்ளும் நிலையில் இல்லை. அப்படி வைத்துக் கொள்ள முடியும் என்று இருந் தாலும் கூட அவைகளை எல்லாம் அதிகாரிகள் ஒத்துக் கொள்ளக் கூடிய, சம்மதம் தெரிவிக்கக்கூடிய நிலைமை இல்லை. இது விவசாயிகளுக்கு கஷ்ட மாக இருக்கிறது. தொகையைக் கட்ட விவசாயி தவறினல் ஏதாவது பெனல்டி போடப்படும், என்று மட்டும் இருக்கக்கூடிய அளவில் கட்டாய மான உத்தரவு போட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஜமீன் ஏரியாக்களைப் பொருத்தமட்டில் இன்னும் கஷ்ட மான நிலை இருக்கிறது. 20 ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும் செட்டில் மெண்ட் முடியவில்லை. அந்த நிலையில் அங்கே மானேஜர் ஆபீஸ் என்று வைத்திருக்கிருர்கள். அங்கு சென்று விவசாயிகள் ஆகிய நாங்கள் எதுவும் தெரிந்துகொள்ள முடியவில்லை. பலப்பல கஷ்டங்கள் இருக்கின்றன. செட்டில்மெண்ட் ஆகவில்லை, சர்வே சரியில்லை, பட்டா கொடுக்கப்படவில்லை, குளங்கள், வாய்க்கால்கள் ரிப்பேர் செய்யப் படவில்லை, இப்படி என்னென்னமோ காரியங்கள் கவனிக்கப்படாமல் இருக் கின்றன. சப்கலெக்டரிடம், ஆர்.டி.ஓ. இடம் சொன்னுல் இவை யூனியன் சம்பந்தப்பட்ட வேலைகள், என்கிருர்கள். இவர்களுக்கு மற்ற வேலைகள் இருப்பதால் இந்த ஜமீனில் கவனம் செலுத்த முடியாத நிலை இருக் கிறது. முதலாவதாக இந்த ஜமீன் மானேஜர் ஆபீஸ்களை ஒழித்துவிட வேண்டும். அதையெல்லாம் ஒரிஜினல் இலாகாவோடு சேர்த்துவிட வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னென்று. மலை விவசாயிகளைப் பொருத்தமட்டில் சிலவிடங்களில் 40, 50 வருஷங்களாக விவசாயம் செய்து வருகிருர்கள். அந்த இடங் களில் எல்லாம் ஏதோ ரெகார்டை வைத்துக்கொண்டு அது புறம்போக்கு



19th March 1964] [திரு. ஆர். ரங்கசாமி]

என்று சொல்லி உடனடியாக காலி செய்ய உத்தரவு போட்டிருக்கிருர்கள். அங்கே விவசாயிகள் காப்பி, வாழை முதலியவைகள் ஆண்டு ஆண்டு களாக பயிரிட்டு அனுபவித்து வருகிருர்கள். அவர்களை இப்பொழுது உட னடியாக காலி செய்யவேண்டும் என்று சொல்லுகிருர்கள். அதற்கு அவர்கள் ரெவின்யூ போர்டுக்கு அப்பீல் செய்தார்கள். அங்கேயும் கவ னிக்கப்படாததால் பன்றிமலை, தாண்டிக்குடி, சிறுமலை முதலிய இடங் களில் உள்ள விவசாயிகள் ,ரெவின்யூ போர்ட் அப்பீலுக்கு மேல் ஹை கோர்ட்டுக்கு சென்று ரிட்டுகள் போட்டு, அவற்றில் அனுகூலம் ஆகியும் ஆகாமலும் இருக்கிறது. இத்தனைக் காலத்திற்கு மகசூல் செய்து கொண் டிருந்தால், பட்டா செய்து கொடுக்கலாம் என்று ஒரு உத்தரவைப் போட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, நிலவரித் துறை மானியத்தை ஒட்டி நடக்கின்ற இந்த விவாதத்தில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துக் கூற விரும்புகிறேன். விவாதத்தை தொடங்கி வைத்த உறுப்பினர் கனம் ராமசாமி அவர்கள் இந்த நிலங்களுக்கு மறுபடியும் தரப் பாகுபாடு செய்யவேண்டிய அவசி யத்தை எடுத்துச் சொன்னுர்கள். நிலங்களுக்கு வரிபோடும் உரிமை நிலங்களுக்கு நீர் அளிக்கின்ற உரிமை இவற்றை வைத்து நிலங்களுக்கு தரம் வகுத்திருக்கிருர்கள். அப்படி தரம் வகுக்கும்போது ஆற்று ஓரங் களில், கால்வாய் ஓரங்களில் உள்ள நிலங்களுக்கும், கடக்கால்வாய்ப் பகுதி யில் உள்ள நிலங்களுக்கும் அதிகத் தீர்வை விதித்திருக்கிறேம். அப்படிப் பாகுபாடு செய்திருக்கிருர்கள். வெள்ளங்களால், மணல் மேடிட்டும் ஆங் காங்கே இருக்கின்ற கிணறுகளுக்கு பம்பு செட்டுகள் பொறுத்துவதன் காரணமாக அடிநீர் வற்றிப்போய் கசங்கள் தூர்ந்தும் இருப் பதால் பல நிலங்கள் பாழ்பட்டுள்ளன. அப்படிப்பட்ட நிலங்கள்கூட அதிக தீர்வை செலுத்தும் நிலையில் இருக்கின்றன. இதை அரசாங்கம் உணர வேண்டும்.

அடுத்து மர மகசூலை அனுபவிக்கும் சொந்தக்காரர்களுக்கு, 2-C பில் முத்தா பட்டாக்கள் உள்ள நிலங்கள் இருக்கின்றன. சில இடங்களில் 100 ஏக்கரா 200 ஏக்கரா பரப்பளவில் அவை இருக்கின்றன. அந்த நில உடமைக்காரர்களுக்கு மரங்களில் இருந்து மகசூலை பெற்றுக்கொள்ளும் உரிமை மட்டுமே கொடுத்திருக்கிருர்கள். இப்பொழுது அப்படி பல இடங் களிலே மரங்கள் கிடையாது. அப்படியிருந்தும்கூட அந்த நிலங்கள் அவர்களுக்கே உரிமையாக இருக்கிறது. குறைந்த தீர்வையை மட்டும் செலுத்திக்கொண்டு இருக்கிருர்கள். ஆனல் மற்றவர்களுக்கு அதை அதிக விலைக்கு விற்கும் நிலையில் இருக்கிறது. இந்த நிலைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து அந்த நிலங்களை மறுபடியும் பாகுபாடு செய்யும் முறையை மீண்டும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும், என்று கூற விரும்பு கிறேன்.

அமைச்சர் அவர்கள், பொதுப்பணித் துறை அமைச்சராகவும் இருப்பதால் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஏரியோ, கால்வாயோ, தூர்ந்து போய் இருக்கிறது என்ருல், அதை மராமத்து செய்ய வேண்டும் என்ருல், அவற்றின்கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களில், ஒரு சில "கேப்" இருக்கவேண்டும் ; அதாவது ஒரு சில நிலங்கள் சாகுபடிக்கு வராமல் இருக்கவேண்டும் ; அல்லது நிலங்களுக்கு வரி வஜா செய்ய வேண்டிய நிலை இருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்ற ஒரு முறையை அரசாங்கம் வகுத்திருக்கிறது. நிலம் கிடைத்த எந்த விவசாயியும் தன்னுடைய நிலத்தை எக்காரணத்தைக் கொண்டும் தரிசாகப் போட்டுவிட மாட்டான். பயிரைசாவியாகப் போக விடமாட்டான் ; அதை அவன் பொறுக்க மாட்டான். எப்படியாவது, திருட்டுத்தனமாக வாவது, தண்ணீரைக் கொண்டு வந்து, பயிரைக் காப்பாற்றி, அறுவடை பண்ணத்தான் முயற்சிப்பான். அப்படிப்பட்ட இடங்களிலே "கேப்" இல்லை, என்று சொல்லி அந்த ஏரிகளுக்கு மராமத்துத் தேவையில்லை என்று சொல்லக் கூடாது. அவை பல ஆண்டு காலமாக மராமத்து இல்லை. செய்யப்படாமல் இருக்கின்றன. ... தட்டிக் கழிக்கக் கூடாது.

செய்யப்படாமல் இருக்கின்றன. அதில் சர்க்காருக்குப் பொறுப்பு இருக்கிறது. அந்த இடங்களில் மராமத்துச் செய்ய சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னொரு நிலைமையை நான் சொல்ல விரும்புகிறேன். சில இடங்களில் ஐந்து ஆண்டு, பத்து ஆண்டுக் காலங்களாகக் கூட சில நிலங்கள் தரிசாக இருந்து வருகின்றன. ஐந்தாண்டு காலத்திற்கு நன்றாக விளைகின்ற நிலத்தைத் தரிசாகப் போட்டு வைத்தால், அந்த நிலங்களைச் சர்க்கார் தங்களுடைய உடைமையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற உத்தரவு ஒன்று இருப்பதாக அறிகிறேன். ஆனால், அந்த உத்தரவு நடைமுறைக்கு வருகிறதா, அப்படிப்பட்ட முறையில் எத்தனை ஏக்கர் நிலங்களை இந்தச் சர்க்கார் ஏற்று நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு காலத்தில் வசதி உள்ளவர்கள் பெரிய பரப்பளவு நிலங்களைத் தங்களுக்கு உரிமையாக்கிக் கொண்டு நிலங்களைப் பயிரிடாமல் இருந்து வருகிறார்கள். இப்பொழுது விலை ஏறியிருக்கும் காரணத்தால் விற்கும் நிலைமைக்கு அவர்கள் வருகிறார்களே தவிர, பயிரிடுகின்ற நிலைமை இல்லை. ஆகவே, இந்தத் துறையில் அரசாட்சி தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரு ஏரியின் கீழே, கால்வாயின் கீழே ஒரு குறிப்பிட்ட ஆயக்கட்டு நிலங்கள் இருந்து வந்திருக்கின்றன. அதை அடுத்திருக்கும் சில நிலங்களை உழவர்கள் தரிசு நிலையிலிருந்து அதைப் பயன்படுத்தி உழுகின்ற நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தண்ணீரை எப்படியாவது கொண்டு வந்து அந்த நிலங்களில் பயிர் ஏற்றிவிடுகிறார்கள். அப்படிப் பயிர் ஏறும் நிலங்களுக்குச் சர்க்கார் தண்டத் தீர்வை விதித்து வருகிறது. இப்படித் தொடர்ந்து தண்டத் தீர்வை விதிக்கும்போது அதிகாரிகளுடைய விருப்பு வெறுப்புக்கேற்ப தீர்வை குறைவும் மிகுதியும் ஏற்படுகிறது. ஒரு ஐந்தாண்டுக் காலத்திற்குத் தொடர்ந்து அந்த நிலங்கள் அந்த நிலைமையில் இருந்தால், அவற்றை அந்த ஏரியின் கீழே, கால்வாயின் கீழே உரிய ஆயக்கட்டு நிலங்களாக மாற்றிவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிலங்களைப் பட்டா செய்யும்போது, பஞ்சாயத்துக்களுக்கும் ஓரளவு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து ஒப்புதல் அளித்தால்தான் பட்டா செய்து கொடுக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. அதைப்பற்றிப் பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள் அவர்களுடைய விருப்பு வெறுப்புக்கு இவை ஆளாக்கப்படும் காரணத்தால் நல்ல பயன் தரக்கூடிய நிலையில் விவசாயம் செய்வதற்குத் தகுதியான நிலங்களைப் பழத் தோட்டத்திற்கு வேண்டும் என்று பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டு விடுகிறார்கள். அதேபோல், ஏழை ஹரிஜனங்கள், பயிர் செய்து வருகின்ற நிலங்களைக் காடு வைக்க வேண்டும் என்று தீர்மானம் போடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை நாட்டிலே பரவலாக இருந்து வருகிறது. இது நாங்கள், எதிர்த் தரப்பிலிருந்து எடுத்துச் சொல்கிற குற்றச்சாட்டு மட்டுமல்ல. ஆளும் கட்சியில் இருந்தும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுகள் நிகழாமல் இருக்க, பஞ்சாயத்துக்குக் கொடுத்திருக்கும் இத்தகைய உரிமைகளுக்கு ஓரளவு வரம்பு கட்ட வேண்டும். அதை எந்த வகையில் செய்ய வேண்டும் என்பதை அரசாங்கம் உணர்ந்து செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பொதுவாக, ஒரு ஊரில் செல்வாக்கு உடையவர் யாராவது இருப்பாரானால் அவர் அந்த நிலங்களைத் தன்னுடைய உடைமையைப்போல் கருதிக் கொண்டு, "செண்ட் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தால் நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கிறேன்" என்று சொல்லக்கூடிய நிலைமைகள்கூட நாட்டில் நிகழ்ந்திருக்கின்றன. பணம் சர்க்காருக்கும் சேரவில்லை. உழவனுக்கும் சேரவில்லை. ஆனால், இடையில் உள்ள ஒருவன், நிலத்திற்கு எந்த விதமான உரிமை இல்லாதவன், ஊரில் செல்வாக்கு இருக்கிறது



என்ற ஒரே காரணத்திற்காக செண்ட் ஒன்று இரண்டு ரூபாய் வீதம், ஏக்கருக்கு 200 ரூபாய் வாங்கிக்கொள்ளும் நிலைமை இருக்கிறது. இதைச் சர்க்கார் மனத்தில் வைத்து, ஆவன செய்ய வேண்டும்.

பஞ்ச நிவாரணத்தைப் பற்றிச் சொன்னார்கள். தீ விபத்து ஏற்பட்டால் குடிசை அமைத்துக் கொள்வதற்காக 30 ரூபாய், ஆடை வாங்கிக் கொள்வதற்காக பத்து ரூபாய் நிவாரணமாக அளிக்கப்படும் என்று கூறப்படுகிறது. பத்து ரூபாய் முறை இப்பொழுதுதான் வந்திருக்கிறது. அது எதற்காக? சேலையோ ஆடையோ கொடுக்க வேண்டும் என்பதுதான் முன்பிருந்த முறை. அந்தப் பணத்திற்குள் ஆடை வாங்க முடியாது. அதனால் அந்த முறையை மாற்றிக் கொண்டது. பத்து ரூபாயைக் கொடுத்துவிட்டு, சேலையோ ஆடையோ வாங்கிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்தப் பத்து ரூபாயும் முப்பது ரூபாயும் கொடுத்து விட்டால், பஞ்ச நிவாரணமாகுமா என்பதைப் பார்க்க வேண்டும். எனக்குமுன் பேசிய திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கூறியபடி, பழைய காலங்களில் மரங்கள் வெட்டிக்கொள்ளவும், ஓலைகளை வெட்டிக்கொள்ளவும் அனுமதி அளித்திருந்தார்கள். அந்தப் பழைய முறையையும் மீண்டும் செய்து தர, வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

நான் அறிந்தமட்டில், இப்படிப்பட்ட வீடுகள் ஊர் நத்தங்களிலிருந்து தீ விபத்துக்குள்ளானால்தான் நிவாரணத் தொகை அளிக்கப்படும். சர்க்கார்ப் புறம்போக்கு நிலங்களில் கட்டிக் கொண்டிருக்கும் வீடுகளுக்கு இல்லை என்ற நிலைமை இருப்பதாக அறிகிறேன். அவன் மனை வாங்கிக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதால்தான் அவன் சர்க்கார்ப் புறம்போக்கு நிலத்திலே வீடு கட்டிக்கொண்டிருக்கிறான். புறம்போக்கில் இருக்கிறவர்களுக்கு நிவாரணத் தொகை கொடுக்க முடியாத நிலையை உருவாக்குவோமானால், அவனை மேலும் வாட்டுவதாகத்தான் இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட வேறுபாடு காட்டாமல், எங்கே வீடு கட்டிக்கொண்டிருந்தாலும், தீ விபத்தினால் பாதிக்கப்படும் வீடுகளுக்காகக் கொடுக்கும். அந்த உதவிகளை புறம்போக்கு நிலத்தில் இருப்பவர்களுக்கும் கொடுத்து அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய கருத்துரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

• **திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** தலைவர் அவர்களே, இன்று ரெவினியூ அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் ரெவினியூ இலாகா மானியக் கோரிக்கையை வரவேற்று நான் என்னுடைய கருத்துரைகளைக் கூற முன்வருகின்றேன்.

சாதாரணமாக இந்த நாட்டிலே அரசாட்சி என்ற ஒரு நிலை என்று ஏற்பட்டதோ அன்றிலிருந்து உழவர் பெருங்குடி மக்களால் நிலத் தீர்வை என்று சொல்லக்கூடிய ஒன்று ஆட்சிக்குச் செலுத்தப்பட்டுக்கொண்டு வருகிறது என்பதை நாம் வரலாறுகளினால் அறிகின்றோம். "ஆறில் ஒன்று கொற்றவர் கடமை கொள்ள" என்று சேக்கிழார் அழுத்தந் திருத்தமாக கூறியிருக்கிறார். அதாவது, உழவர்கள் தாங்கள் விளைவிக்கின்ற பண்டங்களிலே ஆறிலொரு கூற்றை களத்து மேட்டிலேயே ஆட்சிக்குக் கொடுத்து வந்திருக்கிறார்கள். இது பரம்பரையான வழக்கம் என்ற ஒரு நிலையை அருமையாகக் கூறியிருக்கிறார். அதாவது நாணயம், புழக்கத்தில் வராதிருந்த பண்டைக் காலத்திலே, பண்ட மாற்று முறை என்று ஒரு முறை இருந்து வந்தது. அந்த ஒரு முறையின்கீழே, அவர்கள் விளைவித்த பண்டங்களை, ஆறு கூறாகப் பிரித்து, ஒரு கூறை ஆட்சிக்குக் கொடுப்பதும் மிகுதியுள்ள பகுதியை வீட்டுக்குக் கொண்டு வந்து,

"தென் புலத்தார் தெய்வம் விந்துஒக்கல் தான்
என்று ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை"

என்ற வள்ளுவர் மொழிக்கிணங்க, தன்னுடைய குலத்தில் வந்த முன்னோர்களுக்கு ஆற்ற வேண்டிய கடன், தெய்வத்திற்கு ஆற்ற வேண்டிய கடன், சுற்றத்தாருக்கு ஆற்ற வேண்டிய கடன், விருந்தோம்பல் என்கிற தலைப்பின் கீழ் ஆற்ற வேண்டிய கடன் அதற்குமேல் தனக்காக

ஆற்றிக்கொள்ள வேண்டிய கடன், ஆகிய ஐந்து வழிகளிலேயும் நிலைநின்று ஈடுபடுவதுதான் நல்ல பழக்கம், நல்ல கொள்கை என்பதை நாம் கண்டிருக்கிறோம். இப்படியெல்லாம் இருக்கின்றபோது, விவசாய நிலங்களுக்கு வரியே தேவையில்லை என்ற கோட்பாட்டைக்கூட ஒரு அரசியல் கட்சியினர் சொல்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அரசியல் ஸ்டண்ட் என்று சொல்லுவார்கள். தமிழில் அரசியல் தந்திரம் என்று சொல்லலாம் என்று கருதுகிறேன். அந்த ஒரு முறையிலே பிரசாரம் நடைபெறுகிறது. அந்தப் பிரசாரம் கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற உழவர் பெருங்குடி மக்களிடத்திலே எடுபடவில்லை. காரணம் என்னவென்றால், அவர்களுக்கு பரம்பரைப் பாத்தியமான வழக்கம் வரி கொடுக்கிறது என்பது. அந்த ஒரு வகையிலே அவர்கள் பிரசாரம் ஒன்றும் எடுபடவில்லை. அந்த ஒரு நிலைமையிலே இருக்கும் தமிழகத்தில் நில வரி என்ற ஒன்று நிச்சயமாக வேண்டற்பாலது என்பது அனைவரும் அறிவோம். உழவர் பெருங்குடி மக்களுக்கு அது உரிமைப் பிரச்னை என்றுகூட நான் நினைக்கிறேன். சாதாரணமாக எங்கள் பக்கத்திலே எல்லாம் குருக்களுக்கு வருடம் ஒன்றுக்கு காணிக்கை என்ற பெயரில் ஒவ்வொரு வீட்டுக்கும் கொடுப்பது என்ற வழக்கம் இன்று கூட இருக்கிறது. குருக்களுக்குக் காணிக்கை கொடுத்து விட்டால் தனி உரிமை வந்ததுபோல் ஒரு உளப்பாங்கு தமிழகத்தில் இருக்கிறது. அதைப்போல, நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு இவ்வளவு தீர்வை என்று அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டால், அந்த அரசாங்கத்தினிடத்திலே அந்த உழவர் பெருங்குடி மகனுக்கு ஒரு உரிமை ஏற்படுகிறது என்ற நிலை இருக்கிறது. ஆகையால், உழவர் பெருங்குடி மக்கள் சார்பாக சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த உரிமையை நாங்கள் இழக்க என்றைக்கும் தயாராக இல்லை. அந்த உரிமையை இழப்பதனால் மானம் இழந்ததுபோல் ஆகும் என்று நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சாதாரணமாக கிராமத்தில் உள்ள மக்களுக்கு அரசாங்கம் இயங்குகின்ற நிலை எவ்வாறு புலப்படுகிறது என்றால், அந்தக் கிராமத்துக் கர்ணம், மணியக்காரர், மேலே தாலுக்காக் காரியாலயங்கள் இயங்குகின்ற இயக்கத்தைப் பொறுத்தது. அவர்கள் நல்ல முறையில் செயலாற்றினால் அரசாங்கம் நல்ல முறையில் செயலாற்றுவதாக நினைக்கிறார்கள். அவர்கள் சில இடங்களில் பண்ணுகிற தவறுதல்களினால்தான் அரசாங்கத்தையே அவர்கள் குறை சொல்ல முற்படுகிறார்கள். குறிப்பாக தாலுக்காக் காரியாலயங்களையே எடுத்து விட்டால் நல்லது என்று நான் சொல்ல விரும்புகிறேன். நாகரீக ஆட்சியிலே இப்பொழுதும்கூட தாலுக்கா காரியாலயங்களை இயக்குவது உண்மையாகவே எனக்குப் பிடிக்கவில்லை. என்னுடைய சொந்த அபிப்பிராயம் இது. எந்தத் தபால் அனுப்பினாலும் அவர்களிடமிருந்து சரியான முறையில் பதில் வருவதே இல்லை. போடுகிற விண்ணப்பங்கள் எல்லாம் என்ன ஆகிறது என்றே தெரிவது இல்லை. ரிஜிஸ்டர் தபால் அக்னாலஜ்மெண்டுகளை எல்லாம் கத்தையாக சேர்த்து வைத்திருக்கிறார்கள். இதனாலேயே அவர்களுக்கு சர்க்காரிடத்தில் வெறுப்பு வளருகிறது. ஆகவே நல்ல நிபுணர்களை வைத்து புனராலோசனை செய்து தாலுகா ஆபீஸ்களையே எடுத்துவிட்டு பஞ்சாயத்து யூனியன்களிலேயேகூட இந்த அதிகாரத்தைக் கொடுத்து விடலாம். நான் கட்சி சார்பாக இந்த யோசனையைச் சொல்லவில்லை— என் சொந்த அபிப்பிராயத்தைச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக கீழ் பவானி ஆயக்கட்டுப் பகுதிகளைப்பற்றி சில கருத்துக்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன். பள்ளங்களில் ஓடுகிற உரம்பு நீரை அருகாமையில் உள்ள நிலங்களுக்குப் பாய்ச்சிக் கொள்வதற்குப் பர்மிட் வழங்குவதாகச் சொன்னார்கள். அதற்காக மக்கள் எத்தனையோ விண்ணப்பங்கள் போட்டிருக்கிறார்கள். அதன்மேல் சாகுபடி செய்திருந்தும் அதற்கும் சர்க்காரால் பர்மிட் கொடுக்கப்படவில்லை. இப்போது தண்டத் தீர்வையும் விதிக்கிறார்கள். கொசுக்கடி போன்ற இத்தகைய சிறிய சிறிய தொந்தரவுகளினால்தான் இன்றைய தினம் கிராம மக்கள் அரசாங்கத்திடம் அதிருப்தி கொள்கிறார்கள். அவ நம்பிக்கை ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. குறிப்பாக முன்பு கீழ் பவானி பகுதியை 3 பிரிவாக பிரிப்பதாகச் சொன்னபோதே அது சரியாக நடக்காது என்ற சந்தேகத்தை நான் தெரிவித்துக் கொண்டேன். இப்போதுள்ள பாசன விதிப்படி, மேட்டு நிலம்,





நஞ்சை நிலம், தோட்டக்கால் பகுதி என்று மூன்றாகப் பிரித்தார்கள். இன்றைய தினம் பார்க்கப்போனால் நஞ்சையைவிட மேட்டு நிலம்தான் நன்றாக நெல் விளைகிறது. தோட்டக்கால் பகுதியில் நீர் தேங்கி நெல் அழுகிப்போகிறது. இட்டத்தட்ட மூன்றும் ஒரே விதமாகத்தான் இருக்கிறது. நமது அரசாங்கம் தயவுசெய்து இந்தப் பிரிவையே எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கீழ் பவானிப் பிரதேசத்தில் பயிர்க் கட்டுப்பாடு கொண்டு வரப்போவதாகக் கேள்விப்பட்டேன். தயவு செய்து அது வேண்டாம். அது நல்லது அல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக நாங்கள் என்றென்றும் இந்த அரசாங்கத்திடம் நன்றி உள்ளவர்களாக இருப்போம். அரசாங்கம் இந்தத் திட்டத்தைக்கொண்டு வந்ததற்காகப் பெருமைப்படுகிறோம். ஆனால் நன்றாக வளர்கின்ற ஒரு குழந்தையைப் பார்த்து பக்கத்து வீட்டுப் பெண் பொறாமைப்படுவது உலக இயல்பு. ஆனால் பெற்ற தாயே பார்த்து பொறாமைப்படுவதைக் கண்டதில்லை. (கனம் திரு. எம். பக்த வத்சலம்: பெற்ற தாய்க்கு எல்லாக் குழந்தைகளும் ஒன்றுதான். ஆனால் ஒரு குழந்தையே மற்றவர்கள் பங்கையும் எடுத்துக் கொள்ளக் கூடாது) இந்த நல்ல அரசாங்கம் கீழ் பவானி பாசனத் திட்டத்தில் பயிர் கட்டுப்பாடு என்ற முறையை கொண்டுவந்தால் வெறும் குழப்பத்தைத் தான் திரும்பவும் மூட்டிவிடுவதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே கீழ் பவானி திட்டத்தினால் அந்தப் பகுதி நல்ல வளமுள்ளதாக இருக்கிறது. நாங்கள் எல்லாம் சந்தோஷம் அடைகிறோம். இன்றைக்கு எந்த இடத்தைப் பார்த்தாலும்

> தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கும் தாங்கக்
> கொண்டல்கள் முழுகின் எங்கக் குவளைகள் விழித்து நோக்க
> தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
> வண்டுகளினிது பாட மருதம் வீற்றிருக்கும் காதோ.

என்று கம்பர் சொல்வதுபோல அந்தப் பகுதி வளமிக்கதாக மாறியிருக்கிறது என்று நாங்கள் பெருமை அடையும்போது வேறு எந்தக் குழப்பத்தையும் கொண்டு வரவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. அ. ராகவ ரெட்டி: தலைவர் அவர்களே, லாண்டு ரெவின்யூ இலாகாவைக் குறித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். முக்கியமாக எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் தாலுக்கா ஆபீசுகளே வேண்டாம் என்று சொல்லி விட்டார். பஞ்சாயத்து யூனியன்களிடமே அவற்றைப் ஒப்படைத்து விடலாம் என்று சொன்னபோது எனக்குச் சிறிது வியப்பாகவே இருந்தது. பஞ்சாயத்து யூனியன்கள் இப்போது நடக்கிற முறையைப் பார்த்தால் இந்த அதிகாரத்தையும் அவர்களிடத்தில் ஒப்படைத்துவிட்டால் என்ன ஆகுமோ? ரெவின்யூ டிபார்ட்மெண்டு இன்னமும் அப்படியேதான் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களிடத்திலே அவர் என்ன நல்லதைக் கண்டுவிட்டாரோ, எனக்குத் தெரியவில்லை. (ஓர் அங்கத்தினர்: சேர்மெனோ, என்னவோ) அவர் அப்படிச் சேர்மெனாகக்கூட இல்லை. நிச்சயமாக ரெவின்யூ டிபார்ட்மெண்டை அப்படியே வைக்க வேண்டும், பஞ்சாயத்து யூனியன்களிடம் சேர்க்கக் கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் பஞ்சாயத்து கணக்குகளை கிராமாதிகாரிகளே எழுத வேண்டிய நிலைமை இருக்கிறது. எப்போதுமே ஜமாபந்தி சமயத்தில் தான் இரவோடு இரவாக உட்கார்ந்து கணக்கு எழுதுவார்கள். ஜமாபந்தி என்பது கணக்குகளைப் பார்க்கப் பயன்படுகிறதே தவிர வேறு எந்தப் பயனும் மக்களோ, அரசாங்கமோ அடையும் நிலைமையில்லை. நான் கிராம அதிகாரியாக இருந்தவன் தான். அதிலே உள்ள பொறுப்பும், குறைபாடும் எனக்குத் தெரியும். முக்கியமாக ஜமாபந்தியை எடுத்துவிட வேண்டுமென்று பலபேர் சொன்னார்கள். அதைப் பற்றி அரசாங்கம் என்ன யோசனை செய்திருக்கிறது என்று தெரியவில்லை. இன்றுள்ள நிலைமை வேறு கிராமாதிகாரிகளைப் பொறுத்த வரையில் கேட்டுக் கொண்டபோது சமீபத்தில் கூட நான் அமைச்சர் அவர்களைக்

ஏதோ திட்டவட்டமான ஏற்பாடு செய்ய யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதை கூடிய சீக்கிரம் அவசியம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ரெவின்யூ வசூலைப்பற்றி முக்கியமான விஷயம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏகப்பட்ட வரிகளைப் போட்டு இருக்கிறோம். அதைத் தவிர கடன்கள்—கிராமாதிகாரிகள் இவ்வளவு கட்டவேண்டுமென்று பொதுவாகச் சொல்கிறார்களே தவிர—தனித்தனியாகக் கணக்குகளை காட்டுவதில்லை. கணக்குகள் சரியாக இல்லாத காரணத்தினால்தான் சொல்ல முடிவதில்லை. அதைப்பற்றி பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். இதனால் வீணான தொந்தரவுகளும், கஷ்டங்களும் விவசாயிகளுக்கு வருகிறது. இதை அரசாங்கம் சீரியசாக எடுத்துக் கொண்டு—உடனடியாக கணக்குகளை சரியாக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தயவு செய்து உடனடியாக எந்த நிலம் யாருக்குச் சொந்தம் என்ற கணக்கை ஒழுங்காக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதாக உத்திரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் கடன் கொடுப்பது ஒரு இலாகா, கடன் வசூல் செய்வது ஒரு இலாகா வென்று இருப்பது மிகவும் சங்கடமான நிலையை உண்டாக்குகிறது. சிலசமயம் ப்ளாக் டெவலப்மெண்டு கடன் கொடுப்பது தாசில்தாருக்குத் தெரியாது போகிறது. இரண்டும் ஒரே இலாகாவாக இருந்தால் பல நன்மைகள் ஏற்படும் என்று சொல்லவிரும்புகிறேன். சமீபத்தில் எங்கள் தாலுகாவில் கூட இந்த மாதிரி ஏற்பட்டது. பக்கத்தில் இருக்கும் திருத்தணி தாலுகாவில் கூட பல கிராமங்களில் இந்த மாதிரிக் கேள்விப் பட்டேன். தாசில்தாரால் சரியான தகவல் கொடுக்க இயலவில்லை. ஆகவே, கடன், கொடுப்பது வசூலிப்பது இரண்டும் ரெவின்யூ டிப்பார்ட்மெணடுக்கே இருக்க வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

11-30 a.m. இன்று இருக்கும் நிலையிலே நம்முடைய விவசாயிகள் கிஸ்தியைக் கட்டுவதற்கு எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதைப் பற்றி கூட அரசாங்கத்துக்கும் அமைச்சருக்கும் தெரியும். அவர்கள் அது தெரியாத மாதிரி நடந்து கொள்ளுகிறார்கள். இரண்டு வருஷத்திற்குச் சேர்த்து ஒரே தடவையாக வசூலிக்கப்படுகிறது. ஒரு ரூபாய்க்கு ஒரு ரூபாய் கட்ட வேண்டியதாக இருக்கிறது. 1962-63-க்குப் போட்டதை நீக்கி விட்டால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராமங்களில் விவசாயிகளிடமிருந்து கிஸ்தியை வசூலிப்பதற்கு மாத்திரம் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டார் முன் வருகிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு வேண்டிய தண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா என்று பார்ப்பது பி. டபிள்யூ. டி. கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பி. டபிள்யூ. டி.யும், ஃபுட் ப்ரொடக்ஷனும் சேர்ந்து பணத்தைச் செலவு செய்து இருக்கக்கூடிய ஏரிகளைச் சுற்றி மண் போட்டு, கிராவலை மேலே போட்டு பார்ப்பதற்கு அழகாகச் செய்கிறார்களே தவிர, தண்ணீர் வசதி இல்லாத கிராமங்களுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதிலே கவனம் செலுத்தவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, லாண்ட் சீலிங் ஆக்ட் பற்றி ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். லாண்ட் சீலிங்செல்லாது என்று சுப்ரீம் கோர்ட் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அதன் பேரில் நம்முடைய அரசாங்கத்தின் உத்தேசம் என்ன என்பதைப் பற்றி ரெவின்யூ அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** தலைவர் அவர்களே, பொதுப பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியங்களின்பேரில் எங்கள் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் எடுத்து வைக்க விரும்புகிறேன். பொதுவாக ரெவின்யூ





துறையைப் பொறுத்த வரையிலே ஆமை வேகத்திலேதான் சென்று கொண்டிருக்கிறது. அந்தத் துறையிலே "ரெட் டேபிசம்" நிறைய இருக்கிறது. கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் அலுவலகத்திலே தேடிப் பார்த்தால் இல்லாத நிலைமையில்தான் இருக்கிறது. இவற்றையெல்லாம் கண்டுதான் கனம் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் "இந்த இலாகாவே வேண்டாம்" என்று சொல்லக்கூடிய அளவுக்குப் பேசினார். ஆமை வேகத்தில் செல்கிற இந்த இலாகாவை ஆகாய விமான வேகத்தில் செல்லச் செய்ய வேண்டுமென்ற ஆசையிருந்தாலும் கூட, கட்டை வண்டி வேகத்திலாவது அந்த இலாகா செல்வதற்கு வழி செய்தால்தான் மக்களுக்கு அந்த இலாகாவின் பேரிலே நம்பிக்கை ஏற்படும்; இல்லாவிட்டால் இந்த இலாகாவே வேண்டாம் என்று சொல்லுகிற அளவுக்கு மக்களுடைய எண்ணம் சென்றுவிடும்.

அடுத்தாற்போல், கிராமாதிகாரிகள் நியமன முறையைப் பொறுத்த வரையில் பரம்பரை நியமன முறை இருந்து வருகிறது. இதிலே பரம்பரை முறை நியமனம் கூடாது என்று பல முறை கருத்துக்கள் எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தும், உயர்நீதிமன்றம் தீர்ப்புக்களை வழங்கியிருந்தும் பரம்பரை நியமன முறை நீக்கப்படாததற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. கிராமாதிகாரிகளின் சம்பள விகிதம் தற்போது 24—35 என்ற ரீதியில் இருக்கிறது. அதன் விளைவு என்னவென்று பார்த்தால் —ஏரி நஷ்டம் கிராமத்தின் மீது என்பதைப் போல்—சர்க்கார் குறைவாக ஊதியம் அளிக்கின்ற காரணத்தால் அவர்கள் விவசாயிகளிடம் இருந்து மாமூல் என்ற பெயரிலோ, லஞ்சம் என்ற பெயரிலோ விவசாயிகளிடமிருந்து வசூலித்து விடுகிறார்கள். சிறு துளி பெரு வெள்ளம் என்ற முறையிலே அவர்கள் சிறு சிறு தொகைகளாக விவசாயிகளிடமிருந்து பெறுகிறார்கள். ஆகவே, கிராமாதிகாரிகளை நிரந்தரமான ஊழியர்களாக நியமித்து, அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் கொடுத்து, உத்தியோக உயர்வுக்கான முறைகளை ஏற்படுத்தினால் அடித்தளத்தில் உள்ள கிராமாதிகாரிகள் நல்ல முறையில் பணியாற்றுவதற்கான வழிவகை ஏற்படுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

ஜமீன் ஒழிப்புப் பிரதேசங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களைப் பொறுத்தவரை ஜமீன்தார்களும், நிலச்சுவான்தார்களும் அரசாங்கத்துக்கும் ரயத்துக்களுக்கும் இடையே இடைத்தரகர்களாக இருந்து, ரயத்துக்களிடம் இருந்து நிலவரியை வசூல் செய்திருந்தாலும் கூட, அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்தாமல் இருக்கிறார்கள். அதோடு அந்த ரயத்துக்களுக்கு நிலவரி கட்டியதற்கான ரசீதுகளைக் கொடுப்பதில்லை. அந்த ஜமீன் பகுதியில் இருந்த நிலங்களையெல்லாம் காடுகள் என்று பிரித்துவிடுகிறார்கள். அந்த நிலங்களில் ஏழை விவசாயிகள் பரம்பரையாகப் பயிர் செய்து வந்திருந்தும் அவர்களிடம் நிலவரி கட்டியதற்கான ரசீது இல்லாமையால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். திடீரென்று காட்டிலாகாவிடம் இருந்து அந்த நிலங்களில் விவசாயம் செய்யக் கூடாது என்று உத்தரவு வரும். பிறகு ரெவின்யூ இலாகாவிடம் சென்று தாங்கள் பரம்பரையாக உழுது வருகிறோம் என்பதைப்பற்றி எடுத்துச் சொல்லி உழுவதற்கான அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது. காட்டிலாகாவிலிருந்து இத்தகைய தொல்லைகள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இதற்கு முக்கிய காரணம் இடைத்தரகர்களாக இருக்கிற ஜமீன்தார்கள், நிலச்சுவான்தார்கள் அவர்கள் நிலவரி கட்டியதற்கான ரசீதுகளைக் கொடுக்காமல் இருப்பதுதான். அந்த நிலங்களையெல்லாம் அந்த விவசாயிகளுக்குப் பட்டா போட்டுக் கொடுப்பதற்கு வேண்டிய அளவில் இந்த அரசாங்கம் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு நிலவரி, நீர்வரிகளை உயர்த்தியதன் காரணமாக இரண்டு ஆண்டுகளுக்குச் சேர்த்து அந்த வரிகள் வசூலிக்கப்படுகின்றன. அதைக் கட்டுவதற்கு நோட்டீஸ் கொடுக்கப்படாமல் உடனடியாக வசூலிக்கப்படுகிறது. சட்டத்திலே இத்தனை நாட்களுக்கு முன்னாலே நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று இருந்தாலும் கூட, கிராமாதிகாரிகள் நோட்டீஸ் கொடுக்காமல் வரிகளை உடனடியாகக் கட்டவேண்டுமென்று கூறி வசூலித்

துக்கொண்டு வருகிறார்கள். விவசாயிகளை வாட்டி வதைக்கிறார்கள். அந்தக் கிராமாதிகாரிகள் இந்த மாமன்றம் நிறைவேற்றிய சட்டத்தை மதிக்கிறார்களா இல்லையா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வரிகளிலிருந்து நாம் சென்ற ஆண்டு எதிர் பார்த்த தொகை 8 கோடி 60 லட்சமாகும். ஆனால் கிடைத்த தொகையோ 8 கோடிதான். 60 லட்சம் ரூபாய் குறைவாகத்தான் கிடைத்திருக்கிறது. இதற்குக் காரணம் என்ன ? இந்த வரி விகிதத்தை உயர்த்தியதால்தான் 60 லட்சம் ரூபாய் குறைவாகக் கிடைத்திருக்கிறது என்று கூற விரும்பு கிறேன். வரியை உயர்த்த உயர்த்த வரியைக் கட்டாது ஏமாற்றுகின்ற போக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த வரி உயர்வைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரத் தாள்கள் தற்போது ஸ்டாம்ப் வெண்டர்கள் வாயிலாக விற்கப் படுகின்றன. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை கடந்த ஆண்டு கழிவுத் தொகையாக 20,77,000 ரூபாயை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். 1963–64-ம் ஆண்டில் 24 லட்சம் ரூபாய் கழிவுத் தொகையாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பத்திரத் தாள்களை எல்லாம் ஏன் பதிவு அலுவ லகங்களின் மூலமாக விற்கக்கூடாது ?

இந்தப் பத்திரத் தாள்கள் எல்லாம் தாலுகா அலுவலகங்களில் இருக்கக் கூடாதா ? அப்படி விற்றால் என்ன கெட்டுவிடும் ? இதற்காக ஒரு குறிப்பிட்ட தொகை நிர்வாகச் செலவிற்கு ஏற்படக் கூடும் என்றாலும் இதைவிடக் குறைந்த செலவுதான் ஏற்படும். அதோடு நம் அரசாங்கத் திற்கும் ஒரு சில லட்சம் ரூபாய்களும் வருவாயாகக் கிடைக்கும். ஆகவே ஸ்டாம்ப் வெண்டர்களுக்கும், இடைத்தரகர்களுக்கும் கொடுக்கும் கழிவு போக, நிர்வாகத்தில், உள்ள ஒரு சில உத்தியோகஸ்தர்களின் சம்பள செலவு போக கூடுதலாக 15 லட்சம் ரூபாய் நம் மாநில அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கும். அதே போல் தாலுகா அலுவலகங்களில், பதிவு அலுவலகங்களில் இந்தப் பத்திரத்தாள்களை விற்க முடியாவிட்டால்—இப்போது பஞ்சாயத்துக்கள் இல்லாத கிராமங்கள் இல்லை என்பதைப் பார்க்கிறோம்—ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு எழுத்தர் இருப்பதைப் பார்க்கிறோம்—ஆகவே பஞ்சாயத்துக்கள் வாயிலாக இந்த பத்திரங்கள் எல்லாம் விற்பனை செய்யப்பட்டால் நிச்சயமாக கிராமவாசிகள் 20, 30 மைல்கள் நடந்து சென்று அவதிப்படுவதையும், அப்படிச் சென்று விற் பனையாளர் இல்லை என்று சொல்லிவிட்டு வருகிற நிலையைத் தவிர்த்து எளிதில் பத்திரங்கள் கிடைக்கக்கூடிய நிலையை உருவாக்க முடியும். அதோடு அரசாங்கத்திற்கு அதிகப்படியான வருவாயும் கிடைக்கும் என்று கூறிக்கொள்கிறேன். நில வரி, நீர் வரி உயர்வு பொறுத்தவரை சென்ற ஆண்டு நில வரி, நீர் வரி உயர்வை அரசாங்கம் வஜா செய்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். இந்த ஆண்டிலாவது நில வரி, நீர் வரி இவற்றைக் குறைக்க முடியுமா என்று சிந்தித்துப் பார்த்து, விவசாயிகளுக்கு தொல்லை தொந்தரவு கொடுக்காத நிலையில் அவர்க ளுக்கு வேண்டிய ஊக்கம் அளிக்கக் கூடிய வகையில் தக்க நடவடிக்கை கள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் தலைவர் அவர்களே, ரெவின்யூ மான்யக் கோரிக்கைகள் மீது நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையின் நான்காவது பக்கத்தில், "நில உடைமையின் மீது உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டதன் விளைவாக விவசாய வருமான வரிச் சட்டத்தை மாற்றியமைக்கும் விஷயம் தனியாக ஆலோசிக் கப்பட்டு வருகிறது." என்று கூறப்பட்டிருக்கிறது. ஏன் இப்படி குறிப்பிடப் பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. ஒருக்கால் சென்ற மாதத்தில் இதை அச்சு செய்துவிட்டார்களோ என்று நினைக்கிறேன். கடந்த வாரம் நில உடைமை உச்சவரம்புச் சட்டம் செல்லுபடியாகாது என்று உயர்நீதி மன்றத் தீர்ப்பு வந்த பிறகு எதற்காக இந்தச் சட்டத்தைப் பற்றி ஆலோசிக்கிறார்கள் என்று தெரியவில்லை. நில உச்சவரம்புச் சட்டம் பற்றி என்ன செய்யப் போகிறோம் என்பது குறித்து திட்டவட்டமாகத் தெரிந்த பின்னர்தான் இதை மாற்றியமைக்க வேண்டுமே அல்லாது விவசாய வருமான வரி





சட்டத்தை மாற்றியமைத்த பின் சுப்ரீம் கோர்ட் டிவிஷனுக்கு மாறுதலாக என்ன செய்யவேண்டுமென்று வரும்போது பின்னால் இதில் புதுச் சிக்கல் ஏற்படும், பின்னர் வேறு ஒரு அமெண்ட்மெண்ட் கொண்டுவர வேண்டியிருக்கும். அப்படிப்பட்ட ஒரு நிர்ப்பந்தம் ஏற்படும். ஆகவே விவசாய வருமான வரிச் சட்டத்தை மாற்றியமைப்பதை தள்ளிவைத்து விட்டு நில உடைமை உச்சவரம்புச் சட்டம் பற்றி அதற்கு என்ன பரிகாரம் தேடலாம் என்ற முயற்சியில் முதலில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாதாரணமாக இந்தச் சட்டசபையில் ஒவ்வொரு அறிக்கை யிலும் "எக்ஸெப்ட் தி நில்கிரீஸ்" என்று வருகிறது. புறம்போக்கு நிலங்களைப் பொறுத்தவரையில், நீலகிரியில் மட்டும் ஒரு ஏக்கர் நிலம் கூடக் கொடுக்கக் கூடாது என்று சர்க்கார் ஜீ. ஓ. வந்திருக்கிறது. நான்கு ஐந்து மாதங்கள் இருக்கும். எல்லா மாவட்டங்களிலும் புறம்போக்கு நிலங்களை பூமி இல்லாதவர்களுக்கு கொடுக்கலாம் என்று சட்டம் இருக்கும் போது நீலகிரிக்கு மட்டும் வேண்டாம் என்றிருக்கிறது. ஒரு ஏக்கர் கூட கொடுக்கக்கூடாது என்றிருக்கிறது. ஏன், எதற்காக இது என்று தெரிய வில்லை. அரசாங்கத்தின் ஞாபகம் குந்தா, பவானிசாகர், இவற்றை பார்த் துக் கொண்டுதான் இந்தச் சட்டங்கள் எல்லாம் வருகின்றன. என்று நினைக்கிறேன். குந்தா, பவானிசாகர் போன்றவை கட்டப்பட்டு பிற மாவட் டங்களுக்கு அதன் பலன் கிடைக்கக் கூடிய அளவில் இருந்தாலும், எங்கள் மாவட்டத்தில் இருந்து பலனைப் பெற்றாலும் கூட ஏன் சிக்கல் களை கொண்டுவந்து விடுகிறீர்கள் என்றுகேட்கிறேன். ஒரு ஏக்கர் கொடுத் துவிட்டால் அதில் விவசாயம் செய்துவிடுவார்கள், அதனால் மண் அரிப்பு ஏற்பட்டு குந்தாவிற்கும் பவானிசாகருக்கும் போய்விடும் என்ற கருத்து இருக்கலாம். விவசாயம் செய்யாது மக்கள் எப்படி ஜீவிப்பது? ஏன் இதற்காக ஒரு தனி ஜீ.ஓ. பிறப்பித்தார்கள் என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஹரிஜனங்களுக்கு வீடு கொடுக்கும்போது பூமி இல்லாத இடத்தில் ஒரு ஏக்கர் நிலம் கொடுத்தால்தான் கிராமங்களில் வாசம் செய்வார்கள். வீட்டைக் கட்டிக் கொடுத்துவிட்டு நிலம் கொடுக்க மாட்டோம் என்று சொல்வதால் அவர்கள் நகரங்களைப் பார்த்து ஓடுகிறார்கள், அங்கே எங்கேயாவது கூலி வேலை கிடைக்காதா என்று. இல்லாவிடில் கிராமப் புறங்களுக்கு வர மாட்டேன் என்று சொல்ல என்ன காரணம் ? பயிர் செய்ய இடம் கொடுப்பதில்லை. நீலகிரியில் ஒரு சென்ட் கூட கொடுக்கக் கூடாது என்று இருக்கிறது. அதனால் அங்குள்ளவர்கள் கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே தயவு செய்து அதை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கேயும் கொடுக்கவேண்டும். மண் அரிப்புத் திட்டத்தின்கீழ் பூமியை செம்மைப்படுத்திக் கொடுக்கவோ அல்லது கண்டிஷன் மூலமோ கொடுத்து மண் அரிப்புத் திட்டத்தின் கீழ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆக, எங்கள் ஜில்லாவிற்கு மட்டும் தனி ஜீ.ஓ. பிறப்பிப்பதை தயவுசெய்து இனிமேல் கடைப்பிடிக்க வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மண் அரிப்புத் திட்டம்பற்றி பலமுறை இங்கு எடுத்துக் கூறியிருக்கிறேன். நிலத்தின் விலையே ஏக்கருக்கு 1,000 தான். மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு 900 ரூபாய் கடன் கொடுத்து கடனை ஏற்றிவிட்டோம். அதை இப்போது திருப்பிக் கொடுங்கள் என்று சொன்னால் அவர்கள் என்ன செய்வார்கள் ? மண் அரிப்பு ஏற்பட்ட பூமியில் 10 ஆண்டுகள் விவசாயம் செய்ய முடியாது என்று திட்டவட்டமாக சொல்லப்பட்டிருக்கிறது. இருந் தாலும் லோனை திருப்பிக் கொடுங்கள் என்று கேட்கும்போது அவர்கள் எப்படிக் கொடுப்பார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அங்குள்ள விவசாய மக்களுக்கு தனியாக செய்த உதவி அல்ல இது. குந்தாவின் பாதுகாப்பிற்காக அந்தத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட தொகை இது. ஆகவே அங்கு சாயில் கன்சர்வேஷனுக்காக என்ன செலவு செய்யப்பட் டதோ அதை ரைட் ஆப் செய்து விட வேண்டும். கோடிக் கணக்கான ரூபாய் அந்த டாமிற்காக செலவு செய்திருக்க, உங்கள் நன்மைக்காகவே இந்த 20 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ரூபாயை ரைட் ஆப் செய்வதினால் ஒரு பாதகமும் ஏற்பட்டுவிடாது. லேட் ப்ளைட்டினால் அங்கு விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. "1963–64-ம் ஆண்டிலும் நீலகிரி மாவட்டத்தில் உருளைக் கிழங்கு பயிர் கருகல் நோயினால் பாதிக்கப்பட்டது. எனவே, அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

அளிப்பதற்காக 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதற்
கொண்டு, மேற்கொண்டும், ஓர் ஆண்டுக்குக் கடன் தவணைத் தொகை
வசூலிப்பதை நிறுத்தி வைத்துள்ளது" என்று அறிக்கையில் காணப்
படுகிறது. லேட் ப்ளைட் வந்து விட்டது பற்றி, நான் ரூல் 41 மோஷன்
கொடுத்திருக்கிறேன். அந்த அறிக்கைக்கு நல்ல பதில் கொடுப்பார்கள்
என்று நினைக்கிறேன். லேட் ப்ளைட் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதால்
அங்குள்ள கிராம வாசிகளை கடனைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்பது
சரியல்ல. கோயம்புத்தூர் மாவட்டத்தில் சில பகுதிகளில் தண்ணீர்
கிடைப்பது அரிதாக இருப்பதால் வழக்கம்போல் அரசாங்கச் செலவில்
பொதுக் கிணறுகளை ஆழப்படுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது என்று
இருப்பதை வரவேற்கிறேன். இப்படி எல்லா இடங்களுக்கும் செய்து
கொண்டிருக்கும்போது நீலகிரியில் மட்டும், அதுவும் லேட் ப்ளைட்டினால்
பாதகம் ஏற்பட்டிருக்கும் அங்கு மட்டும் வாய்தா வேண்டுமானால் கொடுக்
கிறோம் என்று சொல்வதில் பிரயோஜனம் இல்லை. சர்க்கார் கடன் இன்று
12 லட்சம் ரூபாய் இருக்கிறது அந்த மாவட்டத்தில். இந்த 12 லட்சம்
ரூபாயையும் வஜா செய்து விட்டோம் என்று சொல்லிவிடுவதினால்
அதிகத் தொகையை இழந்தவர்களாகி விடமாட்டோம். ஆகவே அதை
வஜா செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள்
திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை. அவர்களின் பூமியை சர்க்கார்
எடுத்துக்கொண்டாலும் அதை வாங்குவார் இல்லை. ஒவ்வொரு சட்டமும்
அங்கு சிக்கலை ஏற்படுத்திக் கொண்டிருப்பதால் சொல்லிக்கொள்கிறேன்.
கிராம அதிகாரிகளைப் பொறுத்த வரை பல பிரச்னைகள் குறித்து பேசி
யிருக்கிறோம். என்னைப் பொறுத்த வரையில் நானும் ஒரு கிராம
அதிகாரியாக கொஞ்ச நாள் இருந்து வேண்டாம் என்று அதை ஒதுக்கி
தள்ளிவிட்டு வந்தேன். அவர்கள் நிரந்தரமாக இருக்க தயாராயில்லை.
எல்.டி.வி. அல்லது யு.டி.வி. பேயைக் கொடுத்து பெர்மனன்ட்டாக
வைத்து விடுவோம் என்றால் அவர்கள் அப்படி இருக்க தயாராயில்லை.
இப்போதுள்ள முறையில், பார்ட் டைம் முறையில் அவர்களை வைத்துக்
கொண்டு ஊதியத்தை மட்டும் அதிகரித்து கொடுத்துவிட்டால் போதும்.
அவர்களை பெர்மனண்டாக வைத்து எல்.டி.வி. அல்லது யு.டி.வி.
சம்பளத்தைக் கொடுத்தால் அரசாங்கச் சட்டத்தின்கீழ் அவர்களை
ஒரு கிராமத்திற்கு மாற்றம் செய்யலாம். ஒரு கிராமத்திலிருந்து
வேறு கிராமத்திற்குப் போக அவர்கள் தயாராயில்லை. தலையாரிகளைப்
பொறுத்தவரையில் 1959-ல் இந்த மன்றத்தில் நான் பேசியிருக்கிறேன்.
அவர்களுக்கு ஒரு உடுப்பு கொடுங்கள் என்று. எவ்வளவோ ப்யூன்
களுக்கு உடுப்பு கொடுக்கிறோம். உடுப்பு கொடுங்கள் என்று சொன்னேன்.
ஒரு ஆண்டு உடுப்பு கொடுத்தார்கள் அன்றைய ரெவின்யூ அமைச்சர்
அவர்கள். அப்புறம் கொடுக்கவில்லை. நான் பேசியதற்காக ஒரு வருடம்
கொடுத்துவிட்டு அப்புறம் கொடுக்காமல் இருக்கக் காரணம் என்ன? இதை
அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதிகாரிகள் கொண்டு வந்திருக்
கிறார்களா இல்லையா என்று தெரியவில்லை. சாதாரண கிராம தண்டல்
காரர், தலையாரிகள் இவர்களுக்கு வருடத்திற்கு ஒரு உடுப்பு கொடுப்பதினால்
என்ன கெட்டுவிடும். கொடுத்ததை இல்லாமல் செய்திருக்கிறார்கள்,
திரும்பவும் அதை தயவு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து பத்திரப் பதிவு பற்றி பலர் பேசினார்கள். இதைப்பற்றி நான்
பல முறை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். தனியாக
இதற்கென்று ஒரு இலாகா தேவையில்லை என்று நான் நம்புகிறேன்.
பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் நாம்
பஞ்சாயத்து முறைகளை அமைத்துக்கொண்டு வருகிறோம். அந்த
முறையில் பஞ்சாயத்து யூனியனோடு சேர்த்துவிட்டால் இப்படி தனியாக ஒரு
இலாகா இருக்கவேண்டிய தேவையிராது. அதோடு பணமும் மிஞ்சும்.
நான் முன்னால் கூட, இன்டஸ்டிரியல் இன்ஸ்டிட்யூட் என்று தனியாக
இருக்கவேண்டியதில்லை எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சோடு மெர்ஜ் பண்ணி
விடலாம் என்று ஆலோசனை சொன்னேன். ஆனால் அப்போது அரசாங்கம்
கேட்கவில்லை. பின்னால் ஒன்றுசேர்த்தார்கள். அதே போன்று
மெடிக்கலும், பப்ளிக் ஹெல்த்தும் தனித்தனியாக இருக்கவேண்டும் என்று





சொன்னேன். நான் சொன்ன நேரத்தில் முடியாது என்று சொன்னார்கள்.
ஆனால் பின்னால் ஒன்றாக சேர்க்கவேண்டாம் என்று முடிவு செய்து
விட்டார்கள். 'இப்படி சாதாரணமாக முதியோர் பேச்சு முன்னால் கசக்கும்,
பின்னால் இனிக்கும் என்று சொல்வார்கள். அதுபோல், மாதா கவுடரின்
பேச்சு முன்னால் கசப்பாகத்தான் இருக்கும், ஆனால் பின்னால் நிச்சயமாக
இனிப்பாக இருக்கும். ஆகவே இந்த இலாகா அவசியமில்லாத இலாகா,
பஞ்சாயத்து யூனியனோடு மெர்ஜ் செய்து விடுங்கள் என்றுதான் நான்
சொல்லிக்கொள்கிறேன். இன்றில்லாவிட்டாலும் நாளை நீங்கள் மெர்ஜ்
பண்ணத்தான் போகிறீர்கள். சாதாரணமாக இப்போது பஞ்சாயத்து
யூனியன் கமிஷனராக தாசில்தார் ராங்கிலுள்ளவர்கள்தான் இருக்கி
றார்கள். இவர்களுக்கு பத்திர பதிவைப்பற்றி ஒன்றும் தெரியாதா என்ன?
ஆகவே தனியாக பத்திரங்களை விற்பனை செய்வதற்கு மட்டும் தனியாக
ஒரு குமாஸ்தாவை ஏற்படுத்தி வைத்து விட்டால் என்ன குறைந்து போய்
விடும்? இதை செய்ய முடியாதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க
வேண்டும். கண்டிப்பாக நாளைக்கு நீங்கள் செய்யத்தான் போகிறீர்கள்.
பரவாயில்லை, எப்படியும் எங்கள் ஆட்சிதானே செய்கிறது என்று நான்
சந்தோஷப்பட்டுக்கொள்வேன். அதை நான் சொல்லும்போதே செய்
தால் நலமாக இருக்கும் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்
கிறேன்.

நான் கொடுத்திருக்கின்ற ரூல் 41 மோஷனில் எங்கள் பகுதியிலிருந்து
வசூல் செய்யவேண்டிய பாக்கிக்கு "போஸ்ட்போன்" பண்ணவேண்டும்
என்று கேட்டிருக்கிறேன். ஆனால் உண்மையில் அங்குள்ள மக்களுக்கு
இதை கொடுக்கக்கூடிய சக்தியில்லை. ஆகவே ரைட் ஆஃப் செய்கின்ற
முறையில் ஆர்டர் போடவேண்டும் என்பதுதான் என் கோரிக்கை.
இதை நேரடியாக கேட்டால் கலக்டரிடமிருந்து சரியான பதில் வராது
என்று எண்ணித்தான் "போஸ்ட்போன்" பண்ணவேண்டுமென்று ரூல்
41 மோஷனில் கேட்டிருக்கிறேன். அதில் பதில் சொல்வதற்கு முன்னால்
இப்போதே அமைச்சர் அவர்கள் நீலகிரி பகுதிக்கு, அவர்கள் கொடுக்க
வேண்டிய பாக்கித் தொகையை ரைட் ஆஃப் செய்து விட்டோம் என்று
குறிப்பிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அங்குள்ள மக்களுக்கு நிலம்
கொடுக்கக்கூடாது என்கின்ற ஜி.ஓ.-வை வாபஸ் செய்துவிட வேண்டும்.
அதற்குப் பதிலாக நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்கின்ற முறை
யில் ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்
வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த
ரெவன்யூ இலாகா மான்யத்தில் பல அங்கத்தினர்கள் பல கருத்துக்களை
சொன்னார்கள். இதில் ஒரு நல்ல சூழ்நிலையைக் கண்டேன். ஆளும்
கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்த இலாகாவினால் ஏழை விவசாயிகள்
படுகின்ற துன்பத்தையும் பற்றி எடுத்து விளக்கினார்கள். இந்த ரெவன்யூ
இலாகாவைப்பற்றி விடுதலை கிடைத்ததற்கு பின்னாலும் எந்த அளவுக்கு
அரசாங்கம் சிந்தித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். பிரிட்டி
ஷார் காலத்தில்கூட, இதைப்பற்றிய கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.
இந்த இலாகாவைப்பற்றி நன்றாக பரிசீலனை செய்து நல்லதொரு நிர்
வாகத்தை ஏற்படுத்துவதற்கு ரெவின்யூ இலாகாவை நெருங்குவதற்கு
அமைச்சர்கள் பயப்படுகிறார்களோ என்ற சந்தேகம் வருகிறது. செட்டில்
மெண்ட் காலத்தில் பட்டா கொடுத்ததைப்பற்றி பலர் எடுத்துச் சொன்னார்
கள். இன்றைக்கு இருக்கக்கூடிய ஜமீன் பிராந்தியங்களில் செட்டில்மெண்ட்
காலத்தில் யார் யாருக்கு பட்டா என்று நிர்ணயித்து விட்டார்கள்.
அதற்குப் பின்னால், தனிப்பட்டவர்களுக்குள், ஒரு நிலம் யாருக்கு பட்டா
கொடுக்கவேண்டும் என்கின்ற விஷயத்தில் தகராறு ஏற்பட்டால், அந்த
தகராறைத் தீர்ப்பதற்கு சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் உள்ளது என்று
நம்முடைய உயர்நீதி மன்றத்தில் தீர்ப்புக் கொடுத்தார்கள். அதற்குப்
பின்னால் செட்டில்மெண்ட் விவகாரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் சிவில்
கோர்ட்டுக்குப் போய் தங்கள் குறைகளை சொல்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.
ஆனால் சமீபகாலத்தில் வந்த தீர்ப்பின் காரணமாக தனிப்பட்ட நபர்
களுக்கிடையே தகராறைத் தீர்ப்பது போல், சர்க்காருக்கும் தனிப்பட்ட நபர்
களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டால், அதாவது தனிப்பட்ட நபரின்

நிலத்தை, புறம்போக்கு நிலமாக சர்க்கார் எடுத்துக்கொண்டால், அதைப் பற்றி சிவில் கோர்ட்டில் சொல்வதற்கு அதிகாரம் இல்லை என்கின்ற ஒரு நிலை உயர் நீதிமன்றத் தீர்ப்பால் ஏற்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். இதனுடைய விளைவாக கடந்த சில மாதங்களாக ஒவ்வொரு நீதி மன்றத்தில் இருக்கக்கூடிய வழக்குகளையும் சர்க்கார் கன்டெஸ்ட் செய்து இதில் சிவில் கோர்ட்டுக்கு ஜூரிஸ்டிக்ஷன் கிடையாது என்று சொல்லி பல வழக்குகள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நிலை நீடித்துக்கொண்டிருந்தால் சாதாரண விவசாயி, தன்னுடைய உண்மையான நிலத்திற்கு இருக்கக்கூடிய பட்டாவையும் இழந்துவிடக்கூடிய நிலைதான் ஏற்படும். ஆகவே இதை மாற்றுவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்கவேண்டும். 1948-ம் ஆண்டு ஜமீன் ஒழிப்பு சட்டத்திற்கு திருத்தச் சட்டம் கொண்டு வருகிற முறையில் ஏதாவது சர்க்கார் முயற்சி எடுக்கவேண்டும்.

பட்டாக்கொடுக்கின்ற விஷயத்தில், பாட்டனாருக்கும், முப்பாட்டனாருக்கும் பட்டா இருக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இந்த கேவலமான நிலை இன்னும் இந்த காங்கிரஸ் ஆட்சியில் இருக்கவேண்டுமா? உண்மையில் இதனால் பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதிலுள்ள உண்மையை ஒப்புக்கொள்கின்ற அமைச்சர் இதை தீர்ப்பதற்கு பயப்படுகிறார்கள். இதைப்பற்றி ரெவன்யூ இலாகாவில் கேட்பதற்கு அச்சப்படுகிறார்கள். இதன் மீது சர்க்கார் ஏற்படுத்தியிருக்கின்ற சட்டம், அதாவது போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர், 12-வது பிரிவு, 10-வது உட்பிரிவு இதில் சொல்லப்பட்டிருப்பது, ஒவ்வொரு ஆண்டும் ஜமாபந்தி காலத்தில், ஏழை விவசாயிகள் ஜமாபந்தி நடைபெறுகிற இடத்திற்கு வந்து, தங்களுக்கு இன்னின்ன முறையில் பட்டாக்களை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அதற்குரிய காரணங்களையும் சொன்னால், அந்த இடத்திலேயே உடனடியாக பட்டா போட்டு கொடுக்கவேண்டும் என்று வெள்ளைக்காரன் போட்ட சட்டத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் அதைத்தான் காங்கிரஸ் ஆட்சியும் நடைமுறையில் வைத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு இது சரியாக அமல் நடத்தப்படாததின் காரணமாக பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். செட்டில்மென்ட் என்பது மக்களுடைய உரிமையைச் சர்க்கார் பாதுகாப்பதற்காக எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு முயற்சி. ஆனால் இன்றையதினம் ஏழை விவசாயிகளுடைய உரிமைகளை பறிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால், இந்த ஆட்சியை வெறுப்பார்களா, மாட்டார்களா? இந்த நிலையைத்தான் கனம் அமைச்சர் அவர்கள் சற்று சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

நிலத்தைப் பொறுத்தளவில், நிலத்தில் உழைக்கின்றவனுக்கு வரிப்பளுவைக் குறைக்கவேண்டும் என்று இன்றைக்கு அல்ல, அந்நியன் ஆண்டு கொண்டிருந்த காலத்தில், காங்கிரஸ் கட்சி தனது தேர்தல் பிரகடனத்தில் சொல்லி வந்திருக்கிறது. பல மேடைகளிலும் இதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றுகின்றதா, அல்லது நிறைவேற்றுவதற்கு தவறுகின்றதா என்பதைத்தான் எடுத்துக் காட்டவேண்டுமே ஒழிய, எதிர்கட்சியினுடைய குறைகளை மட்டும் எடுத்துக்கூறுவதில் எந்த விதமான பொருளும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் முன்பு சொன்னார்கள். நிலவரியைப் பொறுத்தளவுக்கு காங்கிரஸ் கட்சியின் கொள்கை நிறைவேறியதா? இந்த ஆட்சியால், இந்த காங்கிரஸ் ஆட்சியால், 1950-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கமிஷன் விளக்கியதுபோல் குறைந்த அளவு வரி கட்டக்கூடியவர்கள், குறைந்த அளவு நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள், இவர்களுக்கெல்லாம் நிலவரியை தவிர்க்கவேண்டும் என்று கருத்துபற்றி, இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? 1957-ம் ஆண்டு புள்ளி விவரப்படி 10 ரூபாய்க்கு குறைவாக வரி கட்டக்கூடியவர்கள் 39,40,000 பேர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் இருக்கின்ற 39,40,000 பேர்களுக்கு ஏதாவது நிவாரணம் செய்யக்கூடாதா? நிவாரணம் கொடுத்துவிட்டால் இந்த ஆட்சிக்கு என்ன பழுது ஏற்பட்டுவிடும்? என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டும். 10 ரூபாய்க்கு குறைவாக வரி கட்டக்கூடியவர்கள் மூலமாக இந்தச் சர்க்காருக்கு கிடைக்க-



கூடிய வருமானம், 1950-ம் ஆண்டு கணக்குப்படி கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய். இப்போது வேண்டுமென்றால் இதற்கு சற்று அதிகமாக இருக்கலாம். இந்த அளவுக்கு வருமானம் குறைந்தாலும் கூட, ஏழை விவசாயிகளுக்கு பெருமளவு நன்மை பயக்கக்கூடிய இந்தக் காரியத்தை, இந்த 15 ஆண்டுகளுக்குப் பின்னாலாவது நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கக்கூடாதா? வெள்ளைக்காரன் காலத்தில் விவசாயிகளைப் பார்த்துச் சொல்லுகின்றான், விவசாயிகளே, உங்களிடமிருந்து நாங்கள் வரி வசூல் செய்கின்றோம், ஆனால் ஏதாவது, விளைவில் சேதம் ஏற்பட்டால், அதற்கு நாங்களாக பார்த்து "கிரேஸ்" என்ற முறையில் கொடுக்கின்றோம், வரி வஜா செய்கின்றோம் என்று அன்றையதினம் சொன்னார்கள். அன்று போட்ட அதே சட்டம்தான் இப்போதும் காங்கிரஸ் ஆட்சியில் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதே சட்டமன்றத்தில், ரெமிஷன் கொடுக்கின்ற விஷயத்தில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை நானும் உண்மையாகவே உணர்ந்திருக்கின்றேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி உணர்ந்திருக்கின்ற அமைச்சர் அவர்களால் அதை செயல் படுத்தத்தான் முடியவில்லை. அரசாங்கம் இதை பரிசீலிக்க மறுக்கிறதா? நிர்வாகத்தைக் கண்டு அமைச்சர் அவர்கள் பயப்படுகிறார்களா? அந்த காலத்தில் போடப்பட்ட இந்த ரிமிஷன் விதிகளை மாற்றுவதற்கு பயப்படுகிறார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகின்றேன். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். ராமநாதபுரம் மாவட்டத்திலே 1358-வது பசலியில் வரி பாக்கி 1,34,00,340 ரூபாய். 1372-வது பசலியில் வரி பாக்கி 53,00,000 ரூபாய். எப்படி இந்த வரி பாக்கி பெருகியது? இதை நாம் ஆராயவேண்டும். அங்கே விளைவு பாதிக்கப்பட்டது. அங்கே வெள்ளாமை சரியாக இல்லை. அதற்குத் தகுந்தபடி ரெமிஷன் கொடுக்க விதி ஏற்படுத்த முடியவில்லை. 53 லட்சம் ரூபாய் 14 ஆண்டுகளிலே ஒரு நாட்டிலே ஒரு மாவட்டத்திலே வரிப் பாக்கி ஏற்படுகிறது என்றால் இந்த முறையை மாற்ற வேண்டாமா? மாற்றவாவது முயற்சி எடுத்துக்கொண்டதா இந்த அரசாங்கம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சி 1950-ம் ஆண்டு ஏற்படுத்திய கமிட்டி இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறது. ரெமிஷன் பெறுவதை ஸ்டாச்சுட்டரி ரைட்டாகக் கொடுக்க வேண்டுமென்று அந்தக் கமிட்டி கூறியிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சி ஏற்படுத்திய குழு அந்த மாதிரி கூறியிருக்கிறது. அந்த யோசனையைக் கூட இந்த அரசாங்கம் புறக்கணித்து விட்டது. வெள்ளைக்காரன்தான் கிரேஸ் என்று சொன்னான்—நானாகப் பார்த்துக் கொடுக்கிறேன் என்று சொன்னான். விளையாதபோது, விவசாயிக்கு ஜனநாயக ஆட்சியில் ரெமிஷன் பெற சட்டப்படி உரிமை வேண்டாமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த ரெமிஷன் கொடுப்பதிலே இன்னொரு போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர் 13-வது ஸ்டாண்டிங் ஆர்டர். முழு அளவுக்கு விளையவில்லை என்றால் கொடுக்கவேண்டும் என்று சொல்லக் கூடிய ஸ்டாண்டிங் ஆர்டர். ஒரு கண்மாய் பாசனத்தில் இருக்கிற அத்தனை நிலமும் சாவியாகப் போக வேண்டும் அல்லது குறிப்பிடப்பட்ட பகுதியில் அதிக அளவு சாவியாகப் போகவேண்டும் என்று இருக்கிறது. அது பழைய சட்டம். ஒரு கண்மாய்க்கு தண்ணீர் வருகிறது. சிலர் பாய்ச்சிக் கொள்கிறார்கள். இரண்டாவது மழை பொய்த்து விட்டது. அதனால் வெள்ளாமை சிலருக்குப் பாதிக்கப்படுகிறது. ஆனால் இவர்களுக்குக் கொடுக்க மாட்டோம் என்று ரெவின்யூ அதிகாரிகள் மறுக்கிறார்கள். இதையாவது கொஞ்சம் சிந்தித்துத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறோம் என்று இந்த அரசாங்கம் பண்ணிப் பண்ணிச் சொல்லுகிறது. ஆந்திர மாநிலத்தில் 50 லட்சம் ரூபாய் விவசாயிகளுக்கு வட்டி இல்லாமல் கடன் கொடுக்கிறார்கள். இந்த அரசாங்கம் அந்த முறையில் முயற்சி எடுத்துக் கொள்ளக்கூடாதா? வசூலிக்கிறார்களே, அதிலே எப்படிப்பட்ட கொடுமைகள் இந்த நாட்டிலே இருக்கின்றன? புயல் கடன் கொடுக்கிறோம் என்று சொன்னோம். ராமநாதபுரம் மாவட்டத்தில் கொடுக்கப்பட்ட புயல் கடன் 2,09,00,000 ரூபாய்,

[திரு. செ. மாதவன்] [19th March 1964

1963-ம் ஆண்டு புள்ளிவிவரப்படி 62 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்ட கடனில் திருப்பிக் கொடுக்கப்படாமல் பாக்கி இருக்கிறது. புயலுக்காகக் கொடுக்கப்பட்ட கடனை கால கட்டத்தில் வசூலிக்க முடியாமல் போய் விட்டது என்றால் அதை விட்டு விடக் கூடாதா ? அதை வஜா செய்யக் கூடாதா ? திருப்பத்தூர் தாலூகாவில் மட்டும் 5 லட்சம் ரூபாய் பாக்கி இருக்கிறது. அதைப் பற்றி அமைச்சருக்கு எடுத்துச் சொன்னால், அமைச்சர் சொல்லுகிறார் " அந்தத் தாலூகாவில் இருக்கிறவர்கள் வரி கொடுக்காமல் ஏமாற்றுவதில் கெட்டிக்காரர்கள் " என்று. அந்த முறையில் இந்த மன்றத்தில் சொன்னார்கள். அதையும் அந்த மக்கள் பொருத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் காங்கிரஸ் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ? ஒரு தனிப்பட்ட நபருக்கு 30,500 ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. எதற்காகக் கொடுக்கப்பட்டது ? க்ரோ மோர் ஃபுட் என்ற உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டது. அவர் அதை உபயோகித்து உற்பத்தி செய்யவே இல்லை. மாறாக அந்த இடத்தில் ஒரு பங்களா கட்டிக் கொண்டார். அங்கே, உணவு உற்பத்திக்காகச் செலவழிக்காவிட்டாலும் பரவாயில்லை, கட்டடம் கட்டவாவது செலவழித்தாயே, சபாஷ், அதிலே 15,000 ரூபாயை ரெமிஷன் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கொடுக்கப்பட்ட கடனான 30,500 ரூபாயில் ரெமிஷன் செய்தது போக மீதி 15,500 ரூபாயையாவது வசூல் செய்தார்களா ? அதற்கும் ஒரு சபாஷ் போட்டு, பல தவணைகளில் கொடு, வட்டி இல்லாமல் கொடு என்று இந்த அரசாங்கம் சொல்லியிருக்கிறார்கள். ஏழை விவசாயி கஷ்டப்படுகிறான். கொடுக்கப்பட்ட புயல் லோனை வஜா செய்ய மனம் இல்லை. அதே சமயத்தில் தனிப்பட்ட நபர், ஒரு வழக்கறிஞர், 10 லட்சம் ரூபாய்க்கு சொந்தக்காரராக இருக்கிறவர், அவருக்கு 15,000 ரூபாயை கழித்து விட்டார்கள், மீதி 15,000 ரூபாயை வட்டியில்லாமல் தவணைகளில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். யார் இந்த நபர் என்று ஆராய்ந்து பார்த்தால் அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். ஆகையால் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு விட்டது. அந்த நிலை சர்க்காரில் இருக்கலாமா ? அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம உத்திதோகஸ்தர்களைப்பற்றி அதிகமாக இங்கே பேசப்பட்டது. அவர்கள் நிலையை அரசாங்கம் உடனடியாகப் பரிசீலிக்க வேண்டும். இதற்காக ஒரு காபினெட் சப்-கமிட்டி போடப்பட்டது. போன ஆண்டு இங்கே பதில் சொன்னார்கள் அமைச்சர் அவர்கள், " கமிட்டி போட்டிருக்கிறோம், யோசித்து கூடிய விரைவில் முடிவுக்கு வருகிறோம் " என்று சொன்னார்கள். இன்னும் முடிவுக்கு வரவில்லை. சுப்ரீம் கோர்ட்டே முடிவு தெரிவித்து விட்டது. அதற்குப் பின்னராவது பரிசீலனை செய்து நிவர்த்திக்க வேண்டாமா ? ஏன் சர்க்கார் தயங்குகிறார்கள் ? பஞ்சாயத்துக்குக் கொடுக்கவேண்டும் என்றால் கொடுங்கள், ஆட்சேபனையில்லை. ஒவ்வொரு கிராமமாக தனியாக எடுத்துக் கொண்டு யாருக்கு நிலம் என்று நியதி செய்து விட்டால் கோர்ட்டுக்கு மக்கள் செல்லுவார்களா ? மலேயா நாட்டைப் பற்றித் தெரிந்தவர் நமது அமைச்சர். அங்கே ஒவ்வொரு வீட்டுக்கும், ஒவ்வொரு நிலத்திற்கும் கிராண்ட் என்று கொடுக்கிறார்கள். அதில் அந்தக் காலத்தில் அது யாருக்குச் சொந்தம், இந்தக் காலத்தில் யாருக்குச் சொந்தம் என்று தெளிவாகக் கூறியிருக்கும். அதனால் கோர்ட்டுக்குப் போகும் சூழ்நிலை குறைகிறது.

அட்மினிஸ்ட்ரேஷன் ஆஃப் ஜஸ்ட்டிஸ் என்ற தலைப்பிலே ஸ்டாம்ப் ட்யூட்டி பற்றி ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதிலே " வசூலாகும் நீதி மன்றக் கட்டணங்களின் மொத்தம் நீதி மன்றங்களுக்காகச் செலவாகும் மொத்தத் தொகையை விடக் குறைவாகத் தான் இருக்கிறது " என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையை காங்கிரஸ் அரசாங்கம் சொல்லலாமா ? ஜனநாயக அரசு சொல்லலாமா ? முகலாய சாம்ராஜ்யத்தில் நீதி இலவசமாகக் கொடுக்கப்பட்டது. பிரிட்டிசார் இந்த நாட்டுக்கு வந்த பிறகு தான் சட்டம் போட்டார்கள்—நீதித் துறைக்குச் செல்லுவதற்கு கோர்ட் ஃபீஸ் என்ற நிலை வந்தது. 1947-ம் ஆண்டு ஒரு வெள்ளைக்கார நீதிபதி நமது உயர் நீதி மன்றத்தில் சொன்னார், "என்னுடைய நாட்டில் கூட இந்த நிலை கிடையாது, நீதியை விலைக்கு வாங்கும் சூழ்நிலையை இந்திய நாட்டில் பார்க்கிறேன்" என்று சொன்னார். மத்திய அரசு நியமித்த சட்டக் கமிஷன் எடுத்துக் காட்டியிருக்கிறது. இந்தியாவில் தான் இப்படிப்பட்ட நிலை, நீதியை விலை கொடுத்து வாங்கும் நிலை, இதைக் கண்டு வெட்கப்படுகிறோம் என்று சட்டக் கமிஷன் சொன்னது. இதற்குப் பிறகாவது மாறுதல் செய்யக் கூடாதா ? நீதித் துறையில் சிவில் கோர்ட்டுக்கு கோர்ட் ஃபீஸ் இருக்கிறது. ஆனால், சிவில் கிரிமினல் கோர்ட் செலவுகளையும் இந்தக் கோர்ட் பீஸ் மூலம் சரிக்கட்டும் நிலை இருக்குமானால் இப்படிப்பட்ட நீதி பெறத்தானா வெள்ளைக்காரனை விரட்டினோம் ? இதைப் பற்றி விரிவாக லா கமிஷன் சொல்லியிருக்கிறது. இதைச் சிந்தித்துப் பார்த்து மாற்றி அமைத்து, நம் காலத்திலாவது, ஜனநாயக ஆட்சி காலத்திலாவது, காங்கிரஸ் கட்சிக் காலத்திலாவது நாட்டு ஏழை மக்களுக்கு இலவசமாக நீதி கிடைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



19th March 1964] [திரு. செ. மாதவன்]

*திரு. பி. ஐயராஜ் : மன்ற இடைக்காலத் தலைவி அவர்களே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்தையும் சொல்ல முன் வருகிறேன்.

நில வருவாயில் அதிகமான வரி வருகிறது என்றால் அது தஞ்சை ஜில்லாவில் என்று சொல்லலாம். காரணம் விவசாய ஜில்லா தஞ்சை ஜில்லா. அத்தகைய விவசாய ஜில்லாவாகிய தஞ்சை ஜில்லாவிலே விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்றைய அரசாங்கம் பல்வேறு சட்டங்கள் இயற்றி அதன் மூலமாக விவசாயிகள் நன்மை அடைந்து வருகிறார்கள். நன்மை அடைந்து வந்தாலும் இப்போது விவசாய மக்கள், விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கை எப்படிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை அரசாங்கம் சற்று கவனித்துப் பார்க்கவேண்டும். தஞ்சை ஜில்லாவிலே பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், 60-40 சட்டம் வந்த பிறகு நல்லதொரு உணர்ச்சி, நல்லதொரு உணர்வு வந்தாலும் கூட இன்றைய இயற்கை கோளாறு காரணமாக, சமீபத்தில் ஏற்பட்ட அதிகமான மழை காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அங்கு விவசாயத் தொழிலாளர்கள், சாகுபடி செய்கிறவர்கள், குத்தகைக்கு எடுத்து உழும் விவசாயி, எந்த விதத்தில் நிலச்சுவாந்தாருக்கு சரியானப் பிரகாரம் குறிப்பிட்டிருக்கிற குத்தகைப்படி நெல் அளக்க முடியும் என்று அரசாங்கம் கவனித்துப் பார்க்கவேண்டும். அந்த முறையில் அளக்க முடியாத காரணத்தினால் தஞ்சை ஜில்லாவில் நூற்றுக்கணக்கான விவசாயிகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுவேனானால் அத்தகைய ஒரு நிலைமையை மிகைப்படுத்திச் சொல்லுவது அல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். காரணம் அதிக மழை காரணத்தினால் தஞ்சை ஜில்லா கிழக்குப் பகுதியில் இருக்கிற விவசாய நிலங்கள் அத்தனையிலும், ஒரு ஏக்கருக்கு 15-20 மூட்டை காணுகிற நிலத்தில் 5, 6 மூட்டை காணும் அளவுக்கு விளைவு குறைந்திருக்கிறது. அதன் காரணத்தினால் குத்தகை நிலம் உள்ளவர்கள், விவசாயிகள், நிலச்சுவாந்தாருக்கு எழுதிக் கொடுத்திருக்கும் அளவுக்கு நெல்லை அளக்க முடியவில்லை. அதனால் ரெண்ட் கோர்ட்டில் விவசாயிகளை அப்புறப்படுத்த முற்பட்டு நிலச்சுவாந்தார்கள் முயற்சி செய்கிறார்கள். அதை விசாரித்து சரியான தூதுகோஷ்டி அனுப்பி எப்படி இந்த வருஷம் தஞ்சை ஜில்லாவிலே விளைவு ஏற்பட்டிருக்கிறது என்று கவனிக்க வேண்டும். எத்தனையோ கமிஷன்கள் வருகின்றன. ஆனால், அவைகள் விவசாயத் தொழிலாளர்களை, சாகுபடிதார்களை நேரடியாகக் கண்டு, அவர்கள் குறைகள் என்ன என்பதை விசாரிப்பதில்லை. ஆனால், நிலச்சுவான்தார்கள் அல்லது சர்க்கார் அதிகாரிகளைத்தான் கண்டு அவர்கள் விசாரிக்கிற காரணத்தினால், விவசாயிகள் தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற இன்னல்களை, நெருக்கடியை எடுத்துச் சொல்ல முடியவில்லை. இந்த வருஷம் விவசாயிகளுக்கு அரசாங்கம் நல்ல பல சலுகைகளைத் கொடுத்திருந்தாலும் கூட, பலவிதமான " லோன்கள் " கொடுத்து உதவியிருந்தாலும் கூட, விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், விவசாயிகள் சட்டப் பிரகாரம் நெல் அளக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் கவனித்து அவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

[திரு. பி. ஜயராஜ்] [19th March 1964

தேவஸ்தானங்களுக்கு நிலங்கள் இருக்கின்றன, தேவஸ்தானத்தில் எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்த வருஷம் எப்படி நெல் அளந்திருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அதைப் பார்த்துக் கூட, நமது சர்க்கார் அதிகாரிகளின் கணக்கை வைத்துக்கூட, தனிப்பட்ட விவசாயம் செய்கிற விவசாயிகள் எப்படி நெல் அளக்க முடியும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நிலைமையை சற்று ஆராயவேண்டும். ஆனி மாதம், உழவு மாதத்தில் தான் நெருக்கடி தெரியும். அதுவரையில் மிராசுதார்கள் எந்த விதமான தொந்தரவும் கொடுக்க மாட்டார்கள். அந்த மாதத்தில்தான் குத்தகை பிரகாரம் நெல் அளக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி அவர்களை நிலத்தை விட்டு ஏன் அப்புறப்படுத்தக்கூடாது என்று நோட்டீஸ் கொடுப்பார்கள். ஏழை விவசாயிகள் குத்தகைச் சீட்டுப்படி நெல் அளக்க முடியாத நேரத்தில் அவர்களை அப்புறப்படுத்துவதற்கு வழி உண்டாகும். இதை அரசாங்கம் உடனே கண்காணித்து, இந்த ஆண்டு தஞ்சை ஜில்லாவில் ஏற்பட்ட நிலையை உணர்ந்து விவசாயிகளுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் விவசாயிகளுக்கு எத்தனையோ நன்மைகள் செய்தாலும் கூட, விவசாயிகள் அதனுடைய முழுப்பலனையும் அனுபவிக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தப் பண்ணையாளுக்கு மிக எளிதாக ரூ. 150 பணம் கொடுத்து, நிலத்தில் ஒழுங்காக வேலை செய்யவில்லை என்று நிலச்சுவான்தார்கள் அவர்களை அப்புறப்படுத்தும் நிலை இருக்கிறது. ஆகவே, ரூ. 150 கொடுப்பது என்பதை எடுத்துவிட்டு, எந்த விதத்திலும் பண்ணையாட்கள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தக் கூடாது என்று ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும். அப்பொழுதுதான் பண்ணையாள் சட்டத்தைக் கொண்டுவந்தும், விவசாயிகள் அதனுடைய பலனை அனுபவிக்க முடியும்.

குறிப்பாக, சில இடங்களில் குத்தகைச் சீட்டு இல்லாமலே விவசாயிகள் சாகுபடி செய்துகொண்டு வருகிறார்கள். குத்தகைச் சீட்டு இல்லை என்ற காரணத்தைக் காட்டி, ஆகவே, விவசாயி அந்த நிலத்தை உழவில்லை என்ற ஒரு வாதத்தை கோர்ட்டு முன் எடுத்துச் சொல்லி, விவசாயிகளை நிலச்சுவான்தார்கள் வெளியேற்றுகிறார்கள். அதற்குக் காரணம் கிராம அதிகாரிகளுக்குப் போதுமான ஊதியம் கொடுக்கவில்லை என்பதனால் கிராம அதிகாரிகள் நிலச்சுவான்தார்களுக்கு சாதகமாக இருக்கிறார்கள். அடங்கலில் இந்தக் காலத்தில் குத்தகைக்காரர் என்று எழுதாமல், அந்த அடங்கலைக் கோர்ட்டில் காட்டி விவசாயிகளை அப்புறப்படுத்தக் கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கிராம அதிகாரிகள் சர்க்கார் அதிகாரிகள் என்றாலும், நிலச்சுவான்தார்கள் கொடுக்கிற ஊதியத்திற்காக அவர்களுக்கு அனுதாபமாக வேலை செய்கிறார்கள். ஆகையினால், சட்டப் பிரகாரம் அவர்களுடைய கடமைகளையும், பொறுப்புகளையும் சரிவர நிறைவேற்ற முடியாத நிலைமைகள் இருக்கின்றன. கிராம அதிகாரிகள் முழு நேர ஊழியர்களா, பகுதி நேர ஊழியர்களா என்று உடனடியாக நிர்ணயிக்கப்பட வேண்டும். கிராம அதிகாரிகளுக்கு போதுமான சம்பள உயர்வும் அளிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால், பல ஆயிரக் கணக்கான விவசாயிகள் இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். காரணம் என்ன? அவர்கள் மிராசுதார்களுக்கு ஆதரவாக இருக்கிற காரணத்தினால், விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படுகிறது. அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் போதவில்லை. கர்ணம், பட்டாமணியம் போன்ற கிராம உத்தியோகஸ்தர்கள் சாகுபடிதார் என்று அடங்கலில் குறிப்பிடாமல், அடங்கலைக் கோர்ட்டில் வைத்து விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படக் கூடிய முறையில் சாட்சியம் கூறுகிறார்கள். ஆகவே, உடனே அரசாங்கம் இதில் கவனம் செலுத்தி, எந்த விவசாயி ஒரு நிலச்சுவான்தாரிடம் குத்தகை சாகுபடி செய்கிறாரோ, அவரை சாகுபடிதார் என்று அடங்கலில் எழுத வேண்டும் என்று கண்டிப்பாக உத்தரவு போட வேண்டும். பரஸ்பரம் மிராசுதார்களும், விவசாயிகளும் தங்களிடையே உள்ள நம்பிக்கையின்பேரில், நெருங்கிய தொடர்பு காரணமாகக் குத்தகைச் சீட்டு எழுதாமலேயே கூட சாகுபடி செய்துகொண்டு வருகிறார்கள். அந்த நிலையில் இவர்களிடையே மனக்கசப்பு ஏற்படும்பொழுது, நிலச்சுவான்தார் குத்தகைச் சீட்டு இல்லாத



19th March 1964] [திரு. பி. ஜயராஜ்]

காரணத்தால், சாகுபடிதார் அல்ல என்று சொல்லி, குத்தகைதாரை நிலத்தை விட்டு அப்புறப்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் மற்ற ஊழியர்களுக்கு நிர்ணயித்திருப்பது போல் கிராம அதிகாரிகளுக்கும் தகுந்த ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும். கிராம அதிகாரிகளுக்கு எவ்வளவு சம்பளம் நிர்ணயிப்பது என்பது சம்பந்தமாக ஒரு சப் கமிட்டி போடப்பட்டு, அது இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்து கொண்டு வருகிறது. இந்தக் கமிட்டி உடனே பரிசீலனை செய்து கிராம அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு கொடுப்பதுபற்றி தாமதம் இல்லாமல் முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாட்டில் இருக்கிற ஏழை விவசாயிகள் நல்ல பலன் அடைவதற்கும், அரசாங்கத்திற்கு வர வேண்டிய வருவாய் நல்ல முறையில் வசூலாவதற்கும், அரசாங்கத்திற்கு நல்ல ஒத்துழைப்பு கிடைப்பதற்கும், வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, விவசாயிகள் இந்த வருஷத்தில், எந்த விதத்திலும் நிலத்தை விட்டு அப்புறப்படுத்தப்படாமல் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும், வேண்டிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. துரையரசன் :** தலைவர் அவர்களே, வருவாய் துறை மான்ய கோரிக்கையின் மீது எங்கள் கட்சி சார்பாக கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ந்து இங்கே இரு தரப்பிலும் சொல்லப்பட்ட கருத்துக்கள் இந்த நாட்டின் முதுகு எலும்புபோல் இருக்கும் விவசாயிகளின் நிலைமை எவ்வளவு சீர் கெட்டிருக்கிறது, எத்தனை இன்னல்களை விவசாயிகள் அனுபவித்து வருகிறார்கள், எவ்வளவு பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள் என்பதைத் தான் விளக்குகின்றன. இதையெல்லாம் அங்கத்தினர்கள் தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய நாட்டில் 100-க்கு 80 பேர்கள் விவசாயிகள் என்பதை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற இன்னல்களை எடுத்துக் கூறி, அவர்களுடைய கோரிக்கைகளையும் தெளிவாக எடுத்துச்சொல்லி, அந்த அளவுக்கு விவசாயிகளுக்கு நன்மை செய்திருக்கிறதா இந்த சர்க்கார் என்ற பல நல்ல விளக்கங்களை எடுத்துச் சொன்னார்கள் ஆளும் கட்சியினர் கூட.

1948-ம் ஆண்டுக்குப் பிறகு இந்த நாட்டிலே ஏராளமான ஜமீன் கிராமங்கள், இனாம் கிராமங்கள் ஒழிக்கப்பட்டு, அதுவும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதிகளில் பல நூற்றுக் கணக்கான கிராமங்கள் டேகன் ஓவர் செய்யப்பட்டன. அப்படி டேகன் ஓவர் செய்யப்பட்ட ஜமீன், இனாம் கிராமங்களில், அந்த கிராமங்களை சர்க்கார் எடுத்துக்கொள்வதற்கு முன்பாக ஒரு பட்டாதாருக்கு எவ்வளவு நிலங்கள் இருந்தன, விதிக்கப்பட்ட தீர்வை எவ்வளவு, சர்க்கார் எடுத்துக்கொண்ட பிறகு ஒரு பட்டாதாருக்கு எவ்வளவு நிலம், எவ்வளவு தீர்வை என்ற ஒரு நிர்ணயம் செட்டில்மெண்டு காலத்தில் செய்யப்பட்டிருக்கிறதா என்று சொன்னால், செய்யப்படவில்லை. நான் பேசும்பொழுது அமைச்சர் அவர்கள் சிரிக்கிறார்கள் ஆனால், இருக்கிற நிலைமையை நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு விளக்க வேண்டும். தொடர்ந்து 7, 8 ஆண்டுகளாக அடுத்தடுத்து என்னுடைய வட்டாரத்திலே பஞ்சம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை நமது அமைச்சர் நன்றாக உணர்வார்கள். அடுத்த அயன் கிராமத்திலுள்ள தீர்வைதான் சர்க்கார் எடுத்துக்கொண்ட கிராமங்களுக்கும் வசூலிக்க வேண்டும் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கிராமத்தார் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அது சம்பந்தமாக உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பு வழங்கிற்று. அந்த உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பைக்கூட உதாசீனம் செய்து, இன்றைக்கு ரெவின்யூ இலாகாவினர் எவ்வளவு அதிகப்படியான தீர்வை வசூலிக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு அந்த வட்டாரத்தில் வசூலித்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டு என்ன நிலைமை, சென்ற ஆண்டு என்ன நிலைமை என்று பார்த்தால், ஆண்டுக்கு ஆண்டு ஒரு பகுதியிலே சிறிது

விளைச்சல், மற்ற பகுதிகளில் பஞ்சம், என்ற நிலைமை ஏற்பட்டுவருகிறது. கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பாக, வருவாய்த் துறை இலாகாவுக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். எங்களுடைய வட்டாரத்தில் இந்த ஆண்டு பெரும் பகுதியில் பருவ மழை தவறிய காரணத்தினால், பஞ்சம் பீடிக்கிற நிலைமை இருக்கிறது, ஆகவே கடன் வசூலிப்பதையும், வரி வசூலிப்பதையும் ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு எழுதியிருந்தேன். நான்கு தினங்களுக்கு முன் வருவாய்த் துறை இலாகாவிலிருந்து எனக்கு கிடைத்த பதில் என்னவென்றால் இந்த ஆண்டு அந்த வட்டாரத்தில் அப்படி ஒன்றும் பஞ்சம்இல்லை என்று மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியிடமிருந்து தகவல் கிடைத்திருக்கிறது என்பதுதான். உண்மை நிலவரம் அதுஅல்ல. என்னுடைய தொகுதியும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியும் பக்கத்துக்குப் பக்கத்தில்தான் இருக்கிறது. இரண்டிற்கும் எல்லை ஒன்றாக இருக்கிறது. அங்கே கடுமையான பஞ்சம் ஒரு பகுதியில் ஏற்பட்டிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த நேரத்தில் அங்கே அதிகாரிகள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலுமுள்ள ஆடு மாடுகளைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஜப்தி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். உழவு மாடுகளை சர்க்கார் ஜப்தி செய்யக்கூடாது என்ற சட்டமிருந்தாலும், உழவு மாடுகளை ஜப்தி செய்து, அதை மாற்றி வண்டி மாடுகள் என்று எழுதிவிடுகிறார்கள். சர்க்கார் எடுத்துக்கொள்வதற்கு முன்பாக எவ்வளவு பாக்கி இருந்ததோ, அதை வஜா செய்தால்கூட, எங்களுடைய இந்த இரண்டு தாலுகாக்களையும் பொறுத்த வரையில் ரூ. 5 லட்சத்திலிருந்து 10 லட்சம் வரை வரலாம். எத்தனையோ துறைகளில் நம்முடைய பணம் பாழாக்கப்பட்டு வருகிறது. ஆகவே நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இந்த ரூ. 10 லட்சத்தை வஜா செய்வதில் நட்டம் ஒன்றுமில்லை.

என்னுடைய வட்டாரத்திலே "டேக்கன் ஓவர்" கிராமங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட தொகைகளைப் பொறுத்த வரையில் ஏராளமான மோசடிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களிடம் பல முறைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஸி.ஐ.டி.யை நியமித்து கிராமப்புறத்திலுள்ள விவசாயிகளுடைய ரசீதுகளைப் பார்த்தால், உண்மை விளங்கும். மோசடி செய்த ஒரு சிலர் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பலர் அகப்படாமல் இருக்கிறார்கள். அதே விவசாயிகளிடம் போய், மீண்டும் தொகை செலுத்தவேண்டுமென்று சொல்லி கட்டாயப்படுத்தி வசூலிக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரு பரிகாரம் காண வேண்டாமா? ரெவின்யூ இலாகா மிகவும் பெரிய இலாகா. அந்த இலாகாவில் நடக்கிற ஊழல்களும், கீழ் மட்டத்தில் நடக்கிற மோசடிகளும் கணக்கில் அடங்கா. இதற்கு ஒரு பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுப் பட்டாக்களைப் பற்றி பல அங்கத்தினர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இந்த நிலைமை நாடு பூராவிலும் இருக்கிறது. கூட்டுப் பட்டாவாக இருக்கிற காரணத்தால் பலர் கடன் வாங்க முடியாமல் இருக்கிறார்கள். கூட்டுப் பட்டா முறையை மாற்றுவதற்கு உடனடியாக சர்க்கார் தக்க பரிகாரம் செய்ய வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக வரி கொடுக்கிறவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து தர வேண்டும். காலாகாலத்தில் இந்த வசதிகள் செய்து தரப்பட வேண்டும். நாங்கள் கடைக்கோடியில் வாழ்பவர்கள். தஞ்சையிலுள்ள ஸி.எம்.பி. வழியாக, அறந்தாங்கிப் பகுதிக்கு தண்ணீர் வந்து சேருவதற்கு முன்பே ஆற்றிலே தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. இந்த ஆண்டு அங்கே தண்ணீர் இல்லாத நேரத்தில்தான் நம்முடைய அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டையிலே தேர்தலுக்கு முகாமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவ்வளவு பயங்கரமான நிலையிலே வாழ்கிறவர்கள் பட்டுக்கோட்டை, அறந்தாங்கிப் பகுதியிலுள்ளவர்கள். வேறு தொழில் வசதிகளும் இல்லை. ஹரிஜனங்களுக்கு பட்டாக்கள் வழங்குவதிலுள்ள குறைபாடுகளைப் பற்றி ஆளும் கட்சியிலுள்ளவர்களும் சொன்னார்கள். இதிலும் பல முறைகள் கையாளப்படுகின்றன. பஞ்சாயத்து ஒன்றியப்புத் தலைவர்கள், [illegible]ராட்சித் தலைவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால்,





ஹரிஜனங்களுக்குப் பட்டா வழங்கக்கூடாது என்ற ஒரு நிலைமையை சில இடங்களில் உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள். தொடர்ந்து 3 ஆண்டு காலம் உழுகிறார்கள் என்று சொன்னாலும், அவர்களுக்கு பி—மெமோ கொடுத்துத் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது. 3-வது ஆண்டில் பத்து வேலி நிலம் வைத்திருப்பவருக்கு மாற்றப்படுகிறது. இந்த நிலைமைகளுக்குப் பரிகாரம் காணவேண்டியது ரெவின்யூ இலாகா. எங்கள் தொகுதியைப் பொறுத்த வரையில், எங்கேயாவது ஒரு ஹரிஜனனுக்காவது ஒரு செண்ட் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்ற குற்றச்சாட்டை நான் பகிரங்கமாக எடுத்துச் சொல்ல முடியும். அந்த அளவுக்கு நிலங்களில் சாகுபடி செய்கிறவர்களிடமிருந்து எடுத்து விடுகிறார்கள். இந்த நிலைமை எத்தனை நாட்களுக்கு நீடிக்க வேண்டும் என்று நான் கேட்கிறேன்!

கிராம அதிகாரிகள் எல்லோருமே கெட்டவர்கள் என்று நான் சொல்லவில்லை. ஆயிரக்கணக்கான ரூபாய்கள் என் வட்டத்திலே சில இடங்களில் மோசடி செய்யப்பட்டு வந்திருக்கின்றன. அதிலும் சென்ற இரண்டு ஆண்டுகளாக இந்த மன்றத்திலே இதைப் பற்றி எடுத்துச் சொல்லியும், கவனிக்கப்படவில்லை என்றால், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், சர்க்காரும் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று கிராம மக்கள் நினைப்பதில் தவறு ஒன்றும் இல்லை. ஒருவர் 400 ரூபாய் கட்டினார் என்று சொன்னால், அது சர்க்கார் கஜானாவுக்குப் போவதில்லை. மேலும் ரூபாய் 400 கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. இதற்கு எல்லாம் ஒரு பரிகாரம் காண வேண்டும். கிராம அதிகாரிகளை நிரந்தரமான அதிகாரிகளாக ஆக்காவிட்டாலும் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டும். வெட்டி, தலையாரிகளுக்கு பிரயாணப்படி கொடுப்பது இல்லை. அவர்களுக்கு அந்தப்படியை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தஞ்சை மாவட்டத்திலே வருட ஆரம்பத்திலே பஞ்சம் வந்தது. இடையிலே பெரு மழை ஏற்பட்டது. அதற்குப் பிறகு தண்ணீர் இல்லை. ஆகவே கடைக் கோடியில் வாழ்கின்ற தஞ்சை மாவட்ட விவசாயிகளைப் பொறுத்த வரையில், தயவு செய்து கடன் பாக்கிகளை வசூலிக்காமல் இரண்டாண்டு ஒத்திப்போட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிலும் மிகவும் பின்தங்கி உள்ள பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு வரி வஜா செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், அங்கே நடைபெற்ற ஊழல்கள், மோசடிகளைக் கண்டு பிடிப்பதற்கு ஒரு விசாரணைக் குழுவை நியமித்தால் பல லட்சாயிரக்கணக்கான ரூபாய் மோசடியைக் கண்டு பிடிக்க முடியும் என்ற உத்தரவாதத்தைத் தந்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. எல். ஆனந்தன்** : சட்டமன்ற தற்காலிக தலைவர் அவர்களே, பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மான்யக் கோரிக்கையை ஆதரித்து, என்னுடைய தொகுதியில் உள்ள சில குறைகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கள்ளக்குறிச்சி தாலுகாவில் 25,000 ஏக்கர் தரிசு நிலங்களும் 20,000 ஏக்கர் பஞ்சம தரிசுகளும், 10,000 ஏக்கர் நிலங்களுக்கு மேல் சாகுபடிக்கு லாயக்கான நிலங்களும் இருக்கின்றன. மேற்படி நிலங்களை ஏழை விவசாயிகளும், ஏழை ஹரிஜனங்களும் பல ஆண்டுகளாகப் பயிர் செய்து கொண்டு வருகிறார்கள். அந்த நிலங்களைப் பட்டா செய்து கொள்ளவேண்டும் என்றால் பட்டா ஒன்றுக்குச் சுமார் ரூ. 100 அல்லது 150-க்குமேல் செலவாகிறது. ஏழை விவசாயிகள் இந்தச் செலவுக்கு ஈடு செய்யமுடியாமல் இருப்பதனால், அவர்களால் பட்டா வாங்கிக் கொள்ள முடியவில்லை. அங்கே பண வசதி உள்ள ஜாதி ஹிந்துக்கள் தங்கள் மனைவி பேரிலும், பிள்ளைகள் பேரிலும் தனித்தனியாக ஐந்து ஏக்கர் வீதம் பிடித்து பட்டா வாங்கிக் கொள்ளுகிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் புதுப்பட்டு, கணியாம்பூர், சின்ன சேலம், நாரியப்பனூர், ராயர் பாளையம் முதலிய கிராமங்களிலும் மற்ற கிராமங்களிலும் இம்மாதிரி நடைபெறுகிறது. அதோடு மட்டுமல்லாமல் புதுப்பட்டு என்ற கிராமத்தில் சுமார் 40 வருஷமாக ஹரிஜனங்கள் பயிரிட்டு வந்த நிலங்களுக்கு அங்கே உள்ள அதிகாரிகள் பட்டா செய்து கொடுக்க முன்வரவில்லை. காரணம்

[திரு. எல். ஆனந்தன்] [19th March 1964

என்னவென்ருல் அவர்கள் பணம் கொடுத்தால்தான் பட்டா கொடுக்கிருர்கள். தற்போது பெரிய கிராமங்கள் சர்வே செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது. கள்ளக்குரிச்சித் தாலூகாவில் கரடி சித்தூர், மதுரா, செல்லம்பட்டு கிராமமும், வடக்கனந்தல் மதுரா அம்மாப்பேட்டை கிராமமும், கச்சிராயபாளையம் மதுரா வெங்கட்டாம் பேட்டை கிராமமும், அரிய பெருமானூர் மதுரா ரங்கநாதபுரம் கிராமமும், சீர்ப்பனந்தல் மதுரா கரையாம்பாளையம் கிராமமும் சுமார் 1½ மைலுக்கு மேல் இருக்கிறது. மேற்படி கிராமங்களில் ஜனத்தொகை 2,000-க்கு மேல் இருக்கிறது. ஆகையால், இந்த கிராமங்களைச் சர்வே செய்யும்போது தனித்தனி கிராமங்களாக சர்வே செய்தால், திட்ட வேலைகளுக்கும் நிர்வாகத்துக்கும் சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தனித்தனியாக பஞ்சாயத்துக்களை அமைத்து அவரவர்கள் ஊரிலே திட்ட வேலைகளைச் செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

12-30 p.m. அடுத்தபடியாக, கிராம அதிகாரிகளுக்கும், தோட்டி, தலையாரிகளுக்கும் கொடுக்கும் சம்பளம் போதுமானதாக இல்லை. அவர்கள் தாலூகா ஆபீசுக்குப் போனால், அவர்களுக்குப் பயணப்படி கிடையாது. ஒரு கிராம அதிகாரியோ அல்லது தோட்டியோ, தலையாரியோ மாதம் ஒன்றுக்கு குறைந்தது 4, 5 தடவையாவது தாலூகா ஆபீசுக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. அவர்களுக்குப் போக வரச் செலவுப் பணமும், சாப்பாட்டுச் செலவுக்குப் பணமும், கொடுப்பதோடுகூட, அவர்களுடைய சம்பளத்தையும், கிராம அதிகாரிகளுக்கு ரூ. 60 வீதமும், தோட்டி, தலையாரிகளுக்கு ரூ. 45 வீதமும் போட்டுக் கொடுத்தால் அவர்கள் தவருன வழிகளில் போகாமல் இருக்க ஏதுவாக இருக்கும் என்பதைச் சொல்லி கொண்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மன்றத் தலைவர் அவர்களே நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியத்தின் பேரில், எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வருவாய்த்துறை அமைச்சரவர்கள், சென்ற ஆண்டு வரவு செலவு திட்டத்தில் எதிர்பார்த்த தொகை ரூ. 829·94 லட்சம். திருத்தப்பட்ட திட்டத்தில் வருவாய் வந்திருப்பது ரூ. 788.21 லட்சம். எனவே எதிர்பார்த்த அளவிலே ரூ. 41.73 லட்சம் குறைந்திருக்கிறது. அந்தக் குறைவுக்கு என்ன காரணம் என்று நான் யோசித்தபோது, இந்த அவையின் முன்னல் வைக்கப்பட்டிருக்கும் இந்த மானியத்தோடு "பஞ்சத்தையும்" சேர்த்திருக்கிருர்கள். பஞ்சத்தின் காரணமாக குறைந்திருக்குமோ என்று கருதுகிறேன். தொழில் துறை, பெருகி வருகிறது என்று சொல்லப்பட்டாலும், நிலத்தைப் பொறுத்தவரை, நாளுக்கு நாள் அது குறைந்து கொண்டேதான் வருகிறது. தொழிற்சாலை கட்ட வேண்டும் என்ருலும் சரி, ஊழியர்களுக்கு வீடுகள் கட்டவேண்டுமென்ருலும் சரி, இன்றைக்கு அயன் நஞ்சை நிலங்களையெல்லாம் சர்க்காரிலே எடுத்துக் கொண்டு செயல்படுத்துகிருர்கள். அவ்வாறு செய்யப்படுவதால், சென்ற ஆண்டு இருந்த நிலத்தின் அளவைவிட இந்த ஆண்டு இருக்கும் நில அளவு கட்டாயம் குறைவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த அளவிலே இந்த திட்டத்தில் தொகை குறைந்திருக்குமா என்று அமைச்சர் அவர்கள் விளக்கத்தைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

நில வரி வருவாயைப்பற்றிப் பேசப்படும் நேரத்தில், இந்த நில வரியை வசூலிக்கும் முறையைப் பார்த்தால், மேலே சீஃப் செக்ரடரியில் ஆரம்பித்து, கடைக்கோடியில் வெட்டியார், தலையாரி வரை அமைந்திருக்கும் நிலை இருக்கிறது. உழவர்கள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படலாம். அப்படிச் சொல்லும்போது, இந்தக் கடைநிலை ஊழியர்கள் நரம்புகள் என்று சொன்னலும்கூட அது மிகையாகாது. இன்றைக்கு இருக்கும் அமைப்பு முறையைப் பார்த்தால், கால் நரம்பு என்றுகூட சொல்லலாம். ஆகவே அந்தக் கால் நரம்பு அறுந்து விட்டால், தளர்ந்து விட்டால், அரசாங்கம் என்கிற தேர் ஓட முடியாது என்று



19th March 1964] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், அவர்களுக்கு இருக்கும் தொல்லைகளும், தொந்தரவுகளும் இது வரைக்கும் தீர்ந்தபாடு இல்லாத நிலைமைதான் இருக்கிறது. பழங்காலத்தில் "கலெக்டரால் ஆகாதது, கணக்கரால் ஆகும்" என்று ஒரு பழமொழி கிராமாந்திரங்களிலே உண்டு. அது இன்றைக்குப் பொருந்தாததாக இருக்கிறது என்பதைத்தான் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கும் கணக்கர்களைப் பார்த்தால், அவர்கள் எந்தவிதமான உருப்படியான வேலையையும் செய்யமுடியாமல் இருக்கிருர்கள். அந்த அளவுக்கு அவர்கள் உத்தியோகம் இருக்கிறது ; அவர்கள் பெயரளவில் தாண் உத்தியோகஸ்தர்களாக இருக்கிருர்கள் ; முழுநேர உத்தியோகஸ்தர்கள் அல்ல என்ற பிரிவில் கிராம அதிகாரிகளாக இருப்பதால், அவர்கள் இன்னும் நிரந்தரமான சர்க்கார் ஊழியர்களாக ஆக்கப்படவில்லை. அவர்களெல்லாம் ஓய்வு நேர, பாதி நேர ஊழியர்கள் என்ற அளவில்தான் பணி புரிகிருர்கள். சம்பளமும் அந்த அளவுக்குத்தான் அவர்களுக்கு இருக்கிறது. பஞ்சாயத்து ராஜ்யம் அமைக்கப்பட்ட பிறகு, இவர்கள் பஞ்சாயத்து வரிகளையும் வசூலிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனல் இவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லை என்று பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் குறை சொல்லுகிருர்கள். இவர்கள் சொல்லுகிருர்கள், தாங்கள் வருவாய்த் துறைக்குத்தான் கட்டுப்பட்டவர்கள், தங்களுக்கு மேல் அதிகாரி ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், கலெக்டர் இவர்கள்தான், நீங்கள் எங்களைப் பணிக்காதீர்கள் என்று சொல்லக் கூடிய, இரண்டுங்கெட்டான் நிலைமைதான் இருக்கிறது. அவர்களுடைய வாழ்வில் உரிய நிலை அளிக்கப்பட வேண்டாமா என்றுதான் நாம் யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு ஆடிட் ரிபோர்ட்டில் பார்க்கும்போது, சில கிராம அதிகாரிகள் பல வகைகளில் சுமார் ரூ. 25,000 வரை கையாடல் செய்திருப்பதாக, கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை அவர்களிடமிருந்து வசூலிக்கப்படவில்லை. காரணம் என்ன ? கிராம அதிகாரிகள், வி.எம்.கள், கணக்கர்கள் உத்தியோகத்திற்கு மனுச் செய்துகொள்ளும் காலத்தில் சொத்து மதிப்பு இவ்வளவு என்று கொடுத்திருப்பார்கள். உத்தியோகம் வந்த பிறகு கையாடல் நடந்திருக்கிறது ; அப்படிக் கையாடல் நடந்த பிறகும் சொத்து மதிப்பு இருந்தும், வசூலிக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன என்பதை கனம் அமைச்சர் மூலம் அறிய விரும்புகிறேன்.

அடுத்து நில வரியைப் பற்றி இங்கே நாம் பேசுகின்ற நேரத்தில், மதிப்பிற்குரிய தட்சிணமூர்த்தி கவுண்டர் அவர்கள், அந்தக் காலத்தில், சேக்கிழார் காலத்தில், ஆறில் ஒரு பங்கு வரியாக இருந்தது என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது நடப்பது சேக்கிழார் காலம் அல்ல. இந்தக் காலத்திற்கும் அந்தக் காலத்திற்கும் வித்தியாசம் உண்டு. அந்தக் காலத்தில் ஆறில் ஒன்று என்ருல், விளைந்ததில், கண்டு முதலில் ஆறில் ஒன்று. இப்பொழுது எப்படி ? அப்படியில்லை, விளைந்தாலும் விளையாவிட்டாலும், சாவியாகப் போனலும், தரிசாக கிடந்தாலும், மழை பெய்தாலும், பெய்யாவிட்டாலும், தண்ணீர் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், விவசாயி எக்கேடு கெட்டுப் போனலும், சர்க்காருக்கு உரிய கிஸ்தியைக் கொடுத்தே தீர வேண்டும் என்ற நிபந்தனை இந்தக் காலத்தில் இருக்கிறது. ஆகவே இந்தக் காலத்திற்கும், அந்தக் காலத்திற்கும் வேற்றுமை, வித்தியாசம் இருக்கிறது. அது மட்டுமல்ல. அந்தக் காலத்தில் பக்தியின் காரணமாக சிறுத்தொண்ட நாயனர் தன்னுடைய சொந்தப் பிள்ளையை அறுத்துச் சமைத்து ஆண்டவன் பசியை போக்கினர். ஆனல் இந்தக் காலத்தில் அப்படிச் செய்தால் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்படுவார். விவசாயி பசி தாங்காமல் சாகிறேன் என்று சொன்னலும் கவனிப்பார் இல்லை. ஆகவேதான் சொல்லுகிறேன். இந்தக் காலத்திற்கும் அந்தக் காலத்திற்கும் ஒத்து வராது என்று. அது மட்டும் அல்ல. ரெவினியூ இலாகாவையே எடுத்துவிட வேண்டும் என்று சொன்னர்கள். முன்பு இருந்ததைவிட அதிகமாக அதிகாரிகளை போட்டும் வேலைகள் சரிவர கவனிக்கப்படாத காரணத்தினல்தான் அதிருப்தி ஏற்பட்டு இருக்கிறது. அதற்காக மூட்டைக்கு பயந்து கொண்டு, வீட்டைக் கொளுத்தலாமா ? இலாகாவையே எடுத்துவிட வேண்டும்

என்பது நல்லதல்ல. கல்வி மான்யத்தின் மீது பேசும்போது அமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். கண் தெரியாதவர்களுக்கு தூர திருஷ்டிக் கண்ணாடி கொடுத்து, தெரிய வைக்கும் அளவுக்கு பாடுபடுகிறோம் என்று சொன்னார்கள். இப்பொழுது சொல்கிறேன். கண்ணைக் கெடுக்க வேண்டாம். பார்வையை விருத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும் என்று.

கிராம அதிகாரிகளால் வேலையைச் சரிவர கவனிக்க முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் அவர்களுடைய வேலைப்பளு பல மடங்கு அதிகமாக ஆகிவிட்டது. அது மட்டும் அல்ல. அவர்கள் பல அதிகாரிகளுக்கும் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்குக் கீழ் உதவி அதிகாரிகள் போட்டு தக்க முறையில் நடவடிக்கை எடுத்தால் அது நலமாக இருக்கும் என்று என் யோசனையை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அது மட்டும் அல்ல, பல இடங்களில் இன்னும் கிராமங்கள் பிரிந்து கொடுக்கப்படாமல் இருக்கின்றன. உதாரணமாக எங்கள் ஊரில் ஒரு கணக்குப் பிள்ளை இரண்டு வில்லேஜ் முன்சீப்களுக்கு வேலை செய்ய வேண்டியிருக்கிறது. தனித்தனியாக இரண்டு வி.எம்.கள் இருந்தும் கர்ணம் மட்டும் ஒருவரேதான். ஆகவே அதை மாற்றித் தனித்தனியாக சங்கமேஸ்வரபுரம் கிராமத்திற்கும், மங்கம்மாள்புரம் கிராமத்திற்கும் இரண்டு கர்ணங்களை தனித்தனியாக போடவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதிக வேலைப் பளு இருப்பதால் ஒருவரால் தனது கடமையை சரிவரச் செய்ய முடியவில்லை. அதற்கு சர்க்கார் வழிவகை செய்ய வேண்டும் என்றும் கிராம அதிகாரிகளுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மழை பெய்தால்தான், தண்ணீர் வந்தால்தான் விவசாயம் செய்ய முடியும். அண்மையில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பாசன வசதி துறை அமைச்சராகவும் இருப்பதால் எங்கள் பகுதிக்கு வந்திருந்த பொழுது, நான் மட்டும் அல்ல, எல்லா விவசாயிகளும் தண்ணீர் இல்லை என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் "நான் என்ன செய்யட்டும், மழை பெய்தால் தண்ணீர் கொடுக்கிறேன்; மழை இல்லையே, நான் என்ன செய்யட்டும்" என்று சொன்னார்கள்.

**கனம் திரு. வெ. ராமைய்யா** : தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு கனம் அங்கத்தினர் பொறுத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது அவர்கள் பேசுவது வெறும் கற்பனை இரண்டு தினங்களுக்கு முன்பு நடந்ததை குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். கூட்டத்தில் அவர்களும்கூட இருந்தார்கள். அந்த இடத்தில் விவரமாக சொல்லும் போது கஷ்டங்களை நல்ல முறையிலே பரிசீலனை செய்து பார்த்தோம், என்று சொல்லி, மழை பெய்ய வேண்டும், தண்ணீர் வரும், இது காவேரி சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னை, நிச்சயமாக தண்ணீர் வரும், நிச்சயமாக மகசூல் நடத்த முடியும், சந்தேகம் இல்லை என்று சொன்னேன். இப்பொழுது அங்கத்தினர் பேசுவது கற்பனை; எல்லாம் கற்பனை என்று சொல்லாவிட்டாலும் அது கொஞ்சம் அதிகமாகிப் போய்விட்டது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்** : தலைவர் அவர்களே, "நிச்சயமாகத் தண்ணீர் வரும்" என்று சொல்லுகிறார்கள். ஒத்துக் கொள்ளுகிறேன். எப்பொழுது வரும்? இப்பொழுது தண்ணீர் இல்லாமல் எங்கள் பயிர் காய்கிறதே அதற்கு யார் பொறுப்பாளி? காவிரியில் தண்ணீர் சென்றாலும் அதில் இருக்கும் தண்ணீரை எடுக்க திருச்சி மாவட்டத்திலுள்ள எங்களுக்கு உரிமை இல்லை என்பதையும், அந்த சூபரின்டென்டிங் இன்ஜினீயர் அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். அத்தனை தண்ணீரும் தஞ்சைக்குப் போக வேண்டியது, அதில் வரும் ஊற்றுத் தண்ணீரைத்தான் நாங்கள் உபயோகிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. எப்பொழுதோ மழை பெய்து தண்ணீர் வருவதைப் பற்றி கவலை இல்லை. பயிர்கள் காய்கின்றனவே, அதற்கு என்ன வழிவகை செய்யப்படுகிறது என்று நான் கேட்க விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள், "தண்ணீர் வரும் என்று உறுதி கொடுத்திருந்தாலும், தண்ணீர் வந்தால் தானே விளையும்





என்று நாங்களும் கேட்க முடியும்; விளைந்தால் தானே வரி கொடுக்க முடியும்? விளையாமல் எப்படி வரி கொடுக்க முடியும்?" என்று சொன்னால் என்ன ஆகும் என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல, இப்பொழுது புதிது புதிதாக வாய்க்கால் வெட்டுகிறார்கள். பல வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். அது தேவை இல்லை என்று நான் சொல்லவில்லை. வருகிற தண்ணீரே போதாமல் இருக்கும் போது, புதிதாக வாய்க்கால் வெட்டப்படுகிறது. கிளை வாய்க்கால்களும் வெட்டப்படுகின்றன. இந்த வாய்க்கால்களெல்லாம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு போய் நிரப்புவதற்காகத்தான் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்த வாய்க்கால்களில் தண்ணீர் போகும் போது அண்டையிலே இருக்கும் விவசாயிகள், இவ்வளவு தண்ணீர் போகிறதே, இதை ஏதாவது நாம் பயன்படுத்தக் கூடாதா என்று கருதி, அதை எடுத்தால், அதற்குத் தண்டத் தீர்வை மட்டும் அல்ல, அவர்கள் மீது வழக்கும் போட்டுவிடுகிறார்கள். விவசாயிகளுடைய வண்டி வாகனங்கள், மாடு, கன்றுகள் எல்லாம் பறி முதல் செய்யப்படுகின்றன. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் என்னுடைய தொகுதியிலேயே பல வழக்குகள் உள்ளன. எவ்வளவு தண்ணீர் வரும், எவ்வளவு வாய்க்கால் வெட்டலாம் என்கிற திட்டம் இல்லாமலேயே செய்கிறார்கள் என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய வட்டாரத்திலே இப்பொழுது புள்ளம்பாடி வாய்க்கால் வெட்டப்பட்டிருக்கிறது. அதை வெட்டியதன் நோக்கம் அதிகத் தண்ணீர் வரும்போது அந்த வட்டாரத்திலே இருக்கும் ஏரிகளை அதன் மூலமாக நிரப்பிக்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மெயின் வாயக்காலிருந்து பல கிளைவாய்க்கால்கள் வெட்ட அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதே அது ஏன்? கிளைவாய்க்கால் இருக்கும் பகுதிகளில் உள்ள நிலங்களை நஞ்சை ஆயக்கட்டுகளாக சேர்த்துவிட்ட காரணத்தால், புஞ்சை நிலங்கள் நஞ்சைப் பயிருக்கு வந்த காரணத்தால், நஞ்சைத் தீர்வை வசூல் செய்து கொண்டு, அதற்குப் பிறகு வாய்க்காலில் தண்ணீர் வந்தால்தான் தண்ணீர் கிடைக்கும் என்றால் இதில் என்ன நீதி இருக்க முடியும்? மெயின் வாய்க்காலுக்கு இரண்டு பர்லாங்கு தூரத்தில் இப்பொழுது பயிர் காய்கிறது. ஆங்காங்கே ஃபில்டர் பாயிண்ட் அல்லது கிணறுகள் வெட்டி அதிலிருந்து தண்ணீர் எடுத்துப் பாய்ச்சலாம் என்றால், இரண்டு பர்லாங்கு தூரத்திற்குள் கிணறுகளும் பம்ப் செட்களும் வைக்கக்கூடாது என்று அரசாங்கத்தினுடைய சட்டம் இருக்கிறது. கிணறு வெட்டக் கூடாது என்று அதிகாரிகள் தடுக்கிறார்கள். கிளை வாய்க்காலுக்கு ஒரு பர்லாங்கு பக்கத்தில் கிணறு வெட்டக் கூடாது, பம்ப் செட் வைக்கக் கூடாது என்றால் எப்படிப் பயிர் செய்ய முடியும்? அப்படிப்பட்ட காரியங்களை நன்றாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஸ்டாம்ப் ட்யூடியைப் பற்றி இங்கே சொல்லப்பட்டது. ஸ்டாம்ப் ஒட்டாமல் எந்த வேலையும் இப்பொழுது நடப்பதே இல்லை. இரண்டு மூட்டை சிமெண்ட் வேண்டுமென்பதற்கு மனுப் போட வேண்டுமென்றாலும், அதற்கு ஒரு நாலணா ஸ்டாம்பு ஒட்டித்தான் கொடுக்க வேண்டும். எந்த இடத்திலும் ஸ்டாம்ப் ஒட்டுவது என்பது ஒரு முறையாகவே வந்துவிட்டது. காரியம் நடக்கிறதோ இல்லையோ நாலணா ஸ்டாம்ப் ஒட்ட வேண்டுமென்று இருக்கிறது. அத்தகைய ஸ்டாம்பாவது அங்கங்கே கிடைக்கிறதா என்றால் அதுவும் கிடைப்பதில்லை. அந்தந்த அலுவலகங்களில் ஸ்டாம்ப்கள் கிடைப்பதில்லை. எங்கோ சில இடங்களில் விற்கப்படுகின்றன. அங்கேபோய்தான் ஸ்டாம்ப் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எப்படியாவது அந்தந்த அலுவலகங்களிலேயே ஸ்டாம்புகள் கிடைக்கச்செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பத்திரங்கள் விற்க தனியாக ஸ்டாம்ப் வெண்டர்கள் இருக்கிறார்கள் அவர்கள் இப்பொழுது அவசியம் இல்லை. தாலூகா அலுவலகங்களிலும் ஸப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகங்களிலும், சப்-டிரஷரியிலும் இதற்கென அலு

லர்களை நியமித்து, அவர்கள் மூலமாக இந்த ஸ்டாம்புகள் விற்கப்
படுவதற்கு ஏற்பாடு செய்தால், இந்தத் துறையில் செலவிடப்படும் ஏராள
மான தொகை மிச்சப்படும் என்று நான் கருதுகிறேன்.

அதே போல், பஞ்ச நிவாரணத்தைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
பஞ்ச நிவாரணம் என்னும் தலைப்பில் வீடு எரிந்தால் அதற்காக அளிக்கும்
நிவாரணமும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வீடு எரிந்தது என்றால்,
அதைப் புதுப்பிப்பதற்கு முப்பது ரூபாயும், உடைக்காகப் பத்து ரூபாயும்
கொடுப்பதாக இருக்கிறது. இப்பொழுது நாட்டிலிருக்கும் விலைவாசி
ஏற்றத்தைப் பார்க்கும்போது, இந்த முப்பது ரூபாய்க்கு ஓலை வாங்க முடியுமா
மூங்கில் வாங்க முடியுமா, கயிறு வாங்க முடியுமா, பாளை வாங்க முடியுமா
என்பதை யோசிக்க வேண்டும். எப்பொழுதோ நிர்ணயிக்கப்பட்ட தொகை
யை இப்பொழுதும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தயவு
செய்து மாற்ற வேண்டும். முப்பது ரூபாயில் ஒரு குடிசை போட்டுக்
கொள்ள முடியாது. பத்து ரூபாயில் துணி மணிகள் வாங்க முடியாது.
ஆகவே அந்தத் தொகைகளைச் சற்று அதிகமாக ஆக்க வேண்டுமென்று
நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளிடமிருந்து சர்க்கார் பாக்கிகளை வசூலிப்பதிலே அதிகாரிகள்
ரொம்பவும் கெடுபிடி செய்கிறார்கள். மேலதிகாரிகளுக்கு எப்படியாவது
நிலவரி பாக்கி என்னும் இனத்தில் பூஜ்யத்தைக் காட்ட வேண்டும் என்று
கணக்கப்பிள்ளைகளும் முன்சீப்களும் விவசாயிகளிடம் மிகவும் கெடுபிடி
செய்து வசூல் செய்கிறார்கள். நில வரியை வசூல் செய்வதிலே காட்டும்
அக்கறையை வருமான வரியை வசூலிப்பதிலே காட்டுவதில்லை. ஏன் ?
வருமான வரி வருஷக்கணக்கில் பாக்கி இருந்தாலும், அதை வசூலிப்
பதிலே அக்கறை காட்டப்படுவதில்லை. வருமான வரி இனத்தில் ஆயிரக்
கணக்கான ரூபாய் இப்பொழுது பாக்கியாக இருக்கிறது. ஏழை விவசாயி
களிடம்தான் தாராளமாகச் சென்று, அவர்களுடைய பாக்கியை அக்கறை
யாக வசூல் செய்கிறார்களே தவிர, வருமான வரி பாக்கி வைத்திருப்
பவர்களிடத்திலே வசூலிப்பதில் அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை.
ஏனெனில் அவர்களெல்லாம் பஸ் முதலாளிகளாகவும், பெரிய பெரிய
பணக்காரர்களாகவும் இருப்பார்கள். அவர்களிடத்தில் கணக்கப்பிள்ளை
களோ, ரெவினியூ இன்ஸ்பெக்டரோ, தாசில்தாரோ போய் கேட்க
முடிவதில்லை. கேட்டால் என்ன ஆகும் என்று தெரியும். அவர்கள்கூட
வருகிறவர்கள் யார் யார், எந்த எந்த அதிகாரிகள், எந்த எந்த அமைச்
சர்கள் என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால்
பயந்துகொண்டு, " நமக்கு என்ன, இரண்டு வருஷம் பெண்டிங்காகப்
போட்டால் அடுத்தவன் பார்த்துக்கொள்கிறான் " என்று நினைத்து
சும்மா இருந்து விடுகிறார்கள். ஆகவே, ஏழை விவசாயிகளிடம் பாக்கியை
வசூலிப்பதில் காட்டும் அக்கறையை வருமான வரியை வசூல் செய்வதிலும்
காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கும்
நமக்கும் சம்பந்தம் என்ன ? என்று கேட்கலாம். சம்பந்தம் இருக்கிறது.
அதனால்தான் சொல்கிறேன். எனவே அதிலும் அதிக அக்கறை காட்ட
வேண்டும். விவசாயிகளுடைய வீட்டுக் கதவைப் பிடுங்குவது, மாடு கன்று
களைப் பிடித்துக்கொண்டு போய் பட்டியில் அடைப்பது போன்ற இப்படிப்
பட்ட முறைகளை கையாண்டு பாக்கி வசூல் செய்யப்படுகிறது. அதே
போல் பணக்காரர்கள், பஸ் சொந்தக்காரர்கள் டிமிக்கி கொடுக்கும் வரு
மான வரி பாக்கியையும் வசூல் செய்வதில் தீவிர நடவடிக்கை எடுக்க
வேண்டும், அந்த வரி பாக்கியிலும் " பூஜ்யம் " காட்ட வேண்டும் என்ற
உத்தரவை இங்கிருந்து அனுப்ப வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கின்றேன்.

தற்போது நிலவரி நான்கு தவணைகளில் வசூல் செய்வதாக இருக்
கிறது. நான்கு தவணைகளில் வசூல் செய்வது என்றிருப்பது நல்லது.
மூன்று தவணைகளாகக் குறைக்க ஏற்பாடு செய்வதாகத் தெரிகிறது.
அப்படியில்லாமல் தயவு செய்து நான்கு தவணைகள் என்றே இருக்க
வேண்டும்.



சர்க்காரிலிருந்து பலவகைக் கடன் கொடுக்கப்படுகிறது. கடன் கொடுப்
பது கையிலே போய்ச் சேர்வதற்குள்ளே மீண்டும் கடனைத் திருப்பி வசூல்
செய்ய அதிகாரிகள் போகிறார்கள். ஆகையால், தயவுசெய்து அப்படிப்பட்ட
கடன்களை எல்லாம் நீண்ட காலத் தவணைகளில் வசூல் செய்ய ஏற்பாடு
செய்யவேண்டும். அறுவடை முடிந்தவுடன் கடன் பாக்கியைக் கேட்டா
லும் பரவாயில்லை. அறுவடை செய்வதற்குள்ளேயே கிஸ்தியையும்
சேர்த்து வசூல் பண்ணவேண்டுமென்றால், கடன் கொடுத்தும் பிரயோஜ
னம் இல்லை. மேலும் கஷ்டத்திற்கு ஆளாக்குவதாக இருக்கிறது.
எல்லாப் பகுதியிலும் இந்த நிலைமை இருக்கிறது. ஏப்ரல் மாத இறுதியில்
வசூல் செய்யலாம் என்ற வகையில் உத்தரவு போட்டால் நல்லது. மே
மாத முதல் வாரத்தில் வசூலிக்கலாம் என்று உத்தரவு போட்டால்
இன்னும் நலமாக இருக்கும். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறோம்
என்று சொல்லிவிட்டு, அடுத்த நிமிஷத்திலேயே அவர்களுக்குத் தொல்லை
கொடுக்கக் கூடாது. இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து வசூல் செய்யாமல்,
கிஸ்தியைத் தனியாக வசூல் செய்யலாம். விவசாயிக்குக் கொடுக்கும்
கடனைத் தயவுசெய்து ஏப்ரல் இறுதியில் அல்லது மே மாத முதல்
வாரத்தில் வசூல் பண்ணும் அளவுக்கு அவர்களுக்குச் சலுகை காட்ட
வேண்டும். இல்லையென்றால், உழவு மாடுகளைப் பட்டியில் அடைப்பது,
கதவைப் பிடுங்குவது போன்ற பல கஷ்டங்கள் விவசாயிகளுக்கு ஏற்படும்.
ஆகவே, அப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமல் தடுக்க ஆவன செய்ய
வேண்டும்.

அடுத்து, புறம்போக்கு நிலங்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படாமல்
இருக்கிறது. 15 வருஷம், 20 வருஷம், 25 வருஷம் சாகுபடி செய்து
கொண்டிருந்தும் இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. பட்டா இல்லாத
காரணத்தால் நிலத்திலிருந்து இப்பொழுது வெளியேற்றிவிடுவார்களோ
என்று விவசாயிகள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.
பயிரிட்டுக்கொண்டுவந்த நிலம் பறிபோய்விடுமோ, யார் எடுத்துக்கொண்டு
விடுவார்களோ என்று இப்படி பயந்து கொண்டே இருக்கிறார்கள். விவ
சாயிகள் வயிறு எரிந்தால் பயிர் நன்றாக இருக்காது. ஆகவே, அவர்கள்
வயிற்றில் பால் வார்க்காவிட்டாலும், தண்ணீராவது விடுங்கள், புறம்
போக்கு நிலங்களைப் பயிரிட்டுக் கொண்டு வந்தவர்களுக்கு உடனடியாகப்
பட்டா வழங்க ஏற்பாடு செய்யுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
பட்டா மாற்றியமைக்காத காரணத்தால் எவ்வளவோ கஷ்டங்கள் விவ
சாயிகளுக்கு ஏற்படுகின்றன. மின்சார பம்ப் செட் வைக்க வேண்டுமென்று
அதிகாரியிடம் போய் மின்சார இணைப்பு வேண்டுமென்று கேட்டால்,
உரிமைச் சீட்டு (ஓனர்ஷிப் சர்ட்டிபிகேட்) தாசில்தாரிடமிருந்து வாங்கிக்
கொண்டு வந்தால்தான் இணைப்பு கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்
கள். ஆனால், பட்டா கொடுக்கப்படாத காரணத்தால், பட்டா மாற்றி
யமைக்கப்படாத காரணத்தால் பம்ப் செட் வாங்கி வைத்திருந்தாலும்
மின்சார இணைப்பு கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே,
பம்ப் செட்டைப் பயன்படுத்தும் அளவுக்குப் பட்டா வழங்க ஆவன செய்ய
வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.
வணக்கம்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் தலைவர் அவர்களே, இன்றைய
மானிய கோரிக்கைகளின் மீது பல அங்கத்தினர்கள் பங்கெடுத்துக்கொண்டு
ஆராய வேண்டிய கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதிலும்
குறிப்பாக கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் பேசும்போது
மிகுந்த உற்சாகமாக, தம்முடைய வழக்கமான முறைப்படியே பேசினார்கள்.
இந்த மானியத்தைப் பொறுத்தவரையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட
பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவை சம்பந்தமாகப் பல யோசனைகளை
நான் கனம் அங்கத்தினர்களிடமிருந்து வரவேற்றேன்.

குறிப்பாக கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் ஒரு சாதாரண
விவசாயி படக்கூடிய கஷ்டத்தை—மற்ற அங்கத்தினர்கள் எடுத்துச் சொல்
வது ஒரு விதம்—சபைக்கு ருசியாக இருக்கவேண்டும் என்பதற்காகக்
கொஞ்சம் கற்பனை செய்துகொண்டு—இந்த அரசாங்கத்திற்குத் தைரியம்
இல்லை, இந்த அரசாங்கத்திற்குப் பயம், இந்த அரசாங்கத்திற்கு அச்சம்

என்பதாக இந்த வார்த்தைகளை எல்லாம் அடிக்கடி புகுத்தி தம்முடைய வழக்கமான இலக்குக்கு இழுத்துப் போக முயற்சித்தார்கள். அது அவருடைய பாணி. திராவிட முன்னேற்றக் கட்சியினருடைய பாணியில் யாரும் மயங்கிவிடாமல் மற்றவர்கள் இந்தக் கஷ்டங்களை எல்லாம் போக்க நல்ல ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். இந்த இலாகாவை மேலும் திறமையாகச் செயல்படுத்துவதற்கு ஏற்றபடி பல நுணுக்கமான கருத்துக்கள் வெளிவரும் என்று நான் எதிர்பார்த்தேன். பல கருத்துக்கள் வெளியிடப்பட்டு இருக்கின்றன. அவற்றை எல்லாம் நான் பரிசீலித்து இந்த இலாகா மேலும் நல்ல முறையில் செயல்பட நடவடிக்கை எடுத்துக் கொள்கிறேன்.

இந்த இலாகா பொதுமக்களுக்கு எவ்வளவு நல்ல தொண்டுகளைச் செய்து வருகிறது என்பதையும், பொதுமக்கள் இந்த இலாக்காவை எவ்வளவு விரும்புகிறது என்பதையும் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். இந்த இலாகா சம்பந்தப்பட்ட வரையில் ஒவ்வொரு நாளும் அநேக விவசாயிகள் தொடர்பு கொள்ளக் கூடிய ஒன்றாக இது இருக்கிறது. ஆனால் ஒன்றே ஒன்று. விவசாயிகள் அங்கே போய் அணுகும் முறையை—அவர்கள் போகும்போது நினைக்கிற மனப்பான்மையை நாம் பார்க்க வேண்டும். சிமிண்டு வேண்டும் என்று போய்க் கேட்டால் உடனே அங்குள்ள அதிகாரிகள் கொடுக்கவேண்டும், இன்னும் பட்டா மாறுதல் செய்ய வேண்டுமென்று சொன்னால் உடனே மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இவற்றில் உள்ள சிக்கல்கள் என்ன, அதிகாரிகள் ஒரு விஷயத்தைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பது என்றால் கொஞ்சம் காலமாகாதா என்பதை எல்லாம் யோசிப்பது கிடையாது. அதனால் உடனே கோபம் வருகிறது. அதிகாரிகள் ஒவ்வொரு விஷயத்தையும் நன்றாகப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டிய இலாகாவாக இது இருக்கிறது.

திரு. தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் பேசும்போது பழங்காலம் தொட்டே ஆறில் ஒரு பங்கு கொற்றவனுக்கு என்று வழங்கப்பட்டு வந்திருக்கிறது, நிலவரியை மக்கள் கொடுக்கவில்லை என்றால் அவர்களுக்கே அரசாங்கத்தில் தங்களுக்கு உரிமை இல்லைபோல நினைக்கிறார்கள் என்று சொன்னார்களே அது உண்மை. இந்த இலாகாவின் தோற்றம், சரித்திரம் நீண்ட காலத்தது. சட்டம் போட்டு உடனே செய்வது இல்லை. மற்ற இலாகா விஷயங்கள் வேறு. இங்கே நிச்சயமாக நாம் சர்வ ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். இது ரெவின்யூ ரெக்கார்ட் சம்பந்தப்பட்டது. அவசரப்பட்டால் அநீதி, கஷ்டம் எல்லாம் ஏற்படும்.

கிராமங்களுக்குப் போய் பார்த்தால் தெரியும். தண்டத் தீர்வை போடுகிறார்களே என்றார்கள். இப்படி ஒரு தடை இருக்கும்போதே இந்த நிலை என்றால் இந்தத் தடையும் இல்லையென்றால் மற்ற பாசனத் திட்டங்களின் கதி என்ன ஆகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த பாசனத்தினாலேயே பல தகராறுகள் ஏற்படுகின்றன. பல ஒப்பந்தங்கள் இருக்கின்றன. நீண்டகாலமாக மக்களுக்குத் தொண்டு செய்து வருகின்ற இந்த இலாகாவினர் எல்லாவற்றையும் நல்ல முறையில் பரிசீலனை செய்துதான் ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. ஏற்கனவே பல முடிவுகள் இருக்கின்றன. அவற்றின் அடிப்படையில் தான் நாம் ஓரளவு செயல்பட்டுவருகிறோம். கனம் ரெங்கசாமி ரெட்டியாருக்கு இந்த இலாகா தேய்ந்து வருவது போல ஒரு சந்தேகம், உண்மையில் இந்த இலாகாவே தேய்ந்தால் கூட நல்லதாக இருக்கும். ஏனென்றால் மக்களுக்கு இருக்கக்கூடிய பல தொந்தரவுகள் குறையும். இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு முந்தியும், பெற்ற பிறகும் மக்கள் தொந்தரவு என்று நினைக்கிற இலாகா இரண்டு. ஒன்று ரெவின்யூ இலாகா, மற்றொன்று போலீஸ் இலாகா. போலீஸ் இலாகா மானியத்தின் மீது பதில் சொல்கிறபோது கூட உள்துறை அமைச்சர் அவர்கள், "இதற்கு முன்பு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது ? இப்போது குறைவாகத்தானே இருக்கிறது ?" என்று சொன்னார்கள். ரெவின்யூ இலாகா வசூல் பண்ணுகிறது, போலீஸ் இலாகா பயன்படுத்திக்கொள்கிறது. முன்பெல்லாம் வெள்ளைக்காரர்கள் காலத்தில் ரெவின்யூ இலாகா





மூலமாகவே எல்லாக் காரியங்களையும் செய்வார்கள். அப்போது எல்லாம் விவாதம் வருகிறபோது ரெவின்யூ இலாகா விவாதம் தான் எப்போதும் காரசாரமாக இருக்கும். ஆனால் இந்த முறை இந்த மானியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க எதிர்க்கட்சிகளே கூட விரும்பவில்லை போல எனக்குத் தோன்றியது. காரணம் எதிர்க் கட்சித் தலைவர் கூட இன்றைக்கு வரவில்லை. (எதிர்க் கட்சியினர்கள் குறுக்கீடு) நான் சொன்னதை சீரியசாக எடுத்துக்கொள்ள வேண்டாம். நான் கனம் அங்கத்தினர்கள் எழுப்பிய பல பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். நீர்ப்பாசனத் திட்டம் இந்த மாநிலத்தில் மிகுதியாக வளர்ந்து வருகிறது என்று எல்லோருக்கும் தெரியும். அதுபோலவே பத்து வருடத்திற்கு முன்பு மின்சார இலாகாவைப்பற்றி யாரும் கவலைப்பட மாட்டார்கள். இப்போது மின்சார இலாகாவைப்பற்றி நினைக்காதவர்களே கிடையாது. அதன் வளர்ச்சியில் எல்லோரும் அக்கரை காட்டுகிறார்கள்.

அதுபோலவே பல துறைகள் வளர்ந்து வருகின்றன. இருந்தாலும் ரெவின்யூ இலாகா தொடர்ந்து தன்னுடைய கடமையைச் செய்து கொண்டு 1-00 p.m.
வரும்போது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதற்கு முன்பு ரெவின்யூ இலாகாவைக் கொண்டுதான் கிராமவாசிகளுக்கு நன்மை செய்ய முடியும் என்ற நிலைமை இருந்தது. தேசிய அபிவிருத்தித் திட்டம் அல்லது சமுதாய நலத் திட்டம் என்ற பெரும் பொறுப்பும் 1959-ம் வருஷம் முதல் தடவையாக பரிட்சார்த்தமாக ரெவின்யூ இலாகாவே நேரடியாக எடுத்துக் கொண்டது. அந்த இயக்கம் நிரந்தரமாக்கப்பட்டவுடன் ஒரு புது அமைப்பு ஏற்படுத்தப்பட்டு சமுதாய நலத் திட்டமும் பஞ்சாயத்து யூனியனும் இன்றைக்கு ஒன்றாக இணைந்து செயல்படத் தொடங்கியிருக்கின்றன. ரெவின்யூ இலாகாவையே எடுத்துவிட்டு அந்த வேலையையும் பஞ்சாயத்து யூனியனிடம் விட்டுவிடலாம் என்று கனம் அங்கத்தினர் தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு முன்பு வீற்றிருக்கக்கூடிய ரெவின்யூ இலாகா அனுபவம் உள்ள கனம் அங்கத்தினர் ராகவ ரெட்டி அவர்கள் எங்கே அந்த ஆலோசனையைக் கேட்டு எங்கே மாற்றி விடுவோமோ என்று எண்ணி "ரெவின்யூ இலாகாவைப் பஞ்சாயத்து யூனியனிடம் விட்டுவிடக் கூடாது" என்று கூறினார். ரெவின்யூ இலாகா தன்னுடைய கடமையை முறையாகச் செய்வதற்கு நீண்ட அனுபவம் பெற்றிருக்கிறது. தற்போது ரெவின்யூ இலாகா பொறுப்பேற்று நடத்த வேண்டிய வேலை வளர்ந்திருக்கிறது. ஜில்லா ரீதியாக இயங்கக் கூடிய கலெக்டரை எடுத்துக்கொண்டால், பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு இருந்த வேலைப் பளுவையும், இன்றைக்கு இருக்கிற வேலைப் பளுவையும் பார்த்தால் மிகவும் அதிகரித்திருக்கிறது. ஜில்லா கலெக்டர்கள் தலைமை தாங்கவேண்டிய கமிட்டிகளின் எண்ணிக்கையே பயங்கரமாக இருக்கிறது. அரசாங்க ரீதியாக தலைமை தாங்கவேண்டிய கமிட்டிகளின் எண்ணிக்கை மாதம் ஒன்றுக்கு ஏறத்தாழ 100 முதல் 140 வரை இருக்கும். ஆக்க வேலைகள் அதிகமாக நடக்கும்போதும் ரெவின்யூ இலாகாவைத்தான் எல்லா இலாகாக்களும் தங்களுடைய கடமையைச் செய்வதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன. பொருளாதார மேதை அல்லது நிபுணர் டாக்டர் நடராசன் அவர்கள் தன்னுடைய பொருளாதாரத் தத்துவத்திற்குப் புள்ளி விவரம் சேகரம் செய்யவேண்டுமென்று சொன்னால் அந்தப் புள்ளி விவரம் ரெவின்யூ இலாகாவில் இருந்துதான் வரவேண்டும். அது போலவே தான் ஒவ்வொரு காரியத்திலும் ரெவின்யூ இலாகா பொறுப்பேற்று நடத்துகிறது. வேலை அதிகமாகும்போது கொஞ்சம் தாமதம் ஏற்படுகிறது.

இந்த முறையில் இன்றைக்கு ரெவின்யூ இலாகாவில் அருமையான தொண்டு செய்து வரக்கூடிய கிராமாதிகாரிகளைப் பார்க்கவேண்டுமென்று மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். கிராமாதிகாரிகளுடைய நிலையைப் பொறுத்த வரையில், இந்த வருஷம் சென்ற வருஷம் என்று இல்லாமல், நாடு சுதந்திரம் அடைந்த நேரத்திலிருந்தே அவர்களுடைய கஷ்டநஷ்டங்களை உணர்ந்து அவற்றைக் களைவதற்கான பல முடிவுகளை இந்த அரசாங்கம் எடுத்திருப்பது கிராமாதிகாரிகளுக்கும் தெரியும்; சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தெரியும். இன்றைக்கு அவர்களுடைய பிரச்னையை ஏதோ ஒரு தனிப்பட்ட அதிகாரி பரிசீலனை செய்து முடிவுக்கு

வருவது என்று இல்லாமல், அதைப்பற்றி காபினெட் சப் கமிட்டியே என்னென்ன முறையில் மாறுதல் செய்யலாம் என்று ஆராய்ந்திருக்கிறார்கள். நான் முன்பே குறிப்பிட்டுச் சொன்னது போல் பஞ்சாயத்து ஆட்சி முறை முதல் முதலாக வரத் தொடங்கிய நேரத்தில் கிராமாதிகாரிகள் நிலையை நிர்ணயம் செய்யவேண்டுமென்றால், இதிலே சிக்கல்கள் வந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் செய்ய வேண்டிய மாறுதல்களை எல்லாம் நிதானமாகச் செய்யவேண்டுமென்ற அடிப்படையில் இதைச் சில வருஷங்களுக்குத் தள்ளி வைத்திருக்கிறார்கள். கிராமாதிகாரிகளின் கஷ்ட நஷ்டங்கள், அவர்களுடைய வேலைப் பளு ஆகியவை பற்றியெல்லாம் எஸ்டிமேட்ஸ் கமிட்டி விசாரித்து அறிந்தவற்றைப் பற்றியெல்லாம் கனம் அங்கத்தினர் நல்லசாமி அவர்கள் பொது விவாதத்தின்போது சொன்னார்கள். அவர்கள் ஏராளமான புள்ளி விவரங்களைச் சேகரம் செய்து கொடுக்கவேண்டியிருக்கிறது. நம்முடைய உள்துறை அமைச்சர் அவர்கள் ஹரிஜன நல மானியத்தின்போது, சொன்னது போல், ஹரிஜன நல தாசில்தார் போய்க் கிராமாதிகாரிகள் அலட்சியமாக இருக்கிறார்கள் என்று சொன்னவுடன் துரிதப்படுத்தக்கூடிய முறையிலே இன்னும் அதிகமான கஷ்டத்தை அதிகமான சிரமத்தைக் கிராமாதிகாரிகளுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு இலாகாவும் கடைசி நிலையில் இருக்கும் விவரங்களைச் சேகரம் செய்ய வேண்டுமென்று நினைக்கும்போது எல்லாம் கிராமாதிகாரிகள் பக்கந்தான் போகிறார்கள். அவர்களுடைய அந்த வேலையைப் பொறுத்தவரை சேவை செய்யவேண்டுமென்ற அடிப்படையில் வேலை செய்து வந்தார்களே தவிர, இவ்வளவு சம்பளம் என்று அடிப்படையில் யாரும் முன் வந்ததில்லை. அதனால் அவர்களுக்கு ஒரு கௌரவம் ஏற்படுகிறது. அரசாங்கத்தில் இருக்கும் பெரிய அதிகாரிகளோடு தொடர்பு ஏற்படுகிறது. கிராமத்தில் செல்வாக்கு ஏற்படுகிறது என்ற அடிப்படையில் பெரும்பகுதியான கிராமவாசிகள் இன்றைய வரைக்கும் சேவை செய்து வருகிறார்கள். அதில் கிடைக்கும் ஊதியத்தை வைத்துக்கொண்டுதான் காலம் கழிக்க வேண்டுமென்ற நிலையில் பெரும்பகுதி கிராமாதிகாரிகள் இல்லை. இங்கே சட்டசபை அங்கத்தினர்களாக வந்திருப்பவர்கள் கூட ஒரு காலத்தில் கிராமாதிகாரிகளாக இருந்திருப்பார்கள். அவர்கள் சட்டசபைக்கு வருகிற அளவுக்கு அவர்களுக்குக் கிராமத்தில் அவ்வளவு தூரம் மதிப்பு இருக்கிறது. அரசாங்கச் சிப்பந்தியைப் போல் அரசாங்கம் அவர்களைப் பார்க்கவில்லை ; அவர்களும் அந்த அடிப்படையில் வாழவில்லை. இதையெல்லாம் மனதில் கொண்டு பரம்பரை பாத்தியதையை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதா, இல்லையா, முழுநேர ஊழியரா, பகுதிநேர ஊழியரா, நிரந்தரமான ஊழியர்களாக வைத்துக்கொள்வதா என்பதெல்லாம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

இப்போது சுப்ரீம் கோர்ட் முடிவுப்படி இனிமேல் பரம்பரை பாத்தியம் இருக்க முடியாது. அவர்களை முழுநேர ஊழியர்களாக வைத்து அதற்குண்டான அந்தஸ்து அடிப்படையில் சம்பளம் கொடுப்பதா அல்லது இப்போது இருக்கக்கூடிய கிராமாதிகாரிகள் தொடர்ந்து இருப்பதற்கு என்ன வழிகள் ஏற்பாடு செய்யலாம் என்று பார்க்க வேண்டும். அந்தக் கிராமாதிகாரிகளுக்குக் கொஞ்சம் சம்பளம் அதிகமாகக் கொடுத்துவிட்டால் அதனால் பிரச்சினை தீர்ந்துவிடாது. அரசாங்கம் அதிகமாக சம்பளம் கொடுக்க வேண்டுமென்று நினைக்கும்போது அரசாங்கம் பல தகுதிகளை நிர்ணயம் செய்யும். கிராம சேவக்குகளை எடுத்துக்கொண்டால் முழுநேர ஊழியர்கள் என்று வைத்து அதற்கான கிரேடு வைத்திருக்கிறார்கள். அந்த சேவக்குகள் எவ்வளவுதான் சம்பளம் வாங்கினாலும் தொண்டு செய்கிற கிராமாதிகாரிகளின் பக்கத்தில் போனால் ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும். கிராமாதிகாரிகளைப் போன்ற செல்வாக்கை கிராம சேவக்குகளால் உண்டாக்க முடியாது. இந்தச் சிக்கலான பிரச்சினைகளில் எல்லாம் ஏதோ நாமும் ஒரு முடிவு எடுத்துவிட்டோம் என்ற அளவிலே அவசர அவசரமாக எடுப்பதில் பயன் இல்லை. ஏதோ 10, 20 ரூபாய் கூட்டிக் கொடுத்துவிடுவது என்ற முறையில் பார்க்கத் தயாராக இல்லை. கிராமவாசிகளுக்கு நல்லவர்களுடைய, திறமை மிகுந்தவர்களுடைய சேவையைப் பயன்படுத்தக் கூடிய முறையிலேதான் எந்த ஒரு முடிவும் இருக்கவேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.





அடுத்தபடியாக எல்லோரும் எடுத்துச் சொன்னது, புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதோ 30 ரூபாய் கொடுத்து விட்டால் போதுமா என்பதாகும். அந்த 30 ரூபாயைக் கொண்டு அவர்கள் வாழ்ந்து விடமுடியும் என்று ஒருபோதும் சர்க்கார் எண்ணவில்லை. அதை 50 ரூபாயாக்கினால் கூட கஷ்டம் தீராது. அந்த நிமிஷத்தில் அவர்கள் படக்கூடிய கஷ்டம் போக வேண்டுமென்றமுறையிலேதான் அந்தத் தொகை கொடுக்கப்படுகிறது.

பத்து வருடங்களுக்கு முன்பு, அரசாங்கம் முன் வந்து கொடுக்கும் வரை, கிராமத்தில் உள்ளவர்களுக்கு சக்தியில்லாமல் இருந்தது, உதவி கிடைக்க முடியாத கட்டத்தில் இருந்தார்கள். அந்த நேரத்தில் இந்தப் பணம் பெரிதும் உதவியாக இருந்தது. ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்புதான் இந்த அளவிற்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு முன் மிக மிகக் குறைவாக இருந்தது. திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் சொன்னது போல் அதிக பட்சம் கொடுத்தால் புறம்போக்கிலுள்ள மரத்தை கையைக் காட்டி விட்டு வெட்டிப் போங்கள் என்று சொல்வார்கள். அதற்குமேல் எதிர்பார்க்கக்கூடாது இப்போது 30, 40 ரூபாய் கொடுக்கப்படுகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அடுத்த நிமிடம் என்ன ஏற்படுமோ என்று தெரியாமல் இருப்பவர்களுக்கு உடனடியாக இந்தப்பொருளைக் கொடுக்கும்போது அவர்கள் மனதில் நிம்மதி ஏற்படுவதை நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். இந்தத் தொகை போதும் என்பதற்காக சொல்லவில்லை. அந்த நேரத்தில் மன நிம்மதி ஏற்படுகிறது. உதவியை இதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. 1955-ல் அடித்த புயலின்போது எப்படி நிலை இருந்தது என்று பார்த்தால் 10 ரூபாய், 40 ரூபாய் கொடுத்து பிரச்சினையைத் தீர்த்து விடவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுத்திருக்கும் அரசாங்க உதவி ஏறத்தாழ ஒரு கோடிவரை இருக்கும். வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். ஏராளமான வேலைகளை செய்திருக்கிறார்கள். கடன் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடனை என் திரும்பிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் திரு. மாதவன் அவர்கள் வாதம். கடன் கொடுத்ததை திருப்பிக் கேட்டால் பார்த்தீர்களா, கொஞ்சம்கூட அந்த அரசாங்கத்திற்கு கருணை இல்லை, என்று இந்த சட்டசபையில் சொல்லலாமே தவிர அதிலுள்ள தத்துவத்தை புரிந்து கொள்ளவேண்டும். கடன் கொடுக்கும்போது கஷ்டம் ஏற்பட்டால் தள்ளி விடுவோம் என்றதொரு பழக்கம் ஏற்படுமானால் நிச்சயமாக, குறிப்பாக பின்தங்கிய மக்களுக்கு கடன் கொடுக்க முன்வராது. ஆகவே அதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இந்த சட்டசபையில் கனம் அங்கத்தினர் மாதவன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். கிழக்கு ராமனாதபுரத்தில் உள்ளவர்கள், மற்றப் பகுதிகள் பற்றி அவர்களுக்கு தெரியாது போல் இருக்கிறது, நான் திருமங்கலத்தில் இருக்கக்கூடியவர்கள் என்பதையும் சேர்த்துக் கொள்கிறேன். அவர்கள் கடன் வாங்கினால் அதை திருப்பிக் கொடுக்க மாட்டார்கள் என்று நானோ மற்ற அமைச்சரோ சொன்னதாக சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் மிக நல்லவர்கள். வாங்கிய கடனை நிச்சயமாக திருப்பிக் கொடுப்பார்கள். ஆனால் அங்கே சிலர் இருக்கிறார்கள். என் திருப்பிக் கொடுக்கவேண்டும், உங்களுக்கு கஷ்டம் இல்லையா என் கிறார்கள்.

**திரு. செ. மாதவன் :** ஆன் எ பாயின்ட் ஆப் பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். ரெவன்யூ அமைச்சர் அவர்கள், ராமனாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் தாலூகாவில் உள்ளவர்கள் இந்த வரி பாக்கி கொடுப்பதில், கடனைத் திருப்பிக் கொடுப்பதில் ஏமாற்றுவதில் கை தேர்ந்தவர்கள் என்று 41-வது விதியின் கீழ் இந்த மன்றத்தில் ஸ்டேட்மென்ட் வைத்திருக்கிறார்கள். சந்தேகம் இருந்தால் நான் ஆதாரத்தோடு காட்டத் தயார்.

**கனம் திரு- வெ. ராமையா :** நிச்சயமாக அதுபோன்ற ஸ்டேட்மென்டை நான் வைத்திருக்க மாட்டேன், எனக்கு தெரியும், எனக்கு சந்தேகமே கிடையாது. அவர்களுக்கு சந்தேகம் இருந்தால் அதைத் திருப்பிப் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எந்த சந்தர்ப்பத்திலும் ஒரு பகுதி மக்கள் ஏமாற்றுவார்கள் என்ற மனப்பான்மை எனக்கு நிச்சயமாக

கிடையாது. குறிப்பாக வரண்ட பகுதிகளில் உள்ளவர்கள் ரொம்ப நல்லவர்கள் என்றுதான் திரும்பவும் கூறுவேன். ஆனால் பசி, பட்டினியைப் பயன்படுத்தி சிலர் அவர்களை ஏமாற்ற முயற்சி செய்வதை நான் வன்மையாக கண்டிக்கிறேன். இந்த சட்டசபையில் அதுபோல் நாம் தூண்டி விடக்கூடிய வார்த்தைகளை பேசக்கூடாது என்று மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். காரணம், அந்த வட்டாரத்தில் உள்ளவர்கள் உண்மையில் பொருளாதார ரீதியில் பின்தங்கி இருக்கிறார்கள். வறுமையால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தாராளமாக அரசாங்கம் கடன் கொடுக்கிறது. அப்படி கொடுக்காவிட்டால் அந்த வட்டாரமே அழிந்து போயிருக்கும் என்று சொன்னால் அது மிகையாகாது. குறிப்பாக முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் 1955-ல் எடுத்த பெரு முயற்சியைப் பார்க்கும்போது அதனால் அந்த வட்டாரத்தில் நிம்மதியாக மக்கள் வாழும் சூழ்நிலை ஏற்பட்டது. அரசாங்கத்திலிருந்து கடன் வாங்கினால் மூன்று வருடங்கள் அதை திருப்பிக் கொடுக்காவிட்டால் அரசாங்கம் தள்ளிவிடும் என்ற மனப்பான்மையை சட்டசபையில் இருந்து வளர்க்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** அரசாங்கத்திடமிருந்து வாங்குகிற கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்ற மனப்பான்மை மக்களுக்கு வளர வேண்டும், அதை திருப்பி வசூலித்தாகவேண்டும் அரசாங்கமும் என்ற கருத்துப்பட அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த மாநிலத்தில் அகதிகளை கொண்டு வந்து குடியேற்றியபோது அவர்களுக்கு கொடுத்த கடனை வசூல் செய்யவில்லை. அதை ரத்து செய்து விட்டது அமைச்சர் அவர்களுக்கு தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். அதை ஏன் வசூலிக்காது விட்டார்கள்?

**கனம் திரு வெ. ராமையா :** அவ்வளவு சுலபமாக ரத்து செய்திருக்க மாட்டார்கள். முழு விவரமும் தெரியும். அகதிகளுக்கு கொடுத்த கடனை எல்லாம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் ஒரே நேரத்தில் கண்ணை மூடிகொண்டு ரத்து செய்யவில்லை. அவர்களிடமிருந்து எப்படி திருப்பி வாங்கவேண்டுமோ அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. ஆசாமி ஊரில் இல்லாவிட்டால் யாரிடம் இருந்து வசூல் செய்வது?. மேலும் விவரங்கள் வேண்டுமென்றால் ஒரு கேள்வி போட்டால் நிச்சயமாக பதில் சொல்கிறேன். அரசாங்கம் ஒரு தவறும் செய்யவில்லை என்று நான் தைரியமாக சொல்ல முடியும். பஞ்சம், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பது என்பதில், 10 அல்லது 30 ரூபாய் கொடுத்தார்கள் என்ற பிரச்னை இல்லை. பத்து ரூபாயோடு நின்று விடவில்லை. கடந்த பத்தாண்டுகளாக நான் பார்த்து வருகிறேன். மக்களின் வாங்கும் சக்தி உயர உயர ஏராளமாக பொது மக்கள் உதவியும் வரத் தொடங்கி இருக்கிறது. ஒன்று நான் ஞாபக மூட்ட விரும்புகிறேன். 1961-ல் கோவிலடி உடைப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தஞ்சையில் கலக்டரின் முயற்சியில் அவர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டு விடாமல் நிவாரணம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிலையில் தஞ்சையில் என்ன நடந்தது என்றால் பல அரசியல் கட்சிகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு நான் கொடுப்பதா, நீ கொடுப்பதா என்ற முறையில் உணவுப் பொட்டலங்களை அவர்கள் கட்சிச் சின்னம் போட்டு பரிமாறியது எல்லாம் இப்போதுள்ள அங்கத்தினர்களுக்கு ஞாபகம் இல்லாவிட்டாலும் 1961-ல் இருந்தவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படி எதற்காக கொடுத்தார்கள் என்ற ஆராய்ச்சியில் நான் போகவில்லை. இருந்தாலும், அரசியல் கட்சிகள் பொறுப்பேற்று நடத்த முன் வருகிறார்கள், பொதுமக்களும் முன்வருகிறார்கள். சமூக சேவை செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு ஏராளமாக இந்தத் தொண்டில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு கேள்விக்கு பதில் சொல்லும் முறையில் திருச்சியில் தீ விபத்து ஏற்பட்டவுடன் அங்குள்ள நகரசபைத் தலைவரும், மற்றவர்களும் உடனடியாக ஒரு கமிட்டி அமைத்து பல ஆயிரம் ரூபாய் வசூல் செய்து அவர்களுக்கெல்லாம் பிரித்துக் கொடுத்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமூக சேவை மனப்பான்மை உள்ளவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இந்த நாட்டில், உதவி கொடுக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. அதேபோல் கஷ்டம்



ஏற்படும்போது அரசாங்கம் தேசத்தின் பிரதம மந்திரி பண்டிலிருந்து பணம் வாங்க தவறுவதில்லை. பாதகம் ஏற்படாத வகையில் தக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. குறிப்பாக சென்ற ஆண்டு, அதற்கு முந்திய ஆண்டுகளில் வெள்ளத்தால் சேதம் ஏற்பட்டபோது ஜில்லாக்களுக்கு போய் பார்க்கும்போது உண்மையிலே அரசாங்கம் அதிகாரிகளின் மனப்பான்மை இன்று எப்படியிருக்கிறது என்றால், அவர்கள் பெரும் நிபுணர்களாகி விட்டார்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதில் ½ மணி நேரம் கூட காலம் கடத்தாமல் உடனே நிவாரணம் எப்படியோ அவர்கள் கொடுக்கிறார்கள். அரிசி கொடுப்பது, உணவு சமைத்துப்போடுவது போன்று. அந்தளவிற்கு அவர்கள் மனப்பான்மை ஏற்பட்டு இருக்கிறது. என்றால் கஷ்டப்படுகிறவர்களைப் பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது என்று அரசாங்கம் பெரும் முயற்சி எடுக்கும் காரணத்தினால் ஏற்படக்கூடிய நிலைதான் அது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். திரு. ராமசாமி அவர்கள் இந்த மான்யக் கோரிக்கையின் மீது விவாதத்தை தொடக்கி வைக்கும்போது நான் கொடுத்திருக்கும் அறிக்கையில் ரீசெட்டில்மெண்ட் பற்றிய வாசகங்களை படித்த பிறகு அவர்கள் மனதில் அச்சம் ஏற்பட்டதோ என்று சந்தேகம். தொடர்ந்து அதைச் செய்யவேண்டாம் என்று 1930-ல் முடிவு எடுத்ததை நினைக்கும்போது ரீசெட்டில்மெண்ட் செய்தால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டு விடும் என்ற நினைப்பில் அவர்கள் வார்த்தைகள் அமைந்திருந்தது. ரீசெட்டில்மெண்ட் செய்வதினால் உண்மையிலேயே அரசாங்கத்திற்கு பெரு லாபம் இருக்கும் என்ற கருத்தைத்தான் சென்ற ஆண்டு முதல் அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை சமர்பித்தபோது நில வரி உயர்வு, நீர்த்தீர்வை உயர்த்தும் மசோதா பற்றி கூறும்போது சொன்னார்கள். முப்பது வருஷங்களுக்கிடையில் இப்போது இருக்கின்ற நீர்ப்பாசன ஆதாரங்களையும் எல்லாம் மனதில் வைத்துக்கொண்டுப்பார்த்தால் நிச்சயமாக பூமியினுடைய தரம் உயர்ந்திருக்கத்தான் செய்யும், அதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்கவேண்டிய தேவையில்லை. முக்கியமாக இப்போது ரீசெட்டில்மெண்ட் நடத்தவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணம், அதில் பலவிதமான சங்கடங்கள் வரலாம். இதற்காக அதிகாரிகளின் நேரத்தை எல்லாம் வீணாக செலவு செய்ய வேண்டாம், அதிலும் இப்போதுள்ள திட்ட வேலைகள் எல்லாம் நடந்தேறவேண்டிய இந்த காலத்தில் ஈடுபடவேண்டாம் என்று கருதித்தான் அரசாங்கம் அதை மேற்கொள்ளாமல் இருக்கிறது. ரீ செட்டில்மெண்ட் செய்தால் நிச்சயமாக ஒரு சில பூமிகள் தரம் குறைவாக இருந்தாலும்கூட, பெரும்பாலும், மிகுதியான பூமிகளின் நிலை உயரும் என்பதை நான் மட்டும் சொல்லவில்லை. பல நிபுணர்களும் இதே கருத்தைத்தான் தெரிவிக்கிறார்கள். அதல்லாமல் இதிலோ ஏதோ அச்சம் இருப்பதாகவோ, அதற்காக தள்ளிப்போடுகிறோம் என்றோ யாரும் எண்ண வேண்டிய தேவையில்லை என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல் இந்த மான்யத்தின் மீது பல அங்கத்தினர்களும் பங்கெடுத்துக்கொண்டு பல யோசனைகளை சொல்லியிருக்கிறார்கள். அவை ஒவ்வொன்றையும் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதை சொல்லிக்கொள்கிறேன். முக்கியமாக அங்கத்தினர் அவர்களது பேச்சிலும் தங்களதுதொகுதியைப் பொறுத்தளவில், சொல்லப்பட்ட முக்கியமான கருத்துக்களுக்கு எல்லாம், வேண்டிய பதில்களை அந்தந்த அங்கத்தினர்களுக்கு எழுதி அனுப்பும்படியாக கேட்டுக்கொள்ள நான் தயாராய் இருக்கிறேன் (எதிர்க்கட்சி தரப்பிலிருந்து ஆரவாரம்). அங்கத்தினர்கள் சொன்ன கருத்துக்களின் மீது என்னென்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பதைப்பற்றி பரிசீலனை செய்து அதனுடைய முடிவுகளை அங்கத்தினர்களுக்குத் தெரிவிப்பதில் எந்த விதமான கஷ்டமும் இராது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு சொல்லப் பட்ட இன்னொரு முக்கியமான கருத்துக்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். கனம் மாதவன் அவர்களும் மற்றும் ஒரு சில அங்கத்தினர் களும் பேசியபோது, பார்த்தீர்களா, ஏழை விவசாயிகளைக்கூட விட்டு விடாமல் அவர்களிடமிருந்தும் நிலவரியை வாங்கிக் கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம், இதுதானா காங்கிரஸ் அரசாங்கத்தின் லட்சியம் என்று கேட்டார்கள். அப்படி அவர்கள் சொல்லும்போது, காதுக்கு கொஞ்சம்

[19th March 1964

1-30 p.m. **திரு.ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கிராம அதிகாரிகளைப் பற்றி அவர்கள் நிலை என்ன என்ற முடிவை தெளிவாக எடுத்துச் சொல்லவில்லை. அவர்களுக்கு எதிர் காலத்தில் எந்த முறையில் ஊதிய உயர்வு அல்லது உத்தியோக நிலைமை இருக்கும் என்பதைப் பற்றி கொஞ்சம் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** உடனடியாக பதில் சொல்லுவதில் இருக்கக்கூடிய கஷ்டத்தைத்தான் பொதுவாக, அதிகமாகச் சொன்னேன். இருந்தாலும் இதையெல்லாம் பரிசீலனை செய்து இருக்கக்கூடிய நிலைமையை மனதில் வைத்து பதில் சொல்லவேண்டும். ஆகையால் இப்போது இதைப் பற்றி திட்டவட்டமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தீ, வெள்ளம் போன்றவைகளால் பஞ்சம் உண்டாகிற நிலையில் பொது மக்களும் சமூக ஸ்தாபனங்களும் பெருமளவு உதவி செய்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். அப்படி என்றால் அவர்கள் செய்கிறார்கள் என்று சர்க்காரிலிருந்து கொடுப்பதை நிறுத்தி விட்டார்களா அல்லது அவர்களுக்கு அதிக நியாயமாம் கொடுக்கப்படுகிறதா?

அடுத்து அவர்களுக்கு நம் மாகாண சர்க்கார் கொடுப்பதோடு பிரதமர் அவர்கள் நிதியிலிருந்து பண உதவி கொடுக்க வழி இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அந்த நிதியிலிருந்து உதவி பெறுவது என்ற நிலை இல்லை என்று ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதையொட்டியாவது நம் மாநில சர்க்கார் கொடுக்கும் நிதியை அதிகப்படுத்த முன் வருமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அரசாங்கம் கொடுப்பதை நிறுத்தி விடவேண்டுமென்ற கருத்துப்பட நான் ஒன்றும் பேசவில்லை. 30 ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது, வேறு இல்லை என்று நினைத்தால் அது தவறு வேறு உதவி கிடைக்கிறது என்று சொல்லும் முறையில் சொன்னேனே தவிர, சமூக மனப்பான்மை படைத்தவர்கள் கொடுக்கிறார்கள், ஆகையால் இதைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்த வரையில் பரம்பரை நியமன முறை இருக்கிறது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குப் பிறகு, ஹைகோர்ட் தீர்ப்புக்குப் பிறகு, பரம்பரை நியமன முறையை நீடிக்கவிடுவது தவறு என்று தெளிவுபடுத்துவார்களா? அடுத்தாற்போல..

**கனம் சபாநாயகர் :** ஒன்று போதும்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்போது பரம்பரை நியமன முறையைப் பற்றித்தான் சொன்னேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, இந்த வெள்ள நிவாரணத்தில் நான் குறிப்பிடும்போது சமீபத்திலே ஏற்பட்ட சேதத்தில் என்னுடைய தொகுதியில் பெரகாலூர் என்ற பகுதி, ஹரிஜன மக்கள் உள்ள பகுதி, அந்தப் பகுதியில் வெள்ளம் ஏற்பட்டபோது ஹரிஜன மக்களுக்குச் சொந்தமான நிலத்திலிருந்து மண்ணை எடுத்து உடைப்பை அடைத்தார்கள். அவர்கள் அந்த மண்ணுக்கு விலை கேட்கவில்லை. மண்ணை எடுத்துப் போட்டதற்கு கூலி கேட்கவில்லை. இந்த நேரத்தில் அந்த இடத்தை சுத்தப்படுத்திக் கொடுத்ததற்காக அதிகத் தொகை வசூலிக்கிறார்கள். இதைப் பற்றி அமைச்சரிடமிருந்து விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா.** இதைக் குறித்து இப்போதுதான் கனம் அங்கத்தினர் பேசினார். அவர்கள் பேசியதைத் தொகுத்து எனக்கு கடிதம் எழுதினால் கவனம் செலுத்த முடியும்.



19th March 1964]

MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 73,61,100 under Demand No. 1—Land Revenue Department be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 73,61,100 under Demand No. I—Land Revenue Department'.

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 32,21,100 under Demand No. IV—Stamps Administration be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 32,21,100 under Demand No. IV—Stamps Administration'.

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 5,09,100 under Demand No. XXXI—Famine Relief be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,09,100 under Demand No. XXXI—Famine Relief'.

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 28,00,000 under Demand No. XXXVII—Compensation to Zamindars be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 28,00,000 under Demand No. XXXVII—Compensation to Zamindars'. 1-30 p.m.

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

## A. Statutory Rules and Orders.

127. *Notification issued with G.O. Ms. No. 101, Public (General-M), dated 21st January 1964, regarding the use of Tamil as official language in respect of all official communications from the Government offices of the Chief Electrical Inspector to Government and the Senior Electrical Inspector, Coimbatore, with effect on and from 1st February 1964. [Laid on the Table of the House under section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956)].*

## B. Reports Notifications and other papers.

* 86. *Policy Note underlying Demand No. I—Land Revenue Department (Tamil).*

* 87. *Policy Note underlying Demand No. XXXI—Famine Relief (Tamil).*

* 88. *Policy Note underlying Demand No. XXXVII—Compensation to Zamindars (Tamil).*

* Circulated to Members on 18th March 1934.



APPENDIX

[*Vide* answer to starred question No. 322 on page 272.]

*A.*—(*a*) The district-wise particulars are furnished below :—

| Name of district. | Number of officials. | Number of subordinates |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| Madras .. .. .. .. | 7 | 110 |
| Chingleput .. .. .. | 1 | 199 |
| North Arcot .. .. .. | 1 | 146 |
| South Arcot .. .. .. | 1 | 175 |
| Thanjavur .. .. .. | 1 | 166 |
| Madurai .. .. .. | 1 | 210 |
| Ramanathapuram .. .. | 1 | 191 |
| Tirunelveli .. .. .. | 1 | 229 |
| Kanyakumari .. .. .. | 1 | 143 |
| Salem .. .. .. | 1 | 162 |
| Tiruchirappalli .. .. .. | 1 | 201 |
| (Tirupur) Coimbatore .. | 5 | 498 |
| The Nilgiris .. .. | .. | 8 |
| Total .. | 22 | 2,438 |

(*b*) Rs. 2,14,000 (Rupees two lakhs and fourteen thousand only.)

(*c*) The following are the day to day items of work attended to in the Khadi Department :

1 Purchase of cotton and getting it ginned.
2 Sending the cotton to different centres of the department.
3 Enlisting of spinners and weavers.
4 Selling cotton to the spinners.
5 Purchase of yarn from the spinners.
6 Sending the purchased yarn to the weavers.
7 Payment of wages to the weavers for the Khadi cloth woven.
8 Sending of clothes to the dyeing and printing units.
9 Sending of purchased and finished cloth to the godowns for stocking and distribution.
10 Sending of cloth to the various units of the department for sales through Sales Depot.

பதில் : —(அ) மாவட்ட வாரியான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| மாவட்டத்தின் பெயர். | அதிகாரிகளின் எண்ணிக்கை. | மேற்பணியாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| சென்னை .. .. .. | 7 | 110 |
| செங்கற்பட்டு .. .. | 1 | 199 |
| வட ஆர்க்காடு .. .. | 1 | 146 |
| தென் ஆர்க்காடு .. .. | 1 | 175 |
| தஞ்சாவூர் .. .. .. | 1 | 166 |
| மதுரை .. .. .. | 1 | 219 |
| இராமநாதபுரம் .. .. | 1 | 191 |
| திருநெல்வேலி .. .. | 1 | 229 |
| கன்னியாகுமரி .. .. | 1 | 143 |
| சேலம் .. .. .. | 1 | 162 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 1 | 201 |
| (திருப்பூர்) கோயம்புத்தூர் .. | 5 | 498 |
| நீலகிரி .. .. .. .. | | 8 |
| மொத்தம் .. | 22 | 2,438 |

(இ) ரூ. 2,14,000 (இரண்டு லட்சத்து பதினான்காயிரம் ரூபாய் மட்டும்).

(உ) காதித் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் கவனிக்கும் அன்றாடப் பணிகள் கீழ்க்கண்டவாறாகும் :—

1 பருத்தி வாங்கி விதை நீக்குதல்.

2 இலாகாவின் பல்வேறு நிலையங்களுக்கும் பட்டை போட்ட பஞ்சு அனுப்புதல்.

3 நூற்பாளர்களையும் நெசவாளர்களையும் வேலைக்கு அமர்த்துதல்.

4 நூற்பாளர்களுக்கு பட்டை போட்ட பஞ்சு விற்பனை செய்தல்.

5 நூற்பாளர்களிடமிருந்து சிட்டம் வாங்குதல்.

6 வாங்கிய நூலை நெசவாளர்களுக்கு அனுப்புதல்.

7 நெய்யப்பட்ட கதர்த் துணிக்காக நெசவாளர்களுக்கு ஊதியம் கொடுத்தல்.

8 சாய-அச்சு யூனிட்டுகளுக்குத் துணிகளை அனுப்புதல்.

9 வாங்கிய துணிகளையும் வேலை நிறைவு செய்யப்பெற்ற துணிகளையும் சேகரித்து வினியோகம் செய்வதற்காக கிடங்குகளுக்கு அனுப்புதல்.

10 விற்பனை டிப்போக்கள் மூலம் துணி விற்பதற்காக இத் துறையின் பல்வேறு யூனிட்டுகளுக்குத் துணிகளை அனுப்புதல்.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Friday, the 20th March 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS

### STARRED QUESTIONS.

*Supply of books by the Harijan Welfare Department*

* 331 *Q.*—SRI T. P. ALAGAMUTHU : Will the Hon. the Minister for Home be pleased to state when the books were distributed to the students by the Harijan Welfare Department during the year 1963?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the Table of the House.

சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, மாவட்டவாரியாக எந்தத் தேதிகளில் புத்தகங்கள் அளிக்கப்பட்டன என்ற செய்திதான் இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு தொகைக்கு புத்தகங்கள் அளிக்கப்பட்டன என்ற தகவல் அறியலாமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த அறிக்கையிலே மாவட்டவாரியாக புத்தகங்கள் கொடுக்கப்பட்ட தேதி தரப்பட்டிருக்கிறது. ஆனால், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காலாண்டுப் பரீட்சை வரை புத்தகங்கள் கொடுக்கப்படவில்லை என்ற புகார் வந்திருக்கிறது. அப்படியானால், மாணவர்கள் எப்படி படிப்பது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மாணவர்களுக்கு புத்தகங்களை செலக்ட் பண்ணவேண்டிய பொறுப்பு ஜில்லா கலெக்டர் அவர்களைச் சார்ந்தது. அந்த ஜில்லா ஹரிஜன இலாகா அதிகாரியையும் கலந்துகொண்டு மே மாதத்தில் எந்தப் புத்தகங்கள் என்று முடிவு செய்து, பின்னால் வாங்கப்படுகிறது. சென்னை நகரில் ஹரிஜன நல டைரக்டர் அவர்கள் பார்த்து முடிவு செய்யவேண்டும் என்ற முறையில் அவர்கள் செலக்ட் பண்ணி புத்தகங்கள் கொடுத்துவருகிறார்கள். குறிப்பிட்ட புத்தகங்கள் கிடைக்கும், கிடைக்காமலும் இருக்கலாம். இம்மாதிரி காலதாமதம் ஏற்பட்டதால், மறுபடியும் டி.பி.ஐ. அவர்களிடம் வெகு சீக்கிரம் ஜில்லா கல்வி அதிகாரிகளும் அவர்களும் ஆலோசனை செய்து விரைவாக புத்தகங்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** உயர்நிலைப்பள்ளி வகுப்புகள் ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்படுகின்றன. ஏப்ரல், மே மாதத்தில் புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து, பள்ளிகள் திறந்தவுடனே புத்தகங்கள் கிடைப்பதற்கு இந்த ஆண்டு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** முக்கியமாக இப்பொழுது ஆரம்பப் பாடசாலைகளுக்கும், உயர்தர ஆரம்ப பாடசாலைகளுக்கும் ஹரிஜன நல இலாகா புத்தகங்களை ஜாஸ்தி வாங்கிக் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

[a] Printed as Appendix I on pages 427–428.

[20th March 1964

**திரு. து. ப. அழகமுத்து :** பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலே புத்தகங்கள் செலக்ட் செய்வதிலே அந்தக் கமிட்டியில் அபிப்பிராய பேதம் இருந்ததைப்போல் பல ஹரிஜன நல பள்ளிகளுக்கு புத்தகங்கள் செலெக்ட் செய்வதிலும் ஏதாவது தகராறு இருந்ததா திருச்சி மாவட்டத்தில் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கலெக்டர் பார்த்து அவரே செய்யலாம். இதிலே தகராறு ஒன்றுமில்லை. அதற்கு கமிட்டி ஒன்றும் இடையாது. கலெக்டருக்கே அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அவரே பார்த்து எந்த புத்தகங்கள் வேண்டுமானாலும் வைக்கலாம். ஹரிஜன நல இலாகா அதிகாரியும் அதில் கலந்துகொள்வார்.

**புலவர் கா. கோவிந்தன் :** துவக்கப்பள்ளி, உயர் துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு மட்டுந்தான் புத்தகங்கள் அளிக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். (கனம் திரு. பூ. கக்கன் ; " மட்டும்தான் " என்று சொல்லவில்லை. பெரும் பகுதி என்று சொன்னேன்.) உயர் நிலைப்பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் புத்தகங்கள் அளிக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஹரிஜன உயர்நிலைப்பள்ளிகள சிதம்பரம், திருத்தலையூரில் இருக்கின்றன. உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கிற மாணவர்களுக்கு என்ன வாங்கிக் கொடுக்கிறோம் என்ற தகவல் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லலாம்.

**திரு. து. ப. அழகமுத்து :** வரும் கல்வி ஆண்டிலாவது பள்ளிகள் திறந்த உடனே மாணவர்களுக்கு புத்தகங்கள் இடைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு பூ. கக்கன் :** பள்ளிகள் திறந்தவுடனேயே புத்தகங்கள் வழங்கப்படவேண்டும் என்பதுதான் ஹரிஜன நல இலாகா கட்டளை.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்குவதற்கு நன்கொடைகள் வழங்குவதில் ரூ. 10-க்கு மேல் இருந்தால், அவர்களுக்கு வருமான வரி சம்பந்தப்பட்டவரை அந்தத் தொகைக்கு விதி விலக்கு அளிக்கவேண்டும் என்று ஹரிஜன மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்க முன்வந்த கோவையிலே ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தார் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அதைப்பற்றி தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

### ஆசிரியர்களுக்கு தேசியப் பரிசு

* **332.** கேள்வி—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கத்தாரால் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் தேசியப் பரிசு (National Award) எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது ?

(இ) ஆண்டு ஒன்றுக்கு இம்மாநிலத்திலுள்ள எத்தனை ஆசிரியர்கள் பெயர்கள் சிபாரிசு செய்யப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Teachers with a minimum of twenty years teaching experience as teachers or as headmasters are eligible to be considered for the National Awards on the basis of their record of work.

**(b) Six names of Elementary School teachers and three names of Secondary School teachers are being recommended from this State every year.**



20th March 1964]

* **333.** கேள்வி—**திரு. முனு. ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் தமிழ் நாட்டில் எத்தனை ஆரம்ப ஆசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் மத்திய அரசாங்க விருதுகள் அளிக்கப்பட்டன ?

(இ) இவர்கள் எந்த அடிப்படையில், யாரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர் ?

(உ) அவர்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளின் காரணமாகத் தமிழ் நாடு அரசாங்கம் தனிச் சலுகை ஏதாவது வழங்கியுள்ளதா ? வழங்கப்பட்டிருந்தால் அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Three primary teachers and one secondary grade teacher from this State have been given National Awards.

(*b*) They have been selected by the Central Selection Committee appointed by the Government of India on the basis of recommendation made by the State Selection Committee.

(*c*) No.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஆரம்ப ஆசிரியர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கும்போது தேசிய ஒருமைப்பாட்டில் அதிகமாக கவனம் செலுத்தக் கூடிய ஆசிரியர்களுக்கு, இதையும் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு " அவார்டு " கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகைய உத்தேசம் இல்லை. அதற்கு அவசியமும் இல்லை.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** தேசிய விருது பெற்ற ஆசிரியர்கள் சர்க்கார் பள்ளிகளில் வேலை செய்யக்கூடியவர்களா ? தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய பள்ளிகளில் வேலை செய்யக்கூடியவர்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எல்லா ஆசிரியர்களுக்கும் இந்த வாய்ப்பு இடைக்கும். சர்க்கார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு மாத்திரம் அல்ல.

**திரு. முனு. ஆதி :** இந்த விருது பெறுகிற ஆசிரியர்கள் 2, 3 பேர்களாக இருப்பதினால், மாவட்ட அடிப்படையில் உற்சாகப்படுத்துவதற்கு மாநில சர்க்கார் ஒரு கமிட்டி வைத்து விருதுகள் வழங்க உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த மாநிலத்திலுள்ள பள்ளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இந்த எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது பள்ளிகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனால் இந்த எண்ணிக்கையையும் அதிகப்படுத்தலாம். அது தவிர, வேறு மாநில ரீதியாக நடத்துவதற்கு இப்பொழுது உத்தேசமில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** 20 ஆண்டுகள் பணிபுரிந்த ஆசிரியராக இருப்பது ஒரு தகுதி என்று சொல்லப்படுகிறது. மற்றும் வேறு எந்தத் தகுதிகளைக் கொண்டு, சர்க்கார், விருது பெறக்கூடிய ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Teachers with a minimum of tweny years recognised teaching experience who are actually working as teachers or headmasters at the time of selection are eligible for the awards.

**திரு. இரா. நாராயணன் :** இந்த ஆசிரியர்களுக்கு விருதும் பரிசும் வழங்கும் பொழுது அவர்களுக்கு " பிரைஸ் பாண்டு " கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. அதற்கு வைத்திருக்கும் ஐந்து வருஷம் என்ற கால அளவை குறைத்துக்கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிரைஸ் பாண்ட் கொடுப்பது என்றால் அதற்கு ஐந்து வருஷங்கள் என்பது குறைந்தபட்சமாக இருக்கிறது. ஆகவே, அதைக் குறைப்பதற்கு இல்லை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மத்திய சர்க்கார் இப்படிப்பட்ட விருதுகள் வழங்குவதற்கு முன்வருவது போல, மாநில அரசாங்கமும் முன்வந்து விருதுகள் வழங்க ஆவன செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சற்று முன்புதான் சொன்னேன். அத்தகைய உத்தேசம் இப்பொழுது இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** 1963-ல் விருது பெற்ற இந்த ஆசிரியர்களின் பெண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்தக் கணக்கு விவரம் என்னிடத்தில் இல்லை. இன்று மாலை இந்த விழா நடைபெறவிருக்கிறது. கனம் அங்கத்தினர் வந்தால், இந்த ஆண்டில் விருது பெறுகிறவர்களில் எத்தனை பேர் பெண்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** விருது பெறுவதற்குத் தகுதியான ஆசிரியர்களை அரசினரே பார்த்துத் தேர்ந்தெடுக்கிறார்களா, அல்லது ஆசிரியர்கள் விண்ணப்பம் செய்வதன் பேரில் தேர்ந்தெடுக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆசிரியர்கள் விண்ணப்பம் செய்ய வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. முதலில் மாவட்டங்களிலே தேர்ந்தெடுக்கிறார்கள். அதற்குப் பிறகு மாநில ரீதியில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எவ்வளவு பேர் வேண்டுமோ அதற்கு இரட்டிப்பு எண்ணிக்கை சிபார்சு செய்யப்படுகிறார்கள். மத்திய குழு முடிவாகத் தேர்ந்தெடுக்கிறது.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** பல்லாண்டுகளாக திறம்பட பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த விருதுகள் கொடுக்கப்படுகின்றனவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் இது கொடுக்கப்படுகிறது.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்த விருதுகள் வழங்குவதை முடிவு செய்வது ஒரு கமிட்டியா ? இதிலே யார் யார் இருக்கிறார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டி. இ. ஓ., இன்ஸ்பெக்ட்ரெஸ் ஆஃப் கேர்ல்ஸ் ஸ்கூல்ஸ், முதலிலே தேர்ந்தெடுக்கிறார்கள். இதிலே லோகல் ஹெட்மாஸ்டர்களும் சிலர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அம்மாதிரி மாவட்டக் குழு தேர்ந்தெடுத்த பிறகு மாநில ரீதியில் ஒரு செலெக்ஷன் கமிட்டி இருக்கிறது. அதிலே கல்வி இலாகா இயக்குனரும் ஒரு டிரெயினிங் காலேஜ் பிரின்ஸிபாலும், மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒருவரும் சேர்ந்து சிபார்சு செய்கிறார்கள். கடைசியாக மத்தியக்குழுவினாலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. முனு. ஆதி :** இந்த விருதுகள் வழங்குவதற்குப் பதிலாக அவர்கள் பணியாற்றுகின்ற காலத்தில் பலன் அடையும் பொருட்டு சம்பள உயர்வு அவர்களுக்கு அளிக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் விருதுகள் என்றால் என்ன என்பதை புரிந்துக்கொள்ளாமல் இருப்பதற்கு நான் வருந்துகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** பணிபுரிந்த கால அளவு மட்டுமே தகுதி என்று அமைச்சர் சொன்னார்கள். ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்காக வேறு என்ன தகுதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன ?



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தகுதியும் வேண்டும், தகுதியின்மையும் வேண்டும். இரண்டையும் கலந்து ஆலோசிப்பார்கள். ஏதாவது குறிப்பிட்ட ஒரு தகுதி வேண்டுமென்று கனம் அங்கத்தினர் யோசனை சொன்னால், அது பரிசீலனை செய்யப்படும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** கொடுமுடியில் ஒரு ஆசிரியர் பல்லாண்டுகளாக திறம்பட பணியாற்றி, ஓய்வு பெற்ற பின்பு விருதுக்காக விண்ணப்பம் செய்திருந்தார். ஓய்வு பெற்ற காரணத்தால் அவருக்கு விருது மறுக்கப்பட்டுள்ளதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது ஓய்வு பெற்றவர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட ஆசிரியருடைய விண்ணப்பம் மறுக்கப்பட்டதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். அப்பொழுது ஓய்வு பெற்றவர்கள் இதிலே சேர்க்கப்படாமல் இருந்திருக்கலாம்.

**திரு. முனு. ஆதி :** விருது என்றால் சிறப்பானபரிசை பெறுவது போன்றதாகும். இதிலே அமைச்சர் அவர்களுடைய விளக்கம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விருதுகள் கொடுப்பதையும், சம்பளம் மற்ற சலுகைகள் அளிப்பதையும், ஒன்றோடொன்று ஒப்பிடுவதற்கு இல்லை என்ற விளக்கத்தை நான் அளிக்க விரும்புகிறேன்.

*Supply of vegetables in the City*

* 334 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are aware of the hardships suffered by the people of Madras City due to a sudden rise in the prices of vegetables; and

(*b*) if so, the steps taken to supply more vegetables in the City at reasonable prices?

**கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சென்னை நகரப் பொதுமக்களுக்குக் காய்கறிகள் நியாய விலையில் கிடைப்பதற்காக, அரசாங்கம் கீழ்க்கண்ட இடங்களில் நியாய விலைக் கடைகள் மூலம் காய்கறிகள் விற்க ஏற்பாடு செய்துள்ளது. இந்த நியாயவிலைக் கடைகளை, சென்னைக் காய்கறி, பழ வியாபாரிகள் சங்கம் நடத்தி வருகிறது :—

(1) தண்டையார்பேட்டை.

(2) புரசைவாக்கம்.

(3) அமைந்தகரை.

(4) மேற்கு மாம்பலம்.

(5), (6) தியாகராயநகர் (2 கடைகள்).

(7) மந்தவெளி.

(8) இராயப்பேட்டை.

(9) திருவல்லிக்கேணி.

(10) சிந்தாதரிப்பேட்டை.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்த காய்கறிகள் கொடுப்பதிலே பெண்கள் எத்தனை பேர் பங்கு கொண்டிருக்கிறார்கள் ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** பெண்கள் நடத்துவதற்காக ஒரு காய்கறிகடை கொடுப்பதாக உத்தேசம். அடுத்த வாரம் ஆரம்பிப்பதாக இருக்கிறார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** காய்கறிகளை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டுமென்று நம்முடைய மதிப்பிற்குரிய திரு மஜீத் அவர்கள், அவர்களுடைய தோட்டத்திலே காய்கறிகள் பயிரிட்டு வருவதுபோல மற்ற அமைச்சர்களும் பயிரிட்டு வருகிறார்களா ?

**கனம் சபாநாயகர் :** அவர்கள் பிரைஸ் கூட வாங்கியிருக்கிறார்கள்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** மற்றவர்கள் காய்கறிகள் தோட்டங்கள் வைப்பதற்கு சர்க்கார் பணம் கொடுக்கிறார்கள். ஆனால் மந்திரிகள் பணம் வாங்காமலேயே நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** நியாயவிலைக் கடைகளில் கொடுக்கப்படுகிற காய்கறிகளுக்கும் ஏற்கனவே கடைகளில் விற்கப்படுகிற காய்கறிகளுக்கும் என்ன விலை வித்தியாசம் இருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கொத்தவால் சாவடியில் என்ன விலைக்கு கிடைக்கிறதோ அதைவிட 20 சதவிகிதம் அதிகமாக இந்தக் கடைகளில் விற்கலாம். அந்த அளவுக்கு அவர்களுக்கு மார்ஜின் கொடுக்கப்படுகிறது.

**கனம் சபாநாயகர் :** சாதாரண கடைகளுக்கும் இந்தக் கடைகளுக்கும் விலையில் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று கேட்கிறார்கள்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதுதான் சொன்னேன். கொத்தவால் சாவடியில் 1 ரூபாய்க்கு விற்கிறது என்று சொன்னால் இங்கே ரூ. 1·20-க்கு விற்கலாம்.

**கனம் சபாநாயகர் :** மார்க்கெட்டிலுள்ள கடைகளுக்கும், சர்க்கார் திறந்திருக்கிற கடைகளுக்கும் என்ன விலை வித்தியாசம் இருக்கிறது என்று கனம் அங்கத்தினர் கேட்கிறார்கள்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கொத்தவால் சாவடியில் அவர்கள் வாங்குகிற விலைக்கும் இந்தக் கடைகளில் அங்கிருந்து கொண்டுவந்து நியாயமான விலையில் விற்கவேண்டுமென்பதாற்காக, அவர்களுக்கு 20 சதவிகிதம் மார்ஜின் கொடுத்து ஏறுபாடு செய்திருக்கிறோம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த காய்கறி நியாயவிலைக் கடைகள் அரிசி நியாயவிலைக் கடைகளைப்போல் அல்ல. அரிசி நியாயவிலைக் கடைகளுக்கு சப்ஸிடைஸ் செய்கிறோம். காய்கறி நியாயவிலைக் கடைகளுக்கு அவ்வாறு சப்ஸிடைஸ் செய்வதில்லை. வியாபாரிகள் நியாயமான விலைக்கு விற்கவேண்டும். அதிக விலைக்கு விற்றால் அது அநியாய விலைதான். மற்ற மார்க்கெட்டு கடைகளிலே குறைவாக விற்கப்பட்டு இதிலே அதிகமான விலைக்கு விற்றால் அது சௌகரியம் என்று சொல்லுவதற்கு இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னை மாநகரைப் பொருத்தவரையில் இந்த நியாயவிலை காய்கறி கடைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அதனை அதிகரிப்பதற்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் எங்கெங்கே புதிய கடைகள் வைக்கப்போகிறார்கள் ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இப்பொழுது 10 கடைகள் வைத்திருக்கிறோம். ஒவ்வொன்றாக திறப்பு விழா நடத்தி ஆரம்பம் செய்கிறோம். மேலும் அதிகமான கடைகள் வேண்டுமென்றால் நிச்சயமாக திறக்கப்படும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கொத்தவால் சாவடியில் ஒரு ரூபாய்க்கு வாங்கி இந்த நியாய விலைக்கடைகளில் ரூ. 1.20-க்கு விற்கவேண்டுமென்று சொன்னால் இதற்கு எப்படி நியாயவிலைக் கடைகள் என்ற பெயர் பொருந்தும் ?



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது ஹோல்ஸேல் விலைக்கும் ரீடெயில் விலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறிக்கிறது.

**கனம் சபாநாயகர் :** நானே நேரில் போய் வாங்கினேன். இந்த நியாயவிலைக் கடைகளில் விலை மலிவாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு).

**திரு. ஆ. துரையரசன் :** இந்த நியாயவிலைக் கடைகளை மாவட்டத் தலை நகரங்களிலும், முனிசிப்பாலிட்டிகளிலும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** ஜில்லா தலை நகரங்களில் இந்த ஏற்பாடு இல்லை. ஆனால் மற்ற ஜில்லாக்களில் காய்கறிகள் விளைவிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அரிசி நியாயவிலைக் கடைகளில் ஆரம்பித்து இப்பொழுது காய்கறி நியாயவிலைக் கடைகள் ஆரம்பிக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது போன்று ஒவ்வொரு துறையிலும் நியாயவிலைக் கடைகள் ஆரம்பித்துக் கொண்டே போனால், நாட்டில் அதிகமான அளவுக்கு அநியாயம் நடைபெறுகிறது என்பதை எடுத்துக்காட்டுவதாகாதா ? (சிரிப்பு).

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** விலையை ஒழுங்கு செய்யவேண்டுமென்பதற்காகத்தான் இந்த மாதிரி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** பேராசைக்காரர்கள் ரொம்ப பேர் இருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களா ? (சிரிப்பு).

## தமிழில் படித்து பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள்

* **335** கேள்வி—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவையில் தமிழ்ப் படித்துப் பட்டம் பெற்ற மாணவ மாணவியர் எவரேனும் வேலை தேடித்தருமாறு கல்வி அமைச்சருக்கு முறையீடு அண்மையில் அனுப்பினார்களா ?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes.

(இ) The Tamil medium graduates are permitted to answer in Tamil the papers in the competitive examinations for the various standards conducted by the Madras Public Service Commission. The Commission will select candidates for suitable appointments in Government service.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, தமிழை மேலும் மேலும் வளர்க்க வேண்டும், தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று அக்கறை கொண்டுள்ள சர்க்கார், பழங்காலத்தில் அரசர்கள் ஆக்கம் கொடுத்ததால் தான் நல்ல இலக்கியங்கள் வளர்ந்தன என்பதை மனதில் கொண்டு, இந்த அரசாங்கம் தமிழிலே படித்து பட்டம் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று காரண்டி கொடுத்தால் நலமாக இருக்கும் என்பதை உணர்ந்து, ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரு சிலர் மட்டும் தமிழ் படித்தால் போதும் என்று அரசாங்கம் கருதுவதானால், காரண்டி செய்யலாம். அது கனம் அங்கத்தினரின் அபிப்பிராயமாக இருக்கலாம். அரசாங்கத்தின்

அபிப்பிராயம் எல்லோரும் தமிழ் படிக்க வேண்டும் என்பது. அப்படிப் படிப்பவர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு காரண்டி செய்ய முடியாது. அரசாங்க உத்தியோகத்திற்காக என்று தமிழ் படிப்பது தவறு. ஆனால், தமிழை படிப்பதால் பாதகம் இல்லாத வகையில் என்னென்ன பாது காப்புகள் அவர்களுக்கு அளிக்க வேண்டுமோ அதெல்லாம் அளிக்கப்படும்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, தமிழிலே படித்த மாணவர்கள் எத்தனை பேர்கள் எந்தெந்தத் துறைக்கு தேர்வு எழுதி னார்கள், எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்குத் தனிக் கேள்விதான் போட வேண்டும். அதல்லாமல், தமிழிலே விடை அளிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆங்கிலத்திலும் தேர்ச்சி இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஆண்டுக்கோ, பரீட்சைக்கோ விவரம் கேட்டால், அது அரசாங்கத்தினிடம் இல்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷனைக் கேட்டு, அவர்கள் கொடுப்பது என்றால், விவரங்களை அளிக்கலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, கல்லூரி களிலே தமிழ் பாடமொழியாக்கப் பட்டிருக்கிறது. சிலர் அதை எடுத்துப் படிக்க முன் வந்திருக்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்க தமிழை ஆட்சி மொழியாக மேற்கொண்டிருக்கிற இந்த அரசினர், சில பல பணிகளுக்கு தமிழ்ப் பட்டதாரிகள் தேவை என்று அவர்களுக்கு ஊக்கம் தரும் வகையில், அத்தகைய தமிழ்ப் பட்டதாரிகளுக்கு முதலிடம் கொடுக்கும் முறையை ஏற்றுக்கொண்டால், தமிழ்ப் பட்டதாரிகளுக்கு வாய்ப்புக் கொடுத் தால் போகப் போக அதனை விரிவு படுத்தும் வகையில், முதலிடம் தரும் முறையை அரசினர் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு, தமிழ் மட்டும் போதாது, வேறு பல தகுதிகளும் வேண்டும். எல்லாத் தகுதிகளையும் பார்த்துத்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒரு சிலர் தமிழிலே பாஸ் செய்து விட்டார்கள், அவர்கள் எல்லோரையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை ஒத்துக் கொள்ள முடியாது. அவர்களுக்குப் பாதகம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தமிழில் படித்து விட்டால் மட்டும் போதாது. ஆங்கிலமும் வேண்டும். அன்னிய மாநிலங்களிலிருந்து, மத் திய சர்க்காரிலிருந்து கடிதப் போக்கு வரத்துக்கள் இருக்கும். அப் பொழுது ஆங்கிலம் தெரியாது என்று சொல்ல முடியாது. ஆகவே, அப்படி எல்லாத் தகுதிகளையும் பார்க்க வேண்டும்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** தலைவர் அவர்களே, சர்வீஸ் கமிஷனி னிலே, எந்த எந்த துறைக்கு அம்மாதிரித் தமிழ் மீடியம் எடுத்து பட்டம் பெற்றவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொதுவாக பட்டதாரிகளாக இருக்க வேண்டும் என்ற தகுதி சில உத்தியோகங்களுக்கு இருக்கின்றன. அப்படிப் பட்டதாரிகள் மனுப்போட்டால் அவை பரிசீலிக்கப்படுகின்றன. தமிழ் மீடியம் எடுத்துக் கொண்டவர்கள் தமிழிலேயே விடைகள் அளிக்கலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இன்னின்ன துறைக்கு என்று விவரம் கொடுக்க இப்பொழுது இடம் இல்லை.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** தலைவர் அவர்களே, கோயம் புத்தூரிலே தமிழ்க் கல்லூரி ஏற்படுத்திய பிறகு, இது வரைக்கும் எத்தனை மாணவர்கள் பட்டம் பெற்று இருக்கிறார்கள், எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் தமிழ் கல்லூரி என்று சொல்லும்போது, சில கல்லூரிகளிலே தமிழிலே பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்திருப்பதைக் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஒருசிலர்





தமிழைப் பாடமொழியாக ஏற்றுக்கொண்டு, பட்டம் பெற்று இருக்கிறார்கள். எத்தனை பேர்கள் மனுப்போட்டார்கள், எத்தனை பேர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கனம் தலைவர் அவர்களே, தமிழிலேயே மிக்க அக்கறை கொண்டுள்ள கனம் முதல் அமைச்சர் காலத்திலேயே தமிழ் ஆசிரியர்களை, ஆற்றலும், அனுபவமும் மிக்க தமிழ் ஆசிரியர்களை பள்ளிகளுக்குத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க உத்தேசம் உண்டா ? அப்படி எத்தனை பள்ளிகளில் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் கேள்வியின் முதல் பகுதியை ஏற்றுக் கொள்ளுகிறேன். தமிழ் ஆசிரியர்களாக இருந் தால் மாத்திரம் போதாது ; மற்றத் தகுதிகளும் இருந்தால், யோக்கிய தைகள் இருந்தால், அவர்களும் கவனிக்கப் படுவார்கள். சிலர் அவ்வாறு நாங்கள் தமிழ் படித்துவிட்டோம், அதனால் முதல்வராகப் போடவேண்டும் என்று உரிமை கொண்டாட முடியாது. வேறு தகுதிகளும் வேண்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஸார், தமிழ் மீடியத்திற்கு மாணவர்கள் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். படிக்கும் மாணவர்களுக்கு அரசாங் கத்திலே சிலபல சலுகைகள் கொடுத்தால் தான் அப்படிப் படிப்பதற்கு வரும் மாணவர்களை ஊக்குவிக்க முடியும். சாதாரணமாகப் பட்டம் பெற்ற வர்களைத் தேர்ந்தெடுப்பதை சர்வீஸ் கமிஷனுக்கு விட்டு விட்டு, மற்ற துறைகளில் தமிழ் மூலம் படித்து பட்டம் பெற்றவர்களை நேரிடையாக சர்க்கார் உத்தியோகங்களுக்கு எடுப்பதானால், மேலும் மாணவர்கள் அப்படி படிப்பார்கள் என்ற காரணத்தினால் அதற்கான வழிவகைகளைச் செய்வார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பே குறிப்பிட்டேன், தமிழை பாட மொழியாக எடுத்து படித்த மாணவர்களுக்கு என்னென்ன சலுகை கள் அளிக்க முடியுமோ, என்ன ஆதரவு கொடுக்க வேண்டுமோ, பாதகம் இல்லாமல் செய்ய என்ன செய்யவேண்டுமோ, அந்த அளவுக்கு பார்த்துச் செய்கிறோம். ஆனால் கனம் அங்கத்தினர் அவர்களைப் போன்றவர்கள், தமிழிலே படித்த மாணவர்கள் ஏதோ அபூர்வமாக செய்து விட்டார்கள், அதற்காக விசேஷ சலுகை காட்ட வேண்டும் என்ற தவறுதலான மனப் பான்மையை அத்தகைய மாணவர்களிடம் ஏற்படுத்த முற்படக்கூடாது என்று தெரிவிக்க விரும்புகிறேன். அப்படிச் செய்வது அந்த மாணவர் களை கெடுப்பதாக இருக்கும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தலைவர் அவர்களே, தமிழ் மீடியத்திலே படித்த மாணவர்களுக்கு மத்திய சர்க்காரிலே வேலை வாய்ப்பு கஷ்டமாக இருப்பதால் தமிழ் மீடியத்தை அதிகமாக ஊக்குவித்தால் இந்த மாநில மாணவர்களிடம் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்காதா ? ஆகவே தமிழ் கல்லூரிகளை அதிகமாக ஏற்படுத்த முன் வராமல் இருப்பார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உத்தியோகங்கள் எந்த அளவுக்கு மத்திய சர்க்காரிலே கிடைக்கும் என்பது கண்கூடு. தமிழிலே பாடம் படித்த எல்லா மாணவர்களும் சர்க்கார் உத்தியோகத்துக்கு மட்டும் போக வேண்டும் என்பது அல்ல. படித்துவிட்டு எத்தனையோ துறைகளில் ஈடு படலாம். இந்த மாணவர்கள் எல்லாம் சர்க்கார் உத்தியோகத்துக்குத் தான் போக வேண்டும் என்று நாம் கருதுவது தவறு என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** தலைவர் அவர்களே, சயன்ஸ், எஞ்சினீரிங் போன்ற நுண் கலை கல்வியை இந்தத் தமிழகத்திலே உள்ள மாணவர்கள் தமிழிலேயே பயின்றால் வெளி மாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வெளி வரும் கருத்துக்களை பறிமாறிக் கொள்ள வசதி ஏற்படுமா ? அறிவு வளர்ச்சி தடைபடாதா ? அதற்கு அரசாங்கம் என்ன செய்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் என்ன செய்வது. கனம் அங்கத்தினர் கூறுவது உண்மை தான். ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள பல்கலைக் கழகங்களோடு தொடர்பு கொள்ள வேண்டும் ; மேலும்

மேலும் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். விஞ்ஞானத் துறையிலும் மற்ற துறைகளிலும் சரி, புதிது புதிதான கருத்துக்கள் வருகின்றன. நம் மாநிலத்தில் தமிழ்ப் பாட முறையை ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் தமிழ் படித்து விட்டோம் என்பதற்காக உத்தியோகம் பெற வேண்டும் என்று பார்க்கக்கூடாது. ஆங்கிலத்தை அடியோடு விட்டு விட்டு, தமிழ் மொழியிலேயே எல்லாவற்றையும் நடத்தக்கூடிய ஸ்தாபனம் நடத்த யாராவது முன் வந்தால் அரசாங்கம் எல்லா ஆதரவும் கொடுக்கத் தயார். அவ்வாறு தமிழிலேயே பயின்ற மாணவர்கள் வாழ்க்கை நடத்த, எந்த எந்தத் துறைகளில் சேவை புரிய முடியுமோ, அதற்கு வேண்டிய ஆதரவு எப்பொழுதும் அளிப்போம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த தமிழகத்தில் உள்ள மாணவர்கள் தமிழிலே படித்த பிறகு அறிவை வளர்த்துக்கொள்வது என்றால், நுண் கலையில் தேர்ச்சி பெற்ற அன்னிய நாட்டு வல்லுநர்களோடு கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதில் தமிழிலேயே அமைந்திருக்கும் முறை இடையூராக வாராதா என்பதற்கு பதில் தெரிவிக்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு உலகத்திலுள்ளவர்களோடு தொடர்பு கொள்ள இடையூறு வரலாம், மறுக்கவில்லை. அவர்களுக்கு போதிய வாய்ப்பு இல்லாமல் இருக்கலாம். ஆனால் நாமே அறிவை வளர்த்துக்கொண்டு, வாழ்க்கை நடத்துவோம் என்று தமிழிலேயே விஞ்ஞானத்தையும் படிக்க மாணவர்கள் முன் வந்தால், அப்படிப்பட்ட மாணவர்களுடைய ஊக்கத்தைக் குறைக்கத்தயார் இல்லை. அந்த ஊக்கத்தை வேகப்படுத்தி நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் தமிழ் மொழிக்கும் சேவை செய்ய வேண்டிய ஆதரவு அளிக்கத்தயார்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** தலைவர் அவர்களே, ரஷ்யா, ஜெர்மெனி, ஜப்பான் போன்ற நாடுகளில் இன்றைக்கு புதிய கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அவைகளை உடனுக்குடன் மொழி பெயர்க்க, தமிழோடு ஆங்கிலம், ரஷ்யன், ஜெர்மன், ஜப்பான் முதலிய மொழிகளையும் கல்லூரிகளிலே பயிற்றுவிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது நம் மாநிலத்திலே பல்கலைக் கழகத்திலே ரஷ்ய மொழி, பிரெஞ்சு மொழி, ஜெர்மன் மொழி முதலியவைகளை கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. உண்மைதான். உலகத்திலுள்ள ஆராய்ச்சி சம்பந்தமான விஞ்ஞான நூல்கள், ஆராய்ச்சியின் சாதனைகளை வெளியிடும் நூல்களை வேறு மொழிகளிலும் துரிதமாக பிரசுரிக்கப்படுகிறது என்றால், 'லேட்டஸ்ட் ரிசர்ச்சஸ் இன் தி வோர்ல்ட்' சம்பந்தமான நூல்களில் 100–க்கு 50 ஆங்கிலத்திலும் 36 சத வீதம் ரஷ்யன், ஜெர்மன் போன்ற மொழியிலும் வருகின்றன. தமிழிலே விஞ்ஞான நூல்களை அவ்வப்போது பிரசுரிக்கப்படுகிற லேட்டஸ்ட் ரிசர்ச்களை, புதியதாக வரும் கருத்துக்களை கற்றுக் கொண்டால் அன்றி, மொழி பெயர்க்கப்பட்டால் அன்றி, அவைகளை தெரிந்து கொள்ள முடியாது. ரஷ்யாவிலே இருப்பவர்கள் கூட இன்றைக்கு ஆங்கிலத்தை கற்றுக்கொண்டால் தான் விஞ்ஞான நூல்களை கற்றுக் கொள்ள முடியும் என்று அவர்களும் உணருகிறார்கள்.

9–00 a.m. **திரு. து. ப. அழகமுத்து :** உத்தியோகத்திற்கு மட்டும் தமிழ் படிப்பது என்றால் அந்த நோக்கம் நிறைவேறாது. உத்தியோகத்திற்காகப் தமிழ் படிப்பது பிரயோஜனம் இல்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் உத்தியோகத்திற்காகப் படிக்க வேண்டிய மொழி எது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் இரண்டாண்டுகளாக இங்கே இருக்கிறார்கள். அவர்கள் கேட்கிற கேள்வி எனக்கு விசித்திரமாக இருக்கிறது. எல்லோரும் படிக்கவிரும்புகிறோம். படித்தவர்கள் அத்தனை பேர்களுக்கும் உத்தியோகம் கொடுக்கமுடியாது. ஆகவேதான் படிப்பது உத்தியோகத்திற்காக இல்லை என்று சொன்னேன். இது அவர்களுக்கு எப்படி விளங்கவில்லையோ தெரியவில்லை. மேலும் என்னால் விளக்க முடியாது.



**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** முற்காலத்தில் தமிழர்கள் கடல் கடந்து சென்று தங்கள் வாணிபத்தையும், கலாசாரத்தையும் நிலை நாட்டினார்கள் என்று சொல்லப்படுகிறதே, அவர்கள் எந்த மொழியின் தொடர்பு கொண்டு வாழ்ந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வேறு மொழியிலே தொடர்பு இல்லாமல், பாண்டித்தியம் இல்லாமல் தமிழ்மொழியை மட்டும் கொண்டு அவர்கள் பல்வேறு நாடுகளோடு தொடர்பு கொண்டார்கள் என்று நினைப்பது சரியல்ல. காஞ்சி கலாசாலையின் தலைவரை நளாந்தா பல்கலைக்கழகத்திற்கு அழைத்தார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்கள் சம்ஸ்கிருதத்தை நன்கு கற்று பொது மொழியாகக் கொண்டு இருந்தார்கள். திருப்பனந்தாள் மடஸ்தாபகர் ஆதி குமரகுருபரர் தமிழுக்காகச் சிறந்த பல தொண்டு செய்திருக்கிறார்கள் என்றாலும் அவருக்கு சம்ஸ்கிருதமும் தெரியும், இந்தியும் நன்றாகத்தெரியும். கம்பராமாயணத்தை இந்தியிலே வடநாடு சென்று பிரசங்கம் செய்து, அங்குள்ள மன்னனின் அபிமானத்தைப்பெற்று காசியிலே ஒரு மடத்தையே ஸ்தாபித்தார்கள் என்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :**
கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும்
கொள்ளார் அறிவுடையார்
என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப அறிவு வளர்ச்சி கல்வியையே அடிப்படையாகக் கொண்டது. அந்தக் கல்வியை பல மொழிகளில் பெறுவதற்கு இந்த மாநில மக்கள் பயில்வதற்கு பல்கலைக் கழகத்தில் ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் திருக்குறளை; நன்றாக உணர்ந்தவர் எனக்கு அவ்வளவு தெரியாது. இன்னும் இரண்டொரு தினங்களில் வள்ளுவர் படத்தை இந்த மன்றத்திலே உபஜனாதிபதி அவர்கள் திறந்து வைக்கிறார்கள். அதைப்போலவே நமக்கும் பரந்த மனப்பான்மை வளரவேண்டும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** உலக மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்றால் போதும் என்றால் கல்லூரிகளில் தமிழ் போதிப்பதை ஊக்குவிப்பது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பல மொழிகளைக் கற்றுக்கொள்வது நல்லது. மாணவர்கள் கற்றுக்கொள்ளத் தயங்கவில்லை.

*Arrest of workers of the D.M.K. (Corporation election)*

* 336 *Q.*—SRI S. MADHAVAN :
SRI RAMA ARANGANNAL : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Police arrested D.M.K. Party workers in the Madras City in connection with the Corporation election;

(*b*) the number of persons arrested as on 22nd February 1964 and as on 26th February 1964; and

(*c*) the reasons for the arrest?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*c*) Twenty members and sympathisers of the Dravida Munnetra Kazhagam were arrested in Madras City up to 22nd February 1964 and 70

[20th March 1964

(seventy) upto 26th February 1964, in connection with the election to the Corporation of Madras. Some of them were arrested for specific offences and the others under the preventive sections.

**திரு. செ. மாதவன் :** இவர்களைத் தேர்தலுக்கு முன் தினம் கைது செய்திருக்கிறார்களே, அது அவர்கள் வோட்டுப் போட முடியாதபடி செய்வதாகாதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வோட்டுப் போடவேண்டுமென்பதற்காக குற்றம் செய்பவர்களை அனுமதிக்கமுடியாது.

**திரு. முனு ஆதி :** இந்தமாதிரியாகக் குற்றம் செய்யலாம் என்பதற்காகக் கைது செய்யப்பட்டவர்களில் காங்கிரஸ்காரர்கள் எத்தனை பேர் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** காங்கிரஸ்காரர்கள் சிலபேர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சில பேர். இவர்கள் மீது வழக்கு போட்டு விசாரணை நடந்தது.

**திரு. அ. பெ. தருமலிங்கம் :** திடீர் திடீர் என்று கைது செய்யப்பட்டவர்கள் ரௌடி லிஸ்டில் இருந்ததாகச் சொல்லப்படுகிறதே, ரௌடி லிஸ்ட் முன்பே தயாரிக்கப்பட்டதா ? அல்லது இம்மாதிரி கைது செய்யப்பட்டவர்களுக்கு ரௌடி பட்டம் கொடுத்து இருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** புதிதாக லிஸ்ட் இல்லை, லிஸ்ட் இருக்கிறது. புதிதாக யாராவது வந்தாலும் அதில் சேர்க்கப்படுகிறது, அந்த ரௌடிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேரலாம். அவர்கள் திராவிடமுன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக பாதுகாப்பு கொடுக்க முடியாது. குறிப்பாக இப்போது கைது செய்யப்பட்டவர்கள் பல செக்ஷன்களின் கீழ் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் சிடி ஆக்ட் 47 செக்ஷன், 14 செக்ஷன், இன்னும் எம். எஸ்வி. 75, கிருமினல் கோட் 55 ஆகிய பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சென்றமுறை தேர்தல் காலத்தில் ரௌடித்தனத்தில் இறங்கியவர்களை ரௌடி லிஸ்டில் வைத்து, அந்த அநுபவத்தின் பேரில் இவர்களை முன்கூட்டியே கைது செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பு நடந்த சம்பவங்களைக் கொண்டு, எச்சரிக்கையாக முன்னதாகவே அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டோம். அதன் காரணமாகத் தான் இந்த முறை சென்னை நகர பொது மக்களுக்கு போலீஸார் நல்ல முறையில் பாதுகாப்பு அளித்தார்கள், நல்ல முறையில் தேர்தல் நடந்தது என்று பெரும்பாலோர் பாராட்டுவதையும் நான் கேட்டு இருக்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ரௌடி லிஸ்டில் இருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியிலும் அதிகமான ரௌடிகள் சேர்ந்திருக்கிறார்கள் என்பதை இப்போது கைது செய்யப்பட்டவர்கள் லிஸ்டில் இருந்து புலப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திராவிட முன்னேற்றக் கழகத்தினர்செய்து கொண்ட புகாரின் பேரில் தான் ஒரு சிலர் பேரிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. திராவிட முன்னேற்ற கழகத்தில் உள்ள அளவு இதில் இல்லை.

**திரு. முனு ஆதி :** நான் முன்பு போட்ட கேள்வி கைது செய்யப்பட்டவர்களில் காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு பேர் என்பது தான்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரு சிலர்தான் கைது செய்யப்பட்டார்கள் என்று சொன்னேன்.



20th March 1964]

### *Installation of rice hullers*

* 337 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Food be pleased to state the progress made in the installation of rice hullers by (1) Chidambaram, (2) Rasipuram, (3) Tiruchengode and (4) Namakkal Co-operative Marketing Societies?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்:** சிதம்பரம் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நிறுவிய அரிசி மில் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து செயல்பட்டு வருகிறது. இராசிபுரம், திருச்செங்கோடு சங்கங்கள் அரிசி மில் கட்டடங்களைக் கட்டி முடித்தன. ஆனால் அவற்றில் யந்திரங்கள் இன்னும் நிறுவப்படவில்லை. நாமக்கல் சங்கத்தைப் பொறுத்தவரையில், கட்டட வேலை நடந்து வருகிறது. மேல்கூரை அளவிற்குக் கட்டி பூர்த்தியாகிவிட்டது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கூட்டுறவு சங்கங்களால் விநியோகிக்கப்படுவதை விட மலிவான விலைக்கு அரிசி மில் சொந்தக்காரர்கள் சமீபத்தில் திருச்சியில் மலிவு விலைக் கடைகள் ஆரம்பித்து நடத்துவது தெரியுமா? அவர்கள் நியாய விலையில் வழங்க முன் வந்திருக்கும் போது அதற்கு அரசாங்கம் உதவியாக இருக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** அரிசி மில்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற கொள்கை நிலவி வருகிறது. அப்படியானால் புதிய அரிசி மில்களையாவது அரசாங்கம் ஏற்படுத்த முன்வருமா, அல்லது கூட்டுறவுத் துறையில் அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** அது பரிசீலனையில் இருக்கிறது. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

**திரு. ஆ. ராகவ ரெட்டி :** ரைஸ் மில் வைக்க மனு செய்துகொண்டால் ஏராளமான பணத்தை செலவிட்டு லைசென்சு பெற வேண்டியதாக இருக்கிறது. இப்படி ரைஸ் மில்லுக்கு அனுமதி கொடுப்பது என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையா?

Mr. *SPEAKER* : The main question relates to the progress made by Marketing Societies in the installation of rice hullers.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கூட்டுறவுத் துறையில் நடத்தப்படுகிற மில்களை விட மற்றவர்கள் நடத்துகிற மில்களில் லாபம் அதிகம் இருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிறதா? கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவே நடத்தினால் இந்த லாபம் பொதுவானதாக இருக்காதா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** கூட்டுறவு சொஸைடிகள் வேண்டுமென்றால் அவர்களுக்கு ஹல்லிங் பர்மிட் கொடுக்கிறார்கள். அவர்கள் அரைக்கிற நெல் அவர்களுக்கே பயன்படுகிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நான் முதலிலே சொன்னது கூட்டுறவு இயக்கங்களை விடக் குறைந்த விலையில் கொடுக்கப்படுகிற காரணத்தால்......

**கனம் சபாநாயகர் :** குறைந்த விலையில் கொடுக்கப்படுகிறது **is the Hon. Member's assumption,** கனம் மந்திரி அவர்கள் அதை ஒத்துக் கொள்ளவில்லை.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கூட்டுறவு பற்றிய டிமாண்டு நாளைக்கு வருகிறது. அப்போது அதைப்பற்றி பேசலாம்.

[20th March 1964

## *Medical Graduates*

* 338 *Q*.—Sri P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the total number of Medical Graduates passed out from the colleges during 1963 ; and

(*b*) what are their employment opportunities in the State?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) 443.

(இ) மருத்துவப் பட்டதாரிகள் சென்னை மருத்துவப் பள்ளியிலும், சென்னை பொது சுகாதாரப் பணியிலும் முறையே உதவி சர்ஜன்களாகவும், சுகாதார அதிகாரிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் ராணுவ பணியிலும் சேரலாம். தனியார் நிறுவனங்களிலும் இவர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டு. தனியார் நிறுவனங்களிலோ அரசாங்கத்திலோ பணி யேற்காத டாக்டர்கள் சொந்தமாகவே தொழில் நடத்தலாம்.

Sri S. NANJUNDA ROW : Sir, from the statement given by the Central Minister for Health, a sum of Rs. 25,000 is spent on every Medical graduate. After spending so much on a medical graduate, why should the Government permit the medical graduate to open his own clinic and why should he not be asked to serve the Government?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : Sir, there is no such binding on Doctors to serve the Government.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மருத்துவப் பட்டதாரிகள் அதிகமாக இருந்தும் இப்போது பல ஆஸ்பத்திரிகளிலே டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். அவ்வாறு டாக்டர்கள் போடாததற்குக் காரணம் அரசாங்கத்தின் கவனக் குறைவா அல்லது போட மனம் இல்லையா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பல ஆஸ்பத்திரிகளில் டாக்டர் கள் இல்லாத குறையெல்லாம் இப்போது தீர்ந்திருக்கின்றதென்று பெருமை யோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக எந்த ஆஸ்பத்திரியில் டாக்டர் இல்லையென்பதைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

Mr. SPEAKER : In other words the question is whether there is any employment opportunity for those who have passed.

## *Site for Heavy Construction and Mining Equipments Factory*

* 339 *Q*.—Sri K. NARAYANASWAMI PILLAI : } Will the
Sri M. V. KARIVENGADAM : }
Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the places where investigations for mineral deposits have been conducted by the State Geological Department and the Geological Survey of India ;

(*b*) the names of the minerals which can be worked out on a commercial scale ;

(*c*) the details of private mining operations carried on in the State;



20th March 1964]

(*d*) whether the location of a site for the establishment of the new factory for Heavy Constructon and Mining Equipments has been finalised;

(*e*) whether a representation, dated 2nd August 1963, submitted by one R. Venkatasubba Reddy requesting to investigate a site near Kallakurichi Co-operative Sugar Mills for the location of the above factory has been received by the Government: and

(*f*) if so, the action taken by the Government thereon?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) *to* (*c*) A statement[a] is placed on the Table of the House.

(*d*) *to* (*f*) The representation from Sri R. Venkatasubba Reddy has been received. The Government of India have decided to locate the new project for the manufacture of heavy duty trucks and earth moving equipments in Kolar district, Mysore State;

**திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே சிவகங்கை யிலே ஒருவகை களிமண் கிடைப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்தக் களிமண்ணை பயன்படுத்தி சில வகைக் குழாய்கள் செய்யப்படுவதாகவும் அத்தகைய ஒரு தொழிற்சாலை மானாமதுரையில் அமைக்கப்பட்டிருப்ப தாகவும் சொல்லப்படுகிறது. அது போன்ற ஒரு தொழிற்சாலையை சிவகங்கையிலும் ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதிலே ஒரு பெரிய லிஸ்டே கொடுத்திருக்கிறோம். இதைப்பற்றித் தனி தனியாக விவரம்வேண்டுமானால் தனித் தனியாக கேள்வி போட்டால் அதைப்பற்றி சொல்லமுடியும்.

## நாமக்கல் நகர பஞ்சாயத்தை நகராட்சியாக்குதல்

* 340 கேள்வி.—**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா :

சேலம் மாவட்டம், நாமக்கல் நகர ஊராட்சியை (Town Panchayat) நகராட்சியாக (Municipality) உயர்த்த உத்தேசமுண்டா ?

The Hon. Sri S. M. A. MAJID : The matter is under consideration.

இவ்விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** ஒரு சில பஞ்சாயத்துக்களை முனிசி பாலிடிகளாக மாற்ற அரசாங்கம் நோடிபிகேஷன் செய்தது. ஃபைனல் நோடிபிகேஷன் எப்போது செய்யப்படும் ? அந்தப் பஞ்சாயத்துக்களை முனிசிபாலிடிகளாக மாற்றி எப்போது ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமிக்கப் படுவார்கள் ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** 1964-ம் வருஷம் எப்ரல் மாதம் 1-ந் தேதி அமலுக்கு வரும். ஸ்பெஷல் ஆபீசர்களும் நியமிக்கப்படுவார்கள்.

**திரு. முனு ஆதி :** பஞ்சாயத்துக்களை நகர மன்றங்களாக மாற்றியதற் குப் பின்னால் தேர்தல் நடத்த எத்தனை மாதங்கள் அல்லது எத்தனை ஆண்டுகள் பிடிக்கும் ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கொஞ்ச நாள் வரைக்கும் ஸ்பெஷல் ஆபீசர்கள் மேற்பார்த்து வருவார்கள். பஞ்சாயத்துக்கள் நகர மன்றங் களாக மாற்றப்படும்போது வேறு வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள். தேர்தல் நடத்து வதற்கு தகுந்த சமயம் ஏற்பட்ட உடனே நடத்தப்படும்.

---

[a] Printed as Appendix II on pages 428–455.

[20th March 1964

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் வரும்படி வரக்கூடிய பஞ்சாயத்துக்கள் எல்லாம் பெரிய பஞ்சாயத்துக்கள் என்று செய்யப்பட்ட முடிவு முன்பு எடுத்த முடிவாகும். இப்போது ஒரு லட்சம் ரூபாய் வருமானமுள்ள ஒரு பஞ்சாயத்து முனிசிபாலிடியாக ஆகிவிட்டால், 40,000 ரூபாய்க்கு மேல் சம்பளமாகவே போய்விடும். ஆகவே, மூன்று லட்ச ரூபாய்க்கு குறைவாக உள்ள பஞ்சாயத்துக்களை முனிசிபாலிடிகளாக மாற்றுமல் இருப்பார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே நடைமுறையில் விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாறுதல் வேண்டுமென்றல் அரசாங்கத்தின் பரிசீலனைக்குக் கொண்டு வரலாம்.

## தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் சுவடிகள்

*341 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூலகத்திலுள்ள பழைய ஏட்டுச் சுவடிகளைப் பார்வையிட, ஆயுர்வேத ஆராய்ச்சியின் மத்தியக் கவுன்சில் இந்த அரசாங்கத்தின் உதவிகளைக் கோரியுள்ளதா ?

(இ) அப்படியானால், அனுமதி வழங்கப்பட்டதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்திலுள்ள ஏட்டுச் சுவடிகளைப் பார்வையிட, ஆயுர்வேத ஆராய்ச்சி மத்தியக் கவுன்சில் இந்த அரசாங்கத்தின் உதவியைக் கோரவில்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**புலவர் கா. கோவிந்தன்:** அந்த நூல் நிலையத்திலே இருக்கிற நூல்களில் தங்களுக்கும் உரிமையுண்டு என்று ஆந்திர அரசாங்கம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறதா ? அதன் பேரில் அரசாங்கம் ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்ததைவிட அதிகம் எனக்கு ஒன்றும் தெரியாது.

**திரு. செ. மாதவன் :** தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல்நிலயத்தைப் பற்றி வேறு மாநில அரசாங்கத்திற்கும் நம்முடைய அரசாங்கத்திற்கும் ஏதாவது கடிதப் போக்குவரத்து இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கடிதப் போக்குவரத்து ஏதேனும் இருக்கலாம். என்னிடம் விவரம் இல்லை. எத்தனையோ மாநிலங்களில் உள்ள நூலகங்களுடன் கடிதப் போக்குவரத்துக்கள் இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக விவரம் இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, தஞ்சை சரஸ்வதி மகாலில் இருக்கிற பழைய ஏட்டுச் சுவடிகளைக் காபபாற்றுகின்ற வகையில் மட்டுமே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா ? அல்லது நாடு எங்கும் இருக்கிற பழைய ஏட்டுச் சுவடிகளை எல்லாம் திரட்டி விரிவுப்படுத்தும் திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வெளியில் இருந்து கொண்டு வருவது என்பதில்லை. ஏற்கனவே இருக்கக் கூடிய ஏட்டுச் சுவடிகளைப் பாதுகாப்பதோடு பல அரிய பிரசுரங்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.



20th March 1964]

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஏட்டுச் சுவடிகளாக இருக்கின்றதை எல்லாம் இந்தக் காலத்தினரும், வருங்காலத்தினரும் நேரடியாகப் படிப்பதற்கு வாய்ப்புப் பெற்றவர்களாக இல்லையென்ற காரணத்தால் அவற்றையெல்லாம் அச்சிட்டு இப்போது இருக்கின்ற முறைகளில் வைக்கத் திட்டம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சில தனிப்பட்டவர்களிடம் உள்ள சுவடிகளைப் பற்றி ஆராய்ந்து வெளிக் கொண்டு வர மகாமகோபாத்தியாய டாக்டர் சுவாமிநாத அய்யர் அவர்கள் செய்த அரிய சேவையைப் போல் செய்து வருகிறார்கள். தனிப்பட்டவர்களிடம் இருக்கின்ற ஏட்டுச் சுவடிகளை அரசாங்கத்திடம் அளிப்பார்களேயானால் அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. மு. சண்முகம் :** சரஸ்வதி மகாலில் உள்ள பல்வேறு ஏட்டுச் சுவடிகளில் எழுதப்பட்டுள்ளவற்றின் பொருள்களை ஆராய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த வகையில்தான் பல பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. கனம் திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் அவர்களுக்குக் கூட ஒரு சில பிரதிகள் கொடுக்க ஏற்பாடு செய்தோம்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** விஞ்ஞானத் துறையில் முன்னேறி ரஷ்யா போன்ற நாடுகள் சந்திர மண்டலத்தைப் பிடிக்க முயற்சி செய்து கொண்டிருக்கும் இந்த விஞ்ஞான காலத்தில் பழைய ஏட்டுச் சுவடிகளைப் பரிசீலித்து கொண்டிருப்பதில் என்ன பலன் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சந்திர மண்டலத்தில் சஞ்சாரம் செய்வது பற்றிய விவரங்களை அந்த ஏட்டுச் சுவடிகளில் படிக்கிறோம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** தனிப்பட்டவர்களிடம் உள்ள பழைய தமிழ் ஏட்டுச் சுவடிகளைக் கொண்டுவந்து கொடுத்தால் அரசாங்கம் தக்க சன்மானம் அளிக்கும் என்ற ரீதியில் விளம்பரப் படுத்தினால் உகந்ததாக இருக்கும் என்பதை அரசாங்கம் உணருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த மன்றத்தில் கேள்வி கேட்டு விடை அளிப்பதை விடச் சிறந்த விளம்பரம் வேறு என்ன இருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அந்த நூலகம் தனிப்பட்ட டிரஸ்டுகளுக்குச் சொந்தமா? அரசாங்கத்திற்கு அதில் பாத்தியம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கத்தின் மேற்பார்வை இருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** அந்த நூல் நிலயத்திலுள்ள சுவடிகள் எல்லாம் தங்களுக்கே உரிமையுடயன என்று அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கூறியிருக்கிறார்கள். அதிலே அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பத்திரிகைகளில் வருவதை வைத்துக் கொண்டு கேள்வி கேட்டால் விடையளிக்க வேண்டுமென்பது முறையல்ல. அது யாருக்கும் தனி உரிமை அல்ல. அது இந்த மாகாணத்திற்கு உரிமை உடையது. இதிலே கிடைக்கக்கூடிய அறிவு விளக்கங்கள் உலகத்திற்கே பயன்படவேண்டும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** விளம்பரத்தைப் பற்றி நான் கேட்கவில்லை. தனிப்பட்டவர்கள் வைத்திருக்கிற நல்ல தமிழ் ஏட்டு சுவடிகளை கொண்டு வந்து கொடுத்தால் தக்க சன்மானம் அளிக்கப்படும் என்ற உறுதியை அரசாங்கம் ஏற்படுத்துமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தக்க சன்மானம் என்று நாம் கமிட் செய்யமுடியாது. சன்மானம் என்று பெயர் வைத்து தக்க சன்மானம் என்றல் அவர்கள் கொடுக்கும் மதிப்பாகும். அப்படியெல்லாம்

[20th March 1964

சொல்ல முடியாது. அவற்றை வைத்துக் கொண்டிருப்பவர்கள் தங்களுக்கும் பயன்படாமல் மற்றவர்களுக்கும் பயன்படாமல் இருக்கும்படி செய்யக் கூடாது என்று உணர்ந்து கொடுக்க முன்வரவேண்டும்.

*Concessions to the children of political sufferers*

* 342 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the children of the political sufferers are given any concessions in the Industrial Training Institutes and the Polytechnics?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes.

SRI M. S. SELVARAJAN : May I know whether any concession is shown to post-graduate studies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Collegiate and Professional Education-க்கு கன்ஸஷன் இருக்கிறது. போஸ்ட் க்ராஜுவேட் கன்ஸஷன் இருக்கிறதா என்பது பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** பள்ளியில் கட்டுகிற சம்பளத்திற்காக செலவு செய்யும் தொகையை விட ஹாஸ்டலுக்கு ஆகிற செலவு அதிகமாக இருப்பதால் அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு ஹாஸ்டல் செலவிற்காக பணம் ஒதுக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு எம். பக்தவத்சலம் :** அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு மெரிட் ஸ்காலர்ஷிப் இருக்கிறது. அவர்கள் தகுதிக்கு தக்கவாறு சில உதவிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஏ. ஆறுமுகம் :** இன்று நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாக இருக்கிறோம். அதற்கெல்லாம் அரசியல் தியாகிகள்தானே காரணம் ? அப்படிப்பட்டவர்களின் குழந்தைகளுக்கு பள்ளிக்கூடம், கல்லூரிகளில் படிக்கிற எல்லோருக்குமே ஸ்காலர்ஷிப் சலுகைகள் கொடுக்க சர்க்கார் தாராளமாக பணம் ஒதுக்க முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஓரளவு வருமானத்திற்கு உட்பட்டவர்களாக அரசியல் தியாகிகளின் குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு இந்தச் சலுகைகள் எல்லாம் தாராளமாகத்தான் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அரசியல் தியாகிகளுக்கு, ஆறு மாதத்திற்கு மேல் சிறை சென்றவர்களின் குழந்தைகளுக்குத் தான் சலுகை அளிக்கப்படுகிறது என்று டி.பி.ஐ. கூறியிருக்கிறார். இரண்டு மாதங்கள் சிறைக்கு சென்றாலும், அரசியல் தியாகி என்று அங்கீகரித்த பின்பு எல்லோருக்கும் இந்தச் சலுகை வழங்க உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆறு மாதங்கள் சிறை சென்றவர்கள் மட்டுமல்ல, வேறு விபத்துக்களால், தடி அடியால் அங்கஹீனம் ஆனவர்கள், உத்தியோகத்தை இழந்தவர்கள், உத்தியோகம் பார்க்க முடியாதவர்கள் அவர்களுக்கு எல்லாம் கூட இந்தச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. மு. சண்முகம் :** நம் மாநிலத்தில் அரசியல் தியாகிகள் யார் யார் என்று அறியக் கூடிய பட்டியல் ஏதாவது வெளியிடப்பட்டிருக்கிறதா ? இல்லை என்றால் அரசியல் தியாகிகளுக்குள்ள யோக்கிதாம்சங்கள் என்ன என்பதற்கு விளக்கங்களாவது வெளியிடப்பட்டிருக்கிறதா ? இல்லை என்றால் அந்த விளக்கத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்தான் அரசியல் தியாகிகள் என்று கருதப்படுகிறார்கள். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பற்றி, தமிழ் நாட்டில் ஈடுபட்டவர்கள் பற்றி, "அந்தாலஜி" ஜாபிதா தயாரிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.



20th March 1964]

**திரு. முனு ஆதி :** தண்டவாளத்தைப் பெயர்த்தவர்கள், தந்திக் கம்பிகளை அறுத்தவர்கள் தியாகிகள் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நாட்டின் விடுதலையையொட்டி அவர்கள் என்ன தவறான காரியங்கள் செய்திருந்தாலும் அவர்கள் தியாகம் செய்தவர்கள் என்றே கருதப்படுகிறார்கள்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** அரசியல் தியாகிகளின் பிள்ளைகளுக்கு ஹைஸ்கூலில் படிக்கிறவர்களுக்கு மொத்தம் 40 ஸ்காலர்ஷிப்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அவர்கள் பிள்ளைகள் அதிகம் பேர்கள் அதன் பயனை அடைய விரும்புவதால் அந்தத் தொகையை அதிகரிக்க முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த விஷயம் எல்லாம் அப்போதைக்கப்போது அரசாங்கப் பரிசீலனையில் இருக்கிறது. எந்தெந்த வகையில் விரிவாக்க முடியுமோ அது அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சம்பளச் சலுகைகள் கிடைக்கிறது என்பதற்காக வேறு வசதி வாய்ப்பு உள்ளவர்கள் கூட குறைந்த வசதி படைத்தவர்கள் என்று எழுதிக் கொடுத்து கையெழுத்து வாங்கி நிரூபிப்பதுபோல் போலி தியாகிகள் கூட தியாகிகளின் பட்டியலில் சேர்ந்தவர்கள் என்று எழுதி அது அனுமதிக்கப்பட்டு அந்த உபகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறதா ? அது கண்டு பிடிக்கப்பட்டு பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எந்த சலுகை பெறுவதாகயிருந்தாலும் தகுதி உள்ளவர்களோடு தகுதி இல்லாதவர்களும் பெற முயல்வது இயற்கை. கூடுமானவரையில் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு செய்யப்படுகிறது. தவறுதல் நேர்ந்த பின்னால் அரசாங்கக் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தியாகிகள் பட்டியலில் நாடு சுதந்திரம் அடைவதற்காக பாடுபட்ட அந்தக் கால அரசியல் தியாகிகளுக்கு மட்டும் அதில் இடம் கொடுக்கப்படுமா ? இப்போது நாட்டு மக்களுக்குத் தொல்லை செய்யும் அளவிலுள்ள அரசியல் தியாகிகளும் அதில்...............

MR. SPEAKER : Answer to this question has already been given.

*Strike at Islamiah College, Vaniambadi*

* 343 *Q.*—SRI M. P. VADIVELU : Will the Hon. the Chief Minister be pleased to state whether the strike by the students of the Islamiah College at Vaniyambadi has been brought to the notice of the Government ; and if so, the action taken by the Government?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆம். தனியார் கல்லூரிகளின் நிர்வாகத்தில் அரசாங்கம் தலையிடுவதில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** கல்லூரி மாணவர்கள் ஸ்டைரக் செய்யக் காரணம் என்ன ? மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்த நேரத்தில் தனியார் கல்லூரி என்பதற்காக அரசாங்கம் தலையிடாமல் இருந்தால் மாணவர்களின் உரிமை பறிக்கப்படுகிற நிலை ஏற்படாதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரு சில மாணவர்கள் பரீட்சைக்கு அனுப்பப்படவில்லை என்ற காரணத்திற்காக, 15 பேர்கள் டீட்டெயின் செய்யப்பட்டார்கள் செலக்ஷனில். அதற்காக மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்தார்கள். இந்த நிலையில் அரசாங்கம் தலையிடுவதில்லை.

## *Scarcity of sugar*

* 344 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state the reasons for the scarcity of sugar in the State at present and the steps taken to ensure adequate supply of sugar for the use of the public?

The Hon. Sri N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: A statement is placed on the Table of the House.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சர்க்கரை கட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தினால்தான் சர்க்கரையை உடனுக்குடன் வாங்கிக் கொள்ளலாம் என்றிருப்பவர்கள் கூட கட்டுப்பாடு வந்ததற்குப் பிறகு சற்று அதிகமாகவே வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்ற நிலை ஏற்பட்ட பிறகுதான் இந்த பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது என்று கருதுகிறேன். எனவே அந்தக் கட்டுப்பாட்டை நீக்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கட்டுப்பாட்டை நீக்குவதெல்லாம் மத்திய சர்க்காரிலிருந்து நமக்கு கொடுக்கிற சர்க்கரையை வைத்துத்தான் சொல்லவேண்டும். அவர்கள் அபிப்பிராயத்தைப் பொறுத்துதான் கட்டுப்பாட்டைப் பொறுத்து சொல்லலாம். அங்கத்தினர் சொன்ன அந்தவிதமான தகவல் என்னிடம் இல்லை.

## *Krishna water for Madras*

* 345 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state the present stage of the scheme to take water from the river Krishna to meet the requirements of drinking water for the Madras City?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: The matter is still under consideration of the Government.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** காவேரி ஆற்றிலிருந்து நீரை சென்னை நகருக்குக் கொண்டு வர ஒரு திட்டம் இருந்ததே, அது எந்த அளவில் இருக்கிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பப்ளிக் ஹெல்த் சீப் எஞ்ஜினியர் ரெக்கமெண்ட் செய்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. வீராணம் டாங்கில் அந்த லிஸ்டம்படி கொண்டு வர ஏற்பாடு இருக்கிறது.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** கிருஷ்ணா கோதாவரி கமிஷன் செய்திருக்கிற சிபார்சுகள் என்ன என்று இந்த சபை அறியலாமா ? மத்திய சர்க்கார் அதற்கு எந்தளவு ஒத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இங்கு சமர்ப்பிப்பார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அத்தகவல் இப்போது கூறுவதற்கில்லை.

**திரு. முனு. ஆதி :** காவேரியில் இருந்து குடி நீர் சென்னை நகருக்கு கொண்டு வரும் திட்டத்தில் இடையே உள்ள நகரங்களுக்கும் குடி நீர் வசதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** காவேரி வாட்டர் சப்ளை வந்தால் 40 மிலியன் காலன் அளவு சென்னைக்கு சப்ளை செய்வதற்குத்தான் சீப் எஞ்சினியர் ரெக்கமெண்டேஷனில் கூறியிருக்கிறார்கள். இன்வெஸ்டிகேஷன் முடிந்த பிறகுதான் வழியில் உள்ள கிராமங்களுக்கு வருமா வராதா என்று கூற முடியும்.

a Printed as Appendix III on pages 456–457



**திரு. க. ர. நல்லசிவம் :** சென்னை குடிநீர் வசதிக்காக கிருஷ்ணா நதித் தண்ணீரை பயன்படுத்திக்கொள்வது லாபகரமா ? அல்லது காவேரித் தண்ணீரை பயன்படுத்திக்கொள்வது லாபகரமாயிருக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** மூன்று விதமாக கிருஷ்ணா தண்ணீரை கொண்டு வரலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(1) Drawing water from Nagarjunasagar Reservoir across the river Krishna அதற்கு 54·20 கோடி செலவாகும்.

(2) Drawing water from the Srisailam Reservoir, across the river Krishna—Rs. 61.25 crores.

(3) Drawing water from above the Anicut, Sunkesala, across the river Tunghabhadra—Rs. 59.00 crores.

கிருஷ்ணா மூலம் சீசைலம் ரிசர்வாயருக்கு கொண்டுவருவது அதிகச் செலவாகும். எல்லாவற்றையும் பப்ளிக் ஹெல்த் எஞ்சினியர் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். எந்தமாதிரி கொண்டுவரலாம் என்ற தீர்ப்பு வந்த பிறகுதான், அவர்கள் ரிப்போர்ட் வந்த பிறகுதான் குறிப்பாகக் கூற முடியும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** காவேரி ஆற்று நீரை சென்னைக்குக் கொண்டுவர எவ்வளவு செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** 17·13 கோடி. 9–30 a.m.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** சிக்கனமாக எந்தத் திட்டம் நடத்த முடியும் என்று பார்த்தால், காவேரி ஆற்றுநீரை கொண்டு வருவது தான் சிக்கனமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அதை உடனடியாக எடுத்துக்கொண்டு அமுல் நடத்தப்படுவதற்கு சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** காவேரி தண்ணீர் கொண்டு வருவது பற்றி சுமாராக மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து எவ்வளவு தண்ணீர் வரும், எந்தெந்தமா நிலத்திலிருந்து எது சிக்கனமாக இருக்கும் என்கின்ற விவரங்கள் எல்லாம் பார்க்க வேண்டியிருக்கிறது. இது எல்லாம் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து கொண்டிருக்கிறது. முக்கியமாக இது நல்ல முறையில் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு, இதைப்பற்றி அதிகம் விவாதிக்காமல் இருக்கவேண்டும். அதோடு இதை அதிகமாக துருவித்துருவிப் பார்ப்பது நல்லதாக இருக்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, இந்த காவேரி ஆற்றுத் தண்ணீரை கொண்டுவருகின்ற வழியில், சர்க்காருக்கு வேண்டியவர்களுடைய நிலங்களாக இருப்பதனால் அதை ஒதுக்கிவிட்டு, வேண்டாதவர்களுடைய நிலங்களை எல்லாம் அவசியமில்லாமல் எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்று சொல்லப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** காவேரி ஆற்று நீர் கொண்டு வருகின்ற காரியம், ஜஸ்டேஷன் பீரியட் என்று சொல்லுவார்களே, அதாவது கன்வலீவ் ஆகக்கூடிய ஸ்டேஜ் கூட வரவில்லை. அதற்கு முன்னால் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்றெல்லாம் சொல்வதற்கு இடமேயில்லை.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** தலைவர் அவர்களே, குடி தண்ணீர் சென்னைக்கு கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகின்ற நோக்கில் விவசாயத்திற்கு வந்து கொண்டிருக்கின்ற தண்ணீரில் ஏதாவது குறைவு ஏற்பட்டு எங்களுடைய பிழைப்புக்கு ஆபத்து ஒன்றும் ஏற்படாமல் அரசாங்கம் பாதுகாக்குமா ?

[20th March 1964

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்களோ அல்லது மற்றவர்களோ இதைக் குறித்து அச்சப்படவேண்டிய தேவையில்லை. ஆனால் மற்றவர்களுக்கு வரவேண்டிய தண்ணீரை கேட்காமல் இருந்தால் போதும்.

**திரு. ஏ. ஆறுமுகம் :** கிருஷ்ணை நதியிலிருந்து குடிதண்ணீருக்காக தண்ணீர் கொண்டு வரும்போது குழாய் மூலமாகக் கொண்டுவரப்படுமா அல்லது கால்வாய்கள் வெட்டி கொண்டுவரப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி இன்னும் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டியிருக்கிறது. மகாராஷ்டிரம், மைசூர், ஆந்திரா முதலிய ராஜ்யங்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டியிருக்கிறது. இப்போது தண்ணீர் கொடுக்கவேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபம் இல்லை. எப்படிக் கொண்டு வருவது என்கின்ற விஷயங்கள் எல்லாம் இப்போது முடிவு செய்யப்படவில்லை. இவைகள் எல்லாம் டெலிக்கேட்டான விஷயங்கள். எல்லா விஷயங்களும் பரிசீலனையில் இருக்கின்றன. பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. எல்லா விவாதங்களையும் சொல்வதற்கு இன்னும் காலம் வரவில்லை.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—CALLING ATTENTION TO DAMAGES DUE TO FLOODS IN TIRUCHIRAPPALLI DISTRICT.

**திரு. சா. ராமசாமி :** தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் பெய்த பெருமழையின் காரணமாகவும், புள்ளம்பாடி கால்வாயில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாகவும், விவசாயிகளுக்கு ஏற்பட்ட சேதாரங்களும் மேற்படி கால்வாயில் தண்ணீர் குறைந்து விட்டதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : The Pullambadi canal is intended to utilise the surplus waters of the Cauvery, after meeting the existing demands of irrigation under the Cauvery below the Mettur Dam. The direct and indirect ayacuts benefited by the canal are 8,831 acres and 13,283 acres respectively. The supply for direct irrigation will be allowed only in favourable and normal years when the supplies to the Cauvery are generally satisfactory and the storage position in Mettur reservoir is also favourable. As regards indirect irrigation, the surplus water as and when available will be diverted to fill up tanks. A short term crop of 4-1/2 months duration is to be raised under the canal and the irrigation season is fixed as from 1st August to 15th December.

During the year 1964 due to partial failure of south-west monsoon, the level in the Mettur Reservoir was very low even from the beginning of the irrigation season. Water could not, therefore be let down in the canal on the 1st August 1963. After reviewing the storage position with reference to the needs of the regular



20th March 1964] [Sri V. Ramaiah]

ayacut, the Government direcated on 16th September 1963 that water should be let down to the tanks under the above canal, whenever more than adequate supply was available at the Grand Anicut, but subject to the normal and full irrigation requirements under the Cauvery in Thanjavur and Truchirappalli districts, being met.

After 20th September 1963 there had been some good rainfall below Mettur Dam resulting in the realisation at Grand Anicut of more than the required quantity. The surplus was diverted to the Pullambadi canal from 20th September 1963 onwards for the indirect ayacut and from 1st November 1963 for the direct ayacut. The position was again reviewed having regard to the storage position in Mettur and to the needs of the ayacut under the canal. The Government ordered that the Pullambadi canal should be kept open for irrigation from 1st November 1963 to 28th January 1964 for its full length for irrigating its ayacut. A notification was also issued to the above effect and emphasising that the ryots would be supplied with water only for a short term crop and that the supply would be subject to surplus being available in the Cauvery river and subject to favourable storage position in Mettur Reservoir.

According to the above notification, the canal was due to be closed on 29th January 1964. But due to the late opening of the canal, proposals were received from the local officers for extension of supplies up to 28th February 1964. The area of direct and indirect ayacuts which required extension of supplies were reported to be 2,250 and 4,280 acres, respectively. The storage position in Mettur reservoir was very low during this period. However, after taking into consideration all the aspects regarding the storage position in Mettur and the irrigation needs under the Cauvery delta, the Government ordered in February 1964 that the Pullambadi canal should be kept open up to 28th February 1964 to utilise for the old ayacut whatever supply was let down from the Mettur Reservoir and to divert the balance of supplies, if any, to the canal to serve the standing crops, without any assurance of continuous supplies for any particular period. Accordingly, the available supplies were distributed equitably in this canal up to 28th February 1964 by local officers by adopting turns.

The Executive Engineer, Upper River Conservancy Division and the Superintending Engineer, Thanjavur Circle, who have inspected the ayacut personally have not reported any damage to the crops. They had stated that extension of supply would be necessary only up to 28th February 1964 to bring the standing crops to maturity and this was arranged for. At present, only natural flows are allowed from the Mettur Reservoir and this has to serve a large area of summer irrigation under Salem and Tiruchi channels, Kullakar cultivation under Lower Coleroon anicut and also short-term paddy under Cauvery at Vennar. Already it is

[Sri V. Ramaiah] [20th March 1964

represented to Government that supply is inadequate in the ayacuts, and the supply has to be arranged to serve the legitimate ayacut with great difficulty and judiciousness.

It may thus be seen that regular supply was allowed in the Pullambadi canal for four months from 1st November 1963. The Government regret that any further supply could not be given to the Pullambadi Canal, as it will affect the supply to the legitimate ayacut of the Cauvery delta.

### III.—MOTION FOR LEAVE OF ABSENCE TO A MEMBER

SRI P. RAMACHANDRAN: Sir, under rule 11 of the Assembly Rules, I move—

"That leave of absence be granted for the member Sri A. M. P. Balagangadharan till 1st April 1964 from the date of his absence."

The motion was put and carried.

### IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1964-65—*cont.*

(1) DEMAND No. XXVI—IRRIGATION.

(2) DEMAND No. XXVII—PUBLIC WORKS—WORKS.

(3) DEMAND No. XXVIII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

(4) DEMAND No. XLI—CAPITAL OUTLAY ON IRRIGATION.

(5) DEMAND No. XLII—CAPITAL OUTLAY ON PUBLIC WORKS.

THE HON. SRI V. RAMAIAH: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,72,83,300 under Demand No. XXVI—Irrigation".

**புலவர் கா. கோவிந்தன் :** கனட தலைவர் அவர்களே, நீண்ட காலமாகவே மராமத்துச் செய்யப்படாமல் விடப்பட்டிருக்கும் கால்வாய்களையும் குடி மராமத்து மூலமே சீர்படுத்த வேண்டும் என்ற கொள்கையை மாற்றி பொதுப்பணித்துறை மூலம் செய்யவேண்டிய இன்றியமையாமை பற்றி விவாதிக்க, என் பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையை முன் மொழிகின்றேன்.

"That the allotment of Rs. 5,72,83,300 under Demand No. XXVI—Irrigation be reduced by Rs. 100".

THE HON. SRI V. RAMAIAH: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,15,89,500 under Demand No. XXVII—Public Works—Works".



20th March 1964]

**புலவர் கா. கோவிந்தன் :** கனம் தலைவர் அவர்களே, ஆற்றுப் பாலங்களுக்கு சுங்கம் வசூலித்து வரும் திட்டத்தைக் கைவிட வேண்டுவதன் இன்றியமையாமை பற்றி விவாதிக்க என்பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் முன் மொழிகின்றேன்.

"That the allotment of Rs. 6,15,89,500 under Demand No. XXVII—Public Works—Works be reduced by Rs. 100".

THE HON. SRI V. RAMAIAH: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,11,75,700 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant".

**புலவர் கா. கோவிந்தன் :** கனம் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை கட்டி முடிக்கவேண்டிய பல்வேறு பணிகளையும் காண்ட்ராக்ட் மூலம் முடிப்பதைக் கைவிட்டு, பொதுப்பணித்துறையே ஏற்று முடிக்க வேண்டுவது பற்றி விவாதிக்க என்பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் முன் மொழிகின்றேன்.

"That the allotment of Rs. 2,11,75,700 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100".

THE HON. SRI V. RAMAIAH: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,64,45,000 under Demand No. XLI—Capital Outlay on Irrigation".

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, பாசனத் துறைக்கு மேலும் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுவதன் இன்றியமையாமை பற்றி விவாதிக்க என்பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் முன் மொழிகின்றேன்.

"That the allotment of Rs. 9,64,45,000 under Demand No. XLI—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100".

THE HON. SRI V. RAMAIAH: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,35,86,100 under Demand No. XLII—Capital Outlay on Public Works".

**திரு. து. ப. அழகமுத்து :** கனம் தலைவர் அவர்களே, என்பேரில் உள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 5,35,86,100 under Demand No. XLII—Capital Outlay on Public Works be reduced by Rs. 100".

MR. SPEAKER: The Demands and the cut motions are before the House for discussion. There are less than four hours apart from the time allotted to the Hon. Minister and the Leader of the Opposition. There are 32 speakers. Every hon. Member can take only four and a half minutes. Therefore, hon. Members are requested not to take more than five minutes at any rate.

***திரு. து. ப. அழகமுத்து :** கனம் தலைவர் அவர்களே, இந்த நீர்ப் பாசன மானியக் கோரிக்கையின்மீது எங்களுடைய பக்கத்தில் இருந்து கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து நான் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூறுவதற்கு முன்னால், இதற்கு முன்னால் நான் பேசிய சந்தர்ப்பங்களில் எல்லாம தலைவர் அவர்கள் கொடுத்த நேரத்திலேயே முடித்துக்கொண்டிருக்கிறேன் என்ற காரணத்தினால்.................

**கனம் சபாநாயகர் :** அது சரி ; இப்போது நேரம் இல்லையே ; நான் என்ன செய்வது ? The hon. Member can drop one of the Members in this party and take 4½ minutes more, if he wants.

**திரு. து. ப. அழகமுத்து :** யாரேனும் ஒருவரைக் குறைத்துக் கொள் கிறோம்.

**கனம் சபாநாயகர் :** ஒருவரைக் குறைத்தால் 4½ நிமிஷம் அதிகமாக எடுத்துக்கொள்ளலாம். The hon. Member can take only 10 minutes on the whole.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்தப் பொதுப்பணித் துறை மானியத்தில் குறிப்பாக நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றி மட்டும் என்னுடைய கருத்துக் களைக் கூறலாம் என்று கருதுகிறேன்.

நம்முடைய முதலாவது திட்டம், இரண்டாவது திட்டம், மூன்றாவது திட்டம் ஆகியவைகளில் பெரிய பாசனத் திட்டங்களுக்காக 59 கோடி ரூபாய், அதாவது கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. அதே சமயத்தில் சிறு பாசன வகைகளுக்கு விசேஷ நீர்ப்பாசனத் திட்டத் தின்கீழ் 12·70 லட்சம் ரூபாய் மூன்றாவது திட்டம் வரையில் போடப் பட்டிருக்கிறது. அதேபோல ஏரிகள் தூர் வாருதல், நில மீட்பு திட்டம் ஆகியவைகளுக்கு 14 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இவைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெரிய பாசனத் திட்டங்களுக்கு செலவிட்ட அளவுக்கு சிறு பாசனத் திட்டங் களுக்குச் செலவிடப்படவில்லை. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் என்ற வற்றில் ஆற்றில் அணை கட்டி தண்ணீர் பூராவையும் பயன்படுத்தியிருப்பது பாராட்டக்கூடிய ஒன்றுதான். ஆனால் அதே சமயத்தில் ஆற்றுப் பாசனம் அல்லாமல் ஏரிகளை மட்டும் நம்பியிருக்கும் பிரதேசங்களில் உள்ள பாசன வசதியைப் பெருக்க சர்க்கார் போதுமான முயற்சி எடுத்துக்கொள்ள வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதுவும் குறிப்பாக, ஜமீன் பகுதியில் இருக்கிற ஏரிகள் சரியான முறையில் சீர்திருத்தம் செய்யப்பட வில்லை. மொத்தம் விவசாயத்திற்கு உபயோகப்படுகிற நிலங்களில் ஆற்றுப் பாசனத்தில் 22 லட்சம் ஏக்கர்கள் விவசாயம் செய்யப்படுகிறது என்றால், ஏரிகளின் மூலமாக 37,000 ஏரிகளின் மூலமாக 20 லட்சம் ஏக்கர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன என்று புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. மொத்த விவசாயத்தில் 40 சத வீதம் ஏரிகளின் மூலமாக விவசாயம் செய்யப்படுகிறது. ஆனால் ஏரிகள் சரியானபடி பழுது பார்க்கப் படாமலும் தூர் எடுக்கப்படாமலும் இன்றைய தினம் இருந்துகொண்டு தான் இருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது முக்கியமாக சிறு பாசனத் துறையில் சர்க்கார் அதிகமான கவனம் செலுத்தவில்லை என்று தான் சொல்லவேண்டும். இந்த சிறு பாசனத் துறையை எடுத்துக்கொண் டாலும் ஒரு இலாகா அல்லது ஒரு மந்திரியினுடைய கட்டுப்பாட்டுக்குள் இவைகள் இருக்கவில்லை. 200 ஏக்கர்களுக்கு உட்பட்ட பாசன ஆயக்கட்டை உடைய ஏரிகள் பஞ்சாயத்து யூனியன் வசம் தற்போது ஒப்படைக்கப்பட்டிருக் கிறது. விசேஷ சிறிய நீர்ப்பாசனத் திட்டம் என்ற பிரிவில் ஃபுட் ப்ரொடக் ஷன் டிபார்ட்மெண்ட் மூலமாக ஒரு பகுதி கவனிக்கப்படுகிறது. அதற்கு அடுத்தாற்போல எ. ஸி ஆர். மூலமாக ஒரு பகுதி கவனிக்கப்படுகிறது. 200 ஏக்கருக்கு மேற்பட்ட பாசனத்தைப் பெறுகிற ஏரிகள் பராமரிப்பை பி.டபிள்யூ.டி. ஏற்றுக்கொண்டிருக்கிறது. பி.டபிள்யூ.டி. ஏற்றுக்கொண் டிருக்கிற ஏரிகளை கவனிக்கிற பொறுப்பை எப்படி வைத்திருக்கிறார்கள் என்றால் ஏரிகளில் உள்ளே இருக்கிற ரிப்பேர்களை அவர்கள் செய்வார்களே





யொழிய வேறு ஒன்றும் அவர்கள் செய்வதில்லை. ஏரிகளுக்கு வரத்துக் கால்கள், ரிப்பேர் செய்கிற வேலையை குடி மராமத்து, பஞ்சாயத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஏரிகளில் அவர்கள் செய்கிற வேலை கூட ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை சைக்கிள் ஸிஸ்டத்தில் வேலை செய்வது என்று வைத்திருக்கிறார்களேயொழிய தேவைப்படும்போது நிலையை அனுசரித்து ரிப்பேர் செய்வது என்ற முறையைக் கைக்கொள்வதில்லை. 6 ஆண்டுகளுக்கு ஒரு முறைகூட கரைக்கு மண் வெட்டிப்போட்டு கணக்கு காட்டப்படுகிறதே யொழிய உருப்படியான வேலை செய்யப்படுவதில்லை. உதாரணமாக சொல்ல வேண்டுமானால், பெரம்பலூரில் ஒரு ஏரிக்கு மதகு கட்டினார்கள். மதகைக் கட்டி இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு ஷட்டர் போட்டார்கள். போட்ட ஷட்டரும் பொருத்தமாக இல்லை. அதற்கு அடுத்து, ஃபுட் ப்ரொடக்ஷனில் ஏரிகளுக்கு வேலை செய்கிறார்கள். சிறிய ஏரிகளை மட்டும் எடுத்து அவர்கள் வேலை செய்யும்போது அதிக உணவு உற்பத்தியை மனதில் வைத்துக் கொண்டு செய்கிறார்களேயொழிய, பின்னால் அவைகளைப் பழுதுபார்க்கும் பொறுப்பு அவர்களிடம் இல்லை. அந்தப் பொறுப்பு பஞ்சாயத்து யூனிய னிடம் இருக்கிறது. அடுத்து டீஸில்டிங்-கம்-ரீகளமேஷன் என்று ஒரு பிரிவு இருக்கிறது. அதிலே குறைவாக வேலை நடைபெற்று வருகிறது. இந்தத் துறை மிக அதிகமாக ஏரிகளுக்குப் பயன்படவேண்டும். ஏரிகளைத் தூர் எடுத்தால்தான் மழைக் காலத்தில் ஏரிகளில் அதிக தண்ணீர் நிரம்ப முடியும். அப்படி அதிக அளவில் தண்ணீர் நிரம்பினால்தான் பக்கத்தில் இருக்கின்ற கிணறுகளுக்கு தண்ணீர் கிடைக்கும். அந்தத் திட்டத்தைச் சரியாகச் செய்யாமல் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து மேலும் மேலும் கிணறுகளை ஆழப்படுத்திக் கொண்டு போவதன் மூலமாக பயன் இல்லை. அதனால் விவசாயிகளுக்கு கடன் சுமைதான் ஏறுமேயொழிய வேறு பயனில்லை. அடிப்படை வேலையை சிறு பாசனத் திட்டத்தில் சர்க்கார் செய்வதாகக் காணோம். இன்னும் எஸ்.எம்.ஐ.பி. டிபார்ட்மெண்டை ஏற்படுத்தி நடுத்தர பாசன திட்டங்களை, புதிய திட்டங்களை உருவாக்குவதாக கூறப்படுகிறது. அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று புள்ளி விவரங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் என்ன செய்திருக் கிறார்கள் என்று அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட்டில் பார்த்தபோது 1961-ல திருச்சிராப்பள்ளியில் ஐந்து வேலைகளைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் செய்திருக்கிற ஐந்து வேலைகளில் ஒன்று எம். எஸ். இஸட். 361 ஜீப்புக்கு ரிப்பேர் செய்தது ஒரு ஸ்கீமாக இருக்கிறது. இந்த முறையில்தான இந்த எஸ். எம். ஐ. பி. வேலை செய்கிறதோ என்னவோ என்று அஞ்ச வேண்டிய நிலையில் இருக்கிறது. அதிகமாக புதிய ஏரிகளை கட்டவேண்டு மென்று எங்கள் பகுதியில் கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளை முதலில் ப்ரொபோசல் நிலையில் பரிசீலனை செய்து சர்க்கார் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது. அந்த வேலையை எடுத்துக்கொள்வதா இல்லையா என்று சர்க்கார் முடிவு செய்து டிடெய்ல்ட் எஸ்டிமேட் போடு வதற்கு மறுபடியும் எஸ்.எம்.ஐ.பி-க்கு அனுப்புகிறார்கள். இப்படி ஆராய்ச்சி நடத்துவதற்குள்ளாக ஏறத்தாழ 10 ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. இந்த நிலையில் இந்த இலாகா போய்க்கொண்டிருந்தால் எப்போது துரித மாக வேலைகளைச் செய்வது என்று புரியவில்லை.

அதற்கு அடுத்தாற்போல், இந்த சிறிய நீர்ப்பாசனத்தைப் பற்றி ஏற்கெனவே 25 ஆண்டு கால அமைச்சராக இருந்து அனுபவம் உள்ள இன்றைய முதல் அமைச்சர் அவர்கள் விவசாய அமைச்சராக இருந்த பொழுது காட்கில் கமிட்டி பரிசீலனை செய்தது. அப்பொழுது அவர்கள் செய்த சிபார்சு ஏரிகளை பராமரிக்கும்பொழுது வரத்துக் கால்வாய்களை ரிப்பேர் செய்யவேண்டும் என்றும் அதை முக்கியமாக கவனிக்க வேண்டும் என்றும் அந்தக் கமிட்டி கூறியிருக்கிறார்கள். 1959–60-ல் நம்முடைய சட்ட மன்றம் நியமித்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி கூட ஏரிகள் செப்பனிடுவது சம்பந்தமாக சில சிபார்சுகள் செய்திருக்கிறது. ஏரிகளை ரிப்பேர் செய்தால் மட்டும் போதாது, வரத்துக் கால்வாய்களை சரியாக செப்பனிடவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல வேறு சில சிபார்சுகளையும் எஸ்டிமேட்ஸ் கமிட்டியார் செய்திருக்கிறார்கள். இந்த சிபார்சுகள் செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகின்றன. நான்கு ஆண்டுகளாக இந்த சிபார்சுகளைப்பற்றி இந்த டிபார்ட்மெண்டு என்ன

[ திரு. து. ப. அழகமுத்து ] [20th March 1964

நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று பார்த்தால், ஒன்றும் இது வரையில்
எடுத்ததாகத் தெரியவில்லை. ஏன் அப்படி ஒரு கமிட்டி அமைக்கவேண்டும்.
அந்த கமிட்டி சிபார்சுகள் செய்தால், அவைகளின்மீது டிபார்ட்மெண்டு
நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், இதனுடைய பொருள் என்ன
என்பதைப் பற்றி அமைச்சர் அவை சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதை
இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல நான் நேற்று இந்த டிபார்ட்மெண்டில் ஒரு விவரம் கோரி
னேன். போன வருஷம் சட்டசபை மெம்பர்களுக்கு பி.டபிள்யூ.டி. கட்டடத்
தில் ஒரு காட்சியை வைத்து, அதிலே இதுவரையிலே நிறைவேற்றியுள்ள
திட்டங்களைக் காட்டினார்கள். அதற்கான செலவுகளையும் காட்டினார்கள்.
எவ்வளவு ஆயக்கட்டு பாசனம் பெறுகின்றன என்பதையும் காட்டினார்கள்.
அந்த விவரங்களை நான் இப்பொழுது மீண்டும் கோரினேன். அதற்காக
சட்டமன்ற செயலாளர் மூலமாக ஒரு விண்ணப்பம் கொடுத்தேன். நேற்று
மாலை வரையில் அந்த விவரங்களைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்
தேன். வரவில்லை. சட்டமன்ற செயலாளர் மூலமாக போன் செய்து
அஸிஸ்டெண்டு செக்ரடரியைக் கேட்டபொழுது, செக்ரடரியைக் கேட்க
வேண்டுமென்று சொன்னார்கள். செக்ரடரி மந்திரி அவர்களைக் கேட்க
வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் கடைசி வரை அந்த விவரம்
கிடைக்கவில்லை. நான் புதியதாக விவரம் ஒன்றும் கோரவில்லை. ஏற்
கெனவே கொடுத்த புள்ளி விவரத்தைத்தான் கோரினேன். இப்படி
விவரம் கொடுப்பதிலேயே அலட்சியம் காட்டுகிறார்களென்றால், மற்றபடி
அந்த டிபார்ட்மெண்டினுடைய வேலை எப்படி இருக்கும் என்பதை
அமைச்சர் அவர்கள் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, ஒரு
முடிவுக்கு வந்தால் நலமாக இருக்கும்.

அடுத்தாற்போல், என்னுடைய தொகுதியைப்பற்றி ஒரு சில வார்த்தை
கள் கூறிக்கொள்ளவேண்டும். என்னுடைய தொகுதிக்குப் பக்கத்து
தொகுதியில் கொல்லிமலைத் திட்டம் என்ற திட்டம் நீண்ட நாட்களாக
இருந்து வருகிறது. அது பரிசீலனை செய்யப்பட்டு, முடிவடைந்து விட்டது.
முடிவடைந்த திட்டம் ஏன் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று
திருச்சி மாவட்ட டெவலப்மெண்டு கவுன்சிலில் கேள்வி கேட்டபொழுது
அங்குள்ள பொதுப்பணித் துறை அதிகாரிகள் இந்தத் திட்டம் கைவிடப்
பட்டுவிட்டது என்று பதிலளித்தார்கள். பிறகு நான் கூட அவர்களிடம்
கேட்டேன், "இந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்றால், கொல்லிமலைத்
திட்டத்திற்கு போகும் வழி என்று கைகாட்டி மரத்தை நட்டிருக்கிறீர்களே,
அந்த போஸ்டை எடுத்துவிடவேண்டும், வீணாக மக்கள் ஏமாறுகிறார்
களே" என்று சொன்னேன். அவர்கள் அதற்கு எனக்குச் சொன்ன
பதில் "நாங்கள் ஒரு திட்டத்தை ஆரம்பிக்கும்பொழுது இம்மாதிரி ஒரு
போஸ்ட்டை நடுவது வழக்கம். அந்தத் திட்டம் பரிசீலனை முடிவதற்குள்
அந்தப் போஸ்டு காணாமல் போய்விடுவது வழக்கம். ஆனால் இது மட்டும்
என்னவோ அப்படியே நீடித்து இருக்கிறது" என்று கூறினார்கள்.
அந்தச் செய்தி பத்திரிகையில் வந்தது. அதற்குப் பிறகு நம்முடைய
பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் திருச்சி வந்திருந்தபொழுது,
அவரிடம் இதைப்பற்றி பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது "அந்தத் திட்டம்
கைவிடப்படவில்லை, யார் சொன்னது" என்று கூறினார்கள். பொதுப்
பணித் துறையிலே இருக்கிற அதிகாரிகளுக்கும், அமைச்சருக்கும் ஏன்
இந்த மாறுபாடு இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிய
வில்லை. இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள் என்று
எதிர்பார்க்கிறேன். ஏனென்றால், அமைச்சர் என்னுடைய மாவட்டத்தைச்
சேர்ந்தவர் என்ற உரிமையோடு இதைக் கேட்டுக் கொள்கிறேன்.

லாடபுரம் ஏரி கட்டுவதுபற்றி பரிசீலனை நடந்து முடிவடைந்து நீண்ட
நாட்கள் ஆகின்றன. அதே மாதிரி மருதையாற்று ஏரி கட்டுவது பற்றியும்
பரிசீலனை நடந்து, முடிவாகி நீண்ட நாட்கள் ஆகின்றன. இவைகளைச்
செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை
முடித்துக்கொள்ளுகிறேன்.



20th March 1964]

***திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** கனம் சபாநாயகர் அவர்களே,
இந்த நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின்மீது சில வார்த்தைகள் சொல்ல
முன்வருகிறேன். அரசாங்கம் உணவுப் பொருள்களை அதிகமாக உற்
பத்தி செய்ய வேண்டுமென்று பல இலாகாக்களை ஏற்பாடு செய்து, நீர்ப்
பாசனத் திட்டங்களைப் பரிசீலனை செய்து மதிப்பீடுகள் போடுவதற்காக
ஏற்பாடுகள் செய்துள்ளபோதிலும், டிபார்ட்மெண்டில் மிகவும் கால
தாமதமாக மதிப்பீடுகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. அதனால்
வேலைக்கு மிகவும் குந்தகம் ஏற்படுவதால், அரசாங்கம் இதைத் துரிதப்
படுத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் ஏரி, குளங்களை ரிப்பேர் செய்வ
தற்கு ஒரு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. பல ஆண்டுகளாக
ரிப்பேர்கள் செய்யப்படாமல் இருப்பதனால், ஏரிகளை ரிப்பேர் செய்ய அவர்
களால் முடிவதில்லை. ஆகையால், அதற்கு வேண்டிய தொகையை அதிக
மாக ஒதுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் பெரிய திட்டங்களில் நோக்கம் கொண்டு, பல திட்டங்களை
நிறைவேற்றி வருகிறது. அதேபோல் சிறிய நீர்ப்பாசன திட்டங்களையும்
அமுலாக்க அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அதிலும், பிற்போக்கான இடங்களில் உள்ள திட்டங்களை
அரசாங்கம் முன் எடுத்து, அந்தத் திட்டங்களை அமுலாக்கி, அந்தப் பகுதி
களை வளமாக்க வேண்டும் என்று நான் அரசாங்கத்தை இந்தச் சந்தர்ப்பத்
தில் கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக, சேலம் மாவட்டத்தில் மூன்று திட்டங்கள் இருந்து
வருகின்றன. அதாவது, சின்னாறு, தொப்பையாறு, வாளியாறு திட்டங்
கள் பல ஆண்டுகளாக இருந்தும், இவைகளை அமுலாக்க வேண்டும் என்று
பல முறைகள் அரசாங்கத்தைக் கேட்டும், இந்த ஆண்டிலே ஒரு திட்ட
மாவது அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்
தில் அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டுகிறேன். இந்தத் திட்டங்களில்
ஏதாவது ஒன்றையாவது இந்த ஆண்டில் அமுலுக்குக் கொண்டுவந்து
என்னுடைய வட சேலம் மிகவும் பிற்போக்கான நிலையில் உள்ளதை
ஓரளவுக்கு வளம் ஆக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்
கொள்கிறேன்.

மேலும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அநேக இடங்களில் எங்கள்
பகுதியில் இருக்கின்றன. தர்மபுரி வட்டத்தில் வத்தல்மலை திட்டம்
என்ற ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கு சுமார் ரூ. 30,000 செலவாகும்
என்று மதிப்பீடு போடப்பட்டது. அந்தத் திட்டத்தை உருவாக்கினால்,
அந்த வத்தல்மலை தண்ணீரை அன்னசாகர் ஏரிக்குத் திருப்ப ஏற்பாடு
செய்தால், சுமார் 1,000 ஏக்கர் நிலங்களுக்கு ஸ்திர பாசனத்திற்கு வழி
வகை செய்யப்படும். இன்னும் 500 ஏக்கர் நிலங்களுக்கு பாசனத்திற்கு
ஏற்பாடு செய்ய முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

மேலும், கிருஷ்ணகிரி ரிஸர்வாயர் ப்ராஜக்டில் 6,800 ஏக்கர் நிலங்
களுக்கு பாசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் 6,000 ஏக்கர்
நிலங்களுக்கு இப்பொழுது பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. 800 ஏக்கர்
பாசன வசதி இல்லாமல் இருக்கிறது. கிருஷ்ணகிரி ரிஸர்வாயர் ப்ராஜக்ட்
ரைட் சானலை இன்னும் 3 மைல்களுக்கு அப்பால் உள்ள சோமலிங்கம் ஏரி
இருக்கிற இடத்திற்குக் கொண்டுபோனால், சோமலிங்கம் ஏரி, மற்ற ஏரி
களின்கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்கள் சுமார் 1,000 ஏக்கருக்கு ஸ்திர
பாசனம் ஏற்படும். இந்தத் திட்டம் சிறிய திட்டமாகையால் இந்த ஆண்
டில் இதை அரசாங்கம் எடுத்துச் செய்ய முன்வர வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். மேலும் பல திட்டங்கள் இப்பொழுது அரசாங்கத்
தின் கவனத்தில் இருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் ஏதாவது இரண்டு

திட்டங்களையாவது எடுத்து நிறைவேற்ற அரசாங்கம் முன்வரவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சர்களை நான் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற, சபை முன்பு இருக்கிற இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். கிராமப் புறத்தில் இருப்பவர்கள் முக்கியமாக தாங்கள் ஒதுக்கப்பட்டவர்கள், தங்களை கவனிப்பதில்லை, தங்கள் ஊர்களுக்கு ரோடு வசதிகள் இல்லை, பாதை வசதிகள் இல்லை, தாங்கள் பிரயாணம் செய்வதற்கு பஸ்கள் இல்லை, தங்கள் கிராமங்களில் விளைகின்ற நெல்லை, புல்லை, கம்பை, சோளத்தை அல்லது விளைகின்ற வெங்காயத்தை வேறு இடங்களுக்குக் கொண்டு போய் வியாபாரம் செய்வதற்குப் பாதை வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லக்கூடிய நிலைமையைப் போக்கி, அரிய பெரிய பணிகளை ஆற்றிவந்திருக்கிற அரசினர் அதிகாரிகளை அந்த வகையில் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கிராமப் புறங்களில் இருக்கிற முக்கியமான குறையைத் தீர்ப்பதற்கு நல்ல வேலைகளை, நல்ல திட்டங்களை, அவசியமும், அவசரமும் ஏற்பட்ட இடங்களில், நிறைவேற்றி நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதே சமயத்தில், பெருஞ்சாலைகள், நெடுஞ்சாலைகள், மாவட்ட சாலைகள், கிராமச் சாலைகள் நம்முடைய கவனத்தில் செல்லும் பொழுது, மாவட்டங்களில் உள்ள சில முக்கியமான பாலங்களை அவசர
10-00 a.m. மாக வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை வரும்பொழுது, அதிலே கொஞ்சம் தாமதமேற்படுகிறது என்பதை இந்த சமயத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமாக கனம் அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வந்திருந்தபோது, சுலோசன முதலியார் பாலத்தைக் காட்டுவதற்காக நாங்கள் அவரை அழைத்துச் சென்றோம். அமைச்சர் அவர்களே அங்கேயிருக்கிற நெருக்கடியை நேரில் பார்த்தார்கள். இப்பொழுது வரும் பஸ்கள் எல்லாம் அகலமாகவும், நீளமாகவும் இருக்கிற காரணத்தினாலே, இந்தக் குறுகிய பாலத்தின்மீது போகிறபொழுது நெரிசல் ஏற்படுகிறது. இது 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பாலம். தனிப்பட்ட முதலியார் ஒருவர் இந்தப் பாலத்தைக் கட்டியிருக்கிறார். அவருக்கு ஒரு லாட்டரி சீட்டில் ஒரு லட்சம் ரூபாய் விழுந்ததாகவும், அப்பொழுது அவர் லண்டனில் ஒரு டின்னர் பார்ட்டியில் இருந்தபொழுது இந்தச் செய்தியைக் கேட்டவுடன் அந்த ஒரு லட்சம் ரூபாயையும் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக தானமாக வழங்கிவிட்டார். இன்றைக்கு கோடிக்கணக்கான பணத்தை நாம் பல திட்டங்களுக்காகச் செலவு செய்யும் பொழுது எங்களை ஒரு தனி மனிதன் கட்டிய பாலத்தின்மீது பவனி வரச் செய்யும் நிலையிலே விட்டு வைத்திருப்பது நல்லது அல்ல. எவ்வளவோ தடவைகள் இதைப் பற்றிச் சொல்லியும், இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரு லாரியும், ஒரு பஸ்ஸும் சேர்ந்தாற்போல் அந்தப் பாலத்தின்மீது வந்துவிட்டால், மக்கள் நடந்து கூடப் போக முடியாது. சுவரிலே உடும்பு தாவுவதுபோல் அவர்கள் தொத்திக் கொண்டு போகவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு நெருக்கடி ஏற்படும்போது மறு பிறவி வந்துவிடுமோ என்ற அச்சத்திலேதான் அவர்கள் அந்தக் குறுகிய பாலத்தின்மீது போக வேண்டியிருக்கிறது. பாலம் கட்டி 100 ஆண்டுகள் ஆகிவிட்டதால் அதன்மீது யானை போகக் கூடாது என்று தடை செய்திருக்கிறார்கள். நெல்லையில் உள்ள கோவில் யானை திருநெல்வேலியிலிருந்து பாளையங்கோட்டைக்குப் போகவேண்டுமென்றால், தண்ணீர் இல்லாமல் இருந்தால் தாம்பிரபரணி ஆற்றைக் கடந்துதான் போக வேண்டும். இந்தப் பாலத்தை நல்ல முறையில் அகலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டோம். இன்றைக்குக் கூட மணிமுத்தாறுக்கு அதிக நிறையுள்ள பெரிய யந்திரங்கள் போக வேண்டுமென்று சொன்னால், என்ஜினீயர்கள் பார்த்துப் போகலாம் என்று அனுமதி கொடுத்தால்தான் போக முடியும். திட்ட வேலைகளுக்காகப் பல லட்சக்கணக்கான ரூபாய்களை நாம் ஒதுக்கியிருக்கும்பொழுது, நெல்லை மாவட்டத்தில் புனித நதியான தாம்பிரபரணியின் மேல் இருக்கிற இந்தப்





பாலத்தை மட்டும் ஏன் உதாசீனம் செய்ய வேண்டும் என்பது புரியவில்லை. அங்கே உள்ள சூப்பிரண்டெண்டிங் என்ஜினீயர் ரூ. 6 அல்லது 7 லட்சம் செலவாகும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே உடனடியாக இந்தப் பாலத்தை அகலப்படுத்திக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவலப்பேரியிலிருந்து உடையார்பட்டிக்குப் போகும் வழியில் சித்தாறு நதி இருக்கிறது. அங்கே ஒரு பாலம் கட்டுவதற்கு ரூ. 54,000-க்கு எஸ்டிமேட் போட்டார்கள். அகவிலை எல்லாம் அதிகமாகப் போய்விட்டதால் இன்றைக்கு ரூ. 96,000-க்குத் திருத்த மதிப்பீடு போட்டிருப்பதாக கேள்வி. முதலிலே எஸ்டிமேட் போட்டு, 7, 8 வருஷங்கள் ஆகிவிட்டன. இதைப் பற்றி மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் கேட்டபொழுது, சம்பந்தப்பட்ட என்ஜினீயர்கள் டெண்டர்கள் கோரியிருக்கிறோம் என்று சொன்னார்கள். மறுபடியும் டெண்டர்கள் என்னவாயிற்று என்று கேட்ட பொழுது, வேலை ஆரம்பிக்கும் தருவாயில் இருக்கிறது என்று சொன்னார்கள். வேலையை ஏன் இன்னும் ஆரம்பிக்கவில்லை என்று கேட்டபொழுது, அங்கே ஒரு அரச மரம் இருக்கிறது, அதிலே ஒரு பிள்ளையார் இருந்தாலும் இருக்கலாம். அந்த அரச மரத்தை வெட்டும் பாவத்தை யார் சுமப்பார்கள் என்று கண்டிராக்டர்கள் நினைக்கிறார்கள் என்று என்ஜினீயர்கள் சொல்லுவதாகத் தெரிகிறது. இப்படி முக்கியமான வேலைகளை நிறைவேற்றும்பொழுது, இம்மாதிரி இடைஞ்சல்கள் ஏற்படாமல் கவனித்து அமைச்சரவை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்தபடியாக, திருநெல்வேலி ஜங்ஷன் ரயில்வே கேட்டை எடுத்துக் கொண்டால், அந்தப் பக்கம் 60 கார்கள், இந்தப் பக்கம் 60 கார்கள் என்ற நிலையில், கேட்டைத் தாண்டி போக முடியாத நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. அங்கே ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் துரிதமான போக்குவரத்துக்கு வழிவகை ஏற்படும். மேம்பாலம் என்றால் எப்படி இருக்கும் என்பதைப் புரிந்துகொள்வதற்காகவாவது, அங்கே ஒரு மேம்பாலத்தைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி வேலை நடந்து கொண்டு இருக்கிறது. விருதுநகர் வரையிலும் இனி அதிகமான போக்குவரத்து ஏற்படும். வாணிபம் பெருகி மக்களுடைய வாழ்க்கை மிகவும் சுபிட்சம் அடையும் என்ற எதிர்கால நிலைமையைப் பார்க்கும்பொழுது, நெல்லையில் ஒரு விமான நிலையம் கட்ட வேண்டுமென்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொண்டால், எத்தனை அணைக்கட்டுகள் கட்ட முடியுமோ அவற்றைக் கட்டியிருக்கிறார்கள். கனம் கக்கன் அவர்கள் மராமத்து அமைச்சராக இருந்த காலத்தில், மானூர்க் கால்வாய்த் திட்டத்தை அமைத்துத் தந்தார்கள். வெள்ளையர் காலத்தில் ரூ. 24 லட்சம் செலவழித்தார்கள். குளத்தின் லெவெலும், கால்வாயின் லெவலும் சரி இல்லாத காரணத்தால் அவ்வாறு ரூ. 24 லட்சம் செலவழித்தும் பயன் ஏற்படாமல் போயிற்று. அதற்கு மதிகெட்டான் கால்வாய் என்று பெயர். அந்தக் கால்வாயை நமது மதியுள்ள மந்திரிகள் ரூ. 15 லட்சம் செலவழித்து நல்ல முறையில் அமைத்துத் தந்ததினால் இன்றைக்கு அங்கே முப்போகம் விளைகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கால்வாய்க்கு அமைச்சர் அவர்களின் பெயரை வைத்து "கக்கன் கால்வாய்" என்று அழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அதற்குப் பதில் இல்லை. கனம் கோயில்பிள்ளை அவர்கள் சூப்பிரன்டென்டிங் இன்சினீயர் ஆகப் பணியாற்றி எங்களுக்கு பல நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். அங்கே இருக்கிற மக்கள் அவரை இன்றும் வாயார வாழ்த்துகிறார்கள். அந்தக் கோயில்பிள்ளைக்கும் அந்தக் கரையில் ஒரு கோயில் கட்டி வைத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லக்கூடிய முறையிலே அங்கேயுள்ள என்ஜினீயர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். மணி

முததாறு அணைத் திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். அதனால், ஏற்கனவே ரூ. 5 மதிப்பு பெருத நிலம் இன்று குறுணிக்கு ரூ. 500 கொடுத்தாலும் கிடைக்கவில்லை. மணிமுத்தாறு திட்டத்திலே சுமார் 150 குளங்கள் சேர்க்கப்பட்டு, சுமார் 50 அல்லது 60 குளங்கள் சேர்க்கப்படாத நிலையில் இருக்கின்றன. ஐந்து ஆண்டுகள் கழித்து நிலைமையை உணர்ந்து செய்வோம் என்று சொல்லுகிறார்கள். இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெல்லை மாவட்டத்திலே தூர்ந்துபோன சிறு பாசனத் திட்டங்கள் நிறைய இருக்கின்றன. வட்டாரங்குளம் கால்வாய் இருக்கின்றது. அந்தக் காலத்தில், அதாவது ஒரு அரசர் ஆண்ட காலத்தில் ஏற்பட்ட கால்வாய்த் திட்டம் இது. ஏறக்குறைய 100 ஏக்கர் நிலம் விளையும். இப்பொழுது அந்தக் குளம் தூர்ந்து போய்விட்டது. பூமிக்கு அடியில் தோண்டிப் பார்த்ததிலே பெரிய பெரிய செங்கல்கள் இருப்பதாகத் தெரியவந்தது. இந்தக் கால்வாயைத் திரும்பவும் தூர் எடுக்கிற அளவிலே எஸ்டிமேட் போட்டு மராமத்து செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதி ஒரு பிற்பட்ட பகுதி. மேலும் பஞ்சப் பகுதியும்கூட. ஆகவே, அந்தக் கால்வாயை சீர்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு .க. மாரப்ப கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் நமது நாட்டிலே இருந்த உணவுப் பஞ்சத்தை போக்குவதற்காக பல நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொண்டார்கள். அவைகளுக்காக ரூ. 28·91 கோடி செலவழித்திருக்கிறார்கள். அப்படிச் செலவழித்ததின் காரணமாக 9 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. குறிப்பாகக் கோவை ஜில்லாவிலுள்ள கீழ் பவானித் திட்டம் அதிலே சேர்க்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன்.

அதே மாதிரி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக முன் திட்டத்தில் இருந்த பாக்கி வேலைகளோடு 6 அல்லது 7 திட்டங்களை எடுத்திருக்கிறார்கள். அதற்காக ரூ. 12.33 கோடி ஒதுக்கியிருந்தாலும்கூட, ரூ. 17.56 கோடி செலவழித்திருக்கிறார்கள். சுமார் 5½ கோடி ரூபாய் அதிகமாகச் செலவழித்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்பொழுது, நமது அரசாங்கம் உற்பத்தியைப் பெருக்குவதில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும். இருந்தாலும், எங்கள் ஜில்லாவில் அவனாசித் தாலுகா ஒரு வரண்ட பிரதேசம். சென்ற 10, 15 வருஷங்களாக அதே நிலையில் இருந்து வருகிறது. நான் இந்த சட்டசபைக்கு வந்து 7 வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இப்பொழுது சமர்ப்பித்துள்ள பட்ஜெட் 8-வது பட்ஜெட் என்று நினைக்கிறேன். சென்ற 7 வருஷங்களிலும் என்னுடைய அவினாசித் தாலுகாவின் நிலைமையைப் பற்றி நான் இந்த சபையிலே மிகவும் தெளிவாக எடுத்துக் கூறி இருக்கிறேன். இந்த மானியக் கோரிக்கை சம்பந்தமாக அறிக்கையில் உள்ள பல திட்டங்களை நான் திரும்பத் திரும்ப படித்துப் பார்த்தேன். ஆனால் அவனாசி தாலுகாவைப் பொறுத்தவரையில் பரிசீலனையில் இருக்கக்கூடிய திட்டமோ, அல்லது ஏதாவது சிறு பாசனத் திட்டமோ, ஒன்றுகூட இதிலே சேர்க்கப்படவில்லை என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்காக பாடுபடுகிற நமது அரசாங்கம் என் அவனாசி தாலுகாவை ஒதுக்கியிருக்கிறது என்பது தெரியவில்லை. சென்ற பல ஆண்டுகளில் நமது அமைச்சர்கள் என்னுடைய தாலூகாவிற்கு வந்து அங்குள்ள நிலைமையை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். குறிப்பாக நமது மாஜி முதல் அமைச்சர் அவர்கள் அவனாசி வட்டாரத்திலே எல்லாப் பகுதிகளையும் அங்கே விஜயம் செய்து, சுற்றிப் பார்த்துவிட்டு இந்த மாதிரியான வறண்ட பிரதேசத்திற்கு நல்ல ஒரு திட்டத்தைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இங்கே திரும்பினார்கள். இதைத் தாலூகா





மக்கள் எல்லோரும் அறிவார்கள். பூரண நம்பிக்கை இருக்கிறது, எங்கள் தாலுகா மக்களுக்கு. அரசாங்கத்தின் பேரில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் மக்கள் அந்தமாதிரி நம்புகிறார்களே தவிர, அரசாங்கம் கொஞ்சம் கூட, கிஞ்சித்தும்கூட நல்ல மனது வைக்கவில்லை என்பது இந்த அறிக்கையிலிருந்து தெரிகிறது. அவனாசி தாலுகாவிற்கு பரிசீலனையில் இருக்கும் நல்லதொரு திட்டம் இருக்கிறது. அங்குள்ள மக்களும் வாழவேண்டும் என்று வழிவகை செய்து சீக்கிரம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்—அளியார் திட்டம் நல்ல முறையில் நிறைவேறி வருகிறது. அந்தத் திட்டத்தின் கீழ் 4 தாலுகாக்கள் பயன் பெறும் என்று அறிக்கையிலிருந்து தெரிகிறது. இந்த 4 தாலுகாக்களில் பல்லடம் தாலுகா மிக வறண்ட பிரதேசம். இன்னும் ஒரு மாதம் கழித்தால் எங்கே பார்த்தாலும் மணல்மேடுதான் இருக்கும். காற்று அடிக்க அடிக்க ஒரு சாண் மணல் ஏறிவிடும். விவசாயம் செய்யும் நிலங்கள் எல்லாம் மண்ணடித்துப் போகும். இந்தத் திட்டத்தின் கீழே 50,000 ஏக்கரா பாசன வசதி பெறும் என்று திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அது அவ்வளவு சரியல்ல. வறண்ட பிரதேசத்திற்கு ஒரு லட்சம் ஏக்கருக்கு பாசன வசதி கொடுக்க வேண்டும். முக்கியமாக மிக வறண்ட சூளூர் பிரதேசத்திற்கு அதிகமான பாசன வசதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

***திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று உள்ள மானியக் கோரிக்கையின் பேரில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இரிகேஷன் சம்பந்தப்பட்டமட்டில் அது 4 பிரிவுகளாக செயல்படுகிறது. பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட், புட் ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்ட், ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் டிபார்ட்மெண்ட், ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் என்று 4 பிரிவுகளாக இருக்கிறது. இந்த நான்கையும் இணைத்து, சிஸ்டம் டாங்கை பப்ளிக் ஒர்க்ஸுக்கும், நான்-சிஸ்டம் டாங்கை புட் ப்ரொடக்ஷனுக்கும் கொடுத்து செலவுகளை பூல் பண்ணினால் சிக்கனம் ஏற்படும். சில சந்தர்ப்பங்களில் காரியங்களைச் செய்வதில் புட் ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்டா, அல்லது ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் டிபார்ட்மெண்ட் செய்வதா என்பது பரிசீலனையில் விடப்படுகிறது. அதனால் பல விஷயங்கள் செயல்படவில்லை. ரெவின்யூ போர்ட் பொறுப்பில் இருப்பதையும் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் இடம் பூல் பண்ணினால் செலவைக் குறைக்க வழி ஏற்படும். காலதாமதத்தையும் நிவர்த்திக்கலாம். இப்பொழுது ஹைவேஸ் டிபார்ட்மெண்டிலே மைனர் இரிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துப் பொறுப்பில் இருக்கக்கூடிய குளங்கள் முதலியவை கொடுக்கப்படுகின்றன. ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் ரோட் வொர்க்தான் செய்தார்கள். இந்த டெக்னிகல் வொர்க் சம்பந்தப்பட்ட மட்டும் இன்னும் அனுபவம் ஏற்பட வேண்டியிருப்பதால் செயல்பட தாமதம் ஏற்படுகிறது. இரிகேஷன் சம்பந்தப்பட்டவரை எல்லாப் பொறுப்பையும் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டிடம் கொடுக்க வேண்டும். பப்ளிக் வொர்க்ஸ் மெயின்டினன்ஸ் மாத்திரம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். டிஸ்ட்ரிபியூஷனுக்கும் அவர்கள் பொறுப்பு எடுத்துக்கொண்டால் நல்லது. மெயின்டினன்ஸ் ஒருவரும் டிஸ்ட்ரிபியூஷன் ஒருவருமாக இருக்கும்போது சில தவறுகள் ஏற்படுகின்றன. ஏதாவது குறைகள், தப்பிதங்கள் ஏற்பட்டு, ரிப்பேர் செய்ய வேண்டுமென்றால் யார் செய்வது என்று தாமதப்படுகிறது. ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு ரிபோர்ட் செய்து செப்பனிடுவதற்குள்ளாக மராமத்து செயல்படாததால் நீர்ப் பாசனங்கள் தடைபட்டுப் போகின்றன. ஆகவே, காலாகாலத்தில் நீர்ப்பாசனம் அளிக்க கஷ்டம் ஏற்படுகிறது.

மராமத்து செய்யப்பட்ட இடங்களுக்கு ரீ மாடலிங் ரொம்ப அவசியம். தண்ணீர் வரக்கூடிய இடங்களில் பிரைவேட் பாரஸ்ட்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் இப்பொழுது அழித்துக்கொண்டு வருகிறார்கள். அதன் காரணமாக நீர் ஊற்றுக் கூட வரவரக் குறைகிறது. உதாரணமாக, மணிமுத்தாறு, குற்றாலம் பக்கத்திலே பிரைவேட் பாரஸ்ட் எல்லாம் அளவுக்கு

மிஞ்சி அழிக்கப்படுகின்றன. ஊற்றுகள் எல்லாம் வற்றிப்போகின்றன. ஆகவே இப்படி டிபாரஸ்ட் பண்ணும்போது சர்க்கார் உத்திரவுகளின் பேரில் செயல்பட்டால்தான் மரங்கள் அழிவது தடுத்து நிறுத்தப்படும். அது போக, ஷட்டர்கள் ஒவ்வொரு இடத்திற்கும் தேவை. உற்பத்தி குறைவாக இருப்பதால் ஒரு லிஸ்டமாக வைத்து ஒரே பொறுப்பாக ஷட்டர்கள் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும்.

அது போக, நீர்ப்பாசனத்தில் குற்றங்கள் ஏற்படுகின்றன. அதாவது, தண்ணீர்ப் போக்கை, டைவர்ஷன் ஆப் வாட்டர் நடந்தால் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டோ அல்லது ரெவின்யூ டிபார்ட்மெண்டோ போலீஸ் டிபார்ட்மெண்டுக்கு ரிப்போர்ட் செய்யவேண்டியிருக்கிறது. அதனால் காரியங்கள் தடைபடுகின்றன. ஆகவே, டிராஸ்டிக் ஆக ஆக்ஷன் எடுக்க பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோக, ஒரிஜனல் ஒர்க்ஸ் சம்பந்தமாக எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினியர், சூப்பரென்டெண்டிங் எஞ்சினியர் இவர்களுக்கு இருக்கக்கூடிய பவர் ரொம்ப குறைவாக இருக்கிறது. இப்பொழுது பொருள்களின் விலைவாசி கூடுதலாக இருப்பதால் இ.இ., எஸ்.இ., இவர்களுக்கு அதிகமாக பவர் கொடுக்க வேண்டும்.

அதுபோக, வெஸ்ட் ஃப்ளோயிங் ரிவர் சம்பந்தப்பட்டவரை ஏதோ செய்துகொண்டு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சில நடத்தப்படும் என்று மதிப்பிற்குரிய ராமநாதபுரம் மகாராஜா அவர்கள் அப்பொழுது வாக்குறுதி கொடுத்தார்கள். இப்பொழுது இரண்டாம் திட்டம் முடிந்து மூன்றாவது திட்டமும் வந்து அதுவும் முடியும் நிலையில் இருக்கிறது. ஆனால் அந்தத் திட்டத்திலேயே இல்லாத பரம்பிக்குளம் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. இது போற்றத்தக்கது என்றாலும்கூட கொடுத்த வாக்குறுதி செயலில் வராமல் இருப்பது வருந்தத் தக்கது என்று சொல்ல விரும்புகிறேன். கேரள மாநில அதிகாரிகள் இந்த மாநில அதிகாரிகளுடன் கூட்டு பார்வை செய்தார்கள். ஆனாலும் திட்டம் நடைமுறைக்கு வராமல் இருக்கிறது. அதை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதுபோக, எங்கள் தொகுதியில் அச்சன்கோவில் ரிவர் ஸ்கீம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அதில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் முடிவும் வராமல் இருக்கிறது. அதைக் கவனிக்க வேண்டும்.

அதுபோக, டிப்ளமா ஹோல்டர்கள் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன் பணம் கொடுத்து உதவி செய்து கண்ட்ராக்ட்களை எடுக்கக்கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதுபோக, டீ-சில்டிங் ஒவ்வொரு தாலுகாவிற்கும் செயல்பட வழி வகை செய்ய வேண்டும். "**Each river should have a reservoir**" என்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் பப்ளிக் வொர்க்ஸ் மினிஸ்டராக இருந்தபோது ஒரு திட்டம் வகுத்தார்கள். ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. **Each river should have a reservoir** திட்டம் வகுத்து நடைமுறைக்கு வந்தால்தான், ஒரு தண்ணீர், இரண்டு தண்ணீர் பாடு வருவது நிறுத்தப்பட முடியும்.

அதுபோக, ஹைவேஸ் டிபார்ட்மெண்டைப் பற்றி ஒரு வார்த்தை. அவர்கள் 250 மைல்தான் இந்த மாநிலத்தில் பஞ்சாயத்து யூனியன் ரோடுகளை எடுப்பதாகத் தெரிகிறது. அது காணாது. அதிகப்படுத்த வேண்டும். கிராமப் பகுதிகளில் உள்ள ரோடுகள் வழியாகத்தான் உணவுப் பொருள்கள் வர வாய்ப்பு இருக்கிறது. ஆகவே பஸ் ரூட்டுகளை அபிவிருத்தி செய்ய இந்த 250 மைல் காணாது.



அதுபோக, பஞ்சாயத்துக்கு 40 ந.பை. கொடுப்பது காணாது. விஸ்தீரணத்திற்குத் தக்கபடி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடிக்கடி ரோடு பழுதாவதற்குக் காரணம் இரும்பு பட்டை போட்ட வண்டிகள்தான். அந்த வண்டிகளுக்கும் டயர் போட்டுவிட்டால் அடிக்கடி ரோடு பழுதாவதைத் தடுக்கலாம். விவசாயிகளுக்கும் டயர் வண்டிகளுக்குப் போடுவதில் நன்மை தெரிகிறது. ஆனால் செலவு அதிகமாவதால் போடாமல் இருக்கிறார்கள். அதற்கு அரசாங்கத்தில் ஏதாவது உதவி செய்தால் மிகவும் நலமாக இருக்குமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல இன்னும் விவசாயிகளுக்கு அனுகூலமாக ரோடுகளைப் போடவேண்டும். பி.டபிள்யூ. டி. சாங்ஷன் வேண்டும் என்கிறார்கள். அது கிடைப்பதற்குக் காலதாமதமாகிறது. ஆகவே காலதாமதமின்றி எல்லா வேலைகளையும் செய்து கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒரு இருபதுக்கும் மேற்பட்ட பி.டபிள்யூ. டி. ஏரிகள் செப்பனிடப்படாமலேயே இருக்கின்றன. அதைப்பற்றி பலமுறை எடுத்துச் சொல்லியும் அதிகாரிகளோ, அமைச்சரோ கவனம் செலுத்தவில்லை. சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டம் வருவதற்கு முன் பெண்ணாற்றில் இருந்து தண்ணீர் வந்துகொண்டிருந்தது. ஆனால் அணை கட்டிய பிறகு எப்போதாவது ஒரு தடவை, இரண்டு தடவைதான் அந்த அணையில் இருந்து நீர் வழிந்து பெண்ணாற்றில் வழிகிறதே தவிர ஏரியின் கப்பாசிடிக்கு தண்ணீர் வருவது இல்லை. அதில் தேங்கும் தண்ணீர் இரண்டு மாதம், மூன்று மாதம் கூட வருவதில்லை. ஆகவே வீணாகக் கடலில் போய்ச் சேரும் நீரையாவது இந்த ஏரிகளுக்குக் கொண்டுவந்து நிரப்ப தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பண்ருட்டி, நெல்லிக்குப்பம் ஆகியவற்றுக்கு பாய்ச்சப்படுகிற ஏரிகளையும் இந்தத் திட்டத்தோடு இணைக்க வேண்டும்.

இப்போது எங்கள் பகுதியில் உள்ள ஏரிகளுக்குப் போதுமான தண்ணீர் வராமையினால் அந்தப் பகுதியில் சாகுபடி பாதிக்கப்படுகிறது. உணவுப் பற்றாக்குறை நிலைமை ஏற்படுகிறது. ஆகவே உணவுப் பற்றாக்குறையை போக்க வேண்டுமென்ற எண்ணத்துடனாவது, இதை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். பலமுறை அவர்கள் எங்கள் பகுதிக்கு என்னுடன் வந்து பார்க்கும்படியாக நான் அழைத்து இருக்கிறேன். என்னுடன் வந்தால் அவருக்கு என்ன அந்தஸ்து குறைந்துவிடுமோ தெரியவில்லை. பலமுறை டெவலெப்மெண்டு கவுன்சிலில் தீர்மானம் போட்டார்கள். ஆனால் இது வரை அதுபற்றி எவ்வித ஆராய்ச்சியும் செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இனியாவது இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கனம் முதல் அமைச்சர் அவர்கள்கூட அந்தப் பகுதிக்கு எழெட்டு வருஷங்களுக்கு முன்பாக வந்தார்கள். சில சமயம் தென்பெண்ணையாற்றிலே வெள்ளம் வரும்போது அந்தப் பகுதி வெள்ளத்தினால் பாதிக்கப்படுகிறது. நான்கைந்து கிராமங்களில் உள்ள நஞ்சை நிலங்களையும், புஞ்சை நிலங்களையும் பாழ்படுத்திவிடுகிறது. அதைத் தடுப்பதற்காக ஒரு திட்டம் தயார் செய்தார்கள். எக்சிக்யூடிவ் இன்ஜினியர், சூப்பிரண்டிங் இன்ஜினியர் ஆகியவர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள். அந்தத் திட்டத்தையும் இன்னும் சாங்ஷன் செய்ததாகத் தெரியவில்லை. அதையும் சாங்ஷன் செய்து அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ரெவின்யூ இலாகா புட் ப்ரொடெக்ஷன் வேலைகள் சரிவர நடைபெற வேண்டும். ஏரியில் தண்ணீர் இருக்கிறதோ இல்லையோ அவர்கள் எட்டணா மகசூல், பத்தணா மகசூல் என்று கணக்குப் போட்டுவிடுகிறார்கள். சரியான கணக்கைக் கேட்டால் தருவதில்லை. அநேகமாக அவர்கள் தவறாகவே போடுகிறார்கள். அவர்கள் போடுவது நியாயமா, சரியா என்பதை இன்ஜினியர்கள் முடிவு கட்டினால் நல்லது. வரி போடட்டும் ஆனால் ஏரியின் கபாஸிடியை ஆழப்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும். உடனடியாக அந்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பெண்ணையாறு பாலம் கட்டப்படாமல இருக்கிறது. அதையும் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பரவனாறு திட்டத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படியுள்ள சிறிய சிறிய திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்தாலேயே எங்கள் பகுதியில் உள்ள குறைபாடுகள் தீர்க்கப்படும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. நெ. சா. இராமலிங்கம் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நான் இந்த மானியத்தின்கீழ் சில கருத்துக்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். நாம் இப்போது பாசனத்தில் கவனம் செலுத்தினாலும் வடிகால் விஷயத்தில் கவனம் செலுத்தவில்லை. தஞ்சை ஜில்லாவில் வடிகால் வசதிகள்தான் மிகவும் மோசமாக இருக்கிறது. வடிகால்களை ஒழுங்காக செப்பனிட்டால்தான் உணவு உற்பத்தித் திட்டம் நல்ல முறையில் நடைபெற வழியேற்படும். ஆகவே உடனடியாக அந்த ஜில்லா வடிகால்களை ஒழுங்கு செய்து கொடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

கீழக்கரை ரோடு—ஈஸ்ட் கோஸ்ட் ரோடு கடற்கரை ஓரமாக உள்ள பல கிராமங்களின் வழியாகப் போகிறது. அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு அதைத் தவிர வேறு வசதி கிடையாது. ஆகையால் அந்த ரோடுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து உடனடியாக அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோலவே வெஸ்ட் கோஸ்ட் ரோடு பாம்பே வரையிலும் போகிறது. அந்த ரோடையும் ஒழுங்கு செய்து கொடுத்தால் அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதனால் போக்குவரத்து வசதி பெருகும். கடல் ஓரங்களில் கறிகாய்கள் நன்றாக வளருகின்றன, அவைகளை எல்லாம் நகரங்களுக்கும், ஆங்காங்குள்ள கிராமங்களுக்கும் கொண்டு வர வசதியாக இருக்கும்.

அடுத்தபடியாக அரசாங்கத்தார் கொடுத்திருக்கிற ஆய்வு உரையிலே துறைமுகத்தைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். தமிழ் மாநிலத்தில் அநேக சிறிய துறைமுகங்கள் இருக்கின்றன. குறிப்பாக தோப்புத்துறை துறைமுகம் இருக்கிறது. அதை எடுத்துக் கொள்வதற்கு முன்பு ஒரு ஆபீசரைக்கூட போட்டு இருந்தார்கள். இப்போது அவரையும் எடுத்து விட்டார்கள். மறுபடியும் நல்லமுறையில் அந்தத் துறைமுக வேலையையும் ஆரம்பித்தால் பல பிரச்சினைகள் தீரும். சென்னை போன்ற துறைமுகங்களுடைய நெரிசல் குறையும். தஞ்சாவூருக்கும், அக்கம் பக்கத்திலுள்ள இடங்களுக்கும் சாமான்களை எடுத்துப் போக சௌகரியமாக இருக்கும். ஆகவே தோப்புத்துறை போன்ற சிறிய துறைமுகங்களை எடுத்து அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

10-30 p.m. * **திரு. செ. சதாசிவம் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 1964-65ம் ஆண்டுக்கு நீர்ப்பாசனத்திற்காக 15 கோடி 37¼ லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். இன்னும் அதிகத் தொகை ஒதுக்க ஒரு சில திட்டங்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். நடப்பு ஆண்டிலே தென்மேற்குப் பருவ மழையும் வட கிழக்கு பருவ மழையும் தவறிய காரணத்தால் நீர்த் தேக்கங்களில் மிகக் குறைவான தண்ணீர் இருந்த போதிலும், அந்தத் தண்ணீரை நல்ல முறையிலே ரெகுலேட் செய்து பாசன வசதிக்கான தண்ணீரைக் கொடுத்திருக்கிறார்கள். இதிலே நல்லதொரு திட்டத்தை வகுத்து பரவ





லாகத் தண்ணீரைக் கொடுத்த எஞ்சினீயரிங் இலாகாவைப் பாராட்டுகிறேன். இவ்வாண்டு குருவை பயிருக்கும் தண்ணீர் கொடுத்திருக்கிறார்கள். இதிலிருந்து குறைந்த அளவு தண்ணீர் இருந்தாலும் அதை ரெகுலேட் செய்து பாசன வசதிக்கான தண்ணீரைக் கொடுக்க முடியும் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அதனால் பருவ மழை சரியாக பெய்து நீர் மட்டங்கள் வழிந்தால் இன்னும் அதிக பாசன வசதியை இத்திட்டங்கள் மூலமாகவே செய்யலாம் என்பது தெரிகிறது.

என்னுடைய பகுதியைப் பொறுத்தவரை கரூர் தாலுக்கா திரிசங்கு சுவர்க்கம் என்ற அளவில் இருக்கிறது. காவிரித் திட்டம், அமராவதித் திட்டம், லோயர் பவானித் திட்டம் ஆகியவற்றால் எங்கள் பகுதியில் ஒரு செண்ட் நிலம் கூடப் பாசன வசதி பெற முடியவில்லை. காவிரியில் எத்தனை திட்டங்களைப் போட்டாலும் தஞ்சையில் உள்ளவர்கள் காவிரித் தண்ணீரில் அதிகமான பங்கு எடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். அமராவதி, பவானி, பரம்பிகுளம் இவைகளில் கோவை ஜில்லா உரிமை கொண்டாடுகிறது. எங்களுடைய பகுதியின் நிலைமையைப் பற்றிக் கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பரம்பிக்குளம் திட்டத்தின் மூலம் பயனடையும் தாராபுரம், காங்கேயம் பிர்க்காக்களில்கூட எங்கள் பகுதியைவிட அதிகமான பாசன வசதி உள்ள நிலங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டாமென்று நான் கூறவில்லை. போடக்கூடிய திட்டங்கள் மூலம் எங்களுக்கும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றுதான் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. டி. கார்ச்சா கவுடர் தலைமை.)

நொய்யல் அணைத் திட்டம் இந்த ஆண்டிலே சேர்த்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அது சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அதை இந்த ஆண்டு இறுதிக்குள் சேர்க்க வகை செய்ய வேண்டும். நாங்கள் சிறு சிறு திட்டங்களைக் கூடக் கேட்டுக் கொண்டு வருகிறோம். குறிப்பாக பம்ப் செட்டுகள் மூலமாக நேரடிப் பாய்ச்சலை அதிகப்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வழிவகை இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் அதை உணர்ந்திருக்கிறார்கள். 1961-ம் வருஷம் அக்டோபர் மாதம் 2-ம் தேதிக்கு முன் வைத்த பம்பு செட்டுகளை ரெகுலரைஸ் பண்ணி கலெக்டர் அவர்களே பர்மிட் கொடுக்க வேண்டுமென்ற ஒரு உத்தரவு இருந்தது. அத்தேதிக்குப்பின் இப்போது சில உற்சாகமுள்ள சிறிய விவசாயிகள் அதிலே முனைந்து 20,000 ரூபாய் வரை செலவழித்து பம்பிங் மூலம் பாசன வசதிக்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் அமராவதியில் ஓரளவு அதிகத் தண்ணீர் இருக்கிறது என்று P. W. D. இலாகாவினர் தெரிவித்த காரணத்தால் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த பர்மிட் வழங்கலாம் என்ற அளவுக்கு தெரிவிக்கப்பட்டது. அந்த வகையிலே 1961 வருஷம் அக்டோபர் மாதம் 2 தேதிக்குப் பின்னும் கலெக்டர் அவர்கள் மூலமாகவே பர்மிட் வழங்க வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்காசி ஆற்றில் பரப்பலாறு திட்டத்தை நிறைவேற்றினால் கடைக்கோடியில் கரூர் தாலுகாவிலுள்ள நிலங்களுக்கும் சம அளவில் பாசன வசதி செய்து கொடுக்க எஞ்சினியரிங் இலாகா வழி செய்ய வேண்டும். என் தொகுதியில் கிணறுகள் அதிகமாக இருப்பதால் ஊற்று மட்டங்களை அதிகப்படுத்த தடுப்பு அணைகளை அமைக்கவேண்டும். இதைப் பி. டபிள்யூ. டீ. செய்ய முடியாது என்கிறார்கள். காரணம் இது நேரடித் திட்டம் அல்ல என்றும் இது ஒரு மறைமுகத் திட்டம் என்றும் சொல்கிறார்கள். இந்தத் திட்டம் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் மிகவும் முக்கியமானது. கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் இதை நிறைவேற்றியிருப்பதாக அறிகிறேன். எங்கள் பகுதியிலும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். S. M. I. P. இலாகாவினரால் பரிசீலனை செய்து எஸ்டிமேட்டுகள் எல்லாம் தயார் செய்து அனுமதியும் பெற்ற திட்டங்களை அமுலாக்க P.W.D.க்கு அனுப்பினால் அதில் பல சந்தேகங்களை எழுப்பி திட்டங்களை நிறுத்திவிட முயலுகிறார்கள். அதனால் எந்த எந்த இலாகாக்

களில் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி பெறப்படுகிறதோ அந்தந்த இலாக்காக்கள் மூலமாகவே திட்டங்களும் செய்து முடிக்கப்படவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. எ. சுவாமிதாஸ்** : மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சிற்றாறு பட்டணங்கால் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து ஏறத்தாழ ஏழு கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டில் அதற்காக 25 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்டிருக்கிற அந்தத் தொகையைப் பார்க்கும்போது அந்த வேலை எந்த ஆண்டில் முடியுமோ என்று நாங்கள் அச்சப்படுகிறோம். சுறுசுறுப்பான அந்த இலாகாவுக்குத் தொகையைக் கூட்டிக் கொடுத்து துரிதமாக அதை முடிப்பதற்கு ஊக்குவிக்க வேண்டுமென்று தங்கள் மூலமாக அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இது நீண்டகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் முக்கியமான திட்டம். மொத்தத்தில் ஒன்பது நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்பதுக்கும் சேர்த்து மொத்தமாக 17·39 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே இந்தத் திட்டத்திற்கு மட்டும் எட்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய திட்டம். இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கும் 25 லட்சம் ரூபாயில் 12 லட்சம் ரூபாய் எஸ்டாபிளிஷ்மெண்டுக்கே செலவாகிவிடும். ஆகவே, இந்தத் திட்டத்தைச் சீக்கிரமாக முடிப்பதற்குக் கூடுதலான தொகை இந்த ஆண்டே ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறுபாசனத் திட்டங்களைக் கன்னியாகுமரியில் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாகச் சொன்னால் மாம்பழத்துறை என்ற திட்டம் முன்பு பரிசீலனை செய்யப்பட்டு கைவிடப்பட்டது. அதை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரோடுகளைப் பொறுத்த அளவில் பஸ்கள் ஓடுகின்ற ரோடுகளை அதிகமாக நன்கு கவனிக்க வேண்டும். பழுது அடைந்த நிலையில் பல ரோடுகள் இருக்கின்றன. திருநெல்வேலி-கன்னியாகுமரி ரோடு பழுதடைந்த நிலையிலேயே காணப்படுகிறது. திருநெல்வேலிக்கும் கன்னியாகுமரிக்கும் இடையே ரயில்வே பாதை கிடையாது. ஆகவே, அந்த ரோட்டை விரிவு படுத்தி செப்பனிட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஸ் நாங்குநேரி ஊரின் தெருக்களின் வழியே செல்ல வேண்டியிருப்பதால் பல வளைவுகளில் செல்ல வேண்டியிருக்கிறது. நாங்குநேரி ஊருக்குள் செல்லாமல் "பை-பாஸ்" ரோடு அமைத்தால் வசதியாக இருக்கும்.

துறைமுகங்களைப் பொறுத்தவரையில் குளச்சல், லீபுரம் இரண்டும் பிரசித்தி பெற்றவை. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளன. அவை சிறந்த துறைமுகங்களாக இருந்ததாக சரித்திரத்தில்கூட காணப்படுகிறது. அவை இயற்கை அமைப்புக் கொண்ட பயனுடைய துறைமுகங்கள். அவற்றை விரிவு படுத்த முன்வந்தால் அங்குள்ள தொழில் வளத்தையும், வியாபாரத்தையும் பெருக்க வசதியாக இருக்கும். குளச்சலில் மீன் பிடித் துறைமுகம் ஏற்படுத்த ஒரு திட்டம் இருக்கிறது. அதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருநெல்வேலி-கன்னியாகுமரி ரெயில்வே சம்பந்தமாக சர்வே நடந்து கொண்டிருக்கிறது. பூர்வாங்க சர்வே வேலை கிட்டத்தட்ட முடியும் தருவாயில் இருக்கிறது. அதைத் தொடர்ந்து பைனல் சர்வேயையும் செய்து முடித்தால்தான் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது ரயில்வே வேலை செய்து முடிக்க வாய்ப்பிருக்கும். பைனல் சர்வேயை முடிக்க இரண்டு ஆண்டுகள் ஆகும். அதையும் உடனடி தொடர்ந்து முடிக்க மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரெயில்வே திட்டம் மிக முக்கியமானது. ரயில்வேயை கண்ணால் பார்க்காத மக்கள் அங்கு இருக்கிறார்கள். ஆகவே அதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டு வருவதற்கு அமைச்சரவை பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.





***திரு. ரா. ராஜகோபாலசாமி** : மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் நீர்ப்பாசனத் துறை, பெருவழித் துறை, பொதுப்பணித் துறை சம்பந்தப்பட்ட மானியங்களை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் நீர்ப்பாசனத் துறை, பெருவழித் துறை, பொதுப்பணித் துறை இவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விளக்கமாக அமைச்சர் அவர்கள் தம் உரையில் எடுத்துரைத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக அமைச்சர் அவர்களையும், பொறியியல் அதிகாரிகளையும் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாக பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பரம்பிக்குளம் திட்டத்தை இவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்றி வைக்க மதிப்பிற்குரிய பொதுப்பணி அமைச்சர் அவர்கள் அக்கறை எடுத்து அடிக்கடி அந்தத் திட்டப் பகுதிக்கு விஜயம் செய்து அங்குள்ள என்சினியர்களுடனும், மற்றவர்களுடனும் கலந்துபேசி பல ஆலோசனைகளைக் கூறியும் அவர்களை ஊக்குவித்தும் அத்திட்டம் விரைவில் நிறைவேற்றி வைக்கப்பட வழிவகை செய்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நீர்ப்பாசனத் துறை பொறுத்தமட்டில், குறிப்பாக என் பகுதியில் அமராவதி திட்டத்தில் இருந்து பாய்கின்ற பாசனங்கள் எல்லாம் மராமத்து இலாகாவால் கையாளப்பட்டு வருகிறது: மராமத்து இலாகா அதிகாரிகள் ஒவ்வொரு வாய்க்காலுக்கும் இந்தளவிற்கு இவ்வளவு க்யூசெக்ஸ் என்று தண்ணீர் விடுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு மதகிலும் உள்ள கடைசி பாகத்திற்கு தண்ணீர் சரிவர பாய்வதில்லை. முன்னால் உள்ளவர்கள் தண்ணீரைப் பாய்ச்சிக் கொண்டு விடுகிறார்கள். அதுபற்றி மராமத்து இலாகா அதிகாரிகளிடம் கேட்டால் எங்களுக்கு பவர் இல்லை, ரெவின்யூ அதிகாரிகளால்தான் அதைக் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஒரு விவசாயி ஒரே சமயத்தில் இரண்டு அதிகாரிகளைச் சந்திப்பது என்பது கஷ்டமான காரியம். ஆகவே உள்ளே மதகிலிருந்து பூமிக்குள் தண்ணீர் பாய்ச்சும் அதிகாரத்தை மராமத்து இலாகா அதிகாரிகளிடம் அளித்தால் நல்லபடியாக எல்லா பூமிகளுக்கும் தண்ணீர் பாய்ச்சுவதற்கு வசதியாக இருக்கும். அதனால் விவசாயிகளின் கஷ்டங்களும் நிவர்த்தி செய்யப்படும். பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் பற்றி ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். என் தொகுதியைப் பொறுத்தவரையில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் உடுமலை தாலுகாவில் ஆயிரக் கணக்கான எக்கர்களுக்கு வசதி அளிக்கிறது. உடுமலைத் தொகுதியில் மிகவும் பஞ்சப் பிரதேசமாகிய கிழவங்காடு போன்ற கிராமங்கள் அதனால் பயன் அடையவில்லை. அமராவதி திட்டத்திலும் மேற்படி கிராமங்களுக்குத் தண்ணீர் பாயாமல் கைவிடப்பட்டது. இப்போது ஒரு வழிவகையும் இல்லாமல் இருக்கிறது. அதற்காக என் தொகுதி மக்களும், நானும் அமைச்சர் அவர்களை அங்கு வந்திருந்தபோதும், இங்கு வந்தும், ஷ விஷயத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். பரிசீலனை செய்வதாக சொல்லியிருக்கிறார்கள். உடுமலை வாய்க்காலில் இருந்து பிரியும் மாலுப்பட்டி டிஸ்ட்ரிபியூட்டரியை சற்று தூரம் விஸ்தரித்தால் கிழவங்காடு பகுதி பலன் அடையும். பரம்பிக்குளம் திட்டத்தில் திருமூர்த்தி அணை இருக்கிறது. அதில் வேலை நடந்து கொண்டிருக்கிறது அதிலிருந்துதான் மெயின் வாய்க்கால் உடுமலை வாய்க்கால் புறப்பட்டு செல்கிறது. அங்கிருந்து 1,80,000 எக்கர்களுக்கு தண்ணீர் போகிறது. தளி பட்டி கிராமங்களில் உள்ள விவசாயிகள் அதற்காகப் பல ஆயிரக்கணக்கான எக்கர் பூமியை இழந்திருக்கிறார்கள். மீதி உள்ள பூமிகளில் தளி, ஜெல்லிப்பட்டி, வெங்கிடாபுரம் கிராமங்களில் தண்ணீர் பாய்வது இல்லை. சுதந்திரத்திற்கு முன்னால் இருந்த அரசாங்கம் செலவைக் கணக்குப் பார்த்து வந்தது ஆனால் இப்போது அரசாங்கம் எவ்வளவு செலவானாலும் திட்டங்கள் ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தண்ணீர் பாய்ச்ச வசதி செய்வோம் என்று தன்னுடைய உரையில் கூறியிருக்கிறார்கள். ஆகவே மேல்நிலையில் மதகுகளை ஏற்படுத்தி மேற்படி கிராமங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீர்ப்பாசன வசதிக்கு சற்று கூடுதல் செலவானாலும் வழிவகை செய்துகொடுக்க வேண்டுமென்று கனம் முதலமைச்சர் அவர்களையும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக அமராவதி திட்டத்தில், பழைய

ஆயக்கட்டுப் பிரதேசத்தில் பழைய வாய்க்கால்களை ரீமாடல் செய்ய எஸ்டிமேட் தயார் செய்து அனுப்பப்பட்டிருக்கிறது. இப்போது அந்த வாய்க்கால்களில் சரிவர பாயாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அப்படி ரீ மாடல் செய்வதை கூடிய சீக்கிரம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெருவழித்துறையைப் பொறுத்த வரையில் உடுமலைத் தொகுதியில் வடகோட்டுப் பகுதியில் உள்ள கணியூர், கடத்தூர் கிராமங்களுக்கிடையே அமராவதி அணைக்குக் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்று கேட்கப்பட்டு இருக்கிறது. அதனால் மதுரை ஜில்லா பகுதிகளில் உள்ள அலங்கியம், மாலூர் கிழூர் போன்ற இடங்களிலிருந்து மக்கள் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொண்டு வரவும் குறுக்கு வழியாக இருக்கும். மற்றும் அங்குள்ள மக்களுக்கு போக்குவரத்து வசதி செய்ய சௌகரியமாக இருக்கும். முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரும் தற்போது உள் துறை அமைச்சருமான திரு. கக்கன் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக அங்கு வந்திருந்தபோது அதன் அவசியத்தை உணர்ந்து அதை அவசியம் செய்து கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்போதுள்ள அமைச்சர் அவர்களும் செய்து கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அது சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை அவசியம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உடுமலைத் தொகுதியில் நெற்கோட்டுப்பகுதியில் கொழுமம், குமரலிங்கம் கிராமங்களுக்கு அமராவதியில் பாலம் கட்ட வேண்டுமென்ற திட்டம் 10 வருடமாக இருந்து வருகிறது. ஜில்லாபோர்டு இருந்த காலத்தில் அதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்கு மத்திய சாலை நிதியில் இருந்து பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதையும் விரைவில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி. செகதாம்பாள் வேலாயுதம்:** கனம் தலைவர் அவர்களே, 1964-65ம் ஆண்டு பாசன மான்யக் கோரிக்கையின் மீது நான் சில வார்த்தைகள் பேச முன்வந்திருக்கிறேன். உடையார்பாளையம் தாலுக்கா மிகவும் பின்தங்கிய பிரதேசமாக இருக்கிறது. ஜெயங்கொண்டான், ஆண்டிமடம் பிர்க்காக்களில் எவ்வித பாசன வசதிகளும் இல்லை. வானத்தை நம்பியே வாழ்கிறோம். உடையார்பாளையம் தாலுக்காவில் மருதையாறு திட்டம் ஒன்று பரிசீலனையில் இருந்து வருகிறது. இது நீண்ட காலமாக பரிசீலனையிலிருப்பதால் உடனடியாக இதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். இது விஷயமாக அமைச்சர் அவர்கள் விளக்கம் தர வேண்டுகிறேன். மருதையாறு திட்டத்தில் ஏதோ தண்ணீர் பரிசோதனை நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. பூமியின் அடியில் ஆழக்குழி தோண்டி அதன் ஊற்று நீரை எடுத்து சோதனை நடத்துகிறார்களாம். ஊற்று நீர் உப்பாக இருந்தால் திட்டத்தை விட்டு விடலாம் என்ற முறையில் இதைக் கையாளுகிறார்கள். மருதையாற்றில் வரும் வெள்ளத்தைக் தேக்குவதே இத்திட்டத்தின் நோக்கம். எனவே இச்சோதனை முறை தேவையில்லை என்று கூறிக்கொண்டு மருதையாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பொன்னேரி ஏரியை மிகவும் ஆழப்படுத்தி அதிகத் தண்ணீர் தேங்க வழி செய்யவேண்டும். அப்போது தான் அதன்மூலம் பாசன வசதி பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்படும். தண்டலை கிராம வட்டத்தில் கல்லேரி அருகிலுள்ள மூன்று ஏரிகளையும் ஒன்றாகச் சேர்த்து, பெரிய ஏரியாக்கவும், அதனருகில் ஓடும் ஓடையைத் தேக்கி அதில் தண்ணீரை விட்டால் பாசன வசதி பெருக முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடி தண்ணீர் கஷ்டத்தைப் பொறுத்தவரையில், ஜெயங்கொண்டம் பகுதி குடிநீர் வசதியின்மையால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால், கொள்ளிடம் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்றக் கேட்டுக்கொள்கிறேன். இது விஷயமாக மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலமாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. எனவே கொள்ளிடம் மூலம் குடிநீர் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற



ஜெயங்கொண்டத்திலிருந்து மீன்சுருட்டிவழியாக காட்டுமன்னார்கோவில் செல்லும் பஸ் ரூட்டில் ராமதேவநல்லூருக்கும் கீழ்புறம் சாலையில் குறுக்கிடும் ஓடையில் மழை காலங்களில் பஸ் செல்லவோ, பொதுமக்கள் செல்லவோ மிகவும் கஷ்டமாக இருப்பதால், அந்த ஓடைக்கு உடனடியாக ஒரு பாலம் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று பஞ்சாயத்து யூனியனுக்கு கட்டளையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜெயங்கொண்டான் பஸ் ஸ்டாண்டில் ஒரு மணிக் கூண்டு அமைக்கவுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். எனது பகுதியில் ஜெயங்கொண்டத்தில் போக்குவரத்து நெருக்கடிக்காக போலீஸ் பீட் நிற்கிறார்கள். மேலும் அங்குள்ள போலீஸ்காரர்கள் வெயில் காலங்களில் ரோடுகளில் நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நகரங்களில் இருப்பது போல் குடை வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் பஞ்சாயத்துக்களில் பணி புரிகின்ற ஊழியர்கள் தங்கள் சம்பளம் குறைவாக இருக்கிறது என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள். அதோடு அங்குள்ள நகர சுத்தித் தொழிலாளர்களுக்கும் ஏதாவது சம்பள சலுகைகள் தரவேண்டும் என்று கேட்கிறார்கள். இந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தாலூகா மிகவும் பின்தங்கிய தாலூகாவாக இருந்து கொண்டிருக்கிறது. இப்போதே குடிதண்ணீர் குடம் ஒன்றுக்கு அரையணா என்று விலை கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஆடி மாதம் வந்துவிட்டால் ஒரு அணா வரை விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கும். இதைப்பற்றி கனம் முதலமைச்சர் அவர்கள் அங்கு வந்த போது, மாவட்ட கலெக்டர் அவர்களும், சீஃப்-என்ஜினியர் அவர்களும் ஆலோசித்ததாகத் தெரியவருகிறது. ஆகவே இதைப்பற்றி நன்கு ஆலோசித்து உடனடியாக அங்குள்ள மக்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. அப்பாவு தேவர்:** கனம் தலைவர் அவர்களே, கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 1964-65-ம் ஆண்டுக்கான இரிகேஷன் சம்பந்தமான மான்யத்தை வரவேற்று ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தப் பொதுப்பணித் துறையானது, எவ்வளவோ பல நல்ல பணிகளை செய்து கொண்டிருப்பதின் மூலமாக நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை நான் சந்தோஷத்துடன் கூறிக்கொள்கிறேன். இருந்தாலும் அவைகளில் சில குறைகள் இருக்கின்றன. அவைகளை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவில், வெண்ணாறு டிவிஷன் என்பது, காவேரி டிவிஷனுக்கு அடுத்தபடியாக இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லலாம். அந்த வெண்ணாற்றுப் பகுதியில், பாபநாசம், தாலூகாவில் இருக்கின்ற நெடுவாசல் என்னுமிடத்தில் ஒரு பெரிய பாலம் கட்டியிருக்கிறார்கள். அந்தப் பாலத்திலிருந்து கோரையாறு—நீடாமங்கலம் வரை இருக்கின்ற லிமிட்டில் கரை சரியாக இல்லை. இந்தப் பக்கத்திலுள்ள இருபக்கத்திலும் இருக்கின்ற கரை மிகவும் கெடுதலாகவும் குறைவாகவும் இருக்கிறது. அவைகளை உடனடியாக பலப்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக பத்து வருடத்திற்கு ஒருமுறை ஆறுகளிலுள்ள கரைகளைப் பலப்படுத்தவேண்டும் என்று சர்க்கார் ரூல் இருக்கிறது. அந்த முறையில் வெண்ணாற்றங் கரையோரங்களை எல்லாம் பலப்படுத்தவேண்டியது அவசியம். அவ்விதம் செய்வதன் மூலமாக அந்தப் பகுதியை அதிக பாசன வசதியுள்ள இடமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில் வடிகால் சம்பந்தமாக நான் முன்பே இந்த சபையில் கூறியிருக்கிறேன். இப்போதும் அதைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவில் வடிகால் சம்பந்தமாக இப்போது ஸ்பெஷல் ஆபீஸராக திரு. எஸ். ஒய். கிருஷ்ணசாமி,

ஐ.ஸி.எஸ். அவர்களை நியமித்தார்கள். அவர்கள் ஒரு வருடம் ஆராய்ச்சிகள் நடத்தி ரிப்போர்ட் ஒன்றை அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதில் தஞ்சை ஜில்லாவில் வடிகால்களை எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்பதை விளக்கியிருக்கிறார். அவைகளின்படி சில வடிகால் வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும், இன்னும் அதிகமாக செய்ய வேண்டியிருக்கிறது என்றும் கருதுகிறேன். அவைகளை எல்லாம் இந்த ரிப்போர்ட்டில் கண்டபடி செய்தால், தஞ்சை ஜில்லாவுக்கு மிகவும் வசதியாக இருக்கும். தீவிர சாகுபடித் திட்டத்திற்கும், அங்குள்ள விளைச்சல் பெருக்கலுக்கும் அது ஏதுவாக இருக்கும் என்று கருதுகிறேன். இப்போதுள்ள நிலைமையில் வடிகால் வசதி தஞ்சை ஜில்லாவில் போதுமான அளவு இல்லாததினால் கால் பாகம் வருடாவருடம் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். ஆனபடியினால் இந்தத் திட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சிறிய வாய்க்கால்களில், கிராமங்களிலுள்ளவர்கள் பயிர்களை வைத்து விடுகிறார்கள். அதனால் வடிகாலுக்கு தடை ஏற்படுகிறது. அதனால் வடிகால் அமைப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. அதையும் ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் கவனித்து அப்புறப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை ஜில்லாவில், ரோடு வசதி கிராமங்களுக்கு மிகக் குறைவாக இருக்கிறது. எனது தொகுதியாகிய பாபநாசம் தாலூகா ஓரத்தநாடு தாலூகா முதலிய இடங்கள் எல்லாம் போதிய அளவு ரோடு வசதிஇல்லாமல் இருக்கிறது. அந்த இடங்களில் எல்லாம் மண் ரோடாவது உடனடியாகப் போட்டுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது விஷயமாக அங்குள்ள அதிகாரிகளிடம் நான் நேரிலும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். மேலும் சில பெரிய ரோடுகள் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும், மிகவும் குறுகியதாகவும் இருக்கின்றன. இவைகளை அகலப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக என் தொகுதியைச் சேர்ந்த அம்மாப்பேட்டை என்னும் கிராமத்தில் இரண்டு பக்கமும் சிறிய ரோடாக இருப்பதால், வண்டிகளுக்கும் பொதுஜனங்களுக்கும் போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதை அகலப்படுத்துவதற்கும் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி, தஞ்சை ஜில்லாவிலுள்ள மாரியம்மன் கோவில் கிராமத்திலும் தனி ரோடு பார்ம் செய்திருக்கிறார்கள். இருந்தும், டிராபிக்குக்கு இன்னும் பயன்படவில்லை. அதையும் கவனித்து வேண்டியது செய்யும்படியாக அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

11-00 a.m. *** திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த நீர்ப்பாசன மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் விரும்புகிறேன்.

என்னுடைய சூலூர் சட்டசபைத் தொகுதியானது மிகவும் பஞ்சப் பிரதேசம் என்பதை இந்த மாகாண மக்களே சிறப்பாக அறிவார்கள். இன்னும் வழக்கமாக, சென்ற ஆண்டுகளிலெல்லாம், மார்ச்-எப்ரல் மாதத்தில்தான் குடி தண்ணீருக்கு பஞ்சம் வருவதுண்டு. இந்த ஆண்டு மிக மிகக் கடுமையாக பிப்ரவரி மாதத்திலேயே குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல், குறைந்த அளவுக்கு 30 கிராமங்கள் தண்ணீர் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினாலே எங்கள் வட்டாரத்தில் இருக்கக் கூடிய விவசாயிகள் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் அல்லல் உறுகிற நேரத்தில் விவசாயம் செய்யவேண்டுமென்று சொன்னால் என்ன செய்வார்கள் என்பதை இந்த அமைச்சர் அவை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனைப் போக்குவதற்காக ஏற்கெனவே மிக நல்ல திட்டமாக, சரியான முறையிலும் உற்சாகத்தோடு நடைபெற்று வருகிற பரம்பிக்குளம் நீர்ப்பாசனத் திட்டத்திலிருந்து, நீண்ட அளவுக்கு வாய்க்காலை வெட்டிக் கொண்டுவந்து எங்கள் பல்லடம், கோயம்புத்தூர், அவனாசி தாலூகாக்களில் வரண்டு இருக்கிற பிரதேசங்களில்—நாங்கள் பாசன



வசதி வேண்டுமென்று கேட்கவில்லை, முதலாவதாகக் கேட்டுக்கொள்வது—பெரிய ஏரிகளையும், சிறிய ஏரிகளையும் ஆங்காங்கு அமைத்து, அவைகளிலெல்லாம் தண்ணீரைத் தேக்கி எங்கள் வட்டாரத்தில் இருக்கிற கிணறுகளிலெல்லாம் ஊற்றுப் பெருக வழிவகை செய்யவேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு நான்கு வித அடிப்படையில் பணம் செலவு செய்யப்படுகிறது. ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் திட்டம் என்றும், உணவு உற்பத்தித் திட்டம் என்றும் சொல்லக் கூடிய திட்டங்களின் கீழ் செலவு செய்யப்படுகிறது. ஏற்கெனவே முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இந்தச் சிறு பாசனத் திட்டத்திற்கும் உணவு உற்பத்தித் திட்டத்திற்கும் செலவு செய்த பணமாவது பெரிய அளவு செலவு செய்யப்படாத வட்டாரங்களில் செலவு செய்யப்பட வேண்டும் என்பது அமைச்சர் அவையின் நோக்கம். ஆனால் எங்களுடைய சூலூர் வட்டாரத்திலும், சர்க்கார் சாமக்குளம் பகுதியிலும் இதற்காகக் கடந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்த அளவு செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று எண்ணிப் பார்த்தால் சாதாரணமாக ஆயிரக் கணக்கான ரூபாய்தான் செலவு செய்திருக்கிறார்கள். முன்பு கட்டப்பட்ட சூலூர்குளம் ஒன்றுதான் அங்கு இருக்கக் கூடிய மக்களுக்கு ஓரளவுக்குத் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இதற்கு அமைச்சர் அவர்கள் சிறந்த முறையில் பங்கெடுத்து—எங்கள் வரண்ட பிரதேசங்களுக்கு பெரிய நீர்ப்பாசனத்தைப் பெற்று கரும்பு உற்பத்தி செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்கவில்லை, நெல் உற்பத்தி செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்கவில்லை—அங்கு இருக்கக் கூடிய கிணறுகளில் ஊற்றுப் பெருகும் வகையில், மழை காலத்தில் வரும் தண்ணீரைக் கட்டுப்படுத்தி அங்கே இருக்கக்கூடிய வரட்சியைப் போக்க வழிவகை செய்ய வேண்டுமென்றுதான் மிக மிக அன்போடு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் உள்ள மக்கள் வெட்டக் கூடிய கிணறு 110 அடி ஆழம், 100 அடி ஆழம். இப்படி 110 அடி ஆழம் என்று வெட்டிக்கொண்டு போகும்போது பாதாள உலகத்தில் இருக்கிறவர்கள் எங்களோடு சண்டைக்கு வந்து விடுவார்கள் போல இருக்கிறது. அதோடு 110 அடி ஆழம் கிணறு வெட்டிக்கொண்டு சென்றவர்கள் திரும்பி வருவார்களோ மாட்டார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. தொடர்ந்து இருக்கிற இந்த அச்சத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் அவனாசி ரோடில் ப்ளூ மவுண்டன் எக்ஸ்பிரஸ் வரும்போது இப்பக்கமும் அப்பக்கமும் பார்த்தால் நூற்றுக்கணக்கான பஸ்களும் கார்களும் மற்ற வண்டிகளும் நிற்கின்றன. அங்கே மேம்பாலம் கட்டவேண்டுமென்று நான் பலமுறை இந்தச் சபையிலேயே பேசியிருக்கிறேன். அதற்கு மேம்பாலம் கட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈரோடு ரயில் நிலையத்திலிருந்து மொடக்குறிச்சி ரோடுக்குப் போக வேண்டுமென்றால், காலை ரயிலில் வந்து நாங்கள் எங்கள் ஊருக்குப் போக வேண்டுமென்றாலும், மந்திரி அவர்களுடைய மகள் வீட்டுக்குப் போக வேண்டுமென்றாலும் அங்கே நூற்றுக்கணக்கான கார்களும் மற்றவைகளும் இந்தப் பக்கமும் அந்தப்பக்கமும் நின்று, $1\frac{1}{4}$ மணி நேரம் நின்று, போகவேண்டும். 10 நிமிஷம், 15 நிமிஷம் அல்லது $\frac{1}{2}$ மணி என்றாலும் பரவாயில்லை, இப்படி $1\frac{1}{4}$ மணி நேரம் மூடிவிட்டால் எப்படி ஊருக்குப் போவது ? காலையில் பால் கொண்டுவரக் கூடிய வண்டிகளெல்லாம் அப்படியே நிற்கவேண்டியிருக்கிறது. பால் கொண்டு போகப்பட்டால்தான் அதிகாரிகள் வேலைக்குப் போக முடியும். 6-30 மணியிலிருந்து 7-45 மணி வரையில் $1\frac{1}{4}$ மணி நேரம் கேட்டை மூடி விடுவதால் போக்குவரத்து மிகவும் தடைப்படுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்,

சின்னவேடம்பட்டிக் குளத்தைப் பொறுத்த வரையில் பி. டபிள்யூ. இலாகாவைப் பார்த்து வந்த கனம் திரு. கக்கன் அவர்கள் எப்படியாவது எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லி எங்களுக்கு வாக்குறுதி கொடுத்து $9\frac{1}{2}$ லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு போடப்பட்டிருந்தது $6\frac{1}{2}$ லட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் 300 கிணறுகளுக்கு நன்மை ஏற்படும்.

அதோடு எங்கள் பகுதியில் வண்ணாத்தங்கரை என்ற ஒரு ஆறு, குளத்தூர் என்ற ஊர். ஊர் என்று இருக்கிறதே தவிர, அங்கு குளம் கிடையாது. கரை என்று இருக்கிறதே தவிர கரை கிடையாது. பெயர் தான் பெத்த பெயர் என்று சொல்லுவார்கள். அங்கு ஒன்றும் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். வண்ணாத்தங்கரை, குளத்தூர் இவற்றில் தண்ணீர் நிறுத்தி பொது மக்களுடைய வாழ்வு கெடாமல் அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு வருகிற மாதங்களில் எங்கள் பகுதியில் போக முடியாது. ஏராளமான காற்றும் செம்மண்ணும்தான் இருக்கும். பழைய காலத்தில் சொல்லுவார்கள் "கல்லைத்தான் மண்ணைத்தான், காய்ச்சித்தான் குடிக்கத் தான் கற்பித்தானா" என்று. இப்போது நாங்கள் "காற்றைத் தான் செம்மண்ணைத்தான் கலந்து தான் உண்ணத்தான் கற்பித்தானா" "இல்லைத்தான், பரம்பிக்குளம் ஆளியாறு தண்ணீரைத் தான் கொடுக்கத் தான் முன் வந்தானா?" என்று சொல்லவேண்டும். ஆகையால் செம் மண்ணும் காற்றும் தான் ஆகாரம். ஆகையால் எங்கள் வட்டாரம் பஞ்சப் பிரதேசமாக இருப்பதைக் கவனித்து, பட்டினி கிடக்கும் மக்கள் குரல் கனம் அமைச்சர் அவர்களுடைய காதில் ஒலிக்கவேண்டும். கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்கிற போது அவர்களை மறந்து விடாமல் இருக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டத்தில் விமோசனம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. இரா. நாராயணன் :** பெருமைக்குகந்த தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன மான்யக் கோரிக்கை மீது நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் சிறிய நீர்ப்பாசனத் திட்டம், பெரிய அணைக்கட்டுத் திட்டங்கள் ஆகியவைகளை அரசாங்கம் மேற்கொண்டு பலவித காரியங்களைச் செய்து வருவதைப் பற்றி நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இருந்தாலும் சிறிய நீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் சில குளங்களுக்கு வரத்துக் கால் இல்லாமல் மழை நீரைக் கொண்டு சாகுபடி ஆகிக்கொண்டு, உணவுப் பொருள் சரியானபடி உற்பத்தி செய்யமுடியாத நிலையில் இருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய சிறிய பாசனத் திட்டங்களை விரைவிலே அமல் செய்யவேண்டும். எப்படி அமல் செய்யவேண்டுமென்றால் ஒவ்வொரு ஏரிக்கும் வாய்க்கால் தோண்டி, சிறிய ஓடைகள் காட்டாற்றில் வர வேண்டிய நீருக்கு ஸ்பெஷல் அணைக்கட்டுக்கள் கட்டி வாய்க்கால் ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத் தினால் ஏரிகளால் பாய்ச்சப்படுகிற நிலங்களில் நல்ல நிலைமையில் தண்ணீர் பாய்ந்து உணவு உற்பத்தி அதிகமாகும். என்னுடைய தொகுதியில் பல சிறிய பாசன ஏரிகள், நூற்றுக்கணக்கானவை இருக்கின்றன. அந்த ஏரிகளுக்கு எந்தவித வாய்க்காலும் இல்லை. சிறிய ஓடைகள், காட்டாறு இவைகளுக்கு அணைக்கட்டுகள் இல்லை. எங்கள் தொகுதியில் உடையார்பாளையம், பெரம்பலூர் தாலூகாவில் வடக்கலூர் பிர்க்காவில் சின்ன ஓடைகள், காட்டாறு பல ஓடுகின் றன. இப்போது கூட சின்னாற்றில் ஒரு பாலம் கட்டுகிறார்கள் 5 லட்சம் ரூபாயில். இந்த நிலையிலும் கூட சின்னாற்றில் பாலம் கட்டும் இச்சமயத்தில் அணை கட்டி தண்ணீரை நிறுத்தி உடையார் பாளையத்திலுள்ள சிறு ஏரிகளுக்கு வாய்க் கால் மூலம் கொண்டு போனால் வருகிற ஆண்டில் கூட உணவு உற்பத்தி அதிகமாகும் நிலை இருக்கிறது. ஆகையால் இந்த அணையைக் கட்டியும் உடையார்பாளையம் தாலூகாவில் சிறிய வாய்க்கால்களை வெட்டி ஒவ்வொரு





ஏரியிலும் நீரைத் தேக்கி உணவுப் பஞ்சத்தையும் போக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வதோடு இப்போது தொழுதூர் அணைக்கட்டு மூலமாக வடக்கலூர் பிர்க்காவிலே பி. டபிள்யூ.டி. யில் தண்ணீர் கொண்டு போகிறார்கள். வெள்ளாற்றில் மழை பெய்யும் காலத்தில் அதிகப்படி தண்ணீர் வந்து அது சமுத்திரத்தில் கலக்கும் நிலைமை இருக்கிறது. வெல்லிங்டன் ரிஸர்வாயர் என்று ஏற்படுத்தியிருக் கிறார்கள். மழை பெய்யும்போது 2 நாள், 3 நாள் தண்ணீர் வந்து ஆற்றில் போகும் நேரத்தில் அது வீணாகப் போய் விடுகிறது. வாய்க்காலை அகலப்படுத்தி அந்தத் தண்ணீரை ஏரிக்குப் பயன்படுத்த முடியவில்லை. வெல்லிங்டன் ரிஸர்வாயர் ஏரிக்கு வேண்டிய தண்ணீரை உடனே பிடிக்க முடியாமல் ஆற்றில் தண்ணீர் வீணாகப் போகிறது. அந்த ஆற்று நீரை வடக்கலூர் பிர்க்காவில் தொழுதூர் அணைக்கட்டில் ஒரு கண்ணின் வாய்க்கால் மூலம் சில ஏரிகளுக்குத் தண்ணீர் விடுகிறார்கள். அந்தக் கால்வாய் குறு கலாக இருக்கிற காரணத்தினால், தண்ணீர் வருகிற சமயத்தில் கால்வாயை பயன்படுத்திக்கொண்டு ஏரி முழுவதும் நிரப்ப முடியவில்லை. தொழுதூர் அணைக்கட்டிலிருந்து பிரியும் கண்வாய் வடக்கலூர் ஏரிகளுக்குத் தண்ணீர் பிடிப்பதற்காக அந்தக் கால்வாய்களை அகலப்படுத்தவேண்டும். வலக்கலூர் பகுதியிலுள்ள சில ஏரிகளுக்கு வெள்ளாற்றிலிருந்து பரம்பு ஒதுக்கி வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டுபோகிறார்கள். அது அவசியமற்றது. தொழுதூர் அணைக்கட்டிலிருந்து வாய்க்கால்களை அகலப்படுத்தி அவைகளின் மூலம் மற்ற ஏரிகளுக்கும் தண்ணீர் நிரப்பினால் உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு வசதியாக இருக்கும்.

என்னுடைய தொகுதியில் மாத்தூர்—திட்டக்குடி ரோடு பின் தங்கிய பிரதேசம். களிமண் பிரதேசம். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த ரோடை சர்க்கார் சரிவர செப்பனிடவில்லை. வசிஷ்டபுரம் எல்லையிலிருந்து அகரம் சிகூர் வழியாக பெரம்பலூருக்கு பஸ் போகிறது. ஒரு மைல் பிரயாணம் செய்வதற்குள் உடம்பு பூராவும் புழுதிமயமாகி விடுகிறது. அந்த ரோடை செப்பனிடவேண்டும். அடுத்தபடியாக மாத்தூர்— திட்டக்குடி ரோடில் வெள்ளாற்றில் ஒரு பாலம் கட்ட வேண்டும். அம் மாதிரி பாலம் கட்டினால் விவசாயப் பொருள்கள் போக்குவரத்துக்கு சௌரிகயமாக இருக்கும்.

எனக்கு முன்பு பேசிய திருமதி செகதாம்பாள் வேலாயுதம் அவர்கள் சொல்லியது போல உடையார்பாளையம் குடிதண்ணீர்த் திட்டம் மிகவும் அவசியமாகக் கவனிக்கப்படவேண்டும். அந்தக் குடிதண்ணீர் திட்டத்தை அமலாக்கி அங்குள்ள மக்களுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டும். திரு. விசுவநாதன் அவர்கள் எம்.எல்.ஏ.-வாக இருந்தபொழுது மத்திய சர்க்கார் ரூ. 14 லட்சம் செலவில் எஸ்டிமேட் போட்டு ஒரு குடி தண்ணீர் திட்டம் போட்டார்கள். அந்தத் திட்டம் இப்பொழுது கைவிடப்பட்டது என்று தெரியவருகிறது. மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் 14லட்ச ரூபாய் அளவில் எஸ்டிமேட் போட்டு ஒரு குடி தண்ணீர்த் திட்டத்தை செந்துறை வட்டாரத்தில் வெள்ளாற்றிலிருந்து கொண்டு வர அமலாக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பியிருக் கிறோம். அதைக் கண்டிப்பாக அமலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு ஆர். எஸ். ஆறுமுகம் :** கனம் தலைவர் அவர்களே, நீர்ப் பாசனம் சம்பந்தமாக இருக்கிற நதிகளை எல்லாம் பயன்படுத்தி, நல்ல முறையில் திறமையான என்ஜினியர்களால் அணைக்கட்டுகளைக் கட்டி எல்லா ஏற்பாடுகளையும் சர்க்கார் செய்திருக்கிறார்கள் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளுகிறேன். இன்னும் கேரள ராஜ்யத்தில் வீணாகப் போகிற தண்ணீரையும் நமது ராஜ்யத்திற்குத் திருப்பி அதையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை நமது சர்க்கார் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

[திரு. ஆர் எஸ். ஆறுமுகம்] [20th March 1964]

எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரைக்கும் மணிமுத்தாறு அணைக்
கட்டு கட்டிய பிறகு ஓரளவுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது. ஆனால்,
நெல்லை தாலுகாவில் ரெட்டியார்பட்டி, ஆரோக்கியநாதபுரம் என்ற இடங்
களில் உள்ள சிறிய குளங்களையும் இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவர
ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டின் கீழ் எத்தனையோ கால்வாய்கள்
இருக்கின்றன. அவைகளில் ஏதாவது பாலங்கள் கட்டவேண்டுமென்றால்
கட்டுவதற்குத் தயங்குகிறார்கள். அதனால், பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன.
அந்த இடங்களில் எல்லாம் நேரடியாக பி.டபிள்யூ. டிபார்ட்மெண்டாரே
பாலங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்
பாக, மருதூர் கால்வாயில், வாகைக்குளம், நாட்டார்குளம், போன்ற
இடங்களில் பாலம் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று ரொம்ப நாட்களாக
ஜனங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தேசிய நெடுஞ்சாலை, மாநில
நெடுஞ்சாலை ஆகியவைகளில் ரெயில்வே லெவல் கிராஸிங் உள்ள
இடங்களில் மேம்பாலம் கட்டுவது, கோவில்பட்டியில் பை-பாஸ் ரோடு
போடுவது இம்மாதிரி வேலைகளைச் செய்துகொடுத்து, நெடுஞ்சாலைகளின்
போக்கு வரத்து வசதியை மேலும் அதிகரிக்க ஏற்பாடு செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படுகிற பணம் அதிகமாக
இல்லாத காரணத்தால், பஞ்சாயத்து யூனியன்களினால் போடப்பட்ட ரோடு
களில் அவர்களால் பாலங்கள் கட்ட முடியவில்லை. அந்த ரோடுகளில்
பாலங்கள் கட்டுவதற்கு எவ்வளவு தொகை வேண்டும் என்பதைப் பரி
சீலித்துப் பார்த்து, அதற்கு ஒரு 'பேஸ்டு ப்ரோகிராம்' போட்டு, அந்த
வேலையையும் சர்க்கார் செய்து கொடுத்தால், போட்ட ரோடுகளை நல்ல
முறையில் பயன் படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை ஞாபகப்
படுத்த விரும்புகிறேன். அதோடு பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்
படுகிற பணமும் போதாது. எங்கள் தாலுகாவில் சீதபர்ப்பநல்லூரிலிருந்து
கல்லூருக்கு ரோடு போடும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தி
லேயே சேர்க்கப்பட்டிருந்தது. அதுமாதிரி ஒன்றுமில்லை என்று இப்
பொழுது சொல்லுகிறார்கள். அது மிகவும் முக்கியமான பாதை.
அதைப் பரிசீலனை செய்து, ஷை ரோடு போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுலோசன முதலியார் பாலத்தை அகலப்படுத்துவது சம்பந்தமாக
அமைச்சர்கள் வந்து பார்த்தார்கள். எப்பொழுது தான் இதற்கு நல்ல
காலம் வருமோ ? அங்குள்ள போக்குவரத்து எப்பொழுது தான் செம்மைப்
படுமோ ? அங்குள்ள பஸ் போக்குவரத்து எப்பொழுது தான் நல்ல
முறையில் செயல்படுமோ ? எப்பொழுது தான் ஆபத்து இல்லாமல்
இருக்குமோ ? என்றால் சொல்ல முடியவில்லை. அமைச்சர் அவர்கள்
இது சம்பந்தமாக ஆவன செய்து எவ்வளவு சீக்கிரம் ஷை பாலத்தை
அகலப் படுத்திக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரு வார்த்தை. உடையார்பட்டி—சீவலப்பேரி ரோடு பற்றி
எத்தனையோ தடவை சொல்லியாகிவிட்டது. சீவலப்பேரி பக்கத்தில் ஒரு
தாம்போதி கட்டவேண்டுமென்று 1956-ல் அப்பொழுது இருந்த ஜில்லா
போர்டில் 6,000 ரூபாய் வரை செலவு செய்து கொஞ்சம் கட்டினார்கள்.
ஆனால், அந்த ரோட்டை சர்க்கார் எடுத்துக்கொண்டதும், அந்த வேலையை
மேற்கொண்டு செய்யவேண்டாம் என்று நிறுத்திவிட்டார்கள். மீண்டும்
அந்த வேலையை அந்த கண்டிராக்டரை செய்யச் சொன்னார்கள். அவர்
பழைய எஸ்டிமேட்டில் செய்ய முடியாது என்று சொல்லிவிட்டார். அந்த
பாலத்தினுடைய அவசியத்தை உணர்ந்த சர்க்கார் அதற்கு ஒரு ரிவைஸ்டு
எஸ்டிமேட் கேட்டார்கள். அப்பொழுதிருந்த என்ஜினியர் அதன் முக்கியத்து
வத்தை உணர்ந்து எஸ்டிமேட் போட்டு ரிவைஸ்டு எஸ்டிமேட்படி
டெண்டரும் கோரினார்கள். டெண்டர் போட்டவர் கொஞ்சம்
அதிகப்படியான தொகை கோரியிருந்ததால். '[illegible] என்ஜினியர்'



20th March 1964] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

பார்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர் நேரில் போய் பார்த்து
அந்த இடம் சரி இல்லை என்று கூறி இன்னொரு இடத்தில் கட்டலாம்
என்று சொன்னார்கள். அதற்கும் ஒரு எஸ்டிமேட் போடப்பட்டது.
அது தற்சமயம் சர்க்கார் கையில் இருக்கிறது. எந்த ராகுகாலத்தில்
இந்த வேலைக்கு முதலில் எஸ்டிமேட் போடப்பட்டதோ 1954-ம் வருடம்
எஸ்டிமேட் போட்டு ஆரம்பித்த வேலை இன்னும் முடியாமல் இருக்
கிறது. அந்த இடம் ஏழைகள் வாழ்கிற இடம். அந்தப் பாலம்
கட்டினால் விவசாய மக்களுக்கு எவ்வளவோ நன்மை ஏற்படும்.
அப்படியிருக்கும்பொழுது, ஏன் இன்னும் அந்தப் பாலம் கட்டப்படவில்லை
என்று நினைக்கும்பொழுது வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை
எத்தனையோ அம்சங்களை எடுத்துக்கொள்ளலாம். அங்குள்ள மக்கள்,
விவசாய மக்கள், திருநெல்வேலிக்கு உணவுப் பொருள்கள், விதைகள்,
இன்னும் மற்றவை வாங்குவதற்கு வந்துதான் தீரவேண்டும். ஆகவே,
விவசாய உற்பத்தித் தன்மையை எடுத்துக்கொண்டாலும், அந்தப் பாலம்
மிகவும் அவசியமானது. இந்தியா சிமெண்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய
'ரா மெடீரியல்ஸ்' அங்கிருந்தும் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, தொழி
லாளர்கள் சம்பந்தமாக எடுத்துக்கொண்டாலும், அது முக்கியத்துவம்
வாய்ந்தது. மேலும், தூத்துக்குடி துறைமுகம் அபிவிருத்தி செய்யப்
படப்போகிறது. அதற்காக கிட்டத்தட்ட ரூ. 34 லட்சம் செலவில் ரோடுகள்
போடப்பட இருக்கின்றன. திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு
இரண்டு பாதைகள் இருக்கின்றன. ஒன்று முரப்பநாடு வழி, இன்னொன்று
சீவலப்பேரி வழி. இரண்டு பக்கத்திலும் பஸ் போய்க்கொண்டிருக்கிறது.
உடையார்ப்பட்டி—சீவலப்பேரி ரோடு சீவலப்பேரியோடு நின்றுவிடவில்லை.
தொடர்ந்து தூத்துக்குடி வரையிலும் போகிறது. அங்கிருக்கும் துறை
முகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று எண்ணும்பொழுது இந்த
தாம்போதி மிகவும் பயன் வாய்ந்தது. நான் முன்பு சொன்ன இந்தியா
சிமெண்டு தொழிற்சாலையிலிருந்து தூத்துக்குடி துறைமுக அபிவிருத்திக்கு
சிமெண்டு தேவைப்பட்டால் குறுக்குப்பாதை சீவலப்பேரி பாதை
தான். அந்த விதத்திலும் இப்பாலம் மிகவும் அவசியமானது. அதோடு,
பராக்கிரமபாண்டி குளத்து வேலையை நமது முதல் அமைச்சர் அவர்களின்
திருக்கரங்களால் ஆரம்பிக்கப்போகிறார்கள். அந்தக் குளத்து வேலைக்கு
பொருள்கள் எல்லாம் போகவேண்டும் என்றால், இந்தத் தாம்போதி
கட்டாவிட்டால் அதிக செலவாகும். இந்தத் தாம்போதி கட்டவேண்டு
மென்று எத்தனையோ தடவை முறையிட்டுக்கொண்டிருக்கிறோம். அமைச்
சர் அவர்களிடம் சொன்னால் அப்பொழுது ஒரு கடிதம் எழுதிக் கொடுங்கள்
என்று சொல்லுவார்கள். இம்மாதிரி நானே இது சம்பந்தமாக பல
தடவைகள் எழுதிக்கொடுத்திருக்கிறேன். இந்த மக்களுக்கு இன்னும்
விமோசனம் கிடைத்தபாடில்லை. ஆகவே, உடனே அமைச்சர் அவர்கள்
இதில் கவனம் செலுத்தி, இந்த வேலையை முடித்துக் கொடுக்கவேண்டு
மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்து கொள்கிறேன்.
வணக்கம்.

* **திரு. ஆ. தங்கவேலு :** கனம் தலைவர் அவர்களே, இந்த
நீர்ப்பாசன மான்யத்தின்மீது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்திருக்கும்
வெட்டுப் பிரேரபணைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச்
சொல்ல விரும்புகிறேன். திண்டிவனம் பகுதி மிகவும் வறண்ட பகுதி.
வானத்தை நம்பி இருக்கக்கூடிய பகுதி. ஏரிகள் மூலம் தான் அங்கே
நீர்ப்பாசன வசதி இருக்கிறது. அந்த ஏரிகளை ஆழப்படுத்துவதோ,
அல்லது ஏரிக்கரைகளை மராமத்துச் செய்வதோ அல்லது ஏரிகளுடைய
மதகு முதலானவற்றை ரிபேர் செய்வதோ போன்ற வேலைகளை சரியான
முறையில் கவனிக்கப்படவில்லை. பல ஆண்டு காலமாக வசதியற்ற நிலைமை
யில் இந்தப் பகுதி இருப்பதை நான் இங்கே வருத்தத்துடன் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன. ஏரிகளை ஆழப்படுத்துவதற்கு டீசில்டிங்-கம்-ரீக்ள
மேஷன் ஸ்கீம் ஒன்று 1962-ல் போட்டு நடந்து வருகிறது. அம்மாதிரி
தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் என்னுடைய பகுதியில்
ஏராளமான ஏரிகளில் செய்ய வேண்டியிருந்தும், பல ஏரிகளில் செய்யப்பட
வில்லை. அதற்காக 1964–65-ல் ரூ. 14·48 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ள
தாகவும். 14 வேலைகள் பூர்த்தியாகும் என்று எதிர்ப்பார்ப்பதாகவும்
சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆழப்படுத்தும் திட்டத்தில் 14 வேலைகள்

எதிர்பார்க்கப்படுகிறது என்றால், அவை எந்தெந்த வேலைகள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இரிகேஷன் பிளானிங் சர்க்கிள் என்ற திட்டம் புதியதாக பல நீர்ப்பாசன வசதிகளைக் கண்டுபிடிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட திட்டம். இப்படிப் பாசன வசதியற்ற திண்டிவனப் பகுதிக்கு எந்தெந்த வகையில் நீர்ப்பாசன வசதிகளைக் கண்டு பிடிக்கலாம் என்ற வகையில் முயற்சி எடுக்கப்படவில்லை.

என்னுடைய தொகுதியில் சாரம் என்ற நதி இருக்கிறது. இந்த ஆற்று நீரை சோனேரிக் குப்பம் பக்கத்திலே தடுத்து, ஒரு கால்வாய் வெட்டி, கப்பூர், அன்னம்பாக்கம், பாங்குளத்தூர் ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு போகலாம். தண்ணீர் நிரம்புவதற்கு வழி இல்லாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். இதுவரையிலும் என்ன முறையிலே கவனித்தார்கள் என்பது தெரியவில்லை. இனிமேலாவது இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை இந்த இரிகேஷன் பிளானிங் சர்க்கிள் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ரூ. 23 லட்சம் மதிப்பீட்டில் 24 திட்டங்கள் அங்கீகாரம் பெற்றுள்ளன என்றும், ரூ. 104 லட்சம் மதிப்பீட்டில் 44 வேலைகளுக்குப் பரிசீலனை முடிந்துவிட்டதாகவும் இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். இப்படி பரிசீலனை முடிந்துள்ள இடங்கள் எவை எவை என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் தென்பசார் என்ற ஒரு ஏரி இருக்கிறது. அங்கே இருக்கிற கலிங்கலை மாற்றி அமைக்க வேண்டுமென்பது திட்டம். இந்தக் கலிங்கலில் தண்ணீர் வழிந்து போகும் பொழுது, பயிர்களை அடித்துச் செல்கிறது. கரையின் மறு புறத்திற்கு இதை மாற்றிவிட்டால் வசதியாக இருக்கும். நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பே இந்தக் கலிங்கலை மாற்ற வேண்டுமென்று கேட்கப்பட்டது. அது கவனிக்கப்படவில்லை. சென்ற 13-ம் தேதியன்று ஒரு கேள்வியில், இந்த தென்பசார் கலிங்கலை மாற்றியமைக்கும் வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படுமென்று கேட்டேன். கனம் உள்துறை அமைச்சர், 1963–64 இறுதியில் இந்த வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு, 1964–65-ல் முடிக்கப்படும் என்று சொன்னார்கள். 1963–64 இறுதிக்குள் இந்த வேலை துவக்கப்பட வேண்டும் என்று சொன்னால், இன்னும் 10 நாட்கள் தான் இருக்கின்றன. நான் விசாரித்துப் பார்த்த வரையில் அந்த வேலையை யாருக்கும் காண்ட்ராக்ட்டுக்கு விடப்பட்டதாக தெரியவில்லை. வேலையை துவக்குவதற்கு எந்த விதமான அறிகுறியும் தென்படவில்லை. ஆகவே ஏதோ முன்கூட்டி ஒரு தகவலை கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்த இலாகாவிலிருந்து இப்படி எழுதி அனுப்பியிருக்கிறார்களே தவிர உள்ளபடியே அந்த வேலையைச் செய்துத்தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இருக்கிற பயிர்களை தண்ணீர் அடித்துச் செல்லாமல் இருப்பதற்கு இந்த கலிங்கலை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியும், அதை நிறைவேற்றாமல் இருப்பது வருந்தத்தக்கது. அதே மாதிரி சாத்தனூர் ஏரி என்று ஒரு ஏரி இருக்கிறது. தாதாபுரம், கொடியம், வயிரபுரம், ஏரித்தண்ணீர் ஓடையாக வருகிறது. அந்த ஓடையின் கரைகள் உடைந்து போய் சாத்தனூர் கழனிகளில் சுமார் 50 ஏரிகளில் மண் மேடிட்டு, பல ஆண்டுகளாக அப்படியே இருந்து வருகிறது. மேலும் 10, 12 கிணறுகள் தூர்ந்து போய் இருக்கின்றன. அந்தக் கரையை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அங்கே உள்ள உதவி எஞ்சினியர் அவர்களுக்கும், கடலூர் எக்ஸிகியூட்டிவ் எஞ்சினியருக்கும் விண்ணப்பம் கொடுத்தும், இதுவரையில் ஒன்றும் கவனிக்கப்படவில்லை. இதனால் 50 ஏக்கர் நிலம் பாழாகக் கிடக்கிறது. மேலும் வரத்துக் கால்வாய்கள் கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியனுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பணம் போதவில்லை என்ற நிலையில், வரத்துக் கால்வாய்களை அவர்கள் கவனிக்க முடியவில்லை. தயவு செய்து, பொதுப்பணித்துறையே இதை நேரடியாக எடுத்துக் கொண்டு, ஏரிக்கு தண்ணீர் வரக்கூடிய வழி வகைகளைச் செய்யவேண்டும் என்ற கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.





* **திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் தலைவர் அவர்களே, இந்தப் பொதுப்பணி மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மற்ற மாவட்ட அங்கத்தினர்கள் எல்லாம் நீர்ப்பாசனத்தைப் பற்றி பேசக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் எங்களைப் போன்ற நகர சபை அங்கத்தினர்களுக்கு அந்த வாய்ப்பு கிடையாது. ஆனால் நகரத்திலே இன்னும் சில வேலைகளை பொதுப்பணித் துறையினர் செய்யவேண்டும் என்பதற்காக நான் பேச முன் வந்துள்ளேன். கனம் அமைச்சர் அவர்களுக்கு சென்னை மாநகர மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். 40, 50 வருஷங்களாக மேம்பாலங்களையும், சுரங்கப்பாதைகளையும், அமைக்க முடியாமல் இப்பொழுது அவற்றை அமைக்க முன் வந்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் திருவொற்றியூர் மேம்பால வேலை ஆரம்பித்து, ஓரளவுக்கு நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் துரிதமாக சிமெண்ட் கிடைத்தால் சீக்கிரமாக அந்த வேலையை முடிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்து, சீக்கிரமாக அந்த வேலையை முடித்துத்தந்தால் வட சென்னை மக்கள் அவருக்கு என்றென்றும் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள். மேம்பாலம் மட்டும் கட்டினால் போதாது. அந்த மேம்பாலத்திலே எல்லோரும் ஒரே ரோட்டில் வந்துகொண்டிருந்தால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும். ஆகவே அந்த மேம்பாலத்தை ஒட்டி, திருவொற்றியூர் ஹை-ரோட்டுக்கு பாரலலாக இன்னொரு ரோட்டை 60 அடி அகலத்தில் போட்டால் தான் இந்த மேம்பாலம் நல்ல முறையில் வசதியாக இருக்கும். இதையும் அமைச்சர் அவர்கள் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

அடுத்தப்படியாக, பேஸின் பிரிட்ஜ் என்ற பாலம் வெகுநாட்களாக பழைய முறையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. அங்கு போக்குவரத்து எக்கச்சக்கமாக இருக்கிறது. ஆந்திரப் பகுதிக்கு போகிற எல்லா ஊர்திகளும் இந்தப் பாலத்தின் வழியாகத்தான் போக வேண்டும். இந்த பேஸின் பிரிட்ஜ் பாலம் 3 ரோடுகளை இணைப்பதாக இருப்பதனால் அடிக்கடி பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. இந்த ஆண்டு துவக்கத்திலே ஒரு இளம் வைத்தியர் ஒரு விபத்திலே சிக்கி தன்னுடைய உயிரையே போக்கிக் கொள்ள வேண்டிய ஒரு பரிதாபகரமான நிலையைப் பார்த்தோம். இந்த பயங்கரமான நிலையில் இந்தப்பாலம் இருப்பதால் இதை எப்படியாவது சீர்திருத்தி செப்பனிட்டு, ஒரு சிறந்த பாலத்தை அமைப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டும். மத்திய அரசாங்கம் கடன் கொடுத்தால் தான் செய்வோம் என்று சொல்கிறார்கள். எப்படியாவது கடனை உடனடியாக வாங்கியாவது அல்லது டோக்கன் கிராண்ட் கொடுத்தாவது இந்த வேலையை ஆரம்பித்துவிட்டு அதற்குப் பிறகு கடன் வாங்குவதற்கு முயற்சிக்கலாம். இது மிகவும் முக்கியமான பாலம். ஆந்திரப் பகுதியில் இருந்து பல கார்களும், லாரிகளும் இந்த பாலத்தின் மூலமாகத்தான் சென்னை நகரத்திற்கு வர வேண்டும். அவர்கள் எல்லோரும் சென்னை நகரத்தில் நுழைகிறபோது இப்படி ஒரு பழைய பாலம் இருக்கிறதே என்று அங்கலாய்க்கிறார்கள். ஆகவே இந்தப் பாலத்தை உடனடியாக கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் இருந்து என்னூர் வரை கடற்கரை ஓரமாக ஒரு அழகான ரோடு போட்டுக்கொண்டிருக்கிறார்கள். பொதுப்பணித்துறையிலே உள்ளவர்கள் தென் சென்னையில் உள்ள கடற்கரையைத்தான் அழகு படுத்தவேண்டும் என்று எண்ணிக் கொண்டு வட சென்னையை உதாசீனம் செய்கிறார்கள். "தெற்கு வாழ்கிறது, வடக்கு தேய்கிறது" என்ற நிலை தான் சென்னை நகரைப் பொறுத்த வரையில் இருக்கிறது. வட சென்னையில் தான் ஏழை மக்கள் வாழ்கிறார்கள். ஆகவே வட சென்னை கடற்கரைப் பகுதியை அழகுபடுத்துவதில் அக்கறை காட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே கெல்லீஸ் டிரெயின் இடிந்து தகர்ந்திருக்கிறது. அந்தக் கட்டிடம் பல ஆண்டு காலமாக இருக்கிறது. அதைச் செப்பனிட்டு, ஒரு பார்க் அமைத்து மாலை நேரங்களில் ஜனங்கள் அங்கே வந்து உட்காருவதற்கு வழி செய்தால் வட சென்னையிலுள்ள மக்களுக்கு பொழுது

[திருமதி டி. என். அனந்தநாயகி] [20th March 1964

போக்காக இருக்கும். தென் சென்னை கடற்கரைப் பகுதியை அழகு படுத்துவதில் எவ்வளவு அக்கரை காட்டுகிறார்களோ, அதுபோல் வட சென்னைக் கடற்கரைப் பகுதியையும் அழகுபடுத்த வேண்டும்.

11-30 a.m. வட சென்னையில் இருக்கிற மக்களுக்கு ஏதோ தங்களை சர்க்கார் புறக்கணிக்கிறார்கள் என்று தான் தோன்றுகிறது. எந்த ஹௌசிங் காலனியை எடுத்துக் கொண்டாலும் அல்லது எந்த முக்கியமான நல்ல காரியங்களாக எடுத்துக் கொண்டாலும் அது எல்லாம் தென் சென்னையில் தான் செய்யப்படுகிறது. வட சென்னையில் உள்ளவர்கள் செத்தவர்கள் போல் கவனிக்கப்படாமல் இருப்பது அவ்வளவு சரியல்ல. கடற்கரை நிலம், கெல்லீஸ் ட்ரெயின்ஸ் என்று ஏற்கனவே இருக்கிறது. கட்டடம் எல்லாம் இருக்கிறது. கொஞ்சம் பூச்சு வேலை செய்து, ஒழுங்கு படுத்தினால் மிக அழகாக இருக்கும். அது வடசென்னைக்கு செய்த நல்ல காரியமாக இருக்கும். மக்களும் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள்.

அடுத்தபடியாக, உட் வார்ஃப் ஏரியா என்று இருக்கிறது. பக்கிங்ஹாம் கெனால் ஓரமாக இருக்கிறது. இங்கே இருக்கும் ஏழை மக்கள் குடிசைகளிலே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த குடிசை வாழ் மக்கள் எல்லாம் மிகவும் சுகாதாரக் கேடான நிலையில் இருக்கிறார்கள். இங்கே நகர சுத்தித் தொழிலாளர்களும் சென்று வேலை செய்ய அவர்களுக்கு அதிகாரமும் இல்லை. அவசியமும் இல்லை. அது நகரசபை எல்லைக்கு அப்பாற்பட்டதாக பிரைவேட் ஏரியாவிலே உள்ளதாக இருக்கிறது. ஆகவே அங்கே சுத்தம் செய்ய இவர்களுக்கு சட்டம் கிடையாது. அது பப்ளிக் வொர்க்ஸ் ஏரியா. அவர்களும் சுத்தம் செய்வது இல்லை. இந்த உடவார்ஃப் ஏரியாவிலே பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சிறு சிறு தொழிற்சாலைகளை நடத்துபவர்களும் நல்ல சுகாதார நிலைமையை ஏற்படுத்துவது இல்லை. ஆகவே இங்கே நடவடிக்கை எடுத்து நல்ல சுகாதார அடிப்படையில் ஒரு அழகான, சின்ன இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஆக அமைத்தால் இந்த உடவார்ஃப் ஏரியாவிலுள்ள தொழில் நடத்துபவர்களும் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கத் தயாராகக் காத்திருக்கிறார்கள். ஆகவே அதற்கான முயற்சிகளை அரசாங்கம் உடனடியாக எடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பட்டது) ஒரு நிமிஷம். இந்த ஆபீசுகளைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பல ஆபீசுகளை தனி நபர் வீடுகளில் வைத்து பெரும் வாடகை கொடுத்துக் கொண்டு வருகிறோம். உதாரணமாக ஐ.ஜி. ஆப் பிரசன்ஸ், ஹாண்ட் லூம் ஆபீஸ் முதலியவை இம்மாதிரி தனி நபர் கட்டடங்களில் இருக்கின்றன. இவற்றை எல்லாம் ஒரே இடத்தில் சேர்த்து வைத்தால் நலமாக இருக்கும். கொஞ்ச நாட்களுக்கு முன்பு ரெவின்யூ போர்ட் பக்கத்தில் சிறு சிறு கட்டடங்களைக் கட்டத் துவக்கினார்கள். அதற்குப்பிறகு மேலே ஒன்றும் செய்யவில்லை. அவை எல்லாம் இரேவ் யார்ட் கட்டடங்கள் போல தனித்தனியாகக் காட்சியளிக்கின்றன. எல்லா சர்க்கார் ஆபீஸ்களையும் ஒரே இடத்தில் சர்க்கார் கட்டடத்தில் வைத்தால் மக்கள் பிரதிநிதிகள் போக வர சௌகரியமாக இருக்கும். அவர்களுடைய நேரமும் காலமும் வீணாகாது. அரசாங்கத்திற்கும் லாபமாக இருக்கும். வாடகைக்காகக் கொடுக்கப்படும் பல லட்ச ரூபாய்கள் மிச்சமாகும். ஆகவே சொந்தக் கட்டிடத்தில் இவைகளை ஒரே இடத்தில் வைக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

Sri K. S. G. HAJA SHERIFF : Mr. Chairman, Sir, I rise to speak in support of the Demands moved by the Hon. Minister for Works. Sir, he has placed before the hon. Members a note relating particularly to the development of minor ports in our State. He has dealt with the improvements that are being effected to the three minor ports like Cuddalore, Nagapattinam and Tuticorin. I am very happy that the improvements to the two minor ports like Cuddalore and Nagapattinam are taking place. But I would emphasise here that if these improvements are given a



20th March 1964] [Sri K. S. G. Haja Sheriff]

fillip, I am sure that the volume of traffic that is now handled in these two minor ports can almost be doubled, particularly in the Cuddalore Port which is handling about 3 lakh tons of cargo. Coal is being imported. Iron ore and cement are being exported. That is one of the very good ports and this volume of traffic can almost be trebled, if certain facilities are introduced in that port. Two important facilities that are required in minor ports are : (1) placement of a powerful dredger and (2) a good tug. The main difficulty in minor ports is that boats can ply only during high tide and not during low tide, with the result that boats can work only during a particular period. If a dredger is kept and if the bar is brought to the depth that is required for the laden ships to come and go, I am sure, the number of trips that can be made by these boats will be trebled, thereby the volume of traffic can be trebled. Another facility that is required to be provided in these minor ports is a powerful tug. Now, these boats sail only with their sails. The steamers that are staying about three or four miles away from the port have to be provided with cargo, and these boats do carry cargo from shore to the ship and from the ship to the shore. If a tug is provided, it can tow these boats of a capacity of 500 to 600 tons in about half an hour or 45 minutes—whereas the boats with their sails will take about two hours—and thereby a lot of time would be saved. I feel that these two facilities should be provided almost immediately in the minor ports if the traffic in the minor ports is to be doubled or almost trebled.

Besides these things, I would like to emphasise that other facilities like provision of sheds and also money for construction of boats by boatmen should also be extended by the Government. Any steamer that is coming to a minor port would like to get away, without staying there for a longer time. If the sheds that are available there are adequate, I am sure, the quickness with which the steamers can be dealt with in these minor ports will be greater. No doubt, in Cuddalore, there is ample shed facility but in Nagapattinam the shed facility is not there. I would like this to be attended to by the Government.

Sir, I do not know why the two minor ports of Cuddalore and Nagapattinam should not be made use of fully for importing cargoes like fertilisers and foodgrains. Nagapattinam is in Thanjavur district which is the granary of the South and Cuddalore is in South Arcot district where a number of industries are coming up. If these two ports can be utilised for importing fertilisers and other cargoes which are now being imported from a major port like Madras, I am sure, those ports can be developed to a very considerable extent. There will also be a lot of activities and labour also would be benefited. So, I would like the Hon. Minister to take up the matter with the Government of India and see that cargoes like fertilisers and foodgrains are handled in these minor ports.

Sir, I am very happy that the development of Tuticorin as a major port taking place. I am sure the department concerned will take steps to see that what is necessary for a major

[Sri K. S. G. Haja Sheriff] [20th March 1964]

port is provided because this is a time when industrial development is taking place. One of the important facilities that is required to be provided is a powerful crane which can lift cargoes weighing 60 or even 70 tons. The boilers which are being imported are very heavy ones and they require a very heavy crane. If that is not there, the next alternative is for the steamers to go either to Madras or to a port like Cochin and that would involve considerable time and expenditure. So, this sort of facility is very important and, I am sure, the Department which is developing the Tuticorin port as a major port will take all these factors into consideration and take early steps to obviate any delay in the matter. I am very happy that other ports like Kulasekarapattinam, Pamban, Dhanushkodi, Kilakarai and Tondi are being taken up for development. I hope the Government would take a survey of the traffic, because the development of minor ports requires a survey of traffic to be taken up. If that survey reveals that there is a great potentiality for trade, I am sure, they can also be developed. They will be very useful for the growth and development of our trade, industry and commerce. Thank you, Sir.

* **திரு. ந. சண்முகசுந்தரம்** : கனம் தலைவர் அவர்களே; கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நாட்டிலே இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக அநேக அணைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதனால் உணவு உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. ஏழை மக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. பொதுவாக எடுத்துக் கொண்டால் கிராமாந்திரங்களில் நல்வாழ்வு ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லலாம். இதற்காக அமைச்சர் அவர்களையும், அந்த இலாகா அதிகாரிகளையும் பாராட்டுகின்றேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொண்டால், அதாவது மேட்டுப்பாளையம் தொகுதி மிகவும் பஞ்சப் பிரதேசம், மிகவும் பின்தங்கிய பிரதேசம். அந்தத் தொகுதியில் எவ்வித பாசனத் திட்டமும் இல்லை. அநேகமாக இந்த ஆண்டில் மேல் பவானித் திட்டத்தை எடுத்துப் பாசன வசதி செய்து கொடுப்பார்கள் என்று மக்கள் எண்ணினார்கள். அது வரவில்லை. அவிநாசி தாலூகாவில் என் தொகுதி மிக வறண்ட பிரதேசம். அவிநாசி தாலூகா மக்களாகிய நாங்கள் மிகவும் ஏமாற்ற மடைந்தோம். என்னுடைய தொகுதி மக்களுக்கு மேல் பவானித் திட்டத்தை எடுத்து நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்கள் பகுதியில் சுமார் ரூ. 20 ஆயிரம் செலவு செய்தால்தான் கிணறு வெட்ட முடிகிறது. அப்படி இருந்தாலும்கூட சில சமயங்களில் சரிவர மழை இல்லாவிட்டால் பயிர்கள் வாடி விடுகின்றன. இதையெல்லாம் உத்தேசித்து அரசாங்கம் அந்தப் பகுதியில் 50 ஆயிரம் ஏக்கருக்காவது நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதுவும் தவிர எங்கள் தொகுதியில் சுண்டக்குறை பள்ளம், பெரிய பள்ளம், சோபனபாவிபள்ளம் இருக்கின்றன. அவற்றின் மூலம் சுமார் ஆயிரம் ஏக்கருக்கு வெள்ளியங்காடு, தோளம்பாளையம் கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இந்தத் திட்டத்தை எடுத்து நிறைவேற்றிக் கொடுக்கும்படி அமைச்சர் அவர்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். தோளம்பாளையத்தில் இருந்து பத்து மைல் தூரம் மலை மேல் உள்ள கோபனாரிக்கு எந்த வித ரோடு வசதியும் இல்லை. அதனால் அந்த ரோடை எடுத்து உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல குடிதண்ணீர்த் திட்டத்தை எடுத்துக்கொண்டால் சிறுமுகைபுதூரில் கீழ்பவானித் தேக்கத்தால் பவானி ஆற்று நீர் தேங்கி நின்று குடிக்க அருகதையற்ற நிலையிலிருப்பதால் சிறுமுகைபுதூருக்கு குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



20th March 1964] [திரு. ந. சண்முகசுந்தரம்]

**திரு. எஸ். மணி** : கனம் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பொது மராமத்துத் துறை மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். என் தொகுதியில் பெரும்பாலும் பாசன வசதியே கிடையாது. போன தடவை மாமன்றத்தில் பேசும்போதே தமிழகத்தில் மிகவும் பிற்பட்ட பகுதி அந்தப் பகுதிதான் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அந்தப் பகுதியை வளப்படுத்த இந்தச் சட்டமன்றத்திலேயே நான் பல பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கிறேன். திருச்சி மாவட்ட மன்றத்தின் முன்னும் பல பிரச்சினைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இன்னமும் அந்தப் பகுதி சரியான முறையில் செப்பனிடப் படவில்லை என்ற வருத்தத்தையும், வேதனையையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியில் மருதையாறு திட்டத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக ரயிலைக் கவிழ்த்த பெரிய ஆறுதான் இந்த மருதையாறு. அந்தப் பகுதியில் வந்து கொண்டிருக்கிற அந்த ஆறு இருபுறத்திலும் பயிர்களை நாசமாக்கிவிடுகிறது. ஆகவே உடனடியாக மருதையாறு திட்டத்தை எடுத்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று எங்களுடைய பகுதியில் இருந்து வந்திருக்கிற சட்ட மன்ற உறுப்பினரும், அதைச் சேர்ந்த நானும் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பத்து, இருபது ஆண்டுகளுக்கு முன்பாகவே அந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டது. எங்கள் பகுதியில் காவேரி ஓடுகிறது என்று சிலர் நினைக்கிறார்கள். உண்மையில் காவேரி ஓடினாலும் அதன் தென் பகுதிக்குத்தான் அதனால் பயன் ஏற்படுகிறது. வட பகுதி வறண்டே இருக்கிறது. தயவு செய்து ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வேப்பந்தட்டை, அரசலூர் ஏரி நல்ல முறையில் பயன் படாமல் இருக்கிறது. வேப்பூர் யூனியனைச் சேர்ந்த எழும்பூ ஓடையை 83 ஆயிரம் செலவு செய்து நல்ல முறையில் அமைத்திருக்கிறார்கள். அங்கிருந்து இவையும் நல்ல முறையில் பயன்பட திட்டமமைக்கவேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் பகுதி நீர்வளம் இல்லாத பகுதி. 180 அடி வெட்டினால்தான் அந்தப் பகுதியில் நல்ல தண்ணீர் கிடைக்கும். ஆகவே அங்கே கிணறு வெட்டுவதற்கு ∴புல் கிராண்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வேப்பூர் பஞ்சாயத்து, ஆலத்தூர் பஞ்சாயத்து ஆகிய பிரதேசத்திற்குக் கிணறு வெட்ட ∴புல் கிராண்டு கொடுப்பதோடு அங்குள்ள ஏரிகளையும், கிணறுகளையும் நல்ல முறையில் செப்பனிட வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதி உப்பு மண். மழை பெய்தால் ஜீப் கார்கள்கூடப் போக முடியாது. ஆகவே ஆலத்தூர், அரியலூர் சாலையை சரியான முறையில் செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பதினெட்டு மைல், நான்கு பர்லாங் தூரத்திற்குள் ஒரே ஒரு ஆறாகிய மருதையாறு பல இடங்களில் மருகுகிறது. ஆகவே புள்ளம்பாடி, குன்னம் வழி சாலையை அமைத்துத் தரவேண்டும். தஞ்சாவூர் திருமானூர் சாலையை செப்பனிட 50 லட்சம் மதிப்பு செய்திருக்கிறார்கள். அது மிகவும் பின்தங்கிய பகுதியாதலால் சாலை வசதியைச் செய்து தருவதோடு, அந்த மருதையாறு திட்டத்தையும் நல்ல முறையில் 1964–ல் இல்லாவிட்டாலும், 1965–க்குள் முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. ராமச்சந்திர ராயர்** : கனம் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை வரவேற்று சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மத்தியில் இருக்கும் நாம் பாசனத்திற்கு எவ்வளவு சௌகர்யம் செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவையும்

[திரு. அ. ராமச்சந்திரராயர்] [20th March 1964

செய்து கொடுத்தாகிவிட்டது. அதன் காரணமாக நம்முடைய பொருளாதார நெருக்கடி ஓரளவு குறைந்து முன்னேற்றம் அடைய ஏதுவாக இருக்கிறது.

நான் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சேத்தியாத்தோப்பு அணையிலிருந்து வடவாற்றுக்கு மேற்கே வீரமுடையான் கிராமம் இருக்கிறது. அது மேட்டுப்பாங்கான இடம். அங்கு 360 எக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி இல்லாமல் இரண்டு வருஷங்களாக ஜனங்கள் அவதிப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். அதைப் பற்றி அநேக மகஜர்கள் கொடுத்தும் ஒரு விதப் பயனும் ஏற்படவில்லை. அவைகளை உடனடியாகக் கவனித்து குறைகளைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேத்தியாத்தோப்பிலிருந்து புவனகிரி வரையில் வெள்ளம் ஏற்படும் காலத்தில் வடகரை பிரிந்து மகசூலைக் கெடுத்துக்கொண்டு வருகிறது. இதைத் தடுக்க சேத்தியாத்தோப்பிலிருந்து புவனகிரி வரையில் வெள்ளத் தடுப்பு அணை அவசியம் போடவேண்டும். இதைப் பற்றி மக்கள் வெகு காலமாகவே கேட்டுக் கொண்டிருந்தும் நாளது வரை ஒருவிதமான பலனும் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனது தொகுதியில் பரமனாறு வடிகால் நீர் கடற்கரை ஓரத்தில் போய் வடியாமல் சுமார் 5 அடி ஜலம் தங்கி அநேக கிராமங்களைப் பாழ்படுத்துகிறது. அதனால் பத்தாயிரம் எக்கருக்கு மேல் மகசூல் நஷ்டப்படுகிறது. அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்திருந்தபோது கூர்ந்து கவனித்தார். இதையெல்லாம் சீர்திருத்தி செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெருவழித் துறை மானியத்தைப் பொறுத்து, சிதம்பரத்திலிருந்து புவனகிரி வர வெள்ளாற்றில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பாலத்துக்கு 16 லட்சம் ரூபாய் செலவாகும் என்று முன்பு மதிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது அமெரிக்கா, ஜெர்மனி போன்ற இடங்களில் பாலங்கள் கட்டுவதற்கு அனுசரிக்கப்படும் முறையில் 3,77,000 ரூபாய்க்குள்ளாகவே நல்ல முறையில் கட்டி முடித்துவிட்டார்கள் என்று நான் பெருமைப்படுகிறேன். அதற்காகப் பொதுப் பணித் துறை அமைச்சரையும், என்சினீயரிங் இலாகாவையும் போற்றாமல் இருக்கமுடியாது.

புவனகிரியிலிருந்து குறிஞ்சிப்பாடி போய்க் கொண்டிருக்கும் ரோடானது சீர்திருத்தப்படாமல் இருக்கிறது. பாதை அகலமாக இருந்தும் தார் ரோடு போடப்படவில்லை. வழியில் பரமனாறு ஓடிக்கொண்டிருக்கிறது. அங்கே ஒரு பாலம் அத்தியாவசியமாகத் தேவை. புவனகிரியிலிருந்து கிருஷ்ணபுரம் என்ற ஊருக்குப் பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு பஸ் போய்க்கொண்டிருக்கும்போது எதிரே வண்டி வந்துவிட்டால் இரண்டு பஸ்களும் போக இடம் இல்லாமல் ஒன்று நின்று வழி விட்ட பிறகுதான் இன்னொரு பஸ் போக முடியும். அந்தப் பாதையை அகலப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில் பரங்கிப்பேட்டை என்ற மைனர் துறைமுகம் இருக்கிறது. அந்தத் துறைமுகத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்திருப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன். அதை நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பூர்த்தி செய்து கொடுத்தால் அது நகரவாசிகளுக்கும் மற்ற மக்களுக்கும் வசதியாக இருக்கும்; வர்த்தக வியாபாரிகளுக்கும் அனுகூலமாக இருக்கும்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

புவனகிரி கடைத் தெருவானது குறுகிய பாதையாக இருக்கிறது. அங்கே ஒரு பஸ் போனால் இன்னொரு பஸ் போக முடியாது. கனம் அமைச்சர் திரு. கக்கன் அவர்களே அங்கே வந்திருந்தபோது அதை நேரிலேயே பார்த்தார்கள். அவர்களுடைய காரே போகமுடியாதபடி நின்றுவிட்டது. இந்தத் திட்டங்களை எல்லாம் கவனித்து மந்திரியவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.



20th March 1964]

**திரு. எம். வி. கரிவேங்கடம்** : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, சிறிய பெரிய பாசனத் திட்டங்களுக்காக மூன்றாவது திட்டத்தில் 49·4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது மொத்தத் திட்ட அளவில் 15 சத விகிதம். 75 சத விகித மக்களைக் கொண்ட நாட்டிலே 15 சத விகித அளவுக்குத்தான் பாசனத் திட்டங்களுக்கு வழி செய்யப்பட்டிருக்கிறது என்றால் நிச்சயமாக அது குறைந்த சதமானம்தான். மருத்துவ வசதி செய்கிறோம், பாதை வசதி செய்கிறோம், கல்வி வசதி செய்கிறோம் என்று சொன்னபோதிலும், பாசனத் திட்டங்களுக்காக வருகிற ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதிக முக்கியத்துவம் கொடுத்து 30 சதவிகிதம் அளவுக்காவது இதற்குத் தொகை ஒதுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரை நம்முடைய மாநிலத்தில் 33,000 பாசனத் திட்டங்கள் உள்ளன. கடந்த 14 ஆண்டுகளில் நம்து அரசாங்கம் மேற்கொண்ட சிறு பாசனத் திட்டங்கள் 2,250. சற்றேறக் குறைய 30,750 திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய நிலையிலேயே இன்னும் இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, அரசாங்கம் நிறைவேற்றியது அணுவளவு; நிறைவேற்ற வேண்டியது அத்தியளவு இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சென்னியாறு அணைக்கட்டுத் திட்டம், நாகவதி அணைக்கட்டுத் திட்டம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால், கேள்வி நேரத்தில் அமைச்சர் அவர்கள், சின்னாறு காவேரியின் கிளை நதியாக இருக்கிறபடியால் மைசூர் அரசாங்கம் ஆட்சேபணை செய்தது என்றும், ஆகவே அது திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லையென்றும் சொன்னார்கள். காவேரி வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் மூலமாக சின்னாற்றில் அணை கட்ட முடியுமா என்று யோசிப்பதாகவும் பதில் தந்தார்கள். கீழ் பவானி காவேரியின் கிளை நதியாக இருந்தாலும் கீழ் பவானிக்கு அணை கட்டியிருக்கிறார்கள். அப்போதுகூட மைசூர் அரசாங்கம் ஆட்சேபித்திருக்கக் கூடும். நம்முடைய அரசாங்கம் அவர்களுடைய ஆட்சேபணை செல்லுபடியாகாதபடி திட்டக் கமிஷனிடம் எடுத்துச் சொல்லி, வாதாடி இருக்கக் கூடும். அதே முறையில் இந்த சின்னாறு அணைக்கட்டுத் திட்டத்தையும் மூன்றாவது திட்ட காலத்தில் எடுத்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மைசூர் அரசாங்கம்கூட காவிரியின் கிளை நதிகளான எமவதி, அரங்கி என்ற இரண்டு ஆறுகளில் முறையே 7 கோடி ரூபாய், 10 கோடி ரூபாய் அளவிலே செலவு செய்து இரண்டு அணைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையில் 'சின்னாறு காவிரியின் கிளை நதி' என்ற வாதத்தைச் செல்லுபடி ஆகாமல் செய்து, அந்த அணைக்கட்டுத் திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்து முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாவட்ட சாலைகளை, மாவட்ட மன்றங்கள் எல்லாம் 12-00
எடுபட்ட பின்னால், ஒன்றிப்பு மன்றங்களிடம் ஒப்படைத்தோம். மக்கள் r.con
தொகை அடிப்படையில் நபருக்கு 40 காசு என்று மானியம் அளித்து வருகிறோம். அது போதுமா என்றால் போதவில்லை. பல ஒன்றிப்பு மன்றங்கள் அவர்கள் பராமரிப்பில் உள்ள சாலைகளை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டும் என்ற முறையில் தீர்மானங்கள் போட்டு அனுப்பும் நிலையைப் பார்க்கிறோம். என் தொகுதியில் பெண்ணகரம் நாகமலை செல்லும் பாதை இருக்கிறது. அது ஒன்றிப்பு மன்றத்தின் பராமரிப்பில் இருக்கிறது. அந்தப் பாதை நெடுக சிறிய பெரிய 60 கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்கள் பாதை வசதியற்ற கிராமங்களாக இருக்கின்றன. அவை சீர்கேடான நிலையில் இருக்கிறது. அதை அரசாங்கப் பராமரிப்பில் கொண்டுவர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சின்னாற்றில் வருடத்தில் நான்கு மாதங்கள் வெள்ளம் வந்த வண்ணம் இருக்கிறது. ஆகவே பாலக்கோடு பேவு அள்ளி அருகாமையில் ஒரு மேல் பாலம் கட்டவேண்டிய அவசியம் இருக்கிறது, அதைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அக்கரையில் இருப்பவர்கள் இக்கரைக்கு வரமுடியவில்லை, இக்கரையில் இருப்பவர்கள் அக்கரைக்குச் செல்ல முடியவில்லை.

ஒரு சில மாவட்டங்களில்தான் தூர் எடுக்கும் முறை இருக்கிறது. சேலம் மாவட்டத்தில் அதை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என் தொகுதியில் அதியமான் கோட்டை, அன்னசாகரம், அக்ர ஆர ஏரி, காமன் ஏரி, சிகரண அள்ளி, சிக்கனம்பட்டி, சீரியம்பட்டி, செங்கண்பசவன் தூர், சோகத்தூர், ஜேர்தவால், ஸால் ஏரி, மல்லிக்குட்டை, முத்தூர், தர்மபுரி தொட்டயம், பாப்பாரப்பட்டி பாபிநாயக்கன் பூவரசப்பட்டி இந்த ஏரிகள் எல்லாம் தூர்ந்து போயிருக்கின்றன. அவற்றில் தூர் எடுத்தால் கொள் அளவு அதிகமாகும். அதனால் பல மாதங்களுக்கு நீர் கிடைக்க வழிவகை ஏற்படும். அதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. செ. சீனிவாசன்**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். சேது சமுத்திர திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் நடைபெற இருக்கின்றன. அதற்காக நில ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசாங்கம் ஒப்புதல் கொடுத்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டிருப்பதை நினைத்து என் பகுதி மக்கள் சார்பாக அமைச்சரவைக்கு என் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை சீக்கிரமாக செய்து முடிக்க என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவையை நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்டம் நல்ல பலன் தரவும், தென் பகுதி மாவட்டங்கள் வளம் பெறவும் இந்தத் திட்டத்தை அவசர அவசியமாக நிறைவேற்ற வேண்டுமென்ற என் கருத்தை இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அடுத்தபடியாக, என் தொகுதியில் மட் ரோடாவது போட்டுக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நைனார் கோவில் தேவிபட்டணம் ரோடு செக்யூரிட்டி மெஷரில் போடப்படுவதாக இருந்தது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே அதற்கு முதல் இடம் அளித்து இந்த வருடமாவது அல்லது அடுத்த வருடத்திலாவது அதைப் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக ஆனந்தூர், காவனூர் இந்த ரோடு மூன்று தாலுகாக்களை இணைத்துப் போகிறது. இதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டிஸ்ட்ரிக்ட் போர்ட் காலத்தில் 1952-ல் அமைக்கப்பட்ட சில ரஸ்தாக்கள் இதுவரை எந்த வித அபிவிருத்தியும் செய்யப்படாமல் இருக்கின்றன. எந்த விதமான அபிவிருத்தியும் செய்யப்படாத காரணத்தினால், 12 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட அந்த ரோடுகள் இன்று போய்க்கொண்டிருக்கும் நிலையில் இருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்த மட்டில், ராமநாதபுரம் மாவட்டத்திற்கும், மதுரைக்கும் மிக முக்கியமானது வைகை கால்வாய் சீரமைப்புத் திட்டம். முன்பிருந்த முறைகளை எல்லாம் மாற்றி ராமநாதபுரம் ஜில்லாவைப் பொறுத்தவரை ஆறு பிரிவுகளாகப் பிரித்து இருப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்த ஆறு பிரிவிற்கும் தண்ணீர் கொடுப்பதற்குள் மதுரை பிராந்தியத்திலேயே திருப்பி விட்டுவிடுகிறார்கள். வைகை அணைக்கட்டிலிருந்து 6-வது ரீச்சிற்கு வர ஐந்து நாட்கள் ஆகின்றன. அதற்குள் பல இடங்களில் தண்ணீர் உறிஞ்சப்பட்டுவிடுகிறது. 100 க்யூசெக்ஸ் விடுகிறார்கள் என்றால் ஆற்றில் ஏதோ கொஞ்சம்தான் வருகிறது. அதன் காரணமாகக் கால்வாயில் தண்ணீர் எடுத்துக்கொள்ளும் வசதியில்லாமல் அணை கட்டியும் பிரயோசனம் இல்லாமல் இருக்கிறது. அதைப் போக்குவதற்கு இந்த இலாகா ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என் பகுதியில் பல கண்மாய்கள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. முக்கியமாக சுப்பன் கால்வாய்த் திட்டம் பற்றிக் கேட்கப்பட்டபோது அது மைனர் இரிகேஷனில் வருகிறது, அது பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அதனால் நான்கு தாலுகாக்கள் பயன் அடையும். ஆகவே உடனடியாக அந்த சுப்பன் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.



**திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி**: மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, இன்றையதினம் நடைபெறும் இந்த மானியத்தின்மீது எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரை கல்விக்கு எவ்வளவு கொடுக்கிறோமோ, அந்த அளவிற்கு நீர்ப்பாசனத் துறைக்கும் அதிகம் செலவு செய்து கவனித்தால்தான் நம் நாட்டிலுள்ள உணவுப் பிரச்னையைத் தீர்க்கமுடியும். ஆகவே இத்துறைக்கு இன்னும் அதிகப்படி தொகை ஒதுக்கினால்கூட நல்லது என்று என் கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீர்ப்பாசனம் பற்றி என் தொகுதியில் உள்ள ஒரு சில குறைகளை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். என் தொகுதியில் திருமுட்டம் வட்டாரத்தைப் பொறுத்தவரை அங்கு 20 பி.டபிள்யூ.டி. ஏரிகள் இருக்கின்றன. அவற்றில் தூர் வாரி ஏடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கூறியும், இங்கு இரண்டு ஆண்டு காலம் பேசியும் அந்தக் குறை தீர்ந்தபாடில்லை. அந்த ஏரிகள் எந்தப் பகுதிக்கு சொந்தம் என்பதை அறிந்துகொள்ளவே ஒரு ஆண்டாகிறது. ஆகவே எந்தெந்த ஏரிகளை எந்தெந்தப் பகுதிகள் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று வரையறுக்கப்பட வேண்டும். அந்த 20 ஏரிகளைப் பொறுத்தவரை 12,000 ஏக்கர்கள் சாகுபடிக்குக் கொண்டுவர ஏது இருக்கிறது. ஆனால் அங்கு இரண்டு மாதங்கள்கூட தண்ணீர் கட்ட முடியாமல் தூர்ந்திருப்பதால் தூர் வாரி தண்ணீர் தேங்கும் அளவிற்குச் செய்ய வேண்டும். அல்லது கரையை உயர்த்தியோ அல்லது அணை கட்டிக் கொடுத்தாலோ நலமாக இருக்கும். அடுத்தபடியாக, வீராணம் ஏரி 11 மைல் நீளமும், 3 மைல் அகலமும் உள்ள ஏரியாக இருந்தது. இப்போது அதில் மூன்றில் ஒரு பங்கு இடத்தில் காடுகள் ஏற்பட்டு தூர்ந்து கிடக்கிறது. ஆகவே அந்த மேட்டை எப்படி அகற்றுவது என்பது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்கள் என நம்புகிறேன். அங்குள்ள கிளை வாய்க்கால்கள் கிட்டத்தட்ட 60 கிராமங்களுக்குப் பாசன வசதி அளிக்கக் கூடிய நிலையில் இருந்தாலும் இரண்டு பாகமும் தூர்ந்து போய் கரைகள் குறுகியிருப்பதால் அதை அகலப்படுத்த தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வடிகால் வசதி குறைவுள்ள பகுதி எங்கள் பகுதி. வீரானுபுரம், கண்டமங்கலம் போன்ற கிராமங்களில் ஆண்டுதோறும் வெள்ளம் ஏற்பட்டு, மழைத் தண்ணீர் தேங்கிக் கிடப்பதைப் பார்க்கலாம். ஆகவே, அங்கு வடிகால் வசதி செய்து வீராணம் ஏரியில் கொண்டுவந்து விடலாம். அதற்குச் செலவு 1½ லட்ச ரூபாய் ஆகும் என்று அதிகாரிகளிடம் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறேன். அந்த வகையில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மராமத்தைப் பொறுத்தவரையில், மீஞ்சுருட்டிக்குப் போகும் பாதையில் இருக்கின்ற ரோடுகள் சீர்படாமல் இருந்துகொண்டு இருக்கின்றன. இப்போது இதில் பஸ்ஸும் போய்க்கொண்டிருக்கிறது. இந்த ரோட்டில் இரண்டு ஓடைகள் இருக்கின்றன. இதில் ராமதேவநல்லூர் பக்கத்தில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டுவிடுவதால் ரோடு பாழாகிவிடுகிறது. அதோடு பஸ் போக்குவரத்துக்கும் தடை ஏற்படுகிறது. ஆகவே இந்த இரண்டு ஓடைகளுக்கும் கல்வெர்ட் கட்டிவிட்டால் மிகவும் வசதியாக இருக்கும். அதோடு, ஸ்டேட் எக்ஸ்பிரஸ் வண்டி போவதற்கும் வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காட்டுமன்னார்குடிக்குப் பக்கத்தில், 12½ மைலில் வடவாற்றன் கரை அமைந்திருக்கிறது. இங்கே போக்குவரத்துக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்த ரோட்டில் கப்பி போட்டுக் கொடுத்தாலாவது மிகவும் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடி மராமத்து வேலைகளைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக இந்த குடிமராமத்து வேலைகள் எல்லாம் மிகவும் தோல்வி அடைந்துவருகிறது என்பதை யாவரும் அறிவார்கள். ஆகவே பஞ்சாயத்துக்களுக்கு அதிக அளவில் மானியங்கள் கொடுக்க வேண்டும். அதோடு இப்போது வேலை செய்யப்படாத திட்டங்களை

எல்லாம் பி.டபிள்யூ. டி. எடுத்து வேலைகளை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பஞ்சாயத்து யூனியன்களுக்குப் போதிய அளவு நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, இன்று பொதுப் பணித் துறைக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து, பொதுவாக இந்த பொதுப் பணித்துறை இயங்கிவருகின்ற முறைக்காக, நான் மனதார சிந்தித்து வாயாரவாழ்த்தி வரவேற்கிறேன். காரணம், வள்ளுவர் கூறியது போன்று

“ எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு ”

என்ற இழிதகைமையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக வரவேற்றுக் கொள்கிறேன். பொதுவாக தமிழகம் என்று கூறப்படுகின்ற நிலப்பரப்பு என்று உண்டாயிற்றோ, அந்த நிலப்பரப்பில், காவிரி நதியும், அதன் கிளை நதிகளாகிய பவானி, அமராவதி, நொய்யல் போன்ற நதிகள் என்று உண்டாயினவோ அன்றிலிருந்து முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகின்ற காலம் வரைக்கும் காவேரி நதி சோழ நாட்டைச் செழிப்பாக்கி எஞ்சிய தண்ணீர் கடலோடு கலந்து கொண்டிருந்தது. அதனால் தான்

“ தண்ணீரும் காவிரியே
தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழமண்டலமே ”

என்று பாடியதைக்கூட நாம் அறிவோம். சாதாரணமாக காவேரி ஆறு என்றால் இந்த ஆறு ஈரோடு பகுதியின் வழியாக ஓடினாலும்கூட, அந்த ஆற்று நீர் எங்களுக்கு ஆடி 18 போன்ற பண்டிகை நாட்களில் குளிப்பதற்கும், சாதாரணமாக நடுத்தரக் குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால், இறந்தவருடைய அஸ்தியை காவேரியாற்றில் கரைப்பதற்கும் பயன்பட்டது. இவ்விதம் கரைந்து, சோழநாட்டைக் காஷ்மியம் சக்தியுள்ளதாக ஆக்கக்கூடிய நிலைமையில்தான் எங்களுக்குப் பயன்பட்டு வந்தது. இந்த வகையில் இருந்துவந்த எங்கள் பகுதியின் மோசமான சூழ்நிலையை மாற்றி, முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நம்முடைய தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஏற்பட்ட அரசாங்கம் சத்தியமங்கலத்தின் குறுக்கே பவானி ஆற்றின் குறுக்கே அணையைக் கட்டி கீழ் பவானி பாசனத் திட்டம் என்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததை உலகம் அறியும், இந்த நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் அறிவார்கள். இன்றைக்கும் அந்த மக்கள் அதற்காக நன்றியுணர்ச்சியோடு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சாதாரணமாக இந்த ஆண்டில் பருவ மழை தவறியதன் காரணமாக கீழ்பவானி அணைக்கட்டில் தண்ணீர் குறைந்திருந்தது. கீழ்பவானி அணை நீர்ப்பாசனமே நடைபெறுமா, நடைபெறாதா என்று நினைக்கும்படியான நேரத்தில், ஏற்கனவே தஞ்சை ஜில்லாவில் செய்துள்ள பயிர்கள் வரண்டு போகாமல் இருக்கும்படியாகப் பாதுகாக்க வேண்டும் என்று நமது அரசாங்கம் நல்லெண்ணத்தோடு கீழ்பவானியிலிருந்து தண்ணீர் விட்டார்கள். இது பெரிய தவறு என்று கனம் நல்லசிவம் அவர்கள் சொன்னார்கள். அவர் அவ்வாறு சொன்னபோது எனக்குப் பெரிய வருத்தம் ஏற்பட்டது. அரசாங்கத்தின்மீது எந்தவிதமான தவறும் கிடையாது, தஞ்சை மாவட்டம் என்பது தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்குகின்றது. அப்படிப்பட்ட இடத்தில் ஏற்கனவே பயிர் செய்யப்பட்ட நெற்பயிர் தீயுமானால் அது தமிழகத்திற்கே பெரியதொரு நஷ்டமாகும். இதை என்ன செய்தும் ஈடு செய்ய முடியாது. அந்த நிலையில் கீழ் பவானியிலிருந்த தண்ணீரை சோழ நாட்டுக்கு இந்த சர்க்கார் கொடுத்தது. ஆகவே, இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில், கீழ்பவானியிலிருந்து தண்ணீர் கொடுத்ததன் மூலமாக அங்குள்ள மக்கள் வருத்தமடைகிறார்கள் என்று சொல்வது சரியல்ல என்பதை தங்கள் மூலமாக கனம் நல்லசிவம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேலும் என்னுடைய பகுதியில், குரங்கன்பள்ளம், பெரும்பள்ளம் என்ற இரு திட்டங்கள் பொதுப்பணித் துறையினர் மூலம் உருவாக்கப்பட்டது. இதன் காரணமாக மகிழ்ச்சி அடைகின்ற மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உருவாகிய இந்தத் திட்டங்கள் இன்று நம்முடைய விவசாய அமைச்சர் அவர்களுடைய கையில் இருக்கின்றன. இதை மிகவும் உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் நடத்தக்கூடிய முறையில் நடவடிக்கை எடுத்தால் மக்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாய் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்துடன், சித்தோடு பக்கத்தில் முசக்காடு என்ற இடத்தில் மேட்டு நிலமாக சுமார் 500, 600 ஏக்கர்கள் இருக்கின்றன. இந்த இடத்தில் தண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. குடி தண்ணீர் கிடைப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும், அதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது)

***திரு. என். துரைபாண்டி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய நாங்குநேரி தாலூகா மிகவும் வரண்ட பிரதேசமாக காட்சி அளித்துக்கொண்டிருந்தது. பின்னால் நமது அரசாங்கத்தின் திறமையான நடவடிக்கைகளினால் மணிமுத்தாறு பாசன வசதி ஏற்பட்டிருக்கிறது. இதோடு சமீபத்தில் 18 குளங்களையும் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் இதற்கான கால் வெட்டவில்லை. ஆகவே இந்த கால்களை எல்லாம் உடனடியாக வெட்டி அங்குள்ள மக்களுக்கு பாசன வசதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், திருக்குறுங்குடிக்கு மேற்கு பக்கத்தில் நம்பியாறு உற்பத்தி இருக்கிறது. இது ஆறாவது மைலிலிருக்கிறது. இதில் ஒன்பது தடுப்பு அணைகள் இருக்கின்றன. மீதி தண்ணீர் கடலில் போய் சேருகிறது. இதில் ஒன்பதாவது தடுப்பு அணைக்கட்டு புளிமாங்குளத்தில் இருக்கிறது. இதில் அதிகாரிகள் 3 வருஷம் நீரளவு எடுத்தார்கள். இதில் தண்ணீர் மேலும் அதிகமாக இருக்கிறது என்று தெரிகிறது. இதனுடைய உபநதியாய் இருக்கின்ற கொடமாடி அணையில் ஒரு அணை கட்டினால் சுமார் 9,000 ஏக்கர்கள் இப்போது இரண்டு போகம் சாகுபடி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலும் 3,000 ஏக்கர் சாகுபடி செய்ய முடியும் என்று கணக்கிடப்படுகிறது.

அடுத்தபடியாக, வடமலையான் காலை உடனடியாக செப்பனிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இடையன்குளத்தில், பச்சை ஆற்றிலிருந்து கால்வாய் வெட்டுதவற்காக சுமார் 70 ஆயிரம் ரூபாயில் ஒரு எஸ்டிமேட் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டே வேலை துவக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, கரிமாண்டி அம்மன் அணையையும் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு கால்களையும் வெட்டினாலும் கூட, விஜயநாராயணம் என்ற குளத்தை எடுத்துக் கொண்டால் அது ஒரு பெரிய குளம். அக் குளத்திலிருந்து அதிகக் குளங்களுக்கு மணிமுத்தாறு தண்ணீர் வந்து பாய வேண்டியிருக்கிறது. அவைகளின் கரைகள் ஒழுங்காக இல்லை. குளத்தை அகலப்படுத்தி, கரையை பலமாகக் கட்டினால்தான் முழுதும் நிரப்ப முடியும். அப்போதுதான் கீழே உள்ள நிலங்களுக்கு மணிமுத்தாறு தண்ணீர் கிடைக்கும் என்று தெரிகிறது நாங்குநேரி தாலுகாவில் சில பகுதிகள் மணல் பாங்காக இருக்கிறது. அங்கே 4,5 கிராமங்கள் கடற்கரை பக்கமாக இருந்தாலும் மத்தியில் செவ்வல் நிலம் இருக்கிறது. அங்கே போர்வெல் போடவேண்டுமென்று சர்க்கார் திட்டம் இருந்தது. யூனியன் சார்பிலும் தீர்மானம் போட்டார்கள். இப்போது அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக கேள்விப்படுகிறோம். அந்தத் திட்டம் கைவிடப்பட்டால், எந்த அணைக்கட்டு கட்டினாலும் திசைவிளக்குப் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு எந்தவித நன்மையும் எப்போதும் கிடைக்காது. அந்த கிராமங்களில் போரிங் வெல் போட

சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதையொட்டி அரசூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. ஆண்டவன் அருளால் தானாக தண்ணீர் ஊறி பயிர்கள் விளைந்து வருகின்றன. அதிலிருந்து எவ்வளவு தண்ணீர் எடுக்க முடியும் என்று ஆராய்ச்சி செய்து தோண்டிப் பார்த்து அதன் மூலமாக அந்த வட்டாரத்தை செழிப்பு அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல ரோடு வசதியை எடுத்துக்கொண்டால் எங்கள் தாலூகாவில் பெரும்பகுதியில் நிறைய ரோடுகள் முன்னரே போட்டு விட்டார்கள். இப்போது பராமரிப்புக்கு பஞ்சாயத்து யூனியனிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த ரோடுகளில் பஸ்கள் போகின்றன. பஸ்கள் போகிற எல்லா ரோடுகளையும் ஹைவேஸில் சேர்த்து, பஞ்சாயத்திலிருந்து எடுத்து, எல்லா ரோடுகளுக்கும் தார் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஆ. துரையரசன்:** மன்றத் துணை தலைவர் அவர்களே, இன்றைய தினம் நீர்ப்பாசன இலாகா, பெருவழித் துறை மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கட்சிக்காரர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட வரையில் சில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக நானும், புதுக்கோட்டை ஆலங்குடி சட்ட மன்ற உறுப்பினரும் ஒவ்வொரு ஆண்டு நிதி நிலை அறிக்கையின் போதும் எங்கள் வட்டாரத்திற்கு காவிரி நீர் வருவதற்கு ஏதாவது நம் அமைச்சர் அவர்கள் வழிவகை செய்கிறார்களா என்று ஆவலோடு புரட்டிப் பார்க்கும் நேரத்திலே ஆண்டுக்காண்டு நாங்கள் ஏமாற்றம் அடையும் சூழ்நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறோம். ஏதோ பேசுகிற நேரத்திலே நாடகங்களிலே கோரஸ் பாடுவதைப் போல நாங்கள் இரண்டு மூன்று சட்ட மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லவும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நாடகம் முடிந்து மங்களம் பாடுவது போல, அது இப்போது செய்வதற்கில்லை என்று காவிரிப் பிரச்னைக்கு இடம் இல்லை என்று சொல்லுவது போல சொல்லுகிறார்கள். பல்வேறு இடங்களில் பல திட்டங்கள் போட்டு பல லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்திலே பெரும் பகுதியும், திருச்சி மாவட்டத்திலே பெரும் பகுதியும், ராமநாதபுரம் மாவட்டத்திலே எல்லாப் பகுதிகளும் வசதி பெற நல்ல முறையில் காவிரி நீர் கொண்டுவர அடுத்த ஆண்டிலாவது முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நம் அமைச்சர் அவர்களையும் இலாகா சம்பந்தப்பட்ட வருவாய் துறை செயலாளர், தலைமைப் பொறியர் அவர்களையும் தங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இலாகாவில் திறம்பட வேலை செய்கிற அத்தனை பேர்களையும் எங்கள் கட்சியின் சார்பாகப் பாராட்டக் கடமை பட்டிருக்கிறோம் என்று சொன்னாலும் அந்த இலாகாவில் வேலை செய்கின்ற மேஸ்திரிகள் தலைமை கூலிகள், நிரந்தரம் ஆக்கப்படாமல் 10 ஆண்டுகளாகப் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். சில நாட்களுக்கு முன் அவர்கள் நம் அமைச்சரைக் கண்டதாகக் கூட நான் பத்திரிகையில் பார்த்தேன். அவர்களை நிரந்தரமாக்க அரசாங்கம் உத்திரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைபட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் எற்கெனவே கட்டப்பட்டு வருகிற இரண்டு அணைகளைத் தவிர இப்போது புதிதாக எஸ்.எம் ஜ.பி. டிவிஷன்களிலும் உணவு உற்பத்தி இலாகாவிலும் மணலூர்-மணமேல்குடி கொளுவனாறு பக்கத்தில் வர இருக்கிறது. அதற்காக நன்றி செலுத்த கடமைபட்டிருக்கிறேன். மணமேல்குடி-மணலூர் அணைக்கட்டுப் பகுதிக்குப் போக பாதை வசதி இல்லை. கடந்த மாதம் 22-ம் தேதி அந்தப் பகுதிக்கு வந்த சட்டமன்ற உறுதி மொழிக்குழு கூட பாதை வசதி செய்ய அரசாங்கம் இட்டத்தட்ட 80,000 ரூபாய் ஸ்பெஷல் கிராண்டைத் தரவேண்டுமென்று





சிபார்சு செய்திருக்கிறது. அதைச் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் அறந்தாங்கி வட பகுதியிலே விவசாயம் சம்பந்தமாக ஒவ்வொரு மான்யக் கோரிக்கையின் போதும் எடுத்துச் சொல்லி வருகிறேன். மறமடக்கி கல்லுக்குளம் அருகில் ஒரு அணை கட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதைக் கொண்டு 6,000 ஏக்கர் பாசன வசதி செய்து கொள்ளும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. அதை மீண்டும் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்பகுதியிலே கவயம் கிராமம் அருகில் பாம்பாற்றுக்குக் குறுக்கே அணை போடவேண்டுமென்று அந்த வட்டாரத்து விவசாயிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். தஞ்சை, திருச்சி, ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர்கள் ஒன்றுகூடி. அது சம்பந்தமாகப் பரிசீலித்து முடிவு எடுக்கவேண்டுமென்று தஞ்சை மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் நான் கொடுத்து கூட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் பரிசீலிக்கவேண்டும்.

பெருவழித் துறையைப் பொறுத்தவரையில் கடலோரச் சாலையைப் பற்றி மூன்று நான்காண்டுகளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அந்த வட்டாரத்து மக்கள் மழை காலத்தில் மிகவும் கஷ்டப்படக் கூடிய நிலையில் போக்குவரத்து துண்டிக்கப்படும் நிலை இருக்கிறது. அதைத் தயவு செய்து நம் அமைச்சர் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மணமேல்குடிக்குப் பக்கத்தில் வெள்ளாற்றில் பாலம் இல்லாததால் மழை காலத்தில் பஸ் போக்குவரத்து துண்டிக்கபடாமல் இருக்க அந்தப் பாலத்தையும் அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆவுடையார்கோவில் பக்கத்தில் விளானூர் கிராமத்தில் நீர் ஊற்றுக்கள் இருப்பதாக நிபுணர்கள் பரிசோதித்திருக்கிறார்கள். அவைகளைப் பற்றியும் பரிசீலிக்கவேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக் கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன்.

ஆவுடையார்கோவிலுக்குத் தெற்கே வி.எம்.பி. தண்ணீர் விட வேண்டுமென்று நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலும் நான் கொடுத்த தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அதையும் பரிசீலித்து அடுத்த ஆண்டிலாவது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பி. டபிள்யூ. இலாகாவில் பல ஏரிகள் மராமத்து செய்யப்படவில்லை. இடையாற்றுமங்கலம் ஏரி 50 ஆண்டு காலமாக மராமத்து செய்யப்படவில்லை. மும்பாலை ஏரிக்கு வெள்ளாற்று அரிப்பு ஏற்படுகிற காரணத்தினால் ஒரு தடுப்புப் போட வேண்டுமென்று சொல்லி 96,000 ரூபாய்க்கு திட்டமிடப் பட்டது. அதையும் செய்யவேண்டுமென கேட்டுக்கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன்.

ஆவுடையார் கோவில் தென்புறத்தில் கொளுவனாற்றில் பாலமும் கோட்டைப்பட்டினம் ரோடும் வேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். பெருவழித் துறையினர் இதை ஏற்றுக்கொண்டு நிதி ஒதுக்கி இந்த ஆண்டு அவசியம் இதைப் போட்டுத்தர திட்டத்தை உருவாக்கவேண்டுமென்று கேட்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. வீ. ராமனாதன் :** மதிப்பிற்குரிய மாமன்ற உதவித் தலைவர் 12-30 p.m.
அவர்களே, கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக, முதலில் ரோடுகளைப் பற்றி கூற விரும்புகிறேன். கரூர்—திருச்சி ரோடு மிகவும் குறுகலாக இருக்கிறது. அந்த ரோடை அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறுகலாக இருக்கிற காரணத்தினால், அந்த ரோடில் நிறைய விபத்துக்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, கரூர்-திருச்சி ரோடை அகலப்படுத்துமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கரூர்—திண்டுக்கல் வயா வெள்ளியணைப் பாதையில் பல ஆறுகள் இருக்கின்றன. அந்த ஆறுகளுக்குக் குறுக்கே பாலங்கள் கட்டாமல் இருப்பதினால் ரோடு போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, கரூர்—வெள்ளியணை—திண்டுக்கல் ரோடில் இடையே இருக்கிற ஆறுகளில் எல்லாம் நல்ல பாலங்கள் அமைத்துக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது நீர்ப்பாசனத் துறைக்கு வருகிறேன். என்னுடைய குளித்தலைத் தொகுதில் வெள்ளியணை பிர்க்காவில் நீண்ட நெடுங்காலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கும் திட்டம் குடகனாறு திட்டம். அது சம்பந்தமாக எல்லா பரிசீலனையும் முடிவடைந்துவிட்டது. அரசாங்கம் இனி அதை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான் பாக்கி. ஆகவே, விரைவிலே அந்தத் திட்டத்தை எடுத்து அமுல் படுத்தும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இந்தத் திட்டம் திருச்சி மாவட்டத்தில் வெள்ளியணை பிர்க்காவுக்கும், மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் தொகுதியில் பாளையம் பிர்க்காவுக்கும் மிகவும் பயன்படக்கூடிய திட்டம். மதுரை ஜில்லாவில் பாளையம் பிர்க்காவும், திருச்சி ஜில்லாவில் வெள்ளியணை பிர்க்காவும் மிகவும் பின் தங்கிய வறண்ட பிரதேசம். குறிப்பாக ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் வெள்ளியணைப் பகுதியில் உள்ள மக்கள் பஞ்சத்தின் காரணமாக அங்கே இருக்கிற நிலங்களை விற்றுவிட்டு, மைசூர் ஸ்டேட் ஹிரயூர் பகுதிக்குச் சென்று குடியேறிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலைமை மாறுவதற்கு விரைவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதின்மூலம் அந்த பகுதியிலுள்ள மக்களுடைய கண்ணீரைத் துடைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடகனாறு திட்டத்தின்மூலம் தண்ணீர் கொடுத்து, எங்கள் பகுதி மக்களுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே சுதந்திரத்துக்குப் பின்னால், கிராம மக்கள் சுதந்திரம் வந்திருக்கிறது என்று அவர்கள் எண்ணியதும், ஒரு இலாகா முக்கியமான இலாகா உண்டு என்றால் அது மராமத்து இலாகாதான். கிராமம் கிராமமாக ரோடுகள் போட்டு, குறிப்பாக மாகாணத்தில் எவ்வளவு "பொடென்ஷியாலிடி" இருக்கிறதோ, அத்தனையும் உபயோகப்படுத்தி இந்த மாகாணத்தில் ஒரு துளி நீர் கூட வீணாக்கமாட்டோம் என்பதாக செயல்பட்டுவருகிற இலாகாவைப் பாராட்டமல் இருக்க முடியாது. அதே நேரத்தில் என்னுடைய ஜில்லாவில் கிரியாறு திட்டம் என்ற ஒரு திட்டம் 1946-ம் வருஷம் பரிசீலனை செய்யப்பட்டது. அதற்குப் பின்னாலும் பரிசீலனை செய்யப்பட்டு ரூ. 2 கோடி அளவில் திட்டமிடப்பட்டது. அதற்குப் பின்னால் பம்பையாறு திட்டம் வருகிறது என்று முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது. அந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் கனம் அமைச்சர் அவர்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் நன்றாகத் தெரியும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட திட்டம் பின்னால் எங்கேயோ போய்விட்டது. அதற்கு எத்தனையோ காரணங்கள். பரம்பிக் குளத் திட்டத்தின்மூலம் கிடைக்கக்கூடிய தண்ணீர் நம்முடைய தண்ணீர், அதில் எந்த மற்றொரு அரசாங்கத்திற்கும் எந்தவிதமான உரிமையும் கிடையாது. பரம்பிக்குளத் திட்டம் "மாட்டர் ஆப் ரைட்"—ஆக நமக்கே பயன்படக்கூடிய திட்டமாக, வரக்கூடிய திட்டமாக அந்த அளவுக்கு இருந்தது. திரு பட்டம்தாணுப்பிள்ளை அவர்கள் முதல் மந்திரியாக இருந்த காலத்தில், நமது அரசாங்கத்திலிருந்து போனவர்கள் ஏதோ
30 அதில் தவறுசெய்து விட்டார்கள் என்று அன்றே குற்றம் சாட்டினேன்.
1. அன்றைக்கு தவறு செய்தவர்கள் இந்தச் சபையில் இருந்தபொழுதே தவறு செய்துவிட்டவர்கள் என்று சொன்னேன். அது நமக்கு நியாயமாக





கிடைக்கக்கூடிய தண்ணீர். அது இன்னொருவருக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. அதையும், இதையும் இணைத்து டெல்லியில் பேச்சு நடந்த இடத்தில் பேச வேண்டிய அவசியம் இல்லை. திரு. கிருஷ்ணசுவாமி நாயுடு அவர்கள் சொன்னதுபோல ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம் முதலிய இடங்களுக்கும், முதுகளத்தூர், சாத்தூர் முதலிய இடங்களுக்கும் அந்தத் திட்டம் தண்ணீரைக் கொடுக்கக்கூடியது. எனது நண்பர் அமைச்சர் ராமையாயா அவர்கள் கேரள அரசாங்கத்துடன் பேசிவருகிறார்கள். இதற்கு ஒரு கமிஷன் போடவேண்டுமென்று வற்புறுத்தவேண்டும். பம்பையாறு திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, பின்னால் எப்படியோ கைவிடப்பட்டுவிட்டது. பம்பையாறு, கிரியாறு மத்தியிலே ஒரு துவாரம் போட்டுவிட்டால் அந்தத் தண்ணீரைக் கொண்டு வர முடியும் என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி இதற்கு ஒரு கமிஷன் நியமிக்க வேண்டும். கிருஷ்ணா—கோதாவரி தண்ணீர் சம்பந்தமாக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. கிருஷ்ணா நதித் தண்ணீர் நமக்குக் கிடைக்க வேண்டுமென்று இந்தக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது. என்ன நடந்திருக்கிறது என்று முற்றிலும் ரிபோர்ட்டு செய்யவில்லை. அதுவும் நமக்கு வரவேண்டும். ஒரு கமிட்டி போட்டு, அல்லது ஒரு கமிஷன் போட்டு அந்தத் தண்ணீர் நமக்கு வரவேண்டியது அவசியம் தான் என்று வற்புறுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அமைச்சர் அவர்கள் அதில் ஆவன செய்கிறார் என்று தெரியும். ஆனால், அதிலே நேரடியாக என்ன செய்கிறார்கள் என்று சொல்ல முடியாத நிலை இருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே, அந்த விஷயத்தில், எந்த அளவுக்கு அதை நெருக்கி, எவ்வளவு துரிதமாக பம்பையாறு திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமோ அம்மாதிரி அதைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேது சமுத்திர திட்டத்தைப்பற்றி சொல்லுகிறார்கள். யுத்த கால நடவடிக்கை போன்று சேது சமுத்திர திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். இலங்கையிலே உள்ள இந்திய ஹைகமிஷனர் சேது சமுத்திரத் திட்டத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது என்பதை எழுதிக்கொண்டு இருக்கிறார். உலகம் இன்று குமுறிக்கொண்டு இருக்கிற நிலைமை நன்கு தெரிகிறது. பாகிஸ்தான், இலங்கையில் எவ்விதமான நிலைமை இருந்துகொண்டிருக்கிறது ? ஆகவே, சேது சமுத்திரத் திட்டத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து சேது சமுத்திர திட்டத்தை உடனடியாக எடுத்து நிறைவேற்றவேண்டும்.

கோஸ்டல் ரோடுபற்றி ஒரு நண்பர் சொன்னார். அது "டிபன்ஸ் பர்ஸஸ்"-க்கு ரொம்பவும் முக்கியமானது. கிராம ஜனங்களுக்கு அது அவசியம் தேவை. மத்திய அரசாங்கத்தில் அங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு நான் பேசும்பொழுது, "நாங்கள் நிச்சயம் செய்கிறோம்" என்று அவர்கள் சொன்னார்கள். நண்பர் ராமையா அவர்கள் இதில் ஓரளவுக்குக் கவனம் செலுத்தினால், கோஸ்டல் ரோடை வெகு துரிதமாகக் கொண்டுவர முடியும் என்று நினைக்கிறேன்.

"இர்ரிகேஷன் டிபார்ட்மெண்ட்" நினைத்தால் அவர்களுக்கு ஒன்றும் "இம்பாஸிபிள்" கிடையாது. **Every thing is possible for them** அவர்கள் மனது வைக்க வேண்டும். "கன்ஸர்வேடிவ" ஆக இருந்தார்கள். அந்த "கன்ஸர்வேடிஸம்" குறைந்து கொண்டே இருக்கிறது. தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் மத்திய அரசாங்கம் போடுகிற பாதைகளெல்லாம் துரிதமாக போடப்படுகின்றன. நமது வேலைகள் கொஞ்சம் மெதுவாக நடக்கின்றன என்று சொல்லுகிறார்கள். ஹைவேஸ் இலாகா அதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, "ஸில்டு கிளியரன்ஸ்" பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மணிமுத்தாறு அணைக்கட்டுக்கு நானும், சம்பந்தப்பட்ட மந்திரி அவர்களும், மராமத்து இலாகா பிரதம எஞ்ஜினியரும் சென்றிருந்தோம். 101 குளங்களில் தண்ணீர் இல்லை. அந்தத் தண்ணீரை உடனடியாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டோம். கொஞ்சம்கூட

அதற்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னார்கள். சொல்லி ஒரு வருஷம் ஆகிறது. தண்டத்தீர்வை கூட ஒழித்து விட்டார்கள். பாராட்டுகிறேன். அதே நேரத்தில் 101 குளங்களுக்கு தண்ணீர் கொடுக்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. கொடுத்த வாக்குறுதியை நண்பர் ராமையா அவர்கள் நிச்சயம் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இர்ரிகேஷன் விஷயங்களெல்லாம் அந்த ஸ்பாட்டிலேயே முடிவுசெய்ய வேண்டியவிஷயம். கலெக்டர் இருக்கிறார், எக்ஸிகியூட்டிவ் என்ஜினியர் இருக்கிறார். வேண்டுமானால் இரண்டு "நான்-அபிஷியல்களை" போட்டுக்கொள்ளலாம். அம்மாதிரி ஒரு கமிட்டி போடுங்கள். தண்ணீரை திறந்து விட வேண்டும் என்றால், கோட்டையிலிருந்து அனுமதி பெற வேண்டும் என்று வைத்திருக்கிற அவல நிலை மிக வருந்தக்கூடிய நிலை. அங்கு பொறுப்புள்ள கலெக்டர் இருக்கிறார், பொறுப்பு உள்ள எக்ஸிக்யூடிவ் என்ஜினியர் இருக்கிறார். இன்னும் இரண்டு பேர்களைக்கூட சேர்த்து இர்ரிகேஷன் கமிட்டி என்று போடுங்கள். ஆங்காங்குள்ள நிலையைப் பார்த்து அந்தக் கமிட்டி முடிவுசெய்யட்டும். இதற்காக கோட்டைக்கு வந்து, தந்தி கொடுத்து, அலைந்து கொண்டு, தண்ணீர் திறப்பதற்கு உத்தரவு வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். அதை அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, இர்ரிகேஷன் கமிட்டி போடவேண்டியது மிகவும் அவசியம். ஆங்காங்குள்ள நிலைமையைப் பார்த்து அந்தக் கமிட்டி முடிவு எடுக்கட்டும். ஸில்டு கிளியரன்ஸ்பற்றி பணத்தை செலவழித்தால்மட்டும் போதாது. கரையை உயர்த்தி விட்டால் போதும் என்று சொல்லுகிறார்கள் "டெக்னிகல் பீபிள்". அது "காமன் மேனுக்கு" எனக்கு சரி என்று படவில்லை. ஸில்டு கிளியரன்ஸ் எவ்வளவு துரிதமாகச் செய்ய வேண்டுமோ அவ்வளவு துரிதமாகச் செய்ய வேண்டும். மைனர் இர்ரிகேஷன் இலாகாவை பி. டபிள்யூ. டி. இலாகாவோடு இணைக்க வேண்டும் "டெக்னிகல் பீபிள்" சம்பந்தம் இல்லாமல், சிறிய அதிகாரிகளை, ஓவர்ஸியர்களை வைத்துக் கொண்டு அந்தப் பணத்தைச் செலவழிப்பதில் பிரயோசனம் இல்லை. அந்த வேலை தற்காலிகமாக பிரயோசனப்படுமே தவிர, பெர்மனென்டாக பயன்படாது. அந்த இலாகாவை பி.டபிள்யூ.டி. இலாகாவோடு இணைத்துவிட வேண்டும். ரெவின்யூ அதிகாரிகள் இல்லாமல், பி. டபிள்யூ.டி இலாகாவினர் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு வி. ஆர். பெரியண்ணன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, திருமணிமுத்தாறு-பொன்னியாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றவேண்டுமென்று என்னுடைய மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் சார்பாக நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். சென்ற 10 ஆண்டுகளுக்கு முன்பே பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஒன்று சேர்ந்து, ஒரு மாநாடு கூட்டி, அந்த மாநாட்டிலே எந்த எந்த வழியாக தண்ணீரை விட வேண்டும் என்று எல்லாம் முடிவு செய்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அலுவலர்களுக்கும் கோரிக்கை அனுப்பியிருந்தும்கூட, அது பரிசீலனை செய்யப்படாமல் இருப்பது, ஏன் என்று புரியவில்லை. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உறுப்படியான ஒரு நீர்ப்பாசனத் திட்டம் இருக்கிறது என்று சொன்னால், அது இந்தத் திட்டம்தான். ஆகவே இதைப் பரிசீலனை செய்வதற்குக் கூட அரசாங்கம் தயக்கம் காட்டுவதற்குக் காரணம் என்ன என்று புரியவில்லை. பரிசீலனை செய்தால் வீணாக பணம் செலவாகிவிடுமே என்று சர்க்கார் கருதுகிறார்கள் போலும். அது வீணான செலவு என்று கருதக் கூடாது. அதற்கான செலவை, பரிசீலனை செய்த பிறகு இவ்வளவு செலவாகியிருக்கிறது என்று கணக்கிட்டுச் சொன்னால் எங்கள் பகுதி விவசாயிகள் அதைக் கொடுக்க முன் வருவார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை பரிசீலனை செய்வதற்கு இந்த உத்தரவாதத்தைக் கொடுத்து இந்த ஆண்டிலாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலிலே இதைப் பற்றிச் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன்.





ராஜவாய்க்காலுக்காக என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பணம் செலவழித்திருக்கிறார்கள். அவர்கள் பம்பு செட்டை வைத்து தண்ணீர் எடுத்தால் அதற்கு தண்டத் தீர்வை ரூ. 5,000, 10,000 என்று போட்டிருக்கிறார்கள். யார் இதற்காக பணம் செலவழித்திருக்கிறார்களோ, அவர்களுக்கு அந்தத் தண்டத் தீர்வை விதிக்கப்படுகிறது என்பதை தெரிவித்துகொள்ளுகிறேன். கீழக்கரை வாய்க்காலை நீட்டுவதற்கு அரசாங்கம் தயங்குகிறது. அதற்கு மைசூர் அரசாங்கத்தின் அனுமதி வேண்டும் என்று சொல்வதாகத் தெரிகிறது. மைசூர் அரசாங்கத்தில் இருக்க வேண்டிய நிலைமை என்ன, மைசூர் அரசாங்கம் இது சம்பந்தமாக என்ன சொல்லுகிறது என்பதைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது உணவு உற்பத்தியை அதிகமாக பெருக வேண்டும் என்று நாம் நினைக்கிற நேரத்திலே இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்தில்தான் அதிகமான விளைச்சல் இருக்கிறது. அதிலும் குறிப்பாக சேலம் மாவட்டம் தான் அதிகமான விளைச்சலைக் கொடுக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். காவேரித் தண்ணீர் பாயக் கூடிய மற்ற மாவட்டங்களில் ஏக்கருக்கு ஆயிரம் அல்லது ஆயிரத்தைந்நூறு பௌண்ட் தான் விளைச்சல் என்று சொல்லுகிறார்கள். இந்த திருமணிமுத்தாறு, பொன்னியாறு திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தால் ஏக்கருக்கு 3,000 அல்லது 4,000 பௌண்டு விளைச்சலைக் காட்ட முடியும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே இந்த ஆண்டிலேயே இதைத் துவக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கொல்லிமலை அடிவாரத்தில் சேந்தமங்கலம் வட்டாரத்தில் ஈச்சம்பட்டியில் 90 ஏக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கு ஒரு புதிய ஏரியை கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கும் நடவடிக்கை எடுக்க வில்லை. ஆகவே அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, எங்கள் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நன்மை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*** திரு வெ. எல்லம நாயுடு :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுப்பணித் துறை, பாசனத் துறை, இவைகளைப் பற்றி நமது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சுதந்திரம் அடைந்த பிறகு பல நல்ல அரிய பாசனத் திட்டங்களை நமது சர்க்கார் நிறைவேற்றியிருந்தாலும் கூட, எல்லா மக்களுக்கும் எல்லா விதத்திலும் அது சரியாக அமைந்திருக்கிறது என்று நான் கருத முடியவில்லை. யார் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பாடுபடுகிறார்களோ அவர்களுக்கு வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற நியதியை பல ஆண்டு காலமாக நமது அரசாங்கம் புறக்கணித்து வருகிறது என்று தான் நான் நினைக்கவேண்டியிருக்கிறது. குறிப்பாக கோவை ஜில்லாவில் மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள கீழ் பவானி, நொய்யல் நீர்த்தேக்கங்கள் கட்டப்படாமல் அந்தத் தண்ணீர் கீழ் பகுதியில் உள்ள மக்களுக்கு பயன் படுகிறதே ஒழிய, அந்த மலையடிவாரத்தில் உள்ள மக்களுக்கு பயன் படவில்லை. அன்று இருந்த நம்முடைய அந்தப் பகுதி பிரதிநிதிகளும், அன்று இருந்த நமது அமைச்சரவையும் இதைச் செய்ய தவறி விட்டாலும் கூட, இன்றைக்கு இருக்கும் அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து, மனது வைத்து, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே இந்த நொய்யல் ஆறு திட்டத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கோவைக்குப் பக்கத்தில் மேற்கே 18-வது மைலிலே நீர்த் தேக்கம் கட்டுவதாக பரிசீலனை செய்யப்பட்டு அதற்காக பணமும் செலவழித்திருக்கிறார்கள். கோவை தாலூகா மேற்குப் பகுதியில் உள்ள மக்களுக்கும், கோவைக்கு கிழக்கே உள்ள சூலூர், பல்லடம், தாலூக்காக்களுக்கு இதனால் பாசன வசதியும், குடி தண்ணீர் வசதியும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சிறிய பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில் கோவை தாலூகாவில் மேற்கு மலைத் தொடரிலுள்ள கொடுங்கரைப் பள்ளம் என்ற ஆற்றிலே ஒரு அணை கட்ட வேண்டும் என்று தெரிவித்தேன். முண்டன் துறை ஆற்றுத் திட்டத்தையும், இந்த கொடுங்கரைப் பள்ளம் திட்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அவற்றை

பரிசீலித்து, இந்த ஆண்டிலாவது எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். போக்குவரத்தைப் பொறுத்த வரையில் **10, 12** வருஷங்களாக நொய்யலுக்கு கோவைக்கு மேற்கே **11-6-வது** மைலில் ஒரு பாலம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை இருந்தது. 1964–65-ல் அது நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் அவர்களும், சீப் என்சினீயர் அவர்களும் வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை இந்த ஆண்டிலாவது நிறைவேற்றிக்கொடுக்கவேண்டும். அதற்கான நிதியை ஒதுக்கி நொய்யல் ஆற்றிலே ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுத்து போக்கு வரத்து வசதியைப் பெருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். போக்கு வரத்திலே இன்னும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள ரோடுகள் பஸ் போக்குவரத்துள்ள ரோடுகள். அவற்றை அரசாங்கம் எடுத்துக்கொண்டு பெருவழித்துறை மூலமாக செய்து முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால், நீர்ப்பாசனம், பொதுப்பணித் துறை, இதை ஒட்டிய இனங்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் இம்மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக் கின்றன. எதிர்க்கட்சியினர் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஒட்டி, சில கருத்துக்களை நான் வழங்க முற்படுகின்றேன்.

நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்த வரையில், கனம் அமைச்சர் அவர்கள் தங்களுடைய அறிக்கையிலே நிலைமைகளைத் தெளிவுபடுத்தி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மாநிலம் பயன்படுத்தவேண்டிய நீர் அத்தனையும் பயன்படுத்துகிற நிலைமையில் அமைந்திருக்கிறது என்றும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் ஒரு துளி கூட மிச்சப்படாத அளவுக்கு அத்தனையும் பயன்படுத்துகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்கள். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை உரு வாக்குவதற்கான வழி வகைகள் தமிழகத்தைப் பொறுத்த வரையிலும் அமையவில்லை என்பதை அறிகிறோம். நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் சிலவற்றை மேற்கொண்டிருக்கிற சூழ் நிலையும், மேற்கொள்ளவேண்டிய சூழ்நிலையும் அமைந்திருப்பதையும் பார்க்கிறோம். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றை மேற்கொள்ளுவதற்கான வாய்ப்புகளும், வழிகளும், பல மாவட்டங்களில் ஆங்காங்கே அமைந்திருக்கின்றன என்பதை மன்ற உறுப்பினர்கள் பலரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எனவே இந்த மாநில அரசு அதிகமாகக் கவனம் செலுத்தி, இந்தத் துறையில் மிகவும் சீராகவும், செம்மையாகவும், நாட்டுக்கு ஏற்ற வகையில் கவனம் செலுத்த வேண்டிய வகையில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அதிகமாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறது. நாம் அதிகமான நீரைப் பெறுவதற்கான வாய்ப்புக் கூறுகள் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அதிகமாக அமையவில்லை என்றாலும், தென்னகத்தைப் பொறுத்த வரையில் ஓரளவுக்கு அமைந்திருக்கிறது என்பதை அறிகிறோம். தமிழக த்தைப் பொறுத்த வரையில் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படக் கூடிய பேராறு காவேரி ஆற்றின் நீர் ஏறத் தாழ 95 சத வீதம் பயன்படுத்தப் படுகிற அளவுக்கு அமைந்திருக்கிறது, வேறு வகைகளிலே பயன்படுத்து வதற்கு அதிகமான வாய்ப்புக் கூறுகள் இல்லை என்றும் சொல்லப்படு கிறது. ஆனல், கேரள மாநிலத்திலே, மைசூர் மாநிலத்திலே, ஆந்திர மாநிலத்திலே இருக்கின்ற ஆற்று நீர் அத்தனையும் பயன்படுத்தப்படாமல், அவற்றின் சில பகுதிகளும், பல பகுதிகளும் கடலிலே சென்று கலக்கும் அளவுக்கு அமைந்திருக்கின்றன. ஏறத்தாழ 80 சத விகித ஆற்று நீர் கேரளாவில் கடலில் போய்க் கலக்கிறது. அதே போல 45 சத விகிதம் தண்ணீர் கோதாவரி–கிருஷ்ணாவிலிருந்து கடலிலே கலக் கிறது. வீணாகவே போகின்றன என்று சொல்லப்படுகிறது. இந்த மாநிலம் அந்த நீரை பயன் படுத்துவது பொறுத்த மட்டில், நல்லதொரு உறவு முறை ஏற்பட்டால், நல்ல திட்டங்கள் வகுக்கப்பட்டால், அதன் மூலம் தமிழகம் சில பல நன்மைகளைப் பெற முடியும் என்பதற்கான காரணங் கள் எடுததுச் சொல்லப்பட்டிருக்கின்றன. கனம் அமைச்சர் அறிக்கையில்





தெளிவு படுத்திக் காட்டி இருக்கிறார்கள் அதற்காக பேச்சு வார் த்தைகள் நடைபெறுகின்றன என்று. இந்த மன்ற உறுப்பினர்கள் எல்லாம் இந்த மாநிலத்திற்கு அதிகமான தண்ணீர் தேவைப்படுகிறது என்று எண்ணுகிற போது, அந்தப் பேச்சுவார்த்தைகள் எந்த நிலையில் இருக்கின்றன என்றும், அதன் மூலம் எப்படிப்பட்ட பலன்கள் ஏற்பட இருக்கின்றன என்றும், எந்த அளவுக்குப் பலன்கள் பெற இருக்கிறோம் என்றும் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்து கொள்வதில் அடிக்கடி ஆவல் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வேறு வழிகளில் தண்ணீரைப் பெற வழி வகைகள் அமையவில்லை. எனவே மேற்குத் தொடர்ச்சி மலையில் அதிகமான குடைவுகளை ஏற்படுத்தி மேற்கு நோக்கி செல்லும் ஆறுகளை யெல்லாம் பயன்படுத்த திருப்பி விடுவதன் மூலம், மின்சாரத்தை அபி விருத்தி செய்யவும், நீர்ப்பாசனத்தைப் பெருக்கவும் வழிவகைகள் வகுக்க வேண்டும் என்று வல்லுநர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். ஆகவே, மின்சாரத்தைப் பெருக்குவதன் மூலம், அவர்களுக்கு மின்சாரத்தைக் கொடுத்து, நாம் நீரைப் பெறுவதன் மூலம், அத்தகைய ஒரு உடன் படிக்கை செய்துகொள்வதன் மூலம், நல்லதொரு சூழ்நிலை ஏற்பட முடியும் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட முயற்சியில் மாநில அரசு எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்று அறிந்து கொள்ளுவதில் இந்த மன்றம் அடிக்கடி தன்னுடைய ஆவலைத் தெரிவிக்கிறது.

குடி தண்ணீர் பொறுத்த மட்டில், குறிப்பாக சென்னை நகர மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பொறுத்த மட்டில், வல்லுநர்கள் இரண்டு மூன்று திட்டங்களை அளித்திருக்கிறார்கள். காலையில் கேள்வி நேரத்தில் கூட அது பற்றி விடைகள் ஈர்க்கப்பட்டன. காவிரியிலிருந்து தண்ணீரை கொண்டு வருவது ஒன்று. கிருஷ்ணா ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவது இன்னொன்று. அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, பேச்சு வார்த்தைகள் ஓரளவுக்கு பலன் தரும் வகையில் அமைந்திருக்கின்றன என்று இதிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த குடிநீரை இங்கே கொண்டுவருகிற அத்தகைய முயற்சியிலே ஆந்திர மாநில அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்துவதன் மூலம் சென்னை நகரத்திற்கு குடி நீர் வசதி கிடைக்கும் என்ற அளவுக்கு கிருஷ்ணா நீரைத் திருப்பலாம் என்று கிருஷ்ணா-கோதாவரி கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது. இந்திய அரசு அந்த சிபாரசுக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டி ருக்கிற கருத்துக்களின் அடிப்படையில் பார்த்தால், அந்த முயற்சி வெற்றி பெறுகிற நிலைமையில் இருக்கிறது என்பதை உணருகிறோம். அந்த முயற்சியை வெற்றிகரமானதாக ஆக்குவதன் மூலமாக சென்னை நகர குடி நீர்ப் பிரச்சினை தீருவதற்கு வழி வகை காண அரசினர் முன் வர வேண்டும். காவிரி ஆற்றின் தண்ணீரை சென்னைக்குக் கொண்டு வர அதற்கான திட்டம் பதினேழு கோடியே சில்லரை ரூபாய்கள் ஆகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது ; சென்னை நகருக்கு வரும் வழிகளில் கூட, இந்தத் திட்டத்தின் மூலம், இதற்கு இடையிலே இருக்கிற பல நகரங்கள், பெரிய நகரங்கள், சிறிய நகரங்கள் கூட பலன் பெறும் வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. கிருஷ்ணா நீரை சென்னைக்குக் கொண்டு வர வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன. அத்தகைய நிலையிலே, காவிரி ஆற்று நீரை சென்னைப் பகுதிக்கு கொண்டு வர முயற்சி எடுப்பதன் மூலம, வழியில் இருக்கின்ற பல நகரங்கள் பயன் படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. எனவே இந்த இரண்டு திட்டங்களும் நிறைவேறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே அவைகளை நிறைவேற்ற ஒரு தீவிர திட்டத்தை அரசினர் மேற்கொள்ளவேண்டும் என்று இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சிறிய நீர்ப்பாசன திட்டங்களை பெருக்க வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன ; அவற்றை எல்லாம் கண்டு ஆராய்ந்து, இருக்கின்ற நிலைகளை செம்மைப்படுத்தி, சீர் படுத்தி அவற்றை அபிவிருத்தி செய்ய, புதிய சிறிய நீர்ப்பாசனங்களை உருவாக்குவதற்கான முயற்சிகளை அரசினர் மேற்கொண்டிருக்கிறார்கள் என்றும், அதற்கு என்று தனியாக ஒரு "இரிகேஷன் பிளானிங் சர்க்கிள்" என்று பொதுப்பணித்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [19th March 1964

துறையில் பரிசீலனை செய்ய ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. என்றும், அது ஆராய்ச்சி செய்து வருகிறது என்றும், அதன் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஓர் அளவுக்கு நிறைவேறி வருகின்றன என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு குழுவை அமைத்து அதன் மூலம் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த மன்ற உறுப்பினர்கள் பல பேர் எடுத்துச் சொன்னது போல வாய்ப்புக் கூறுகள் அந்த அந்த தொகுதிகளில் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொன்னார்கள். அவை களை நிறைவேற்ற இந்தக் குழுவினர் தீவிர முயற்சி செய்து கவனம் செலுத்தி, அவற்றை நிறைவேற்ற முயல வேண்டும். குறிப்பாக எடுத்துக் கொண்டால் தஞ்சை மாவட்டத்தை பொறுத்தவரை காட்டாறுகள் பாயும் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதிகளில் காட்டாற்றுத் தண்ணீர் வீணாகும் நிலையில் இருக்கிறது. ஆங்காங்கே 20-க்கும் மேற்பட்ட சிறிய அணைக்கட்டு கள் மூலம் அந்தத் தண்ணீரை பாசனத்திற்கு பயன் படுத்த வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன என்று நிபுணர்கள் அடிக்கடி தெரிவிக்கிறார்கள். மதிப்பீட்டுக் குழுவினரும் அரசினருக்கு சிபார்சு செய்து இருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் எந்த அளவில் இருக்கின்றன, அந்த வாய்ப்பு கூறுகளை பயன்படுத்துவதன் மூலம் அந்த வறண்ட பகுதிகளை சாகுபடிக்கு ஏற்ற பகுதியாக ஆக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டனவா, எடுக்கப் பட்டு இருந்தால் எந்த அளவுக்கு எடுக்கப்பட்டிருக்கின்றன, எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எந்த அளவுக்கு பயன் இருக்கிறது என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் சில ஆறுகளைப் பொறுத்த வரை, மேடிட்டு வருகிற சூழ் நிலை இருப்பதாகவும், அத்தகைய ஆறுகளில் தூர் எடுப்ப தன் மூலம் பாசன வசதியைப் பெருக்கமுடியும் என்ற கருத்துக்களும் சொல்லப்பட்டு இருக்கின்றன. அவற்றிற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு கூட, நீண்ட நெடுங்காலமாக மராமத்து செய்யப் படாமல் இருக்கிற ஏரிகளை, குளங்களை போய்ச் சேரும் கால்வாய்கள் தூர்ந்து கிடக்கும் காரணத்தால் வந்து சேர வேண்டிய தண்ணீர் வரவேண்டிய அளவுக்கு வரவில்லை என்ற நிலையில் சில பல ஏரிகள் அமைந்திருக்கின்றன. அந்த ஏரிகள் மேடிட்டு இருப்பதன் காரணமாக தண்ணீர் தேங்க வேண்டிய அளவுக்கு தேங்க முடியாத நிலையில் அமைந்திருக்கின்றன. நீண்ட நெடுங்காலமாக மராமத்து செய்யப்படாமல் இருக்கும் அத்தகைய ஏரிகளையெல்லாம் மராமத்து செய்வதன் மூலமாக அவற்றை பயன் படுத்துவதற்கான முயற்சிகளை அரசினர் எடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

ராமநாதபுரம், மதுரை திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் சில பல பகுதிகளில் கீழே நீரோட்டங்கள் இருக்கின்றன என்று அமெரிக்கன் அண்டர் கிரவுண்ட் வாட்டர் எக்ஸ்பர்ட் வெளியிட்டிருக்கும் அறிக்கைகள் மூலம் தெரிய வருகிறது. அவற்றை மேலே கொண்டு வந்து அந்த நீரூற்றுகளின் மூலம் நீரை பாசன வசதிக்குக் கொண்டு வர முடியும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது சாத்தியப்படக்கூடிய அளவுக்கு இருக்கிறதா, இல்லையா என்று பரிசீலனை செய்து, சாத்தியப்படும் என்றால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுவதன் மூலம் தண்ணீரைப் பற்றி ராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை மாவட்டப் பகுதிகளை பலப் படுத்த முடியும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த அளவுக்கு முயற்சி செய்து பயன் படுத்த முடியும் என்றால் அதற்கான திட்டத்தைத் தீட்டி நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாலைப் போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் பல உறுப்பினர்கள் இந்த மன்றத்திலே எடுத்துத் தெரிவித்தது போல நீண்ட போக்குவரத்துக் களை கட்டுப்படுத்தும் வகையில் விரிவாக போக்குவரத்தை நடத்திச் செல்லப் பயன்படும் வகையில் கடற்கரை ஓரமாக நீண்ட பெருஞ்சாலை திட்டத்தை விரைவில் கொண்டு வர முயற்சிகள் எடுக்க வேண்டும். கடலோரப் பகுதிகளில் தென் பகுதியில் இருக்கிற மாவட்டங்களுக்கு அத்தகைய போக்குவரத்தை விரிவாக்க கடலிலே செல்லக்கூடிய படகு போக்கு



20th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வரத்தை விரிவாக்க, கடல் வழியாக அந்த அந்த பகுதிகளில் சரக்குகளை பல்வேறு துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்ல முடியுமா என்று அறிய முயற்சிகள் எடுக்க வேண்டும். லாரிகள் மூலமாக சென்னையிலிருந்து திருநெல்வேலிக்கு, ராமநாதபுரத்திற்கு, மதுரைக்கு அந்த மாவட்டப் பகுதிகளுக்கு பல்வேறு பண்டங்களை கொண்டுவர நெருக்கடி உண்டாகும் அளவுக்கு நிலைமைகள் இருப்பதால் நீண்ட தொலைவுக்கு கடல் வழியாக படகுகள் மூலம், சிறு கப்பல்கள் மூலம் சரக்குகளை கொண்டு செல்வதற்கு வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன என்று வல்லுநர்கள் எடுத்துச் சொல்லு கிறார்கள். அத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டால் படகு போக்குவரத்தை விரிவு படுத்தவும், நீண்ட பெருஞ்சாலை போக்குவரத்தைச் சீர்படுத்தவும், உதவியாக இருக்கும்.

பக்கிங்ஹாம் கால்வாய் பிரச்னை இந்த மன்றத்தில் பல ஆண்டுகளாக எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. அதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களும் அடிக்கடி தெரிவிக்கிறார்கள். பக்கிங்ஹாம் கால்வாயை 10 கோடி ரூபாய் செலவில் சீராக்க முடியும் என்ற கருத்து எடுத்துச் சொல்லப் படுகிறது. கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் இந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிற நிலைமையில் அவர்களுக்கு புகழும் பெருமையும் ஏற்படும் அளவுக்கு பக்கிங்ஹாம் கால்வாய் பணியை மேற்கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் நிலைமைகளை சரிப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பழுதுபட்டிருக்கும் நிலையிலே கூட வடக்கே நெல்லூரில் இருந்து தொடங்கி தென்னாற்காடு மாவட்டத்திற்குப் போகும் அளவுக்கு அந்தக் கால்வாய் அமைந்திருக்கிறது. வட பகுதி 38 மைல் அளவுக்கும், தென் பகுதி 62 மைல் அளவுக்கும் இந்தக் கால்வாய் நீண்டு கிடக்கிறது. நீண்ட நெடுங்காலமாக இடையிடையே பழுதுபட்ட காரணத் தினால் போக்குவரத்து எண்ணும் அளவுக்கு செய்ய முடியவில்லை. இந்தக் கால்வாயைச் சீர் படுத்துவதன் மூலம் இன்னும் போக்குவரத்தை அதிகப் படுத்த முடியும் என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இருக்கும், சீர் படுத்தாத நிலையிலேயே ஆண்டு ஒன்றுக்கு இந்தக் கால்வாய் மூலம் பல்வேறு உணவு பண்டங்களை ஏற்றி வருவதற்கும், விறகுகளை கொண்டு வருவதற்கும் உப்பு மூட்டைகளை ஏற்றுவதற்கும், கிளிஞ்சல் போன்றவை களை ஒரு இடத்திலிருந்து, மற்றொரு இடத்திற்கு அகற்றுவதற்கும், பயன் படும் அளவில் கிட்டத்தட்ட ரூ. 185 லட்சத்திற்கு போக்குவரத்து நடை பெறும் அளவுக்கு இந்தக் கால்வாய் அமைந்திருக்கிறது. இந்த நிலையில் இருக்கிற பக்கிங்ஹாம் கால்வாயை சீர்படுத்தும் திட்டத்தை மேற்கொள் வதன் மூலம் வாணிபத்தைப் பெருக்க வழி வகைகள் இருக்கின்றன. எனவே தீவிரமாக அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மையைத் தேட வேண்டும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த மான்யத்தின் மூலம் வழிவகை ஏற்படாவிட்டாலும் கூட வேறு வழி செய்தாக வேண்டும். இப்படிப்பட்ட திட்டங்களைவைத்துத் தான் இந்த மாநிலம் வளர வேண்டிய நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட 1-00 p.m.,
போக்குவரத்துத் திட்டங்களையும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் மேற் கொள்ளுவதன் மூலமாகத் தான் இந்த மாநிலத்தின் வளத்தையும், வாழ்வையும் பெருக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இத்தகைய முயற்சிகளில் அரசினர் ஊக்கம் காட்டவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கூவம் ஆறு கடலில் போய்ச் சேருகிற நிலைமையை ஒழுங்குபடுத்துவதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதில் உள்ள கழி நீர்கள் அப்புறப்படுத்துவதற்கும், நல்ல நீர் பாய்ச்சப்படுவதற்கும் வழி வகைகள் ஏற்படுத்தியாகவேண்டும். சில வல்லுநர்கள் எடுத்துச் சொல்லி யிருக்கிறமாதிரி கூவம் ஆற்று நீரைப் படகில் இறைத்துச் சென்று கடலில் கொட்டுவதற்கும், கடல் நீரை அதில் பாய்ச்சுவதற்கும் முறைகள் இருக்கின்றன. அதை நடைமுறைப்படுத்துவதன் மூலமாகத்தான் அதன் மூலம் நோய் வராமல், கெட்ட நாற்றம் பரவாமல் தடுப்பதற்கு வழிவகை ஏற்படும். ஆகவே இந்தக் கால்வாய் சம்பந்தமாக நிபுணர்கள் என்ன என்ன வழிவகைகளைச் சொல்லியிருக்கிறார்களோ அவற்றை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [20th March 1964

மேலும் சென்னை நகரின் போக்குவரத்தைப் பற்றி சொல்கிறபோது பேசின் பிரிட்ஜ் பாலத்தைக் கடந்து அதிகமான வண்டிகள் போகவேண்டியதாக இருக்கிறது. அது குறுகலாக இருப்பதால் அங்கே போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே அதை அகலப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் போக்குவரத்து வசதியை பெருக்க வழியேற்படும். அப்படி செய்யப்படாததனால் இன்றைய தினம் அங்கே வாகனத் தேக்கங்கள் ஏற்படுகின்றன. விபத்துகள் ஏற்பட வழியேற்படுகின்றன. ஆகவே பேசின் பிரிட்ஜ் பாலத்தை அகலப்படுத்தவும், புதிதாக்கவும் வழி செய்ய வேண்டும். அதுபோலவே முண்டக்கண்ணி அம்மன் கோவில் தெருவில் கூவம் ஆற்றின் மேல் வரும் பாலம், செயின்ட் மேரீஸ் ரோடு பாலம் ஆகியவற்றை உடனடியாக அகலப்படுத்த வேண்டிய வேலையை மேற்கொள்ளவேண்டும். அப்போது தான் சென்னை மாநகரப் போக்குவரத்து நெரிசலைத் தணிக்க உதவி ஏற்படும். இன்னும் ரவுண்டாணா பகுதியிலும், சென்ட்ரல் ஸ்டேஷன் பகுதியிலும் ஜன நெரிசல் வாகன நெரிசல் அதிகமாக இருப்பதனால் மேல் பாலமோ அல்லது சப்-வேயோ அமைக்க முன்வரவேண்டும். இன்றைக்கு வாகனங்கள் போகும்போது மக்கள் அதிக நேரம் நிற்கவேண்டியிருக்கிறது. அப்படியே மக்கள் போவதற்கு வாகனங்கள் நிறுத்திவைக்கப்படுகின்ற நிலை ஏற்படுகிறது. ஜனங்கள் அப்போதைக்கப்போது தங்கள் இஷ்டப்படி ரோடுகளைக் கடந்து செல்ல இந்த இரண்டு இடங்களிலும் உடனடியாக மேல் பாலமோ அல்லது கீழ் சப்-வேயோ அமைக்க அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் இங்கே எட்டு சிறு துறைமுகங்களும், நடுத்தர துறைமுகங்கள் 3-ம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் துறைமுகங்களை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் அநேகமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் எடுத்துக்கொள்ளப்படும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

இந்தத் துறைமுகப் பட்டிணங்களின் போக்குவரத்துச் சாலையை ஒழுங்காக அமைத்து, விரிவுபடுத்துவதன் மூலமாகத்தான் கடலோரப் போக்குவரத்தை அதிகப்படுத்த முடியும். ஆகவே உடனடியாக இந்தச் சிறிய துறைமுகங்களையும், துறைமுகச் சாலைகளையும் ஒழுங்குபடுத்தி உபயோகத்திற்குக் கொண்டுவர முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். சேது சமுத்திர திட்டம் பல்லாண்டு காலமாக எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. கவர்னர் அவர்களுடைய உரையின்மீதும், நிதி நிலை அறிக்கையின் மீது பொதுவிவாதம் நடக்கிறபோதும், பொதுப் பணித்துறை மானிய விவாதத்தின் மீதும் அடிக்கடி இந்த மன்றத்தில் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. 1956-ஆம் ஆண்டு, 1960-ம் ஆண்டு—அப்பொழுதே திரு ராமசாமி அவர்கள் அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளப்போவதாகச் சொன்னார். இன்னும் அது முழுவதும் எடுத்துக்கொள்ளவில்லை. அப்போது போட்ட திட்டத்தின்படி எழு கோடியே ஒன்பது லட்சம் ரூபாய் செலவாகும் என்று எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டது. ஆனால் நாளுக்கு நாள் விலைவாசியும், பண்டங்களின் விலையும் ஏறிக்கொண்டே போவதால் இப்போது அதற்கே 15 கோடி ரூபாய் தேவைப்படும் என்று சொல்லப்படுகிறது. அதோடு முன்பு 20 அடி ஆழப்படுத்தினால் போதும் என்று சொல்லப்பட்டது போக, இப்போது 30 அடி ஆழப்படுத்தினால்தான் கப்பல்கள் எதிர்ப்பார்க்கிற அளவுக்கு வர முடியும் என்று சொல்லி அந்தத் திட்டத்திற்கு 30 கோடி ரூபாய் சொச்சம் ஆகும் என்று சொல்லப்படுகிறது. இந்த அளவில் இந்தத் திட்டத்தைக் குறித்து இந்திய அரசினர் இன்னமும் யோசித்துக்கொண்டு வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எட்டாண்டு காலத்திற்கு முன்பாகச் செய்திருந்தால் எத்தனையோ கோடி ரூபாய்கள் குறைந்த செலவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கலாம். காலம் கடத்தி, இதை மேற்கொள்வதனால் இன்றைக்கு ஆகும் செலவையும்விட இன்னும் பல கோடி ரூபாய் அதிகமாகக்கூடும். ஆகவே உடனடியாக இந்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டு இந்த மாநிலத்தில் உள்ள சிறிய துறைமுகங்களை எல்லாம் விரிவுபடுத்துவதற்கும், அதன் மூலம் இந்த மாநில வாணிபத்தை அதிகப்படுத்துவதற்கும், அதன்மூலம் பொருளாதார வளத்தைப் பெருக்குவதற்கும் அரசாங்கம் முன்வரவேண்டும்.



20th March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அந்தத் திட்டங்களை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த மன்றத்தினர் வற்புறுத்துவதை அடிப்படையாகக் கொண்டே மத்திய அரசினருக்கு வற்புறுத்தி அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக பொதுப் பணித்துறை இலாகாவில் வேலை செய்கிறவர்கள் பலகாலமாகவே தற்காலிகமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக உத்தியோக உயர்வும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அதையும் பரிசீலனை செய்து இரண்டாண்டு, மூன்றாண்டு காலம் தொடர்ச்சியாக வேலைசெய்து கொண்டிருக்கும் பணியாளர்களுடைய சர்வீசை நிரந்தரமாக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற இலாகா ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போலவே இவர்களுக்கும் சலுகைகள் அளிக்கப்படவேண்டும். திறமையாக வேலை செய்பவர்கள்—தங்கள் வேலை காயமாக்கப்படவேண்டும், நல்ல சம்பள விகிதம் கொடுக்கப்படவேண்டும் என்று எதிர்ப்பார்ப்பது இயற்கை. கனம் அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும் நன்கு பரிசீலித்து மாநிலத்தை பொருளாதார வகையில் உயர்த்துவதற்கு, வாணிபத்துறையில், வர்த்தகத் துறையில் உயர்த்துவதற்கு, பேரக்குவரத்து வசதிகளைப் பெருக்கவும்,. துறைமுகங்களை சீர்படுத்தவும், சாலைகளை ஒழுங்குபடுத்தி விஸ்தரிக்கவும் முன்வரவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே இரண்டு மூன்று முக்கியமான மானியக் கோரிக்கைகளின்மீது இன்று விவாதம் நடந்தது. அதிலே அதிகமான அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். நீர்ப்பாசன இலாகாவைப் பற்றி சொன்னது எதுவும் மிகையில்லை. ரோடு போக்குவரத்து, சிறிய துறைமுகங்கள் குறித்து பல அங்கத்தினர்கள் பேசினார்கள். அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். முதலில் நீர்ப்பாசன இலாகா சம்பந்தப்பட்ட திட்டங்களைக் குறித்துப் பேசுவதற்கு முன்பு மிகச் சுருக்கமாக ரோடு போக்குவரத்து பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

நமது மாகாணத்தைப் பொறுத்தவரை ரோடுகள் மற்ற மாகாணங்களை விட நல்ல முறையில் அமைந்திருக்கின்றன என்பதுதான் பொதுவான ஒரு கருத்து. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நிச்சயமாக அவர்கள் நம்மை எட்டிப்பிடிக்க வெகுதூரம் போயாகவேண்டும். இருந்தாலும் நமது சாலை வேலைகளுடைய தரத்தை மேலும் மேலும் உயர்த்த என்னென்ன முயற்சிகளை எடுக்கவேண்டுமோ அதையெல்லாம் இந்த அரசாங்கம் எடுக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

பல அங்கத்தினர்கள் இங்கே எடுத்துச்சொன்ன கருத்து போக்குவரத்துக்கு வசதியாக மேம்பாலங்கள் கட்டுவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டுமென்பதுதான். அதைப்பற்றி அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை செய்துகொண்டே இருக்கிறது. நிதி நிலைக்குத் தகுந்த முறையில் பல வேலைகளையும் அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. இந்த வருஷம் சென்னை நகரத்திலே மேம்பாலங்கள் கட்டும் வேலையைத் தொடங்கியிருக்கிறோம். இது போலவே மாவட்டங்களிலும் பல இடங்களில் வேலைகள் நடக்கவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய விருப்பம். இப்போது இருக்கக் கூடிய நிதி நிலைமையின் காரணமாக, தேசிய நெருக்கடியின் காரணமாகப் பல வேலைகளை எடுக்க முடியாமல் போய்விட்டது. இருந்தாலும் இந்த வருஷம் மேம்பாலங்களைக் கட்டுவதற்காக மத்திய அரசாங்கத்திடம் எவ்வளவு வற்புறுத்திக் கூற வேண்டுமோ அந்த அளவுக்கு வற்புறுத்திக் கூற வேண்டுமென்றுதான் மாநில முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இன்னும் ஒரு சில தினங்களில் மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்திக் கூறக்கூடிய முறையிலே இங்கிருந்து டில்லிக்குப் போகக்கூடிய நேரத்தில் அது சம்பந்தப்பட்ட அமைச்சர்களைக் கண்டு பேச வேண்டுமென்றே நான் விரும்புகிறேன்.

[திரு. வெ. ராமையா] [20th March 1964

இன்றைக்கு இருக்கக்கூடிய முறையில் பார்த்தால் ரயில்வே இலாகா தங்களுடைய பகுதியில் என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றைச் செய்து விடுகிறது. அதற்கு அப்பால் இருக்கிற பகுதிகளுக்கு அப்ரோச் ரோடு போடக்கூடிய பொறுப்பு சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்தது அதிகமான பணத்தை ரயில்வே இலாகா செலவு செய்கிறது ; அப்ரோச் ரோடுகளைச் சுலபமாகப் போட்டு விடலாம் என்று சொல்லலாம். ஆனால் மேம்பாலங்கள் கட்டக்கூடிய நிலையில் பார்த்தால் ரயில்வே இலாகா செலவு செய்வதை விட அதிகமாக செலவு செய்யவேண்டியிருக்கிறது. அதிலே மத்திய அரசாங்கத்தினர் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். மேற்கொண்டு என்னென்ன செய்ய வேண்டுமோ அதை வரக்கூடிய வருஷத்தில் செய்யவேண்டுமென்பது என் விருப்பம்.

அடுத்து, சிறு துறைமுகங்களைக் குறித்து கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். இது ஒரு சாதாரண வேலையாக அங்கத்தினர்களுடைய பார்வையிலே பட்டாலும் கூட, இதை ஒரு முக்கியமான வேலையாகவே அரசாங்கம் கருதுகிறது. போக்குவரத்து நெரிசலைப் போக்கும் வகையில் பல சிறு துறைமுகங்கள் முன்பு முறையாகச் செயல்பட்டிருக்கின்றன. சமீப காலத்தில் கப்பலுடைய நிலையை எல்லாம் பார்க்கும்போது சிறு துறைமுகங்களை அவர்கள் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது. மீண்டும் சிறு துறைமுகங்களை எல்லாம் கோஸ்டல் டிராபிக்குக்குப் பயன்படுத்தும் முறையில் திருத்தி அமைக்க வேண்டுமென்பதிலே நமது அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் அதிக கவனம் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இப்போது நாகப்பட்டினத்தில் பல வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. கடந்த எழெட்டு வருஷ ஆராய்ச்சிக்குப் பிறகு, ஒரு சில தினங்களுக்கு முன்னால் கடலூர் துறைமுகத்தை விரிவுபடுத்தக்கூடிய திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் அங்கீகாரம் அளித்துவிட்டார்கள். அங்கே வேலை விரைவில் தொடங்கும் என்பதிலே சந்தேகமில்லை. இதைப் பற்றிப் பேசும்போது கனம் அங்கத்தினர் ஹாஜா ஷெரீப் அவர்கள் " 24 மணி நேரமும் பயன்படக்கூடிய முறையிலே சிறு துறைமுகங்கள் அமைய வேண்டும் " என்று எடுத்துக் கூறினார்கள். நிச்சயமாக அந்த முறையில் அமையும். கடலூர் துறைமுகத்தில் எந்த விதமான தங்கு தடையும் இல்லாமல் எந்த நேரத்திலும் சரக்குகள் கொண்டு போகவும், கொண்டு வரவும் வசதியாக இருக்க வேண்டுமென்றமுறையிலேயே அந்தத் திட்ட வேலைகள் நடக்க இருக்கின்றன. ஏனென்றால் இது மறைமுகமாக நமது நேவிக்குப் பெரிய உதவியாக இருக்குமென்று நிச்சயமாக நான் நம்புகிறேன். இவையெல்லாம் முறையாகப் பயன்படுத்தப்பட்டால் நமது நாட்டிலுள்ள கப்பற்படைக்கு இன்றியமையாத பெரிய உதவியைக் கொடுக்க முடியும். இந்த நிலையைப் பார்க்கும்போது இந்தத் துறைமுகங்களில் எண்ணிக்கை அதிகமாக வளரவேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம். இப்போது நாட்டில் இருக்கக்கூடிய கப்பல் போக்குவரத்தை உணர்ந்து சொல்கிறேன். திடீரென்று கல்கத்தா துறைமுகம் ஸ்தம்பித்து விட்டது என்ற செய்தியைக் கனம் அங்கத்தினர்கள் பார்த்திருப்பார்கள். அந்த ஊழியர்கள் எல்லாம் ஒரு நாள் ஸ்டிரைக் செய்ததுதான் அந்த நிலைக்குக் காரணம். ஸ்டிரைக்குக்கு என்ன காரணமாக இருந்தாலும் ஒன்றை மட்டும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் எல்லாம் கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து வந்தவர்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அந்த அவல நிலையெல்லாம் போக வேண்டுமென்பதற்காகத் தான் சிறு துறைமுகங்களின் எண்ணிக்கையை உயர்த்த, அவை முறையாகச் செயல்பட வேண்டிய முயற்சிகளிலே இந்த அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் மத்திய அரசாங்கத்தினரும் விசேஷ கவனம் செலுத்தி வருகிறார்கள். மிகக் குறுகிய காலத்தில் சிறு துறைமுகங்களை ஏற்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை நமது அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாகப் பேசிய கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சேது சமுத்திரத் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதைப் பற்றி இப்போது மட்டுமல்ல ; இதற்கு முன்பே பல தடவை இந்த மன்றத்திலே அதைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றி எல்லா அங்கத்தினர்களும் கொஞ்சம் நல்ல



20th March 1964] [திரு. வெ. ராமையா]

முறையில் புறிந்துகொள்ளவேண்டும் ; கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் புரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற கனம் அங்கத்தினர்களும் அந்தப் பகுதியைப் போய்ப் பார்த்து வந்தால் நன்றாக இருக்கும். 1956-ம் வருஷத்திலே உருவான அந்தத் திட்டத்தை அப்போதே செய்து முடித்திருந்தால் மிகக் குறைந்த செலவிலே நடத்தி இருக்க முடியும் என்று சொன்னார்கள். இதிலே இருக்கக்கூடிய சிக்கல்களை எல்லாம் நாம் உணர்ந்தாகவேண்டும். இந்தத் திட்டத்தைப் பற்றி ராமசாமி முதலியார் கமிட்டி மட்டுமல்ல, ஒருகாலத்தில் உலகத்திலேயே கப்பல் போக்குவரத்துதான் இருக்க முடியும் என்ற நிலைமை இருந்தபோதே நிபுணர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றிப் பரிசீலனை செய்து வந்தார்கள். சூயஸ் கால்வாய், பனாமா கால்வாய் வெட்டப்பட்ட அதே நேரத்தில் சேது சமுத்திரத் திட்டத்தைக் குறித்தும் சிந்தித்தார்கள். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் சுலபமாகச் செய்துவிடக்கூடிய திட்டமாக இருக்கிறதே தவிர, இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்பது நிபுணர்கள் ஆராயத் தொடங்கிய பிறகுதான் தெரிகிறது. இதில் உள்ள சிக்கல்களைப் பார்க்கும்போது இந்தத் திட்டத்தை மிக ஜாக்கிரதையாக முடிக்கவேண்டும். இது போன்ற வேலை உலகத்தின் வேறு எந்தப் பகுதியிலும் நடைபெறவில்லை. நம்முடைய மாகாணத்தில் சேது சமுத்துரத் திட்டம் என்றால் ஏதோ டிரஜ்ஜரை வைத்துக் கடல் அடியில் இருக்கக்கூடிய மண்ணை வாரி விட்டால் போதும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே இரண்டு பக்கத்திலும் 30 மைல் தூரம் வரை பாறையை வெட்டி எடுத்தாக வேண்டும். கடினமான பாறையை வெட்டி எடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆராய்ச்சி அதிகமாகப் போகப் போக அதில் இருக்கக்கூடிய கஷ்டங்கள் தெரிகின்றன. சேது சமுத்திரத் திட்டத்தை முன்பு நினைத்ததைப் போல குறிப்பிட்ட இடத்தில் வெட்டியிருந்தால், இங்கு இருக்கக்கூடிய காற்று நிலையின் காரணமாக மிக விரைவிலே சேது சமுத்திரமே மூடிப் போய்விட்டாலும் போய்விடும்.

அதை எல்லாம் பரிசீலனை செய்து, ஒரு சில மாதங்களுக்கு முன்பு நம் ராஜ்யத்தைச் சேர்ந்த நிபுணர்களும், மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த நிபுணர்களும் இதில் அதிக கவனம் செலுத்திய காரணத்தால் சேது சமுத்திரத் திட்டமும் தூத்துக்குடி துறைமுகத் திட்டமும் ஒன்றாக இணைந்திருக்கக் கூடிய திட்டமாக இருப்பதால் தூத்துக்குடி துறைமுகத்தில் எந்தெந்த கப்பல்கள் வர முடியுமோ அவை சேது சமுத்திரம் வழியாகவும் வரவேண்டும் என்று 31 அடி ஆழமுள்ள கால்வாயை வெட்டவேண்டுமென்று எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். திரு. கோசல்ராம் அவர்கள் பேசும்போது இன்றைய உலக சூழ்நிலையை எல்லாம் மனதில் கொண்டு வேகமாகவே பேசினார்கள். ஏன் உடனடியாக அதை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டார்கள். அதை எல்லாம் மனதில் கொண்டுதான் சேது சமுத்திரத் திட்டத்தை எப்போது எந்த நேரத்தில் எடுக்கவேண்டுமென்பதுபற்றி மத்திய அரசாங்கம் முடிவு எடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதை அவசரமாக அவசியமாக செய்யவேண்டும் என்பதை மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. கோஸ்டல் டிராபிக், கப்பல் போக்குவரத்துத்துறை பொறுத்தவரை இதை விரைவாக நடத்தவேண்டும், மத்திய அரசாங்கம்தான் நடத்தமுடியும், அப்படி நடத்தவேண்டுமென்று விரும்புகிறோம். அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையில் என்னென்ன ஆராய்ச்சிகளை செய்யவேண்டுமோ அவற்றைச் செய்து கொடுக்கிறோம். மராமத்து இலாகாவைப் பொறுத்தவரை இதில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது என்பதை அறிக்கையைப் படித்துப் பார்த்தால் தெரியும். டிரைன் விங் என்று ஒரு திறமை வாய்ந்த சூப்பரெண்டிங்க் என்ஜினியரைப் போட்டு மத்திய சர்க்கார் கேட்பதை எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு புள்ளி விவரத்தை மத்திய சர்க்கார் கேட்டு வெகு காலமாக கொடுக்க முடியாத நிலை என்பது இல்லை. அவர்கள் கேட்பதற்கு முன்னால் கொடுக்கக்கூடிய அளவிற்கு புள்ளி விவரங்கள் சேகரிக்கிறார்கள். சமீபத்தில் மத்திய அரசாங்கம் நம் முயற்சியை ஆதரிக்கும் முறையில் இருப்பதைக் குறித்து பொது விவாதத்தின்போது பதில் அளிக்கும்போது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நில ஆர்ஜிதம் செய்யும் நிலையில் மத்திய அரசாங்கமும் நமக்கு ஆலோசனை சொல்லி இருப்பதைச் சுட்டிக்

காட்டினார்கள். சேதுசமுத்திரத் திட்டம் என்பது எங்கேயோ வாய்க்கால் வெட்டுவது போல் அல்ல. பெரிய நிபுணர்கள் எல்லாம் ஆராய்ச்சி செய்து பார்க்கும் நிலை இருக்கிறது. நம் மாநில நிபுணர்கள் மட்டுமல்ல, நம் நாட்டு நிபுணர்கள் மட்டுமல்ல, உலக நிபுணர்கள் கூட ஆராய வேண்டிய சூழ்நிலையில் அத்திட்டம் இருக்கிறது. அவ்வளவு கடினமான திட்டம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, சேதுசமுத்திரத் திட்டம் திட்டுவதற்காக 1956-ல் முயற்சி எடுத்தும் இவ்வளவு நாட்களாக நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்பதற்கு நிதி ஒதுக்க இயலவில்லை என்பது காரணமா ? அல்லது திட்டத்தை நிறைவேற்ற இயலாது என்பது காரணமா? அல்லது ஆழ்ந்த முறையில் தெளிவு படுத்திய பிறகு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பது காரணமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது ஒரு பெரிய திட்டம். நிதி காரணமே இல்லை. எல்லாவற்றையும் பரிசிலனை செய்யவேண்டும். தூத்துக்குடி துறைமுக விஸ்தரிப்போடு இணைக்கப்பட்டது இது. முதலில் தூத்துக்குடி துறைமுகத்தை எடுத்துக் கொள்வது பற்றி பரிசிலனை செய்தோம். அப்படி பரிசீலனை செய்து மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டது. தொடர்ந்து வரவேண்டியது இந்த சேது சமுத்திரத் திட்டம். முன்பு வரவு செலவு திட்ட பொது விவாதத்திற்கு விடை அளிக்கும்போது குறிப்பிட்டேன். தவிர்க்கக் கூடிய தாமதம் இல்லை. நன்கு பரிசீலனை செய்து எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய அரசாங்கம் இப்போது இது சம்பந்தமாக நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த அரசாங்கத்திற்கு தெரிவித்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே தவிர்க்கக் கூடிய தாமதம் இதுவரையில் இல்லை, இனியும் இராது. இப்போது நிச்சயமாக சேதுசமுத்துரத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளக்கூடும் என்று நம்பலாம் என்று முன்பு கூறியதை இப்போதும் நினைவு படுத்த விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சந்தேகத்திற்கு முதல் அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருப்பதால் நான் திரும்பவும் அது பற்றி சொல்ல விரும்பவில்லை. மாநில அரசாங்கத்தின் விடாத முயற்சி சேதுசமுத்திரத் திட்டம் வரவேண்டும் என்பதுதான். இத்திட்டம், ஒரு ஜில்லாவிற்கோ அல்லது ஒரு மாநிலத்திற்கோ உரிய திட்டம் அல்ல என்று சென்ற ஆண்டே கூறியிருக்கிறேன். இது ஒரு பெரிய தேசீய திட்டம், மத்திய சர்க்கார் பார்க்கக்கூடிய முறையில் பார்த்தால். இந்த நாட்டின் கோஸ்டல் போக்குவரத்தை செம்மையாக வளர்க்கும் திட்டம் என்ற அடிப்படையில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆகவே விரைவில் இதைச் செயல்படுத்துவதற்கான அத்தனை முயற்சியையும் மத்திய அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக நீர்ப்பாசன இலாகா சம்பந்தப்பட்ட கருத்துக்களுக்கு பதில் சொல்ல விரும்புகிறேன். இதில் பங்கெடுத்துக்கொண்ட 31 அங்கத்தினர்களும் நல்ல உயர்ந்த கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை தீவிரமாக பரிசீலனை செய்யக்கூடிய முறையில் இந்த இலாகா இருக்கக்கூடிய நிலையை அங்கத்தினர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு அங்கத்தினரும் பேசுவதற்கு பதில் சொல்லவேண்டுமென்றால் அதற்கு வேண்டிய விவரங்கள் எல்லாம் என்னிடம் இருக்கின்றன. ஆனால் அதிக நேரம் ஆகும் என்பதால் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பதில் சொல்ல இயலாத நிலையில் இருக்கிறேன். இருந்தாலும் அவர்கள் சொன்ன கருத்துக்களை அரசாங்கம் பரிசீலனை செய்து நல்ல முறையில் தொடர்ந்து செயல்பட வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், கனம் அங்கத்தினர் சுப்பையா முதலியார் அவர்களும், இன்னும் கனம் அங்கத்தினர் கோசல்ராம் அவர்களைப் போன்றுள்ளவர்களும் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, நான் கொடுத்திருக்கும் அறிக்கையை அவர்கள் படித்துப் பார்த்ததும் அவர்கள் மனதில் சிறிது





சந்தேகம் ஏற்படும் முறையில் இனிமேல் நீர்ப்பாசன இலாகாவிற்கு அதிக வேலை இல்லாமல் போய்விடுமோ என்ற முறையில் கருத்துக்கள் தெரிவித்தார்கள். நம் மாநிலத்தில் இனிமேல் புதிய பெரிய வேலைகளை எடுத்து நடத்த திட்டங்கள் இல்லாவிட்டாலும் என் பக்கத்து மாநிலங்களை சிறிது எட்டிப் பார்க்கக் கூடாது என்பதுதான் அவர்கள் விருப்பம். அதைச் சிறிது தீவிரமாக திரு. கோசல்ராம் அவர்கள் சொன்னார்கள். திரு. சுப்பையா முதலியார் அவர்கள், எவ்வளவு காலத்திற்குத்தான் பேசிக் கொண்டிருக்கிறது, என் ஒரு முடிவிற்கு வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். நம் மாநிலத்திற்குள்ளேயே இருக்கும் பிரச்னையை பார்த்தால் ஜாக்கிரதையாக அணுகவேண்டும் என்ற முடிவிற்கு வருகிறோம். லோயர் பவானியைக் கட்டும் வரை அந்த வட்டாரத்தில் இருப்பவர்கள் எப்படியாவது அதைக் கட்டி விடவேண்டும், தஞ்சைக்கு என்ன தண்ணீர் கொடுப்பது என்ற கருத்துப்பட சொன்னார்கள். நேற்றைய தினம் திரு. தட்சிணாமூர்த்தி கவுண்டர் அவர்கள் பேசும்போது எங்கள் ஊருக்கு வந்திருக்கும் லோயர் பவானி தண்ணீர் எப்படி விவசாயத்திற்கு இப்போது பயன்பட்டு வருகிறதோ அதிலிருந்து கொஞ்சம் கூட மாறுதல் செய்யக்கூடாது, மற்றவர்கள் அதிக விருப்பத்தோடு, ஷண்முகசுந்தரம் அவர்கள், குழந்தை அம்மாள் அவர்கள் போன்றவர்கள் அதிகமாக வற்புறுத்திப் பேசினாலும் எங்களுக்கு கிடைத்துக்கொண்டிருக்கும் தண்ணீர் எங்களுக்குத்தான் வேண்டும், அவர்கள் சொல்வதற்கு செவி சாய்க்கக்கூடாது என்ற முறையில் சொன்னார்கள். நேற்றைய தினம் முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, உங்களுக்குக் கிடைக்கும் தண்ணீர், உங்களுக்கு நிர்ணயம் செய்ததைவிட மிகவும் அதிகமாக இருப்பதால் அந்தத் தண்ணீரை மற்றவர்கள் குறிப்பாக வரண்ட பகுதிகளாகிய, அவனாசி, சூலூர், ஷண்முகசுந்தரம் அவர்கள் வரும் பகுதி இவற்றிற்கு பயன்படுத்த முயற்சி எடுத்தால் அதற்கு தடையாக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். நம் மாநிலத்திற்குள்ளேயே இத்தகைய சர்ச்சைகள். திரு கோசல்ராம் அவர்கள் நினைப்பதைப்போல் நான் கூட ஒரு நேரத்தில் நினைத்ததுண்டு. இந்தத் தேசத்தில் ஓடும் ஏரிகள் எல்லாம் தேசீய சொத்தாக இருக்கவேண்டும், அதற்குக் கமிஷன் போடவேண்டும் என்று ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் மிக வற்புறுத்திச் சொல்லியதுண்டு. ஆனால் நம் மாநிலத்திலேயே ஜில்லாக்களுக்கு இடையே தாலுக்காக்களுக்கு இடையே உள்ள நிலையைப் பார்த்த பின் இப்பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க, மற்ற ராஜ்யங்களை அணுகுவதுதான் நம் மாநிலத்திற்கு லாபமாகயிருக்கும். மற்ற ராஜ்யங்களை நாம் அணுகும்போது அங்குள்ளவர்கள் தண்ணீரை முறையாகப் பயன்படுத்தாமல் விரயம் செய்கிறார்கள் என்ற மனப்பான்மையோடு அணுகுவது முறை அல்ல. மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அவர்கள் எல்லைகளில் ஓடும் தண்ணீரை பயன்படுத்த தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மைசூர் ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால், நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவல்படி, ஏராளமான நீர்ப்பாசன வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தான். அது போலவே ஆந்திராவை எடுத்துக்கொண்டால், அவர்கள் ஏதோ 1-30 p.m.
தண்ணீரை நன்றாக பயன்படுத்திக்கொள்ளவில்லை, ஏதோ விரயமாக்குகிறார்கள் என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக ஆந்திராவில முன்பு முதலமைச்சராக இருந்த திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் நமது மாநிலத்திற்கு உபரியாக வருகின்ற தண்ணீரைக் கொடுக்கவேண்டும் என்ற நல் லெண்ணத்தில், எந்த அளவுக்கு உபரியாக தண்ணீர் வரும் என்பதைப் பற்றி பரிசீலித்து அறிக்கை கொடுக்கும்படி அவர்களுடைய நிபுணர்களை கேட்டுக்கொண்டார்கள். அவர்களும் ஒரு திட்டத்தைக் கொடுத்தார்கள், அதில் எத்தனை சீக்கிரமாகக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்..........

MR. DEPUTY SPEAKER : May I know how much more time does the Hon. Minister require to finish his reply.

THE HON. SRI V. RAMAIAH : Thirty minutes.

[20th March 1964

MR. DEPUTY SPEAKER : I think the House has no objection to sit till the Hon. Minister finishes his reply and the demands are disposed of.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அதைப்போலவே நமது அண்டையில் இருக்கின்ற கேரளாவிலும், ஏராளமாக தண்ணீர் இருப்பதாகவும், அதையெல்லாம் அவர்கள் விரயமாக்கிக்கொண்டிருப்பதாகவும், அவர்களுக்கு பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமை இல்லாமல் இருப்பதாகவும் நாம் மனதில் நினைத்துக்கொண்டிருக்கிறோம். அங்கு ஏராளமான மழை பெய்கிறது, தண்ணீர் வசதியும் அதிகமாக இருக்கிறது, உண்மைதான். ஆனால் இருக்கின்ற தண்ணீரை எல்லாம் பயன்படுத்திக்கொள்வதற்கு எத்தனையோ திட்டங்களை அவர்களும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளும் ஓரளவுக்கு செயல்பட தொடங்கியிருக்கின்றன. ஆனால், இதை கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள் சொன்னது மாதிரி மத்திய அரசாங்கத்தில் வற்புறுத்தி, ஒரு கமிஷன் நியமித்தால் அதிகமான பலன் ஏற்படும் என்கின்ற கருத்தில்தான் நானும் முன்பு நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது இருக்கின்ற நிலைமையில் அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. காரணம் நம் பக்கத்திலிருக்கக்கூடிய மாகாணங்களில் நாமே நேரடியாகச் சென்று, பேச்சுவார்த்தை நடத்துவதில் நிச்சயமாக அதிகமான அளவில் பலன் தரும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. முக்கியமாக கேரள அரசாங்கத்தோடு நடத்திய பேச்சு வார்த்தை மிகவும் நல்ல முறையில் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. நமது தேவையை அவர்கள் மனப்பூர்வமாக உணர்ந்து நமக்கு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். அந்த முறையில் தான் சமீபத்தில், இந்த வருடம் நானும் கனம் தொழில் துறை அமைச்சர் அவர்களும் திருவனந்தபுரத்திற்கு சென்று கேரள அரசாங்கத்தின் பிரதிநிதிகளோடு பேசும்போது, நான் கொஞ்சம் ஆச்சரியப்படக்கூடிய வகையில், தாராள குணத்துடன் அவர்கள் நடந்து கொண்டார்கள். நான் அதைப்பார்த்து கொஞ்சம் ஆச்சரியமும் பட்டேன். பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முந்திய நாள்வரைக்கும், நான் வேறு விதமாகத்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். நாம் எதைக்கேட்டாலும் இல்லை என்று சொல்லக்கூடிய நிலையோ அல்லது எதைக்கேட்டாலும் அதைப்பற்றி சந்தேகப் படக்கூடிய நிலையோ இருக்குமோ என்றுதான் நினைத்தேன். ஆனால் அங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்னால், மிகவும் சந்தோஷப்படக்கூடிய வகையில், நம்முடைய மாநில உயர் என்ஜினியர்கள், அவர்களுடைய பிராஜக்டுகளையும், அவர்களுடைய பிராஜக்ட் அறிக்கைகளையும், திட்டங்களையும், நன்றாகப் பார்த்து, ஆலோசனை செய்து அறிக்கை தருவதற்கு அவர்கள் ஒத்துக்கொள்வதாக சொன்னார்கள். அதன்படி நமது மாநில பிரதம எஞ்சினியர் அவர்கள் கேரளத்திற்குச் சென்று அவர்களுடைய திட்டங்களை எல்லாம் பார்த்து, நன்றாக ஆலோசித்து ஒரு அறிக்கையை சர்க்காருக்கு தந்தார்கள். அதை இப்போது நாம் கேரள அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம். அது அவர்களுடைய பரிசீலனையில் இருக்கிறது, அதோடல்லாமல் நமது முதலமைச்சர் அவர்கள் கேரள முதலமைச்சர் அவர்களோடு இரண்டாவது தடவையாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அழைத்து இருக்கிறார்கள். குறிப்பிட்ட காலத்தில், அங்கு ஏற்பட்டிருக்கின்ற சில சூழ்நிலையின் காரணமாக, வரமுடியாமல் போயிற்று. ஆகவே இனிமேல் சென்னை ராஜ்யத்தில் எங்கு வேண்டுமானால் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இரண்டு முதலமைச்சர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய முயற்சிகள் எல்லாம் நல்லமுறையில் உதவி செய்யும் என்கின்ற மனப்பான்மையில் அமைந்திருக்கிறது. அதே போன்று மைசூர் ராஜ்யத்தை எடுத்துக்கொண்டால், நம்முடைய சட்டமன்ற அங்கத்தினர்களைப் போன்று, அங்கேயும் சிலர் இருப்பார்கள் அல்லவா ? தமிழ்நாட்டுக்கு எதற்காக தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று அடிக்கடி கேட்டு வற்புறுத்திவருவதாக நாம் பார்க்கிறோம். சென்ற பொதுத் தேர்தல் காலத்தில் மைசூர் நீர்ப்பாசன அமைச்சராக இருந்த திரு. சென்னபாசப்பா அவர்களை ஒருசில தினங்களுக்கு முன்னால் சென்னையில் நான் பார்த்துப் பேசினேன். எனக்கு அதில் ஆச்சரியம் என்னவென்றால், சென்னை ராஜ்யத்தில் காவேரி பாசனப்



20th March 1964] [திரு. வெ. ராமைய்யா]

பகுதிகள், இதனால் பயன் அடைகின்ற பகுதிகள், இதனுடைய மதிப்பீடுகள் இவற்றையெல்லாம் நான் சொல்வதற்கு முன்பாகவே அவர்களாக எல்லாவற்றையும் சொன்னார்கள், அந்த அளவுக்கு நுணுக்கமான கவனம் செலுத்திவந்திருக்கிறார்கள். நாம் எந்த அளவுக்கு காவேரி தண்ணீரை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்கின்ற நினைப்பு அவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. காவேரி சம்பந்தமான பிரச்னை ஏதாவது இருந்தால், அதைப்பற்றி பேசுவதற்கு நமது மாநில முதலமைச்சர் அவர்களும் அங்குள்ள முதலமைச்சர் அவர்களும் தயாராக இருக்கிறார்கள். அதைப்போலவே இந்த அறிக்கையில், கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீரை சென்னை நகருக்கு குடி தண்ணீர் கொண்டு வருவது சம்பந்தமாக கல்காத்தி கமிஷன் செய்த சிபாரிசைப்பற்றி சொன்னார்கள். இதில் மத்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருக்கிறது என்பதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் எப்படி எப்படி எந்தெந்த வழியாக கொண்டு வருகின்ற விஷயம் எல்லாம் இன்வெஸ்டிகேஷன் செய்யவேண்டும். இப்போது கிடைத்திருக்கின்றபடி, மேலெழுந்தவாரியாக, பார்க்கக்கூடிய அளவில் தான் எஸ்டிமேட்டுகள் நமக்கு கிடைத்திருக்கின்றன. இதில் முக்கியமாக இருக்கின்ற பல பிரச்னைகளைப்பற்றி நாம் பார்க்கவேண்டும். ஆகவே நான் எல்லா அங்கத்தினர்களையும் கேட்டுக்கொள்கிறேன், இந்த விஷயத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். நமக்கு ஏதோ உரிமை இருக்கின்றது என்று நினைத்து சற்று வேகமாக பேசினால், சுமுகமாக நடந்து கொண்டிருக்கின்ற காரியங்களுக்கு ஏதாவது இடையூறு ஏற்படும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, இதைப்பற்றி நமது எதிர்கட்சித் தலைவர் அவர்கள், ஏதோ இதில் மற்ற ராஜ்யங்களிலுள்ள தண்ணீரை நாம் பயன்படுத்திக்கொள்வதில்—அச்சம் அல்ல—ஏதோ அரசாங்கத்திற்கு தயக்கம் இருந்துக்கொண்டிருப்பதாக கருத்து தெரிவித்தார்கள். இதைப்பற்றி நானும் கொஞ்சம் தீவிரமாக சிந்தித்துக்கொண்டிருந்தேன். இதை மேலெழுந்தவாரியாக பார்க்கும்போது, கழிந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களில் இருந்தது போன்ற திட்டங்கள் ஒன்றும் பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திற்கு பின்னால் உருவாக்குவது கஷ்டம். இன்றைய நிலைமையில் நீர்ப்பாசன வசதிகளின் தேவை மிகவும் உயர்ந்திருக்கிறது. விவசாயிகளை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும் என்கின்ற முறையில் நாம் போய்க்கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு நீர்ப்பாசனத் திட்டங்களைப் போட்டுக்கொண்டிருக்கிறோம். ஆகவே இனிமேல் புதிய வழிகளை நாம் கண்டாக வேண்டியிருக்கிறது. அந்த முறையில் பார்க்கும்போது, குறிப்பாக தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பார்க்கும்போது, இனிமேல் தமிழ் நாட்டிலுள்ள எஞ்ஜினியர்கள் மிக நுணுக்கமாக ஆராய்ந்து, சாதாரணமாக புதிதாக திட்டங்களை எப்படி போடுவது என்றில்லாமல் இப்போது இருக்கின்ற திட்டங்களிலிருந்தே, இப்போது இருக்கின்ற நீர்ப்பாசன வசதிகளிலிருந்து எந்த விதமாக அதிகமாக தண்ணீரை வீணாக்காமல் எப்படி சிக்கனமாக உபயோகிப்பது, என்னென்ன முறைகளில் மேலும் தண்ணீரை பயன்படுத்துவது என்பதை எல்லாம் ஆராயவேண்டிய ஒரு கட்டத்தில் இருக்கிறார்கள். முக்கியமாக சென்னை ராஜ்யத்தில் காவேரி, பெரியாறு திட்டம், தாமிரபரணி திட்டம் போன்ற முக்கியமான திட்டங்களை எல்லாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். சென்ற வருஷம் இந்த காவேரினுடைய பாசன முறைகளை எல்லாம் எப்படி பயன்படுத்திக்கொள்வது என்பதைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில், இதை இன்னும் தீவிரமாக அதிகமான அளவுக்கு உபயோகிக்க முடியுமா என்பதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும் என்கின்ற கருத்தை சொன்னேன். நீர்ப்பாசன இலாகா எஞ்சினியர்கள் இந்த காவேரி பாசனத்தை திருத்தி அமைக்கவேண்டும் என்றும், சிக்கனமாக எந்த முறையில் பயன்படுத்த முடியும் என்பதைப்பற்றியும் பரிசீலிப்பதற்கான பூர்வாங்க ஆராய்ச்சிகளை செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்குப்பார்த்தால், ஏறத்தாழ தஞ்சை ஜில்லாவுக்குமட்டும் சுமார் 15 கோடி ரூபாய் செலவு செய்தால் இப்போது இருக்கின்ற பாசன நெருக்கடியை தீர்க்கலாம் என்றும் பாசன முறையை ஒழுங்குபடுத்துவதற்கும், எந்த அளவுக்கு மிச்சப்படுத்துவது என்பது பற்றியும் ஆராய்ந்து சில திட்டங்களை மேற்கொள்ளலாம்

[திரு. வெ. ராமையா] [20th March 1964

என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காகவே ஒரு டிவிஷன் தஞ்சை ஜில்லாவில் ஆரம்பிக்கப்பட்டு, வேலையில் ஈடுபட்டிருக்கிறது. அது போலவே இன்றைக்கு நாம் மேற்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகளின் மூலம் சிக்கனமான முறையில் தண்ணீரை உபயோகப் படுத்திக்கொள்ள முடியும் என்பதில் ஓரளவுக்கு நாம் வெற்றி காணமுடியும் என்று நினைக்கிறேன். என்னுடைய ஆசையெல்லாம், அல்லது இந்த அரசாங்கத்தினுடைய ஆசையெல்லாம், சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் சிறிய பாசனங்களைப் பொறுத்தவரையில் செலவு அதிகமாக இருந்தாலும்கூட, மற்ற மாநிலங்களைவிட நாம் சிறிய நீர்ப்பாசனத்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதில் நாம் முதலிடம் பெறக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். சென்னை ராஜ்யத்திலே ஏறத்தாழ 37,000 ஏரிகள் அல்லது கண்மாய்கள் இருக்கின்றன. அந்த 37,000 ஏரிகளால் பாசனம் பெறக் கூடிய ஆயக்கட்டு எவ்வளவு என்று பார்த்தால் ஏறத்தாழ 20 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனத்திற்கு உரியதாக இருக்கின்றன. அதோடு மட்டுமல்ல. நம்முடைய மாநிலத்தின் விசேஷம் என்னவென்றால், விவசாயத்திலே மற்ற மாநிலங்களில் இல்லாத முறையில் சென்னை ராஜ்யத்திலேதான் ஏறத்தாழ 8 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. அதில் இருக்கக்கூடிய ஆயக்கட்டு ஒரு கிணற்றுக்கு 3 ஏக்கர் அல்லது 5 ஏக்கர் என்று வைத்துக்கொண்டாலும் பெரும் அளவுக்கு கிணற்றுப் பாசனத்தை நம்பியிருக்கின்ற நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. ஒரு பக்கம் ஜீவ நதிகள் என்று நினைக்கக் கூடிய நதிகள் நமக்குக் குறைவு. அரசாங்கத்தினுடைய ஆசை, என்னுடைய ஆசையும்கூட, எப்படி 37,000 கண்மாய்களையும், இன்னும் இந்த 8 லட்சம் கிணறுகளையும் நம்பியிருக்கக்கூடிய நிலங்களை நமக்குக் கிடைக்கக் கூடிய தண்ணீரைக் கொண்டு ஸ்டெபிலைஸ் செய்வது என்பதுதான். அதைப் பற்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே சிந்தித்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஸ்டெபிலைஸ் செய்யும் வேலையைப் பூர்த்தி செய்தால் மற்ற பெரிய திட்டங்களால் கிடைக்கும் லாபத்தை விட இதனால் நிச்சயமாக அதிக லாபம் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. 37,000 கண்மாய்களின் கீழ் வரக்கூடிய நிலங்கள் ஸ்டெபிலைஸ் ஆகாவிட்டாலும் 50 சதவீதம் கண்மாய்களில் ஸ்டெபிலைஸ் செய்து விட்டால்கூட அது லாபமாக இருக்கும். குறிப்பாக வரண்டு இருக்கக்கூடிய கிழக்கு ராமநாதபுரம் அல்லது உடையார்பாளையம் தாலூகா அல்லது மற்ற இடங்களைப் பார்க்கும்போது இந்தக் கண்மாய்களுக்கு, கிணறுகளுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்கக் கூடிய முறையில் பாதுகாப்புக் கொடுக்கும் முறையில் அரசாங்கம் ஏதேனும் ஆலோசனை செய்யவேண்டும், குறிப்பாக நிபுணர்கள் ஆலோசனை செய்யவேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. எங்கேயோ பார்த்து நான் இந்த மாதிரி கூறவில்லை. அதற்கு எனக்கு தைரியம் கொடுத்தது வைகை அணைக்கட்டு என்று சொன்னால் அது மிகையில்லை. பெரியாறு ஸிஸ்டத்தில் எவ்வளவு ஆயக்கட்டு, எவ்வளவு தண்ணீர் கொடுக்கிறார்கள், அதோடு வைகை டாமுக்குக் கீழே இருக்கக் கூடிய ஜில்லாவிலே பெரியாறு தண்ணீரை எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று கேட்கும்போது அவர்கள் புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். பெரியாறு ஸிஸ்டத்தில் பார்த்தால் இப்போது ஆயக்கட்டில் இருக்கக் கூடிய ஏறத்தாழ 1 லட்சத்து 30 ஆயிரம் ஏக்கர். அதற்கு அவர்கள் வருஷம் ஒன்றுக்கு கொடுக்கும் தண்ணீர் அளவைப் பார்த்தால் 24,400 மிலியன் க்யூபிக் ஃபீட் ஆகும். ஆனால் ராமநாதபுரம் பகுதியில் கண்மாய்களைப் பயன்படுத்திக்கொண்டு, அங்கு இருக்கக்கூடிய கால்களைப் பயன் படுத்திக்கொண்டு, மழைத் தண்ணீரைப் பயன்படுத்திக்கொண்டு எவ்வளவு விவசாயம் நடக்கிறது, பெரியாறு நதியிலிருந்து எவ்வளவு கொடுக்கிறோம் என்று புள்ளிவிவரம் கொடுக்கும்போது அவர்கள் சொல்லுகிறார்கள், அங்கும் அவர்கள் கொடுக்கும் கணக்குப்படி 1 லட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் சாகுபடியில் இருக்கிறது. ஸ்தலத்தில் பெய்யும் மழைத் தண்ணீரையும், பெரியாறு தண்ணீரையும் பயன்படுத்தும்போது, பெரியாறு தண்ணீர் அதிக பட்சம் 6 மிலியன் க்யூபிக் ஃபீட் கொடுக்கிறார்கள். இந்த 1 லட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பெரியாறு தண்ணீரைப் கொடுப்பதைப் பார்த்தால் ஒரு பக்கத்தில் 24 மிலியன் க்யூபிக் .·.பீட் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. இன்னொரு பக்கத்தில் 6 மிலியன் க்யூபிக் ஃபீட் தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்று இந்த



20th March 1964] [திரு. வெ. ராமையா]

வித்தியாசங்கள் இருக்கின்றன. இது போலவே இப்போது காவிரியில் இருக்கக் கூடிய உபரித் தண்ணீரை, அதை விரயம் ஆக்காமல், அதை கடலில் போக விட்டு வீணாக்காமல் அந்தத் தண்ணீரை வரண்ட பகுதிக்கும் கொடுக்கும் முறையில் உபயோகப்படுத்தவேண்டுமென்றால் அப்போது ஏராளமாக பணம் செலவு ஆகும் என்ற எண்ணம் இருக்கலாம். இருந்தாலும் அங்கு இருக்கிற வேலையில்லாமையைப் போக்க அங்குள்ள வரண்ட நிலையைப் போக்க யோசிக்கும்போது எப்படி வைகை அணை இன்றைக்கு ராமநாதபுரம் ஜில்லாவிற்கு அந்த ஜில்லாவாசிகளே எதிர்பார்க்காத முறையில் அதைக் கொண்டு நன்மை செய்ய முடிகிறதோ அதுபோல நன்மை செய்ய முயற்சி எடுக்க முடியும். இன்றைக்கு தாம்பரபரணி ஸிஸ்டத்தில் காவிரியைப் போல விவசாயம் நேரடியாக இருக்கிறது. ஓரளவு கண்மாய் பாசனம்கூட இருக்கிறது. எந்த இடத்தை எடுத்தாலும் மாநிலத்திற்கு வெளியிலிருந்து வருகின்றவர்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு இன்றைக்கு நமது மாநிலத்திலே அமைந்திருக்கிறது. புள்ளம்பாடி திட்டத்தைப் பற்றி எழுப்பப்பட்ட கருத்துக்கு பதில் சொல்லும் நேரத்தில் புள்ளம்பாடி திட்டம் எப்படி அமைந்திருக்கிறது என்று சொன்னேன். நேரடியாகப் பாசனம் பெறக்கூடிய அளவுக்கும், குளங்கள் மூலமாக, ஏரிகள் மூலமாக பயன்படக்கூடிய ஆயக்கட்டு அளவையும் பார்த்தால் கண்மாய் மூலமாகப் பயன்படக்கூடிய ஆயக்கட்டு 13,000 ஏக்கர், நேரடியாக 6,000 ஏக்கர் என்ற நிலை இருக்கிறது. இப்போது நமது என்ஜினீயர்களே எப்படி சிந்திக்கிறார்கள் என்றால், எந்த முறையில் சிந்திக்கிறார்கள் என்றால் ஏதோ குவியலாக ஒரு இடத்தில் மட்டும் தண்ணீரைக் கொடுத்து விட்டு இவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று இல்லாமல் எங்கே வரண்ட நிலை இருக்கிறதோ, எங்கே பஞ்ச நிலை இருக்கிறதோ அங்கெல்லாம் கொடுக்க அந்த நிலையில் திட்டங்கள் உருவாக்கவேண்டும் என்ற அடிப்படையை சமீபத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு திட்டமும் இந்த முறையில்தான் அமைந்திருக்கின்றன. குறிப்பாக, சிற்றாறு—பட்டணங்களால் திட்டத்தை எடுத்துக்கொள்வோம். நீர்பாசன இலாகாவின் ஆலோசனைக்கு மட்டும் விட்டிருந்தால் ஒரு போதும் அவர்கள் சம்மதம் கொடுத்திருக்க மாட்டார்கள். காரணம் அவர்கள் கணக்குப்படி அது கட்டுப்படியாகாத திட்டம். ஆனால், ராதாபுரம் பகுதியில், நான்குநேரி பகுதியில் இருக்கக் கூடிய வரண்ட நிலையை, தொடர்ந்து பஞ்சம் இருக்கும் நிலையை எப்படியேனும் போக்கி, அந்த பகுதி மக்களுக்கு வாழ்வு கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் அந்த திட்டத்தை நிறைவேற்றுகிறோம். அங்கே அந்தத் திட்டம் எந்த முறையில் செயல்படுகிறது என்று பார்த்தால், கிடைக்கக் கூடிய தண்ணீரையெல்லாம் பரவலான அளவுக்குக் கொடுக்கவேண்டும் என்று க்ராப் ரெஸ்ட்ரிக்ஷன் வைத்திருக்கிறோம். தோட்டப் பயிர்தான் வைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். கிடைக்கக்கூடிய தண்ணீரை வைத்துக்கொண்டு நன்செய் சாகுபடி செய்வது சுலபம், அப்படிச் செய்யாத காரணம் அங்கு இருக்கும் பஞ்ச நிலை போகவேண்டும் என்று தான். அதேபோல இன்றைக்கு பரம்பிக்குளம்–ஆளியாறுத் திட்டம் ஒரு பெரிய திட்டம். அதிலுள்ள நல்ல அம்சங்களைப் பார்த்தால் இந்த அரசாங்கம் எப்படி, பின் தங்கிய இடங்களில் இருக்கும் மக்களுக்கு நிரந்தரமான நல்வாழ்வு கொடுக்க பெருமளவுக்கு எப்படி செலவு செய்கிறார்கள் என்று தெரியும். பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்தைப் பொறுத்த மட்டில் ஏறத்தாழ 10 கோடி செலவிடுகிறோம். குறைந்த அளவு செலவு செய்து அதற்கான ஆயக்கட்டைக் கண்டுபிடித்திருக்க முடியும். குறிப்பாக, பொள்ளாச்சி தாலூகாவில் இருக்கிறவர்களுக்கு இந்த அரசாங்கத்தின் பேரில்கூட கொஞ்சம் கோபம். ஏனென்றால் அந்த நீரை பொள்ளாச்சியிலேயே பயன்படுத்தும் அளவுக்கு அங்கே நிலப்பரப்பு இருக்கிறது. ஆனால் அரசாங்கம் முக்கியமாக பின் தங்கிய தாராபுரம் பகுதிக்குக் கொடுக்கவேண்டும் என்ற காரணத்திற்காக முடிவு செய்து இந்தியாவிலேயே ஏற்றுக்கொள்ளாத ஒரு பெரிய பொறுப்பை நம் மாநில என்ஜினீயர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் விசேஷம். இந்தத் திட்டத்தை தீவிரமாக ஏற்றுக்கொண்டு, தண்ணீரை தாராபுரம் வட்டாரம், உடுமலைப்பேட்டை பகுதி ஆகிய இடங்களுக்குக் கொண்டு போகவேண்டும், அங்குள்ள வரண்ட நிலை போக வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையில் அந்தத் திட்டம் இப்போது

செயல்படுகிறது. இங்கு வந்திந்த உலக பாங்க் நிபுணர்கள் பார்க்கும்போது "என் இந்த அரசாங்கம் இவ்வுவளவு பணத்த செலவு செய்கிறது, அங்கேயேகூடக் கொடுத்திருக்கலாமே" என்று சொன்னார்கள். மாநிலத்தில் இருக்கிற வரண்ட நிலையைப் போக்க எவ்வளவு கஷ்டத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றாலும் ஏற்று முடிக்கிறோம். அந்த அடிப்படையில் தான் இந்தத் திட்டங்களெல்லாம் உருவாகின்றன. குறிப்பாக காவிரி டெல்டாவில் இருக்கும் பாசனத்தை முறைப் படுத்துவதன் மூலமாக தாம்பரபரணி ஷிஸ்டத்தில் இருக்கும் பாசனத்தை முறைப்படுத்தது வதன் மூலமாக, வைகைத் திட்டத்தை முறைப்படுத்துவதன் மூலமாக ஓரளவுக்கு இன்னும் அதிக பாசன வசதியை வரண்ட பகுதிகளுக்குச் செய்து கொடுக்க முடியும் என்பதில் சந்தேகமே கிடையாது.

இந்தக் கட்டத்திலே நான் விவசாயப் பிரதிநிதிகளாக வந்திருக்கக் கூடிய சட்டசபை அங்கத்தினர்கள் கொஞ்சம் கவனிக்கவேண்டும். ஏதோ நீர்ப்பாசனத் திட்டம் என்று சொன்னால், இன்றைக்கு இருக்கக்கூடிய நினைப்பில் நெல் உற்பத்தி செய்வது தான் என்ற மனப்பான்மை இருக்கிறது. நெல் மட்டும்தான் உற்பத்தி செய்யவேண்டுமென்று சொன்னால், நாம் இன்னும் எவ்வளவு தண்ணீர் கண்டு பிடித்தாலும் இந்த ராஜ்யத்தின் தேவையை பூர்த்தி செய்ய முடியாது. அதைவிட மற்ற பல தானியங்களையும் உற்பத்தி செய்வதற்கும் நாம் நிச்சயமாக நமது மனதை பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். அந்த அடிப்படையில் தான் ஏராளமான பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்க முடியும். பரம்பிகுளம்-ஆளியாறு திட்டத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிரச்னை என்னவென்றால், "நாங்கள் நெல் தான் உற்பத்தி செய்யவேண்டும், எங்களுக்கு தண்ணீர் மேற்கொண்டு கொடுங்கள்" என்று சொல்லுவது தான். லோயர் பவானித் திட்டம் நெல் உற்பத்தி செய்வதற்காக உருவான திட்டம் என்று சொல்லப்பட்டது. அப்படி இல்லை. குறிப்பிட்ட ஒரு சில ஆயிரம் ஏகர் நிலங்களில் நெல்லும், மற்றைய இடங்களில் தோட்டப் பயிர்களும், குறிப்பாக நிலக்கடலையும், பருத்தியும் உற்பத்தி செய்வதற்காக அந்தத் திட்டம் உருவானது. ஆனால், நடைமுறையில் ஏற்பட்ட ஒரு சிக்கலின் காரணமாக, எல்லோரும் நெல் போட்டு உற்பத்தி செய்து, அதற்கு அவர்களுக்காக அளிக்கப்படாத தண்ணீரை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு, அவர்கள் "இன்றைக்கு நாங்கள் நெல் உற்பத்தி செய்கிறோம், ஆகவே, அந்தத் தண்ணீரை வேறு எங்கும் கொண்டு போகக்கூடாது" என்ற கருத்திலே சொன்னார்கள். "கிராப் ரெஸ்டிரிக்ஷன்", "கிராப் பேடர்ன்" இல்லாமல் போய்விடுமானால், பொருளாதார அமைப்பிலே கொஞ்சம் சிக்கல் ஏற்படும். ஏனென்றால் அந்தப் பகுதியில் ஏராளமாக பருத்தி உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. அந்தப் பிராந்தியத்தில் இப்பொழுது பருத்தி கிடையாது. பருத்தி இல்லாமல் குறைந்து கொண்டு வருகிறது. அந்த வட்டாரத்தில் நிலக்கடலை உற்பத்தியும்கூட இல்லாமல் போய்விடுகிறது. நமது மாநிலத்திற்கு தேவையான மற்றைய பொருள்கள் உற்பத்தியாகாமல் போனால், தொழில் நிலை, பொருளாதார நிலை பாதிக்கப்படும். எங்கு பார்த்தாலும் நெல் மாத்திரம் உற்பத்தி செய்தால், நமக்குத் தேவையான மற்ற பண்டங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதெல்லாம் இல்லாமல், "கிராப் ரெஸ்டிரிக்ஷன், கிராப் பேடர்ன்" செய்வதற்கு, அந்த முறையிலே அரசாங்கத்தின் நீர்ப்பாசன கொள்கைக்கு, திட்டத்திற்கு, அத்தனை பேர்களும் நல்ல ஒத்துழைப்பு கொடுக்கும் பட்சத்தில், 37 ஆயிரம் ஏரிகளுக்கும், ஏறத்தாழ 8 லட்சம் கிணறுகளுக்கும்—இன்னும் ஏராளமான கிணறுகள் தோண்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். கஷ்டம்—இல்லாமலேயே தண்ணீர் கண்டுபிடிக்கக்கூடிய வேலையில் நாம் வெற்றிகாணமுடியும்.

அதோடு இல்லாமல் இந்த வருஷம் நீர்ப்பாசன இலாகாவைப் பொறுத்த வரையில், ஒரு சோதனை நிறைந்த வருஷம். கனம் உள் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய விவசாய மான்யக் கோரிக்கையின் ஆரம்ப உரையிலே இறைவனுக்கு அஞ்சலி செலுத்தினார். அதனால், கனம் அங்கத்தினர்களின் நினைப்பு என்னவென்றால், "இந்த வருஷம் பருவ மழை ரொம்பப் பெய்திருக்கிறது, அதனால் சந்தோஷமாகச் சொல்லுகிறார்கள்" என்று நினைக்கலாம். ஆனால், நீர்ப்பாசன இலாகாவை





பொறுத்த மட்டிலும், இந்த வருஷம் சோதனை நிறைந்த வருஷம் என்று சொன்னால், அது மிகையில்லை. ஏனென்றால், கடந்த 10 வருஷங்களாகப் பார்க்கும்பொழுது, தென் மேற்கு பருவக் காற்றினால் கிடைக்கக்கூடிய மழையும், நார்த் ஈஸ்டு மான்ஸூனினால் கிடைக்கக்கூடிய மழையும் இவ்வளவு குறைவாக ஒரு வருஷமும் கிடைத்ததில்லை. அதோடு இல்லாமல் இந்த வருஷம் விசேஷக் கஷ்டம் என்னவென்றால், மேட்டூர் அணையிலே நாம் அதை ஜூன் மாதத்தில் திறக்கும்பொழுது, இந்த வருஷம் அதில் தண்ணீர் இருந்த கடைசி கட்ட நிலை பொதுவாக எப்பொழுதும் இருந்தது இல்லை, இவ்வளவு குறைவாக தண்ணீர் இருந்தது. எல்லோருக்கும் ஒரு பெரிய பயமும், அச்சமும் கூட இருந்தது. இந்த வருஷம் தஞ்சை ஜில்லாவில் சாகுபடி நடக்காதோ என்ற ஒரு பயமும் இருந்தது. அதோடு இல்லாமல், ஸவுத் வெஸ்டு மான்ஸூன் வராமல் போய்விடுமோ என்ற பயமும் இருந்தது. நார்த் ஈஸ்டு மான்ஸூன் வருமோ, வராதோ என்ற ஒரு சந்தேகம் நீர்ப்பாசன இலாகா அதிகாரிகளுக்கு இருந்தது. நார்த் ஈஸ்டு மான்ஸூன் பொறுத்த வரையில், எங்களுக்கு தைரியம் கொடுத்தவர் நமது முதல் அமைச்சர் அவர்கள் என்று சொன்னால், அது மிகையில்லை. ஸவுத் வெஸ்டு மான்ஸூன் இந்த வருஷம் சரியாக இல்லை. இந்த வருஷம் நீர்ப்பாசன இலாகா அதிகாரிகளும், குறிப்பாக ரெவின்யூ இலாகா அதிகாரிகளும் எடுத்துக்கொண்ட நேரடி முயற்சி பாராட்டத்தக்கது. கனம் அங்கத்தினர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் பேசுகிறபொழுது நூற்றுக்கணக்கான தந்திகள் வரும், தொந்தரவு வரும், மகஜர்கள் வரும் என்றெல்லாம் சொன்னார்கள். நான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லுகிறேன். இவ்வளவு நெருக்கடியான ஒரு கட்டத்தில் கூட நீர்ப்பாசன அதிகாரிகளும், ரெவின்யூ இலாகா அதிகாரிகளும் மிக அனுகூலமாக செயல்பட்டார்கள். ஒரு தந்தி கூட காவேரி, பெரியாறு பகுதியிலிருந்து எங்களுக்கு வரவில்லை. தண்ணீர் வேண்டும் என்று தந்தி கொடுப்பது பழக்கத்தில் வந்து விட்டது போலும். தண்ணீர் இருக்கிறதோ இல்லையோ, ஒரு குறிப்பிட்ட தேதியிலே நிச்சயம் தந்தி கொடுப்பது வழக்கம். இதற்காக கிராமத்தில் பணம் கூட வசூல் செய்து வைக்கிறார்கள். அவர்கள் "ஆடோமாடிக்காக" அந்தத் தேதியில் கட்டாயம் தந்தி கொடுத்து விடுகிறார்கள். தந்தி கொடுத்தவர் இந்த மாதிரி ரகத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க முடியும். ஆனால் தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் நிச்சயம் பாராட்டுச் சொல்லியிருக்கிறார்கள். விஷயம் தெரிந்த மிராசுதார்கள் நாங்கள் இந்த வருஷம் தஞ்சை ஜில்லாவில் தண்ணீர் விநியோகம் செய்ததை பாராட்டியிருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மணிமுத்தாறு பகுதி சம்பந்தமாக தந்தி வந்து, "சீப் என்ஜினியரிடம்" நான் பேசி, அரசாங்க செக்ரடரியிடமும் பேசி, அதன் பின்னால் உத்தரவு போட்டு, 15 நாட்களுக்குப் பின்னால், இந்த உத்தரவு அங்கே போகிறது. அந்தத் தகவலை வைத்துக்கொண்டுதான் நான் சொன்னேன்.

**கனம் திரு. வெ. ராமையயா:** அவர்களுக்கு தந்தி வந்தால்தான் நடவடிக்கை எடுப்பார்கள் என்பது இல்லை. இந்த வருஷம் நீர்ப்பாசன இலாகாவைப் பொறுத்தவரைக்கும் எந்த கஷ்டமும் இல்லை என்று நான் மீண்டும் சட்டசபையில் சொல்ல முடியும். அவ்வளவு நல்ல விதமாக இந்த இலாகாவைச் சேர்ந்த "சீப் என்ஜினியர்"-லிருந்து எல்லா அதிகாரிகளும் மிக நல்ல முறையில் தொண்டு செய்து என்னுடைய பாராட்டுதலைப் பெறுவதைவிட, வட்டார விவசாயிகளுடைய பாராட்டுதலைப் பெற்றிருக்கிறார்கள். குறிப்பாக, தஞ்சை ஜில்லா மிராசுதார்களின் பாராட்டுதலைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அதில் ஒன்றும் மிகையில்லை.

நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல, சிறிய நீர்ப்பாசன திட்டங்களையும், நமக்கு இருக்கக்கூடிய பெரிய நீர்ப்பாசன திட்டங்களையும் எடுத்து நிறைவேற்ற மக்களுடைய ஆதரவும், அதிகாரிகளுடைய ஒத்துழைப்பும் நல்ல விதத்தில் அமையும் பட்சத்தில், நமது மாநிலத்தில் நீர்ப்பாசன நிலையை உயர்த்த முடியும். மற்றபடி, பொதுவான பிரச்னைகளுக்கு என்ன பதில்,

[திரு. வெ. ராமையா] [20th March 1964

எப்படி இலாகாவில் கொடுக்க வேண்டுமோ அப்படி கொடுப்பார்கள் என்று சொல்லிக்கொண்டு, எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** காவேரி ஆற்றில் தண்ணீரைக் கொண்டு வருவதுபற்றி, நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மைசூர் முதல் அமைச்சர் அவர்களோடு பேசுவார்கள் என்று சொன்னார்கள். பாலாற்றில் அணை கட்டியிருந்தும், பாலாற்றில் தண்ணீர் கிடையாது. பாலாற்றில் தண்ணீர் வருவது பற்றியும் மைசூர் முதல் அமைச்சர் அவர்களோடு நமது முதல் அமைச்சர் பேசுவார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் கொஞ்சம் நுணுக்கமாகக் கேட்டிருந்தால் தெரியும். காவேரிக்கு புதியதாக தண்ணீர் கொண்டுவர வேண்டாம். நான் சொன்னது எல்லாம், இன்றைக்கு இரண்டு முதல் அமைச்சர்களுக்கும் இருக்கக் கூடிய ஒரு நெருங்கிய தொடர்பின் காரணமாக, அதில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அவர்களைப் பார்த்து பேசுவது நலம் என்ற முறையில் சொன்னேனே ஒழிய, வேறு ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர் திரு. கே. டி. கோசல்ராம் உடனே கமிஷன் அமைக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அதற்குத்தான் நான் பதில் சொன்னேன்.

**திரு. து. ப. அழகமுத்து :** கொல்லிமலை நீர்த்தேக்கத்தைப் பொறுத்து, அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் கருத்து முறண்பாடு இருப்பதற்குக் காரணம் என்ன ? அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** ஒரு கருத்து மாறுபாடும் இல்லை. கனம் அங்கத்தினர் நிலைமையை சரியாக புரிந்து கொள்வதற்கு மறுக்கிறார்கள். நான் என்ன செய்ய முடியும் ? நான் திருச்சி சென்ற பொழுது, என்னிடம் இந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். நான் இன்னும் அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். ஒரு வேளை கனம் அங்கத்தினர் அவர்கள் அந்தத் திட்டத்தை வேண்டாம் என்று சொன்னால், அதைக் கூட நான் பரிசீலனை செய்ய தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு). இல்லை என்று நான் சொல்லுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 5,72,83,300 under Demand "No. XXVI—Irrigation be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,72,83,300 under Demand No. XXVI—Irrigation".

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 6,15,89,500 under Demand No. XXVII—Public Works—Works be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,15,89,500 under Demand No. XXVII—Public Works—Works."

The Demand was put and carried and the Grant was made.



20th March 1964]

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 2,11,75,700 under Demand No. XXVIII—Public Works—Establishments and Tools and Plant be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum of not exceeding Rs. 2,11,75,700 under Demand No. XXVIII—Public Works—Establishments and Tools and Plant".

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 9,64,45,000 under Demand No. XLI—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 9,64,45,000 under Demand No. XLI—Capital Outlay on Irrigation".

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 5,35,86,100 under Demand No. XLII—Capital Outlay on Public Works be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,35,86,100 under Demand No. XLII—Capital Outlay on Public Works".

The Demand was put and carried and the Grant was made. 2-01 p.m

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

128. *Notification issued with G.O. Ms. No. 1872, Public (Services-A), dated 7th December 1963 amending the Madras Public Service Commission Regulations, 1954 relating to the inclusion within the Commission's purview, the temporary post of Foreman*

(*Van Section*) *in Madras Fisheries Subordinate Service.* [*Laid on the Table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

## B.—Reports, Notifications and other papers.

* 89. *Notifications issued with G.O. Ms. No.* 733, *Industries, Labour and Co-operation* (*Labour*), *dated* 8*th February* 1964 *amending Form 'A' to the Madras Shops and Establishments Rules*, 1948 *issued under the Madras Shops and Establishments Act*, 1947 (*Madras Act XXXVI of* 1947).

† 90. *Speech of the Hon. Minister for Works while moving Demand No. I—Land Revenue* (*Tamil*).

† 91. *Speech of the Hon. Minister for Works while moving Demand No. IV—Stamp Administration* (*Tamil*).

† 92. *Policy Note underlying Demand No. IV—Stamp Administration* (*Tamil*).

† 93. *The Land Improvement Loans* (*Madras Amendment*) *Bill*, 1964 (*L.A. Bill No.* 8 *of* 1964) *with Annexure to the Bill.*

† 94. *The Madras Payment of Salaries and Removal of Disqualifications* (*Amendment*) *Bill*, 1964 (*L.A. Bill No.* 9 *of* 1964) *with Annexure to the Bill.*

† 95. *Speech of the Hon. Minister for Works while moving Demand No. XXVII—Public Works, Demand No. XXVIII—Establishment and Tools and Plant and Demand No. XLII—Capital Outlay on Public Works* (*English*).

† 96. *A Review of the working of Minor Ports in Madras State* (*English*).

* Placed on the table of the House on 19th March 1964.

† Circulated to Members on 18th March 1964.





## APPENDIX I

[*Vide* answer to starred Question No. 331 on page 343]

| Serial number and districts. | Dates or months in which supply of Text-books were made to pupils of Harijan Welfare Schools for the year 1963. |
|---|---|
| (1) | (2) |
| 1 Salem .. | 20th June 1963 and up to the end of 22nd July 1963. |
| 2 The Nilgiris .. | 17th August 1963, 20th August 1963, 24th August 1963 and 28th August 1963. |
| 3 Thanjavur .. .. | July 1963. |
| 4 Madurai .. .. | July and middle of August 1963. |
| 5 Tirunelveli .. .. | 7th July 1963, 28th July 1963, 7th August 1963 and 31st October 1963. |
| 6 Coimbatore .. .. | First week of July 1963. |
| 7 North Arcot .. | Last week of July 1963 and up to the middle of August 1963. |
| 8 Ramanathapuram .. | All text-books except three text-books for VI Standard (Tamil, Ganitham and Samooghariyoo Nool) were supplied on 3rd August 1963. The text-books for VI Standard were supplied on 5th September 1963. |
| 9 South Arcot .. | July 1963. |
| 10 Chingleput .. .. | June and July 1963. |
| 11 Tiruchirappalli .. | July and August 1963. |
| 12 Special Deputy Collector (Kallar Reclamation), Madurai | September 1963. |
| 13 Madras City .. | July and August 1963. |

| மாவட்டங்கள். | 1963-ம் ஆண்டில் ஹரிஜன நலத்துறை பள்ளி மாணவ மாணவியர்களுக்காக பாடப் புத்தகங்கள் அனுப்பப் பட்ட தேதிகள் அல்லது மாதங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 1 சேலம் .. .. | 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ம் தேதியிலிருந்து ஜூலை மாதம் 22-ம் தேதி வரை. |
| 2 நீலகிரி .. .. | 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17, 20, 24, 28-ம் தேதிகளில். |
| 3 தஞ்சாவூர் .. | 1963-ம் ஆண்டு ஜூலை. |
| 4 மதுரை .. .. | 1963-ம் ஆண்டு ஜூலை மாதமும், ஆகஸ்டு மத்தியிலும். |
| 5 திருநெல்வேலி .. | 1963-ம் ஆண்டு ஜூலை மாதம் 7, 28-ம் தேதி, ஆகஸ்டு மாதம் 7-ம் தேதி, அக்டோபர் மாதம் 31-ம் தேதி. |
| 6 கோயம்புத்தூர் .. | 1963-ம் ஆண்டு ஜூலை மாத முதல் வாரம். |

| மாவட்டங்கள். | 1963ம் ஆண்டில் ஹரிஜன நலத்துறை பள்ளி மாணவ மாணவியர்களுக்காக பாடப் புத்தகங்கள் அனுப்பப் பட்ட தேதிகள் அல்லது மாதங்கள். |
|---|---|
| (1) | (2) |
| 7 வட ஆர்க்காடு .. | 1963-ம் ஆண்டு ஜூலை மாதக் கடைசி வாரத்திலிருந்து ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி வரை. |
| 8 இராமநாதபுரம் . | VI-ம் ஸ்டாண்டர்டுக்கு உரிய (தமிழ், கணிதம், சமூக அறிவு நூல்) ஆகிய மூன்று பாடப் புத்தகங்களைத் தவிர, மற்ற புத்தகங்களெல்லாம் 1963-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ம் தேதியில் வழங்கப்பட்டன. |
| | VI-ம் ஸ்டாண்டர்டுக்கு உரிய பாடப் புத்தகங்கள் 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ம் தேதியில் வழங்கப்பட்டன. |
| 9 தென் ஆர்க்காடு .. | 1963-ம் ஆண்டு ஜூலை மாதம். |
| 10 செங்கல்பட்டு .. | 1963-ம் ஆண்டு ஜூன், ஜூலை. |
| 11 திருச்சிராப்பள்ளி .. | 1963-ம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு. |
| 12 விசேஷ டெபுடி கலெக்டர் (கள்ளர் சீர்திருத்தம்), மதுரை. | 1963-ம் ஆண்டு செப்டம்பர். |
| 13 சென்னை மாநகரம்.. | 1963-ம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு. |

## APPENDIX II

[*Vide* answer to starred question No. 339 on page 357 supra.]

A.—(*a*), (*b*) and (*c*)—

The Geological Survey of India has been engaged in systematic traverses of unsurveyed areas in each district for the past several decades. During these traverses, they have been recording the mineral occurrences that have been noted and as such, a list of every individual occurrence cannot be complied. In addition to the above, the Geological Survey of India are also carrying out several mineral investigations, the reports of which are received by this Government and are published in the *Fort St. George Gazette* for general information, if found worthwhile. Among the important investigations carried out by the Geological Survey of India can be listed the occurrence of iron ores in Salem, the limestones in Tirunelveli, Ramanathapuram, Madurai, Tiruchirappalli and Salem districts; the copper occurrences in Kallakurichi, South Arcot district; the bauxite occurrence in Salem district and the lignite deposit in South Arcot district.

2. The State Geology Branch has been carrying out detailed investigations for various minerals in Madras State and the list of the important mineral investigations are given below :—

| *Name of mineral.* | *Places investigated.* |
|---|---|
| (1) | (2) |
| **Limestone** .. .. .. | **Sankaridrug—Tiruchengode belt, Namakkal area, Krishnagiri area, Samalpatti, Dasampatti areas—Salem district.** |



| *Name of mineral.* | *Places investigated.* |
|---|---|
| (1) | (2) |
| Limestone—*cont*, .. .. | Lalgudi—Pullambadi area (Dalmiapuram—Kalpadi) Kulittalai taluk (Devarmalai) (Varavanai area), Karur taluk (Pichampatti area)—Tiruchirappalli district. |
| | Nattam and Poovandi areas in Melur taluk, Palaiyam, Gajilampatti area in Dindigul taluk—Madurai district. |
| | Murungamalai near Devadanapatti in Periakulam taluk—Madurai district. |
| | Rameswaram Island, Alangulam, Pandalkudi (under progress)—Ramanathapuram district. |
| | In the Pondy Territory, Sedarapattu and Akasampattu, Turuvai and Sendamangalam—South Arcot district. |
| | Valliyur, Kudangulam, Sattankulam, Pudur and Padmaneri—Tirunelveli district. |
| Clay .. .. .. | Uttatur, Karai area—Tiruchirappalli district. |
| | Kollapalli—Cherambadi—Nilgiris district. |
| | Sivaganga—Ramanathapuram district. |
| | Tiruvikkarai and Kumalampattu in Tindivanam taluk, Tiruvendipuram and Capperquarry, Panruti—South Arcot district. |
| | Sriperambadur, Vaiyapur, Attirambakkam, Mappedu area—Chingleput district. |
| | Arantangi-Alangudi-Adankottai belt—Thanjavur and Tiruchirappalli districts. |
| Bauxite .. .. .. | Shevaroy hills, Kolli hills—Salem district; Nilgiri hills—Nilgiris district. |
| | Konal Ar area (near Berijam), Palni hills—Madurai district. |
| Mica .. .. .. | Neyoor and Tiruvankal (Kalkulam taluk, —Kanyakumari district (exhausted). |
| Do. | Karigiri—North Arcot district. |
| Iron ore .. .. .. | Yedapalli, Illithurai, Kollimalai, Kottagiri, Kodappamund, Snowdon, Tattaram, Thirichigudi, Kuruduguli, Masinagudi, Medanad, Ajjur, Devala—Nilgiris district. |
| | Kanjamalai, Godumalai and Kalrayan hills—Salem district. |
| | Doddakombai - Satyamangalam—Coimbatore district. |
| | Chetpet block, Paracheri, Manickavalli, Nachamalai, Polur taluk—North Arcot district. |

| Name of mineral. (1) | Places investigated. (2) |
|---|---|
| Coal .. .. .. | Near Karaikudi (between 11 and 12 M.S. on Managiri—Devakottai Rastha R.S. in the Agricultural Farm)—Ramanathapuram district. |
| Quartz and felspar .. | Kulittalai taluk, Vadugapatti, Tulukkampatti, Vengaikurichi, Sattambadi, Anaiyur, Karumakavundanpatti, Vidathalampatti, Naganur, Karur taluk, Ariyar, Kokkattipatti, Muthukavundanpatti, Vengamettur—Tiruchirappalli district. |
| | Jalakandapuram, Agraharatalaiyur, Vellakalpatti, Idapadi, Tindamangalam—Salem district. |
| | Vallam—Thanjavur district. |
| | Padmapuram village—North Arcot district. |
| Magnesite .. .. .. | Sirapalli—North Arcot district. |
| Sulphides .. .. .. | Aramanallur—Kanyakumari district; near Manimuthar canal, Cheranmadevi, Ambasamudram taluk—Tirunelveli district. |
| | Periyamalai—North Arcot district. |
| | Mohanur block, Rasipuram taluk—Salem district. |
| Barytes (with quartz) .. | Alangayam—North Arcot district. |
| Phosphatic nodules .. | Karai, Nambakurichi—Tiruchirappalli district. |
| Gypsum .. .. .. | Odiyam, Uttatur—Tiruchirappalli district. Palladam area—Coimbatore district. |
| Gold .. .. .. | Rasipuram (Singliyankombai) placer deposit, Eswaramalai, Attur taluk—Salem district. |
| Ochre .. .. .. | Sengirai (Pudukkottai taluk)—Tiruchirappalli district. |
| Reh salt .. .. .. | Kariyapatti block, Mudukkankulam, Chettikulam, Pudupatti, Aruppukottai taluk—Ramanathapuram district. |
| Graphite .. .. .. | Poovandi—Madurai district. |
| | Sivaganga—Ramanathapuram district. |
| | Panagudi, Kuranjakulam (Sankaranainar Koil)—Tirunelveli district. |
| Gem stone .. .. .. | R. Pudukkottai—Madurai district. (Amazon stone). |
| | Uppidamanaglam—Tiruchirappalli district. |





| Name of mineral. (1) | Places investigated. (2) |
|---|---|
| Groundwater .. .. | Groundwater investigation in Cortalayar Basin. |
| Copper .. .. .. | Kallakurichi taluk—South Arcot district. |

## MINERAL RESOURCES OF THE MADRAS STATE.

The following note gives an account of the mineral resources of the Madras State by districtwise with their approximate reserves. Individual occurrences of the district is also furnished.

### SALEM DISTRICT.

Salem district stands foremost, based with a good amount of mineral resources. The following mineral deposits are found in this district :—

I. *Limestone.*—Limestone in this district is mostly of the crystalline variety, belonging to the Archaean period occurring along with the gneisses and granites. Generally they are only of cement grade except for a few occurrences in the Sankaridrug-Tiruchengode belt.

(a) *Sankaridrug-Trichengode belt—Occurrences.*—Varanallampalayam (15 million tons), Mulakattanur (13 million tons), Pallakkapalayam (7.2 million tons), Kuppanur (1.6 million tons), Salaipalayam (1 million tons), Kolikkalnattam (800,000 tons), Pulapalaiyam (560,000 tons), Vakkalipatti (500,000 tons), Kolingipalayam (500,000 tons), Iveli (500,000 tons), Mottaiyanur (300,000 tons), Malapalayam (150,000 tons), Varadampatti (70,000 tons), Chettipatti (16,000 tons), Dasinayakkanpatti (4,000 tons).

(A major portion has been leased out to India Cements factory near Sankaridrug.)

(b) *Namakkal area.*—Palapatti—Ardhanaripatti (1,630,000 tons), Pillikilipalayam (560,000 tons), Toppur (560,000 tons), Vettuvampalayam (200,000 tons), Ramadevam (140,000 tons), Ponneripatti (100,000 tons), Nadandai (60,000 tons), Sirapalli (50,000 tons), Vadagarai (35,000 tons), Ardanaripuram (15,600 tons), Nayakkanpalayam (9,400 tons), Pirandapain (6,000 tons), Sandakkampalayam (5,000 tons).

(c) *Krishnagiri area.*—Samalpatti-Dasampatti area (750,000 tons).

II. *Iron ore.*—The iron ores of the district are the magnetitie-quartzites (iron content ranging from 32.00 per cent to 38.00 per cent) occurring along with the rocks of Archaean complex. These ores form one of the major deposits n the district with promising results to set up a steel plant in the south with the lignites of the Neyveli.

[20th March 1964

*Occurrences.*—Kanjamalai (175 million tons), Godumalai (60 million tons), Thirthamalai (47 million tons), Valaiyapatti and Thathaiyengarpettai (62 million tons), Rasipuram-Namakkal area (33 million tons).

III. *Magnesite.*—Chalk hills (81 million tons), Sirapalli (300,000 tons), Siranganur (100,000 tons), Chettipatti (50,000 tons), Jangamanayakkanpatti (10,000 tons), a major part of the deposit is leased out to Burn and Company, Salem Magnesites and Dalmia Cement (Bharat), Limited.

IV. *Bauxite.*—Bauxite, the ore of aluminium, is derived from the alteration of older rocks, namely, the charnockite group of rocks, due to the sub-tropical weathering and leaching. It is found in minable quantities in the Sholakaradu (Shevoroy Peak of the Shevoroy hills) only. Reserves 5.6 million tons. The area has been leased to Madras Aluminium Company.

V. *Felspar and quartz.*—These minerals are found in many parts of the district occurring as large veins and are found to be suitable for ceramic and other purposes.

*Occurrences*—

| | | |
|---|---|---|
| Jalakandapuram ... | ... Felspar—30,000 | tons |
| | Quartz—26,000 | tons |
| Agraharatalaiyur ... | ... Quartz—24,000 | tons |
| Vellakalpatti ... | ... Do. —15,000 | tons |
| Idapadi ... ... | ... Felspar—15,000 | tons |
| Tindamangalam ... | ... Quartz—33,000 | tons |

VI. *Chromite.*—Chromite is found in appreciable amount in the Sittamperndi-Pamandapalayam-Ramadevan belt and the estimated reserves is about 5,000,000 tons.

Chromite is also found in the Chalk hills but the reserves are not of a sizable quality.

VII. *Steatite.*—Occurrences of this mineral has been reported in Iswaramurthipalayam, Karuppur, Erumaipatti, Tandavundanur, Chinnappanpatti and in many parts of Omalur and Nakkalpudur taluks.

An occurrence of Asbestos is reported in the Alanganattam village, Namakkal taluk.

Mica is found near Kurumbapatti (Idapadi) village, Sankaridrug taluk.

## TIRUCHIRAPPALLI DISTRICT.

The following deposits are found in this district :—

I. *Limestone.*—Lalgudi—Pullambadi and Dalmiapuram—80 million tons. The deposit is being mined by the Dalmia Cement (Bharat) Limited.



20th March 1964]

Perambalur : Ariyalur (150,000), Garudamangalam (75,000) and Anaipadi.

Kunnam Maravathur.

Kulithalai : Tarakampatti, Kiranur, Meenakshipuram, Varavanai.

Devarmalai (66 million).

Udaiyarpalaiyam.

Karur : Pitchampatti, Vasamarattupatti (6 million).

This deposit is under investigation.

II. *Gypsum.*—Chittalai to Tappay (Pullambadi), Odium, Maravattur, Karai, Terani, Uttatur, Nambakurichi, Peruvalappur, Kalpadi, Sirukanpur, Garudamangalam (15.3 million tons).

The deposit is being worked out by many private companies like India Cements, Tiruchi Mining Works, Messrs. Dalmia Cement (Bharat) Limited.

III. *Clay.*—Uttatur, Karai, Terani 600,000 tons.

IV. *Felspar and Quartz.*—Naganur (3 million), Manaparai (500,000), Ariyur (150,000), Muthukavundanpalayam (650,000), Kokkapatti (250,000), Aravakurichi (240,000).

*Iron ore.*—Pachchaimalai ten million tons.

V. *Barytes.*—Karai (Perambalur taluk) 200 tons.

*Corundum.*—Kiranur (Kulitalai taluk).

VI. *Celestite.*—Nambakurichi, Karai, Sirakanbur, Ayurapuram (375,000 tons).

*Magnesite.*—Pavittram (5,000) (Valasiramani).

*Mica.*—Ayyampalaiyam.

*Ochres.*—Ayinapuram (Karai), Chettipatti 9,000 and Sengarai 6,200.

VII. *Phosphatic nodules.*—Uttatur (2 million) occurs as nodules in the fields.

*Steatite.*—Between Musiri and Kannam.

## THANJAVUR DISTRICT.

*Ilmenite sands.*—Tranquebar, Tirumallivasal, Mouth of Coleroon, between Mimisal and Adirampattinam. Only small quantities, not workable.

*Kankar.*—Kurumbapudi (37,500), Tirumalaisamudram (123,500), Maruthakudi (348,000), Kaliveerarayanpatti (15,000). Suitable for lime burning. (Figures in tons.)

[20th March 1964

*Oil and Natural Gas.*—Neipathur (Shiyali). To be further investigated, but mostly methane gas, probably derived from decaying vegetable matter in the Cauvery alluvium.

The Oil and Natural Gas Commission proposes to drill at Pattukottai for Oil and Natural Gas.

*Quartz.*—Quartz pebbles occurring at Vallam are used locally for grinding lenses on a cottage industry basis.

## COIMBATORE DISTRICT.

The following are the main mineral resources of this district :—

*Limestone.*—Madukkarai—33 million tons.—The Associated Cement Company have a factory utilising these limestones.

*Gypsum.*—Occurs at Palladam, Udumalpet, Arasur, Kottampatti, Vidampatti, Adivalli, Gomangalampudur, Jattampatti, Venkatapuram.

The Gypsum occurs as nodules in the soil, is generally rather impure but useful for cement industry.

*Corundum.*—Kangayam.

*Iron Ore.*—Doddankombai, Satyamangalam. 1.3 million tons.

*Mica.*—Erappanayakkanpalaiyam.

Punjai Puliyampatti (12 miles from Satyamangalam).

Small occurrences of little importance.

*Kynaite.*—Kanjikoil—Small occurrence.

*Barytes.*—Kurichi (near Bhavani)—Small occurrence of no economic value.

## NILGIRIS DISTRICT.

*Bauxite*—

*Kotagiri area*—

Taylors, Hill, 50,000 tons, Kinkombai 4,00,000 tons.

*Elada Area*—

| | | TONS. | | TONS. |
|---|---|---|---|---|
| Avarhalla | I | 280,000 | Yedapalli | 30,000 |
| Do. | II | 180,000 | Rangaswami betta. | 30,000 |
| Do. | III | 42,000 | Boradai | 120,000 |
| Battakorai | I | 180,000 | | |
| Do. | II | 200,000 | | |



20th March 1964]

## NILGIRIS DISTRICT—*cont.*

*Bauxite*—cont.

*Ooty Area*—

| | | TONS. |
|---|---|---|
| Doddabetta | I | 10,000 |
| Do. | II | 40,000 |
| Cairn Hill | .. | 25,000 |
| Wenlock Down | | 420,000 |

Out of total reserves of 3.4 million tons, 2.4 million tons have a composition greater than 40 per cent $A\text{-}l_2O_3$.

*Clay.*—Kollapalli, Cherambadi.

*White clay.*—Tattambarai, Murukambadi, Chelakunnu, Kunnamalai and Uppatichal.

*Gold.*—Nadghani-Pandalur, Oughterlong valley.

*Iron Ore*—

| | TONS. |
|---|---|
| Yedapalli ... ... ... ... ... | 153,000 |
| Illithorai ... ... ... ... ... | 100,000 |
| Kollimalai ... ... ... ... | 200,000 |
| Kodappamund ... ... ... .. | 300,000 |
| Taitarnenn ... ... ... ... | 600,000 |
| Tirichigudi ... ... ... ... | 82,500 |
| Kurudugli ... ... ... ... | 144,000 |
| Marniagudi ... ... ... ... | 360,000 |
| Mednad ... ... ... ... ... | 250,000 |
| Assur ... ... ... ... ... | 48,000 |
| Devala ... ... ... | 11 million tons. |

## MADURAI DISTRICT.

The following are the only mineral deposits of the district :—

*Bauxite.*—Near Konal Ar on the Kodaikanal-Cochin Road beyond Berigam settlements known as Konal Ar Area. The deposit is still under investigation but likely to be a fairly good deposit.

*Limestone.*—Occurs at Poovandi (27,000 tons), Sunnambur (1 million ton), Tirumal, Palaiyam-Gejjalampatti (30 million), Nattam, Eliyarpatti (1 million tons of magnesium limestone), Chekkanurani.

*Apatite.*—Central station, Kottagudi. The deposit is being investigated.

*Amazon stone.*—Near R. Pudukottai.

*Mica.*—Batlangundu, Agamalaipatti. There are petty occurrences.

[20th March 1964

## RAMANATHAPURAM DISTRICT

The following mineral deposits are found in this district :—

*Limestone.*—Limestone occurs in Pandalgudi, Palavanattam, Chinnayapuram, Alangulam, Kallamanikkampatti. The reserves estimated (in tons) are 2.2 million, 2.2 million, 1.5 million, 2.07 and 3 million tons respectively.

The reserves of marine limestone at Rameswaram Island and the islands of gulf of Mannar work out to 6 million tons. Some of these deposits are being worked out by the Madras Cements Company.

*Clay.*—The gondwana formation to the east of Sivaganga, Nattarasankottai, Pannagudi and Vettiyur have developed clays.

*Ochers (red and yellow).*—Poovalli and Pudupatti (Sivaganga) have occurrences to the tune of 2·8 million tons.

*Gypsum.*—Occurs near Avattandai, Kokkadi (near Sayalgudi), Nalli (Sattur taluk), Nattam (Mudukalattur).

*Graphite.*—Poovandi, Tirumanjoli.

*Garnet and ilmenits sandals.*—Northern portions of Rameswaram Islan, Tondi (Tiruvadanai taluk).

*Coal.*—Karaikudi. This deposit is being investigated.

## TIRUNELVELI DISTRICT.

The following minerals are found in this district :—

*Limestone.*—Occurs at Ramayyanapatti (4·4 million tons), Tenkulam (2·3 million tons), Talaiyuthu (5 million tons), Selliyanallur (10,000), Kayattur (500,000), Nagalapuram (100,000 tons), Pubupatti (100,000), Illumbavanam (60,000), Pandapuli (40,000), Uttumalai (38,500), Pannamparai (120,000), Karisalpatti-Pillaikulam, Itteri Padmaneri hills (266,000), Valliyoor (1 million), Kudangulam-Vijayapatti 6 million (Tufaceous), Tadankulam (30,000), Meenakshipatti (20,000), Sattankulam (9) million tons and Seybunganallu (2 million tons).

Occurrences at Vallisai, Mallapatti, Semnapudur, Pudur and Vallinayakapuram have also been reported.

Many of these deposits are being mined for cement by the India Cements.

*Gpysum* is found to occur at Kandaswamypuram, Jagavirapuram, Kuttanurani, Tangammalpuram, Kumara Subrahmaniapuram, Suplampuram, Ramanutu.

These deposits are sporadically mined by the India Cements for the manufacture of cement.

*Graphite.*—Kurinjikulam (100 tons), Pannagudi, Terku Kallikulam north-east of Sankaranainarkovil. The occurrences are not of minable size.

*Ilmenite.*—Vaippar, Kallar bank and other coastal tracts.

*Mica.*—Kila Singampatti.



20th March 1964]

## KANYAKUMARI DISTRICT.

The following minerals are found in this district :—

*Copper.*—Pyrrohtite in Manganmalai, Arumanallur. Deposit still under investigation.

*Ilmenite and Monazite sands.*—Coastal tracts of Kanyakumari, Manavalakurichi. Lipuram. Forms well known source of monazite and ilmenite. Investigated in detail by the Atomic Energy Commission, but results not published.

## CHINGLEPUT DISTRICT.

The following is the only deposit so far located in this district :—

*Clay.*—Vaiyapur (200,000), Vallam (100,000), Eraiyur (1 million), Vallakottai. Tattanur-Alaganur (1,000,000) (1 million), Sriperambadur (25,000), Kannantangal. Ellikuttimedu (1,000,000), Meppedu-Sattarai (6,000,000), Ariyathur. Vengattur, Krishnapuram-Attirambakkam, Roppur-Perumalpatti (2 million), Palanjur, Ambattur (20 million).

The clay is being mined by private companies and are being used for refractory and ceramic purposes.

## NORTH ARCOT DISTRICT.

*Baryte.*—Alangayam, Andiyappanur (Tirupattur taluk), Narasingapuram—3 million tons.

The barytes occur intermixed with large amounts of quartz and licence difficult for exploitation.

*Clay.*—Pappantangal (near Tiruvattur), Duri and Pullar.

*Feldspar and Quartz.*—Sholingur 20,000 tons Feldspar and 300,000 tons Quartz.

*Iron ore.*—Chetpet Block—Paracheri, Manichavalli, Nachamalai, Karapundi—4 million tons.

*Ochres.*—Tachchur Small quantities.

*Steatite.*—Tamaripak (Arni), Muthapalli.

*Pyrrhotite.*—Periyamalai (Thaniar R.F.).

The pyrite (iron sulphide) is not in sufficient concentration for economic workability.

## SOUTH ARCOT DISTRICT.

Lignite forms the most important mineral deposit in Madras State. About 2,000 million tons are expected to occur over on area of about 100 square miles around Neyveli-Pondicherry area. It is being actively mined by the Neyveli-Lignite Corporation.

*Clay.*—Pannikuppam (46,000), Sirangappam (2,000), Melmambattu (2,000), Maligambattu (24,000), Palaiyam-Tiruvendipuram-capper quarry (15,000), Patturai (a few thousand), Tiruvikkarai (500,000) Brahmadesam (3,500,000), Adasal—5 million tons.

[20th March 1964

## SOUTH ARCOT DISTRICT—*cont.*

The clays are being used for refractory and ceramic use by several factories.

*Copper.*—Mamandur, Toluvanthangal and Odiyanthal village in Kallakurichi taluk. Still under investigation. About 8,000 tons of ore-bearing rock may be available.

*Limestone.*—In the Pondicherry territory, Sedarapatti and in Villupuram and Tindivanam taluk, near Akasampattu, Turuvai, Sendamangalam (3·7 million).

The limestones contain silica forming the main impurity (about 15 to 25 per cent average).

### *South Arcot district*

| | *Minerals.* |
|---|---|
| 1 Stoneware Pipes, Madras Ltd., Madras. | China clay. |
| 2 V. Ramakrishna and Sons Ltd., Madras. | Limestone. |
| 3 Messrs. Dalmia Cements (P) Ltd., Tiruchirappalli district. | Fireclay. |
| 4 A. K. Ranganathan, P.B. 614, Mylapore. | Do. |
| 5 Sri M. Gundu Rao, 10, Kasi Chetty Street, Madras-1. | China clay. |
| 6 A. V. Govindaswamy, 75, Gandhi Street, Nellikuppam. | Do. |
| 7 Messrs. Tube Suppliers (Private) Ltd., No. 6, Armenian Street, Madras-1. | Fireclay. |
| 8 G. Subbarayalu, Mill Owner, Diversion Road, Panruti. | 1 China clay.<br>2 Fireclay. |
| 9 M. A. Shanmuga Mudaliar, Merkanam. | Fireclay. |
| 10 R. Jayaraman, Nellikuppam .. | Do. |
| 11 K. Gurunathan, 100, Erusappa Chetty Street, Cuddalore N.T. | White clay. |

### *North Arcot district.*

| | |
|---|---|
| 1 Messrs. Parry and Co., Madras. | Quartz and Feldspar. |
| 2 V. P. Mohamed Omer, 174, Angappa Naicken Street, Madras. | Vermiculite. |
| 3 S. Angamuthu, Veerakuttai Street, Tiruvannamalai, North Arcot. | Magnesite. |
| 4 B. K. Narayana Singh, Kumara Park West, Bangalore. | Barytes. |



20th March 1964]

### *Tiruchirappalli district.*

| | *Minerals.* |
|---|---|
| 1 The India Cements Ltd. .. | Gypsum. |
| 2 Dalmia Cement (B) Ltd. Tiruchirappalli. | 1 Fireclay.<br>2 Limestone.<br>3 Gypsum and Phosphatic Nodules.<br>4 Black clay. |
| 3 Sri P. A. C. Ramaswamy Raja .. | Gypsum. |
| 4 Messrs. Tiruchirappalli Mining Works Ltd. | 1 Gypsum.<br>2 Phosphatic Nodules.<br>3 Celestite. |
| 5 Messrs. Parry and Co., Madras .. | Quartz. |
| 6 Sri K. A. Chinnaswamy, Ariyalur. | Gypsum. |
| 7 Messrs. Inden Bisellers, Madras. | 1 Quartz.<br>2 Feldspar. |
| 8 Sri Sundararajalu Naidu, Manaparai. | Quartz and Feldspar. |
| 9 Sri Vadivel Mudaliar and Sons, Ltd. | Do. |
| 10 Smt. Avva Bibi, Tiruchirappalli. | Gypsum and Phosphatic Nodules. |
| 11 L. Ramiah, Tiruchy .. .. | Quartz and Feldspar. |
| 12 Gypsum Industries (Private) Ltd. | Gypsum. |
| 13 Sri K. N. Raman, Dalmiapuram. | Quartz and Feldspar. |
| 14 S. Adaikalaswamy, 10, W.B. Road, Tiruchirappalli. | Do. |

### *Salem district.*

| | |
|---|---|
| 1 Messrs. Parry and Co. .. .. | Limestone. |
| 2 Messrs. Mineral Mining Co. .. | Corundum. |
| 3 Sri G. Ramappa, Kuppam P.O., Chittoor district. | 1 Magnesite.<br>2 Asbestos. |
| 4 The Mettur Chemical and Industrial Corporation, Salem. | imestone. |
| 5 The Magnesite Syndicate Ltd. .. | Magnesite. |
| 6 Dalmia Cement (B) Ltd., Dalmiapuram. | 1 Magnesite.<br>2 Chromite.<br>3 Corundum. |
| 7 V. R. Venugopal, 123, Suramangalam Road, Shevapet, Salem-2. | Magnesite. |

### *Salem district*—cont.

| | *Minerals.* |
|---|---|
| 8 Murugappa Agencies (Private) Ltd. | Chromite. |
| 9 Perumal Gounder, Sri R. .. | Magnesite. |
| 10 Messrs. India Cements Ltd. .. | Limestone and Kankar. |
| 11 V. Ramakrishna Chetty, Salem. | Soapstone. |
| 12 A. S. S. Syed Mohamed, Elangakurichi. | 1 Feldspar.<br>2 Quartz.<br>3 Garnet.<br>4 Corundum. |
| 13 Messrs. Burn and Co., Calcutta. | Chromite. |
| 14 Sri M. Subramaniam, Periagolapatti village, Salem taluk. | Magnesite. |

### *Coimbatore district.*

| | |
|---|---|
| 1 A.C.C. Ltd., Madukkarai .. | Limestone. |
| 2 V. Raman, Udumalpet .. | Gypsum. |
| 3 Swamy (Private) Ltd. .. .. | Do. |
| 4 Sri Sundaraswamy Gounder .. | Do. |

### *Nilgiris district.*

| | |
|---|---|
| 1 K. G. Kunhamed .. .. | Mica. |
| 2 V. Ragavan Nair .. .. | Do. |
| 3 Messrs. Textool and Co., Coimbatore. | Iron ore. |
| 4 Eapen Jacob, Coimbatore .. | Fireclay. |
| 5 Sri Subba Reddy, Gudalur .. | Mica. |
| 6 Sri K. Thillai, Coonoor .. | Bauxite. |

### *Madurai district.*

| | |
|---|---|
| 1 Sri G. Nagasubramaniam .. | 1 Mica.<br>2 Calcite. |
| 2 Sri Pakala Suryanarayana Rao. | Limestone. |
| 3 P. Velayutham, Tiruchy district. | Graphite. |

### *Ramanathapuram district.*

| | |
|---|---|
| 1 Sri V. Ramakrishna and Sons .. | Limestone. |
| 2 The Globe Mining Syndicate. | Gypsum. |
| 3 India Cements .. .. .. | 1 Limestone.<br>2 Kankar. |
| 4 Madras Cements Ltd. .. | 1 Limestone.<br>2 Kankar. |



### *Ramanathapuram district*—cont.

| | *Minerals.* |
|---|---|
| 5 P. A. C. Ramaswamy Raja .. | 1 Gypsum.<br>2 Limestone. |
| 6 Sri S. N. N. Sankaralinga Iyer. | Gypsum. |
| 7 Sri P. A. C. Ramaswamy Raja. | 1 Limestone.<br>2 Kankar. |
| 8 Madras Gypsum Mining Works. | Gypsum. |
| 9 Messrs. Nellai Mining Works .. | Do. |
| 10 Messrs. Swamy (Private) Ltd. .. | Do. |

### *Tirunelveli district.*

| | |
|---|---|
| 1 Messrs. India Cements (Private), Ltd. | Limestone and Kankar. |
| 2 J. M. B. Roche .. .. .. | Crystal Limestone. |
| 3 K. S. Krishnamoorthi ... .. | Limestone.<br>Gypsum. |
| 4 Messrs. Dharangadhara Chemical Works (Private) Ltd. | Limestone. |
| 5 Messrs. Industrial Chemicals Ltd., Talayuthu. | Do. |
| 6 Messrs. Swamy (Private) Ltd. .. | Gypsum. |
| 7 Messrs. Nellai Mining Works .. | Do. |
| 8 Messrs. Madras Gypsum Mining Works. | Do. |
| 9 Sri B. K. Narayana Sing of Bangalore. | Corundum. |
| 10 T. Ponnusamy Nadar, Tirunelveli district. | Garnet sand. |

கடந்த பல ஆண்டுகளாக இந்தியக் கனிவள ஆராய்ச்சித் துறையினர் ஒவ்வொரு மாவட்டத்திலும் கனிவள ஆராய்ச்சி செய்யப்படாத பகுதிகளைத் தவறாமல் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இவ்வாறு ஆராய்ச்சி செய்து கனிகள் அகப்படும் விவரங்களைக் குறித்து வந்துள்ளனர். எனவே, தனித் தனியே காணப்படும் ஒவ்வொரு கனிப் பொருளையும் குறித்துப் பட்டியல் கொடுப்பதென்றால் முடியாது. இதோடுகூட, இந்தியக் கனிவள ஆராய்ச்சித் துறையினர் கனிப் பொருட்களைப் பற்றி பல்வேறு ஆராய்ச்சிகளை நடத்தி அவை பற்றிய அறிக்கைகளை இந்த அரசாங்கத்தாருக்கு அனுப்புகின்றனர். அவை தகுதிவாய்ந்தவையாகக் கருதப்பட்டால், அனைவரும் தெரிந்து கொள்ளும்படி அந்த அறிக்கைகள் செய்ன்ட் ஜார்ஜ் கோட்டை கெஜெட்டில் வெளியிடப்படுகின்றன.

இந்தியக் கனிவள ஆராய்ச்சித் துறையினர் நடத்திய முக்கிய ஆராய்ச்சிப் பணிகளின் விளைவாகத்தான் சேலத்தில் இரும்புக் கனியும், திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை, திருச்சி, சேலம் மாவட்டங்களில் சுண்ணாம்புக் கற்களும், தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் தாமிரமும், சேலம் மாவட்டத்தில் பாக்சைட்டும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பழுப்பு நிலக்கரியும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

2. சென்னை மாவட்டத்திலுள்ள பல்வேறு கனிவளங்களைக் குறித்து மாநிலக் கனிவள ஆராய்ச்சிப் பிரிவினர் விரிவான ஆராய்ச்சிகளை நடத்தினர். கீழ்க்கண்ட முக்கிய கனிவளங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தாதுக்களின் பெயர்கள். (1) | ஆராய்ச்சி நடத்திய இடங்கள். (2) |
| --- | --- |
| சுண்ணாம்பு கற்கள் .. | சேலம் மாவட்டம்.—சங்கரிதுர்கம், திருச்செங்கோடு பகுதி, நாமக்கல் பகுதி, கிருஷ்ணகிரி பகுதி, சாமல்பட்டி, தாசம்பட்டி பகுதி. |
| | திருச்சிராப்பள்ளி மாவட்டம்.—லால்குடி—புள்ளம்பாடி பகுதி—(டால்மியாபுரம்—கல்பாடி), குளித்தலை தாலூகா—(தேவர்மலை—வரவணைப் பகுதி)—கரூர் மாவட்டம் (பிச்சம்பட்டிப் பகுதி). |
| | மதுரை மாவட்டம்.—மேலூர் தாலூகாவிலுள்ள நத்தம் பூவந்திப்பகுதிகள், திண்டுக்கல் தாலூகாவிலுள்ள பாளையம் கஜிலம்பட்டிப் பகுதி, பெரியகுளம் தாலூகாவிலுள்ள தேவதானப்பட்டிக் கருகிலுள்ள முருங்க மலை. |
| | ராமநாதபுரம் மாவட்டம்.—ராமேஸ்வரம் தீவு, ஆலங்குளம், பந்தல்குடி (வேலை நடந்து வருகிறது). |
| | தென் ஆர்க்காடு மாவட்டம்.—புதுச்சேரிப் பகுதியிலுள்ள சேதாரப்பட்டு, ஆகாசம்பட்டு, துருவை, சேந்தமங்கலம். |
| | திருநெல்வேலி மாவட்டம்.—வள்ளியூர், குடங்குளம், சாத்தான்குளம், புதூர், புதுமனேரி. |
| களிமண் .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் :—உத்தாத்தூர், கரைப்பகுதி. |
| | நீலகிரி மாவட்டம்.—கொல்லப்பள்ளி—சேரம்பாடி. |
| | ராமநாதபுரம் மாவட்டம்.—சிவகங்கை. |
| | தென்ஆர்க்காடு மாவட்டம்.—திண்டிவனம் தாலூகாவிலுள்ள திருவக்கரை, குமளம்பட்டு, திருவேந்திபுரம், கேப்பர்குவாரி, பன்ருட்டி. |
| | செங்கல்பட்டு மாவட்டம்.—ஸ்ரீபெரம்பூதூர், வையாபூர், அத்திரம்பாக்கம், மாப்பேடு பகுதி. |



| தாதுக்களின் பெயர்கள். (1) | ஆராய்ச்சி நடத்திய இடங்கள். (2) |
| --- | --- |
| களிமண்—தொடர்ச்சி. | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள்.—அறந்தாங்கி, ஆலங்குடி, ஆதனக்கோட்டைப் பகுதி. |
| பாக்சைட் .. | சேலம் மாவட்டம்.—சேர்வராயன் மலை, கொல்லி மலை. |
| | நீலகிரி மாவட்டம்.—நீலகிரி மலை. |
| | மதுரை மாவட்டம்.—கோனலாறு பகுதி (பேரிகம் சமீபம்) பழனிமலை. |
| | கன்னியாகுமரி மாவட்டம்.—(வேலை முடிந்து விட்டது) கல்குளம் தாலூகா, நெய்யூர், திருவான்கல். |
| அபிகரம் .. | வட ஆர்க்காடு மாவட்டம்.—காரிகிரி. |
| இரும்புக்கனி .. | நீலகிரி மாவட்டம்.—எடபல்லி, இல்லித்துறை, கொல்லிமலை, கோத்தகிரி, கோடப்பமந்து, ஸ்நோடன், தட்டாரம், திருச்சிகுடி, கருடுகுலி, மசினகுடி, மேநாடு, அஜ்ஜூர் தேவாலா. |
| | சேலம் மாவட்டம்.—கஞ்சமலை, குடமலை, கல்ராயன்மலை. |
| | கோயம்புத்தூர் மாவட்டம்.—தொட்டகோம்பை, சத்தியமங்கலம். |
| | வட ஆர்க்காடு மாவட்டம்.—போளூர் தாலூகா, சேத்துப்பட்டுத் தொகுதி, பறச்சேரி, மாணிக்கவல்லி, நச்சமலை. |
| நிலக்கரி ... .. | ராமநாதபுர மாவட்டம் —காரைக்குடிக்குச் சமீபத்தில் விவசாயபண்ணையில் மானகிரி தேவகோட்டை ரஸ்தாவில் 11—12 எம்.எஸ்-க்கு இடையில் உள்ள. |
| படிகக்கல்—களிக்கல் (Quartz and feldspar) | திருச்சிராப்பள்ளி மாவட்டம்.—குளித்தலை தாலூகா, வடுகப்பட்டி, துலுக்கம்பட்டி, வேங்கைக்குறிச்சி, சாத்தம்பாடி, ஆனையூர், கருமக்கவுண்டன்பட்டி, விடத்தலம்பட்டி, நாகனூர், கரூர், தாலூகா, அரியூர், கோக்கட்டிப்பட்டி, முத்துக்கவுண்டன் பட்டி, வேங்கமேட்டூர். |
| | சேலம் மாவட்டம்.—ஜலகண்டபுரம், அக்கிரகாரத்தலையூர், வெள்ளக்கால்பட்டி, எடப்பாடி, திண்டமங்கலம். |
| | தஞ்சாவூர் மாவட்டம்.—வல்லம். |
| | வட ஆர்க்காடு மாவட்டம்.—பத்மாபுரம் கிராமம். |
| மாக்னஸைட் .. | வட ஆர்க்காடு மாவட்டம்.—சிரப்பள்ளி. |
| சல்பைடுகள் .. | கன்னியாகுமரி மாவட்டம்.—அரமாநல்லூர். |
| | திருநெல்வேலி மாவட்டம்.—அம்பாசமுத்திரம் தாலூகா, மணிமுத்தார் கால்வாய் சமீபம்; சேரன்மாதேவி. |
| | வட ஆர்க்காடு மாவட்டம்.—பெரியமலை. |
| | சேலம் மாவட்டம்.—மோஹனூர் தொகுதி, ராசிபுரம் தாலூகா. |

| தாதுக்களின் பெயர்கள். (1) | ஆராய்ச்சி நடத்திய இடங்கள். (2) |
|---|---|
| பாரப்பளிங்குக் கல் (Barytes) படிகக் கல்லுடன். | வட ஆர்க்காடு மாவட்டம்.—ஆலங்கேயம். |
| பாஸ்வரக் கணுக்கள் (Phosphatic nodules) | திருச்சிராப்பள்ளி மாவட்டம்.—காரை, நம்பக் குறிச்சி. |
| உறைகளிக்கல் (Gypsum) | திருச்சிராப்பள்ளி மாவட்டம்.—ஒதியம், உத் தாத்தூர். |
| | கோயம்புத்தூர் மாவட்டம்.—பல்லடம் பகுதி. |
| தங்கம் .. .. | சேலம் மாவட்டம்.—ராசிபுரம் (சிங்கிலியன் கோம்பை) மறைந்துபோகக்கூடிய படிவம், (Placer deposit) ஈஸ்வரமலை, ஆத்தூர் தாலூகா. |
| மஞ்சள் களிமண் .. | திருச்சிராப்பள்ளி மாவட்டம்.—செங்கீரை (புதுக் கோட்டைத் தாலூகா). |
| சிவப்பு உப்பு (Red Salt) | ராமநாதபுரம் மாவட்டம்.—கரியபட்டித் தொகுதி, முதுக்கன் குளம், செட்டிக்குளம், புதுப்பட்டி, அருப்புக்கோட்டைத் தாலூகா. |
| துரியம் (Graphite) .. | மதுரை மாவட்டம்.—பூவந்தி. |
| | ராமநாதபுரம் மாவட்டம்.—சிவகங்கை. |
| | திருநெல்வேலி மாவட்டம்.—பணகுடி, குறிஞ்ச குளம் (சங்கரநயினார்கோயில்). |
| மாணிக்கக் கற்கள் | மதுரை மாவட்டம்.—ஆர். புதுக்கோட்டை (அமே சான்கல்). |
| | திருச்சிராப்பள்ளி மாவட்டம்.—உப்பிடாமங்கலம் |
| ஊற்றுநீர் .. | குடத்தலையாறு பகுதியில் ஊற்று நீர் ஆராய்ச்சி. |

## தமிழ் நாட்டின் கனி வளங்கள்

தமிழ் நாட்டின் கனி வளங்கள். கீழ்க்கண்ட குறிப்பில் தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக எங்கெங்கே எவ்வளவு கனி வளங்கள் கிடைக்கின்றன என்று கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித் தனியாகக் கிடைக்கும் கனிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

### சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டந்தான் கனிச் செல்வத்தில் முதலிடம் வகிக்கிறது. இந்த மாவட்டத்தில் ஏராளமாகக் கிடைக்கும் பலவகைக் கனிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

I. **சுண்ணும்புக்கல்.**—இந்த மாவட்டத்தில் கிடைக்கும் சுண்ணும்புக் கல்லில் பெரும்பாலும் கற்கள் வடிவில் கிடைக்கின்றன. அவை பண்டைக் காலத்தைச் சேர்ந்தவை. இவை கருங்கற்களுடன் கலந்து கிடைக்கின்றன. சங்கரி துர்க்கம்—திருச்செங்கோடு பகுதியில் கிடைப்பவை தவிர மற்றவை யனைத்தும் பொதுவாக சிமென்டின் தரத்தைச் சேர்ந்தவையாகும்.



(a) **சங்கரி-துர்க்கம்-திருச்செங்கோடு பகுதியில் கிடைக்கும் இடங்கள்.**—வரநல்லம் பாளையம் (150 லட்சம் டன்), மூலகத்தனூர் (130 லட்சம் டன்), பள்ளக்கப்பாளையம் (72 லட்சம் டன்), குப்பனூர் (16 லட்சம் டன்), சாலைப் பாளையம் (10 லட்சம் டன்), கோழிக்கால் நத்தம் (8,00,000 டன்), புலப்பாளையம் (560,000 டன்), வக்காலிப்பட்டி (500,000 டன்), கொழிஞ்சிப்பாளையம் (500,000 டன்), ஐவேலி (500,000 டன்), மொட்டயனூர் (306,000 டன்), மலபாளையம் (50,000 டன்), வரதம்பட்டி (70,000 டன்), செட்டிப்பட்டி (16,000 டன்), தாசிநாயக்கன் பட்டி (4,000 டன்), இதில் பெரும்பகுதி சங்கரிதுர்க்கத் திற்கருகில் இருக்கும் இந்தியா சிமென்ட்ஸ் தொழிற்சாலைக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

(b) **நாம்க்கல் பகுதி.**—பாலப்பட்டி— அர்த்தநாரிப்பட்டி (1,630.000 டன்), பில்லிக்கினிபாளையம் (560,000 டன்), தோப்பூர் (560,000 டன்), வேட்டும்பாளையம் (200,000 டன்), ராமதேவம் (140,000 டன்), பொன்னேரிப்பட்டி (100,000 டன்), நடந்தை (60,000 டன்), சிரப்பள்ளி (15,000 டன்), வட கரை (35,000 டன்), அர்த்தநாரிபுரம் (15,600 டன்), நாய்க்கன்பாளையம் (9,400 டன்), பிராண்டபம் (6,000 டன்), சண்டக்கரம் பாளையம் (5,000 டன்).

(c) **கிருஷ்ணகிரிப் பகுதி.**—சாமல்பட்டி—தாசம்பட்டிப் பகுதி (750,000 டன்).

II. **இரும்புக்கனி.**—இந்த மாவட்டத்தில் கிடைக்கும் இரும்புக்கனி மாக்னைட்டட் குவார்ட்ஸைட்ஸ் (Magnetite Quartzites) ரகத்தைச் சேர்ந்தது. (இதில் 32 சதவீதம் முதல் 3,800 சதவீதம் வரை இரும்புச் சத்து இருக்கிறது.) பழங்காலத்துப் பாறைகளுடன் இது கலந்திருக்கிறது. இம் மாவட்டத்தில் இந்த இரும்புக்கனி தான் அதிகமாகக் கிடைக்கிறது. அதனால் இந்த இரும்பையும் நெய்வேலிப் பழுப்பு நிலக்கரியையும் கொண்டு தென் னாட்டில் ஓர் உருக்காலை நிறுவ வசதி இருக்கிறது.

**கிடைக்கும் இடங்கள்.**—கஞ்சமலை (1,750 லட்சம் டன்), கூடமலை (600 லட்சம் டன்), தீர்த்தமலை (470 லட்சம் டன்), வளையாப்பட்டி—தாத்தய்யங்கார் பேட்டை (620 லட்சம் டன்), ராசிபுரம்—நாமக்கல் பகுதி (330 லட்சம் டன்).

III. **மாக்னஸைட்டு.**—சுண்ணும்புப் பாறைகள் (81 மில்லியன் டன்), சிரப்பள்ளி (300,000 டன்), சீரங்கனூர் (100,000 டன்), செட்டிப்பட்டி (50,000 டன்), ஜங்கமநாய்க்கன்பட்டி (10,000 டன்), இதில் பெரும்பங்கு பர்ன் & கம்பெனி, சேலம். மாக்னஸைட்ஸ்—டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் ஆகிய கம்பனிகளுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

IV. **பாக்ஸைட்.**—பாக்ஸைட் என்பது அலுமினியத் தாதுவாகும், உஷ்ண மண்டல வெப்ப நிலை காரணமாக சார்னோகைட் (Charnokite) தொகுதி யைச் சேர்ந்த பழங்காலப் பாறைகள் உருமாறி பார்ஸைட்டாக மாறுகின்றன. இது சுரங்கம் போட்டு வெட்டியெடுக்கக்கூடிய அளவில் சோளக்காடு (சேர்வராய்) (சேர்வராயன்மலை உச்சி) என்னும் இடத்தில் மட்டுமே கிடைக் கிறது. ஏறத்தாழ 56 லட்சம் டன் பாக்ஸைட் இங்கு இருக்கிறது. இது சென்னை அலுமினியம் கம்பெனிக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

V. **களிக்கல் (Felspar), படிகக்கல் (Quartz).**—இது சேலம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் பரவலாகக் கிடைக்கிறது. இது மண்பாண்டத் தொழிலுக்குச் சிறந்தது.

**கிடைக்கும் இடங்கள்.**—

| | | | டன். |
|---|---|---|---|
| ஜலகண்டபுரம் | .. | களிக்கல் | 30,000 |
| | .. | படிகக்கல் | 26,000 |
| அக்ரஹிராத்தலையூர் | .. | படிகக்கல் | 24,000 |
| வெள்ளக்கால்பட்டி | .. | படிகக்கல் | 15,000 |
| இடப்பாடி | .. | களிக்கல் | 15,000 |
| திண்டமங்கலம் | .. | படிகக்கல் | 33,000 |

[20th March 1964

VI. குரோமைட் (Chromite).—குரோமைட் சித்தம்பேறுந்தி—பாமந்த பாளையம்—ராமதேவன் பகுதியில் கணிசமான அளவுக்குக் கிடைக்கிறது. சுமார் 5,000,000 டன் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சுண்ணும்புப் பாறையிலும் குரோமைட் கிடைக்கிறது. ஆனால் அங்கு குறைவாகவே கிடைக்கிறது.

VII. ஸ்டியடைட் (Steatite)—இது ஈசுவரமூர்த்திப்பாளையம், கருப்பூர், எருமைப்பட்டி, தாண்டவந்தனூர், சின்னப்பன்பட்டி, ஓமலூர், நக்கல் புதூர் தாலுகாக்களின் பல பகுதிகள் ஆகியவற்றில் கிடைக்கிறது.

கல்நார்.—நாமக்கல் தாலுகாவைச் சேர்ந்த அலங்கநத்தம் கிராமத்தில் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அபிரகம்—சங்கரிதுர்க்கம் தாலுகாவிலுள்ள (இடப்பாடி) குரும்பைப் பட்டி கிராமத்திற்கு அருகே கிடைக்கிறது.

## திருச்சி ஜில்லா

இந்த ஜில்லாவில் பின்வரும் கனிவளங்கள் கிடைக்கின்றன :—

I. சுண்ணும்புக் கல்—

லால்குடி .. புள்ளம்பாடி டால்மியாபுரம் .. 600 லட்சம் டன் டால்மியா சிமண்ட் ஸ்தாபனத்தார் இந்தப் படிவங்களைத் தோண்டிப் பயன் படுத்துகின்றனர்.

பெரம்பலூர் .. அரியலூர் (150,000) கருடமங்கலம் (75,000) ஆனப்பாடி. குண்ணம் மரவத்தூர்.

குளித்தலை .. தரகம்பட்டி, கீரனூர், மீனாட்சிபுரம், வரவணை.

தேவர் மலை, உடையார் பாளையம். (660 லட்சம் டன்)

கரூர் .. பிச்சம்பட்டி, வாமரத்துப்பட்டி (60 லட்சம்), இங்கே கனிவள ஆராய்ச்சி நடந்து வருகிறது.

II. உறைகளிக்கல்.—சித்தலை—தப்பே (புள்ளம்பாடி) ஒதியம் மரவாத்தூர், காரை, தேரணி, உத்தாத்தூர், நம்பகுறிச்சி, பெருவளப்பூர், கல்பாடி, சிருகாம்பூர், கருடமங்கலம் (153 லட்சம் டன்) இந்தியா சிமெண்ட்ஸ், திருச்சி மைனிங் வொர்க்ஸ், மெஸர்ஸ் டால்மியா சிமெண்ட்ஸ், போன்ற பல தனியார் துறைக் கம்பெனிகள் இந்தப் படிமங்களைத் தோண்டி எடுத்துப் பயன்படுத்தி வருகின்றன.

III. களிமண் .. உத்தாத்தூர், காரை, தேரணி, 600,000 டன்.

IV. களிக்கல், படிகக்கல் .. நாகனூர் (30 லட்சம்), மணப்பாரை (500,000) அரியூர் (150,000), முத்துக் கவுண்டன் பாளையம் (650,000) கொக்கப்பட்டி (250,000) அரவக்குறிச்சி (240,000)

இரும்புக்கனி .. பச்சைமலை .. 100 லட்சம் டன்.

V. பாரப்பளிங்குக்கல் : (Barytes) காரை (பெரம்பலூர் தாலுகா) 200 டன்.

கொரண்டம் .. கீரனூர் (குளித்தலை தாலுகா).



20th March 1964]

### திருச்சி ஜில்லா—தொடர்ச்சி

VI. செலஸ்டைட் : நம்பகுறிச்சி, காரை, சிருகாம்பூர், அயினாபுரம், (375,000 டன்).

மாக்னேசைட் .. பவித்திரம் (5,000) (வாளசிராமணி.

அபிரகம் .. அய்யம்பாளையம்.

மஞ்சல் களிமண் .. அயினாபுரம் (காரை) செட்டிப்பட்டி (9,000) செங்கரை (6,200).

VII. பாஸ்வரக் கணக்கள். .. உத்தாத்தூர் (20 லட்சம்). இவை வயல்களில் சிறு முடிச்சுகளாகக் காணப்படுகின்றன.

ஸ்டியடைட் .. முசிரிக்கும் கண்ணத்துக்கும் இடையில்.

### தஞ்சை ஜில்லா

இல்மினேட் மணல் .. தரங்கம்பாடி, திருமல்லிவாசல், கொள்ளிட முகத்துவாரம், பீமிசல், அதிராம்பட்டிணம் ஆகிய ஊர்களுக்கு இடையே வெகு சிறு அளவில் கிடைக்கிறது. தொழிற்சாலை ஏற்படுத்தும் அளவில் கிடைப்பதில்லை.

கங்கார் (Kankar) .. குரும்பப்பூடி (37,500), திருமலை சமுத்திரம் (123,500) மருதக்குடி (348,000) கலிவீரராயன்பட்டி (15,000) சுண்ணும்புக் காளவாய் போடுவதற்கு ஏற்றது. (டன்களில்).

எண்ணெய் (இயற்கைவாயு). .. நெய்பத்தூர் (சீர்காழி) ; மேலும் ஆராய்ச்சி செய்யவேண்டியிருக்கிறது. இங்கு கிடைப்பது பெரும்பாலும் மீதேன் வாயு. காவேரி நீர்ப் படுகையிலிருந்து அழுகிய வண்டல் மண்ணிலிருந்து கிடைக்கிறது. எண்ணெய் இயற்கை வாயுக் கமிஷன், எண்ணெய் இயற்கை வாயுவுக்கு புதுக்கோட்டையில் டிரில் போட்டு ஆராய உத்தேசித்துள்ளனர்.

படிகக்கல் .. வல்லத்தில் கிடைக்கும் படிகக் கற்கள் குடிசைத் தொழிலாக லென்ஸுகள் கடைய உள்ளூரிலேயே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### கோயம்புத்தூர் ஜில்லா

இந்த ஜில்லாவின் முக்கிய கனி வளங்கள் பின்வருமாறு :—

சுண்ணும்புக்கல் .. மதுக்கரை, 63 லட்சம் டன், அஸோசியேடெட் சிமெண்ட் கம்பெனி தன் தொழிற்சாலைக்கு இந்தச் சுண்ணும்புக் கற்களைப் பயன்படுத்துகிறது.

உறைகளிக்கல் .. பல்லடம், உடுமலைப்பேட்டை, அரசூர், கொட்டம்பட்டி, விடாம்பட்டி, ஆதவள்ளி, கோமங்கலம் புதூர், ஜத்தம்பட்டி, வெங்கடாபுரம் ஆகிய இடங்களில் கிடைக்கிறது. இது மண்ணில் முடிச்சுகளாகக் கிடைக்கிறது. பொதுவாக அவ்வளவு சுத்தமானது அல்ல.. ஆனால், சிமெண்ட் தொழிற்சாலைக்குப் பயன்படுகிறது.

குருந்தக்கல் (Corundum) .. காங்கேயம்.

[20th March 1964

### கோயம்புத்தூர் ஜில்லா—தொடர்ச்சி.

**இரும்புக் கனி** .. தொட்டன் கோம்பை, சத்தியமங்கலம் 13 லட்சம் (டன்).

**அபிரகம்** .. எரப்பநாயக்கன் பாளையம், புஞ்சை புளியம்பட்டி, (சத்தியமங்கலத்திலிருந்து 12 மைல் தூரம்) சில இடங்களில் சிறு அளவில் கிடைக்கிறது. அதிக முக்கியத்துவம் வாய்ந்ததில்லை.

**கைனைட் (Kynaite)** .. காஞ்சிகோயில். சிறிதளவுக்குக் கிடைக்கிறது.

**பாரப்பளிங்குக்கல் (Barytes)** .. குறிச்சி (பவானி அருகில்). மிகச்சிறிய அளவே கிடைக்கிறது.

### நீலகிரி ஜில்லா.

#### கொத்தகிரி பகுதி

**பாக்சைட்** .. டெய்லர்ஸ் ஹில். (50,000 டன்). கின் கோம்பை (400,000 டன்).

#### எல்லடா பகுதி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அவர்ஹள்ளா | I | .. | 280,000 டன் | எடப்பள்ளி | 30,000 டன் |
| ஷை | II | .. | 180,000 டன் | ரங்கஸ்வாமி பெட்டா. | 30,000 டன் |
| ஷை | III | .. | 42,000 டன் | பொரடை | 120,000 டன் |
| பட்டக் கோரை | I | .. | 1<sup></sup>80,000 டன் | | |
| ஷை | II | .. | 200,000 டன் | | |

#### ஊட்டி பகுதி

| | | | |
|---|---|---|---|
| தொட்ட பெட்டா | I | .. | 10,000 டன் |
| ஷை | II | .. | 40,000 டன் |
| கெய்ர்ன் ஹில் | | | 25,000 டன் |
| வென்லாக் டௌன் | | | 420,000 டன் |

கிடைக்கிற மொத்த அளவான 34 லட்சம் டன்னில், 24 லட்சம் டன்னில் 40 சத வீதத்துக்கு அதிகமாகவே A-$_2$°3 இருக்கிறது.

**களிமண்** .. கொல்லப்பள்ளி, செரம்பாடி.

**வெள்ளைக் களிமண்** .. தட்டாம்பாரை, முருகம்பாடி, செல்லக்குன்னு, குன்னமலை, உப்படிச்சல்.

**தங்கம்** .. நத்கனி—பந்தலூர்–ஆட்டர்லாங் பள்ளத்தாக்கு

**இரும்புக்கனி** ..

| | |
|---|---|
| எடப்பள்ளி | 153,000 டன் |
| இர்லித்தொரை | 100,000 டன் |
| கொல்லிமலை | 200,000 டன் |
| கொடப்பமந்து | 300,000 டன் |
| ஸ்நோடன், டெய்ட்டரென் | 600,000 டன் |
| திருச்சிகுடி | 82,500 டன் |
| குருடுகுளி | 144,000 டன் |
| மரினியகுடி | 360,000 டன் |
| மேடநாடு | 250,000 டன் |
| அகூர் | 48,000 டன் |
| தோவாலை | 110 லட்சம் டன் |



20th March 1964]

### மதுரை ஜில்லா.

இந்த ஜில்லாவில் கிடைக்கும் கனிவளங்களாவன :—

**பாக்சைட்** .. கொடைக்கானலில் கோனல் ஆறுக்கு அருகே —கோனல் ஆர் பகுதி எனச் சொல்லப்படுகிற போரிகாம் செட்டில்மெண்டுக்கு அப்பாலுள்ள கொச்சின்சாலை படிவங்கள் ஆராய்ச்சி நிலையிலேயே இருந்து வருகின்றன ; ஆனால், இங்கு கிடைக்கவிருக்கும் படிவங்கள் சிறந்தவையாக இருக்கலாம்.

**சுண்ணாம்புக்கல்** .. பூவந்தியில் கிடைக்கிறது. (27,000 டன்கள்) சுண்ணாம்பூர் (10 லட்சம் டன்) திருமால், பாளையம், கெஜ்ஜலம்பட்டி (300 லட்சம்), நத்தம், இளையார்பட்டி (10 லட்சம்) மக்னீசியம் சுண்ணாம்புக்கல், செக்கமூரணி.

**அபடைட் (Apatite)** .. செண்ட்ரல் ஸ்டேஷன், கொத்தகுடி, படிமங்கள் பற்றி ஆராய்ச்சி நடந்து வருகிறது.

**அமேஸான் ஸ்டோன் (Amazon Stone)** .. R. புதுக்கோட்டை அருகே.

**அபிரகம்** .. வத்தலகுண்டு, அகமலைப்பட்டி, இங்கே சிறு அளவில் கிடைக்கின்றது.

### இராமநாதபுரம் ஜில்லா.

இந்த ஜில்லாவில் பின்வரும் உலோகப் படிமங்கள் கிடைக்கின்றன :—

**சுண்ணாம்புக்கல்.**—பந்தல்குடி, பழவநத்தம், சின்னையாபுரம் ஆலங்குளம், கள்ளமாணிக்கம்பட்டி ஆகிய இடங்களில் சுண்ணாம்புக்கல் கிடைக்கிறது. இவ்விடங்களில் முறையே கிடைக்கும் சுண்ணாம்புக்கல் அளவு (டன்களில்) 22 லட்சம், 22 லட்சம, 15 லட்சம், 20 லட்சம், 30 லட்சம் டன், என மதிப்பிடப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத் தீவிலும், தலைமன்னார் வளைகுடாப் பகுதியிலும் கிடைக்கும் சுண்ணாம்புக்கல் 60 லட்சம் டன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் சில படிமங்கள் மதராஸ் சிமெண்ட்ஸ் கம்பனியால் தோண்டி எடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

**களிமண்.**—சிவகங்கை, நாட்டரசன்கோட்டை, பண்ணைகுடி, வெட்டியூர் கிழக்கேயுள்ள கோண்டுவனை அமைப்பு களிமண்ணாக மாறிவிட்டிருக்கிறது.

**மஞ்சள் களிமண் (Cochres) (சிகப்பு, மஞ்சள்)**—பூவள்ளி, புதுப்பட்டி (சிவகங்கை) ஆகிய இடங்களில் 28 லட்சம் டன் வரை கிடைக்கிறது.

**உறை கனிக்கல்.**—அவட்டந்தை, கொக்காடி (சாயல்குடி அருகே) நல்லி (சாத்தூர் தாலூகா), நத்தம் (முதுகுளத்தூர்).

**கிரா·.பைட்.**—பூவந்தி, திருமாஞ்சோலை.

**கார்னட், இலமனட் மணல் (Garnite and Ilmenite sands).**—இராமேஸ்வரம் தீவு, தொண்டி திருவாடானை தாலூகா வடபகுதிகள்.

**நிலக்கரி.**—காரைக்குடி, இதுபற்றி இங்கு ஆராய்ச்சி நடந்து வருகிறது.

[20th March 1964

## திருநெல்வேலி ஜில்லா

இந்த ஜில்லாவில் பின்வரும் கனிபொருட்கள் கிடைக்கின்றன :—

**சுண்ணாம்புக்கல்.**—ராமையன்பட்டி, தென்குளம், தாழையூத்து, ஆகிய இடங்களில் முறையே 44 லட்சம் டன், 23 லட்சம் டன், 50 லட்சம் டன் கிடைக்கின்றது. செல்லியநல்லூர் (10,000 டன்), கயத்தூர் (500,000 டன்), நாகலாபுரம் (100,000 டன்), புதுப்பட்டி (100,000 டன்), இலும்பவனம் (60,000 டன்), பந்தபுளி (400,000 டன்), ஊத்துமலை (38,500 டன்), பன்னம்பாறை கரிசல்பட்டி—பிள்ளைக்குளம், இத்தேரி (120,000 டன்).

| | | |
|---|---|---|
| தாடங்குளம் (30,000) .. | மீனாட்சிப்பட்டி (20,000) .. | வளிசை, மல்லப்பட்டி, சென்னபுதூர், புதூர், வள்ளிநாயகபுரம் ஆகிய இடங்களிலும் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| சாத்தான்குளம் (90 லட்சம் டன்) .. | .. | இங்குள்ள படிமங்களில் பெரும்பாலனவற்றில் இந்தியா சிமெண்ட்ஸ் ஸ்தாபனத்தார் சிமெண்டுக்காக சுரங்க வேலை செய்கின்றனர். |
| செய்துங்கநல்லூர் (20 லட்சம் டன்) .. | .. | .. |
| உறைகனிக்கல் .. | கந்தசாமிபுரம், ஜகவீரபுரம், குத்தனூரணி, தங்கம்மாள்புரம், குமாரசுப்ரமணியபுரம், சுப்லாம்புரம், ராமனூத்து ஆகிய இடங்களில் கிடைக்கிறது. | சிமெண்ட் தயாரிப்புக்கு இந்தியா சிமெண்ட்ஸ் ஸ்தாபனத்தார் சில இடங்களில் சுரங்க வேலை மேற்கொண்டுள்ளனர். |
| கிரா.:.பைட் .. | வைப்பார், கல்லார் கரை. | இதர கடற்கரைப் பகுதிகள். |
| அபிரகம் .. | கீழசிங்கம்பட்டி .. | |

### கன்னியாகுமரி மாவட்டம்

செம்பு.— மங்கமலை, அருமநல்லூர் பகுதிகளில் பைரோடைட். இந்தப் படிமங்கள் இன்னும் ஆராயப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| இலமனேட் } மோனசைட் } மணல் } | கன்னியாகுமரி கடற்கரைப் பகுதிகள். மணவாள குறிச்சி, லீபுரம். மோனசைட். |

இலமனேட்படிவுகளுக்குப் பெயர் பெற்றவை இதை அணுசக்திக் குழு விவரமாக ஆராய்ச்சி செய்தது; ஆனால் அக் குழுவின் முடிவுகள் வெளியிடப்படவில்லை.



20th March 1964]

### செங்கற்பட்டு மாவட்டம்

இந்த மாவட்டத்தில் இதுவரையில் களிமண் மட்டுமே கிடைத்துள்ளது.

வையாவூர், வல்லம், ஏரையூர், வல்லக்கோட்டை (200,000), (10,000,000), (10 லட்சம்). ( — ).

தட்டனூர், ஆடிகலூர், ஸ்ரீபெரும்புதூர், கண்ணந்தாங்கல் (1,000,000), (10 லட்சம்), (25,000).

எலிக்குட்டிமேடு, மேப்பேடு கட்டாரை, அரியாத்தூர் (1,000,000), (6,000,000).

வெங்காத்தூர், கிருஷ்ணபுரம், அட்ரம்பாக்கம்.

கோப்பூர்—பெருமாள்பட்டி, பழஞ்சூர், அம்பத்தூர் (20 லட்சம்), (200 லட்சம்).

இந்தக் களிமண்ணை சூடு தாங்கும் கற்கள் தயாரிப்பதற்கும் மண் பாண்டங்கள் செய்வதற்கும் தனியார் துறையினர் பயன்படுத்தி வருகின்றனர்.

### வட ஆர்க்காடு மாவட்டம்

**பாரப்பளிங்குக்கல்.**—ஆலங்காயம், ஆண்டியப்பனூர் [திருப்பத்தூர் **(Baryte)** தாலூகா] நரசிங்கபுரம் (30 லட்சம்).

பாரப்பளிங்குக்கல் பெருமளவு படிகக் கற்களுடன் கலந்து கிடைப்பதால் தோண்டி எடுத்துப் பயன்படுத்துவது கடினமாக உள்ளது.

**களிமண்.**—பாப்பான்தாங்கல் (திருவத்தூருக்கு அருகாமையில்) காவிரி புல்லார்.

**களிக்கல் (Felspar).**—சோளிங்கபுரம் 20,000 Fs. டன்கள்.

**படிகக்கல்.**—சோளிங்கபுரம் 300,000 Qs. டன்கள்.

**இரும்புக் கனி.**—சேத்துப்பட்டு தொகுதி; பரச்சேரி, மணிச்சவல்லி, நொச்சிமலை, காப்பூண்டி 40 லட்சம் டன்.

**மஞ்சள் களிமண் (Ochres).**—தச்சூர்—சிறிதளவே கிடைக்கிறது.

**ஸ்டியடைட் (Steatite).**—தாமரைப்பாக்கம் (ஆரணி) முகுதப்பள்ளி.

**பைரோடைட்.**—பெரியமலை (தானியார் R.F.) (Pyrrhotite).

பைரட் (இரும்பு சல்பைடு) லாபகரமாகத் தோண்டி எடுத்து பயன்படுத்தக்கூடிய அளவுக்குக் கிடைக்கவில்லை.

### தென் ஆர்க்காடு மாவட்டம்

பழுப்பு நிலக்கரி சென்னை மாநிலத்தில் கிடைக்கும் மிக முக்கிய கனிப்பொருளாகும். நெய்வேலி-பாண்டிச்சேரி பகுதியில் 100 சதுர மைல் பகுதியில் 2,000 மிலியன் டன் பழுப்பு நிலக்கரி கிடைக்கலாம். நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷன் பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

**களிமண்.**—பனிக்குப்பம் (46,000), ஸ்ரீரங்கப்பம் (2,000), மேல்மாம்பட்டு (2,000), மாளிகம்பட்டு (24,000), பாளையம்-திருவேந்திபுரம்-கேப்பர் குவாரி (15,000), பூத்துறை (சில ஆயிரம்). திருவிக்கரை (500,000), பிரம்மதேசம் (3,500,000), அடசல், 50 லட்சம் டன்.

[20th March 1964

## தென் ஆர்க்காடு மாவட்டம்—தொடர்ச்சி.

இந்தக் களிமண் சூடு தாங்கும் கற்கள் தயாரிப்பதற்கும் மண் பாண்டங்கள் செய்வதற்கும் பல தொழிற்சாலைகளால் பயன்படுத்தப் படுகிறது.

**செம்பு.**—கள்ளக்குறிச்சி தாலூகாவில் உள்ள மாம்ந்தூர், தொழுவந் தாங்கல், ஒடியந்தல் கிராமம்—இன்னும் ஆராய்ச்சி நிலையில் உள்ளது. தாமிரக் கனிப் படிவம் நிறைந்த பாறைகள் 8,00,000 டன் கிடைக்கலாம்.

**சுண்ணாம்புக்கல்.**—பாண்டிச்சேரிப் பகுதி, சேதாரம்பட்டி, விழுப்புரம், திண்டிவனம் தாலூகாக்கள், அரசம்பட்டுக்கு அருகில், தருவை, சேந்த மங்கலம் (3·7 மில்லியன்).

இந்தச் சுண்ணாம்புக்கல்லில் "சிலிகா" இருப்பதால், இது அசுத்தப் பொருள் கலந்தது. (சுமார் 15 முதல் 25 சதவீதம்).

| தென் ஆர்க்காடு மாவட்டம். | உலோகங்கள். |
|---|---|
| 1 ஸ்டோன்வேர் பைப்ஸ் மதராஸ் லிமிடெட், சென்னை. | சீனக் களிமண். |
| 2 V. இராமகிருஷ்ண அண்டு சன்ஸ் லிமிடெட், சென்னை. | சுண்ணாம்புக் கல். |
| 3 மெசர்ஸ். டால்மியா சிமின்ட் (B) லிமிடெட், திருச்சிராப் பள்ளி மாவட்டம். | சுட்டக் களிமண் (Fire-clay). |
| 4 A. K. இரங்கநாதன், P.B. 614, மைலாப்பூர். | ஷை |
| 5 திரு. M. குண்டுராவ், 10, காசி செட்டி தெரு, சென்னை-1. | சீனக் களிமண். |
| 6 A. V. கோவிந்தசாமி, 75, காந்தி தெரு, நெல்லிக் குப்பம். | ஷை |
| 7 மெசர்ஸ், டியூப் சப்ளையர்ஸ் (பி) லிமிடெட், 6, அரண்மனைக்காரத் தெரு, சென்னை—1. | சுட்டக் களிமண். |
| 8 G. சுப்பராயலு, மில் சொந்தக்காரர், டைவர்ஷன் ரோடு, பண்ருட்டி. | (1) சீனக் களிமண், (2) சுட்டக் களிமண். |
| 9 M. A. சண்முக முதலியார், மெற்காணம். | சுட்டக் களிமண். |
| 10 R. ஜெயராமன், நெல்லிக் குப்பம். | சுட்டக் களிமண். |
| 11 K. குருநாதன், 100, இருசப்ப செட்டித் தெரு, கடலூர், நியூ டவுன். | வெள்ளைக் களிமண். |

**வட ஆர்க்காடு மாவட்டம்—**

| | |
|---|---|
| 1 மெசர்ஸ். பாரி அண்டு கம்பெனி, சென்னை. | படிகக்கல், களிக்கல் (Feldspar). |
| 2 V. P. மோகமது ஊமர், 174, அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை. | வர்மிகுலைட் (Veirculite). |



20th March 1964]

## வட ஆர்க்காடு மாவட்டம்—தொடர்ச்சி.

| வட ஆர்க்காடு—தொடர்ச்சி. | உலோகங்கள்—தொடர்ச்சி. |
|---|---|
| 3 S. அங்கமுத்து, வீராக் குட்டைத் தெரு, திருவண்ணாமலை, வட ஆர்க்காடு. | மாக்னசைட் (Magnesite). |
| 4 K. நாராயணசிங், குமரன் பார்க், மேற்கு பெங்களூர். | பாரப் பளிங்குக்கல் (Barytes). |

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

| | |
|---|---|
| 1 தி. இந்தியா சிமின்ட் (P) லிமிடெட். | ஊறைகளிக்கல் (Gypsum). |
| 2 டால்மியா சிமின்ட்(P) லிமிடெட், திருச்சிராப்பள்ளி. | 1 சுட்டக்களிமண், 2 சுண்ணாம்புக்கல், 3 ஜிப்சம்-பாஸ்பேட், 4 கருங்களிமண், |
| 3 திரு. P. A. C. இராமசாமி ராஜா. | உறைகளிக்கல், |
| 4 மெசர்ஸ் திருச்சிராப்பள்ளி மைனிங் ஒர்க்ஸ் லிமிடெட். | 1 உறைகளிக்கல், 2 பாஸ்வரக்கணுக்கல் (Phasphatic Nodules), 3 செலிஸ்டைட் (Celestite). |
| 5 மெசர்ஸ் பாரி அண்டு கம்பெனி, சென்னை. | படிகக்கல். |
| 6 திரு. K. A. சின்னசாமி, அரியலூர். | உறைகளிக்கல். |
| 7 மெசர்ஸ் இன்டன்பைசெல்லர்ஸ், சென்னை. | 1 படிகக்கல், 2 களிக்கல (feledspar). |
| 8 திரு. சுந்தராஜிலு நாயுடு, மணப்பாறை. | படிக்கல், களிக்கல். |
| 9 ஸ்ரீ வடிவேல் முதலியார் அண்டு சன்ஸ் லிமிடெட். | படிகக்கல், களிக்கல். |
| 10 ஸ்ரீமதி அவ்வா பீபீ, திருச்சிராப்பள்ளி. | உறைகளிக்கல், பாஸ்வரக் கணுக் கல். |
| 11 L. ராமையயா, திருச்சிராப் பள்ளி. | படிகக்கல், களிக்கல். |
| 12 ஜிப்சம் இன்டஸ்ட்ரீஸ் (பி) லிமிடெட். | உறை களிக்கல். |
| 13 ஸ்ரீ K. N. ராமன், டால்மியா புரம். | படிகக்கல், களிக்கல். |
| 14 S. அடைக்கலசாமி, நெ. 10, W.B. ரோடு, திருச்சிராப் பள்ளி. | படிகக்கல், களிக்கல். |

**சேலம் மாவட்டம்—**

| | |
|---|---|
| 1 மெசர்ஸ் பாரி அண்டு கம்பெனி. | சுண்ணாம்புக்கல். |
| 2 மெசர்ஸ் மினரல் மைனிங் கம்பெனி. | குருந்தக் கல் (Grundum). |

[20th March 1964

| சேலம் மாவட்டம்—தொடர்ச்சி. | | உலோகங்கள்—தொடர்ச்சி. |
|---|---|---|
| 3 | ஸ்ரீ G. ராமப்பா, குப்பம், அஞ்சல் நிலையம், சித்தூர் மாவட்டம். | 1 மாக்னசைட், 2 கல் நார். |
| 4 | தி மேட்டூர் கெமிகல் அண்டு இண்டஸ்டிரியல் கார்ப்போரேஷன், சேலம். | சுண்ணும்புக்கல். |
| 5 | தி மாக்னசைட் சிண்டிகேட் லிமிடெட். | மாக்னசைட். |
| 6 | டால்மியா சிமெண்ட் (B) லிமிடெட், டால்மியாபுரம். | 1. மாக்னசைட். 2. குரோமைட் 3. குருந்தக்கல். |
| 7 | V.R. வேணுகோபால், 123, சூரமங்கலம் ரோடு, செவ்வாப்பேட்டை, சேலம். | மாக்னசைட். |
| 8 | முருகப்பா ஏஜென்சீஸ் லிமிடெட். | குரோமைட். |
| 9 | ஸ்ரீ R. பெருமாள் கவுண்டர். | மாக்னசைட். |
| 10 | மெசர்ஸ் இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட். | சுண்ணும்புக்கல், கங்கார் (Kankar). |
| 11 | V. இராமகிருஷ்ண செட்டி. | மாக்கல் (Soapstone). |
| 12 | A. S. . சையத் முகமது, ஏலங்க குறிச்சி. | (1) களிக்கல், (2) படிகக்கல், (3) மாணிக்க வகை (Garnet) (4) குருந்தக் கல். |
| 13 | மெஸர்ஸ் பான் அண்டு கம்பெனி, கல்கத்தா. | குரோமைட் (Chromitte). |
| 14 | ஸ்ரீ எம். சுப்ரமணியன், பெரிய கோளப்பட்டி, சேலம் தாலுகா. | மாக்னசைட் (Magnasite). |

கோயம்புத்தூர் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 1 | ஏ. சி. சி. லிமிடெட், மதுக்கரை. | சுண்ணும்புக்கல் (Lime Stone). |
| 2 | வி.ராமன், உடுமலைப்பேட்டை. | உறை களிக்கல் (Gypsum). |
| 3 | ஸ்ரீ சுந்தர சுவாமி கவுண்டர். | உறை களிக்கல் (Gypsum). |
| 4 | சுவாமி (பிரைவேட்) லிமிடெட். | உறை களிக்கல் (Gypsum). |

நீலகிரி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 1 | கே. ஜி. குன் அகமது. | அபிரகம் (Mica). |
| 2 | வி. ராகவன் நாயர். | அபிரகம் (Mica). |
| 3 | மெஸர்ஸ் டெக்ஸ்ட்டூல் அண்டு கம்பெனி, கோயம்புத்தூர். | இரும்புக்கனி (Ironore). |
| 4 | ஈப்பன் ஜாக்கப், கோயம்புத்தூர். | சுட்டக் களிமண் (Fire-clay). |
| 5 | ஸ்ரீ சுப்பா ரெட்டி, கூடலூர். | அபிரகம் (Mica). |
| 6 | ஸ்ரீ கே. தில்லை, குன்னூர். | பாக்ஸைட் (Bauxite). |



20th. March 1964]

| மதுரை மாவட்டம். | | உலோகங்கள். |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ஜி. நாகசுப்ரமணியம். | அபிரகம் (Mica), கால்சைல் (Calcite). |
| 2 | ஸ்ரீ பாசூரியநாரயணராவ். | சுண்ணும்புக்கல் (Lime stone). |
| 3 | பி. வேலாயுதம், திருச்சி மாவட்டம். | கிராபைட் (Graphite). |

ராமநாதபுரம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 1 | ராமகிருஷ்ண அண்டு சன்ஸ. | சுண்ணும்புக்கல் (Lime stone). |
| 2 | தி குளோப் மைனிங் சிண்டிகேட். | உறை களிக்கல். |
| 3 | இண்டியா சிமெண்ட்ஸ். | 1 சுண்ணும்புக்கல் (Lime stone) 2 கங்கார் (Kankar). |
| 4 | மெட்ருஸ் சிமெண்ட் லிமிடெட். | 1 சுண்ணும்புக்கல் (Lime stone) 2 கங்கார் (Kankar). |
| 5 | பி. ஏ. சி. ராமசுவாமி ராஜா. | 1 உறை களிக்கல், 2 சுண்ணும்புக்கல். |
| 6 | ஸ்ரீ எஸ். என். என். சங்கரலிங்க ஐயர். | உறை களிக்கல். |
| 7 | ஸ்ரீ பி. ஏ. சி. ராமசுவாமி ராஜ். | 1 சுண்ணும்புக்கல். 2 கங்கார் (Kankar). |
| 8 | மெட்ருஸ் ஜிப்சம் மைனிங் வொர்க்ஸ். | உறை களிக்கல். |
| 9 | மெஸர்ஸ் நெல்லை மைனிங் வொர்க்ஸ். | உறை களிக்கல். |
| 10 | மெஸர்ஸ் சுவாமி (பிரைவேட்) லிமிடெட். | உறை களிக்கல். |

திருநெல்வேலி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 1 | மெஸர்ஸ் இண்டியா சிமெண்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட். | சுண்ணும்புக்கல், கங்கார் (Kankar), |
| 2 | ஜெ. எம். பி. ரோச். | படிகச் சுண்ணும்புக்கல். |
| 3 | கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி. | சுண்ணும்புக்கல், உறைகளிக்கல். |
| 4 | மெஸர்ஸ் தாரங்கதாரா கெமிகல் வொர்க்ஸ் பிரைவேட் லிமிடெட். | சுண்ணும்புக்கல். |
| 5 | மெஸர்ஸ் இண்டஸ்ட்ரியல் கெமிகல்ஸ் லிமிடெட், தாழையூத்து. | சுண்ணும்புக்கல். |
| 6 | மெஸர்ஸ் சுவாமி (பிரைவேட்) லிமிடெட். | உறை களிக்கல். |
| 7 | மெஸர்ஸ் நெல்லை மைனிங் வொர்க்ஸ். | உறை களிக்கல். |
| 8 | மெஸர்ஸ் மெட்ருஸ் ஜிப்சம் மைனிங் வொர்க்ஸ். | உறை களிக்கல். |
| 9 | ஸ்ரீ பி. கே. நாரயணசிங், பெங்களூர். | குருந்தக்கல் (Corundum). |
| 10 | டி. பொன்னுசாமி நாடார், திருநெல்வேலி மாவட்டம். | கார்நெட் மணல் (Garnet sand). |

## Appendix III

[*Vide* answer to starred question No. 344 on page 362.]

### Statement.

Consequent on the introduction of Sugar (Control) in April 1963, the Government of India have allotted a monthly quota of 11,000 tonnes of sugar for Madras State and in addition a special quota of 1,100 tonnes for Deepavali season. The allotment is made by the Government of India every month and orders are issued by them direct to the sugar factories to release sugar to the concerned States. The monthly quota allotted by the Government of India to this State is allocated among the various districts and the district quotas are sub-allocated to the nominated wholesalers. Instructions have been issued to the Collectors to appoint as many retailers as may be necessary in order to serve the interests of the consumers in all localities. Care has been taken to minimise the cost involved in the transport of sugar from factories to the godown premises of wholesalers and the time lag between allotment and the arrival of stocks in the districts. The Collectors have also been authorised to fix wholesale and retail prices and to issue necessary directions to the retailers to put up price boards in front of their shops showing the stock held, the prices fixed, etc., for the information of the public. With a view to keeping a close watch over the proper distribution of the allotted quota by the wholesalers and retailers the Board of Revenue has issued instructions to Collectors to arrange in consultation with the officers of the Commercial Tax Department for regular inspection of the stocks, account books and registers maintained by the wholesalers and retailers. Further, the Food Inspectors of the Government of India, Regional Directorate of Food, Madras, have also been authorised to check the stocks and account books of the licensed dealers in foodgrains and sugar.

(அ), (இ) : 1963 ஏப்ரலில் சர்க்கரை கட்டுப்பாடு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதன் விளைவாக, இந்திய அரசாங்கத்தார் தமிழ் நாட்டிற்கு மாதந்தோறும் 11,000 மெட்ரிக் டன் சர்க்கரையும், தீபாவளிக்கென 1,100 மெட்ரிக் டன் சர்க்கரையும் ஒதுக்கினர். அவர்கள் இதை ஒவ்வொரு மாதமும் ஒதுக்கி, அந்தந்த மாநிலங்களுக்குச் சர்க்கரையை அனுப்பும்படி நேரே சர்க்கரை ஆலைகளுக்கு உத்தரவு அனுப்புகின்றனர். இந்த மாநிலத்திற்கு மத்திய அரசாங்கம் மாதந்தோறும் ஒதுக்கும் சர்க்கரை பற்பல மாவட்டங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரிகளிடையே அது பங்கிடப்படுகிறது. சர்க்கரை உபயோகிப்பவர்களின் நலனுக்காக எல்லா இடங்களிலும் தேவையான அளவுக்குச் சில்லறை வியாபாரிகளை நியமிக்கும்படி கலெக்டர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகளிலிருந்து மொத்த வியாபாரிகளின் கிடங்குகளுக்குச் சர்க்கரை எடுத்துச் செல்ல ஆகும் போக்குவரத்துச் செலவைக் குறைக்கவும், சர்க்கரை ஒதுக்குவதற்கும் மாவட்டங்களில் சரக்கு வந்து சேருவதற்கும் ஆகிற கால தாமதத்தைக் குறைக்கவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மொத்த விற்பனை விலைகளையும் சில்லரை விற்பனை விலைகளையும் நிர்ணயிக்கவும், சர்க்கரை இருப்பு, நிர்ணய விலைகள், இவற்றைப் பொது மக்கள் தெரிந்துகொள்வதற்காக சில்லரை வியாபாரிகள் தங்கள் கடைகளின் முன்னால் விலைப் பலகைகளைக் காட்டி வைக்கும்படி அவசியமான உத்தரவுகளை அவர்களுக்குப் பிறப்பிக்கவும் கலெக்டர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. மொத்த வியா





பாரிகளும் சில்லறை வியாபாரிகளும் தங்களுக்கு அனுப்பப்படும் சர்க்கரையை முறைப்படி வழங்குகிறார்களா என்பதைக் கூர்ந்து கவனிப்பதற்காக, அவர்களது சர்க்கரை இருப்புகள், கணக்குப் புத்தகங்கள், ரிஜிஸ்டர்கள் இவற்றை ஒழுங்காகப் பார்வையிடுவதற்கு வர்த்தகத் துறை அதிகாரிகளைக் கலந்து கலெக்டர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ரெவினியூ போர்டு உத்தரவிட்டுள்ளது. அன்றியும், சென்னையிலுள்ள இந்திய அரசாங்க பிராந்திய உணவு டைரக்டர் அலுவலகத்தைச் சேர்ந்த உணவு இன்ஸ்பெக்டர்களும் உணவுப்பண்டங்கள், சர்க்கரை இவற்றை விற்பதற்கு லைசென்ஸ் பெற்ற வியாபாரிகளின் சரக்கு இருப்புகளையும் கணக்குப் புத்தகங்களையும் பரிசோதிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 21st March 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

### திராவிட முன்னேற்றக் கழகத்தவர் கைது

*346 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து** : கனம் முதலமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் செக்ஷன் 151, Cr.P.C.-படி கைது செய்யப்பட்டனர் ?

(இ) எவ்வளவு காலம் அவர்கள் காவலில் (ரிமாண்டு) வைக்கப் பட்டனர் ?

(உ) எத்தனைபேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 1,744.

(*b*) The arrested persons were kept in remand for varying periods, extending up to fifteen days. One thousand five hundred and fifty persons were released up to 30th November 1963, and the remaining 194 on the expiry of the remand period.

(*c*) Five.

**திரு. து. ப. அழகமுத்து** : தலைவர் அவர்களே, மாவட்ட ரீதியாக எவ்வளவு பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் ? சென்னையில் மட்டும் போராட் டம் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும்போது, மற்ற இடங்களிலும் கைது செய்யப்படவேண்டிய அவசியம் என்ன என்று அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : சென்னையில் மட்டும் போராட்டம் நடக்கும் என்பது தி. மு. க.-விற்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் மற்ற இடங்களில் அமைதிக்கு பங்கம் வரும் என்று போலீசார் கருதியதின் காரணமாக, முன் எச்சரிக்கையாக கைது செய்யப்பட்டார்கள். வட்டார வாரியாக கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | |
|---|---|
| வட ஆற்காடு | 177 |
| தென் ஆற்காடு | 264 |
| செங்கல்பட்டு | 24 |
| கோயம்புத்தூர் | 222 |
| மதுரை வடக்கு | 60 |
| மதுரை அர்பன் | 10 |
| ராமநாதபுரம் | 116 |
| சேலம் | 202 |
| தஞ்சாவூர் | 352 |
| திருநெல்வேலி | 118 |
| திருச்சிராப்பள்ளி | 86 |
| சென்னை நகரம் | 113 |

[21st March 1964

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, எந்தக் குற்றத்தைச் செய்வார்கள் என்று போலீசார் எதிர்பார்த்தார்கள் ? அரசாங்கம் எதிர் பார்த்தது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அமைதிக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய குற்றம் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும், குக்கிராமங்களில்கூட அமைதிக்கு பங்கம் வரும் என்று எதிர்பார்க்கப் பட்டதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் எதிர்பார்த்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஸார், திராவிட முன்னேற்றக் கழகத் தினர் நடத்தும் போராட்டம் ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட இடத்தில், இன்னார் இன்னார்தான் ஈடுபடுவார்கள் என்று பத்திரிக்கைகளில் அறி விக்கப்பட்டு இருந்தும், முன்னதாகவே கைது செய்து, 15, 20 நாட்களுக்கு தண்டனை கொடுப்பதைப் போல, ப்ரிவெண்டிவ் அரெஸ்ட் செக்ஷனை உப யோகப்படுத்தியதின் நோக்கம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திராவிட முன்னேற்றக் கழகம் முன்பு நடத்திய இயக்கத்தின் விளைவுகள் அரசாங்கத்தின் நினைவில் இருக்கிறது, அந்த அனுபவம் இருந்தது. சிற்சில இடங்களில் தாங்கள் போராட்டத்தை, அல்லது இயக்கத்தை, சட்டத்தை மீறுவதை தொடங்கப் போகிறோம் என்று தெரிவித்திருந்தபோதிலும், அமைதிக்கு பங்கம் வரும் என்ற செய்தி போலீசாருக்குக் கிடைத்தது, முன் எச்சரிக்கையாக கைது செய்தார்கள். முன்பு நடந்த விளைவுகள் நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**திரு. செ. மாதவன் :** முன்பு நடந்ததை வைத்து முன் எச்சரிக்கை யாக கைது செய்யப்பட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், சென்னை நகரத்திலே மட்டும் போராட்டம் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அப்படி இருக்கும்போது, மாவட்டம்தோறும், கிராமங்கள்தோறும் திராவிட முன்னேற்றக் கட்சியினரைக் கைது செய்ய, 151-வது பிரிவை அரசாங்கம் உபயோகப்படுத்தினது எதிர் கட்சிகளை மிரட்டு வதற்காகத்தான் செய்யப்பட்டது என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மிரட்டுவது ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் கூறுவது சென்ற முறைபோல நடக்கவேண்டும், அதைப்பார்த்து, அனுபவித்து, அதற்குப்பிறகு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள முடியாது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, திராவிட முன் னேற்றக் கழகத்தினர், சட்டத்தை மீறுவார்கள் என்பதற்காக, முன் எச்சரிக்கையாக கைது செய்யப்பட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படி சட்டத்தை மீறப்போகிறோம் என்று மதுரையிலும், காஞ்சியிலும் முன் கூட்டியே தெரிவித்திருந்தும், ஏன் அங்கேயெல்லாம் கைது செய்யவில்லை என்று சொல்ல முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திராவிட முன்னேற்றக் கழகத்தி னராலும், மற்றவர்களாலும் குற்றம் என்றால் அதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று, நிலைமையை ஆராய்ந்து எந்தெந்த நடவடிக்கை எடுப்பது உசிதம் என்று தோன்றுகிறதோ, அது எடுக்கப் படுகிறது.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, 151-வது பிரிவில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை ராமனாதபுரம் மாவட்டம் சிவகங்கையிலும், மதுரையிலும், கைகளில் விலங்கிட்டு சாலையோடு அழைத்துச் சென்றனரே, அதற்குக் காரணம் என்ன ?



21st March 1964]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கம் அப்படி ஒன்றும் உத்தரவு போடவில்லை. ஆனால் நிலைமைக்குத் தக்கவாறு, உசிதம் போல நடந்துகொள்ள போலீசாருக்கு உரிமை உண்டு.

### மேல்மட்ட நீர்த்தொட்டி, சுத்தமல்லி (திருநெல்வேலி தாலூகா)

*347 கேள்வி.—திரு ஆர். எஸ். ஆறுமுகம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தாலூகா, சுத்தமல்லியில் கட்டப்பட்டுள்ள ஓவர் ஹெட்டாங்க் கட்டப்பட்டு இரண்டாண்டுகள் ஆகியும் இன்னும் திறக்கப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) அப்படியானால் அதற்குக் காரணமென்ன ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) & (இ) ஆம். மின்சார இணைப்புக் கொடுக்காததால் மேல்மட்ட நீர்த்தொட்டியைப் பயன்படுத்த முடியவில்லை. மேற்படி மேல்மட்ட நீர்தொட்டிக்கு மின்சார இணைப்புக் கொடுப்பதற்கான விசேஷ உயரிய உத்தரவாதத் தொகையைச் செலுத்து வதாக அப்பகுதி பஞ்சாயத்து தெரிவித்திருப்பதால், தமிழ்நாடு மின்சார போர்டு தலைமை வினியோக இஞ்சினியர், திருநெல்வேலி மின்சார ஏற் பாட்டின் மேற்பார்வை என்ஜினீயருக்கு இதற்கு மின்சார இணைப்புக் கொடுக்கும்படி சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளார்.

### *Selection of District Munsifs*

* 348 *Q.*—SRI K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there was any recruitment to the post of District Munsif during 1963-64; and

(*b*) if so, the total number of candidates selected?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :**

(அ) ஆம்.

(இ) 11.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தத் தேர்வில் டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புகள் மாவட்டவாரியாக எத்தனை பேர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டார்கள் என்று கூற முடியுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** மாவட்ட வாரியாகக் கூறுவதற்கு தகவல் இல்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, 11 முன்சீப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றால், அதில் எத்தனை பேர்கள் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளாக இருந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அப்படி தனிக் கணக்கு இல்லை.

### இந்தியப் பிரதமரின் மதுரை விஜயம்

*349 கேள்வி.—திரு. சா. கணேசன் : கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு டிசம்பரில் இந்தியப் பிரதமரின் மதுரை மாவட்ட விஜயத்தின்போது மதுரை ஜில்லா சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. எல். கே. பி. லட்சுமணன் அவர்களைக் கைது செய்தமைக்குக் காரணமென்ன ?

(இ) இந்தியப் பிரதமர் செல்லும் வழியில் காணப்பட்ட காங்கிரஸ் கட்சிக் கொடி அல்லாத மற்ற எதிர் கட்சிகளின் கொடிகளையெல்லாம் போலீஸார் அகற்றியதற்குக் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) He was arrested on 30th November 1963 under section 151, Criminal Procedure Code as he was found actively assisting the Praja Socialist Party for arranging a demonstration before the Prime Minister in violation of the regulatory order which was then in force in that area. He was released on 2nd December 1963.

(b) It is not correct to say that the Police removed all the flags of the opposition parties except the Congress flags that were flying along the route of the Prime Minister during his recent visit to Madurai. The Police removed only such of those flags which were torn and not tied properly and those which were dangerously placed on the roads with the possibility of falling over the Prime Minister's motorcade thus causing security as well as traffic risks.

*350 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்தியப் பிரதமர் அவர்கள் அண்மையில் திண்டுக்கல் வழியாக செல்கையில் அவர் செல்லும் வழியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகளையும் மற்றும் எதிர்கட்சிக் கொடிகளையும் முன்னதாகவே போலீஸ் அதிகாரிகள் அப்புறப்படுத்தினார்களா ?

(இ) அப்படியானால், காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Police had removed only such of those flags which were torn and not tied properly and which were dangerously placed on the roads with the possibility of falling over the Prime Minister's motorcade, thus causing security risks as well as traffic risks. There was no discrimination against any particular party in the removal of the flags.

**திரு. வி. எஸ். எஸ். மணி** : சார், நேரு அவர்கள் வரவை ஒட்டி திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள்; என்ன காரணத்திற்காக ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டது ஒருக்கால் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால், பி. எஸ். பி. ஒரு இயக்கம் நடத்துவதாகவும், தடை உத்தரவை மீறப்போவதாகவும் அறிவித்தார்கள், அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களுக்குத் துணையாக இருந்தது சுதந்திரா கட்சி—அவர்கள் பற்றியதுதான் இந்தக்கேள்வி—அவர்களைச் சார்ந்தவர் களும் கைது செய்யப்பட்டார்கள். திராவிட முன்னேற்றக் கட்சியும் சேர்ந்திருந்தால், அவர்களும் கைது செய்யப்பட்டிருப்பார்கள்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** : தலைவர் அவர்களே, நேரு அவர்கள் போகும் பாதையில், சரியாக இல்லாத கொடிகளை போலீசார் அவிழ்த் தார்கள் என்று சொன்னார்கள். அப்படி சரியாகக் கட்டப்படாத கொடிகளை நல்ல முறையிலே கட்டச் செய்தபிறகு அந்த வழியில் நேரு அவர்கள் சென்றிருக்கலாம். எதிர்க் கட்சிகள் இருப்பதே அவர்கள், பண்டித நேரு அவர்கள் கண்ணிலே கூடப் படக்கூடாது என்றுதான் இது செய்யப் பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.



**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : விடை அளித்தேன், அதற்குமேல் கூறுவதற்கில்லை. கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு நான் அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டுமென்றால், நான் கூறுவேன். பொதுவாக கொடிகளைத் தலைவர்களுக்குக் காட்டுவது, அதுவும் பிரதமர் போன்ற தலைவர் வரும்போது கட்சிக் கொடியைக் காட்டுவது என்றால், அதுவும் அங்கே தெருவிலும், ரோட்டிலேயும் காட்டுவது அவமரியாதை. நான் அதை அனுமதிக்கமாட்டேன்.

**திரு. செ. மாதவன்** : கொடிகளை அகற்றியதாக அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். எவ்வளவு கொடிகளை, எந்தக் கட்சிகளின் கொடிகளை, எந்தெந்த ஊர்களில் அகற்றினார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கணக்கு எல்லாம் எடுக்கவில்லை.

**திரு. து. ப. அழகமுத்து** : கொடிகள் கிழிந்து இருந்தது, குச்சி விழக் கூடிய நிலையில் அபாயகரமாக இருந்தது என்ற காரணத்திற்காக கொடிகள் அகற்றப்பட்டன என்று கூறினார்கள். அப்படியானால் இந்தக் காரணங்களைக் கூறி எப்போது வேண்டுமானாலும் எதிர்க் கட்சியினர் கொடிகளை அப்புறப்படுத்தலாம் அல்லவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : பிரதம மந்திரி அவர்கள் வந்திருந்த போது இம்மாதிரி அவலட்சணமான கொடிகள் எல்லாம் வேண்டாம் என்று எடுத்தார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்** : பெரிய தலைவர்கள் வருகிறபோது கொடிகளைப் புதுப்பித்துப் போடுவது அவர்களை அவமதிப்பதாகுமா ? வெளி நாடுகளிலிருந்து இந்த நாட்டுக்கு தலைவர்கள் வரும்போது புதிதாக கொடிகளைப் போட்டு அவர்கள் கொடிகளையும் சேர்த்து போட்டு வரவேற்பு கொடுக்கப்படுகிறது. அப்படியானால் அவர்களை அவமானப்படுத்தும் நோக்கத்தோடா செய்யப்படுகிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நாட்டுக்கொடிக்கும் கட்சிக்கொடிக்கும் உள்ள வித்தியாசத்தை அங்கத்தினர் உணரவேண்டும்.

**திரு. து. ப. அழகமுத்து** : தமிழ் நாட்டில் கொடிகள் மட்டும்தான் அலலட்சணமாக இருக்கிறதா ? வேறு இல்லையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அகற்றப்பட்ட கொடிகள் அவலட்சணமான கொடிகள் என்று சொன்னேன். ஏன் அவலட்சணமானது என்று விடையில் விளக்கியிருக்கிறேன்.

**கனம் சபாநாயகர்** : உலகத்தில் எவ்வளவு அவலட்சணங்கள் இருக்கின்றன என்று தனிக் கேள்வி போட்டால் ஸ்டாடிஸ்டிக்ஸ் இருந்தால் கொடுப்பார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்** : நாட்டுக்கு நாடு மரியாதை காட்டுவது போல் கட்சித் தலைவருக்கு மரியாதை காட்டுவதை அவமரியாதையாக கருதுகிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : நாட்டிற்கும், கட்சிக்கும் வித்தியாசம் உண்டு. தி. மு. க. அதை உணராதது பற்றி வருந்துகிறேன். ஆகவேதான் கொடிக்கு அவமானம், அவமரியாதை செய்வது, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அவமரியாதை செய்வது என்ற இயக்கத்தில் எல்லாம் ஈடுபடுகிறார்கள்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி**: பழைய கொடிகள் இருக்கக் கூடாது என்கிறார். புதிய கொடிகளைக் கட்டுவதை அவமரியாதையாகக் கருதுகிறார்கள் ? இப்படி தமிழ் நாட்டில் இருக்கிற காங்கிரஸ் கட்சியின் எதிர்ப்பு சக்தியைக் குறைத்துக் காட்ட எதிர்க்கட்சி கொடிகளை எடுத்து காங்கிரஸ் கொடிகளை மட்டும் வைத்து அழைத்துச் சென்றார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : இதை வெளி மேடையில் பேசலாம். இது அரசாங்கத்தின் கருத்து. இம்மாதிரி அவலட்சணமான கொடிகள், கிழிந்து போனது, கலர் போனது, இவற்றை வைத்துக்

கொள்ளக்கூடாது என்பது என் சொந்த அபிப்பிராயம். பிரதம மந்திரி போன்ற ஒரு தலைவர் வரும்போது ஏற்கனவே இருந்தால் இருக்கட்டும். அதற்காகப் புதுக் கொடி கட்டுவது, அதுவும் ரோட்டில் கட்டுவது தவறு என்று சொன்னேன்.

**திரு. எம். எஸ். மணி :** பிரதமர் வந்தபோது காங்கிரஸ் கட்சிக் கொடிகள், கிழிந்த கொடிகள் கட்டப்பட்டிருந்தாலும் அல்லது சரியாகக் கட்டப்படாமல் இருந்தாலும் அதுவும் அழிக்கப்பட்டதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எந்தக் கட்சி கொடியாக இருந்தாலும் கிழிந்தது, கலர் போனதாக இருந்தால் அதையெல்லாம் அகற்றப் பட்டன.

**திரு. முனு. ஆதி :** பஞ்சாயத்து யூனியன் நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் கலந்து கொள்கிறபோது காங்கிரஸ் கொடியை ஏற்றுகிறார்கள். அதுவும் தேசியக் கொடி என்று கூறி தகராறு இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் கலந்து கொள்ள வரும்போது கட்சிக் கொடி கூடாது என்று சொல்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பஞ்சாயத்து நிகழ்ச்சிகளில் கட்சிக் கொடி கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து, என் கருத்தும் கூட.

**பஸ் கட்டண உயர்வு**

* 351 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்திக்கொள்ள அனுமதிக்குமாறு பஸ் முதலாளிகள் அரசாங்கத்துக்கு விண்ணப்பம் செய்து கொண்டுள்ளார்களா ?

(இ) அரசாங்கம் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The hon. Member is referred to the preliminary notification containing proposals for revision of maximum rates of bus fare published at pages 2064–2065 of Part II—Section 1 of the *Fort St. George Gazette*, dated 28th August 1963, for eliciting suggestions or objections as required under section 43 (1) of the Motor Vehicles Act. The representations received in this regard are under the consideration of the Government.

**புலவர் கா. கோவிந்தன் :** இயல்பாகவே பஸ்காரர்கள் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறார்கள். மேலும் உயர்த்துவது என்றால் பொதுமக்களுக்கு கேடு பயப்பதாகயிருக்கும். ஆகவே அதற்கு சர்க்கார் இணங்காது என்ற கருத்தைத் தெரிவிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சென்ற வாரம்தான் இதுபற்றி விரிவான விவாதம் இங்கே நடந்தது. அந்த விவாதத்தில் சில கனம் அங்கத்தினர்கள் கணக்குகள், புள்ளிவிவரங்கள் எல்லாம் கொடுத்தார்கள். வரி அதிகரித்துவிட்டது, எண்ணெ விலை அதிகரித்துவிட்டது, எப்படி கட்டு படியாகவில்லை என்றெல்லாம் கூறினார்கள். இதையெல்லாம் பரிசீலனை செய்து இதற்கு சட்டப்படி ஸ்டாட்யூடரி அதாரிட்டி இருக்கிறார்கள். அவர்கள் முடிவு செய்வார்கள். இதை சர்க்கார் முடிவு செய்யவில்லை.

**கீழ்க்கரந்தையில் போலீஸ் அவுட் போஸ்ட்**

* 352 கேள்வி.—**திரு. டி. கடம்பவனசுந்தரம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் புதூர் சரகம் கீழ்கரந்தையில் ஒரு போலீஸ் அவுட்போஸ்ட் திறக்கக் கோரி அவ்வூர் பஞ்சாயத்து தலைவரிடமிருந்து மனு ஒன்று சர்க்காருக்கு வந்திருக்கிறதா ?



(இ) ஆமெனில், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) The request of the villagers was examined and it was considered that there was no need to open an out-post at Keelkaranthai.

(அ) ஆம். வந்துள்ளது.

(இ) இந்தக் கிராம மக்களின் கோரிக்கை பரிசீலனை செய்யப் பட்டது. கீழ்க்கரந்தையில் ஒரு போலீஸ் அவுட்போஸ்ட் திறக்கவேண்டிய அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** போலீஸ் அவுட் போஸ்ட்கள் எந்த அடிப் படையில் திறக்கப்படுகிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஜாஸ்தி ஜனத் தொகை இருந்து ஜாஸ்தி களவுகள் போய்க்கொண்டிருந்தால், அல்லது அக்கிரமங்கள் இருந்தால் அப்பேர்ப்பட்ட இடங்களில் அவுட்போஸ்ட்ஸ் திறந்து மக்களுக்கு ஆதரவு அளிக்கப்படுகிறது.

**திரு. ம. கமலநாதன் :** தமிழ்நாட்டில் எவ்வளவு ஜனத்தொகைக்கு ஒரு போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது என அறிய விரும்புகிறேன்?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. இரா. நாரராயணன் :** போலீஸ் ஸ்டேஷன்கள் அமைப்பது மைலேஜ் தூரத்திலா அல்லது குற்றங்கள் அடிப்படையில் புதிதாக ஸ்டேஷன்ஸ் அமைக்கப்படுகிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஜனத் தொகையைப் பார்த்து, தூரத்தையும் பார்த்துதான் பரிசீலனை செய்து முடிவிற்கு வருவார்கள்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** மதுவிலக்கு கேஸ்கள் அதிகமாக நடந்து வருவதால் அந்த அடிப்படையில் போலீஸ் ஸ்டேஷன்கள் ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கனவே இருந்து வருகிறது. எடுத்த தற்கெல்லாம் போலீஸ் ஸ்டேஷன் வைப்பதில்லை. அவசியமிருந்தால், முக்கியமானதாக இருந்தால் வைக்கப்படுகிறது. திருட்டுச் சாராயம் காய்ச்சு கிறார்கள் என்பதற்காக அவுட் போஸ்ட்ஸ் எல்லாம் வைத்துக் கொண்டு வரமாட்டார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** குற்றம் கொடுமைகள் அதிகமாக நடைபெறுகிற இடங்களில்தான் காவல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நடைபெறும் என்பதற்கு முன்பே அது நடைபெறாமல் தடுக்கிற வகையில் அங்கே போதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசமுண்டா ? அதுபோன்று வந்திருப் பவை எல்லாம் என் இதுவரை கவனிக்கப்படாமல் இருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. இரா. நாரராயணன் :** பஞ்சாயத்து யூனியன் உள்ள ஒவ்வொரு இடங்களிலும் புதிதாக போலீஸ் ஸ்டேஷன் அமைக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எல்லாப் பஞ்சாயத்து யூனியனிலும் வைக்க முடியாது. எங்கு அவசியம் வைக்கவேண்டுமென்று அரசாங்கம் கருது கிறதோ, அங்கு வைக்கப்படும்.

[21st March 1964

### பஸ்களுக்கு அனுமதிக்கப்படும் "மாறுதல்கள்"

* 353 கேள்வி.—**திரு. ம. கமலநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஒடிக்கொண்டிருக்கும் பஸ்களுக்கு வேரியேஷன் எத்தனை மைல் வரை கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : According to section 48 of the Motor Vehicles Act, 1939, as amended by the Motor Vehicles (Madras Amendment) Act, 1964, the distance that can be covered by the variation of a route is restricted to 24 kilometres.

1964-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (சென்னை திருத்தச்) சட்டத்தினல் திருத்தப்பட்ட, 1939-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள்சட்டத்தின் 48-வது பிரிவின்படி, ஒரு ரூட்டில் 24 கிலோ மீட்டர் வரையிலுமே வேரியேஷன் செய்யலாம்.

**திரு. ம. கமலநாதன் :** 24 கிலோ மீட்டருக்கு அதிகப்படியாக வேரியேஷன் கொடுக்கமுடியாது என்று இருக்கும்போது அரசாங்கம் தலையிட்டு சுமார் 50 கிலோ மீட்டருக்கு ஏதாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா ? காரணம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தமாதிரி தகவல் என்னிடமில்லை. தனிக்கேள்விபோட்டால் பார்த்துச் சொல்லுகிறேன். எழுதினலும் கவனித்து சொல்ல முடியும்.

**திரு. ஆ. தங்கவேலு :** இந்த வேரியேஷன் கொடுப்பதில் அநேக இடங்களில் இரண்டு ஆண்டுகளாக வேரியேஷன் கொடுத்து டெம்பரரியாக ஓடிக்கொண்டிருப்பதை, அது எப்போது பக்கா பெர்மிட்டாகக் கொடுக்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மோட்டார் வெகிக்கிள்ஸ் சட்டப்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அதையெல்லாம் எடுத்துத்தான் இந்த வேரியேஷன் கொடுக்கமுடியும். அதற்கு ஆர். டி. ஏ. இப்போது சட்டத்தை திருத்திவிட்டதால் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறர்கள்.

**திரு. ம. கமலநாதன் :** தேர்தலின் போது சுமார் 200 வேரியேஷன் அரசாங்கம் கொடுத்துவிட்டு தேர்தலுக்குப் பிறகு அவையெல்லாம் ரத்து செய்யப்பட்டது உண்மையா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நம் ரூள்ஸ் ஆப் ப்ரொஸீஜரில் ஒரு விதியிருக்கிறது. அங்கத்தினர் அதைக் கவனிக்காமல் போட்டுக்கொண்டிருக்கிறர்கள். இன்ஸினிவேஷன் செய்யக்கூடாது என்று இருக்கிறது. இந்தக் கேள்வியின் அர்த்தம், தேர்தலுக்காக வேரியேஷன் கொடுத்ததாகவும் பின்னல் நிறுத்திவைத்ததாகவும்—அப்படி ஒன்றுமில்லை. முதலில் வேரியேஷன் கொடுக்கலாம் என்று சட்டம் இருந்தது. அந்தச் சட்டப்படி வேரியேஷனுக்கு அனுமதி கொடுத்திருந்தோம். ஹைகோர்ட், வேரியேஷன் கொடுக்க அதிகாரம் இல்லை என்று தீர்மானம் செய்தார்கள். எல்லாம் ரத்தாகி விட்டது.

### பஸ் ரூட்டுகள் (தற்காலிக விஸ்தரிப்பு)

* 354 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஸ் ரூட்டுகளைத் தற்காலிகமாக விஸ்தரிப்பதற்குச் சர்க்காருக்கு அதிகாரமில்லை என்று சமீபத்தில் ஹைக்கோர்ட்டு தீர்ப்புக்கொடுத்துள்ளதா ?



21st March 1964]

(இ) அதனல் இந்த மாநிலத்தில் ஜில்லாவாரியாக எத்தனை பஸ் ரூட்டுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன ?

(உ) ஹைக்கோர்ட்டு சமீப உத்திரவின் காரணமாக திடீரென நிறுத்தப்பட்டுள்ள பஸ் ரூட்டுகளை அவசரச் சட்டமியற்றி அனுமதிக்குமாறு கோரி திரு. எம். எஸ். செல்வராஜன், எம். எல். ஏ., சர்க்காருக்கு முறையிட்டிருந்தாரா ? .

(எ) அப்படியானல், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*d*) A statement [a] is placed on the Table of the House.

SRI M. S. SELVARAJAN : May I know whether all the routes have been restored? If not, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I have no power to restore any route. Now we have restored the power to give variations to the Regional Transport Authority. It is for the Regional Transport Authority to give variations or not. It is a statutory power. People affected by those decisions can go to the State Appellate Tribunal. If they are not satisfied at the State Appellate Tribunal they can go to the High Court. There is complete separation of Judicial Authority in this case.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்த சபைமுன் வைக்கப்பட்டுள்ள பதிலில் 271 வேரியேஷன்கள் பெண்டிங்காக இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த வேரியேஷனைக் கன்ஸிடர் செய்வதற்கு ஆர். டி. ஏ.-வில் முடிவு கட்டுவதில் தாமதப்படுகிறது. அதையாவது துரிதப்படுத்த சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆர். டி. ஏ.க்கு எந்தவிதமான டைரக்ஷனும் கொடுப்பதில்லை என்று முடிவு செய்திருக்கிறோம்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** தஞ்சையில் புது ரூட்டுகள் கொடுப்பது தடை செய்யப்பட்டிருந்தது. அது இப்பொழுது நீக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தத் தடைகளெல்லாம் நீக்கப்பட்டுவிட்டன, ராஜ்யம் பூராவும்.

**திரு. ம. கமலநாதன் :** 24 கிலோ மீடருக்கு அதிகமாகக் கொடுக்கக் கூடாது என்று இருக்கும்போது, கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக புதிய ரூட் கொடுத்தால் அரசாங்கத்திற்கு வரிகள் மூலம் ஓரளவு வருமானம் கிடைக்கும் என்பதை அரசாங்கம் அறியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்கு முன்பு கூட கனம் அங்கத்தினர் இதே கேள்வியைத்தான் போட்டார்கள். "24 கிலோ மீட்டருக்கு அதிகமாக "வேரியேஷன்" கொடுக்கிறர்கள்" என்று சொன்னர்கள். அது கொடுக்கமுடியாது என்ற சட்டத்தைத் திருப்பிச் சொல்லுகிறேன். அவ்வாறு அவர்கள் தவருகக் கொடுத்தால் அப்பெல்லெட் ட்ரைப்யூனலுக்குப் போகலாம். ஹைகோர்ட்டுக்குப் போகலாம். "ரிட்" போடலாம். சட்டப்படி இருக்கும் நிலைமையைத்தான் சொன்னேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** டார்ஜெட்டாவது ஃபிக்ஸ் பண்ணி பழைய ரூட்களைச் சட்டப்படி எடுப்பதை உடனடியாக அமல் நடத்த சர்க்கார் ஏதாவது நிர்வாக உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The question is too general. If the hon. Member can give any specific case, I can examine it and give details.

---

[a] Printed as Appendix on pages 541-542.

[21st March 1964

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, கொடுக்கக்கூடாது என்பதை நானும் ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், அதற்காக தனிப்பட்ட முறையில் நானோ, மற்றவர்களோ ஒவ்வொன்றுக்கும் ஹைகோர்ட்டுக்குச் சென்று அப்பீல் செய்துகொண்டிருப்பது என்பது முடியாத காரியம். அரசாங்கத்தின் கவனத்திற்கு வேண்டுமானால் கொண்டுவரலாம். அந்த நேரத்தில் அரசாங்கம் தலையிடலாம். உதாரணத்திற்கு ஒன்று சொல்வேன். கிருஷ்ணகிரியிலிருந்து திருவண்ணாமலைக்கு ஓடிக்கொண்டிருந்த பஸ், கிருஷ்ணகிரியிலிருந்து ஹொசூருக்கு 31 மைலுக்கு வேரியேஷன் கொடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்குப் பதிலாக, கிருஷ்ணகிரியிலிருந்து ஹொசூருக்கு இன்னொரு பஸ் விட்டால் அரசாங்கத்திற்கு வரிமூலம் வருமானம் வந்திருக்கும் அல்லவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முன்பு சொன்ன பதிலையே நான் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். தவருக எதாவது அதிகமாகக் கொடுத்திருந்தால் அதைப்பற்றி புகார் செய்யவேண்டியது சர்க்காரிடம் அல்ல. கோர்ட்டுகளில்தான் புகார் செய்யவேண்டும். ஏனென்றால் சர்க்காருக்கு இவ்விஷயத்தில் தலையிடுவதற்கு அதிகாரம் இல்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** நாம் சமீபத்திலே இயற்றிய சட்டத்தின் பிரகாரம், ஹைகோர்ட் முடிவைக்கூட உட்படுத்துவதற்கு ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து சட்டம் இயற்றியிருக்கிறோம் அல்லவா ? எனவே பாதிக்கப்பட்டிருப்பது எல்லாம் ஆட்டோமேடிக் ஆக வெஸ்டோர் ஆனதாக ஆகாதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I cannot express legal opinion as a member of the Government. The hon. Member is advised to consult a lawyer to find out the legal position.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இந்த ஆண்டில் புதிதாக ஜீப் ரூட் ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? அவ்வாறு எத்தனை ரூட்கள் ஆரம்பிக்க உத்தேசம் இருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஜீப்புகள் கிடைக்கவில்லை. அதனால் ஜீப் ரூட்கள் ஆரம்பிப்பது சந்தேகம்.

**திரு. து. ப. அழகமுத்து :** "ஆர்.டி.ஏ.-க்கு டைரக்ஷன் கொடுப்பதற்குச் சர்க்கார் விரும்பவில்லை, நிறுத்திவிட்டது" என்று அமைச்சர் கூறினார்கள். ஒரு வேரியேஷன் ஆர்.டி.ஏ.-க்கு வராமல் அங்கே உள்ள அதிகாரி எத்தனை வருஷங்கள் வேண்டுமானாலும் நிறுத்தி வைக்கலாம். ஆனால், அதை வைத்து அப்பீல் செய்ய முடியாது. ஆகவே, இப்படி ஒரு நிலைமை ஏற்படுவதைத் தீர்க்க சர்க்கார் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இன்றைக்கிருக்கும் சட்டப்படி, சமீபத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் தீர்ப்புகளின்படி சர்க்கார் தலையிட முடியாது என்ற நிலைமை இருக்கிறது. சர்க்கார் தலையிடுவதான உத்தேசம் இல்லை.

## திருச்சி நகராட்சியின் கீழுள்ள நிலங்கள் (ஆர்ஜிதம் செய்தல்)

*355 கேள்வி.—**திரு. எம். எஸ். மணி :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி நகராட்சிக்குச் சொந்தமான டி.எஸ். 1585 எண்ணுள்ள நிலத்தை திருச்சி கலெக்டர் அவர்கள் நகராட்சியின் அனுமதியின்றி ஒரு தனிப்பட்ட நபருக்கு அடமானம் செய்தது உண்மையா ?

(இ) ஆமெனில், கலெக்டர் அவர்களின் நடவடிக்கை நகராட்சியின் உரிமையைப் பாதிக்கிறது என்பது அரசாங்கம் அறியுமா ?



21st March 1964]

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes.

(b) The land belongs to the Government being a poramboke but only vests in the municipality under section 61 (1) of the Madras Act V of 1920. The municipality has no power of disposal of lands belonging to Government. The Collector, in this case, had given reasonable time to the municipality to communicate its views in the matter which opportunity it did not avail of.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23-ம் தேதி அன்று திருச்சி நகராட்சி மன்றம் நிறைவேற்றிய தீர்மானம் எண். 519–ல், "மேற்படி நிலம் நகராட்சி மன்றத்திற்குத் தேவைப்படுவதால் மன்றத்தின் சம்மதம் இன்றி திருச்சி கலெக்டர் செய்த அடமானத்தை ரத்து செய்யக் கேட்டுக்கொள்கிறோம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** என்னிடம் இருக்கும் தகவலின்படி, இந்த அடமானம் செய்யவேண்டிய முடிவை அதற்கு முன்கூட்டியே கலெக்டர் எடுத்துவிட்டார். ஆகையால், அடமானம் செய்ததற்குப் பிறகு தான், ரத்து செய்யவேண்டும் என்று தீர்மானம் இருப்பதாகக் கனம் அங்கத்தினர் சொல்லக்கூடியதிலிருந்து தெரியவருகிறது. அந்த விவரம் என்னிடம் இல்லை. ஆனால், கலெக்டர் அவர்கள் பல மாதங்களுக்கு முன்கூட்டியே "இதற்கு வேண்டிய ஆதாரங்களை நகரசபை கொடுக்கவேண்டும்" என்று கேட்டபோது, அவர்கள் எந்தவிதமான முடிவும் சொல்லாத காரணத்தால், அந்த நிலத்தை அடமானம் செய்திருக்கிறார்கள்.

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19–ம் தேதி அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 1210–ல் "ஜம்புநாத அய்யர் என்பவருக்கு நிலத்தை அடமானம் செய்திருந்தார்கள். நகராட்சி மன்றத்திற்குத் திரும்ப அந்த இடம் தேவை. அடமானத்தை ரத்து செய்துவிட வேண்டும்" என்று நிறைவேற்றியும், அதற்குப் பிறகு, கலெக்டரால் திருச்சியிலே அந்தப் பணக்காரருக்கு நிலம் கொடுக்கப்பட்டது என்பதாவது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** பணக்காரரா, ஏழையா என்கிற விவரம் என்னிடம் இல்லை. இங்கே என்னிடம் இருக்கும் விவரத்தின்படி, கலெக்டர் எந்த எந்த முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுத்திருக்கிறார்கள். நகரசபை குறிப்பிட்ட காலத்தில் அதற்கு ஆட்சேபனை சொல்லாத காரணத்தால்தான் இந்த அடமானத்தை கலெக்டர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதுதான் என்னிடம் இருக்கும் தகவல்.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, கலெக்டரிடமிருந்து கிடைத்திருக்கும் விவரத்தை மட்டும் வைத்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்களா ? நகராட்சி மன்றத்திடமிருந்தும் விவரத்தைக் கேட்டு சேகரித்திருக்கிறாரா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு ஒரு இடத்திலிருந்து தகவல் வந்தால் போதும்.

**திரு. எம். எஸ். மணி :** 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் தேதி அன்று திருச்சி நகராட்சி மன்றத்திலிருந்து கமிஷனர் அவர்கள் கலெக்டருக்கு ஒரு கடிதம் எழுதியும் இதுவரையில் பதில் வரவில்லை என்பதாவது கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

**கனம் திரு. வெ. ராமையா :** அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

*Salary limit for free treatment in hospitals*

* 356 *Q.*—SRI S. MURUGAIYAN (on behalf of Sri K. A. MATHIALAGAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to raise the salary limit for free treatment in Government hospitals in Madras State from Rs. 150 to Rs. 200 in view of high cost of living at present?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அரசாங்க மருத்துவ மனைகளில் இலவச சிகிச்சைக்கு இப்போது நிச்சயிக்கப்பட்டுள்ள மாத வருமான எல்லை 100 ரூபாய் ஆகும். இதை 200 ரூபாயாக உயர்த்தும் உத்தேசமில்லை.

**திரு. ம. கமலநாதன் :** நமது மன்றத் துணைத் தலைவர், அவைத் தலைவர் ஆகியவர்களுக்கு இலவச சிகிச்சை விஸ்தரிக்கப்பட்டிருப்பது போல், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் குடும்பங்களுக்கும் இந்த முறையை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆம்.

*Arts College for Tindivanam taluk*

* 357 *Q.*—SRI G. RAJARAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to open an Arts College in Tindivanam taluk during 1964?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

*Experimental tube wells, Paramakudi taluk*

* 358 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to put up experimental tube wells in the eastern part of Paramakudi taluk in Ramanathapuram district?

THE HON. SRI P. KAKKAN : The Exploratory Tube wells Organization of Government of India have selected two sites for Exploratory Drillings in the area between Ramanathapuram and Paramakudi excluding the areas which come under Vaigai Reservoir command. There is no proposal of the State Government for sinking experimental tube wells in any area.

இந்திய அரசாங்கப் பரிசோதனைக் குழாய் கிணறுகள் நிறுவனத்தினர் ராமநாதபுரத்திற்கும் பரமக்குடிக்கும் இடையே உள்ள பகுதியில் வைகை நீர்த்தேக்க ஆயக்கட்டுப் பகுதியில் தவிர்த்து இரண்டு இடங்களை பரிசோதனைக் கிணறுகள் இறக்கத் தேர்ந்தெடுத்துள்ளனர். பரிசோதனைக் குழாய்க் கிணறுகளை இறக்க மாநில அரசாங்கத்திடம் திட்டம் எதுவுமில்லை.

9-0

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட பரிசோதனைக் கிணறுகளைத் தோண்டும்போது எந்த அடிப்படையில் இந்த இடங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் ? ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட குழாய்க் கிணறுகளை வைக்கவேண்டும் என்பதாக மத்திய அரசாங்கத்திற்கு நம் அரசாங்கம் வற்புறுத்த முன்வருமா ? மத்திய அரசாங்கம் முன் வராவிட்டால் நம் அரசாங்கமே அந்த வேலையை மேற்கொள்ள முன் வருமா ?



**கனம் திரு. பூ. கக்கன் :** நம் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட ஆர்கனைசேஷன் கிடையாது. மத்திய அரசாங்கம்தான் ஏற்பாடு செய்கிறார்கள். அவர்கள் அங்கங்கே பரிசோதனை செய்து பார்த்து எந்த இடத்தில் மணிக்கு 20 ஆயிரம் காலனுக்கு மேல் தண்ணீர் கிடைக்கும் என்று தெரிகிறதோ அங்கே இதை ஏற்பாடு செய்கிறார்கள்.

**திரு. செ. மாதவன் :** இந்தத் திட்டத்தின்கீழ் பாசன வசதி பெறுகிற நிலங்களுக்கு பாய்ச்சப்படும் நீருக்குத்தான் வரி போடுகிறார்கள். இது விவசாயிகளுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கிறது. இந்த அடிப்படையிலேயே பொதுக் கிணறுத் திட்டத்தின் கீழும் வரி விதிக்க நம் அரசாங்கமும் ஆலோசிக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அப்படி இல்லை. இந்தத் திட்டத்தின்கீழ் ஏக்கர் ஒன்றுக்கு 123.75 ரூபாய் வரியாக வசூலிக்கப்படுகிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** எந்த அடிப்படையில் இந்தத் திட்டம் தேர்ந்தெடுக்கப்படுகிறது ? sub-soil குறைவான இடங்களை காண்பித்தால் அங்கே போதுமான தண்ணீர் கிடைக்குமா கிடைக்காதா என்பதை பரிசோதனை செய்து பார்க்க அவர்கள் முன்வருவதில்லை. ஆகவே, எந்த அடிப்படையில் நிலத்தை தேர்ந்தெடுத்து பரிசோதனை செய்கிறார்கள் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நான் முன்பே சொன்னேன். மணிக்கு 20 ஆயிரம் காலன் கிடைக்கக்கூடிய இடமாகப் பார்த்து தேர்ந்தெடுக்கிறார்கள்.

**திரு. செ. மாதவன் :** நம்முடைய மாநில அரசாங்கத்திடம் பொதுக் கிணறுத் திட்டம் இருக்கிறது. இந்தக் குழாய்க் கிணறு திட்டத்தை இவர்களும் மேற்கொள்ளுவார்களா ? இதனால் விவசாயிகளுக்குச் செலவு குறையாதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நான் முன்பே சொன்னேன். இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்தினுடையதுதான். இந்த ஆர்கனைசேஷன் நம்மிடம் இல்லை. மேலும் இதன்மூலம் செலவு ஜாஸ்தியாகத்தான் இருக்கும்.

**திரு. இரா. நாராயணன் :** இந்தத் திட்டத்தின் அடிப்படையில் உடையார்பாளையம் வட்டம், சன்னசிநல்லூர் கிராமத்தில் குழாய்க் கிணறு அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தத் திட்டத்தை ராமநாதபுரம், பரமக்குடிக்கு இடையில் பரீட்சார்த்தமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இவர்கள் எந்த அடிப்படையில் குழாய்க் கிணறு தோண்ட இடத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று நான் கேட்டேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** A well should supply 20,000 gallons of water per hour for a period of 20 years. இதைப் பொறுத்துத்தான் செய்கிறார்கள்.

**திரு. செ. மாதவன் :** குழாய்க் கிணறு திட்டங்களை எந்த இடத்தில் கனிப்பொருள்கள் கிடைக்கிறது என்று சொல்கிறார்களோ அங்கேதான் மேற்கொள்ளுகிறார்கள் என்று சொல்லப்படுகிறதே. இதுபற்றி எங்கெங்கே குழாய்க் கிணறுகளை வைக்கலாம் என்பதையாவது ஆராய்ச்சி பண்ணி மத்திய அரசுக்கு சொல்ல நம் அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நம் அரசாங்கத்திடம் அத்தகைய ஆர்கனைசேஷன் இல்லையென்று சொல்லிவிட்டேன். அவர்கள்தான் எங்கெங்கே தண்ணீர் கிடைக்கும் என்று பார்த்து முடிவு செய்ய வேண்டும்.

**திண்டிவனத்தில் சப்-கோர்ட்டு**

* 359 கேள்வி.—**திரு. கோ. ராஜாராம் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

**(அ) திண்டிவனத்தில் சப்-கோர்ட்டு ஒன்றைத் திறக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?**

[21st March 1964

(இ) ஆமெனில், அவ்விஷயம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Taxis and auto-rickshaws in Madurai*

*360 *Q.*—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to introduce meter system for taxis and auto-rickshaws in Madurai City?

The Hon. Sri R. VENKATARAMAN : Under the Madras Motor Vehicles Rules, taxis and auto-rickshaws plying in the mofussil should be fitted with either taxi-meters or milo-meters. In Madurai City, all the taxis are fitted with mile-meters and there are auto-rickshaws.

**திரு. வி. எஸ். மணி:** சென்னை நகருக்கு அடுத்தபடியாக மதுரை மாநகர் ஜனத்தொகையிலும், இதர வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்த தாக இருக்கிறது. அங்கு டாக்ஸி போன்ற வாகன வசதிகள் சரியாக இல்லை. அந்த நகரத்திற்கு டாக்ஸி வசதிகளை ஏற்படுத்த அரசினர் ஏதாவது வழி வகைகளை மேற்கொள்ளுவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சமீபத்தில் போக்குவரத்து இலாகா மான்ய விவாதம் நடந்தபோதுகூட நான் குறிப்பிட்டுச் சொன்னேன். யார் வேண்டுமானாலும் டாக்ஸி ஓட்டலாம். எந்தவிதமான ரெஸ்ட்ரிக்ஷனும் இல்லாமல் டாக்ஸி விட அனுமதி வழங்கப்படும் என்று சொன்னேன். டாக்ஸி விடவோ, ப்ளீட் வைத்து நடத்தவோ முன் வருவது பொது மக்களுடைய கடமை என்று நினைக்கிறேன்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, சென்னை நகரில் மட்டும் தான் மீடர் பார்த்து டாக்சிக்கு பணம் கொடுப்பது இருக்கிறது. மற்ற இடங்களில் டாக்சிக்காரர்கள் கேட்ட தொகை கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. இந்த மீடர் வைத்து சார்ஜ் வாங்கும் முறையைப் பரவலாக ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த உத்தரவுதான் போட்டு இருக்கிறோம் என்று சொன்னேன்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ADJOURNMENT MOTION *re* : LEAKAGE OF S.S.L.C. EXAMINATION QUESTION PAPERS.

Mr. SPEAKER : The Leader of the Opposition has given notice of an adjournment motion. It runs as follows :—

'The question papers for S.S.L.C. Government Examination conducted in March 1964, were leaked out even before the date of examination. The Education Department is responsible



21st March 1964] [Mr. Speaker]

for this incident. The questions were written even on the public roads in the City of Madras. The students in the City were aware of the questions even before the date of examination. The failure of the Government to maintain the secrecy of the S.S.L.C. Government Examination question papers will affect the entire student population in this State'.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிற எஸ்.எஸ்.எல்.ஸி பரீட்சை யைப் பொறுத்த விஞத்தாள்கள் முன்கூட்டியே வெளிப்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டு, அதைப்பற்றி மாணவர்கள் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளவும், சில இடங்களில் இன்றைய பரீட்சைவிஞத்தாளை முன்கூட்டியே விற்கவும் முன்வரும் நிலை ஏற்பட்டு இருப்பது வருந்தத்தக்க ஒன்றுகும். இது அரசினருக்கும், கல்வித் துறையினருக்கும் இழுக்குத் தேடித்தரக் கூடிய ஒன்றாக இருக்கிறது.

Mr. SPEAKER : Is there any question paper available here?

Sri V. R. NEDUNCHEZHIYAN : Yes.

Mr. SPEAKER : That is all right. Let the hon. Leader of the Opposition proceed.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தப் பொது பரீட்சை விஞத்தாள் முன்கூட்டியே வெளியாவதற்குக் காரணமாக உள்ளவர்களின் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குறிப்பாக, கணக்குப் பாடத்தைப் பொறுத்தும், தமிழ்ப்பாடத்தைப் பொறுத்தும் முன்கூட்டியே வெளியான கேள்விகள் தான் அப்படியே வந்தன என்று சொல்லப்படுகிறது. இன்று நடக்கிற சமூக பாடப் பரீட்சை சம்பந்தமான கேள்வித் தாளும் நேற்றே வெளியாகியிருக்கிறது. இதனால் பொது மக்கள் பெரிதும் வேதனையும், கவலையும் அடைந்திருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் கவனத்திற்கும், கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கூட வந்திருக்கக்கூடும். இந்தச் செயலுக்குக் காரண மானவர்கள் யார் என்பதை விசாரித்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, தண்டனை அளித்தால்தான் ஒழுங்கு முறை இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், காப்பாற்ற வழி ஏற்படும். அதற்கான வழி வகைகளைக் கண்டு தகுந்த நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத் தான் இத்தகைய குறைபாடு பின்னும் நிகழாதிருக்க வழி ஏற்பட முடியும்.

நேற்று நடந்த தமிழ்ப் பரீட்சையின் விஞத்தாள் என் கையில் இருக் கிறது. அதற்கு முன்தினம் வெளியான கேள்விகளும் இருக்கின்றன. கணக்கும் அப்படியேதான் வெளியாயிற்று என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு நடக்க இருக்கிற சமூகப் பாட பரீட்சைத் தாளும், நேற்று வெளியாகியிருக்கிறது. அவற்றை நான் அமைச்சரிடத்தில் கொடுக் கிறேன். இதன் காரணமாக அரசினருக்கு ஏற்பட்டிருக்கிற மாசினை, கல்வித் துறையினருக்கு ஏற்பட்டிருக்கிற மாசினை துடைத்துக்கொள்ள சரியான நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறேன். இதைத் தாங்கள் அனுமதிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : These question papers may kindly be shown to the Hon. Chief Minister.

***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, [illegible]க்கட்சித் தலைவர் அவர்கள் அவசரப் பிரேரணையாகக் குறிப்பிடு [illegible]ஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைத் தாள்கள் முன்னதாகவே வெளியாய்

விட்டன என்று உறுதியாகவே கூறியிருக்கிறார்கள். மேலும்
அவர்கள் பத்திரிகைகளில் வெளி வந்த வதந்திகளைப்பற்றியும் கூறி
யிருக்கிறார்கள். அவசரப் பிரேரணை என்றால் சமீபத்தில் நடந்ததாக
இருக்கவேண்டும். வதந்தியாக இருந்தால், வதந்தியின் பேரில் அவசரப்
பிரேரணைக்கு இடம் இல்லை. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
இவ்வாறு நடைபெற்றுவிட்டது; பரீட்சைத் தாள்கள் வெளியாகி
விட்டன என்று உறுதியாகக் கூறுகிறார்கள். ஆனால் அவ்வாறு வெளி
யாகவில்லை என்று நான் உறுதியாகக் கூற முடியும். நானும் தகவல்
விசாரித்துத் தான் கூறுகிறேன். இந்த நிலையில் ஒரு அவசரக் கேள்வி
கொடுத்திருந்தால் என்னிடம் உள்ள தகவல்களைக் கொடுத்திருக்கலாம்.
இன்றைக்கும் மாணவர்கள் விடை அளிக்க இருக்கிறார்கள். விடை அளிக்
கின்ற மாணவ மாணவிகளுக்கு இந்தச் சட்டமன்றத்திலே பிரஸ்தாபிக்கப்
படுகின்ற பிரச்சினை இன்று மாலை வரை அவர்களுக்குத் தெரிவதற்கு
இடமில்லை. பத்திரிகைகளில் வந்த வதந்திகளைத் தான் அவர்கள் பார்த்து
வேதனை அடையக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என்னிடம் இதைப்
பற்றிக் கேட்ட நிருபர்களிடம், "நீங்கள் உங்களுடைய பத்திரிகைகளில்
இந்த மாதிரி வதந்தியை எல்லாம் போடுவது கூட உங்கள் உரிமை"
என்று கூறினேன். உண்மையிலேயே என்ன நடந்தது என்று தெரிந்து
கொண்டு போட்டிருந்தால் நல்லது. வதந்தியை வைத்து "அம்பலப்பட்டு
விட்டது" என்று பத்திரிகைகளில் போடுவதை மாணவர்கள் பார்க்க
நேருவதால் அவர்களுக்கு ஏற்படுகிற கஷ்டத்தைப் பத்திரிகைகள் உணர
வேண்டும்.

இன்று காலையில் பத்திரிகைகளில் பார்த்த பிறகு இன்றைக்குக்
காலையிலே டெலிபோன் மூலம் "செக்ரடரி டு தி கமிஷனர் பார் கவர்ன்மெண்டு
எக்ஸாமினேஷன்ஸ்"-ஐ விசாரித்தேன். அவருடைய திறமை, அவருடைய
யோக்யதையிலே அரசாங்கத்துக்குப் பரிபூர்ணமான நம்பிக்கை உண்டு.
அவரை விசாரித்துத் தெரிந்துகொண்டு தான் பரீட்சைத் தாள்கள் வெளி
யிடப்படவில்லை என்று உறுதியாகக் கூறுகிறேன். ஆனால் ஹேஷ்யம்
செய்யலாம். ஸ்கூல் பைனலில் மூன்று ஆண்டுகளாக ஒரே பாடப் புத்தகங்
களாக இருக்கின்றன. சென்ற ஆண்டு கேள்விகளை வைத்துக்கொண்டு
ஆசிரியர்கள் இந்த ஆண்டு இன்ன கேள்விகள் வரக்கூடும் என்று "கெஸ்"
செய்யலாம். அதை வைத்துக்கொண்டு சில பேர் வியாபாரம் செய்யப்
பார்க்கலாம். ஆனால் அரசாங்கத்தின் சார்பாக, இலாகாவின் மூலமாக
ஏதாவது லீக்கேஜ் இருந்தால் அதைப் பற்றித் தகுந்த நடவடிக்கைகளை
எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஒருக்காலும் தயங்காது. நான் விசாரித்துத்
தெரிந்துகொண்ட வரையில் லீக்கேஜ் இல்லையென்று உறுதியாகக் கூற
முடியும். ஆகவே, இது அவசரப் பிரேரணைக்கு உரியதல்ல என்று
தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: Is this not a matter for short-notice question? Of course I am going to give a ruling. Is this an occurrence which has taken place recently, beyond all reasonable doubt?

SRI V. KRISHNAMOORTHY: Government may enquire.

MR. SPEAKER: That is what I say. Let the matter be enquired into before we come to a definite conclusion as to whether such an occurrence took place. Before that the matter cannot come up as an adjournment motion. The matter may be raised in the form of a short-notice question. The Hon. Leader of the Opposition can ask a short-notice question tomorrow or day after. If necessary, the question can be asked tomorrow.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே,
இன்று நடைபெற இருப்பதாக இருக்கின்ற பரீட்சை கேள்விகள்பற்றிய
ஒரு "காப்பியை" அமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். அதை





என்ற நிலை வருமானால், அது ரெடி-மேடு துணிகள் வியாபாரம் செய்பவர்
களுக்கு மிக்க தொல்லைகொடுப்பதாக இருக்கிறது. ஆகவே, இந்த ரெடி-
மேடு ஆடைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும்.
மேலும், பம்பாய் போன்ற இடங்களில் ரெடி-மேடு ஆடைகளுக்கு விற்பனை
வரி கிடையாது. அங்கிருந்து கொண்டுவரப்படுகிற நாகரிகமாக தைக்கப்
பட்ட பல ரவிக்கைகளும், கவுன்களும், பம்பாயிலிருந்து தருவிக்கப்படு
கின்ற அந்தத் துணிகளுக்கு அங்கு விற்பனை வரி இல்லாமல், இந்த
இடத்திற்கு வந்த பிறகு அதற்கு விற்பனை வரி போடுவது என்றால்,
அதனால் சிலதொல்லைகள் ஏற்படுன்றன, வியாபாரம் குறைகிறது.
ஆகையினால், ரெடி-மேடு ஆடைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விதி
விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, கைத்தறித் துணி சம்பந்தமாகச் சொல்லவேண்டுமென்று
சொன்னால், " டிராவலிங் பெட் " பற்றி நான் சென்ற வருஷம் கூட
சொல்லியிருக்கிறேன். அது கைத்தறியிலே நெசவு செய்யப்பட்டது. மெஷி
னிலே தைப்பது இல்லை. அப்படியிருந்தும் கூட ஒரு சதவிகிதம் அதற்கு
வரி போட்டிருக்கிறார்கள். அதை நிவர்த்தி செய்யவேண்டும் என்று
பல தடவைகள் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆகவே, கைத்தறித்
துணி தைக்கப்பட்டிருந்தாலும் கூட, அதற்கு விற்பனை வரி கூடாது.
கைத்தறித் துணி விற்பனையாவதே மிகவும் கஷ்டம். அது நம்முடைய
நாட்டில் இருக்கிற பெரிய தொழில். அப்படியிருந்தும், அவைகள் தைக்கப்
பட்டாலும்கூட, அவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பொருள்கள் பலவற்றிற்கும் நாம் விற்பனை வரி போட்டிருக்
கிறோம். குறிப்பாக, பாலைப்பற்றி நான் சொல்லுகிறேன். பாலுக்கு
விற்பனை வரி கூடாது. அதுவும், கூட்டுறவு முறையில் இயங்கிக்கொண்டி
ருக்கிற பால் பண்ணைகளுக்கும், கோவாபரேடிவ் சொஸைடிகளுக்கும்
விற்பனை வரி இருக்கிறது. ஆகவே, பாலுக்கு போடக்கூடிய விற்பனை
வரிக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய
பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. செ. சீனிவாசன்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, தொழில்
அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் ஸேல்ஸ் டாக்ஸ் மான்யத்தை
ஆதரித்து எனது ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.
1959-ம் வருஷத்து ஸேல்ஸ் டாக்ஸ் ஆக்டில், ஸேல் என்ற வார்த்தைக்கு
"டெபினஷன்" வொர்க்ஸ் காண்டிராக்ட் என்பதும் சேர்த்து வருவது
போல ரொம்பப் பெரிய டெபினஷனாக, போட்டிருக்கிறார்கள். முக்கிய
மாக, வொர்க்ஸ் காண்டிராக்ட் சம்பந்தப்பட்ட வியாபாரிகள் 'பாஸ் போர்ட்டு
போடோகிராபி', 'பிரிண்டிங் பிரஸ்', இம்மாதிரி தொழில் நடத்துகிறவர்
களுக்கு இது ஒரு பெரிய வேதனையாக இருக்கிறது என்பதை இந்தச்
சமயத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக 'இண்
டியன் ஸேல் ஆப் குட்ஸ் ஆக்ட்'-ல் உள்ள 'ஸேல்ஸ்' என்ற வார்த்தைக்கு
என்ன டெபினஷனோ அதைத்தான் 'ஸேல்ஸ் டாக்ஸ் ஆக்ட்-லும்' 'டெபி
னிஷ'னாக எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக 'வொர்க்ஸ் காண்டி
ராக்டில்', முக்கால் வாசி 'லேபர்' அடங்கியது. 1939-ம் ஆக்டில் அதற்கு
ஒரு பெர்ஸெண்டேஜ் கொடுத்திருக்கிறார்கள். 'எபவுட் 40 சத விகிதம்'
என்று நினைக்கிறேன். இந்தத் தொழில்களில் ஈடுபட்டிருக்கக்கூடிய, முக்
கியமாக அச்சாபீஸ் முதலாளிகளும், 'பாஸ் போர்ட்டு போட்டோ', முதலாளி
களும் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். சாதாரணமாக ஒரு கேஸை
எடுத்துக்கொண்டால், ஒரு 'எக்ஸாம்பிளுக்கு' சொல்லுகிறேன். போர்டோ
என்று சொன்னால் 'கமர்ஷியல்', போட்டோ இருக்கிறது. ஆனால் 'பாஸ்
போர்ட்டு போட்டோ' என்று சொன்னால், பாஸ் போர்ட்டு எடுக்கவேண்டும்
என்று நினைக்கிறவர்கள் தான் அதை உபயோகப்படுத்துவார்கள். அதை
வேறு விதமாக 'ஸேல்' ஆக்க முடியாது. ஆகவே, அம்மாதிரி கேஸ்
களுக்கு 'வொர்க்ஸ் காண்டிராக்ட்' மூலம் விதிவிலக்கு அளிப்பதில் இந்த
டிபார்ட்மெண்டிற்கு என்ன சங்கடம் இருக்கிறது என்பது தெரியவில்லை.
சாதாரணமாக 1959-60 அல்லது 1960-61 என்று நினைக்கிறேன், இம்மா

திரி 'பாஸ் போர்ட்டு போட்டோ' எடுத்துக்கொண்டிருந்த சில ஸ்தாபனங்
களுக்கு வரியிலிருந்து விலக்கு அளித்து, அவைகளெல்லாம் 'டாக்ஸபிள்
டர்ன் ஓவரில்' சேராது என்று விதிவிலக்கு அளித்திருந்தார்கள். 'போர்டு
ஆப் ரெவின்யூ' வி லிருந்து வந்த ஒரு கிளாரிபிகேஷனுக்குப் பிறகு, 3 வரு
ஷங்களுக்கு ரெவியூ செய்யலாம் என்ற ஒரு சான்ஸ் இருப்பதினால்,
1962-63-லிருந்து இம்மாதிரி விடப்பட்ட தொகையை 'டாக்ஸபிள் டர்ன்
ஓவரில்' இப்பொழுது சேர்த்துக்கொண்டு, உடனே 'லம்ப் ஸம்'-ஆக கொடுக்க
வேண்டுமென்று சொல்லுகிறார்கள். 'டைம்' கொடுத்தாலும் பரவாயில்லை
ரூ. 1,000, 2,000 'பே' பண்ணவேண்டுமென்று டிபார்ட்மெண்டார் 'இன்
ஸிஸ்டு' செய்வதால், வியாபாரிகள் ரொம்ப வேதனை படக்கூடிய அளவில்
இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

அடுத்தபடியாக, 'போர்டிலிருந்தோ', அல்லது சர்க்காரிலிருந்தோ ஒரு
'கம்யூனிகேஷன்', வந்தால், அதற்கு சரியாக 'கன்ப்யூஷன்' இல்லாமல்
விளக்கம் சொல்லுவதற்கு ஜில்லா லெவெல் அதிகாரிகளுக்கும், இங்கு
போர்டிலும் கூட சந்தர்ப்பம் ஏற்படுவது கிடையாது. சமீபத்தில் நடந்த
'பி.ஏ.ஸி.' மீடிங்கில் கூட ஓவல்டின் 'டின்டு ப்ளஸ்' 'வெரைடியில்' வருமா
என்று ஒரு சந்தேகம் எழுப்பப்பட்டது. ஓவல்டின் 'டின்டு' குட்ஸ்தானா என்ற
சந்தேகம் டிபார்ட்மெண்டிற்கு ஏன் வந்தது என்று தெரியவில்லை.
ஆகவே, அம்மாதிரி சிக்கல்களை தவிர்ப்பதற்கு நாம் ஒரு ஆர்டர் அல்லது
ஆர்டினன்ஸ் 'இஷ்யூ'பண்ணினால், அதில் இன்னென்ன சேரும், இன்
னென்ன சேராது என்ற விளக்கத்தையும் கொடுத்துவிட்டால், கூடுமான
வரையில் வியாபாரிகளுக்கு சங்கடம் ஏற்படாமல், அவர்களுக்கு பெரிய
உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நமது அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது இந்த
மாகாணத்திலே சேல்ஸ் டாக்ஸ் அட்வைசரி கமிட்டி இருக்கிறதென்று
சொன்னார்கள். மாவட்ட ரீதியிலும் சேல்ஸ் டாக்ஸ் அட்வைசரி கமிட்டி
கள் இருக்கின்றன. அங்கே இருந்து சில தீர்மானங்கள் போடப்பட்டு
சர்க்காருக்கு அனுப்பப்படுகின்றன. அவற்றையும் கவனித்து என்ன செய்ய
வேண்டுமோ அதைச் செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். முக்கிய
மாக ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களைப் பொறுத்தவரையில் ஏலக்
காய்க்கு இந்த விற்பனை வரியிலிருந்து ரிபேட் கொடுக்க வேண்டுமென்று
நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாகாணத்தில் உற்
பத்தியாகிற ஏலக்காயில் 80 சத விகிதம் வெளி மாகாணங்களுக்கோ அல்
லது வெளி தேசங்களுக்கோ ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகவே, இந்த
மாதிரி ஒரு பொருளுக்கு விற்பனை வரிச்சலுகை அளிப்பதின் மூலம்
அந்தந்த தொழில் வளம் பெறுவதற்கு ஏற்ற வகையில் பாதுகாப்பளிக்க
முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய விற்பனை வரி
சட்டத்தின் கீழ் உள்ள ரிஜிஸ்டர்டு டீலர்களுக்கு மதராஸ் ஜெனரல் சேல்ஸ்
டாக்ஸ் சட்டத்தில் கொடுத்திருக்கிற மாதிரி 'மன்திலி புரோவிஷனல் அஸெஸ்
மெண்ட்டுக்கு' வழி வகை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். மேலும் பொது விற்பனை வரிச் சட்டத்தில் இருக்கிற
மாதிரி எப்ரல் மாதத்திலே ரிட்டர்ன்கள் கொடுக்குமாறு ஏற்பாடு செய்ய
வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்திலிருந்து அச்சடித்துக்
கொடுக்கப்படுகிற டெலிவரி நோட்ஸ் டெலிவரி பாரங்கள் எல்லாம் பல
ரிமைண்டர்கள் அனுப்பப்பட்டும் போர்டு ஆபீஸிலிருந்து விற்பனை வரி
அதிகாரிகளுக்கு சரியாக வரவில்லை என்ற புகார்கள் வருகின்றன. உட
னடியாக அவற்றை அனுப்பினால்தான் வியாபாரிகளுக்கு சௌகரியமாக
இருக்கும். இதனால் வியாபாரிகள் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகி
றார்கள் என்பதை தெரிவித்துக்கொண்டு, அவைகளை உடனடியாக வர
வழைத்துக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஒரு வேண்டுகோள். மாவட்ட ரீதியாக இருக்கக்கூடிய சேல்ஸ்
டாக்ஸ் அட்வைசரி கமிட்டியில் உள்ள மெம்பர்கள் பலர் வியாபாரிகள்.
சேம்பர் ஆப் காமர்ஸில் கொடுக்கிற மாதிரி அரசாங்கத்தில் போடுகிற
நோட்டிபிகேஷன்கள், திருத்தங்கள் எல்லாவற்றையும் அவர்களுக்கு அவ்





வப்பொழுது கொடுத்தால் நலமாக இருக்குமென்பதை தெரிவித்துக்
கொள்கிறேன். தமாஷா வரியில் உள்ள எவேஷனைப் பற்றி ஒரு நண்பர்
இங்கே வேடிக்கையாக சொன்னார்கள். மாலை 6 மணியிலிருந்து சினி
மாக்கள் முடிகிறவரை செக் பண்ணினால் என்ன என்று கேட்டார்கள். அப்படி
செக் பண்ணினாலும் டாக்ஸ் எவேஷன் ஓரளவு இருக்கத்தான் செய்யும்.
கூடுமான வரையில் நான்-அபிஷியல்களே, அதாவது நகரசபைத் தலை
வரோ அல்லது நகாசபைக் கவுன்சிலர்களோ அல்லது பஞ்சாயத்து யூனி
யன் தலைவரோ அல்லது கவுன்சிலர்களோ, அல்லது இருவரும்
இணைந்தோ இந்த மாதிரி டாக்ஸ் எவேஷன் ஏற்படாமல் இருக்க திடீர்ச்
சோதனைகள் செய்வதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஜே. மாதா கவுடர்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம்
அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த விற்பனை வரி மானியக்
கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.
விற்பனை வரி என்பது முன்பு நமது நாட்டிலே ஒவ்வொரு விற்பனையை
பொறுத்தும் பலமுனை வரியாக இருந்தது. அப்படியிருந்ததால் வியாபாரி
கள் கணக்கு வைப்பதில் பல தொல்லைகள் இருந்தன என்ற காரணத்
தால் வியாபாரிகள் சர்க்காரிடத்தில் முறையிட்டதின் பேரில் இப்பொழுது
படிப்படியாக ஒவ்வொரு பொருளின் மீதும் ஒரு முனை வரியாக மாற்றிக்
கொண்டு வருகிறார்கள். ஆண்டுதோறும் பார்த்தால் பலமுனை வரிகள்
எல்லாம் ஒரு முனை வரியாக மாறிக்கொண்டு வருகிறது. அப்படி மாறு
வதினால் நமக்கு அதிக வருவாய் கிடைக்கிறதா, அலலது பலமுனை
வரியினால் அதிக வருமானம் கிடைக்கிறதா என்பதை நாம் ஆராய்ந்து
பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பலமுனை வரியாக
எல்லாவற்றையுமே மாற்றிவிட்டால் நமக்கு அதிக வருவாய் கிடைக்கு
மென்பது என்னுடைய அபிப்ராயம். ஒரு முனை வரியாக மாற்றியதின்
காரணமாக அண்டை மாநிலங்களுக்கு நம்முடைய ராஜ்யத்திலிருந்து
பொருள்களை அனுப்பும்பொழுது, அங்கிருந்து நமக்கு ஸி-பாரம் கொடுத்து
விட்டால், இங்கு ஒரு சத விகிதம் அல்லது இரண்டு சத விகிதம் கட்டிவிட்டால்
போதும் என்ற நிலைமை ஏற்படுகிறபொழுது நமக்கு நிச்சயமாக வருவாய்
குறையுமென்று நான் நினைக்கிறேன். என்னுடைய மாவட்டத்தைப்
பொறுத்தவரையில் அதிகமாக விற்பனையாகக் கூடிய பொருள் தேயிலை.
தேயிலை தமிழ் நாட்டில் மட்டும் விற்பனையாகிறது என்றில்லை. தமிழ்
நாட்டில் விற்பனையாவது மிகமிகக் குறைவு. குறிப்பாக பம்பாய் ராஜ்யத்
திலும், குஜராத் ராஜ்யத்திலும், மைசூர் ராஜ்யத்திலும் தான் அதிக
மான அளவுக்கு தேயிலை விற்பனையாகிறது. அதிலும் நீலகிரித் தேயி
லையை பம்பாய் மாகாணத்தில் தான் அதிகமாக வாங்குகிற காரணத்தி
னால், அதன்மீது ஒரு முனை வரி விதிக்கிற காரணத்தால் நமக்கு
அதிகமான வருவாய் இல்லையென்பது என்னுடைய அபிப்பிராயம். பல
முனை வரியாக இதை மாற்றியமைத்தால் தேயிலை உற்பத்தியாளர் ஒரு
சத விகிதம் அல்லது இரண்டு சத விகிதம் வாங்கியிருந்தால் ஏஜெண்டுக்குக்
கொடுக்கும்பொழுது மறுபடியும் ஒரு சத விகிதம் அல்லது இரண்டு சத
விகிதம் வசூலித்து அதற்குப் பிறகு பிற மாகாணங்களில் விற்பனை
செய்தால் அந்த விற்பனையின் பேரிலும் நமக்கு வருவாய் இடைக்கும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ தொல்லைகள் நீங்க
வேண்டும். ஆகவே உற்பத்தியாகக் கூடிய கட்டத்தில் ஒரு முனை வரி
போட்டு விட்டால் தொல்லைகள் நீங்கிவிடும் என்ற முறையீட்டின் பேரில்
இப்படிச் செய்திருக்கிறார்கள். இதை நன்கு பரிசீலனை செய்து எல்லாப்
பொருள்களின் மீதும் பலமுனை வரி விதிக்கும் முறையைக் கொண்டு
வந்தால் நமக்கு வருவாய் அதிகமாகும். ஒருமுனை வரியை அறவே
ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலே பல
சிக்கல்கள் இருக்கின்றன. தேயிலையை எடுத்துக்கொண்டால் அதற்கு ஒரு
முனை வரி என்று சொல்லும்பொழுது ரூ. 4-க்கு விற்றால் இருபது நயா
பைசா கட்டவேண்டும். அதே நேரத்தில் அந்தத் தேயிலையை பாக்
செய்து அனுப்புகிற பெட்டிகளுக்கு ஒரு முனைவரி உற்பத்தியாகிற இடத்
திலே போடப்படுகிறது. அதனுடைய இரயத்தைத் கழித்து தேயிலைக்கு

[திரு. ஜே. மாதா கவுடர்] [21st March 1964

மட்டும் விற்பனை வரி போடவேண்டுமென்று சொன்னால், விற்பனை வரி அதிகாரிகள் அதை ஒப்புக்கொள்வதில்லை. அந்தப் பெட்டிகளுக்கான கிர யத்தையும் சேர்த்து, அதனுடைய கூலியையும் சேர்த்து, தேயிலையின் விலையையும் சேர்த்து எவ்வளவு வருகிறதோ அதற்கு மத்திய எக்ஸைஸ் வரியை மட்டும் கழித்துவிட்டு வரி போடுகிறார்கள். பாக் செய்யும் பெட்டி களுக்கு ஒருமுனை வரி ஏற்கெனவே விதித்துவிட்டதால் மறுபடியும் அதன் கிரயத்திற்கு வரி விதித்தால் அது இரட்டிப்பு வரி ஆகாதா என்று நான் கேட்கிறேன். ஒரு முனை வரியை வைப்பதாயிருந்தால், ஏதாவது ஒரு பொருள் பாக் செய்யக்கூடிய முறையிலே ஏற்கனவே ஒரு முனை வரி விதிக்கப்பட்டிருந்தால் அதைக் கழித்துவிட்டு அதிலே அடைத்து அனுப்பு கிற பொருளுக்கு மட்டும் ஒருமுனை வரி போட்டால் நன்றாக இருக்கும் இல்லாவிட்டால் டபிள் டாக்ஸ் ஆகிவிடும். இதை சர்ச்சைக்கு எடுத்துக் கொண்டுபோனால் பல தகராறுகள் ஏற்படும்.

அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் செக் போஸ்டுகளிலே லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள். இது உண்மைக்குப் புறம்பானது. இந்த செக் போஸ்டுகளிலே வியாபாரிகளுக்கு அதிகத் தொல்லைகள் கொடுக்கிறார்கள். என்றுதான் ரிப்போர்டுகள் வரு கின்றன. சாதாரணமாக நான் காரிலேதான் பிரயாணம் செய்கிறேன். ரயிலில் பிரயாணம் செய்வதில்லை. அப்படி நான் ஊரிலிருந்து வரும் பொழுது செக் போஸ்டிலே பார்த்தால் க்யூ வரிசையிலே முப்பது அல்லது நாற்பது லாரிகள் இருக்கின்றன. அங்கேயுள்ளவர்கள் ஒவ்வொரு பில்லாக செக் செய்து அவர்களுக்கு எவ்வளவோ தொல்லைகளைக் கொடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் எந்த வண்டியிலே போனார் அல்லது எந்த லாரியிலே போனார் ?) காரிலே வரும்பொழுது நான் லாரிக்காரர்களைப் பார்த்துக் கேட்கிறேன். லஞ்சம் வாங்கினால்கூட பரவாயில்லை. சீக்கிரமாக அனுப்பிவிடு வார்கள். ஆனால் இப்பொழுது அவர்களுக்கு ரொம்பவும் தொல்லை கொடுத்து செக் பண்ணுகிறவர்கள் ஒவ்வொரு பில்லையும் செக் பண்ணுவதால் கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் தொல்லைகளைக் குறைக்க வேண் டும். லஞ்சம் வாங்கிவிட்டு அனுப்புகிறார்கள் என்று சொல்வது உண் மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வியாபாரி ளுக்கு உண்மையாகவே தொல்லைகள் இருக்கின்றனவா என்பதைப் பார்க் கும்பொழுது ஒருசில தொல்லைகள் இருக்கின்றன. சாதாரணமாக ஒரு முனைவரி விதிக்கப்படுகிற ஒரு பொருளை, உதாரணத்திற்குத் தேயிலையை எடுத்துக்கொள்ளவோம். தேயிலைக்கு ஒருமுனை வரி விதித்து சென்ட்ரல் எக்ஸைஸ் அதிகாரிகள் மூலம் கேட் பாஸ் மூலமாக ஒரு பவுண்டு தேயி லையை வெளியே கொண்டுவர முடியும். அப்படி வெளியே கொண்டு வரும்பொழுது விற்பனை வரி செலுத்தப்படுகிறது. இந்தச் செக் போஸ்டு களில் என்ன செய்கிறார்கள் என்றால் அவ்வாறு விலைக்கு வாங்குகிற இரண்டாவது நபரிடம் பில்லைக் கேட்கிறார்கள். அவ்வாறு பில்லை கேட்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன் றைக்கு ஒரு முனை வரியை உற்பத்தியாளர் செலுத்தி இருக்கும்போது, இரண்டாவது தடவையாக சேல்ஸ் டாக்ஸ் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அப்படி அவசியமற்றதை செக் போஸ்டில் கேட்கிறார்கள் தெரியாமல் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதே நேரத்திலே 1959-ம் ஆண்டு பச்சைத் தேயிலைக்கு விற்பனை வரி போட்டு விட்டோம். அதனால் நீலகிரியிலே, தேயிலை உற்பத்திஸ்தலத்தில் 150 பாக்டரிகளிடம் அஸெஸ் செய்து வசூலித்ததை, இன்றைக்கு 15,000 பேர்களுக்கு அஸெஸ் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த குறிப்பிட்ட வரு ஷத்தில் யார் யார் சப்ளை செய்தார்கள் என்பதை பாக்டரிமூலமாகக் கூட வாங்க முடியாத நிலையில் இருக்கும்போது, விற்பனை அதிகாரிகள் யாரிடம் அந்த தகவலை வாங்குவது என்று தெரியவில்லை. கிராமப் புறங்களில் வந்து ஒவ்வொருவரையும் கேட்டுக்கொண்டு திரியும் நிலையில்தான் இருக் கிறார்கள். ஏற்கனவே கணிசமான தொகையை வசூல் செய்து விட்டார் கள். இருக்கக்கூடியது இன்னும் ஒரு லட்சம் அல்லது இரண்டு லட்சம் இருக்கலாம். யார் என்றே கண்டு பிடிக்க முடியாத நிலை இருப்பதால், எத்தனையோ அதிகாரிகள், ஸ்பெஷல் டி.சி.டி.ஓ. போன்ற அதிகாரிகளைப்



21st March 1964] [திரு. ஜே. மாதா கவுடர்]

போட்டுக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே பெறக்கூடிய வரிப்பணம் குறைவாக இருப்பதால், தயவுசெய்து ஒரு வருஷத்திற்கு உரிய வரியை தவறுதலாகப் போட்டுவிட்ட வரியை, மக்களுக்குத் தொல்லை கொடுக்காமல் இருப்பதன் பொருட்டு, விட்டு விடவேண்டும் என்றும் தெரியாத கணக்கு என்ற முறையில் தள்ளுபடி செய்ய வேண்டும் என் றும் அமைச்சர் அவர்கள் தீர்மானிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

இன்னொரு தொல்லையும் இருக்கிறது. ஒருவன் தேயிலையைக் கொஞ் சம் விற்று இருந்தால், அதன் விலை 3 ரூபாய் அல்லது நாலு ரூபாய் இருக்கும். அவ்வளவுதான் அந்த வருஷத்திலே விற்று இருப்பான். சட்டம் என்ன சொல்லுகிறது என்றால் யாராவது வியாபாரம் செய்திருந் தால், அவர் ரூபாய் 10 ரெஜிஸ்ட்ரேஷன் பீஸ் கட்டி ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறது. மூன்று ரூபாய்க்கு வியாபா ரம் செய்தவன் பத்து ரூபாய் கொடுத்து ரெஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்பது நியாயம் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு இன்ஸ்டன்ஸ் சொல்லுகிறேன். ஒருவர் ஒரு வரு ஷத்திலே புதிதாக போட்ட தோட்டத்திலே, அந்த வருஷம் அவர் பறித்து விற்றது 15 ந. பை.க்கு ஒரே ஒரு கிலோகிராம் இருக்கும். 15 ந. பை.க்கு சேல்ஸ் டாக்ஸ் வசூல் செய்ய, 10 ரூபாய் கொடுத்து ரெஜிஸ்ட் ரேஷன் செய்துகொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்கிறார்கள். அது எப்படி நியாயம் ஆகும் ? தயவுசெய்து விற்பனை செய்யும்போது இத்தனை ரூபாய்க்கு மேல் விற்பனை செய்திருந்தால் என்று ஒரு வரம்பு கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்மந்தமாக ரெஜிஸ்ட்ரேஷன் பீஸ் வாங்கவேண்டாம் என்று ஒரு சுற்றறிக்கை மூலம் அதிகாரிகளுக்குச் சொல்லிவிட்டால் இந்தத் தொல்லை தீரும்.

டர்ன்-ஓவர் விஷயத்திலே மாதாமாதம் அனுப்ப வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். ஏதோ மறதியாக, ஞாபகம் இல்லாமல் ஒரு வர் டர்ன்-ஓவர் அனுப்பவில்லை என்றால், ஆபீசர் உடனே இந்த வருஷம் பூராவுமே டாக்ஸ் போடுகிறேன் என்று போட்டுவிடுகிறார். சட்டப்படி நோட்டீஸ் கொடுப்பதில்லை. அதனால் தவறுகள் ஏற்படுகின்றன. தயவு செய்து, அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர்கள் இவ்வளவு நாட் களுக்குள் டர்ன்-ஓவர் அனுப்பவேண்டும், அப்படி அனுப்பத் தவறினால் மொத்தமாக வரிபோடப்படும் என்று ஒரு அறிக்கை கொடுத்து விட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். ஏதோ ஏமாந்தவர்களுக்கும் டர்னோவர் வரவில்லை என்று சொல்லி பொதுவாக வரி போட்டால் அது பாதகமாக இருக்கும். ஆகவே டர்னோவர் பற்றி அறிக்கை கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சினிமா தியேட்டரிலே தவறுகளைக் கண்டுபிடிப்பதற்காக, சினிமா போகும் பொது மக்களை டிக்கட்டை வைத்துக்கொள்ள வேண்டும், இல்லா விட்டால் ரூபாய் 500 அபராதம் என்று 'ஸ்லேட்' போடுவது அவ்வளவு நல்ல தல்ல. அதை மக்கள் விரும்பவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும் புகிறேன். பொது மக்கள் சர்க்காரோடு ஒத்துழைக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் நலம் என்றாலும் குழந்தைப் பிள்ளைகள்கூட டிக்கட்டுத் துண்டை விட்டுவிட்டால் அபராதம் 500 ரூபாய் என்பதை சொல்ல ஸ்லேட் போடுவதை விட்டு விடவேண்டும். ஏனென்றால் அதனால் பொதுமக்க ளுக்கு சர்க்கார் பேரில் வெறுப்பு ஏற்படுகிறது. அடுத்தபடியாக, சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர்கள் தியேட்டரிலேயே படுத்து தூங்கவேண்டும் என்பதுபோல எனக்குமுன் பேசிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அப்படி அவர்கள் தியேட்டரிலேயே படுத்துத் தூங்க முடியாது. அப்படி சொல்வதில் அர்த்தம் இல்லை. அவர்கள் திடீர் திடீர் என்று செக் செய்யலாம், அப்படி இப்பவும் செய்கிறார்கள். சில இடங்களில் போய் சார்ஜ் செய்கிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. சினிமா தியேட்டர்களில் சென்று விற்பனை கம்மியாகக் காட்டியிருந்தால் அதிகமான தண்டனை கொடுக்கிறார்கள். அதெல்லாம் சரி. ஆனால் பொதுமக்களை வற்புறுத்தும் வகையில் ஸ்லேட் காட்டுவது விரும்பத்தக்கது அல்ல என் பதை சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடிக்கிறேன்.

***திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் விற்பனைவரி பற்றிய மானியக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதன் மேல் சில கருத்துக்களை வழங்க விரும்புகிறேன். விற்பனை வரி மூலம் நம்முடைய மாநில அரசு பெறும் வருவாய் அதிகமாக அமைந்திருக்கிறது. இந்த மாநிலத்திலே கிடைக்கின்ற பல்வேறு வரி இனங்களிலே மிக முக்கியமான இனமாக விற்பனை வரி இனம் அமைந்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் இதை காமதேனு என்று அழைக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த வரியை வசூலிக்க வேண்டிய அளவுக்கு வசூலிக்கப்படுமானால், மேற்கொண்டு ஆண்டு தோறும் புதிய வரிகள் போடவேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்து அவ்வப்பொழுது எடுத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டிருக்கும் புது வரிக்கு அவசியமே கிடையாது என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு போட்டிருக்கும் வரி ஒரு கோடி ரூபாய் எதிர்பார்க்கிற அளவுக்கு, இந்த விற்பனை வரி போடப்பட்டிருக்கிறது. 1 சதவிகிதமாக இருந்ததை, 2 சதவிகிதமாக உயர்த்துவதன் மூலமாக அந்த ஒரு கோடி ரூபாயை அரசு எதிர்பார்க்கிறது. இந்த வரியின் மூலம் வசூலிக்க வேண்டிய தொகையை வசூலிக்கத் தக்க முயற்சி எடுத்துக் கொண்டால், புதிய வரிகள் போடவேண்டிய அவசியமே இல்லை. இந்த நேரத்திலே, நாலுக்கு வரியை ஏற்றுவதன் மூலம், கைத்தறித் தொழில் பாதிக்கப்படும் என்ற அச்சம் ஏற்பட்டு, திட்டவட்டமான கருத்தை கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் எடுத்துத் தெரிவிக்கிறார்கள். கைத்தறித் தொழிலுக்கு பாதகம் ஏற்படாமல் இருக்கும் அளவுக்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமோ அந்த வகையில் அதனை மேற்கொள்ள நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தப் புதிய வரி போடுவதன் மூலம் ஒரு கோடி ரூபாய் வருகிறது என்றாலும், அத்தகைய விதிப்பினால் ஏற்படுகிற தொல்லைகளை கைத்தறியாளர்களைப் பொருத்த மட்டிலாவது நீக்க அரசு தயாராக இருக்கிறதா என்பதை அமைச்சர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

இந்த வரியிலே வசூலிக்கப்பட முடியாத அளவு ஏமாற்றுகிறவர்கள் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள் என்ற கருத்தைக் கனம் கைத் தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த வசூலிக்கப்படாத தொகையைப் பலவாறு பலரும் எடுத்துக் கூறுகிறார்கள். 15 கோடி ரூபாய் இருக்கும் என்றும், 20 கோடி ரூபாய் இருக்கும் என்றும், 25 கோடி ரூபாய் இருக்கும் என்றும் எடுத்துச் சொல்கிறார்கள். உண்மை நிலை எந்த அளவுக்கு இருக்கக்கூடும் என்பது பற்றிய விவரங்களைச் சேகரிப்பதற்கு அரசு முற்பட்டதா, அந்த வகையிலே எவ்வளவு இருக்கக்கூடும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் மூலமாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, பலமுனை விற்பனை வரி இருப்பதா, ஒருமுனை விற்பனை வரி இருப்பதா, என்பதிலே இப்பொழுது பலவித சர்ச்சைகள் ஏற்பட்டிருக்கின்ற தன்மையைப் பார்க்கிறோம். எல்லாம் பலமுனைவரிகளாக இருந்த நிலைமையை மாற்றி ஒருமுனை வரியாக ஆக்குவதன் மூலமாக வியாபாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிற தொல்லை நீங்கக்கூடும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, சில பல இடங்களில் ஒரு முனை வரி கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒருமுனை வரி செலுத்தும் வியாபாரிகள், தங்களுடைய அனுபவத்தின் காரணமாக ஏற்பட்ட கஷ்டங்களைப் பார்க்கின்றபோது அது பலமுனை வரியாக இருந்தால்தான் நல்லது என்ற கருத்தை தெரிவிக்கிறார்கள். எனவே, பலமுனை வரியாக இருந்தது ஒருமுனை வரியாக ஆக்கப்பட்டது. அதை மீண்டும் பலமுனை வரியாக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது. ஒருமுனை வரியாக்குவதின் மூலமாக அவர்களுக்கு தொல்லைகள் ஏற்படுகின்றன. கொள்முதல் கணக்கை வைத்துக்கொள்ளும் அவசியத்திற்கும், இருப்புக் கணக்கை வைத்துக்கொள்ளும் அவசியத்திற்கும், பிறகு விற்பனைக் கணக்கு வைத்துக் கொள்ளும் அவசியத்திற்கும் ஆளாகிறார்கள். அவர்கள், இப்படிப்பட்ட கணக்குகளை வைத்துக்கொண்டிருப்பதின் காரணமாக, அதிகாரிகளினுடைய தொல்லைகளுக்கு . அதிகமாக ஆளாக வேண்டிய நிலைமை ஏற்படு-





கின்றது. எனவே, ஒரு முனை வரியை நீக்கிப் பலமுனை வரியாக வைப்பதன் மூலமாக வியாபாரிகளுக்குத் தொல்லை ஏற்படாமல் போகும், அதிகாரிகளால் அதிக நிர்ப்பந்தம், தொல்லைகள் ஏற்படாமல் போகும் என்ற கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. எனவே, இதை மீண்டும் அரசினர் ஆராய்ந்து மீண்டும் பலமுனை வரியைப் புகுத்துவதன் மூலம் நன்மை ஏற்படும் என்ற தெளிவு ஏற்படுமானால் அந்த முறையைக் கொண்டுவருவதற்கு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அகில இந்திய வரி விசாரணைக் குழுவின் தலைவராக இருந்த திரு. ஜான் மத்தாய் அவர்கள் விற்பனை வரியைப்பற்றி ஆராய்ந்து, பலமுனை வரியாகவே இருப்பது நல்லது என்ற கருத்தையும், அது பலமுனை வரியாக அரை சதவிகிதம் குறைக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டால் நல்லது என்ற கருத்தையும் தெரிவித்ததாக நான் அறிகிறேன். அந்த முறையில் செய்வதன் மூலமாக விலைவாசி இறங்க வழிவகை ஏற்படக்கூடும், அதிகாரிகளுக்கும் அதிகத் தொல்லை ஏற்படாது. பல்வேறு விதமான கணக்குகளைச் சிறு வியாபாரிகள் வைத்துக்கொள்ளவேண்டிய தன்மை ஏற்படாது. இப்படி பல்வேறு நன்மைகள் தரக்கூடிய வகையில் இந்த வரியை அரை சத விகிதம் ஆக்குவதற்கு முயற்சி எடுத்து, 3%, 4%, 5%, 10% என்று இருக்கும் ஒருமுனை வரியையெல்லாம் மாற்றுவதன் மூலமாக தக்க சூழ்நிலை ஏற்படுத்தவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

விற்பனை வரி விலக்கு என்ற வகையில் 10,000 ரூபாய் அளவுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். 10,000 ரூபாய் என்பது 1939-ம் ஆண்டு விற்பனை வரி கொண்டுவந்த காலத்தில் இருந்த விலைவாசிகளையும் விற்பனை அளவையும் வைத்து நிர்ணயிக்கப்பட்டது என்றும் அறிகிறேன். இப்பொழுது விலைவாசியினுடைய அளவும் நிலைமைகளும் மாறியிருக்கும் காரணத்தால், 10,000 ரூபாய் என்றிருப்பது பல சிறு வியாபாரிகளையும் இந்த வரி விதிப்பின் கீழே கொண்டு வந்து அவர்கள் பல கணக்குகளை வைத்துக்கொள்ளவும், அதிகாரிகளின் தொல்லைகளுக்கும், சந்தேகப்படுகிற அளவுக்கும், வழக்குகள் தொடரப்படுகிற அளவுக்கும், வழக்கு மன்றங்கள் ஏறி இறங்குகின்ற அளவுக்கும், வழக்கறிஞர் கேட்கவும், வழக்குகளை நடத்த வேண்டிய இக்கட்டான நிலைமைகளுக்கும் அவர்கள் ஆளாகிறார்கள். 1939-இலே அமைக்கப்பட்ட 10,000 ரூபாய் வரி விலக்கு அளிக்கும் தொகையை இப்பொழுதிருக்கும் விலைவாசித் தன்மையையும், விற்பனையின் அளவையும், மற்றவற்றையும் கணக்கிட்டு கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாயாக ஆக்கவேண்டுமென்று வியாபாரிகள் கோருவதாகத் தெரிகிறது. அந்த அளவுக்கு ஆக்காவிட்டாலும் 50,000 ரூபாய் அளவுக்காவது வரி விலக்கு அளிக்கும் நிலைமை உருவானால் சிறு சிறு வியாபாரிகள் சங்கடங்களுக்கு ஆளாகாத அளவுக்கு அவர்கள், தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள வழி வகை ஏற்படக்கூடும்.

விற்பனை வரியைப் பொறுத்த மட்டில் பெரிய வியாபாரிகள் சிறிய வியாபாரிகளுக்கு விற்கும்போது அந்தச் சரக்குகளுக்கு இருக்கும் அசல் விலையோடு கூட்டி விற்பனை வரியையும் சேர்த்து அவர்களிடமிருந்து வசூல் செய்கிறார்கள். அவர்கள் மற்றவர்களுக்கு விற்கும்போது விற்பனை வரியைக் கூட்டி, அதை விலையாக ஆக்கி வசூலிக்கிறார்கள். சேல்ஸ் டாக்ஸ், பர்ச்சேஸ் டாக்ஸ் என்று இரண்டு வரிகள் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். சேல்ஸ் டாக்ஸ் என்பது விற்பனை செய்வோர் செலுத்துகிற வரி என்று பொருள் கொள்ளக்கூடிய வகையிலும், பர்ச்சேஸ் டாக்ஸ் என்பது வாங்குவோர் செலுத்துகிற வரி என்று பொருள் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. இப்பொழுது நமது மாநிலத்தில் விற்பனை வரி என்ற அளவிலேதான் இருக்கிறது என்று கருதுகிறேன். ஆனால், விற்பனை செய்துவிட்டு, விற்பனை செய்த பணத்திலிருந்து அவர்கள் வரி செலுத்துகிற நிலைமையில் இருப்பது விற்பனை வரியாக அமையக்கூடும். ஒரு ரூபாய்க்கு விற்கிறார் என்றால், ஒரு ரூபாய்க்கு விற்றுவிட்டு, அந்த ஒரு ரூபாயிலிருந்து அதற்குரிய வரி செலுத்துகிற நிலைமை இருக்குமானால், அது விற்பனை வரியாக இருக்க முடியும். ஒரு ரூபாய்க்கு வாங்குகிற

சமயத்தில், ஒரு ரூபாய்க்கு வாங்கி அதோடு சேர்த்துக் காலணா, அரையணா
வரி போடுகிறபோது, அது வாங்குகிறவர்கள் தருகிற வரியாக இருக்கிறது.
இப்பொழுதிருக்கும் விற்பனை வரி வாங்குகிறவர்கள் தருகிற வரியாகப்
பாவிக்கப்படுகிற அளவுக்குத்தான் நடைமுறை இருந்து வருகிறது. இத
னுடைய சட்ட நுணுக்கங்களையும் தன்மைகளையும் மாற்றியமைப்பதன்
மூலமாக விற்பனை செய்வோர் தரவேண்டுமென்ருல், அவரவர்கள் விற்று
விட்டு அந்த வரியைச் செலுத்துவதற்கான நிலை ஏற்படும். விற்பனை வரி
என்ற பெயர் அமைவதன் காரணமாக, விலையோடு சேர்ந்து ஏறிக் கடைசி
யில் வாங்குகிறவர்கள் தலையில் போய்ச் சேரும் தன்மை இருக்கிறது.
இதன் காரணமாக விலைவாசி அதிகமாக ஏறி விற்கும் நிலைமைகள்
ஏற்படுகின்றன. இதையெல்லாம் பரிசீலனை செய்வதன் மூலமாக, சிறு
வியாபாரிகளுக்கு அதிகச் சலுகை செய்வதற்கும் அதிகத் தொல்லைகள்
ஏற்படாத அளவுக்கும் அவர்களுடைய வியாபாரம் பாதிக்கப்படாத அளவுக்
கும் அவர்களைக் காப்பாற்ற முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

வரி தருகிறவர்கள் ஏமாற்றும் நிலைமை பெரும்பாலும் பெரிய வியா
பாரிகளிடத்திலும், அதிகக் கொள்முதல் செய்து மொத்த வியாபாரம்
செய்யக் கூடியவர்களிடத்திலும் இருக்கிறது. தீவிரமான நடவடிக்கை
எடுப்பதன் மூலமாக இந்த வரிகளையெல்லாம் வசூலிக்க வகை செய்ய
வேண்டும்.

செக் போஸ்ட் பற்றி இங்கே பலர் எடுத்துக் கூறினார்கள். அதிலே
ஈடுபட்டிருக்கிற அதிகாரிகள் அத்தனை பேரும் லஞ்சம் வாங்குகிறார்கள்
என்ற குற்றச்சாட்டைக் கூறுவதற்கில்லை. அதில் ஈடுபட்டிருக்கிறவர்கள்
அத்தனை பேரும் லஞ்சம் வாங்காமலே இருக்கிறார்கள் என்றும் சொல்வதற்
கில்லை. ஆனால், குற்றம் நடைபெறுவதாகப் பரவலாக எடுத்துத் தெரி
விக்கப்படுகிறது. நேர்மையும் நாணயமும் கொண்ட ரகசியப் போலீசாரை
வைத்தாவது இந்தக் குற்றம் செய்கிறவர்களைக் கண்டு பிடித்துத் தீவிர
நடவடிக்கை எடுத்து, இதிலே சொல்லப்படுகிற குற்றச்சாட்டுக்களை, குறை
பாடுகளைப் போக்க வழிமுறை காணவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

தமாஷா வரி (என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ்)யைப் பொறுத்தவரை
யில், அதிலே ஏமாற்றுகிறவர்கள் ஆங்காங்கு இருக்கிறார்கள் என்ற அடிப்
படையில், அதற்கான ஒரு தனி ஸ்க்வாட் அமைக்கப்பட்டு அவர்கள் தங்கள்
பணிகளைப் புரிந்து வருகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த
ஸ்க்வாட் அமைக்கப்படுவதற்கு முன்னால் இருந்த நிலைமை என்ன என்ப
தையும், அந்த ஸ்க்வாட் அமைக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட பலா
பலன்கள் எந்த அளவிலே அமைந்திருக்கின்றன என்பதையும் கனம்
அமைச்சர் அவர்கள் மூலமாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

வியாபாரம் செய்கிறவர்களுக்கு அபராதம் விதிக்கும் நிலைமை இருக்
கிறது. வியாபாரிகள் உள்ளபடியே மனமறிந்து, வேண்டுமென்றே
தொடர்ந்து தவறு செய்வார்களானால், அப்படிப்பட்டவர்களுடைய
கொட்டகையை ஒரு வார காலத்திற்கு நிறுத்தி வைப்பதற்குத் தீவிர
நடவடிக்கை எடுத்து இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்
கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு இந்த முறையைச் சீர்திருத்தி
அமைக்க அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும். இந்த முறையின்
மூலமாக இந்த வரியை ஏமாற்றுகிறவர்களைத் தடுத்து, பெறவேண்டிய
வரியைப் பெற்று மேற்கொண்டு மற்ற வரி இனங்கள் ஏருத அளவுக்குப்
பாதுகாத்துக் கொள்ள அரசினர் முன்வர வேண்டும். இதன் மூலம் அர
சாங்கத்திற்கும் வருவாய் பெருகக் கூடும்.

சினிமாக் கொட்டகைகளை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆவல் ஆங்காங்கு
அதிகமாக ஏற்படுகின்றன. அதை நடத்துவதற்கும் போட்டா போட்டி
போட்டுக்கொண்டு பலர் முன்வருகிறார்கள். அந்த அளவு வருவாய்
தரும் தொழிலாக அது அமைந்திருக்கிற காரணத்தால் அதைத் தேசிய
மயமாக்குவதன் மூலம் அரசாங்கத்திற்கு வருமானத்தைக் கூட்டிப்
பெருக்குவதற்கு வழிவகை ஏற்படக் கூடும். எந்த ஊரிலும் சினிமாக்
கொட்டகை இருந்து தீரவேண்டும், சினிமா பார்த்துத் தீரவேண்டும்





என்னும் அளவுக்கு மக்களுடைய மனப்பான்மை மாறியிருக்கிறது
எனவே, வருவாய் அதிகம் வரும் ஒன்ருக அமைந்திருக்கிறது. அதை
எளிதாகப் பெற வழி இருக்கிறது. புதிய வரிகளைப் போட்டு அரசாங்கத்தின்
வருவாயைப் பெருக்குவதற்கு வழிமுறை காணுவதற்குப் பதிலாக,
இப்படிப்பட்ட வரி இல்லாத இனத்தின் மூலமாக வருவாயைப் பெருக்கு
வதன் மூலமாகவும், சினிமாக் கொட்டகைகளைத் தேசிய மயமாக்குவதன்
மூலமாகவும் செய்ய முடியும், அதற்கான சிந்தனையைச் செலுத்தி இந்த
முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு
என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

*** கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே,
இந்த விவாதத்திலே கலந்துகொண்டு கருத்துக்கள் தெரிவித்த கனம்
அங்கத்தினர்கள் அனைவருக்கும் முதலில் நான் நன்றி தெரிவித்துக்
கொள்ளுகின்றேன். குறிப்பாக, கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்
சில நல்ல யோசனைகளெல்லாம் சொன்னார்கள். அவற்றுக்காகவும் நான்
கடமைப்பட்டிருக்கிறேன் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன். இந்த வரியை நல்ல முறையில் வசூல் செய்ய வேண்டுமென்ப
தில் எந்த விதமான மாறுபட்ட கருத்தும் யாருக்கும் இருக்க முடியாது.
சர்க்காரைப் பொருத்த அளவில் எந்த எந்த வகையில் நியாயமாக
அவற்றை வசூல் செய்ய முடியுமோ அந்த அந்த வகையில் வசூல்
செய்யவேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். பொது விற்பனை வரி
சம்பந்தமாக நமக்கு அதிகமான லீக்கேஜ் ஏற்பட்டு இருக்கிறது என்று
சொல்ல முடியாது. என்டர்டெயின்ட்மெண்ட் டாக்சில்தான் லீக்கேஜ் இருக்
கிறது. அதுவும் கொட்டகைகளில்தான் ஏற்பட்டு இருக்கிறது என்று
சொல்ல வேண்டும். ஆனால் பொது விற்பனை வரி சம்பந்தமாகவும்
வியாபாரிகள் இன்னும் கொஞ்சம் ஒத்துழைத்தால் நல்ல முறையில்
செயல்பட முடியும். எந்த எந்த இடத்தில் இருந்து வரி வசூல் செய்ய
வேண்டும் என்பதைக் கண்டு பிடிக்க முடியும். நமக்கு இன்றையதினம்
போதுமான இன்டெலிஜென்ஸ் இல்லை. குறிப்பாக சரக்கு எங்கே உற்பத்தி
செய்யப்படுகிறது, முதல் தடவையாக யாரிடத்தில் விற்கப்படுகிறது, இரண்
டாவதாக யார் யார் இடத்திலே விற்கப்படுகிறது, இறுதியாக எந்த இடத்தில்
போய்ச் சேருகிறது என்பதான புள்ளி விவரங்கள் சரியான முறை
யில் தயாரிக்கப்படவில்லை என்பதுதான் முக்கியமாக நம் நாட்டில்
இருக்கிற குறைபாடு. இன்டெலிஜென்ஸ் என்று சொல்லக்கூடிய இந்தப்
புள்ளி விவரம் சரியான முறையில் நமக்குக் கிடைக்கவில்லை. அந்த
மாதிரியான குறைபாட்டினால்தான் பொது விற்பனை வரியைப் பொறுத்த
வரையில் முழுவதும் வசூல் செய்ய முடியவில்லை. எந்த எந்த வகையில்
இந்த வரி ஏமாற்றப்படுகிறதோ அதையெல்லாம் கண்டு பிடித்துத் தடுக்க
ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அங்கங்கே கிராஸ் செக் செய்வதன்
மூலம் இதைத் தடுக்க ஏற்பாடு செய்து வருகிறோம்.

அடுத்தாற்போல பத்தாயிரம் ரூபாய் கிராஸ் கம்பௌண்டிங் என்று
இருந்தது. அதை 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று
சொன்னார்கள். 50 ஆயிரம் வரை கம்பௌண்டு டாக்ஸ் 1 சத விகிதம்
என்ற அடிப்படையில் கொடுத்து விடலாம். ஆகையால் 50 ஆயிரம் வரை
விற்பனை செய்கிறவர்கள் பெரிய அளவில் கணக்கு வைத்துக்கொள்ள
வேண்டியதில்லை. இப்போதே அவர்களுடைய பிரச்சினை பல சமாளிக்
கப்பட்டு இருக்கிறது என்று அறிகிறேன்.

செக் போஸ்ட் சம்பந்தமாக கனம் எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது
முற்றிலும் பொருந்தும். வியாபாரிகளிடத்திலும் சரி, அதிகாரிகளிடத்
திலும் சரி, நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும்
இருக்கிறார்கள். மனிதர்களுடைய இயற்கையை மாற்றுவது என்பது
சுலபமான காரியம் அல்ல. இயற்கையை மாற்றிவிட முடியாது.
ஆனால் தவறு செய்வதற்கு யாருக்கும் சந்தர்ப்பம் கொடுக்காமல்
இருப்பதுதான் சர்க்காரின் கடமை. அதற்கு வேண்டிய செக் போஸ்ட் விதி
களை எல்லாம் ஏற்படுத்தியிருக்கிறோம். வரி கட்ட வேண்டுமா, வேண்
டாமா என்பது பற்றி ஏதாவது சந்தேகம் ஏற்படுமானால் வரி எவ்வளவு

கட்ட வேண்டும் என்கிறார்களோ அந்தப் பணத்தை டெபாசிட் பண்ணிவிட லாம். பிறகு அந்தச் சரக்குக்கு வரி கட்ட வேண்டுமா, ஏற்கெனவே கட்டியாகி விட்டதா, அல்லது சரக்குச் சென்று சேர்ந்த இடத்தில் கட்டப் பட்டதா என்கிற விவரங்களை எல்லாம் கொடுத்தால் இந்தப் பணம் எக்செசாக வசூலிக்கப்பட்டது என்றால் உடனே ரீபண்டு செய்து விடுகிறோம். இப்படி இருக்கிறபோது செக் போஸ்டுகளில் லஞ்சம் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை. வரியை ஏமாற்ற வேண்டுமென்ற நோக்கம் இருந் தால்தான் லஞ்சம் கொடுக்க முன் வருவார்கள். உண்மையான வியாபாரி கள் லஞ்சம் கொடுக்க வேண்டிய அவசியமே இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன். தவறு செய்பவர்களைத் தண்டிக்க வேண்டியதுதான். அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். செக்கிங் ஸ்க்வாட் என்று திடீரென்று செக் செய்யக்கூடிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக் கிறோம். மேலும் இன்று இருக்கிற விதி முறையில் பெரிய கேஸ்களைக் கண்டு பிடித்தாலும் கூட பனிஷ்மெண்டு ரொம்பக் குறைவாக இருக்கிறது. எண்டர்டெயின்மெண்டு டாக்சைப் பொறுத்து தண்டனையை கடுமையாக்கக் கூடிய வகையில் சட்டம் திருத்தப்பட்டால்,நான் நல்ல பயன் ஏற்படும். அந்தச் சட்டத்தை மாற்றி அமைக்கக் கூட இப்போது ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். ஐந்து ரூபாய், பத்து ரூபாய் தான் அபராதம் போடப்படும் என்கிறபோது 100 தடவைகள் கூட சட்டத்தை மீறி காரியங் களைச்செய்ய முன் வருகிறார்கள். ஆகவேதான் இப்போது அவர்களுடைய கொட்டகை லைசென்சைக் கான்சல் செய்யும் வகையில் சட்டத்தில் எண்டர்டெயின்மெண்டு டாக்சைப் பொறுத்த வரையில் மாறுதல் செய்ய ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

நூல் சம்பந்தமான பிரச்சினைகளை அடுத்த மானிய கோரிக்கையில் சொல்லலாமென்று இருக்கிறேன்.

அடுத்தாற்போல திரு. மாதா கவுடர் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்சினையைக் குறிப்பிட்டார்கள். பதினைந்து நயா பைசாவுக்கு டீ விற்கக் கூடிய வியாபாரிகள்கூட ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது, சிறு வியாபாரிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார். இந்த நிலையை அரசாங்கம் அவர்களுக்கு ஏற்படுத்தவில்லை. அவர்களே விரும்பி, இந்தவிதமான நிலைமையை வரவழைத்துக் கொண்டு இருக் கிறார்கள். குறிப்பாக 1957-ல் டீ சம்பந்தமாக மல்டிபாயிண்ட் டாக்ஸ் விதிப்பதா, சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் விதிப்பதா, சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் என்றால் சிறு வியாபாரிகள் கூட ரிஜிஸ்டர் பண்ணிக்கொள்ள வேண்டிய சங்கடங்கள் எல்லாம் வரும், யாருக்கும் எக்செம்ஷன் கொடுக்க முடியாமல் போகும் மல்டிபாயிண்ட் டாக்ஸ் என்றால் அந்தத் தொல்லை இல்லை, சிறு வியாபாரிகளுக்கு விதிவிலக்கு ஏற்படுவதோடு நடுத்தரமாக 50 ஆயிரம் வரை வியாபாரம் செய்யக்கூடியவர்கள்கூட கம்பௌண்டிங் செய்துகொள்ள வசதி இருக்கும் என்பதாக எல்லாம் ஒரு நிபுணரைப் போட்டு நன்றாக ஆலோசனை செய்தோம். எல்லா வர்த்தக சங்கத்தைச் சேர்ந்தவர்களும் அந்த நிபுணரிடத்தில் வந்து ஒருமுகமாக டீ சம்பந்தமாக சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ்தான் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் போடவேண்டுமென்று யோசித்த 75 ஐடெம்களில் டீ ஒன்று. நான் கூட அந்த நிபுணரிடத்தில் "டீக்கு சிங்கள் பாயிண்ட் டாக்ஸ் என்றால் எல்லாவிதமான நிர்ப்பந்தமும் வந்துவிடுமே" என்று சொன்னேன். "வர்த்தக சமூகத்தினரே ஒருமுகமாகக் கேட்கும்போது நாம் என்ன செய்வது ?" என்று அவர் சொன்னார். அதை ஒட்டித்தான் அவ்விஷயத்தில் என் கருத்து மாறுபட்டு இருந்தாலும் கூட டீ உள்பட அந்த 75 ஐடெம்களுக்கு சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் என்று ஏற்படுத்த அரசாங்கம் முன் வந்தது. அதற்குப் பிறகு பத்து ஐடெம்களுக்கு மல்டி பாயிண்ட் டாக்ஸ் போடவேண்டுமென்று அவர்களே வந்து சொன்னார்கள்.

டீயைப் பொறுத்தவரையில் இப்போது எடுத்துக் கொள்ளுங்கள். ஒன்று மல்டி பாயிண்ட் டாக்ஸ் ஏற்படுத்துவது, அல்லது சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் என்று வைத்துவிடுவது. மல்டி பாயிண்ட் டாக்ஸ் என்றால் 1,500 ரூபாய் வரை விற்பனை செய்கிறவர்களுக்கு விலக்கு கிடைக்கிறது 7,500 ரூபாய் வரை ரிஜிஸ்டர் பண்ணிக்கொள்ளத் தேவையில்லை





பத்தாயிரம், 50 ஆயிரம் வரை கம்பௌண்டிங் செய்துகொள்ள வசதி இருப்பதால் பெரிய அளவில் கணக்கு வைத்துக்கொள்ளவேண்டிய சங்கடம் இருக்காது. ஆனால் சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் என்றால் 500 ரூபாய்க்கு விற்பனை செய்பவராக இருந்தாலும் 5 ரூபாய்க்கு விற்பனை செய்பவராக இருந்தாலும் ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டிய நிலைமை தான் இருக்கும். சென்ற முறையே ஒரு நிபுணரைப் போட்டு மேலும் விசாரிக்கலாம் என்று நினைத்தோம். ஆனால் நாட்டிலே நெருக்கடி ஏற்பட்டதையொட்டி வேறு எந்த குழப்பத்தையும் வரி விதிப்பில் ஏற்படுத்த வேண்டாமென்று ஒத்திப் போட்டு விட்டோம். சிங்கிள் பாயின் டும் இருக்க வேண்டும், மல்டி பாயின்டுக்குள்ள சலுகையும் வேண்டு மென்றால் அது சரியானதாக இருக்காது.

கனம் அங்கத்தினர் சீனிவாசன் சில நல்ல யோசனைகளைச் சொன் னார்கள். வொர்க் கண்டிராக்டர்களுக்கு ஏன் வரி போடுகிறார்கள், இவர் களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்றார்கள். வொர்க் கண்டிராக் டர்கள் என்றால் அவர்கள் வெறும் வொர்க்கை மாத்திரம் எடுத்து செய்வதில்லை. சில சமயம் அந்த வேலை சம்பந்தப்பட்ட பொருள்களையும் விற்கிறார்கள். குறிப்பாக போட்டோ எடுக்கிறவர் என்றால் போட்டோ எடுப்ப தோடு கூட போட்டோ சம்பந்தப்பட்ட பிலிம், பிரிண்ட்டிங் பேப்பர், மவுண்ட், காமிரா போன்ற பொருள்களையும் விற்கிறார்கள். ஆகவேதான் இந்தப் பண்டங்களுக்கு வரி இருப்பதால் இது மாதிரியாக வொர்க் காண்டிராக்டர்கள் வொர்க் எடுத்துக்கொள்வதோடு அந்த வேலை சம்பந்தப் பட்ட பொருள்களையும் விற்பனை செய்வதால் இவர்களுக்கு எல்லாம் வரி விலக்கு அளிப்பது என்பது இயலாத காரியம். இப்படி வரி போடுவதில் தப்பு இல்லை. இதைப் பெரிதாகச் சொல்ல முடியாது.

அடுத்தாற்போல திருமதி லக்ஷ்மிகாந்தம்மாள் தம்முடைய உரையில் 10-30 a.m.
பல பண்டங்களுக்கு வரிவிதிக்கக் கூடாது என்று சொன்னார்கள். அப்படிப் பார்த்தால் இன்னும் எத்தனையோ பண்டங்களுக்கு வரி விதிக்கக் கூடாது என்று சொல்ல முடியும். வரி விதிப்பதற்கு முன்னதாக நாம் இவை எல்லாவற்றையும் பரிசீலனை செய்கிறோம். அதற்குப் பிறகு யார்மீது போட முடியும் என்பதை ஆலோசிக்கிறோம். அந்த மாதிரிப் பார்த்து ஒரு சத விகிதம் போட்டால் அதிதமாக மக்களைப் பாதிக்காது என்று தீர்மானம் செய்து போட்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் என்னென்ன பண்டங்களைப் பற்றிச் சொன்னார்களோ அவற்றுக் கெல்லாம் இரண்டு பர்செண்டாக இருந்த வரியை ஒரு பர்செண்டாக ஆக்கியிருக்கிறோம். கைத்தறி ஆடைகளுக்கு ஒரு பர்சண்ட்; பெட்டிங் குக்கு ஒரு பர்சண்ட் என்று அந்தப் பொருள்களுக்கெல்லாம் வரியை ஒரு பர்சண்டாகக் குறைத்து விட்டோம். அதைவிடக் குறைக்க வேண்டு மென்று சொன்னால் நிதி நிலைமை அனுமதிக்காது.

கனம் அங்கத்தினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பல உயர்ந்த கருத்துக் களை எல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றி யெல்லாம் இங்கே "டீல்" செய்ய வேண்டாமென்று நினைக்கிறேன். முக்கியமாக ஒரு விஷயத்தை மாத்திரம் கொஞ்சம் சிந்தித்துப் பேசவேண்டும். "சிறு வியாபாரிகள் பாவம்; அதிகாரிகள் வந்து தொல்லை கொடுக்கிறார்கள்; அதனால் லஞ்சம் கொடுக்கிறார்கள்" என்று ஏதோ அனுதாபமாகப் பேசுவது மாதிரி இந்தச் சட்ட சபையில் பேசிவிட்டால் லஞ்சம் கொடுப்பதை இந்தச் சபை கண்டிக்கவில்லை, அனுமதிக்கிறது என்ற நிலை ஏற்பட்டுவிடும். இரண்டு விதமான நிலைமை இந்த நாட்டிலே ஏற்படுகிறது. ஒன்று வியாபாரிகள் தப்பித்துக்கொள்ள லஞ்சம் கொடுப்பது; மற்றொன்று அதிகாரிகள் லஞ்சம் வாங்க வேண்டுமென்பதற்காக நிர்ப்பந்தம் செய்வது. இதையெல்லாம் சட்டசபையில் இருந்து நிர்ணயம் செய்ய முடியாது. "பாக்ட்ஸ் ஆப் தி கேஸ்"—அங்கு இருக்கும் நிலைமையைப் பொறுத் துத்தான் லஞ்சம் வியாபாரிகள் கொடுக்கிறார்களா, அதிகாரிகள் லஞ்சம் கேட்கிறார்களா என்பதையெல்லாம் கவனிக்க முடியும். இந்தச் சபையிலே இரண்டு பேரையும் நாம் கண்டித்துப் பேசவேண்டும். சிறிய வியாபாரி என்ன செய்வார், பாவம் என்று பேசினால், லஞ்சம் கொடுக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும் லஞ்சம் வாங்குகிறவர்களும், கொடுக்கிறவர்களும்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [21st March 1964

விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்ற பயம் இருந்தால்தான் இதைத் தவிர்க்க முடியும். பலவிதமான புகார்கள் எல்லாவற்றையும் அவ்வப்போது விசாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆகவே, நாம் அவர்களுக்கு அனுதாபமாகப் பேசுவதுபோல் பேசி தவறு வரக்கூடிய நிலைமையை ஏற்படுத்தக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

" ஹார்ஸ் பெட்டிங் " வேண்டுமா வேண்டாமா என்பதிலே இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. இதிலே, உலகத்திலேயே இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. ஒன்று குதிரைகளை நன்றாக வளர்க்க வேண்டுமென்றால் அதற்கு ஹார்ஸ் ரேசிங் போன்ற ஸ்தாபனங்கள் இருந்தால்தான் முடியும் என்று மேல்நாட்டில் இருப்பவர்கள் சொல்கிறார்கள். குதிரை வளர்ப்பதிலே பல விதமான முயற்சிகளை எடுப்பதற்கு ஊக்கம் ஏற்படுவதற்காகவே ரேஸ் வைத்திருக்கிறார்கள். டெர்பி போன்ற ரேஸ்கள் அந்த வகையில்தான் நடக்கின்றன. குதிரையினுடைய தாயார், அதனுடைய பாட்டன் என்று வமிசா வழி பூராவும் படித்து, என்ன குணாதிசயங்கள் கொண்டன, என்ன எடை, எந்த வேகத்தில் ஓடக்கூடியது என்று அதை ஒரு பெரிய சயன்சாகவே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரை நமக்கு நல்ல குதிரைகள் வேண்டுமென்பதுதான் கருத்து. நம்முடைய ராணுவத்திற்குக் குதிரைகள் தேவை. நல்ல குதிரைகளை வளர்ப்பதற்கெல்லாம் வழி செய்யவேண்டும். அந்த முறையில் " பெட்டிங் டாக்ஸ் " இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தியேட்டர் வரி வசூல் சம்பந்தமாக கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் அவர்கள் பேசும்போதே கூறிவிட்டேன். இந்த மானியக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்க வேண்டும், குறைக்க வேண்டும், அறவே நீக்க வேண்டும் என்ற கோரிக்கை எடுத்து வைக்கப்பட்டது. அதிலே அரசாங்கத்துடைய கருத்தை அறிய விரும்புகிறேன். குறிப்பாக வறுகடலையைப் பொறுத்த வரை வரியை குறைக்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வறுகடலையைப் பொறுத்தவரை 10,000 ரூபாய்க்கு விற்பனை செய்கிற வியாபாரிக்குத்தான் வரி. அவர்கள் ஏன் 2 சத விகிதம் வரி கொடுக்கக் கூடாது ? பத்தாயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்கிறவர்கள் 2 சத விகித வரியைக் கொடுக்கலாம். அதோடுகூட 50,000 ரூபாய் வரை கம்பவுண்டிங் முறையில் கொடுக்கலாம். மற்ற உணவுப் பொருள்களைப் பொறுத்தவரை நன்றாக ஆலோசித்துப் பார்த்துத்தான் 2 சத விகிதம் வரியை 1 சத விகிதமாகக் குறைத்தோம். அதை விடக் குறைப்பது அல்லது எடுத்து விடுவது என்றால் ராஜ்யத்தின் நிதி வசதி இடம் கொடுக்காது. அந்தக் காரணத்தால் இதைப் பரிசீலிப்பதற்கில்லை. நிதி வசதிகள் பெருகினால் அதைப் பற்றிக் கவனிக்கலாம்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** நம்முடைய நாட்டிலே குதிரையை வளர்ப்பதில்லை. மேல் நாடுகளிலிருந்துதான் தருவிக்கிறோம். அவ்வாறு தருவித்துத்தான் குதிரைப் பந்தயங்களை நடத்துகிறார்கள். இந்த நாட்டில் குதிரைகள் வளர்க்கப்படாமல் பந்தயம் மட்டும் இருந்தால் அது நியாயமா ? சென்னையைப் பொறுத்தவரை எத்தனை பேர்கள் குதிரைகளை வளர்க்கிறார்கள் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் தவறாக இருந்தால் கூட, பல விஷயங்களை முடிவாகச் சொல்லிவிடுகிறார்கள். நம்முடைய நாட்டில் பூனாவில் குதிரைகளை வளர்க்கிறோம். மிலிடரி காம்பில் வளர்க்கிறோம். (வெ. கிருஷ்ணமூர்த்தி: தமிழ் நாட்டில்......) ராஸ் ப்ரீடிங்குக்கு முயற்சி செய்கிறோம். குதிரைகள் போலீஸ் படைக்கு நிறைய வேண்டியிருக்கிறது. அதற்காக எல்லாம் குதிரைகள் வளர்க்கிறோம். இந்த பேசிசில் ஒரு கேள்வி கேட்டால் விவரங்கள் சொல்ல முடியும்.



21st March 1964]

**திரு. ஜே. மாதா கவுடர் :** அமைச்சர் அவர்கள், பல முனை வரிகளாக இருப்பதை ஒரு முனை வரியாக மாற்றுவது பற்றி ஆராய நிபுணர் கமிட்டி போடுவது நெருக்கடி நிலைமையின் காரணமாகப் போடவில்லையென்று சொன்னார்கள். இந்த ஆண்டு அந்த நிபுணர் கமிட்டியைப் போட முன் வருவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நெருக்கடி நிலைமை நீங்குகின்ற வரையில் நிபுணர் கமிட்டியை அமைப்பதில்லையென்று முடிவு செய்து விட்டோம்.

**திரு. எம். மாயாண்டி நாடார் :** செக் போஸ்டில் சரக்குகளுக்குப் பில் கொடுத்தால், ஆர். சி. நம்பர் கொடுக்கவில்லை ; சி. எஸ். டி. நம்பர் கொடுக்கவில்லை என்று பெனல்டி வாங்குகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் டெபாசிட் என்றுதான் சொன்னார்கள். அதுபற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது போட்டிருக்கின்ற விதிகளின்படி டெபாசிட் செய்தால் போதும். அதை வியாபாரிகள் நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is :—

" That the Government be granted a sum not exceeding Rs. 78,15,200 under Demand No. III—General Sales Tax and other Taxes and Duties—Administration".

The Demand was put and carried and the Grant was made.

(2) DEMAND No. XIX-CO-OPERATION.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Sir, on the recommendation of the Governor, I move :—

" That the Government be granted a sum not exceeding Rs. 2,65,08,000 under Demand No. XIX—Co-operation".

**திரு. து ப. அழகமுத்து :** என்னுடைய பெயரில் உள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

" That the allotment of Rs. 2,65,08,000 under Demand No. XIX—Co-operation be reduced by Rs. 100".

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

* **திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று நம் கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற மான்யக் கோரிக்கையின் பேரில் எங்கள் கட்சியைச் சார்ந்த கனம் அங்கத்தினர் திரு. அழகமுத்து அவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் தான் அது நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்ற பெருமை தமிழ் நாட்டைச் சார்ந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. அதிலும் இந்தத் துறையில் பல ஆண்டுகளாக கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்து பணியாற்றி கூட்டுறவு பற்றி நன்கு புரிந்த மதிப்பிற்குரிய கனம் மன்றாடியார் அவர்களை அமைச்சராகப் பெற்றிருக்கிறோம். அவர்கள் காலத்தில் கூட்டுறவுத் துறை இன்னும் முன்னேற்றம் அடையவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. கூட்டுறவு இயக்கங்கள் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறது

என்று சொல்லப்பட்டாலும் கூட சமீப கால நடவடிக்கைகளைப்
பார்க்கும்போது அதில் நடைபெறுகிற ஊழல்களைப்போன்று வேறு எந்த
நிறுவனத்திலும் நடைபெறுவதில்லை என்பதும் தெரிகிறது. சுதந்திரம்
வருவதற்கு முன்பு இத் துறையில் எவ்வளவு அச்சத்தோடு, ஒவ்வொருவ
ரிடமும் பயந்துகொண்டு பணியாற்றி வந்தார்களோ அந்த நிலை மாறி
சுதந்திரம் வந்த பிறகு அதில் அகப்பட்டதைச் சுருட்ட தங்களுக்கும்
சுதந்திரம் இருக்கிறது என்று கருதுகிற ஒரு சிலர் எவ்வளவு தொகைகளை
கையாடல் செய்து வருகிறார்கள் என்பதையும் பத்திரிகைவாயிலாகப்
பார்க்கும்போது அத் துறை முன்னேற்றம் அடையவேண்டுமென்ற அக்கறை
உள்ளவர்கள், தங்கள் நம்பிக்கை போய்விடுமோ என்று அச்சப்படவேண்டி
இருக்கிறது. கூட்டுறவுத் துறை அந்த அளவுக்குப் போய்க்கொண்
டிருப்பதே அதற்குக் காரணம். கூட்டுறவுத் துறையை தங்கள் பரம்பரைப்
பாத்தியமாகக் கருதி, அவர்களின் தகப்பனார் சொத்து. என்று கருதி,
அதில் அவர்கள் இருக்கிற வரையில், அவர்கள் குடும்பங்கள் இருக்கிற
வரையில், இந்த நாட்டில் தாங்கள் வாழ்கிற வரையில் தங்கள் குடும்
பத்தின் ஏகபோக சொத்து என்று ஒரு சிலர் அதில் ஆதிக்கம் செலுத்தி
வருவதால்தான் இத் துறையில் நாளுக்கு நாள் பலவித ஊழல்கள்
மலிந்துகொண்டு வருகிறது. இடைக்காலத்தில் ஏற்பட்ட விளைவுகளுக்குப்
பிறகு இப்போது நடைபெற்று வருகிற நடைமுறைகளைப் பார்க்கிறபோது
ஏற்கனவே செய்யப்பட்ட குற்றங்களை களைய அதிகாரிகள் பெரிய பொறுப்பு
ஏற்றுக்கொண்டு அதில் கவனம் செலுத்தி வருகிறார்கள். அதனால்
மேலும் அத்துறை வளர்ச்சி அடைய அவர்கள் கவனம் செலுத்த
முடியாமல் போகிறது. ஆகவே தங்கள் மூலம் கூட்டுறவுத் துறை அமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், ஏற்கனவே நடைபெற்று முடிந்
திருக்கிற ஊழல்களை போக்குவதற்காக அதிக அதிகாரிகளை நியமித்து உடனுக்
குடன் அப்படி பிடிக்கப்படுகிற குற்றவாளிகளை தண்டிக்க வேண்டிய ஏற்பாடு
களை மிக விரைவில் செய்தால் இப்போது இருப்பவர்களுக்கு அச்சம் ஏற்பட்டு
கையாடல்களில் ஈடுபடாமல் இருப்பார்கள். கூட்டுறவுத் துறையில் பணி
யாற்றுகிற எல்லா அதிகாரிகளையும் உண்மையிலே நாம் பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் எடுக்கிற முடிவுகளுக்கு, அவர்கள்
எடுக்கிற நடவடிக்கைகளுக்கு இடையே குறுக்கிட்டு அரசாங்கம் ஏதாவது
தாமதத்தை விளைவிப்பதற்கு முன்வருவார்களோ என்றுதான் அஞ்சு
கிறேன். பல ஆண்டுகளாக கையாடல்கள் செய்யப்பட்டதை சிரமப்பட்டு
அதிகாரிகள் கண்டுபிடித்து வழக்கு மன்றங்களுக்கு அனுப்பினாலும்,
அகப்பட்ட அவர்களுக்கு ஒரு சில சலுகைகளை, உதவிகளை அரசாங்கம் செய்து
கொண்டுவருகிறது. அந்த நிலைமையில் அரசாங்கம் இருக்கக் கூடாது
என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். பரம்பரை பாத்தியதை கொண்
டாடுகிறார்கள் என்று சொன்னேன். சென்ற தடவை கூட சொல்லியிருக்
கிறேன். ஒரு தலைவர் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு காலத்திற்கு மேலே
நிச்சயமாக அதில் இருக்கக் கூடாது. தொடர்ந்து அவர்கள் அங்கம் வகிப்
பதினால்தான் அவர்கள் அதில் எதுவும் செய்து விடலாம் என்ற தைரியம்
ஏற்படுகிறது. அப்படி தைரியம் ஏற்படுகிற காரணத்தினால்தான் அவர்கள்
அதை தங்கள் சொந்த சொத்தாக கருதுகிறார்கள். நான் இப்படிச்
சொல்வதால் அத் திட்டம் தவறு என்று சொல்லவில்லை. கூட்டுறவு
முறைத் திட்டத்தை வரவேற்கிறோம். அந்தத் திட்டம் நாட்டுக்கு தேவை
தான். ஆனால் கொள்ளை அடிப்பவர்களும் சேர்ந்து கொண்டு, கூட்டுறவு
என்று ஒன்றாக சேர்ந்து கொண்டு அதைப் பயன்படுத்துகிற காரணத்தினால்
தான் சொல்கிறேனே தவிர கூட்டுறவு முறை வேண்டாம் என்று சொல்ல
வில்லை. கூட்டுறவு முறை நல்லதுதான் . ஆனால் அதைக் கையாள்கிற
முறையில் நல்ல நோக்கம் இருக்கவேண்டுமென்றுதான் கூறுகிறேன்.
ஒருவர் ஒரு தடவை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் அவர்
இறக்கிற வரை அவர்தான் தலைவராக இருந்துவிடுகிறார். அப்படியிருப்
பதினால்தான் அதில் நடைபெறுகிற ஊழல்களை புரிந்துகொள்ள முடிய
வில்லை. அப்படி புரிந்துகொண்டாலும் அவர் தொடர்ந்து இருப்பதால்
அத் துறையில் பல பேர்களுடைய கூட்டுறவு அவருக்கு ஏற்பட்டுவிடுகிற
காரணத்தால் இவர்கள் செய்கிற குற்றங்களைக் கண்டு பிடிக்கும் அதிகாரி
கள் திடீரென்று மாற்றப்படுகிறார்கள், பழிவாங்கப்படுகிறார்கள். இவர்
தான் பரம்பரை தலைவர் என்ற நிலை இருக்கிறது. ஆகவே இரண்டு





வருடங்களுக்கு மேல் ஒருவர் தொடர்ந்து தலைவராக இருக்கக்கூடாது.
சர்க்கார் அதிகாரிகள் தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு மேல் ஒரே
இடத்தில் உத்தியோகம் பார்த்தால் அவர்கள் அங்கு பழக்கப்பட்டு அதனால்
வேறு பல காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்று கருதி அவர்கள் மாற்றம்
செய்யப்படுகிறார்கள். இதற்கு வருகிறவர்கள் ஹானரரி வேலை செய்வதால்
அவர்களுக்கு அந்த நிலை இருக்கக் கூடாது என்று தேர்தல் முறை
வைத்திருக்கிறார்கள். அது எப்படி நடைபெற்று வருகிறது ? வேண்டு
மானால் அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் சொல்லலாம். அதில்
புகுந்து எப்படியாவது அதிக அங்கத்தினர்களை சேர்த்து தலைவரை தேர்த
லில் தோற்கடியுங்கள், அதுதான் ஜனநாயகம் என்று கூறலாம். ஒரு
தடவை ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், எந்த கட்சியை
சார்ந்தவர் என்றில்லை, அவரை எந்த சக்தியும், யாரும் தோற்கடிக்க
முடியாது தேர்தலில். அப்படி நடக்க சட்டத்தில் வழிவகை இருக்கிறது.
கூட்டுறவு சட்டத்தில் உள்ள விதிகளை, சில சில சங்கங்களில் அவரவர்கள்
இஷ்டத்திற்கு விதிகளை இயற்றிக் கொள்ளவோ விதிகளை மாற்றிக்கொள்
ளவோ வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே தேர்தலை எப்படி
நடத்தலாம், எந்தெந்த விதிகளின் அடிப்படையில் நடத்தலாம் என்
பதை தெரிந்து அவர்களுக்கு மெஜாரிட்டி இருப்பதன் காரணமாக பைலா
வையே மாற்றியமைக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தேர்தல்
ஒழுங்கீனங்கள் உண்மையில் கூட்டுறவு ஸ்தாபனத்திலிருந்துதான் ஆரம்பம்
ஆகிறது. அதன் காரணமாக பல வழக்குகள் இருக்கின்றன. எந்தவித
மாக தேர்தலை சரியாக நடத்தாமல், ஒழுங்கீனமாக நடத்திவருகிறார்கள்
என்று பார்த்தால் ஒரு சில அதிகாரிகளும் அவர்களுக்கு உடந்தையாக
இருக்கிறார்களோ என்று அஞ்சவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.
சிலயிடங்களில் அங்கத்தினர்கள் சிலரை நீங்கள் அங்கத்தினர் இல்லை
என்று விலக்குகிறார்கள். தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு கூட
விலக்குகிறார்கள். விதிப்படி ஏன் முன் நோட்டீஸ் கொடுக்கவில்லை
என்று கேட்டால் பைலாவை திருத்தி இருக்கிறோம், நேற்றைய வொர்க்கிங்
கமிட்டியில் தீர்மானம் செய்து உங்களை எல்லாம் விலக்கியிருக்கிறோம்
என்று சொல்கிறார்கள். மறுபடியும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று
வாதாடினால் தேர்தல் முடிந்த பிறகு வாதாடலாமே தவிர தேர்தலில்
வோட்டு அளிக்க அவர்களுக்கு உரிமை கிடையாது. ஆகவே, பைலாவைத்
திருத்துவதற்கு அதிகாரம் இருப்பதினால் அவர்களை எதிர்ப்பவர்களை அங்கு
நுழைய முடியாத அளவிற்கு செய்து விடுகிறார்கள். டால்மியா
சிமெண்ட் கூட்டுறவு சங்கத்தில் தொழிற் சங்கத்தில் அவர்கள் அங்கத்தின
ராக சேராத காரணத்தினால் பல அங்கத்தினர்கள் விலக்கப்பட்டிருக்கிறார்
கள். அப்படி விலக்கப்பட்டதை டெப்டி ரெஜிஸ்ட்ராரிடம் சொல்லி அவர்கள்
வந்து விசாரித்து இது ஒழுங்கீனம் என்று தீர்ப்பு அளிக்கப்பட்ட பிறகு
திடீரென்று அந்த டி. ஆர். மாற்றப்பட்டார். மாற்றப்பட்ட மூன்று
நாட்களுக்குள் என்னென்னவோ செய்து திரும்ப வந்திருக்கிறார்கள். ஆனால்
தேர்தல் நடந்தது நடந்ததுதான், அப்பீல் செய்யுங்கள், பிறகு முடிவு
செய்கிறோம் என்று சொல்கிறார்கள். நாங்கள் எல்லாம் பங்குதாரர்கள்,
பணம் கட்டியிருக்கிறோம், எங்களுக்கு கடன் கொடுங்கள் என்று கேட்டால்
நீங்கள் தேசீய தொழிற் சங்கத்தில் அங்கத்தினர் இல்லை. ஆதலால்
உங்களுக்கு அளிக்க முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். இது
சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சர் அவர்களுக்கும்
எழுதிவிட்டு இப்போது உண்ணாவிரதம் இருக்கிறோம் என்று தெரிவித்
திருக்கிறார்கள். இன்று கொள்ளை அடித்துவிட்டு கொம்மாளம் போட்டுக்
கொண்டிருப்பவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் ? குற்றம்
செய்தவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டவர்களுக்கு,
பின்னர் வெளியே வந்தவுடன் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படு
கிறது. ஏன் அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்து வெளியேற்றக்
கூடாது ? தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நாம் இயற்றும் சட்டங்கள்
பல கோர்ட்டுக்கு போனால் நிற்பது கிடையாது.. காரணம் என்னவென்று
புரியவில்லை. எந்தச் சட்டமாக இருந்தாலும் சரி, நல்ல நோக்கத்தோடு
கொண்டுவரப்பட்டாலும் போடுகிற சட்டங்கள் அத்தனையும் இப்போது
செல்லாது என்ற நிலைதான் நடைமுறையில் இருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சட்டங்கள் அத்தனையும் என்று சொல்வது சரி அல்ல. நம்மையே குறைவுபடுத்திக்கொள்வது போலாகும். தமிழ்நாட்டில் என்று சொல்வது சரியல்ல. மற்ற மாநிலங்களிலும் சட்டங்கள் செய்து கோர்ட்டுக்குப் போய் தீர்ப்பு கொடுக்கிறார்கள்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பரவலாக எல்லா இடங்களிலும் நடக்கிறதென்று ஒப்புக்கொண்டார்கள். மகிழ்ச்சி, நன்றி.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கூட்டுறவுபற்றி சொல்லவில்லை. மன்றங்கள் செய்யும் சட்டங்களைப்பற்றி சொன்னேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சட்டத்தைக் குறைத்து சொல்லவேண்டும் என்பது என் நோக்கம் அல்ல. நல்ல முறையில் நிறைவேற்றவேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் சட்டத்தை பழிக்கிறார்களா ?

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சட்டத்தை பழிக்கவில்லை. ஓட்டை உடைசல் இருக்கிறது அதைப் பயன்படுத்திக்கொண்டு தப்பிக்கொள்கிறார்கள் என்றுதான் கூறுகிறேன்.

அடுத்து, இந்தத் துறையில் எவ்வளவோ ஊழல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கின்ற பொழுது, இவைகளை எல்லாம் அதிகாரிகளிடத்திலே ஒப்படைத்துவிடலாம் என்று தோன்றுகிறது. அதோடு அதிகாரிகள் எங்காவது தவறு செய்திருந்தாலும் கூட, அரசாங்கம் அதில் தலையிட்டு சரியான நியாயத்தை கடைபிடிக்க முயலவேண்டும். அதல்லாமல் கட்சி பாகுபாடு காட்டி இதில் நிர்வாகம் நடக்கக் கூடாது. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் இங்குள்ள கூட்டுறவு தலைமை எல்லாம் ஒரு சில குடும்பங்களின் கையிலேயே, அவர்களின் வாரிசாக இருந்து கொண்டிருக்கிறது. அதே போன்று தான் எல்லா மாவட்டத்திலும் ஒரு சில குடும்பங்களின் கையிலேயே கூட்டுறவு இயக்கங்கள் எல்லாம் இருந்து கொண்டு வருகிறது. காரணம் இவ்வாறு வைத்துக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஏதாவது கையாடல்கள் செய்தால் கூட, அவர்கள் இருக்கின்ற கூட்டுறவு இயக்கங்களில் ஏதாவது ஒழுங்கீனங்கள் நடந்தால் கூட, அரசாங்கம் அதில் தலையிடுவதற்கு அஞ்சி, கண்டுபிடித்த அதிகாரிகளை மிரட்டி, அவர்களுக்கும் தொல்லை கொடுத்து, வேலைகளை சரிவர நடக்க வொட்டாமல் தடுத்துவிடுகிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எந்த இடத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, தேர்தல் என்று வந்துவிட்டால், காங்கிரஸுக்கு வோட்டு போட்டால்தான், கூட்டுறவு இயக்கங்கள் மூலமாக கடன் வசதிகள் முதலியவைகள் கிடைக்கும் என்று சொல்லக் கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. மேலும், கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் காங்கிரஸ் கட்சிக்காக செலவழிக்கப்படுகிறது. கூட்டுறவுத் துறைக்கு என்று வழங்கப்பட்டிருக்கின்ற கார், ஜீப்-கள் இவைகள் எல்லாம் காங்கிரஸ் கட்சிக்காகப் பல இடங்களில் உபயோகப்படுத்தப்படுகிறது. நான் ஒன்றைக் குறிப்பிட்டு சொல்ல ஆசைப்படுகிறேன். அரக்கோணத்தில் நடந்த நகராட்சி மன்றத் தலைவர் தேர்தலின்போது, அங்குள்ள கூட்டுறவு இயக்கத்திற்காக கொடுக்கப்பட்டிருக்கின்ற எம். டி. ஜெ. **3331**-ம் நம்பர் உள்ள ஜீப் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இங்குள்ள அங்கத்தினர்களை கடத்திச் சென்று மைசூரில் கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள்..........

**கனம் சபாநாயகர் :** "இங்குள்ள" அங்கத்தினர்கள் என்று சொன்னால் அது இங்கே இருக்கின்ற சட்ட மன்ற அங்கத்தினர்களை குறிக்கும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நான் அரக்கோணத்தில் இருக்கின்ற அங்கத்தினர்களைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன். இவர்களில் சிலரை கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த எம் டி ஜே. **3331** ஜீப்பில் மைசூருக்கு கொண்டுசென்றிருக்கிறார்கள். அப்படி சென்றதில் மைசூரில் அந்த ஜீப்



ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்கிறது. நான் சொல்வது சரியில்லை என்றால், ஆதாரத்தோடு நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன். இந்த ஜீப் மைசூருக்குச் செல்லவேண்டிய அவசியமென்ன ? அரக்கோணத்தில் உள்ள பிரபல காங்கிரஸ் தலைவர் தான் அரக்கோணத்திலுள்ள கூட்டுறவு இயக்கத்தின் தலைவர். இதன் காரணமாகத் தான் இந்த ஜீப் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏன் இந்த ஜீப் மைசூருக்குச் சென்றது ? என்ன அவசியம் ஏற்பட்டது ? இதைக் கேட்பதற்கு நாதி இல்லையா ? கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட ஜீப்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சிக்குத்தான் சொந்தமா ? கூட்டுறவுத் துறையிலுள்ள ஜீப் என்றால், அது எல்லாக் கட்சிக்கும் சொந்தமானது, எல்லோருக்கும் அதில் பங்கு இருக்கிறது ? ஆனால் இப்போது குறிப்பிட்ட கட்சியின் கையில்தான் இந்த மாதிரியான ஜீப்கள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே குறிப்பாக இந்த ஜீப் மைசூருக்குப் போகவேண்டிய அவசிய மென்ன என்பதை தயவு செய்து அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும். இப்படி செய்துகொண்டிருப்பதால், நிச்சயமாக களங்கம் தான் ஏற்படும். ஆகவே இதையெல்லாம் தடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், ஒன்றை மட்டும் நான் சொல்லி முடிக்கிறேன். அதாவது உறுப்பினர்கள் சேர்க்கின்ற விஷயத்தில், அதிகமாக ஏழைகள் சேர்க்கப்படுவதில்லை. அவர்கள் அதிகமாக சேர்க்கப்பட்டால் ஏழைகள் தலைவராகிவிடுவார்கள் என்று அச்சம் போலும். மற்றவர்கள் சொல்லலாம், பணக்காரர்கள் இருந்தால்தான் அதிகமாக கையாடல்கள் நடைபெறாது என்று. ஆனால் உண்மையில் பணக்காரர்கள் அதிகமாக இருக்கின்ற சொஸைட்டிகளில் தான் கையாடல்கள் நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, ஏழைகள் இருந்தால் கையாடல்கள் நடைபெறாது. ஏனென்றால் அதை எடுத்தால் என்ன வந்துவிடுமோ, தொட்டால் என்ன ஏற்பட்டுவிடுமோ என்று ஏழைகள் பயப்படுவார்கள். பணக்காரர்களுக்குப் பயமில்லை. இப்போதுள்ள முறையை எடுத்துக்கொண்டால், பணக்காரர்கள் ஆதிக்கம் செலுத்துகின்ற காரணத்தினால் தான் கூட்டுறவு துறையில் அதிகமான அளவில் கையாடல்கள் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இப்போது எப்படி இருக்கிறது என்றால், ஏழை மக்களை சுரண்டி, அவர்களின் ரத்தத்தை குடிக்கின்ற முதலாளிகள் பலபேர்கள் இன்றைக்கு கூட்டுறவு இயக்கங்களில் தலைவராக இருக்கின்ற காரணத்தால், கூட்டுறவு துறையின் மூலமாக ஏழை மக்கள் நல்ல பலனை பெற முடியவில்லை. கூட்டுறவு இயக்கத்தை ஏழைகளின் கையில் கொடுத்துப் பார்க்கட்டும், நிச்சயமாக எந்தவிதமான கையாடல்களும் நடைபெறாது. பணக்காரர்கள் தான் இருக்க வேண்டும் என்கின்ற பாரம்பரியத்தை மாற்றி, ஆண்டு ஓராண்டு, அல்லது இரண்டு ஆண்டுகள் இப்படி சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு மேல் ஒருவரே இருக்கக் கூடாது, அதிலும் முன்பிருந்த குடும்பத்திலுள்ளவர்களும் இருக்கக் கூடாது என்கின்ற அளவுக்கு சட்டத்தையாவது திருத்தம் செய்து, ஏழை மக்கள் நல்ல முறையில் கூட்டுறவு இயக்கத்தின் பயனை அனுபவிக்கின்ற வகையில் செய்து, முக்கியமாக தேர்தலில் ஒழுங்கீனங்கள் இல்லாமல் செய்வதற்காக அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டில் இருந்தது போலவே இந்த ஆண்டிலும் தொடர்ந்து கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் வளர்ந்துள்ளது. அதற்காக கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களையும், ராஜ்ய பதிவாளர் அவர்களையும், கூட்டுறவு இலாகாவிலுள்ள எல்லா அதிகாரிகளையும் நான் பாராட்ட விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய அன்பில் தர்மலிங்கம் அவர்கள், உண்மைக்கு மாறான சில கருத்துக்களை சொன்னார்கள். அவர்கள் எந்தச் சட்டத்தைப் பார்த்து இப்படி பேசினார்களோ தெரியவில்லை. புதிய சட்டத்தை அவர்கள் பார்த்திருப்பார்களேயானால், இந்தக் கருத்துக்களை அவர்கள் சொல்லியிருக்க மாட்டார்கள். **1932**-வது சட்டத்தை வைத்துக்கொண்டு இதை

யெல்லாம் பேசிவிட்டார்கள். ஒருவரை மெம்பரிலிருந்து நீக்க வேண்டு
மென்றால் என்ன காரணத்திற்காக நீக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி
மெம்பருக்கு நோட்டீஸ் கொடுத்திருக்க வேண்டும். அதன் மேல் அவர்
கொடுத்திருக்கின்ற சமாதானத்தை மகா சபையில் வைக்க வேண்டும்.
அதை மகாசபையார் பரிசீலனை செய்து அதன் பிறகு நீக்கலாம்
என்று தீர்மானம் செய்யவேண்டும். அப்படி தீர்மானம் செய்தால்
மட்டும் போதாது. அதற்குப் பிறகு அந்த தீர்மானத்தை பதிவாளர்
அவர்களும் ஃபைனான்ஸ் பாங்க்-ம் ஒத்துக்கொண்டால்தான் அமல் செய்ய
முடியும். இந்த நிலையில் அவர்கள் இந்த உண்மைக்கு புறம்பான
கருத்துக்களை சட்ட மன்றத்தில் சொன்னால் அது எந்த அளவுக்கு பொருத்த
மாகும் என்பதை அவர்களே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.....

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, சட்டங்கள் எல்லாம்
திருத்தப்பட்டிருந்தாலும், நான் சொன்னது, இந்தச் சட்டங்கள் ஒன்றும்
அமலாக்கப்படவில்லை என்பது தான். நோட்டீஸ் கொடுக்க வேண்டும்
என்றிருந்தாலும் கூட, உரிய காலத்தில் கொடுக்காமல், நோட்டீஸ் ஸெர்வ்
செய்யாமலேயே நோட்டீஸ் ஸெர்வ் செய்ததாக சொல்லுகின்ற முறையில்
நீக்கிவிடுகின்ற ஊழல்கள் எல்லாம் நடைபெறுகின்றன. இதை என்னால்
நிரூபித்துக் காட்ட முடியும்.

**திரு. கே. எஸ். சுப்பிரமணிய கவுண்டர் :** சென்ற அக்டோபர் மாதம்
இரண்டாம் தேதி இந்தச் சட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.
அப்படி யிருந்தும் கனம் அங்கத்தினர் அவர்கள் அமல் செய்யப்படவில்லை
என்று சொன்னால் இதைப்பற்றி அவர்கள் நன்றாக அறிந்து கொள்ள
வில்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

இரண்டாவது, மெம்பர்கள் சேர்ப்பதில் கஷ்டம் இருக்கிறது என்று
சொன்னார்கள். அதுவும் முழுக்க முழுக்க உண்மைக்கு மாறானது
என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புதிய சட்டத்தில் யார்
வேண்டுமென்றாலும், மெம்பர்களாக சேரவேண்டும் என்று விண்ணப்பம்
செய்து கொண்டாலும் உடனடியாக சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்படி
சேர்த்துக்கொள்ளவில்லையென்றால் உடனே நிர்வாகஸ்தர்களுக்கு அப்பீல்
செய்து கொள்ளலாம். ஆகவே இப்படி இருக்கும்போது, ஏழைகள்
மெம்பர்களாக சேருவதற்கு தடை இருக்கிறது, பணக்காரர்களைத் தான்
அதிகமாக சேர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது உண்மை
யல்ல. இங்கு கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பின்படி பூரணமாக 85 சத
விகிதம் குடும்பங்களை அங்கத்தினர்களாக சேர்த்திருக்கிறார்கள். ஆகவே
மெம்பர்களாக சேர்ந்துகொள்வதற்கு கஷ்டமிருக்கிறது என்று சொல்வது
தமிழ்நாட்டில் எந்த விதத்திலும் பொருந்தாது ; வேண்டுமென்றால்
அஸ்ஸாமில் சொல்லலாம், வங்காளத்தில் வேண்டுமென்றால் சொல்லலாம்.
இந்த விதமாக சொல்வது எந்த முறையிலும் தமிழ் நாட்டுக்கு ஒவ்வாது
என்பதை குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

மற்றபடி, கூட்டுறவு இயக்கம் இன்னும் நல்ல முறையில் வளரவேண்டு
மானால் பல காரியங்களை செய்ய வேண்டும். அந்த முறையில் சில கருத்
துக்களை கூற விரும்புகிறேன். முக்கியமாக இப்போது இருக்கக்கூடிய
சங்கங்களை எல்லாம் எவ்வளவு பெரிதாக ஆக்க முடியுமோ அந்த அளவு
"வயபிள் யூனிட்டாக" மாற்ற வேண்டும். இதை நான் மட்டும் சொல்லவில்லை.
பல நிபுணர்களும் சொல்லுகிறார்கள். ரிசர்வ் பாங்கும் இந்த அபிப்பிரா
யத்தை திருப்பித் திருப்பிச் சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே இதை
உடனே அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கி
றேன்.

இப்போது கிரெடிட் யூனியன்கள் எல்லாம் சில இடங்களில் ஆரம்பிக்கப்
பட்டிருக்கின்றன. ஆனால் இந்த கிரெடிட் யூனியன்கள் என்று ஏற்படுத்
தாமல் பெரிய சங்கங்களாக மாற்றிவிடுவது நல்லது. ஃபுல் ஃபைனான்ஸ்
திட்டத்தின் கீழ் கடன் வசதி செய்து கொடுக்கின்ற விஷயத்தில் போதிய





அளவு கடன் வசதி செய்து கொடுக்க முடியாத நிலை இருந்துகொண்டு
இருக்கிறது. மார்ஜினல் கல்டிவேட்டர்ஸுக்கும், சப்-மார்ஜினல் கல்டி
வேட்டர்ஸுக்கும் 2/3 என்ற அளவில் கிராண்டு கொடுக்கப்படுகிறது.
இந்த ஃபுல் ஃபைனான்ஸ் ஸ்கீம் முறையில் கடன் கொடுக்கின்ற வச
தியை ராஜ்யம் பூராவுக்கும் ஏற்படுத்துவதற்குச் [illegible] ஏற்பாடு
செய்ய வேண்டும். ஃபுல் ஃபைனான்ஸ் திட்டம் நாடு [illegible]
நடத்தப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் சொல்லப்பட்டிருக்
கிறதே தவிர, பிளாக் லெவலில், அதன் மூலமாக இரண்டரை லட்சமோ
அல்லது இரண்டு லட்சத்து 60 ஆயிரம் ரூபாயோதான் கொடுக்கப்பட்டிருக்
கிறது. இந்தத் தொகை இன்னும் கூட்டுறவு இயக்கத்திற்குக் கொடுப்ப
தைப் பற்றி இன்னும் முடிவு ஏற்படவில்லை. இது பரிசீலனையில் இருந்து
கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே சீக்கிரமாகவே
முடிவு செய்து இந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அது மட்டுமல்ல, இந்த ஃபுல் ஃபைனான்ஸ் திட்டக்
திற்காக 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள் என்றால், அதைக்
கூட்டுறவு இயக்கத்திற்குக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசாங்
கம் உடனே செய்ய வேண்டும். பணத்தைக் கொடுக்காமல் ஃபுல்
ஃபைனான்ஸ் திட்டத்தின் கீழ் தாராளமாகப் பணம் கொடுங்கள் என்று
சொல்வது சிறந்தது அல்ல. ஆகவே இதை உடனடியாகக் கொடுப்ப
தற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.
அரசாங்கம் நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் 3 ஆண்டு,
5 ஆண்டு டெபாஸிட்டுகளுக்கு காரண்டி கொடுத்துள்ளது. காரண்டி 11-00 a.m.
எவ்வளவு கொடுக்கப்பட்டுள்ளதோ கிட்டத்தட்ட அந்த அளவுக்கு நாம்
டெபாஸிட் வசூலித்துள்ளோம். அந்த காரண்டி தொகையை இன்னும்
அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை நம் ராஜ்ய அரசாங்கம் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலும் சில சிக்கல்கள் இருக்
கின்றன என்பதும் எனக்குத் தெரியும். ரிஸர்வ் பாங்க் இதற்குச் சில
ஆட்சேபணைகளைச் சொல்லி வருகிறார்கள். இருந்தபோதிலும் இந்தத் திட்
டத்தை ஆரம்பித்துவிட்டோம். ஆரம்பித்த பின் இனி விட்டுவிடுவது என்
றால் பொது மக்களிடம் ஏதோ தவறுதலோ, என்னவோ, ஏன் நிறுத்தி
னார்கள் என்ற அச்சமே ஏற்பட்டு விடும். ஷெட்யூல்ட் பாங்குகளுக்கு டெபா
ஸிட் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் இருக்கிறது. அந்த ஸ்கீம் கூட்டுறவு பாங்க்
டெபாஸிட்டுகளுக்கு வரும் வரையில் அரசாங்கம் மீடியம் லோனுக்கு
காரண்டி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் கோவாப்பரேஷன் ஒவ்வொரு
ப்ளாக்கிலும் பணியாற்றி வருகிறார்கள். ப்ளாக்கைப் பொறுத்த வரை
யில் அவர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லிவருகிறார்கள். அவர்
களுக்கு வேலை இல்லை என்பது சரியல்ல. ஆனால் அவர்கள் எந்த இடத்
திலே இருக்க வேண்டுமோ அங்கு இல்லாமல் தவறுதலான இடத்தில்
பணியாற்றுகிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். எப்படி
ஈ.ஓ. பஞ்சாயத்தை கூட்டுறவு சென்ட்ரல் பாங்கில் விட்டு வேலை செய்யுங்
கள் என்று சொன்னால் இருக்குமோ, அதே போல்தான் ஈ.ஓ. கோவாப்ப
ரேஷனை பஞ்சாயத்தில் வைத்து வேலை செய் என்று சொல்லுவது. நாங்கு
னேரியில் நடந்த ஸ்டேட் லெவல் கான்ஃபரன்ஸில் கூட இது பற்றி
முதல் அமைச்சரிடம் சொல்லப்பட்டது. இதைப் பற்றி அரசாங்கம் சீக்கிர
மாகப் பரிசீலித்து ஆவன செய்யலாம் என்ற முறையில் சொன்னார்கள்.
சீக்கிரமாகப் பரிசீலித்து ஈ.ஓ. கோவாப்பரேஷனை மத்திய பாங்கில் வேலை
செய்யும் அளவில் ஏற்பாடு செய்தால் எல்லாவித வேலைகளையும் நல்ல
முறையில் செய்து அதே சமயத்தில் தவறுதல் நடக்காமல் தணிக்கை
செய்யும் நிலைமையிலே சவுகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன். அதையும் உடனடியாகப் பரிசீலனை செய்ய வேண்டு
மென்று நான் அரசாங்கத்தைக் கேடடுக்கொள்கிறேன்.

மற்றொன்று இந்த டிபார்ட்மெண்டல் ஸ்டாஃப்களைப் பற்றி ஒரு விஷ
யத்தைச் சொல்ல விரும்புகிறேன். மற்ற எல்லாத் துறைகளிலும் ஃபாரின்
சர்வீஸில் பணியாற்றினால் 25 சத விகிதம் ஃபாரின் சர்வீஸ் அலவன்ஸ்
கிடைக்கிறது. கூட்டுறவுத் துறையிலும் 25 சத விகிதம் என்று இருந்ததை
20 சத விகிதமாகக் குறைத்திருக்கிறார்கள். சாதாரணமாக மற்ற துறை

களைவிட கூட்டுறவுத் துறையில் பண விஷயத்தில் அவர்கள் புழங்குகிற நிலைமை இருக்கிற காரணத்திஞல் அவர்களுக்கு அதிகமாக ஊதியம் இருப்பது மற்ற டெம்ட்டேஷன்களைத் தவிர்க்க சவுகரியமாக இருக்கும். கூட்டுறவுத் துறைக்கு மாத்திரம் 25 சத விகிதத்திலிருந்து 20 சத விகித மாகக் குறைத்தது நியாயத்திற்கு எந்த விதத்திலும் ஒவ்வாதது. இதை மீண்டும் உடனடியாகப் பரிசீலனை செய்து அவர்களுக்கும் 25 சத விகிதம் ஃபாரின் சர்வீஸ் அலவன்ஸ் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே ப்ரொபேஷனர்ஸ் ஃபாரின் சர்வீஸில் போகக் கூடாது என்று கூட்டுறவு இலாகாவிற்கு ஒரு விதி ஏற்படுத்தி இருக்கிருர்கள். அது மாத்திரமல்ல, மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரு இன்ஸ்ட்டிட்யூஷனில் பணியாற்றக் கூடாது என்று செய்திருக்கிருர்கள். இந்த மாதிரி கூட்டுறவுத் துறையில்தான் இருக்கிறதே தவிர மற்ற இலாகாக்களில் இல்லை. மற்ற இலாகாக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த நடைமுறை தேவையில்லாதது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்ருென்று, கூட்டுறவு விதிகள் அமைக்கும்போது 300 ரூபாய்க்கு மேல் ஒரு ஊழியர் சம்பளம் வாங்கிஞல் போனஸே கிடையாது என்று புதி தாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று கூட்டுறவு அமைச்சரிடமும் பதிவாளரிடமும் பல முறை சொல்லப்பட்டு இருக்கிறது. முன்னூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் இருந்தால் போனஸ் கூடாது என்று இருப்பதை அகற்றிவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குடவுன்களைப் பொறுத்த வரையில் நம் ராஜ்யத்திலே மற்ற ராஜ்யங் களை விட அதிகமாகக் கட்டியிருக்கிருேம். இன்னும் அதிகத் தேவை இருக்கிறது நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில். அது மட்டுமல்லாமல் இருக்கக்கூடிய குடவுன்களைப் பெரிதாகக் கட்ட வேண்டும். அதோடு எண் ணிக்கையையும் அதிக படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

மார்க்கெட்டிங்கைப் பொறுத்த வரையில் மிகவும் தடையாக இருப்பது இந்த விற்பனை வரியிஞலே. விற்பனை வரி இலாகாவிலே ஒரு தானியத் தையோ அல்லது சாமானையோ விலைக்கு வாங்கி விற்ருலும் இல்லாவிட்டால் மார்க்கெட் செய்தாலும் இரண்டையும் ஒன்ருகப் பாவிக்கிருர்கள். அது இருக்கக் கூடாது. மார்க்கெட் செய்தால் அதற்கு விற்பனை வரி இருக்கவே முடியாது. சட்டத்திலே கூட அந்த அளவில் இருந்தாலும் இன்டர்ப்ரிட் செய்யும்போது வேறு விதமாகச் செய்கிருர்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரைஸ் மில்லைப் பொறுத்த வரையில் கூட்டுறவுத் துறையில் பெரிய ரைஸ் மில் ஒன்ருவது ஏற்படுத்த அரசாங்கம் முடிவு செய்து அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு வேண்டிய முழுத் தொகையை யும் கடஞகக் கொடுத்தால் போதும். அதற்கான ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹவுஸ் மார்ட்கேஜ் பாங்க்கைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு தாலூகாவுக்கு ஒன்ருக இருக்க வேண்டும். தாலூகாவில் இருக்கக்கூடிய மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும், ப்ளாக் யூனியன் ஹெட்க்வாட்டர்ஸ்க்கும் உபயோகப்படும் முறையில் அங்கு இருக்கக்கூடிய வீடுகளுக்கு கடன் கொடுக்கும் முறையில் அமைந்தால் சவுகரியமாக இருக்கும். முனிசி பாலிடிகள் அல்லது தாலூகா ஹெட்க்வாட்டர்ஸ் என்ற அளவில் இருந் தால் நல்ல முறையில் எல்லோருக்கும் சேவை செய்யக்கூடியதாக இருக் காது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

ஆடிட்டைப் பொறுத்த வரையில் ஊழல்கள் அதிகமாக இருக்கிறது என்று கனம் அங்கத்தினர் தர்மலிங்கம் வேகமாகச் சொன் ஞர்கள். எத்தனை ஆயிரம் சொஸைட்டிகள் இருக்கின்றன, அதில் எத்தனை சொஸைட்டிகளில் ஊழல்கள் இருக்கின்றன என்று பார்க்க வேண்டும்.





அப்படிச் சொல்லும்போது எந்த இலாகாவில், எந்த ஸ்தாபனத்தில் ஊழல் இல்லாமல் இருக்கிறது என்று பார்த்தால் குறிப்பாக கூட்டுறவுத் துறையில் மற்ற துறைகளில் இருப்பதைப் பார்க்க மிகக் குறைவு என்று சொல்ல முடியும். பேப்பரில் வரும் ஒரு ஜட்ஜ்மென்டை வைத்து எல்லாம் ஊழல் என்று சொன்ஞல் அது எந்த அளவுக்கு சரி என்று பார்க்க வேண்டும். தவறு இல்லை என்று நான் சொல்லவில்லை. தவறு இருக்கத்தான் செய்கிறது. எப்படியும் நிவர்த்தி செய்வது மிக மிக முக்கியம். அரசாங்கம் ஆடிட்டை எந்த அளவுக்கு மிக மிக நல்ல முறையில் திறமையாகச் செய்கிருர்களோ, அந்த அளவுக்கு ஊழல் இல்லா மல் செய்துவிட முடியும், தவறு இல்லாமல் செய்துவிட முடியும். அரசாங்கம் ஆடிட் விஷயத்தில் ரூபாய், அணு, பைசா கணக்குப் பார்க்கும் போது, எவ்வளவு செலவு எவ்வளவு வரவு என்று பார்க்கும்போது இந்த அளவுக்கு தவறு நடக்கிறது. முன்பெல்லாம் 15 செஸைட்டி களுக்கு ஒரு ஆடிட்டர் என்ருல், 10,000 ரூபாய் அளவில் இருந்தது இப் போது லட்ச ரூபாய் ஆனபோதும் கூட அதே 15 செஸைட்டிகளுக்கு ஒரு ஆடிட்டர் என்ருல், ஒரு சொஸைட்டியை 4 நாளில் முடிக்க வேண்டு மென்று சொல்லுகிருர்கள். எந்த அளவுக்குப் பூரணமாகச் செய்ய முடி யும் ? ஃபுல் அண்ட் தரோவாக இருக்கிறதா என்ருல் நிச்சயமாக இல்லை என்று ஆகிவிடுகிறது. ஆடிட்டர்களை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். கன்கரண்டாக வைத்திருப்பது நல்லது. இதிலே அரசாங்கம் எவ்வளவு செலவு ஆகிறது என்று கணக்குப் பார்க்காமல் எவ்வளவு தேவை என்று சீப் ஆடிட்டர் சொல்லுகிருரோ, ரிஜிஸ்ட்ரார் சொல்லுகிருரோ அந்த அள வுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்ஸ்யூமர் ஸ்கீமைப் பொறுத்த வரையில் ஒரு வார்த்தை. இதைப் பொறுத்த வரையில் அரசாங்கம் இப்போது அதற்காகப் பல ஏற்பாடுகள் செய்து சென்ட்ரலி ஸ்பான்ஸார்ட் ஸ்கீம் என்ற முறையில் பல மானியங் கள் கொடுக்கிருர்கள். பல கடன் உதவிகள் கொடுக்கிருர்கள். இதிலே கடைகள் போடுவதிலே ரீட்டெயில் ஷாப் வைப்பதில் சிரமம் இருக்கிறது. டிபென்ஸ் ஆப் இண்டியா ரூல் பிரகாரம் ரெக்விஸிஷன் செய்து கட்டடம் கொடுக்க வேண்டுமென்று பல முறை சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி மத்திய அரசாங்கத்திலே கேட்டால், ராஜ்ய அரசாங்கம் செய்யவேண்டு மென்று சொல்லுகிருர்கள். ராஜ்ய சர்க்காரைக் கேட்டால் கூட்டுறவு துறைக்கு ரெக்விஸிஷன் செய்ய ரூல் செய்ததிலே இதைப் போடவில்லை, அதஞல் செய்ய முடியாது என்று சொல்லுகிருர்கள். அந்த அளவு இருக்கக் கூடாது. சீக்கிரமாக டிபென்ஸ் ஆப் இண்டியா ஆக்ட் பிரகாரம் ரெக்விஸிஷன் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

கிராம நாணயச் சங்கத்திற்கு 2,500 சங்கத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். 2,500 என்று குறிப்பிட்டு இருந்தாலும் மான்யமோ, கடன் உதவியோ எதுவும் செய்ய வில்லை. 2,500 சங்கங்கள் என்று தாராளமாக உத்தரவு போட்டிருக்கிறதே தவிர நகரங்களில் இருக்கிற சங்கங்களுக்குத்தான் உதவி இருக்கிறது. கிராம சங்கங்களுக்கு உதவி இருக்க வேண்டும் என்று சொல்லி முடிக்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** இந்த விவாதத்திலே அதிக அங்கத்தினர் கள் கலந்துகொள்ள வேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருப்பதால் ஒவ்வாரு அங்கத்தினரும் ஐந்து நிமிஷத்திற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத் துக்களை சொல்ல முன்வந்துள்ளேன். கூட்டுறவு ஸ்தாபனத்தில் பல தரப் பட்ட சங்கங்கள் இப்பொழுது செயல்பட்டு வருகின்றன. சுமார் 25,000 சங் கங்கள் நம்முடைய தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. அந்த சங்கங்களுக்காக நமது சட்டசபையில் பிரத்தியேகமான பிரதிநிதித்துவம் ஒன்றும் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. புதிய ஆக்டில் இந்த பிரதி நிதித்துவம் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆஞல், இல்லை.

ஆகையால், தமிழ்நாட்டை ரீஜன், ரீஜனாகப் பிரித்து சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் கொடுத்து, கூட்டுறவு சங்கங்களின் குறைகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பு அளிக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சங்கங்களில் ஊழல்கள் அதிகமாக ஏற்பட்டு வருகின்றன என்று ஒரு நண்பர் சொன்னார். ஆனால், இந்த ஊழல்களுக்குக் காரணம், லாக் ஆப் சூபர்விஷன். இன்டென்ஸிவ் சூபர்விஷன் இல்லாத காரணத்தினால் தான் இம்மாதிரி ஊழல்கள் ஏற்படுகின்றன என்பது என்னுடைய அபிப்பிராயம். இதற்காக தமிழ்நாட்டை 3, 4 ரீஜன்களாகப் பிரித்து ஒவ்வொரு ரீஜனுக்கும் ஒரு ஜாயிண்டு ரிஜிஸ்தாரர் அந்தஸ்தில் உத்தியோகஸ்தரை நியமித்து, அந்தந்த ரீஜனில் இருக்கும்படியான கூட்டுறவு சங்கங்களை அவர் கண்காணிக்கும்படி ஏற்பாடு செய்தால், இம்மாதிரியான ஊழல்கள் குறைந்துவிடும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இப்பொழுது நமது நண்பர் சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் கூறியது போல, வயபிள் யூனிட்டாகச் செய்ய வேண்டும் என மேதா கமிட்டி சிபார்சு செய்துள்ளது. ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு சங்கம் ஏற்படுத்த வேண்டும். அப்படி ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு சங்கம் ஏற்படுத்தினால், அது நல்ல முறையிலே இயங்கும். இம்மாதிரி ஊழல்களுக்கு வழி இருக்காது என்பது என்னுடைய கருத்து. ஆகையால், ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு சங்கம் ஏற்பாடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சங்கங்களில் வேலை செய்யும் பணியாளர்களை நாம் ஊக்குவிப்பது நமது கடமையாகும். புதிய விதியின்படி ரூ. 300-க்கு மேல்பட்ட சம்பளம் வாங்கும் பணியாளர்களுக்கு போனஸ் கொடுக்கக் கூடாது என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதனால் பல பேர்கள் பாதிக்கப்படுகிறார்கள். போனஸ் மூன்று மாதச் சம்பளம் அல்லது ரூ. 900 இதில் எது குறைவோ, அது கொடுக்கலாம் என்று விதியை மாற்றி எல்லோரும் போனஸ் பெறத் தக்க ஏற்பாடுகள் செய்ய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் நில அடமான பாங்குகளில் உள்ள பணியாளர்களுக்கு போனஸ் கொடுக்க இயலவில்லை. காரணம் என்னவென்றால், ஒரு நில அடமான பாங்கியின் ஷேர் காபிடல் அதனுடைய பாரோயிங்கில் 12-ல் ஒரு பங்கு இருந்தால் தான் போனஸ் கொடுக்கலாம் என்று கண்டிஷன் இருக்கிறது. இதனால் பல நில அடமான பாங்குகள் லாபத்தில் வேலை செய்தாலும், சிப்பந்திகளுக்கு போனஸ் கொடுக்க முடியவில்லை. ஆகவே, இந்த கண்டிஷனை எடுத்துவிட்டு, எல்லோருக்கும் போனஸ் கிடைக்கும்படியான வாய்ப்பை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் லேபர் காண்டிராக்ட் சொஸைட்டிகள் பல சொஸைடிகள் ஏற்பட்டிருந்தும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை. அதற்காக அந்தந்த சரகத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து வேலைகளை இந்த லேபர் காண்டிராக்ட் செஸைடிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஒரு உத்தரவு போடவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தற்பொழுது வேலையில் இருக்கும்படியான ஊழியர்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் 40 சத விகிதம் மார்க் வாங்காத காரணத்தால், அவர்களை ரிவர்ஷன் செய்வதாகவும், பல பேர்களை ரிவர்ஷன் செய்திருப்பதாகவும், நான் கேள்விப்பட்டேன். இப்பொழுது வேலையில் இருப்பவர்களுக்கு இதிலிருந்து விதி விலக்கு அளித்துவிட்டு, இனிமேல் வேலைக்கு வருபவர்களுக்கு இந்த கண்டிஷன் அமல் செய்தால் நலமாக இருக்கும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

கடைசியாக, இந்த இலாகாவில், உள்ள டெப்யூடி ரிஜிஸ்ட்ரார்கள் கெஜட் பதவியில் இருந்தபோதிலும், அவர்களுக்கு மற்ற கெஜட் பதவியில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கும்படியான சம்பளம் விகிதாசாரப்படி கொடுப்பதில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். ஒவ்





வொரு ஜில்லாவுக்கும் ஒரு டெப்யூடி ரிஜிஸ்ட்ரார் இருப்பதினால், இவர்களுக்குப் பொறுப்பும் அதிகமாக இருப்பதினால், மற்ற டிபார்ட்மெண்டில் உள்ள கெஜடட் ஆபீஸர்களுக்கு உள்ள ஆரம்ப சம்பளம், அதாவது ரூ. 375 பிரகாரம் அவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்து, அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் சொல்லிய கருத்துக்களை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. அப்பாவு தேவர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் 1964-65-ம் ஆண்டுக்கான கூட்டுறவுத்துறை மான்யம் சம்பந்தமாக சிலவற்றை பேச நான் விரும்புகிறேன். இந்த கூட்டுறவு முறையானது நல்ல முறையில் நடந்து மக்களுக்கு நல்ல பணியாற்றி வருகிறது என்பதில் சந்தேகமில்லை. அதை நான் வரவேற்று, ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். கூட்டுறவானது இன்னும் சில கிராமங்களில் ஏற்படாமல் இருக்கிறது. சிறிய கிராமங்களிலும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அவசியம் ஏற்படுத்தி அவைகளின் மூலமாக அரிசி, சாமான்கள், பால் முதலியவைகளை ஏழை மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரிய கிராமங்களில் மட்டும் அரிசி முதலிய சாமான்கள் கிடைக்காமல் மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள் என்பது இல்லை. சிறிய கிராமங்களிலும் இந்த அவஸ்தை இருக்கிறது. அவைகளையும் உடனடியாகக் கவனித்து, ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுது விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு எரு, மாடு, முதலியவைகள் வாங்குவதற்குக் கடன் கொடுப்பது, காலாகாலத்தில் கிடைப்பதில்லை. அதற்காக ஏழை மக்களுக்கு அதிக செலவில்லாமலும் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். மாடுக்காக வழங்கும் கடன்கள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை என்று மக்கள் சொல்லுகிறார்கள். அதுவும் காலத்தில் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு, தற்பொழுது கொடுக்கப்படும் கடன் வரம்பை ஆங்காங்குள்ள தேவைக்குத் தகுந்தபடி அதிகப்படுத்த வேண்டும்.

விலைவாசியைக் கட்டுப்படுத்த, மத்திய சர்க்கார் உதவியுடன் மத்திய பண்டகசாலைகள் ஏற்படுத்தி, அதிலிருந்து பல கிளைகளும் ஏற்படுத்தினால், நகர மக்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

சில கிராமங்களில் கிட்டங்கிகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் பல கிராமங்களில் அவை தேவைப்படுகின்றன. நான்கு கிராமங்களுக்கு ஒரு கிட்டங்கியாவது ஏற்படுத்தினால், ஏழை மக்கள் தானியங்களை அறுவடை காலத்தில் சேகரித்து வைத்துக்கொண்டு, பிறகு விலைகள் உயர்ந்து விற்கும் பொழுது, அவர்கள் விற்பதற்கு மிகவும் சௌகரியமாக இருக்கும். கிட்டங்கிகளில் ஜனங்கள் தானியங்களை வைத்துக்கொள்வதற்கு வாடகையும் ரொம்பக் குறைவாக இருக்குமானால், இவை ஏழை மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அந்த மாதிரி கிட்டங்கிகள் நான்கு கிராமங்களுக்கு ஒரு கிட்டங்கியாவது ஏற்படுத்துமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு முறையில் சாகுபடி சில கிராமங்களில் நடக்கின்றன. சில கிராமங்களில் இன்னும் நடக்காமல் இருக்கிறது. அந்த இடங்களிலும் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்தால் மக்களுக்கு சௌகரியமாக இருக்கும். சில கிராமங்களில் அவைகளைக் கவனிக்கிறார்கள். சில கிராமங்களிலே அவைகளைக் கவனிப்பதில்லை. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. க. மாரப்ப கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது நாட்டின் தலைவர்கள் ஜனநாயக சோஷலிஸத்தை அமைக்கவேண்டுமென்ற முடிவை எடுத்திருக்கிறார்கள். அந்த முடிவை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டுமானால், இந்த கூட்டுறவு ஸ்தாபனத்தினால்தான் முடியும் என்பதை நான் திட்டவட்டமாகக் கூற முடியும். கூட்டுறவுத் துறையில் நம்நாட்டில் பல தலைவர்கள் இருந்து நாட்டு மக்களுக்குத் தேவையான, குறிப்பாக விவசாய மக்களுக்குத் தேவையான, பல நல்ல காரியங்களைச் செய்து பல சட்டங்களையும் செய்திருக்கிறார்கள். அதற்காக நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். பொதுவாக நமது கூட்டுறவுத்துறை பல வருஷங்களாக நல்ல முறையில் மக்களுக்குப் பணி புரிகின்றது என்று சொன்னால், அதற்குக் காரணமாகவுள்ள சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும், ரிஜிஸ்டிரார் அவர்களையும், மற்ற அதிகாரிகளையும் நாம் பாராட்டக்கடமைப் பட்டிருக்கிறோம். ஆனால் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் அதிலுள்ள தலைவர்கள் நல்ல மனப்பான்மையோடு கூட்டுறவு வளரவேண்டும் என்ற நம்பிக்கையுடன் இருந்தால்தான் திட்டங்கள் நல்லமுறையில் நிறைவேறும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இன்று கூட்டுறவுத் துறையிலே பல பகுதிகளை முழுக்கடன் திட்ட ஏரியாக்களாக செய்திருக்கிறார்கள். அந்த முறையில் பார்க்கும்போது இன்றைக்கு விவசாயிகளுக்கு பலவகைகளில் பணம் தேவைப்படுகிறது. கூட்டுறவுத் துறையிலே ஒரு தனிநபருக்குக் கொடுக்கப்படும் உச்ச அளவுக்கடன் ரூ. 3,000 என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தேவைப்படும் சாமான்களைக் கவனிக்கும்பொழுது ஓரளவுகூட அவர்களது தேவைகளைப் போக்குவதற்கு இந்தப் பணம் போதாமல் இருக்கிறது. ஆகவே, ரூ. 3,000 என்று இருப்பதை ரூ. 5,000 ஆக உயர்த்தவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை ஜில்லாவைப் பொறுத்தவரையில், மத்திய பாங்கிலே கூட்டுறவு வளர்ச்சிக்குக் காரணகர்த்தாவாக இருந்த திரு. ராமலிங்கம் செட்டியார் அவர்களும், ரத்தினசபாபதி முதலியார் அவர்களும் இப்பொழுது மறைந்து விட்டார்கள். அவர்கள் காலஞ்சென்ற பிறகு அதற்கு நேர்மாறான ஒரு தலைவரை இப்பொழுது தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அசைக்கமுடியாத நிலையிலே இன்று அவர் அங்கே பணியாற்றி வருகிறார். சட்டதிட்டங்கள் இல்லாத முறையிலே கடன்கள் பட்டுவாடாச் செய்வது, பொதுவாக அவருக்கும் அவர்க்கு வேண்டியவர்களுக்கும் என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டுமோ அப்படிப்பட்ட சர்வாதிகார முறையிலே இயங்குவதுதான் அவருடைய தலைமைப்பதவியின் இலட்சியமாக இருந்து வருகிறது. அவருக்கு வேண்டுமென்ற சங்கங்களுக்கு உதவிசெய்து வருகிறார். அதிலே ஒரு சங்கத்தை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். செங்காலிப்பாளையம் சங்கத் தலைவர் அவருக்கு மிகவும் வேண்டியவர். அந்த சங்கம் பல ஆண்டுகாலமாக பிணைமிக்கடன்களைக் கொடுத்திருப்பதாக இப்பொழுது தெரியவருகிறது. இந்த நிலையிலே 1962-ல் ஜூன் மாதத்தில் ரூ. 82,000 வரை அந்தச் சங்கம் தவணை தவறியிருந்தது. அந்த நிலையில் கிட்டத்தட்ட 8 மாதங்கள் தீர்ந்து போய் விட்டன. ஒரு சங்கத்தின் கடனுக்கு தவணை கொடுப்பது என்று சொன்னால், தவணைக் காலம் வருவதற்கு முன்பு வாய்தாக் கொடுக்கப்படவேண்டும். சூபர்வைசர் ரிப்போர்ட் இல்லாமலும்,யூனியனின் சிபார்சு இல்லாமலும், மேலும் இரண்டு மாதங்கள் தவணை நீடித்து கொடுத்தார்கள். மறுபடியும் அதே சங்கத்திற்கு அப்படி தவணை தவறியிருந்தும் கூட ஒன்றரை மாதத்திற்குள் ரூ. 1½ லட்சம் கடனைக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு கொடுத்த பிறகு, 1963-ம் வருஷம் வந்துவிட்டது. 1963-க்கு பிறகு பழையபடியும் அது தவணை தவறியது. அவர்களுக்குள் பேச்சுவார்த்தையில் ஏதோ சிக்கல்கள் இருந்தது போலும்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் அங்கத்தினர் பொதுவாகப் பேசவேண்டும். தனிப்பட்ட பிரச்னைகளை வைத்து இங்கே பேசுவதாகத் தெரிகிறது.



**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினருடைய நேரமும் முடிந்து விட்டது.

**திரு. க. மாரப்ப கவுண்டர் :** ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுகிறேன். இந்த நிலை இப்படிப் பல சங்கங்களிலே இருக்குமென்று நான் நினைக்கிறேன். எப்படி கல்வி, சுகாதாரம், கால்நடை வளர்ச்சி, இவற்றையெல்லாம் கோவை ஜில்லாவைப் பொறுத்தவரையில் இரண்டாகப் பிரித்திருக்கிறார்களோ அதைப்போல் இந்த பாங்கையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் கூட இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த கோவை ஜில்லா பாங்கையும் இரண்டாகப் பிரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. சே. மாதவன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தில் பேசும்பொழுது தனிப்பட்ட குற்றச்சாட்டுக்களை தனிப்பட்ட தவறுகளை எடுத்துக்காட்டுவது தவறா ?

**கனம் உதவி சபாநாயகர் :** தனிப்பட்டக் குற்றச்சாட்டுகளை எடுத்து காட்டுவது விதிகளுக்குப் புறம்பானதா இல்லையா என்று கேட்டால் சொல்லப்படும் விஷயங்களைப் பரிசீலனை செய்யாமல் இங்கே ஒரு முடிவைச் சொல்ல முடியாத ஒரு நிலைமை ஏற்படும். ஆகவே விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமாக இருக்காது. உடனடியாக பரிகாரம் காண்பதும் இயலாததாக இருக்கும்.

**திரு. ம. கமலநாதன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் பொதுவாக கட்சிச் சார்பற்ற முறையிலே இயங்கி வருகின்றன. கட்சிக் கண்ணோட்டம் இருக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நடந்து வருகின்றன என்பதை நான் துணிவாகக் கூறமுடியும். அதிலே முரண்பட்ட கருத்துக்கள் கொண்ட சில நண்பர்கள் இருக்கலாம். ஆனால் இதிலே எந்தக் கட்சிக் கண்ணோட்டத்திற்கும் இடமில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம சங்கங்களின் பஞ்சாயத்தார்கள் தேர்தலைப் பொறுத்த வரையில் இப்பொழுது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெற வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி மூன்று ஆண்டுகளுக்கு பஞ்சாயத்தார்கள் தேர்ந்து எடுக்கப்பட்ட பிறகு, அவர்களின் ஆயுட்காலம் மூன்று ஆண்டுகள் என்று நிர்ணயிக்கப்பட்ட பிறகு முதலாண்டிலே மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ரிட்டையர் ஆகவேண்டுமென்று சொன்னால் அது ஜனநாயகத்திற்கு முரணான முறையிலே இருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்துதாரரை முதலாண்டிலேயே திருவுளச்சீட்டுப் போட்டு நீக்குவதென்பது..........

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ரிபப்ளிக்கன் கான்ஸ்டிட்யூஷன் வந்தபொழுது அப்படித்தான் செய்தோம். 1952-ம் வருஷத்திலே ராஜ்ய சபைக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்பொழுது மூன்றில் ஒரு பங்கு ரிட்டையர் ஆகவேண்டுமென்று செய்தோம். அதே முறைதான் இன்றும் கையாளப்பட்டு வருகிறது.

**திரு. ம. கமலநாதன்:** ராஜ்ய சபையைப் பொறுத்தவரையில் வைத்துக் கொண்டாலுங்கூட கிராமங்களிலே கூட்டுறவுச் சங்கத்தை நடத்தவேண்டுமென்று சொன்னால் அதற்கு திறமையுள்ளவர்கள் ஒருசிலர்தான் இருக்கிறார்கள். இரண்டு மூன்று பேர்கள் தான் செல்வாக்குள்ளவர்களாகவும், சங்கத்தைத் திறமையாக நடத்தக்கூடியவர்களாகவும், இருக்கமுடியுமே தவிர, கிராமத்தில் உள்ள எல்லா மக்களும் இதை நன்றாக நடத்திச் செல்லலாம் என்று நினைக்கக் கூடாது. ஆகவே, இந்த கிராம சங்கங்களைப் பொறுத்தவரையில்........................

**கனம் திரு. வெ. ராமையா :** அவ்வாறு ரிட்டையர் ஆகக்கூடாதென்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களா ?

11-30 a.m.

**திரு. ம. கமலநாதன் :** மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந் தெடுத்தால் அவர்கள் பதவிக்காலம் முடிந்தபிறகு, மறுபடியும் புதிய பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுக்கலாம். தேர்ந்தெடுக்கப்படும் முறையில் ஊழல்கள் இருக்கின்றன. குறிப்பாக எல்லா உறுப்பினர்களும் வாக் களிக்கத் தகுந்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது. பெரும்பாலா னவர்கள் இல்லிடரேட்ஸ். ஊர் மன்றத் தேர்தல் நடக்கும் முறையில் சிம்பல் கொடுத்து போலிங் நடத்துவதுதான் சரி என்று கருதுகிறேன். தேர்தல் நடத்தும் அதிகாரிகள் வேண்டியவர்களாகப் பார்த்து பழைய பஞ்சாயத்தார்களையே மார்க்கு செய்து போட்டுவிடும் நிலைமைதான் இருக் கிறது. புதுமொந்தையில் பழைய கள் என்ற முறையில், தேர்தல் மாற்றப் பட்டிருப்பதாகப் போட்டிருக்கிறதே தவிர, பழைய ஆட்களேதான் வரும் முறை இருக்கிறது. ஆகவே இந்தத் தேர்தல் நடத்துவதை மறுபரி சீலனை செய்து, மார்க்கிங் ஸிஸ்டம் வைத்து தேர்ந்தெடுப்பதுதான் நலம் என்று கருதுகிறேன். அதோடுகூட வோட்டர்களுக்கு [illegible] பாரபட்டி இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும். ஏழைகளாக இருந்தால், பணத்தைக் கையாடுவார்கள். பணக்காரர்களாக இருந்தால் கையாட மாட்டார்கள் என்று சொன்னார்கள். பணம் வாங்கிக் கொடுக்கும் முறை இருக்கிற வரையில், பணக்காரர்களாக இருந்தாலும், ஏழைகளாக இருந்தாலும் பணம் கையாடல் நடக்க வாய்ப்பு வசதி இருக்கத்தான் செய்யும். அதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்றால், கிராம சங்கங்களைக் குறைத்து, அக்ரிகல்சுரல் பாங்குகளை வைத்தால், அவர்களே சரியாக வைத்துக் கொண்டு, சிறந்த முறையில் நடத்த முடியும். ஆனால் இன்றைக்கு புதிதாக கிராம விவசாய சங்கங்கள் ஏற்படுத்த வசதி இல்லை. 1956-ம் வருஷத்திலிருந்து அவற்றை அமைக்கக்கூடாது என்று அகில இந்திய ரீதியில் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். சேலம் மாவட்டத்தைப் பொருத்த வரை 37 சங்கங்கள் நல்ல முறையிலே செயல் பட்டுவருகின்றன. நாலு, ஐந்து சொஸைடிகள் சேர்ந்து ஒரு பாங்கு வைத்திருக்கிறோம். தடை ஏற்பட்டது ஏன் என்றால், பிரதம மந்திரி அவர்களுடைய சொந்த மாநிலத்திலே ஒரு அக்ரிகல்சுரல் பாங்கு வைத்து யாரோ கெடுத்துவிட்டார்களாம். அதனால் அகில இந்தியாவிலும் அக்ரிகல்சுரல் பாங்கு திறக்கக் கூடாது என்று நேரு சொன்னாராம். அதனால் அது மறுக்கப்படுகிறது.

இன்றைக்கு ஃபுல் பைனான்ஸ் ஸ்கீம் என்று ப்ளாக் வாரியாக புகுத்தி இருக்கிறோம். முன்னே பல கடன்களும், தக்காவி கடன்களும் கொடுத்திருக்கிறோம். அதன்காரணமாக இன்றைக்கு ஃபுல் பைனான்ஸ் ஸ்கீம் வசதியை இழந்திருக்கிறார்கள்.

இ.ஓ. கோவாப்பரேஷனைப் பற்றி எல்லா மன்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு ஒர்க்தான் இருக்கிறது. யூனியனிலே கேட்கும் புள்ளி விவரத்தில் கொடுக்கும் வேலை ஒன்றுதான். பஞ்சாயத்து யூனியனிலே ஏதாவது தகராறு வருகிறது என்றால் அது அனேகமாக இந்த இ.ஓ.சி.யால் தான் ஏற்படுகிறது. வேறு வேலை இல்லாத காரணத்தால் தங்களுக்கு ஏதோ முக்கியத்துவம் ஏற்படுகிறது என்ற எண்ணத்தில் இந்த மாதிரியான காரியங்களில் தங்கள் காலத்தை செலவழிக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது.) சேலம் சென்ட்ரல் கோவாப்பரேடிவ் பாங்க் பற்றி ஒரு வார்த்தை. 30 சதவிகிதம் ஓவர் டியூவுக்கு குறைவாக இருந்தால்தான் லோன் சாங்ஷன் செய்யும் அளவுக்கு இருக்கிறது. அதனால் பணம் கட்டினவர்களுக்குகூட பணம் கிடைக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே 30 சதவிகிதம் என்பதை வைத்துக் கொண்டிருந்தால் கண்டிப்பாக பணம் கிடைக்காத நிலைமை தான் ஏற்படும். ஆகவே கொடுக்கப்படும் கடன்கள் எல்லோருக்கும் கிடைக்கும் அளவில் எதாவது ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று கட்டுக் கொள்கிறேன். மேலும் (மணி அடிக்கப்பட்டது).



* **திரு. கே. பி. பழனிசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் கொண்டு வந்திருக்கிற மான்யத்தை ஆதரித்து சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். கூட்டுறவு முறையால் நமது நாட்டின் ஒற்றுமையையும் மக்களுக்கு பல வசதிகளை செய்வதில் கணிசமான முன் னேற்றத்தையும் அடைந்து நல்ல முறையிலே கூட்டுறவு வாயிலாக கடன்களை கொடுத்து உதவி செய்துவருகிறோம். அதே நேரத்திலே கூட்டுறவுத் துறை ஏதோ சில குடும்பக்காரர்கள் தங்களுக்கு சொந்தம் போல் வைத்துக் கொண்டு, இஷ்டப்படி செய்கிறார்கள். நல்லவர்களாக ஏதோ ஒரு சிலர் இருக்கலாம். அப்படி இருந்தாலும்கூட, மொத்தத்தில் கூட்டுறவு துறையில் இருந்து கிடைக்கும் பணம் நல்ல முறையிலே மக்களுக்கு பிரயோஜனம் ஆக வேண்டும். கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் வீடுகளை ரிபேர் செய்யவும், புது வீடுகள் கட்டவும், உண்மையாக பிரயோசனப்படவில்லை. வெகு நாட்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட கூட்டுறவு சட்டத்தை சென்ற ஆண்டு நாம் திருத்தினோம். அப்படி திருத் தினால்கூட இன்றைக்கும் தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்கள் கூட்டுறவிலே சேர வேண்டும் என்றால் மிக்க கஷ்டம் இருக்கிறது. கூட்டுறவுச் சங்கத் திலே, போய்க் கேட்டால், டெபுடி ரெஜிஸ்ட்ராரை பார்க்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவரைப் போய் கேட்டால் அவர் சங்கத்திற்கு போ என்கிறார். ஆகவே ஒரு நபர் கூட்டுறவு சொசைட்டியில் மெம்பர் ஆக சேர பல இடையூறுகள் இருக்கின்றன. சட்டம் இருக்கிறது உண்மை தான். ஆனால் அதை அமுல் படுத்துவதில் தான் கஷ்டம் இருக்கிறது. அதனால் உடனடியாக சர்க்கார் அதை கவனித்து ஏழை எளிய அரிஜன மக்களுக்கு கூட்டுறவு வாயிலாக வசதிகள் ஏற்பட உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போழுது எமர்ஜன்ஸி காரணமாக ஹௌசிங் ஸ்கீம் கொண்டு வர தயக்கம் இருக்கிறது. ஒரு ஊரை எடுத்துக் கொண்டால் கூட்டுறவு முறையிலே ஒரு வீடு கட்ட ஓராயிரம், இரண்டாயிரம் ஆகும் என்றும் ஏ,பி,சி என்று எல்லாம் கேட்டிகரியாக பிரித்து இருக்கிறார்கள். அதைக் கட்ட வேண்டும் என்பதற்கான வழிவகைகளை கட்டாயமாக சர்க்கார் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்ட்ரல் கவர்ன் மெண்ட்டிலிருந்து நிதி உதவி கொடுக்கப்படுகிறது. இந்த வீடு கட்டும் திட்டம் 4,5 தரமாக பிரிக்கப்பட்டு இருக்கிறது. இங்கே நம்முடைய அறிக் கையிலே 20-ஆம் பக்கத்திலே பார்க்கும்போது,

(1) State Urban Housing Scheme, (2) Low Income Group Housing Scheme, (3) Subsidised Industrial Housing Scheme, (4) Middle Income Group Housing Scheme and (5) Rural Housing Scheme

என்று கொடுக்கப்பட்டு இருக்கிறது. எல்லா ஸ்கீம்களிலும், குறிப்பாக கோவை, மதுரை மாவட்டங்களில் அமுலாக்கும் வீடு கட்டும் திட்டங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்படுவது இல்லை. இதை அரசாங்கம் கவனித்து அரிஜன மக்களுக்கு உதவி செய்ய வேண்டும். அப்படி வீடு கட்ட வரும்போது, அரிஜன மக்களுக்கு நிலம் சொந்தம் இல்லை என்று விட்டு விடுகிறார்கள். ஆகவே கூட்டுறவு முறையிலே லாண்ட் அக்வொயர் செய்ய சர்க்கார் பணத்தைக் கொடுத்து வீடு கட்டக் கூடிய வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, கூட்டுறவு முறையிலே நடத்தப்படும், மில்கள், ஆலைகள் நல்ல முறையிலே நடக்கவில்லை. இன்றைக்கு அமராவதி ஷுகர் பாக் டரியை எடுத்துக் கொண்டால் அது அடிக்கடி நின்று விடுகிறது. காரணம் என்னவென்று தெரியவில்லை. பணக் கஷ்டம் காரணமா, டைரக்டர்கள் கவனக்குறைவா, பங்குதாரர்கள் செய்த தவறு, எது என்று தெரிய வில்லை. ஒரு கூட்டுறவு ஷுகர் மில் நஷ்டத்தில் ஓடுகிறது என்றால், அதற்கு யார் பொறுப்பாளி. இந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலே அமராவதி பாக்டரி பல தடவை நின்று விட்டது. கரும்பு குறைவாக வருகிறது என்று சொல்லப்படுகிறது. ஆலைக்கு வேண்டிய கரும்பு கிடைக்க குறிப் பிட்ட சில விவசாயிகளை அழைத்து கரும்பு சாகுபடி செய்ய உதவிகள் கொடுத்து இவ்வளவு தேதிக்குள் இவ்வளவு விளைச்சல் செய்து சப்ளை செய்ய வேண்டுமென்று ஒரு ஏற்பாட்டை செயல் படுத்தினால் தேதி வாரியாக

மில்லுக்குவேண்டும் கரும்பு கிடைக்க வழி வகை ஏற்படும். அந்த மாதிரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரே தடவையில் பயிர் போட்டு, விளைச்சல் ஒரே தடவையில் வந்து, கரும்பை வெட்டும்போது, பத்து மாதங்களுக்கு மேல் ஆவதால் பயிர் கெட்டுவிடுகிறது. ஆதலால், அதற்குத் தகுந்தவாறு உற்பத்தியை உண்டாக்கினால், பயிரிலிருந்து லாபம் கிடைக்கும்.

கூட்டுறவுத் துறையில் விவசாயம் செய்ய வேண்டும், கூட்டுறவு முறையில் நிலங்களை உழுது பயிரிடவேண்டும். அதற்காக காலனிசேஷன் ஸ்கீம் கொண்டுவரவேண்டும் என்று எல்லாம் சொல்கிறோம். இப்பொழுது ஏராளமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் கூட்டுறவு முறையில் ஏழை ஹரிஜன, விவசாயிகளுக்குக் கொடுத்து, காலனிசேஷன் ஸ்கீம் ஏற்படுத்திக் கொடுத்தால் கண்டிப்பாக அவர்கள் நல்ல முறையில் உழைத்து விவசாயம் செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். அப்படி இல்லாமல், விவசாயத்தில் நேரடியாக ஈடுபடாத ஒரு சிலர், ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர், என்று கூட்டுறவுத் துறையில் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு விவசாயத்தில் பிரியம் இல்லாமல், ஏஜெண்டுகளை வைத்துக்கொண்டு, கூலியாட்களை வைத்துக்கொண்டு ஏதோ செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை மாற்றி, உண்மையாக நிலத்தில் உழுது பாடுபடக் கூடிய ஹரிஜன விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் இரண்டு ஏக்கர், வீதம் நிலம் கொடுத்து, அவர்களுக்கும் கூட்டுறவு இயக்கத்தில் சேர வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. ஏ. ஆர். சுப்பைய முதலியார் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு இலாகா மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

இப்பொழுது டெனன்ட்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் 75 சொஸைட்டிகள் இருந்தன. இப்பொழுது மூன்று ஆண்டுகளில் 18 சொஸைட்டிகள் தான் நிறுவப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பண வசதி செவ்வனே கிடைக்கத் தடை இருக்கிறது. கூட்டுப் பண்ணைக்குத்தான் கடன் வசதி மத்திய சர்க்காரால் கொடுக்கப்படுகிறது. டெனன்ட்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டிக்கு கடன் வசதி மத்திய சர்க்காரால் கொடுக்கப்படவில்லை, ஆகவே, கடன் வசதி இல்லாததால், சொஸைட்டி அபிவிருத்தி அடையவோ மேற்கொண்டு சொஸைட்டி உருவாவதோ கஷ்டப்படுகிறது.

டெனன்ட்ஸ்-லாண்ட்லார்டுகளினுடைய ரிலேஷன்ஷிப் சரியாக இல்லாததால் சில இடங்களில் சொஸைட்டிகள் உருவாவது கஷ்டமாக இருக்கிறது. நல்ல உறவு முறை உருவாவதற்கு இப்பொழுதிருக்கும் சட்டம் இடம் கொடுக்கவில்லை. லாண்டுலார்டுகள் சம்மதம் கொடுத்தால்தான் சொஸைட்டி அமைக்க முடியும். சட்டத்தைத் தகுந்தபடி திருத்தினாலொழிய புது சொஸைட்டிகள் உருவாவது கஷ்டப்படும். டெபுடி ரிஜிஸ்திரார் பொறுப்பில் இவைகளை உறுவாக்க விடப்பட்டிருக்கிறது. ஸ்டெப்-மதர்லி ட்ரீட்மெண்ட் இதற்குக் கொடுக்கப்படுவதால், அநேக இடங்களில் சொஸைட்டிகள் ஆரம்பிக்கக் கஷ்டமாக இருக்கிறது. ஜில்லாவுக்கு எத்தனை சொஸைட்டிகள் உருவாக்கவேண்டுமென்ற திட்டமிட்டு, டெனன்ட்ஸ்-லாண்ட்லார்டு ரிலேஷன்ஷிப் நல்ல முறையில் ஏற்படுத்தி, அதிகமான டெனன்ட்ஸ் கோவாபரேடிவ் சொஸைட்டிகள் ஏற்படுத்தினால்தான் அதிக உணவு உற்பத்திக்கு வழி ஏற்படும்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டி தெருவுக்கு ஒன்றாக ஏற்பட்டிருக்கிறது. நேரடியாக வேலை செய்யக்கூடியவர்களுக்கு 5 ந.பை. ரிபேட் கொடுத்தால்தான் தறிக்காரர்கள் பயன் அடைவார்கள். நேரடியாகக் கூலியாட்களுக்கு அந்தத் தொகை இப்பொழுது போய்ச் சேரவில்லை. சொஸைட்டி ஒரு தறிக்கு 8 கஜம் முதல் 10 கஜம்தான் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் 20 கஜம் வரை உற்பத்தி செய்வதாகக் கணக்குக் காட்டுகிறார்கள். தறிக் கணக்கை தவறாகக் காண்பிக்கிறார்கள். எத்தனை தறிகள் இருக்கின்றன என்பதற்கு ஒரு சென்ஸஸ் எடுக்கவேண்டும். அந்த வேலையைக்



கூட்டுறவு இலாகாவினரிடம் கொடுக்கக் கூடாது. வேறு டிபார்ட்மெண்டில் கொடுத்து, சென்ஸஸ் எடுத்தால், உண்மை தெரியும். தறிக் கணக்கை மாஸ்டர்வீவர்கள் கணக்கில் பதிவு செய்து கொண்டு சொஸைட்டி கணக்கிலும் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள். சென்ஸஸ் எடுப்பதை அடுத்த டிபார்ட்மெண்டிடம் ஒப்படைத்தால் உண்மைக் கணக்குத் தெரியும்.

மாஸ்டர் வீவர்கள் கூட்டுறவு சொஸைட்டிக்குத் தலைவராக இருந்துகொண்டிருக்கிறார்கள். ஊழல்கள் ஏற்பட இது ஒரு காரணமாக இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு மானியத்தின் மீது எங்கள் தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு என்றாலே ஒரு நல்ல உறவு என்றுதான் அர்த்தம். தற்பொழுது கூட்டுறவு என்றால், சுயநலக்காரர்கள் தங்களுடைய சுயநலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாகத்தான் அமைந்திருக்கிறதே தவிர, உண்மையிலேயே கூட்டுறவாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மேலை நாடுகளில், கூட்டுறவு என்றால் ஒவ்வொருவருக்கும் கூட்டுறவு மனப்பான்மை இருக்கும். "கோவாபரேடிவ் மைண்டு" என்று சொல்வார்கள். ஆனால், நமது நாட்டிலே அந்த ஸென்ஸ் அவ்வளவாகக் கிடையாது. கூட்டுறவைப்பற்றி பிரசாரத்தின் மூலமாக நல்ல முறையில் மக்களுக்கு எடுத்துரைக்க ஒரு தனி பிரசாரக் குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று நான் ஆலோசனை கூறிக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவு சம்பந்தமாக மேலை நாடுகளில் என்ன என்ன வகைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். எப்படி வெற்றிகரமாக இருக்கிறது என்பதைத் தெரிந்துவர சட்ட மன்றக் குழுவையோ தூது கோஷ்டியையோ மேலை நாடுகளுக்கு அனுப்ப இந்த அரசாங்கம் தயங்கக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு இலாகாவிலே கைத்தறியையும் இணைத்திருப்பது எந்தவகையில் பொருத்தம் என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு கால், கூட்டுறவு சொஸைட்டிகள் மூலமாகக் கைத்தறிகளுக்கு நூல் விநியோகம் செய்யப்படுவதாலும் கூட்டுறவு நூல் நூற்பு ஆலைகளை ஏற்படுத்துவதனாலும், இந்த மானியத்தில் கைத்தறியும் இணைக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆனால், நம் நாட்டிலே மிக முக்கியமான தொழில் கைத்தொழில் ஆகும். அதைத் தனியாக ஒரு மானியமாக வைத்திருந்தாலும்கூட, நலமாக இருந்திருக்கும். கைத்தறியையும் கதரையும் இணைத்து ஒரு துறையாக அமைத்து, அதற்கு டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூமைக் கண்காணிப்பாளராக வைத்துக் கொண்டால் மிகவும் சிறந்த முறையில் அது செயல்படும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

கூட்டுறவு நூல் ஆலைகளுக்கு நமது அரசாங்கம் ஆதரவும் ஊக்கமும் கொடுத்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்திலே, அவை நல்ல முறையில் செயல்படுகின்றனவா என்பது சந்தேகம்தான். ஏனென்றால், தனியார், நடத்தும் நூற்பு ஆலைகளிலே நல்ல தரமான நூல் உற்பத்தி செய்யப்பட்டு லாபகரமான தொழிலாக அது இயங்கி வருகிறது. ஆனால், கூட்டுறவுத் துறையில் இயங்கும் நூற்பு ஆலைகள் அந்த அளவு லாபகரமாக இல்லை. நூல்களின் தரமும் சரியாக இல்லை. கூட்டுறவுத் துறையில் இதனுடைய நிர்வாகத்தில் இருப்பவர்கள் பூராவும் சுயநலத்தோடு நடந்துகொள்ளுகிறார்களே தவிர, உண்மையிலேயே மக்களுக்காகப் பாடுபடவேண்டும். அந்த ஸ்தாபனத்தை நல்ல முறையில் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கமோ, உணர்ச்சியோ அவர்களுக்குக் கிடையாது. சுயநலத்தைக் கருதி, பல வகைகளிலே அவர்கள் நடந்துகொள்கிறார்கள் என்று இந்த சமயத்தில் நான் உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வி. எஸ். எஸ். மணி] [21st March 1964

கூட்டுறவு நூல் நூற்பு ஆலைகளுக்கு அரசாங்கத்தார் அதிக ஆதரவு காட்டினாலுங்கூட, அதைச் சரியான முறையில் கண்காணிக்காததால், மில் நிர்வாகிகள்—பருத்தி வாங்குவதிலும், நூல் விற்பனை செய்வதிலும், நல்ல முறையில் நடப்பதாகத் தெரியவில்லை. அதற்குச் சரியான கண்காணிப்பு செய்யவேண்டுமென்றால், டைரக்டர் ஆஃப் ஹாண்ட்லூ மினுடைய ஒப்புதல் பெற்று வாங்குவதிலும் விற்பதிலும் ஒரு முறையை ஏற்படுத்தினால் நல்ல முறையில் செயல்படும் என்று நான் கருதுகிறேன். கூட்டுறவு அதிகாரிகள் அதில் தலையிட்டால் அது நல்ல முறையில் செயல்படாது என்று நான் கருதுகிறேன்.

கூட்டுறவு நூற்பு ஆலையில் உற்பத்தியாகக் கூடிய நூலைக் கூட்டுறவு வீவர்ஸ் சொஸைட்டிக்குத் தான் கொடுக்கவேண்டும் என்ற முறை இருக்க வேண்டும். தனியார் நடத்தக் கூடிய நூல் நூற்பு ஆலையானது 65 சத வீதம் உற்பத்தியைக் கூட்டுறவு வீவர்ஸ் சொஸைட்டிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்கிற விதி இருக்கிறது. அந்த சொஸைட்டிகள் நூலைச் சரியான முறையில் விநியோகிக்கிறார்களா, நூல் சரியானபடி நெசவாளர்களுக்குப் போகிறதா என்றால், இல்லை. ஆனால், அவர்கள் என்ன என்ன வகையிலோ கணக்குப் போட்டு, சரிக்கட்டி, நூலைத் துர்விநியோகம் செய்கிறார்களே தவிர, உண்மையிலேயே நெசவாளிகளுக்கு நூல் போய்ச் சேருவது இல்லை. தனியார் தறிகளுக்குச் சரியானபடி நூல் கிடைப்பது இல்லை. உயர்ந்த ரக நூல் வாங்க மார்க்கெட்டில் ஒரு கட்டுக்கு, பத்து, இருபது அதிகமாகக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த ரகம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதில்லை. நூல் உற்பத்தியாளர்கள் ஆலைகளில், கைத்தறி நெசவாளிகளுக்கு எந்த ரக நூல், எந்தக் கவுண்ட் நூல் வேண்டுமோ அதை உற்பத்தி செய்வது இல்லை. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கோ, பிற மாநிலங்களுக்கு அனுப்புவதற்கோ எந்த நூல் தேவையோ அதைத்தான் அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் சிட்டம் (ஹாங்க்) இருக்கக்கூடிய நூல்தான் வேண்டியிருக்கிறது. ஆனால், நூல் அதிபர்கள் எல்லாம், நூல் ஆலைகளில் தயார் செய்யும் நூல் க்ராஸ் வீல் என்றும், கோன் என்றும் தைத்து, ஜவுளி உற்பத்தி செய்யக்கூடிய மில்களுக்குத் தகுந்தாற்போல் நூலைத் தயார்செய்கிறார்கள். அந்த வகையில் பார்த்தால் கைத்தறி நெசவாளர்களுக்கு உபயோகமில்லாமல் போகிறது. ஆகவே நம் மாநிலத்தில் இருக்கக் கூடிய நூற்பு மில் அதிபர்கள் நம்முடைய நாட்டில் உள்ள கைத்தறிகளுக்குத் தேவையான நூலையே உற்பத்தி செய்யவேண்டும் என்பதாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல இப்போது நாம் நூலின்மேல் பொது விற்பனை வரியை 1 சத விகிதம் அதிகப்படுத்துகிறோம். எல்லாவற்றுக்கும் வரி போடாமல் இப்படி 1 சத வீதம் பருத்தி, பருத்தி நூலுக்கு அரசாங்கம் வரி போட முன் வந்திருப்பதினால் கைத்தறி நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இதன் மூலம் நமக்கு 1 கோடி ரூபாய் வருமானம் வரும் என்றால் அந்த ஒரு கோடி ரூபாயை நிர்வாகத்தில் சிக்கனம் பண்ணுவதன் மூலமாகக் கூட மிச்சப்படுத்திவிட முடியும். ஆகவே இந்த வரியைப் போடக் கூடாது என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வெ. எல்லம நாயுடு :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964–65-ஆம் ஆண்டுக்காக கொண்டுவரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடன் வாங்கும் சங்கங்கள் கிராமங்களிலே அதிகமாக ஏற்பட்டு வருகின்றன. கிராமவாசிகள் கூட்டுறவுத் துறையில் அதிகமாக நம்பிக்கை வைத்து, அவர்களுடைய விவசாய வேலைகளுக்கு அடிக்கடி கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கி நல்ல முறையில் அவற்றைத் திருப்பியும் கொடுத்து வருகிறார்கள். அதுபோலவே தொழிலாளர்களுக்கும் பல முறையில் நாம் கூட்டுறவு சங்கங்களை அமைத்துக் கொடுத்து உதவி செய்து வருகிறோம். சிறந்த முறையில் நடைபெறும் இந்த ஸ்தாபனமானது நல்ல மேல் பார்வையில், நல்ல அமைச்சராலே பராமரிக்கப்பட்டு வருகிறது என்பதில் கொஞ்சமும் சந்தேகம் இல்லை.



21st March 1964] [திரு. வெ எல்லம நாயுடு]

இப்போது விவசாயிகளுக்குள்ள ஒரு கஷ்டம் என்னவென்றால் 500 ரூபாய் வரையிலும் தான் அவர்கள் ஜாமீன் பேரில் கடன் வாங்க முடிகிறது. ஐந்நூறுக்கு மேலே போனால் அதற்கு அவர்கள் சொத்து ஈடுகட்டவேண்டியிருக்கிறது. அதற்காக வில்லங்க சர்டிபிகேட் பெற வேண்டியதாக இருக்கிறது. அதற்குள்ள கட்டணத்தை 12½ ரூபாயில் இருந்து 25 ஆக மாற்றிவிட்டதாகத் தெரிகிறது. ஒரு மாடு வாங்கவேண்டுமென்றால்கூட 500 ரூபாய்க்கு மேல் ஒரு விவசாயிக்குத் தேவைப்படுகிறது. 500 ரூபாய்க்கு மேல் கடன் வாங்குவதற்கு வில்லங்க சர்டிபிகேட் வேண்டும் என்கிறார்கள். இதனால் கட்டணமும், கஷ்டமும் அதிகமாக இருக்கிறது. ஆகவே கிராமச் சங்கங்கள் மூலமாக ஆயிரம் ரூபாய் வரையிலும் ஜாமீன் பேரிலேயே கடன் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களையும், கூட்டுறவு பதிவாளர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கடன் வாங்குவதில் பாரபட்சம் காட்டப்படுகிறது என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். அது சரியல்ல. பாரபட்சமின்றித்தான் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் கடனைத் திருப்பித் தருவதில் சிலர் மிகவும் நாணயமாக இருக்கிறார்கள். சில இடங்களில் இருந்து கொடுத்த பணத்தை வாங்குவது மிகவும் கஷ்டமாகப் போகிறது. இத்தகையவர்களுக்கு மறுமுறை கடன் வழங்கும் போது சங்கம் யோசிக்கிறது. அதனால் பாரபட்சம் காட்டுவதாகாத் தப்பாக எண்ணிக்கொண்டு சொல்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் கூடச் சொன்னார் கடன் வாங்கினால் சரியான தவணைகளில் திருப்பிக் கொடுக்கப்படுகிற பழக்கம் வரவேண்டும். அப்போதுதான் கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து நல்ல நன்மையைப் பலருக்கும் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும். சட்டமன்றத்தில் இருப்பவர்களும், அதிகாரிகளும் இவ்வாறு கொடுத்த கடனை ஒழுங்காகத் திருப்பித் தரும் பழக்கத்தை மக்களிடத்தில் ஏற்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். கூட்டுறவு சங்கங்களின் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்குப் பலவிதமான சலுகைகளைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். கூட்டுறவு சங்கங்களில் சேராத நெசவாளர்கள் சிறிது கஷ்டப்படுகிறார்கள். பத்துப் பதினைந்து ரூபாய் வரை கூட சமயத்தில் பெற முடியாது தவிக்கிறார்கள். குறிப்பாக எனது தொகுதியில் இரண்டாயிரம் குடும்பங்கள் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஏதாவது நிவாரணம் செய்தாக வேண்டும். அவர்களையும் கூட்டுறவு சங்கங்களின் கீழ்க் கொண்டுவந்து அவர்களுக்கும் கடன் வழங்குவது நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கூட்டுறவு முறையில் விவசாயம். இதைப்பற்றி நான் ஏன் சொல்ல விரும்புகிறேன் என்றால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நம்முடைய உணவு உற்பத்தி இலக்கை நாம் பெற்றாக வேண்டும். திரு. சா. கணேசன் அவர்கள் கூட்டுறவு விவசாய முறையினால் தான் விவசாய உற்பத்தி குறைந்துவிட்டதாகச் சொன்னார்கள். அது தவறான கருத்து என்று எடுத்துச் சொல்கிறேன். அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் தான் விவசாயம் செய்ய வேண்டுமென்று யாரையும் வற்புறுத்தவில்லை. விவசாயிகளுக்கு 5 ஏக்கர், பத்து ஏக்கர் என்று உச்ச வரம்பு வைத்தார்கள். அதனால் விவசாயம் கெட்டுப்போய்விட்டது என்று சொல்லுவது தவறு. விவசாயிகளே தான் தங்களுக்குள் கூட்டுறவு சங்கங்களை அமைத்துக் கொண்டு இன்ன இன்ன வகையில் எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று அரசாங்கத்தை அணுகுகிறார்கள். அரசாங்கமும் ஒப்புக்கொண்டு அதற்கு ஆதரவு அளித்தது. அது அப்படி இப்படி என்று சொல்வதைக் காட்டிலும் அதற்கு ஆதரவு அளிப்பது சாலச் சிறந்தது என்று சொல்கிறேன். அதனால் உணவு உற்பத்தி குறைந்துவிட்டதாகச் சொல்வது அவ்வளவு சரியல்ல, அது உண்மையும் ஆகாது என்பதை நான் உங்கள் மூலமாகச் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். அங்கமுத்து நாயக்கர் :** மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் 12-00 noon.
அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

நம் மாகாணத்தில் கூட்டுறவு முறையானது நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. சுதந்திரத் திற்கு முன்னால் நமது தமிழ் நாட்டில் ஆறு கோடி ரூபாய் தான் கூட் டுறவுச் சங்கங்களின் மூலமாக விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு சேலம் ஜில்லாவில் மட்டுமே ஏழு கோடி ரூபாய் விநியோகிக்கக்கூடிய அளவுக்கு அந்த துறை வளர்ந்திருக்கிறது. எங்க ளுடைய சென்ட்ரல் பாங்குத் தலைவர் அவர்கள் முழு நேர ஊழியராக இருந்து பணியாற்றிக்கொண்டு வருவதால் தான் தமிழ் நாட்டிலேயே முன் மாதிரியாக சேலம் ஜில்லா விளங்குகிறது. மெம்பர்களைச் சேர்ப்பதிலே ஒவ்வொரு பஞ்சாயத்தாரும், டைரக்டரும் இவ்வளவு மெம்பர்களைச் சேர்க்க வேண்டுமென்று நிர்ணயித்து அத்தகைய முறையில் மெம்பர்கள் சேர்க்கப் படுகிறார்கள். இது பணக்காரர்களைத்தான் வாழ வைக்கிறது என்று நண்பர் அவர்கள் சொன்னார்கள். ஏழைகளுக்காக நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இது ஏழைகளுக்கு மிகவும் அத்தியாவசியமானது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகளுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுத்திருந்தால் கூட, அவர்களுக்குக் குறுகிய காலக் கடன்களைத்தான் அதிகமாகக் கொடுத்து வருகிறார்கள். விவசாய உற்பத்தியை நல்ல முறையில் பெருக்க வேண்டுமானால் அவர்களுக்கு நீண்ட காலக் கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். நீண்ட காலக் கடன் மூன்று வருஷத் தவணையாவது இருக்க வேண்டும். அவ்வாறு கொடுக்க வழியில்லையென்றால் ரிசர்வ் பாங்கை யாவது வற்புறுத்தி அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது கூட்டுறவு முறையில் விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். சேலம் ஜில்லாவிலும் சில இடங்களில் செயல்பட்டு வரு கிறது. அந்த முறை நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்றால் அரசாங்கம் இன்னும் நல்ல முறையில் ஒத்தாசை செய்யவேண்டும். 15, 20 வருஷ காலமாக உழுதுகொண்டிருக்கும் விவசாயிகளை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி அந்த நிலங்களை மற்றவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அவ் வாறு உழுதுகொண்டிருப்பவர்களுக்கே அந்த நிலங்களையெல்லாம் பட்டா செய்து கொடுக்க வேண்டும். அந்தத் தரிசு நிலங்களில் கூட்டுறவு முறை யில் விவசாயப் பண்ணைகள் ஏற்படுத்தினால் தொல்லையும் இருக்காது; கஷ்டமும் இருக்காது.

எங்கள் ஊரில் சார்வாய் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு கூட்டுறவு எண்ணை ஆட்டும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். சாரவாய் என்ற கிராமத்தில் கூட்டுறவு தொழிலாளர்கள் குடியிருந்த 40 வீடுகள் எரிந்து சாம்பலாகப் போய்விட்டது. அந்த வீடுகளைச் செப்பனிட கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் கொடுத்து உதவ வெண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. தியாகராஜன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியினரால் கொண்டு வரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசாங்கம் கூட்டுறவுக்காகப் பல லட்சக் கணக்கான ரூபாய்களை வழங்கியிருப்பது உண்மைதான் என்றாலும், அவை எல்லாம் சரியாக நிர்வகிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த மன் றத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அண்மையிலே எங்களது பகுதியைச் சேர்ந்த அமைச்சர் ராமையா அவர்கள் புதுக்கோட்டையில் பொதுக்கூட்டத்தில் பேசும் போது "நீங்கள் தேர்ந்தெடுத்த எம்.எல்.ஏ. சட்டசபையில் எதுவேண்டுமானாலும் பேசலாம் என்று நினைத்துக்கொண்டு, இந்த ஊரிலே உள்ள சென்ட்ரல் பாங்கியில் ஊழல் இருப்பதாக பேசுகிறார்" என்று கூறினார். நான் அமைச்சர் அவர்களுக்குச் சபாநாயகர் மூலமாகக் கூற ஆசைப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விசாரணை நடத்தத் தயாராக இருந்தால் நான் அவற்றை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். சட்டசபையிலே வாயிலே வந்ததைப் பேசுவதாக அமைச்சர் அவர்கள் பொதுக்கூட்டத்திலே சட்ட மன்றத்தின் கௌரவத் தைக் குறைக்கும் வகையில் பேசியிருக்கிறார்.



புதுக்கோட்டை பகுதி பூராவும் கூட்டுறவு என்ற பெயராலே காங்கிரஸ் காரர்கள் செய்கிற அட்டூழியம் சொல்லும் தரமல்ல. அதைக் குறித்து ஆர்பிட்ரேஷன் போட்டும் எட்டு மாதங்களாக விசாரிக்காமல் கடை மாதத்தில் நான் அட்ஜர்ன்மெண்ட் கேட்டும்கூட எக்ஸ் பார்ட்டியாக தீர்ப்பு செய்திருக்கிறார்கள். அதைப்பற்றி ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு அப்பீல் செய்திருந்தேன். மறுபடியும் 100 ரூபாய் கட்டினால்தான் அப்பீல் எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்லிவிட்டார்கள் எப்படியிருப் பினும் நல்ல முறையில் நியாயம் வழங்கப்பட மாட்டாது என்ற காரணத் தால் அதை விட்டுவிட்டேன். இதைப்பற்றி யெல்லாம் போன தடவை பட்ஜட் கூட்டத்தில்கூட விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் கவனித்து இருப்பார்களேயானால் அந்தப் பகுதியில் உள்ள கோவாப்பரேட்டிவ் சொஸைடிகள் நல்ல முறையில் நடப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். சென்ட்ரல் பாங்கு நல்ல முறையில் நடக்கவில்லையென்று சொன்னால் அதிலே உள்ள லாப நஷ்டம் அமைச்சர் அவர்களுக்கும் ஒன்றுதான்; எனக்கும் ஒன்றுதான். அமைச்சர் அவர்களுக்கு கேவலம் வரக்கூடாது என்ற அளவிலேதான் நான் பாடுபடுகிறேன். என்னுடைய சொந்த நலனுக்காக அல்ல. நான் இதைப்பற்றி பேசியதற்காக அந்த சென்ட்ரல் பாங்குத் தலைவரை தூண்டி விட்டு என்மீது மான நஷ்ட வழக்குப் போட்டிருக்கிறார்கள். எந்த அளவுக்கு அந்த கோவாப்பரேட்டிவ் சொஸைடியிலே இருப்பவர்கள் இருக் கிறார்கள் என்பதை இந்த மன்றம் தயவுசெய்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், புதுக்கோட்டை பகுதி பூராவும் கோவாப்பரேட்டிவ் சொஸைடி களில் ஊழல்கள் அதிகமாக இருக்கின்றன. கையாடல்கள் நடந்திருக் கின்றன. அதை விசாரிக்க ஒரு குழு அமைத்தால் அதையெல்லாம் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அமைச்சர் தயார்தானா? அதை விட்டுவிட்டு அமைச்சர் அவர்கள் பொதுக்கூட்டத்தில் பொறுப்பற்ற முறை யில் நாலாந்தர பேச்சாளியைப்போல் பேசியது வருந்தத் தக்கது. எங்க ளுக்கும் பொதுக் கூட்டங்களில் தாழ்த்திப் பேசத் தெரியும். ஆனால் அவ்வாறு தாழ்த்திப் பேச நாங்கள் தயாராக இல்லை. இதைப் பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி அமைத்து விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கூட்டுறவு முறை மிகவும் நல்ல முறை, உயர்ந்த முறை, சர்வாதிகாரத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையில் இருக் கின்ற முறை என்று சொன்னால், அது மிகையாகாது. நாட்டிலே ஒரு தொழில் ஒருவரிடத்திலும், ஒரே இடத்திலும், குவிந்துபோகாமல் இருப்ப தற்கு இது ஏற்ற முறை என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். ஆனால் எதிர்க் கட்சி அங்கத்தி னர்கள் பேசும்போது இதிலே ஊழல் இருக்கிறது என்று பேசினார்கள். ஊழல் இருக்கிறது என்று சொன்னால் எல்லா இடத்திலும் இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஒரு சில சொஸைடிகளிலே ஒரு சில குறைகள் இருக்கலாம். அதைத்தான் ஊழல் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் குறிப் பிடுகிறார்கள். அதைப் பற்றிப் பேசும்போது நம்முடைய நாட்டிலே தேசீய நாணயமே குறைந்துவிட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. அதன் காரணமாகத்தான் கூட்டுறவு முறையிலும் ஊழல் இருக்கிறதே தவிர, கூட்டுறவு முறையில் மட்டுந்தான் ஊழல் என்று சொல்வதற்கில்லை. தேசீய நாணயத்தை உயர்த்துவதில் அத்தனைக் கட்சிகளும் கொள்கையாக் வைத்துக்கொண்டாலன்றி இந்த நிலைமைகளைப் போக்க முடியாது. கூட்டுறவு ஒரு நல்ல முறையாக இருந்தாலும், முறையோடு கவனிக்காத காரணத்தால் நஷ்டம் ஏற்படும் நிலைமை இருக்கிறது.

தனிப்பட்டவர்கள் தங்கள் சொந்த வேலைகளை எப்படிக் கவனிக்கிறார் களோ அதே போல் கூட்டுறவு முறையில் இருக்கிற டைரக்டர்களும், மற்ற வர்களும், கூட்டுறவு வேலையைத் தங்கள் சொந்த வேலையாக நினைத்துக் கொண்டு வேலைகளைச் செய்தால் எவ்வித கஷ்டமோ அல்லது நஷ்டமோ

வருவதற்கு வழியில்லை. ஆகவே, இம்மாதிரியான மனப்பான்மை ஏற்பட வேண்டும். கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அவை நடைமுறையில் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால் நடைமுறையில் ஏதாவது சில கோளாறுகள் ஏற்படும் பட்சத்தில் அதை உடனடியாக அதிகாரிகள் கவனிக்க வேண்டும். ஆனால், குறைகள் ஏற்பட்டு, நஷ்டம் ஏற்பட்டு, அந்த சொஸைட்டி மூடும் வரை அதைக் கவனியாதிருந்து விடுவதால்தான் ஒரு சில நெசவாளர் சங்கங்கங்கள் மூடப்படுகிறது என்ற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, ஏற்படுகிற குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதில் அதிகாரிகள் தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்களில் குறுகிய காலக் கடன் மூன்று மாதங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. மிகக் கஷ்டப்பட்டுத்தான் மூன்று மாதங்களுக்குள் அதை திரும்பக் கொடுக்க வேண்டியிருப்பதால் இந்த மூன்று மாதம் என்பதை ஆறு மாதமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவில் வராத நெசவாளர்களுக்கு பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஒன்று ஏற்படுத்த இரண்டு மூன்று வருடங்களாக ஆலோசனை செய்து இப்போதுதான் முடிவு எடுக்கப்பட்டு அதன் மூலம் கூட்டுறவில் வராத நெசவாளர்களுக்குப் பயன்படும் முறையில் அதை ஏற்படுத்தப் போகிறார்கள். அதற்காக யோசனை செய்து வேண்டிய வேலைகள் செய்த அதிகாரிகளுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கூட்டுறவுத் துறை பல துறைகளில் வளர்ந்து நாம் சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதற்கு அது உபயோகமாக இருக்கிறது. நல்ல முறையில் அத்துறை பெரும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஏற்பட்டிருக்கிற வளர்ச்சிக்கு தக்கவாறு இலாகா கண்காணிப்பும் அதிகத் தேவையாக இருக்கிறது. அது பல துறைகளிலும் வளர்ந்திருப்பதால் சில குறைகள் ஏற்படுகின்றன. அவற்றையும் நன்கு கண்காணித்து அக்குறைகளைப் போக்க தக்க ஏற்பாடுகளைக் கூட்டுறவுப் பதிவாளர் அவர்கள் செய்ய வேண்டும். தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் 74 கூட்டுறவுப் பண்ணை விவசாயிகள் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எதிர்பாராத வெள்ளம் காரணமாகவும், புயல் காரணமாகவும், 1370–ம் பசலியில் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டு நெல் அளக்க வேண்டியது பாக்கி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கமிஷனரும், கமிஷனர் செய்ய வேண்டுமென்று அரசாங்கமும் கூறுகிறது. விவசாயத்தை விருத்தி செய்ய இந்தக் கூட்டுறவுப் பண்ணைகள் பயன்பட்டு வருகின்றன. பண்ணைகளின் கீழ் பல விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் கோவிலுக்கு அளக்க வேண்டிய நெல் அதிகப்படியாக பாக்கியிருக்கிறது. மூன்று ஆண்டுகளாக பெரு மழை காரணமாகவும், புயல் காரணமாகவும், சேதமும், நஷ்டமும் சங்கங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அதை அரசாங்கமே கவனித்து விவரம் கேட்டு தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சங்கங்களுக்கு ஒரு பீல்ட்மான் இருக்கிறார். இந்தச் சங்கங்களைக் கேட்டால் அவர்களுக்கும், இவர்களுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லாத நிலைதான் இருக்கிறது. கண்காணிக்க இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவர்கள் இந்தச் சங்கங்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். க்ரீன் மான்யூர் எரு போன்றவை, கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. அவற்றை காலாகாலத்தில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மார்க்கடிங் சொஸைட்டியிலிருந்து கடன் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது ரிசர்வ் பாங்கிலிருந்து சேரு பத்தாயங்களில் வைக்கும் நெல்லுக்கு கடன் கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். முன்பு சேரு பத்தாயம் மூலம் கொடுத்து வந்தது வசதியாக இருந்தது. ஆகவே முன்பு இருந்தது போல் கொடுத்தால் வசதியாக இருக்கும்.

கூட்டுறவு யூனியன்கள் இருக்கின்றன. அதற்கு அதிக அதிகாரம் மத்திய பாங்கில் கொடுக்க வேண்டும்.





எரு போன்றவற்றை இப்போதிருக்கக்கூடிய விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் வழி விநியோகம் செய்யப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, ஆடிட். இந்த வருட ஆடிட் அடுத்த வருட முடிவிற்குள் செய்ய வேண்டும். இரண்டு ஆண்டுகள் சென்ற பிறகு ஆடிட் செய்து குறைகளைத் தெரிவித்தால், நிவர்த்தி செய்வதற்கு அதனால் காலதாமதம் ஏற்படுகிறது.

க்ஷேம நிதி சங்கங்களுக்கு 3½ சத விகித வட்டி மத்திய பாங்கு கொடுக்கிறது. அதை குறைந்தது 4 சத விகிதம் என்றாவது கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

கிராமங்களில் வீடு கட்ட கடன் கொடுக்கப்பட்டு வந்தது நிறுத்தப்பட்டிருக்கிறது. வீடு கட்டும் கிராம சங்கங்களுக்குக் கொடுத்தால் வசதியாக இருக்கும்.

நில அடமான பாங்குகளில் சீக்கிரமாக கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

"கிராம நலம்" பத்திரிகை போன்று, "கூட்டுறவு" என்ற சஞ்சிகை நடக்கிறது. கால்வாசி சங்கங்கள்கூட அதை வாங்குவதில்லை. ஆகவே எல்லா சங்கங்களும் அதை கண்டிப்பாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பஞ்சாயத்து ஸ்தாபனங்களில் கன்ஸல்டேடிவ் கமிட்டி ஏற்படுத்தி குறைகளை எல்லாம் தெரிந்து நிவர்த்திக்க—அடிக்கடி ஜீ.ஓ. எல்லாம் மாற்றி போடுகிறார்கள். அவ்வாறு கூட்டுறவு இலாகாவிலும் அநேக குறைபாடுகள் இருக்கிறதை மறைப்பதற்கில்லை. ஆகவே பொதுஜன கூட்டுறவு ஊழியர்கள், சட்டமன்ற அங்கத்தினர்கள் முதலியோர் கொண்ட ஒரு கமிட்டியில் குறைகளைக் கவனித்து அவற்றை நீக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரிக்கிறேன்.

* **திரு. சோ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் கூட்டுறவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மானியத்தின் மீது எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரால் கொண்டுவரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுவாக கூட்டுறவு ஸ்தாபனம் நல்ல முறையில் இயங்குவதற்கு இன்று இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் நல்லபடி முயற்சி எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த முறையில் சென்ற அக்டோபர் மாதம் புதிதாக கூட்டுறவு துறைபற்றி சில சட்டங்களைத் திருத்தியிருக்கிறார்கள். ஆனால், அந்தச் சட்டமானது, அந்தந்த சங்கங்களுக்கு ஒரு முடிவான நிலைமையையும் இன்னும் தெரியப்படுத்தவில்லை. அதை தெரியப்படுத்த வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தலைவரின் (பிரசிடெண்ட்) கால வரம்பு மூன்று ஆண்டு காலத்திற்கு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், இப்படி மூன்று ஆண்டு தொடர்ந்து இருந்துவிட்டு மீண்டும் தேர்தல் வரும்போது தலைவர் பதவிக்கு நிற்கலாமா நிற்கக் கூடாதா என்கின்ற பிரச்னை இருந்துகொண்டிருக்கிறது. இதன் முடிவு என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று நம்புகிறேன். குறிப்பாக, மூன்று ஆண்டு பதவி வகித்துவிட்டு, மீண்டும் நடைபெறுகின்ற தேர்தலில் தலைவர் பதவிக்காக மீண்டும் போட்டியிடுகிறார் என்றால், அவர் நிற்கக் கூடாது என்று சட்டத்தை நிர்ணயிப்போமானால், அந்தத் தலைவர் தனக்கு உள்ள ஜீவாதார உரிமை பாதிக்கப்படுகிறது என்று, தேர்தலில் எனக்கு நிற்பதற்கு உரிமை இருக்கிறது என்று குறிப்பிட்டு கோர்ட்டுக்கு செல்வதற்குரிய வாய்ப்பு இருக்கிறது என்ற நிலைமையும், இப்போது இருந்துகொண்டிருக்கிறது. அப்படி தேர்தல் என்று வைக்கின்ற நேரத்தில் மூன்று வருடம் கால வரம்பு என்று சொல்லும்போது, யார் வேண்டுமானாலும் திரும்ப போட்டியிட்டு வரலாம் என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. சோ. ஆறுமுகம்] [21st March 1964

அதே சமயத்தில், கிராம சொஸைட்டிகளில், பல தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள். அதை சென்ட்ரல் பேங்குகளுக்கும், இதற்கு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கும், அல்லது மற்றவர்களுக்கோ அனுப்புகிறார்கள். அந்தத் தீர்மானத்தின் நகல் ஒன்று பாங்குக்கு அனுப்ப வேண்டுமென்றால், திரும்பவும் எல்லா டைரக்டர்களும் கையெழுத்துப் போட்டுத்தான் அனுப்ப வேண்டும் என்று விதி இருப்பது சரி இல்லை. பிரசிடென்ட், உறுப்பினர்கள் இருந்து, தீர்மானத்தை நிறைவேற்றிய பின்பும் அதனுடைய நகலை அனுப்புவதற்கு எல்லோரும் கையெழுத்து போடவேண்டும் என்று சொல்லும்போது, ஒன்றிரண்டு நாட்கள் அவசியமில்லாமல் நிர்வாகத்தில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே இத்தகைய முறைகளை மாற்ற பிரசிடென்ட் மட்டும் நகல்களில் கையெழுத்திட்டு அனுப்பினால் போதும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் சென்ற ஆண்டில் வட்டி கொடுக்கின்ற விஷயத்தில் 100-க்கு 6 ரூபாய் 25 புதுக் காசுகள் ஆண்டு ஒன்றுக்கு என்று வசூல் செய்துவந்தோம். இப்போது இந்த ஆண்டு 100-க்கு 7 ரூபாய் 25 புதுக் காசுகள் வீதம் வசூல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். குறைந்த வட்டியில் பணம் கடன் கொடுத்தால்தான் பொதுமக்கள் காலாகாலத்தில், இதை வாங்குவதற்கும், திருப்பிக் கொடுப்பதற்கும், வசதியாக இருக்கும். ஆகவே சர்க்கார் முன்பு இருந்தது போலவே, 100-க்கு 6 ரூபாய் 25 புதுக் காசுகள் என்ற வட்டியையே ஏற்படுத்த வேண்டும். இதைவிடக் கூடுதலாக வாங்குவது சரியல்ல, குறைந்த அளவிலே வட்டி வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இன்றைய நிலையில் ஒவ்வொரு சொஸைட்டிகளிலும் ஒரு பயிற்சி பெற்ற கிளார்க்கை நியமித்திருக்கிறார்கள். அவர்களுக்கு 80 ரூபாய் தான் ஊதியமாக கொடுக்கப்படுகிறது. இவ்விதம் முழு நேரமும் வேலை செய்துகொண்டிருக்கின்ற இந்த கிளார்க்குக்கு 80 ரூபாய் சம்பளம் போதுமா என்று பார்த்து, அவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையில், இப்போது சொல்லப்படுகின்ற குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து மேலும் நல்ல முறையில் இந்த இயக்கம் வளர்ச்சியடையச் செய்வார்களேயானால், அடுத்த ஆண்டு இந்த மானியம் வருகின்ற காலத்தில் நாங்கள் வரும்போதே கை நிறைய சர்க்கரை கொண்டு வந்து கனம் அமைச்சர் அவர்களின் வாயில் கொட்டுவோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **டாக்டர் பா. நடராஜன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த கூட்டுறவு மானியத்தை ஆதரிக்கின்ற நிலையில் ஒன்றிரண்டு கருத்துக்களைத் தங்கள் முன் வைக்கலாம் என்று நினைக்கிறேன். கூட்டுறவு இயக்கம் நமது நாட்டில், சிறப்பாக தமிழ் நாட்டில், ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் ஆகின்றன. இந்த வருஷம் சஷ்டியப்த பூர்த்தி நடத்த வேண்டிய வருஷம். அறுபது ஆண்டு என்பது முதுமைப் பாதைக்கு உறுதி செய்துகொள்வது என்பதுதான் நம்முடைய நாட்டிலுள்ள ஒரு நிலை. இந்த முறையில் இந்த இயக்கத்தில் சிறிது முதுமை தட்டிவிட்டதோ என்று சொல்லுகின்ற அளவில் சில நடவடிக்கைகள் இருக்கின்றன என்று சமீப காலத்தில் புரூக்ளின் இன்ஸ்டிட்யூஷன் என்கின்ற அமெரிக்க ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் சமூகப் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி ஆராய்ச்சி செய்த அறிஞர் ஒருவர் சொல்லிப் போனார். இது நமது தமிழ் நாட்டை மட்டும் சொன்னதல்ல. பொதுவாகவே, நாடு முழுவதும் நடக்கும் இந்த இயக்கம் பற்றிச் சொன்னது. முதுமை வருகின்ற பொழுது மக்களுக்குப் புது சிந்தனை சக்தி அதிகமாக எழுவதில்லை. "ரொட்டீன்" என்ற முறையில் பதிந்த தடத்திலேயே நடக்கும் ஒரு நிலைமைதான் இருக்கிறது. அந்த முறையில்தான் இந்த இயக்கம் செயல்படுகிறது. ஏனென்றால், பல புதுப் புது சோதனைகள் இன்று வந்திருக்கின்றன. சமூகப் பொருளாதாரத் துறையில், அந்த சோதனைகளுக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் கூட்டுறவு இயக்கம் அமையவில்லை. அந்த வகையில் அமைவதற்குரிய ஆற்றலும், துடிப்பும் இந்த இயக்கத்திற்கு



21st March 1964] [டாக்டர் பா. நடராஜன்]

இன்று இல்லை என்றே சொல்லப்படுகிறது. இன்று உணவுப் பிரச்னை பெரிய பிரச்னையாக இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு வழிவகை காண கூட்டுறவு இயக்கத்துக்கு முக்கியமான பொறுப்பு இருக்கிறது. அது போலவே விற்பனை, விநியோகம் என்கின்ற பெரிய பிரச்னைகள் இருக்கின்றன. இதில் கூட்டுறவு இயக்கத்துக்கு பெரும் பங்கு இருக்கிறது. கூட்டுறவு பண்ணைகள் அமைத்தல் போன்ற இன்னும் பலப்பல துறைகளில் எல்லாம் கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் செயல்படுமானால், உணவு முனையில் நல்ல வெற்றியைக் காண முடியும். அந்த அளவுக்கு, அறைகூவி அழைக்கின்ற பிரச்னைகளுக்கு சவால் விடுகின்ற அளவுக்கு இன்றையதினம் கூட்டுறவு இயக்கம் இல்லை என்பது வருந்தத் தக்கது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி நேஷனல் டெவலப்மென்ட் கவுன்ஸிலில் முதலமைச்சர்கள் எல்லோரும் கூடி கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் விரிவடைய வேண்டும் என்று பேசினார்கள். அதிகமான அளவு அங்கத்தினர்களைச் சேர்க்க வேண்டும் என்று சொன்னார்கள். கிராமங்களில் அதிகப்படியான கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். சர்வீஸ் கூட்டுறவு அதிகமாக ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். இப்படி பல அபிவிருத்திகள் பற்றி இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் பேசப்பட்டது. இப்போது நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நடுப் பகுதியில் இருக்கின்றோம். கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பொதுவாக பலன் அடைந்திருக்கிறோம் என்று சொன்னாலும்கூட, உண்மையான நிலைமை என்ன என்று பார்க்கும்போது, முன்னேற்றம் மிகக் குறைவே. சமீபத்தில் "ரூரல் கிரெடிட் சர்வே"யின் 4-வது சுற்றாக ரிசர்வ் பாங்கின் அறிக்கை வந்திருக்கிறது. அதில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், தஞ்சாவூரில் இன்னும் விவசாயிகளுடைய கடன்களில் 5 சத விகிதம்தான் கூட்டுறவு இயக்கத்தினால் சமாளிக்கப்பட்டுள்ளது என்றும், அரசாங்கம் கொடுப்பதே 15 சத விகிதம் இருப்பதாகவும், பாக்கி 80 சத விகிதம் கடனை வெளியேயுள்ள லேவாதேவிக்காரர்கள், பெரிய உள்ளூர் பணக்காரர்கள் இவர்கள் தான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் கூட்டுறவு சங்கங்களை நடத்துகின்றவர்களை எடுத்துக்கொண்டால், 100-க்கு 80 பேர்கள் நடுத்தரம் அல்லது மிகப் பெரிய விவசாயிகளாகத் தான் இருக்கிறார்கள். சிறிய விவசாயிகளுக்குக் கூட்டுறவு சங்கங்களினால் விரிவான பலன் ஏற்படவில்லை என்று அந்த அறிக்கையில் காணப்படுகிறது. 12-30 p.m.
இருபது சத விகிதம்தான் கூட்டுறவு இயக்கத்திலிருக்கும் சிறிய விவசாயிகள். இந்த நிலைமைதான் 10 ஆண்டுகளுக்கு முன்னும் இருந்தது. "ரூரல் க்ரெடிட் சர்வே" முதலில் 8 ஆண்டுகளுக்கு முன் அறிக்கை செய்தது. இப்போது நிலைமை சற்றும் திருந்தவில்லை. விளைபொருள் விற்பனை சங்கங்கள் ஏமாற்றம் தரும் நிலையில் இருக்கின்றன. 20 கோடி ரூபாய் விளைபொருள் விற்பனையை இலக்காக—டார்கெட்டாக—நாம் மூன்றாவது திட்டத்திற்கு குறித்திருக்கிறோம். 20 கோடி ரூபாய் பெறுமான விளைபொருள்களை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் வாங்குவது என்பதை நமது குறியாக வைத்திருக்கிறோம். ஆனால் இன்று நம்முடைய நாட்டில் விவசாயப் பொருள் எவ்வளவு உற்பத்தி ஆகிறது. அதனுடைய விலை என்ன, அதில் 40 சதவீதம் மார்க்கெட்டபிள் ஸர்ப்ளஸ்—விற்பனைக்கு வருகிற உபரி—என்று பார்த்தால் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் இலக்காக இருக்கவேண்டும். விற்பனை சங்கங்களுக்கு 300 கோடி ரூபாய்க்கு விளைபொருள்களை வாங்கக்கூடிய ஆற்றல் இருக்கவேண்டும். ஆனால் நம்முடைய உச்ச வரம்பு 20 கோடி ரூபாயாகத்தான் இருக்கிறது. திடீரென்று இதைத் திருத்திவிட முடியாது. எத்தனையோ ஆண்டுகளாக இருக்கிற கூட்டுறவு இயக்கம் கடன் கொடுப்பதில் 5 சத வீதம்தான் தொட்டிருக்கிறது என்றால், 20 கோடி ரூபாய் இலக்கிலிருந்து 300 கோடி ரூபாய் இலக்கைப் பிடிக்க மிகுந்த தூரம் இருக்கிறது. இந்தத் திட்டத்தில் பாக்கி இருக்கும் இரண்டு ஆண்டுகளில் செயல்படும்போதும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இலக்குகள் வகுக்கும்போதும், இருக்கும் நிலைமையையும் தேவையையும் அறிந்து விளைபொருள் விற்பனைச் சங்கங்கள் ஏற்ற விரிவை அடைய நாம் முயலவேண்டும்.

அரிசி விற்பனையில் கூட்டுறவு இயக்கம் மிகவும் பின்தங்கி விட்டது. இப்போது 16 லட்சம் டன் உபரி என்று சொல்லுகிறார்கள்—அதாவது மார்க்கெட்டபிள் ஸர்ப்ளஸ். இந்த 16 லட்சம் டன்னும் வாங்கி விற்க வேண்டுமானால் 80 கோடி ரூபாய் வேண்டும். அதாவது கூட்டுறவு விற்பனை சங்கங்கள் அரிசி வியாபாரத்தை ஏற்று நடத்த வேண்டுமானால் 80 கோடி ரூபாயும் மொத்தமாக வேண்டியதில்லை : ரொட்டேஷன் செய்து கொள்ளலாம். ஆனால், அரிசி விற்பனையில் நமது சங்கங்கள் அதிகமாக ஈடுபடவில்லை. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் கோவாப்பரேட்டிவ் மார்க்கெட்டிங் சொஸைட்டிகள் இருந்தும் அவை அரிசி வர்த்தகத்தில் செயல்படவே இல்லை என்று அறிக்கை கூறுகிறது. அது மாத்திரம் அல்ல. எந்த நபர்களிடமிருந்து இந்த விவசாயிகளை காப்பாற்ற வேண்டுமென்று, எவர்களுடைய சிக்கலிலிருந்து உழவர்களை அகற்றவேண்டுமென்று கூட்டுறவு சங்கங்களை ஸ்தாபித்தோமோ, அவர்கள்தான் இன்று அந்த சங்கங்களைப் பிடித்திருக்கிறார்கள், அதாவது, தரகர்களும் லேவாதேவி செய்கிற பெரிய விவசாயிகளும்தான் இந்த சங்கங்களைப் பிடித்திருக்கிறார்கள் என்று அறிக்கையில் காணப்படுகிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள் ? அவர்களுக்கு கூட்டுறவு மார்க்கெட்டிங் என்பதில் எண்ணம் இல்லை. தாங்கள் வாங்குவதில்தான் எண்ணமாக இருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு பெரிய பிரச்னை நம்மை எதிர்நோக்கி நிற்கிறது. உணவுப் பொருள்களின் விலை ஏறுவதை எப்படி தடுப்பது என்பது பற்றி நாம் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். அரசாங்கம் உணவுப் பொருள்களில் ஸ்டேட் டிரேடிங் செய்வதா, அல்லது, வேறு எந்த விதத்தில் கண்ட்ரோலை வைக்க வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். தரகர்களுடைய லாபத்தைக் குறைக்க வேண்டும் என்று முதல் அமைச்சர் பட்ஜெட் உரையில் சொல்லி யிருக்கிறார். இதனால் அதிகப் பயன் கிடைக்குமா ? கூட்டுறவு இயக்கம் சரியாக வளர்ந்திருந்தால் இன்று அதை வைத்து உணவு விநியோகப் பணியை நடத்தி யிருக்க முடியாதா ? இன்னும் ஏன் இயக்கத்தை அந்தத் திசை நோக்கி வளர்க்க முடியாது ? உணவுப் பிரச்னை இன்னும் 10 வருஷங்களுக்கு இருக்கப் போகிறது என்று திட்டக் கமிஷன் உதவித் தலைவர் அசோக் மேத்தா சொல்லுகிறார். ஆனால் நான் சொல்லுகிறேன் இன்னும் 15—20 வருஷங்களுக்குக்கூட இருக்கப் போகிறது. வாங்கல் விற்றல் செய்வதற்கு கூட்டுறவு இயக்கத்தை வளர்க்க, எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யத்தை யொட்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் தந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல முன் வருகின்றேன்.

கூட்டுறவு இலாகா எப்படிப் பணியாற்றுகிறது என்பதைப்பற்றி எவரும் மூடி மறைக்கத் தேவையில்லை. நல்ல கொள்கைகள் கொண்டது கூட்டுறவுத் துறை. கொள்கை ரீதியாக இந்தத் துறையை எதிர்க்கக் கூடியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் கொள்கை ரீதியாக எதிர்க்கவில்லை, ஒத்துக் கொள்ளக்கூடிய ஒன்று. ஆனால் நடைமுறையில் வரும்போது பல்வேறு தவறுகள் வருகிறது என்றால் அதை மூடி மறைத்துப் பயன் இல்லை. கூட்டுறவு இலாகாவில் பங்கெடுத்துக்கொள்ளும் அத்தனை பேரும் தவறான முறையில் நடக்கிறார்கள், அவ்வளவு பேரும் தீமையான பேர்கள் என்று அவர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டர்கள் என்று கருதுகிறேன். ஆனால் ஒரு கட்சிக்கு மட்டும் கூட்டுறவு இலாகா பயன்படுத்தப்படுகிறது என்றால் யாரும் தவறாகக் கருத மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நான் சொல்லுவது கூட்டுறவு இலாகாவில் தவறு செய்யக்கூடிய பலரும் இந்த இயக்கத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால், அப்படி தவறு செய்யக் கூடியவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். தவறு செய்யக் கூடியவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லும்போது காங்கிரஸ் கட்சி மோசடி செய்கிறது, காங்கிரஸ்காரர்கள் மோசடிக்காரர்கள் என்று ஒரேயடியாகச் சொல்லுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அவர்கள் காங்கிரஸில் சேர்ந்திருக்கிறார்கள் என்றால் காங்கிரஸ் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று காங்கிரஸ் தலைவர்கள் ஒத்துக் கொள்ளக்கூடும். அவர்களுடைய ஒரே நோக்கம் அவர்கள் செய்கிற பல்வேறு தவறுகளுக்கு புகலிடமாக இருக்கும், அவர்களுக்கு பாதுகாப்பு இருக்கும் என்று திடமாக நம்புகிற காரணத்தினால்தான், அப்பேர்ப்பட்ட தவறுகளைச் செய்கிறவர்கள் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தவறுகளை மூடி மறைக்க ஆளும் கட்சி அவர்களுக்கு துணையாக இருக்கிறது. ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்தையும் தெளிவாகப் பார்க்கையில் பல பல கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள் மோசடி செய்திருக்கிறார்கள். சில பேர்களுடைய பெயர்கள் பத்திரிக்கையில் வந்திருக்கலாம். சில பேர் ஃபாலிடால் குடித்துச் செத்திருக்கலாம். 10 நாட்களுக்கு முன்புகூட ஒருவர் இந்த முறையில் ஃபாலிடால் குடித்துச் செத்திருக்கிறார். பல பேர்கள் செத்திருக்கலாம். கூட்டுறவு இயக்கத்தில் கையாடல் செய்துவிட்டு, திருப்பிக் கட்டவேண்டுமென்ற நிலைமை வரும்போது கட்ட முடியாமல் மானத்திற்கு அஞ்சி தற்கொலை செய்து கொள்ளுகிறவர்களும் இருக்கிறார்கள். அதே நேரத்தில் மேல் இடத்தில் சொல்லி சரி செய்து கொள்ளலாம் என்று தைரியமாக இருக்கக்கூடியவர்களும் இருக்கிறார்கள். மோசம் நடக்கிறது, அது மூடி மறைக்கப்படுகிறது என்றே இன்று நான் குற்றம் சாட்ட விரும்புவதாகும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மோசடி செய்யும்போது இந்த சர்க்கார் பார்த்துக் கொண்டிருக்கிற காரணம் என்ன ? மர்மம் என்ன ? எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தவறு செய்தால் கண்டு பிடிக்கட்டும், கண்டு பிடித்து தண்டனை கொடுக்கட்டும்—ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஆளும் கட்சிக்கு அனுசரணையாக இருக்கிறவர்கள் சம்பந்தப்பட்ட ஃபைல்கள் மந்திரி மேஜையில் வந்து தங்கி விடுகிறதே, என்ன காரணம் ? என்னால் இந்த மாதிரி எத்தனையோ ஊர், பெயர் விவரங்கள் கொடுக்க முடியும். கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு ஊரைச் சேர்ந்தவர், அவர் இப்போது இறந்துவிட்டார். அவர் சம்பந்தப்பட்ட ஒரு ஃபைல் இத்தனை காலமாக அமைச்சர் மேஜை மீது தூங்கிக் கொண்டிருந்ததே என்ன காரணம் ? ஏன் இதை நான் கேட்கிறேன் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை வருத்தி எடுக்கிறீர்களே என்ற கருத்தால் அல்ல, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்குகிறது என்ற குற்றச்சாட்டைச் சாட்ட இதைத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் தேர்தல் நேரம் வந்துவிட்டால் போதும். கூட்டுறவு ஸ்தாபனத்தில் இருக்கிற சூபர்வைசர்களை அமைச்சர் கூட்டி வைத்துப் பேசுகிறார். திருவண்ணாமலையில் அண்மையில் தேர்தல் நடந்த போது இந்த மாதிரி செய்தது தெரியும். அவர்களைக் கூப்பிட்டு வைத்து அமைச்சரே பேசுகிறார் என்றால், காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு கேளுங்கள் என்று சொன்னால், இதைவிட அவக்கேடு வேறு என்ன வேண்டும் ? கூட்டுறவு இயக்கத்தை இதற்குப் பயன்படுத்துவதா ? இதற்காக......

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, திருவண்ணாமலையில் எந்த இடத்தில் என்னைப் பார்த்தார்கள், எந்த இடத்தில் அவர்களைக் கூப்பிட்டுப் பேசினேன் என்று விளக்கமாகச் சொன்னால் நலமாக இருக்கும்.

**திரு. ப. உ. சண்முகம் :** எந்த இடத்தில் பார்த்தார், எந்த இடத்தில் பேசினார் என்று நான் சொல்லத் தேவையில்லை. அது ஊர் அறிந்த உண்மை, நாடறிந்து அமைச்சரே செய்த வேலை. நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன், சூபர்வைஸரை காங்கிரஸ் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு ஒவ்வொரு சொஸைட்டியாகப் போய், ஒவ்வொரு பிரஸிடெண்டாகப் பார்த்து காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுக் கேட்கச் சொல்லி, அமைச்சரே ஒவ்வொரு கூட்டுறவு ஸ்தாபனத்தின் தலைவரையும் கண்டு காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தேட முற்பட்டார்கள். வேண்டுமானால் நான் பல பல பெயர்களை இங்கே எடுத்துச் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆனால் அமைச்சர் அதை விரும்பமாட்டார் என்று கருதுகிறேன். ஆளும் கட்சிக்கே இந்த கூட்டுறவு இயக்கத்தைப் பயன்படுத்துகிறார்களே ? இது மோசடி அல்லவா ?

லிருந்து ஏன் செங்கல் வாங்கக்கூடாது ? எதற்கு தனியார் வைத்து நடத்துகிற செங்கல் சூளையிலிருந்து வாங்கவேண்டும் ? இதுமாதிரி உள்ள நிலைமைகளைத் தவிர்க்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏன் அப்படி செய்கிறார்கள் என்று கேட்டால் "செங்கல் கேட்ட நேரத்தில் வராது, அப்படியிருந்தாலும் 3" 4" செங்கல்தான் இருக்கும். நாங்கள் கேட்கக்கூடிய செங்கல் இருக்காது. அப்படி இருந்தாலும்கூட விலை அதிகமாக இருக்கும்" என்று சொல்லி விடுகிறார்கள். இது போன்ற சிறு குறைகளைச் சொல்லி ஏற்கெனவே இருக்கிற கூட்டுறவு சொஸைடியிலிருந்து செங்கல் வாங்காமல் தவிர்க்கும் நிலை இருக்கக் கூடாது. கூட்டுறவு சொஸைடிகளுக்கு வேண்டிய சாமான்களை கூட்டுறவு முறையில் தயாரிக்கிறவர்களிடம்தான் வாங்கவேண்டும் என்ற ஒரு நியதியை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். வீடு கட்டுகிறார்கள், ரூ. 10,000, 15,000 செலவில், "ஏ" கிளாஸ், "பி" கிளாஸ் என்று போடுகிறார்கள். ஒரு வீடு இருப்பவர்களுக்கு இரண்டு வீடுகள், இரண்டு வீடுகள் இருப்பவர்களுக்கு 4 வீடுகள், இப்படி திட்டம் பறந்துகொண்டே இருக்கிறது. குறைந்த, சிறிய வருமானக்காரர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும். வீடு கட்டும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோமா? வீடுகள் கட்டும் தொழிலாளிகள் "நாங்கள் வீதியிலே வசிக்கிறோம்" என்று சொல்லுகிறார்கள். டிரைவர்கள் இருக்கிறார்கள், கண்டக்டர்கள் இருக்கிறார்கள், பியூன்கள் இருக்கிறார்கள், ஆபீஸ் அட்டெண்டர்கள் இருக்கிறார்கள், போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள். இம்மாதிரி ரூ. 100-க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு எங்கே வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம்? ரூ. 5,000, 6,000 செலவில் சிறிய, சிறிய வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டங்கள் வேண்டும். 20, 25 வருஷங்களிலாவது அவர்கள் எல்லோருக்கும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு திட்டம் கொண்டு வரவேண்டும். பெரிய பெரிய வீடுகள் 10 வீடுகள் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு மறுபடியும் ஒரு வீடு கட்டிக்கொடுத்திருக்கிறார்களே என்று கேட்டால் "அந்த வீடு என் பெயரில் இல்லை, என் பேரப்பையன் பேரில் இருக்கிறது" என்ற பதில் வரும். இந்த நிலைக்கு இடம் இல்லாமல், வீடு ஏற்கெனவே வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு மறுபடியும் வீடு கட்டிக்கொடுக்கும் நிலைமை இல்லாமல், குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு, ரூ. 5,000, 6,000 அளவில் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, கனம் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தினுடைய ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கிற மான்யக்கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிற வகையிலே சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன். கூட்டுறவு முறை வளரவேண்டும் என்ற கருத்திலே இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க நியாயம் இல்லை. கூட்டுறவு முறை வளர வேண்டும் என்பது கட்சிக்கு அப்பாற்பட்ட ஒரு கொள்கையாக அமைந்திருக்கிறது. நம்முடைய நாட்டின் பொருளாதார நிலை வளர்வதற்கு உறுதுணையாகக் குறிப்பிட்ட ஒரு வழியாக இருக்கிறது. இப்பொழுது இருக்கிற கூட்டுறவு முறை என்பதை நாம் நன்றாக உணர்கிறோம். ஆனால், கூட்டுறவு முறை வளரவேண்டும் என்பதில் அக்கறையோடு பலரும் கவனம் செலுத்திக்கொண்டு இருந்தாலும், அந்தக் கூட்டுறவு உணர்வு இன்னும் போதுமான அளவுக்கு நாட்டில் ஏற்படாத தன்மையைக் காண்கிறோம்; அந்த நோக்கம் நிறைவேற முடியாத அளவுக்கு நிலைமை அமைந்திருக்கிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். தனியார் துறையிலிருந்து மெல்ல மெல்ல பொருளாதார நிலையில், பொதுத் துறைக்கு அழைத்துச் செல்ல உறுதுணை புரிகிற ஒன்றாக கூட்டுறவு முறை அமையும் என்று சொன்னால், அது மிகையாகாது. எனவே, நம்முடைய நாட்டில் எதிர்காலத்தில் பல்வேறு தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்கும், விவசாய சூழ்நிலையை வளர்ப்பதற்கும், கைத்தறி நெசவாளர்களின் நிலைமையை



உயர்த்துவதற்கும், சாதாரணமாகச் சிறு சிறு தொழில்களை நடத்த விரும்புகிறவர்களுக்கு ஆக்கம் தரும் வகையில் பயன் படுத்திக்கொள்வதற்கும் கூட்டுறவு முறை ஒரு சாதனமாக அமையவேண்டும். கைத்தொழில் அமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது, இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் அதிகமாக தொழில் வளர்ச்சிக்கு மூலதனம் இடமுடியாத அளவுக்கு, மூலதனம் வரமுடியாத நிலைமையில் இருக்கிறோம் என்று எடுத்துக் கூறினார்கள். சில பகுதிகளில் மூலதனத்தை கோடிக்கணக்கில் வழங்கி, தொழிலைப் பெருக்குவதற்கு வாய்ப்புகள், வசதிகள் ஏற்பட்டிருப்பதுபோன்று, நம்முடைய மாநிலத்தில் அதற்கான வாய்ப்புக்கூறுகள் அதிகமாக இல்லாமல் இருக்கின்றன என்றும் கூறினார்கள். அந்தக் குறைபாட்டை போக்கவேண்டுமென்றால், கூட்டுறவு முறையின் மூலம் பல சிறிய தொழில்களில் இருக்கிற மூலதனங்களையெல்லாம் ஒன்றாகக் கொண்டு வந்து, எதிர்பார்க்கிற அத்தகைய தொழில்களை உருவாக்கி, அதை வளர்ச்சியுற வைப்பதற்கு முயற்சி எடுத்தால்தான், அந்த எண்ணம் நிறைவேற முடியும். எனவே, கூட்டுறவு முயற்சி மிக வரவேற்கவேண்டிய ஒன்று. அதிலே மெல்ல மெல்ல இந்த மாநில அரசாங்கம் நல்ல கவனம் செலுத்தி, அதை வளர்த்துக்கொண்டு வருகிறது என்பதை மறுக்கவில்லை. ஆனால், கூட்டுறவு இயக்கத்தை நடத்திச்செல்லுகிற வகையிலே இருக்கிற குறைபாடுகளையும், குற்றங்களையும் இந்த மன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்தார்கள்.

அதிலே ஒரு குற்றச்சாட்டு, கூட்டுறவுத் துறையிலே ஆக்கம் கொள்கிற ஒரு சிலர், நீண்ட காலத்திற்கு அதிலே ஆதிக்கம் செலுத்துகிற அளவுக்கு சூழ்நிலை பெற்றிருக்கிறார்கள், அதற்கான வழிவகைகளையும், வசதிகளையும் அவர்கள் தேடிக்கொள்ளுகிறார்கள். பலருடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் தங்கள் பக்கம் நிரந்தரமாக ஈர்த்துக்கொள்கிற அளவுக்கு அதில் வாய்ப்புகளும், வசதிகளும் இருக்கிற காரணத்தினால், ஒரு சிலருடைய ஆதிக்கமும், ஆக்கமும் என்றென்றும் நிலைபெற வழிகோல்வனவாக அமைந்திருக்கின்றன. இந்த முறை மாற்றப்பட்டு, மற்றவர்களும் பங்கு கொள்கிற சூழ்நிலை ஏற்படுமானால், அவர்கள் தங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் எதையும் செய்யலாம் என்று துணிவு பெறுவதைத் தடுப்பதற்கு வழிவகை ஏற்படக்கூடும். குறைந்தது இரண்டு முறைக்கு மேல் தொடர்ந்து ஒருவர் தலைவராக இல்லாமல் இருக்கிற ஒரு சூழ்நிலை ஏற்படுமேயானால், இந்தக் குறை ஓரளவுக்கு நீங்குவதற்கான வழிவகை ஏற்படுமென்று நான் கருதுகிறேன். தேர்தல் நடத்துகிற முறையிலே இருக்கின்ற குறைபாடுகளை நல்ல அனுபவம் கொண்ட உறுப்பினர்கள் இந்த மன்றத்திலே எடுத்துத் தெரிவித்தார்கள். பொதுத் தேர்தலை நடத்துகிற முறையிலே 1952-வது ஆண்டில் கடைப்பிடிக்கப்பட்ட முறைகளிலிருந்து, பொதுத் தேர்தலுக்கு பொதுத் தேர்தல் சில பல புதிய முறைகளையும், மாற்றங்களையும், திருத்தங்களையும், மேற்கொண்டு பொதுத் தேர்தல்கள் நடைபெறுகின்றன. இதிலே இருக்கிற குறைபாடுகளை மெல்ல மெல்ல நீக்கவும், அதிகமான தவறுகள் இல்லாத அளவுக்கு அந்த அமைப்பை ஆக்குவதற்கு எப்படிப் பொதுத் தேர்தல்களைப் பொறுத்து முயற்சி எடுக்கப்பட்டதோ, அப்படி கூட்டுறவுத் துறையில் நடைபெறுகிற தேர்தல்களிலும்கூட இப்படிப்பட்டக் குறைபாடுகளை நீக்குவதற்கு வழி வகைகள் இருக்கின்றன என்றால், அதனை ஆராய்ந்து, தேர்தல் முறைகளை மாற்றி, அவற்றின் நோக்கம் நல்ல முறையில் நிறைவேறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும். கூட்டுறவு இயக்க உணர்வு மக்களுக்கு ஏற்பட்டு, இந்தக் கூட்டுறவு முறையின் மூலமாக நல்ல பலன்கள் இருக்கின்றன. இடைத் தரகர்களை ஒழிப்பதற்கு வழிவகைகள் ஏற்பட்டிருக்கின்றன. கூட்டுறவு முறையில் விற்கப்படுகிற பொருள்களை வாங்குவது பலன் அளிக்கக் கூடியது, பொருள்கள் தரமுள்ளனவாக இருக்கின்றன என்கிற நம்பிக்கையை மக்கள் பெற வேண்டிய அளவுக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை இயக்குபவர்கள் இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டிய பொறுப்பு முக்கியமாக அரசாங்கத்திற்கு இருக்கிறது. நல்ல நாணயம் கொண்டவர்கள் கையிலே, நல்ல நேர்மையானவர்கள் கையிலே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஒப்படைக்கிற சூழ்நிலை ஏற்பட்டால்தான், மக்களிடம இது குறித்து நம்பிக்கை ஏற்படுவதற்கு வழிவகை ஏற்படும். பலர் கூட்டுறவு சங்கங்களில் பங்குதாரர்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [21st March 1964

களாக ஈடுபட்டு, அதன் மூலம் பெரும் பலன் பெறவேண்டுமென்கிற அளவுக்கு, அவர்கள் நோக்கம் நிறைவேருமல் இருப்பதற்குக் காரணம் சில பல இடங்களில் ஊழல்கள் ஏற்படுகின்றன. எந்த நோக்கத்திற்காக சங்கங்கள் அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேற முடியாமல் மாறுபட்ட முறையில் அவைகளைக் கொண்டு செல்லுகின்ற அளவுக்கு நிலைமை கள் இருக்கின்ற காரணத்தால், கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் குறைபாடுகளைத் தவிர்க்க வழிவகை செய்யாமல் இருப்பதனுல், இம்மாதிரி நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. ஆகவே நாணயம் உள்ளவர்கள் கையிலே, நேர்மையானவர்கள் கையிலே அவற்றை ஒப்படைப்பதற்கு வழி வகை ஏற்படவேண்டும். அதைச் செய்வதற்கு தணிக்கை மூலம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சில உறுப்பினர்கள் இங்கே கருத்துத் தெரிவித்திருக்கிருர்கள். இப்பொழுது இருக்கின்ற தணிக்கை முறைகள் போதுமானவை அல்ல என்ருல், அதற்குக் கொடுக் கப்படுகிற அதிகாரம் போதுமானதல்ல என்ருல், பார்க்கிறவர்களின் எண் ணிக்கை போதுமானதல்ல என்ருல், அவர்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கி, தணிக்கையின் அளவைத் தீவிரப்படுத்துவதன் மூலமும், அதைச் செம்மைப்படுத்துவதன் மூலமும் இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படாத வண்ணம் அரசினர் தக்க நடவடிக்கைகள் எடுக்க முன்வர வேண்டும். தணிக்கை பார்ப்பவர்களின் வலிவு எந்த அளவுக்கு வளருகிறதோ, அதைப் பொறுத்துத் தான் எதிர்காலத்தில் ஆங்காங்கே ஒழுங்கான நிலைமைகள் நாளாவட்டத்தில் ஏற்படுவதற்கு வழிவகை காணமுடியும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுடைய நிலைமையை வளர்ப்ப தற்கு கூட்டுறவுத் துறையின் மூலமாக நாம் பாடுபடவேண்டியவர்களாக இருக்கிரேம். விவசாயிகளுடைய தேவைகள் அத்தனையும் நிறைவேற்றிக் கொடுக்கிற பெரும் பொறுப்பை இப்படிப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் மேற் கொண்டால்கூட நல்லது. அந்த அளவுக்கு இந்தக் கூட்டுறவு சங்கங்கள் பயன்படும்படியாக அமைத்தல் வேண்டும். இந்த கூட்டுறவு சங்கங்களு டைய அபிவிருத்தி நிலைமைகளை வளர்ப்பதற்கும், கூட்டுறவு முறையை வளர்ப்பதற்காக மேற்கொண்டிருக்கிற அத்தகைய முயற்சிகளிலே, 1958-59-ல் மதிப்பீட்டுக் குழுவினர் இந்தக் கூட்டுறவுத் துறையை எடுத்துக் கொண்டு, அவர்கள் இதிலுள்ள நிலைமைகளை ஆராய்ந்து, சில பல சிபார்சு களை அரசினருக்கு எடுத்து வைத்திருக்கிருர்கள். அந்தக் குழுவினர் 1958-59-ல் அந்த அறிக்கையை இந்த மன்றத்தின் முன்பு சமர்ப்பித் திருக்கிருர்கள். ஆனுல் அவர்கள் செய்த அத்தகைய சிபார்சுகள் எந்த அளவுக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன, மேற்கொள்ளப்படக் கூடியன என்னென்ன, மேற்கொள்ள முடியாமல் இருப்பன என்னென்ன, எந் தெந்த சிபார்சுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற தகவல்கள் இந்த மன்றத்தின் முன்பு வைக்கப்படவில்லை. 1958-59-ல் அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தும், 1964-வரையில் எந்த அளவுக்கு மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன, எவை எவை சாத்தியமாகக் கருதப்பட்டிருக்கின்றன, எவை எவை நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்ற விவ ரங்கள் தெரியாத நிலையில் அமைந்திருக்கின்றன. அந்த சிபார்சுகளை தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிருர்கள். 75 பர்செண்ட் கிராம மக்களுக்குப் பயன்படுகிற அளவிலே, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லும்போது, அவை எந்த அளவுக்கு மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் மூலம் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். 'The Committee recommends that steps should be taken to cover the entire rural area by the end of the Second Five-Year Plan itself by the formation of new societies or by extending the area of operation of existing societies and also recommends that at least 75 per cent of the population should be covered before the end of the Second Five-Year Plan so that the benefits of the movement may be availed of by a wider section of the people.' என்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சி எந்த அளவுக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு நிதியைப் பெருக்கு வதற்கான முறைகளையும், அந்த நிதியை விரிவுபடுத்துவதற்கான நோக் கத்தை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைப் பெருக்குகின்ற முறை



21st March 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

யிலே, இந்தக் கமிட்டி சிபார்சு செய்கின்ற வகையிலே, 'The Committee is of the opinion that it is only fair that a part of the large sums of money collected by the Life Insurance Corporation from this State should be ploughed back by way of investment in the debentures of the Central Land Mortgage Bank at a reasonable rate of interest to make agricultural improvement economical and recommends that this should be taken up with the Life Insurance Corporation.' என்று சொல்லியிருக்கிருர்கள். ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷனுக்கு அளிக்கப்படுகிற அத்தகைய மூலதனத்திலிருந்து இந்த மாநிலத்திற்கு அதிகத் தொகை பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டும். அப்படி வாங்குவதன் மூலம் அந்தத் தொகையை வைத்துக்கொண்டு, கூட்டுறவுத் துறையிலே எடுக்கப்படுகிற முயற்சிகளை மேலும் விஸ்தரிப்பதற்கு பயன் படுமென்று மதிப்பீட்டுக் குழுவினர் சிபார்சு செய்திருக்கிருர்கள். அப்படிப் பட்ட முயற்சி எடுக்கப்பட்டதா, அதற்கு அரசினரும், ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷனும் அளித்த பதில் என்ன, சிபார்சுகளை நிறைவேற்றுகிற வகையிலே சாதகமாக இருக்கின்றனவா என்பதையும் அறிய விரும்பு கிறேன். மேலும், 'The Committee recommends that as co-operatives have necessary financial and other facilities the entire distribution of chemical fertilizers should be entrusted solely to the co-operatives in all areas as early as possible.' என்று விவசாயிகளுக்கு நன்மை பயக்குகின்ற வகையிலே தனிப்பட்டவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டு உர வினியோகம் இருப்பதைவிட கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பயன் படுத்தவேண்டும் என்று சிபாரிசுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. அதைப்போலவே இரும்பு சாமான்கள், தனிப்பட்டவர்கள் மூலம் வினியோகிக்கப்படாமல் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வினியோகம் செய்ய வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டு இருக்கிறது. இந்தச் சிபாரிசுகள் எந்த அளவுக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் இடத்திலிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஆண்டுதோறும் இலக்குகளும் சாதனைகளும் என்ற வகை யிலே குறிப்பிட்ட சில இனங்களிலே சில பல ஐயப்பாடுகளை கனம் அமைச்சர் அவர்கள் மூலமாக நான் போக்கிக் கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு கல்வியும் பயிற்சியும் என்ற வகையிலே 1963-64-க்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 6.44 லட்சம். இதிலே 1963 டிஸம்பர் மாதம் 31-ந் தேதி வரை செல வழிக்கப்பட்டு இருப்பது ரூ. 3.02 லட்சம். இன்னும் ரூபாய் 3.42 லட்சம் ஒதுக்கிய நிதியிலிருந்து மிச்சமாக இருக்கிறது. இப்பொழுது அத்தகைய முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றனவா, மீதித்தொகை மூன்று மாதங்களிலே பயன் படுத்தக்கூடிய அளவிலே இருக்கிறதா, அல்லது திட்டம் குறைக்கப்பட்டு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். மேலும் கிடங்குகள் கொடுத்தல் என்பதற்காக முயற்சி எடுக்கப்பட்டு 1963-1964-ல் இலக்காக குறிப்பிட்டிருப்பது ரூ. 2.10 லட்சம். ஆனுல் 1963 டிசம்பர் 31-ந் தேதி வரை அந்த முயற்சிக்காக செலவழித்திருப்பது ரூ. 1.50 லட்சம்தான். இன்னும் ரூ. 60 லட்சம் அதிலே பாக்கியிருக்கிறது. மீதி இருக்கின்ற 3 மாதங்களிலே அந்த முயற்சி முடியக்கூடிய அளவிலே இருக்கிறதா, அந்தத் தொகை ஈடுபடுத்தக்கூடிய அளவிலே இருக்கிறதா, நிலைமைகள் என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன். கூட்டுறவு சங்கங் கள் பங்கு மூலதனம் குறித்து அரசாங்க நிதி என்ற வகையிலே ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டு, அதிலே ரூ. 55 லட்சம் செலவாகி, மீதி 45 லட்சம் இருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதையும் விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். விற்பனை செய்த விளை பொருள்களின் மதிப்பு என்கிற வகையில் 1963-64-ல் இலக்காக நிர்ண யித்திருப்பது ரூ. 14.30 லட்சம். இதிலே ரூ. 5.58 லட்ச அளவுக்குத்தான் விற்பனை ஆகியிருக்கிறது. ஆகவே ஏறத்தாழ ரூ. 8 லட்சத்திற்கு மேல் தேக்கம் இருக்கிறது. இப்படிப்பட்ட தேக்கம் ஏற்படுவதற்கு என்ன குறை பாடுகள் ஏற்பட்டன, அந்த இலக்கின் நோக்கம் நிறைவேற முடியாத அளவுக்கு எது தடையாக இருக்கிறது, இதிலே உள்ள குறைபாடுகள் 1-00 p.m.
என்ன, அவற்றை நீக்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகள் என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன். சர்க்கரை ஆலைகள் பங்கு

மூலதனத்துக்காக அரசாங்க உதவித்தொகையில் இலக்கு அளவு ரூ. 10
லட்சம். ஆனால் சாதனை பற்றி, எந்த குறிப்பும் கொடுக்கப்படவில்லை.
இந்த ஆண்டு எதுவும் தொடங்கப்படவில்லையா எந்த முயற்சியும் எடுக்க
வில்லையா, முயற்சி எடுக்கப்பட்டு நிறைவேறும் நிலையில் இருக்கிறதா என்
பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுப் பண்ணைச் சங்கங்கள் ஏற்படுத்துவதற்கான முயற்சி 3-வது
திட்டத்தின் தொடக்கத்திலே சேர்க்கப்பட்டது. அது இப்பொழுது கைவிடப்
பட்டு விட்டதா ? கைவிடப்படவில்லை என்றால் அதற்கான முயற்சிகள்
எவை எவை எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து கொள்ள
விரும்புகிறேன்.

கூட்டுறவு நிலக்குடியேற்றச் சங்கங்கள் அரிஜனங்களுக்காக அமைக்கும்
முறையிலும், சாதாரண மக்கள், முன்னாள் ராணுவத்தினருக்காக அமைக்
கின்ற முயற்சிகள் இருந்த அளவுக்கு, இப்பொழுது இருக்கிறதா, அல்லது
மேற்கொண்டு முயற்சிகள் எடுக்கவில்லையா, அல்லது மேற்கோள்ளப்பட்டு
ஆக்கம் கிடைக்காத வகையில் கைவிடப்பட்டு இருக்கின்றனவா என்று
கனம் அமைச்சர் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மேலும் பால் பண்ணை, பால் வழங்கல் ஆகிய துறைகளில் நிதி
ஒதுக்கம் அளவில் 1963-64-ல் 37 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்
பட்டு இருக்கிறது. 1963-64ல், 1963 டிசம்பர் 31-ந் தேதி முடிய ரூ. 23.82
லட்சம் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. இதிலும் ரூ. 13.49 லட்சம் மீதம் இருக்
கிறது. அந்த வேலை நிறைவேற்றப்பட்டுக் கொண்டு இருக்கிறதா, இந்த
மூன்று மாதத்தில் முடிவு அடையக் கூடிய நிலையில் இருக்கிறதா அல்லது
கைவிடப்பட்டு தொகை மீதப்படுத்தும் நிலை ஏற்பட்டு இருக்கிறதா என்
பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு முறையில்தான் விவசாயிகளின் நிலைமையை உயர்த்துவதற்
கான வழிவகைகள் இருக்க முடியும். வேறு எந்த வகையிலும் முதலைப்
போடும் முறையில் இதில் ஈடுபடுகின்ற நிலச்சுவான்தார்களும் மற்றவர்
களும் இல்லை. ஆகவே எண்ணுகின்ற விவசாய முறைகள் அத்தனையையும்
எதிர்காலத்தில் நாம் பெற வேண்டுமானால் அதை கூட்டுறவு என்ற கருவி
யின் மூலம்தான் பெறுவதற்கு வழி வகை இருக்கிறது. இதிலே அதிக
கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளவர்களாகவும் நாம் இருக்
கிறோம். விவசாயத்திற்கு அடுத்ததாக பெரிய தொழிலாக அமைந்திருப்
பது கைத்தறித் தொழில். அதை நம்பி வாழ்கிறவர்கள் விவசாயத்தை
நம்பி வாழ்கிறவர்களுடைய எண்ணிக்கைக்கு அடுத்த எண்ணிக்கையாக
நம் மாநிலத்தைப் பொறுத்தவரை அமைந்திருக்கிறது. கைத்தறித்
தொழில் வளர்ச்சிக்கு கூட்டுறவு முறையில்தாம் நாம் வளர்ச்சியை காண
வேண்டும் என்பது அவசியமாக இருக்கிறது. ஆகவேதான் கூட்டுறவு
உற்பத்திச் சங்கங்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் போன்றவை ஆண்டுக்கு
ஆண்டு பெரும்பாலாக ஏற்படுத்தப் படுகின்றன. சில பல சங்கங்களில்,
பொதுவாக மற்ற சங்கங்களில் ஏற்படக் கூடிய குறைபாடுகள் ஏற்படுகின்றன
என்று சொல்லப்பட்டது. இந்தக் குறைபாடுகளை போக்குவதற்கு நடவடிக்
கைகள் எடுக்க வேண்டும். கைத்தறியைப் பொறுத்தமட்டில் மற்ற
மாநிலங்களைவிட நம் மாநிலம் உருவான பலனை, வளர்ச்சியை காணும்
அளவுக்கு, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு துணிகளை உற்
பத்தித் தரம் படைத்ததாக இருக்கிறது. எப்பொழுதாவது, ஏதாவது ஒரு
காலத்தில் கைத்தறியை நம்பி வாழ்கிறவர்களுடைய நிலைமை பொறி
இயல் இயந்திரங்கள் மூலம் இயங்கும் தொழிலாக மாற்றும் நிலைக்கு
வரவேண்டியிருக்கும். மாறியே தீர வேண்டும். ஆனால் இந்தத் தலை
முறையில் கைத்தறியை நம்பி வாழ்கிறவர்களைக் காப்பாற்றித் தீர வேண்
டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அவர்கள் வாழ்நாள் முழு
வதும் இப்பொழுது நம்பி வாழ்கிறவர்கள் வாழ்நாள் முடியும்வரை
இந்தத் தொழிலை காப்பாற்றிக் கொடுத்து இந்தத் தலைமுறையினர் வாரிசு
களை மெல்ல மெல்ல இந்தத் தொழிலை விட்டு, மாற்றி, குண்டூசி முதல்
அணு குண்டு வரை செய்யப்படுகிற வேறு ஏதாவது தொழிலுக்கு ஈர்ப்
பதன் மூலமாக அவர்களுக்கு வாழ்க்கை வசதிகளைச் செய்து தரவேண்டும்.
அந்தக் காலம் வரை இதை நம்பி வாழ்கிறவர்களுக்கு இந்தத் தொழிலை





காப்பாற்றித்தர வேண்டும். அந்த முயற்சியில் அரசாங்கம் சிலபல முயற்சி
கள் எடுத்து இருக்கிறது. அவர்கள் நெய்கின்ற துணிகளை தேங்காத
அளவுக்கு பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு
இருக்கிறது. வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியை எவ்வளவுக்கெவ்வளவு
அதிகரிக்க முடியுமோ, அந்த அளவுக்கு அதிகரிக்கச் செய்யப்படும் முயற்சி
எல்லாம் எடுக்க வேண்டும். கைத்தறியைப் பொறுத்த மட்டில் கிட்டத்
தட்ட 6 கோடி சில்லரை ரூபாய் ஏற்றுமதி ஆகிறது என்று புள்ளி விவரங்
கள் தரப்பட்டு இருக்கின்றன. கவர்ச்சிகரமான கைத்தறித் துணிகளின்
ஏற்றுமதியை பெருக்க வழிவகை செய்கின்ற கனம் கைத்தொழில் அமைச்சர்
அவர்கள் தன்னுடைய அறையில் அழகு அழகாக ஆடைகளை வைத்து
வருகிறவர்கள் கவனத்தை ஈர்த்து அதன் மூலம் கவர்ச்சிகரமான துணி
களைப் பிரபலப்படுத்தும் முயற்சி எந்த அளவுக்கு மார்க்கெட் தேடுவதில்
வெற்றி கண்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இவற்றிற்கு
அமெரிக்காவிலே பல மேலை நாடுகளிலே கிராக்கி இருக்கிறது. இருக்கிற
கிராக்கி பற்றி புள்ளி விவரங்கள் தரப்பட்டு இருக்கின்றன. இந்த முயற்சி
களை எல்லாம் தீவிரமாக மேற்கொள்வதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும்
ஏற்றுமதியை உயர்த்தத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கைத்தறிக்கு பாதுகாப்பு ஏற்படுத்தும் முயற்சியில் மதிப்பீட்டுக் குழு
வின் சிபார்சின் அடிப்படையில் நிறைவேற்றிக் கொள்ள எந்த அளவுக்கு
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்று அடிக்கடி இந்த
மன்றத்திலே எடுத்துச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே இந்த மன்றத்
திலே கூட தீர்மான வடிவில் அது கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டு
இருக்கிறது என்று கருதுகிறேன்.

" The Committee is convinced that in face of unequal competition from the highly mechanised textile mills, it will be wellnigh impossible for the handloom industry to stand on its own feet unless certain classes of textiles are exclusively reserved for the handlooms. The Committee recommends that dhoties and sarees be reserved for production exclusively by handlooms. "

என்ற சிபாரிசு செய்திருக்கிறது. எந்த அளவிலே நடைமுறைக்குக்
கொண்டுவர முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது, எந்த அளவுக்கு நடைமுறைக்கு
கொண்டுவர இயலும் என்பதையும், அதற்கான முயற்சிகள் எடுக்கப்
பட்டிருக்கின்றனவா, அப்படி அந்த முயற்சிகள் பலன் தருவதானால்
ஓரளவுக்கு கரைபோட்ட வேட்டிகளையும், நிறம் உள்ள சேலைகளையும்
உற்பத்தியாக்குகின்ற அத்தகைய பொறுப்பு கைத்தறியாளர்களுக்கு விடப்
படுமானால், அதன் மூலம் அவர்களுக்குள்ள கொஞ்ச நஞ்ச கஷ்டங்கள்
போக வழிவகை ஏற்படும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக கைத்தறி அபிவிருத்திக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்
தில்கூட பங்கு மூலதனம், கூட்டுறவு அமைப்பில் நெசவாளர்களைச்
சேர்த்துக் கொள்ளுதல், என்கிற முறையில், பங்கு மூலதனமாக மூன்
றாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ 50 லட்சம், என்றாலும், இது
வரைக்கும் ரூ. 26,14,000 தான், இந்த நான்கு ஆண்டு காலத்தில்,
1964-65-யும் சேர்த்து என்று கருதுகிறேன், செலவாகி இருக்கிறது.
அதில் ரூ. 23.66 லட்சம் மீதம் பட்டிருக்கிறது. இதற்கு என்ன முயற்சி
கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை தெரிந்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

தள்ளுபடி செய்துகொடுக்க, மூன்றாவது திட்டக்காலத்தில் ரூ. 375 லட்சம்
ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதுவரை 1964-65-க்கு ஆன திட்ட மதிப்பீட்டை
யும் சேர்த்து கணக்கிடுவோமானால், கிட்டத் தட்ட ரூ. 245 லட்சம் தள்ளு
படியில் வைக்கும் அளவுக்கு இருக்கிறது. மீதி ரூ. 132 லட்சம் இருக்
கிறது. இந்தத் தள்ளுபடி கடைசியாக திட்டத்திலே பயன்படுத்தும் அள
வுக்கு இருக்கிறதா, ஐந்தாண்டு காலத்திலே தள்ளுபடிக்கு ஒதுக்கப்பட்ட
ரூ. 375 லட்சமும் இன்னும் கொஞ்சம் தள்ளுபடிக்கு வாய்ப்பு இருக்கிறது
என்றால், அதை கொஞ்சம் பரவலாக ஆக்குவதன் மூலம், கைத்தறியின்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [21st March 1964

விற்பனையை அதிகமாக்க வழிவகை காணமுடியுமா என்பதையும் யோசிக்கக்
கேட்டு கொள்ளுகிறேன். மீதப் படும் அந்தத் தொகைக்காக என்ன
திட்டம் அரசினர் வைத்திருக்கிறார்கள், வேறு திட்டங்கள் இருக்கின்றனவா,
தொகையை வேறு துறைக்கு மாற்றப் போகிறார்களா, என்ற நிலைகளை
அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

விற்பனையும் விளம்பரமும் என்ற தலைப்பில் 1964–65 திட்ட மதிப்பீட்
டையும் சேர்த்து கிட்டத் தட்ட ரூ. 22 லட்சம் வரை செலவழிக்கப்பட்டிருக்
கிறது, அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிந்துக்
கொள்ள விரும்புகிறேன்.

குடியிருப்புக்கு என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.
இதுவரை செலவழிக்கப்பட்டிருப்பது ரூ. 61.14 லட்சம்; மீதி இருப்பது
ரூ. 38.86 லட்சம். அதற்கான நடவடிக்கைகள் என்ன? அல்லது இந்தத்
தொகையை வேறு துறைக்கு மாற்ற இருக்கிறார்களா அல்லது திட்டத்தின்
மீதியை நிறைவேற்ற இருக்கிறார்களா, எத்தகைய முயற்சிகள் மேற்
கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதையும் அறிந்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

திட்டக்காலத்தில் போடப்பட்ட இலக்குகளின் அடிப்படையில் திட்டங்கள்
நிறைவேற்றப் பட்டிருக்கின்றனவா, நிறைவேற்ற முடியாதவைகளாக
இருக்கின்றனவா என்று அறிந்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத்
துறைகளெல்லாம் மேலும் மேலும் பெருக, செம்மைப் படுத்தி, சீர்
படுத்தி அமைப்பதின் மூலம், நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க முயற்
சியை எடுத்துக் கொண்டு எதிர்பார்க்கப்படும் பயன்களைக் காண நல்ல
முறையிலே வழிவகைகளைக் காண அமைச்சரவை முன்வரவேண்டும் என்று
கேட்டுக்கொண்டு உரையை முடிக்க விரும்புகிறேன், வணக்கம்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்
களே, பத்து நிமிஷத்திலே கைத்தறி சம்மந்தமான பிரச்சினைகளுக்கு
விளக்கம் கூறி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். இந்தத் துறை
யானது சிறந்த முறையிலே முன்னேறிக் கொண்டு வந்திருக்கிறது. சில
புள்ளி விவரங்கள் கொடுக்க விரும்புகிறேன். 1955–56-ம் ஆண்டில்,
அதாவது முதல் ஐந்தாண்டு திட்டம் முடிந்தவுடன், கூட்டுறவு சொஸைடி
கள் 848 இருந்தன, இரண்டாவது திட்டம் முடிகிற போது, 1,091 சொஸைடி
கள் இருந்தன; இன்றைக்கு 1,104 இருக்கின்றன. எத்தனை தறிகள்
சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று பார்த்தால், முதல் திட்டத்தின் இறுதி
யில் 1.58 லட்சம், இரண்டாவது திட்ட இறுதியில் 2.16 லட்சம், இன்றைக்கு
2.27 லட்சம் கூட்டுறவு இயக்கத்தில் இருக்கின்றன, இதனுடைய செலுத்தப்
பட்ட மூலதனம், முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், 72 லட்சத்து 52
ஆயிரம் ரூபாய். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 118
லட்சத்து 4 ஆயிரம் ரூபாய். இப்பொழுது அது 152 லட்சத்து 33 ஆயிரம்
ரூபாய் அளவில் இருக்கிறது.

அடுத்தாற்போல், கூட்டுளவு சங்கங்களின் மூலம் உற்பத்தியாவதைக்
கணக்கிட்டால், முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், 7 கோடி 43 லட்சம்
கஜம் துணி உற்பத்தி ஆகியிருக்கிறது. இரண்டாவது திட்ட இறுதியில்
அவர்கள் உற்பத்தி செய்தது 10 கோடி 71 லட்சம் கஜம். இப்பொழுது
அது 11 கோடி 49 லட்சம் கஜம் அளவுக்குப் பெருகி இருக்கிறது.

இதனுடைய மதிப்பை எடுத்துக்கொண்டால், சற்றேறக்குறைய இரட்
டிப்பு மடங்காக இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில்
6 கோடி 48 லட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்
கின்றன. இப்பொழுது 13 கோடி 19 லட்சம் ரூபாய் மதிப்புள்ள துணி
உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது.

இது பற்றி விவரங்கள் பேசுகிறபோது, கனம் எதிர்க் கட்சித் தலைவர்
அவர்கள், "இலக்குகள் குறைந்திருக்கின்றன" என்று சொன்னார்கள்.
இது மூன்று ஆண்டுகளின் செலவு; நான்கு ஆண்டுகளின் செலவு அல்ல.
அவர்கள் நான்கு ஆண்டுகளின் புள்ளி விவரங்கள் என்று நினைத்துக்



21st March 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

கொண்டு விட்டார்கள். அது திருத்திய மதிப்பீடு. 1962–63-ம் ஆண்டுக்
கான செலவு 1963–64-ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு. மூன்று
ஆண்டுகள் தான் முடிந்திருக்கின்றன. இன்னும் இரண்டு ஆண்டுகள்
செயல்பட வேண்டியிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்குள்ளே, அதாவது வரு
கிற இரண்டு ஆண்டுகளுக்குள்ளே, நிச்சயமாக இந்த இலக்குகள் மாத்தி
மல்ல, இதற்கும் அதிகமாகவே நிறைவேற்ற முடியும் என்று நான் தெரி
வித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த இலக்குகள் போடும்போது, திட்டக் கமிஷன் எவ்வளவு ஒதுக்கி
யிருக்கிறார்களோ அந்த அளவு தான் இலக்காக நாம் போட வேண்டும்.
செலவழிக்கும்போது, நம்முடைய ராஜ்ஜியத்தின் தொகையையும் சேர்த்து
அதிகமாகச் செலவழிக்கிறோம். உதாரணமாக, நடப்பு ஆண்டில் எடுத்துக்
கொண்டால், திட்டக் கமிஷன் இரண்டு வாரம் ரிபேட் கொடுப்பதற்கான
தொகை தான் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், நாம் மூன்று வாரத்
திற்குக் கொடுத்திருக்கிறோம். அது நம்முடைய உபரி நிதியிலிருந்து
செலவழிக்கப்பட்டது, அந்த ஆண்டின் கணக்கு முடிவு அடையும் போது,
ஃபைனல் அகௌண்ட்ஸில் அதிகமாகத் தெரியும். ஆனால், எஸ்டிமேட்
போடும்போது, திட்டக் கமிஷன் எவ்வளவு கொடுத்தார்களோ அந்த
அளவுக்குத்தான் பணம் ஒதுக்கப்படும். அதனால் இது சற்றுக் குறைவாகக்
காணப்படுகிறது. ஐந்து ஆண்டுகள் முடிவடையும் போது பார்த்தால்,
இந்தத் தொகை எல்லாம் அதிகரித்துவிடும்.

**திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள்
மூன்றாவது ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை அடுத்த ஆண்டுக்கு எஸ்டி
மேட் என்று சொன்னார்கள். ஆனால், கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில்
அப்படி இல்லையே. அதன் விவரத்தை அமைச்சர் அவர்கள் விளக்க
வேண்டும்.

**திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்
கப்பட்டிருக்கும் குறிப்பின் 14-வது பக்கத்தில் கடைசி "கால" த்தில்
பார்த்தால், எவ்வளவு நமக்குக் திட்டக் கமிஷனால் அனுமதிக்கப்படுகிற
தோ அது தான் போடப்பட்டிருக்கும். 1964–65-இல் எவ்வளவு செலவழிக்
கிறோமோ அது இந்தத் தொகையை விட அதிகமாக இருக்கும். ஓரிரண்டு
உதாரணங்கள் சொல்கிறேன். கைத்தறித் துணியை எடுத்துக் கொண்டால்
இரண்டு வாரத்திற்கு அவர்கள் தள்ளுபடி கொடுத்தார்கள். அதற்கு 60
லட்சம் ரூபாய் போட்டிருக்கிறோம். மூன்றாவது வாரத்திற்கு நாம் செல
விட்ட தள்ளுபடியையும் கணக்கிலெடுத்துக் கொண்டால், 60 லட்சம் என்று
போட்டிருப்பது, 70 லட்சம் அல்லது 72 லட்சம் ரூபாய் ஆகும். திட்டக்
கமிஷன் எவ்வளவு ஒதுக்குகிறார்களோ அந்த அளவுக்குத்தான் 1964–65-க்
கான நிதி ஒதுக்கம் என்று 14-ஆம் பக்கத்தில் கடைசி "கால"த்தில்
குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே எவ்வளவு ஒதுக்கப்பட்ட தொகை இருக்
கிறதோ, அதைத்தான் பட்ஜெட்டிலே கொடுப்போம். செலவழிப்பது
இதை விட அதிகமாகத் தான் இருக்கும். அடுத்த வருஷம் ஞாபகமாகப்
பார்த்தால் இது நன்றாகத் தெரியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம்:** தள்ளுபடிக்காக மூன்றாவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் மொத்தமாக ஒதுக்கப்பட்ட தொகை 375 லட்ச ரூபாய்.
1961-62-ஆம் ஆண்டில் செலவிடப்பட்டது 71 லட்ச ரூபாய். 1962–63-ம்
ஆண்டில் செலவிடப்பட்டது 59 லட்சம் ரூபாய். 1963-64-ம் ஆண்டுக்கான
மதிப்பீடு 55 லட்ச ரூபாய். 1964–65-ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கம்
60 லட்ச ரூபாய். இத்தனையையும் கூட்டினால் 245 லட்ச ரூபாய் ஆகிறது.
இன்னும் ஓராண்டு தானே இருக்கிறது? 130 லட்சம் ரூபாய்த் தொகையை
எப்படிச் செலவு செய்யப் போகிறார்கள்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** 60 லட்சம் என்று குறிப்பிட்
டிருப்பது 70 லட்சம் அல்லது 80 லட்சம் கூட ஆகலாம். 375 லட்ச
ரூபாயை வருஷாவாரியாக எப்படிப் பிரிக்கலாம் என்று பார்த்துப் பிரித்துப்
போடுகிறோம். திட்டக் கமிஷன் எந்த அளவு ஒதுக்குகிறார்களோ, அதைத்

தான் மதிப்பிடலாம். செலவு அதிகமாக ஒவ்வொரு துறையிலும் ஏற்படும். கைத்தறியை எடுத்துக் கொண்டால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கிய தொகை 5 கோடி ரூபாய். செலவழிக்கப்பட்ட தொகை 8 கோடி ரூபாய். நாம் செலவழித்த கணக்கைப் பார்க்க வேண்டும். செலவழித்த கணக்கைப் பார்த்தால், நாம் போட்ட மதிப்பீட்டை விட அதிகமாக இருக்கும். ஓரிரண்டு வருஷங்களில் குறைவாகக் காணப்படுவதற்குக் காரணம், அந்த வருஷங்களில் தள்ளுபடி, கொடுக்கவில்லை. தானாகவே நல்ல முறையில் விற்பனையாகியிருந்தால், புதிதாகத் தள்ளுபடி கொடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. கடைசி வருஷத்தை மினிமம் ஆக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நான் தெரிவித்து கொள்ளுகின்றேன்.

குடியிருப்புச் சம்பந்தமாக நாம் இலக்கை நிறைவேற்ற முடியாது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நாட்டிலே இருக்கும் நெருக்கடி நிலைமை காரணமாக இரும்பு போன்ற பண்டங்கள் பற்றாக் குறையாக இருப்பதால், இதில் இருக்கும் தொகையை வேறு மானியங்களுக்கு ராஜ்ய சர்க்கார் உபயோகப்படுத்தியிருக்கிறது. அதனால் அந்தத் துறையில் மாத்திரம் அதிகப்படியான செலவு செய்வதற்கு இயலாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கூட்டுறவு சங்கத்திற்கு அப்பால் இருக்கும் நெசவாளர்களைப் பொறுத்தும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான புள்ளி விவரமும் நான் கொடுக்க விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் கூட்டுறவு சங்கத்திற்கு அப்பாற்பட்ட கைத்தறி நெசவாளர்கள் 50 கோடி கஜம் துணி நெய்தார்கள். 1960-61-ம் ஆண்டில், அதாவது இரண்டாவது திட்டத்தின் இறுதியில் 53 கோடி கஜம் துணி நெய்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் இருக்கின்ற வருஷங்களின் கணக்கு கிடைக்கவில்லை. வளர்ச்சி இந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஏற்றுமதியை எடுத்துக்கொண்டாலும், பெரிய அளவில் நம்முடைய ராஜ்யத்திலிருந்து ஏற்றுமதியை நாம் அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, ப்ளீடிங் மெட்ராஸ் என்கிற துணியின் ஏற்றுமதி அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், ட்ரடிஷனல் மார்க்கெட்டின் அளவு குறைந்து கொண்டிருக்கிறது. முன்பெல்லாம் எந்த எந்த நாட்டுக்கு நாம் துணிகளை அனுப்பிக் கொண்டிருந்தோமோ அங்கெல்லாம் நம்முடைய துணிகளின் ஏற்றுமதி குறைந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக, பர்மா, மலாயா, இலங்கை போன்ற இடங்களுக்கெல்லாம் நாம் அனுப்பிக் கொண்டிருந்த துணியின் ஏற்றுமதி குறைந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், அந்தந்த நாடுகள் தங்கள் தங்கள் நாட்டினுடைய சுய தேவையைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்று அயல் நாட்டுத் துணிகள் வருவதைக் கட்டுப்பாடு செய்ததால் இங்குள்ள துணிகளின் ஏற்றுமதி குறைந்ததே தவிர, விலை அதிகரித்ததால் அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தங்கள் தங்கள் நாட்டில் அவர்கள் தங்களுடைய தொழில்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்வதை நாம் தடுக்க இயலாது. அந்த முறையில் ட்ரடிஷனல் மார்க்கெட் ஓரளவு குறைந்திருக்கிறது. ஆனால், "ப்ளீடிங் மெட்ராஸ்" போன்ற ரகங்களின் ஏற்றுமதியை நாம் அதிகரித்துக் கொண்டு வருகிறோம்.

கனம் அங்கத்தினர் திரு. சுப்பையா முதலியார் அவர்கள் பேசும்போது, தறிகளின் கணக்குகளை எல்லாம் "இண்டிபெண்டெண்ட்" ஆக யாராவது ஒருவர் பரிசீலனை செய்ய வேண்டாம் என்றும், கூட்டுறவு இலாகாவிலேயே கணக்கு வைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அது தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. உற்பத்தி எவ்வளவு ஆகிறது என்ற கணக்கைக் கூட்டுறவு இலாகாவோ, கைத்தறி டைரக்டரோ வைப்பது இல்லை. டைரக்டர் ஆஃப் ஸ்டாடிஸ்டிக்ஸ் அந்தக்கணக்குகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எத்தனைத் தறிகள் இருக்கின்றன என்ற கணக்கை கூட்டுறவு இலாகா வைத்திருந்தாலுங்கூட, ஸென்ஸஸ் கமிஷனர் ஆஃப் இந்தியா அவர்கள் கணக்கிட்டு எத்தனை தறிகள் இருக்கின்றன என்ற முடிவைச் செய்திருக்கிறார்கள். இந்தக் கணக்குகள் எல்லாம் கூட்டுறவு இலாகாவுக்கு அப்பாற்பட்ட துறையிலேதான் வைத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.





கனம் அங்கத்தினர் திரு மணி அவர்கள், கூட்டுறவு மில்களெல்லாம் சரியாக வேலை செய்ய வில்லை என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லியதற்கு மாறாக, மூன்று கூட்டுறவு மில்களும் லாபத்திலேயே வேலை செய்து கொண்டிருக்கின்றன என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரே ஒரு மில்லில் ஏற்பட்டிருந்த பழைய நஷ்டத்தை அவர்கள் இப்பொழுது தான் கழித்துக் கொண்டு வருகிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். கூட்டுறவு மில்களில் உற்பத்தி ஆகும் நூல் எல்லாம் கூட்டுறவு சொஸைட்டிக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும் என்றும் சொன்னார்கள். அதுதான் இப்பொழுது நாம் செய்திருக்கிறோம். வெளியிலே விற்பது இல்லை. ஸ்டேட் கோவாபரேடிவ் சொஸைட்டிக்குத்தான் கூட்டுறவு மில்களில் உற்பத்தியாகும் நூலை விற்பனை செய்ய வேண்டும் என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். அந்தப்படிதான் நடந்து கொண்டிருக்கிறது. வெளியார் உற்பத்தி செய்யக்கூடிய நூலைப் பொறுத்தவரையில், அவர்கள் ராஜ்யத்திற்குத் தேவையான முறையில் செய்யாமல் கோன்யார்ன் ஆகச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதற்கு டெக்ஸ்டைல் கமிஷனர் உற்பத்தியில் 50 சதவிகிதம் ஹாங்க் யார்ன் உற்பத்தி செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டு இருக்கிறார்கள்.

அடுத்தாற்போல கைத்தறிகளுக்கு கரை போட்ட வேஷ்டியை ஒதுக்க வேண்டுமென்ற பிரச்சினை நீண்டகாலமாக இருக்கிறது. அந்தப் பிரச்சினையைப் பற்றி 1953-ஆம் ஆண்டிலேயே ஒரு தீர்மானம் போட்டார்கள். அந்தச் சமயத்தில் நான் இங்கே இல்லை. பார்லிமெண்டில் இருந்தேன். என்னுடைய அபிப்பிராயத்தில் கரை போட்ட வேஷ்டி, சேலை ஆகியவற்றை கைத்தறிகளுக்கு என்றே ஒதுக்குவதனால் கைத்தறியாளர்களுடைய பிரச்சினை தீராது என்பது என்னுடைய திட்டவட்டமான அபிப்பிராயம். இன்றைக்கே பல விதிகள் இருக்கின்றன. இன்று இருக்கிற விதிகள், கொள்கைகளின்படி மில்கள்.

(a) **dhoties with borders which contain coloured yarn exceeding 1/4" in width.**

(b) **dhoties with borders made of sari, muga or art silk yarn.**

(c) **Lungi, sarong or gamcha with a checkpattern or any cloth with checkpattern having a width between 42" and 52" from which lunghies, sarongs or gamcha may be made.**

ஆகிய ரகங்களை உற்பத்தி செய்ய முடியாது. அப்படி இருந்தும் அதை சரியான முறையில் கண்காணிக்க முடிவதில்லை. மகாராஷ்டிரத்தில், குஜராத்தில் இருக்கிறவர்களே இந்த விதிமுறைகளை சரியான வகையில் கண்காணிக்க முடியவில்லை. இந்திய சர்க்காரே இந்தக் கட்டுப்பாட்டைச் செய்தால் கூட எப்படி மற்ற ராஜ்யங்களில் பவர்லூம் கூடாது என்று சொல்லியும் மற்ற ராஜ்ஜியங்களில் பவர் லூம் வந்துவிட்டதோ அது போலவேதான் இதையும் கண்காணிக்க முடியாது போகும்.

இரண்டாவது இதில் இருக்கும் பிரச்சினை என்னவென்றால் அப்போது செஸ் நிதி என்பது கிடையாது. நாம் செஸ் நிதியை ஏற்படுத்தி அதிலிருந்து வரும் பணத்தை இப்போது கைத்தறியாளர்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு கைத்தறி நெசவாளர்கள் கரைபோட்ட, வேஷ்டி, சேலை ஆகியவற்றை கைத்தறிகளுக்கே என்று ஒதுக்கிவிடவேண்டும் என்றால் அப்போது செஸ் நிதி உதவி கிடைக்காது. ஆகவே செஸ் நிதி உதவி வேண்டுமா அல்லது அந்தமாதிரியாகச் சில ரகங்களைக் கைத்தறிகளுக்கே என்று ஒதுக்கிக்கொடுக்க வேண்டுமா என்பதைத் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். நாம் கலர் சேலைகளை மில்களில் உற்பத்திசெய்யக் கூடாது என்று போடலாம். அவர்கள் வெள்ளைச் சேலையைத் தயாரித்து ஸ்கிரீன்ப்ரிண்ட் போட்டுவிடுகிறார்கள். அப்போது நம் சேலை விற்பனையாகாது. ஆகவேதான் இந்தமாதிரியாகச் சில ரகங்களை மட்டும் ஒதுக்குவது என்றால் சரியான முறையில் இது கைத்தறி நெசவாளர்களுக்குப் பயன்படாது. ஆகவே

செஸ் நிதி என்று வைத்து மில்களுக்குக் கொஞ்சம் வரி போட்டு அந்தப் பணத்தை எடுத்துக் கைத்தறித் துணிகளுக்குக் கொடுத்தால் இது மில் துணியோடு மார்க்கெட்டில் போட்டிபோட முடியும். மில் துணியின் விலைக்கும், கைத்தறித் துணியின் விலைக்கும் ஒரு சமநிலை மட்டுமல்ல, மில் துணியை விட கைத்தறித் துணிகளின் விலை சற்றுக் குறைவாக இருக்கும்படி அமையும். அதனால் கைத்தறித் துணி அதிகம் விற்பனையாவதற்கு வழியேற்படும் என்று செய்திருக்கிறோம். இப்படி இந்த செஸ் நிதி மூலமாக நமக்குப் பல நன்மைகள் ஏற்பட்டு வருகின்றன. ஆகவே இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் கைத்தறிக்கென்று சில ரகத் துணிகளை ஒதுக்குவது என்பது கைத்தறி நெசவாளர்களுக்கு நன்மை அளிக்காது என்று சொல்ல விரும்புகிறேன். முன்பே அதற்காகத்தான் செஸ் நிதி என்று கைத்தறிக்கு பாதுகாப்பு அளிக்க ஒரு மூலதனம் ஏற்படுத்த வேண்டுமென்று இதைச் செய்தோம். இது இல்லையென்றால் கைத்தறித் துணிகளின் விலை ஒரேயடியாக உயர்ந்து விடும். மில் துணிகளோடு போட்டி போட முடியாத நிலை வரும். இது பற்றி நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது. அதற்கு தென் பிராந்தியத்தில் இருக்கிற எல்லா அங்கத்தினர்களும் வந்தார்கள். அவர்களுக்கு இவற்றை எல்லாம் விளக்கிச் சொன்னேன். இப்போது இருக்கிற நிலைப்படி செஸ் நிதியும் இருக்க வேண்டும், அதோடு இந்த மாதிரியாக கைத்தறிகளுக்கென்றே சில ரகங்களை ஒதுக்கிக் கொடுத்தால் நல்லது என்றும் சிலர் சொன்னார்கள். அதனால்தான் அந்த சிபார்சை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. நமக்கு சில ரகங்களைக் கைத்தறிக்கு என்று ஒதுக்குவதை விட செஸ் நிதி இருப்பதனால்தான் அதிக நன்மைகள் கிடைக்கின்றன. பொதுவாக கைத்தறி விஷயத்தில் போதுமான கவனம் செலுத்தப்படும். அவர்களுக்கு எவ்வித குறைவும் ஏற்படாது என்ற உறுதியைச் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இப்போது முடியாது என்று சொன்னார்கள். ஏற்கனவே நிலம் வாங்கிப் போட்டிருக்கிறவர்களுக்காவது உதவி செய்ய முன்வருவார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்கெல்லாம் கடிதம் எழுதினால் பதில் சொல்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** மில் துணிகளுக்கு செஸ் விதித்து ரிபேட் கொடுக்கிற முறையில் கூட்டுறவு சங்கங்களில் சேர்ந்த தறிகளுக்குத்தான் கிடைக்கிறது. கூட்டுறவு சங்கங்களில் சேராத தறிகளுக்கு இல்லை. தனியார் தறிகளுக்கும் உதவி செய்ய முன் வருவார்களா ?

**கனம் திரு ஆர். வெங்கட்டராமன் :** அவர்களுக்குத்தான் பைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக துணிகள் தேக்கம் ஏற்படுகிற காலத்தில் பண உதவி கொடுத்து அதை வாங்க ஏற்பாடு செய்கிறோம். அந்த முறையில் உதவி செய்ய முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*** கனம் திரு ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய மான்யத்தில் பல மெம்பர்கள் கலந்து கொண்டு நல்ல அபிப்பிராயங்களைச் சொன்னார்கள். பொதுவாக கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்வதன் மூலமாகத் தான் நாட்டில் பரவலாக அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். இன்றைய தினம் எல்லாக் கட்சியிலும் பல கூட்டுறவாளர்கள் இருக்கிறார்கள். எனக்கு முன்னாலேயே இந்த மன்றத்தில் பன்னிரண்டு, பதிமூன்று கூட்டுறவாளர்கள் இருக்கிறார்கள். இரண்டொருவர் அதை மறந்து கூடப் பேசினார்கள் என்று நினைக்கிறேன். பலர் இந்தத் துறையினர் செய்து வருகிற வேலைகளைப் பாராட்டியும் பேசினார்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று மற்ற ராஜ்யங்களைவிட கடன் ரிடீம் சொஸைடி என்று சொன்னால் நாம் முன் அணியில் இருக்கிறோம். அது நமக்குப் பெருமை அளிக்கும்.





அந்த முறையில் பார்க்கும்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள்ளாகவே நாம் எல்லாக் கிராமங்களையும் கூட்டுறவு முறையின் அடிப்படையில் சேர்த்துவிட்டோம். ரெவின்யூ கிராமம் என்று கணக்கெடுத்துப் பார்க்கும் போது இன்றைய தினம் கூட்டுறவு சொஸைடியில் சேராத கிராமமே இல்லை. அதனால்தான் நாம் இத்துறையில் சென்ட் பர்செண்ட் வெற்றி கண்டு இருக்கிறோம் என்று சொல்கிறேன். கூட்டுறவு திட்டத்தின் கீழ் 84 சதவிகிதம் மக்களைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னால் அது நமக்குப் பெருமை தருகிறது. 50 கோடி ரூபாயை மூன்று ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாகவே நாம் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த இலக்குக்கு 47 கோடி ரூபாய்க்குக் கிட்டிவிட்டோம். இது நம் இலாகா எவ்வளவு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்பதைக் காட்டும். இன்னும் சில பேர் கூட்டுறவு சங்கங்களின் கீழ்ச் சேர்க்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எல்லோரும் சேர்க்கப்பட வேண்டும் என்பதுதான் நமது நோக்கம். இன்றைய தினம் நிலம் இல்லாத விவசாயிகள் கூட கூட்டுறவு சங்கங்களின் கீழ்ச் சேர்க்கப்பட்டு கடன் கொடுக்கப்படுகிறார்கள். கிட்டத்தட்ட இரண்டு கோடி 1-3-1963-க்குள் கொடுத்திருக்கின்றோம். இது விவசாயத்துறையில் மட்டும் அல்ல. அதுபோல இன்னும் ஒவ்வொரு வருஷமும் நாம் கடனை அதிகமாகக் கொடுத்துக் கொண்டு போகிறோம். ரிசர்வு பாங்கும் நமக்கு மிகவும் உதவியாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகையால், ரிசர்வ் பாங்குக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சில மெம்பர்கள் கூட்டுறவு சங்கங்களில் உள்ள ஊழல்களைப் பற்றிச் சொன்னார்கள். இதில் ஒரு விஷயம் ஊழல் என்ற கணக்கை எடுத்துப் பார்த்தால் அப்படி ஒன்றும் அதிகம் என்று சொல்ல முடியாது. அதற்கு நாம் வழங்குகின்ற வொர்க்கிங் காப்பிடல் ரூ 200 கோடிக்கும் அதிகமாக இருக்கிறது. ஆனால் கையாடல், மிஸ் அப்ரோப்ரியேஷன் என்ற இனத்தில் பார்த்தால் ரூ 6.61 லட்சம் தான் வருகிறது. இதுவும் விசாரணையில் இருக்கிறது. மொத்தத்தோடு இந்த விகிதாச்சாரத்தைப் பார்த்தால் .03 தான். ஆகவே தான் எங்கே பார்த்தாலும் ஊழல் என்று ஒரேயடியாக நினைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதுவும் நடத்தக்கூடாது என்றுதான் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். குறைந்த அளவிலே இருக்கிறது என்று சொல்வதால் அதற்கு உற்சாகத்தைக் கொடுப்பதாக நினைக்க வேண்டிய அவசியமில்லை.

MR. DEPUTY SPEAKER: How long does the Hon. Minister want to speak? 1-30 p.m.

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: About 20 minutes more, Sir.

MR. DEPUTY SPEAKER: I think the House has no objection to sit till the Hon. Minister finishes his reply and the Demand is disposed of.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதற்கு ஒரு கணக்கு சொல்ல விரும்புகிறேன் ஒரு சங்கத்தில் ஐந்து நபர் என்று எடுத்துக்கொண்டால் மொத்தத்தில் ஒரு லட்சம் பேர் ஆகும். வேலைச் செய்யக் கூடியவர்களையும் சேர்த்துக்கொண்டால் 1,20,000 ஆகும். இதிலே ஊழலிலே சம்பந்தப்பட்டவர்கள் 120 பேர்தான். மொத்தத்திலே பார்க்கும்போது ஆயிரத்துக்கு ஒன்றுதான். இந்தத் துறையிலே 120 பேரைத் தவிர மற்றவர்கள் எவ்வளவோ நன்மைகளைச் செய்திருந்தும் பத்திரிகைகளில், ஆயிரத்துக்கு ஒருவராக இருக்கின்றவர்களை வைத்து கூட்டுறவில் ஊழல் என்று ஹெட் லைனில் போட்டு விடுகிறார்கள். நல்லது என்ன செய்தார்கள் என்பதற்கு அநேகமாக அதிக விளம்பரம் இருக்காது. ஆகவே, இதிலே பெரும் ஊழல்கள் ஏற்பட்டுவிட்டன என்று சொல்வதற்கில்லை. இந்த மாதிரி ஊழல்களைத் தடுப்பதற்காகவே, கண்காணிக்க

சென்ட்ரல் பாங்கிலிருந்து சூப்பர்வைசர்களைப் போட்டிருக்கிருர்கள். முன்பு 200, 300 பேர்களாக இருந்தவர்கள் தற்போது ஆயிரம் அளவுக்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் ஊழல்கள் ஏற்படாத வண்ணம் நல்ல முறையில் கண்காணித்து வருகிருர்கள்.

"புல் பிருஜெக்ட் ஸ்கீம்"-ல் சில கோளாறுகள் இருப்பதாகச் சொன்னுர்கள். கூட்டுறவு மூலமாக எல்லாவிதக் கடன்களையும் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஏற்பாடுதான் அது. அந்த முறையில் பார்க்கும்போது புல் பிருஜெக்ட் ஸ்கீம் இப்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. எல்லா பிளாக்குகளும் அநேகமாக அதில் சேர்க்கப்பட்டுள்ளன. அதைப் பற்றிக் கனம் சுப்பிரமணிய கவுண்டர் அவர்களும், மற்ற கனம் அங்கத்தினர்களுக்கு கூறிஞர்கள். தஞ்சாவூரிலே புல் பிருஜெக்ட் ஸ்கீம் 105 பிளாக்குகளிலே நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறது. மூன்ருவது திட்டம் முடிவதற்குள்ளாக எல்லா பிளாக்குகளிலும் புல் பிருஜெக்ட் ஸ்கீம் வந்துவிடும். எனவே, தொகை என்ன முறையில் கொடுக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்படும். புல் பிருஜெக்ட் இருக்குமிடத்தில் 5,000 வரை கடன் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேம். நிலக்கடலை விவசாயம் செய்யக் கூடிய ஜில்லாக்களில் கூட ஆயிரம் ரூபாயை இரண்டாயிரமாகவும், இரண்டாயிரத்தை இரண்டாயிரத்து ஐநூறாகவும் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேம். அவர்களுடைய சொந்த ஜாமினிலேயே இந்தத் தொகை கொடுக்கப்படுகிறது. அதையும் இந்தச் சமயத்தில் மறந்து விடக்கூடாது. எந்தெத் துறையில் பார்த்தாலும் இன்று கூட்டுறவுத் துறையில் பல நல்ல காரியங்கள் செய்து கொண்டிருக்கிருர்கள். இங்கு பல அங்கத்தினர்கள் நல்ல பல யோசனைகளைச் சொன்னுர்கள். கனம் தர்மலிங்கம் அவர்கள் ஊழலைப் பற்றிச் சொன்ன நேரத்திலேயே அதற்குப் பதில் சொல்லிவிட்டேன். கனம் ஷண்முகம் அவர்கள், தேர்தல் சமயத்தில் என்னென்னவோ நடந்ததாகச் சொன்னுர்கள். தேர்தல் சமயத்தில் அவர்கள் தொகுதியில் இரண்டு நாட்கள் இருந்தேன். நான், சாத்தனூருக்குச் சென்று கூட்டுறவு இன்ஸ்பெக்டரைப் பூட்டி வைத்ததாகச் சொல்லப்பட்டது என்று கேள்விப்பட்டேன். அந்த இடத்திற்குச் சர்க்கார் செலவிலே பிரோகிராம் போட்டுக்கொண்டு செல்லவில்லை. என்னை அதிகாரிகளோ மற்றவர்களோ வந்து வரவேற்கவில்லை. திரு. வீரப்ப செட்டியார் அவர்கள் சில விஷயங்களைப் பற்றிச் சொன்னுர்கள். திரு. சுப்பிரமணிய கவுண்டர் அவர்கள் அநேகமாக சில விஷயங்களைச் சொன்னுர்கள். அவர்கள் என்னிடத்தில் நேரில் வந்து கலந்து பல நல்ல யோசனைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிற நிலைமையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிருர்கள். அவர் சொன்ன இரண்டு மூன்று விஷயங்களை அட்வைசரி கமிட்டியில் கூட வைத்துப் பேசினேம். அது சர்க்காரால் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சில விஷயங்களைப் பற்றிச் சொன்னுர்கள். அவர் புத்தகத்திலுள்ள சில புள்ளி விவரங்களைக் காட்டி ஒரு அளவிலே முடித்து விட்டார்கள் என்று கூறிஞர்கள். தொகை முழுவதும் செலவழிக்கப்படவில்லை என்று கூறிஞர்கள். இப்போது "அச்சீவ்மெண்டைப்" பார்த்தால் அதிகமாகச் செய்யும்படியான நிலைமையில் இருக்கிறேமே தவிர, தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கில்லை.

ஹரிஜன் என்ற முறையிலே சர்க்கார் தரிசு நிலங்களை அவர்களுக்கு கொடுத்து அதன் மூலம் காலனைசேஷன் பார்ம் போட்டிருக்கிருர்கள். டெனன்ட்ஸ் பார்மிங் பற்றிக் கனம் சுப்பையா முதலியார் அவர்கள் சொன்னுர்கள். கோயில் நிலங்களையெல்லாம் முடிந்த வரையில் அந்த மாதிரி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறேம்.

நாம் மற்றத் துறைகளிலே எவ்வளவோ வளர்ச்சியடைந்திருந்தாலும் கூட, கூட்டுப் பண்ணை என்ற துறையிலே அவ்வளவு உற்சாகமாக முன்னேறி இருக்கிறேம் என்று சொல்வதற்கில்லை. ஏற்படுத்தப்பட்டிருக்கிற கூட்டுறவுப் பண்ணைகள் எந்த முறையில் நடக்கிறது என்பதைப் பார்த்து, புதிய பண்ணைகளை ஆரம்பிக்கலாம் என்ற நிலைமைக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.



விவசாயிகளுக்காக பரம்பிக்குளம் ஆழியாறு பகுதிகளில் பூமியை சமன் படுத்துவதற்காக, வரப்பு கட்டுவதற்காக எல்லாம் 10 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிகூட இன்று முதலமைச்சர் அவர்களுடன் பேசினேம். என்ன முறையில் அதைக் கொடுப்பது ? நில அடமான பாங்கு மூலம் கொடுத்து காரியங்களைச் செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேம். மார்க்கட்டிங் பற்றி டாக்டர் நடராஜன் அவர்கள் எடுத்துக் கூறிஞர்கள். இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்யவேண்டும். மார்க்கட்டிங் சொசைடிகளை இன்னும் நல்ல முறையில் இயக்குவதற்கு முயற்சி செய்யவேண்டும்.

நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டு விவசாயிகளின் தானியங்களை வாங்கி நல்ல முறையில் வியாபாரம் நடைபெறும் என்ற தைரியம் இருக்கிறது. மார்கட்டிங் சொஸைட்டிகளை நல்ல முறையில் அபிவிருத்தி செய்யவேண்டும். அந்த முயற்சியை மேற்கொண்டால் நல்ல காரியங்கள் பல செய்ய முடியும் என்பதோடு, விவசாயிகளுக்கும் நல்ல அனுகூலம் செய்வதாகவும் இருக்கும். கூட்டுறவு சங்கங்களில் நடக்கும் தேர்தல் பற்றி சொன்னுர்கள் திரு. தர்மலிங்கம் அவர்களும் இன்னும் இரண்டொரு அங்கத்தினர்களும். மூன்று ஆண்டுகளுக்கு பிற்பாடு நிற்கக் கூடாது என்று சட்டம் இல்லே. தர்மலிங்கம் ஒன்று சொன்னுர்கள், திரு. கமலநாதன் அவர்கள் வேருென்றைச் சொன்னுர்கள். அவர்கள் இருவருக்குமே வேற்றுமையான எண்ணம்தான் நிறைந்து இருக்கிறது. அவர் கூட்டுறவு இயக்கத்தில் இருக்கக் கூடியவர். திரு. தர்மலிங்கம்...............

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** எனக்கும் அது தெரியும். மூன்று ஆண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்று சொல்வது, அவர்கள் குடும்ப பரம்பரையாக இருக்கவேண்டாம் என்பதற்காகத்தான் மாற்ற வேண்டும் என்று சொல்கிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** திரு. ஷண்முகம் அவர்களும் குறிப்பிட்டார்கள் என் சக மந்திரி திரு. வெங்கட்டராமன் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். பல மாற்றங்கள் செய்யப்பட்டு, பல இடங்களில் யோசனை செய்யப்பட்டு அது 1961-ல் இச்சபையில் நிறைவேறியது என்று நினைக்கிறேன். நல்ல முறையில் பரிசீலனை செய்துதான் அது செய்யப்பட்டது. ஐந்து சங்கங்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்றிருக்கிறது. பின்னர் ரொடேஷன் ஸிஸ்டம் எல்லாம் வரும்போது நீங்கள் பயப்படும் நிலை இருக்காது. பெரிய பிரசனை ஏற்பட்டு அது நடக்கவில்லை என்ற புகார் வரும்போது நிச்சயமாக சூப்பர்சீட் செய்யும் அதிகாரம் இருக்கிறது. ஆகவே கவலைப்படத் தேவையில்லை. கட்சி சார்பில் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னுர்கள். டி.எம்.கே. யினரை பார்த்துத்தான் கேஸ் போடுகிருர்கள், மற்றவர்கள் பற்றி வரும்போது மேஜை மீது வைத்து விடுகிருர்கள் என்று சொன்னுர்கள். என் ஜில்லாவில் உள்ள சேங்காளிபாளையம் பற்றித்தான் சொன்னுர்கள். அவர் இறந்து விட்டார். தவறு செய்து விட்டதாக எண்ணியிருக்கலாம், இல்லை போக வேண்டிய காலம் ஏற்பட்டிருக்கலாம். அதுபற்றி இங்கு பேச வேண்டியதில்லை. பாகுபாடு இருக்கிறது என்று கருத வேண்டாம், என் ஜில்லா பொறுத்தவரையில் ஒன்றிரண்டு பேர்கள் மாட்டிக் கொண்டிருப்பவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காக சொல்லு கிருர்கள். இப்போது கூட்டுறவுத் துறையில் நல்ல தலைவர்கள் இருக்கிருர்கள் என்று சொன்னுல், ஜில்லா ரீதியாக அநேகமாக ஒரு ஜில்லாவிற்கு 3, 4 தலைவர்கள் இருக்கலாம். சென்ட்ரல் பாங்க் தலைவர், சென்ட்ரல் ஸ்டோர்ஸ் தலைவர் இப்படி இருக்கலாம். நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். கிராம ரீதியாகக் கூட கூட்டுறவு தலைவர்களை நாம் ஏற் படுத்தியாக வேண்டும். அப்படி ஏற்பட்டால்தான் வருங்காலத்தில் நல்ல பல காரியங்களைச் செய்ய முடியும். நாம் தராதரத்தை உயர்த்திக் கொள்ளவேண்டும். கிராம ரீதியாகவும் தராதரத்தை உயர்த்திக் கொண் டாகவேண்டும். அப்போதுதான் காரியங்களை ஒழுங்காகச் செய்ய முடியும். இல்லை என்றுல் ஒன்றும் நடக்காது. ஆகவே தராதரத்தை உயர்த்திக்

கொள்ளவேண்டும். அந்நிலை என்னை உள்பட எல்லோருக்கும் ஏற்பட வேண்டும். தராதரமான ஆள்கள்தான் நமக்கு தேவை. அப்போதுதான் ஒழுங்காக காரியங்களைச் செய்ய முடியும். எவ்வளவோ செய்தும் விலைவாசி ஏறி விட்டது. மார்கட்டிங் சொஸைட்டிகள் நன்கு நடக்கவில்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். ரிசர்வ் பாங்கு வேண்டிய உதவிகள் செய்கிறார்கள். நான் அக்ரிகல்ச்சரிஸ்ட்ஸ் என்ற முறையில் பார்த்தாலும் சலவைத் தொழிலாளர்கள், பார்பர்ஸ், போன்றவர்களுக்கும் சங்கங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். டாக்ஸீக்கு சங்கம் ஏற்படுத்தி 12 கார்கள் கொடுப்பதாக இருந்தோம். 10 கார்கள் வாங்க தொகை கொடுத்து அவை நல்லபடி நடந்து கொண்டிருக்கின்றன. ட்ரைவர்கள், மெக்கானிக்ஸ் எல்லாம் அதில் மெம்பர்களாக இருக்கிறார்கள். நல்ல வருவாய் கிடைக்கிறது, அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். ஸால்ட் மானுபாக்சரேர்ஸ்க்கும் இருக்கிறது. பின்னர் ஹில் ட்ரைப்ஸ்க்கு நான்கு மார்க்கட்டிங் சொஸைட்டீஸ் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். மலையில் உள்ள சீவக்காய், புளி போன்றவை எடுக்க உதவி அளிக்கப்பட்டு வருகிறது. லேபர் காண்ட்ராக்ட் சொஸைட்டீஸ் கூட ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். 10,000 ரூபாய் வேலை இருக்குமென்றால், ஹைவேஸ், பி.டப்ளியூ.டி. வேலைகள் இருந்தால் இவர்களுக்கு சலுகை கொடுக்கவேண்டும், முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று சர்குலர் போல் அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள். பாங்குகளில் ஓவர் ட்யூஸ் இருப்பதாக சில அங்கத்தினர்கள் கூறினார்கள். ஓவர் ட்யூஸ் அதிகமாக இல்லவே இல்லை. கணக்குப் பார்த்தால், ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்கில் ஒரு பைஸா கூட இல்லை. சென்ட்ரல் பாங்குக்கு வரும்போது 1.9 சதவிகிதம்தான் இருக்கிறது. ப்ரைமரி சொஸைட்டீஸில் 9 சதவிகிதம் இருக்கிறது. இவ்வளவு சொஸைட்டீஸ் இருக்கும்போது 9 சதவிகிதம் ஓவர் ட்யூஸை பெரிதாக சொல்ல முடியாது. பல துறைகளில் பல காரியங்களை செய்து கொண்டிருக்கும் போது ஒத்துழைப்பு அதிகம் தேவை. திரு. மாரப்ப கவுண்டர் அவர்கள் பேசும்போது சொன்னது, எதைப் பற்றி யாரைப் பற்றி சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியும். அதற்காகத்தான் தனிப்பட்ட முறையில் கொண்டு வந்து விடாதீர்கள் என்று சொன்னேன். திரு. மாதவன் அவர்கள் கூட ஏதோ சொன்னார்கள். என் ஜில்லா அது. அங்குள்ள தலைவர்கள் தக்க கவனம் செலுத்தினால் இந்தப் பிரச்சினைக்கே இடம் இருக்காது. மீட்டிங் போடுகிறார்கள். அங்கேயே கவனிப்பதை விட்டுவிட்டு சர்க்கார் செய்யவில்லை, மந்திரி செய்யவில்லை, பெட்டிஷன்ஸ் கொடுத்தோம், ரெஜிஸ்ட்ரார் ஒன்றும் செய்யவில்லை, செகரட்டரி ஒன்றும் செய்யவில்லை என்று புகார் சொல்வது சரி அல்ல. சேங்காளி பாளையத்தில் சென்ட்ரல் பாங்க் தலைவர் ஏதோ சலுகை கொடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். தனியாக சலுகை கொடுத்தார் என்று சொல்வதற்கில்லை.

ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் அவர்கள் பேசும்போது கொஞ்சம் காரசாரமாக பேசினார்கள். நான் அப்போதே நினைத்தேன். ஏதோ அங்குள்ள அதிகாரிகளுக்கும் இவர்களுக்கும் ஏதோ வாக்குவாதம் நடைபெற்றிருக்கும், அதனால்தான் சற்று சுறுசுறுப்பாக இதைப்பற்றி பேசினார்கள் என்று நினைக்கிறேன். அப்படி ஏதாவது கோளாறுகள் இருக்குமானால், அதைப்பற்றி எனக்கு குறிப்பிட்டு எழுதி அனுப்பினால், ஓரளவுக்கு அதை நிவர்த்தி செய்யலாம் என்று நம்புகிறேன். எதிர்கட்சித் தலைவர் அவர்களும் சில விஷயங்களை குறிப்பிட்டார்கள். நான் முன்னால் சொன்னதுபோல், அவர்கள் சொன்ன விஷயங்கள், 1958–59–ல் கொடுக்கப்பட்ட ரிப்போர்ட்டிலுள்ளது. 1961 முடிவில் எல்லாம் ஒழுங்காய்விட்டது. எவ்வளவு தொகை இருந்தாலும் அதை நல்ல முறையில் செலவு செய்வதற்கு எல்லா வழிவகைகளும் செய்யப்பட்டுவருகிறது. இந்தத்துறை மேலும் நல்ல முறையில் நடைபெறுவதற்கு அங்கத்தினர்கள் எல்லோரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மான்யத்தின் மீது கனம் அங்கத்தினர்கள் கூறின நல்ல கருத்துக்களை எல்லாம் நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு முழு முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படும் என்ற உறுதியை தெரிவித்துக்கொண்டு, இந்த மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரேபணையை வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தை நிறை



வேற்றிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மீது கருத்துக்களை வழங்கிய எல்லா அங்கத்தினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, கூட்டுறவு இயக்கத்திற்கு சொந்தமான ஜீப்கள் சொந்த காரியத்திற்காக பயன்படுத்தப்படுகிறது. தற்போது இரண்டு நாட்களுக்கு முன்னால், வட ஆர்க்காடு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான ஜீப் மைசூரில் சென்று ஆக்ஸிடண்ட்-டாகிவிட்டது. இதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கு முன்பே தந்தி மூலமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய நகலும் என்னிடம் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் கூறவில்லை. ஆகவே அமைச்சர் அவர்களுடைய விளக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்த தந்தி எனக்கும் கிடைத்திருக்கிறது. இதைப்பற்றி உடனே விசாரணை செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** தொழில் அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். "ஹாண்ட் லூம் இண்டஸ்ட்ரீஸ்" என்பதற்கு தனியாக ஒரு டிமாண்ட் கொண்டு வந்து விவாதித்தால் என்ன என்பதை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தனியாக டிமாண்ட் கொண்டு வரவேண்டுமா, வேண்டாமா என்றெல்லாம் தீர்மானிக்க வேண்டிய சிறப்பான பொறுப்பு எதிர்கட்சிகளிடம் இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம்:** எதிர்கட்சிகளிடத்தில்தான் அந்த பொறுப்பு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிடுகிறார்கள். இருந்தாலும் அமைச்சர்களுக்கு இதைப்பற்றி தீர்மானிக்கவேண்டிய பொறுப்பு அதிகமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 2,65,08,000 under Demand No. XIX—Co-operation be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,65,08,000 under Demand No. XIX—Co-operation".

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 23rd March 1964.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

*-129. *Notification issued with G.O. Ms. No. 113, Home, dated 16th January 1964, exempting from the payment of the tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, the vehicles of any foreign country operating under section 92 (1-A) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).*

[*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

* 130. *Notification issued with G.O. Ms. No.* 3775, *Home, dated 2nd December* 1963 *amending Rule* 3 *of the Madras Motor Vehicles Rules*, 1940 *in so far as it relates to the definition of the* term "*Magistrate*". [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

## B. Reports, Notifications and other papers.

* 97. *Notification issued with G.O. Ms. No.* 722 *Industries, Labour and Co-operation (Labour), dated 8th February* 1964 *amending Rule* 9 *of the Madras Industrial Disputes Rules*, 1958, *issued under the Industrial Disputes Act*, 1947 (*Central Act XIV of* 1947).

* 98. *Notification issued with G.O. Ms. No.* 3909, *Home, dated 16th December* 1963 *amending Rule* T (*dd*) *of the Management of Special Homes and Work Houses in the State of Madras (except the City of Madras) Rules*, 1960 *in so far as it relates to the inspection of the Beggar Home at Pudukkottai by the Superintendent of the District Jail, Pudukkottai, issued under the Madras Prevention of Begging Act*, 1945.

* 99. *Review of Working of Minor Ports in Madras State (Tamil).*

† 100. *Speech of the Hon. Minister for Works while moving Demands relating to Public Works (Tamil).*

† 101. *A Review on the progress made in the Development of Handloom Industry in Madras State (English and Tamil).*

‡ 102. *Review of the progress made in Co-operative Development Schemes*, 1963–64 (*English and Tamil*).

‡ 103. *Speech of the Hon. Minister for Works while moving Demand No. XXVI—Irrigation and Demand No. XLI—Capital Outlay on Irrigation (English and Tamil).*

104. *Notification issued with G.O. Ms. No.* 3711, *Food and Agriculture, dated 24th December* 1963 *amending Rule* 7 *of the Madras Sandalwood Transit Rules*, 1960 *issued under the Madras Forest Act*, 1882 (*Madras Act V of* 1882).

---

* Placed on the Table of the House on 20th March 1964.
†Circulated to Members on 19th March 1964.



## APPENDIX.

[*Vide* answer to starred question No. 354 on page 467]

*A.*—(*a*) The High Court of Madras in W. P. No. 1259 of 1962, has held that a route in regard to a stage carriage permit is not one of the conditions attached to it, but is part of the permit itself and that there is no power in the Regional Transport Authority to vary the route in exercise of its powers in variation regarding the alteration or change of conditions in the permit;

(*b*) A statement showing the number of routes affected-district-wise by the judgment of the High Court referred to is appended;

(*c*) Yes.

(*d*) The Motor Vehicles Act, 1939 has since been amended by the State Government with a view to confer specific powers on the Regional Transport Authorities to extend, vary or curtail an existing route.

| Serial number and name of the district. | Number of proposals for variation of routes affected by the judgment of the High Court. |
|---|---|
| (1) | (2) |
| 1 Chingleput | 19 |
| 2 Coimbatore | 16 |
| 3 Kanyakumari | 5 |
| 4 Madurai | 19 |
| 5 The Nilgiris | — |
| 6 North Arcot | 6 |
| 7 Ramanathapuram | 29 |
| 8 Salem | 28 |
| 9 South Arcot | 44 |
| 10 Thanjavur | 26 |
| 11 Tiruchirappalli | 13 |
| 12 Tirunelveli | 66 |
| Total | 271 |

(அ) 1962-ம் ஆண்டு ரிட் மனு எண் 1259-ல் சென்னை உயர்நீதி மன்றத்தார் பஸ் பர்மிட் சம்பந்தமான ஒரு ரூட்டானது அதோடு சேர்ந்த நிபந்தனைகளில் ஒன்று அல்லவென்றும், ஆனால் பர்மிட்டினுடனேயே சேர்ந்ததாகும் என்றும் வட்டாரப் போக்குவரத்து அதிகார சபையால் பர்மிட்டின் நிபந்தனைகளைத் திருத்துவதோ மாற்றுவதோ குறித்து அவர்களுக்கு உள்ள அதிகாரங்களைச் செலுத்தி அந்த ரூட்டினை மாற்றுவதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லையென்றும் தீர்ப்பு அளித்தனர்.

[21st March 1964

(இ) மேற்சொன்ன உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பால் மாவட்டவாரியாக பாதிக்கப்பட்ட பஸ் மார்க்கங்களின் எண்ணிக்கை இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது.

(உ) ஆம்.

(எ) இப்போதுள்ள ஒரு பஸ் மார்க்கத்தை விஸ்தரிக்க, மாற்ற அல்லது குறைக்க வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகட்கு குறிப்பாக அதிகாரம் அளிக்க 1939-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தை மாநில அரசாங்கம் திருத்தியுள்ளது.

### இணைப்பு.

| தொடர் இலக்கமும் மாவட்டத்தின் பெயரும். | உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பால் பஸ் மார்க்கங்களை மாற்றியமைப்பது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1 செங்கற்பட்டு | 19 |
| 2 கோயம்புத்தூர் | 16 |
| 3 கன்னியாகுமரி | 5 |
| 4 மதுரை | 19 |
| 5 நீலகிரி | .. |
| 6 வட ஆற்காடு | 6 |
| 7 இராமநாதபுரம் | 29 |
| 8 சேலம் | 28 |
| 9 தென் ஆற்காடு | 44 |
| 10 தஞ்சாவூர் | 26 |
| 11 திருசிராப்பள்ளி | 13 |
| 12 திருநெல்வேலி | 66 |
| மொத்தம் | 271 |

# INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## FOURTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*16th March* 1964 *to* 21*st March* 1964.

**Volume XX (Nos. 1 to 6)**


PAGES

A

ACT—
Madras University Act, Amendment .. 182–183

AGRICULTURAL INCOME-TAX—
Composition system .. 265–66

ALAGAMUTHU, Sri T. P.—
Agricultural Income-tax, Composition system .. 265–66
Budget, 1964–65, Voting—
Capital Outlay on Irrigation ..
Capital Outlay on Public Works ..
Irrigation ..
Public Works—Establishment and Tools and Plant ..
Public Works—Works .. } 367–370, 424
Co-operation .. 495
Police .. 201–203
Harijan Welfare Schools, supply of books .. 343–344
Law and Order, Arrest of D.M.K. Members .. 459–461
Tamil Development, Central Grant .. 92–94
V.I.Ps., Security arrangements for Sri Kamaraj .. 180–182

AMBIKAPATHI, Sri C. M.—
Budget, 1964–65, Voting—
Education .. 134–136

ANANDAN, Sri L.—
Budget, 1964–65, Voting—
Compensation to Zamindars ..
Famine Relief ..
Land Revenue Department ..
Stamps Administration .. } 323–24

ANANDANAYAKI, Srimathi T. N.—
Budget, 1964–65, Voting—
Capital Outlay on Irrigation ..
Capital Outlay on Public Works ..
Irrigation ..
Public Works—Establishment and Tools and Plant ..
Public Works—Works .. } 391–392

PAGES

A—*cont.*

ANANDANAYAKI, SRIMATHI T. N.—*cont.*
Budget, 1964-65 Voting—*cont.*—
Compensation to Zamindars; Famine Relief; Land Revenue Development; Stamps Administration .. 337
Police .. 220–222

ANGAMUTHU NAICKER, SRI S.—
Budget, 1964–65, Voting—
Co-operation .. 513–514
Police .. 209–211

APPAVU THEVAR, SRI A.—
Budget, 1964–65, Voting—
Capital Outlay on Irrigation; Capital Outlay on Public Works; Irrigation; Public Works—Establishment and Tools and Plant; Public Works—Works .. 383–384
Co-operation .. 505

ARANGANNAL, SRI RAMA—
Budget, 1964–65, Voting—
Compensation to Zamindars; Famine Relief; Land Revenue Department; Stamps Administration .. 337
Police .. 216–220
Camphor, manufacture by Hindu Religious and Charitable Endowments Department .. 7
Dravida Munnetra Kazhagam workers, arrest .. 353–354
Salt manufacture .. 279–280
Saraswathi Mahal Library, Scrutiny of "Chuvadis" by Central Council of Ayurvedic Research .. 358–360
University, Amendment to Madras University Act .. 182–183

ARDHANAREESWARA GOUNDER, SRI K. S.—
Budget, 1964–65, Voting—
Labour including Factories .. 47–49

ARUMUGAM, SRI A.—
Harijans, Appointment according to reservation .. 269–270

ARUMUGHAM, SRI R. S.—
Budget, 1964–65, Voting—
Capital Outlay on Irrigation; Capital Outlay on Public Works; Irrigation; Public Works—Establishment and Tools and Plant; Public Works—Works .. 387–389
Co-operative House Building Society, Naranammalpuram .. 94–95
Water-supply, overhead tank at Suthamalli .. 461



PAGES

A—*cont.*

ARUMUGAM, SRI S.—
Budget, 1964–65, Voting—
Compensation to Zamindars; Famine Relief; Land Revenue Department .. 295–296
Stamps Administration .. 517–518
Co-operation .. 136–137
Education ..

AYURVEDA—
Saraswathi Mahal Library, Scrutiny of "Chuvadis" by Central Council of Ayurvedic Research .. 358–360

B

BALAGANGADHARAN, SRI A. M. P.—
Leave of absence to (M) .. 366

BALAKRISHNAN, SRI A. G.—
Budget, 1964–65, Voting—
Compensation to Zamindars; Famine Relief; Land Revenue Department .. 301–303
Stamps Administration .. 189–194
Police .. 95
Panchayat Union Roads, taking over by Government .. 185
Tindivanam taluk, outbreak of fire (C.A.)

BACKWARD AREAS—
List to Planning Commission .. 98–99

BACKWARD COMMUNITIES—
List, amendment .. 95–98

BHAKTAVATSALAM, SRI M.—
Budget, 1964–65, Voting— .. 160–173
Education .. 16, 19, 67–76
Labour including Factories .. 219–223, 259
Police .. 281
House Committee, Election to (M) .. 472–475
Leakage of S.S.L.C. Examination question papers (A.M.)
Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964 .. 16
Privileges Committee, Election to (M) .. 281–82
Publication in the "Tamil Seithi" (P.M.) .. 185–86

BILL (S)—
Bhoodan Yagna (Amendment) Bill, 1964—
Int. .. 107–108
General Sales Tax (Amendment) Bill, 1964—
Message from Governor; Int. .. 187

BILL(S)—*cont.*

Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964—

Message from Governor .. .. .. .. .. .. .. .. 15

Int., .. .. .. .. .. .. .. .. .. 16

BUSINESS OF THE HOUSE .. .. .. .. .. .. 280–81

## C

CALLING ATTENTION—

Floods in Tiruchirappalli district, damages .. .. .. .. 364–366

Handloom Weavers' hardships in Thanjavur District .. .. 107

Teachers Training School Hostel, Polur, food poisoning .. .. 475–476

Tindivanam Taluk, outbreak of fire .. .. .. .. .. 185

CAMPHOR—

Manufacture by Hindu Religious and Charitable Endowments Department .. .. .. .. .. .. .. .. 7

CHAIR—

Rulings and Observations—

Decorum—

Reference to Officers by name either for praise or for condemnation should be avoided .. .. .. .. .. .. 204, 237

POINT OF ORDER—

Minister's absence from the House—

During the discussion on a Demand for Grant, it was in order for the concerned Minister to be absent from the House with the permission of the Chair on some other important buisness, especially when other Ministers were present in the House .. 35

PRIVILEGE MATTER—

*Functioning of D.M.K. Members, of the House in view of the Party's announcement to burn a part of the Constitution*—HOLDING that the matter did not involve any breach of privilege on the grounds that a Member could function as a Member as long as he continued to be a Member and the proposed act of these Members did not amount to vacation of the membership or incurring any disqualification, the Chair made the following observations.—

Burning the Constitution was an offence under an Act passed by the Legislature. Nobody had freedom of speech to state in the House that he would burn the Constitution as it would amount to his saying that he would break the law of the land. While the Members had freedom of speech within the House, which itself was subject to the provisions of the Constitution and Rules of Procedure, that freedom did not apply to the speeches made outside the House. The Chair could not take cognizance of the act complained of as it had no connection with the work of a legislator as a legislator and the Members were answerable to such acts in the same way as other citizens and are subject to the law of the land.

Moreover, definite procedures had been laid down for amending the Constitution, but burning a part of the Constitution would not amount to amending the Constitution and was not the proper way of doing it .. .. .. .. .. .. 13–15



CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Privilege Matter—*cont.*

Publication in the 'Tamil Seithi'.—

The 'Tamil Seithi' in its issue dated 14th March 1964, published an article under the caption 'சட்டமன்றமா? பொழுதுபோக்கு மடமா?'. A Member raising a privilege issue stated that the article cast asperison against the Members and the House and lowered the dignity of the House in the eyes of the public and that it amounted to a breach of privilege of the Members and the House. The Chair ruled that a *prima facie* case of breach of privilege had been made out and the matter might be referred to the Committee of Privileges .. .. 185–186

CHEEMAICHAMY, Sri K.—

Cholera, Madurai and Ramanathapuram districts .. .. .. 1

Hospitals, Ramanathapuram district .. .. .. .. .. 270–72

Judiciary, recruitment and selection of District Munsifs .. .. 461

Publication in the "Tamil Seithi" (P.M.) .. .. .. .. 185–86

Teachers, basis for National Awards .. .. .. .. .. 344–347

Water-supply, Ramanathapuram town .. .. .. .. .. 280

CHIRANJEEVULU NAIDU, Sri C.—

Budget, 1964–65, Voting—

Compensation to Zamindars .. .. .. .. .. ..
Famine Relief .. .. .. .. .. .. ..
Land Revenue Department .. .. .. .. .. .. } 296–98
Stamps Administration .. .. .. .. .. ..

Education .. .. .. .. .. .. .. .. 120–122

COLLEGE(S)—

Arts College for Tindivanam taluk, opening .. .. .. .. 470

Islamiah College, Vaniambadi, strike by students .. .. .. 361

Tamil-medium Graduates, employment opportunities .. .. 349–353

COMMITTEE(S)—

House, Election to (M) .. .. .. .. .. .. .. 28

Privileges, Election to (M) .. .. .. .. .. .. 281–282

CO-OPERATION—

Co-operative Urban Bank, Tindivanam, Golden Jubiee .. .. 10

CO-OPERATIVE SOCIETIES—

Co-operative House Building Society, Naranammalpuram .. .. 94–95

CORRUPTION—

Cases .. .. .. .. .. .. .. .. .. .. 273–76

COURT(S)—

Holding of Sub-Magistrate's Court, Vridhachalam at Thittakudi .. 178

Sub-Court at Tindivanam, establishment .. .. .. .. 471–472

PAGES.

D

DHAKSHINAMOORTHY GOUNDER, Sri A.S.—
Budget, 1964–65, Voting—
Capital outlay on Irrigation
Capital outlay on Public Works
Irrigation
Public works—Establishment and Tools and Plant
Public Works—Works .. .. } 400–401

Compensation to Zamindars
Famine Relief
Land Revenue Department
Stamps Administration .. .. } 307–309
Labour including Factories .. .. 42–44
Police .. .. 240–242

DHARMALINGAM, Sri A. P.—
Budget, 1964–65, Voting—
Compensation to Zamindars
Famine Relief
Land Revenue Department
Stamps Administration .. .. } 324–291, 338
Co-operation .. .. 495–499
Education .. .. 146–148, 171
Police .. .. 203–208

DISEASES—
Cholera, details of out-break in Tiruchirappalli, Madurai and Ramanathapuram districts .. .. 1
Cholera, Madurai and Ramanathapuram districts .. .. 1
Leprosy Hospitals, Tirunelveli district .. .. 280

DRAVIDA MUNNETRA KAZHAGAM—
Arrests of party workers .. .. 353–354

DURAIPANDI, Sri N.—
Budget, 1964–65, Voting—
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works .. .. } 401–402

Compensation to Zamindars
Famine Relief
Land Revenue Department
Stamps Administration .. .. } 298–300

DURAIYARASAN, Sri A.—
Budget, 1964–65, Voting—
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public works—Establishment and Tools and Plant
Public Works—Works .. .. } 402–403



PAGES

D—cont.

DURAIYARASAN, Sri A.—cont.
Budget, 1964–65, Voting—cont.
Compensation to Zamindars
Famine Relief
Land Revenue Department
Stamps Administration .. .. } 321–23
Education .. .. 141–143
Police Station, Establishment at Tiruppunavasal .. .. 182
Water-supply, construction of reservoir in Aranthangi town .. .. 3

E

EDUCATION—
Harijan Welfare Schools, supply of books .. .. 343–344
Three-language (Telugu, Malayalam and Kanada) teaching, number of schools .. .. 101–102
Transfer to Concurrent List .. .. 183

ELLAMA NAIDU, Sri V.—
Budget, 1964–65, Voting—
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works .. .. } 407–408
Co-operation .. .. 512–513

EMPLOYEES—
Assistant Surgeons, payment of allowances .. .. 9

EMPLOYMENT—
Tamil medium Graduates .. .. 349–353

ENGINEERING POST-GRADUATE COURSE (M.Sc.)—
Stipend amount, Payment .. .. 91–92

EXAMINATIONS—
Leakage of S.S.L.C. Examination question papers (A.M.) .. .. 472–475

F

FINANCIAL BUSINESS—
Budget, 1964–65, Voting—
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works .. .. } 366–425
Compensation of Zamindars
Famine Relief
Land Revenue Department
Stamps Administration .. .. } 282–339
Co-operation .. .. 495–539
Education .. .. 108–173
General Sales Tax and Other Taxes and Duties—Administration .. .. 476–495
Labour including Factories .. .. 16–76
Police .. .. [illegible]–262

PAGES

F—*cont.*

FIRE—
Out break in Tindivanam taluk .. .. .. .. .. 185

FLOODS—
Tiruchirappalli district, damages (C.A.) .. .. .. .. 364-366

FOOD POISONING—
Teachers Training School Hostel, Polur (C.A.) .. .. .. 475-476

G

GANESAN, SRI SAW—
Budget, 1964-65, Voting
Labour including Factories .. .. .. .. .. .. 16, 56-61, 73
Prime Minister's visit to Madurai, arrest of Swantantra Party leader and removal of flags of opposition parties .. .. 461-464

GOVERNMENT EMPLOYEES—
National Security Rules .. .. .. .. .. .. .. 272

GOVINDAN, PULAVAR K.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation .. .. .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. .. .. ..
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant .. ..
Public Works—Works .. .. .. .. .. .. .. } 366, 367, 424
Compensation to Zamindars .. .. .. .. .. ..
Famine Relief .. .. .. .. .. .. ..
Land Revenue Department .. .. .. .. .. .. } 282, 305-307
Stamps Administration .. .. .. .. .. .. .. 103-111,
Education .. .. .. .. .. .. .. 172
Police .. .. .. .. .. .. .. .. 187
Meenakshi Sundareswarar Temple, Madurai, expenditure on renovation .. .. .. .. .. .. .. .. 5
Midday Meals Scheme, report of the Committee to probe into the working .. .. .. .. .. .. .. 10-11
Statue for Swami Vivekananda .. .. .. .. .. 277-79
Temples, renovation works, views of Sri K. C. Panicker .. .. 3-5
Transport, raising of bus fares .. .. .. .. .. 464

GRATUITY—
Scheme for Textile Workers, introduction .. .. .. .. 99

GUEST HOUSE—
State, particulars *re*. .. .. .. .. .. .. .. 102-103



PAGES.

H

HAJA SHERIFF, SRI. K.S.G.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation .. .. .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. .. ..
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant .. ..
Public Works—Works .. .. .. .. .. .. } 392-394
Education .. .. .. .. .. .. .. 139-140
Police .. .. .. .. .. .. .. 233-234

HARIJANS—
Appointment according to reservation .. .. .. .. 269-70
Books, supply to students .. .. .. .. .. 343-344
Reservation in Government services .. .. .. .. 269-70

HANDLOOMS—
Handloom Weaver's hardships in Thanjavur district (C.A.) .. .. 107

HOSPITAL(S)—
Free treatment, raising salary limit .. .. .. .. .. 470
Leprosy Hospitals, Tirunelveli district .. .. .. .. 280
Panchayat Union Hospitals, taking over by Government .. .. 10
Ramanathapuram district .. .. .. .. .. .. 270-272
Tuberculosis Hospitals, Madras and Coimbatore, construction .. 105-106

HOSTEL(S)—
Teachers Training School Hostel, Polur, food poisoning, (C.A.) .. 475-476

I

INDUSTRIES—
Paper Mill, Harur taluk .. .. .. .. .. .. .. 276-77

IRRIGATION—
Experimental tube wells, Paramakudi taluk .. .. .. .. 470-471
Subban Channel, repairs .. .. .. .. .. .. 280

J

JAGADAMBAL VELAYUDHAM, SRIMATHI—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation .. .. .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. .. ..
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant .. ..
Public Works—Works .. .. .. .. .. .. } 382-383

JAYARAJ, SRI P.—
Budget, 1964-65, Voting—
Compensation to Zamindars .. .. .. .. .. ..
Famine Relief .. .. .. .. .. .. ..
Land Revenue Department .. .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. .. } 319-321

JOTHI VENCATACHELLUM, SRIMATHI—

Teachers Training School Hostel, Polur, food poisoning (C.A.St.) .. 475–476

JUDICIARY—

District Munsifs, recruitment and selection .. .. .. .. 461

KADAMBAVANASUNDARAM, SRI T.—

Backward Communities list, amendment .. .. .. .. 95–98

Police, Outpost at Keelkaranthai .. .. .. .. .. 464–465


## K


KAKKAN, SRI P.—

Budget, 1964–65, Voting—

Police .. .. .. .. .. .. .. .. .. 187–189, 250–262

Bhoodan Yagna (Amendment) Bill, 1964 .. .. .. .. 107–108

KALYANASUNDARAM, SRI M.—

Backward areas, List to Planning Commission .. .. .. 98–99

Central University at Karaikudi, establishment .. .. .. 183

Education, Transfer to Concurrent List .. .. .. .. 183

Government employees, National Security Rules .. .. .. 272

Law and Order, number of accused evading arrest in Salem district. 184

Police, death in Tirumangalam taluk Police Station .. .. 175–177

Sugar, scarcity .. .. .. .. .. .. .. .. .. 362

Vegetables, rise in prices in Madras City .. .. .. .. 347–349

Water Supply, Krishna water for Madras City .. .. .. 362–364

KAMALANATHAN, SRI M.—

Budget, 1964–65, Voting—

Compensation to Zamindars
Famine Relief
Land Revenue Department
Stamps Administration } .. 338

Co-operation .. .. .. .. .. .. .. .. .. 507–508

Education .. .. .. .. .. .. .. .. .. 144–145, 172

Transport, Bus route variation .. .. .. .. .. 466

KANCHI MANIMOZIYAR, SRI—

Budget 1964–65, Voting—

Education .. .. .. .. .. .. .. .. .. 124–126

KARCHA GOWDER, SRI T.—

Budget, 1964–65, Voting—

Labour including Factories .. .. .. .. .. .. 20–22

Police .. .. .. .. .. .. .. .. .. .. 231–232







KARIVENGADAM, SRI M. V.—

Backward areas, List to Planning Commission .. .. .. 98–99

Budget, 1964–65, Voting—

Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works } .. 397–398

Compensation to Zamindars
Famine Relief
Land Revenue Department
Stamps Administration } .. 310–312, 336, 338

Labour including Factories .. .. .. .. .. .. 27–28

Police .. .. .. .. .. .. .. .. .. .. 196–198

Mineral deposits, investigations .. .. .. .. .. 356–357

KARUNANIDHI, SRI M.

Budget, 1964–65, Voting—

Police .. .. .. .. .. .. .. .. .. .. 242–250

KHADI—

State Khadi Department .. .. .. .. .. .. 272–73

KOSALRAM, SRI K. T.—

Budget, 1964–65, Voting—

Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works } .. 404–406, 423

KRISHNAMURTHY, SRI M. R.

Budget, 1964–65, Voting—

Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works } .. 399–400

KRISHNAMOORTHY, SRI V.—

Budget, 1964–65, Voting—

Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works } .. 377–378

General Sales Tax and Other Taxes and Duties Administration .. 478–481

Labour including Factories .. .. .. .. .. .. 16–20

Police .. .. .. .. .. .. .. .. .. .. 222–225

Prime Minister's visit to Madurai, removal of flags of opposition parties .. .. .. .. .. .. .. .. 461–464

Tamil medium graduates, employment opportunities .. .. 349–353

Textile Workers, introduction of Gratuity scheme .. .. 99

K—*cont.*

KULANDAIAMMAL, SRIMATHI C.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation; Capital Outlay on Public Works; Irrigation; Public Works—Establishment and Tools and Plant; Public Works—Works .. 384-386

KULANDAISWAMY GOUNDER, SRI M.—
Budget, 1964-65, Voting—
Labour including Factories .. 41-42

L

LAKSHMIKANTHAM, SRIMATHI P. K. R.—
Budget, 1964-65, Voting—
Co-operation .. 515-516
General Sales Tax and Other Taxes and Duties Administration .. 481-483

LANDS—
Lands belonging to Tiruchirappalli Municipality, assignment .. 468-469

LAW AND ORDER—
Accused evading arrest in Salem district number .. 184
Arrest of D. M. K. Members .. 459-461

LIBRARIES—
Establishment in Hindu temples and religious institutions .. 7-9
Mobile libraries, particulars re .. 9-10

LOANS—
Loans to members of Co-operative institutions, grant of .. 103-105

M

MADHAVAN, SRI S.—
Assistant Surgeons, payment of allowances .. 9
Budget, 1964-65, Voting—
Compensation to Zamindars; Famine Relief; Land Revenue Department; Stamps Administration .. 315-319
Education .. 130-132
Labour including Factories .. 22-24
Police .. 234-236
Disease, Cholora, details of out-break in Tiruchirappalli, Madura and Ramanathapuram districts .. 1
Dravida Munnetra Kazhagam workers, arrest .. 353-354
Handloom Weavers' hardships in Thanjavur district (C.A.) .. 107
Pension payment to Commercial Instructors in Government Schools .. 177
Teachers, General Provident Fund .. 178





M—*cont.*

MADHAVAN, SRI S.—*cont.*
Budget, 1964-65—*cont.*
Temples, Srivilliputhur Andal temple, dilapidated condition of tower .. 6-7
Tuberculosis Hospitals, Madras and Coimbatore, construction .. 105-106

MANI, SRI M. S.
Budget, 1964-65 Voting—
Labour including Factories .. 49-54
Police .. 228-231
Lands belonging to Tiruchirappalli Municipality, assignment .. 468-469

MANI, SRI S.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation; Capital Outlay on Public Works; Irrigation; Public Works—Establishment and Tools and Plant; Public Works—Works .. 395
Harijans, Reservation in Government services .. 269-270

MANI, SRI V. S. S.—
Budget, 1964-65, Voting—
Co-operation .. 511-512

MANICKAM, SRI. C.—
Paper Mill, Harur taluk .. 276-277

MARAPPA GOUNDER, SRI K.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation; Capital Outlay on Public Works; Irrigation; Public Works—Establishment and Tools and Plant; Public Works—Works .. 374-375
Co-operation .. 506-507

MATHA GOWDER, SRI J.—
Budget, 1964-65, Voting—
Compensation to Zamindars; Famine Relief; Land Revenue Department; Stamps Administration .. 312-315
General Sales Tax and Other Taxes and Duties Administration .. 435-487

MATHIALAGAN, SRI K. A.—
Free treatment in Hospitals, raising of salary limit .. 470
Nurses, Post-Graduate diploma in Nursing, discrimination between Part A and Part B diploma holders .. 1-2
Rice hullers, installation .. 355
Tax arrears, accumulation .. 268-269

M—*cont.*

MEDICAL—
- Graduates, number passed in 1963 and employment opportunities .. .. .. .. .. .. .. .. .. 356

MID-DAY MEALS—
- Mid-day Meals Scheme, auditing of accounts .. .. .. .. 12
- Mid-day Meals Scheme, report of the committee to probe into the working .. .. .. .. .. .. .. .. .. 10–11
- Steps taken for ensuring purity .. .. .. .. .. .. 11–12

MINES AND MINERALS—
- Factory for heavy Construction and mining equipments, location .. 356–357
- Mineral deposits, investigations .. .. .. .. .. .. 356–357

MOTION (S)—
- Adjournment Motions—
  - Leakage of S.S.L.C. Examination Question papers .. .. .. 472–475
  - House Committee, Election to .. .. .. .. .. 281
  - Leave of Absence to Sri A.M.P. Balagangadharan .. .. 366
- Privilege—
  - Publication in the "Tamil Seithi" .. .. .. .. .. 185–186
  - Privileges Committee, Election to .. .. .. .. .. 281–282

MOOKIAH THEVAR, SRI P. K.—
- Libraries, Establishment in Hindu temples and religious institutions .. .. .. .. .. .. .. .. .. .. .. 7–9
- Medical Graduates, number passed in 1963 and employment opportunities .. .. .. .. .. .. .. .. .. 356
- Midday Meals, steps taken for ensuring purity .. .. .. 11–12
- Statue for Swami Vivekananda .. .. .. .. .. .. .. 277–279
- Tamil Medium, number of Colleges .. .. .. .. .. .. 99–101
- Temples, All-India Committee for renovation, constitution .. 5–6

MUNU ADHI, SRI—
- Automatic Signals, installation .. .. .. .. .. .. .. 106–107
- Budget, 1964–65, Voting—
  - Labour including Factories .. .. .. .. .. .. 36–40
  - Elementary School Teachers, Study Tours .. .. .. .. 179
  - Elementary Schools under Private Managements, taking over by Panchayat Unions .. .. .. .. .. .. .. .. 184
  - Libraries, particulars re. mobile libraries .. .. .. .. 9–10
  - Mid-day Meals Scheme, auditing of accounts .. .. .. .. 12
  - National Defence fund Collections from Madras City and Chingleput district .. .. .. .. .. .. .. 106
  - State Guest House, particulars re .. .. .. .. .. .. 102–103
  - State Khadi Department .. .. .. .. .. .. .. 272–273
  - Teachers (primary) and Headmasters, National Awards .. .. 345–347
  - Teachers Salaries of Elementary School Teachers .. .. 179



M—*cont.*

MURUGAIYAN, SRI S.—
- Budget, 1964–65, Voting—
  - Compensation to Zamindars; Famine Relief; Land Revenue Department; Stamps Administration .. 288–290
  - Teachers' 'Training' Schools Hostel, Polur (C.A.) Food poisoning .. .. .. .. 475–476

MUTHUKARUPPANNASWAMI GOUNDER, SRI M.P.—
- Budget, 1964–65, Voting—
  - Compensation to Zamindars; Famine Relief; Land Revenue Department; Stamps Administration .. 293–294

N

NALLASAMY, SRI T. M.—
- Budget, 1964–65, Voting—
  - Labour including Factories .. .. .. .. .. .. 54–56

NALLASENAPATHI SARKARAI MANRADIAR, SRI N.—
- Budget, 1964–65, Voting—
  - Co-operation .. .. .. .. .. .. .. 495, 534–539

NANJUNDA ROW, SRI S.—
- Budget, 1964–65, Voting—
  - Police .. .. .. .. .. .. .. 225–227
  - Nurses, Staff Nurses in General Hospital, working hours .. 2
  - Three language (Telugu, Malayalam and Kannada) teaching, no. of Schools .. .. .. .. .. 101–102

NARAYANAN, SRI R.—
- Budget, 1964–65, Voting—
  - Capital Outlay on Irrigation; Capital Outlay on Public Works; Irrigation; Public Works—Establishment and Tools and Plant; Public Works—Works .. 386–387
  - Compensation to Zamindars; Famine Relief; Land Revenue Department; Stamps Administration .. 292–293
  - Labour including Factories .. .. .. .. .. .. 32–33
- Village officers, Women Karnams and Revenue Inspectors .. 177

NARAYANASWAMI PILLAI, SRI K.—
- Budget, 1964–65, Voting—
  - Education .. .. .. .. .. .. .. 143–144
  - Corruption cases .. .. .. .. .. .. .. 273–276

N—*cont.*


PAGES.

NARAYANASWAMI PILLAI, SRI K.—*cont.*

Court, holding of Sub-Magistrate's Court, Vridhachalam at Thittakudi .. .. .. .. .. .. .. .. 178

Hospitals, Panchayat Union Hospitals' taking over by Government .. .. .. .. .. .. .. .. 10

Mineral deposits, investigations .. .. .. .. .. 356–357

Teachers in Private Schools, Concessions .. .. .. .. 178

NATARAJAN, Dr. B.—

Budget, 1964–65, Voting—

Co-operation .. .. .. .. .. .. .. .. 518–520

NATIONAL AWARDS—

Teachers and Headmasters .. .. .. .. .. .. 344–347

NATIONAL DEFENCE FUND—

Collections from Madras City and Chingleput district .. .. 106

NATIONAL EMERGENCY—

Ban on execution of works .. .. .. .. .. .. 12

NEDUNCHEZHIYAN, SRI V. R.—

Budget, 1964–65, Voting—

Capital Outlay on Irrigation .. .. .. .. .. ⎫
Capital Outlay on Public Works .. .. .. .. ⎪
Irrigation .. .. .. .. .. .. .. ⎬ 408–413
Public Works—Establishment and Tools and Plant .. .. ⎪
Public Works—Works .. .. .. .. .. .. ⎭

Co-operation .. .. .. .. .. .. .. .. 524–530

Education .. .. .. .. .. .. .. .. 148–160, 172

General Sales Tax and Other Taxes and Duties-Administration .. 488–491

Labour including Factories .. .. .. .. .. .. 61–67

Leakage of S.S.L.C. Examination Question Papers, (A.M.) .. .. 472–475

NURSES—

Post-Graduate diploma in Nursing, discrimination between Part A and Part B diploma holders .. .. .. .. .. 1–2

Staff Nurses in General Hospital, working hours .. .. .. .. 2

O

OBITUARY REFERENCE—

Shanmugham, SRI, T. .. .. .. .. .. .. .. 91

P

PALANI SRI K.B.—

Budget, 1964–65 Voting—

Education .. .. .. .. .. .. .. .. 137–139

Police .. .. .. .. .. .. .. .. .. 236–238




P—*cont.*


PAGES

PALANISAMY, SRI K.P.—

Budget, 1964–65 Voting—

Co-operation .. .. .. .. .. .. .. .. 509–510

Labour including Factories .. .. .. .. .. .. 35–36

PANCHAYAT(S)—

Namakkal Town Panchayat, upgrading into Municipality .. .. 357–358

PAPERS LAID ON THE TABLE—

Co-operative Development Schemes, Review .. .. .. .. 540

Compensation to Zamindars, Policy Note .. .. .. .. .. 340

Education Demand, Note .. .. .. .. .. .. .. 263

Famine Relief, Policy Note .. .. .. .. .. .. 340

Forest Act, 1882, General Timber Transit Rules Notifications .. 77

Handloom industry, review .. .. .. .. .. .. 540

Industrial Disputes Rules, 1958, Amendment .. .. .. .. 540

Irrigation and Capital outlay on Irrigation Demand, Minister's speech .. .. .. .. .. .. .. .. .. 540

Labour, Madras State, 1963–64 .. .. .. .. .. .. 173

Land Improvement Loans (Madras Amendment) Bill, 1964 .. .. 426

Land Revenue Demand, Minister's Speech .. .. .. .. .. 426

Land Revenue Department, Policy Note .. .. .. .. .. 340

Management of Special Homes and Work Houses in the State of Madras (except the City of Madras) Rules, 1960, Amendment .. 540

Minor Ports, Review of Working (Tamil) .. .. .. .. .. 540

Minor Ports, Review of Working (English) .. .. .. .. .. 426

Motor Vehicles Rules, 1940, Amendments .. .. .. 262, 540

Motor Vehicles Taxation Act, 1931, Notification .. .. .. 539–540

Official Language Act, 1956, Notification .. .. .. .. 340

Payment of Salaries and Removal of Disqualifications (Amendment) Bill, 1964 .. .. .. .. .. .. .. .. .. .. 426

Police Demand, Minister's Speech .. .. .. .. .. .. 263

Public Service Commission Regulations, 1954, Notifications .. .. 77, 262, 425–426

Public Works Demands, Minister's Speech (English) .. .. .. 426

Public Works Demands, Minister's Speech (Tamil) .. .. .. 540

Sandalwood Transit Rules, 1960, Amendment .. .. .. .. 540

Shops and Establishments Rules, 1948, Notifications .. .. .. 426

Stamps Administration Demand, Minister's Speech .. .. .. 426

Stamps Administration Demand, Policy Note .. .. .. .. 426

State Electricity Board, Annual Financial Statement .. .. .. 263

Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram (Extension of Application) Bill, 1964 .. .. .. .. .. .. .. .. 77

Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes, Policy Note .. .. .. .. .. .. .. .. .. 77

PENSION—

Payment to Commercial Instructors, Government Schools .. .. 177

PAGES

P—*cont.*

PERIANNAN, SRI V.R.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works .. .. 406–407
Namakkal Town Panchayat, upgrading into Municipality .. .. 357–358

POLICE—
Death in Tirumangalam Town Police Station .. .. .. 175–177
Outpost at Keelkaranthai .. .. .. .. .. .. 464–465
Police Station, Establishment at Tiruppunavasal .. .. .. 182

POLITICAL SUFFERERS—
Concessions to children in Industrial Training Institutes and Polytechnics .. .. .. .. .. .. .. .. 360–361

PONNAMMAL, SRIMATHI A. S.—
Budget—1964-65, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 132–134

PONNAPPA NADAR, SRI R.—
Rubber Plantations (Government) extent in Kanyakumari District .. 92

PONNIAN, SRI K.—
Budget, 1964-65, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 145–146
Labour including Factories .. .. .. .. .. .. .. 28–32

PRIME MINISTER'S VISIT—
Prime Minister's visit to Madurai, arrest of Swatantra Party leader and removal of flags of opposition parties .. .. .. .. 461–464

PRIVILEGES—
Publication in the " Tamil Seithi (M) .. .. .. .. .. 185–186

R

RAGHAVA REDDI, SRI A.—
Budget, 1964-65, Voting—
Compensation to Zamindars
Famine Relief
Land Revenue Department
Stamps Administration .. .. 309–310

RAJAGOPALASWAMY, SRI R.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works .. .. 381–382



PAGES

R—*cont.*

RAJANGAM, SRI M.—
Budget, 1964-65, Voting—
Education .. .. .. .. .. .. .. 114–116
Labour including Factories .. .. .. .. .. .. 40–41
Police .. .. .. .. .. .. .. .. 238–240
Teachers in Private Schools, Concessions .. .. .. .. 178

RAJANGAM, SRI N.—
Budget, 1964-65, Voting—
Labour including Factories .. .. .. .. .. .. 33–35

RAJARAM, SRI G.—
Arts College for Tindivanam Taluk, opening .. .. .. .. 470
Courts—Establishment of Sub-court at Tindivanam .. .. .. 471–472
Budget, 1964-65, Voting—
Police .. .. .. .. .. .. .. .. 198–201

RAJATHI KUNCHITHAPATHAM, SRIMATHI—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant .. .. 372–374
Public Works—Works
Co-operation .. .. .. .. .. .. .. .. 522–524

RAMALINGAM, SRI N. S.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works .. .. 378
Education .. .. .. .. .. .. .. .. 128–130

RAMACHANDRAN, SRI P.—
Leave of Absence to Sri A. M P. Balagangadharan (M) .. .. 366

RAMACHANDRA RAYAR, SRI A.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works .. .. 395–396
Education .. .. .. .. .. .. .. .. 118–120

RAMANATHAN, SRI V.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works
Irrigation
Public Works—Establishment and Tools and Plant
Public Works—Works .. .. 403–404

RAMASAMY, SRI S.—
Budget, 1964-65, Voting—
Compensation to Zamindars .. .. .. .. .. ..
Famine Relief .. .. .. .. .. ..
Land Revenue Department .. .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. .. } 282, 283-286
Labour including Factories .. .. .. .. .. .. 45-47
Floods in Tiruchirappalli District, damages (C. A.) .. .. .. 364

RAMAIAH, SRI V.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation .. .. .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. .. ..
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant .. ..
Public Works—Works .. .. .. .. .. .. } 366, 367 413-424
Compensation to Zamindars .. .. .. .. .. ..
Famine Relief .. .. .. .. .. .. ..
Land Revenue Department .. .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. .. } 282, 283 326,329- 337-338
Floods in Tiruchirappalli District, damages (C. A. St.) .. .. 364-366
Tindivanam Taluk, Outbreak of fire (C. A. St.) .. .. .. 185

RANGASWAMY, SRI R.—
Budget, 1964-65, Voting—
Compensation to Zamindars .. .. .. .. .. ..
Famine Relief .. .. .. .. .. .. ..
Land Revenue Department .. .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. .. } 303-305

RICE HULLERS—
Installation .. .. .. .. .. .. .. .. 355

ROADS—
Panchayat Union Roads, taking over by Government .. .. 95

RUBBER PLANTATIONS (GOVERNMENT)—
Extent in Kanyakumari District .. .. .. .. .. 92

S

SADASIVAM, SRI S.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation .. .. .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. .. ..
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant .. ..
Public Works—Works .. .. .. .. .. .. } 378-380

SALT—
Manufacture .. .. .. .. .. .. .. .. 279-280

SAMBANDAM, SRI K. R.—
Budget 1964-65, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 127-128
Police .. .. .. .. .. .. .. .. 214-216



SASIVARNA THEVAR, SRI T. L.—
Statue for Swami Vivekananda .. .. .. .. .. .. 277-279

SCHOOLS—
Elementary Schools Under Private Managements, taking over by Panchayat Unions .. .. .. .. .. .. 184
Three Language (Telugu, Malayalam and Kanada) Teaching, number of Schools .. .. .. .. .. .. 101-102

SELVARAJAN, SRI M. S.—
Bus routes, temporary extension .. .. .. .. .. 466-468
Leprosy hospitals, Tirunelveli district .. .. .. .. 280

SENGALIAPPAN, SRI R.—
Budget, 1964-65, Voting—
Labour including Factories .. .. .. .. .. 24-27

SHANMUGAM, SRI P. U.—
Budget, 1964-65, Voting—
Compensation to Zamindars .. .. .. .. ..
Famine Relief .. .. .. .. .. ..
Land Revenue Department .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. } 334
Co-operation .. .. .. .. .. .. 520-522
Police .. .. .. .. .. .. .. 211-214

SHANMUGASUNDARAM, SRI N.—
Budget, 1964-65, Voting—
Capital Outlay on Irrigation .. .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. ..
Irrigation .. .. .. .. .. ..
Public Works-Establishment and Tools and Plant .. ..
Public Works-Works .. .. .. .. .. } 394-395

SOUNTHARA PANDIAN SRI N.—
Budget 1964-65, Voting—
Education .. .. .. .. .. .. .. 122-124
Police .. .. .. .. .. .. .. 227-228

SRINIVASAN, SRI C.—
Budget, 1964 65, Voting—
Capital Outlay on Irrigation .. .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. ..
Irrigation .. .. .. .. .. ..
Public Works—Establishment and Tools and Plant .. ..
Public Works—Works .. .. .. .. .. } 398
Compensation to Zamindars .. .. .. .. ..
Famine Relief .. .. .. .. .. ..
Land Revenue Department .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. } 290-292
General Sales Tax and Other Taxes and Duties-Administration .. 483-485
Police .. .. .. .. .. .. .. 195-196
Experimental tube wells, Paramakudi taluk .. .. .. 470-471

PAGES

S—*cont.*


SRINIVASAN, Sri C.—*cont.*

Political Sufferers, Concessions to Children in Industrial Training Institutes and Polytechnics .. .. .. .. .. .. .. 360-361

Public conveyances, meter system for taxis and auto-rickshaws in Madurai city .. .. .. .. .. .. .. .. 472

Subban Channel, repairs .. .. .. .. .. .. .. 280

STATUE(S)—

Swami Vivekananda .. .. .. .. .. .. .. 277-279

UARES SRIMATHI A.—

Budget 1964-65, Voting—

Education .. .. .. .. .. .. .. 111-114

SUBBIAH MUDALIAR, Sri A. R.—

Budget, 1964-65, Voting—

Capital Outlay on Irrigation .. .. .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. .. .. 375-377
Irrigation .. .. .. .. .. .. ..
Public Works-Establishment and Tools and Plant .. ..
Public Works—Works .. .. .. .. .. .. ..

Compensation to Zamindars .. .. .. .. .. ..
Famine Relief .. .. .. .. .. .. .. 286-288
Land Revenue Department .. .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. ..

Co-operation .. .. .. .. .. .. .. .. 510-511

SUBRAMANIAM CHETTIAR, Sri N.—

Budget 1964-65—Voting—

Police .. .. .. .. .. .. .. .. .. 208-209

SUBRAMANIA GOUNDER, Sri K. S.—

Budget, 1964-65, Voting—

Co-operation .. .. .. .. .. .. .. .. 499-503

SUGAR—

Scarcity .. .. .. .. .. .. .. .. .. 362

SWAMIDHAS, Sri A.—

Budget, 1964-65, Voting—

Capital Outlay on Irrigation .. .. .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. .. ..
Irrigation .. .. .. .. .. .. .. 380
Public Works-Establishment and Tools and Plant .. .. ..
Public Works-Works .. .. .. .. .. .. ..


T


TAMIL—

Development, Central Grant .. .. .. .. .. .. 92-94




PAGES

T—*cont.*


TAMIL MEDIUM—

Colleges, number of .. .. .. .. .. .. .. .. 99-101

TAXES—

Arrears, accumulation .. .. .. .. .. .. .. .. 266-269

TEACHERS—

Elementary School Teachers, Salaries .. .. .. .. .. 179

Elementary School Teachers, Study Tours .. .. .. .. 179

General Provident Fund .. .. .. .. .. .. .. 178

National Awards, basis .. .. .. .. .. .. .. 344-347

National Awards to primary teachers and headmasters .. .. 344-347

Teachers in Private Schools, Concessions .. .. .. .. 178

TEMPLES—

All-India Committee for renovation, constitution .. .. .. 5-6

Meenakshi Sundareswarar Temple, Madurai, expenditure on renovation .. .. .. .. .. .. .. .. 5

Renovation works, views of Sri K. C. Panicker .. .. .. 3-5

Srivilliputhur Andal temple, dilapidated condition of tower .. .. 6-7

TEXTILE WORKERS—

Gratuity Schemes, introduction .. .. .. .. .. .. 99

THANGAVELU, Sri A.—

Budget, 1964-65, Voting—

Capital Outlay on Irrigation .. .. .. .. .. ..
Capital Outlay on Public Works .. .. .. .. ..
Irrigation .. .. .. .. .. .. .. 389-390
Public Works—Establishment and Tools and Plant .. ..
Public Works—Works .. .. .. .. .. .. ..

Co-operative Urban Bank, Tindivanam, Golden Jubilee .. .. 103

THIAGARAJAN, Sri A.

Budget 1964-65, Voting—

Co-operation .. .. .. .. .. .. .. .. 514-515

THIAGARAJA PILLAI, Sri M. D.—

Budget 1964-65, Voting—

Co-operation .. .. .. .. .. .. .. .. 516-517

Education .. .. .. .. .. .. .. .. 116-118

TRAFFIC—

Automatic signals, installation .. .. .. .. .. .. 106-107

TRANSPORT—

Bus fares, raising of .. .. .. .. .. .. .. 464

Bus routes, temporary extension .. .. .. .. .. .. 466-468

Bus route, variation .. .. .. .. .. .. .. 466

Public conveyances, meter system for taxis and auto-rickshaws in Madurai City .. .. .. .. .. .. .. .. 472

PAGES.

## U

UNIVERSITY—
Central University at Karaikudi, establishment . . . . . . . . 183
Madras University Act, Amendment . . . . . . . . . . 182–183

## V

VADIVELU, SRI M. P.—
Islamiah College, Vaniambadi, strike by students . . . . 361

VEERAPPA CHETTIAR, SRI R. S.—
Budget, 1964–65, Voting—
Capital Outlay on Irrigation; Capital Outlay on Public Works; Irrigation; Public Works—Establishment and Tools and Plant; Public Works—Works . . . . 371–372
Co-operation . . . . . . . . . . . . 503–505
Police . . . . . . . . . . . . . . 194–195
Engineering Post- Graduate Course (M.Sc.) Payment of stipend amount . . . . . . . . . . 91–92
Loans to members of Co-operative institutions, grant of . . . . 103–105
National emergency, ban on execution of works . . . . . . 12

VEGETABLES—
Rise in prices in Madras City . . . . . . . . . . . . 347–349

VENKATARAMAN, SRI R.—
Budget 1964–65, Voting—
Co-operation . . . . . . . . . . . . . . 530–534
General Sales Tax and Other Taxes and Duties—Administration. 476, 477–479, 491–496
General Sales Tax (Amendmend) Bill, 1964 . . . . . . . . 187
Handloom Weavers' hardships in Thanjavur district (C.A. St.) . . 107

V. I. Ps.—
Kamaraj (Sri), Security arrangements . . . . . . . . . . 180–182

VILLAGE OFFICERS—
Women Karnams and Revenue Inspectors . . . . . . . . 177

## W

WATER [illegible]—
Krishna water for Madras City . . . . . . . . . . . . 362–364
Overhead tank at [illegible]lli . . . . . . . . . . . . 461
Ramanathapuram town . . . . . . . . . . . . 280
Reservoir, construction [illegible]nthangi town . . . . . . . . 8

138005